கனடா,
தொல்காப்பிய
மன்றம்

தமிழ்நாடு,
இலக்குவனார் இலக்கிய
இணையம்

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு

ரொறொன்ரோ, கனடா

2024

மாநாட்டு மலர்

செப். 20 வெள்ளி | 2-9pm
Scarborough Civic Centre

செப். 21 சனி | 9am-6pm
Scarborough Civic Centre

செப். 22 ஞாயிறு | 2-11pm
Thamil Isai Kalaamanram

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - கனடா 2024

1st International Tolkappiya Research Conference - Canada 2024

செப்டம்பர் 20-22, 2024

தொகுப்பு

முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ்

முனைவர் இல. சுந்தரம்

கனடா, தொல்காப்பிய மன்றம்

தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய இணையம்

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - கனடா 2024
மாநாட்டு மலர் - கட்டுரைத் தொகுப்பு
தொல்காப்பிய மன்றம் - கனடா ©
செப்டம்பர் 2024
www.tolkappiyam.ca
தொடர்பு: 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152
வடிவமைப்பு : *Gemini Digital Designer,* +91-9840487404
அச்சு : **Brightsun Printing,** *120 Dynamic Drive, Scarborough, ON, M1V 5C8.*

பக்கங்கள் : **758**
விலை : **$ 50**

1st International Tolkappiya Research Conference - Canada 2024
Conference Proceedings
Association for Tolkappiyam - Canada ©
September 2024
www.tolkappiyam.ca
Contact: 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152
Designing : *Gemini Digital Designer,* +91-9840487404

Printer : **Brightsun Printing,** *120 Dynamic Drive, Scarborough, ON, M1V 5C8.*

Pages : 758
Price : **$ 50**

கனடா தொல்காப்பிய மன்றம் தனது எட்டாவது ஆண்டுவிழாவைச் செப்டெம்பர் 23, 2023 அன்று ஸ்கார்புரோ நகரின் 'தமிழ் இசைக் கலாமன்றத்தில்' நடத்தி முடித்தது. 'ஆண்டுவிழாவின் வெற்றி' தொல்காப்பிய மன்றத்தை அதன் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றிச் சிந்திக்கவைத்தது. கனடாத் தொல்காப்பிய மன்றம் உலகத் தரம் வாய்ந்த மாநாடு ஒன்றினை 2024 ஆண்டு நடாத்த ஆயத்தமானது.

தொல்காப்பியத்தின் தொன்மை, இளமை, முழுமை, செழுமை, அறிவியல் கருத்துகள் முதலிய தலையாய பண்புகள் பற்றியே இம் மாநாடு பல்வேறு கோணங்களில் ஆராய்ந்திருக்கிறது. அவற்றை மீண்டும் இங்கு எடுத்துவருவதற்கு வேண்டிய தேவையில்லை. தொல்காப்பியத்தின் பெருமை மிக அண்மைக் காலம் வரை பெரும்பாலான தமிழர்களால் அறியப்படாமலே இருந்திருக்கிறது. "தொல்காப்பியம் கற்பதற்கு மிகவும் கடினமானது" என்று, எமது, கற்றறிந்த பெரியோர்கள், சொல்லிச் சொல்லியே, தொல்காப்பியத்தை இருட்டடிப்புச் செய்துவிட்டார்கள். இந்த நிலையை மாற்றி, தொல்காப்பியத்தை உலக அளவில் எடுத்துச் செல்வதற்காகத் தொடங்கப்பட்ட அமைப்பே உலகத் தொல்காப்பிய மன்றம் ஆகும். பிரான்சு நாட்டில், 2015ஆம் ஆண்டு "உலகத் தொல்காப்பிய மன்றத்தின்" தொடக்க விழா நடைபெற்றுப், பின் உலக நாடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

கனடாவில், தொல்காப்பிய மன்றம் அதே ஆண்டில் (2015) தொடங்கிவைக்கப்பட்டு, கடந்த 9 ஆண்டுகளாகச் சிறப்பாக இயங்கிவருகிறது. கனடா தொல்காப்பிய மன்றத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று,

> "புலம்பெயர் நாடுகளில், தமிழ் மொழி, கலை, பண்பாடு முதலியவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லத்தக்கதொரு தலைமுறையை உருவாக்குவது"

கனடா தொல்காப்பிய மன்றம் புலம்பெயர் நாடுகளில், பல்லின பல்பண்பாட்டுச் சூழலில், பல்லின மக்களும் அறியும்படியாகத் தம் செயற்திட்டங்களை முன்னெடுத்துவருகிறது. புலம்பெயர் நாடுகளின் அரசியலிலும் இரண்டாம் தலைமுறைத் தமிழர் ஈடுபட்டுவிட்டார்கள்.

இதுவரை காலமும் தொல்காப்பியச் சிறப்புக்களை முன்னிலைப்படுத்தும் மாதாந்தக் கருத்தரங்குகள், சிறாரை ஊக்குவிக்கும் நிகழ்வுகளாகத் தமிழ்த் திறன் போட்டிகள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள் என்று மன்றச் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

கனடா நாட்டில் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டாற்றிவரும் தொல்காப்பிய மன்றமும், தமிழ்நாட்டில், தமிழ்ப் போராளி, பேராசிரியர் இலக்குவனார் பெயரில் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டாற்றிவரும், இலக்குவனார் இலக்கிய இணையமும் இணைந்து இத்தகையதொரு உலகளாவிய மாநாட்டை, கனடா அறிஞர் பெருமக்களினதும், தமிழ்நாட்டு அறிஞர் பெருமக்களினதும், உலகப் பேரறிஞர்களினதும் ஆதரவுடன் சிறப்புற நடத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், ஐக்கியப் பேரரசு, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா,

கனடா முதலிய தமிழ் மக்கள் வாழும் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பேராளர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு, 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில் கனடா, தொரண்டோ (Toronto) நகரில் நடைபெறுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆய்வுரைகளுக்கான அழைப்பு 2024 ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம் விடுக்கப்பட்டது.

"தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்குரிய களமாக இம்மாநாடு அமையவேண்டும் என்பது இம் மாநாட்டின் குறிக்கோளாகும்"

வரலாற்றுச் சிறப்பு மிக்க இம் மாநாட்டில், தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் அனைவரும், நேரடியாகவோ இணையவழியாகவோ கலந்துகொண்டு, மாநாட்டின் குறிக்கோளை நிறைவு செய்வதில் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

கனடா, இந்தியா, இலங்கை, மலேசியா சிங்கப்பூர், அமெரிக்கா, ஜெர்மனி முதலிய நாட்டு அறிஞர் பெருமக்களின் ஆசியுடன் இம் மாநாடு நடைபெறுகிறது. பேராளர்கள் பட்டியல் இம் மாநாட்டு மலரில் இணைக்கப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில், தொல்காப்பியம், தொல்காப்பியத் தமிழ், தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியத்திற்கு முன்னைய காலம், தமிழ் இலக்கண வரலாற்றில் தொல்காப்பியத்தின் இடம், பிற்கால இலக்கணத்தில் தொல்காப்பியத்தின் தாக்கம், உலக இலக்கணங்களுடனான ஒப்பீடு போன்ற விடயங்களில் ஆய்வுகள் மேற்கொள்வது வரவேற்கப்பட்டது.

தொல்காப்பிய மன்றத்தின்கீழ் இணைந்து மாநாட்டின் செயற்பாடுகளில் அக்கறையுடன் ஈடுபட்டுச் செயலாற்ற விரும்பும் அனைவரும் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டுக் குழுவில் இணையும்படி அழைக்கப்பட்டார்கள். இந்நிலையில் மன்றத்தில் ஏற்கெனவே ஓராண்டு உறுப்பியத்தைச் செலுத்தியவர்களும் புதிதாகவும் வாழ்நாள் உறுப்பியத்தைச் செலுத்தி உறுப்பினராகி மன்றத்தை வழுவடையச்செய்து ஊக்கப்படுத்தினர்.

மாநாடு பற்றிய திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிமுதல் 10 மணிவரை மாநாட்டுத் திட்டமிடல் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன.

பொருளாதாரமும் மனிதவலுவும்

எந்தவொரு அரசு நிறுவனத்திடமிருந்தும் நிதி உதவி நாடுவதற்குரிய அவகாசம் இருக்கவில்லை. இத் திட்டம் முற்றும் முழுமையுமாக மாநாட்டு நிருவாகக் குழு அங்கத்தவர்களது பங்களிப்பும் அவர்களின் முயற்சியால் பெறப்பட்ட வணிக அன்பர்களின் பங்களிப்புமே இந்த மாநாட்டின் பொருளாதாரமாகும். மாநாட்டின் கட்டுரையாளர்களிடமிருந்தும் பங்கேற்பாளர்களிடமிருந்தும் எந்தவிதப் பதிவுக் கட்டணங்களும் பெறப்படவில்லை.

மாநாட்டில் ஆய்வுக் கட்டுரை வழங்கவரும் பன்னாட்டுக் கட்டுரையாளர்களுக்கும் பேராளர்களுக்கும் மாநாட்டுக் குழுவின் சார்பில் விமானப் பயணச் செலவினங்களையோ மற்ற செலவினங்களையோ ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இவற்றைக் குறிப்பிட்டே ஆய்வுச் சுருக்கங்கள் அனுப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

20-க்கும் குறைவான தன்னார்வலர்களின் பங்களிப்புகளுக்குள்ளாக மாநாட்டிற்கான மனிதவலு அமைந்துவிட்டது. எந்தப் பணிகளைச் செய்வதாக இருந்தாலும் எந்தக் குழுவை அமைப்பதாக இருந்தாலும் இதற்குள்ளாகவே அமைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது வேதனைக்குரியதாகவே அமைந்தது. புலம்பெயர் நாடுகளில் அதிகமான தமிழ் மக்கள்தொகையைக் கொண்ட நாடாகக் கனடா இருந்தாலும் தனித்தனிக் குழுவாகத் தமிழினம் சிதறுண்டு ஒற்றுமையின்றிச் செயல்பட்டுவருது அனைவருக்கும் தெரிந்த கசப்பான உண்மையே. எனிலும், இன்பமான அனுபவங்கள், அடுத்து வரும் மாநாடுகள் செய்வதற்குரிய முன் அனுபவமாக அமைத்துள்ளது. சமூகம் சார்ந்து சேவை மனப்பான்மையுடன் செய்யும் எதுவும் பயனுள்ளதுதான்.

மேலைத் தேயங்களில் இல்லாதது எதுவுமில்லை என்று சொன்னாலும் எமக்குத் தேவையானவை இன்னமும் தாய்நாட்டில்தான் இருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது. வழக்கமாக மாநாட்டிற்குக் கொடுக்கவேண்டிய சம்பிரதாயப் பொருட்களும் பைகளும் மாநாட்டு அடையாளங்களுடன் தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவருவதில் மேற்கொண்ட அன்பர்களின் முயற்சிகள் மகத்தானவை.

கண்ணால் காணாத கற்பனையால் உருவாக்கப்பட்ட தொல்காப்பியரின் உருவத்திற்கு புழக்கத்தில் இருக்கும் இரண்டுவகை வடிவங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதனையும் மேம்படுத்தி மெருகேற்றிப் புதிதாகச் சிலை வடிப்பதில் ஏற்பட்ட சங்கடங்கள், சிக்கல்கள் எண்ணிலடங்கா. இவை அனைத்தையும் தாண்டி தமிழ்நாட்டிலிருந்து பொதி மூலமாக எடையையும் குறைக்கவேண்டும் அதேநேரம் தரமானதாகவும் வரவேண்டும் என்ற ஏதிர்பார்ப்புடன் 200 சிலைகள் தருவித்தமை எல்லாமே அனுபவம்தான்.

கலை நிகழ்ச்சிகள்

மாநாடு சிறக்க எமது பாரம்பரியக் கலைகளான பறை, கூத்து, வில்லுப்பாட்டு, நாட்டியம், நாடகம் போன்ற கலை நிலைகழ்ச்சிகளோடு மாவீரர் நினைவேந்தலை வழங்குகிற தன்னார்வலக் கலைஞர்களைப் பாராட்டியே ஆகவேண்டும்.

இந்த ஆண்டு முதல் தொல்காப்பியத்தின் கட்டமைப்பையும் சிறப்பையும் அதில் கூறப்பட்ட இலக்கணக் கூறுகளையும் பரப்பும் வகையில் விநாடி-வினா (*Quiz*) நிகழ்ச்சியைச் சிறுவர்களுக்கும் (பள்ளிப் படிப்பு 6-12ஆம் வகுப்பு) பெரியோருக்கும் தனித்தனியாக '*Quizizz*' என்ற இணைய விளையாட்டின் (*Online Game*) வழியாக பல்சுவை நிகழ்ச்சியாக நடத்தப்படுகிறது. இதற்காக வினாக் கொத்து உருவாக்கி பொதுவில் பகிரப்பட்டு இணையவழிப் பதிவும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு சிறுவர் பிரிவு (*Juniours*), பெரியோர் (*Seniors*) பிரிவு ஒவ்வொன்றிலும் வெற்றிபெறும் முதல் மூவருக்குத் தொல்காப்பியர் சிலையையும் 'தொல்காப்பியச் செல்வி', 'தொல்காப்பியச் செல்வன்' என்ற அடைமொழியைப் பட்டமாகவும் வழங்குவதைத் தொடங்கியுள்ளது. தமிழ்த்திறன் போட்டிகளைப் போலவே இதேபோன்று ஆண்டுதோறும் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் தொல்காப்பியம் கனடா நாட்டில் அடுத்த தலைமுறைக்கும் கடத்தப்படும்.

மொத்தத்தில் மாநாடு ஒரு சிறந்த சமூக முன்னெடுப்பாக அமைந்தது என்றால் மிகையல்ல. புலம்பெயர் நாடுகளில் தமிழர் உயர்வை எடுத்துச் சொல்லவும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கு எமது மொழியின் பழமை, பெருமை, பண்பாட்டை எடுத்துச்செல்லும் முயற்சியாகவும் இம் மாநாடு அமைகிறது.

தொல்காப்பியத்தின் பெருமையை உலகறியச் செய்வோம்.

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - கனடா 2024

மாநாட்டுச் செயற்குழு

முனைவர் **செல்வநாயகி ஸ்ரீதாஸ்**
தலைவர்

திரு. **சுகந்தன் வல்லிபுரம்**
துணைத்தலைவர்

திரு. **சண்முகராஜா சின்னத்தம்பி**
செயலாளர்

திருமதி **வாசுகி நகுலராஜா**
துணைச்செயலாளர்

திருமதி **கலாதேவி அரியராசா**
பொருளாளர்

திரு. **இலக்குவனார் திருவள்ளுவன்**

முனைவர் **இல. சுந்தரம்**

திருமதி **லீலா சிவானந்தன்**

திரு. **குமரகுரு கணபதிப்பிள்ளை**

திருமதி **உமா சூரியகுமார்**

திருமதி **சுவந்தி சங்கர்**

திரு. **சிவபாலு தங்கராசா**

திரு. **சண்முகலிங்கம் கந்தையா**

திருமதி **மாகிறேற் பவுலஸ்**

செல்வி **குமுதினி பொன்னுத்துரை**

மருத்துவர் **இரகுராமன் வரதராஜன்**

திரு. **இராச்குமார் குணரட்ணம்**

திரு. **நக்கீரன் இலட்சுமிகாந்தன்**

திரு. **சீனிவாசன் தணிகாசலம்**

முனைவர் **இரா. அருள்ராஜ்**

திருமதி **வாணிஸ்ரீ சிவபாதசுந்தரம்**

திருமதி **சசிகலா ஜீவானந்தன்**

திருமதி **ஜெயதீபா தனபாலசிங்கம்**

திருமதி **தமயந்தி பிறேம்ராஜ்**

திருமதி **புவனா கருணாகரன்**

திரு. **அகணி சுரேஸ்**

மருத்துவர் **மேரி கியுரி போல்**

திருமதி **சாதனா பாலேந்திரா**

திரு. **விக்னேஸ்வரன் கணபதிப்பிள்ளை**

மருத்துவர் **துளசி விக்னேஸ்வரன்**

திரு. **நாதன் வீரசிங்கம்**

திருமதி **சம்மு ரவி**

திரு. **மணிகண்டபிரபு ஆறுமுகம்**

திரு. **செந்தில்குமார் கனியப்பன்**

தொல்காப்பிய மன்றம் - கனடா

தமிழ்த்திறன் போட்டிக்குழு - 2024

திரு. வல்லிபுரம் சுகந்தன்
துணைத்தலைவர்

திரு. சண்முகராஜா சின்னத்தம்பி
செயலாளர்

திருமதி வாசுகி நகுலராஜா
துணைச்செயலாளர்

திருமதி கலாதேவி அரியராசா
பொருளாளர்

திருமதி லீலா சிவானந்தன்

திரு. குமரகுரு கணபதிப்பிள்ளை

திருமதி உமா சூரியகுமார்

திருமதி சுவந்தி சங்கர்

திரு. சிவபாலு தங்கராசா

திருமதி மாகிறேற் பவுலஸ்

செல்வி **குமுதினி பொன்னுத்துரை**

திரு. இராச்குமார் குணரட்ணம்

திருமதி வாணிஸ்ரீ சிவபாதசுந்தரம்

திருமதி சசிகலா ஜீவானந்தன்

திருமதி ஜெயதீபா தனபாலசிங்கம்

திருமதி தமயந்தி பிறேம்ராஜ்

தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பியத்தின் சிறப்பு, அதன் தொன்மை, இளமை, செம்மொழித் தன்மை, அறிவியல் கருத்துகள் முதலியவை மிக அண்மைக் காலம் வரை பெரும்பாலான தமிழர்களால் அறியப்படாமலே இருந்திருக்கிறது. "தொல்காப்பியம் கற்பதற்கு மிகவும் கடினமானது" என்று, எமது, கற்றறிந்த பெரியோர்கள், சொல்லிச் சொல்லியே, தொல்காப்பியத்தைப் பொதுமக்கள் அணுகாமலே போய்விட்டனர். இந்த நிலையை மாற்றி, தொல்காப்பியத்தை உலக அளவில் எடுத்துச்செல்வதற்காகத் தொடங்கப்பட்ட அமைப்பே உலகத் தொல்காப்பிய மன்றம்.

பிரான்சு நாட்டில், 2015ஆம் ஆண்டு "உலகத் தொல்காப்பிய மன்றத்தின்" தொடக்கவிழா நடைபெற்றது. அதன் பின், தொல்காப்பிய மன்றம் ஏனைய உலக நாடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அவ்வகையில் கனடாவில், தொல்காப்பிய மன்றம் அதே ஆண்டில் (2015) தொடங்கிவைக்கப்பட்டு, கடந்த 9 ஆண்டுகளாகச் சிறப்பாக இயங்கிவருகிறது.

கனடாத் தொல்காப்பிய மன்றத்தின் குறிக்கோள்:

- தமிழ் இனம், மொழி, கலை, பண்பாடு, இலக்கியம் முதலியவற்றின் தொன்மையை அறிவியல் அடிப்படையிலும் மானிடவியல் அடிப்படையிலும் ஆராய்ந்து தமிழர் தொன்மைச் சிறப்புகளை வெளிக்கொணர்வது.
- புலம்பெயர் நாடுகளில் பிறந்து வளரும் சிறார்களுக்கு உரிய முறையில் தமிழ் மொழிக் கல்வியை எடுத்துச்செல்வதோடு, இவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லத்தக்கதொரு தலைமுறையை உருவாக்குவது.
- பல்லினப் பல்பண்பாட்டு மக்களிடையே, தமிழ் மொழி, கலை, இலக்கியப் பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய அறிவை வளர்ப்பது.

கனடாத் தொல்காப்பிய மன்றம் மேற்கண்ட குறிக்கோள்களைக் கொண்டு செயலாற்றி வருகிறது. 30 ஆண்டுகளுக்கு முன் தமிழர் என்றொரு இனத்தின் இருப்பு புலம்பெயர் நாடுகளில் அறியப்படாத ஒன்றாக இருந்தது. இன்று. தமிழர், உலகப் பரப்பெங்கும் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்த நாடுகளின் அரசியலிலும் இரண்டாம் தலைமுறைத் தமிழர் ஈடுபட்டுள்ளார்கள்.

பாடசாலைகளில் மட்டுமல்லாது பல்கலைக்கழகங்களிலும் (தொடக்கக் கல்வி) கற்பிக்கப்படுகிறது. நாட்டையும் உரிமையையும் இழந்து அரசியல் அகதிகளாக அண்டை அயல்நாடுகளில் அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் தமது நிலையைத் திரப்படுத்திக் கொண்டார்கள். மொழியையும் பண்பாட்டையும் காப்பதில் அதிக அக்கறை கொள்கிறார்கள். 300க்கும் அதிகமான சிறுவர் தமிழ் பாடசாலைகள் ரொறொன்ரோ நகரில் இயங்குகின்றன. இந்த வகையைச் சார்ந்த தமிழ் ஆர்வத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் கனடா தொல்காப்பிய மன்றம்.

தொல்காப்பிய மன்றம் பல பெரும் ஆளுமைகளின் தலைமையில் வெற்றிகரமாக ஒன்பதாவது ஆண்டில் தடம் பதித்திருக்கிறது. தொல்காப்பிய ஆய்வுகளை முன்னிலைப்படுத்தும் மாதக் கருத்தரங்குகள், சிறாரை ஊக்குவிக்கும் தமிழ்த் திறன் போட்டிகள், விழா காணும் பண்டிகைகள், கொண்டாட்டங்கள் என்று மன்றத்தின் செயற்பாடுகள் விரிந்துகொண்டே செல்கின்றன. இந்த வரிசையில் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டினைத் திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசித் திங்கள் 04, 05, 06ஆம் நாட்களில் கனடா, ரொறொன்ரோ (Toronto) நகரின் சிவிக் மையத்தில் தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய இணையத்துடன் இணைந்து நடத்துகின்றது.

இலக்குவனார் இலக்கிய இணையம்

தமிழ் வளர்ச்சிக்காகவும் இலக்குவனார் புகழ் நினைவிற்காகவும் செயற்படும் இலக்கிய அமைப்பு. இதன் குறிப்பிடத்தக்க பணிகளில் சில வருமாறு:

சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்ப்பல்கலைக்கழகம் முதலான தமிழ் வளர்ச்சி தொடர்பான நிறுவன நூல்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தன. எனவே, இவர் தமிழ் வளர்ச்சி அமைச்சர் தமிழ்க்குடிமகனிடம் தெரிவித்து இந்நூல்களைக் கடன் அடிப்படையில் விற்பனை நிறுவனங்களுக்கு வழங்கச் செய்து புத்தகக் காட்சிகள் நடத்தி விற்க ஏற்பாடு செய்தது. இதன் தொடர்பில் மதுரையில் புது நூற்றாண்டுப் புத்தக நிறுவனமாகிய என்.சி.பி.எச். தொடக்கவிழாவை நடத்தியது. மேலும் தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் மொழிகளிலே தமிழ் வளர்ச்சி குறித்துக் கட்டுரைப்போட்டி நடத்தி இவ்விழாவில் பரிசுகள் வழங்கியது.

இலக்குவனார் நூற்றாண்டின்பொழுது சென்னை வானொலி நிலையம், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தமிழ் அமைப்புகள் மூலம் வெவ்வேறு நகர்களில் இலக்குவனார் நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடியது.

துபாய், மலேசியா, பிரான்சு முதலான வெவ்வேறு நாடுகளில் உள்ள அமைப்புகள் மூலமும் இலக்குவனார் நூற்றாண்டுவிழாவை நடத்தியது.

தமிழுக்கான செம்மொழி அறிந்தேற்பு, வழிபாட்டு மொழியாகத் தமிழ், ஆட்சித்தமிழ்ச் செயலாக்கம், ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புகள், மும்மொழித் திணிப்பு எதிர்ப்பு போன்றவற்றின்மீது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காகக் கட்டுரைப் போட்டிகள் நடத்தியும் கருத்தரங்கங்கள், விழாக்கள் நடத்தியும் தமிழ்ப்பணியாற்றி வருகிறது.

இலக்குவனார் தொடர்பான நூல்களையும் இலக்குவனாரின் நூல்களையும் இலக்குவனார் இலக்கிய இணையம் வெளியிட்டு வருகிறது. இப்போது கனடாவில் உள்ள தொல்காப்பிய மன்றம் மூலம் இணைந்து தொரண்டோ நகரில் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டை நடத்துகிறது.

40 ஆண்டுகளுக்கு மேலாகச் செயற்படும் இலக்குவனார் இலக்கிய இணையத்தின் ஒருங்கிணைப்பாளர்களாக இலக்குவனார் திருவள்ளுவன், பொறி. இ. திருவேலன், பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார் ஆகியோர் உள்ளனர்.

மாநாட்டின் பேராளர்கள் - *Conference Leadership*

கனடா

பேரா. **யோசப்பு சந்திரகாந்தன்**
பேராசிரியர், கிறித்தவ கல்வித் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
முதன்மையர், பிரான்சிஸ்
சேவியர் செமினரி, யாழ்ப்பாணம்.

மருத்துவர் **இரா. இலம்போதரன்**
தாபக உறுப்பினர், ரொறொண்டோ
தமிழ்ச் சமூக மையம் முன்னெடுப்புக்குழு,
தலைவர், சைவ சித்தாந்த பீடம், கனடா
நிறுவுனர், உலக மருத்துவ நல அமைப்பு,
கனடா.

திரு. **சண்முகலிங்கம் கந்தையா**
கல்விச் செயலர், SLAS (பணி நிறைவு)
பணிப்பாளர் (பணி நிறைவு), இந்து சமயப்
பண்பாட்டுத் திணைக்களம், கொழும்பு.

பேரா. **சுப்பிரமணிய ஐயர்**
பேராசிரியர், கனடா தமிழ்க் கல்லூரி.
பேராசிரியர் (பணி நிறைவு), தமிழ்த் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பேரா. **பார்வதி கந்தசாமி**
பேராசிரியர், கனடா தமிழ்க் கல்லூரி
பணிப்பாளர், வசந்தம் நல்வாழ்வு நிலையம்
பேராசிரியர் (பணி நிறைவு),
யாழ் பல்கலைக்கழகம்.

முனைவர் **மைதிலி தயாநிதி**
மேனாள் பிரதிப் பதிவாளர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்
மேனாள் உதவி அரசாங்க அதிபர்
இலங்கை நிருவாக சேவை (SLAS)

அமெரிக்கா

மருத்துவர் **விஜய் ஜானகிராமன்**
தலைவர், உலகத் தமிழ் இருக்கைக் குழுமம்.
முதன்மை இயக்குனர்,
ஹாவட் தமிழ் இருக்கை இயக்குனர் குழு,
ரொறொண்டோ தமிழ் இருக்கை.

ஜெர்மனி

முனைவர் **க. சுபாஷிணி**
தலைவர், நிறுவனர் தமிழ் மரபு அறக்கட்டளை
பன்னாட்டு அமைப்பு
Enterprise Architect, DXC Technologies, Germany

தமிழ்நாடு

பேரா. **ப. மருதநாயகம்**
ஆங்கிலத் துறை மேனாள் தலைவர்,
புதுவைப் பல்கலைக்கழகம் மேனாள் இயக்குனர்,
மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், புதுவை.

பேரா. **கு. வெ. பாலசுப்பிரமணியன்**
இலக்கியத்துறை மேனாள் தலைவர்,
பொறுப்புப் பதிவாளர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பேரா. **முதுமுனைவர் அரங்க. பாரி**
ஆட்சிக்குழு உறுப்பினர். பேராசிரியர், தமிழியல்
துறை. முதன்மையர், இந்திய மொழிப்புலம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

பேரா. **மு. இளங்கோவன்**
செயலர், உலகத் தொல்காப்பிய மன்றம்.
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கா.மா. அரசு பட்டமேற்படிப்பு மையம், புதுச்சேரி.

இலங்கை

பேரா. **அ. சண்முகதாஸ்**
பீடாதிபதி, கலைப் பீடம்
பீடாதிபதி, உயர் பட்ட ஆய்வுப் பீடம் மற்றும்
இயக்குனர், ஊடக வளங்கள் பயிற்சி நிலையம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பேரா. **கி. விசாகரூபன்**
தமிழ்த் துறைத் தலைவர், பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பேரா. **சாந்தி கேசவன்**
பேராசிரியர், இந்து நாகரிகத் துறை,
கலை-கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

www.tolkappiyam.ca tolcanada@gmail.com 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152

முக. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

26.08.2024

வாழ்த்துச் செய்தி

இந்திய மொழிகளுள் நமக்குக் கிடைத்திருக்கும் இலக்கண நூல்களில் எல்லாம் பழமையானதும், அறிவியல்வழிப்பட்டதும், இன்றைய மொழியியலுடன் மிகவும் நெருக்கமுடையதுமான தொல்காப்பியம் தோண்டத் தோண்டப் பல புதிய திறப்புகளை வழங்கும் அறிவுச்சுரங்கம் ஆகும். அத்தகைய பழந்தமிழ் நூலுக்குக் கனடா தொல்காப்பிய மன்றமும், தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய இணையமும் இணைந்து "முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு – கனடா 2024" எனும் மூன்று நாள் மாநாட்டினை எதிர்வரும் செப்டம்பர் 20, 21, 22 ஆகிய நாள்களில் நடத்தவுள்ளதை முயற்சியைப் பற்றி அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அயலக மண்ணிலும் தொல்காப்பியம் பற்றிய ஆராய்ச்சி மாநாடு நடைபெறுவது அங்குள்ள தமிழர்களிடையே நமது மொழி, பண்பாடு, அறிவுமரபு ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் ஆர்வத்தைத் தூண்டவும் பெரிதும் உதவியாக அமையும். புலம்பெயர் தமிழர்களுக்குத் தாய்த்தமிழ் நிலத்துடனான உறவை வலுப்படுத்த நமது திராவிட மாடல் அரசு பல ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை முன்னெடுத்து வரும் வேளையில், தாங்கள் அயலக மண்ணில் அதேபோன்ற முயற்சிகளை மேற்கொள்வது பாராட்டத்தக்கது.

உலகெங்கிலும் இருந்து தமிழறிஞர்கள் கலந்துகொள்ளும் ஆய்வரங்கம், 60 ஆய்வுரைகள் அடங்கிய "தொல்காப்பிய மாநாட்டு மலர்" வெளியீடு ஆகியவற்றுடன் 'தொல்காப்பியக் களவியல்' நாட்டிய நாடகம், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, பறை போன்ற தமிழர் மரபுக் கலைவடிவங்களும் நிகழ்த்தப்படவுள்ளது இம்மாநாட்டுக்குச் சிறப்பு சேர்ப்பதுடன், தங்களது நோக்கம் வெற்றியடையவும் வழிவகுக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். முழுவதும் தமிழார்வம் கொண்ட தங்களது தொண்டர்களாலே நடத்தப்படும் இம்மாநாடு வெற்றியடைய உளப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,

(மு.க.ஸ்டாலின்)

Ontario

Premier of Ontario - Premier ministre de l'Ontario

September 20-22, 2024

A MESSAGE FROM PREMIER DOUG FORD

Warm greetings to all the participants of the First International Tolkappiya Research Conference – Canada.

This conference is very important for the promotion and preservation of Tamil culture, language, and heritage. The Tolkappiyam, as one of the oldest surviving grammar texts in the world, holds immense cultural and historical importance for the Tamil community and the entire global literary landscape.

I commend the Association for Tolkappiyam – Canada and the Tamilnadu – Ilakkuvanar Literary Association for their dedication and for organizing this remarkable event. Your commitment to advancing the understanding of Tamil literature and ensuring that its knowledge is passed down to future generations is truly commendable.

Best wishes for a successful and inspiring conference.

Doug Ford
Premier

HOUSE OF COMMONS
CHAMBRE DES COMMUNES
CANADA

Gary Anandasangaree
Member of Parliament
Scarborough—Rouge Park

September 20, 2024

Greetings from The Honourable Gary Anandasangaree

Member of Parliament for Scarborough—Rouge Park, Toronto, Canada

I want to warmly congratulate the Association for Tolkappiyam – Canada on hosting the First International Tolkappiya Research Conference.

As one of the world's oldest surviving languages, Tamil is the primary means through which we express ourselves, preserve our history, and pass down rich traditions from generation to generation. This esteemed gathering of scholars, students, and community members beautifully underscores the profound influence of the "Tolkappiyam" on Tamil literature. By bringing together diverse perspectives and deepening our understanding of this ancient text, the conference plays a vital role in celebrating and sustaining our linguistic and cultural heritage.

I wish all participants a fruitful and inspiring conference, filled with meaningful discussions and lasting connections.

Yours very truly,

The Honourable Gary Anandasangaree
Member of Parliament
Scarborough—Rouge Park

Ottawa

Room 733, Confederation Building
Ottawa, Ontario, K1A 0A6
613-992-1351
Gary.Anand@parl.gc.ca

Constituency Office

3600 Ellesmere Road-Unit 3
Scarborough, Ontario, M1C 4Y8
416-283-1414
Gary.Anandasangaree.C1@parl.gc.ca

September 9th, 2024

A Personal Greeting

from

Member of Provincial Parliament, Logan Kanapathi

On behalf of the Legislature of Ontario, I would like to congratulate the Association for Tolkappiyam on the occasion of their first International Research Conference.

The Association for Tolkappiyam has played a pivotal role in promoting the work and knowledge of the Tamil scholar Tolkappiyar. Your commitment to passing on one of the oldest surviving grammar texts has enriched the younger generations understanding of Tamil Language, literature, and heritage.

I commend you for your contributions to the members of the broader tamil community. I would like to extend my sincere appreciation to the association President, Dr. Selvanayaki Sridas, for working to make this event possible. I would also like to thank VP Suganthan, Secretary Shanmugarajah, Treasurer Ariyarasa, the Board of Directors, and all the members for their contributions. It is your combined passion and effort which preserves the Tamil culture in these ever-changing times. I look forward to watching the growth of this wonderful association and wish you the best for many more years to come.

Kind regards,

Logan Kanapathi, MPP
Markham-Thornhill

Constituency Office | 7380 McCowan Road, Unit 3, Markham, ON L3S 3H8 T: 905-3051935 * logan.kanapathico@pc.ola.org

Ontario
LEGISLATIVE ASSEMBLY

VIJAY THANIGASALAM, MPP
Scarborough—Rouge Park

Greetings from MPP Vijay Thanigasalam

As the Member of Provincial Parliament for Scarborough-Rouge Park, it is my pleasure to welcome everyone to The First International Tolkappiya Research Conference – Canada organized by the Association for Tolkappiyam - Canada and the Tamilnadu – Ilakkuvanar Literary Association.

As one of the oldest and most significant texts on grammar, Tolkappiyam is a cornerstone of Tamil culture. Events like this play a crucial role in keeping Tolkappiyar's legacy alive, ensuring it continues to inspire future generations. Your ongoing efforts to deepen the understanding of Tamil language, literature, and heritage among younger generations is truly commendable.

I would like to extend my heartfelt thank you to everyone involved in organizing this important conference. Your hard work and dedication have made this event possible, and your contributions are invaluable in preserving and promoting the rich heritage of the Tamil language and culture. Your dedication not only enriches our community but also ensures that this invaluable heritage remains alive and vibrant for many years to come.

Yours truly,

Hon. Vijay Thanigasalam, MPP
Scarborough-Rouge Park

Parthi Kandavel
City Councillor
Ward 20 – Scarborough Southwest

Scarborough Southwest
City Hall, 2nd Floor, Suite A11
100 Queen Street West
Toronto, Ontario M5H 2N2

Tel: 416-392-4052
E-mail: councillor_kandavel@toronto.ca

My heartfelt and sincere congratulations to the Association for Tolkappiyam and Tamilnadu-Ilakkuvanar Literary Association on the First International Tolkappiya Research Conference – Canada!

Conferences like these are where new and important ideas are born, discussed, and grown. They're vital venues for lively discussion, especially on nuanced and complex topics such as the Tolkappiyam. Ancient texts often carry lessons and morals that are relevant in the modern day, grounding us in the past to prepare for our future. I applaud those who study the wisdom of the Tolkappiyam send my best wishes for a program full of great speeches and discussion.

As the only City Councillor of Tamil heritage, I am always proud to support events like these. We share a rich culture that deserves the attention and discussion that conferences bring; it provides an opportunity to celebrate the resilience and successes of Tamil Canadians everywhere, sharing in the wonders of our shared past. The wonder and knowledge that comes from discussing our heritage draws us closer to each other, our community, and our ancestors. Thank you for working to keep this vital and fascinating piece of Tamil history and culture alive, and for bringing it to Scarborough!

In closing, my best wishes for a successful and lively conference. Thank you for bringing our community together and celebrating a cornerstone of our culture.

Sincerely,

Parthi Kandavel
City Councillor
Ward 20 - Scarborough Southwest

JUANITA NATHAN
WARD 7 COUNCILLOR

September 20, 2024

Greetings from Councillor Juanita Nathan
City of Markham

I am pleased to extend my warm greetings to everyone attending the First International Tolkappiya Research Conference – Canada, jointly organized by the Association for Tolkappiyam – Canada and the Tamilnadu – Ilakkuvanar Literary Association.

Congratulations to the Association for Tolkappiyam – Canada for taking the lead in hosting this unique conference. Since 2015, the organization has been dedicated to promoting and educating people about Tolkappiyam, the most ancient Tamil grammar text. Through annual events and workshops, the association has advanced the understanding of Tamil language, literature, and heritage, especially among the younger generations.

This conference plays a crucial role in highlighting the significance of Tamil literature while offering a platform for academic scholars to network and share their insights. Bringing together experts, researchers, and students of Tolkappiyam fosters the exchange of ideas and perspectives, providing a valuable learning experience and inspiring new research interests.

I eagerly look forward to hearing the various perspectives and insights on the Tolkappiyam that will be shared throughout the conference.

I would like to extend my heartfelt appreciation to the Association for Tolkappiyam - Canada and its board members for organizing this exceptional conference.

Please accept my best wishes for a memorable event!

Sincerely,

Juanita Nathan
Ward 7 Councillor
City of Markham

The Corporation of the City of Markham, Anthony Roman Centre, 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
www.markham.ca Jnathan@markham.ca 905 948 5107

Toronto District School Board

Trustee

Neethan Shan

Ward 17, Scarborough Centre

It is with great delight and honour that I write this message of congratulations to the Association for Tolkappiyam. It is my pleasure to celebrate with you on this special occasion of the First International Tolkappiya Research Conference in Canada. Your association's contribution to Tamil language, heritage and culture since 2015 has been exemplary and greatly appreciated. Your organization has been honouring the legacy of Tolkappiyar, a renowned Tamil Scholar, through your phenomenal work for many years in Canada. Through your work, you continue to motivate at least three generations of Tamil Canadians to learn and treasure Tamil language and its richness.

I am particularly pleased to offer this message of greetings for a publication that is going to carry several in-depth research articles written by many contemporary Tamil scholars amongst us. Such a publication is critical to help us continue educating us at a deeper level. I am looking forward to reading the publication that will showcase many useful research articles. I am also eager to learn from the many meaningful presentations being planned.

I would like to particularly thank you for the work you do to inspire the young generation of Tamil Canadians to learn Tamil language and to showcase their talents and skills. My sincere appreciation goes to all the volunteers of the organization that have helped to advance its mandate for nine strong years.

I extend my warmest greetings to all the attendees at this milestone event. Finally, I humbly request all volunteers of Association for Tolkappiyam to continue their amazing work for many more years to come, so that our next generation and all generations can continue to benefit from the richness of our Tamil language and literature.

With best wishes,

Sincerely,

Neethan Shan
Vice Chair and Trustee – Toronto District School Board

Toronto District School Board • 5050 Yonge Street • Toronto • Ontario • M2N 5N8
416-395-8787 • Neethan.Shan@tdsb.on.ca • www.tdsb.on.ca/ward17

Toronto District School Board

Trustee
Anu Sriskandarajah
Ward 22, Scarborough-Rouge Park

August 27, 2024

First and foremost, I would like to extend my deepest gratitude to the Association for Tolkkapiyam for their invitation to the First International Tolkappiya Research Conference – Canada.

Since the inauguration of the organization in 2015, the Association for Tolkappiyam – Canada and Tamilnadu Ilakkuvanar Literary Association has encouraged and fostered the growth of the work and knowledge of the esteemed scholar of Tolkkappiyar. This international conference is a monumental event for the Association for Tolkkapiyam as a special publication of research articles will be released. The publication of research articles will help shed light on the ancient text and its significance and importance to Tamil culture. As a Tamil Canadian, it prides me to see motivated, ambitious individuals in our community dedicated to teaching others our beautiful history and legacy.

I wish the organization and all attendees my warmest wishes. I wish the organization success and prosperity for 2024 and best of luck with all future celebrations. Congratulations to the association on their years of success in connecting and developing Canadian Tamils. I wish the volunteers and dedicated staff and board of directors continued prosperity in their endeavours.

Sincerely,

Anu Sriskandarajah
Trustee, Ward 22, Scarborough - Rouge Park

From the office of Trustee Anu Sriskandarajah

Toronto District School Board • 5050 Yonge Street • Toronto • Ontario • M2N 5N8
416-395-8787 • Anu.Sriskandarajah@tdsb.on.ca • www.tdsb.on.ca/ward22

பேராசிரியர் **ப. மருதநாயகம்**
ஆங்கிலத் துறை மேனாள் தலைவர்,
புதுவைப் பல்கலைக்கழகம்
மேனாள் இயக்குனர், மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்.

வாழ்த்துரை

தொல்காப்பியம் பற்றி ஏராளமான கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டுள்ளன, எத்தனையோ நூல்களும் கட்டுரைகளும் தமிழ்மொழியிலும் ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன, எவ்வளவோ ஆய்வேடுகள் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுள்ளன, ஆயினும் அதுபற்றிச் சொல்லப்பெற்றவையைவிட, சொல்லப்படவேண்டியவை பல.

அது எந்த நூற்றாண்டில் தோன்றியது என்பது பற்றித் தமிழறிஞர்களும் மேலைக் கல்வியாளர்களும் பல கருத்துகளை வெளியிட்டுள்ளனர். அதன் காலம் எதுவாயினும் உலகின் செம்மொழிகளிலும் இன்றைய மொழிகளிலும் காணப்படும் எல்லா இலக்கண நூல்களுக்கும் அது முந்தியது என்பதே வரலாற்று உண்மை. வேதப்பிராதிசாக்கியங்களுக்கும் பாணினீயத்திற்கும் ஐந்திரத்திற்கும் காதந்திரத்திற்கும் பிற வடநூல்களுக்கும் அது கடன்பட்டிருக்கிறது என்பது ஐயத்திற்கு இடமற்ற உண்மையாகும். தொல்காப்பியம் கூறும் இலக்கணம் தமிழ்மொழிக்கு மட்டுமன்று. எம்மொழிக்கும் எக்காலத்திற்கும் பொருந்தும் இலக்கணம் (*Universal grammar*) என்பதை ஆழ்ந்த மொழியறிவும் நேர்மை உள்ளமும் கொண்டவர் உணர்வர்.

அது மரபிலக்கண நூலேயன்றி மொழி நூல் அன்று என்று கூறுவர் மரபிலக்கணம் பற்றியும் மொழியியல் பற்றியும் ஏதும் அறியாதவர். இன்றைய மொழி நூலார்க்குத் தொல்காப்பியர் கற்பிக்கும் பாடங்கள் பல. அதன் ஒரு பகுதியே தொல்காப்பியர் எழுதியிருக்கவேண்டுமென்றும் பிற பகுதிகள் பிறரால் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்றும் கூறுவார் அதனை முழுமையாகப் பழுதறக் கற்றவர் ஆகார். இவர்களெல்லாம் தொல்காப்பியர் 'மொழியியல் ஆசான்களுக்கெல்லாம் ஆசான்' (*The Ultimate Linguistic Guru*) என்றும் அவர் இலக்கணம், யாப்பு, சொற்கலை, கவிதை ஆகிய மொழியின் எல்லாக் கூறுகள் பற்றியும் பேசுகிறார் என்றும் ஏ.கே இராமானுசன் சொல்லியிருப்பதையும் அது 'ஒரு முழு மொழிநூல்' என்று மொழியியல் பேராசிரியர் க. பாலசுப்பிரமணியன் நிறுவியிருப்பதையும் அறிந்துகொள்ள வேண்டும்.

அது வெறும் மொழிநூல் மட்டுமன்று, வாழ்வியல் நூலுமாகும் என்பதை அதன் பொருளதிகாரத்தை நுட்பமாக ஆராய்வர் ஏற்றுக்கொள்வர். தொல்காப்பியம் கூறும் கவிதையியலின் சிறப்பை, அதனோடு அரிசுடோட் டிலின் *Poeties*, இலாஞ்சைனசு என்பாரின் *On the Sublime*, ஓரசின் *Art of Poetry*, ஆனந்தவர்தனரின் தொனியாலோகம் போன்றவற்றை ஒப்பிட்டுப்பார்ப்பார் எளிதில் புரிந்து கொள்ளலாம். தொல்காப்பியர் 'செய்யுளியல்', 'உவமயியல்', 'மெய்ப்பாட்டியல்' ஆகியவற்றில் தரும் நூற்பாக்களையும் அவற்றிற்குப் பேராசிரியர் தரும் விளக்கங்களையும் படிப்பார் அவர் கவிதையின் எல்லாக் கூறுகள் பற்றியும் தெளிவாக உணர்ந்துள்ளார் என்பதையும் அவர் கூறுபவை இன்றைய மேலைக் கவிதையியலார் கூறுவனவற்றிலும் மேம்பட்டவை என்பதையும் கண்டு கொள்வர்.

இன்றைய இளைய தலைமுறையினர் தொல்காப்பியப் பிறப்பியல் பற்றி ஆங்கில உச்சரிப்பு அகர முதலி எழுதிய *Jones* என்பார் சொல்லியதையும் தொல்காப்பியத்தின் தொன்மை பற்றி வேதநூல் விற்பன்னரான சுந்தர் ராசு தமது *Vedic Studies* எனும் நூலில் எழுதியுள்ளதையும் தொல்காப்பியத்தின் உயர்வற உயர்ந்த உயர்வு பற்றி பேராசிரியர் இலக்குவனார் எழுதியுள்ள கட்டுரைகளையும் தமிழ்மொழியின் தொன்மை பற்றி மொழியியல் வல்லுநர்களான *Mc Alpin, Leritt* போன்றோர் வழங்கியுள்ள நூல்களையும் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாத் தேவையாகும். அன்னார்க்கு அவற்றை அறிவுறுத்துவது இத்தகைய மாநாட்டு கருத்தரங்குகளின் தலையாய கடமையாகும். கருத்தரங்கு அமைப்பாளர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியும் வாழ்த்துகளும்.

6-7-2024

பேராசிரியர் ப. மருதநாயகம்

முதுமுனைவர் **அ. சண்முகதாஸ்**
வாழ்நாள் தமிழ்ப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
சாகித்தியரத்தினா, இலங்கை அரசு.

வாழ்த்துச் செய்தி

கனடா நாட்டுத் தொல்காப்பிய மன்றம் இவ்வாண்டு 2024 செப்ரெம்பர் 20, 21, 22, ஆம் திகதிகளில் நடத்தவுள்ள முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டுக்கு இந்த வாழ்த்துரையை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தொல்காப்பியம் பண்டைத் தமிழரின் மொழியையும் வாழ்வையும் விவரணஞ் செய்யும் இலக்கண நூலாகும். மொழிக்குத் தானே இலக்கணம். வாழ்வுக்கும் இலக்கணமா? தொல்காப்பியர் தன் நூலின் முதலாவது அதிகாரத்தில் எழுத்திலக்கணமும் இரண்டாவது அதிகாரத்தில் சொல்லிலக்கணமும் மூன்றாவது அதிகாரத்தில் பொருளிலக்கணமும் கூறுகிறார். இதன்படி எழுத்துக்கள் சொற்களை ஆக்குகின்றன. சொற்களும் வாக்கியங்களும் பொருளை உணர்த்துகின்றன.. சொற்களும் வாக்கியங்களும் இலக்கியங்களை ஆக்குகின்றன. அவற்றின் பொருள், யாப்பு, அணி, அவை உணர்த்தும் வாழ்வியற் கோலங்கள், அவற்றின் சூழல், என்பன பற்றி பொருளதிகாரம் கூறுகின்றது. தொல்காப்பியம் தமிழரின் மொழிக்கும் வாழ்வுக்கும் இலக்கணம் கூறும் நூலாகும். எனவே கனடா நாடு இத்தகைய ஒரு நூலுக்கு ஓர் உலக ஆராய்ச்சி மாநாடு நடத்துவது பொருத்தமானதாகும்.

இலங்கையிலே தொல்காப்பிய கற்கைநெறி பற்றி இந்த வேளையிலே நான் எண்ணிப் பார்க்கிறேன். தொல்காப்பிய இலக்கணமும் சங்க இலக்கியமும் புலவர்களாலும் ஆசிரியர்களாலும் கற்கப்பட்டன. இது பின்னர் சி.வை... தாமோதரம்பிள்ளை முதலில் கலித்தொகையையும் அடுத்துத் தொல்காப்பியம் சொல்லதிகாரத்தையும் பதிப்பிக்க வழிகாட்டிற்று. சி. கணேசையரிடம் நமசிவாயதேசிகரும் பேராசிரியர் செல்வநாயகமும் தொல்காப்பியம் கற்றனர். கந்தமுருகேசனார் யாழ்ப்பாணம் வடமராச்சியில் பல மாணவர்களுக்குத் தொல்காப்பியம் கற்பித்தவர். பண்டிதர் வீரகத்தி, பண்டிதர் பரந்தாமன், முனைவர் ச. மனோன்மணி, பேராசிரியர் சி. சிவலிங்கராஜா ஆகியோர் கற்றனர். மட்டக்களப்பில் சந்திரசேகரக் குருக்களிடம் சுவாமி விபுலானந்தர் தொல்காப்பியம் கற்றார். தொல்காப்பியத்தை மனப்பாடமாகச் சொல்லும் பார்வதியம்மையார். அவரிடம் கற்றவர் பத்மாசனி அம்மையார்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர், வித்துவான் தேர்வுகளுக்குத் தொல்காப்பியம் பயிலப்பட்டது. சுவாமி விபுலானந்தர், பேராசிர்யர் க.கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் வி.சீ. கந்தையா, பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆகியோரைக் குறிப்பிடலாம். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அது தொடங்கிய காலத்திலிருந்தே தொல்காப்பியம் கற்பிக்கப்பட்டது. "இலங்கையில் தொல்காப்பியக் கற்கை" என்றொரு கட்டுரை இந்த மாநாட்டிலே படிக்கலாமென எண்ணினேன். அது கைகூடவில்லை. எனினும் இம்மாநாடு சிறக்க ஓர் ஆசியுரை வழங்கும்படி இலங்கைப் பல்கலைக் கழகத்தில் என் மாணவி,, இந்த மாநாட்டுத் தலைவி திருமதி செல்வநாயகி சிறீதாஸ் என்னைக் கேட்டுகொண்டார். நம் இளையவர்களுக்கு நம்முடைய பண்பாட்டையும் வரலாற்றையும் கையளிக்க வேண்டுமென்றால் அவர்களுக்குத் தொல்காப்பிய அறிவினைக் கடத்தவேண்டும். இம்மாநாடு அத்தகைய பணிக்கு ஊன்றுகோலாக இருக்கும். இம்மாநாடு சிறப்பாக நடைபெற என் ஆசிகளைக் கூறுகிறேன். இம்மாநாட்டை ஒழுங்கமைப்பவர்களுக்கு என் பாராட்டுகளைக் கூறி இவ் வாழ்த்துரை - ஆசியுரையை நிறைவுசெய்கிறேன்.

செப்டம்பர் 14, 2024

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

மருத்துவர் **விஜய் ஜானகிராமன்**
இதயநல மருத்துவர், அமெரிக்கா.
தலைவர், உலகத் தமிழ் இருக்கைக் குழுமம்



வாழ்த்துச் செய்தி

தாயே தமிழே வணக்கம்! நான் நீண்ட காலமாகத் தமிழ்மேல் கொண்ட பற்றும் ஆர்வமும் காரணமாகத் தமிழ்ப்பணி ஆற்றும் பொருட்டு 'தமிழ் இருக்கை குழு' என்ற வரி விலக்கு பெற்ற தன்னார்வலர் குழுமத்தின் தலைவராக இணைந்துகொண்டேன். இக் குழுமம் உலகளாவிய தமிழர்களின் ஆதரவுடன் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைத்து, அடுத்துக் கனடா, டொரோண்டோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைத்து முடித்துள்ளோம். இப்போது கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் அறிஞர் அண்ணாவின் பெயரில் தமிழ்த்துறை விரிவாக்கப் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

'தமிழின் உயிர் தொல்காப்பியம்', 'தமிழர்களின் உயிர் திருக்குறள்' என ஒரு தமிழறிஞர் சொல்லக் கேட்டுள்ளேன். 2015ஆம் ஆண்டு முதல் கனடாவில் இயங்கி வரும் தொல்காப்பிய மன்றம், தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய இணைய அமைப்புடன் இணைந்து, எதிர்வரும் செப்டம்பர் 20, 21, 22ஆம் நாட்களில் டொரோண்டோ மாநகரில் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு நடக்க இருப்பதையொட்டி மட்டற்ற மகிழ்ச்சி. இவ்விழாவில் பங்கு பெற அழைத்தமைக்கு எனது மனமார்ந்த நன்றி.

இவ்விழாவில் கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். எனினும் இவ்விழா சீரும் சிறப்புடன் நடைபெறும் என்பதில் ஐயமில்லை. உலகளாவிய தமிழ் அறிஞர்கள் கலந்துகொள்ளும் ஆய்வரங்கம், 60க்கும் மேற்பட்ட ஆய்வுரைகள், நாட்டியம், நாடகம், வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து, பறையெனத் தமிழ் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருப்பதைக் குறித்து மட்டற்ற மகிழ்ச்சி.

தமிழ் மொழி, கலைப் பண்பாடு முதலியவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லத் தக்கதொரு தலைமுறையை உருவாக்கும் நோக்குடன் தொல்காப்பிய மன்றம் ஏற்பாடு செய்துவரும் விழா பெரிதும் வெற்றி பெற வாயார வாழ்த்துகிறேன்.

தங்களின் முயற்சி போற்றுதலுக்குரியது. தங்களுடன் இணைந்து செயலாற்றும் ஒருங்கிணைப்பாளர்கள், தன்னார்வலர்கள், புரவலர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாகுக.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!

செப்டம்பர் 07, 2024

மருத்துவர் விஜய் ஜானகிராமன்

மருத்துவர் **இ. லம்போதரன்**
தாபக உறுப்பினர், ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
இயக்குனர், கனடா சைவச் சித்தாந்தப் பீடம்

வாழ்த்துச் செய்தி

தமிழர் வாழ்வியலும் மரபும் தொன்மையானது. தமிழ் நூல்களிலேயே மிகத் தொன்மையானது தொல்காப்பியம். தொல்காப்பியமானது எழுத்து, சொல், பொருள் எனத் தமிழ் மொழியையும் தமிழர் வாழ்வியலையும் பகுத்து வரையறுத்துச் சொல்லுவது. பொருள் அதிகாரத்தில் தமிழர் வாழ் நிலப்பரப்பை ஐந்திணைகளாகவும், தமிழர் வாழ்வை அகம் என்னும் இல்லற வாழ்வாகவும் புறம் என்னும் சமூக வாழ்வாகவும் பகுத்துக் கண்டது தொல்காப்பியம். அந்தந்த நிலப்பரப்பின் தாவரங்களையும் மிருகங்களையும் அவற்றின் சிறு பருவம் முதல் முது பருவம் வரை அழைக்கும் வகைகளையும் பெயர்களையும் வரையறுத்தது தொல்காப்பியம்.

தமிழர்களின் சமூக வாழ்வில் கொடையையும் வீரத்தையும் புறம் என்று இனங்கண்டு போற்றுவது தொல்காப்பியம். தமிழர்களின் தனிமனித வாழ்வில் காதலைத் திருமணத்திற்கு முந்தைய நிலையில் களவியல் என்றும் திருமணத்துக்குப் பின்னான நிலையில் கற்பியல் என்று வகுத்து இரசித்துப் போற்றி சொல்வதும் தொல்காப்பியம். காதலிலும் கருத்தொருமித்த இருவர் கூடும் கூடலை மட்டுமல்லாது கருத்துவேறுபாட்டுடன் அவர்கள் பிணங்கும் ஊடலையும் கூடக் காதலின் சுவையான அங்கமாகக் கண்டது தொல்காப்பியத் தமிழ் மரபு.

மொத்தத்தில் இன்று நாம் கூறும் தமிழியலை அன்றே வரையறுத்த இலக்கியம் தொல்காப்பியம். அந்த மரபு பண்டைய சங்க இலக்கியங்களினூடாகவும், பின்னர் எழுந்த பக்தி யுகத்தின் சமய இலக்கியங்களினூடாகவும் இன்றைய சமூக இலக்கியங்களினூடாகவும் இன்று வரை வாழும் மரபாக எம்மிடையே தொடர்கின்றது.

இவ்வாறு உயிர்நிலையில் இயங்கும் உயர் நிலைத் தமிழ் மொழியை, மரபை வாழ்வை வகுத்த தொன்னூலாம் தொல்காப்பியத்தை உலகெலாம் பரவும் வகையில் வழி சமைத்துச் செயற்பட்டு வருகின்ற தொல்காப்பிய மன்றம் அனைத்துலகத் தொல்காப்பிய மாநாட்டைத் தமிழ் வழங்கும் ஆறாம் திணையாகிய பனியும் பனி சார்ந்த நிலமுமான கனடாவில் துரந்தை (ரொறன்ரோ) நகரில் நிகழ்த்துகின்றது. இவர்களுக்கும் இவர்கள் மாநாட்டுக்கும் அனைவரையும் வரவேற்று எனது மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

செப்டெம்பர் 10, 2024

மருத்துவர் இ. லம்போதரன் MD

முனைவர் **மு. இளங்கோவன்**
உலகத் தொல்காப்பிய மன்றம்
சூரியகாந்தி நகர், முத்தியால்பேட்டை,
புதுச்சேரி - 605 008, இந்தியா.

வாழ்த்துச் செய்தி

கனடா - தொல்காப்பிய மன்றமும், தமிழகத்தின் இலக்குவனார் இலக்கிய இணையமும் இணைந்து தமிழ் உணர்வாளர்கள் செறிந்து வாழும் கனடா நாட்டில் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டினை 2024 செப்டம்பர் திங்கள் 20, 21, 22 ஆகிய நாள்களில் நடத்துவது அறிந்து பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் மொழியில் எண்ணற்ற நூல்கள் தோன்றியுள்ளன. ஆயின் கிடைப்பனவற்றுள் முதல் இலக்கண நூலாக அறிஞர்களால் போற்றப்படுவது தொல்காப்பியம் ஆகும். நம் தமிழ் மொழியின் பெருமையை வரம்பிட்டுக் காக்கும் நூலாக இந்த நூல் இலங்குகின்றது. ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழில் தோன்றியுள்ள நூல்கள் பலவும் தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு புலவர்களால் படைக்கப்பட்டுள்ளமை ஒன்றே இத் தொல்காப்பியத்தின் சிறப்பினை எடுத்துரைப்பதற்குப் போதுமான சான்றாக அமையும். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்குநல்லாரின் பதிகவுரையைப் பயில்வார் இவ்வுண்மையை உணர இயலும்.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் எடுத்துரைக்கும் இந்த நூல் தமிழ் மரபு போற்றும் நூல் என்று துணிந்து சொல்லலாம். பல்துறை அறிஞர்கள் இந்த நூலை ஆராய்ந்து ஆராய்ச்சிக் கட்டுரை வழங்க உள்ளமை நினைத்து யான் பெரும் மகிழ்வடைகின்றேன். தொல்காப்பியப் பயிர் கனடா மண்ணில் வேர்பிடித்து வளர்வது பாராட்டினுக்கு உரியது.

தொல்காப்பிய மாநாடு சிறக்கவும், ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய மலர் வெளியீடு சிறக்கவும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செப்டெம்பர் 11, 2024

முனைவர் மு. இளங்கோவன்

முனைவர் **மைதிலி தயாநிதி**
மேனாள் பிரதி பதிவாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்
மேனாள் உதவி அரசாங்க அதிபர்
இலங்கை நிருவாகச் சேவை (SLAS)

வாழ்த்துச் செய்தி

கனடா - தொல்காப்பிய மன்றமும், தமிழ்நாடு - இலக்குவனார் இலக்கிய இணையமும் இணைந்து நடாத்தும் "முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - கனடா 2024" என்னும் மூன்று நாள் மாநாட்டுக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் மொழியினதும், தமிழ்ப் பண்பாட்டு பாரம்பரியத்தினதும் "அச்சாணியான" தொல்காப்பியம் குறித்து மாநாடு நடத்துவது அறிவு ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் அவசியமானது. தொல்காப்பியம் தொடர்பான ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலான ஆய்வுகளை ஒருங்கிணைத்து நோக்கவும், இந்நூல் தொடர்பான சமகால ஆய்வுச் சிந்தனைகளை அறிந்துகொள்ளவும் பயன்மிகு களமாக இம் மாநாடு விளங்கும். அத்துடன், பன்முகக் கலாசாரத்தின் சவால்களுக்கு மத்தியில் தமது அடையாளத்தைப் பராமரிக்க முயற்சிக்கும் வளர்ந்து வரும் புலம்பெயர் சமூகத்தினர் தம் பண்பாட்டு வேர்களுடன் பிணைந்திருப்பதை உறுதி செய்யவும், தமிழகத்துடனான அறிவியல், பாரம்பரியப் பண்பாட்டு உறவுகளை வலுப்படுத்தவும் இம்மாநாடு உதவும்.

இன்றைய உலகில் உலகமயமாக்கல் காரணமாக, சிறிய பண்பாடுகள் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன. அத்துடன், தமிழகம், இலங்கை போன்ற இடங்களில் இன, மதத் தேசியவாதங்கள் காரணமாகத் தமிழ் அடையாளம் ஓரங்கட்டப்படக் கூடிய சூழல்களும் உருவாகியுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு என்பவற்றின் பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்வதற்கான ஆற்றலை அளிப்பதாயும் இந்த மாநாடு அமையும்.

சுருங்கக் கூறின், புதிய ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவும், பண்பாட்டு உறவுகளை வலுப்படுத்தவும், உலகமயமாக்கல், பன்முகக் கலாசாரச் சூழல், இன, மதத் தேசியவாதங்கள் என்பவை தரும் சவால்களை எதிர்கொள்வதற்கான முனைப்பையும், இம்மாநாடு வழங்கும் என நம்பலாம். எனவே, இம் மாநாடு வெறுமனே அறிஞர்களின் கூட்டம் அன்று; தமிழ் அடையாளத்தின் கொண்டாட்டமும் கூட. இத்தகைய தனித்துவச் சிறப்பு மிக்க மாநாட்டின் வெற்றிக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, அனைத்து மாநாட்டு ஒழுங்கமைப்பாளர்களினதும், விசேடமாக முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் (தலைவர், தொல்காப்பிய மன்றம்-கனடா) அவர்களினதும் அயரா முயற்சிகளைப் பாராட்டுகிறேன்.

செப்டெம்பர் 10, 2024

முனைவர் மைதிலி தயாநிதி

முனைவர் **க. சுபாஷிணி**
தலைவர்,
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு,
ஜெர்மனி



வாழ்த்துச் செய்தி

தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் உலகம் போற்றும் வகையில் தமிழை மேன்மைப்படுத்தும் சிறந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அத்தகைய ஒரு முயற்சியாகக் கனடா நாட்டில் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்ற தொல்காப்பிய மன்றம் நிகழ்த்த உள்ள முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு அமைகிறது.

உலகம் முழுவதும் சிறந்த முறையில் தமிழுக்கு ஆய்வு செய்து தமிழ் வளர்ச்சிக்கு உதவிவரும் பெருந்தகைகள் இந்நிகழ்ச்சியில் கட்டுரை வழங்கி உரையாற்றுகின்றனர் என்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. அயல்நாடுகளில் ஒரு கருத்தரங்கை நிகழ்த்துவது என்பது எளிதான ஒரு காரியம் அல்ல. பல்வேறு சவால்களை எதிர்கொண்டு இந்த மாநாட்டை மிகச் சிறந்த வகையில் நடத்த எல்லாப் பணிகளையும் ஏற்று நடத்தி வரும் இக்குழுவின் செயற்குழுவினர் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இக்கருத்தரங்கம் தமிழ் மொழியின் சிறப்புகளுள் தலையாய ஒன்றான தொல்காப்பியம் பற்றிய பேரளவிலான செய்திகளை உலக மக்களுக்குக் கொண்டு சென்று சேர்க்கும் என்ற நம்பிக்கை உண்டு. நல்வாழ்த்துக்கள்.

செப்டம்பர் 12, 2024

முனைவர் **க. சுபாஷிணி**

திரு. சண்முகலிங்கம் கந்தையா
கல்விச் செயலர், SLAS (பணி நிறைவு)
பணிப்பாளர் (பணி நிறைவு),
இந்து சமயப் பண்பாட்டு திணைக்களம், கொழும்பு.

வாழ்த்துச் செய்தி

2024 செப்டெம்பர் திங்கள் 20, 21, 22 திகதிகளில் நடைபெறவிருக்கும் தொல்காப்பிய மன்றத்தின் மாநாடு சிறப்புற அமைய வேண்டும் என வாழ்திதுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். புலம்பெயர் நாடுகளில் தமிழ்மொழி கலை பண்பாடு முதலியவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லக்கூடிய இளந்தலைமுறையை உருவாக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் செயற்படும் மன்றம் தொல்காப்பியவழி தொன்மைத் தமிழ், பண்பாடு என்பன பற்றிய அறிவைக் கனடா வாழ் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஊட்டுவதில் ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்துவந்துள்ளதை நான் அறிந்து இறும்பூது எய்துகிறேன். இவ்வாண்டு நிகழவிருக்கும் மாநாடு மன்றத்தின் பணிகளுக்கு மகுடம் வைப்பது போன்று அமையும். உலகத் தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி உரையாடும் களரியாக அமையவுள்ளது.

இம்மூன்று நாட்களிலும் இடம்பெற இருக்கும் உரைகள், படிக்கப்படவிருக்கும் ஆய்வுக்கட்டுரைகள், தமிழ்த்திறன் போட்டியில் பரிசில் பெற்ற இளையோரின் அரங்க அளிக்கைகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இம்மாநாட்டுக்குப் பெருமை சேர்ப்பன. இந்நிகழ்வுகளில் பங்கேற்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துகள் உரித்தாகுக. கனடா தொல்காப்பிய மன்றத்தின் ஆக்கப்பணிகளுக்குத் தமிழ் கூறும் நல்லுலகும் ஆதரவு நல்கி உதவ வேண்டும்! தொல்காப்பிய மன்றம் வாழ்க! என வாழ்த்துகிறேன்.

12 ஆவணி 2024

க. சண்முகலிங்கம்

கலாநிதி சாந்தி கேசவன்
பேராசிரியர், கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

வாழ்த்துச் செய்தி

வரலாறு அறியப்படாத காலம்தொட்டே இலக்கிய இலக்கணப் படைப்புகளைத் தருவதில் தொல்காப்பியம் முதன்மைவாய்ந்தது என்பது கண்கூடு. கால மாற்றமும் வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பமும், சுற்றுச் சூழல், பாதுகாப்பின்மை, நகரமயமாதல், பொருள்முதல்வாதப் போக்கு எனப் பல்வேறு தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள் மறைந்துவரும் சூழலில் "தொல்காப்பியவழி தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்" எனும் பொருண்மையில் தொல்காப்பிய மன்றமும், தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய இணையமும் இணைந்து, "முதலாம் உலகத் தொல்காப்பிய ஆய்வு மாநாடு" ஒன்றினை முன்னெடுத்திருப்பதனை அறிந்து மிகவும் புளகாங்கிதம் அடைகின்றோம்.

20ஆம் நூற்றாண்டின் பின்னர்ப் பல்வேறு ஆய்வுப் பொருண்மைகள் விரிவடைந்துள்ள போதிலும் இன்னும் தமிழர் தம் மரபும் பண்பாடும் குறிப்பிட்டு ஆராயப்பட வேண்டி இருக்கும் நிலையில் இந்த ஆய்வு மாநாடு சமூக நலன்களைத் தன்னகத்தே கொண்டு புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர் கலாசாரத்தை எதிர்காலச் சந்ததியினரும் அறியும் வண்ணம் மட்டுமல்ல உலக அளவில் ஒட்டுமொத்தத் தமிழர் வாழ்வு சிறக்க இதனை முன்னெடுத்துச் செல்லும் எந்தவித இலாப நோக்கமற்ற அமைப்பாகக் கனடா - தொல்காப்பிய மன்றம் மிளிர்வதையிட்டுப் பூரிப்படைகின்றோம்.

தமிழர் கலாசாரம் காலவெள்ளத்தால் அழிந்து போகாமல் பாதுகாத்துப் பதிவு செய்ய வேண்டியது நம் அனைவரதும் பொறுப்பாகும். அந்த வகையில் இம் மாநாட்டை நடாத்துவது தனித்துவமான முயற்சி எனலாம். வரலாறு, பண்பாடு எனப் பல்பரிமாண நோக்கில் இந்தப் பன்னாட்டு ஆய்வு மாநாடு தமிழர்களுக்குப் புதிய ஒளியைப் பாய்ச்சுகின்றது.

இக் கருத்தரங்கில் 60இற்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்களது ஆய்வுக் கட்டுரைகள் முறையாகத் தொகுக்கப்பெற்றுக் குறித்த நாளிலேயே நூலாக்கம் செய்யப்பெற்றுள்ளது. இவர்களது பணி மகத்தானது. பற்பல அனுபவங்களைத் தொல்காப்பிய ரீதியில் ஏந்திய படைப்புகள் ஒருசேரத் தரிசிக்கின்ற வாய்ப்பு நம் அனைவருக்கும் வாய்த்திருக்கின்றது.

ஒரு ஆய்வு மாநாட்டை நடத்துவது என்பது இலகுவான காரியமல்ல. அதிலும் பன்னாட்டு கருத்தரங்காக நடாத்துவது என்பது மிகவும் கடினமான காரியமாகும். மனதில் தோன்றுகின்ற உணர்வுகளுக்கு உயிரளித்து இந்த மாநாட்டை நடாத்துகின்ற இக் குழுமத்தினரின் பணி மகத்தானது.

இவர்களது தமிழார்வமும், உழைப்பும் போற்றுதற்குரியது. குறிப்பாகக் கனடா தொல்காப்பிய மன்றத்தின் தலைவர் முனைவர் திருமதி செல்வநாயகி ஜீதாஸ் அவர்களிற்கும் அவருடன் இணைந்து பணியாற்றிய குழுமத்தினரிற்கும் பாராட்டுகள் உரித்தாகட்டும்.

எதிர்காலத்தில் தொல்காப்பியம் தொடர்பான கனமான ஆய்வுகளை இக் குழுமம் வழங்கவேண்டும் என எனது வாழ்த்துகளையும் ஆசிகளையும் வழங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

"உலகம் முழுவதும் தொல்காப்பியத்தின் புகழ் பரவட்டும்"

பேராசிரியர் கலாநிதி **சாந்தி கேசவன்**

கலாநிதி பார்வதி கந்தசாமி
இயக்குநர்,
ஆய்வாளர் வசந்தம் உளவளத்துணை நிலையம்
பேராசிரியர், தஞ்சாவூர் பல்கலைக்கழகம்,
கனடாவளாகம்



வாழ்த்துச் செய்தி

உலகத் தொல்காப்பிய மன்றத்தின் கனடாக் கிளை, முதன் முதலாக உலகத் தொல்காப்பிய மகாநாட்டை மாபெரும் விழாவாக எடுத்து, தமிழ் வழங்கும் உலகம் எல்லாம் பெருமைகொள்ள வைப்பதையிட்டு எனது வாழ்த்துகளை அறிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இன்று தமிழில் அறியப்படும் நூல்களில் மிகப் பழமையான நூலாக எமது கைகளில் தவழும் அருமையான தமிழ்க் கருவூலமான தொல்காப்பியம் எங்களது மூதாதையரின் மொழிப் புலமையும் உலகின் மூத்த புலமைத்துவத்தையும் புடம்போட்டுக் காட்டும் நூலாகத் திகழ்கின்றது. இந்த நூல் வழியாகத்தான் எங்கள் இனத்தின் பெருமை முந்தி நிற்கின்றது.

இந்த நூல் தமிழ் மொழியின் பண்புகளைப் பல்வேறு பரிமாணத்தில் வெளி கொண்டுவந்துள்ளதைப் பல்வேறு அறிஞர்கள் ஆய்வுகள் ஊடாக நாம் அறிந்து உய்த்துணர்ந்துகொண்டு இருக்கின்றோம். 19ம் நூற்றாண்டில் அமெரிக்க மொழியியல் அறிஞர்களும் உதாரணமாக, சசூர், கொக்கெற், புளும் பீல்ட் போன்றோர். மொழிகளை ஆராய்வதற்குத் தொல்காப்பியனார் காட்டிய ஆய்வு வழியையே கைக்கொண்டமை தொல் தமிழ் நூலைப் படைத்த 2500 ஆண்டுகளுக்கு முன்னிருந்த தொல்காப்பியனாரின் புலன் எத்துணைப் பெருமையானது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

திணைப் பாகுபாட்டை நில அடிப்படையில் வகுத்து அங்கே வாழ்ந்த மக்களின் சமூகவியல் பண்புகளுடனும் இயற்கை வளத்துடனும் தொடர்புபடுத்தி நூல்களையும் அதன்வழியே வகுத்து அகம், புறம் எனத் திணை இயல்புகளை வகுத்துக்காட்டிய சிறப்பை இன்றைய பரம்பரை பின்நோக்கித் தங்கள் பண்பாட்டை எண்ணிப் பெருமைப்படவும், பிற பண்பாட்டவர்களுக்கு எடுத்து ஓதவும் உரிய தார்ப்பரியத்தை இந்தத் தமிழ்ப்பண்பாட்டு மாநாடு ஏற்படுத்தி நிற்கின்றது.

இத்தகைய முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் இயக்குநர் சபையினர் தலைமைத்துவத்தை ஒப்புக்கொண்டு இத்தகைய ஒரு சிறப்பான உலகப் பெரும் மகாநாடாகக் கொண்டாட உந்து சக்தியாகவும், சக்தியாகவும் இயங்கும் முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்களின் பன்முகப் புலமை ஊடாக வந்து பன்முத் திறமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த மன்றம் கனடா நாட்டில் துளிர்க்க உதவிய பேராசிரியர் இளங்கோவன், பேராசிரியர் பாலசுந்தரம், முதலாவது தலைவர் சிவபாலு தங்கராசா ஆகியோரின் முயற்சிகளே இன்றைய விழாவின் தூண்டல்கள் என்பதையும் நினைவுகூர்கின்றோம்.

தமிழிலே ஆர்வம் கொண்டு இளையோரும் இணைந்த தமிழ்ச் சமூகம் இந்த மாநாட்டைப் பெருமைமிக்க முக்கியமான ஒரு மாநாடாக இயல், இசை, நாடகம் என்ற தமிழ்ப் பண்பை உள்வாங்கி அரங்கேற்றுவதைச் சிறப்பாக நடத்திமுடிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

செப்டம்பர் 08, 2024

கலாநிதி **பார்வதி கந்தசாமி**

சிவபாலு தங்கராசா
முன்னைநாள் தலைவர்
தொல்காப்பிய மன்றம் - கனடா



வாழ்த்துச் செய்தி

தமிழின் தொன்மைசான்ற நூலான தொல்காப்பியத்தின் காலம் ஆய்வுகளின் காரணமாக அதன் நீழ அகலத்தை மென்மேலும் ஆழங்காண வேண்டும் என்னும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. உலகில் தோன்றிய பழம்பெரும் நாகரிகங்களில் திராவிட நாகரிகம் ஒன்று என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு எமக்குக் கிடைக்கும் முக்கியச் சான்றாதாரமாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது.

தொல்காப்பியமே தமிழரின் மொழியின் ஆளுமையையும் ஆளுகையையும் வெளிப்படுத்தும் தொன்மத்தின் கூறாக அமைந்துள்ளது. தொன்மைசான்ற இலக்கிய மரபினை உலகிற்கு எடுத்துக்காட்டித் தமிழின் பெருமையையும் அதன்வழித் தமிழரின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் எடுத்தியம்பும் பழம்பெரும் பொக்கிசமாக எமக்குக் கிடைத்துள்ளது. எம் மொழிமீதும் இனத்தின்மீதும் கொண்ட அளவற்ற பற்றுக் காரணமாகத் தொல்காப்பிய மன்றத்தைக் கனடாவில் ஆரம்பித்துத் தமிழரின் தொன்மத்தைப் பறைசாற்றும் நடவடிக்கைக்கு உந்துகோலாக 2015ல் பாரிசில் நடைபெற்ற உலகத் தொல்காப்பிய மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கனடாவின் பிரதிநிதியாகச் செயற்பட்ட என்னால் சமூகமளிக்க முடியாமையால் பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களைக் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொண்டதற்குச் சம்மதம் தெரிவித்து அக்கூட்டத்தில் கலந்துகொண்டதோடு பேராளராகவும் நியமனம் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார். இதன்வழிக் கனடாவில் 2015ம் ஆண்டு யூன் மாதம் தொல்காப்பிய மன்றத்தின் ஆரம்பக் கூட்டத்தைக் கூட்டிப் பணிப்பாளர் சபை தெரிந்தெடுத்துச் செயற்பட வைக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவர் என்ற பொறுப்பு எனக்குத் தரப்பட்டதை ஏற்றுச் செயற்படவும் பல்வேறு கருத்தரங்குகள், மாணவர்களுக்கான தொல்காப்பியம் சார்ந்த பேச்சு, எழுத்து, வாசிப்பு திறன்களை வளர்க்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அது இன்றும் தொடர்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று இதன்வழித் தமிழுக்கான அடைமொழிகள் ஏராளமாகப் பாவனைக்கு வந்துள்ளன எனின் அதற்குத் தொல்காப்பியரும் பனம்பாரனாரும் அத்திவாரம் இட்டு வளர்த்தார்கள் என்று உறுதியாகக் கூறலாம். தமிழ் என்பது பல்வேறு அடைமொழிகளைக் கொண்டதாக இருப்பதற்கு அதன் தனித்தன்மையே காரணமாகும் என்பர் சான்றோர். மொழியியல் பேராசிரியர் செ.வை. சண்முகம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "செம்மை என்னும் அடைச்சொல்லைப் பெற்று வரும் செந்தமிழ் என்னும் சொல் உணர்வு, நிலையில் இலக்கண வரம்பை வற்புறுத்துவதாகவும் செயல் நிலையில் செம்மொழி ஆக்கத்தை வற்புறுத்துவதாகவும் மதிப்பீட்டு நிலையில் இலக்கண வற்புறுத்தாவிடில் கிளைமொழி தோன்றிப் புதுமொழியாக மாறும்" என்று குறிப்பிடுவது பெருமையைத் தருகின்றது.

எனவே, தொல்காப்பியத்தினை யாவருக்கும் கிடைக்கும் வகையில் அதனை இலகுபடுத்திக் கொடுக்கப்படவேண்டியது கற்றுத் துறைபோகிய சான்றோரின் கடப்பாடாகும். இந்த நோக்கமே உலகத் தொல்காப்பிய மன்றத்தின் தோற்றப்பாடு. அதன்வழிக் கனடாவில் உலகத் தொல்காப்பிய மன்றத்தின் கிளை தோற்றுவிக்கப்பட்டது. தொல்காப்பிய மன்றத்தினால் மாதாந்தம் மேற்கொள்ளப்படும்

கருத்துரைகள் மிகப் பயனுள்ளவையாக அமைந்துள்ளன. மாணவர்களுக்கான செயலமர்வுகளையும் ஒழுங்கமைக்கவேண்டும் என்னும் திட்டம் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றது.

உலகிற்கு முன்னோடியாகத் தொல்காப்பிய மகாநாட்டை முதன் முதலில் கூட்டும் பெருமையை இன்றைய ஒப்பற்ற தலைவராகத் திகழும் முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ் சாதுரியம் மிக்க மீகாமனைப் போன்று எத்தகைய சுழற்காற்றிடையேயும் சிக்கவிடாது மிக இறுக்கமாகச் சுக்கானைப் பற்றி தன்னோடு இணைந்தவர்களை ஒருங்கே கூட்டிச் செல்வது அவரது நிருவாகத் திறன் மட்டுமல்ல ஆளுமையும், தமிழ்ப் புலமையும்கூட. தொல்காப்பிய மன்ற மகாநாடு வெற்றி நடைபோடுவது எம் கண்முன்னே தெரிகின்றது. அது தனது குறிக்கோளை எட்டும் என்பதில் ஐயமில்லை. மகாநாடு வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

செப்டம்பர் 10, 2024

சிவபாலு தங்கராசா

தலைவரிடமிருந்து

2024 ஆம் ஆண்டு, கனடா - தொல்காப்பிய மன்ற வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில் நாம், புலம்பெயர் தமிழர், முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு நடாத்துகிறோம். 1987 ஆம் ஆண்டு, நான் இந்த நாட்டிற்கு வந்த காலத்தில், தமிழ், தமிழர், தமிழர் பண்பாடு என்பவை எல்லாம் கனேடியர்கள் அறிந்திராத, அல்லது கனேடியப் பொதுமக்கள் அறிந்திராதவை. நாம் விநோதமாகப் பார்க்கப்பட்டோம். இன்று, எம் பிள்ளைகள், இரண்டாம் தலைமுறையினர், பெரு நிறுவனங்களில் முகாமைத்துவ நாற்காலிகளை அலங்கரிக்கும் அளவுக்குத் தமிழர் வரலாறு படைத்திருக்கிறார்கள். இரண்டாம் தலைமுறையினர் தொல்காப்பியர் பற்றித் தெரியுமளவுக்குத் தமிழ் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

2023 ஆம் ஆண்டு நடந்தேறிய ஆண்டுவிழா, கனடா - தொல்காப்பிய மன்றத்திற்கு ஒரு பெரும் உற்சாகத்தைக் கொடுத்திருந்தது. 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில், 'உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு" நடாத்துவதற்கு, கனடா - தொல்காப்பிய மன்றம், தயாராகிவிட்டது என்பதை, நிர்வாகசபை புரிந்து கொண்டது. மிக விரைவாக மாநாட்டிற்கான ஏற்பாடுகள் தொடங்கின. இம் முயற்சியில் தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய மன் றமும் இணைந்து கொண்டது. ஆய்வுக் கட்டுரைகளுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

தொல்காப்பியம் தொடர்பான ஆய்வுகள் அண்மைக் காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலும் அரைத்த மாவை அரைக்கும் தன்மை தவிர்க்கப்படவேண்டும். புதிய ஆய்வுத் துறைகள் திறக்கப்படவேண்டும் என்னும் கொள்கை பின்பற்றப்பட்டது.

ஆய்வு என்னும் பதத்திற்கு உரிய முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. ஆய்வு, தொல்காப்பியம் தொடர்பானதாக, அதாவது முதல் ஆய்வு அல்லது முன்னைய ஆய்வின் நீட்சியாக, ஆய்வியல் நெறிமுறைகளை ஓரளவுக்கேனும் பின்பற்றியதாக, ஆய்வாளரின் கருத்து தெளிவாகப் புலப்படுத்தப்பட்டதாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆய்வாக இல்லாமல் அல்லது பெரிய ஆய்வுப் பரப்பை எடுத்த ஒரு தொகுப்பாக, ஏற்கெனவே செய்யப்பட்ட ஆய்வுகளை மீண்டும் புரட்டிப்பார்ப்பதாக இருக்கும் ஆய்வுரைகள் தவிர்க்கப்பட்டன.

ஆய்வாளர்களிடையே ஒருவித அதிருப்தி காணக்கூடியதாக இருந்தாலும் நாம் உண்மையான ஆய்வை நோக்கி நகரவேண்டும் என்பதற்கு இம் மாநாடு ஒரு தொடக்கப் புள்ளியாக அமைந்தால் அதுவே இம் மாநாட்டின் வெற்றியாகக் கொள்ளத்தக்கது. மொத்தம் 124 ஆய்வுச் சுருக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றில் மொத்தம் 85 ஆய்வுச் சுருக்கங்கள் ஆய்வுரை சமர்ப்பிப்பதற்குத் தேர்வாயின. அவற்றில் 63 ஆய்வுரைகள் மாநாட்டில் படிப்பதற்கும் மாநாட்டு இதழில் பதிவாவதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு ஆய்வுரையும் மூன்று அறிஞர்களால் பார்க்கப்பட்டே தெரிவுசெய்யப்பட்டன என்பது குறிப்பிடப்படவேண்டியது. இந்த ஆய்வுரைகள் சிறப்புறத் தெரிவு செய்வதற்கு இணைந்து செயலாற்றிய அறிஞர்கள் அத்தனை பேருக்கும் மன்றம் கடமைப்பட்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் கூட, தொல்காப்பியம் பற்றிய அறிவு பொதுமக்களிடையே மிக அண்மைக் காலம் வரை அருகியே காணப்பட்டிருந்தது. தொல்காப்பியம் கற்ற அறிஞர்களும், தொல்காப்பியத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்குப் பதிலாக "தொல்காப்பியம் கற்றறிந்தாரால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியது" என்னும் கருத்தையே கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள், இதனையே மாணவர் மத்தியிலும் பகிர்ந்து கொண்டார்கள். மாணவர்களும் தொல்காப்பியத்தை அச்சத்துடனேயே

அணுகினார்கள். கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் தொல்காப்பியத்தின் பெருமையை உலகளாவிய நிலையில் மட்டுமல்ல தமிழகத்திலேயே எடுத்துச் செல்லத் தவறிவிட்டார்கள்.

மிக அண்மைக் காலத்திலேயே தொல்காப்பியத்தின் பெருமையைத் தமிழுலகுக்குக் கொண்டு சேர்க்கும் வகையிலான கருத்தரங்குகள், ஆய்வுகள், பயிலரங்குகள், பேச்சுப் போட்டிகள் முதலியன முன்னெடுக்கப்படுகின்றன. கொரோணா பெருந்தொற்றுக் காலத்தில் மக்களின் இணையவழித் தொடர்பாடல் எதிர்பாராத அளவு பன்மடங்காக அதிகரித்தது. மக்கள், வீட்டில் இருந்தபடியே இணையவழியாகத் தம் அறிவைப் பல வழிகளிலும் பெருக்க வாய்ப்பாயிற்று. தொல்காப்பியத்தின் தொன்மை, இன்று வரை தமிழ் மொழியின் தனித்துவத்தைக் காத்து நிற்கும் தன்மை, அண்மைக் கால வளர்ச்சியான "மொழியியற்" கூறுகளை அன்றே (2700 ஆண்டுகளுக்கு முன்பே) கொண்டிருந்த தன்மை, செம்மொழித் தன்மை, இன்னும் இவை போன்ற அநேக சிறப்புக்கள் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது. தமிழ் நாட்டு அரசும், பல்கலைக்கழகங்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்தும் தனித்தும் தொல்காப்பியத்தைக் கற்பதையும் கற்பிப்பதையும் வலியுறுத்தி வருகின்றன.

2015 ஆண்டுசெப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் பேரா. மு. இளங்கோவன் அவர்களால் உலகத் தொல்காப்பிய மன்றம் தொடக்கிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கனடா நாட்டில், பேரா. இ. பாலசுந்தரம் அவர்களால் உலகத் தொல்காப்பிய மன்றத்தின் கனடாக் கிளை நிறுவப்பட்டது. இன்று, கனடாவில் இயங்கிவரும் தொல்காப்பிய மன்றம், கிளையாக அல்லாமல் தனித்து இயங்கும் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு, தனித்து இயங்கி வருகிறது. தொல்காப்பிய மன்றத்தின் உலக அளவிலான பொறுப்பாளர்களில் ஒருவராக, கனடா வாழ் திரு. த. சிவபாலு அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறாக, தமிழ் அறிஞர்களின் தனிப் பெரும் பொக்கிசமாக இருந்த தொல்காப்பியம் இன்று உலகம் முழுவதும் பயணிப்பதற்கான பாதை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்ஈழப் போராட்டத்தின் விளைவாக, ஈழத் தமிழர், இன்று, உலகின் பல்வேறு நாடுகளிலும் அரசியல் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளார்கள். தமது மொழி உரிமையையும் வாழ்விட உரிமையையும் தம் சொந்த நாட்டில் இழந்த அவர்கள், தமது மொழியையும் பண்பாட்டையும் குடி புகுந்த நாட்டில் வளர்த்தெடுக்க முயன்று, இன்று வெற்றியும் கண்டிருக்கிறார்கள். ஈழத் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் தமிழ் வாழ்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் நாடு கனடா. கனடா நாடு ஒரு பல்லின பல்பண்பாட்டு நாடாகும். கனடாவில் தமிழை வளர்ப்பதற்காக முன்னெடுக்கப்படும் பல்வேறு செயற் திட்டங்களில், தொல்காப்பிய மன்றத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் முக்கியமானவை.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் வளர்க்கும் அன்பர் நிறுவனங்களின் நோக்கம் வருமாறு -

"புலம் பெயர் நாடுகளில் தமிழ் மொழி, தமிழர் பண்பாடு முதலியவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லத்தக்கதொரு தலைமுறையை உருவாக்குவது, இளைய தலைமுறையினரிடம் தமிழ் மொழி அறிவையும், தமிழ் உணர்வையும் வளர்த்தெடுப்பது, தாம் வாழும் பல்லின பல்பண்பாட்டு மக்களிடையே தமிழ் வளம் பற்றிய அறிவை வளர்ப்பது முதலியவையாகும்".

கனடாவில் இம் முயற்சி பெருமளவில் சிறப்பாக எடுத்துச் செல்லப்படுகிறது. முதலாவது இலக்கான "அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லத்தக்கதொரு தலைமுறையை உருவாக்குவது" கனடாவில் ஓரளவுக்கு நிறைவேறிவருகிறது. அண்ணாமலைக் கனடா வளாகம், பெரும் எண்ணிக்கையிலான தமிழ் இளங்கலை, முதுகலைப் பட்டதாரிகளை உருவாக்கியிருக்கிறது. இந்தப் பட்டதாரிகள் தமிழை முன்;னெடுத்துச் செல்லும் செயற்பாடுகளில் சிறப்பாக ஈடுபட்டு வருகிறார்கள். தொல்காப்பிய மன்றமும் "தொல்காப்பியத்தை முன்னிலைப்படுத்தி" இந்த இலக்கை நோக்கிய பயணத்தில் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.

கனடாவில் தொல்காப்பிய மன்றம் பேரா. இளையதம்பி பாலசுந்தரம், திரு. தங்கராசா சிவபாலு, திரு. அருள் சுப்பிரமணியம் ஆகிய பெரும் தலைவர்களைக் கண்டிருக்கிறது. அறிவுசால் இளைஞர்களின் அயராத உழைப்பால் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொல்காப்பிய மன்றம் தனது நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதில் பெருவெற்றி கண்டிருக்கிறது.

2022 ஆம் ஆண்டு, அண்ணாமலைக் கனடா வளாகத்தல், தொண்டர் அடிப்படையில், ஆறு ஆண்டுகளாக, நான் வகித்து வந்த நிருவாகப் பணிப்பாளர் பதவியிலிருந்து நானாகவே என்னை விடுவித்துக் கொண்டதற்காகவே காத்திருந்தது போல, கனடா "தொல்காப்பிய மன்றம்" அதன் தலைவராக என்னை இணைத்துக் கொண்டது. இன்று, நான், எனக்கு முன்னர் பணியாற்றிய அன்பர்கள் வழி என் பணியைத் தொடர்கிறேன் என்பதைப் பெரு மகிழ்வுடன் கூறுகிறேன்.

தொல்காப்பிய மன்றத்தின் செயற் திட்டங்களாகக் குறிப்பிடத் தக்கவை -

1. ஆண்டுக்கு ஒரு முறை "தமிழ் மொழித்திறன் போட்டிகள்" நடாத்தி இளைய தலைமுறையினரின் மொழித் திறனை வளர்ப்பதுடன், இளம் பேச்சாளர்களை உருவாக்குதல்.
2. தொல்காப்பியம் தொடர்பான இணையவழி, மாதாந்தக் கருத்தரங்குகள் நடாத்தல், கருத்தரங்கில் இடம் பெறும் நிகழ்வுகள் -
   - உலகத் தரம்மிக்க பேச்சாளர்களின் பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்பினை வழங்குதல்
   - வளர்ந்து வரும் பேச்சாளர்களுக்கு மேடை அமைத்துக் கொடுத்தல்
   - மூன்று இளம் சிறாருக்கு இந்த் நிகழ்வில் பங்கு கொள்ளும் வாய்ப்பளித்தல்.
3. தமிழ் நாட்டிலிருந்து வருகை தரும் அறிஞர்களின் நேரடிப் பேச்சுக்களை ஏற்பாடு செய்தல்

தொல்காப்பிய மன்ற நிகழ்வுகள் யாவும் தரமானவையாக அமைவதற்குத் தொல்காப்பிய மன்றச் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் இளம் தொழில்நுட்ப வினைவலர் காரணம் என்பதை இங்கு கூறியேயாகவேண்டும்.

ஊர் கூடித்தான் தேர் இழுக்கவேண்டும். தொல்காப்பிய மன்றம் தன் கடமையைச் சிறப்புறச் செய்வதற்கு, தொல்காப்பிய மன்றச் செயற்குழு, உபகுழுக்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அர்ப்பணிப்பும் தமிழ் ஆசிரியர்கள், தமிழ் அன்பர்கள், ஆர்வலர்கள், தமிழ் அறிஞர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் முதலிய அனைவரது ஒத்துழைப்புமே காரணமாகும்.

எதிர்வரும் காலத்திலும் இத்தகைய மாநாட்டை எமது இளைஞர்கள் முன்னெடுத்துச் செய்வதற்கு இம் மாநாடு எடுத்துக்காட்டாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.

அன்புடன்



முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ்

செப்டெம்பர் 20, 2024

தலைவர், தொல்காப்பிய மன்றம் - கனடா

செயலாளரிடமிருந்து

தொன்மையான மொழிகள் பல அழிந்து போக, அவற்றுள் சில எழுத்துருவில் மட்டும் அடங்கிப் போகத் தமிழ் மொழி மட்டும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று இன்றும் உயிர்ப்போடு இருந்து வருகிறது. தமிழ் மொழியின் தொன்மைக்கும் அதன் தொடர்ச்சிக்கும் வலுவான அடித்தளமாக அமைந்திருப்பதும், தமிழ் மொழி செம்மொழியாகத் தகுதி பெறுவதற்கு முதன்மை ஏதுவாக விளங்குவதும் தொல்காப்பியமாகும். 2700 ஆண்டுகளுக்கு முற்பட்டதும், எமது கைக்குக் கிடைத்த முதல் நூலுமாகிய தொல்காப்பியம் தமிழ் மொழியின் இலக்கண மரபுகளை மட்டுமன்றிப் பண்டைத்தமிழரின் வாழ்வியல் நெறிகளையும், அறிவியல் சிந்தனைகளையும் உள்ளடக்கிய ஒரு தொன்மை நூலாகத் திகழ்கிறது. அந்நூலில் பொதிந்துள்ள பொருண்மைகள் பற்றியும், அதனைப் படைத்தளித்த தமிழ்த்தாயின் தலைமகன் ஒல்காப்புகழ் தொல்காப்பியர் பற்றியும் முழுமையான அறிவு பொதுவாகத் தமிழர்களிடையே கூட இல்லாதிருக்கின்றது. ஒரு சில தமிழறிஞர்களும் தமிழ் மொழியில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களும் மட்டுமே தொல்காப்பியத்தை ஓரளவு அறிந்து வைத்திருக்கின்றார்களே தவிர ஏனையவர்களிடம் அது பரவலாகச் சென்று சேரவில்லை என்பது ஒரு பெரிய குறையாக உள்ளது. எனவேதான் தொல்காப்பியத்தையும் அதன் ஆசிரியர் தொல்காப்பியரையும் முன்னிறுத்தித் தொல்காப்பியத்தை மக்கள் மயமாக்கும் முயற்சியில் 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் திகதி பேரறிஞர்கள் பலர் ஒன்றுகூடிப் பாரிசு மாநகரில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக உலகத் தொல்காப்பிய மன்றம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார்கள்.

உலகத் தொல்காப்பிய மன்றம் தோற்றிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டிலும் தமிழர் வாழும் பல்வேறு நாடுகளிலும் அதன் கிளைகள் நிறுவப்பட்டன. அந்த வகையில் கனடா நாட்டிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கனடா வளாகப் பேராசிரியர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள், கல்வியியலாளர்கள் பலர் ஒன்று கூடி உலகத் தொல்காப்பிய மன்றத்தின் கனடாக் கிளை அமைப்பை ஒக்டோபர் 25, 2015இல் நிறுவினார்கள். பின்னர் இவ்வமைப்பு, தொல்காப்பிய மன்றம் - கனடா என்னும் பெயரில் இலாப நோக்கற்ற அமைப்பாக ஒன்ராரியோ மாகாண அரசில் பதிவு செய்யப்பெற்று அதன் செயற்பாடுகள் தொடர்ச்சியாகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தொல்காப்பிய மன்றத்தின் காப்பாளராகப் பேராசிரியர் முனைவர் இ. பாலசுந்தரம் அவர்களும், மற்றும் மன்றத்தின் முன்னாள் தலைவர்களான திரு. த. சிவபாலு அவர்களும், காலம் சென்ற சபா அருள்சுப்பிரமணியம் அவர்களும் ஆற்றிய சிறப்பான பணிகளை இங்கே நினைவு கூர்தல் இன்றியமையாதது. முனைவர் ந. சுப்பிரமணியன், முனைவர் பார்வதி கந்தசாமி, முனைவர் பால. சிவகடாட்சம், ஆகியோர் அடங்கிய மூதறிஞர் குழுவினரது வழிகாட்டலும் இம்மன்றத்தின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக உள்ளது.

கொரோனா பெருந்தொற்றால் நாடு முடக்கமடைந்திருந்த காலப்பகுதிகளில் மன்றத்தின் செயற்பாடுகள் சிறிது தடைப்பட்டிருந்தன. ஆகஸ்ட் 20. 2022இல் நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய இயக்குனர் சபை தெரிவு செய்யப்பட்டுப் பேராசிரியர் முனைவர் திருமதி. செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்களின் தலைமையில் புதிய செயற்குழு இயங்கத் தொடங்கியதிலிருந்து மீண்டும் மன்றத்தின் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மன்றத்தின் குறிப்பிடக் கூடிய செயற்பாடுகளாக மாதாந்தக் கருத்தரங்கம், மாணவர்களுக்கான தமிழ்த்திறன் போட்டி, ஆண்டு விழா ஆகியவை அமைந்துள்ளன.

தமிழறிஞர்களின் ஆய்வுரைகள், தமிழ் இளங்கலை, முதுகலை மாணவர்களின் ஆய்வுரைகள், பாடசாலை மாணவர்களின் உரைகள் என மூன்று படிநிலைகளை உள்ளடக்கியதாக மாதாந்தக் கருத்தரங்கம் இணையவழியூடாக மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்ற தமிழ்த்திறன் போட்டி, கனடியப் பாடசாலை மாணவர்களிடையே தமிழ் மொழியறிவோடு தொல்காப்பியம் பற்றிய அறிவையும் வளர்த்தெடுப்பதற்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளது. அந்தப் போட்டியை நடத்துவதற்கு எம்முடன் சேர்ந்து உழைக்கின்ற தமிழ்த்திறன் போட்டிக் குழுவும் அதன் ஒருங்கிணைப்பாளரும் மன்றத்தின் துணைத் தலைவருமான திரு. வ. சுகந்தன் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

2023ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 9ஆம் நாள் கனடா, இசுகாபரோ நகரில் அமைந்துள்ள தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில், மன்றத்தின் ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. சிறப்புச் சொற்பொழிவுகளோடு, பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் நடத்தப்பட்ட அந்த விழாவின் சிறப்பம்சமாக மிகத்தரம் வாய்ந்த ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய 280 பக்கங்கள் கொண்ட விழா மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றிகரமாக நடந்தேறிய ஆண்டுவிழா தந்த உற்சாகத்தினாலும், தலைவர் முனைவர் செல்வம் ஸ்ரீதாஸ் அவர்களின் எண்ணத்தில் கருக்கொண்டு அவர்கள் கொடுத்த ஊக்கத்தினாலும் 2024ஆம் ஆண்டுக்குரிய ஆண்டு விழாவை உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடாக நடத்துவதெனச் செயலவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆட்பற்றாக்குறை, நிதிப்பற்றாக்குறை போன்ற பல இடையூறுகளுக்கு மத்தியிலும் தமிழார்வலர், தன்னார்வலர் பலரது ஒத்துழைப்பாலும், பலநாள் திட்டமிடலாலும், 2024 செப்டம்பர் திங்கள் 20, 21, 22 ஆகிய மூன்று நாள்களிலும் கனடா, ரொறொன்ரோ நகரிலே முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு ஆய்வுரைகள், சிறப்புரைகள், கலை நிகழ்ச்சிகள், விருது வழங்கல் போன்ற நிகழ்ச்சிகளுடன் மிகச்சிறப்பாக நடந்தேற இருக்கின்றது என்பது தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். கனடா - தொல்காப்பிய மன்றத்துடன் தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய மன்றமும் இணைந்து இம்மாநாட்டை நடத்துவதென்பது இரட்டிப்பு மகிழ்ச்சி தருகின்றது. இம்மாநாட்டின் முத்தாய்ப்பாகத் தேர்வு செய்யப்பட்ட மிகத் தரம் வாய்ந்த 60க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய மலர் வெளியீடும் நடைபெற இருக்கிறது.

கனடா - தொல்காப்பிய மன்றம் மேற்கொண்டுள்ள தமிழ்த்திறன் போட்டி, மாதாந்தக் கருத்தரங்கம், தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு முதலிய செயற்பாடுகளைச் சிறப்பாக நடத்துவதற்கு தன்னார்வலர்களாகத் தமிழாசிரியர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தமிழறிஞர்கள், எனப் பலரும் எமக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் நாம் நன்றியுடையவர்களாவோம்.

இறுதியாகத் தலைவர் முனைவர் செல்வம் ஸ்ரீதாஸ் அவர்களின் சிறந்த தலைமைத்துவத்துடன் இம்மன்றத்தின் செயற்பாடுகள் சிறப்புற அமைவதற்கு உறுதுணையாக இருக்கும் அத்துணை செயற்குழு உறுப்பினர்களுக்கும், துணைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அண்மையில் மாநாட்டுச் செயற்குழுவில் இணைந்து எமது செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து அரும்பெரும் பணிகளை ஆற்றிவருகின்ற முனைவர் இல. சுந்தரம் அவர்களுக்கு மன்றத்தின் சார்பாக உளமார்ந்த நன்றியை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழின் வளர்ச்சிக்கும் தொல்காப்பியம் மக்களிடையே பரவலாகச் சென்றடைவதற்கும் கனடா - தொல்காப்பிய மன்றம் எடுக்கின்ற முயற்சிகளுக்குத் தமிழர் சமூகம் தொடர்ந்து ஆதரவு நல்கும் என நம்புகின்றேன்

வாழ்க தமிழ்! ஓங்குக தொல்காப்பியர் புகழ்!

சி. சண்முகராஜா

செயலாளர், தொல்காப்பிய மன்றம் - கனடா

பொருளாளரிடமிருந்து

தொல்காப்பியம், இன்று கிடைக்கப்பெறும் தமிழ் நூல்களுள் மிகப் பழமையானது. தொல்காப்பியம் பண்டைத் தமிழ் இலக்கணமாக இருந்தாலும் அதன் பின் வந்த இலக்கணகாரர்களுக்கெல்லாம் அதுவே முதல் நூலாகவும் விளங்கியிருந்திருக்கிறது.

மண், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்து இயற்கை பொருள்களால் உருவானது இந்த உலகம் என்ற அறிவியல் உண்மையை என்றோ தொல்காப்பியர் எழுதி வைத்தார். இக்கருத்தை இன்றைய அறிஞர்கள் ஏற்றுக் கொள்கின்றனர் என்பதே தொல்காப்பியத்தின் சிறப்பு.

இத்தகைய சிறப்புமிக்க தொல்காப்பியத்தைக் கல்விச்சாலைகள், சமூக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி முதலிய ஊடகங்கள் மூலம் நாமும் நம் மக்களுக்கு எடுத்துச் செல்வோம். இந்த முன்னெடுப்புக்கள் மூலமாக நம் இளைய சமூகத்திற்கு, தமிழின் தொன்மை, தமிழ் இலக்கண, இலக்கியங்களின் சிறப்பை எடுத்துச் செல்வோம்.

நமது தொல்காப்பிய மன்றமும் மாதாந்தக் கலந்துரையாடல், தமிழ் திறன் போட்டி, விழாக்கள் முதலிய வழி வகைகள் மூலம் தமிழையும் தமிழர் பெருமையையும் மக்கள் மத்தியில் வளர்க்கப் பெரு முயற்சி எடுத்து வருகின்றது. இம் முயற்சியில் பங்கு கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தொல்காப்பிய மன்றம் நடத்திய தமிழ் திறன் போட்டிகளில் நமது இளைய தலைமுறைச் சிறுவர், சிறுமியர் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். மேலும் எங்களுக்கு உறுதுணையாக நின்று இந்த நிகழ்வை நடத்த உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கனடா தொல்காப்பிய மன்றமும், தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய மன்றமும் இணைந்து நடத்தும் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு, தமிழை, தமிழர் பெருமையை உலகறியச் செய்யவும், வருங்கால சமூகம் தமிழின் தொன்மையை, சிறப்பை அறிந்து கொள்ளவும், வழிவகுக்கிறது. மேலும் தமிழ் நாட்டிலிருந்தும், தமிழ் வாழும் பிற நாடுகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் கலந்து கொள்ளும் இம் மாநாடு வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. சிறப்புமிக்க இந்த நிகழ்வைக் கனடாத் தொல்காப்பிய மன்றம் செய்கின்றது என்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொல்காப்பிய மாநாட்டுக்கு ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியவர்கள், மேலும் மாநாட்டில் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநாட்டுக்கு இரவு பகல் என்று பாராமல் அரும்பாடு பட்ட எமது மன்றத் தலைவருக்கும் அவருக்கு உறுதுணையாக நின்ற நிருவாகசபை உறுப்பினர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் தொண்டர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் மன்றத்திற்கு ஆதரவு அளிக்கும் அனைத்து நண்பர்களுக்கும், வர்த்தகதாரர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மற்றும் கனடாவில் சிறப்பாக தமிழ் பணியாற்ற உதவும் அரசுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் இத்தருணத்தில் மன்றம் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். தொல்காப்பிய மாநாடு இனிதே நிறைவேற அனைவரது ஆசியை வேண்டுகிறேன். வாழ்க தமிழ்! வளர்க மன்றச் செயல்பாடுகள்!

கலா அரியராசா

செப்டம்பர் 4, 2024

பொருளாளர், தொல்காப்பிய மன்றம், கனடா

தமிழ்த் திறன் போட்டிகளின் பொறுப்பாளரிடமிருந்து

தொல்காப்பியம் எமக்குக் கிடைக்கப்பெற்ற மிகத்தொன்மையான இலக்கண நூல் மட்டுமல்ல, தமிழ்மொழியின் தொடர்ச்சிக்கும் வழிவகுத்த நூல். அத்தோடு, தமிழ்மொழியின் செம்மொழித் தகைமைக்கு அடித்தளம் இட்ட நூலும் தொல்காப்பியமே.

இத்தகு பெருமைமிக்க தொல்காப்பியத்தின் புகழை உலக அரங்கிற்கு எடுத்துச்செல்லும் நோக்கோடு முதலாம் உலகத் தொல்காப்பிய மாநாடு நடைபெறுகின்றது. மாநாட்டின் முதலங்கமாக, மாணவரிடையே தமிழ்மொழியையும் தொல்காப்பியத்தையும் கொண்டு செல்கின்ற நோக்கோடு, தமிழ்த்திறன் போட்டிகளை நடத்தியிருந்தோம்.

மாணவர்களின் வயதுகளின் அடிப்படையில் பதினொரு பிரிவுகளில் மொத்தம் 31 போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டிகளின் பெறுபேறுகளை எமது இணையத்தளத்தில் (*https://www.tolkappiyam.ca/results24/*) பார்வையிடலாம்.

முதல் இரு பிரிவு மாணவர்களுக்கும் பேச்சுப்போட்டி, படம் பார்த்துப் பெயர் சொல்லும் போட்டி என்பனவும், அடுத்து இரு பிரிவுகளுக்கும் பேச்சுப் போட்டி, படம் பார்த்துப் பெயர் சொல்லும் போட்டி, படம் பார்த்து விடுபட்ட எழுத்துகளை எழுதும் போட்டி என்பனவும், அடுத்து ஆறு பிரிவுகளுக்கும் பேச்சுப் போட்டி, படம் பார்த்துப் பெயர் எழுதும் போட்டி, தமிழ்ப் பொது அறிவுப் போட்டி என்பனவும், உயர்தர வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களின் பிரிவுக்கு, காணொளி ஒப்படை, படம் பார்த்துப் பெயர் எழுதும் போட்டி, தமிழ்ப் பொது அறிவுப் போட்டி என்பனவும் நடத்தப்பட்டன.

பேச்சுப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்கள், முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டு மேடையில் பேசும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். அத்துடன் இப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் இம்மாநாட்டு மேடையில் வைத்து வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாணவர்களுக்கான போட்டிகளை வெற்றிகரமாக நடத்த உதவிய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நடுவர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மீண்டுமொரு முறை தொல்காப்பிய மன்றம் சார்பில் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வல்லிபுரம் சுகந்தன்

பொறுப்பாளர், தமிழ்த் திறன் போட்டிகள் 2024

பதிப்புரை

கனடா தொல்காப்பிய மன்றம் தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய இணையத்துடன் இணைத்து செப்டம்பர் 20-22, 2024 ஸ்கார்புரோ சிவிக் மையத்திலும் தமிழ் இசைக் கலாமன்றத்திலும் நடத்துகிற இந்த முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டிற்காக 124 ஆய்வுச் சுருக்கங்கள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 84 ஆய்வுச் சுருக்கங்களே தேர்வுசெய்யக்கூடியதாக இருந்தன. இவற்றுள் 70 முழுக் கட்டுரைகள் பெறப்பட்டன. இவற்றிலிருந்து 64 ஆய்வுரைகளே தெரிவுசெய்யப்பட்டு ஆய்வரங்கத்தில் ஒப்படைக்கப்படுகின்றன; மலரிலும் இடம்பெறுகின்றன.

இந்த ஆய்வரங்கில் கனடா மட்டுமல்லாது இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ளோர் நேரிலும் இணையவழியாகவும் கட்டுரை வழங்குகின்றனர். ஆதலால் பன்னாட்டு நேரத்தைக் கருத்தில்கொண்டு முதல் நாளன்று மாலை நேரத்தில் 28 ஆய்வாளர்கள் நேரிலும் இரண்டாம் நாள் காலை நேரத்தில் 36 ஆய்வாளர்கள் இணையவழியாகவும் கட்டுரை வழங்குகின்றனர்.

மாநாட்டில் கட்டுரை ஒப்படைப்பதற்காக 15 மணித்துளிகளும் ஐயந்தெளிதலுக்காக 5 மணித்துளிகளும் என மொத்தம் ஒரு கட்டுரையாளருக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன. மாநாட்டில் நேரில் வந்து கலந்துகொண்டு கட்டுரை வழங்கமுடியாதவர்களுக்கு இணையவழிக் கட்டுரை வழங்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மாநாடு தொடங்கியது முதல் முடியும் வரை மூன்று நாட்களும் நேரலையாகக் காணும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதன்மூலம் நேரில் கட்டுரை வழங்குவதைப் பார்ப்பதற்கும் இணைவழியாகக் கலந்துகொண்டு கட்டுரை வழங்குவோரைப் பார்த்துக் கலந்துரையாடவும் வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

மாநாட்டில் பங்கு கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்ட 'ஆய்வுச் சுருக்கங்கள்' பெரும்பாலும் ஏதோ ஒரு வகையில் தமிழ் அன்பர்களின் தமிழ் ஆர்வத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்திருந்தன என்பது சிறந்த செய்தி. ஆனால், 'ஆய்வு' என்னும் பதத்திற்கு உரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கத் தவறிய காரணத்தால் அவர்களது ஆய்வுச் சுருக்கங்கள் தேர்வாகவில்லை. ஆய்வுரைத் தேர்வுக்குப் பின்பற்றப்பட்ட விதிமுறைகள் வருமாறு:

1. தொல்காப்பியம் தொடர்பானதாக,
2. ஆய்வாக, அதாவது முதல் ஆய்வு அல்லது முன்னைய ஆய்வின் நீட்சியாக,
3. ஆய்வியல் நெறிமுறைகளை ஓரளவுக்கேனும் பின்பற்றியதாக,
4. ஆய்வாளரின் கருத்து தெளிவாகப் புலப்படுத்தப்பட்டதாக,
5. ஆய்வுக் கட்டுரையின் கட்டமைப்பையும் மொழிநடையையும் கொண்டதாக

மேற்குறித்த வகையில் ஆய்வுரைகள் இருக்கவேண்டும் என்பதே மாநாட்டின் நோக்கம். இவ்வாறு அமையாத கட்டுரைகள் ஆய்வரங்கக் குழுவால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இருப்பினும் உள்நாட்டு பேராளர்களின் தரத்தினையும் அவர்களை ஊக்கப்படுத்தி வாய்ப்பு வழங்கி அவர்களுக்கு ஆய்வரங்க அனுபவத்தை வழங்கவேண்டும் என்று கருதியும் சில கட்டுரைகள் ஏற்கப்பட்டுள்ளன.

மாநாட்டின் கட்டுரைகளை அவற்றின் கருப்பொருள் கொண்டு 1. இலக்கணம், 2. உரை, 3. ஒப்பீட்டியல், 4. மொழியியல், 5. வாழ்வியல், 6. அறிவியல் என ஆறு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு இந்த மலரில் கட்டுரைச் சுருக்க எண்களின் வரிசையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. ஆய்வுக்

கட்டுரையின் தரத்திற்குச் சற்றுக் குறைவான நிலையில் இருந்த சில கட்டுரைகள் 'பொது' என்னும் ஏழாவது பிரிவில் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்த மாநாட்டிற்குக் கட்டுரைகள் கொடுத்து மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்குப் பல்வேறு வகையிலும் செயல்பட்டு உதவியதோடு, உரிய நேரத்தில் கட்டுரைகளை வழங்கிய கட்டுரையாளர் அனைவருக்கும் நன்றி. மேலும், ஆய்வுச் சுருக்கங்களை ஏற்கமுடியாதபோதும் முழு ஆய்வுக் கட்டுரையை ஏற்காதபோதும் உரிய காரணங்களை வழங்கியதை ஏற்றுப் புரிந்துகொண்டோருக்கும் கட்டுரையைத் திருத்தியமைக்க அறிவுறுத்தியபோது அவற்றை ஏற்று மாற்றியமைத்து அனுப்பிய கட்டுரையாளர்களுக்கும் மிக்க நன்றி.

கட்டுரைச் சுருக்கங்களை முறையாகத் தேர்ந்தெடுத்து முழு ஆய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்கு அனுமதியளித்துப் பின்னர் முழுக் கட்டுரை வந்த பிறகு மிக நுணுக்கமாகக் கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்தும் திருத்தங்கள் செய்யவேண்டியோருக்கு உரிய மாற்றங்களைக் குறிப்பிட்டு வழிகாட்டிய மாநாட்டின் ஆய்வரங்கக் குழுவினருக்கும் பேராளர்களுக்கும் மிக்க நன்றி.

மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட தமிழ்த்திறன் போட்டியில் வெற்றிபெற்ற பள்ளிச் சிறுவர்களுக்கும் தொல்காப்பிய விநாடி-வினாப் போட்டிகளில் கலந்துகொண்டு வென்று பட்டங்களைப் பெறவிருக்கும் 'தொல்காப்பியச் செல்வி'களுக்கும், 'தொல்காப்பியச் செல்வன்'களுக்கும் பாராட்டுகளும் வாழ்த்துகளும்.

இந்த மாநாட்டிற்கு வாழ்த்துச் செய்திகள் வழங்கிய அரசியல் பிரமுகர்களுக்கும் மாநாட்டு பேராளர்களுக்கும் மிக்க நன்றி. மாநாட்டிற்கான அடிப்படைப் பொருளாதாரமாக இருந்து ஆதரவு வழங்கிய நன்கொடையாளர், விளம்பரதாரர் அனைவருக்கும் மிக்க நன்றி. தொகையின்றிக் கலைநிகழ்ச்சிகளைத் தங்களின் பங்களிப்பாக வழங்கிய கலைஞர்களுக்கும் கலைக் குழுவினருக்கும் நன்றி.

மாநாட்டுக்குத் தேவையான நினைவுப் பரிசு மற்றும் பொருட்களைத் தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு இன்னல்களுக்கு இடையில் அனைத்தையும் ஒருங்கிணைத்து உரிய நேரத்தில் அனுப்பித்தந்த மென்மப் பொறியாளர் திரு. ஆ. மணிகண்டபிரபு அவர்களுக்கும் மாநாட்டின் நினைவுச்சின்னமாகத் தொல்காப்பியர் சிலையை வடிவமைத்து வழங்கிய தமிழ்நாட்டின் பாரதி டைனமிக்ஸ் நிறுவனத்திற்கும் மிக்க நன்றி.

மாநாட்டு மலர், நிகழ்ச்சி நிரல் சிற்றேடு மற்றும் மாநாட்டிற்குத் தேவையான அனைத்து வடிவமைப்புகளையும் தமிழ்நாட்டிலிருந்து கனடா நேரத்திற்கேற்பப் பணிசெய்த வடிவமைப்பாளர் திரு. க. செந்தில் குமார் அவர்களுக்கும் மாநாட்டு மலர் அச்சடிப்பதில் வழக்கமான நெருக்கடிகளைக் கடந்து ஓரிரு நாட்களுக்குள் 800+ பக்கங்களைக் கொண்ட மிகப் பெரிய அளவிலான மாநாட்டு மலரையும் நிகழ்ச்சி நிரல், சான்றிதழ்கள், விளம்பரக் குறிப்புகள் என அனைத்தையும் அச்சடித்துக்கொடுத்த சன்பிரைட் அச்சகத்தின் திரு. ரவி சின்னதுரை அவர்களுக்கும் எழுத்துப்பிழைகள், சந்திப்பிழைகளைத் திருத்தியமைக்க உதவிய 'மென்தமிழ்' பிழை திருத்தி மென்பொருளுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இந்த மாநாடு மிகக் குறைந்த அளவிலான மனித உழைப்புகளையும் நிதியையும் கொண்டு அரங்கேறியிருக்கிறது. இதற்காகத் தங்கள் பணத்தையும் உடல் உழைப்பையும் கொடுத்து, பலநாள் தூக்கத்தை இழந்து நேரத்தை வழங்கிப் பங்காற்றி உழைத்த தொல்காப்பிய மன்றத்தின் உறுப்பினர்கள், தன்னார்வலர்கள், தமிழார்வலர்கள் அனைவருக்கும் மிக்க நன்றி.

தொல்காப்பியத்தின் பெருமையை எந்நாளும் கொண்டாடுவோம் பறைசாற்றுவோம்.

அன்புடன்
முனைவர் **செல்வநாயகி ஸ்ரீதாஸ்**
முனைவர் **இல. சுந்தரம்**
பதிப்புக்குழு

பொருளடக்கம்

	தலைப்பும் பெயரும்	பக்கம்
	இலக்கணம்	
1	தொல்காப்பியம் முதல் நன்னூல் வரை: சார்பெழுத்துக் கோட்பாடுகளிலும் சார்பெழுத்துப் புணர்ச்சிக் கோட்பாடுகளிலும் ஓர் ஆய்வு #102 திரு. மனோஷ் இராமா, மலேசியா	47
2	தொல்காப்பியச் சொல்லிலக்கணக் கோட்பாடுகள் #104 திரு. ச. குமரவேல், இந்தியா	59
3	தொல்காப்பியரின் குறியியல் கோட்பாடு #110 முனைவர் ஏ. எழில்வசந்தன், இந்தியா	70
4	தொல்காப்பிய நிலத்திணைகளில் புதியவரவு ஆறாம்நிலத்திணை #118 திரு. குரு அரவிந்தன், கனடா	83
5	இலக்கண நூற்களின் திறவுகோல் தொல்காப்பியச் செய்யுளியலே #123 முனைவர் சண்முக. செல்வகணபதி, இந்தியா	93
6	தொல்காப்பியர் சுட்டும் நாடக வழக்கமும் உரைகளும் #133 முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி, இந்தியா	105
7	வரலாற்று நோக்கில் தொல்காப்பிய இடைச்சொல் - பாட்டும் தொகையும் #138 திரு. க. சந்தோஷ், இந்தியா	116
8	தொல்காப்பிய உவமயியல் கோட்பாடும் பிற்கால அணியிலக்கணமும் #143 முனைவர் அ. உமாமகேஸ்வரி, இந்தியா	123
9	'பெருமிதம்' என்னும் மெய்ப்பாடு பற்றி தொல்காப்பிய இலக்கணமும் அவற்றின் இன்றைய பயன்பாடும் #156 திரு. அரியராசா முத்தையா, கனடா	132
10	தொல்காப்பியத்தில் ஆற்றுப்படை இலக்கணமும், அதன் வளர்ச்சியும் #157 திருமதி தமயந்தி பிறேம்ராஜ், கனடா	141
11	தொல்காப்பியம் முதல் கணினி வரை தமிழ் வரிவடிவம் - மாற்றம், சிக்கல், தீர்வு #179 முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ், கனடா	150
12	தொல்காப்பியத்தில் இலக்கியக் கோட்பாட்டுருவாக்கம் #204 திரு. தருமராசா அஜந்தகுமார், இலங்கை	162
13	தொல்காப்பியப் புறத்திணைக் கோட்பாடு - ஓர் ஆய்வு #208 முனைவர் மெய்ஞானி பிரபாகரபாபு, இந்தியா	171
14	தொல்காப்பியர் சுட்டும் வண்ணமும் அருணகிரிநாதர் பாடல்களும் #219 முனைவர் கு. அகிலா, இந்தியா	178
15	தொல்காப்பியம் சுட்டும் பாவும் பொருண்மையும் - பாக்களின் வளர்ச்சியில் ஆசிரியப்பா #221 திரு. குமரகுரு கணபதிப்பிள்ளை, கனடா	192

16 தொல்காப்பியம் இன்றளவும் பயன்பாட்டில் இருந்துவருவதற்குரிய காரணங்கள் 203
#222 முனைவர் இல. சுந்தரம், கனடா

17 தொடரும் தொல்காப்பிய மரபு 215
#227 முனைவர் மு. இளங்கோவன், இந்தியா

உரை

18 தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வதில் சி.கணேசையரின் உரைவிளக்கக் குறிப்புகளின் வகிபாகம் 223
#111 திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ், இலங்கை

19 இலக்குவனாரின் தொல்காப்பிய ஆராய்ச்சி 234
#171 திரு. க. விக்னேஸ்வரன், கனடா

20 தொல்காப்பியமும் தமிழ் நூற்காவலர்களும் 249
#178 திருமதி சசிகலா ஜீவானந்தன், கனடா

21 தொல்காப்பியமும் கல்லாடனார் உரைச்சிறப்பும் 258
#200 முனைவர் ம.ஏ. கிருட்டினகுமார், இந்தியா

22 வ.உ. சிதம்பரம் பிள்ளை வெளியிட்ட தொல். பொருள். (அகத். புறத். இயல்கள்) இளம்பூரணர் உரையின் பதிப்பாண்டு எது? 267
#211 முனைவர் ஆறுமுகம் மணி, இந்தியா

ஒப்பீட்டியல்

23 அகத்திணை மரபில் அமைந்த தமிழ் - யப்பான் காதற் பாடல்கள் 284
#160 முனைவர் சிவ இளங்கோ, இந்தியா

24 ஜப்பானிய மன்யோசு காதற்பாடல்களுக்கான கவிதைக்கோட்பாடு உருவாக்கம்: தொல்காப்பியப் பனுவலியல் பின்னணியிலிருந்து 295
#174 திரு. நி. கனகராசு, இந்தியா

25 தொல்காப்பியம் - தெக்கனே கிரம்மதிகா - அல்-கிதாப்பு ஆகிய மூன்று மரபிலக்கணங்களின் ஒலியியல் விளக்கம்: ஓர் ஒப்பாய்வு 302
#226 முனைவர் த. சுந்தரராஜ், சிங்கப்பூர்

வாழ்வியல்

26 தொல்காப்பியப் புறத்திணைக் கோட்பாடுகள் - வரலாற்று நோக்கில் களவேள்வி குறித்த ஆய்வு 312
#101 திரு. அகத்தியன் சிவமணி, இந்தியா

27 தொல்காப்பியமும் கருநாடக இசையும் 327
#106 திருமதி அமுதா பாண்டியன், இந்தியா

28 பழந்தமிழர்களின் குலத்தொழில்கள் (தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) 338
#122 முனைவர் ச. சுப்புலெட்சுமி, இந்தியா

29 தொல்காப்பிய அகத்திணைக் கோட்பாடுகளும் கோவை நானூறும் 348
#124 முனைவர் செ. கற்பகம், இந்தியா

30 தொல்காப்பியத்தில் பறை 361
#126 திருமதி ஜெயதீபா தனபாலசிங்கம், கனடா

31	**தொல்காப்பியப்பிரதி கட்டமைக்கும் விளிம்புநிலை மக்கள்** **#130 கலாநிதி செல்வராஞ்சிதம் சிவசுப்பிரமணியம், இலங்கை**	**367**
32	**தொல்காப்பியத் தமிழ்ச் சமூகம்: ஒரு சட்டப் பார்வை** **#131 முனைவர் ப. மோகன்தாசு, இந்தியா**	**375**
33	**தொல்காப்பியர் காலத்துக்கு முன்னும் பின்னும் தமிழக மெய்யியல் நிலை.** **#139 திருமதி வாணிசிறி சிவபாதசுந்தரம், கனடா**	**387**
34	**அறிவியல் சொல்லும் மெய்ப்பாடுகளும் தொல்காப்பிய மெய்ப்பாடுகளும்** **#142 முனைவர் ஜோதி தேமொழி, அமெரிக்கா**	**402**
35	**இயற்கை - தொல்காப்பியத்தை முன்னிலைப்படுத்திய ஆய்வு** **#165 கலாநிதி சாந்தி கேசவன், இலங்கை**	**410**
36	**தொல்காப்பியத்தில் நாட்டுப்புறக் கூறுகள்** **#170 திருமதி கலாதேவி அரியராசா, கனடா**	**423**
37	**தொல்காப்பியரின் பாலைத்திணையும் பாலைக்கலியில் காஞ்சித்திணையும்** **#172 மருத்துவர் துளசி விக்கினேஸ்வரன், கனடா**	**436**
38	**Insights into the Realm of Tolkappiyam: An Economic Perspective Through Expounding the Sangam Age** **#177 Dr. T. Chandramouli, India**	**445**
39	**நாட்டுப்புறவியல் நோக்கில் தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும்** **#185 முனைவர் தே. இந்திரகுமாரி, இந்தியா**	**452**
40	**தொல்காப்பியமும் அரச உருவாக்கமும்** **#191 திருமதி சடாச்சரி திருவாதனன், கனடா**	**461**
41	**தொல்காப்பியர் கூறும் மரபுவழி மாண்புகள்** **#201 முனைவர் இரா.ச. குழந்தைவேலன், இந்தியா**	**468**
42	**தொல்காப்பியமும் தமிழ்மொழியின் செம்மொழித் தகைமையும்** **#210 திரு. இராச்குமார் குணரட்னம், கனடா**	**483**
43	**தொல்காப்பியத்தில் மரபின் ஆட்சி** **#225 திரு. சண்முகராஜா சின்னத்தம்பி, கனடா**	**491**

மொழியியல்

44	**தொல்காப்பியம் பிறப்பியலும் புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழிக் கல்வியும்** **#146 திருமதி சுவந்தி சங்கர், கனடா**	**500**
45	**தொல்காப்பியமும் இக்கால மொழியியலும்** **#153 திரு. தணிகைவேல்(ன்) மாரியாயி, மலேசியா**	**512**
46	**புலம்பெயர் தமிழர் கல்விப்புலத்தில் தொல்காப்பியத்தின் செல்வாக்கு** **#164 திருமதி க. லோககீதா, இலங்கை**	**530**
47	**Diachronic Analysis of Sociative Case in Tamil** **#176 Dr. P. Chandramohan, India**	**540**

அறிவியல்

48 **தொல்காப்பிய மெய்ம்மயக்கப் பைத்தான் நிரலாக்க மேம்பாடு** **552**
#119 முனைவர் த. சத்தியராஜ், இந்தியா | திரு. சீனிவாசன் தணிகாசலம், கனடா

49 **இயற்கணிதம், கணக் கணிதம் மற்றும் கோட்டுரு அல்லது பரிமாண - அச்சு - இருப்புநிலை வரைபடக் கணிதம் மூலம், தமிழ் எழுத்துகளின் விளக்கம்** **566**
#121 திரு. தீனதயாளன் சுப்ரமணியம் (சொல்லாக்கியன்), கனடா

50 **நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்** **579**
#149 முனைவர் பால. சிவகடாட்சம், கனடா

51 **தொல்காப்பியரும் உயிரினக் கொள்கைகளும்** **590**
#150 முனைவர் இரா. கார்த்திகேயன், இந்தியா

52 **The Tolkāppiyam in a Healthcare Perspective** **600**
#152 Dr. Kesavan Shemankkary and Mr. Viveganandarajah Thulanchanan, Sri Lanka

53 **தொல்காப்பிய மெய்ப்பாட்டியலும் நவீன உளவியலும்: ஓர் ஒப்பீடு.** **610**
#154 மருத்துவர் இரகுராமன் வரதராஜன், கனடா

54 **தொல்காப்பியத்தில் விஞ்ஞானம்** **622**
#159 திரு. ஞானநாயகம் சிவா, கனடா

55 **கணிதவியல் நோக்கில் தொல்காப்பியம்.** **636**
#168 செல்வி விவோகா, இலங்கை

56 **தொல்காப்பியத்தில் சிறுதானியமும் தொலைந்துபோன அருந்தானியமும் ஆய்வு** **651**
#173 மருத்துவர் வரதா கந்தசாமி, கனடா

57 **கணினியில் தமிழ்மொழிச் சொற்களின் சிதைவைத் தடுப்பதில்தொல்காப்பியத்தின் பயன்பாடு** **664**
#180 திரு. சுகந்தன் வல்லிபுரம், கனடா

58 **தமிழின் உயிர் மற்றும் ஆய்த எழுத்துக்களிலுள்ள இயற்பியல்** **672**
#209 முனைவர் நாகலிங்கம் சிவயோகன், அமெரிக்கா

59 **தொல்காப்பியத்தில் முதற்பொருள்** **680**
#214 முனைவர் சம்பந்தம் ஏகாம்பரம், கனடா

பொது

60 **திராவிட மொழிகளின் தாய் மொழி தமிழ்** **688**
#107 முனைவர் புஷ்பா கிறிஸ்டி, கனடா

61 **தொல்காப்பியத்தில் தொடரியல் கோட்பாடும் இன்று அதன் மாற்றமும் வளர்ச்சியும்** **705**
#155 முனைவர் வாசுகி நகுலராஜா

62 **தொல்காப்பியமும் பிராகிருதமும்- ஒரு பார்வை** **711**
#192 திரு. சிவபாலு தங்கராசா, கனடா

63 **தொல்காப்பியத்திற்குப் புலியூர்க்கேசிகனாரின் உரைவளம்** **726**
#206 திருமதி கலைச்செல்வி புலியூர்க்கேசிகன், இந்தியா

64 **தொல்காப்பியமும் பாணினியமும்** **732**
#220 திரு. திருவள்ளுவன் இலக்குவனார், இந்தியா

இலக்கணம்

தொ.மா.க. 102

தொல்காப்பியம் முதல் நன்னூல் வரை: சார்பெழுத்துக் கோட்பாடுகளிலும் சார்பெழுத்துப் புணர்ச்சிக் கோட்பாடுகளிலும் ஓர் ஆய்வு

மனோஷ் இராமா
முதுகலைப் பட்டப்படிப்பு ஆய்வாளர்,
சுலுத்தான் இதுரீசு கவ்லியியல் பல்கலைக்கழகம் மலேசியா
mannosh.mr@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கணத்தில் சார்பெழுத்துகள் இன்றியமையாத இடத்தைப் பிடித்துள்ளன. தமிழ் இலக்கணம் குறித்துப் பேசும் நூல்களில் கிடைப்பனவற்றுள் முதல் தமிழிலக்கண நூலான தொல்காப்பியம் சார்பெழுத்துகளைப் பற்றி எழுத்ததிகாரத்திலும், சொல்லதிகாரத்திலும், பொருளதிகாரத்திலும் விளக்கியுள்ளது. தொல்காப்பியத்திற்குப் பிறகு பல தமிழ் இலக்கண நூல்கள் தமிழகத்தில் இயற்றப்பட்டன. அவ்வரிசையில் நேமிநாதம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் மட்டுமே மையமாகக் கொண்டு இயற்றப்பட்டன. தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய தமிழ் இலக்கண நூல்களின் கால வரிசையில், இந்நூலாய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நேமிநாதமும் நன்னூலும் சார்பெழுத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளமை அறியப்படுகின்றது. தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்த நேமிநாதம், நன்னூல் ஆகிய தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பியத்தின் சார்பெழுத்துக் கோட்பாடுகளும் சார்பெழுத்துப் புணர்ச்சிக் கோட்பாடுகளும் இடம்பெற்றத்தாகவும் அக்கோட்பாடுகள் தொடர்ந்து வந்ததாகவும் காணப்படுகின்றன. ஆக, இந்த ஆய்வில் தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல் ஆகிய மூன்று தமிழ் இலக்கண நூல்களிடையே தொடர்ந்து வந்த சார்பெழுத்துக் கோட்பாடுகளும் சார்பெழுத்துப் புணர்ச்சிக் கோட்பாடுகளும் ஆராயப்படவுள்ளன.

கருச்சொற்கள்: சார்பெழுத்துக் கோட்பாடுகள், புணர்ச்சிக் கோட்பாடுகள், தமிழ் இலக்கணம், தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம்,

1.0 முன்னுரை

தமிழ் இலக்கணம் ஒரு பெருங்கடலாகும். இலக்கணம் என்ற சொல்லிற்கு அழகு, செம்மை, ஒழுங்கு, வரையறை என்று பலபொருள்களை அறிஞர் பெருமக்கள் கூறுவர். ஒரு மொழியின் வளர்ச்சியையும் தளர்ச்சியையும் இலக்கணம் பிரதிபலிக்கும் என்று ச.வே.சுப்பிரமணியன் வரையறை செய்கிறார். தமிழ் இலக்கண நூல்களின் வரிசையில் மிகத் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இவற்றுள் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். இவ்விலக்கண நூலைக் கற்போருக்கு எந்தவிதமான மயக்கத்தையும் தராத வண்ணம், சிறந்த தமிழ்மரபுகளை பேணி இயற்றப்பட்டுள்ளது. அதற்குப் பனம்பாரனார் இயற்றிய சிறப்புப் பாயிரத்தில் இருக்கின்ற பன்னிரண்டாம் அடியான 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' சீனி நைனா முகம்மது சான்றாகக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியம் தமிழிலக்கண நெறிகளை எடுத்துரைப்பதில் தலைமையானதாகத் திகழ்வதால், அத்தொல்காப்பிய மரபே தமிழிலக்கண மரபாகக் கொள்ளப்பட்டது.

தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பிய மரபையும் சில வடமொழி இலக்கண மரபை இணைத்தும் பேசிய நிலையைக் காணமுடியும். மேலும், எழுத்திற்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் கூறும் வகையில் அந்நூல்கள் அமைந்துள்ளன. இந்த ஆய்வில் தமிழ் இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ள எழுத்திலக்கணத்தில் இருக்கின்ற சார்பெழுத்துகளைப் பற்றிப் பேசப்பட்டுள்ளது.

2.0 ஆய்வு நோக்கம்

தமிழ் இலக்கணத்தில் சார்பெழுத்துகள் இன்றியமையாத இடத்தைப் பிடித்துள்ளன. தமிழ் இலக்கணம் குறித்துப் பேசும் நூல்களில் கிடைப்பனவற்றுள் முதல் தமிழிலக்கண நூலான தொல்காப்பியம் சார்பெழுத்துகளைப் பற்றி எழுத்ததிகாரத்திலும், சொல்லதிகாரத்திலும், பொருளதிகாரத்திலும் விளக்கியுள்ளது. 11-ஆம் நூற்றாண்டில் வீரசோழியம் எனும் ஐந்திலக்கண நூல் புத்தமித்திரரால் இயற்றப்பட்டது. அதன் பிறகு பல தமிழ் இலக்கண நூல்கள் இயற்றப்பட்டன. அவ்வரிசையில் நேமிநாதம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் மட்டுமே மையமாகக் கொண்டு இயற்றப்பட்டன. தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய தமிழ் இலக்கண நூல்களின் கால வரிசையில், இந்நூலாய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நேமிநாதமும் நன்னூலும் சார்பெழுத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளமை அறியப்படுகின்றது. தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்த, நேமிநாதம், நன்னூல் ஆகிய தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பியத்தின் சார்பெழுத்துக் கோட்பாடுகளும் அதன் புணரியல் கோட்பாடுகளும் இடம்பெற்றத்தாகவும் அக்கோட்பாடுகள் யாவும் தொடர்ந்து வந்ததாகவும் காணப்படுகின்றன. ஆக, இந்த ஆய்வில் தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல் என்கிற தமிழ் இலக்கண நூல்களிடையே தொடர்ந்து வரும் சார்பெழுத்துக் கோட்பாடுகளை ஆராயப்பட்டுள்ளது.

3.0 தொல்காப்பியத்தில் சார்பெழுத்து

மூவிலக்கணத்தையும் உடைய தொல்காப்பியம், ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்களால் அமைந்து மொத்தம் 27 இயல்களைக் கொண்டு விளக்குகிறது. எழுத்ததிகாரத்தில் 483 நூற்பாக்களையும், சொல்லதிகாரத்தில் 463 நூற்பாக்களையும், பொருளதிகாரத்தில் 664 நூற்பாக்களையும், ஆக மொத்தம் 1610 நூற்பாக்களைத் கொண்டது தொல்காப்பியம் (நடராசன், 2013). அவ்வகையில், சார்பெழுத்துகளை இம்மூன்று அதிகாரத்திலும் தொல்காப்பியர் ஆழமாக விளக்கியுள்ளார். அவற்றுள் எழுத்ததிகாரத்திலே அதிகமாக விளக்கியுள்ளார்.



வரைபடம் 1: தொல்காப்பியத்தில் எழுத்துப் பகுப்பு

தொல்காப்பியர் சார்பெழுத்துகளை முதலில் 'எழுத்தோ ரன்ன' என்றே பெயரிட்டுள்ளார். எழுத்துடன் ஒன்றுபோலக் கருதத்தக்கவை என்பது அதன் பொருள் (சீனி நைனா முகம்மது. 2014, pp. 14-19). இதனைத் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் முதல் இயலான நூன்மரபில் இடம்பெற்றிருக்கும் இரண்டாவது நூற்பாவான,

அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன (தொல்.எழுத்து 2)

மூலம் அறியலாம். மேற்காணும் நூற்பா தொல்காப்பியத்தில் 3 சார்பெழுத்துகள் இடம்பெற்றிருப்பதையும் குறிக்கின்றது. அவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பதேயாகும். இம்மூன்று சார்பெழுத்துகளைக் குறித்துத் தொல்காப்பியர் தமது நூலான தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரங்களிலும் மொத்தம் 112 நூற்பாக்களில் விளக்கியுள்ளார் என்பதை இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இம்மூன்று அதிகாரங்களிலும் சார்பெழுத்துகளைக் குறித்து விளக்கப்பட்டுள்ளதைப் பின்னிணைப்பு 1-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.0 நேமிநாதத்தில் சார்பெழுத்துகள்

நேமிநாதம் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும் ஒரு நூலாகும். இந்நூல் 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்டது என்பர். குணவீரபண்டிதர் என்பவர் இந்நூலை இயற்றியுள்ளார். நேமிநாதம் பாடியதால் இவருக்கு நேமிநாதர் என்ற பெயரும் உண்டு. நேமிநாதரை மயிலைநாதர் என்றும் கூறுவர். தமிழ் நாவலர் சரிதையிலிருந்து பேராசிரியர் என இவர் வழங்கப்பெற்றார் என்றும் அறிகிறோம். தொல்காப்பியத்தின் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் சுருக்கிக் கூறும் நோக்கத்திலே இந்நேமிநாதம் நூலை குணவீரபண்டிதர் இயற்றியுள்ளார். அவ்விரு இலக்கணங்களைச் சுருக்கி உரைப்பதால் இது சின்னூல் என்றும் அழைக்கப்பட்டது. இதனை தொண்டைமண்டல சதகம் பாடிய படிக்காசுப் புலவரும்,

'சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்'

என்று கூறுகிறார் (இளவரசு, 2014). பழங்காலத்தில் தொல்காப்பியத்தைக் கற்பதற்கு முன்பு மாணவர்கள் நேமிநாதத்தைக் கற்று வந்தனர். தொல்காப்பியம் ஆழமான இலக்கண விளக்கங்களைக் கொண்ட நூல். அதனை அளந்து காணும் முயற்சிக்கு நேமிநாதம் படகாகப் பயன்பட்டது. இதனை

தொல்காப் பியக்கடலின் சொல்தீபச் சுற்றளக்கப்
பல்காற்கொண் டோடும் படகென்ப - பல்கொட்டுக்
கோமிகா மற்புலனை வெல்லும் குணவீர
நேமிநா தத்தின் நெறி *(சிறப்புப்பாயிரம் - சொல்லதிகாரம்)*

எனும் சொல்லதிகாரச் சிறப்புப் பாயிரம் வழி அறியலாம். பழங்கால மக்கள் நேமிநாதம் நூலிற்கு 'சின்னூல்' என்று பெயரிட்டதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம் போலும். மேலும், எழுத்ததிகாரத்தில் உட்பிரிவுகள் அமையாமல் எழுத்துகளின் பிறப்பு, மொழி முதலெழுத்துகள், மொழியிறுதி எழுத்துகள் ஆகியவற்றைப் பற்றி ஒவ்வொரு பாக்களில் கூறுகிறது. சொல்லதிகாரத்தில் 9 உட்பிரிவுகளைக் கொண்டு சற்று விரிவான முறையில் கூறப்பட்டுள்ளன. எழுத்ததிகாரத்தில் 24 வெண்பாக்களும், சொல்லதிகாரத்தில் 71 வெண்பாக்களுமாக மொத்தத்தில் 95 நூற்பாக்களால் ஆனது இந்த நூல்.

அகர முதலாக ஆய்தம் இடையா
னகரம் ஈறா குமுதல் வைப்பு

என்று நூலின் பெயரைக் குறிப்பிடாமல் ஒரு சூத்திரத்தை நேமிநாத உரையாசிரியர் மேற்கோளாகக் காட்டியுள்ளவற்றில் 'முதல் வைப்பு' என்ற ஒரு பிரிவு காணப்பட்டுள்ளது. தன்னுடைய உரையில் மேலும் 'இரண்டாம் வைப்பு' என்ற ஒரு வகையையும் பேசியுள்ளார். நேமிநாதப் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளது

போல் முதல் வைப்பு, இரண்டாம் வைப்பு என்ற பாகுபாடு முதல், சார்பு என்ற பாகுபாட்டோடு ஒத்தது (சண்முகம், 1980, pp. 106-137). நேமிநாதத்தில் உயிர் 12; மெய் 18; ஆய்தம் 1 ஆகிய 31 எழுத்துகளை முதல் எழுத்துகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. நேமிநாத உரையாசிரியர் உயிர், மெய், ஆய்தம் என்பவற்றை 'முதல் வைப்பாகிய முதல் எழுத்துகள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

குணவீர பண்டிதர் இரண்டாம் வைப்பையைப் பற்றி விளக்கவில்லை. ஆயினும், உரையாசிரியர்,

> *'மூன்றாம் சூத்திரம் இரண்டாம் வைப்பாகிய உயிர்மெய் எழுத்தும் அவற்றுள் குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் வருக்கத்து ஒற்றுக்கள் ஆமாறும் ஒற்றளபெடைகள் உயிரளபெடைகள் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று'*

என்று விளக்கியுள்ளார். இவற்றுள் உயிர்மெய், வல்லொற்று மெல்லொற்று வர்க்கம், உயிரளபெடை, ஒற்றளபெடை போன்றவற்றை 'இரண்டாம் வைப்பாகிய சார்பெழுத்துகள்' உரையாசிரியர் குறித்துள்ளதைக் காண இயலுகின்றது. இருப்பினும், உரையாசிரியர் இரண்டாம் வைப்பு என்னென்ன என்று தொகுத்துக் கூறும் முயற்சியில் முழுமனதாக ஈடுபடவில்லை என்று அறிய வருகின்றது (சண்முகம், 1980, pp. 106-137). குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் போன்றவை இந்நூலில் காணப்பட்டுள்ளன. ஆனால், இவைகள் சார்பெழுத்து என்றோ வேறு வகை எழுத்தென்றோ குறிப்பிடவில்லை. செ.வை சண்முகம் அவர்கள் தமது நூலில் (சண்முகம், 1980, pp. 106-137),

> *'உயிர்மெய், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஆகியவற்றை இரண்டாம் வைப்பாகக் கருதுகிறார் என்று நாம் கொள்வது அவருக்கு உடன்பாடாகவே இருக்கும்'*

என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது. மேலும், கந்தசாமி (1977: 77),

தொல்காப்பியர் காலத்திற்குப்பின் மாத்திரைக் குறுக்கங்களையும் மாத்திரைப் பெருக்கங்களையும் சார்பெழுத்தாகக் கருதும் மனநிலை எழுந்தது

என்று குறிப்பிடுவது, நேமிநாதத்தில் ஐந்தாவது சூத்திரத்தில் குறிப்பிட்ட மகரக் குறுக்கத்தையும் ஆய்தக் குறுக்கத்தையும் சார்பெழுத்துகளாகக் கருதப்பட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதனடிப்படையில், நேமிநாதத்தின் தமிழ் எழுத்துகளைக் கீழ்கண்டவாறு பிரிப்பது தவறு என்று எற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் செ. வை. சண்முகம் கூறியுள்ளார் (சண்முகம், 1980, pp. 106-137). நேமிநாதத்தில் இடம்பெற்றுள்ள சார்பெழுத்துகள் தொடர்பான தகவல்கள் பின்னிணைப்பு 2-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.



வரைபடம் 2: நேமிநாதத்தில் எழுத்துப் பகுப்பு

5.0 நன்னூலில் சார்பெழுத்துகள்

நன்னூல் தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு எழுதப்பட்ட வழிநூலாகும். சீயகங்கன் வேண்ட, 13-ஆம் நூற்றாண்டில் சைன சமயத்தைச் சார்ந்த பவணந்தி முனிவரால் இந்நூல் இயற்றப்பட்டது. நன்னூலைப் 'பின்னூல்' என்றும் 'சிற்றதிகாரம்' என்றும் கூறுவர். இந்நூலில் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் கூறப்பட்டுள்ளன. எழுத்ததிகாரத்தில் 5 இயல்களும் சொல்லதிகாரத்தில் 5 இயல்களும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எழுத்தததிகாரத்தின் முதற் இயலான எழுத்தியலில், எழுத்துகள் யாவை, அவை எத்தனை, அவற்றின் பெயர்கள், தன்மை, ஒலிக்கும் முறை போன்ற செய்திகள் இடம்பெற்றுள்ளன. இரண்டாம் இயலான பதவியலில் பகுப்பதாம் பகாப்பதம் தொடர்பான விளக்கங்களும் மூன்றாம் இயல் முதல் ஐந்தாம் இயல் வரை புணரியல் தொடர்பான செய்திகளும் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் உள்ள மொத்த நூற்பாக்கள் 462 ஆகும். அவற்றுள் பாயிரவியலில் 55 நூற்பாக்களும் எழுத்ததிகாரத்தில் 202 நூற்பாக்களும் சொல்லதிகாரத்தில் 204 நூற்பாக்களும் அமைந்துள்ளன.

எழுத்துகளைப் பகுப்பதில் நன்னூல் தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளது. தமிழ் எழுத்துகள் 30 என்று தொல்காப்பியத்தில் கூறப்பட்ட செய்தி நன்னூலிலும் காணப்பட்டுள்ளது. ஆனால், சார்பெழுத்துகளுக்குத் தொல்காப்பியர் கூறிய விதிக்குச் சற்று வேறுபட்டு நன்னூல் 10 என்று கருத்துரைகின்றது. தொல்காப்பியர் வகுத்த மூன்று சார்பெழுத்துகளொடு நன்னூலார் ஆய்தக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஐகாரக் குறுக்கம், ஒற்றளபெடை, உயிரளபெடை, உயிர்மெய் போன்றவற்றைச் சேர்த்து மொத்தம் 10 சார்பெழுத்துகளைப் பேசியுள்ளார். இப்பத்துச் சார்பெழுத்துகளைக் குறித்துப் பவணந்தி முனிவர் தமது நூலான நன்னூலில் இரண்டு அதிகாரங்களிலும் மொத்தம் 49 நூற்பாக்களில் விளக்கியுள்ளார். இவ்விரண்டு அதிகாரங்களிலும் சார்பெழுத்துகளைக் குறித்து விளக்கப்பட்டுள்ளதைக் பின்னிணைப்பு 3-இல் விளக்கப்பட்டுள்ளது.

6.0 தொல்காப்பியம் முதல் நன்னூல் வரை: தொடர்ந்து வரும் தொல்காப்பியச் சார்பெழுத்துக் கோட்பாடுகள்

6.1 தொல்காப்பியச் சார்பெழுத்துகளின் மாத்திரை அளபு கோட்பாடு

எழுத்துகளை ஒலிக்கும் கால அளவுக்கு மாத்திரை என்று பெயர். மாத்திரைக்கு அளவுகோல்களாக இரண்டு முறைகளையும் தொல்காப்பியர் கூறியுள்ளதை,

கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே (தொல். நூற்பா 7)

எனும் நூற்பாவின் மூலம் அறியலாம். கண்களை இமைத்தலும் விரல்களைச் சுண்டுவதலும் ஒருமுறை செய்தால் ஒரு மாத்திரையாகவும் பலமுறை செய்தால் பல மாத்திரையாகவும் கணக்கிடப்படும். ஆனால், தமிழில் ½ மாத்திரையுடைய எழுத்துகளும் ¼ மாத்திரையுடைய எழுத்துகளும் உள. இவற்றைக் கணக்கிடுவதற்கு அமிர்தசாகரர்,

'*உன்னல் காலே உறுத்தல் அரையே*
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே'

என்று குறிப்பிட்டுள்ளார். விரலைச் சுண்ட நினைத்ததும் ¼ மாத்திரை. விரல்களைச் சேர்த்தவுடன் ½ மாத்திரை. முறுக்கியதும் ¾ மாத்திரை. விட்டதும் ஒரு மாத்திரையாகிறது (சீனி நைனா முகம்மது .2007, pp. 18-21). குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ½ மாத்திரை ஒலிக்கும் கால அளவைக் கொண்டதாகத் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நேமிநாதம் ஆய்தத்தைச் சார்பெழுத்தாகக் கருதவில்லை (சுப்பிரமணியன், 1977). நேமிநாதமும் இத்தகையான கருத்தையே முன்வைத்துள்ளது. ஆனால், குற்றியலுகரத்தையும் குற்றியலிகரத்தையும் நேமிநாதமும் சார்பெழுத்தாகக் கருதி அவை ½ மாத்திரை அளபைக் கொண்டவையெனக் குறிப்பிட்டுள்ளன. நன்னூலும் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய

சார்பெழுத்துகளுக்கு ½ மாத்திரை ஒலிக்கும் கால அளவைக் கொண்டதாகவே குறிப்பிட்டுள்ளது. அட்டவணை 1 இதனை விளக்குகின்றது.

சார்பெழுத்து	இலக்கண நூல்	சான்று	மாத்திரை அளபு
குற்றியலுகரம், குற்றியலிகரம்	தொல்காப்பியம்	அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே (தொல். நூற்பா 12)	½
	நேமிநாதம்	மெய்யாய்தம் இஉக் குறுக்கமரை (நேமி. 5)	
	நன்னூல்	அரை ஒற்று இ, உக் குறுக்கம் ஆய்தம் (நன். 99)	

அட்டவணை 1: தொல்காப்பியம் முதல் நன்னூல் வரையுள்ள குற்றியலுகரம், குற்றியலிகரம் மாத்திரை அளபு

6.2 தொல்காப்பியக் குற்றியலுகரக் கோட்பாடு

குற்றியலுகரம் என்பது, குறுமை + இயல் + உகரம் > குறு + இயல் + உகரம் > குற்று + இயல் + உகரம் = குற்றியலுகரம் என்று புணர்ந்து உருவான சொல் (சீனி. நைனா). குறுகிய இயல்புடைய உகரம் என்பது பொருள். நேமிநாதத்திலும் நன்னூலிலும் தொல்காப்பியக் குற்றியலுகர வகைகள் தொடர்ந்து பின்பற்று வந்துள்ளதாகக் காணப்பட்டுள்ளன.

> *‘ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்*
> *ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்*
> *ஆயிரு முன்றே உகரம் குறுகிடன் (தொல். 406)*

எனும் நூற்பாவில், குற்றியலுகரங்கள் அறுவகை உள்ளன என்று தொல்காப்பியம் கூறுகிறது. தொல்காப்பியச் சார்பெழுத்துக் கோட்பாட்டை (நூற்பா 3, மொழிமரபு) மையப்படுத்தி அறுவகையான குற்றியலுகர வகைகளும் நேமிநாதத்தில் இருப்பதாக கோவிந்தராசு முதலியார் குறிப்புரை எழுதியுள்ளார். தொல்காப்பியக் குற்றியலுகரப் பகுப்பு முறையைப் பின்பற்றி,

> *நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலியிடைத்*
> *தொடர்மொழி இறுதி வன்மைஊர் உகரம்*
> *அஃகும் பிறமேல் தொடரவும் பெறுமே (நன். 94)*

எனும் நூற்பாவில் குற்றியலுகரங்கள் அறுவகை உள்ளன என்று நன்னூல் தெளிவாகக் கூறுகின்றது. ஆக, தொல்காப்பியம், நேமிநாதம், நன்னூல் அனைத்தும் குற்றியலுகரங்கள் அறுவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதை இதன் வழி அறிய இயலுகின்றது.

7.0 தொல்காப்பியம் முதல் நன்னூல் வரை: தொடர்ந்து வரும் சார்பெழுத்துப் புணரியல் கோட்பாடுகள்

7.1 தொல்காப்பியக் குற்றியலுகரப் புணரியல் கோட்பாடு

குற்றியலுகரப் புணரியலில் தொல்காப்பியத்திற்கும் இவ்வாய்விற்கு எடுக்கப்பட்ட இலக்கண நூல்களுக்கும் வேறுபாடு உள்ளன. தொல்காப்பியர் கூறிய சார்பெழுத்துகளாகிய மூன்றும் இயல்பான ஒலிகளைக் கொண்டவையாகும். இதனை செ.வை. சண்முகம் (சண்முகம், 1980, pp. 106-137),

> *‘தொல்காப்பியர் கூறிய சார்பெழுத்துகள் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்றும் இயல்பான ஒலிகள் – அதாவது வேறு ஒலிகள் திரிந்த ஒலிகளோ விகாரப்பட்ட ஒலிகளோ குறுகிய ஒலிகளோ அல்ல என்று கருதுகிறார்’*

என்று குறிப்பிட்டுள்ளார். செ.வை. சண்முகத்தின் கருத்திற்கு உறுதுணையாக அமையும் வகையில் செ. சீனி நைனா முகம்மது (சீனி நைனா முகம்மது, 2015, p. 77)

குற்றியலுகரம் உகரக்குறில் குறுகியதால் வந்ததன்று; மாறாக, சொல்லின் ஈற்றிலுள்ள வல்லினமெய்யைப் புலப்படுத்துவதற்காகப் பிறப்பிலேயே அரை மாத்திரையுடன் தனியே தோன்றிய குற்றுயிரொலியாகும்.

என்றுரைக்கிறார்.

7.2 குற்றியலுகரம் உயிர்வருவழி குன்றுதல்

'ஆவிபின் தோன்றக் கெடுங்குற் றுகரம்;..' (வீர. 21)

என்று வீரசோழியம் கூறுகிறது. குற்றியலுகரத்தின் முன் உயிர் தோன்றின் குற்றுகரம் கெடும் என்பது இதன் கருத்து. பதிப்பாசிரியர்,

நாகு + அரிது > நாகரிது
நாகு + அருமை > நாகருமை

என்று சான்று காட்டியுள்ளார். இதனைக் குறித்து, குற்றுகரம் உயிரேற இடம்தரும் நிலையைத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை என்றும் பின்வந்த வீரசோழியம் இந்த விதியை வகுத்துள்ளதாக வெ. சத்தியநாராயணன் தமது ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளார். சான்றாக,

'இதன்படி குற்றுகரம் உயிரேற இடம்தரும் நிலையைத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை எனலாம். பின்வந்த வீரசோழியம் குற்றுகரவியல்பை உணர்ந்து, ஆவி பின் தோன்றக் கெடும் குற்றுகரம் என விதி வகுத்தது'.

எனக் கூறியுள்ளார். ஆனால், உண்மையில் தொல்காப்பியர் இதற்கான விதியை தமது நூலில் விளக்கியுள்ளார்.

'அவற்றுள் மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்' (தொல். 104)
'குற்றிய லுகரமும் அற்றென மொழிப' (தொல். 105)

என்ற இரு நூற்பாக்களின் வழி, மொழியிறுதிக் குற்றியலுகரமும் மெய்யின் தன்மையை உடையதாய், புள்ளிபெற்று வருமொழி முதலிலுள்ள உயிரேற இடங்கொடுக்கும் என்பதைத் தொல்காப்பியர் தெளிவாக விளக்கியுள்ளார். உயிரேற இடம் கொடுத்தல் மெய்யின் தன்மை என்பதால் குற்றியலுகரம் அவ்வாறே உயிரேற இடங்கொடுக்கும் என்பது தொல்காப்பியர் கருத்து. மனோன்மணி தேவி அண்ணாமலை இதனை விளக்க ஒரு தக்க சான்று ஒன்றனைக் கொடுத்துள்ளார் (அண்ணாமலை, 2018),

குற்று + இயல் + உகரம் > குற்றியல் + உகரம் > குற்றியலுகரம்

அற்று + என > அற்றென

குற்று என்பது வன்றொடர்க் குற்றியலுகரம். இயல் என்ற உயிர் முதல் எழுத்தொடு புணரும் போது, குற்றியலுகரம் அழிந்து 'ற்' எனும் மெய் வந்த உயிர் மீது ஏறி நின்று, குற்றியில் என மாறியதை தொல்காப்பியரே தமது நூற்பா வழி சான்று காட்டியுள்ளமை தெளிவு. தொல்காப்பியர் இவ்விதியைக் கூறுமிடத்து, 'உடம்பொடு புணர்த்தல்' உத்தியைக் கையாண்டுள்ளார். எனவே. குற்றுகரம் உயிரேற இடம்தரும் நிலையைத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது என்பதே எமது கருத்து.'

என்று கூறியுள்ளார். ஆக, குற்றியலுகரம் உயிர்வருவழி குன்றுதல் எனும் விதியை வீரசோழியமே முதலில் வகுத்தது என்று கூறுவது ஏற்புடையதன்று. தொல்காப்பியத்தைப் பின்பற்றி வீரசோழியம் வகுத்துள்ளது என்று கூறுவதே சரியாகும். வீரசோழியத்திற்குப் பிறகு நேமிநாதமும் நன்னூலும் இவ்விதியைத் தொடர்ந்து குறித்து வந்துள்ளன.

'குற்றுகரம் ஆவி வரிற்சிடையும் கூறியவல்
லொற்றுமுன் றோன்றுதலும் உண்டாகு - ..' (நேமி. 14)

குற்றுகர ஈற்று நிலைமொழியின் பின் யாதானும் ஓருயிர் வந்தால் உகரம் அழிந்து வந்த உயிர் ஏறி முடியும் என்பது நேமிநாதர் கூறும் கருத்து. எடுத்துக்காட்டு:

நாகு + அழகிது > நாகழகிது

நேமிநாதர் கூறிய இக்கருத்து தொல்காப்பிய நூற்பாவை (தொல். 106) அடியோற்றி வகுத்துள்ளார் என்பது தெரிகின்றது (மனோன்மணி தேவி).

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' (நன். 164)

குற்றியலுகரம் மொழியிறுதியில் நின்று, எதிரே உயிரெழுத்து வரின் அந்த 'உகரம்' ஓடிவிடும் என்று நன்னூலார் கருதியுள்ளார். நன்னூலரின் கருத்தானது தொல்காப்பிய விதியை (நூற் 104 & நூற் 105) அடியோற்றிக் குறிக்கப்பட்ட விதியாகும்.

7.3 உயிர்த்தொடர் நெடிற்றொடர்களின் புணர்ச்சி விதி

ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி (தொல். 411)

எனும் நூற்பாவின் வழி தொல்காப்பியர் உயிர்த்தொடர் நெடிற்றொடர்களின் புணர்ச்சி விதியை விளக்கியுள்ளார். ஈரெழுத்தாலாகிய நெடிற்றொடர்க் குற்றியலுகரமும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் வேற்றுமைப் புணர்ச்சியில், இனஒற்று ஒன்று மிகும். அதனுடன் எதிரே, வரும் வல்லெழுத்து மிகும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. எடுத்துக்காட்டு:

நாடு + பற்று > நாட்டுப்பற்று
பயறு + குழம்பு > பயற்றுக்குழம்பு

இவ்விதியானது நேமிநாதத்திலும் நன்னூலிலும் குறிக்கப்பட்டுள்ளது.

'..கூறியவல்
லொற்றுமுன் றோன்றுதலும் உண்டாகு - முற்றோன்று (நேமி. 14)

என்ற வெண்பாவில், முன் ஒற்று இல்லாத குற்றுகரத்தின் பின் யாதானும் ஒரு சொல் வந்தால், அவ்வுகரம் ஏறின ஒற்றின் முன்பே, தனக்குப் பொருந்திய வல்லொற்றுத் தோன்றி முடிதலும் உண்டு என்று நேமிநாதர் கூறிகிறார். இதற்கு எடுத்துக்காட்டாக:

காடு + வழி = காட்டுவழி
பகடு + நிலை = பகட்டுநிலை
கவறு + பால் = கவற்றுப்பால்

என்று நேமிநாதர் விளக்கம் காட்டியுள்ளார். நன்னூலில் இவ்விதிக்கு,

நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்
டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே (நன். 183)

என்று குறிக்கப்பட்டுள்ளது. நெடிற்றொடர்க் குற்றியலுகரமும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் வல்லெழுத்து எதிரே வந்தால், ட, ற ஒற்று இடையில் வருபவை மட்டும் வேற்றுமையில் பெரும்பாலும் இரட்டிக்கும். சிறுபான்மை இரட்டிக்காதும் வரும். அல்வழியிலும் சிலபோது இவ்வாறு வரும் என்று நன்னூல் கூறுகிறது. காட்டு:

வயிறு + பசி = வயிற்றுப்பசி

தொடர்ந்து, நேமிநாத உரையாசிரியர் 'லொற்றுமுன் றோன்றுதலும் உண்டாகு - முற்றோன்று (நேமி. 14)' எனும் செய்யுளுக்கு,

'அவை தாம் வினைச்சொல் வந்தவிடத்து யாறு வந்தது, யாடு வந்தது, பகடு வந்தது, கவறு வந்தது என இயல்பாய் முடிந்தவாறு கண்டுகொள்க'. 'லொற்றுமுன் றோன்றுதலும் உண்டாகும்' என்ற உம்மையாற் பெயர்ச்சொல் வருவித்தாலும் வல்லொற்றுத் தோன்றாச் சொற்களும் உள'

என்று மேலும் விரித்துக் விளக்கம் கூறுகிறார். காட்டுகள்:

காசு + பொது = காசு பொதி

கவறு + வந்தது = கவறு வந்தது

நேமிநாதர் கூறும் இவ்விதி உண்மையில் தொல்காப்பிய விதியை அடியொற்றி எழுந்தவையாகும். தொல்காப்பியர் இதனை,

‘ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே’ (தொல். 412)
‘அல்லது கிளப்பின் எல்லா மொழியும்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும்’ (தொல். 425)
‘வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே’ (தொல். 426)

என்ற நூற்பாக்களின் வழி, அல்வழியில் வன்றொடர் தவிர (தொல். 426) பிற எல்லா ஈற்றுக் குற்றுகரத்திலும் இயல்பாகப் புணரும் என்று விளக்கியுள்ளார். எடுத்துக்காட்டு:

நாகு + கால் = நாகு கால் (தொல். 412)
நாகு + கடிது = நாகு கடிது (தொல். 425)

நேமிநாதருக்குப் பிறகு இந்த விதி நன்னூலிலும் தொடர்ந்து வந்துள்ளது. நன்னூலார் இவ்விதிக்கு,

வன்தொடர் அல்லன முன்மிகா அல்வழி (நன். 181)

என்று குறித்துள்ளார். எடுத்துக்காட்டு:

நாடு + சிறந்தது > நாடு சிறந்தது
ஆடு + கத்துகிறது > ஆடு கத்துகிறது
பழகு + தமிழ் > பழகு தமிழ்
கிணறு + சிறிது > கிணறு சிறிது

7.4 மென்றொடர்களின் புணர்ச்சி விதி

வன்தொடர் மொழியும் மென்தொடர் மொழியும்
வந்த வல்லெழுத்து ஒற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற்று இறுதி கிளையொற் றாகும் (தொல். 414)

எனும் நூற்பாவில், வன்றொடர்க் குற்றுகரமும் மென்றொடர்க் குற்றுகரமும், வருமொழியாய் வந்த வல்லொற்று மிகும். மென்றொடர்க் குற்றுகரத்தில் இடையிலுள்ள மெல்லொற்று அனைத்தும் இறுதியிலுள்ள வல்லொற்றாகவோ அல்லது கிளை வல்லொற்றாகவோ மாறும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. இளம்பூரணர் தனது உரையில்,

‘மென்றொடர்க் குற்றுகரத்தின் முன் வல்லினம் வரின் அம்மெலெழுத்து வல்லெழுத்தாகத் திரியும். மென்றொடர்க் குற்றுகரத்தின் முன் வல்லினம் வரின், அம்மெல்லெழுத்துத் தமக்கு இனமான வல்லொற்றாகத் திரியும். ணகரத்திற்கு டகரமும், னகரத்திற்கு றகரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்க இனவெழுத்தாக இருந்தலின் இவை கிளை வல்லொற்றாகத் திரிந்தமைக்குக் காட்டு ஆயிற்று.’

என்று கூறியுள்ளார். அதற்குச் சில எடுத்துக்காட்டுகளாக,

கொக்கு + கால் = கொக்குக் கால் (வன்றொடரில் வந்த வல்லொற்று மிக்கது)
குரங்கு + கால் = குரக்குக் கால் (மெல்லொற்று வல்லொற்றாய்த் திரிந்தது)
எண்கு + குட்டி = எட்டுக் குட்டி (இன ஒற்றாக மாறியது)

கொடுத்து விளக்கியுள்ளார். நேமிநாதத்திலும் இவ்விதி குறிக்கப்பட்டுள்ளன.

‘மென்மையதன் வல்லெழுத்தாம் வேற்கண்ணாய்..’ (நேமி. 14)

என்று நேமிநாதம் கூறுகிறது. குற்றியலுகரத்தின் முன் ஒரு மெல்லொற்று நின்றால் அது வல்லொற்றாய் முடியவும் பெறும் என்று நேமிநாதம் தொல்காப்பிய விதியை (தொல். 414) அடியொற்றி கூறுகிறது. காட்டு:

நஞ்சு + குழல் = நச்சுக்குழல்
கழஞ்சு + கோல் = கழச்சுக்கோல்
மருந்து + பை = மருத்துப்பை

போன்ற எடுத்துக்காட்டுகளுடன் நேமிநாத உரையாசிரியர் விளக்கியுள்ளார். நன்னூலிலும் இந்தத் தொல்காப்பிய விதிக்கு (தொல்.414) நிகராக

மென்தொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்இன வன்தொடர் ஆகா மன்னே (நன். 184)

என்ற நூற்பாவை நன்னூலார் குறித்துள்ளார். மென்றொடர்க் குற்றுகரம் வேற்றுமைத் தொடர் சிலவற்றில் வருமொழியுடன் புணரும்போது வன்றொடராக மாறா. ஆகவே, பலவற்றில் மாறும் என்பது பெறப்படும் என்று நன்னூல் கூறுகின்றது. ஆறுமுக நாவலர் தனது நன்னூல் காண்டிகையுரையில் இதற்குச் சில எடுத்துகாட்டுகளைக் கொடுத்துள்ளார். அவை,

சுரும்பு + நாண் = சுருப்புநாண்
கன்று + ஆ = கற்றா

என்பவையாகும். இளம்பூரணர் தமது தொல்காப்பிய எழுத்ததிகார உரையில்,

'இங்ஙனம் சில மென்றொடர்க்குற்றுகர ஈற்றுச் சொற்கள் வல்லினம் வரக்
கிளையொற்றாகத்திரியினும் எல்லாச் சொற்களும் இங்ஙனம் திரியவேண்டும் என்ற நியதில்லை.'

என்று உரைத்துள்ளார். காட்டு:

வண்டு + கால் = வண்டுக்கால்
பந்து + திரட்சி = பந்துத்திரட்சி

இவற்றை நோக்கிய நன்னூலார் 'மென்தொடர் மொழியுள் சிலவேற் றுமையில் தம்இன வன்தொடர் ஆகா மன்னே' (நன். 184) என்றார் என்பது நோக்கத்தக்கது. ஆக, நன்னூலிலும் இருக்கும் இந்த விதியும் தொல்காப்பிய விதியை அடியொற்றியே எழுத்தவையென உறுதியாயிற்று. மேலும், தொல்காப்பியம் முதல் நன்னூல் வரை தொடர்ந்து வந்த தொல்காப்பியக் குற்றியலுகரப் புணரியல் கோட்பாடுகள் அட்டவணை 2-இல் காட்டப்பட்டுள்ளன.

சார்பெழுத்து	கோட்பாடு/விதி	தொல்காப்பியம்	நேமிநாதம்	நன்னூல்
குற்றியலுகரம்	குற்றியலுகரம் உயிர்வருவழி குன்றும் விதி	நூற்பா. 104 & 105	சூத்திரம்.14	நூற்பா.164
	உயிர்த்தொடர் நெடிற்றொடர்களின் புணர்ச்சி விதி	நூற்பா. 411, 412, 425, 426	சூத்திரம்.14	நூற்பா. 181, 183
	மென்றொடர்ப் புணர்ச்சி விதி	நூற்பா. 414	சூத்திரம். 14	நூற்பா. 184

8.0 குற்றியலிகரம்

குற்றியலிகரம் என்பது, குறுமை + இயல் + இகரம் > குறு + இயல் + இகரம் > குற்று + இயல் + இகரம் = குற்றியலிகரம் என்று புணர்ந்து உருவான சொல். தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்கள் குற்றியலிகரத்தைச் சார்பெழுத்தாகவே கருதியுள்ளன. தொல்காப்பியக் குற்றியலிகரக் கோட்பாடு நேமிநாதம், நன்னூல் ஆகிய நூல்களிடைய காணப்பட்டுள்ளன. அவை குற்றியலிகரம் தோன்றும் முறை என்ற அடிப்படையில் இவ்வாய்வில் விளக்கப்பட்டுள்ளது.

8.1 குற்றியலிகரம் தோன்றும் முறை

யகரம் வருவழி இகரம் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்றாது (தொல். 410)

எனும் நூற்பாவில், யகர முதன்மொழி வரும்பொது நிலைமொழி குற்றுகரம் இகரமாகத் திரிந்து குறுகி ஒலிக்கும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. குற்றியலிகரம் தோன்றும் முறையை செ. சீனி நைனா முகம்மது,

'அடுத்த உயிர்வந்தால் மறைந்துவிடும் குற்றியலுகரம், அரையுயிரொலியான யகர ஒலி
வரும்போது, மறையாமல் யகர ஒலியின் பாதிப்பால் உகரச்சாயல் மாறி இகரச்சாயல் பெறுகிறது.

இந்த இகரச் சாயலால் அது குற்றியலிகரம் என்று குறிக்கப்பட்டாலும், அஃது ஒலிப்புச்சாயல் மாறிய குற்றியலுகரமே.'

என்று விளக்கியுள்ளார். இத்தொல்காப்பியக் குற்றியலிகரக் கோட்பாடு நேமிநாதத்திலும் நன்னூலிலும் தொடர்ந்து வந்துள்ளன. நேமிநாதத்தில்,

தொடர்நெடிற் கிழ்வன்மை மேலுகரம் யப்பின்
படைய வருமிகர மன்றி - மடநல்லாய்
மும்மையிடத் தையஞவுங் குன்றுமுன் னொற்றுண்
செம்மையுயிர் ஏறுஞ் செறிந்து (நேமி. 3)

எனும் வெண்பா அடிகளில், குற்றுகரத்தின்பின் யகரம் வந்துழி அக்குற்றுகரம் அழிந்து இகரமாய்க் குறுகும் என்க என்று நேமிநாதம் கூறுகிறது. நன்னூலார்

யகரம் வரக்குறள் உத்திரீ இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய (நன். 93)

என்று குறித்துள்ளார். யகரத்தை முதலிலேயுடைய சொல் வரக் குற்றியலுகரந் திரிந்து இகரமாகும் என்று நன்னூல் கூறுகின்றது. காட்டு:

நாகு + யாது = நாகியாது
எஃகு + யாது = எஃகியாது

ஆக, குற்றியலிகரம் குற்றியலுகரம் அடுத்துவரும் யகர ஒலியின் பாதிப்பால் திரிந்து இகரச்சாயலில் ஒலிக்கும் என்று தொல்காப்பியர் கூறிய விதியானது நேமிநாதம் முதல் நன்னூல் வரை தொடர்ந்து வந்துள்ளன என்று அறியவருகின்றது.

முடிவுரை

தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய இலக்கண நூல்களான நேமிநாதத்திலும் நன்னூலிலும் தொடர்ந்து வந்த தொல்காப்பியச் சார்பெழுத்துக் கோட்பாடுகளை இந்த ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது. அவற்றைத் தொல்காப்பியச் சார்பெழுத்துகளின் மாத்திரை அளபு, அவை தோன்றும் முறை, சார்பெழுத்துப் புணரியல் கோட்பாடுகள் போன்ற அடிப்படையில் இந்நான்கு இலக்கண நூல்களிடையே இருக்கும் ஒற்றுமையை இந்த ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது. இறுதியாக, தொல்காப்பியச் சார்பெழுத்துகளின் மீதும் பிற இலக்கண நூல்களில் இருக்கும் சார்பெழுத்துகளின் மீதும் இனி வருங்காலத்தில் அதிகளவிலான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை இவ்வாய்வில் பரிந்துரையாக வைக்கின்றது.

துணைநூற்பட்டியல்

1. அண்ணாமலை, மனோன்மணி தேவி. (2018). *சொற்புணர்ச்சி விதிகளும் தொல்காப்பிய மரபும்* (முதற் பதிப்பு). உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
2. அண்ணாமலை, மனோன்மணி தேவி. (2021). *இலக்கணச் சாரல்* (pp. 41-43). உமா பதிப்பகம்.
3. ஆறுமுக நாவலர்கள். (1994). *நன்னூல் காண்டிகையுரை எழுத்ததிகாரம்*. முல்லை நிலையம்.
4. இலக்குவனார்,சி. (2010). *பழந்தமிழ்*. பூம்புகார் பதிப்பகம்.
5. இளவரசு,சோம. (2014). *இலக்கண வரலாறு* (ஐந்தாம் பதிப்பு). மெய்யப்பன் பதிப்பகம்.
6. இன்னாசி,சூ. (2019). *எழுத்தியல்* (முதற் பதிப்பு). பாரி புத்தகப் பண்ணை.
7. சண்முகம்,செ. வை. (2013). *மொழியும் எழுத்தும்*. New Century Book House.
8. சண்முகம்,டாக்டர் செ.வை. (1980). *எழுத்திலக்கணக் கோட்பாடு* (முதற் பதிப்பு, pp. 106-137). அனைத்திந்திய மொழியியல் கழக வெளியீடு.
9. சீனி நைனா முகம்மது,செ. (2015). *நல்ல தமிழ் இலக்கணம்* (மூன்றாம் பதிப்பு). Percetakan Zafar Sdn. Bhd. (Original work published 2013)
10. சீனி நைனா முகம்மது,செ. (2007). *உங்கள் குரல் மார்ச்சு/ஏப்பிரல்* (pp. 18-21). Ungal Kural Enterprise.
11. சீனி நைனா முகம்மது,செ. (2014). *உங்கள் குரல் சனவரி* (pp. 14-19). Ungal Kural Enterprise.

12. சீனி நைனா முகம்மது.செ. (2015). *புதிய தமிழ்ப்புணர்ச்சி விதிகள்* (மூன்றாம் பதிப்பு). Percetakan Zafar Sdn. Bhd. (Original work published 2013)
13. சீனி நைனா முகம்மது,செ. (2015). *தொல்காப்பியக் கடலின் ஒரு துளி* (முதற் பதிப்பு, p. 77). Percetakan Zafar Sdn. Bhd.
14. சுப்பிரமணியன்,டாக்டர். ச. வே. (1977). *வீரசோழியம் ஒரு திறனாய்வு - மூலமும் கருத்தும்*. Krishna Press.
15. சுந்தரமூர்ந்தி,கு. (1979). *தொல்காப்பியம் இளம்பூரணர் உரை*. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
16. சுயம்பு, முனைவர் பெ. (2004). *இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
17. தமிழண்ணல். (2008). *தொல்காப்பியம்* (முதற் பதிப்பு). மீனாட்சி புத்தக நிலையம்.
18. தமிழண்ணல். (2010). *நன்னூல் சொல்லதிகாரம்*. தமிழ்மொழிப் பயிலகம்.
19. தமிழண்ணல். (2012). *நன்னூல் எழுத்ததிகாரம்* (முதற் பதிப்பு). செல்லப்பா பதிப்பகம்.
20. தாமோதரம் பிள்ளை, சி.வை. (2008). *வீரசோழியம்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
21. நடராசன்தி.சு. (2013). *புதிய தமிழ் இலக்கிய வரலாறு*. சாகித்திய அகாதெமி.
22. பொற்கோடாக்டர். (1989). *தமிழிலக்கணக் கோட்பாடு* (pp. 15-16). ஐந்திணைப் பதிப்பகம்.
23. முதலியார் கோவிந்தராசு. (1945). *குணவீர பண்டிதர் இயற்றிய நேமிநாதம்* (முதற் பதிப்பு). சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

தொ.மா.க.104

தொல்காப்பியச் சொல்லிலக்கணக் கோட்பாடுகள்

கவியருவி ச. குமரவேல்
ஓசூர் - 635 109. கிருட்டிணகிரி, தமிழ்நாடு, இந்தியா.
kumaravel.sambandam.neel@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

ஒரு மொழி என்பது அம்மொழி பேசும் மக்களின் சொத்து எனும் வாழ்வியல், நிலவியல், காதல், வீரம், சான்றாண்மை, ஐந்நிலம் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டது. மூதாதையர் பெற்ற கல்வியைத் தம் சந்ததியினர் தெரிந்து கொள்ள, பங்களிப்பாக தமது எண்ண ஓட்டங்களை கவிதை, கட்டுரை, சிறுகதை, காவிய காப்பியங்கள் பலவற்றைப் படைத்து, மனித சிந்தனைக்கு உரமூட்டியுள்ளனர். பல மூதறிஞர், சித்தர், ஞானியர், சைவக்குரவர், நாயன்மார், ஆழ்வார் அருளிய இலக்கிய இலக்கணங்கள் தமிழரின் வாழ்வியல் தத்துவங்களை நமக்கு நயம்பட விவரிக்கின்றன. பண்டை கால மனிதன், வாழ்வியல் தத்துவங்களை எழுத்து வடிவில் பாதுகாக்க எண்ணம் கொண்டு, நற்சிந்தனைதனை கவிதை, கட்டுரை, சிறு கதை, பழமொழி, காப்பிய காவியங்கள் மூலம் வெளிப்படுத்தத் துவங்கினான். இந்த வாக்கியத்திற்கு இதுதான் செயல்பாடு வினை, இந்த சொற்தொடரை இந்த இந்த மாத்திரைகளின் அளவோடு உச்சரிக்க வேண்டும் என முறைப்படுத்த அமையப் பெற்றவைகளே தமிழ் இலக்கியங்களாகும். ஒரு மொழியைப் பிழையில்லாமல் கற்கவும் எழுதவும் கட்டமைக்கும் விதிகளின் தொகுப்பு இலக்கணம் என்கிறார்.

தமிழ் மொழியின் அடித்தளம் : கல்வி-அறிவு தோன்றி மன்னராட்சி காலத்திற்கும் முன் துவங்கிய மனிதனின் வாழ்க்கைப் பயணத்தின் இடைநில்லா தேடலின் வெளிப்பாடாக பன்முக, வளர்ச்சியில் மிளிர்ந்து கொண்டு இருக்கின்றது அமுதெனும் தமிழ் மொழி.. அன்று தகவல் தொடர்பு ஊடகமாக இருந்த செய்கை மொழி, ஒலி, சித்திரம் வாயிலாகத் தெளிவு பெற்றது. நாகரிக வளர்ச்சி ஒலியை, மொழியின் அடித்தளமான, வரி வடிவ எழுத்தாக்கியது. எழுத்து சொல்லாகிப் பின் பொருளாகியது. ஒரு மொழி, அம்மொழி பேசுபவரின் வாழ்வியல், மானம், காதல், வீரம், ஐந்நிலம் ஆகியவற்றை மூலமாகக் கொண்டது.

கற்றல் : நம் முன்னோர் பெற்ற அனுபவக் கல்வியை, அவர் தம் சந்ததியினரும் பின்பற்ற, பாதுகாக்கும் முறைதனைக் கண்டறிந்தனர்.. இவ்விலக்கின் வெளிப்பாடே கல்வெட்டு, சிலை, ஓலைச்சுவடி, செப்புத்தகடு, சித்திரம், குகைச் சிற்பம், வழிபாட்டுத் த(ள)லம் அவற்றின் புணரமைப்பு, உபயோகக் கலங்களின் மேல் ஓவியம், எழுத்துகள் போன்றவை. மூதாதையர் தம் எண்ண ஓட்டத்தினை கவிதை, கட்டுரை, சிறுகதை, புராணம், காவிய காப்பியங்கள் வடிவில் செதுக்கி பல ஏடுகள் வாயிலாக, உரமூட்டி வளம் சேர்த்தனர்.

இலக்கண இலக்கியங்களின் தோற்றம் : அன்று முச்சங்கம் வளர்த்த-வளமாக்கிய முத்தமிழ், இன்று உலகச் செம்மொழிகளின் முதன்மை நிலையில் உள்ளது. இச்சிறப்பிற்கு வித்திட்டவர் தமிழ் மூதறிஞர், சைவக்குரவர், ஆழ்வார் போன்று எண்ணற்றோர் அருளிய இலக்கிய இலக்கண வலிமை எனக் கூறின், தமிழர் நாம் பெருமை கொள்ள - இறும்பூதடைய வேண்டும். அத்தகைய ஆன்றோர் பின்பற்றி, வளம் சேர்த்து வளர்த்த கலை, மொழிச் சிறப்பு, கலாச்சாரம், அக-புற ஒழுக்கம், ஆன்மிகம், சான்றாண்மை, வீரம், அறப்பண்பு, காதல், மானம் ஆகிய தத்துவங்கள் உலக செவ்விலக்கியங்களில் முதன்மையான தமிழுக்கு, சங்க இலக்கியம் ஒரு மகத்தான **மக்கள் காரணி** எனும் மகுடம் சூட்டியது.

தொல்காப்பிய நூல் சிறப்பு *:* தொல்+காப்பு+இயம் = தொல்காப்பியம். தொன்மையான மரபைக் காப்பது. *“.....வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி புலம் தொகுத்தோனே போக்கறு பனுவல்.....”.* (தொல். சிறப்பாயிரம்;ங-எ). உலக வழக்கு, செய்யுள் வழக்கு இரண்டையும் ஆராய்ந்து எழுத்து, சொல், பொருள் என்று முறைப்பட வகுத்து தமிழுக்கு பெருமை சேர்த்த, ‘ஐந்திரம்’-வடமொழி, குறுமுனி அகத்தியர் இலக்கணம் பயின்ற புலன்தொழுதோன் எனும் தொல்காப்பியர் ஆவார்..

இன்றுவரை, பெருங்கடற்கோள்களினால் மறைந்த-நசிந்த இலக்கண நூல்கள் உள்ளடக்கி, சுமார் இருபத்தி ஏழு தமிழ் இலக்கண நூல் தோன்றினாலும், அறிஞர் பலரால் மிகவும் பரவலாக போற்றப்படும் முழுமையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஒன்றே.

இலக்கியங்களின் ஒருங்கிணைப்பு இலக்கணம் : பண்டைய, கற்கால மனிதன், அவன் பெற்ற வாழ்க்கை அனுபவங்களை தமது சந்ததியினருக்கு வாய்மொழி வாயிலாக போதித்து வந்தான். நாகரிகம் மேம்பட வாழ்வியல் அறம், அவற்றின் பயன்களை எழுத்துருவில் முதன்மைப் படுத்தினான். அவ்வாறு வழிவழியாகத் தோன்றிய தமிழி, வட்டெழுத்து, தமிழ் எழுத்து வடிவில், பல இலக்கியங்கள் உருவாகின. இந்த வாக்கியத்திற்கு இதுதான் செயல்படு வினை, இந்த சொற்தொடரை, இந்த மாத்திரைகளின் அளவோடு தான் உச்சரிக்க வேண்டும் என முறைப்படுத்தி அழகுடன் அமையப் பெற்ற ஒரே உன்னத மொழி உலகில், தமிழ் மட்டுமே. “எழுத்தெனப் படுப வகரமுத னகர விறுவாய் அகர முதல் னகர இறுவாய் முப்பஃ தென்ப...(தொல்-ழக). ‘அகர’மாகிய முதல் எழுத்து தொடங்கி உயிர் எழுத்து பன்னிரண்டும், ‘னகர’மாகிய இறுவாயினையுடைய பதினெட்டு மெய் எழுத்தையும் கட்டமைப்பாகக் கொண்டவை தமிழ் எழுத்துகள். எழுத்துகளின் தனித்தனி உச்சரிப்பு, ‘மாத்திரை’ அளவு எனும் குறிப்பிட்ட கால அளவை வரையறுக்கிறார் தொல்காப்பியர். அதாவது, ஒரு மொழியை ஒழுங்காகக் கற்கவும் எழுதவும், அழகாகக் கட்டமைக்கும் விதிகளின் ஒருங்கிணைப்பு - தொகுப்பு இலக்கணம் என்கிறார். ‘எழுத்தும் சொல்லும் மொழிக்கு இலக்கணம் கூறுபவை’ என்பது சான்றோர் வாக்கு. சூத்திர யாப்பில் அமைந்த தொல்காப்பியம், நசூகழ-(1610) பாடல்களை உள்ளடக்கிய கருவூலம். ஓர்

எழுத்து முதல் பல எழுத்துக்களைக் கொண்டு சொல்லாக வடிக்கப்படும் வார்த்தைகள், மொழிக்கு சிறப்பு கூட்டும் விதமாக இலக்கணம் வகுக்கும். அவை எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு எனும் ஐந்து பிரிவு ஆகும்.

எழுத்து இலக்கணம் : எழுத்துக்களின் வகை, அவை ஒலிக்கும் கால அளவு-மாத்திரை, எழுத்துக்கள் தோன்றும் முறையுடன் சந்தி இலக்கணமும் இடம் பெற்றிருக்கும். தமிழ் நெடுங்கணக்கு எழுத்துகள் மொத்தம் உசஎ. உயிர்-கஉ, மெய்-உசஅ, ஆய்தம்-க, உயிர்மெய்-உகசஅ.

சொல் இலக்கணம் : சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுத்தும் ஓசை, அதிகாரம் என்பதாகும். இவை, முறையாக எட்டு வகைப்படும். திணை, பால், வழுவு, வேற்றுமை, தொகை, இடம், காலம், இடம் ஆராய்தல்(மரபு). சொல்லின் வகையாக பெயர், வினை, இடை, உரிச்சொல், தொகை வேற்றுமை என்ப.

பொருள் இலக்கணம் : தமிழ் இலக்கியங்களின் தமிழ் மொழிக்கே சிறப்பான, பாடு பொருளுக்கு எழுதப்பட்ட வழி முறைகள் கொண்டது.

அணி இலக்கணம் : செய்யுளில் காணப்படும் சொல், பொருளழகை வரையறுத்துக் கூறுவது அணி இலக்கணம்.

யாப்பு இலக்கணம் : செய்யுளின் இலக்கணம் என்றழைக்கப்படுவது உறுப்பியல், செய்யுளியல் என இருவகைப் படும். உறுப்பியலில் செய்யுள் உறுப்பின் இலக்கணமும் செய்யுளியலில் பா, பாவினம் ஆகிய இருவகைச் செய்யுளின் இலக்கணமும் விவரிக்கப்பட்டுள்ளது. செய்யுள், எழுதுவதற்குரிய யாத்தல்-கட்டுதல் எனும் பொருள் கொண்டது. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய உறுப்புகளை ஒரு சேரக்கட்டி அமைத்து ஒர் அழகிய பொருள் விளங்கக்கூடிய செய்யுளை உருவாக்க உதவுவது யாப்பிலக்கணம்.
தொல்காப்பிய ஆசிரியர் குறிப்பு : சுமார் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இவர், தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தவர். இவர் சமதக்கினி மாமுனிவர் மகனும், அகத்தியரின் பன்னிரு சித்தர்களுள் ஒருவரும் ஆவார். (புலவர் நச்சினார்க்கினியர்). *"ஆனாப் பெருமை அகத்தியன் என்னும் அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல் பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர் நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்"* . இவரின் இயற்பெயர் திருணதூமாக்கினியர் ஆகும்.

இலக்கண முத்துக்கள் : முச்சங்கம் வளர்த்த முத்தமிழில், இயற்றமிழை தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் அதிகாரமாக முறையே, சஅ இயல்களென்று உஎ இயல் படைத்துள்ளார்.

சொல்லதிகாரம் : இலக்கண மரபுடன் சொற்களை இணைத்து பொருள் தரும் பாங்கை வாக்கியமாக வழங்குவது. முதல் நான்கு கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை-மயங்கியல், விளிமரபு ஆகியன வாக்கிய அமைப்பை உணர்த்தும். வரிகளில் வரும் சொற்களைப் பாகுபடுத்தி விளக்குவது பெயரியல், வினையியல், இடையியல், உயிரியல் என்பன. மேலே கூறப்பட்ட எட்டு இயல்களுக்கு உட்படாத மிஞ்சிய செய்திகளைக் கூறுவது எச்சவியல்.

கிளவியாக்கம் : சஉ சூத்திரங்கள் உள்ளடக்கியது. கிளவி+ஆக்கம் = கிளவியாக்கம். கிளவி-சொல்.
கோட்பாடு : வழு களைந்து சொற்களை அமைப்பது. வழு-குற்றம்.

க) "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே யஃறிணை யென்மனா ரவரல பிறவே யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே". மக்கள் உணர்வையுடையவை உயர்திணை, உணர்வற்றவை அஃறிணை என்கிறார். இவை எட்டு வகை இலக்கணங்களில் உணரப்படும். இருதிணை (உயர்திணை, அஃறிணை), ஐந்து பால் (ஆண், பெண், பலர், ஒன்று, பலவின்), எழு வழு (திணை, பால், இடம், காலம், செப்பு, வினா, மரபு), எட்டு வேற்றுமை (பெயர், ஐ, ஆள், கு, இன், அது, கண், விளி), ஆறு ஒட்டாவன-தொகை (வேற்றுமை, உவமை, வினை, பண்பு, உம்மை, அன்மொழி), மூன்று இடம்

(தன்மை, முன்னிலை, படர்க்கை), மூன்று காலம் (கடந்த, நிகழுகின்ற, எதிர்), ஈரிடம் (வழக்கு, செய்யுள்).

உ) "ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற் பல்லோ ரறியுஞ் சொல்- லொடு சிவணி யம்முப் பாற்சொ லுயர்திணை யவ்வே". ஆண், பெண், பலர் பால் அறிவிக்கும் சொல் உயர் திணையுடையன. இருபாலருக்கும் ஒழுக்கமுறை வரையறுக்கப் பட்டுள்ளது. ஆடூஉ-ஆண், மகடூஉ- பெண்.

ஙு) "ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று ஆயிரு பாற்சொல் லஃறிணை யவ்வே". அஃறிணை என்பது ஒன்று, பல என இரு- பாலையும் உணர்த்தும் சொல் நுதலிற்று.

சு) "பெண்மை சுட்டிய யுயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும் தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும் இவ்வென வறியுமந் தந்தமக் கிலவே உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்". பாலுள், திணையுள் அடங்கா சொல்லை பாலுள், திணையுள் அடக்கி, ஒருவன் சொல்லும் பெயர் நிலையை ஆகுபெயரால் பொருளாக்கி, முப்பாலினைப் புலப்படுத்தும் தமக்கு ஈறாக இசைக்கும். பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார்.

கo) "இருதிணை மருங்கின் ஐம்பா லறிய ஈற்றுநின் றிசைக்கும் பதினோரெழுத்தும் தோற்றத் தாமே வினையொடு வருமே". இருதிணையிடத்து ஐம்பாலரிய, பதினோரெழுத்தும் (னஃகா, ளஃகா, ரஃகா, குற்றுகரம், அவ்வும் ஆவும் என ஆரெழுத்தான்) அடங்கும்.

கக) "வினையிற் றோன்றும் பாலறி கிளவியும் பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடா தம்மர பினவே". வழுக்காகுமிடத்து வழுவற்றும் 'வழிஇ' யமைக என்றும், காக்குமிடம். பொருள், வினை மரபினால் அறியப்படும் திணை, மயக்கத்தின் பால் நுதலும். மயக்கமாகிய திணை, பால், செப்பு, வினா, இட, கால, மரபு ஆகிய ஏழு வழுவினால் உணரப்படும். "ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி ஆண்மை யறிசொற் காகிட னின்றே". எய்தியது விலக்கியது என்பர். ஆண், பெண் ஆகிய இரு பாலரையும் ஈற்றெழுத்தால் பொருள் விளக்கும். 'ஆகிடனின்றே' என்பதனால் சிறுபான்மை, 'பேடி வந்தான்' என ஆண்பாலைக் குறிக்கும்.

உஅ) "செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும் நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந் தன்மை, முன்னிலை, படர்க்கை யென்னும் அம்மூ விடத்து முரிய வென்ப". தொழிற் சொற்களான வரவு, செலவு, தரவு, கொடை ஆகிய நான்கும் தன்மை, முன்னிலை, படர்க்கை எனும் மூவிடத்தும் உரிய. அவற்றுள் தருசொல், வருசொல் ஆயிருகிளவியும் தன்மை, முன்னிலையில் வரும்.

சூஉ) "கண்ணுந் தோளு முலையும் பிறவும்..... தம்வினைக் கியலு- மெழுத்தலங் கடையே". திணை வழுக்காத்தலைக் கூறுகிறது. பன்மைப் பொருட் சொல்லை ஒருமையிலும், கண், தோள், முலை போன்ற பன்மைப் பாலுக்குரியவைகளை ஒருமையிலும் நவிலலாம்.

வேற்றுமையியல் : கஎ சூத்திரங்கள் உள்ளடக்கியது. **கோட்பாடு :** செயப்படு பொருளை வேறுபடுத்தி உணர்த்துவது.

சூஙு) "வேற்றுமை தாமே ஏழென மொழிப". வேற்றுமை செய்யும் ஐ, ஆல், கு. இல். அது. கண், இல்லை(உ) என ஏழு வேற்றுமை உருபு. சூசு) "விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே". ஏற்றும் ஏலாமலும் பெயரை விளி கொள்வது எட்டாவதாக நவில்கிறது.

சூரு) "அவைதாம், பெயர் ஐ, ஒடு, கு, இன், அது, கண், விளி என்னும் ஈற்ற". வேற்றுமைகள் ஏட்டின் பெயரினையும் விளக்குவது.

சுஎ) “பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல் ..... அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே”. எழுவாய் வேற்றுமை அத்துணை அறுவகைப் பயனிலையை ஏற்கும். ‘ஆ உண்டு, ஆ செல்க, ஆ பல’.

சுஅ) “பெயரின் ஆகிய தொகையுமா ருளவே அவ்வும் உரிய அப்பா லான”. அறுவகை தொகைச் சொல்லும் எழுவாய் வேற்றுமைப் பயனிலைப்பாடு தவறாது வரும். ‘யானைக் கோடு உண்டு’.

சுசூ) “எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி அவ்வியல் நிலையில் செவ்வியதேன்ப”. மூன்றிடத்துப் பெயரும் பயனிலைப்பட திரியாமை கொண்டது. ‘கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா’.

எஉ) “இரண்டா குவதே ஐயெனப் பெயரிய வேற்றுமைக் ..... என்ன கிளவியும் அதன்பால என்மனார்”. வினை வினைக்குறிப்பினைக் கொண்டு இரண்டாம் வேற்றுமைப் பொருளை இடைச்சொல் ஈண்டு உணர்த்துவது. ‘நெல்லைத் தொகுக்கும்’. நெல்+ஐ+தொகுக்கும்.

எஊ) “மூன்றா குவதே ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்.....அன்ன பிறவும் அதன்பால என்மனார்”. வினை முதலும் கருவியும் இரண்டையும் தனக்குப் பொருளாக உடையது. ‘தச்சன் செய்த சிறுமா வையம்’. (குறுந்-சுஎ) - இது தச்சனால் செய்யப்பட்டது.

எசு) “நான்கா குவதே குவெனப் பெயரிய ..... அப்பொருட் கிளவியு மதன்பால என்மனார்”. ‘கு’ பெயருடைய வேற்றுமைக் கிளவி ஈவதொரு பொருளை ஏற்று நிற்கும். ‘கைக்குயாப் புடையது கடகம்’ - ஏற்கும் பொருளை வியந்து கூறுவது.

எரு) “ஐந்தா குவதே இன்னெனப் பெயரிய .....பன்மை சிறுமை பற்று விடுதலென்று.....”. ‘இன்’ என்னும் பெயருடைய வேற்றுமைக் கிளவி, பொருளின் தன்மையினைப் பொறுத்து வரும். ‘முயற்சியிற் பிறத்-தலின் ஒலி நிலையாது’, கருவூரின் கிழக்கு. ‘இதனிற் பெரிது இது’.

எசு) “ஆறா குவதே அதுவெனப் ..... ஒருவழி யுறுப்பிற் குழூஉவின் என்றா .....திரிந்து வேறுபடூஉம் பிறவுமன்ன...’. ‘அது’ தன்னொடு தொடர்ந்தும், வேறுபொருளையும் இதனது இது என்று சொல்லுதல். ‘யானையது கோடு’. ‘எள்ளினது சாந்து’.

எஎ) “ஏழா குவதே கண்எனப் பெயரிய.....வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்.....முன்இடை கடைதலை வலம்இடம் எனாஅ...”. ‘கண்’ எனும் பெயருடைய வேற்றுமைச் சொல் வினை செய்யும் இடம் (தேவகை-திசை), நிலம், காலம் ஆகிய மூன்றனுள்ளும் நவிலும். ‘வடவேங்கிடம் தென்குமரி’ - வடக்கண் வேங்கடம், தெற்கண் குமரி’.

வேற்றுமை மயங்கியல் : நூரு சூத்திரங்கள் கொண்டது. **கோட்பாடு :** வேற்றுமையுருபுகள் தம்முள் மயங்கி பொருள் வேறுபாடு கொள்ளுதல் உணர்த்துவது.

அ೦) “கரும மல்லாச் சார்பென் கிளவிக் குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை”. ‘உ’ஆம் வேற்றுமை ‘எ’ஆம் வேற்றுமை உருபுடன் மயங்குமாறு உணர்த்துதல். ‘அரசரைச் சார்ந்தான் என்பது அரசர்கண் சார்ந்தான்’ என்ப.

அக) “சினைநிலைக் கிளவிக் கையும் கண்ணும் வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர்”. பொருளின் உறுப்பைக் குறிக்கும் சினைப்பெயர் இரண்டாம், ஏழாம் வேற்றுமையிரண்டும் ஒத்துப் போகும். ‘கண்ணைக் குத்தினார், கண்ணுள் குத்தினார்’.

அஙு) “முதற்சினைக் கிளவிக் கதுவென் வேற்றுமை முதற்கண் வரினே சினைக்கை வருமே”. முதல் பொருள் ஆறாவதாக வருமெனில், சினைப் பொருள் இரண்டாவதாக வரும். ‘யானையது கோட்டைக் குறைத்தான்’.

அரு) “முதலும் சினையும் பொருள்வேறு படாஅ நுவலுங் காலைச் சொற்குறிப் பினவே”. சினைப் பொருளே முதற்பொருளாகும். ‘கோட்டது நுனியைக் குறைத்தான், கோட்டை நுனிக்கண் குறைத்தான், கோட்டை நுனியைக் குறைத்தான்’.

சஙo) “அதுவென் வேற்றுமை உயதினைத் தொகைவயின் அதுவென் உருபுகெடக் குகரம் வருமே”. உயர்திணையில் ஆறாம் வேற்றுமை உருபு-‘அது’, தொகை நிலையாய் விவரிக்கும் பொழுது உருபு கெட்டு, நான்காம் வேற்றுமை உருபு ‘கு’ வரும். இராமனது தம்பி எனாமல், இராமனுக்குத் தம்பி என்று சொல்ல வேண்டும்.

கoo) “பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும் நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப”. ஆறாம் வேற்றுமை உருபு, தன்னைத் தவிர்த்து, மற்ற உருபுகளை ஏற்பது. ‘’நிலத்தைக் கடந்தான்’ என்பது, வேற்றுமை உருபு தொக்கி, நிலங்கடந்தான் என வரும்.

கoக) “ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின் மெய்யுறு தொகாஅ இறுதி யான”. ‘உ’ஆம், ‘எ’ஆம் வேற்றுமை உருபு, இறுதிக்கண் தொக்கி நிற்காது. ‘அறம் கறக்கும்’ - கறக்கும் அறமென இறுதிக்கண் தொகாமை.

கoஎ) “ஏனை யுருபும் அன்ன மரபின மானம் இலவே சொல்முறை யான”. ஏனைய உருபுகளும் மயங்கி வருவது குற்றமல்ல. சிலம்பை ஆய்ந்தான், சிலம்பினுள் மூழ்கினான், சிலம்பால் ஆய்ந்தான் என்க.

கoஅ) “வினையே செய்வது செயற்படு பொருளே.....அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ ஆயெட் டென்ப தொழில்முத னிலையே”. வினை (படித்தான்), வினைமுதல் (மாணாக்கன்), செயப்படு பொருள் (நூல்), நிலம் (பள்ளிக்கூடம்), காலம் (சில ஆண்டுகள்), கருவியுடன் (எழுதுகோல்), இன்னதற்கு (பட்டம் பெற), இதுபயன் (அறிவு வளர்த்தல்) ஆகிய தொழிலின் காரணங்கள் எட்டு ஆகும்.

ககo) “முதலிற் கூறும் சினையறி கிளவியும் சினையிற் கூறு முதலறி கிளவியும் ..... வினைமுதல் உரைக்குங் கிளவியொடு தொகைஇ அனைமர பினவே ஆகுபெயர்க் கிளவி”. ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய பொருளுக்கு தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் ஆகும். முதல், சினை,பொருளின் பெயர் நிலத்தின் மேல், பண்புப் பெயர், காரணப் பெயர், அன்மொழிப் பொருளின் மேல் நில்லாத இருபெயரொட்டும், அதனைச் செய்தான் எனும் சொல்லும் ஆறும் தொக்கி நிற்கும். “பலா இனித்தது, பசுமைப் புரட்சி”.

ககஉ) “வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்”. ஆகுபெயர்க்கு ஆவதொரு வித்தியாசம் புரிந்து கொள்ள வேண்டும். ‘காஞ்சிபுரம் உடுத்தாள்’ என்பது காஞ்சி பட்டுப்புடவைக்கு ஆகி வந்தது.

விளிமரபு : ஙஎ சூத்திரங்கள் ஏற்றது.

கோட்பாடு : சொற்கள், அழைப்பினை ஏற்கும் முறையறிதல்.

ககரு) “விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு தெளியத் தோன்றும் இயற்கைய என்ப”. விளி என்பது தம்மை ஏற்கும் பெயரொடு விளங்குமாறு யாப்புறத் தோன்றும் தன்மையான. ஈறு திரிதல், ஈற்றயல் நீடல், பிறிது வந்தடைதல், இயல்பாதல் என்று நான்கு வகையாம்.

ககஎ) “அவைதாம் இ உ ஐ ஓ என்னு மிறுதி அப்பால் நான்கே உயர்திணை மருங்கின் மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே”. உயிரெழுத்தினுள் உயர்திணைப் பெயர்க்கு விளி ஏற்கும் எழுத்துகள் இ உ ஐ ஓ. ‘செங்கால் நாரை’ என்பது ‘செங்கால் நாராய்’ என வரும்.

கககo) “ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்”. ஓகார, உகர ஈறுகள் ஏகாரமொடு சேர்ந்து விளி ஏற்கும். வேந்து-வேந்தே, கோ - கோவே.

கஉங) “முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி ஆவொடு வருதற் குரியவும் உளவே”. ‘ஐ’, ‘ஆய், ஆகாமல் ‘ஆ’ வுடன் பொருந்தி வரும். ‘அன்னை’ என்பது ‘அன்னா’ எனக் கூறலாம்.

கஙஉ) “அளபெடைப் பெயரே அளபெடை இயல”. னகார ஈறு அளபெடை, இகர இறுதியாக அளபெடை கொண்டு விளி ஏற்கும். மகன்-மகனே.

கஙச) “தானென் பெயரும் சுட்டுமுதற் பெயரும் யானென் பெயரும் வினாவின் பெயரும் அன்றி அனைத்தும் விழிகோள் இலவே”. தான் (பெயர்), அவன், இவன் (சுட்டு), உவன், யான், யாவன் (வினா) எனும் பெயர்கள் விளி ஏற்கா.

கசஎ) “கிளந்த இறுதி அஃறிணை விரவுப்பெயர் விளம்பிய நெறிய விளிக்குங் காலை”. விளி ஏற்கும் உயிரீறு, புள்ளியீறு (இ, உ, ஐ, ஒ, ன, ர, ல, ள,) இறுதியாக உடைய அஃறிணை பொதுப் பெயராகும் பொழுது, மேலே நவின்ற, அளபெடைப் பெயர் போல் விளி ஏற்கும்.

கசஅ) “புள்ளியும் உயிரும் இறுதி யாகிய அஃறிணை மருங்கின்..... தெளிநிலை உடைய ஏகாரம் வரலே”. மெய்யீறு, உயிரீறு பெற்ற அஃறிணைப் பெயர்கள் விளி ஏற்கும் பொழுது, ஏகாரம் பெற்றே வரும். மரம் - மரமே, அணில் - அணிலே. ‘வருந்தினை வாழியென் நெஞ்சம்’.

கருக) “தநநு எயென அவைமுத லாகித் தன்மை குறித்த னளர- வென் இறுதியும் அன்ன பிறவும் பெயர்நிலை வரினே இன்மை வேண்டும் விளியொடு கொளலே”. தநநு ஆகிய உயிர்மெய், எ எனும் உயிர் எழுத்து முதலாக உடைய ‘னரள’ ஈற்றுச் சொற்கள் போன்ற பிறவும் விளியோடு பொருந்தாது. தமன்-தமள்-தமர், நுமன்-நுமள்-நுமர்.

பெயரியல் : சஙக சூத்திரங்கள் உள்ளடக்கியது. **கோட்பாடு :** பெயர்ச் சொல்லின் இலக்கணம் விளக்குதல்.

கருஉ) “எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”. பெயர், வினை, இடை, உரி ஆகிய சொல்லும் பெயரிரைக் குறிக்கும். கருங) “பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லி னாகும் என்மனார் புலவர்”. தன்னின் வேறாகிய பொருள் தெரியப் படுதலும், பொருள் அறியாமல் பொருள் தன்னை அறியப்படுதலும் ஆகிய இரண்டும் சொல்லாகும். சான்றோர்-பண்புடையோர் என்பது பொருண்மை தெரிதல். சான்றோர்-பலர்பால் உயர்திணை சொன்மை விளக்குவது.

கருசஅ) “அவ்வழி, அவனிவன் உவனென வரூஉம் பெயரும் அவளிவள் உவளென .....அவரிவர்.....யான்யாம்..... .....யாவன் ....ஆவயின் மூன்றோ டப்பதி னைந்தும் பாலறி வந்த உயர்திணைப் பெயரே”. அவன், இவன், உவன், அவள் வரிசையில் கூறப்படும் பதினைந்து சுட்டுப்பெயர்களும், யான், யாம், நாம் எனும் தன்மைப் பெயர்களும், யாவன், யாவள், யாவர் எனும் மூன்று வினாப் பெயர்களும் ஆண், பெண், பலர் ஆகிய மூன்று பாலிலும் உயர்திணைப் பெயர்களாம்.

கசஙக) “எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும் பெண்மை அடுத்த மகனென் கிளவியும் அன்ன இயல என்மனார் புலவர்”. எல்லாரும்-படர்க்கை, எல்லீரும்-முன்னிலை, பெண்மகன் ஆகிய பெயர்ச் சொல்லும் தமது பாலினைக் கூறும் உயர்திணைப் பெயர்களாகும். பெதும்பை-விளையாட்டு-மங்கைப் பருவத்தை எட்டவிருக்கும் பெண்ணை, ‘பெண்மகன்’ என அழைப்பது பண்டைக் காலம் தொடங்கி இன்றும் வழக்கத்தில் உள்ளது. ‘நாணுவரை யிறந்து தன்மையனாகிப் புறத்துப் போய் விளையாடும் பெண்மகளைப் பெண்மகன்...’. (சேனவராயர்).

கசஙச) “அதுஇது உதுவென வரூஉம் பெயரும்.....அவை முதலாகிய ஆய்தப் பெயரும்....மூன்றோ டப்பதி னைந்தும் பாலறி வந்த அஃறிணைப் பெயரே”. அது, இது, உது - சுட்டு; அஃது, இஃது, உஃது

- வினா; அவை, இவை, உவை - பெயர்; அவ், இவ், உவ் - வகர ஈற்று; யாது, யா, யாவை - வினா, அப்பதினைந்து பால் விளங்க வரும் அஃறிணைப் பெயராம்.

கசுசு) "கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே கொள்வழி உடைய பலஅறி சொற்கே ". 'கள்' எனும் ஈற்று-விகுதியுடன் சேரும் அஃறிணை இயற்பெயர்கள் (ஒருமைக்கும் பன்மைக்கும் பொது) பலவின்பால் கூறும். குதிரை, தெங்கு, மலை, கடல்.

கசுசஉ) "இருதிணைச் சொற்கு மோரன்ன உரிமையின் திரிபு வேறு படூஉம் எல்லாப் பெயரும் .....தத்தம் மரபின் வினையோ டல்லது பால்தெரி பிலவே". இருதிணைக் கொள்ளும் விரவுப் பெயர், உயர்திணைக்கண் அப்பெயராகவும், அஃறிணைக்கண் அப்பெயராகவும் திரியும் பொதுப்பெயர், தத்தம் மரபின் வினையுடன் பொருந்தி வரும். சாத்தி வந்தாள் - உயர்திணை; சாத்தி வந்தது - வினையால் அஃறிணை.

கஎசு) "பெண்மை முறைப்பெயர் ஆண்மைமுறைப் பெயரென்று ஆயிரண் டென்ப முறைப்பெயர் நிலையே". முறைப்பெயர் இரண்டு. - ஆண்மை, பெண்மை. தாய் பால் கொடுத்தாள், தந்தை அழைத்தது. கஅசஉ) "தன்மை சுட்டின் பன்மை கேட்கும்". ஒருவர் எனும் சொல் ஒருமைப் பெயராக சுட்டினாலும் பன்மைச் சொல்லாக உணர்த்தும். ஒருவர் வந்தார் - ஒருவர் அவர். இது பால் பற்றிய மரபு வழுவமைதி.

வினையியல் : சுசஉ சூத்திரங்கள் தன்னகத்தே கொண்டது. **கோட்பாடு :** வினைச் சொல்லின் இலக்கணம் உணர்த்துதல்.

கசஉரு) "வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங் காலைக் காலமொடு தோன்றும்". வினையென்பது வேற்றுமை உருபினை ஏற்காமல் ஆராயுமிடத்து காலத்தைக் காட்டி நிற்பதாகும். உண்டான், படித்தான் - வேற்றுமை கொள்ளாமல் காலமொடு தோன்றியது. காலமென்பது கடந்தது, நிகழ்வு, எதிர் ஆகிய மூன்று காலங்களைக் குறிக்கும். உண்டான்(க), உண்கின்றான்(நி), உண்பான்(எ)

கசஉஅ) "குறிப்பினும் வினையினும் நெறிபடத் தோன்றிக் காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம் உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும் ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும் அமமூ வுருபின தோன்ற லாறே". வினைச் சொற்கள் உயர்திணை, அஃறிணை, இருதிணைக்கும் ஒத்து குறிப்பாக, தெரிநிலையாக, முறையாக காலத்தோடு வரும். செய்தான், செய்தது, கரியன்.

உயர்திணை வினை:

உகக) "பன்மையும் ஒருமையும் பாலறி வந்த அன்ன மரபின் குறிப்பொடு வரூஉங் காலக் கிளவி உயர்திணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே". பன்மைப் பாலும் ஒருமைப் பாலும் ஆகிய ஆண் பெண் என்று வேறுபாடு தோன்ற வந்த வினைக் குறிப்புச் சொற்களெல்லாம் இருபத்து மூன்று சொற்கு ஈறாய எழுத்துக்களிலுள்ளனவே தமக்கும் ஈறாவன பிறிதல்லை. 'அ' எண்ணிக்கை ஈறுகளில் முடிவுறும் தன்மைப் பன்மை வினைச் சொல் - யாம் வந்தனம் (அம்), ஆம் (..வந்தாம்), எம்(வந்தனெம்), ஏம்(..வந்தேம்), கும்(..உண்கும்), டும் (..உண்டும்), தும் (..வருதும்), றும் (சேறும்). எ எண்ணிக்கை ஈறுகளில் முடிவுறும் தன்மை ஒருமை வினைச் சொல் - என் (யான் வந்தனென்), ஏன் (..வந்தேன்), அல் (..வருவல்), கு (..உண்கு, டு (..உண்டு), து (வாருது), று (..சேறு). சு எண்ணிக்கை ஈறு கொள்ளும் படர்க்கை (ஒருவர்)- அன் (அவன் வந்தனன்), ஆன் (..வந்தான்), அள் (அவள் வந்தனள்), ஆள் (..வந்தாள்). சு எண்ணிக்கை ஈறு கொள்ளும் படர்க்கை (பலர்) - அர் (உண்டனர்), ஆர் (உண்டனார்), ப (உன்ப), மார் (ஆர்த்தார் கொண்மார் வந்தார்). 'மார்' உருபு ஒருமையினையும் பன்மையினையும் பால் உணர்த்திக்கொண்டு உயர்திணையில் வரும்.

அஃறிணை வினை :

உகசஉ) ".....பன்மையும் ஒருமையும் பாலறி வந்த அன்ன மரபின் குறிப்பொடு வரூஉங் காலக் கிளவி அஃறிணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே". அஃறிணைப் பன்மை ஒருமை என்ற பலவின்பால் ஒன்றன்பால் அறியவரும் குறிப்பு வினை ஈறுகள் முன்பு கூறியவாறு அ, ஆ, வ (படர்க்கை-பன்மை), து, று, டு (படர்க்கை-ஒருமை) உள்ளடக்கி பண்புச்சொல் (இன்று-கோடின்று, இல-செவியில, உடைய-கோடுடைய, அன்று-நாயன்று, உடைத்து-செவியுடைத்து, அல்ல-உழுந்தல்ல), சினை முதற்கிளவி (பண்பு கொள்-கரியது, உளவென்-பயறு), (பண்பினாகிய சினை முதற்கிளவி-குறுங்கோட்டது) ஒப்புக் கிளவி-பொன்னன்னது ஆகிய பத்துப் பொருண்மையின்கண் அஃறிணை வினைக்குறிப்பு பிறக்கும். ஒருமை, பன்மைப் பால் தோன்றும் இலக்கண வினைக் குறிப்பு அஃறிணை வினைச் சொற்கு ஈறாய் நின்று பாலுணர்த்தும். 'பிறிதில'.

விரவு வினை :

உகஎ) "`முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி இன்மை செப்பல் வேறென் கிளவி செய்ம்மன செய்யுஞ் செய்த என்னும் அம்முறை நின்ற ஆயெண் கிளவியும் பரிபுவேறு படூஉஞ் செய்திய வாகி இருதினைச் சொற்க்குமோ ரன்ன உரிமைய". முன்னிலை வினைமுற்று, வியங்கோள், வினையெச்சம், இன்மை செப்பல், வேறு, செய்ம்மன, செய்யும், செய்த ஆகிய எட்டு வினை வடிவங்- களும் இருதிணைகளுக்கும் உரியன. இன்மை செப்பல், இல்லை- யெனக் கூறல் இருதிணைகளுக்கும் உரிய வினைகளாம்.

உஉ*o*) "எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே". எட்டு வினை வடிவங்களில் முன்னிலை வினை- முற்று நீங்கிய ஏழும் தன்மை, முன்னிலை, படர்க்கையில் ஐம்-பாலிலும் நவிலும். அவன் செல்க, அது செல்க, உண்டு வந்தான், உண்டு வந்தார், யானில்லை, அவனில்லை நாம் வேறு, அதுவேறு. உஉங) "செய்து செய்யூச் செய்பு செய்தெனச் செய்யியர் செய்யிய செய்யின்செயச் செயற்கென அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி". செய்து முதல் செயற்கை ஈறாகக் கூறப்பட்ட ஒன்பதும் வினையெச்சமாகும். வந்து போனான், உண்ணூ வந்தான், உண்டெனப் பசி நீங்கிற்று, உண்ணியர், காணிய, காணின், காண, காணற்கு வந்தான் என வரும். உஙக) "பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும் எதிர்- மறுத்து மொழியினும் பொருள்நிலை திரியும்". பெயரெச்ச வினை- யெச்ச சொல் எதிர்மறையாக நவின்றும், அவ்வேச்சப் பொருள் உணர்த்தும் தம் தன்மையிலிருந்து திரியாது.

இடையியல் : சஅ சூத்திரங்கள் கொண்டது. **கோட்பாடு :** இடைச் சொல்லின் இலக்கணம் நவில்தல்.

உசச) "இடைஎனப் படுப பெயரொடும் வினையொடும் நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே". பெயருடனும் வினையுடனும் இணைந்து முன்னும்பின்னும் வருவது இடைச் சொல். தனியாக வந்து பொருள் தராது. 'அது மன்' (புறம்-கசஎ)-பெயரொடு. 'வருகதில் அம்ம எம்சேரி சேர' (அகம்-உஎசு)-வினையொடு.

உசரு) "புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதவுநவும் வினைச்சொல் மருங்கின் காலமொடு வருநவும் வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும் அசைநிலைக் கிளவி ஆகி வருநவும் இசைநிறைக் கிளவி ஆகி வருநவும் தத்தம் குறிப்பின் பொருள்செய் குநவும் ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்று அப்பண் பினவே துவலுங் காலை". இருசொற்கள் சேரும்பொழுது அப்பொருளை விளக்குபனவும், வினைச்சொல் முடியும் பொழுது காலத்தை உணர்த்துவதும், வேற்றுமையில் உருபாக வருவதும், பொருளற்று அசைச் சொல்லாக வருவதும், ஒலியை நிறைத்தல் நவின்று வருவதும், நவின்று வருவதும், ஒப்புப் பொருள் தோன்றா இடத்து அப்பொருளை விளக்குவதும் ஆக ஏழு வகையில் இடைச்- சொல் வரும். மன், தில், கொள், உம், ஓ, எ, என,

என்று, ஏ, மற்று, எற்று, மற்றை, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல், ஆர், குறை, மா, இகும், சின், அம்ம, ஆங்க ஆகிய இன்னும் பல சொல் இடைச் சொற்களாகும். உசஂ) "அவ்வச் சொல்லிற் சுவையவை பொருளென மெய்- பெறக் கிளந்த இயல வாயினும் வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித் திரிந்துவேறு வரினுத் தெரிந்தனர் கொளலே". வினை, பெயர் சொற்களுடன் ஆராய்ந்தும் வேறு பொருளும் உணர்த்து-வனவாகி அசை நிலைகளாகத் திரிந்து வரினும் ஆராய்ந்து அவற்றைப் பொருள் கொள்ள வேண்டும்.

உரியியல் : சுசஅ சூத்திரங்கள் கொண்டது. **கோட்பாடு :** உயிர்ச்சொற்கள் தோன்றுமிடத்து இசையும் குறிப்பும் பண்பும் பற்றிப் பெயர், வினைக்கண் சென்று பொருள் கூறும். இதனை உரிச்சொல்லின் இலக்கணம் என்றும் கூறலாம்.

உசஉ) "உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை.....எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்". உரிச்சொற்கள் தோன்று -மிடத்து இசையும் குறிப்பும் பண்பும் பற்றி பெயர், வினைக் - கண்ணுடன் சென்று பொருள்களை நவிலும். தம் உருபு தடுமாறியும் வரும். ஒரு சொல் பல பொருளுக்குடையதாயும் பல சொற்கள் ஒரு பொருளைச் சுட்டியும் உடையதாயும் வரும். கேட்போனால் நன்கு அறியப்படாத சொல்லொடு சேர்த்துச் சொற்களுக்கு பொருள் வேறுபாட்டைச் சொல்ல வேண்டும். குறிப்பு என்பது மனத்தால் உணரப்படுவது, பண்பு பொறியால் (கண், நா, மூக்கு) அறியப்படும் குணம். 'உறுகால்' (நற்.ஈ஠) 'உறு' என்பது வழக்கில் 'மிகுகால்' எனச் சொல்லுவர். இங்கு மிகு என்பதும் உரிச்சொல் ஆகும். ஒரு சொல்லுக்கு வழக்கத்தில் அதே பொருள் கொண்ட வேறு பொருந்திய சொல், விளக்கம் நவிலும். 'இசை சென்று நிலை மருங்கு' - என்பது 'தத்தம் குறிப்புச் சென்று நிலை மருங்கு' எனவும் கொளலாம். 'துவைத்தலும் சிலைத்- தலும்' (தொல்.உரியியல்.சுக) - இசை கொண்டு, 'கருப்புஞ் சிவப்பும்' (தொல்.உரியியல்.எரு) - குறிப்பு, 'நிறத்துரு யுரைத்தற்கு முரிய' (தொல்.உரியியல்.எசு) - பண்பு கொண்டும் வரும். 'கடியேன் கிளவி' (தொல்.உரியியல்.அசு) - ஒரு சொல் பல பொருட்கும், 'உறு தவ நனி' (தொல்.உரியியல்.ஈ) பல சொல் ஒரு பொருட்கும் உரியன. 'இடைச்சொற் கிளவியும் முறிச்சொற் கிளவியு மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப' (பெயரியல்-ரு).

ஈ.அஈ) "மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம் முன்னும் பின்னும் வருபவை நாடி ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல் தத்த மரபின் தோன்றுமன் பொருளே". இதைப் புறநடை என்பர். பொருள் மேல் சொல்லப்பட்ட உரிச்சொல் எல்லாவற்றையும் முன், பின் சொல் நோக்கி, அதற்கு இயைந்த மொழி நாடி அவற்றொடு புணர்ந்து உணர்த்துக. இதனால் தொன்று தொட்டு வழங்கி வந்த முறை, மரபில் திரியாப் பொருளாய்த் தோன்றும். 'வாள்நுதல்' - ஒளி பொருந்திய நெற்றி. 'கடியுடை வியனகர்' (புறம்-சுரு) - கடி எனின் கூர்மையும் விரைவும் எனப் பொருள் கொள்க.

எச்சவியல் : சூஎ சூத்திரங்கள் உள்ளடக்கியது. **கோட்பாடு :** பயின்று வந்த எட்டு இயல்களில் விவரிக்க இயலாமல் எஞ்சி நிற்கும் சொல்லிலக்கணத்தினைத தொகுத்து விளக்குவது. செய்யுளுக்குரிய சொல், சொல்லின் இலக்கணம், அவற்றின் விகாரம், செய்யுளின் பொருளையும் அறிந்து கொள்ள இலக்கணம் வகுப்பது.

ஈசஎ) "இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே". பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு சொல்லுமே இயற்சொல், திரிசொல், திசைச்- சொல், வடசொல் எனப்பட்டன. இயற்சொல் - தமிழ் நாட்டு வழக்கு விகாரமின்றி தமிழியற்கை இலக்கணப்பாடு கொண்ட சொல். திரிசொல் - செய்யுளின்ப நோக்கி இயற்சொற்களை அவ்வாய்ப்பாடு திரித்து வேறு வாய்ப்பாட்டை ஆக்கும் செய்யுள் நடைச் சொல். திசைச்சொல்-செந்தமிழ் நாட்டை அடையும் புடையுங் கிடந்த திசை நாட்டார் வழங்கு சொல். வடசொல் - ஆரியச் சொற்போலும் சொல்.

சசஙு) “பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும் சினைநிலைக் கிளவியின் ஆஅ குநவும் தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும் மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும் மந்திரப் பொருள்வின் ஆஅகு நவும் அன்றி அனைத்தும் கடப்பா டிலவே”. தத்தம் பொருள் உணர்த்தாது பெயர்ந்த நிலைமையை உடைய சொல்லால், திசையால் நிலைபெற்ற பெயரால், பழைய நெறி, ஒருமைப் பெயரில் பன்மைப் பொருள் தோன்றி மயங்குவது, மந்திரமாய் வரும் சொல்லும் வழக்கிலிருந்தும் இலக்கண வரம்பில் கட்டுப்படாதவை. பெயர்நிலை - உயர்திணைப் பெயர் நம்பி ஒரு யானை மேலான் நிற்கும். சினைநிலை - ‘வெள்ளேறக் காவிதி’. ‘நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திர மென்ப”. (தொல்- .பொருள்-கஎக). கூறப்பட்ட எழுவகை வழுவிற் றீர்ந்து வருவது.

இலக்கணத்தின் முக்கியத்துவம் : இலக்கணம் என்பது ஒரு மொழியின் திருவிளக்கு. “தோத்திரத்திற்கு திருவாசகம், சாத்திரத்திற்கு திருமந்திரம்“ என்பது போல், “*திருக்குறள் மக்கட்கு உயிர்நூல், தொல்காப்பியம் தமிழுக்கு உயிர்நூல்”. “இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே .....இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்”.* இலக்கணத்தின் தாய் இலக்கியம்.

எடுத்தாண்ட நூல்கள் :

க. தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு - முனைவர் பி.எஸ். சுப்ரமணிய சாஸ்திரி, சேது சமஸ்தானம் மகாவித்வான் ரா. இராகவையங்கார் (பாயிரம்), பதிப்பு-பெல் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-சுஅஅ �அஅரு, ஆண்டு-கசஉ.அஎ.கசஙஎ, எம்.எல்.ஜே.பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை-சுஅஅ அஅச.

உ) தொல்காப்பியம், (எழுத்து, சொல் தெளிவுரை). ‘இலக்கணச் செம்மல்’ மா. சின்னு. திசம்பர்-2007. அகரம், க. நிர்மலா நகர், தஞ்சாவூர்-613 007.

ங. தொல்காப்பிய சொல்லதிகாரம், இளம்பூரணார் உரை, கஎ ஆம் பதிப்பு-உஅஉஉ/அஅ. சாரதா பதிப்பகம், சென்னை-சுஅஅ அகச.

ச. தொல்காப்பியப் பூங்கா, கலைஞர் மு. கருணாநிதி, பூம்புகார் பதிப்பகம், கஉஎ. பிரகாசம் சாலை, சென்னை - சுஅஅ கஅஅ. பதினாறாம் பதிப்பு, பிப்ரவரி-உஅகஉ.

ரு. தொல்காப்பியப் பூங்காவில் கலைஞரின் கவின் மணம், ஓசூர் ச. குமரவேல், தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு-சுகங உஅச. முதல் பதிப்பு, ஆகஸ்ட்-உஅஉங.

சூ. தொடத்தொட தொல்காப்பியம் -முனைவர் எஸ். சவுந்திர பாண்டியன்,.

அடைப்புக் குறிக்குள் தொல்காப்பிய சூத்திர எண்கள் தமிழில். புரிதலுக்காக :

தமிழ் எண் வடிவங்கள்									
1	2	3	4	5	6	7	8	9	10
க	உ	ங	ச	ரு	சு	எ	அ	கூ	ய

தொ.மா.க.110

தொல்காப்பியரின் குறியியல் கோட்பாடு

முனைவர் ஏ. எழில்வசந்தன்
உதவிப் பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை, அறிவியல் கல்லூரி,
தென்னாங்கூர், வந்தவாசி 604 408,
திருவண்ணாமலை மாவட்டம், தமிழ்நாடு.
ezhilvasanthan7@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

குறியீடு என்னும் தமிழ்ச்சொல் 'ஈடு செய்யும் குறி' அல்லது 'ஈடாகி நிற்கும் குறி' என விரிவடைந்த பொருளைத் தருகிறது. இதன்வழி 'ஒரு கருத்தினை அல்லது ஒரு பொருண்மையினை ஈடு செய்வதற்காக, வேறொன்றின் இடத்தில் தானே பதிலியாக நிற்பது' எனும் சொன்மை விளக்கம் பெறப்படும். மேலும், 'ஒரு கருத்து அல்லது பொருண்மைக்குப் பதிலாக, அதனிடத்தில் தான் நின்று சார்பாண்மைப்படுத்துதல்' மூலம் இச் சொல்லுக்குரிய பொருண்மைப் பொருத்தமும் தெளிவாகும். இதன் மூலம் 'ஒரு குறியானது, தனக்குரிய இயல்பான பொருண்மையினைக் காட்டுவதற்காக அல்லாமல் வேறொரு பொருண்மையினை உணர்த்தும் பொருட்டுப் பதிலியாகச் செயல்படுதல் என்பதே குறியீடு என்ற கலைச்சொல்லின் சொன்மை மற்றும் பொருண்மை விளக்கம் என்பதைப் பெறலாம்.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் கி.பி.பதினொன்றாம் நூற்றாண்டில் தான் இச்சொல் வழக்கத்தில் வந்திருக்கின்றது. தொல்காப்பிய அகத்திணையியலுள், பாலைத் திணையை விளக்கவரும் இளம்பூரணர் (1956: 7) 'பாலை என்னும் குறியீடு எற்றாற் பெறுதும் எனின்…' என்றாற் போல விளக்கிச் செல்கிறார். அடுத்து பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவராகக் குறிப்பிடப்படும் பேராசிரியரின் உரையில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. மரபியலில் தொல்காப்பியர் பட்டியலிடும் உத்தி வகைகளை (நூ.63) விளக்க வந்த பேராசிரியர் 'தன் குறியிடுதல்' என்ற உத்தியை விளக்குகையில் 'சொல்லிற்கும் பொருளிற்கும் வழக்கியலானன்றி ஆசிரியன் தானே குறியிடல்… ஆட்சியும் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தன' என்று விளக்கிச் செல்கிறார். இதற்கடுத்து, கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் மாதவ சிவஞான முனிவரின் நன்னூல் உரையில் 'அளபெடை என்னும் குறியீடே' என்னும் தொடர் இடம் பெற்றுள்ளது (அன்னிதாமசு, 1989: 245). இவற்றையெல்லாம் நோக்க குறியீடு என்னும் தமிழ்ச்சொல் சற்றொப்ப ஆயிரம் ஆண்டுகாலப் பழமையுடையது என்பதை அறியலாம்.

'மறைத்துக் கூறல்', 'குறிப்புக் காட்டல்' என்னும் இரண்டுமே குறியீட்டாக்கத்தின் அடிப்படை நோக்கங்களாகும். மறைத்துக் கூறல், குறித்துக் காட்டல் என்னும் இவ்விரு கூறுகளும் மிகப் பழங்காலந்தொட்டே தமிழ் இலக்கண, இலக்கிய மரபுகளில் இருந்து வந்துள்ளன. தொல்காப்பியர் செய்யுளியலுள் (நூ.158) குறிப்பிடும் அடிவரையற்ற செய்யுள் வகைகள் ஆறனுள் பிசி, முதுமொழி, மந்திரம் என்னும் மூன்றும் மறைத்துக் கூறலை அடிப்படையாகக் கொண்டவை. 'குறிப்பு மொழி' (நூ.172) குறிப்புக் காட்டலின் அடிப்படையில் எழுவது. மொத்தத்தில் இந் நான்கும் குறிப்பாக மற்றொன்றைப் புலப்படுத்துவன.

குறிப்பு நிலையில் பொருண்மைப் புலப்பாடு செய்வதில் பல படிநிலைகளைத் தொல்காப்பியர் கூறியிருந்தாலும் செய்யுளியலுள் அவர் குறிப்பிடும் 'குறிப்பு மொழி' பற்றிய சிந்தனையே அடிப்படையானதாக உள்ளது. அவ்வகையில் இக்கட்டுரை தொல்காப்பியரின் குறியியல் கோட்பாட்டுக் கருத்தியல்களை முன்வைத்து எழுதப்பெற்றுள்ளது.

முன்னுரை

குறியீடு என்னும் தமிழ்ச்சொல் 'ஈடு செய்யும் குறி' அல்லது 'ஈடாகி நிற்கும் குறி' என விரிவடைந்த பொருளைத் தருகின்றது. இதன்வழி 'ஒரு கருத்தினை அல்லது ஒரு பொருண்மையினை ஈடு செய்வதற்காக, வேறொன்றின் இடத்தில் தானே பதிலியாக நிற்பது' எனும் விளக்கம் பெறப்படுகிறது. இதன் மூலம் 'ஒரு குறியானது, தனக்குரிய இயல்பான பொருண்மையினைக் காட்டுவதற்காக அல்லாமல் வேறொரு பொருண்மையினை உணர்த்தும் பொருட்டுப் பதிலியாகச் செயல்படுதல் என்பதே குறியீடு என்ற கலைச்சொல்லின் சொன்மை மற்றும் பொருண்மை விளக்கம் என்பதாகக் கூறலாம்.

"ஒரு பொருள், யாரோ ஒருவருக்கு ஏதோ ஒரு முறைமையில் விளங்குவது" என்று 'குறி'யை வரையறுத்து விளக்குகிறார் பியர்ஸ் (தமிழவன், 1992:2). 'ஒரு பொருளானது (Object) பிறிதொன்றினுக்கு பதிலியாக நிற்பதன் மூலம் ஒரு செய்தியை அதனைப் பெறுபவருக்குத் தெரிவிக்கிறது' எனும் விளக்கத்தினை மேல் வரையறை தருகிறது. அதாவது, ஒரு பொருள் தனக்கெனச் சில தனித்த குணாம்சங்களைக் கொண்டிருந்தாலும் ஒரு குறிப்பிட்ட சூழலில், அப்பொருள் தனக்குரிய தனித்துவமான பண்பினை முதன்மைப்படுத்தாமல் வேறொரு கருத்தினைத் தெரிவிக்கிறது எனலாம். இது குறித்த பின்வரும் வரையறைகள் விரிந்த பொருளை விளங்க வைக்கும்.

"சமுதாயத்தில் கருத்துப் புலப்படுத்தம் செய்ய மக்கள் பெரிதும் பயன்படுத்தும் குறிகளின் வாழ்வு பற்றிய அறிவியல் கல்வியே குறியியல் ஆகும்" என்ற சசூரின் கருத்தினை எடுத்துரைக்கும் டெரன்ஸ் ஹாக்ஸ் (Hawkes; 1977:123) இதனை 'குறிகளின் அறிவியல்' (Science of signs) என்று வருணிக்கிறார். "தர்க்கத்தின் இன்னொரு பெயர் சீமியாடிக்ஸ்: அதுதான் குறிகள் பற்றிய கோட்பாடு" என்பது பியர்ஸ் தரும் விளக்கம் (தமிழவன், 1992:2). "சமூகத்தின் பொருண்மையைப் புலப்படுத்துதல் பற்றிய அறிவியல்" என்று வரையறுக்கிறார் கெர் எலம் (Keir Elam, 1980:1). இன்னும் விளக்கமாக, "மனிதர்களுக்குள் கருத்துப் புலப்படுத்தம் (communication) செய்யப்படும் முறையை வைத்துப் படித்தற்குரிய கல்விப் புலம்" என்று குறியியல் என்னும் ஆய்வுப் புலத்தினை வரையறுப்பார் எம்.டி. முத்துக் குமாரசாமி (1988:1). இவ்வாறு குறியியல் பற்றிக் கூறுப்படும் வரையறைகள் அனைத்தையும் ஒரு சேர தொகுத்துக் காண, ஒரு சமூகத்தின் ஒவ்வொரு மொழித்தளத்திலும் உள்ளுறைந்து காணப்படும் பொருண்மைகளை அறிவியல் நெறியில் வெளிக்கொணரும் ஆய்வு முறையே குறியியல் என்பதாகப் புரிந்து கொள்ளலாம்." (மேற்கோள், இளம்பரிதி, மொ. 2006:5-6)

கால முறைப்படி பார்க்க, மிகப் பழங்காலத்து மக்கள் பயன்படுத்திய கருத்தெழுத்துக் (Ideogram) களிலேயே குறியீட்டின் பயன்பாட்டைக் காண முடிகிறது. கருத்தெழுத்துக்கு முந்தையதான 'சித்திர எழுத்து' (Pictogram) முறையில் சூரியனின் படம் சூரியன் என்ற ஓர் இயற்கைப் பொருளின் பௌதீகத் தன்மையினைச் சுட்டிக் காட்டும் சுட்டுக் குறியாக மட்டுமே இருந்தது. கருத்தெழுத்து முறையிலோ சூரியனின் படம் சூரியனைச் சுட்டியதோடு மட்டுமின்றிச் சூரியனோடு பிரிக்கவியலாத் தொடர்பு கொண்டவையான ஒளி, வெப்பம், பகல் ஆகியவற்றையும் குறிக்கப் பயன்பட்டது (இரா.நாகசாமி, 1980:4) இவ்வாறு வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் (Pre Historic Period) தொடங்கிய குறியீட்டுப் பயன்பாடு இன்று வரையிலும் இடையறவுபடாது வந்து கொண்டிருக்கிறது எனும் கருத்து குறியியலின் நீட்சியைப் பிரதிபலிக்கிறது.

தமிழ் இலக்கியத்தில் குறியியல் குறிப்புகள்

இந்திய மொழிகளில் தொல்காப்பியத்தில் தான் குறிப்புப் பொருட்கோட்பாடு முதன்முதலாகக் காணப்பெறுகிறது என்பார் கோ. சுந்தரமூர்த்தி (1979:125). ஆயின் தொல்காப்பியருக்கு முன்பிருந்தே இக்கோட்பாடு தமிழில் வழங்கி வருகிறது என்பதைத் தொல்காப்பிய ஆய்வு புலப்படுத்துகின்றது (முத்துச்சாமி.க, 1994:11). தமிழ்ப்பாட்டு, அதன் குறிப்புப் பொருட்கோட்பாடு ஆகியவற்றின் தோற்றத்தை ஆராய்ந்த ஜார்ஜ்.எல்.ஹார்ட் அவை தென்னகப் பொது மூலத்திலிருந்தே தோன்றியிருக்கும் என்றே முதலில் கருதினார். ஆயின் ஹார்ட்டின் கருத்தை மறுத்து, தமிழ் அகப்பாடல்களே பிராகிருதப் பாடல்களுக்கும்,

சமஸ்கிருதப் பாடல்களுக்கும் முன்னோடி என டி.எஸ். குப்புசாமி நிலைநாட்டியுள்ளார் (முத்துச்சாமி, க. 2006:14).

சமஸ்கிருதக் குறிப்புப் பொருட் கோட்பாட்டின் முன்னோடியான ஆனந்தவர்த்த னரின் தொனியாலோகத்தையும் தொல்காப்பியத்தையும் ஒப்பிட்டு ஆராயும் போது இரண்டிற்கும் இடையே அமைந்த அடித்தள ஒற்றுமை தொல்காப்பியரே ஆனந்தவர்த்தனருக்கும் முன்னோடி என்பதை ஆய்வு புலப்படுத்துகின்றது என்று முத்துச்சாமி அவர்கள் குறிப்பிடுகிறார் (1994: 28). சமஸ்கிருதத்தினும் தமிழில் குறிப்புப் பொருட் கோட்பாடுகள் உருவாவதற்கான வாய்ப்புகளை ஹார்ட் ஆராய்ந்துள்ளார். தனிச்செய்யுளாக அமைந்தமை, இலக்கண எளிமை, வருணனை மிகுதியாக இன்மை, சொற்றொடர் அமைப்பு ஆகியன தமிழில் குறிப்புப் பொருள் தோன்றுவதற்கு இயைந்ததாக இருப்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார் (முத்துச்சாமி, க. 2006:14-15).. இவற்றால் குறிப்புப் பொருட் கோட்பாட்டை ஒரு கோட்பாடாக இந்திய மொழிகளுக்கு வழங்கிய முன்னோடி மொழி தமிழே என்பதும், தமிழ்க் குறிப்புப் பொருட் கோட்பாட்டின் தோற்றத்தையும் கூர்தலற வளர்ச்சியையும் தமிழ் மொழிக்குள்ளே கண்டறிவதே சாலப் பொருத்தமானது என்பதும் உறுதியாகிறது.

தொல்காப்பியருக்கு முன்பிருந்தே வளர்ந்து வந்த குறிப்புப் பொருட்கோட்பாடுகள் தொல்காப்பியருக்குப் பின் ஏன் சிதைவுற்றன என்பது ஆராயத்தக்கது. மு.வை. அரவிந்தன், குறிப்புப்பொருள் ஆய்வு பற்றி கூறியுள்ள கருத்துகள் கோட்பாட்டின் சிதைவுக்கான காரணங்களாகக் கருதலாம்.

1. இறைச்சி, உள்ளுறை ஆகியவை பற்றித் தொல்காப்பியரே போதிய அளவு விளக்கவில்லை
2. அவற்றைப் பற்றி அவர் கூறியுள்ள கருத்துக்களை உடைய நூற்பாக்கள், பல இடங்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன.
3. அந்த நூற்பாக்களில் மிக முக்கியமான இடங்களில் பாட வேறுபாடுகள் அமைந்து விட்டன.
4. அந்த நூற்பாக்களுக்குப் பொருளும் விளக்கமும் காண்பதில் உரையாசிரியர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர்.
5. உரையாசிரியர்களுக்குப் பின்னர், அவை பற்றிய ஆய்வு நிகழ்த்திய தமிழறிஞர்கள் வெளியிட்ட முடிபுகளில் ஒருமைப்பாடு அமையாததால் தெளிவு ஏற்படவில்லை (முத்துச்சாமி, க. 2006: 21-22).

மேற்கண்ட கருதுகோள்களின் அடிப்படையில் தொல்காப்பியருக்குப் பின்வந்த உரையாசிரியர்களின் காலத்தில் அவர்களுக்குள் இருந்த முரண்பாடுகளால் கோட்பாட்டு வளர்ச்சியில் தேக்கமும் பின்னடைவும் ஏற்பட்டுவிட்டன எனலாம்.

தமிழ் மொழியின் எழுத்து, சொல் அமைப்புகளும், இலக்கியத்தின் பாடுபொருள் மற்றும் பாட்டின் பட்டமைப்பு, அழகியற் கூறுகள் ஆகியவற்றிற்குமான வரையறைகளும் விதிகளும் தொல்காப்பியத்திலிருந்தே தோற்றங் கொள்கின்றன. தொல்காப்பியர்க்கு முன்பே இவை பற்றிய சிந்தனைகள் தமிழில் இருந்திருந்தாலும் கூட, கிடைத்துள்ள முதல் எழுத்துச் சான்று தொல்காப்பியமே ஆகும். குறிப்பாகத் தமிழ் மொழியின் பாட்டிலக்கிய மரபுக்கு முதல் முதலில் வரைவிலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியரே ஆவார். பாட்டின் மையக் கரு (theme), சூழல் (context), பின்னனி (background), பாடலின் கருத்தை அழகியலுடனும் எளிமையாகவும் வெளிப்படுத்த உதவம் உத்திகள் (techniques, பா வகைகள் என்றவாறு பாட்டிலக்கியத்தின் அடிப்படைக் கூறுகள் ஒவ்வொன்றைப் பற்றியம் தொல்காப்பியர் ஆழ்ந்து சிந்தித்துள்ளார். எனவே, தொல்காப்பியரின் கோட்பாடுகளை வரையறை செய்து, அவற்றைத் தற்கால இலக்கிய ஆய்விலும், படைப்பிலும் பயன்படுத்திக் கொள்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதும் இன்றைய குறியியல் கோட்பாடுகளுக்கு முன்னோடி தொல்காப்பியரே என்பதை நிறுவுவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நவீன படைப்புகளில் குறியியல் குறிப்புகள்

ஒவ்வொரு பனுவலின் மொழியும் பலவகைக் குறிகளால் கட்டமைக்கப்பட்டு உள்ளது. சான்றாகத் திரைப்படப் பனுவலின் மொழி சொற்குறி (verbal sign), ஒலிக்குறி (phonetic sign), பொருட்குறி (material sign), உடலசைவுக்குறி (gesture) என்ற நான்கு வகைக் குறிகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறே இலக்கிய மொழியும் சொற்குறிகள், சொல்லல்லாக் குறிகள் என்ற இருவகைக் குறிகளால் கட்டப்பட்டதாக உள்ளது. இலக்கியத்தில் ஆளப்படும் சொற்களே சொற்குறிகள். அவையல்லாத, நிறுத்தக்குறிகள் (punctuational signs), கணிதக் குறிகள் (mathematical signs), எண் குறிகள் (numeric signs) உடுக்குறிகள் போன்றன எல்லாம் சொல்லல்லாக் குறிகள் (non-verbal signs) என்ற வகைப்பாட்டினுள் அடங்கும்.

தற்காலத்துக் கவிதைகள், புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றில் குறிப்புப் பொருள் பல்வேறு வகைகளில் இடம்பெற்று வருகின்றன. பாரதியாரின் குயில் பாட்டும், அக்கினிக்குஞ்சுப் பாடலும் குறிப்புப் பொருள்களை உள்ளடக்கியவை. கிருஷ்ண சீனிவாசன் ஆங்கிலத்தில் எழுதித் தமிழில் மொழி பெயர்த்த தூசியின் தாண்டவம் என்ற கவிதை மிகுந்த குறிப்புப் பொருள் உடையது என்பார் முத்துச்சாமி (2006:30). சங்க காலத்திலும் சித்தர்கள் காலத்திலும் இலக்கிய உத்தியாகப் பயன்பட்ட குறிப்புப் பொருள், புதுக்கவிதையில் அதன் சிறப்புப் பண்பாகவே மாறியுள்ளது என்று புதுக்கவிதையில் குறியீடு என்ற தம் ஆய்வு நூலில் அப்துல் ரகுமான் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியரின் குறியியல்

'மறைத்துக் கூறல்', 'குறிப்புக் காட்டல்' என்னும் இரண்டுமே குறியீட்டாக்கத்தின் அடிப்படை நோக்கங்களாகும். மறைத்துக் கூறல், குறித்துக் காட்டல் என்னும் இவ்விரு கூறுகளும் மிகப் பழங்காலந்தொட்டே தமிழ் இலக்கண, இலக்கிய மரபுகளில் இருந்து வந்துள்ளன. தொல்காப்பியர் செய்யுளியலுள் (நூ.158) குறிப்பிடும் அடிவரையற்ற செய்யுள் வகைகள் ஆறனுள் பிசி, முதுமொழி, மந்திரம் என்னும் மூன்றும் மறைத்துக் கூறலை அடிப்படையாகக் கொண்டவை. 'குறிப்பு மொழி' (நூ.172) குறிப்புக் காட்டலின் அடிப்படையில் எழுவது. மொத்தத்தில் இந் நான்கும் குறிப்பாக மற்றொன்றைப் புலப்படுத்துவன ஆகும்.

தொல்காப்பியர் குறிப்பிடும் 'பழிகரப்பு அங்கதம்' (செய்.நூ.2), உள்ளுறை, இறைச்சி ஆகியனவும் குறிப்பு நிலையில் பொருண்மை புலப்படுத்துவனவே ஆகும். இவற்றுடன் 'வெளிப்பட வாரா உரிச்சொல்' (உரி.நூ.2) 'குறிப்பெச்சம்' (எச்ச.நூ.44). 'சுட்டிக் கூறா உவமம்' (உவம.நூ.7), 'அவையல் மொழி, மங்கல மொழி, உவமம் (உவம.நூ.7) ஆகியவற்றினையும் இவற்றுடன் இணைக்கலாம். மேலும் ஒரு சொற்குறியானது இயல்பாகத் தனக்கென ஒரு பொருண்மையினைக் கொண்டிருந்தாலும், பயன்பாட்டுச் சூழலுக்கேற்ப வெவ்வேறு பொருண்மைகளைக் கொண்டிருத்தல் பற்றியும் தொல்காப்பியர் கூறியுள்ளார். இதனை அவர் 'முன்னத்தின் உணரும் கிளவி' (எச்ச.நூ.63) என்று சுட்டுகிறார். இலக்கியத் திறனாய்வாளர்களாலும் குறியியல் அறிஞர்களாலும் பரவலாகப் பேசப்பட்டு வரும் 'சூழற் பொருண்மை' (contextual meaning)க் கோட்பாட்டுடன் இது ஒத்தியல்கிறது.

மொழியைச் "சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு வகையில் பயன்படுத்துகிறோம். தொல்காப்பியத்திலும் மொழி பயன்படுத்தப்படட சூழலின் அடிப்படையில் இயல்மொழி, ஒன்றியமொழி, எதிர்மொழி, அல்ல கூற்று மொழி, வணங்கியல் மொழி, மங்கல மொழி, அவையல் மொழி, புறமொழி, மறைமொழி, பொதுமொழி, தெரிந்த மொழி, செய்யுள் மொழி, பொய்ம் மொழி, நகைமொழி, குறிப்பு மொழி என்று வகைப்படுத்தப்பட்டிருக்கக் காணலாம்" என்னும் அ. சீநிவாசனின் (1996:44) கூற்றையும் இவற்றோடு இணைத்துக் காணலாம்.

குறிப்பு நிலையில் பொருண்மைப் புலப்பாடு செய்வதில் பல படிநிலைகளைத் தொல்காப்பியர் கூறியிருந்தாலும் செய்யுளியலுள் அவர் குறிப்பிடும் 'குறிப்பு மொழி' பற்றிய சிந்தனையே அடிப்படையானதாக உள்ளது.

எழுத்தொடும் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்புமொழி என்ப (தொல்.செய். 172)

என்ற நூற்பாவின் வழி குறிப்பு மொழியை வழிமொழிகிறார் தொல்காப்பியர்.

தொல்காப்பியத்தில் குறி - குறிப்பு இடம்பெறும் நூற்பாக்கள்

பின்வரும் அட்டவணை தொல்காப்பியத்தில் 'குறி' எனும் சொல் இடம் பெறும் நூற்பாக்களைப் பட்டியலிடுகிறது.

வ. எண்	அதிகாரம்	நூற்பா & இயல்	அடி
1.	சொல்.	165 (பெயர்.)	இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்
2.	பொருள்.	50 (அகத்.)	உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக் கொள்ளும் என்ப குறியறிந் தோரே
3.	""	105 (களவு.)	இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்தும்
4.	""	109 (களவு.)	குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்"
5.	""	128 (களவு.)	தன்குறி தள்ளிய தெருளாக் காலை
6.	""	109 (களவு.)	குறியெனப் படுவது இரவினும் பகலினும் அறியக் கிளந்த ஆற்றது என்ப
7.	""	129 (களவு.)	இரவுக் குறியே இல்லகத் துள்ளும்'
8.	""	131 (களவு.)	அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே
9.	""	131 (களவு.)	அவன்குறி மயங்கிய வமையொடு வரினே
10.	""	154 (களவு.)	உணர்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும் புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய
11.	""	656 (களவு.)	தான் குறி யிடுதல்..... ..

பின்வரும் அட்டவணை தொல்காப்பியத்தில் 'குறிப்பு' எனும் சொல் இடம்பெறும் நூற்பாக்களைப் பட்டியலிடுகிறது.

வ. எண்	அதிகாரம்	நூற்பா & இயல்	அடி
1.	எழுத்து	40 (மொழி.)	உருவினும் இசையினும் அருகித் தோன்றும் மொழிக் குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா
2.	சொல்	72 (வேற்.)	எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பு அவ்விரு முதலின் தோன்றும் அதுவே
3.	""	77(வேற்.)	அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவெ
4.	""	154 (பெயரி.)	தெரிபுவேறு நிலையலும் குறிப்பின் தோன்றலும்

5.	""	197 (வினை.)	அம்முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்
6.	""	198 (வினை.)	குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றி
7.	""	210 (வினை.)	அப்பாற் காலம் குறிப்பொடு தோன்றும்
8.	""	210 (வினை.)	அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
9.	""	210 (வினை.)	என்ன கிளவியும் குறிப்பே காலம்
10.	""	211(வினை.)	அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்
11.	""	216 (வினை.)	அப்பாற் மரபின் குறிப்பொடு கொள்ளும்
12.	""	216 (வினை.)	அன்ன மரபின் குறிப்பொடு உரூஉம்
13.	""	232 (வினை.)	தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்
14.	சொல்	236 (வினை.)	இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
15.	""	245 (இடை.)	தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
16.	""	253 (இடை.)	வினையே குறிப்பே இசையே பண்பே
17.	""	276 (இடை.)	குறிப்பின் இசையான் நெறிபடத் தோன்றும்
18.	""	278 (இடை.)	அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்
19.	""	292 (உரி.)	இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி
20.	""	421 (எச்ச.)	அம்மூ விடத்தான் வினையினும் குறிப்பினும்
21.	""	424 (எச்ச.)	குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
22.	""	426 (எச்ச.)	வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
23.	""	426 (எச்ச.)	ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே
24.	""	434 (எச்ச.)	தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்
25.	""	442 (எச்ச.)	தன்னைப் பிறன்போற் கூறும் குறிப்பின்
26.	பொருள்	53 (அகத்.)	புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே
27.	""	54 (அகத்.)	செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே
28.	""	80 (புறத்.)	முன்னோர் கூறிய குறிப்பினும்....
29.	""	88 (புறத்.)	ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
30.	""	94 (களவு.)	குறிப்பே குறித்தது கொள்ளும் ஆயின்
31.	""	99 (களவு.)	நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறி
32.	""	102 (களவு.)	முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே
33.	""	106 (களவு.)	குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
34.	""	144 (களவு.)	ஒழுக்கம் காட்டிய குறிப்பினும்
35.	""	157 (களவு.)	அவன் குறிப்பு அறிதல் வேண்டியும்
36.	""	175 (களவு.)	கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்
37.	""	230 (களவு.)	கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியவள்
38.	""	281 (களவு.)	குறிப்பின் வரூஉம் நெறிப்பாடு உடைய
39.	""	467 (செய்யு.)	கூற்றிடை வைத்த குறிப்பி னான
40.	""	475 (செய்யு.)	பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
41.	""	481 (செய்யு.)	பொருட்புறத் ததுவே குறிப்பு மொழி
42.	""	507 (செய்யு.)	சொல்லொடும் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை

மேற்காணும் பட்டியலின் அடிப்படையில் 'குறி' எனும் சொல் 11 இடங்களிலும் 'குறிப்பு' எனும் சொல் 42 இடங்களிலும் பலவேறு பொருண்மைகளில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. இதனடிப்படையில் தொல்காப்பியரால் குறிப்பிடப்படும் குறி-குறிப்பீடு சார்ந்த வரிகள் இடம்பெறும் நூற்பாக்கள் பல இருப்பினும்

உள்ளுறை, இறைச்சி தொடர்பான நூற்பாக்களின் அடிப்படையில் இங்கே தொல்காப்பியரின் குறியியல் கோட்பாடு விளக்கலாகின்றது.

உள்ளுறை

அகத்திணையியலில் தொல்காப்பியர் உள்ளுறை உவமம் குறித்து மூன்று நூற்பாக்களை இயற்றியுள்ளார். உரையாசிரியர்கள் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்கினியர் ஆகியோர் உள்ளுறைஉவமம் குறித்து தத்தம் பங்கிற்கு விளக்கியுள்ளனர். தொல்காப்பியர் குறிப்பிடும்

உள்ளுறை உவமம் ஏனைஉவமம் எனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே (தொல்.நூ.992)

என்ற நூற்பாவிற்கு மேற்காண் உரையாசிரியர் இளம்பூரணர் "உள்ளுறைக் கண் வரும் உவமமும் ஒழிந்த உவமமும் என இருவகையாலும் திணையை உணரும் வகை தப்பாதாகும்" (அருணாசலம் பிள்ளை. மு, 1975:521) எனக் கூறியுள்ளார். நச்சினார்க்கினியர், மேற்கூறும் உள்ளுறையுவமத்தான் ஏனைய உவமமென்று கூறும்படி உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாய் நின்றது. அகத்திணை உணர்தற்குக் கருவியாகிய உள்ளுறை உவமம்போல எல்லாத் திணையும் உணருங் கூற்றைத் தள்ளாததாய் வரும் (அருணாசலம் பிள்ளை. மு, 1975:522) எனக் கூறியுள்ளார்.

எனவே, இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரையைப் பெரிதும் தழுவிய "உள்ளுறை உவமமும் அஃதல்லாத ஏனை உவமமும் ஆகிய இரண்டும் திணை உணரும் முறையைத் தப்பாமல் வரும்" என கூறுவதைத் தொல்காப்பியரின் குறிப்புப் பொருட் கோட்பாடாக வரையறுக்கலாம்.

உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் (தொல்.நூ.994)

எனும் தொல்காப்பிய நூற்பாவிற்கு

இளம்பூரணர், "(உள்ளுறுத்தப்பட்ட கருப்பொருளை) உள்ளுறுத்துக் கருதிய பொருள் இதனொடு ஒத்து முடிக என உள்ளுறுத்துக் கூறுவதே உள்ளுறை உவமம்" என இந்நூற்பாவை விளக்கியுள்ளார் (அருணாசலம் பிள்ளை. மு, 1975:533).

பேராசிரியர் "உவமைக்குப் பிறிதொரு பொருள் எதிர்ந்து உவமஞ் செய்யாது ஆண்டுப் பிறந்தனவற்றோடு நோக்கிக் கருத்தினாற் கொள்ள வைத்தலின் இஃது உள்ளுறை உவமமாயிற்று" (வெள்ளைவாரணன். க, 1983:17-18) என விளக்கியுள்ளார்.

நச்சினார்க்கினியர் "யான்புலப்படக் கூறுகின்ற இவ்வுமத் தோடே புலப்படக் கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாக வென்று புலவன் தன் உள்ளத்தே கருதி, தான் அங்ஙனம் கருதும் மாத்திரையேயன்றியுங் கேட்டார் மனத்தின் கண்ணும் அவ்வாறே நிகழ் வித்து அங்ஙனம் உணர்த்துவதற்கு உறுப்பாகிய சொல்லெல்லாம் நிறையக் கொண்டு முடிவது உள்ளுறை யுவமம் என்றவாறு" (அருணாசலம் பிள்ளை. மு, 1975:534-535) எனப் புலவர், கற்போர் ஆகிய இருவரையும் மனதிற் கொண்டு கோட்பாட்டை விளக்கியுள்ளார்.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கருத்தின்வழி உள்ளுறையின் பொது இலக்கணத்தைத் தொல்காப்பியரின் கோட்பாடுகளாகப் பின்வருமாறு வரையறுக்கலாம்.

1. உள்ளுறை என்பது பிறிதொரு பொருள் புலப்படுமாறு நிற்பது
2. தெய்வம் நீங்கிய கருப்பொருள் பற்றி வருவது
3. ஒன்றனை உள்ளுறுத்து மறைத்துக் கூறுவது
4. தப்பாத மரபை உடையது
5. தோழி, தலைவிக்கு மட்டுமின்றி தலைவன் முதலாய பிற கூற்றுக்குரிய தக்க மாந்தர்க்கும் உரியது.

என்பனவாகும்.

உவமப்போலி

உவமப்போலி என்பது உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாக ஏனை உவமம் போலத் தனிதனியே நிறுத்திப் பொருள் கொள்ளப் பெறாமல் உவமை மட்டும் கூறப்பெற்று, உவமிக்கப்படும் பொருள் உய்த்துணர்ந்து கொள்ளப் பெறுவதால் இதனை உவமப்போலி எனத் தொல்காப்பியர் கருதினார் என்பது பேராசிரியரின் கருத்து. எனவே, உவமம் போன்று பொருள் கொள்ளப்படும் உள்ளுறை உவமமே உவமப்போலி என்பதே தொல்காப்பியரின் கோட்பாடாகும்.

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்ன மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே *(தொல்.நூ.1244)*

பேராசிரியர் மேற்காண் நூற்பாவிற்கு "உவமையொடு உவமிக்கப்படும் பொருள் பிறிதொன்று தராது, உவம நிலங்களுட் பிறந்த பிறவிகளோடு சார்த்தி நோக்கிக் கருத்தினான் இதற்கு இஃது உவமையென்று சொன்ற மரபினாற் கூறுங்காலை, இன்ன பொருட்டு இஃது உவம மாயிற்என்பது துணிந்து கொள்ளத் தோன்றும், அவ்வாறு துணிந்து கொள்ளும் உணர்வுடையோர் கொள்ளின்" (வெள்ளை வாரணன். க, 1983:82). எனப் பொருள் கூறியுள்ளார்.

எனவே பேராசிரியரின் சிந்தனைகளின் வழி

1. தொல்காப்பியர் உவமம் என்பதற்காகத்தான் உவமப் போலியை உவமவியலில் கூறியுள்ளார்.
2. உவமப்போலியை எல்லோராலும் எளிதில் புரிந்துகொள்ள முடியாது; அறிஞர்களுக்கே புலப்படக் கூடியது.
3. அறிஞர்களுக்குப் புலப்படுமாறு புலவர்கள் குறிப்புப் பொருளைச் செய்யுளில் அமைக்க வேண்டும்.
4. குறிப்புப் பொருள் செய்யுளில்தான் சிறப்பிடம் பெறும்

என்பனவற்றைத் தொல்காப்பியரின் குறியியல் கோட்பாடாக வரையறுக்கலாம்.

மங்கல மொழியும் தொல்காப்பியரின் குறியியலும்

தொல்காப்பியர் மங்கலமொழி, அவையல்மொழி, ஆண்மையிற் சொல்லிய மொழி ஆகியனவும் உள்ளுறைச் சிறப்பின்பாற் படும் என்பதனை,

மங்கல மொழியும் அவையல் மொழியும்
மாறில் ஆண்மையிற் சொல்லிய மொழியுங்
கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப *(தொல்.பொருள்.240)*

எனக் கூறியுள்ளார்.

இளம்பூரணரும் ச. பாலசுந்தரமும் இந்நூற்பாவை உள்ளுறைக் குரியதாக ஏற்றுக் கொள்கின்றனர். நச்சினார்க்கினியர் இதனை உள்ளுறைக் குரியதாகக் கருதாது, தலைவி, தோழி ஆகியோருக்குரிய மரபை வழுவமைதியாகக் கூறுவதாகக் குறிப்பிடுகிறார்" (வெள்ளைவாரணன். க, 1983:154). இந்நூற்பா இடம் பெற்றுள்ள பொருளியலை அகம், புறம் ஆகிய இரண்டிற்கும் உரியதாக இளம்பூரணரும் ச.பாலசுந்தரமும் கருதுகின்றனர். (பாலசுந்தரம். ச, 1988: 249). பொருளியல் நூற்பாக்கள் அகம் பற்றியே கூறுவதாலும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுவது போல "புறத்திணையியலுட் புறத்திணை வழுக்கூறி, அகப் பொருட்குரிய வழுவை ஈண்டுக் கூறுகின்றதென்றுணர்க" என்பதால் (வெள்ளைவாரணன். க, 1983:6) இந்நூற்பாவை அகத்திற்கே உரியதாகக் கொள்வதே ஏற்புடையது. உரையாசிரியர்கள் காட்டும் பெரும்பாலானவற்றுள் கருப்பொருள் இன்மையால் இந்நூற்பாவிற்கு அவற்றைச் சான்றுகளாகக் கொள்ள இயலாது. எனினும் சங்க அகப்பாடல்களின் வழி சான்றுகாட்டி நிறுவலாம்.

1. உள்ளுறை மங்கல மொழி

நோயிலராகநம் காதலர் வாய்வாள்
எவ்வி வீழ்ந்த செருவிற் பாணர்
கைதொழு மரபின்முன் பரித்திடூஉப் பழிச்சிய
வள்ளுயிர் வணர்மருப் பன்ன ஒள்ளிணர்ச்
சுடர்ப்பூங் கொன்றை ஊழுறு விளைநெற்று
அறைமிசைத் தாஅம் அத்தம் நீளிடை *(அகம்.115: 7-12)*

எவ்வி என்பான் வீழ்ந்த போர்க்களத்தில் பாணர்கள் முன்பு கையாற் தொழுது வணங்கிய யாழினை ஒடித்துப் போட்டது போன்ற ஒளிவிடும் பூங்கொத்துக்களை உடைய கொன்றையின் விளைந்த நெற்றுக்கள் பாறைமீது பரந்து கிடக்கும் சுரத்தின் வழிப் பிரிந்து சென்ற தலைவர் நோயின்றி இருப்பாராக எனத் தலைவி குறிப்பித்தாள்.

பூங்கொத்துக்களை உடைய கொன்றையின் நெற்றுக்கள் பாறை மீது பரவிக்கிடந்தன என்ற கருப் பொருளின்வழித் தலைவி தான் மனம் உடைந்து தனிமைத் துன்பத்தால் சாகக் கிடப்பதைக் குறிப்பித்தாள்.

தலைவன் நோயில்லாமல் இருக்கட்டும் என மங்கலமாக வாழ்த்துவதன் வழி அவனைப் பிரிந்து வாடும் தான் நோயுற்றுச் சாகட்டும் என்பதனை விளக்கினாள்.

அகன் ஐந்திணைப்பாடலில், கருப்பொருளின் வழி, மங்கல மொழியைச் சிறப்பிப்பதன் மூலம், பிறிதொரு கருத்து குறிப்பிக்கப்பெறின், அஃது உள்ளுறை மங்கல மொழி எனப்பெறும். தலைவன் நோயில்லாமல் இருக்கட்டும் என மங்கலமாக வாழ்த்துவதன் வழி அவனைப் பிரிந்து வாடும் தான் நோயுற்றச் சாகட்டும் என்பதனை விளக்கினாள்.

2. உள்ளுறை அவையல் மொழி

சுரும்புணக் களித்த புகர்முக வேழ
மிருப்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉநின்
குன்றுகெழு நன்னாட்டுச் சென்ற பின்றை
நேரிறைப் பனைத்தோண் ஞெகிழ
வாரா யாயின் வாழேந் தெய்யோ *(ஐங்குறு. 239)*

வண்டு உண்டு மகிழும்படி காமவேகத்தால் மதம் சொரியும் புள்ளிகள் கொண்ட முகத்தையுடைய களிறு, கரிய செறும்புகளை உடைய குண்டுக் கல்லைத் தனது காம மயக்கத்தால் பெண்யானை எனப் பிறழ உணர்ந்து தழுவுவதற் கிடமான மலை நாடன் என்றது தலைவனின் பிரிவுத் துயரைத் தாங்காமல் தலைவி இறந்துபட, தலைவன் வேறு ஒருத்தியை மணந்து கொள்வான் என்பதைக் குறிப்பித்தது.

பிரிவுத் துயரைத் தாங்காது தலைவி இறந்துபட்டால் தலைவன் வேறு ஒருத்தியை மணந்து கொள்வான் என்பது அவையல் மொழியைச் சிறப்பிப்பதன் மூலம் பெறப்பட்டது. எனவே இஃது உள்ளுறை அவையல் மொழிச் சிறப்பு எனப்பெறும்.

அகன் ஐந்திணைப்பாடலில், கருப்பொருளின் வழி, அவையல் மொழியைச் சிறப்பிப்பதன் மூலம், வேறு ஒரு கருத்துக்குறிக்கப் பெறின் அஃது உள்ளுறை அவையல் மொழி எனப்பெறும்.

3. உள்ளுறை ஆண்மைமொழி

அகன் ஐந்திணைப்பாடலில், கருப்பொருளின்வழி, ஆண்மையிற் கூறிய மொழியைச் சிறப்பிப்பதன்மூலம் பிறிதொரு கருத்து குறிக்கப்பெறின், அஃது உள்ளுறை சிறப்பு ஆண்மை மொழி எனப்பெறும்.

நீயே செய்வினை மருங்கிற் செலவர்ந் தியாழநின்
கைபுனை வல்வின் ஞாணுளா தீயே

இவட்கே செய்வுறு மண்புல மையாப் பதுபோன்
மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே. (கலி.7:5-8)

நீ மேற்கொள்ள விரும்பிய செயலை நிகழ்த்த விரும்பி வில்லின் நாணைத் தடவினாய். அவளுக்கோ நிலாவில் மேகம் பரவுவது போல் முகத்தில் பசப்பூர்ந்தது என்றது தலைவன் பிரிவதஞ்சித் தலைவி பசலை பூத்தாள் என்பதனைக் குறிப்பித்தது.

நீயே வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே
இவட்கே சுனைமா ணீலங் காரதிர் பவைபோ
வினைநோக் குண்கண் ணீர் நில்லாவே (கலி. 7: 9-12)

நீ கைச்சாட்டையை இறுகக்கட்டி அம்புகளை ஆராய்கின்றாய். அப்போது அவளின் நீலமலர் போன்ற கண்களில் கண்ணீர்த் துளிகள் வீழ்கின்றன என்பதன் வழி தலைவன் பிரிவதஞ்சித் தலைவி கண்ணீர் பெருக்கினாள் என்பதைக் குறிப்பித்தது.

நீயே, புலம்பி னுள்ளமொடு பொருள்வயிற் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே
இவட்கே அலங்கிதழ்க் கோடல் வீயுகு பாவைபோ
விலங்கே நெல்வளை யிறையூரும்மே (கலி.7:13-16)

நீ பிரிகின்றோம் என்ற உணர்வின்றிப் பொருளைத் தேடுவதற்குப் போக நினைத்துச்சக்கரத்தின் வாயைத் தூசி துடைக்கின்றாய். கோடற்பூ முதிர்ந்து விழுகின்றதைப் போல அவள் வளையல்களோ கழன்று வீழ்கின்றன என்பதன் வழி தலைவன் பிரிவுத் துயரைத் தாங்கிக் கொள்ள இயலாமல் தலைவி மெலிந்தாள் என்பதைக் குறிப்பிடுகின்றது.

தலைவன் போர்மேற் செல்கின்றான் எனத் தோழி ஆண்மையாற் கூறிய மொழியைச் சிறப்பிப்பதன் மூலம் தலைவி பிரிவினைத் தாங்கிக் கொள்ள இயலாமல் துன்புறுகிறாள் என வேறு ஒரு கருத்து குறிப்பிக்கப் பெறுதலின் இதனை உள்ளுறை சிறப்பு ஆண்மை மொழி எனலாம்.

எனவே, உள்ளுறைச் சிறப்பு என்பது, உள்ளுறைச் சினச் சிறப்பு, உள்ளுறை பேதைமைச் சிறப்பு, உள்ளுறை நிம்பிரிச் சிறப்பு, உள்ளுறை நல்குரவுச் சிறப்பு என்ற நான்கு பிரிவுடன் உள்ளுறை மங்கல மொழிச் சிறப்பு, உள்ளுறை அவையல் மொழிச் சிறப்பு, உள்ளுறை ஆண்மை மொழிச் சிறப்பு என்ற மூன்று பிரிவும் சேர்த்து உள்ளுறைச் சிறப்பு மொத்தம் ஏழு பிரிவாகும். இந்த ஏழு பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகைகளில் குறியியல் பொருளை உணர்த்தி நிற்கின்றன.

உள்ளுறை உவமம் என்பது உண்மையில் ஒருவகை ஆகுபெயரே. குறிக்கும் பொருளும் குறிக்கப்படும் பொருளும் உடனுறையும் உறவுடையன. இத்தகைய ஆகுபெயரே உருவகத்தினும் மிகுதியாய்ச் சங்கப் புலவர்களால் கையாளப் பெற்றன.

மேலும்,

பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்

எனும் தொல்காப்பியப் பெயரியல் நூற்பா (2) வையும் அந்நூற்பாவிற்கான பல உரைகளையும் ஆராயும் தமிழவன் (1992: 22-26), சசூர் சுட்டிய குறிப்பான், குறிப்பீடு என்னும் இரு கருத்தாக்கங்களையே 'சொன்மை', 'பொருண்மை' என்ற சொற்களால் தொல்காப்பியல் சுட்டியுள்ளதாகக் கூறுகிறார். இவர்தம் கருத்தினை மேலாய்வுக்கு உட்படுத்துகையில் இன்னும் தெளிவு கிட்ட வாய்ப்புள்ளது.

இறைச்சி

இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்

இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கில் தோன்றலான *(தொல்.பெயர்.42)*

என்ற நூற்பாவில்தான் முதன்முதலில் 'இறைச்சிப் பொருள்' என்ற தொடரைத் தொல்காப்பியர் பயன்படுத்துகிறார். பின்னர் கற்பியலில் இரண்டு இடங்களிலும் (நூ.7, 29) பொருளியலில் மூன்று இடங்களிலும் (நூ.33, 35) இறைச்சியைப் பற்றிச் சற்று விரிவாகப் பேசுகின்றார்.

இறைச்சி தானே உரிப்புறத் ததுவே *(தொல்.பொருள். (இளம்).1175)*

இறைச்சி தானே பொருட்புறத் ததுவே (தொல்.பொருள். (நச்சர்).1175)

இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா றுளவே
திறத்தியல் மருங்கில் தெளியு மோர்க்கே *(தொல்.பொருள். 1176)*

அன்புறு தகுவன இறைச்சியிற் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே *(தொல்.பொருள். 960)*

என்னும் பொருளியல் நூற்பாக்களை இறைச்சி என்னும் இலக்கியப் புலப்பாட்டு நெறி குறித்த முதன்மைத் தரவுகளாகக் கொள்ளலாம்.

விலங்கு, பறவை ஆகிய பொருள்களின் வழி புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் இவற்றின் நிமித்தம் ஆகிய உணர்ச்சிகள் வெளிப்படுத்தப் படுகின்றன. இறைச்சியில் பொருள்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் இடையே இயைந்த பொருத்தம் சுட்டப் பெறுகிறது. 'அன்புறு தகுந இறைச்சியிற் சுட்டலும் வன்புறையாகும் வருந்திய பொழுதே' என்பதன் வழி, தலைவி வருந்தும் போது காட்டில் விலங்கு, பறவைக் காட்சியின் வழி தலைவன் தூண்டுணர்வு பெற்றுத் தலைவியை ஆற்றுவிக்க விரைவில் வருவான் என்ற நம்பிக்கை தலைவி உள்ளத்தில் தோன்றுமாறு அன்புணர்ச்சியைத் தோழி எழுப்புகிறாள். இங்கு பொருள்களுக்கும் உணர்வுகளுக்குமிடையே உள்ள நெருக்கத்தைச் சங்க அகப்பாடல்கள் விளக்குகின்றன. எனினும், 'இறைச்சி தானே உரிப்புறத் ததுவே' எனப் பாடங்கொள்ளும் இளம்பூரணர். இறைச்சிப் பொருளென்பது உரிப்பொருளின் புறத்ததாகித் தோன்றும் பொருள் எனக் கொள்கிறார். "இவர் உரைப்படி, இறைச்சி என்பதற்குத் தொல்காப்பியரின் கருத்துக்கு மாறான பொருளே கிடைக்கிறது. 'ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்' என்பதன் மூலமும் 'அன்புறு தகுந இறைச்சியிற் சுட்டலும்' என்பதன் மூலமும் இறைச்சி என்பதற்குத் தொல்காப்பியர் விலங்கினம் என்றே பொருள் கொள்ளுகிறார் என்பது தெளிவாகிறது,

'இறைச்சி தானே பொருட்புறத் ததுவே' எனப் பாடங்கொள்ளும் நச்சினார்க்கினியர். "கருப்பொருளுக்கு நேயந்தான் கூற வேண்டுவதோர் பொருளின் புறத்தே புலப்பட்டு அதற்கு உபகாரப்படும் பொருள் தன்மை உடையதாய்' (வெள்ளைவாரணன். க, உரைவளம், நச்சர். ப.107) என்றவாறு விளக்கிச் செல்வார். இவர்தம் விளக்கத்திலிருந்து

1. பாட்டின் நேரடிப் பொருண்மை தவிர்த்த பிறிதொரு பொருண்மை
2. அப்பொருண்மையானது நேரடிப் பொருளுக்கு தொடர்புடையதாக அல்லது உதவுவதாக அமைந்திருக்கும்

எனும் கருத்துக்களை இவற்றினிருந்த பெறலாம். மேலும், விரிவான விளக்கத்திற்கு பின்வரும் அறிஞர்களின் கூற்றுகள் அரண் செய்யும்.

1. பாட்டின் நேரடிப் பொருண்மைக்குப் புறமாய் மற்றொரு பொருண்மையும் உறைந்திருக்கும் (நச்சினார்க்கினியர், 1966:22)

2. இறைச்சிப் பொருளாவது சொற்பொருளுக்குப் புறத்தே தோன்றும் குறிப்புப் பொருள் (வேங்கடராசுலு ரெட்டியார்:1938)

3. பாட்டில் குறிப்புப் பொருளை மறைத்துப் புலப்படுத்துவதே இறைச்சி (மு.வரதராசன், 1957:235)

4. கவிதையின் புறக்கருத்தே பிறிதொன்றைக் குறிப்பாக உணர்த்துதலே இறைச்சி (துரை.சீனிச்சாமி, 1980:485)

5. செய்யுளின் குறிப்புப் பொருளுக்குப் புறத்தே தோன்றுவது இறைச்சி (ந.சுப்புரெட்டியார், 1981:485)

6. பிறிதொரு குறிப்புப் பொருளும் இறைச்சியில் தோன்றும் (வெள்ளைவாரணர், 1983:113)

7. இறைச்சி என்பது பிறிதொரு பொருளையும் உணர்த்துவது (தமிழண்ணல், 1986:45)

மேற்கருத்துகளின் துணைக்கொண்டு, ஒரு பாடலின் நேரடிப் பொருண்மைக்கும் அப்பால் புறமாகத் தோன்றும் மற்றொரு பொருண்மையே இறைச்சி என்ற முடிவுக்கு வரலாம்.

ஆங்கிலத் திறனாய்வாளரான டி.எஸ். எலியட் கவிதையில் இடம்பெறும் பொருள்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் இடையே உள்ள உறவை உள்ளுணர்வின் எதிரினை (objective correlative) எனச் சுட்டிக் காட்டியுள்ளார் (Alex Preminger (ED), 1986: 581). ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியின் வெளிப்பாடாக விளங்குகின்ற பொருள்கள், சூழ்நிலைகள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் தொகுப்பே உள்ளுணர்வின் எதிரினை என்பது அவரது கருத்து (Alex Preminger (ED), 1986: 581). 'உள்ளுறையும் இறைச்சியும்' என்ற தம் ஆங்கிலக் கட்டுரையில் டி.எஸ். எலியட்டின் இக்கோட்பாட்டோடு இறைச்சி உறவுடையது என கா. செல்லப்பன் ஆராய்ந்துள்ளார் (Chellappan.K, 1987:70). இறைச்சியில் சூழ்நிலையே பொருளாகிறது. தனித்தனிக் கூறுகள் அல்லாமல் மொத்தப் பொருளே உணர்ச்சியைக் குறிப்பிக்கின்றது. இறைச்சி படிமங்கடந்த உணர்ச்சியைக் குறிப்பிடுகிறது. அதனால் இறைச்சி டி.எஸ். எலியட்டின் கோட்பாட்டோடு நெருங்கிய உறவுடையது என கா. செல்லப்பன் சுட்டிக்காட்டுகிறார் (Chellappan.K, 1987:70-71).

நிறைவாக

சமூகத்தின் ஒவ்வொரு மொழித் தளத்திலும் உள்ளுறைந்து காணப்படும் பொருண்மைகளை அறிவியல் நெறியில் வெளிக்கொணரும் புதிய ஆய்வு முறையே குறியியல் ஆகும். தமிழ்மொழி பேசும் நிலவியல் எல்லைக்கு உட்பட்ட பரப்பில் வாழும் மக்களின் கருத்துப் புலப்பாட்டுப் பனுவல்களைத் தரவாய்க் கொண்டு உருவாக்கப்படுவதே 'தமிழ்க் குறியியல்' ஆகும். இதற்குத் தோற்றுவாய் தொல்காப்பியரால் எழுதப்பெற்ற தொல்காப்பியம் ஆகும்.

குறியீட்டாக்கத்தின் அடிப்படை நோக்கங்களான மறைத்துக் கூறல், குறித்துக் காட்டல் என்னும் இரண்டும் மிகப் பழங்காலந் தொட்டே தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளில் இருந்து வருகின்றன. தொல்காப்பியர் கூறும் குறிப்பு மொழியை எழுத்தொடு புணராத குறிப்பு, சொல்லொடு புணராத குறிப்பு, பொருளொடு புணராத குறிப்பு என மூன்றாகப் பகுக்கலாம்.

இவற்றுள் 'எழுத்தொடு புணராத குறிப்பு' ஒரெழுத்தொரு மொழியின் சூழற்பொருண்மையைக் குறிக்கிறது. 'சொல்லொடு புணராத குறிப்பு' தனிச்சொல்லின் குறிப்பானின் நேரடிக் குறிப்பீட்டுக்கு உள் உறையும் ஆழ்நிலைக் குறிப்பீட்டைக் குறிக்கிறது. 'பொருளொடு புணராத குறிப்பு' என்பது மொத்தச் சொற்களின் அல்லது பனுவலின் நேரடிக் குறிப்பீட்டின் கிடைத்தளப் பொருண்மைக்கு அப்பால் வெளிப்படும் கூறுதற் பொருண்மையைக் குறிக்கிறது. தொல்காப்பியர் கூறிப்பிடும் பழந்தமிழ் இலக்கியக் கொள்கைகளுள் உள்ளுறை வகைகள் அனைத்தும் பழந்தமிழர் குறியீட்டு வகைகள் ஆகும்.

சங்க அகவிலக்கியத்துக்கு மட்டுமே உரிய சிறப்புநிலைக் குறியீட்டு வகைகளாக உடனுறைக் குறியீட்டையும் உவமக் குறியீட்டையும் கூறலாம். 'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே' எனத் தொல்காப்பியர் கூறியதன் வழி இறைச்சி இருவகைப்படும் என்பதனைத் தொல்காப்பியரின் குறியியல் கோட்பாடாகக் கருதலாம்.

மேற்கருத்துகளின் அடிப்படையில், இக்கட்டுரை தொல்காப்பியக் கல்வி, சங்க இலக்கியக் கல்வி, குறிப்புப் பொருள் கல்வி, ஒப்பிலக்கியக் கல்வி ஆகியவற்றை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தச் செய்வதற்கான ஒரு முன்முயற்சியாகும்.

தொல்காப்பியரின் குறியியல் கோட்பாடுகளை வரையரை செய்து, அவற்றைத் தற்கால இலக்கிய ஆய்விலும், படைப்பிலும் பயன்படுத்திக் கொள்வதற்குரிய முயற்சிகளையும் தொல்காப்பியரின் குறியியல் கோட்பாட்டு அடிப்படையில் சங்க இலக்கியங்கள் அனைத்தையும் ஆய்வுக்கு உட்படுத்தி தமிழ்மொழியினையும், தமிழ் இலக்கியத்தினையும், தமிழர்களையும் உலகளவில் ஒருபடி மேலோங்கச் செய்வதும் காலத்தின் தேவையாகின்றது.

மேற்கோள் நூல்கள்

1. அப்துல் ரகுமான், 1990. புதுக்கவிதையில் குறியீடு, செல்மா, சிவகங்கை.
2. இளம்பரிதி, மொ. 2006. குறியியல் ஒரு சங்கப் பார்வை, காவ்யா, சென்னை.
3. இளவழகனார், 1970. கலித்தொகைச் சொற்பொழிவுகள், நெங்தற்கலி, கழகவெளியீடு, சென்னை.
4. இளம்பூரணர், 1969. தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
5. குருசாமி, ம.ரா.போ.இ 1980. தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள், நரேந்திர சிவம் பதிப்பகம், கோவை.
6. சீனிச்சாமி, துரை.இ 1980. இறைச்சி எனும் இலக்கிய உத்தி, பொதிகை-2, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
7. சீனிவாசன், ரா.இ (ஆ.இ). 1979. சங்க இலக்கியத்தில் உவமைகள், அணியகம் வெளியீடு, சென்னை.
8. சோமசுந்தரனார், பொ.வே. 1970. அகநானூறு, களிற்றியானை நிரை, கழக வெளியீடு, திருநெல்வேலி.
9. தமிழண்ணல், 1986. உள்ளுறை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை
10. தமிழண்ணல், 1986. இறைச்சி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை
11. தமிழவன், 1992. தமிழும் குறியியலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
12. துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. (உரை), 1957. ஐங்குறுநூறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
13. தொல்காப்பியம் (மூலம்), கழக வெளியீடு, சென்னை 1954.
14. நச்சினார்க்கினியர், 1969. தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை.
15. பாலசுந்தரம், ச. 1989. தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகை உரை, பொருளதிகாரம், தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர்.
16. முத்துச்சாமி, 1994. க. தொல்காப்பியத்தில் குறிப்புப் பொருள், அன்னம் (பி) லிட், சிவகங்கை.
17. வெள்ளை வாரணன்.க, 1983. தெதல்காப்பியம் பொருளியல் உரைவளம், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
18. Alex Preminger (ED) Princeton encyclopaedia of Poetry and Poetics, Macmillan, London, 1986.
19. Chellappan, K. Ullurai and Iraicchi, Indian Literature No.117, New Delhi, 1987.
20. George L. Hart, Proceedings of the Second International Conference Seminar of Tamil Studies Article: The Monsoon in Ancient Tamil and Indo - Aryan Poetry Vol II Madras, 1969.

தொல்காப்பிய நிலத்திணைகளில் புதியவரவு ஆறாம்நிலத்திணை

குரு அரவிந்தன்
ஆசிரியர் (ரொறன்ரோ கல்விச்சபை),
எழுத்தாளர், கணக்காளர்.
kuruaravinthan@hotmail.com

ஆய்வுச் சுருக்கம்

எங்கள் தமிழ் மொழிக்குக் கிடைத்த மிகப்பழைய அரும்பெரும் பொக்கிசம் தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் என்பதில் மாற்றுக் கருத்து இதுவரை இல்லை எனலாம். அக்காலத்தில் எமது மக்கள் எங்கே, எப்படி வாழ்ந்தார்கள் என்பதையும், அவர்கள் வாழ்ந்த நிலங்களைப் பாகுபடுத்தி நிலத்திணையாக வகுக்கப்பட்டது என்பதையும் தொல்காப்பியம் திணைக்கோட்பாடுகள் மூலம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

தொல்காப்பியத்தில் தமிழர் வாழ்ந்த நிலங்களாக நெய்தல், மருதம், முல்லை, குறிஞ்சி, என்று நான்கு வகை நிலங்களே குறிப்பிடப்பட்டிருந்தன. காலப்போக்கில் நிலவமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகத் தேவை கருதிப் 'பாலை' என்ற நிலம் உள்வாங்கப்பட்டு, ஐந்து நிலத்திணைகளாகின என்று சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது. மலையும் மலை சார்ந்த நிலத்தைக் குறிஞ்சி என்றும், காடும் காடு சார்ந்த நிலத்தை முல்லை என்றும், வயலும் வயல் சார்ந்த நிலத்தை மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த நிலத்தை நெய்தல் என்றும் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து வெம்மை உற்ற நிலத்தை பாலை என்றும் உரையாசிரியர்கள் வகைப்படுத்தினர்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் இன்று வடதுருவத்தைச் சுற்றியுள்ள நாடுகளில், 'பனியும் பனிசார்ந்த' வித்தியாசமான சூழலில் வாழ்வதால், புதிய தலைமுறையினர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதால், தேவைகருதி இந்தப் பனிப்புலத்தில் வாழும் தமிழ் மக்களை 'ஆறாம் நிலத்திணை மக்கள்' என்று எடுத்துக் கொள்ள வேண்டிய சூழல் உருவாகியிருக்கின்றது. எனவேதான் ஆறாம் நிலத்திணை பற்றி கட்டுரையில் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய நிலத்திணைகளுக்கு உரிய பண்புகள் போல ஆறாம் நிலத்திணைக்கும் பண்புகள் அமைந்திருக்கின்றன. ஆனால் இடமாற்றம், மற்றும் காலவித்தியாசம் காரணமாக இவை வித்தியாசமான பண்புகளாக அமைந்திருக்கின்றன. முதலாவதாக ஆறாம் நிலத்திணை என்ற பனிப்புலம் தமிழ்நாட்டுக்கு வெளியே அமைந்திருக்கின்றது. தமிழர் வாழும் இலங்கை நாடும் வெளியே அமைந்திருந்தாலும் நிலத்திணைகளில் அங்கு மாற்றம் பெரிதாக இருக்கவில்லை.

ஆறாம் நிலத்திணையின் பொதுப் பண்பாக உருகலும் உருகல் நிமித்தமும், தை மாதத்தில் தமிழர்கள் தைப்பொங்கல், மரபுத் திங்களைக் கொண்டாடுவதால் சூரியக்கடவுளையும், பறவைகளாக வாத்து, சீஹள் போன்ற பறவைகளையும், மிருகங்களாகச் செங்கரடி, வெண்கரடி போன்றவற்றையும், மரங்களாக மேபிள், ஊசியிலை மரங்களையும், பூக்களாகக் காட்டுப்பூவான சிக்கோரி ((Chicory) பெயர்ரி ஸ்லிப்பர் ((Fairy Slipper) பூக்களையும், பனிக்காலத்தைப் பெரும்பொழுதாகவும், முன்னிரவைச் சிறுபொழுதாகவும் எடுத்துக் கொள்ளலாம். தொழில் வர்த்தகம், பனியகற்றல், பனி சார்ந்த பொருட்கள் தயாரித்தல். விளையாட்டு என்று பார்த்தால் பனிச்சறுக்கல், ஐஸ்கொக்கி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

(**முன்னைய ஆய்வின் நீட்சியாக** - தமிழர் தகவல் 29வது இளமதிச் சுவடு ஆண்டு மலரில் வெளிவந்த கட்டுரையின் நீட்சியாகவும், குரு அரவிந்தனின் 'ஆறாம் நிலத்திணை' நூலில் வெளிவந்த கட்டுரையின் நீட்சியாகவும் இந்தக் கட்டுரை இடம் பெறுகின்றது)

முன்னுரை

தமிழரின் வாழ்வியலோடு ஒன்றாகக் கலந்துவிட்ட தொன்மை வாய்ந்த நூல்களில் தொல்காப்பியமும், திருக்குறளும் இன்று எமக்குக் கிடைத்த அரும் பெரும் சொத்துக்களாக இருக்கின்றன. எமது தாய் மொழியாம் தமிழ் மொழிக்குச் செம்மொழி என்ற உயரிய இடத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னுதாரணமாக இருந்த முக்கியமான நூல்களில் தொல்காப்பியமும், திருக்குறளும் அடங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய பண்புகளில் அறத்தையும், நன்னெறியையும் இந்த நூல்கள் போதித்ததால், காலாகாலமாய் மக்களுடைய உணர்வுகளுடன் கலந்து போயிருக்கின்றன. ஆனால் கல்வியறிவு விரைவாக வளர்ச்சி அடைந்தாலும், பாமர மக்களிடம் திருக்குறள் சென்றடைந்ததைப்போல, ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான தொல்காப்பியம் இன்னும் சென்றடையவில்லை என்ற குறைபாடும் எமக்கு இருக்கத்தான் செய்கிறது. அதை நிவர்த்தி செய்வதற்கு இருக்கும் ஒரே வழி என்னவென்றால், யாவரும் புரிந்து கொள்ளக்கூடிய இலகு நடையில் பாமரமக்களிடம் மிகவும் தொன்மையான தொல்காப்பியத்தை எடுத்துச் செல்வதுதான். அந்தக் குறையை நிவர்த்தி செய்ய, இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்களான தொல்காப்பிய மன்றத்தினர் அதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து, பாரபட்சமின்றிச் செயற்படுவதும், இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வழியமைத்துக் கொடுத்திருப்பதும் பாராட்டுக்குரியது.

தொல்காப்பியத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால், முதலில் அதை எழுதிய தொல்காப்பியரைப் பற்றியும் அறிந்து கொள்வது நன்று. 1610 சூத்திரங்களைக் கொண்ட தொல்காப்பியத்தை எழுதியவர் தொல்காப்பியர் என்றும், இவரது இயற்பெயர் திரணதூமாக்கினி என்றும் சிலர் குறிப்பிடுவர். காப்பியகுடி என்ற ஊரில் இவர் பிறந்ததால் தொல்காப்பியர் என்று அழைக்கப்பட்டதாகவும், இடைச்சங்கம், மற்றும் கடைச்சங்க காலத்தில் தொல்காப்பியம் இலக்கண நூலாக இருந்தது என்றும் இறையனார் களவியலில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. தொல்காப்பியருக்குப் பின் வந்த பனம்பாரனார் என்பவர் தொல்காப்பியத்திற்கு சிறப்புப் பாயிரம் எழுதியிருக்கின்றார். தொல்காப்பியர் வாழ்ந்த காலம் 5 ஆம் நூற்றாண்டு என்றும், வேறுசில ஆய்வாளர் 3 ஆம் நூற்றாண்டு என்றும் குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியங்கள் சில தொல்காப்பியத்திற்கு மாறான சில கருத்துக்களைக் கொண்டிருப்பதால், தொல்காப்பியம் அதற்கு முற்பட்டது என்றும் சில ஆய்வாளர் கருதுகின்றார்கள்.

பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தை ஆதாரமாகக் கொண்டு எப்படி நாம் எமது மொழி வளத்தையும், எமது இனத்தின் பண்பாடு, கலாச்சாரத்தையும் நவீன உலகிற்கு ஏற்ற மாதிரிக் கொண்டு செல்ல முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். இவற்றை ஆதாரமாக வைத்துக் காலத்திற்கு ஏற்ற மாதிரி எம்மைத் தயார் படுத்துவது அவசியமான தொன்றாகும். புதிய தலைமுறையினர், ஆதாரபூர்வமாக நிரூபித்தால் அல்லாமல், எதையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எமக்குக் கிடைத்த முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் குறிப்பிடும் நான்கு திணைகளைத் தொடர்ந்து எப்படிப் பாலைத் திணை உள்வாங்கப்பட்டதோ, அதே போன்று காலத்தின் கட்டாயத்தால், இப்போது வடதுருவப் பகுதிக்குப் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் வாழும் 'பனிப்புலம்' என்ற நிலத்திணையையும் ஆறாம் நிலத்திணையாக உள்வாங்க வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டு இருக்கின்றது. எனவே எல்லோருக்கும் புரியும்படியாக இலகு தமிழில் பனிப்புலமான ஆறாம் நிலத்திணை பற்றிக் குறிப்பிடுகின்றேன். திணை என்னும் சொல் இங்கே பிரிவு என்ற பொருளைத் தருகின்றது.

தமிழர் வாழும் பகுதிகளை எடுத்துப் பார்த்தால், ஒரு குறிப்பிட்ட தமிழரின் வாழ்க்கை, காலம் செய்த கோலத்தால் இன்று புலம்பெயர்ந்த வாழ்க்கையாக மாறிவிட்டது. தவிர்க்க முடியாத காரணத்தால் இந்தப் புலம் பெயர்ந்த தமிழரின் வித்தியாசமான நிலம் சார்ந்த வாழ்க்கையை தமிழ் இலக்கியத்தில் இடம் பெறச் செய்ய வேண்டிய அவசியமும் இருக்கிறது. ஏற்கனவே புலம் பெயர்ந்தவர்கள் தொல்காப்பியம்; குறிப்பிடும்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற நான்குவகை நிலங்களில் இருந்தும் மற்றும் பாலை நிலத்தில் இருந்தும், பொதுவாக இந்த ஐந்துவகை நிலத் திணைகளில் இருந்தும் புலம் பெயர்ந்தவர்களேயாவார்.

சிலப்பதிகாரம்தான் பாலை நிலம் பற்றிய விளக்கத்தை எமக்குத் தந்திருக்கிறது. எனவே தொல்காப்பியர் காலத்தில் இல்லாத புதிதாக உள்வாங்கப்பட்ட, மாறுபட்ட ஒரு நிலத்திணை வாழ்க்கையைத் தமிழர்கள் புலம்பெயர்ந்த மண்ணில் வாழ ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தவகையில் புதிய நிலத்திணையாகப் 'பனிப்புலமும்' இடம் பெறவேண்டிய சூழல், இப்போது தமிழர்கள் இலங்கை நாட்டில் இருந்து பெருந்தொகையாகப் புலம்பெயர்ந்ததால் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இங்குள்ள புதிய தலைமுறையினரின் எதிர்காலம் குறித்து, ஐந்து நிலத்திணைகளோடு சேர்த்து எமது சந்ததியினர் பரம்பரையாக வாழப்போகும் புதிய நிலத்திணையாக 'ஆறாவது நிலத்திணையை' தமிழ் இலக்கியத்தில் உள்வாங்க வேண்டிய கடப்பாடு எமக்கிருக்கின்றது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டிராமல், வாழும் சூழ்நிலைக்கும், இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்றமாதிரி எமது தமிழ் இலக்கியத்தை நாமே வளம்படுத்த வேண்டும். அதை இங்குள்ள பனிப்புலச்சூழலில் வாழ்ந்து, அனுபவப் பட்டவர்களால்தான் செய்ய முடியும் என நினைக்கின்றேன். எனவேதான் பனிப்புலமான ஆறாம் நிலத்திணையை முன்வைத்து இந்தக் கட்டுரையை விரிவாக ஆய்வு செய்ய முன்வந்திருக்கின்றேன்.

எப்படிச் சில தமிழ் எழுத்துக்கள் காலத்தோடு இணைந்து மாற்றங்களைப் பெற்றனவோ, அதேபோல எங்கள் தமிழ் இலக்கியம் காலத்தோடு மட்டுமல்ல, விண்வெளி யுகத்தோடும் இணைந்தும் நெகிழ்ந்தும் செல்லக்கூடியது என்பதையும் ஏனைய இனத்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே ஆறாம் நிலத்திணையை முன்னிறுத்தி, தொல்காப்பிய நிலத்திணைகளோடு ஒப்பீட்டு நோக்கில் ஆறாம் நிலத்திணையான 'பனிப்புலம்' பற்றிய இந்த ஆய்வுக்கட்டுரையை முன்வைக்க இருக்கின்றேன். இன்று பனிப்புலத்தில் வாழும் எம்மவர் யார் என்ற முகவரியை, இளைய தலைமுறைக்கும், ஏனைய இனத்தவர்களுக்கும் அடையாளப் படுத்த இந்தக் கட்டுரை உதவியாக இருக்கும் என நம்புகின்றேன். தொல்காப்பியத் தமிழரின் இன்றைய வாழ்வியல் சார்ந்ததாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

முதலில் தொல்காப்பியம் பற்றிச் சுருக்கமாக இங்கே குறிப்பிடுகின்றேன். தொல்காப்பியத்தை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டதாக வகுத்திருக்கின்றார்கள். இதில் ஒவ்வொரு அதிகாரங்களும் ஒன்பது இயல்களைக் கொண்டிருக்கின்றன.

இதில் எழுத்ததிகாரம் நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஒன்பது இயல்களைக் கொண்டிருக்கின்றது.

சொல்லதிகாரம் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் ஆகிய ஒன்பது இயல்களைக் கொண்டிருக்கின்றது.

பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமை இயல், செய்யுளியல், மரபியல் ஆகிய ஒன்பது இயல்களைக் கொண்டிருக்கின்றது.

திணை என்பதற்குப் பல கருத்துக்கள் இருந்தாலும், தொல்காப்பியர் குறிப்பிடும் ஐந்திணை என்பது பற்றிப் பார்ப்போம். இதில் திணைக்கோட்பாடு என்பது மக்கள் வாழ்ந்த நிலத்தையும், அதன் இயற்கைச் சூழலையும் கருத்திற் கொண்டு பகுக்கப்பட்டது. இது ஒவ்வொரு நிலம் சார்ந்த மக்களின் பாலியல் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

தொல்காப்பியம் தொடக்கம், சங்க இலக்கியங்கள் வரை, ஐவகை நிலங்களுக்கு உரிய ஒழுக்கத்தை முதல் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகையாகப் பிரித்திருப்பதை அறிய முடிகின்றது. அகவொழுக்கத்தை அகத்திணை என்றும், புறவொழுக்கத்தை புறத்திணை என்றும் வகுத்தனர். பொழுது என்பது ஒவ்வொரு நிலத்தைச் சார்ந்தவர்களின் காதல் (அன்றைய புலவர்கள் தங்கள் பாடல்களில் இதைக் காமம் என்று குறிப்பிடுவர்) உணர்வுகள் ஏற்படும் காலத்தைப் பெரும் பொழுது, சிறுபொழுது என்று வகைப்படுத்தி இருக்கிறார்கள்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே (தொல்.பொருள்.5)

மலையும் மலை சார்ந்த நிலத்தைக் குறிஞ்சி என்றும், காடும் காடு சார்ந்த நிலத்தை முல்லை என்றும், வயலும் வயல் சார்ந்த நிலத்தை மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த நிலத்தை நெய்தல் என்றும் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து வெம்மை உற்ற நிலத்தை பாலை என்றும் உரையாசிரியர்கள் வகைப்படுத்தினர்.

தொடக்கத்தில் தமிழர் வாழ்ந்த பகுதிகளில் 'பாலை' என்றொரு நிலம் இருந்ததாகவோ, அப்படி இருந்திருந்தால் அந்த நிலத்தைத் தனியாகப் பிரித்துக் காட்டவோ தொல்காப்பியர் முற்படவில்லை. தமிழர் வாழ்ந்த பகுதிகளில் இயற்கையின் காலநிலையில் படிப்படியாக ஏற்பட்ட மாற்றங்களால் பாலை என்றொரு நிலம் தோன்றியிருக்கலாம். அல்லது தமிழர்கள் அப்படியான பாலைக்குரிய இயல்புகளைக் கொண்ட நிலங்களை நோக்கிச் சென்று குடியேறியிருக்கலாம். பாலைநிலம் எப்படி உருவானது என்று பார்த்தால், கோடைவெப்பத்தால் முல்லை நிலமும், குறுஞ்சி நிலமும் திரிந்ததால் அதைப் பாலை நிலம் என்றனர். காலத்தின் தேவைகருதி, தமிழ் இலக்கியமும் நிலத்திணையில் இந்த வகைப்படுத்தலை ஏற்றுக் கொண்டது.

அந்த வகையில், தமிழர்கள் வாழ்ந்த பாலை நிலத்தை எப்படித் தொல்காப்பியத்தில் இல்லாத புதிய திணையாக தமிழ் இலக்கியம் ஏற்றுக் கொண்டதோ, அதே காரணங்களுக்காகத் தமிழர்கள் இன்று புலம் பெயர்ந்து வாழும் பனிப்புலத்தையும் ஆறாம் நிலத்திணையாக ஏற்றுக் கொள்வதில் மாற்றுக் கருத்தில்லாமல், கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே புலம் பெயர்ந்த அதிகமான தமிழர் பற்றிய, அடுத்த தலைமுறையினருக்கான ஆவணப் பதிவாகவும் இந்தக் கட்டுரை அமைகின்றது.

தமிழர்கள் பெருமளவில் புலம்பெயர்ந்து, தமிழ்நாட்டுக்கு வெளியே வாழுமிடம் பனிசூழ்ந்த பகுதியாக இருப்பதால், காலத்தின் தேவை கருதி அந்த பனி சூழ்ந்த நிலத்தை, பனிப்புலத்தை ஆறாம் நிலத்திணையாகத் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகம் செய்யவேண்டிய கடப்பாடு அப்படியான நிலத்தில் வாழும் எமக்கிருக்கிறது. இன்று பனி சூழ்ந்த பிரதேசத்தில், புலம்பெயர்ந்த தமிழர்களாகிய நாங்கள் வாழ்வதால், தமிழ் இலக்கியத்தில் புதிதாகப் 'பனிப்புலம்' என்ற இந்த நிலத்திணையும் ஆறாம் நிலத்திணையாக இடம் பெறுவது சாலச் சிறந்ததாகும்.

முதலில், பனிப்புலத்தைப் பற்றி விபரமாகக் குறிப்பிடுமுன், ஏற்கனவே நடைமுறையில் இருக்கும், தமிழர் வாழ்வியலோடு ஒன்றிவிட்ட இந்த ஐந்து திணைகளையும், அந்தந்த திணைகளுக்கு உரிய பண்புகள் எவை என்பதையும் பார்ப்போம். இதில் வரும் கருப்பொருள் என்பது ஒவ்வொரு திணைக்கு உரிய பொருளாகவும், உரிப்பொருள் என்பது உள்ளத்தே எழுகின்ற மனித உணர்வுகளுக்குக் காரணமாக விளங்கும் உந்துதல்களையும் குறிக்கின்றது.

குறிஞ்சித்திணை

குறிஞ்சி என்று பகுக்கப்பட்டது மலையும் மலை சார்ந்த இடமுமாக இருக்கின்றது. இதமான குளிர் பிரதேசமாகக் குறிஞ்சி இருப்பதால், 'புணர்தலும் புணர்தல் நிமித்தமும்' என்ற பண்புக்கு ஏற்றதாக இருக்கின்றது. இங்கு கூதிர், முன்பனியும் பெரும் பொழுதாகவும், யாமம் சிறுபொழுதாகவும் இருக்கின்றது. சங்கப்பாடல்கள் எடுத்துக் காட்டுவது போல, இப்பகுதிக்கு வேட்டையாடச் செல்லும் இளைஞருக்கு அங்கு தினைப்புனம் காத்து நிற்கும் இளம் பெண்களை அடிக்கடி சந்திக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. அதனால் அவர்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கவும் அதன் நிமித்தம் அவர்கள் ஒன்றுபடுவதற்கும் ஏற்ற இடமாகக் குறுஞ்சி நிலம் அமைந்திருக்கின்றது. குறிஞ்சி நிலத்தின் கருப்பொருட்கள் என்று எடுத்துப் பார்த்தால் அதன் கடவுளாக சேயோன் என்று குறிப்பிடப்படும் முருகக்கடவுளைக் குறிப்பிடுகிறார்கள். குடிமக்களாக குறவர், குறத்தியர், கானவர் ஆகியோர் இருக்கின்றனர். பறவைகள் மிருகங்களாகக் கிளி, மயில், புலி, கரடி, யானை போன்றவற்றைக் குறிப்பிடலாம். குறிஞ்சி, காந்தள், குவளை, தேக்கு, அகில், அசோகம், மூங்கில், உணவாக மலைநெல், மூங்கில் அரிசி, தினை போன்றவற்றையும் இங்கே குறிப்பிடலாம்.

முல்லைத்திணை

குறிஞ்சிக்கும், மருதத்திற்கும் இடைப்பட்ட நிலமாக இருக்கும் முல்லை நிலம், காடும் காடு சார்ந்த இடமுமாக இருக்கின்றது. கால்நடைகளை மேய்ப்பதற்காக ஆயர்கள் பகலில் மேய்ச்சல் நிலத்தில் இருப்பார்கள். பெண்கள் ஆனிரைகளிடம் இருந்து கிடைக்கும் பயன்களைப் பண்டமாற்றுச் செய்து கொள்வர். ஏறு தழுவி வெல்பவனைப் பெற்றோர் தங்கள் பெண்களுக்கு விரும்பித் திருமணம் செய்து கொடுத்தனர். இதற்காகவே காத்திருப்பதால் 'இருத்தலும் இருத்தலின் நித்தமும்' என்ற பண்புக்கு முல்லைத்திணை ஏற்றதாக இருக்கின்றது. முல்லையின் கருப்பொருள் என்று பார்த்தால், மாயோன் என்று அழைக்கப்படுகின்ற பெருமாள், குடிமக்களாக இடையர், இடைச்சியர், ஆயர், ஆச்சியர் ஆகியோர் இருக்கிறார்கள். விலங்குகள் பறவைகளாக மான், முயல், காட்டுக்கோழிகளும் பூக்களாக முல்லைப்பூ, குல்லைப்பூ, தோன்றிப்பூ, மரங்களாக கொன்றை, குருந்தம், காயா போன்றவற்றையும் உணவுவகைகளாக வரகு, சாமை, நெய், பால் போன்றவற்றையும் குறிப்பிடலாம். விளையாட்டு ஏறுதழுவுதல், இவர்கள் ஆநிரையைச் செல்வமாகப் போற்றினார்கள். இதனால் ஆநிரை கவர்தல் போன்ற நிகழ்வுகளும் இங்கு இடம் பெற்றன. முல்லை நிலத்திற்கு கார் காலம் பெரும்பொழுதாகவும், மாலை நேரம் சிறு பொழுதாகவும் இருக்கின்றன.

மருதத்திணை

மருதம் என்று பகுக்கப்பட்டது வயலும் வயல் சார்ந்த இடமுமாக இருக்கின்றது. இவர்களின் வயல்களில் முக்கிய உணவான நெல் விளைவதால், இவர்கள் பெரும் செல்வந்தராக இருப்பதால், இவர்கள் பரத்தமையை மேற்கொள்ளுவது இயல்பானதாகும். வேளாண்மை செய்ததால் வேளாளர் என்றும் மக்கள் அழைக்கப்பட்டனர். இதனால் மருதநிலம் 'ஊடலும் ஊடல் நிமித்தமும்' என்ற பண்புக்கு எற்றதாக இருக்கின்றது. மருத நிலத்தில் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் போன்றவை பெரும் பொழுதாகவும், வைகறை விடியல் சிறுபொழுதாகவும் இருக்கின்றன. மருதத்தின் கருப்பொருட்களாக கடவுள் வேந்தன் இருப்பதால் உரையாசிரியர்கள் வேந்தனே இந்திரன் என்று குறிப்பிடுகின்றார்கள். குடிமக்களாக உழவர், உழத்தியர், கடையர், கடைசியர். பறவைகள் விலங்குகளாக குருகு, நாரை, அன்னம், தாரா, எருமை, மாடு, நீர்நாய் பூக்களாக தாமரை, கழுநீர், மரங்களாக காஞ்சி, மருதம், வஞ்சி உணவாக செந்நெல் அரிசி வெண்ணெல் அரிசி போன்றவற்றை இங்கே குறிப்பிடலாம்.

நெய்தல்திணை

கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல் நிலமாகும். மீன் வளம் நாடிக் கடலிலே திமில் ஏறிச் செல்வது பெரும்பாலும் ஆடவர் தொழிலாக இருந்தது. அப்படிக் கடலுக்குச் சென்றவர்கள் குறித்த நேரத்தில் திரும்பாத போது 'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்' என்ற பண்பு நெய்தல் நிலத்துக்கு இயல்பாயின. நெய்தல்

திணைக்கு ஆறு பருவங்களும் பெரும்பொழுதாகவும் பிற்பகல் சிறுபொழுதாகவும் அமைகிறது. நெய்தலின் கருப்பொருட்களைப் பார்த்தால், நெய்தல் நிலத்தின் கடவுளாக வருணன் இருக்கின்றார். நெய்தல் நிலமக்களின் வாழ்க்கை நீரோடு தொடர்புடையதால், நீர்க்கடவுளாக மழை, ஆறு, கடல் என்று நீர் சார்ந்த கடவுளாக வருணன் இருக்கின்றார்.

குடிமக்களாக சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுழைச்சி, கொண்கண், துறைவன், நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர் என்று வகைப்படுத்தியிருக்கிறார்கள். பறவைகள், விலங்குகளாகக் கடற்காகம், அன்னம், அன்றில், சுறா, உமண் பகடு போன்றவையும் இருக்கின்றன. பூக்களாக நெய்தல், தாழை, முண்டகம், அடம்பம் போன்றவையும், மரங்களாகக்கண்டல், புன்னை, போன்றவையும், உணவாக மீனும் உப்பும், தொழிலாக மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், மீன் பதப்படுத்தல், கடலாடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பாலைத்திணை

தொல்காப்பியர் காலத்தில் பாலைக்கு என்று தனி நிலம் இருக்கவில்லை. ஆனால் பாலையைப் பற்றி, 'முல்லையும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும்' என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இதனால், காதலர் இடையே 'பிரிவும், பிரிதல் நிமித்தமும்' ஆக ஏற்படும் பெரும் துயரத்தையும் பாலைக்கு உரியதாகக் குறிப்பிடுவர். ஆறலை கள்வரும், கொலையும் துன்பமும் வெம்மையும் இந்நிலத்துக்கு உரிய தன்மைகள், பாலைத்திணைக்கு வேனில் காலம், மற்றும் பின்பனிக் காலம் பெரும்பொழுதுகளாகவும், நண்பகல் சிறுபொழுதாகவும் இருக்கின்றது.

பாலை நிலத்துக் கடவுள் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. எனவே தொல்காப்பியத்திற்குப் பின்தான் பாலைநிலம் ஐந்தாவது திணையாக இணைந்திருக்கின்றது. பாலைநிலக் கடவுளாகக் கொற்றவையைக் குறிப்பிடுகிறார்கள். குடிமக்களாக விடலை, காளை, மீளி, எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் போன்றவர்களைக் குறிப்பிடுவர். பறவைகள் விலங்குகளாகப் புறா, பருந்து, எருவை, கழுகு, செந்நாய், யானை, புலி போன்றவற்றைக் குறிப்பிடலாம். பூக்களாக குரா, மரா, பாதிரியும், மரங்களாக உழிஞை, பாலை, ஓமை, இருப்பை போன்றவையும் இருக்கின்றன.

இந்த ஐந்து நிலத்திணை மக்களும் இயற்கையை வழிபட்டவர்கள். அதனால்தான் ஏதோ ஒரு விதத்தில் தங்களைக் காத்தவர்களைக் கடவுளாக வழிபட்டத் தொடங்கினார்கள். தொல்காப்பியரும் நான்கு திணைகளுக்கும் நான்கு கடவுள்களைக் குறிப்பிட்டிருக்கின்றார். பாலை நிலத்திணையின் கடவுளாகக் கொற்றவை பின்னாளில் தான் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. இந்த ஐந்து நிலத்திணைக் கடவுள்களுக்கும் சிறந்த மாதங்களாக, கார்த்திகையை முருகனுக்கு உரிய மாதமாகவும், ஆவணித் திருவோணத்தை திருமாலுக்கு உரிய மாதமாகவும், சித்திரையை இந்திரனுக்கு உரிய மாதமாகவும், மாசி மகத்தை வருணனுக்கு உரிய மாதமாகவும், புரட்டாசியைக் கொற்றவைக்கு உரிய மாதமாகவும் உரையாசிரியர்கள் சிலர் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தொல்காப்பியம் பற்றிக் குறிப்பிடும் போது பொருளியல் திணை பற்றிக் குறிப்பிடுவதும் அவசியமாகிறது. பொருள் என்பது வாழ்க்கை பற்றியது, இத்திணையை அகவாழ்க்கை, புறவாழ்க்கை எனப் பிரிவு படுத்துவர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்று அகவாழ்க்கையையும், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்று புறவாழ்க்கையையும் பிரிவு படுத்துவர். இதில் வரும் அகத்திணையில் ஒருதலைக் காமத்தை கைக்கிளை என்றும், பொருந்தாக் காமத்தை பெருந்திணை என்றும் குறிப்பிடுவர்.

மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியலோடு அமைந்த ஒழுக்கத்தை அறநெறி கூறும் தொல்காப்பியர் திணை என்றும், இதில் அகவொழுக்கத்தை அகத்திணை என்றும், புறவொழுக்கத்தைப் புறத்திணை என்றும் குறிப்பிடுகின்றார்.

புதிய வரவாகப் 'பனிப்புலத்திணை'

பனியும் பனிசார்ந்த நிலமும் பனிப்புலமாகும். ஈழம் என்று சொல்லப்படுகின்ற இலங்கைத் தீவில் இருந்து போர்ச் சூழல் காரணமாகத் தங்கள் பாரம்பரிய நிலங்களைப் பறிகொடுத்து, வலுக்கட்டயாமாக அதிக அளவில் தமிழ் மக்கள் வெளியேற்றப் பட்டதால், அவர்கள் பல நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர். அதில் அனேகமான தமிழர்கள் பனி சூழ்ந்த வடதுருவத்தைச் சூழ உள்ள நாடுகளுக்கு குறிப்பாகப் பனிப்புலத்திற்குப் புலம் பெயர்ந்தார்கள். தாங்கள் வாழ்ந்த இடத்தையும் சொந்த பந்தங்களையும் நினைத்து அவர்கள் தினமும் பிரிவுத் துயரால் மனம் உருகுவதால், 'உருகலும் உருகல் நிமித்தமும்' எழும் மனவுணர்வுகள் காரணமாக எழும் உரையாடல்களும் இந்த நிலத்திற்கு இயல்பானதாக இருக்கின்றது.

ஆறாம்நிலத்திணை

இந்த ஆறுதிணை நிலங்களைப் பற்றியும் இப்போது பார்ப்போம். மருதம், நெய்தல், முல்லை, குறுஞ்சி, பாலை என்று ஐந்து திணை நிலங்களாகத் தமிழர் வாழ்ந்த இடங்களைச் சங்க இலக்கியங்களில் அடையாளப்படுத்தி இருந்தனர். நிலத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பகுக்கப்பட்ட பாகுபாடுதான் 'நிலத்திணை' என்று அழைக்கப்பட்டது. தொடக்கத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நான்கு வகை நிலத் திணிவுகளைக் கொண்டதாகத் தமிழ் இலக்கியம் இருந்தது. சங்க காலத்தில் வாழ்ந்த தொல்காப்பியரின் தொல்காப்பியத்தில் இந்த நான்கு திணைகளும் தான் இடம் பெற்றிருக்கின்றன.

'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே' என்கிறது தொல்காப்பியம்.

பின்னாளில் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிமம் கொண்ட போது அது ஐந்தாவது திணையாகத் தமிழ் இலக்கியத்தில் கணிக்கப்பட்டது. காலத்திற்கு ஏற்ற தேவை கருதிச் சங்ககால நான்கு திணைகள் ஐந்தாக மாறும் போது, இன்றைய தேவை கருதி நிலத்திணைகள் ஆறாக மாறுவதில் தவறில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

தமிழ்நாட்டு மண்ணில் 'பாலை' என்று கூறும்படி தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லும் படியாக நிலம் ஒன்றுமில்லை. முல்லை நிலமும், அதற்கு அருகே இருக்கும் குறிஞ்சி நிலமும் கோடை காலத்தில் ஏற்படும் அதிக வெப்பம் காரணமாக ஆங்காங்கே திரிந்து பாலை என்னும் படிமை நிலையைக் கொண்டிருக்கின்றது. இதைச் சிலப்பதிகாரத்தில் உள்ள காடுகாண்காதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

'முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து,
நல் இயல்பு இழந்து, நடுங்கு துயர் உறுத்து,
பாலை என்பது ஓர் படிவம் கொள்ளும்' (காடுகாண்காதை)

இந்த ஐந்தும்தான் சங்க இலக்கியத்தில் தமிழர் நிலத்திணைகளாக இருந்தன. தமிழரின் வாழ்விடங்கள் என்று கணிக்கப்பட்டால் அவர்கள் வாழும் நிலத்தின் அமைப்பு முக்கியமாகிறது. அதனால்தான் இன்றைய தமிழ் இலக்கியத்தில் ஆறாம் நிலத்திணையாக பனியும் பனி சூழ்ந்த பகுதியும் 'பனிப்புலம்' என்று முக்கிய இடத்தைப் பெறுகின்றது. பனிப்புலம் என்று குறிப்பிடும் போது, புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் வடதுருவப் பகுதி நாடுகளின் பனிப்புலத்தில், அதிக தமிழர்கள் வாழும் கனடா நாட்டு 'பனியும் பனி சூழ்ந்த நிலமும்' முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

மலையும் மலை சார்ந்த நிலத்தைக் குறிஞ்சித் திணை என்றும், காடும், காடு சார்ந்த நிலத்தை முல்லைத் திணை என்றும், இந்த இரண்டு நிலங்களுக்கும் நடுவே உள்ள பாழ்நிலத்தை பாலைத் திணை என்றும், வயலும் வயல் சார்ந்த நிலத்தை மருதத் திணை என்றும், கடலும் கடல் சார்ந்த இடத்தை நெய்தல்

திணை என்றும் சங்க இலக்கிய காலத்தில் அழைத்தனர். இத்தகைய சங்க இலக்கிய நிலங்கள் இயல்பியல் அடிப்படையிலான பகுப்புக்களாக மட்டும் இருக்கவில்லை, அக்கால மக்களின்; வாழ்வியலோடும் இணைந்தவையாகவும் அமைந்திருந்தன. எனவேதான் இன்றைய தமிழர்களின் வாழ்நிலங்களில் ஒன்றான பனியும் பனி சூழ்ந்த நிலத்தை 'பனிப்புலம்' என்று அழைக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. எனவேதான் இது ஆறாம் நிலத்திணையாக இடம் பெறுகின்றது.

சங்க இலக்கியத்தில் இந்த ஐந்திணைகளுக்கும் நிலம் சார்ந்த பண்புகளும், உளம் சார்ந்த பண்புகளும் இருந்திருக்கின்றன. சில விசேட பண்புகளையும் தமிழர் வாழ்ந்த நிலங்கள் கொண்டிருந்ததாக சங்க இலக்கியம் எடுத்துக் காட்டுகின்றது. இத்திணைகளுக்குரிய மனிதருள் பொதுவாக எழும் உணர்வுகளையும் அது சார்ந்த வாழ்வியற் கூறுகளையுமே அவர்களின் பொதுப்பண்புகளாகச் சங்கஇலக்கியம் கூறுகின்றது. அந்த வகையில் நிலத்தின் அமைப்புக்கு ஏற்ப உரிப்பொருளாகப் பொதுவாகக் குறிஞ்சி நிலத்தில் புணர்தலும், முல்லை நிலத்தில் இருத்தலும், மருதநிலத்தில் ஊடலும், நெய்தல் நிலத்தில் இரங்கலும், பாலை நிலத்தில் பிரிதலும் என அந்தந்த நிலங்களுக்கான பொதுப்பண்புகளை இலக்கியம் எடுத்துக் காட்டுகின்றது. எனவே ஆறாம் நிலத்திணையான பனிப்புலத்தில் 'உருகல்' பொதுப் பண்பாகக் கொள்வதற்கு இடமுண்டு.

ஆதிகாலத் தமிழர்கள் இயற்கையையே வழிபட்டு வந்தனர். அதன் பின் திணை வாழ்வில் தங்களைக் காத்தவர்களையும் கடவுளாக வணங்கினர். தமிழர் மரபில் ஐந்திணை வாழ்வியல், வழிபாடு முறைகள் இதனால்தான் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றன.

'மாயோன் மேய காடுறை உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும், வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச், சொல்லியமுறையான் சொல்லவும் படுமே'

என ஒவ்வொரு நிலத்திற்கான தெய்வங்களையும் குறிப்பிட்ட தொல்காப்பியர் பாலை நிலத்திற்கான தெய்வத்தைக் குறிப்பிடாததற்குக் காரணம் பாலை என்ற நிலப்பரப்பு அவர்காலத்தில் இருக்கவில்லை. நால்வகை நிலங்களுக்கும் முறையே முருகன், திருமால், இந்திரன், வருணன் ஆகிய கடவுள்களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. தமிழ் இலக்கியத்தில் பாலைநிலத்துக் கடவுளாக கொற்றவையைப் பின்னாளில் குறிப்பிட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

பனி சூழ்ந்த ஆறாந்திணை நிலத்திற்குச் 'சூரியக்கடவுளை' குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். உத்தராயண புண்ணிய காலம் தை மாதம் தொடங்குவது மட்டுமல்ல, தை மாதப் பிறப்பு 'பொங்கல்' திருநாளாகவும், கனடாவில் தமிழர் மரபுத் திங்களாகவும் கொண்டாடப்படுகிறது.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்று பாகுபாடுகளில், புலம் பெயர்ந்த அதிக தமிழர்கள் வாழும் கனடா போன்ற வடதுருவ பனி உறையும் நாடுகளின் நிலத்தை இந்தப் பொதுப் பண்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 'பனியும் பனிசார்ந்த நிலத்தின்' உரிப்பொருள் பொதுப்பண்பாக **'உருகல்'** என்பதை எடுத்துக் கொள்ளலாம். பனிக்கட்டி போன்றவை (வெப்பத்தினால்) இளகுதல், மனம் நெகிழ்தல், தாயக உறவுகளை எண்ணி ஏங்குதல், சொந்தங்களைப் பிரிந்த கவலையால் மெலிதல் போன்ற நிலைகளுக்கு இந்தப் பண்பு பொருந்தும் என்றே எடுத்துக் கொள்ளலாம்.

பனிநிலம், பனிக்காலம் முதற்பொருளாக வரலாம். **தைமாதமும், சூரியக்கடவுளும்** ஆறாந்திணை கருப்பொருளில் இடம் பெறுவது பொருத்தமாக இருக்கலாம். எனவே,

ஆறாம் நிலத்திணை பனியும் பனி சூழ்ந்த பகுதியையும் கொண்டிருப்பதால், பனிப்புலம் என்று அழைக்கப்படலாம்.

- ஆறாம் நிலத்திணை உரிப்பொருள் பொதுப்பண்பாக 'உருகல்' என்பதை எடுத்துக் கொள்ளலாம். **'உருகலும் உருகல் நிமித்தமும்.'**

- ஆறாம் நிலத்திணை தெய்வமாக **சூரியக்கடவுளை** எடுத்துக் கொள்ளலாம்.

- ஆறாம் நிலத்திணை மாதமாக **தைமாதத்தை** எடுத்துக் கொள்ளலாம். தமிழ் நாட்காட்டியில் தமிழர்களின் முதல் மாதமாக இருப்பதாலும், மற்றும் இயற்கையை, உழவர்களை, விவசாயத்திற்கு உதவும் கால்நடைகளை மதித்து இந்த மாதத்தில் தமிழர்கள் பொங்கல் விழா எடுப்பதாலும், தை மாதத்தை கனடா அரசாங்கம் மரபுத்திங்கள் மாதமாக அங்கீகரித்திருப்பதாலும் தை மாதத்தை ஆறாம் நிலத்திணை மாதமாக எடுத்துக் கொள்ளலாம்.

- ஆறாம் நிலத்திணைக்கான பறவைகளாக **வாத்து, சீஹுள்** (Seagull) என்று அழைக்கப்படுகின்ற வெண்ணிறமான கடற்புறா போன்றவற்றைக் குறிப்பிடலாம். சங்ககாலத்து இலக்கியத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் குருகு பறவையில் இருந்து இது சற்று மாறுபட்டது. இதன் அலகுகளும், கால்களும் சிறியனவாகும். இந்தப் பறவைகள் பனிக்காலத்தில் வேறு இடங்களுக்கு வலசை போய், பனிக்காலம் முடிந்ததும் திரும்பி வருகின்றன.

- ஆறாம் நிலத்திணை மிருகங்களாக '**கருங்கரடி, வெண்கரடி**' போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். இதில் வெண்கரடி பனிப்பிரதேசமான துருவப் பகுதிகளில் வாழ்கின்றது. கருங்கரடி காட்டுப் பகுதிகளில் வாழ்கின்றது. இவை ஏனைய கரடிகளைவிட வித்தியாசமாய், உறைபனிக்காலத்தில் உணவைச் சேமிப்பதற்காக உறங்குநிலைக்குச் செல்கின்றன.

- பனிப்புலத்து மரங்களாக **மேப்பில் மரங்களையும், ஊசியிலை** மரங்களையும் எடுத்துக் கொள்ளலாம்.

- பூக்களாக ஊதாநிறமுடைய **சிக்கோரி** காட்டுப் பூக்களைக் குறிப்பிடலாம்.

- **இங்கு பனிக்காலம் பெரும்பொழுதாகவும், முன்னிரவு சிறுபொழுதாகவும்** இருக்கிறது. பனிக்காலத்தில் பகல் பொழுது குறைவானது என்பதால், முன்னதாகவே ஊரடங்கிவிடுகின்றது. மனித உணர்வுகளைத் தூண்டுவதற்கு இதமான குளிரும், அருகாமையும் சாதகமாகவே இருக்கின்றது.

- பனிப்புலத்துத் தொழில் என்று பார்க்கும்போது, ஐந்து நிலத்திணைகளிலும் இருந்து புலம் பெயர்ந்த தமிழ் மக்கள்தான் ஏனைய பல்கலாச்சார இனத்தவர்களுடன் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். **வர்த்தகம், வீடுவிற்பனை** போன்ற பல தொழில் துறைகளிலும், **குளிராடைகள் தயாரித்தல், பனிக்கால அணிகலன்கள், பனிக்கால விளையாட்டுப் பொருட்கள் போன்றவை தயாரித்தல், பனியகற்றுதல்** போன்ற தொழில் துறைகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

- இந்த நில மக்களின் விளையாட்டுகளை எடுத்துப்பார்த்தால், பனிக்காலத்தில் சிறுவர்கள் **பனிப்பந்து** செய்து ஒருவருக் கொருவர் எறிந்து விளையாடுவதும், **பனிமனிதன்** செய்து அலங்கரிப்பதும், குடும்பமாகப் **பனிச் சறுக்கல்** விளையாட்டில் ஈடுபடுவதையும், **ஐஸ்கொக்கி** என்று சொல்லப்படுகின்ற விளையாட்டில் பெரும் போட்டிகள் நடத்துவதையும் அவதானிக்க முடியும்.

- தொல்காப்பிய நிலத்திணைகளோடு ஒப்பிடும் போது, ஆறாம் நிலத்திணை **கனடா போன்ற, வடதுருவத்தைச் சூழ உள்ள பனி உறையும் நாடுகளில்** புலம் பெயர்ந்து நிரந்தரமாக வசிக்கும் தமிழர்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும் என்றே சொல்லத் தோன்றுகின்றது. தமிழ் இலக்கியம் சார்ந்த சர்வதேசத்தின் பார்வை கனடாவின் பக்கம் திரும்பி இருக்கும் இச் சந்தர்ப்பத்தில், தமிழ் இலக்கியம் 'ஆறாம் நிலத்திணை' யையும் உள்வாங்கிக் கொண்டால், தமிழ் மொழியைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் கனடா போன்ற பனிப்புல நாட்டுத் தமிழர்களும் தமிழ் இலக்கிய வரலாற்றில் **'ஆறாம் நிலத்திணை'** மக்களாகக் காலமெல்லாம் இடம் பிடித்துக் கொள்வார்கள். அடுத்த

தலைமுறையினருக்கும் 'ஆறாம் நிலத்திணைத் தமிழர்கள்' பற்றி அறிந்து கொள்ள சிறந்ததொரு ஆவணமாகவும், அவர்களின் முகவரியாகவும் இது அமையும் என்பதில் ஐயமில்லை.

துணைநின்ற நூல்கள்

1. ஆறாம் நிலத்திண - ஆசிரியர் குரு அரவிந்தன். இனிய நந்தவனம் பதிப்பகம், திருச்சி.
2. தமிழர் தகவல் - குரு அரவிந்தன் எழுதிய 'ஆறாம் நிலத்திணை தமிழ் இலக்கியத்திற்குப் புதிது.' - 29வது இளமதிச் சுவடு ஆண்டுமலர், கனடா.
3. விக்கிப்பீடியா: தொல்காப்பியம்
4. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%A4%E0%AF%8A%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BE%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D
5. விக்கிப்பீடியா: தொல்காப்பிய திணைகள் - திணை விளக்கம்.

ஆறாம் நிலத்திணை - பனிப்புலம்	
பொதுப்பண்பு	உருகலும் உருகல் நிமித்தமும்
கடவுள்	சூரியக்கடவுள்
மாதம்	தைமாதம்
பறவைகள்	வாத்து, கடற்புறா (Seagull)
மிருகங்கள்	கருங்கரடி, வெண்கரடி
மரங்கள்	மேப்பிள், ஊசியிலை பைன்மரங்கள்
பூக்கள்	சிக்கோரி (Chicory)
பெரும் பொழுது	பனிக்காலம்
சிறுபொழுது	முன்னிரவு
தொழில்	வர்த்தகம், குளிராடை தயாரித்தல்
	பனியகற்றல்
விளையாட்டு	பனிப்பந்து எறிந்து விளையாடுதல்
	பனிமனிதன் செய்தல்
	பனிச்சறுக்கல் ஐஸ்கொக்கி

தொ.மா.க.123

இலக்கண நூற்களின் திறவுகோல் தொல்காப்பியச் செய்யுளியலே

முனைவர் சண்முக. செல்வகணபதி
முன்னாள் முதல்வர், அரசர் கல்லூரி, திருவையாறு
மருத்துவக்கல்லூரிச் சாலை, தஞ்சாவூர் 613004
karpagamsureshkumar@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொன்மை நூல் தொல்காப்பியம். இலக்கண நூல். தமிழில் கிடைத்துள்ள நூற்களுள் மூத்தநூல். எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்ட நூல். 27 இயல்களையும் 1610 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. பொருளதிகார இயல்களுள் செய்யுளியலும் ஒன்றாகும். செய்யுளுக்குரிய எழுத்து, சொல், பொருள், வடிவம், கற்பனை, உணர்ச்சிகள் குறித்து உரைக்கும் இயலாகும் மற்றும் ஏனைய 26 இயல்களுக்குரிய திறவுகோலாகவும் செய்யுளியல் அமைந்துள்ளது. தொல்காப்பியத்திற்கு முந்துள்ள நூற்களின் பொருளமைதிகளையும் காட்டும் இயல். பிற்காலத்தில் தோன்றிய ஐந்திலக்கண நூற்களும் வழிகாட்டும் இயல். இவற்றுள் 34 உறுப்புகள் உள. இவற்றுள் 26 உறுப்புகளை ஒருவகையாகவும் எஞ்சிய 8உறுப்புகளைத் தனி வகையாகவும் காண்பர்.

மாத்திரை, எழுத்தியல், அசை, சீர், அடி , யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம் என்கிற 26 பகுதிகள் ஒருவகையாகவும், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்ற எட்டும் ஒருவகையாகவும் அமைந்துள்ளன.

செய்யுளுக்குரிய யாப்பியல், பொருள், சுவை , பாடுதுறை, பாடுமுறை, பாடலில் அமையும் அழகு ஆகியவைகள் தொல். பொருளதிகாரத்தில் பாங்குடன் அமைந்துள்ளன. இப்பொருளதிகாரத்தின் திறவுகோலாக அமைந்த செய்யுளியல் யாப்பியல், உவமை, சுவை, மரபு, துறை, செய்யுள்உத்தி போன்றனவற்றையும் உரைத்துள்ளது. இவை பிற்காலத்தில் விரிந்து தனித்தனி நிலையில் வளர்ந்திட வழிகாட்டியுள்ளது. எழுத்து, சொல், பொருள் மூன்றிலக்கணம் யாப்பு, அணி இலக்கணத்துடன் ஐந்தாக வளர்ந்துள்ளது. புலமையையும் தனி இலக்கணமாகக் கருதி ஆறாகவும் விரிவடைந்துள்ளது.

மாத்திரை, அசை, சீர்,பா, பாக்களில் அமையும் அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, அளவியல், பண்ணத்தி, ஏழுநிலங்கள், வாழ்த்தியல் வகைகள் போன்றனவற்றை உரைக்கும் சங்க யாப்பு, பல்காயம், அவிநயம், காக்கைப்பாடினியம், மயேச்சரம், நற்றத்தம், பனம் பாயிரம், பரிமாணம் போன்ற யாப்பயில்களைச் சுட்டும் இயலாகவும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, வெண்பாட்டியல், பன்னிரு பாட்டியல், நவநீதப்பாட்டியல் , வரையறுத்தப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல் போன்ற பாட்டியல் நூல்களின் வளர்ச்சிக்கும் தொல்காப்பியச் செய்யுளியல் வழிகாட்டி நிற்கின்றது.

தொல்காப்பியச் செய்யுளியலுக்கு எழுந்த இளம்பூரணர் பேராசிரியர் பாவலர் பாலசுந்தரனார் உரைகள் இவ்வியலின் ஆழத்தையும் நுட்பத்தையும் தெரிவிக்கின்றன. தொன்மை செய்யுள் மரபுணர்த்தும் செய்யுளியல் வளங்களைக் கண்டறிந்து வளர்ந்து வந்த பாதையைத் தெரிந்துணர்வோம்.

முன்னுரை

தமிழ் இலக்கண நூற்களின் திறவுகோலாகத் தொல்காப்பியச் செய்யுளியல் அமைந்துள்ளது. தொல்காப்பியர் தமிழ்கூர் நல்லுலகில் நிலவிய வழக்கையும் செய்யுளையும் ஆராய்ந்துள்ளார். முந்து நூற்களையும் கண்டு முறைப்பட எண்ணி எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் 1610 நூற்பாக்களில் தந்துள்ளார். இந்நூலுக்கெழுந்த உரைகள் மூலநூலை விளக்குவதொடு அவரவர் காலத்தில் வளர்ந்த வழக்காறுகளையும் தழுவி உரை தந்துள்ளன. 'இழைத்த இலக்கணம் பிழைத்தது போக வருவன உள வெனினும் வந்தவற்று இயலான் திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடன்" (தொல்.செய்.நூ.235) என்ற கோட்பாட்டின்படி பழையன கழிந்தவை புதியனவற்றையும் உரைகாரகர்கள் காட்டியுள்ளனர். இதனால் தொன்மை நூலான தொல்காப்பயிம் இன்றும் வாழும் நூலாகத் திகழ்ந்து வருகிறது.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. பொருளதிகாரத்தின் இயல்களுள் செய்யுளியலும் ஒன்றாகும். 235 நூற்பாக்களைக் கொண்ட பெரிய இயல். செய்யுளுக்குரிய 36 உறுப்புக்களின் இலக்கணம் உரைக்கின்றது. இந்த 36 உறுப்புக்களை இருபகுதிகளில் விளக்குகிறது. மாத்திரை முதலாக வண்ணம் ஈறாக உள்ள 26 உறுப்புகள் ஒருவகை. 8 வகையான வனப்புகள் பற்றி உரைப்பன மற்றொரு வகை. ஆக உறுப்புகள் 34. இதனைச் செய்யுளியல் முதல் நூற்பா மூலம் அறிகிறோம்.

மாத்திரை , எழுத்தியல், அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப்பு எனாஅ
மரபே தூக்கே தொடைவகை எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅ
திணையே கைகோள் பொருள்வகை எனாஅ
கேட்போர் களனே,காலவகை எனாஅ
பயனே பொருளே துறைவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ
மாட்டே வண்ணமொடு யாப்பியல் வகையின்
ஆறு தலையிட்ட அந்தா லைத்தும்
அம்மை, அழகு, தொன்மை, தோலே
விருந்தே, இயைபே, புலனே, இழைபெனா அப்
பொருந்தக் கூறிய எட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதின் கூறி வகுத்துரைத்தனரே (தொல். செய்.1)

மாத்திரை, எழுத்து, அசை, சீர், யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு , வண்ணம் என்கிற 26 உறுப்புகளையும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்கிற எட்டு வனப்புகளையும் இவற்றைச் சேர்த்து 34 செய்யுள் உறுப்புகளைக் கூறியுள்ளார்.

பேராசிரியர் முனைவர் சோ.ந.கந்தசாமி அவர்கள் புறத்துறுப்புகள் அகத்துறுப்புகள், பொருள் புலப்பாட்டு உறுப்புகள், அடிப்படை வனப்புகள் என்று மூன்றாகக் குறிப்பிடுகின்றார். (தமிழ்யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் முதல் பாகம், முதல் தொகுதி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989, ப.287).

மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, பா, அளவு என்பன புறத்துறுப்புகளாகும். (மேலது, ப.93). அகத்துறுப்புகள் (உள்ளடக்கத்தைத் தீர்மானிக்கும் உறுப்புக்களாகும்.) திணை, கைகோள், கூற்று, கேட்போர் பொருள் வகை, துறை ஆகிய பன்னிரு துறைகளும் அகத்துறுப்புகளாகும். (மேலது, ப.250) அடிப்படை வனப்புகள் எட்டு. இந்நிலையில் 34 உறுப்புகளும் செய்யுளியலில் அமைந்துள்ளன. இவற்றை மூன்று கோட்பாடுகளாக வகுத்துக் காணலாம்.

1. வடிவக் கோட்பாடு 2. பொருள் கோட்பாடு 3. அழகுக் கோட்பாடு

வடிவக் கோட்பாட்டிற்குரிய 14 உறுப்புகள் யாப்பிலக்கணம், பாட்டியல் நூற்கள் பல தோன்றுவதற்கும் அடிப்படையாக அமைந்துள்ளன. மேலும் எழுத்து, மாத்திரை என்ற உறுப்புகள் எழுத்திலக்கணத்தொடு தொடர்புடையவை. பொருள் கோட்பாட்டில் அமைந்துள்ள கூற்று, கேட்போர், சொற்சீர் இயல்பு, பொருள்கோள், பாக்களில் அமையும் சொல் தொடர்பு நிலைகள் போன்றன சொல் இலக்கணங்களுடன் தொடர்புடையன. திணை, கைகோள், கூற்று, கேட்போர், தலைவி வேட்டல், வாயில் கூற்று, களன், காலம், பயன் மெய்ப்பாடு போன்றன அகப்புறக் கோட்பாட்டொடு பொருள் தொடர்புடையன. வண்ணம், வனப்பு ஆகியன அலங்காரத்தொடு தொடர்புடையன.

இவற்றின் அடிப்படையில் பிற்காலத்தில் நூற்கள் பல எழுந்துள்ளன. எழுத்து, சொல் இலக்கணங்கள் கூறும் இரு, மூன்று, நான்கு, ஐந்து அறு வகை இலக்கண நூற்கள் எழுந்துள்ளன. மேலும் பொருள் இலக்கணம் அகம், புறம், யாப்பு, உவமை இலக்கணங்களாக விரிந்துள்ளன. அக இலக்கணத்தில் இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், அகப்பொருள் விளக்கம், களவியல் காரிகை, மாறனகப் பொருள் நூல்கள் தனி நிலையில் வளர்ந்துள்ளன. புறப்பொருள் பற்றி புறப்பொருள் வெண்பாமாலை நூல் தோன்றியுள்ளது. செய்யுள் இலக்கணத்தில் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, பாட்டியல் நூற்கள் தோன்றியுள்ளன. உவமை இலக்கணம் கூறும் அணி, அலங்கார நூற்கள் தோன்றியுள்ளன. இவைகளின் வேராகத் தொல்காப்பியச் செய்யுளியல் அமைந்துள்ளது.

செய்யுளியல் அமைப்பு தொகை நிலை, தொல்காப்பியச் செய்யுளியல்

தொல்காப்பியச் செய்யுளியல் 235 நூற்பாக்களில் 34 உறுப்புகளுக்கு விளக்கம் தந்துள்ளது. இவற்றையும் இவற்றின் நூற்பா அமைப்புகளையும் காண்போம்.

பொருள்	நூற்பா எண்
மாத்திரை, எழுத்தியல் வகை	1, 2
அசை வகை	3-9
அசைக்கும் சீர்க்கும் புறனடை	10
சீர்வகை	11-30
அடி, ஓசை, வேறுபாடு, தளை	31-73
யாப்பு	71-81
மரபு	82
தூக்கு	83
தொடை வகையும் விரியும்	84-99
நோக்கு	100
பாவகை	101-155
அளவியல்	156-176
திணை	177
கைகோள்	177-180
கூற்றிற்கு உரியோர், கேட்போர்	181-192
இடம், காலம், பயன்	192, 196
மெய்ப்பாடு	197-198
எச்சம், முன்னம், பொருள்வகை, துறை	199-201
மாட்டேறு	202-203

வண்ணம்	204-226
வனப்பு	227-234
புறனடை	235

1. மாத்திரை

எழுத்தொலிக்கும் கால அளவை (Duration) மாத்திரை என்பர். இயல்பான மாந்தரின் கண் இமைத்தற்கும் கை நொடித்தற்கும் உரிய பொழுதைனை ஒரு மாத்திரை அளவாக்கிக் கூறுவர். இவை குறித்துத் தொல். எழுத்தியலும் குறிப்பிடுகின்றது.

கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே (நூற்பா.7)

குற்றெழுத்த ஓர் அளபு இசைக்கும், நெட்டெழுத்த ஈர்அளபு இசைக்கும் மெய்யெழுத்து அரை அளபு இசைக்கும். இவை போல் உயிரளபெடை, ஐகார, ஔகாரக் குறுக்கங்கள், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், மகரக்குறுக்கம் ஆகியவற்றிற்கும் மாத்திரை அளபுகள் கூறப்பட்டுள்ளன.

எழுத்தளபு பற்றி மாத்திரை கூறுவதால் எழுத்தினின்று பிரித்து எடுத்து மாத்திரையைச் சுட்டுதல் இயலாது.

2. எழுத்து

தொல்காப்பியர் எழுத்தினைச் செய்யுள் உறுப்புகளுள் இரண்டாவது உறுப்பாகக் கூறியுள்ளார். செய்யுளின் உறுப்பாகிய எழுத்து ஐந்து நிலைகளில் செய்யுளில் பயன் கொள்ளும்.

1. அசைக்கு உறுப்பாக வரும் குறில், நெடில், குற்றியலுகரம்
2. சீருக்கு உறுப்பாக வரும் எழுத்தெண்ணிச் சீர் வகுத்தல் பழைய மரபு
3. எழுத்தெண்ணி அடிவகுக்க கட்டளை அடிக்கு உறுப்பாக வரும் .
4. பல்தொடைகளுக்கு உறுப்பாக வரும்.
5. வண்ணத்திற்கு உறுப்பாகி வரும்.

3. அசை வகை (நூற்பா.3-10)

தொல்காப்பியர் சுட்டும் மூன்றாவது உறுப்பு அசை, இதனை அசை வகை என்பர். எறும்பின் வரிசையைப் போல் சாரியாகச் செல்லும் ஒலித்தொடர்பின் ஒழுங்குகள் அசையாகும். நேர், நிரை, நேர்பு, நிரைபு என அசை நான்கு வகைப்படும்.

4. சீர்வகை (நூற்பா எண்.11-50)

இரண்டு அசை கொண்டு புணர்த்தும் மூன்றசை கொண்டு புணர்த்தும் வரும் நிலையைச் சீர் என்பர். இவை இயற்சீர், உரிச்சீர் என இருவகைப்படும். இவை ஓரசை, ஈரசை, மூவசைச் சீர்களாகவும் வரும். ஓரசைச்சீர் 4, ஈரசைச்சீர் 16, மூவசைச்சீர் 64. இவை பாக்களுக்குரிய சீர்களாக வரும்.

5. அடி (நூற்பா எண்.51-73)

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாக அடியைக் குறிப்பிடுவார். நாற்சீர் கொண்டது அடி எனப்படும். இவை கட்டளை குறளடி, கட்டளை சிந்தடி, கட்டளை அளவடி, கட்டளை நெடிலடி, கட்டளை கழி நெடிலடி என வரும். குறளடி3, சிந்தடி3, அளவடி5, நெடிலடி3, கழி நெடிலடி3, ஆக 17 நிலங்களாக வரும். இப்பதினேழும் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடிகளுடன் உறழ 17 x 5 = 70 எண்ணிக்கைப் பெறும். இவை அசைச்சீர், இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்பா உரிச்சீர், வஞ்சி உரிச்சீர் என ஐந்தொடு உடன் கூடிய ஈரசை உரிசீர் உறழ 5 x 5 = 25 வரும். மூவசைச்சீர் உறழ 25 x 5= 625 வரும். இவை மேலும் நாலசைச்சீரொடு உறழ 625 x 5 = 3125. நாலசைச்சீரினும் மிக 3125 x 5 = 15625 என விரிந்து வரும்.

6. யாப்பு (நூற்பா எண்.78-81)

யாப்பு கட்டுதல். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற ஆறு செய்யுள் உறுப்புகளைக் கட்டி நிற்கும். இவ் யாப்பு எழு வகைப்படும். 1.பாட்டு, 2.உரை, 3.நூல், 4.வாய்மொழி, 5.பிசி 6.அங்கதம், 7.பழமொழி

7. மரபு (நூற்பா.82)

இயற்சொல், திரிசொல், திசைச்சொல். வடசொல் என்று கூறப்பட்ட நான்கு சொற்களும் பாடல்களில் வருதல் மரபாகும்.

8. தூக்கு (நூற்பா எண்.83)

பாவில் அமையும் ஓசையைத் தூக்கி நிற்பது தூக்காகும். இது குறித்து நூற்பா 77-83 கூறுகின்றன. அகவலோசை, செப்பலோசை, துள்ளல் ஓசை, தூங்கலோசை இவை முறையே ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சிப்பாவிற்குரியன.

9. தொடை (நூற்பா எண்.84-99)

யாப்பு உறுப்புகளைத் தொடுத்து நிற்பது தொடையாகும். பூக்களைத் தொடுத்தல் போல் யாப்பு உறுப்புகளைத் தொடுத்து வரும். இத்தொடை வகைகள் 1.மோனை, 2.எதுகை, 3.முரண், 4.இயைபு, 5.அளபெடை, 6.பொழிப்பு, 7.ஒரூஉ, 8.செந்தொடை, 9.நிரல்நிறை, 10.இரட்டை என பத்து வகைப்படும். இவற்றுள் அடிதோறும் வருவன ஐந்து. மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை அடிக்கண் வருவன ஐந்து பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, நிரல் நிறை, இரட்டை.

10. நோக்கு நூற்பா எண்.100)

மாத்திரை முதலாக அடி நிலையளவும் நோக்குதல் நோக்காகும். பாடல் பகுதியை மீண்டும் மீண்டும் கூர்ந்து நோக்கி அதன்கண் அமைந்த பொருள்நலன்களை உய்த்தல் நோக்காகும்.

11. பாவகை நூற்பா எண்.101-155

தொடை நயங்கள் விரவி வருவதனைப் பா என்பர். சேட்புலத்து இருந்த காலத்தும் எழுத்தும் சொல்லும் தெரியாமல் ஒருவர் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உரைத்தற்கு ஏதுவாகிய பரந்துபட்டுச் செய்வதோர் ஓசை பா எனப்படும் என்று பேராசிரியர் விளக்கம் தந்துள்ளார். இப்பா நான்கு வகைப்படும். ஆசிரியம், கலிப்பா, வெண்பா, வஞ்சிப்பா இவை அளவாலும் பொருளாலும் பல்நிலைகளில்வகைப்படுத்தப்படும். மருட்பா என்ற வகையும் உள

12. அளவியல் (நூற்பா.156-176)

பாவின் அடி அளவு நாற்சீர். நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே (தொல்). அளவின் சிறப்பே பாட்டாகும். ஆசிரியப்பா சிற்றெல்லை 3 அடி பேரெல்லை 1000 அடி. வஞ்சிப்பாவிற்குத் தனி அடிவரையறையைத் தொல்காப்பியர் கூறவில்லை. வெண்பா நான்கு அடியால் வரும். குறுவெண்பாட்டு 2 அடியிலும் நெடுவெண்பாட்டு 12 அடி அளவில் வரும். ஒத்தாழிசைக் கலிப்பா தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், என்ற உறுப்புகளொடு வரும். அம்போதரங்க ஒருபோகு சிறுமை 30 அடி பெருமை 60 அடிகளில் வரும். பரிபாடல் சிறுமை 25 அடி பெருமை 400 அடிகளில் வரும். அடி வரையறை அல்லாத நிலையில் பிசி, முதுமொழி, மந்திரம், உரை என்பன உள.

13. திணை (நூற்பா எண்.177)

செய்யுள் உறுப்புகளின் பொருள் கோட்பாட்டில் திணையும் அடங்கும். அகத்திணை ஏழு. புறத்திணை ஏழு. திணைகள்14. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை பெருந்திணை ஏழும் அகத்திணை.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்ப்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொல்)

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் , பொது என புறத்திணை ஏழாகும்.

14. கைகோள் (நூற்பா எண்.177-180)

கைகோள் என்பது ஒழுக்கக் கோட்பாடாகும். இது களவு, கற்பு என இருவகைப்படும். இவை பொருளியல் கோட்பாட்டில் வரும்.

15. கூற்று வகை (நூற்பா.181-192)

செய்யுள் கூறுவாரைக் கூற்றிற்குரியோர் என்பர். களவின் கண், கூற்று, கற்பின் கண் கூற்று என இருவகைப்படும். களவின் கண் தலைவன், தலைவி, தோழி, செவிலி, பாங்கன் பார்ப்பான் என்பாரும் கற்பின்கண் தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன், பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர் கண்டோர் ஆகியோரும் கூற்றுக்குரியவர் ஆவர். இவர்களில் கேட்போரும் உளர்.

16,17,18. களம், காலம், பயன், (நூற்பா எண்.193-196)

செய்யுளில் கூறப்படும் பொருள் இன்ன இடத்தில் காலத்தில் எழுந்தது என்பதனையும் அதன் பயனும் கூறப்படும். தெய்வத்தமிழில் பயன்கூறுவதனைத் திருக்கடைக் காப்பு என்பர்.

19.மெய்ப்பாடு (நூற்பா எண்கள் 197-198)

மெய்யின் கண் தோன்றும் சுவை வெளிப்பாடு மெய்ப்பாடாகும். இவை எட்டு வகைப்படும். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என எட்டாகும்.

20. எச்சவகை (நூற்பா 198)

பிறிதோர் சொல்லினால், பிறிதோர் குறிப்பினால் எஞ்சி நின்று பின் கொணர்ந்து முடிக்கப் பெறுவது எச்சமாகும். இது 1.பிரிநிலை, 2.வினை, 3.பெயர், 4.ஒழியிசை, 5.எதிர்மறை, 6.உம்மை, 7.எண், 8.சொல், 9.குறிப்பு, 10.இசை என எச்சவகை பத்தாகும். இவை சொல்லிலக்கணப்பாற்பட்டன.

21. முன்னம் (நூற்பா எண்.199)

இவ்விடத்து இச்செய்தியை இவர்க்கு இவ்வாறு உரைக்கத்தகும் எனக் குறித்து அவ்விடத்து அவர்க்கு அம்மொழியை உரைப்பது முன்னமாகும். இது சொல்லிலக்கண பாற்படும்.

22. பொருள் (நூற்பா எண்.200)

புலவன் கூறவிழைவது பொருண்மையாகும். இன்பம், துன்பம், புணர்வு, பிரிவு, ஒழுக்கம் பொருள் பற்றி வருவது. இது பொருள் இலக்கணம் பாற்படும்.

23. துறை (நூற்பா எண்.201)

முதற்பொருள், கருப்பொருள்கள் முறை பிறழ வந்தாலும் இஃது இதன் பாற்பட வருவது என்று வகுத்துரைப்பது துறையாகும். இதுவும் பொருளிலக்கணம் பாற்படும்.

24. மாட்டேறு (நூற்பா எண்கள் 202-203)

செய்யுளில் பொருள் கொள்ளுங்கால் அகன்று பொருள் கிடப்பச் செய்யினும் அணுகிக் கிடப்பச் செய்யினும் பொருள்முடிவிற்கேற்பக் கொள்ளுதல் மாட்டேறாகும்.

25. வண்ணம். (நூற்பா எண்க.ள 204-226)

ஓசையே பாட்டின் உடல் போல் அமையும். பாவின் கண் நிகழும் ஓசை அமைதியை வண்ணம் என்பர். இது 20 வகைப்படும். இவை ஐந்து நிலைகளில் அமையும்.

1.எழுத்தோசைகளின் நீளம் 2.எழுத்தோசையின் தன்மை

3.எழுத்தோசையின் காலவேகம் 4.யாப்பு, 5.பாடு பொருள்

என்ற நிலைகளில் 20 வண்ணங்களைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் இவ்வண்ணங்கள் நூறாக வளர்ந்து உள்ளன.

26. வனப்பு (நூற்பா எண்கள்.227-234)

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகள் 34 என்பர். இவற்றுள் மேலே கூறப்பட்ட 26 உறுப்புகளும் அடங்கும். எஞ்சிய எட்டும் வனப்புகளாகும். 1.அம்மை, 2.அழகு, 3.தொன்மை, 4.தோல், 5.விருநது 6.இயைபு, 7.புலன், 8.இழைவு இவை செய்யுளுக்கு அழகு தரும் உறுப்புக்களாகும். இவற்றைத் தொல்காப்பியர் தனித் தனியாக உரைத்துள்ளார். இவையனைத்தும் கவிஞனின் புலமைத் திறத்தின் பாற்படும். செய்யுளியலில் நிறைவாகத் தொல்காப்பியர் புறனடை நூற்பாவைத் தந்துள்ளார்.

செய்யுள் மருங்கில் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போக
வருகுவ உளவெனினும் வந்தவற் றியலால்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே 225

தொல்காப்பிய செய்யுளியல் பொருள் அதிகாரத்தின் ஒரு பகுதி. ஏனைய எழுத்து, சொல் அதிகாரங்களையும் தழுவியுள்ளது. பிற்காலத்தில் பொருளதிகார இலக்கண பகுதி பொருள், யாப்பு, அணி, புலமை இலக்கணங்கள் வளர்வதற்கும் துணை நிற்கின்றது. இவற்றிற்கு வழிகாட்டும் திறவுகோலாகத் தொல்காப்பியச் செய்யுளியல் அமைந்துள்ளது. பிற்காலத்தில் வளர்ந்த அறுவகை இலக்கண நூற்கள் வளரவும், இலக்கண உரை நூற்கள் தோன்றவும் வழிகாட்டி நிற்கின்றது. இவ்விலக்கண நூற்கள் பற்றிக் காண்போம்.

எழுத்து, சொல் இலக்கண நூற்கள்

எழுத்து, சொல் இலக்கணம் கூறும் நூலாக நன்னூல் அமைந்துள்ளது. பவணந்தி முனிவரால் இயற்றப் பெற்றது. மூன்றாம் குலோத்துங்கள் (கி.பி.1178-1218) காலத்தில் கங்கநாட்டை ஆட்சி செய்த அமரா பாண சீயகங்கன் காலம். பவணந்தியார் காலமாகும். கி.பி.13.நூற் முற்பகுதி

தொல்காப்பியரின் எழுத்து சொல்லிலக்கண அடிப்படையில் எழுந்த நூலாக நன்னூல் இருந்தாலும் காலத்திற்கேற்ற வளர்நிலைகளை உள்ளடக்கியுள்ளது. தொல்காப்பியர் எழுத்திலக்கணத்தை ஒன்பது இயல்களின் கூறியுள்ளார். நன்னூலார் எழுத்தியல் பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்ற மூன்று இயல்களில் அடங்கியுள்ளார். சொல்லிலக்கணத்தைத் தொல்காப்பியர் ஒன்பது இயல்களில் கூறிட நன்னூலார் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என்ற ஐந்துள் அடக்கியுள்ளார். விரிப்ப வேண்டுவன விரித்தும் சுருக்க வேண்டுவனவற்றைச் சுருக்கியும் தந்துள்ளார். தொல்காப்பிய இளம்பூரணர் உரை நூலையும் தழுவி நன்னூல் அமைநதுள்ளது.

ஐந்திலக்கண நூற்கள்

தொல்காப்பியர் உரைத்த எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றிலக்கணங்களைப் பின் வந்தோர் ஐந்தாக விரித்தனர். பொருள் இலக்கணத்தை அகப்பொருள், புறப்பொருள் என தனி இலக்கணங்களாகக் கண்டனர். அகப்பொருள் கூறும் இறையனார் களவியல் நம்பியகப் பொருள் போன்ற நூற்களும் புறப்பொருள் கூறும் புறப்பொருள் வெண்பா மாலை இலக்கண நூலும் தோன்றின. இவை பொருள் இலக்கண விரிவு பகுதிகளாகும். தொல்காப்பியர் உரைத்த யாப்பியல் வடிவக் கோட்பாடும் பாக்களும் பாவினத்தொடு இணந்து யாப்பிலக்கணமாயிற்று. தொல்காப்பியர் கூறும் உவம இயல் அணிலக்கணமாயிற்று. இவை ஐந்திலக்கணங்களாக அமைந்துள்ளன.

வீரசோழியம்

ஐந்திலக்கணம் என்னும் அமைப்பில் வெளிவந்த முதல் நூல் வீரசோழியமாகும். வீரராசேந்திர சோழனின் (11நூற்) பெயர்களுள் ஒன்று வீரசோழன் என்பதாகும். இம்மன்னன் பெயரால் பொன் பற்றியூர்

சிற்றரசர் புத்தமித்தரனார் இயற்றியது. ஐந்திலக்கணநூல். மேலும் இந்நூலுள் தமிழொடு வடமொழி மரபும் கூறப்பட்டுள்ளன.

வீரசோழியத்தின் பெரும்பிரிவுகள் தொல்காப்பியம் போல் அதிகாரம் என்றும் உட்பிரிவு படலம் என்றும் பெயரிடப் பெற்றுள்ளன. எழுத்ததிகாரத்தில் சந்திப்படலம் என்ற ஒரு படலம் சொல்லதிகாரத்தில் வேற்றுமைப் படலம், உபகாரப் படலம், தொகைப் படலம், தத்திதப் படலம், தூதுப் படலம், பதப்படலம் என ஆறுபடலங்களும் பொருளதிகாரத்தில் பொருட்படலம் ஒன்றும் யாப்பதிகாரத்தில் யாப்புப் படலமும் இதுபோல் அணி பற்றிய அலங்காரப் படலம் உள்பட ஐந்து அதிகாரங்களையும் பத்துப் படலங்களையும் 181 பாடல்களையும் இந்நூல் கொண்டுள்ளது.

இலக்கண விளக்கம் - இலக்கண விளக்கம் ஐந்திலக்கண நூலே இந்நூல் வீரசோழியம். தமிழ்நெறி நூல்களிலிருந்து மாறுபட்டுள்ளது. பிரயோக விவேகமும் மாறுபட்டுள்ளது. இவற்றிலிருந்து புதுநூலாக திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் எழுதப்பட்டது. இலக்கணவிளக்க நூலாகும். இந்நூலைக் **குட்டித் தொல்காப்பியம்** என்பர்.

முதல் அதிகாரம் எழுத்ததிகாரம். எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்னும் ஐந்து இயல்களையும் சொல்லதிகாரம் பெயரியல் வினையியல் இடைச் சொல்லியல், உரிச் சொல்லியல், பொதுவியல் என்னும் ஐந்து இயல்களையும் , நூற்பாக்களையும் கொண்டுள்ளது. மூன்றாவது பொருளதிகாரம் அகத்திணை இயல், புறத்திணைஇயல், அணிஇயல், செய்யுளியல், பாட்டியல் என்னும் ஐந்து அதிகாரங்களையும் 569 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. எழுத்து, சொல், பொருள் அதிகாரங்கள் 941 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. தொல்காப்பியம் போல் இது மூன்றிலக்கண நூலாகும்.

தொன்னூல் விளக்கம் - வீரமாமுனிவர் (8-11-1680-1747) எழுதிய தொன்னூல் விளக்க நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணி அதிகாரம் என்ற ஐந்திலக்கணமாகவும் 370 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. இவர் கொடுந்தமிழ் இலக்கணம் (1728) செந்தமிழ் இலக்கணம் (1730) நூற்களையும் படைத்துள்ளார். (கி.பி.19 நூற்)

முத்து வீரியம் - முத்து வீர உபாத்தியாயர் (கி.பி.19நூற்) படைத்த முத்துவீரியம் ஐந்திலக்கண நூலாகும். எழுத்ததிகாரம் எழுத்தியல், மொழியியல், புணரியல் என்ற மூன்று இயல்களையும், சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், ஒழிபியல் என மூவியல்களையும் பொருளதிகாரம் அகஒழுக்கவியல், களவொழுக்கவியல், கற்பொழுக்கவியல் என மூன்று இயல்களையும் யாப்பதிகாரம் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று அதிகாரங்களையும் அணியதிகாரம் சொல்லணியியல், பொருளணியியல், செய்யுளியல் என மூன்று அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஐந்து அதிகாரங்களிலும் 1288 நூற்பாக்கள் உள்ளன.

சுவாமிநாதம் - கல்லிடைக்குறிச்சி சுவாமிக் கவிராயர் (19நூற்) எழுதிய சுவாமிநாதம் என்ற நூல் ஐந்திலக்கண நூலாகும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற அதிகாரப் பெயர்களையும் ஒவ்வோர் அதிகாரமும் மும்மூன்று உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது. எழுத்ததிகாரம், எழுத்தாக்க மரபு, பதமரபு, புணர்ச்சி மரபு என்றும் சொல்லதிகாரம் பெயர் மரபு, வினை மரபு, எச்சமரபு என்றும் பொருளதிகாரம் அகத்திணை மரபு, கைகோண் மரபு, புறத்திணை மரபு என்றும் அணியதிகாரம் பொருளணிமரபு, சொல்லணிமரபு, அமைதி மரபு என்றும் பெயரிடப்பட்டுள்ளன. பாயிரம் உள்பட 201 எண்சீர் விருத்தங்களால் அமைந்துள்ளது.

தென்னூல் - தஞ்சை பாவலரேறு பாலசுந்தரனாரால் (20நூற்) படைக்கப்பட்ட இலக்கண நூல் தென்னூல் விளக்கமாகும். இது எழுத்துப்படலம், சொற்படலம், இலக்கியப் படலம் என்ற முப்படலங்களையும் 1389 நூற்பாக்களையும் கொண்டுள்ளது.

அறுவகை இலக்கணம் - ஐந்து இலக்கணத்துடன் ஆறாம் இலக்கணமெனப் புலமை இலக்கணத்தையும் சேர்த்து வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் அறுவகை இலக்கணம் என்ற நூலையும் தந்துள்ளார். இந்நூல் 12 படலங்களையும் 786 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. எழுத்திலக்கணம் 165, சொல்லிலக்கணம் 112, பொருளிலக்கணம் 122, யாப்பிலக்கணம் 134, அணி இலக்கணம் 109, புலமை இலக்கணம் 144 காப்பு, பாயிரம் 12 பாடல்கள் உள்பட 799 பாடல்களால் அமைந்துள்ளது.

இவ்வகையில் இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு வகை இலக்கண நுற்கள் தோற்றத்திற்குரிய மூலம் தொல்காப்பியமும் குறிப்பாகத் தொல்காப்பியச் செய்யுளியலிலும் ஆணிவேராக அமைந்து உளது என்பதனை உணர்வோம்.

அகப்பொருள் இலக்கணம் கூறும் நூற்கள் - தொல்காப்பிய அகத்திணை இயல் புறமாகிய புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் பகுதி இலக்கணங்களைத் தொல்காப்பியச் செய்யுளியல் திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், எச்சம், மெய்ப்பாடு பகுதிகள் வாயிலாகத் தொகுத்துணர்த்தியுள்ளன. இவ்வகக் கோட்பாடுகள் ஐந்து, ஆறு, மூன்று பகுப்பாகக் கொண்ட இலக்கண நூற்களிலும் இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், அகப்பொருள் விளக்கம் (நாற் கவிநாச நம்பி), களவியல் காரிகை, மாறன் அகப்பொருள், (திருக்குருகைப் பெருமாள் கவிராயர்) (கி.பி.1552) திருக்கோவைக் கிளவிக் கொத்து, திருக்கோவை கொத்து, கல்லாடம் போன்ற அகப்பொருள் நூற்களாகப் பெருகியுள்ளன. மேலும் கோவை இலக்கிய நூற்களும் பெருகி உள்ளன.

புறப்பொருள் இலக்கண நூல்- சேரவேந்தர் ஐயனாரிதனார் (கி.பி.9ஆம் நூற்) இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை, புறப்பொருள் பற்றிக் கூறும் நூலாகும். வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை பற்றி உரைத்துள்ளது.

யாப்பியல் நூற்கள் - தொல்காப்பிய செய்யுளியளில் கூறியுள்ள வடிவக் கோட்பாடு அடிப்படையில் யாப்பிலக்கண நூற்களும் பாட்டியல் நூற்களும் வளர்ந்து வந்துள்ளன.

யாப்பருங்கலம் அமிர்தசாகரரால் முதல் குலோத்துங்கட்சோழன் காலத்தில் (கி.பி.1070-1120) எழுதப்பட்டது. இது குறித்து மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள நீரூர் சிவன்கோயில் தெற்குத் திருமதில் கல்வெட்டில் ஆசிரியர் பற்றிய குறிப்புளது.

முதற்கண் யாப்பருங்கலத்தையும் பின்பு யாப்பருங்கலக் காரிகை நூலையும் அமிர்தசாகரர் இயற்றியுள்ளார்.

யாப்பருங்கலம் - உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் பகுதிகளைக் கொண்டுள்ளது. 222 அடிகளில் அமைந்த 92 நூற்பாக்களைக் கொண்டுள்ளது.

யாப்பருங்கலக்காரிகை நூற்கு குணசாகரர் உரை தந்துள்ளார். “யாப்பருங்கலம்” என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாகச் செய்யப் பட்டமையால் யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர்க்கு என்று உரைநூலார் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியத்திற்குப் பின்னரும் யாப்பருங்கலத்திற்கு முன்னரும் யாப்பிலக்கணங்கள் தோன்றியுள்ளன. காக்கைப் பாடினியார், சிறுகாக்கைப் பாடினியார், அவிநயனார், மயோச்சுரர், பல்காயனார், நற்றத்தனார், சங்க யாப்புடையார், கையனார் வாய்ப்பியனார் முதலியோர் யாப்பிலக்கணம் படைத்துள்ளனர்.

சங்கம் மருவிய காலத்தில் வாழ்ந்த காக்கைப் பாடினியார் (சோ.ந.க-I/25) இவர் பாடிய நூல் காக்கைப் பாடினி. இந்நூல் பின்னூல்கள் பலவற்றிற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. சிறுகாக்கைப் பாடினியார் காலத்தில் தமிழ் இலக்கணம் எழுத்து சொல், பொருள், யாப்பு என நான்காக விரிவடைந்துள்ளது. இவர்

தமிழ்நாட்டின் நான்கு எல்லைகளைக் குறிப்பிடும் பொழுது வடதிசை எல்லையை வடுகு என்றும் எஞ்சிய மூன்றையும் கடல் எல்லையாகக் கொள்கிறார். (மேலது, ப.30)

தொல்காப்பியர், பல்காயனார், காக்கைப் பாடினியார் பற்றி யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் (ப.436) குறிப்பிட்டுள்ளார். பல்காயனார் யாப்பு உறுப்புகளை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, தூக்கு என்று ஏழாகக் குறிப்பிட்டுள்ளார்.

மயேச்சுரர் யாப்பினை ஒத்த மற்றொரு நூல் சங்க யாப்பு என்று பெயர் கொண்ட நூலாகும். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் இவரைச் சங்க யாப்புடையார் என்று குறிப்பிடுகிறார். இந்நூல் சங்க யாப்பினை ஆராயும் நூலன்று. பின்னர் எழுந்த நூற்களின் யாப்பை உரைக்கின்றார். தொல்காப்பியர் குறிப்பிடும் தொடை விகற்பம் 13,699. இக்கருத்தினைச் சங்க யாப்புடையாரும் ஏற்கிறார். சோ.ந.க.I,ப.42) இளம்பூரணர் உரையிலும் இக்கணக்கைக் காணலாம்.

நற்றத்தனார் -நற்றத்தனார் யாப்பருங்கல ஆசிரியர்க்கு முற்பட்டவர். இவரது நூல் நற்றத்தம், நற்றத்தர் யாப்பு என்றும் கூறுவர். தூக்கு, தொடை, அடி என்ற மூன்றும் பொருந்தி வரலே யாப்பு என்கிறார். (ப.10)

வாய்ப்பியனார் -அவிநயனார், நற்றத்தனார் காலத்தை ஒட்டி வாழ்ந்த யாப்பிலயலறிஞர் வாய்ப்பியனார் ஆவார். இவரின் நூல் வாய்ப்பியம். இந்நூலாசிரியர் இசையறிவும் உடையவர். பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழி யாழ் என்று பண் நான்கு வகைப்படும். இவற்றுடன் விளரிப் பண்ணையும் சேர்ந்த ஐந்தாகும் என்கிறார். பண்சார் திறம் 21 வகைப்படும் என்கிறார். ஆடல் பாடல் கலைகளுக்கு உரிய செந்துறை, வெண்டுறை மார்க்கங்களுக்கு இலக்கணம் கூறியுள்ளார். நாற்பெரு பண்ணும் அவற்றிற்குரிய 21 திறனும் செந்துறை எனப்படும் (ப.579) சோ.ந.க.1.மேற்.ப.45) ஒன்பது பாவகைகளும் பதினோர் ஆடல் இயம்ப வருவன வெண்டுறை என்கிறார். இவற்றிலும் சிலம்பில் அடியார்க்கு நல்லாரும் குறிப்பிட்டுள்ளார்.

அகத்தியனார் - அகத்தியர் பெயர் பூண்டவர் பலர் உளர். தொல்காப்பிய ஆசிரியரின் வேறாக எண்ணத்தக்கவர் ஒருவரே என்று யா.வி. சுட்டுகின்றது. இவர் பாட்டியல் நூல் செய்ததாகத் தெரிகிறது. அதனுள் ஆனந்த ஒத்து என்பதும் ஒன்றாகும். பாட்டுடைத் தலைவனைப் பாடும் பொழுது எழுத்தனாந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என்னும் அறுவைகக் குற்றங்களும் அணுகாதபடி பாடவேண்டும் என்கிறார்.

பாட்டியல் நூல்கள்

வெண்பாப் பாட்டியல் - வெண்பா யாப்பால் அமைந்த பாட்டியல் நூல் வெண்பாப் பாட்டியல்.இந்நூலின் ஆயிசிரியர் நேமிநாதம் இயற்றிய குணவீர பண்டிதர் ஆவார். இந்நூல் இந்திரகாளி என்னும் பாட்டியன் மரபில் வந்த நூல் என்றும் கூறுவர். இந்நூலை வச்சணந்தி மாலை என்றும், கூறுவர். குணசாகர பண்டிதரின் ஆசிரியர் வச்சனந்தி. அந்தாதி முறையில் அமைந்துள்ளது. மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என்னும் மூன்றியல்களைக் கொண்டுள்ளது. இவை முறையே 22,48,30 வெண்பாக்களால் அமைந்துள்ளது.

முதல் மொழியியல், மங்கலம், சொல், எழுத்து, தாளம், பால், உணா, வருணம், நாள், கதி, கணம் எனப்படும் பத்துப்பொருத்தங்களை உரைக்கின்றது. செய்யுளியல் நால்வகைக்கவிகள், பிள்ளைக்கவி முதல் அகலக்கவி ஈறாகிய கவிகள் பற்றிக் கூறுகின்றது. பொதுவியலில் நால் பாக்களின் இராசி, சோதி, தேவதை, பாடும் விதம் உறுப்புச் செய்யுள் பற்றி உரைக்கின்றது.

பன்னிரு பாட்டியல் - பன்னிரு பாட்டியல் நூல் பல பாட்டிலக்கண நூல்களிலிருந்து தொகுத்துக் கோவையாக்கப்பட்ட தொகை நூலாகும். இந்நூலுள் பாட்டியல் புலவர்கள் பதினைவர் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அகத்தியர், அவிநயனார், இந்திரகாளியர், கபிலர், கல்லாடனார், கோவூர் கிழார், சீத்தலையார், செயிற்றியனார், சேந்தம் பூதனார், நற்றத்தனார், பரணர், பல்காயர், பெருங்குன்றூர்க் கிழார், பொய்கையார், மாபூதனார். பன்னிரு பொருத்தங்கள் கூறும் நூல். கி.பி.14 ஆம் நூற்றாண்டு.

நவநீதப் பாட்டியல் - நவநீத நடனார் என்பவரால் இயற்றப்பட்ட நூல் நவநீதப் பாட்டியலாகும். காலம் 14 ஆம் நூற்றாண்டு. இந்நூல் அகத்தியர் பாட்டியல் வழி தோன்றிய நூலாகும். பொருத்தவியல், செய்யுள் மொழியியல், பொது மொழியியல் என மூன்று இயல்களைக் கொண்டுள்ளது.

வரையறுத்த பாட்டியல் - வரையறுத்தப்பாட்டியல் நூல். பத்துக்கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் அமைந்துள்ளது. இப்பாட்டியலுக்கு சம்பந்தப் பாட்டியல் என்றும் உரைப்பர்.

மேலும் வெண்பாப் பாட்டியல், பன்னிரு பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பர செய்யுட் கோவை, வரையறுத்த பாட்டியல், பாப்பாவினம் போன்ற பாட்டியல் நூற்களும் மாணிக்கவாசகர் குவலயானந்தம் போன்றன தொல்காப்பயிச் செய்யுளியல் மூலம் வழி முகிழ்ந்த நூற்களே தொல்காப்பியர் குறிப்பிடும் உவமை இலக்கண வழி தண்டியலங்காரம், மாறலைங்காரம், தொனிவிளக்கு ஆகிய அணி இலக்கண நூற்களும் தோன்றியுள்ளன.

புலவர் ப.எழில்வாணன் யாப்பு விளக்கம் என்ற பெயரில் தமிழ்ச் செய்யுள் இலக்கண நூல் (ஏப்பிரல்.2021)இல் வெளியிட்டுள்ளார். இந்நூலுள் பாவகைகள், பாவின வகைகள், இனவினை வகைகளும் வண்ணம், சிந்து, உருபு முதலிய வடிவங்கள் புதுப்பா, மகப்பா,திரைப்பா, துளிப்பா முதலிய புதுவரவுப் பா வடிவங்கள், சித்திரப் பாக்கள் போன்றனவற்றிற்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கண நூற்பா. உரை-சான்றுப் பாடல் என்ற முப்பரிணமத்தொடு இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூலுள் இயற்றமிழ்ப் பாக்களின் உறுப்பியல், பாவியல், பாவினவியல், சார்புப் பாவியல், புதுப்பாவியல் பகுதிகளைத் தந்துள்ளார். இசைத்தமிழ்ப் பாக்களில் கும்மி, சிந்து, பண்ணத்தி, சந்தப்பா, வனப்பாக்களைத் தந்துள்ளார். சித்திரப் பாவியலில் மடக்கணிப் பாடல்கள் நாற்கரச் சக்கரம், தேர்ப்பந்தம், சுஷிகுளம் பகுதிகளை விளக்கியுள்ளார். யாப்பிலக்கண வளர்நிலைக் காட்டும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது.

உரையாசிரியர்

மூலநூற்களுக்கு உரை வழங்கிய ஆசிரியர்கள் உரையாசிரியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். மூலநூலைத் தழுவித் தம் காலம் வரை வளர்ந்த மொழி வழக்காறுகளையும் தழுவி உரைப்பர். இவர்கள் இலக்கண உரை நூலார் , இலக்கிய உரை நூலார் என இருவகைப்படுவர்.

இலக்கண உரையாசிரியர்களில் தொல்காப்பிய உரை ஆசிரியர்கள் நன்னூல் உரையாசிரியர்கள் யாப்பிலக்கணத்தார். பிறர் எனக் காணலாம். இவர்களது உரைவளங்கள் பற்றி மு.வை. அரவிந்தன் அவர் சிறப்பாக ஆராய்ந்து உரையாசிரியர்கள் என்ற தலைப்பில் மணிவாசகர் பதிப்பகத்தின் வாயிலாகத் தந்துள்ளார் (2008 இரண்டாம் பதிப்பு)

தொல்காப்பிய உரையாசிரியர்களில் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடல், நச்சினார்க்கினியர் , பாவலரேறு பாலசுந்தரனார் ஆக்யோர் அடங்குவர்.

நன்னூலுக்கு உரை தந்த மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், ஆண்டிப்புலவர், கூழங்கைத்தம்பிரான், இராமநூஜக் கவிராயர், விசாகப் பெருமாள் ஐயர், ஆறுமுக நாவலர் , சடகோப ராமாநுசாச்சாரியார் இக்கட்டுரையாளர் சண்முக செல்வகணபதி ஆகியோர் அடங்குவர்.

மேலும் இறையனார்களவியலுரை, யாப்பருங்கலவிருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகை உரை, பெருந்தேவனார் உரை, தண்டியலங்கார உரை, நம்பியகப் பொருள் விளக்கவுரை, தமிழ் நெறி விளக்க உரை, களவியல் காரிகை உரை, நேமிநாத உரை, பாட்டியல் உரைகள், அணிநூல் உரைகள் போன்றனவும் அடங்கும்.

அரசன் சண்முகனாரின் (1868-1915) தொல்காப்பிய பாயிர விருத்தி உரை ,சிவ சம்புப் புலவரின் யாப்பருங்கலக் காரிகை உரை, கா.ர. கோவிந்தராச முதலியார் (1872- 1952) பன்னிரு பாட்டியல் உரை போன்ற உரையாசிரியர்களால் இலக்கண வளம் செழிந்தன.

தஞ்சைப் பாவலரேறு பாலசுந்தரனாரின் தொல்காப்பியக் கண்டிகை உரைகள் 20 ஆம் நூற்றாண்டு வரை தொல்காப்பியம் வளர்ந்த வளர் நிலைகளைக் காட்டுவனவாகும். நாம் கண்ட இளம்பூரணராக வாழ்ந்தார். தொல்காப்பிய இலக்கண வளங்களை 20 நூற்றாண்டு வளங்களொடு இணைத்துக் காட்டியுள்ளார்.

தொல்காப்பியச் செய்யுளியல் தொல்காப்பியத்தின் ஏனைய 26 இயல்களுக்கும் பிற்காலத்தில் தோன்றிய இரு, மூன்று, நான்கு, ஐந்து, அறுவகை இலக்கண நூற்கள் தோன்றுவதற்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. செய்யுள் வடிவக் கோட்பாடு, பொருள் கோட்பாடு, அழகுக் கோட்பாடுகள் அடிப்படையில் அமைந்த செய்யுளியல் நூற்பாக்கள் பிற்கால இலக்கண நூற்களுக்கும் இலக்கியப் படைப்புகளுக்கும் செய்யுள் அழகிற்கும் வழிகாட்டியுள்ளன. அம்டை, அழகு, தொன்மை, தோல், விருந்து, புலன் என்ற எண்வகை வனப்புகள் பாட்டியல் நூற்களுக்கும் தொடர்நிலைச் செய்யுள்களும் வழிகாட்டி நிற்கின்றன.

துணைநின்ற நூல்கள்

1. முனைவர் சண்முக செல்வகணபதி முனைவர் செ.கற்பகம், தொல்காப்பியம் செய்யுளியல். திருத்தவத்துறைத்தமிழ்ச்சங்கம், திருத்தவத்துறை, மார்ச் 2012.
2. புலவர். இரா. இளங்குமரன், இலக்கணவரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, டிசம்பர் 1999.
3. முனைவர் சோ.ந.கந்தசாமி, யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம், முதல் தொகுதி, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், சனவரி 1989.
4. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, டிசம்பர் 2008.
5. புலவர். ப.எழில்வாணன், யாப்பு விளக்கம், (தமிழ்ச் செய்யுள் இலக்கணம்), தமிழ் வாணன் பதிப்பகம், கரூர்,ஏப்ரல் 2021.

தொ.மா.க.133

தொல்காப்பியர் சுட்டும் நாடக வழக்கமும் உரைகளும்

முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி - 620 017
kmtamilvendhan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொன்மை மிக்க தமிழ் இலக்கிய வரலாற்றில் காலங்கடந்து நிற்கும் பேறு பெற்ற இலக்கியங்கள் அனைத்தும் நிகழ்த்துதலை அடிப்படையாகக் கொண்டவையே ஆகும். அதுவே, அப்படைப்புகளுக்கான தனிச்சிறப்பாக இருக்கின்றது. கதைத்தல், இசைத்தல், நடித்தல், பாடுதல் முதலான நிகழ்த்துதல்கள் போன்ற வடிவங்களில் ஒன்றேனும் உலகின் ஆதி மொழிகளில் இடம்பெற்றிருக்கக் காணலாம்.

செவ்வியல் தன்மை பெற்ற தமிழில் இவை அனைத்தையும் உட்கொண்ட, 'நாடகம்' வெற்றி பெற்ற இலக்கிய வகையாக இருந்துள்ளது. அதற்குக் காரணம் அனைத்துத் தரப்பு மக்களுக்குமான இலக்கியமாக அது அமைந்திருந்தது; இன்று வரையும் நாடக இலக்கியத்தின் நீட்சி நிலைபெற்றிருக்கின்றது. இது, நிகழ்த்துதற்கேற்ற நாடகம் என்பதற்கு, நாடகக் கூறுகளில் ஒன்றாக இருக்கும் பாடல்களே தக்க சான்றுகளாகும். கட்டமைக்கப்பட்ட பாத்திரப் படைப்புகள் வழியாக மானிட உணர்வுகள் பொதுமையாக்கப்படுகின்றன அல்லது பொது உணர்வுகள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஒவ்வொரு கால இலக்கியத்திற்குமான தோற்றம் களம் என ஒன்றை ஆராய்ந்தால் பழந்தமிழ்ப் பாடல்களுக்கு அது நாடகமாகவே இருக்க முடியும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் சுருக்கமாகும்.

குறிசொற்கள்: தமிழ்நாடகம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், சங்க இலக்கியம், நிகழ்த்து கலைகள், பாட்டு இலக்கியம், பாணர் மரபு.

அறிமுகம்

பண்டைத் தமிழ் மொழியையும் அதன் இலக்கியங்களையும் ஆராய்ந்து வெளியிடப்பட்ட முடிவுகளின் தொகுப்பாக விளங்குவது தொல்காப்பியம் என்னும் பழந் தமிழ் இலக்கணப் பனுவல் ஆகும். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றில் மொழியின் இலக்கணமும், பொருளதிகாரத்தில் இலக்கியப் படைப்பாக்க இலக்கணமும் பேசப்படுகின்றது. பெரும்பான்மையும் 'நாடக வழக்கிலான' இலக்கியப் படைப்பாக்கங்களே தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பேசப்படுகின்றன. அகத்திணையியல், களவியல், கற்பியல் பகுதிகளில் இடம்பெறுகின்ற களப் பின்னணி மற்றும் கூற்று முறைகளை உற்று நோக்கும்போது 'பாடல்சார் நாடகப் பொருண்மைகளே' அவற்றில் பேசப்படுகின்றன என்பது தெளிவு. மெய்ப்பாட்டியல் கூறும் உணர்வு வெளிப்பாட்டு முறையும் இக்கருத்துக்கு உறுதியான சான்றாகும்.

அகத்திணையியலில் நாடக வழக்கத்திற்கான பொதுவான கோட்பாடுகளையும், களவியல் கற்பியல் பகுதிகளில் அவற்றுக்கே உரிய சிறப்புக் கோட்பாடுகளையும் கூறுகின்றார் தொல்காப்பியர். தொல்காப்பியர் சுட்டும் நாடக வழக்கத்திற்கான பொதுக் கோட்பாடுகள் பாடல்களில் பொருந்தி நிற்குமாற்றை வெளிக்கொணர்ந்து, நாடக வழக்கிலான பழந்தமிழ்ப் பாடல்கள் நாடக ஆக்கத்தின் ஒரு கூறாகத் திகழ்வன என்னும் பொருண்மை நோக்கத்தை ஆராய்தற்கும் இக்கட்டுரை முனைகின்றது.

தொல்காப்பியர் கூறும் 'பொருள்'

இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த பண்டைத் தமிழ் மற்றும் தொல்காப்பியம் குறித்த ஆய்வுகளில் பொருளதிகாரம் இன்றியமையாத இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வுகள், தொல்காப்பியப் பொருளதிகாரம் பண்டைத் தமிழ் மக்களின் உலக வாழ்க்கையையே பேசுகின்றது; அதுவே, தொல்காப்பியத்தையே பிற இலக்கண நூல்களினின்றும் தனித்துக் காட்டி, அதனைச் சிறப்பிக்கின்றது என்று கூறுவர்.

> மொழிக்கு மட்டுமன்றி மக்களுடைய வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்ட பெருமை பழந்தமிழரைச் சாரும். வாழ்க்கைக்கு ஒழுங்குமுறைகள் வகுத்துக்கொடுத்த இலக்கணத்துக்குப் பொருள் இலக்கணம் என்று பெயர் (பிள்ளை கே கே., ப.126)

> உலக அமைப்பை முதல், கரு, உரி என மூன்றாக வகுத்து, உலகில் வாழும் மக்களின் வாழ்க்கையை அகம் என்றும் புறம் என்றும் பாகுபடுத்தி, அதை இயற்கையுடன் இயைபுறுத்தியது பண்டைய தமிழரின் சிறந்ததொரு பண்பாடாகும் ((பிள்ளை கே கே., ப.128)

> தொல்காப்பியப் பொருளதிகாரம் பண்டைத் தமிழர்களின் பழக்க வழக்கங்களையும் நூல் முறைகளையும் பிற சிறப்புகளையும் ஆராய்ந்து அறிவதற்கு ஒரு சிறந்த கருவி நூலாக இலங்குகின்றது. உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்கள் நாகரிகத்தைக் காட்டும் பொருள் இலக்கணம் இல்லை. அந்தப் பொருள் இலக்கணத்தைக் கொண்டிருப்பது தமிழ் மொழியின் தனிச்சிறப்பாகும் (சுப்புரெட்டியார் ந, ப.11)

இம்மேற்கோள்கள் தொல்காப்பியப் பொருளதிகாரம் குறித்த ஒரு தரப்பு அறிஞர்களின் கருத்துகளை முன்வைக்கின்றது. ஓலைச் சுவடிகளிலிருந்து சங்க இலக்கியம், தொல்காப்பியப் பதிப்புகள் வெளியானதும், தமிழகத்தில் நிகழ்ந்த அரசியல்சார் கருத்து நிலைகளும் பண்டைத் தமிழகம் ஒரு 'பொன்னுலகம்' என்னும் கருத்தை மனதில் பதிய வைத்துவிட்டன. அதன் விளைவாக எழுந்த ஆய்வுகளும் பொன்னுலகக் கருத்துகளை எதிரொலிக்கத் தலைப்பட்டுவிட்டன என்பதையே இச்சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கூறுகின்ற பொருள் என்பது இலக்கியப் படைப்புகளுக்குரிய பாடுபொருள்களே யாகும் என்னும் கருத்தை அவருடைய நூற்பாக்களும், உரைகளும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. தொல்காப்பியர் சுட்டும் பாடல்களுக்குரிய முப்பொருள்களில் உரிப்பொருள் முதன்மையானது. முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளைச் சிறப்பித்து நிற்பன. காதல் குறித்த

உரிப்பொருள்கள் அகத்திணையகவும், பிற உரிப்பொருள்கள் புறத்திணையாகவும் தொல்காப்பியரால் பகுக்கப்பட்டுள்ளன.

> *முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே*
> *நுவலுங் காலை முறைசிறந் தனவே*
> *பாடலுட் பயின்றவை நாடுங் காலை (தொல். பொருள். அகத். இளம். 3)*

என, உரிப்பொருளை அடிப்படையாகக் கொண்டே முதல்கருப் பொருள்கள் இயங்குவதைக் கூறுகின்றார் தொல்காப்பியர்.

> சான்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங்கால் முதற்பொருள் எனவும் கருப்பொருள் எனவும் உரிப்பொருள் எனவும் சொல்லப்பட்ட மூன்று பொருண்மையுமே (காணப்படும்) அவை சொல்லுங் காலத்து முறைமையாற் சிறந்தன (இளம்பூரணர், ப. 8)

என இந்நூற்பாவுக்குப் பொருள் கூறுகிறார் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியரும்,

> புலனெறி வழக்கிடைப் பயின்ற பொருட்களை ஆராயுங் காலத்து முதலுங் கருவும் உரிப்பொருளும் என்ற மூன்றேயாம். அவைதாம் செய்யுள் செய்யுங்கால் ஒன்று ஒன்றனிற் சிறந்து வருதலுடைய என்றவாறு (நச்சினாக்கினியர், பக். 5-6)

எனக் கூறுவது நோக்கத்தக்கது.

தொல்காப்பியர் குறிப்பிடும் இம்முப்பொருள்களில், உரிப்பொருள் என்பது இலக்கியப் பாடுபொருளே என்பதை உ. வே. சா. அவர்களும் மிகத் தெளிவாக,

> இங்ஙனம் உணர்த்தப்படும் அகப்பொருள் ஐந்து திணையாகப் பகுக்கப்பட்டு, ஒவ்வொன்றும் முதல், கரு, உரியென்னும் மூவகையானும் செய்யுளில் விரிக்கப்படும். முதலென்பன நிலமும் காலமும்; கருவென்பன தெய்வம் முதலிய; உரியென்பன திணைக்குரிய ஒழுக்கங்கள். இவ்வரையறைகள் புலவர்களால் இயற்றப் பெறும் கவியமைப்புக்கு உரியனவேயன்றி உலகியலுக்கு உரியனவல்ல. ஆனால், இவற்றில் சில மட்டும் உலகியலுக்கு ஏற்புடையனவாகும் எனக் கூறுவது காணத்தக்கது (சாமிநாதையர் உ.வே., ப. 24)

என எடுத்துக்காட்டுகின்றார்.

> களவியல், கற்பியல் என்ற இயல்கள் அகம் என்ற பாடுபொருளில் திருமணத்திற்கு முன்னும் பின்னும் அமையும் கவிதைத் தளங்களையும் கூற்றுக்களையும் களவு, கற்பு என்ற கைகோள்களின் கீழ் தருகின்றன (ஜீன் லாறன்ஸ் செ., பகவதி கு., ப. 48)

என்ற ஆய்வுக் கருத்தும், உரிப்பொருள் பாடுபொருளே என்னும் கருத்துக்கு வலுச் சேர்க்கும்.

எனவே, பண்டைக்கால இலக்கியப் பாடுபொருள்களையே தொல்காப்பியர் தமது பொருளதிகாரத்தில் ஆராய்கின்றார் என்பது பெறப்படுகின்றது. மாறாக, தொல்காப்பியர் ஆராய்கின்ற இப்பொருள்கள், பண்டைத் தமிழர்தம் பழக்கவழக்கங்கள் அல்லது அக்கால மக்கள்தம் அன்றாட வாழ்வியல் என்றோ கொள்வதற்கு இடமில்லை.

பழந்தமிழ் இலக்கியப் பகுப்புகளும் பாடல்களும்

தொல்காப்பியர் தமது காலத்தும், முன்பும் தமிழகத்தில் இருந்த செய்யுட்களை (இலக்கியம் எனும் பொருளில்) பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என ஏழு வகைகளாக இருந்ததைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் (தொல். பொருள். செய். இளம். 75)

என்னும் செய்யுளியல் நூற்பா இதை விளக்கும்.

இவற்றில் அடி வரையறை உள்ளதாகப் பாட்டு ஒன்றையும், அடிவரையில்லாதனவாக உரை முதலான பிற ஆறனையும் எடுத்துக்காட்டுவார் (இளம்பூரணர், ப. 515)

நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான (தொல். பொருள். செய். இளம். 158)

என்னும் அடிவரையில்லாத இலக்கியம் அமையுமாற்றைத் தொடர்ந்து அவற்றின் வகைகளைத் தொல்காப்பியர் கூறிச் செல்வார்.

அடிவரையில்லாத இலக்கியங்களும் அவற்றில் காணலாகும் சூத்திரம் முதலான உட்பகுப்புகளும் 'எழுத்து முதலாக ஈண்டிய அடியிற்' (செய். 74) யாக்கப்பட்டு இருப்பினும், அவற்றைப் பாட்டினின்றும் பிரித்துக் காட்டுகின்றார் தொல்காப்பியர். ஏனென்றால், அகத்திணையியலின் முற்பகுதியிலேயே, 'பாடலுள் பயின்றவை நாடுங் காலை' என, தான் பாடல்களை மட்டுமே ஆராயப் புகுவதாகக் கூறி விடுவதால், பிற இலக்கிய வகைகளைப் பெரும்பான்மையும் குறிப்பிட்டுக் காட்டுவதுடன் கடந்து சென்று விடுகின்றார். எனவே, தொல்காப்பியர் 'பாட்டு' என்னும் இலக்கிய வகைக்கு மட்டுமே முதன்மை அளிக்கின்றார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

பாட்டு இலக்கியம்

தொல்காப்பியர் குறிப்பிடும் பாட்டு இலக்கியத்தை இளம்பூரணர் 'அடிவரையறை' உள்ள இலக்கியப் பகுப்புக்குள் கொணர்ந்து காட்டுகின்றார். அடிவரையறை என்பது காலத்தோடு இலக்கியத்தைக் காலத்தோடு தொடர்புபடுத்திக் காட்டுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள், பாட்டு எனப்படும் அந்த இலக்கியம் நிகழ்த்தி முடித்துக்காட்டப்பட வேண்டும் என்பதே அடிவரையறை எனக் கொள்ளலாம். எட்டுத்தொகை அக இலக்கியப் பாடல்கள் பெற்றுள்ள அடிவரையறை எழுத்தோடு தொடர்புபடாது ஒலிப்பதுடன் தொடர்புடைய தாகும்.

எழுத்துக்களை ஒலிப்பதற்குக் கொடுக்கப்படும் மாத்திரை அளவுகள், 'இன்னிசை' காரணமாகவும், 'செய்யுளிசை' காரணமாகவும் நீண்டு ஒலிக்கும் அளபெடைகள், 'ஏ'காரத்தில் முடிந்து நிற்கும் பாக்கள், முச்சீராகக் குறைந்து ஒலிக்கும் ஈற்றயலடிகள் ஆகியவை பாடல் இலக்கியத்துடன் பிணைக்கப்பட்ட இலக்கண முடிவுகளாகும். இவற்றுள் குறைந்தும் அளபெடுத்தும் ஒலிப்பவை, காலத்தோடு தொடர்புபட்டு நிற்கும் பாட்டின் கூறுகளாகும். எனவே, குறிப்பிட்ட யாப்பின் வழியாக அமையும் பாட்டு ஒன்று, வரையறுக்கப்பட்ட நேரத்துக்குள் முடிந்து நிற்க வேண்டும் என்பதே அடிவரையறையின் பொருளாகும்.

எழுத்து முதலாக ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப (தொல். பொருள். செய். இளம். 74)

என்னும் நூற்பா மேற்கண்ட கருத்தை நன்கு விளக்குவதாக இருக்கின்றது.

‘யாப்பு’ என்பது பா வகைகளையும், பாட எடுத்துக்கொண்ட பொருளை வளர்த்துச் சென்று மனங்கொள்ள முடித்துக் காட்டும் திறனையும் ஒருங்கே குறித்து நிற்கின்றது. பா வகை என்பதால், ஆசிரியப்பா முதலான பாக்களுக்கு உரிய ஓசையும், இசையும் கவனம் பெறுகின்றன.

> பா என்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடமோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற் கேதுவாகிய பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை (பேராசிரியர், பக். 114-115)

என்னும் பேராசிரியர் கருத்து இதனை நன்கு வலியுறுத்தும்.

மேலும்,

சீர், தூக்கு, வண்ணம், அசையும் சீரும் இசையொடு சேர்த்தல், ஒற்றளபு, இசைநிலை நிறைய நிற்றல், முடுகியல், துள்ளலோசை, தூங்கலோசை, ஒத்தாழிசை, அராகம், இடைநிலைப்பாட்டு, வண்ணகம், தாழிசை, அம்போதரங்கம், பண்ணத்தி, வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம், புலன், இழைபு (ஜீன் லாறன்ஸ் செ., பகவதி கு., ப. 273)

என, செய்யுளியலில் வருகின்ற இசை தொடர்பான சொற்களையும், குறிப்புக்களையும் அறிஞர் எடுத்துக்காட்டுவதும் குறிக்கத்தக்கது.

மேலும், உரிப்பொருள்களான புணர்தல் முதலான உணர்வுகள் உலகம் முழுதும் உள்ள அனைத்து உயிர்களுக்கும் உடையன வெனினும், மானிடர்க்குச் சிறப்பாக அமைந்திருப்பன. அத்துடன், அவை மிகக் குறைந்த காலப் பொழுதில் மனத்தைக் கடந்து சென்றுவிடும் இயல்பை உடைத்தாக இருக்கின்றன. அத்தகு உரிப்பொருள்களை காலங் கடந்து நீட்டித்துச் சென்று பாடிக் கொண்டிராமல், உணர்வு மறைவதற்குள் பாடி முடித்து விடுவதே சிறப்புடையது என்பதால், அவற்றைப் பாடுவதற்குக் காலம் கணக்கிடப்பட்டுள்ளது. அக்காலக் கணக்கே செய்யுளியலில் ‘அடிவரையறை’ என்னும் பொருளில் பயன்படுத்தப்படுகின்றது.

தமிழில் ‘பாடலே’ இலக்கியம் எனக் கூறுமளவிற் எவ்வகை இலக்கியமாயினும், அவை காலக் கணக்கு உடைய பாடல்களாகவே புனையப்பட்டுள்ளன. காப்பியங்கள் முதலான பேரிலக்கியங்கள் அனைத்தும் அதன் கூறுகளாக பாடல்களையே கொண்டிலங்குகின்றன.

> *பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்*
> *கண்ணோட்டம் இல்லாத கண் (திருக்குறள். 573)*

என வள்ளுவரும் பாடலையும் பண்ணையும் பொருத்திக் காட்டுகின்றார்.

பழந்தமிழ்க் காலத்தில், பாடல் என்னும் இலக்கிய வடிவமே, மானிட உணர்ச்சிகளை முன்வைக்கும் ஊடகமாகத் திகழ்ந்தது. அப்பாடல், ஏதேனும் ஒரு வகையில் இசையைப் பெற்றிருக்க வேண்டும். பாடல் புனைவின் போதோ, அல்லது தனித்துக் கூட்டப்பட்டதாகவோ, அப்பாடலுடன் இசையும் இருக்க வேண்டும். பதிற்றுப்பத்து, பரிபாடல் முதலான தொகைகளில் காணப்படும் ‘பண் வகுத்தவர்’ முதலான குறிப்புகள், பாடலுக்கு இசையுடன் இருக்கும் தொடர்பைக் காட்டும் வலிமையான சான்றுகள் ஆகும்.

பழந்தமிழ்ப் பாடல்களின் தோற்றக் களம்

தொல்காப்பியர் தமது நூல் முழுவதுமே இரண்டு வழக்குகளைக் குறிப்பிட்டுக் காட்டி, நினைவுபடுத்திக் கொண்டே செல்கின்றார். எழுத்து சொல்லதிகாரங்களில் உலக வழக்கும் செய்யுள் வழக்காகவும் இருக்கும் அவை, பொருளதிகாரத்தில் உலக வழக்கும் நாடக வழக்குமாக பெயர் பெறுகின்றன. ஏனென்றால், பாடுபொருள்களின் ஆய்வு என்பதால், அவை பாடப்படுகின்ற களங்களும் கவனம்

பெறுகின்றன. அப்பாடுபொருள்களின் தோற்றக் களங்களாகவே நாடக வழக்கும் உலக வழக்கும் கூறப்படுகின்றன.

பழந்தமிழ்ப் பாடல்கள் உலக வழக்கும் நாடக வழக்கும் என்னும் இரு வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்டன. எனின், அவற்றில் உலக வழக்கும் நாடக வழக்கிலுமான பாடல்கள் எவையெவை என்பதைக் காண்பது இன்றியமையாதது. ஆயின், தொல்காப்பியர் அகத்திணை, புறத்திணை எனக் கூறுகின்றாரே யன்றி, உலக நாடக வழக்குப் பாடல்கள் பற்றிக் கூறவில்லை.

கைக்கிளை, பெருந்திணை குறித்துப் பொருளதிகார முன்னுரையில் கூறுகின்ற இளம்பூரணர் உலக வழக்கைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார். அன்பின் ஐந்திணைக்கு மாறாக இருக்கின்ற கைக்கிளை, பெருந்திணை போன்றவற்றை உலகிற் பெரும்பான்மையும் இருத்தலால் அவற்றை உலகியல் எனக் கூறுகின்றார்.

> பெருந்திணை நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன அத்திணைப்பாற் படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், அது பெருந்திணை எனக் கூறப்பட்டது. அஃதேல், நடுவண் ஐந்திணையாகிய ஒத்த கூட்டம் பெருவழக்கிற்றன்றோ எனின், அஃது அன்பும் குலனும் முதலாயின ஒத்து வருவது உலகினுள் அரிதாகலின் அருகியல்லது வாராது என்க (இளம்பூரணர், ப. 6)

அன்பு முதலான குணங்கள் விரும்புகின்ற இருவருக்கும் ஒத்த அளவில் இருப்பது உலக வாழ்வில் மிகவும் அரிது; அவ்வாறிருப்பினும், அஃது இறுதி வரையும் சென்றிறுதல் என்பது இன்னும் அரிதாகும். எனவே, உலகியலுள் அருகிக் காணப்படுகின்ற ஒத்த தலைமக்கள் உலக வழக்கினுள் காணப்படுகின்றவரல்லர். மாறாக, அன்பு முதலான குணங்கள் கூடக் குறையக் காணப்படுகின்றோரே உலகியலில் பெரு வழக்காக இருக்கின்றவர். எனவே, கைக்கிளை, பெருந்திணை மக்களும், அவர்களைப் புனைகின்ற பாடல்களும் உலக வழக்கிலானவை என்பது முடிவு.

வெற்றி தோல்விகளும், புகழ்ச்சி இகழ்ச்சிகளும், பிறப்பு இறப்புகளும் என உலகியலுள் பெருவழக்காக இருப்பனவற்றைப் புனைந்து கூறுகின்ற புறப்பாடல்களும் உலக வழக்கிலானவை என்பது வெளிப்படை.

எனவே, புறத்திணைப் பாடல்களும், கைக்கிளைப் பெருந்திணைப் பாடல்களும் உலக வழக்கிலானவை.

> நடுவண் ஐந்திணைக்கண் நிலமும் காலமும் கருப்பொருளும் அடுத்துப் புணர்தல் இருத்தல் இரங்கல் ஊடல் எனச் சொல்லப்பட்ட அவ்வுரிப்பொருள், ஒத்த அன்பும் ஒத்த குலனும் ஒத்த வடிவும் ஒத்த குணனும் ஒத்த செல்வமும் ஒத்த இளமையும் உளவழி நிகழுமாதலின் அது பெருங்கிளைமை ஆயிற்று (இளம்பூரணர், ப. 6)

உலகினுள் அருகிக் காணப்படும், ஆனால், இவ்வாறிருத்தல் சிறப்பெனப் பாடப்பெறும் தலைமக்கள் ‘முன்மாதிரிகளாக’ உலக வாழ்வில் உள்ளோருக்குப் படைத்துக் காட்டப் பெறுகின்றனர். இத்தலைமக்கள் நாடகத் தலைமக்கள் ஆகின்றனர்; இவர்களைப் பாத்திரங்களாகக் கொண்டு புனைந்து பாடப்பெறும் பாடல்கள் நாடக வழக்குப் பாடல்கள் ஆகின்றன.

நற்றிணையின் முதற்பாடலில் தலைவி, தலைவன் மீது தோழி சுமத்தும் குற்றங்களை மறுத்து, ‘நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்’ (நற். 1) எனத் தலைவனை உயர்த்திக் கூறுகிறாள். இது ஐந்திணைப் பாடல்களில் காணலாகும் தலைவியின் இயல்பான குணங்களில் ஒன்று, தலைவனைக் குற்றமில்லாதவனாக உயர்த்திக்

கூறுவது. 'என்னோற்றனை கொல்லோ?' எனத் தொடங்கும் பெருந்திணையில் அமைந்த கலித்தொகைப் பாடலில் (94), 'நீருள் நிழற்போல் நுடங்கிய மென்சாயல் ஈங்குருச் சுருங்கி' எனத் தலைவன் தலைவியையும், 'வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன கல்லாக் குறள' எனத் தலைவி தலைவனையும் ஒருவரையொருவர் இழித்துக் கூறிக் கொள்கின்றனர். இது, கைக்கிளைப் பெருந்திணைப் பாடல்களின் இயல்பாக இருக்கின்றது. இங்கு, ஒருவரை யொருவர் உயர்த்திக் கூறிக் கொள்ள வேண்டும்; தவறுகளைப் பொறுத்துக்கொண்டு நிறைகாத்து ஒழுக வேண்டும் என்பது போன்ற பண்புநலன்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. உலகியலில் இயல்பாக வாழும் மக்கள், இப்பெருந்திணைப் பாடல் சுட்டுவது போன்று, இழித்துக் கூறிக் கொள்ளமாட்டா ரெனினும், ஐந்திணை மக்களைப் போன்று உயர்வாகவும் நடந்து கொள்ளார்.

எனவே, இயல்பாக இருக்கும் பொதுமக்களுக்குத் தலைவன் தலைவி போன்ற உயர்ந்த மாதிரிகளைப் படைத்துக் காட்டி ஒழுகச் செய்தல் இலக்கியங்களின் கடமை ஆகின்றது. வேறெந்தவொரு இலக்கிய வடிவத்தினும் நாடகம் அவர்களை உடனடியாகச் சென்று மனதை நிறைத்துநிற்கும் தன்மை உடையது. எனவே, நாடகத் தலைமாந்தர்களை நிறையுடையவர்களாகப் படைத்துக் காட்டுகின்றனர்.

> *பெருமையும் உரனும் ஆடூஉ மேன (தொல். பொருள். களவு. இளம். 7)*
> *அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்*
>
> *நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (தொல். பொருள். களவு. இளம். 8)*

என, தலைவனை வலிமையுள்ளவனாகவும், தலைவியை மென்மையும் இயல்பும் கொண்டவளாகவும் படைத்துமொழிகின்றனர்.

நடித்துக் காட்டுவதன் வழியாக வெளிப்பட்டு நிற்கும் கருத்துகள், உடனடியாகச் சென்று மனத்தைத் தைக்கும் ஆற்றல் உடையன. கற்றறிந்த, செம்மைப்பட்ட நிலையில் இருக்கும் மனிதர்களுக்கே யல்லாது, இயல்பாகவும், உணர்வு மிகுந்து அறிவிற் குறைபட்ட நிலையில் வாழ்வோருக்குமே இந்த நாடக இலக்கியங்கள் நற்பயன் அளிக்கவல்லன. நாடகங்கள் அனைத்து மனிதருக்குமானது என்றாலும், அதன் 'இலக்கு மனிதர்கள்' மேற்குறிப்பிட்ட பல்வகைக் குணங்களிலும் கடைப்பட்ட மனிதருக்கே சிறப்பானது.

> கடையாயினார் எத்திறத்தானும் நீங்கார்; என்னை, பல்பிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று, போகந்துய்த்து வருகின்றமையின். அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை, 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க' என்பதனால் அவன் தாழப்பட்ட இணைவிழைச்சினுள்ளே மிக்கதொன்று காட்டப்பட்டது. எஞ்ஞான்றும் மூப்புப் பிணிசாக்காடு இல்லது, நிச்சநிரப்பு இடும்பை இல்லது; இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய், இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய், ஒத்த பண்பும், ஒத்த நலனும், ஒத்த அன்பும் ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் உடையராய்ப், பிறிதொன்றிற்கு ஊனமின்றிப் போகந்துய்ப்பர் என்று காட்டப்பட்டது (நக்கீரர், ப. 10)

இளம்பூரணரும்,

> நாடக வழக்காவது சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல் (இளம்பூரணர். ப. 70)

எனக் கூறுவர்.

அறம் பொருள் முதலான பனுவல்களைச் செய்யாது, 'இன்பப்' பனுவலாகத் தொல்காப்பியப் பொருளதிகாரம் இருப்பதற்கான காரணத்தை வருவித்து உரைக்கும் இளம்பூரணர்,

> அஃதேல், பிறநூலாசிரியர் விரித்துக் கூறினாற் போல, அறமும் பொருளும் விரித்துக் கூறாதது என்னையோவெனின், உலகத்தில் நூல் செய்வார் செய்கின்றது, அறிவிலாதாரை அறிவு கொளுத்த வேண்டியன்றே, யாதானும் ஒரு நூல் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்து ஓதுவாராயின், ஓதுகின்றதனாற் பயன் இன்றாமாதலால்… (இளம்பூரணர், ப. 3)

களவியல், கற்பியல் முதலான இன்பப் பகுதிகளை எடுத்துக்கொண்டு தொல்காப்பியர் ஆராய்வதற்குக் காரணம் கூறுகின்றார்.

எளிமை, அறிவின்மை, பொருளின்மை என எல்லா நிலைகளிலும் புறந்தள்ளப்பட்ட மக்கள் இன்பத்தையே விழைந்து நிற்பர்; ஒட்டுமொத்த மக்களில் அவரின் தொகையே மிகுதி. எனவே, அம்மக்களுக்கு அறிவுகொளுத்த வேண்டிய படைப்புக் கடமை, நாடகங்களாக மலர்ச்சி பெறுகின்றன.

நாடகத்தையும் காப்பியத்தையும் ஒப்புநோக்கும் அரிஸ்டாட்டில், நாடகம் தாழ்ந்த மக்களுக்கானது என்று கூறினாலும், நாடகமே உயர்ந்தது என்னும் முடிவுக்கு வருகின்றார்.

> காப்பியம், உடலசைவு முதலான நடிப்பு இன்றியே புரிந்துகொள்ளும் உயர்ந்த அவைக்காக இயற்றப்படுவது; அவல நாடகம் பாமரர்க்காக இயற்றப்படுவது என்ற கருத்து வெளிப்படுகிறது. இவ்வாறு அவல நாடகம் பாமரர்க்குரிய இலக்கிய வகையென்று கொண்டால், இது காப்பியத்தைவிடத் தாழ்ந்தது என்பது தெளிவாகிறது (மணவாளன் அ அ., ப. 133)

> அவல நாடகம் மேற்கூறிய வகைகளில் காப்பியத்திலும் சிறந்து விளங்குகிறது. இவ்விரு வகைக்கவிதை இலக்கியங்கள் தருகின்ற தனித்தனிச் சிறப்பின்பமாகிய கவிதையின்பத்தை அளிப்பதிலும் காப்பியத்தைவிட நாடகம் உயர்ந்தது. மேலும் கவிதைப் பயனை அளிப்பதில் காப்பியத்தைக் காட்டிலும் சிறந்தது நாடகமே எனலாம். ஆதலின் காப்பியத்தைவிட அவல நாடகம்தான் உயர்ந்த கலைவடிவம் என்பது விளங்கும் (மணவாளன் அ அ., ப 135)

அவல நாடகங்கள் குறித்துப் பேசும்போது, அரிஸ்டாட்டில் இக்கருத்துக்களைத் தெரிவிக்கின்றார். அவரே பிறிதொரு இடத்தில் அவல நாடகங்கள் அறிவில் சற்று மேம்பட்டவர்க்கு என்னும் கருத்தையுத் தெரிவித்துச் செல்வார். இது, அவல நாடகங்கள் இடைப்பட்ட மக்களுக்கானது என்னும் கருத்தையும் அறிவிக்கின்றது. ஒரு வகையில் நக்கீரர் குறிப்பிடுவது போன்று தலை இடை கடை மக்கள் என்னும், 'ரசனை' பிரிவு, கிரேக்கம் முதலான தமிழோடு ஒத்த பழமையான இலக்கியங்களில் இருக்கின்ற பொதுப் பண்பாகலாம்.

ஆனால், தமிழ் உள்ளிட்ட இந்திய மரபில் பெரும்பான்மை மக்களுக்கான நாடகங்கள் 'செந்திறம்' என்னும் இன்பியல் நிறைவுடையது. 'நோந்திறம்' எனப்படும் துன்பியல் முடிவுகளைக் கொண்ட - அவல - நாடகங்கள் இங்கு இயற்றப்படுவதில்லை. எனவே, அவல நாடகங்கள், அறிவில் 'இடைப்பட்ட' மக்களுக்கான தென்றால், இன்பியல் முடிவுகளைக் கொண்ட பண்டைத் தமிழ் நாடகங்கள் - நாடகப் பாக்கள் - நக்கீரர் குறிப்பிடுவது போன்று, அறிவில் 'கடைப்பட்ட' மக்களுக்கான தெனலாம்.

பண்டைத் தமிழகத்தில் நாடகங்கள்

'நாடக வழக்கம்' கூற முனையும் தொல்காப்பியர் பண்டைத் தமிழகத்தில் நடைபெற்ற நாடகங்கள் குறித்து எந்தக் குறிப்பையும் புலப்படுத்தாமற் செல்கின்றார். ஆனால், செய்யுளியலில் பாடல்களுக்குக் கூறுகின்ற பல்வேறு கூறுகளும் நாடக வழக்கத்தோடு தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன. தொல்காப்பியமே சுட்டுகின்ற,

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி (தொல். பொருள். புறத். இளம். 30: 3-4)

என்னும் நூற்பா நாடகக் கலைஞர்கள் குறித்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

கூத்து என்பதை நாடகமாகக் கொண்டால், கூத்தர் நாடகக் கலைஞராகக் கொள்ளப்படுவார். பாணர் இசைக்கலைஞர். இசையுடன் பாடலைப் புனைந்து பாடும் ஆற்றல் வல்லார். பொருநர் - நடிப்பவர். ஆற்றுப்படையில் காட்சியளிக்கும் கலைஞர் குழு நாடகங்களை அரங்கேற்றம் செய்கின்ற குழுவே ஆகும்.

முப்பத்திரண்டு மெய்ப்பாடுகள் குறித்து விளக்குகின்ற பேராசிரியர்,

> முடியுடை வேந்தருங் குறுநில மன்னரும் முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமம் நுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும்.. (பேராசிரியர், ப. 1)
>
> இவற்றைப் பண்ணைத் தோன்றிய பொருளெனின் ஒன்றொன்றாக்கிக் கூறாது கூத்தன் அரங்கினுள் இயற்றும் வகையானே சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென வேறு செய்வான் (பேராசிரியர், ப. 3)

என, 'நாடக இருத்தல்' குறித்த செய்திகளைத் தருகின்றார்.

செய்யுளியலுள் உள்ளவற்றை அகத்திணையியலுள் உள்ள நாடக வழக்கினோடு பொருத்திக் காட்டியதாகப் பேராசிரியர் (பேராசிரியர், ப. 236) உரைத்துச் செல்வதை நோக்கும்போது, தொல்காப்பியம் முழுமைக்குமான பேராசிரியர் உரை கிடைத்திருந்தால், நாடக வழக்கம் குறித்த ஐயங்கள் பலவற்றுக்கும் விடை கிடைத்திருக்கும்.

பண்டைத் தமிழகத்தில் நாடகங்கள் இருந்தன என்பதற்குச் சிலப்பதிகாரம் சான்றுகளைத் தருகின்றது. 'ஆடல்' என அழைக்கப்படுவது நாடகம் ஆடுதல் எனச் சிலப்பதிகார உரைகள் பொருள் தருகின்றன.

பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்
காடலும் பாடலும் பாணியுந் தூக்கும்
கூடிய நெறியின் கொளுத்துங் காலை (சிலப்பதிகாரம். 3: 14-17)

> பதினோராடலும்....அறிந்தென்றது - அல்லியமுதற் கொடுகொட்டி ஈறாகக் கிடந்த பதினொரு கூத்தும், அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும் அக்கூத்துக்களின் விகற்பங்களுக்கெல்லாம் அமைந்த வாச்சியக் கூறுகளும் நூலின் வழியே விளங்கவறிந்து (சாமிநாதையர் உ வே., ப. 58)
>
> பாடலுமென்றது - பண்ணல் முதலான எட்டுவகைப்பட்ட குறிக்கோளும்; பாணியுமென்றது - தாளங்களுமென்றவாறு; தூக்குமென்றது - இத் தாளங்களின் வழிவரும் செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிவுதூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத் தூக்கு, கழற்றூக்கு, நெடுந்தூக்கென்று சொல்லப்பட்ட ஏழு தூக்குகளு மென்றவாறு (சாமிநாதையர் உ வே., ப. 59).

அரும்பதவுரையின் இவ்விளக்கத்தில் 'பாட்டு' என்பதற்கும் அப்பாட்டுக்கள் இடம்பெறுகின்ற கூத்துக்களுக்கும் சற்றுக் கூடுதலான விளக்கம் கிடைக்கின்றது. சிலப்பதிகாரத்திலும் கலித்தொகையிலும் கூறப்படுகின்ற பதினொரு வகையான ஆடல்கள் மேலோட்டமாகப் பார்த்தால் தெய்வ நடனங்களின் வகையாகவே நமக்குத் தெரிகின்றது. அவற்றைக் கூத்துக்கள் என்பதும் அக்கூத்துக்களுக்குப் பாடல்கள் புனையப்பட்டன என்னும் செய்தியும் *அல்லியமுதற் கொடுகொட்டி ஈறாகக் கிடந்த பதினொரு கூத்தும், அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும்* என்னும் அரும்பதவுரைப் பகுதி வழியாக நமக்குத் தெரிய வருகின்றது.

அடியார்க்கு நல்லாரும் அரும்பதவுரையையே வழிமொழிகின்றார் எனலாம் (சாமிநாதையர் உ வே., ப. 89). *அல்லியமுதற் கொடுகொட்டி ஈறாகக் கிடந்த பதினொரு கூத்தும், அக்கூத்துக்களுக்குரிய பாட்டுக்களும்* என்று ஆடல்களையும் ஆடல்களுக்குரிய பாட்டுக்களையும் குறிப்பிடுகின்ற அடியார்க்கு நல்லார், பாட்டு என்பதற்குரிய கூடுதலான விளக்கங்களையும் தருவதற்கு முனைகின்றார்.

> பாட்டுமென்றது - அகநாடகங்களுக்கும் புறநாடகங்களுக்கும் உரிய உருக்களுமென்க.
>
> அகநாடகங்களுக்குரிய உருவாவன:- கந்த முதலாகப் பிரபந்தவுரு ஈறாவுள்ள இருபத்தெட்டும். இவற்றுள், கந்தமென்றது - அடிவரை யறையுடைத்தாய் ஒரு தாளத்தாற் புணர்ப்பது……. பிரபந்த மென்றது - அடிவரையறை யின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது. புறநாடகங்களுக்குரிய உருவாவன:- தேவபாணி முதலாக அரங்கொழி செய்யுளீறாகவுள்ள செந்துறை விகற்பங்களெல்லா மென்க (சாமிநாதையர் உ வே., ப. 90).

மேற்கண்ட அடியார்க்குநல்லாரின் உரைப்பகுதி பாடல் குறித்த போதுமான விளக்கத்தை நமக்கு அளிக்கின்றது. பாட்டு என்பதற்கு அகப்புற நாடகங்களுக்குரிய 'உருக்கள்' என்கிறார். நல்லார் விளக்குகின்ற உரு என்பது 'பாடல்' வடிவத்தைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது எனலாம்.

நிறைவுரை

கடந்த இருபதாம் நூற்றாண்டு தொடங்கி, இன்று வரையும் தமிழகத்தில் நடைபெற்ற சமூக அரசியல் எழுச்சிகளுக்குக் காரணமாக இருந்தவை சங்க இலக்கியங்கள். அவை உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்களின் தோற்றக் களம், அதற்கான காரணம் ஆகியவை முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை. அகத்தியலிங்கம் உள்ளிட்ட ஒரு சில தமிழறிஞர்கள் சங்க இலக்கியங்களில் காணலாகும் நாடகத் தன்மை குறித்து விளக்கியுள்ளனர். நாடக வழக்கம் என்பது, நாடகங்களை நிகழ்த்தாமல் வாராது. எனவே, சங்க இலக்கியப் பாக்கள் நாடக ஆக்கக் கூறுகளில் ஒன்று என்பதை இக்கட்டுரை உறுதியாகவே முன்வைக்கின்றது.

நாடக இலக்கியம், பொதுமக்களை நெறிப்படுத்துதற்பொருட்டு இயற்றப்படுபவை என்னும் கருத்து மேலே வருவித்துக் காட்டப்பட்டது. இத்தகைய நாடகங்கள் அக்காலத்தில் இருந்தன என்பதை விளக்குவதற்கு, பெயர் குறிப்பிட்ட நாடகங்கள் எதுவும் இல்லை என்பது உண்மையே. எனினும், பாத்திரப் படைப்புகள், தலைமக்கள் முதலான பாத்திர வார்ப்புகள், பாத்திரங்கள் நிகழ்த்தும் கூற்றுகள், இசைக் கூறுகள், நாடகத்தை நடத்திக் காட்டுகின்ற பாண் குழுக்கள் போன்ற, நாடகச் சூழல் இருந்ததைக் காட்டும் சான்றுகள் பேரளவு இருக்கின்றன. மேலும், சங்கம் மருவிய கால இலக்கியமான சிலப்பதிகாரம், அரங்கேற்று காதையில் நாடகம் குறித்த முழுமையான தரவுகள் அனைத்தையும் தருகின்றது. தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், நாடக அரங்கத்தை மனத்திற் கொண்டே தமது உரையை இயற்றிச் செல்கின்றார்.

நாடக இலக்கியம் எவர்க்குரியது என்பது குறித்த சான்றுகளும், கிரேக்க நாடகப் பாங்குடன் ஒப்பிட்டு விளக்கப்பட்டன. நாடகப் பாடல்கள் அல்லது நாடக வழக்கிலான பாடல்கள் என எவ்வாறு பொருள் கொண்டாலும், சங்க இலக்கியப் பாடல்கள் இயன்று நின்றதற்கொரு களம் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. நடித்தற்குரிய நாடகங்களின்றி அப்பாடல்கள் இயன்றிருக்க வாய்ப்பு சிறிதும் இல்லை. நாடகங்கள் இல்லாமல் இத்தன்னுணர்ச்சி பாடல்கள் தோன்றுவதற்கான களம் என வேறெதுவும் இருந்திருக்க இயலாது என்னும் கருத்தை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

துணைநின்ற நூல்கள்

1. இளம்பூரணர் (உ. ஆ)., 1956, தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. சாமிநாதையர் உ. வே (உ. ஆ)., 1955, குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை.

3. சாமிநாதையர், உ.வே (ப.ஆ)., 1955, சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், கபீர் அச்சுக்கூடம், சென்னை.
4. சுப்புரெட்டியார் ந., 1988, தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
5. சோமசுந்தரனார் பொ. வே (வி. ஆ)., 1970, கலித்தொகை நச்சினார்க்கினியருரை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
6. நக்கீரர் (உ. ஆ)., 1958, களவியல் என்ற இறையனார் அகப்பொருள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
7. நச்சினார்க்கினியர் (உ. ஆ)., 1957, தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
8. நாராயணசாமி ஐயர் அ (உ. ஆ)., 1956, நற்றிணை நானூறு மூலமும் உரையும், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
9. பிள்ளை கே. கே., 2022, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவம், சென்னை.
10. புலியூர்க் கேசிகன் (ப. ஆ), 1999, திருக்குறள் பரிமேலழகருரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
11. பேராசிரியர் (உ. ஆ)., 1959, தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
12. மணவாளன் அ அ (மொ. ஆ)., 2001, அரிஸ்டாட்டிலின் கவிதையியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
13. ஜீன் லாறன்ஸ் செ., பகவதி கு (ப. ஆ)., 1998, தொல்காப்பிய பாவியல் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

இணையதளம்

1. https://thevaaram.org/thirumurai_1
2. https://tamilvu.org

தொ.மா.க.138

வரலாற்று நோக்கில் தொல்காப்பிய இடைச்சொல் - பாட்டும் தொகையும்

க. சந்தோஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641046
santhoshganesh55@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மொழியில் கிடைத்தவற்றுள் பண்டு பழம்பெரும் இலக்கணக் கருவூலம் என்று போற்றத்தகும் வகையில் நம்மிடமிருக்கும் நூல் தொல்காப்பியமாகும். அவ்வகையில் தொல்காப்பியத்தின் ஒவ்வொரு எழுத்தும் சொல்லும் பல நுட்பங்களைத் தன்னுள் கொண்டிருக்கிறது என்பது ஆய்வுலகினரின் முடிபாகும். மொழியறிஞர்கள் பலரும் சொல்லும் கருத்தாவது ஒரு மொழியானது உருவான அளவிலேயே நின்றுவிடுவதில்லை அது நாளும் புதுமை பெறுகிறது, நாளும் மாற்றம் அடைகிறது என்பர். இதனையே தொல்காப்பியரும் பதிவு செய்துள்ளதைக் காண முடிகிறது. தமிழ்மொழியின் இலக்கணக் கட்டமைப்பும் வடமொழியின் வியாகரணக் கட்டமைப்பும் பிற்காலத்தில் உருவான திராவிட மொழிகளின் இலக்கணக் கட்டமைப்பிற்கு பெரிய தொடர்புள்ளதை உணர்த்துகிறது.

தொல்காப்பியரின் காலத்திலும் இந்த மொழிக்கலப்பு ஏற்படுவதைத் தொல்காப்பியரே “வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ” என்று பதிவு செய்கிறார். மொழிக் கலப்பும் இலக்கணக் கட்டமைப்பும் ஒன்றையொன்று சார்ந்து இருப்பதாகக் கொள்ளலாம். தொல்காப்பியரும் கூட ஏதோவொரு மொழிக்கலப்புற்ற காரணத்தினாலே தொல்காப்பியம் படைத்திருக்கலாம் என்றும் ஊகிக்கலாம். தொல்காப்பியரின் காலம் வரையில் மொழி தழுவிய இலக்கண மாற்றமானது பின்னர் நிறுவனம் பெற்ற சமயந் தழுவிய மாற்றத்தை ஏற்றுக்கொண்டதாகக் கொள்ளலாம். ஏனென்றால் சங்க இலக்கியத்திற்குப் பின்னர் சமயந்தழுவிய இலக்கியங்கள் பெரும்பான்மையாக இயற்றப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து எழும் இலக்கண நூல்களும் சமயந்தழுவிய மாற்றத்தை ஏற்றுக்கொண்டதாக ஊகிக்கலாம். இருப்பினும் தொல்காப்பியத்தையொட்டி நமக்கு கிடைத்துள்ள சங்க இலக்கியங்கள் முழுக்க முழுக்க தொகுக்கப்பட்டவையே, இன்ன காலத்தில் இயற்றப்பட்டது என்று வரையறுக்க இயலாது. ஆனால் முற்றிலும் கால மாறுபாட்டோடு தொகுக்கப்பட்ட சங்க இலக்கியத்துள் தொல்காப்பியத்தை நெருங்கிய காலத்தைய பாடல்களும் உள்ளன.

அதனை நிறுவும் பொருட்டு தொல்காப்பியத்தை முன்னிறுத்தி அவற்றின் கருத்தோடு நெருங்கிவரும் பாடல்களை இனங்காண முடியும் என்ற கருத்தோடு பல்புகழ் நிறுத்தப் படிமையோன் எடுத்தாண்டுள்ள இடைச்சொற்களையும் அவை இலங்கும் பொருண்மையையும் சங்கப் பாடல்களுனுள் கண்டு தெளிவதன் வாயிலாக அவற்றின் வரலாற்றினை வரைய முடியும் என்பது இவ்வாய்வுக்கேற்ற கருதுகோளாகும். இவ்வாய்வின் வாயிலாக சங்க இலக்கியத்திற்குப் பிந்தையது தொல்காப்பியம் என்ற பொருந்தாக் கருத்தை தெளிவுற மறுக்கலாம். மேலும் சங்க இலக்கியத்தின் வாயிலாகக் கிடைக்கப்பெறும் புலவர் மற்றும் புரவலர்களின் வரலாற்றைக் கொண்டு தொல்காப்பியத்தின் காலத்தை ஊகம் செய்யத் துணியலாம்.

திறவுச்சொற்கள்: தொல்காப்பியம், இடைச்சொல், வரலாற்று நோக்கு, சாரியை, வேற்றுமை உருபு, சங்க இலக்கியம், அசைநிலைக்கிளவி, இசைநிறைக்கிளவி, சங்க இலக்கியம், புறநானூறு, முரஞ்சியூர் முடிநாகனார், பாட்டும் தொகையும், புலவர்கள், குறுந்தொகை , கொல்லன் அழிசி, துளுநாடு, திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை.

முன்னுரை

ஆய்வின் தலைப்பானது மிகப்பெரிய ஆய்வுக்களத்தை முன்னிறுத்துவதாகும். இப்படியானதொரு தலைப்பை ஒரேயொரு ஆய்வுரையில் சுருக்கி எழுதுதல் என்பது ஆய்வுலகையும் ஆய்வின் போக்கையும் திசைத் திருப்பும் வகையில் அமையக் கூடியதாகும். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதையொப்ப இவ்வாய்வுரையின் எல்லையானது அமைந்துள்ளமை குறிக்கற்பாலது. அதே சமயத்தில் இவ்வெல்லைக்குள் பெறப்படும் முடிபு மட்டுமே சங்க இலக்கியத்தின் ஒட்டுமொத்த முடிபாகவும் கொள்ளத்தக்கதாகாது. அவ்வகையில் தொல்காப்பியம் என்னும் பண்டு இலக்கண நூல் கூறும் இடையியலும் சங்க இலக்கியம் எனும் பாட்டும் தொகையும் இணைந்தியங்கும் இவ்வாய்வின், வரம்பாக இதனென விரிக்காமல் தேர்ந்த பாடல்கள் மட்டுமே ஆய்வுரைக்கான சான்று மூலமாகக் கொள்ளப்படுகிறது. அதன்வழி பத்துப்பாட்டில் சில இடங்களும் எட்டுத்தொகையில் சில பாடல்களும் மட்டுமே இவ்வாய்வுரையை முழுமையாகக் கட்டமைக்கிறது. அவ்வகையில் ஆய்வுரையின் வழியே கண்டடையும் மெய்ம்மைகளும் கருத்துக்களும் ஆய்வினது கருதுகோளினை ஏற்றோ இல்லை மறுத்தோ முடிபளிக்கலாம்.

தொல்காப்பியரின் இடைச்சொல்

சொல் எனப்படுவது அடிப்படையில் இரண்டனுள் அடங்கிவிடுகிறது என்கிறது தொல்காப்பியம்.

சொல்லெனப் படுப பெயரே வினை என்று
ஆயிரண்டென்ப அறிந்திசினோரே (தொல். 643)[1]

பெயர், வினை ஆகிய அவ்விரண்டையும் சார்ந்து அவற்றின் வழிமருங்கு வருவனவற்றை இடைச்சொல், உரிச்சொல் என்று குறிக்கிறது தொல்காப்பியம்.

இடைச்சொல் கிளவியும் உரிச்சொல் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப (தொல். 644)[2]

"இடைச்சொல்லாவது, பெயர்ப்பொருளையும் வினைப் பொருளையும் வேறுபடுத்தும் இயல்பினதாய் அவற்றின் வழிமருங்கு தோன்றி அவற்றொடு ஒருங்கு நடைபெற்றியல்வதாகும். அவற்றுள் ஒரு சாரன பெயரும் வினையுமாகிய சொற்களினின்று திரிந்தும், சிதைந்தும், சுருங்கியும் இலக்கணக் குறியீடாக அமைந்து இடுங்கிய சொற்களாக வருதலானும், ஒரு சாரன பெயருமாகாமல் வினையுமாகாமல் அவற்றிற்கு இடைப்பட்டனவாக வருதலானும், ஒரு சாரன திணை, பால், இடம், காலம் முதலியவற்றைக் காட்டுதற்குரிய உறுப்பாக இடப்படுதலானும், இடைச்சொல் என்னும் காரணக்குறியீடு பெற்றன. ஆதலின், இடை என்னும் சொல் இடுங்குதல், இடை நிகர்த்தல், இடப்படுதல் என்பவற்றிற்குப் பொதுவாக நின்றது." [3]

மேலுணர்த்தியவாறு தொல்காப்பியரின் கருத்துப்படி, சொல் என்பது அடிப்படையில் இரண்டு என்பது தெளிவு. அவற்றின் வழிமருங்கு தோன்றுவனென்று மேலும் இரண்டாகத்தான் சொற்கள் நான்கு வகையாகக் கருதப்படுகிறது. அவ்வழியே தொல்காப்பியர் தம்காலத்தான் வழக்கிலிருந்த பல இடைச்சொற்களை வகுத்தளித்ததுடன் அவையேற்கும் பொருண்மையையும் இடையியலில் சுட்டுகிறார்.

இடைச்சொல் - அறிஞர்கள் கருத்து

'இடைச்சொல்' என்றால் பெயரிடையேயும் வினையிடையேயும் சொற்றொடர் இடையேயும் பொருந்தி நின்று பொருள் விளக்கத்திற்குத் துணைபுரிவது என்று பொருளாகும்.[4]

பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் எவ்வாறு தனித்து வந்து பொருள் தருமோ அதுபோல் தனித்து வந்து பொருள் தந்து செயல்படாமல், அந்தச் சொற்களுக்கு முன்னரும் பின்னரும் வந்து பொருளை உணர்த்தும் தன்மையையுடைய சொற்களுக்கு இடைச்சொற்கள் என்று பெயர்.[5]

ஒரு தொடரில் பெயருடனும் வினையுடனும் இணைந்து பொருள் மாற்றத்திற்கென வருவது இடைச்சொற்களாகும்.[6]

இடையெனப்படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற்று இயலும் தமக்கியல்பிலவே (தொல்.734)[7]

இடைச்சொல் குறித்தான பல்வேறு அறிஞர்களின் கருத்தை நோக்குங்கால், இடைச்சொல் என்பதற்கு தனித்து பொருள் இல்லை என்பதும் அது பயின்றுவரும் இடம்சார்ந்து பொருண்மை இலங்கும் என்பதும் இதன் வாயிலாகப் புலப்படும்.

இடைச்சொற்களின் பாகுபாடுகள்

அவைதாம்
புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுநவும்
வினைசெயல் மருங்கின் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபுஆ குநவும்
அசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பின் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியான் பொருள்செய் குநவும்
அப்பண் பினவே நுவலும் காலை (தொல்.735)[8]

இவ்வாறாக, தொல்காப்பியர் இடைச்சொற்கள் நிற்கும் முகத்தான் அவற்றை ஏழுநிலைகளாக பாகுபடுத்தியுள்ளார்.

சங்க இலக்கியம் என்று அழைக்கப்படும் பாட்டும் தொகையும் பல்வேறு காலத்தில் பல்வேறு புரவலர்கள் ஆதரிக்க பல புலவர்கள் எழுதியதாகும். இதில் கபிலர், பரணர், ஔவையார் போன்ற புகழ்பெற்ற புலவர்களின் பாடல்களும் இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வுரையின் கருதுகோளை முன்னிறுத்தி எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு ஆகிய இரண்டையும் முழுவதுமாக ஆராய்ந்தால் புலவர்களின் வரலாற்றுக் களஞ்சியத்தை வரையறுக்க முயலலாம்.

இவ்வாய்வுரையின் கருதுகோளின்படி தொல்காப்பியர் கூறியுள்ள எல்லா இடைச்சொற்களும் எல்லாக் காலத்திலும் பயன்பாட்டில் இருந்திருக்குமா.? என்பது கேள்விக்குரியதே. அதே சமயம் சில வழக்கொழிந்தும் சில வழக்கில் புகுந்தும் இருக்கலாம்.

புறநானூறு

மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கைப் போலப் (புறம்.2:1-6)[9]

முரஞ்சியூர் முடிநாகனார் பாடியுள்ள இப்பாடலில்,

எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று
அப்பால் எட்டே உம்மைச் சொல்லே (தொல். 740)[10]

ஐம்பூதங்களையும் குறிப்பிடுங்கால் 'உம்' என்ற இடைச்சொல்லானது தொல்காப்பியர் வரையறுத்தபடியே எண்ணிக்கை அடிப்படையிலான எண்ணுதற் பொருண்மையில் அமைந்துள்ளது. மேலும் இப்பாடலில் 'ஐம்பெரும் பூதத்து" என்னுமிடத்தில் 'அத்துச் சாரியை' வந்துள்ளதைக் காணலாம். தொல்காப்பியர் கூறிய 'புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுநவும்' என்பதன்வழி இடைச்சொற்களின் பாகுபாட்டில் சாரியையும் உள்ளதறிக. இதுவன்றி, புணரியலில் தொல்காப்பியர் எடுத்துரைக்கும் சாரியைப் புணர்ச்சியில்,

அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்

ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே (தொல்.133) [11]

என்னும் சூத்திரத்தின்படி, (பூதம் + அத்து) என்பதில் மகர மெய்கெட்டு 'பூதத்து' என்று வந்துள்ளமையும் குறிக்கற்பாலது.

முரஞ்சியூர் நாகனார் பாடிய ஒரு பாடலே கிடைத்துள்ளமையாலும் இவர் இப்பாடலில் குறிப்பிடும் அரசன் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்னும் கருத்து நிலவுகின்றபடியாலும் புறநானூற்றில் காணலாகும் இப்பாடல் தொல்காப்பியரின் இடையியல் கருத்துக்களொடும் புணரியல் கருத்துக்களொடும் ஒன்றுவதையும் ஒப்புநோக்குகையில் வரலாற்றில் இப்பாடல் முந்தையது எனலாம். முதற்காரணம் முரஞ்சியூர் நாகனார் பாடியதாக வேறுபாடல்கள் சங்க இலக்கியத்தில் இல்லை என்பதன் முடிபு, காலத்தால் பழமை வாய்ந்தவரின் படைப்புகள் அழிய நேரிட்டிருக்கும் என்று ஊகிக்கலாம். இரண்டாவதாக அரசனின் காலம் மூன்றுவிதமாக, பாரதப்போரின் காலம், சாதகவாகனனோடு தொடர்புபடுத்தும் காலம், குட்டநாட்டை ஆண்ட மன்னன் என்று கூறும் கி.பி.முதல் நூற்றாண்டு என்று முரண்பட்டு நிற்பதும்.[12] அதில் பிற்காலம் என்றாலும் கூட தொல்காப்பியத்தை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை இழுத்துச்சென்ற வடமொழி ஆதரவு தமிழ் பெருமக்களின் கருத்தை உறுதியாக மறுக்கலாம். இதன்வழி தொல்காப்பியத்தின் காலம் கி.பி.முதல் நூற்றாண்டு அல்லது அதற்கு முந்தையது என்று புறநானூற்றின் ஒரு பாடலின் வழிநின்று தெளிவுறக் கூறலாம்.

குறுந்தொகை

குறுந்தொகையில் 'கொல்லன் அழிசி' என்னும் புலவருடையப் பாடல்களும் இவ்வாய்வுரையுடன் நோக்குதற்குரியது. ஒட்டுமொத்த சங்க இலக்கியத்தில் இவருடைய பாடல்கள் நான்கு மட்டுமே இடம்பெறுகிறது. நான்கும் குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

"குறுந்தொகையைத் தொகுத்தவன் பூரிக்கோ. கடைச் சங்கம் புரந்த பாண்டியருள் ஒருவனான உக்கிரப் பெருவழுதி கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அல்லது அதற்குச் சிறிது முன்னர் வாழ்ந்தவன். அவனுடைய ஆதரவோடு பூரிக்கோ என்னும் உருத்திரசன்மன் தமிழ்ப் பாடல்களைத் தேடித்தொகுக்கும் செயற்கரிய செந்தமிழ்ப் பணியை மேற்கொண்டார். அதற்காக அவர் தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து பிற்காலத்தே சாமிநாதையர் செய்தது போலச் சிற்றூர்தோறும் சென்று புலவர் வீடுகளில் எல்லாம் புகுந்து தமிழ் ஏடுகளைத் தேடியெடுத்துப் புதையல் கண்டவரைப் போன்ற புது மகிழ்வோடு சேகரித்திருக்க வேண்டும். தமிழ் நாட்டில் இவ்வாறு கவி ஆய்வு மேற்கொண்ட முதல்வராக தொகை நூல் வழங்கிய முதல்வராகத் திகழ்ந்தவர், பூரிக்கோ."[13]

குறுந்தொகையைத் தொகுத்தவரின் காலமே கி.பி இரண்டாம் நூற்றாண்டு என்னும் கருத்துநிலவுகிறதென்றால், குறுந்தொகையில் இடம்பெறும் பாடலை இயற்றியப் புலவரின் காலம் என்னவாக இருக்கும் என்பது சிந்திக்கத்தக்கதாகும். அதுபோல அப்புலவர் இயற்றியுள்ள பாடல்களில் தொல்காப்பியரின் கருத்துக்கள் இடம்பெறுகிறதென்றால் தொல்காப்பியத்தின் காலம் என்னவாகயிருக்கும். முன்பு கூறியது போல ஒரு புலவர் இயற்றியவற்றுள் குறைந்த பாடல்களே கிடைக்கிறதென்றால் காரணம் ஒன்றுதான் அப்புலவர் காலத்தால் முந்தையவர் என்பது தெளிவு. உதாரணமாகச் சொல்லப் போனால் 19ஆம் நூற்றாண்டில் முழுக்க முழுக்க கிடைக்கும் கண்ணதாசன், வைரமுத்து ஆகியோரின் பாடல்கள் இன்னும் சில நூற்றாண்டுகளில் கிடைக்குமா.? என்பது கேள்விக்குறிதானே. எழுபது எண்பதுகளில் நல்ல வரவேற்பைப் பெற்ற கண்ணதாசனின் பாடல்கள் பற்றி தற்போதைய தலைமுறைக்குத் தெரியுமா?

கொல்லன் அழிசி தொல்காப்பியரின் காலத்தை நெருங்கிய காலகட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். தொல்காப்பியர் சுட்டும் இடைச்சொற்கள் மட்டுமல்லாமல் இன்னபிற சான்றுகளைக் காட்டியும் இதனை நிறுவலாம்.

'அரும்புஅற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்ெகழு ெபருஞ்சினை இருந்த தோகை
பூக்ெகாய் மகளிரில் தோன்றும் நாடன்' (குறுந்.26)[14]

இச்செய்யுள் வரியில் தொல்காப்பியர் சுட்டும் 'உம்' என்னும் இடைச்சொல் 'தோன்றும்' என்பதில் சிறப்பு என்னும் பொருண்மையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதேபோல் இப்பாடலில் இடம்பெறும்,

'வரைஆடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனும் அறியும் அக்ெகாடியோ னையே' (குறுந்.26) [15]

வரிகளில் இடம்பெறும் பறழ், கடுவன் ஆகியவற்றைத் தொல்காப்பியரின் மரபியலோடு உற்றுநோக்க,

'கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப' (தொல். 1512)[16]

'மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பாலான' (ெதால். 1513)[17]

புலவர் கொல்லனழிசி பாடியுள்ள குறுந்தொகையின் மற்றொரு பாடலில்,

'ெகான்ஊர் துஞ்சினும் யாம்துஞ் சலமே' (குறுந்.138) [18]

இச்செய்யுள் வரியில் இடம்பெற்றுள்ள 'கொன்' என்னும் இடைச்சொல்லானது,

'அச்சம் பயமிலி காலம் பெருமையென்று
அப்பால் நான்கே ெகான்னைச் ெசால்லே' (ெதால்.739) [19]

மேற்கண்ட இடையியல் சூத்திரத்தின்படி, 'கொன்' என்பது பெருமையென்னும் பொருண்மையில் ஆளப்பட்டுள்ளது அறிக.

மேலும், கொல்லனழிசியின் இப்பாடலில்,

'எம்இல் அயலது ஏழில் உம்பர்;' (குறுந்.138)[20]

'கொண்கான நாட்டில் உள்ளதும், நன்னன் என்பானுக்கு உரியதும் ஆய ஏழில் எனும் மலையைப் பெயர்கூறிப் பாராட்டியிருப்பதால், புலவர் அம்மலையோடு ஒருவாற்றான் தொடர்புடையவர் ஆவார் எனக் கூறலாம்.' [21]

இக்கருத்தையொப்ப வகையில் கொல்லனழிசி பாடல்களில் "தோகை" "மயில்அடி" என இடம்பெறும் சான்றுகளையும், மாமூலனாரின் பாடல் வரியான,

"தோகைக்காவின் துளு நாடு" (அகம்.15)[22]

என்னும் வரிகளொடு பொருத்திக் காண்பதன் மூலம் உணரமுடிகிறது. மேலும், "துளுநாடு நன்னன் என்னும் வேளிர் அரச மரபினர்க்குரியது. அவர்கள் கொண்கானக்கிழார் எனப்படுவதும் உண்டு.[23]

மேலும், கொல்லனழிசி பாடியுள்ள மற்றொரு பாடலில்,

"கண்டிசின் வாழி தோழி தெண்திரைக்" (குறுந்.240)[23]

தொல்காப்பியர் இடையியலில் கூறியுள்ள 'சின்' அசைச்சொல்லாக இடம்பெறுதல் உணர்க.

'மியா இக மோ மதி இகும் சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்ெசால்' (ெதால்.759) [24]
'அவற்றுள்

இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும்
தகுநிலை உடைய என்மனார் புலவர்' (தொல்.760) [25]

இவ்வாறாக, குறுந்தொகையில் காணலாகும் கொல்லனழிசியின் பாடல்கள் மூலமாகவும் தொல்காப்பிய இடையியல் மற்றும் ஏனைய இயல் சூத்திரங்களின் மூலமாகவும் தொல்காப்பியத்தின் காலமானது, துளுநாட்டு நன்னனின் காலமாகக் குறிப்பிடப்படும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முந்தையது என்று தெளிவுறலாம்.

திருமுருகாற்றுப்படை

பொதுவாகத் திருமுருகாற்றுப்படையை கி.பி. 300 க்கும் பிற்பட்டது என்பர்.[26] இது சைவத்திருமுறையில் பதினொன்றாம் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. திருமுருகாற்றுப்படையில் தொல்காப்பியர் குறிப்பிடும் இடைச்சொற்கள் மட்டுமின்றி இன்ன பிறவும் இடம்பெற்றுள்ளது.

'மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே : ஒருமுகம் (திருமுரு.91-94)[27]

இப்பாடல் வரிகளில் இடம்பெறும் 'அன்று' என்பதனைப் பிற்காலத்தில் எழுந்த நன்னூல் அசைச்சொல் வகையில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும்,

'குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து' (திருமுரு.196) [28]

இவ்வரிகளில் இடம்பெறும் 'உடன்' என்பது பிற்காலத்தில் இடம்பெறும் சொல்லுருபாக இருக்கலாம். ஏனெனில் தொல்காப்பியர் சொல்லுருபு பற்றிக் குறிப்பிடவில்லை.

'குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே' (திருமுரு.217) [29]

இவ்வரியில் இடம்பெற்றுள்ள 'தொறு' என்பதும் பிற்காலத்தில் வழக்குற்ற இடைச்சொல்லாக இருக்கலாம்.

நெடுநல்வாடை

பொதுவாகச் சங்கப் பாடல்களில் வடசொல் கலப்பு புறக்கணிக்கப்படும். ஆனால் நெடுநல்வாடையில் வடசொல்லும் பிராகிருதமும் ஆங்காங்கே கலந்துள்ளன.[30] இதுமட்டுமின்றி நெடுநல்வாடையில்,

'மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்' (நெடுநல்.8)[31]

இவ்வரியில் 'உடன்' என்னும் சொல்லுருபு இடம்பெறுவதும் நோக்குதற்குரியது.

அதுபோல், நன்னூலார் சொல்லும் அன்று என்னும் அசைநிலையும்

'இன்புறு பெடையொடு மன்றுதேர்ந்து உண்ணாது' (நெடுநல்.46)[32]

காணக்கிடைக்கிறது.

இதன்வழி திருமுருகாற்றுப்படையும் நெடுநல்வாடையும் பிற்கால நூல்கள் என்னும் கருத்திற்கு இவற்றையும் ஒரு ஆதாரமாகக் கொள்ள இயலும்.

முடிப்புரை

தொல்காப்பியரின் காலம் கி.மு என்பதில் பெரும்பாலான தமிழ்சார் பேரறிஞர்களுக்கும்இ ஆய்வுரையாளர்களுக்கும் எவ்விதக் கலக்கமும் இல்லை. இருந்தபோதிலும் வடமொழி சார்பு தமிழறிஞர்கள் முன்னைப் பழம்பெரும் இலக்கண நூலாம் தொல்காப்பியத்தை பின்னுக்குத்தள்ளி வடமொழி நூல்களை முதன்மைப்படுத்திக் கருத்துரைப்பதற்கு, தக்கச்சான்றுகளோடு மறுக்கவேண்டியது தமிழ் ஆய்வுலகினரின் கடமையாகும். அவ்வகையில் இவ்வாய்வுரையானது தொல்காப்பியரின் இடைச்சொற்களைச் சங்க இலக்கியம்

என்று எண்ணலாகும் பாட்டும் தொகையும் அடங்கியவற்றுள் சில பாடல்களை எடுத்தாய்ந்ததில் வையாபுரிப்பிள்ளை போன்றோரின் தொல்காப்பியத்தின் காலம் சார்ந்த கருத்தினை வரலாற்றோடு பொருத்திக் காட்டியுள்ளது. இவ்வாய்வுரையானது தொல்காப்பியத்தின் இடைச்சொல் என்னும் ஒரு புள்ளியைக் கொண்டு வரலாற்றின் கதவுகளுக்கும் புலவர் மற்றும் புரவலர்கள் பற்றிய செய்திகளுக்கும் வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது. கொண்டுகூட்டு அடிப்படையில் இவ்வாய்வை விரிவுபடுத்தினால் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியத்தின் பல மாயக்கட்டுகள் அவிழும் என்பது முடிபாகக்கொள்ளலாம்.

சான்றெண் விளக்கம்

1. பக்.190, தொல்காப்பியம், தமிழண்ணல், மூலமும் கருத்துரையும்.
2. மேலது, பக்.191.
3. பக்.223,தொல்காப்பியம்,சொல்லதிகாரம் ஆராய்ச்சிக்காண்டிகையுரை,பாவலரேறுச.பாலசுந்தரம்.
4. பக்.88, தொல்காப்பிய ஆராய்ச்சி, தமிழறிஞர் சி. இலக்குவனார்.
5. பக்.169, இயல் தமிழ் இலக்கணம், பேராசிரியர். வே. சங்கர்.
6. பக்.28, ஆய்வுக்கதிர் - 1, வீ.சோமசுந்தரம் கட்டுரை (இடைச்சொற்கள்).
7. பக்.225,தொல்காப்பியம், தமிழண்ணல்,மூலமும் கருத்துரையும்.
8. மேலது, பக். 735
9. பக்.76,புறநானூறு, புலவர் இரா.இளங்குமரன் (உ.ஆ)
10. பக்.228, தொல்காப்பியம்,தமிழண்ணல், மூலமும் கருத்துரையும்.
11. பக்.39, தொல்காப்பியம், தமிழண்ணல், மூலமும் கருத்துரையும்.
12. kulandaivelucholagar.blogspot.com
13. ilakkiyavaralaru.blogspot.com
14. பக்.52, குறுந்தொகை, முனைவர் தமிழண்ணல் (உ.ஆ)
15. மேலது, பக்.53
16. பக்.522, தொல்காப்பியம், தமிழண்ணல், மூலமும் கருத்துரையும்.
17. மேலது, பக்.522.
18. பக்.179, குறுந்தொகை, முனைவர் தமிழண்ணல் (உ.ஆ)
19. பக்.228, தொல்காப்பியம், தமிழண்ணல், மூலமும் கருத்துரையும்.
20. பக்.179, குறுந்தொகை,முனைவர் தமிழண்ணல் (உ.ஆ)
21. பக்.34,குட்டுவன் கண்ணனார் முதலிய 80 புலவர்கள், புலவர் கா.கோவிந்தன்.
22. பக்.37,கவிஞர். நா. மீனவன், தெ. முருகசாமி (உ.ஆ)
23. பக்.286,குறுந்தொகை, முனைவர் தமிழண்ணல் (உ.ஆ)
24. பக்.233,தொல்காப்பியம், தமிழண்ணல், மூலமும் கருத்துரையும்.
25. பக்.234, தொல்காப்பியம்,தமிழண்ணல்,மூலமும் கருத்துரையும்.
26. பக்.70,தமிழ் இலக்கிய வரலாறு, கா.கோ.வேங்கடராமன்
27. பக்.72, பத்துப்பாட்டு, முனைவர் ச.வே சுப்ரமணியன்.
28. மேலது, பக்.76.
29. மேலது,பக்.77.
30. பக்.77, தமிழ் இலக்கிய வரலாறு, கா.கோ.வேங்கடராமன்
31. பக்.411,பத்துப்பாட்டு,முனைவர் ச.வே சுப்ரமணியன்.
32. மேலது, பக்.412.

தொ.மா.க.143

தொல்காப்பிய உவமயியல் கோட்பாடும் பிற்கால அணியிலக்கணமும்

முனைவர் அ. உமாமகேஸ்வரி
முதுகலைத் தமிழ் ஆசிரியர்,
ராக் இண்டர்நேசனல் மேல்நிலைப்பள்ளி,
பாண்டிச்சேரி, தமிழ்நாடு, இந்தியா.
umavetriani@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியரின் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இவர் எழுதிய உரைகளில் தொல்காப்பிய பொருள் அதிகார மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு மட்டுமே உரைகள் கிடைத்துள்ளன. ஏனைய பொருளதிகார உரைகள் கிடைக்கவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களில் பிற உரையாசிரியர்களை காட்டிலும் பேராசிரியர் நன்னூல் ,யாப்பருங்கலம்,தண்டி அலங்காரம் ஆகிய நூல்களின் கருத்துக்களை எடுத்துக் கூறி மறுக்கிறார்.

தமிழ் மொழியின் இலக்கண கொள்கைகளை வடமொழியின் இலக்கணக் கொள்கைகளாக மாற்றியமைத்த நிலையையே அவர் மறுத்து எதிர்த்துள்ளார்.இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு தரவுகள் சேகரிக்கப்பட்டு, அணி இலக்கண நூல்கள் எவ்வாறு தொல்காப்பிய உவமயவியல் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன என்பதை வெளிக்கொணறுதலே நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு ஆராய பெற்றுள்ளது. மேலும், இலக்கிய வழக்கையும் பேச்சு வழக்கையும் ஒருசேர பேசுகின்ற இலக்கணம் தொல்காப்பியம்.எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாக கருதுகிறது தொல்காப்பியம்.

- பேசுபவன் கேட்பவன் ஆகிய அவருடைய தனிப்பட்ட சூழல்கள்.
- பேசும்போதும் கேட்கும்போதுமான சூழல்கள் ஆகிய மொழியாடல்களை இலக்கியம் தனக்குரியதாக மாற்றுகிறது.
- மொழியின் இயல்பு வழக்குகளை மொழி சார்ந்த கலையாகிய இலக்கியமாக மாற்றும்போது உவமம், உருவகம், எச்சம், குறிப்பு,உள்ளுறை, இறைச்சி முதலியவை இலக்கியத்திற்கான சிறப்பு இயல்புகளை தந்து விடுகிறது.

சமூக, பண்பாட்டு மரபிற்கு ஏற்பவே கலை படைப்பிற்கான கோட்பாடுகளைப் பண்பாட்டின் முத்திரையாக கொடுத்திருக்கிறது தொல்காப்பியம் என்பதையும் அம்முத்திரையைக் கட்டுடைத்து வடமொழி சார்பு இலக்கணங்கள் தமிழர் தம் நூல்களாக மடைமாற்றம் பெற்றிருப்பதையும் ஆராய்வதாக இவ் ஆராய்ச்சி அமைந்துள்ளது.

முன்னுரை

மொழி என்பது மனித வாழ்வின் மேம்பாட்டுக்கு மூலாதாரம் என்பர். ஒருவன் பிறனொருவனுக்குத் தன் கருத்தைத் தெரிவிக்கும் முயற்சியால் தோன்றிய ஒலிகுறிப்பு காலப்போக்கில் பொருளுடைய மொழியானது. அவ்வாறு உலகத்தில் தோன்றிய மொழிகளில் 'தொன்மையானதும் முதன்மையானதுமாகத் திகழும் சிறப்புப் பெற்றவைச் சில மொழிகளே. அச்சில மொழிகளில் முதன்மையான மொழி தமிழ்மொழி. தமிழ்மொழி இலக்கிய வளத்தோடு இலக்கண வளமும் நிறைந்தது. தமிழ்மொழியின் இலக்கணமான தொல்காப்பியம் நமக்குக் கிடைத்திருக்கும் முதல் இலக்கண நூலாகும். மொழிக்கான பலக் கொள்கைகளை அடிப்படையாக வைத்துச் செம்மையாக ஆக்கப்பட்ட இலக்கணம் தொல்காப்பியம் என்றால் அது மிகையில்லை. தொல்காப்பியத்தின் உவமவியல், செய்யுளியல் (யாப்பில்) பயிலும் உவமங்களின் பல்வேறு கோணங்களுக்கு இலக்கணம் வகுத்தளித்துள்ளது. வடவரின்செல்வாக்கால் அணியிலக்கணத்தின் அறிமுகம் தமிழுக்குக் கிடைத்தது என்பர். இக்கொள்கையினை மறுத்து தொல்காப்பிய உவமவியல் இலக்கண அமைப்பினையும், அவற்றில் அடங்கும் அணியிலக்கணக் கொள்கைகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

உவமவியல் கோட்பாடு பொருள் விளக்கம்

உவமம் என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்புமைப்படுத்திக் கூறுவதாகும். மேலும் உவமம், தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றின் மூலம் விளக்கிக் கொள்வதுமாம். இயல் என்பது "இனமொழி கிளந்த ஒத்து" என்றது தொல்காப்பியம்." இந்நாற்பாவிற்குப் போராசிரியர் "இனமாகிய பொருளையே தொகுப்பது ஒத்து" என விளக்கம் தருகிறார்.

கோட்பாடு, கொள்கை, கொள்ளுதல் என்பன ஒரு பொருட் சொற்கள். பாடு, கை, தல் என்பன தொழிற்பெயர் விகுதிகள். கோட்பாடு என்பது கொள்*பாடு எனப் பிரிக்கப்படினும் கொள் என்பது கோள் என நீண்டு ஒலிக்கும். முதல் நிலை நீண்ட தொழிற்பெயர் விகுதி.

"கேட்டமொழி ஒழித்துக் கேளாக் கிளவியொடு
கூட்டியுரை கொளுத்தல் கோட்பாடன்மே"

அறிஞரிடம் (அ) ஆசானிடம் (அ) உலகோரிடம் கேட்டு அறிந்த செய்திகளை (அ) செய்தியினைக் கேளாமொழி கற்பனை கலப்பின்றி, கேட்டவற்றின் உண்மை நிலையினை எத்துரைப்பதேடு கோட்பாடு என்பது யாப்பருங்கலம் உரைக்கும் செய்தி.

கோட்பாடு - கொண்டிருக்கும் தன்மை, நிலைமை
கொள்கை - அறிவு, குணம், கோட்பாடு, சினேகம் செய்கை
என்பது தமிழ்மொழி அகராதி கூறும் பொருள்."

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியிடாகிய "தமிழ்ச் சொல்லகராதியின் பொருளாவன: கொள்கை - அறிவு, ஒழுக்கம், குணம், தன்மை, கோட்பாடு கொள்கை' என்று மேற்சொன்னவற்றினையே கூறுகின்றது. வாழ்வியற் களஞ்சியம், கலைக்களஞ்சியம் முதலான தொகுப்புகளில் கொள்கை, கோட்பாடு என்ற சொற்களே இடம் பெறவில்லை.

கொள்கை அல்லது கோட்பாடு என்பது "ஆழ்ந்த அறிந்த சிந்தனையின் வெளிப்பாடு" எனக் கொள்ளலாம். இச்சிந்தனை வெளிப்பாடு அல்லது வரையறை இலக்கியம் சார்ந்ததாக அமையின் இலக்கியக் கோட்பாடு எனவும், இலக்கணம் சார்ந்ததாக அமையின் இலக்கணக் கோட்பாடு எனவும், சமுதாயப் பிரச்சனையின் சிந்தனை வெளிப்பாடாக அமையின் சமூகவியல் கோட்பாடு எனவும் பெயர் பெறுகிறது. இதுவே ஆக்கியோன் பெயரிலும் மார்க்சியம் (மார்க்சியக்கோட்பாடு) லெனினியம், பெரியாரியம் என்றும் அழைக்கப்படுகின்றன. அவ்வகையில் அமைவதே "தொல்காப்பிய கோட்பாடு. இது எழுத்து, சொல், பொருள்

என்பனவற்றில் பல்வேறு பிரிவுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. ஆக்கியோர் பெயர் நூலுக்குப் பெயராகி நூல் பெயர் கோட்பாட்டின் பெயராகிறது.

எழுத்திலக்கணக் கோட்பாடு, சொல்லிக்கணக் கோட்பாடு, தொல்காப்பிய உரைவளத்தொகுப்புகள், தொல்காப்பியக் கடல், தொல்காப்பியக் கருத்தரங்கக் கட்டுரைகள் முதலான ஆய்வு நூல்களும் தொல்காப்பியரின் புணரியல் கோட்பாடு, தொல்காப்பியத்தில் கூற்றுக் கோட்பாடு, தொல்காப்பியச் செய்யுளியல் கோட்பாடும் குறுந்தொகையும், தொல்காப்பியத்தில் அகராதி கூறுகள், தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், தொல்காப்பிய உத்திகள், தொல்காப்பிய களவியல், தொல்காப்பியக் கற்பியல், தொல்காப்பியம் கூறும் வேற்றுமைகள், தொல்காப்பிய மரபியல், தொல்காப்பியமும் உரைகளும் காட்டும் தொடர்மொழி அமைப்பு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் சொல்லும் பொருளும் முதலான பல்கலைக்கழக ஆய்வேடுகளும் தொல்காப்பியத்தின் கோட்பாடுத் தன்மையினை விளக்குகையில் நோக்கத்தக்கன.

தொல்காப்பிய உவமவியல்:

உவமம் பொருள் விளக்கத்திற்கான ஒன்று. அவ்வுவமங்கள் செய்யுளில் பயிலும்போது, எவ்வாறெல்லாம் வெளிப்படும் என்பதை வரையறை செய்துள்ளது தொல்காப்பியம். "ஆசிரியர் தொல்காப்பியர் காலத்தில் ஐந்திலக்கணப் பாகுபாடு இல்லை. எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று பாகுபாடே இருந்தது. பொருளதிகாரத்தில் உள்ள செய்யுளியலால் யாப்பும் உவமவியலால் அணியிலக்கணமும் அடங்கும் என்பர் ஒரு சாரார். பிறிதொரு சாரார் உவமை பொருளை விளக்கும் கருவியேயன்றி அணியாகாதென்பர். இவ்விரண்டனுள் சேனாவரையர் முன்னைய கருத்தினர். பேராசிரியர் பின்னைய கருத்தினர். பேராசிரியர் உவமவியலை அணியியல் எனக் கருதும் கருத்துப் பொருத்தமற்றது என்பதோடு அணியிலக்கணம் எனப் பாகுபடுத்துவதே பொருத்தமற்றதென்பர். ஆனால், சேனாவரையர் உவமவியலை அணியியல் என்றும் அணியிலக்கணம் எனப் பாகுபடுத்துவது பொருத்தமுடையது என்றும் கருதுவர்." (தொல்.பொரு.சேனா.பக்-29)

அணியிலக்கணம் பற்றிய பேராசிரியர் கருத்து:

1. உவமவியலில் உள்ள உவமங்கள் சிலவற்றையும் (இவ்வாறு பேராசிரியர் கூறக்காரணம் உவமவியலில் அகப்பொருள் உவமமான உள்ளுறையும் இறைச்சியும் இடம் பெற்றுள்ளன. பொதுவிலக்கண உவமங்களைச் சுட்டவே சிலவற்றையும் எனக் குறித்தார்) சொல்லதிகாரத்தினுள்ளும், செய்யுளியலுள்ளும் சொல்லுகின்ற சில பொருள்களை வாங்கிக் கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாம் என இக்காலத்தாசிரியர் நூல் செய்தாரும் உளர் என்பது அணியலக்கணம் பற்றிய பேராசிரியர் கருத்து. (தொல்.பொரு.பேரா.பக-108) இக்கருத்தையொட்டியே இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகரின் கருத்து வருமாறு: தொல்காப்பியம் குறிப்பிடும் செய்திகளையும் வடமொழி அணியிலக்கண நூல்கள் குறிப்பிடும் செய்திகளையும் உட்கொண்டு இவ்வணியியல் அமைக்கப்பட்டுள்ளது. (இ. வி.பொ.அணி.பக். 74)
2. பேராசிரியர் காலத்தில்தான் உவமம் என்பது அணி எனப்பெயர் கொண்டு தமிழுக்கு வரத் தொடங்கியுள்ளது என்பது அவரின் உரையின் வழி அறியப்படும் செய்தி.(உரையாசியர்களின் உரையின் வழி சமுதாய, அரசியல், சமய, பொருளாதார ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.)
3. தொல்காப்பியத்தின் பொருளதிகாரப் பகுதிகள் எல்லாம் செய்யுட்கு அணிசெய்வன. ஆகையால், அவை பாடலுட் பயின்றவை எனப்பட்டன. அவையெல்லாம் தொகுத்து அணியெனக் கூறாது, வேறுசிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயனில் கூற்றாம். (தொல்.பொரு.உவ. பேராசிரியருரை. பக்.109).
4. இரண்டு பொருளை எண்ணி ஒருங்கு என்னும் சொற்சேர்த்து அதனால் ஒருங்கணி எனப்பெயர் கொடுப்பர் அணி நூலார். அப்படியாயின் கலித்தாழிசைக்கும் சுரிதகத்துக்கும். இடையே "எனவாங்கு'

என்பது வருதலின் அதையும் "எனவாங்கணி' எனப் பெயர்க்கொடுத்தல் வேண்டும் இப்படியே சொற்களைக் சொற்களைக் கொண்டால் வரையறைப் படாமல் அணிசெல்லும்.

5. செய்யுட்குரிய அழகுதரும் பொருள்களையெல்லாம் தனித்தனி அணிகளாகக் கூறாமல் சில பொருள்களை மட்டும் அணியெனல் பொருந்தாது: குன்றக்கூறலாகிவிடும். (தொல்.பொரு. உவ. பேராசிரியருரை. பக்.109).

மேலும், செய்யுட்கு இவை அணியென்பதூஉம் இவை குற்றமென்பதூஉம் மூன்றதிகாரத்துள்ளும் இவ்வாசிரியாயாண்டுங் கூறாரோவெனின் இச்செய்யுளியலில் முப்பத்து நான்கு உறுப்புக் கூறி அவ்வற்றதியைபு நல்லிசைப்புலவர் செய்யுளுறுப்பெனவும் அவை தொடர்ந்த தொடார்நிலை எண்வகையாற் தொடாநிலைச் செய்யுட்கு வனப்பெனவும் பகுத்தோதிய இலக்கணத்திற் பிறழ்ந்தவை எல்லாங் குற்றமென்பதூம் கொள்ளவைத்தானென்பது. (தொல்.பொரு.உவ.பேரா உரை. பக்.111).

தொல்காப்பிய உவமக்கோட்பாடு:

தொல்காப்பியம் வரையறுத்த உவமக்கோட்பாடு மிக நுண்ணியதும் பரந்துபட்டதுமாகும். இக்கோட்பாடுகள் அளவிறந்தன. தொல்காப்பிய உவமம் என்பது, உவமத்தோற்றம், தோற்றத்திற்கான நிலைக்களன்கள், உவமம் எவ்வாறெல்லாம் வரும் என்பதன் பொதுவிதி, இப்பொதுவிதியிலிருந்து மாறுபடும் விகற்பங்கள் எனப்பல நோக்கில் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பிய உவமக்கோட்பாட்டினை அடியொற்றிய அணியிலக்கண நூல்களான தண்டியலங்காரம் மற்றும் இலக்கண விளக்க அணியியலுள்ள பொருளணியியலில் பயின்றுவரும் அணிகள் எவ்வாறு உவமக்கோட்பாட்டினைச் சார்ந்து வந்துள்ளன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரை,

1. உவமத் தோற்றத்தின் நிலைக்களன்கள்.
2. உவமம் எவ்வாறெல்லாம் வரும் என்பதன் தொல்காப்பிய விதிகள்.
3. தொல்காப்பிய உவமக்கோட்பாட்டினை அடியொற்றிய அணியிலக்கணகள்.

என்னும் மூன்று பிரிவுகளில் அமைகின்றது.

தொல்காப்பிய உவமவியல் குறிப்பிடும் ஒவ்வொரு நூற்பாவினை ஒவ்வொரு விதியாகக் கொண்டு அவ்வொவ்வொரு விதிக்குள்ளும் அடங்கும் அணிகளை விரித்துக் காணலாம்.

உவமத்தின் தோற்றமும் அதற்கான நிலைக்களன்களும் பற்றிய தொல்காப்பியக் கோட்பாடும் இதனை அடியொற்றிய பிற்கால அணியிலக்கண நூல்களும்:

தொல்காப்பிய உவமவியல் உவமம் நான்கு வகையால் தோற்றம் பெறும் என்கிறது. அவையாவன

"வினைபயன் மெய்யுரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்" (தொல்.உவ.272)

"விரவியும் வருஉம் மரபின என்ப" (தொல்.உவ.273)

என்றும் மேலும் ஒரு விதி கூறுகிறது. வினை பயன் மெய் உரு என்ற இந்நான்கின் காரணமாகவும் இந்நான்கின் தொட்பானவைகளை விளக்குமிடத்தும் உவமம் தோற்றம் பெறும். நான்கு வகை உவமங்களும் ஒரு பொருளுக்கு ஒரு பொருளேயன்றி ஒன்றிற்கு மேற்பட்டவைகளையும் ஒப்புமையாகக் கொள்ளும்.

மேற்கண்ட வகைகளில் உவமம் தோன்றுவதற்கு நிலைகளன்களாக அமைவன சிறப்பு நலன் காதல் வலிமையாம். இந்நான்கு வகை நிலைகளன்களில் ஏதேனும் ஒன்றை

அடிப்படையாகக் கொண்டு உவமம் தோற்றம் பெறும் என்பதை,

"சிறப்பே நலனே காதல் வலியொடு

அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப" (தொல்.உவ.279)

என்னும் இந்நூற்பாவால் அறியலாம்.

"சிறப்பென்பது உலகத்துள் இயல்பு வகையானன்றி விகார வகையால் பெறும் சிறப்பு. நலனென்றது அழகு காதலென்பது இந்நலனும் வலியும் இல்வழிஉண்டாக்கியுரைப்பது. வலியென்பது தன் தன்மையானே உள்ளதோர் வலிமையாம்". (தொல்.உவ.பக்.அண்.பல்.பதி)

என தொல்காப்பியம் உவமத்தோற்றம் பற்றிக் குறிப்பிடுகிறது.

உவமத் தோற்றம் பற்றிய பிற்கால அணி இலக்கண நூல்கள்

தண்டியலங்காரம் அணியிலக்கணங்களைப் பொதுவியல் பொருளணியில் மற்றும் சொல்லணியியல் என பகுத்துள்ளது. பொருளணியியலில் முப்பத்தைந்து அணிவகைகளையும் சொல்லணியியலில் மடக்கு அவற்றின் வகைகள் சித்திரகவி அவற்றின் வகைகள் வழுக்கள் மற்றும் அவற்றின் வகைகள் ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றன. இவற்றில் பொருளணியியல் விளக்கும் முப்பத்தைந்து அணி வகைகள் மட்டும் தொல்காப்பிய உவமவியல் கோட்பாட்டினுள் அடங்குகிறது.

தண்டியலங்காரம் மற்றும் இலக்கண விளக்கம் குறிப்பிடும் பொருளணியியலில் வகைகளான தன்மை உவமை முதலானவைகளின் தோற்றம், பொருள், குணம், சாதி தொழில் என்ற நான்கு வகையால் அமைந்துள்ளது.

முப்பத்தைந்து அணிகளில் முதலாவது தன்மையணி. தன்மை என்பது ஒரு பொருளின் ஒத்த இயல்பு. அவ்வியல்பினை உள்ளவாறே குறிப்பது இவ்வணி. இது பொருள் குணம் சாதி என்னும் மூவகையால் தோற்றம் பெறுவது. உரு பொருளினையோ அப்பொருளின் குணத்தையோ சாதியையோ ஒரு தன்மையான பல பொருட்கள் கொண்டு தோற்றம் பெறுவது.

உவமையணி

பண்பு தொழில் பயன் ஆகியவற்றின் காரணமாக பொருளோடு பொருளை ஒன்றும் பலவுமாக பொருந்த வைத்து அவ்விரு பொருளுக்கும் ஒப்புமைத் தோன்றுமாறு சொல்லப்படுவது உவமையணி ஆகும்.

"பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவ துவமை" (தண்டி-31)

என்னும் தண்டியலங்கார நூற்பாவினையே இலக்கண விளக்கமும் பின்பற்றுகிறது.

தொழில் பயன் பண்பு இம்மூன்றின் காரணமாக தோற்றம் பெறும் உவமை ஒரு பொருளோடு ஒரு பொருள் ஒரு பொருளோடு பல பொருள் பல பொருளோடு பல பொருள் பல பொருளோடு ஒரு பொருள் என்று ஒப்புமை தோன்ற வரும் என்பதாம். இத்தோற்றம்தொல்காப்பிய உவமத் தோற்றத்தையே சார்ந்துள்ளது.

உவமம் இயல்பாய் வருதலையும் வேறுபடுதலையும் தொல்காப்பிய உவடவியல் குறிப்பிடுவது போல தண்டியலங்காரமும் இலக்கண விளக்கமும் உவமவிரியாக இருபத்து

நான்கைக் குறிப்பிடுகின்றன. அவையாமாறு
"விரியே தொகையே யிதர விதரம்
மாலை யென்னும் பாவ தாகும்"
என்னும் நூற்பாவின் வழி தண்டியலங்காரமும்
"உற்றபண்பு ஆதியின் உவமம் செய்வுழி
விளக்கிய உவமையின் விரிஎனப் படுமே"

என்னும் நூற்பாவின் வழி இலக்கண விளக்கமும், உவமை இயல்பாக வருதலையும் வேறுபட வருதலையும் இருபத்து நான்கு வகையில் கூறி மேலும் வேறு உவமை கைகளும் சேர்ந்து வரும் என்பதனை,

"அற்புதஞ் சிலேடை யதிசயம் விரோதம்
ஒப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம்
விலக்கே யேதுவென வேண்டவும் படுமே" (தண்டி-33),

என்று தண்டியலங்காரமும் குறிப்பிடுகிறது. இந்நூலும் இலக்கண விளக்கமும் உவமத்தை அடிப்படையாகக் கொண்டு கொண்டு 32 உவமவிரிகளையும் பிற உவமவகைகளான அற்புதம், சிலேடை, அதிசயம், விரோதம், ஒப்புமைக்கூட்டம், தற்குறிப்பேற்றம், விலக்கு, ஏது ஆகியவையும் "உவமம்" என்ற ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு விரிந்துள்ளன. தண்டியை ஒத்தே வீசோழியமும் மாறனலங்காரமும் முத்துவீரியம் தொன்னூல் விளக்கமும் அமைந்துள்ளன என்கிறது இலக்கணவிளக்கம்.

மேற்கண்ட தண்டியலங்காரம் முதலான அணியிலக்கண நூல்கள் கூறும் விரி உவமம் முதல் மாலை உவமம் வரையுள்ள அணிகள் தொல்காப்பிய உவமத் தோற்றமாகக்

குறிப்பிடும் வினை, பயன், மெய், உரு என்ற நான்கிலும் 'விரவியும் வரும் மரபின என்ப' என்னும் சூத்திரத்திலும் அடங்கும்.

"வேறுபடத் தோன்றும் உவமத் தோற்றம் என்னும் தொல்காப்பிய உவமவியல் சூத்திரத்துள் உவமம் விகற்பித்து தோன்றுவனவாக அணிநூல்கள் கூறும் அற்புதம், சிலேடை, அதிசயம், விரோதம், ஒப்புமைக்கூட்டம், தற்குறிப்பேற்றம், விலக்கு, ஏது ஆகிய அணிகள் அடங்குமென பொதுவாகவே கூறலாம். ஆனால் அது ஏற்புடையதாகாது.

உவமம் எவ்வாறெல்லாம் வரும் என்பதன் தொல்காப்பிய விதியும் இவ்விதியின் இயல்பிலுள்ள மாற்றங்களும் அம்மாற்றத்தின் படி அமைந்துள்ள பின்னாளைய அணிகளும் பற்றி மட்டும் காண்போம்.

உவமம் எவ்வாறெல்லாம் வரும் என்பதன் தொல்காப்பிய பொதுவிதிகள் அவ்விதிகளை

அடியொற்றிய பின்னாளைய அணியிலக்கணங்கள்

தொல்காப்பிய உவமவியல் உவமத்தின் நான்கு வகைத் தோற்றம் நிலைக்களன்கள் கூறி பின்னர் நான்கு வகை உவமத் தோற்றமும் ஒரு பொருளுக்கு ஒரு பொருளேயன்றி ஒன்றிற்கு மேற்பட்டவைகளையும் ஒப்புமையாகக் கொண்டு தோன்றும் என்பதை "விரவியும் வரூஒஉம் மரபின என்ப" (தொல்.உவ.273) என விளக்கி அவ்வாறு தோன்றும் பொரளும் உவமமும் உயாந்ததாக இருத்தல் வேண்டும் என்பதோடு தாழ்ந்த பொருளிலும் உவமமும் பொருளும் தோன்ம் என்கிறது தொல்காப்பியம்

"உயர்ந்ததன் மேற்றே ஒள்ளுங் காலை" (தொல்.உவ.274)

"கிழக்கிடும் பொருளோ டைநடது மாகும்" (தொல். உவ.276)

என்று கூறுகிறது. மேலும், தாழ்ந்த பொருளை இடம் கருதி ஏற்றுக் கொள்ள வேண்டும். பொருளுக்கு உவமம் கூறும் போது முதற்பொருளுக்குமுதற்பொருளும் சினைப்பொருளுக்கு சினைப்பொருளும் இயல்பாக அமைவதேயன்றி முதற்பொருளுக்கு சினைப்பொருளும் சினைப்பொருளுக்கு முதற்பொருளும் மாறியும் வரும் என்பதை,

"முதலுஞ் சினையுமென் நாயிரு பொருட்கு
நுதலிய மரபி னுரியவை உரிய" (தொல். உவ.271)

என்னும் நூற்பா விளக்கியுள்ளது.

உவமமும் பொருளும் ஒத்து இருத்தல் வேண்டும். பொருளுக்கேற்ற உவமம் மரபுவழிப்பட்டதாக இருத்தல் வேண்டும். இரட்டைச் சொல்லிற்கு இரட்டைச் சொல்லாலே உவமம் கூறுதல் வேண்டும் என்பதை

உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும் (தொல்.உ.அ..279)
"உவமப் பொருளை உணருங் காலை
மருவிய மரபின் வழக்கொடு வரம" (தொல், உ.அ.292)
"இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே" (தொல்.உ.வ..299).

என்னும் இந்நூற்பாக்களின் வழி விளக்குகிறது தொல்காப்பியம்.

மேற்கூறியவைகளில் கிழக்கிடும் பொருளோடைந்து மாகும் என்றதில் "ஐந்துமாகும்" என்றது சிறப்பு, நலன், காதல், வலி என்னும் நான்கு உயர்வுப் பொருளோடு தாழ்ந்த பொருளையும் சேர்த்து ஐந்தாம். முதற்பொருள் என்பது முகம் முதலானவை. சினைப்பொருள் என்றது நெற்றி கண் முதலானவை. "மருவிய மரபின் வழக்கொடு வருமே"என்றதில் 'மருவிய மரபின் வழக்கொடு" என்றது இன்னவற்றிற்கு இன்னதையே கூற வேண்டும் எனக் காலந்தோறும் மக்களால் தொன்றுதொட்டு வழங்கப்படுவதாகும். "இரட்டைக் கிளவிக்கு இரட்டைச் சொல்லாலே உவமை வழங்கப்படுவது கலகல பளபள மடமட என்னும் சொற்களோடு பாவொடு-தேனு, விலங்கொடு-மக்கள் என இரண்டு சொல் இணைந்து வருவது என்று விளக்குகிறார் சிவலிங்கனார். (உரைவளம்.பக்.67-68) மேலும் அவர் விளக்கமாவது,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" (குறள்-410)

இதில் "கற்றாரோடு ஏனையவர் என்பது இரட்டைக்கிளவி. விலங்கொடு நோக்க மக்கள் எவ்வளவு உயர்ந்தவரோ அவ்வளவு தாழ்ந்தவர் கற்றாரோடு கல்லாதவர் என்பது கருத்து. இதில் விலங்கொடு மக்களுக்குள்ள வேறுபாட்டை உவமையாக்கினார். உவமையில் "விலங்கொடு மக்கள்' என்பது இரட்டைக்கிளவி. இதில் இரட்டைக்கிளவிச் சொல்லுக்குஇரட்டைக்கிளவியே உவமையாக வந்துள்ளது" என்பது சிவலிங்கனாரின் கூற்றாகும்.

மேற்கண்ட தொல்காப்பிய பொதுவிதியினை "இலக்கண விளக்கம்-அணியியல்" "பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின் என்னும் நூற்பாவிற்கு ஒத்த நூற்பாவாக இணைத்து கூறியுள்ளது. மேற்கண்ட தொல்காப்பிய உவம பொது கோட்பாட்டினை ஒத்து பிற்கால அணிநில்கள் கோட்பாடு வகுக்கவில்லை.

தொல்காப்பிய விதியில் அடங்கும் அணிகளாவன:

1. உவமையின் பண்பு முலியன வெளிப்பட அமையும் வரி உவமை
2. பண்பு முதலியன தொக்கி அமையும் தொகை உவமை
3. மாட்டேற்றுச் சொல்லாகிய 'ஆகிய' முதலானவை மறைந்து வரும் தொகை உருவகம்
4. மாட்டேற்றுச் சொல் விரிந்து வரும் விரி உருவகம்
5. சிலவற்றைத் தொகுத்தும் சிலவற்றை விரித்தும் உருவகம் செய்யும் தொகைவிரி

உருவகம் ஆகியன மேல் தொல்காப்பிய விதியில் அடங்கும்.

"பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்று மென்ப" (தொல்.உவ. 290)

என்றும் நூற்பா பொருளிற்கு ஏற்ற உவமத்தினைப் பெருமையாகவும் சிறுமையாகவும் குறிப்பிடும் போது அது மெய்ப்பாடுகளின் வழி அமையும். மெய்ப்பாடுகளாவன

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப" (தொல்.மெய்ப். 251)

என மெய்பாடுகள் எட்டு வகைகளாகும். இவ்வெட்டு மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் நன்நான்கு பிரிவுகளாக 32 வகையாம். இம்முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளின் வழி உவமை தோன்றும் என்கிறது தொல்காப்பியம். இவ்விதியில் அடங்கும் அணிகளாவன.

1. பொருளைப் பெரிதும் புகழ்ந்து உவமிக்கும் புகழுவாமை
2. உவமையைக் குறை கூறி உவமிக்கும் நிந்தை உவமை
3. ஒரு பொருளிடத்துக் கொண்டே விருப்பத்தான் ஒப்புமைப் பொருளிடத்து மயங்கி
1. உரைத்தவைக் கூறும் மோக உவமை
4. உலகில் இல்லாத பொருளை உவமையாகக் கூறும் அபூத உவமை
5. நிகழாத ஒன்றை நிகழ்வது போலக் கூறி உவமையாக்கும் கூடா உவமை

மற்றும் அற்புத உவமை, அதிசய உவமை, விரோத உவமை, தற்குறிப்பேற்ற உவமை, சிறப்புருவகம் ஆகியனவும் இதன் பாற்படும். இவையேயன்றி மெய்ப்பாடுகள் வழித் தோன்றுவதாக தண்டியலங்காரம் மற்றும் இலக்கண விளக்கம் கூறுவதாவது

"உள் நிகழ் தன்மை புறத்துத் தோன்ற

எண்வகை மெய்பாட்டி னியல்வது சுவையே" (தண்டி. 69.இ.வி.655)
"அவைதாம்
வீர மச்ச மிழிப்பொடு வியப்பே
காம மவல முருத்திர நகையே" (தண்டி-170-இ.வி. 665)

எனக் கூறுகிறது. மேலும், இதற்கு ஒரு புறனடையாக உள்ளத்துக் குறிப்பை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள் தோன்றவும் அவற்றின் தோற்றத்திற்கு வேறொரு பொய்க்காரணத்தைக் கூறி உண்மைக் குறிப்பை மறைத்துக் கூறும் அணி இலேச அணி ஆகும்.

"பொருளே உவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின.'. துவம மாகும்" (தொல்.உவம. 280)

இந்நாற்பாவின் விதியாவது பொருள் உவமாகவும் உவமம் பொருளாகவும் மாறி வந்தாலும் அதுவும் உவம இலக்கணத்தின் பாற்பாடும். இவ்விதிப்படி அமையும் அணிகளாவன

1. பொருளை உவமமாகவும் உவமத்தை பொருளாகவும் கூறுவது இதரவிதர உவமை.
2. பொருளும் உவமமும் வேறாய் இருக்கும் தன்மையை நீக்கி இணைடினையும் ஒன்றாக்கி கூறுவது உருவக அணி
3. பொருளையே உவமமாக்கிக் கூறுவது விபரீத உவமை. மேலும் இவ்விதியில் அடங்கும்

ஏனைய அணிகளாவன உவமை உருவகம், வேற்றுமை உருவகம், விலக்குருவகம், அவதநுதி உருவகம், உண்மை உருவகம் ஆகியனவாகும்.

"அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்
வரன்முறை வந்த மூன்றலங்கடையே"" (தொல்-உவ. 309)

என்னும் தொல்காப்பிய விதியின் விளக்கமாவது ஒரு செய்யுளினுள்ளே உவமையும் பொருளும் பல அடுக்கித் தோன்றினாலும், உவமமும் பொருளும் கலந்திருக்கும் வழி உவமானத்திற்கேற்ற உவமேயத்தை நேரே நிறுத்தி பொருத்திக் கொள்ளும் நிரனிறுத்தமைத்தலும், பொருள் தொடாச்சியையும் உவமத் தொடர்ச்சியையும் துணிந்து இதற்கு இதுவென பொருள் கொள்ளுதலும் உவமையின் பாற்பட்டதேயாம். - *அடுக்கித்தோற்றம் விடுத்தல் பண்பே'* (தொல்.சொல்.பக். 305 உரைவளம் உ.த.நி) என்றது நிரல்நிறை சுண்ணம் மொழிமாற்று அடிமறி ஆகிய நான்கினையும் தவிர்த்து மற்றையவற்றில் பொருளும் உவமையும் அடுக்கி வருதல் ஏற்றுக் கொள்ளப்படாது என்பதாம்.

"வரன்முறை வந்த மூன்றலங்கடையே"" என்றது சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்ற மூன்றும் அல்லாதவிடத்து நிரல்நிறையில் மட்டும் உவமத்தினையும் பொருளினையும் அடுக்கிக் கூறுதல் நிகழும்.

இந்நூற்பா சுட்டும் நான்கு பொருள்கோள்கள் தொல்காப்பிய சொல்லதிகார எச்சவியல் நூற்பாக்கள் 405, 406, 407, 409 வழி அறியலாம். இவ்விதியின் படி அமையும் அணிகளாவன.

1. உவமங்கள் பலவற்றுள் ஒவ்வொனள்றனோடும் உவமை உருபைப் புணர்த்துக் கூறுவது பலவயிற் போலி உவமை
2. உவமைகள் பலவற்றுள் ஒன்றனுடனேயே உவமையுருபைப் புணர்ந்துக் கூறுவது

ஒரு வயிற்போலி மற்றும் இவ்விதியில் அடங்கும் பிற அணிகளாவன ஒப்புமைக் கூட்டம் உவமை, இயைபு உருவகம், இயைபிலி உருவகம், வியநிலை உருவகம், மாலை உவமை ஆகியனவாகும்.

"சுட்டிக் கூறா உவம மாயின்
பொருனெதிர் புணர்த்துப் புண்த்ததன் கொளலே" (தொல்.உவ. 278)

இப்பொருளுக்கு இது உவமையென சுட்டிக்கூறாது இருக்குமிடத்துக் கொண்டு கூட்டி பொருள் கொள்ளுதலும்

"உவமப் பொருளின் உற்றது ணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான" (தொல்.உவ. 291)

உவமமும் பொருளும் நேராக இல்லாது உவமிக்கப்பட்டதற்கு இதுவே பொருளென்று துணியுமிடமும்

"ஒரீஇக் கூறலும் மரீஇய பண்பே" (தொல்.உவ. 306)

இப்பொருளுக்கு இப்பொருள் ஒப்புமை ஆகும் என்று கூறாது பொருளின் தன்மையும் உவமத்தின் தன்மையும் ஒப்புக்கூறி இதற்கு இது ஏற்ற ஒப்புமையாகாது என்பதும் உவமத்தின் பாற்படுமாம்.

"உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்"

பொருளும் உவமும் ஒத்தல் வேண்டும் என்பனவைகளாக அமைந்த விதிகளின் படி அமைந்த அணிகள்.

தொகுப்புரை

மேற்கண்ட ஆய்வின்வழி பெறலாகும் நிலைப்பாடு உவமம் என்பதே தமிழ் இலக்கண கொள்கை "அணி' என்பது வட இலக்கண கொள்கை. அணி இலக்கணம் தமிழ்மொழிக்கு வட இலக்கணம் தந்த கொள்கை என்பது இக்கட்டூரையின் வழி மறுக்கப்படுகிறது. பின்னாளைய அணியிலக்கணம் "கொண்டிருக்கும் அத்தனை தன்மைகளையும்' கிறிஸ்து சகாப்த ஆண்டு தொடங்கும் முன்பே தமிழின் இலக்கணமாம் தொல்காப்பிய உவமவியல் கொண்டிருக்கிறது என்பதை இக்கட்டுரை முன் மொழிகிறது.

துணைநின்ற நூல்கள்

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் பின் நான்கியல்கள் பேராசிரியருரை. கழக வெளியீடு. 1986.
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - உரைவளம். ஆ.சிவலிங்கனார். உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு - 1981.
3. தண்டியலங்காரம் - கழக வெளியீடு. 1991.

தொ.மா.க.156

‘பெருமிதம்’ என்னும் மெய்ப்பாடு பற்றி தொல்காப்பிய இலக்கணமும் அவற்றின் இன்றைய பயன்பாடும்

திரு. அரியராஜா முத்தையா
முதுகலைத் தமிழ், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், கனடா
ariyarajah.m@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

உலக மொழிகளில் உள்ள இலக்கண நூல்களில் முழுமையான மொழி அமைப்பினையும் வாழ்வியலுக்கு இலக்கணத்தையும் சொன்ன முதல் நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் ஏறக்குறைய 1611 நூற்பாக்களை, 27 இயல்களுள் அடக்கிய, எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்ட ஒரு பெரிய இலக்கண நூலாகும். தொல்காப்பியம், பலவகையான விதிமுறைகள், மரபுகள் அவற்றுக்கு நிலைக்களனாக அமைந்த செந்தமிழ் நாட்டு செல்வங்கள், அக்காலத் தமிழரின் இயல்பு நிறை வாழ்க்கை முதலியவற்றையும் தொல்காப்பியம் தொகுத்துத் தருகிறது.

தொல்காப்பியம், பொருளதிகாரத்தின் இயல்களான, அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்கள் பாடல் பாடும் புலவனுக்குரிய பாடற் பொருள் விளக்கங்களைக் கூறுகின்றன. மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்னும் இயல்கள் பாடல்கள் பாடவேண்டிய யாப்பையும், அணி, மரபுகள் முதலியவை பாடல்கள் வடிவம் முதலிய தகவல்களையும் கூறுகின்றன. மெய்ப்பாட்டியல், பாடல்களுக்கு உயிரூட்டமாக அமையும் மெய்ப்பாடுகள் பற்றி விரிக்கின்றது. பாடலுக்கு உயிரூட்டமான மெய்ப்பாடுகள் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுபவையே இந்த ஆய்வாகும்.

அகப் புற மெய்ப்பாடுகளைத் தனியாக எடுத்து, அவற்றின் தன்மையை விளக்க முயல்வது சிக்கலாகும். ஒரு கலைஞன் படைப்பாற்றலோடு கலையைப் படைத்தாலும் அதை இரசிப்பவனுக்கு கலையை உள்வாங்கும் சக்தி இல்லை எனில் அது சிக்கலாகும். நாடகம் என்பது, கூத்து, ஆடல், பாடல் முதலிய நாட்டுப்புறக் கலைகளில் இருந்து தான் இலக்கியத்திற்கு வந்தது. இந் நாடக வழக்கே, தொல்காப்பியத்தில் இலக்கிய மரபாகிறது. தொல்காப்பியர், அகத்திணை மெய்ப்பாட்டை, களவுக்குரியவை, கற்புக்குரியவை, பிரிவுக்குரியவை, வரைவுக்குரியவை என நான்காக வரையறுக்கிறார். இங்கே தான் நாடகமெய்ப்பாடும், இலக்கியமெய்ப்பாடும் ஒன்றாகின்றன என்பதே இந்த ஆய்வின் கருதுகோளாகும்.

முதன்மைச்சான்றுகள்: தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், நாடக நூல்கள், இசை நூல்கள், கூத்து நூல்கள், துணைச்சான்றுகள்: இணையவழிச் சான்றுகள்

ஆய்வியல் அணுகுமுறை - வரலாற்று அணுகுமுறை, சமூகவியல் அணுகுமுறை

ஆய்வியல் அமைப்பு:

இயல் 1. தொல்காப்பியத்தில் மெய்ப்பாடு - தொடக்கம், விளக்கம்

இயல் 2. தொல்காப்பியத்தில் அகத்திணை மெய்ப்பாடுகள்.

இயல் 3. அகத்திணையில் மெய்ப்பாடு, தேவை, பயன்.

இயல் 4. முடிவுரை

முன்னுரை

உலக மொழிகளில் உள்ள இலக்கண நூல்களில் முழுமையான மொழி அமைப்பினையும் வாழ்வியலுக்கு இலக்கணத்தையும் சொன்ன முதல் நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் ஏறக்குறைய 1611 நூற்பாக்களை, 27 இயல்களுள் அடக்கிய, எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்ட ஒரு பெரிய இலக்கண நூலாகும். தொல்காப்பியம், பலவகையான விதிமுறைகள், மரபுகள் அவற்றுக்கு நிலைக்களனாக அமைந்த செந்தமிழ் நாட்டு செல்வங்கள், அக்காலத் தமிழரின் இயல்பு நிறை வாழ்க்கை முதலியவற்றையும் தொகுத்துத் தருகிறது.

தொல்காப்பியம், பொருளதிகாரத்தின் இயல்களான, அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்கள் பாடல் பாடும் புலவனுக்குரிய பாடற் பொருள் விளக்கங்களைக் கூறுகின்றன. மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்னும் இயல்கள் பாடல்கள் பாடவேண்டிய யாப்பையும், அணி, மரபுகள் முதலியவை பாடல்கள் வடிவம் பற்றய தகவல்களையும் கூறுகின்றன. மெய்ப்பாட்டியல், பாடல்களுக்கு உயிரூட்டமாக அமையும் மெய்ப்பாடுகள் பற்றி விவரிக்கின்றது. பாடலுக்கு உயிரூட்டமான மெய்ப்பாடுகளில் பெருமிதம் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுபவை பற்றியதே இந்த ஆய்வாகும். தொல்காப்பியர்,

"நகையே அழுகை இளிவிரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பாடென்பர்" *(தொல்.மெய். 247)*

மெய்ப்பாடு என்பது ஒரு மனிதனின் உள்ளத்து உணர்வுகளை உடலினால் வெளிப்படுத்துகின்ற தன்மையே. அதாவது உணர்ச்சிகளின் வெளிப்பாடாக உடலின் மேல் தோன்றுகின்ற புறக்குறிப்புக்கள் தான் மெய்ப்பாடு எனப்படுகின்றது. இது ஒரு மனிதனிடம் இயல்பாகத் தோன்றும் தன்மை கொண்டது. இதனால் தான் தொல்காப்பியர்

"உய்த்து உணர்வு இன்றித்தலைவரு பொருண்மையின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடு ஆகும்" *(தொல். மெய். 505)*

அதாவது உய்த்து உணர்வதால் அன்றி, இயல்பாகவே வெளிப்படும் உணர்ச்சிகளை செய்யுள்களில் புலப்படக் கூறுவது மெய்ப்பாடு என புலனாகின்றது. அதாவது உள்ளத்தில் எழும் எண்ணங்களின் வெளிப்பாடே மெய்ப்பாடாகும்.

மெய்ப்பாடு இரு திணைக்கும் பொதுவானது ஆகும். அகத்துக்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகள் எட்டு. அவை தோன்றும் நிலைகளுக்கு ஏற்ப நான்கு நான்காகப் பகுக்கப்படும். அவையாவன

1 நகை - சிரிப்பு
2 அழுகை - அவலம்
3 இளிவிரல் - இழக்கப்படுவது
4 மருட்கை - வியப்பு
5 பெருமிதம் - வீரம்
6 வெகுளி - சினம், கோபம்
7 அச்சம் - பயம்
8 உவகை - மகிழ்ச்சி

இந்த எட்டு சுவைகளில் ஆறாவது சுவையாக இருக்கின்ற பெருமிதம் என்னும் மெய்ப்பாடு பற்றிய தொல்காப்பிய இலக்கணமும், அவற்றின் இன்றைய பயன்பாடும் பற்றி ஆய்வு செய்ய வந்திருக்கின்றேன்.

பெருமிதம் என்னும் வீரச்சுவை தோன்றும் இடங்கள் பற்றி

தொல்காப்பியர்.

"கல்வி தறுகண் இசைமை கொடை எனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே". *(தொல்.மெய். 253)*

பெருமிதம்

பெருமிதம் என்பது வீரம். அதாவது பிற பெருமைகளோடு ஒப்புநோக்கும் போது பேரெல்லையாக நிற்பதால் பெருமிதம் எனப்பட்டது என்று பேராசிரியர் விளக்கம் அளிக்கிறார். பெருமிதம் என்பது தன்னை பெரியவனாக மதித்தல் என்று இளம் பூரணார் உரை எழுதினார். பெருமிதம் என்னும் மெய்ப்பாடு கல்வி, தறுகண் (வீரம்), இசைமை (புகழ்), கொடை என்னும் நான்கின் அடிப்படையில் தோன்றும். இது தன் கண் தோன்றிய பொருள் பற்றி வரும்.

1. கல்வி: கற்ற கல்வியால் ஏற்படும் பெருமிதம். தவம் முதலாய செயலின் திறன் மூலம் வரும் பெருமிதம்.
2. தறுகண்: தறுகண் என்பது வீரம். அதாவது அஞ்சத்தக்கன கண்ட இடத்து அஞ்சாமை.
3. இசைமை: இசைமை என்பது புகழுடமை. இன்பமும் பொருளும் மிகுதியாகக் கிடைப்பது எனினும் பழியோடு வருவன செய்யாமை. அறம் சார்ந்து செயல் ஒன்றித்திருப்பது.
4. கொடை: கொடை என்பது உயிரும், உடம்பும், உறுப்பும் முதலாகிய எல்லா பொருளையும் கொடுக்கும் வள்ளல் தன்மை.

இந்த நான்கு பெருமிதங்களில் ஒவ்வொன்றையும் வரலாற்று இலக்கிய ரீதியாகப் பார்ப்போம்.

கல்வி

கற்ற கல்வியால் பெருமிதம் உண்டாகும். கல்வி கற்றுக் கொடுப்பவனுக்கும், கற்பவர் கல்வியால் மேலோங்கும் போது கற்பித்தவர் அதைக் கண்டும் பெருமிதம் உண்டாகும்.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்று அறிந்தார்" *(திருக்குறள் 399)*

கல்வி அறிவுடையவர் அக்கல்வியை அறிவால் தாம் இன்பம் அடையும் போதும், உலகத்தாரும் இன்பம் அடைவதைக் கண்டு, அந்த கல்வியே சிறந்த பொருளாக விரும்புவார்கள்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யாவை" *(திருக்குறள் 400)*

கல்வியால் உயர்ந்தோர் உலகின் கண்கள் என போற்றப்பட்டனர். ஔவை கூட "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என்று கல்வியின் பெருமையை கூறுகிறார். கல்வி இல்லையெனில் ஒரு நாடு, அந்த நாட்டு மக்கள் மானிடம் செறிந்த மக்களாக இருக்க மாட்டார்கள். மனிதன் மனிதனாக வாழவும் மானிடம் போற்றவும் மனம் வேண்டும். அந்த மனமே கல்வி அறிவு.

"உற்றுழி உதவியும் உறு பொருள்கள் கொடுத்தும் பிச்சை நிலை முனியாது கற்றல் நன்று"
என்றும்
"ஒரு குடியிற் பிறந்த பல்லோர்க்கு உள்ளும்
முத்தோன் வருக வெள்ளாது அவருள்
அறிவுடையோனால் அரசும் செல்லும்". (புறம் 183)

ஆரிய படை கடந்த நெடுஞ்செழியன் கற்றோர்க்கு ஏற்றம் கொடுத்தான் என்று புலவர் பாடினர். எனவே கல்வி அறிவினால் வரும் பெருமையே சிறந்தது என்று தொல்காப்பிய மெய்ப்பாடு பெருமை கொள்ளுகிறது. எக்காலத்துக்கும் கல்வியே சிறந்தது.

ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனை செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் கற்ற கல்வியின் பயன் அவனுக்கு கிடைக்கும். இல்லாவிடில் அவன் கற்ற கல்வியின் பயன் ஒன்றும் இல்லாமல் போய்விடும். இதனையும் திருவள்ளுவர் தனது திருக்குறளின் கல்வி என்ற அதிகாரத்தின் முதலாவது குறளில் தெளிவாக கூறுகின்றார்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக**

என்று கூறுவதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.

எண் என்று சொல்லப்படுவதும், எழுத்து என்று சொல்லப்படுவதும் இவை இரண்டினையும் அறிந்தோர் சிறப்பு மிக்க மக்களின் உயிர்களுக்கு கண் என்று சொல்லப்படுவர். இந்த அளவிற்க்கு கல்வியின் சிறப்பு எடுத்துரைக்கப் படுகின்றது.

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்**

கற்றவரின் சிறப்புப் பற்றி கூறும் போது ஒருவனின் முகத்திலுள்ள கண்ணானது கற்றவருக்குரிய அடையாளம் என்று சொல்லப்படுகிற்து. அதே கண் இல்லாதவருக்கு முகத்தில் இரண்டு புண் இருப்பதாக குறிப்பிடப் படுகின்றது. இதன் மூலம் கல்வியின் சிறப்பும் அதனைக் கற்றவனின் சிறப்பும் கூறப்படுகின்றது.

கல்வி உடையவர் எல்லா மக்களிடமும் நன்றாக பழகிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்களுடன் சந்தோசமாக சேர்ந்து வாழ்வதையே விரும்புவர். இவர்களை பிரிக்கின்ற போது இனி நாம் எப்போது மீண்டும் சேர்வோம்! என்ற நினைவிலேயே பிரிகின்ற தன்மை கற்றவரிடம் இருக்கும் தன்மையாகும்.

ஆயிரம் கோயில்கள் கட்டுவதைவிட ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது சிறந்தது - மகா கவி பாரதி

கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது; ஏனெனில் அறியாமைதான் தீவினையின் மூலவேர்! - பிளேட்டோ

"கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார்-தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட!
நிறைகுடம் நீர்தளும்பல் இல்". (பழமொழி நானூறு - 243)

பாறைக் கல்லிலே அருவிகள் வீழ்ந்து ஒலி முழங்கிக் கொண்டிருக்கின்ற அழகிய மலைநாடனே! கற்க வேண்டிய நூல்களைக் கற்று அறிவுடையவரானவர்கள் கண்ட அடக்கமே உண்மையான அடக்கமாகும். கற்று அறியாதவர்களோ, தங்களுடைய அறியாமையான தன்மையை மறந்துவிட்டுத் தம்மைப் புகழ்ந்து தெளிவாகப் பேசிக் கொண்டிருப்பர். நீர் நிறைந்த குடம் தளும்புவதில்லை; குறை குடமே என்றும் தளும்பும் அல்லவா!

தறுகண்

தறுகண் என்பது வீரம். வீரம் அஞ்சத்தக்கன இடத்து அஞ்சாமை, அது பற்றிய பெருமிதம். இதை புறப்பொருள் வெண்பா மூலம் விளக்கலாம்.

"உறுசுடர்வாளோ டொரு கால் விலங்கின்
சிறுசுடர் பேரளாமங் கண்டாய் _ எறிகூர்வேல்
தேங்குலாம் பூந்தெரியல் தேர் வேந்தே நின்னொடு
பங்கலா மன்னர் படை." (புற.பொருள்.134)

"பகைவனின் துசிப்படையை நானே தடுத்து விடுவேன்." என அரசனிடம் கூறுதல் இதன் பொருள். போர்க்களத்தில் போரிடுவதற்கு முன்னே வரும் படை தூசிப்படை. வாளுடன்வரும் பகை அரசரின்

பெரும்படையை நானே தடுப்பேன். என் முன்னெஇப் படை சிறு விளக்கின் இருளில் ஓடுவது போல் ஓடும் என பெருமிதம் கொள்ளும் வீரம் கூறப்படுகிறது. இதையே வள்ளுவரும்

"பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு". (குறள் 773)

பகைவர்க்கு அஞ்சாத வீரம் பெரும் ஆண்மை என்று போற்றப்படும். அந்தப் பகைவர்க்கு ஒரு துன்பம் வரும்போது அதைத் தீர்க்க உதவிடுவது ஆண்மையின் உச்சம் எனப் புகழப்படும்.

"தறுகண் மறலி முறுகு கயிறு
தலையை வளைய எறியாதே"

வலிமையான பாசக் கயிற்றை யமனே என் தலையைச் சுற்றி வீசாதே என்று அருணகிரிநாதர் தன்னுடைய திருப்புகழில் கூறுகிறார்.

மிகக் கடுமையாகப் போர் புரியும் அநுமன் முன்னே அகம்பன் என்ற அரக்கன் அஞ்சாது பெருமிதத்துடன் எதிர்த்து வருகின்றான்.

"இன்றிவன் தன்னை விண்ணாடு
ஏற்றிவாள் இலங்கை வேந்தை
வென்றிய னாக்கி மற்றை
மனிதரை வெறிய ராக்கி
நின்றுளர் நெடிய துன்பம்
அமரர் பால் நிறுப்பன் என்னா"

என்ற கம்பராமாயணப் பாடற்பகுதியில் (பிரம்மாத்திரம் - 129). அகம்பன் தன் தறுகண் பற்றிப் பெருமிதம் கூறுதலைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இசைமை

இசைமை என்பது புகழுடமை. இன்பமும் பொருளும் மிகுதியாகக் கிடைப்பது எனினும் பழியோடு வருவன செய்யாமை. அறத்தோடு ஒன்றித்து இருப்பது கீழ் வரும் பாடல் மூலம் காணலாம்.

"காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர் துஞ்சு யாமம் விடியலும் என்று இப்
பொழுது இடை தெரியின்பொய்யேகாமம்
மா என மடலோடு மறுகில் தோன்றித்
தெற்றென தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிதலை வரினே". (குறுந்தொகை 32)

தலைவன் தலைவியை விட்டு சிறிது காலம் பிரிந்து வாழ்ந்தாலும் தலைவியை ஊரார் பழிக்கா வண்ணம் தலைவன் மடல் ஏறாது வாழ்ந்தான் என்பது இப்பாடல் வாயிலாக இசைமை மெய்ப்பாடு வெளிப்படுகிறது. வள்ளுவனும் இதை

"வசை என்ப வையத்தார்க்கு எல்லாம்இசை
என்றும் எச்சம் பெறாவிடின்." (திருக்குறள் 238)

மனிதப் பிறவியின் பயனாகிய புகழ் என்ற ஊதியத்தைப் பெறாவிடின் அதுவே இகழ்ச்சி ஆகும். இந்த உண்மை உலகத்தில் மக்களாகப் பிறந்தோர் அனைவருக்கும் பொது அறம் ஆகும். இரக்கம், ஈகை ஆகிய இரண்டும் புகழ்ப் பயனைக் கொடுக்கிறது. இதனின்றும் மக்கள் பிரியாது புகழுடைந்து மேன்மை பெற வேண்டும். தவறினால் வாழ்வு இழந்து பழி அடைவர். இந்த உண்மைக்கு மனித சமுதாயம் கட்டுப்பாடாகிய சாதிய, சமய, மொழி, இன வேறுபாடுகள் குறுக்கிட முடியாது என்று "வையத்தார்க்கு எல்லாம்" என்று கூறினார்." எச்சம் "என்பது இறந்தபின் எஞ்சிநிற்கும் புகழ் என்பதே, இதன் கருத்து. இதில் புகழ்மை சொல்லப்பட்டிருக்கிறது.

துச்சாதனன் திரௌபதியைத் துகில் உரிகையில் சினம் கொண்ட வீமன் தருமனிடம் தம் புகழ்பற்றிப் பேசுகின்றான்.

"சோரத்திற் கொண்டதில்லை-அண்ணே !
சூதிற் படைத்ததில்லை
வீரத்தி னாற்படைத்தோம்-வெம்போர்
வெற்றியி னாற்படைத்தோம்".

இப்பாடலில், வீமன் திரௌபதியைப் பெற்ற தம் புகழை நினைந்து கூறுவதைக் காணலாம்.

கொடை

இடமும் காலமும் கருதாது, உலக நிலையும் கொள்ளாது, பிறர் உற்ற துன்பத்தை கண்ட உடனே தன் துன்பமாக கருதி, அதை நீக்க முன் வந்து உதவுவதால் ஈகை எனப்படும்.

"ஈ யென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்க்
ஈயோன் என்றால் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றால் அதனும் உயர்ந்தன்று." *(புறம் 400)*

சொல்லப்பட்ட நான்கு வரிகளிலும் ஈயென இரத்தல் இழிந்தன்று, ஈயோன் என்பது அதனிலும் இழிந்தன்று, அதைப்போல் கொள்ளென கொடுத்தல் உயர்ந்தன்று, கொள்ளேன் என மறுத்தல் அதனிலும் உயர்ந்தன்று. என்று இப் பாடல் கொடை பற்றிச் சொல்லுகிறது.

கொடைக்கு இன்னும் ஒரு உதாரணம்: மகாபாரதக் போர்க்களத்தில் தம் புண்ணியம் அனைத்தும் தாரை வார்த்த பிறகு கர்ணன் தன் கொடை பற்றி பெருமிதம் பேசுகிறான்.

" தருமன் முதலான அரிய காதல்
தம்பியாரோ டெதிர் மலைத்து தறுகண் ஆண்மைச்
செருவில் என் உயிர் அனைய தோழிக்காகச்
செஞ்சோற்றுக்கு கடன் கழித்தோர் தேவர் கோவுக்கு
உரை பெறு கவசம் குண்டலமும் ஈந்தேன்
உற்ற பெரு நல்வினைப்பே துனக்கெ தந்தேன்."
(வில்லிபாரதம் 17ம்நாள் போர்ச்சுருக்கம் 248)

தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டினைக் கூற வந்த தொல்காப்பியர் பெருமிதம் ஆகிய மெய்ப்பாட்டுக்கு நான்கு நிலைக்கலன்களைக் குறிப்பிட்டு இலக்கியச் சான்றுகள் அமைய பெருமிதத்தின் தன்மையை மீள் பார்வை செய்ய முடிகிறது. இத்தகைய தொல்காப்பிய இலக்கணம் அமைய பேராசிரியர் மேலும் ஒரு நிலை களத்தை பெருமிதத்திற்கு கொடுக்கிறார். அதாவது சொல்லப்பட்ட பெருமிதம் என்ற படியால் காமம் பற்றியும் பெருமிதம் பிறக்கும் என கொள்க என்று குறிப்பிட்டு அதற்கு எடுத்துக் காட்டும் தருகின்றார்.

"பல்லீரும் கூந்தல் மகளீர்
ஒல்லா முயர்கிடை குழைக என் தாரோ" *(புறம்.பா.73)*

இதன் பொருள் அழகான கருமை நிறம் பொருந்திய கூந்தலைக் கொண்ட மகளிர் என்னைக் கூடுவதால், நான் அணிந்திருக்கும் என் மாலை வாடட்டும் என்று பெருமித நிலை கூறப்படுகின்றது. இதனையே வள்ளுவர்

"தம்மில் இருந்து தமது பார்த்து உண்ட ஆற்றல்
அம்மா அரிவை முயக்கு" *(குறள். 137)*

இல்லற வாழ்க்கையில் இருந்து நல்வழியில் ஈட்டிய பொருளை பிறருக்கு கொடுத்து தாமும் பங்கிட்டு உண்பது போல, இந்தப் பெண்ணின் கூட்டுறவு இன்பமாக இருந்தது என்று அவன் பெருமிதம் கொள்ளுகிறான். அதே போல மற்றும் ஒரு குறள்.

"உறுதேறு உயிர் தளிர்ப்பு தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயந்தன தோள்" *(திருக்குறள்.1106)*

கூடும் தோறும் உயிரானது புத்துணர்ச்சி பெற்று மகிழும்படி இன்பம் தருவதால், இந்தப் பெண்ணின் தோழானது அமிர்தத்தால் செய்யப்பட்டது போலும் என்று பெருமிதம் கொள்ளுகிறான். இது பெருமிதத்திற்கு சொல்லப்பட்ட குறள். அதேபோல் இன்னும் ஒன்று

"தாம் வீழ்வார் வெந்தோள் துயிலுன் இனிது கொள்
தாமரைக் கண்ணான் உலகு" *(திருக்குறள்.1103)*

காம இன்பமானது, தாமரைக் கண்ணன் உலகைக் காட்டிலும் இனிதாக அமையும் என்ற பெருமித சுவையை வள்ளுவரும் காட்டுகிறார். இதே போல் சங்க இலக்கியமும்

"விரிதிரை பெரும் கடல் வளைய இல உலகமும்
அரிது பெறுசிறப்பின் பத்தூள் நாடும்
இரண்டின் தூக்கின் சீர் சால்வி
இரண்டின் தூக்கின் சீர் சாலவா
பூப்போல் உன் கண் பொன் போல் மேனி
மாணவரீ அல்குல் குறுமகள்
தோள்மாறு படுஉம் வைகலோடு எமக்கே" *(குறுந்தொகை 101)*

காமத்தால் ஏற்படுகிற பெருமிதம் கூறப்படுகிறது

"பொருளினும் காமம் வலியுடைத்தன உட்கொண்ட விடத்து தலைவன்" என்பார் இளம்பூரணர். பொருளும் வேண்டி தொன்றோ எனினும் சிறந்தன இரண்டினுள் ஒன்றைத் தேருங்காள் காமமே கொள்ளப்படும்.

ஒப்பியல் ஆய்வு

கொடை பற்றி இன்றைய காலத்தோடு ஒப்பிட்டு அதன் பயன் பயன்பாடு பற்றிய விமர்சனம் முன் வைக்கிறேன்.

வள்ளல் தன்மையில் சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவுக்காக தன் உறுப்புகளை படிப்படியாக வெட்டிக் கொடுத்து தன் உயிரையும் கொடுத்தான் என்பது பழைய இலக்கியம். அதே போல் பாரி முல்லைக்குத் தேரையும் தன் பாவலருக்கு 300 ஊர்களையும், இரப்பவருக்கு இல்லையென்னாது கொடுத்தான். இதே போல் சங்க கால அரசர்கள் பாவலருக்கும் ஏழை, எளிய மக்களுக்கும் பெரும் கொடைகள் கொடுத்ததாக சங்க செய்திகள் வாயிலாக அறிகின்றோம். இதை விட அநேக சங்க காலத்து அரசர்கள் தாம் மற்றைய நாட்டை போரின் மூலம் வென்று அந்நாட்டைக் கொள்ளை அடித்து, தன்னைப் புகழ்ந்த பாவலருக்கும், போரில் ஈடுபட்ட போர் வீரர்களுக்கும் கொடை கொடுத்ததாக அறிகிறோம்.

இந்தக் கொடைகளை இன்றைய காலத்தோடு நாங்கள் ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது உண்மையிலேயே இவை அனைத்தும் கொடைகளா என சந்தேகம் கொள்ள வைக்கிறது. ஒரு நாட்டில் ஏன் ஏழை எளிய மக்கள் வாழ்கிறார்கள்? ஏன் அரசாங்கத்திடம் கையேந்த வேண்டும்? இந்த நிலை ஏன் ஏற்படுகிறது? இந்த மக்களின் வாழ்வியல் இயற்கை வளங்கள் ஏன் அழிக்கப்படுகின்றன? மக்கள் இரந்து வாழ்வதில் இன்பமா? இந்தக் கேள்விகள் எழுகின்ற போது, இதை பற்றித் தேடும் முயற்சியில் சங்ககாலத்தைப் பார்க்கின்ற போது அரசர்களிடையே நடந்த போரானது மேலாண்மை வெறியினாலே நடந்ததும், போரில் ஊர் மக்களும் உடைமைகளும் அழிவுற்றன. செல்வம் அப்போரில் வென்ற அரசனால் அள்ளிச் செல்லப்பட்டன. அள்ளிச் செல்லப்பட்ட செல்வத்தை படை வீரர்களுக்கும் புலவர்களுக்கும் கொடுக்கப்பட்டு, புலவர்கள் அரசனை புகழ்ந்து பாடினார்கள். இதனால் அரசனின் கொடை சிறப்பாக

பேசப்பட்டது. இவை அனைத்தும் பதிற்றுப்பற்று, மதுரைக்காஞ்சி முதலான புறத்திணை இலக்கியங்களில் விரிவாக பாடப்பட்டுள்ளது. இதில் கொடை பெரிதென்று பெருமிதம் கொள்ள முடியாது.

அடுத்து வீரம் என்ற நிலைக்கு வருகிறேன். போரில் தோல்வி அடைந்த நாடுகள் தீக்கிரியாக்கப்பட்டன. பெண்கள் துன்புறுத்தப்பட்டு வென்ற நாட்டுக்குப் அரசனின் அந்தப்புரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதற்கு எல்லாம் புறத்திணை இலக்கியத்தில் போதிய சான்றுகள் காணப்படுகின்றன. இங்கு வீரம் வென்றது என்று பெருமிதம் கொள்ள முடியாது. அறம் அற்ற செயல்கள் என்பதை நிரூபிக்கலாம். ஒரு கொடுங்கோல் மன்னனை வீழ்த்தி அறம் வாழ, மக்கள் துன்பம் தீர, மக்கள்(மானிடம்) வாழ இடம் அளிக்கப்பட்டதாக எந்தக் கதையும் இல்லை.

இதற்கு விதிவிலக்குகளும் உண்டு. அதைத் தவிர்க்க முடியாது. அதே நேரத்தில் அரசரின் போர்களை நிறுத்தி, மன்னனை சரியான முறையில் அறிவு புகட்டி, மக்களை காப்பாற்றிய நன்புலவர்களும் உண்டு. இக்காலத்தோடு ஒப்பிடும் போது போர் நடக்கும் போது மனித உரிமைகள் பற்றிப் பேசப்படுகின்றன. இப்போது கூறினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனித உரிமை சாசனம் மூலம் ஐக்கிய நாடுகள் சபை மூலம் உதவிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டவர்கள் தான் அதிகம். போர்கள் அந்தக் காலத்தில் அல்ல, இன்றும் நடைபெறுகின்றன.

ஆதிக்கத் தன்மையை நிலைநாட்டவும், வேற்று நாட்டை சுரண்டவும் இப்போர்கள் நடைபெறுகின்றன. இவைக்கு முக்கிய காரணம் மனிதன் இன்றும் நாகரீக மனிதன் என்று சொல்லிக் கொண்ட காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து இம்மியளவும் விடை பெறவில்லை. மனிதம் இன்னும் வளரவே இல்லை. அதாவது கல்வி, மனிதனுக்கு எதையும் கற்றுத் தரவில்லை. உண்மையில் வரலாற்றில் இருந்து மனிதர்கள் எதையும் கற்றுக் கொள்வதே இல்லை என்பது சமகால போர்களும் வன்முறைகளும் நிரூபனம் செய்கின்றன. அதாவது 3000 வருடங்களில் 5000 போர்கள் நடைபெற்றிருக்கின்றன என்று உலக சரித்திரம் கூறுகின்றது. இது உண்மையானால் மனிதன் மனிதனாக வாழவில்லை. மாறாக மனிதன் காட்டுமிராண்டித்தனத்திற்கே சென்று கொண்டிருக்கிறான்.

கல்வியும் இன்றைய காலமும் அதன் பயன்பாடும்

கல்வி மனித சமூகத்தையும், மனிதனால் எண்ணிக் கொள்ள முடியாத அளவுக்கு பெரும் சாதனைகளை செய்திருக்கிறது. விண்ணில் பறக்கவும், வேற்று உலகை ஆராய்ச்சி செய்யவும், மனிதன் உல்லாச சௌகரிய வாழ்க்கை வாழவும், நீண்ட ஆயுளோடு வாழவும் என்றும் எண்ணற்ற சாதனைகளை செய்திருக்கிறது. அதை மறக்க முடியாது. ஆனாலும் மாற்றுவழியில் சிந்தித்தால் மனிதநேயத்தை தொலைத்துவிட்ட பொருளாதார சுகம் கொண்ட மனிதனாகவே வாழுகிறான் மனிதன் இன்று. இதில் கல்வி பெரும் பங்கு ஆற்றியிருக்கிறது.

இன்னொரு பக்கத்தில் பார்த்தால் கல்வி கற்றவர்களே குற்றம் செய்கின்ற அளவுக்கு மொழி, இனம் சார்ந்த வன்முறைப் பேச்சுக்கள் மூலம் மக்களைத் தூண்டி பெரும் கலவரங்களையும் பொருளாதார அழிவுகளையும் செய்திருக்கின்றது. அதாவது பொறுப்புணர்ச்சி அற்ற மானிடம், நேசிக்காத தன்மை, கெட்ட மனிதரிடம் மேலோங்கி நிற்கிறது. இக்காலத்தில் உதாரணம் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்த பொழுது லட்சக்கணக்கான மக்கள் பாதிப்புக்கு உள்ளானார்கள். இலங்கையில் கூட இன முரண்பாட்டைத தோற்றுவித்தவர்கள் லண்டனில் போய் படித்துப் பட்டம் பெற்று வந்தவர்களே. இன முரண்பாட்டை உருவாக்கி லட்சக்கணக்கான மக்கள் அழிவுக்கு காரணமானவர்கள் உண்மையில் கல்வி கற்றவர்களே. அவர்களுக்கு கல்வி எதையும் கற்றுக் கொடுக்கவில்லை. மாறாக மனிதனை அடிமையாக்கவும், இனத்தைச் சுரண்டவும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது. இன்றைய காலத்தில் கல்வி, சமூக பொருளாதார மேம்பாட்டிற்குக் காரணமாக இருந்தாலும், மனிதத்தை மறந்து விட்டது.

இக்காலத்தில் கல்வி வியாபாரம் ஆக்கப்பட்டிருக்கிறது. பணம் இல்லையேல் கல்வி பெறும் தகுதியை அந்த மக்கள் இழந்திருக்கிறார்கள். கல்வி நிலையங்களை அரசாங்கம் நடத்தாது தனியாரிடம் கல்வியை ஒப்படைத்திருக்கிறது. அவர்கள் லாபம் வேண்டிக் கல்வியைப் புகட்டுகின்றன. கல்வி எல்லோருக்கும் சமமாகக் கிடைப்பதில்லை. கல்வி கிடைத்தவர்களும் அந்த கல்வியை வைத்து லாபம் சம்பாதிக்க முற்படுகின்றனர். கல்வி நகரங்கள் கிராமங்கள் என்ற பேதம் இல்லாமல் அனைத்து இடங்களுக்கும் சமமாக பகிரப்பட வேண்டும்.அப்போதுதான் ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமூகம் உருவாகுவதற்கு அது வழி வகுக்கமுடியும்.

முடிவுரை

நாடக வழக்குக்கு இன்றியமையாத மெய்ப்பாடுகளில் ஒன்றான பெருமிதம் என்ற மெய்ப்பாட்டு கல்வி, தறுகண், இசைமை, கொடை என்ற நான்கின் அடிப்படையாக அமைவது. இலக்கியத்தைப் படிக்கும் போது தோன்றும் அதன் பொருளை ஆழப்படுத்தும் வகையில் காட்டப்படும் உணர்ச்சி வெளிப்பாடே மெய்ப்பாடாகும். இலக்கியத்தின் வடிவமும் பொருளும் சார்ந்த மெய்ப்ப்பாடு மிகச் சிறந்த அழகியல் கோட்பாடு. அதிலும் பெருமிதங்களாக சொல்லப்பட்ட நான்கும் மனித வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் வெளிப்படுத்தப்படுகிறது.

வீரம் செறிந்த செயலை அல்லது செயற்கரிய செயலை செய்யும் போதே பெருமிதம் வருகிறது. உதாரணமாக கவிஞர்கள், எழுத்தாளர்கள், இசை அமைப்பாளர்கள் இவர்களிடம் ஒருவித" வித்துவச் செருக்கு" இருக்கும். இதுவும் ஒருவித பெருமிதம் தான். அரசியல்வாதிகளிடம் அரசியல் சாணக்கியம் ஏற்படும் போது புதுவித பெருமிதம் ஏற்படும். ஒருவன் சிறந்த கொடையைக் கொடுக்கின்ற போதும் பெருமிதம் ஏற்படுகிறது. காதலரிடையே இசைமை ஏற்படும் போதும் பெருமிதம் உண்டாகிறது. இது காதலர் பிரிவின் போதும், சேர்தலின் போதும் வரும். இத்தகைய பெருமிதம் ஏற்படும் போது வாழ்வின் அழகியலை கண்கூடாகக் காணலாம். நாடகத்தில் வரும் மெய்ப்பாடு அல்ல, வாழ்வில் இத்தகைய பெருமிதம் வந்து அழகு செய்கிறது.

துணை நூல்கள்

1 தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை --பேராசிரியர் ந. சுப்பையாரெட்டியார்
2 தொல்காப்பியம் ----புலியூர் கேசிகன்.
3 திருக்குறள் ------வீ.வரதராஜன்.
4 தொல்காப்பிய மலர் 2023 கனடா தொல்காப்பிய மன்றம்.
5 தொல்காப்பியம் ---தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம்.
6 பாரதியார் கவிதைகள் ---- கண்ணதாசன் பதிப்பகம்.
7 தமிழ் இலக்கிய அறிமுகம் ---- முனைவர். பெ. சுயம்பு.
8 சங்க இலக்கியம் ஒரு புதிய கண்ணோட்டம் ---பேராசிரியர் . இ. பாலசுந்தரம் இளையதம்பி
9 தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் பேராசிரியர் .ஆ. வேலுப்பிள்ளை.
10 தமிழ் இலக்கிய வரலாறு --முனைவர் . ச. வே . சுப்பிரமணியன்.
11 தமிழ் இலக்கிய வரலாறு -----மு . வரதராசன்.
12 தொல்காப்பியம் ------ இளம்புரணார்.
13 ஒப்பியல் இலக்கியம் ----- க. கைலாசபதி.
14 கலித்தொகை -----சீ.வை.தாமோதரம்பிள்ளை.
15 அகநானூறு ----புலியூர் கேசிகன்.
16 புறநானூறு -----புலியூர் கேசிகன்.
17 குறுந்தொகை ----புலியூர் கேசிகன்.
18 சங்கக் காட்சி ----மா.இராசமாணிக்கம்.

தொ.மா.க.157

தொல்காப்பியத்தில் ஆற்றுப்படை இலக்கணமும் அதன் வளர்ச்சியும்

தமயந்தி பிறேம்ராஜ்
முதுகலைத் தமிழ், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், கனடா
pthamaya7@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் என்னும் பழம்பெரும் இலக்கண நூல் தமிழ் மொழியின் தொன்மைக்கும் சிறப்பிற்கும் சான்றாய் விளங்குகின்றது. ஒரு மொழிக்கு அடிப்படையாக இருப்பது அதன் எழுத்தும் சொல்லும் ஆகும். எனவே தான் தொல்காப்பியர் அவற்றிற்கு இலக்கணம் வகுக்கும் விதமாக எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் படைத்தார். அதனையடுத்து பொருளதிகாரத்தைப் படைத்தார். தொல்காப்பியம் பொருளதிகாரத்தில், ஆற்றுப்படை இலக்கணம் வரையறக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம், நூற்பா 88 இல் கூறப்பட்டுள்ள ஆற்றுப்படை இலக்கணமே பிற்காலத்தில் எழுந்த ஆற்றுப்படை நூல்களுக்கு அடிப்படையாக இருந்திருக்கலாம் என அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர்.

தொல்காப்பிய காலத்துக்கு முன்பிருந்தே அரசுக்களின் தோற்றம் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பிய காலத்தில் அரசுக்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்ததை, தொல்காப்பியப் பாடல்கள் மூலம் நாம் அறிய முடிகின்றது. அரசர்கள் தங்களின் செல்வாக்கினையும், சிறப்பினையும் மக்கள் அறியும் வண்ணம் புலவர்களைக் கொண்டு பாடல்கள் பாட வைத்தனர். இதற்காக நிறையப் பொன்னும், பொருளும் புலவர்களுக்குப் பரிசாக வாங்கினர். அரசனிடம் பரிசில் பெற்ற புலவன், வறுமையில் இருக்கும் இன்னுமொரு புலவனை அரசனிடம் சென்று, அவன் புகழ் பாடிப் பரிசில் பெற்று வருமாறு வழிப்படுத்துவதே ஆற்றுப்படை இலக்கணமாகும். அத்தகைய ஆற்றுப்படை இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றதே ஆற்றுப்படை நூல்கள். தொல்காப்பியக் காலம் தொட்டு சங்க காலம், பல்லவர் காலம் முதலாகத் தற்காலம் வரையான ஆற்றுப்படை நூல்களின் தோற்றம், அவை வளர்ந்து வந்த நிலை, இன்றைய காலத்தில் அவற்றின் வளர்ச்சி நிலை போன்றவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நோக்கமும் தேவையும்

இந்தக் கட்டுரை ஒரு இலக்கிய வகைமையின் உள்ளடக்கச் சுருக்கமாக அமையாமல் அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றிய வரலாற்றை ஆராய முயல்வதாக அமைகிறது. தொல்காப்பியக் காலம் தொட்டு சங்க காலம், பல்லவர் காலம் முதலாகத் தற்காலம் வரையான ஆற்றுப்படை நூல்களின் தோற்றம், அவை வளர்ந்து வந்த நிலை, இன்றைய காலத்தில் அவற்றின் வளர்ச்சி நிலை போன்றவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமும் தேவையுமாகும்.

ஆய்வுச் சிக்கல்

தொல்காப்பியர் காலம் தொட்டு ஆற்றுப்படை இலக்கணம் வளர்ச்சி பெற்று வருகின்ற போதிலும், அதன் பாடுபொருள் காலத்துக்கு காலம் மாற்றம் பெற்று வந்துள்ளதைக் காணமுடிகின்றது. காலத்துக்கு காலம் மாறி வரும் காலப் பின்னணியும், மக்களின் வாழ்வியல் முறையும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள ஆற்றுப்படை இலக்கணத்தை ஆய்வதில் உள்ள சிக்கலாகும்.

கருதுகோள்

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள ஆற்றுப்படை இலக்கணமே, சங்க காலம் முதல் இன்றைய காலம் வரையான ஆற்றுப்படை நூல்களுக்கான தோற்றத்துக்கும், அவற்றின் வளர்ச்சி நிலைக்கும் காரணம் என்பதை நிறுவுவதே இந்த ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வியல் முறை: சமூகவியல், வரலாற்றியல், ஒப்பியல்.

சான்றுகள்: முதன்மைச் சான்று - தொல்காப்பியம், தொல்காப்பியத்தில் ஆற்றுப்படை இலக்கணம்.
துணைச் சான்று - தொல்காப்பியம், தொல்காப்பியத்தில் ஆற்றுப்படை இலக்கணம் தொடர்பான ஆய்வுகள், பிற்கால இலக்கண நூல்கள்.

ஆய்வியல் அமைப்பு:

இயல் 1. தொல்காப்பியத்தில் ஆற்றுப்படை இலக்கணம்
இயல் 2. ஆற்றுப்படை இலக்கியத்தின் தோற்றமும் கட்டமைப்பும்
இயல் 3. ஆற்றுப்படை நூல்களின் வளர்ச்சி - சங்க காலம்
இயல் 4. சங்ககால பத்துப் பாட்டில் ஆற்றுப்படை நூல்கள்
இயல் 5. தொல்காப்பியர் காலம் தொடக்கம் இன்றைய காலகட்டம் - ஒப்பாய்வு
இயல் 6. ஆய்வு முடிவுரை.

இயல் 1. தொல்காப்பியத்தில் ஆற்றுப்படை இலக்கணம்

இலக்கியம், கையாளப்படம் உத்திகளால் வெற்றி பெறுகின்றன. உத்தி பலவகைப்படும். வெளிப்பாட்டு உத்தி என்பது அவற்றுள் ஒன்று. கவிஞன் தன் உள்ளத்துக் கருத்துக்களையும் கற்பனைகளையும் பலவகையாக வெளிப்படுத்த முடியும். ஒருவன் தன்னுடைய வாழ்வியல் அனுபவங்களை, வழிப்போக்கர்களை நோக்கிச் சொல்வதும் அக்காலத்தில் ஒரு இலக்கிய வகையாகக் கருதப்பட்டிருக்கிறது. இங்கே வழிப்போக்கர்கள் என்பது வறுமை தீர்க்கும் இடம் நோக்கிச் செல்வாரைக் குறிக்கும். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் பரந்த மனப்பான்மையின் பழந்தமிழ்ச் சான்றாகத் திகழ்கின்ற இந்தக் கவிதை உத்திக்கு "ஆற்றுப்படை" என்று பெயரிட்டு வழங்கியமையை அறிய முடிகிறது. இது பற்றிய சில செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. தொல்காப்பியம் என்பது இன்று கிடைக்கப்பெறும் மிக மூத்த தமிழ் இலக்கண நூலாகும். தொல்காப்பியம் ஆற்றுப்படை நூலுக்கு இலக்கணம் கூறுகிறது.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கம்" - தொல்காப்பியம், புறத்திணையியல் 88.

என்பது தொல்காப்பியம் காட்டும் அக்கால ஆற்றுப்படை இலக்கணம். இதனுள் "பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு" என்னும் தொடர் ஆற்றுப்படுத்துவோர், ஆற்றுப்படுத்தப்படுவோர் பொருளாதார நிலையைக் குறிப்பாகச் சுட்டுகிறது. விறலியர், பாணர், கூத்தர், பொருநர் என்போர் தமது வறுமையைப் போக்க வள்ளல்களிடம் சென்று பொருள் பெறுவது அக்கால வழக்கம். அவ்வாறு பரிசு பெற்றுச் செல்லும் மேற்கூறிய நால்வகைப் பிரிவினருள் ஒருவர், பரிசு பெறச் செல்லும் இன்னொருவனை வழிப்படுத்தும் முறையில் அமைவதே ஆற்றுப்படை ஆகும். புறத்திணையின் ஏழு திணைகளில் ஒன்றான பாடாண் திணையின் துறைகளில் ஒன்றாகத் தொல்காப்பியர் ஆற்றுப்படையைக் குறிப்பிடுகிறார்.

ஆற்றுப்படை இலக்கியம் தொல்காப்பியர் காலத்துக் கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை என நான்காக இருந்தது. இலக்கிய வகைமைகளை எடுத்துக் கூறும் தொல்காப்பியர் ஏனைய இலக்கிய வகைகளைக் காட்டிலும் இந்த ஆற்றுப்படை இலக்கியத்தை விதந்தோதுகிறார். எனவே அவர் காலத்துக்கு முன்பே இவ்வகை இலக்கியம் சிறந்திருந்திருக்கலாம் என்பதை ஓரளவு அனுமானிக்க முடியும்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் "கவிதையியல் பற்றிய இலக்கணம்" என்னும் கருதுகோள் ஒப்புக்கொள்ளப்படுமானால், "ஆற்றுப்படை" என்பது இலக்கியத்தின் வெளிப்பாட்டு உத்திமுறைகளில் ஒன்று என்பதும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். "ஆற்றுப்படை" இலக்கியம் அன்றைய சமுதாயத்தின் தனிமனித வறுமை நிலையையும், பிறர்நலம் பேணும் பெற்றியையும் ஒருசேரப் படம்பிடித்துக்காட்டும் இலக்கியத் தொழில்நுட்பமாகும்.

இயல் 2. ஆற்றுப்படை இலக்கியத்தின் தோற்றமும் கட்டமைப்பும்

ஆற்றுப்படை இலக்கியத்தைக் கலைஞர்களின் இலக்கியமாகவும் கருதலாம். காரணம் இந்த நூல்களின் நாயகர்களாக அமைந்தவர்கள் கலைஞர்களே. மன்னன் பாட்டுடைத் தலைவனாக இருந்தாலும் அவனைப் பற்றிய அத்தனைச் செய்திகளையும் பரிசில் பெற்றுவரும் இரவலனே எடுத்துக் கூறுகிறான். அதாவது மன்னர்களின் திருவோலக்கத்தில் குழுவாக அமர்ந்து பாடப்பெற்ற மன்னன் பெருமை நாட்டின் சாதாரண வறுமை நீங்கப் பெற்ற இரவலனால் பாடப்பெற்றது. சுருங்கச் சொன்னால் புரவலன் பெருமையை இரவலன் பாடினான். இரவலர்கள் அனைவரும் இசை வல்லுநர்கள். ஆற்றுப்படை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு இவர்களே காரணம். மொழிக்கு முன்னே தோன்றியது இசை என்பதும் இசையிலிருந்தே மொழி தோன்றியிருக்க வேண்டும் என்பதும் மொழியியலார் கருத்து. எனவே மொழியும் மொழியில் தோன்றிய பாடல்களும் தொடக்கத்தில் இசையாகவே இருந்திருக்க வேண்டும். இசையாகவே பாடப்பெற்றவையாதலின் இவை நாட்டுப் பாடல்களைப்போலப் பெரும்பாலும் வாய்மொழி இலக்கியங்களாகத்தான் தோன்றியிருக்க வேண்டும்.

பழுமரம் தேடும் பறவையினராய் எங்கோ ஒரு மன்னனிடம் சென்று அவனைப் புகழ்ந்து பாடிய இரவலர்கள் தாம் பரிசில் பெற்ற வரலாற்றின் வாய்மொழி வடிவமே ஆற்றுப்படை எனலாம். அவ்வப்பொழுது மன்னன் முன்னிலையில் பாடப்பெற்ற பாடல்கள் தங்களைப் போன்றோரும் தம்மைப் போன்றே பரிசில் பெற வேண்டும் என்னும் வேட்கையின் வெளிப்பாடே இதன் அடுத்த நிலையாகக் கருதப்படலாம். இதன் தொடர்ச்சியாகத் தான் பரிசில் பெற்ற மன்னனின் திருவோலக்கத்தை அடைவதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறுவதாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

2.1. பாணர்கள் கையிலிருந்துப் புலவர்களுக்கு மாறிய ஆற்றுப்படை

தொழில்முறைப் பாணர்களிடமிருந்து அதாவது இசைக்கலைஞர்கள் கையில் தவழ்ந்த ஆற்றுப்படைப்பாட்டு தமிழ்ப் பாநெறி அறிந்த புலவர்கள் கையில் வந்தபோது பல மாற்றங்களை

அடைந்தது. அவ்வாறு அடைந்த மாற்றங்களுள் ஆற்றுப்படைப் பாடப்படும் பாவகையும், முறையும் மிகவும் கவனிக்கத்தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது.

இரவலர்கள் கையிலிருந்த ஆற்றுப்படை இலக்கியம் புலவர்கள் கையில் வந்தபோது அடைந்த மாற்றங்களில் பாவகை தலையாயது. பாணர்களுக்கு இசை தெரியும். புலவர்களுடைய பாடல்களில் பொருள் நயத்தை உணர முடியும். அந்தப் பாடல்களில் இசை பற்றிய குறிப்புக்கள் இருக்கலாமே தவிர இசையே பாடலாக அமையவில்லை. இசைவாணர்களுக்கான ஆற்றுப்படை இலக்கியம் புலவர்கள் கைக்குத் தொல்காப்பியத்துக்கு முற்பட்ட நிலையிலேயே வந்திருக்க வேண்டும். பின்னாலே வந்த புலவர் பெருமக்கள் தாம் பாடிய ஆற்றுப்படைத் துறையில் தமக்கு முன்னோர்களாகிய பாணர்களை ஒரு பாத்திரமாக இடமளித்துப் பெருமைப்படுத்தினர் எனலாம். புலவர்களது கற்பனைத்திறன், வரலாற்றறிவு, இயற்கை ஈடுபாடு ஆகியனவற்றுக்கெல்லாம் ஆற்றுப்படை இலக்கியம் இலக்கியத் தளமானது.

2.2. ஆற்றுப்படை - ஒரு விளக்கம்

"தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது பிற்காலத்திய வழக்கு. அன்றைய ஆற்றுப்படையின் அடிப்படையே அதுதான். வழி தெரியாதவனுக்கு வழி சொல்லவே மறுக்கும் அல்லது தவறான வழிகாட்டும் தற்கால அவசர உலகத்தில் ஆற்றுப்படையின் ஊடிழையான மனிதநேய மாண்பினைப் புரிந்து கொள்வது அவ்வளவு எளிமையானதன்று. குழு வாழ்க்கை நடத்திய முன்னோர்களின் வாழ்க்கைத் தடத்தில் ஆற்றுப்படுத்தல் கோடையிலே வீசிய குளிர் தென்றல். "எங்கிருந்து வருகிறாய்? என்று வறுமையாளன் கேட்கிறான். இன்னாரிடம் சென்றேன். இவையிவை பெற்றேன். அங்கிருந்து வருகிறேன். அன்பனே, நீயும் செல். அன்பனே அங்கே உனக்கு அன்பும் கிட்டும், ஆதரவும் கிடைக்கும், உனது வறுமை ஒழியும் வாழ்வு சிறக்கும்" என்று ஒருவனை மற்றொருவன் வழிநடத்துவதே ஆற்றுப்படையின் உள்ளடக்கமாகும்.

இயல் 3. ஆற்றுப்படை நூல்களின் வளர்ச்சி - சங்க காலம்

சங்க இலக்கியத்தில் புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் ஆற்றுப்படைத் துறை அமைந்த சிறுசிறு பாடல்கள் இருப்பதைக் காண முடிகிறது. சங்ககால எட்டுத்தொகை நூல்களில் ஆற்றுப்படைப் பாடல்கள் உள்ளன. பத்துப் பாட்டு நூல்களுள் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாக அமைகின்றன. ஆற்றுப்படை நூலுக்குத் தொல்காப்பியம் இலக்கணம் கூறுகிறது. ஆற்றுப்படுத்துதல் என்பது வழிப்படுத்துதல் என்னும் பொருள் உடையது. விறலியர், பாணர், கூத்தர், பொருநர் என்போர் தமது வறுமையைப் போக்க வள்ளல்களிடம் சென்று பொருள் பெறுவது அக்கால வழக்கம். அவ்வாறு பரிசு பெற்றுச் செல்லும் மேற்கூறிய நால்வகைப் பிரிவினருள் ஒருவன், பரிசு பெறச் செல்லும் இன்னொருவனை வழிப்படுத்தும் முறையில் அமைவதே ஆற்றுப்படை ஆகும். அகவற்பாக்களாக அமையும் இப் பாடல்கள் தலைவனின் புகழ், கொடை, கொற்றம் ஆகியவை பற்றி எடுத்துக் கூறுவதாக அமையும்.

"ஆற்றுப்படை" என்பது தமிழிலக்கியத்தின் புறத்துறைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது என்பதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. புறநானூற்றில் "பாணாற்றுப்படை" என்ற வகையில் சில பாடல்களும், "விறலியாற்றுப்படை" என்னும் வகையில் சில பாடல்களும் "புலவராற்றுப்படை" என்னும் வகையில் ஒருபாடலும் கிடைத்துள்ளன. பதிற்றுப்பத்திலும் "பாணாற்றுப்படை", "விறலியாற்றுப்படை" என்னும் வகையில் பல ஆற்றுப்படைப் பகுதிகள் உண்டு. தொல்காப்பியர் காலத்தில் நான்காக இருந்த ஆற்றுப்படை வகைகள் சங்கக்காலத்தில் ஐந்தாக வளரச்சியடைந்தது. கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும் என்பாருடன் புலவர்களும் ஆற்றுப்படுத்தியதாகப் புறநானூற்றில் குறிப்பு உண்டு. புலவர்களும் பரிசிலராதலால் பரிசு பெறத்தக்க புலவர்களைத் தாம் பரிசில் பெற்ற மன்னர்களிடத்தில் ஆற்றுப்படுத்தியிருக்கலாம். பத்துப்பாட்டில் முதுற்பாட்டாக அமைந்த திருமுருகாற்றுப்படை ஏனைய ஆற்றுப்படை அமைப்பிலிருந்து சற்று வேறுபட்டு அமைந்திருப்பத்தைக் காணலாம்.

இறைவனிடம் புலவர்களை ஆற்றுப்படுத்தியதாக அமைக்கப்பட்ட புது வண்ண ஆற்றுப்படைகளை அடியொட்டிப் பிற்கால இலக்கண நூல்கள் அவற்றுக்கு இலக்கணத்தை வரையறை செய்த முறையையும் வரலாற்றில் காணமுடிகிறது.

"இருங்கண் வானத்து இமையோர் உழைப்
பெரும்புலவன் ஆற்றுப்படுத்தன்று" எனப் புறப்பொருள் வெண்பா மாலையும்,

"புலவ ராற்றுப்படை புத்தேட்கும் உரித்தே" எனப் பன்னிரு பாட்டியலும் இலக்கணம் வகுத்திருப்பதை அறிய முடிகிறது. பாணாற்றுப்படை என்னும் ஒருபெயர் வழக்கே, சிறுபாணாற்றுப்படை பெரும்பாணாற்றுப்படை என இருபெயர் வழக்காக வகைப்பட்டது. சீறியாழை வைத்திருப்பவன் சிறுபாணன் எனவும் பேரியாழை வைத்திருப்பவன் பெரும்பாணன் எனவும் பிரித்துணரப்பட்டனர்.

3.1. பாணாற்றுப்படை ஒரு விளக்கம்

பாணாற்றுப்படைகளில் ஒன்றான சிறுபாணாற்றுப்படை என்னும் இலக்கியம் பத்துப்பாட்டுள் ஒன்றாகக் கோக்கப்பட்டுள்ளது. இது நல்லியக்கோடனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என்னும் சான்றோரால் பாடப்பெற்றது. தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் சான்றோரால் பாடப்பெற்ற பெரும்பாணாற்றுப்படையும் பத்துப் பாட்டுள் அமைந்துள்ளது. பொதுவாகப் பெரும்பாணாற்றுப்படைத் துறையில் புறநானூற்றில் முன்பே குறிப்பிட்டுள்ளபடி ஏழு பாடல்களும் பதிற்றுப்பத்தில் ஒன்றுமாக அமைந்துள்ளது.

விறலியாற்றுப்படை என்னும் பெயரால் ஏனைய ஆற்றுப்படை நூல்களைப் போல் தனிநெடும் பாட்டு கிட்டவில்லையெனினும் தொகை நூல்களில் மிகுதியாகக் காணப்படுவன இத்துறை சார்ந்த பாடல்களே. புறநானூற்றில் நான்கும், பதிற்றுப்பத்தில் ஐந்துமாகக் கூடுதல் ஒன்பது பாடல்கள் இத்துறையில் கிட்டியுள்ளன. ஏனைய தொகுதிகளில் காணப்படாத பொருநராற்றுப்படையும் கூத்தராற்றுப்படையும் பத்துப்பாட்டில் மட்டுமே கோக்கப்பட்டுள்ளன. கூத்தராற்றுப்படைக்கு "மலைபடு கடாம்" என்னும் பெயர் வழக்குமுண்டு. நன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெருங்குன்றூர் கௌசிகனார் கூத்தராற்றுப்படையைப் பாட, பெண்பாற்புலவர் எனக் கருதப்படும் முடத்தாமக் கண்ணியார் கரிகால் பெருவளத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பொருநராற்றுப்படையைப் பாடியிருக்கிறார்.

இவ்வாறு தனிப்பெருந்துறையாக ஆற்றுப்படைத் துறை விளங்கியிருக்கிறது. தொல்காப்பியம் வாழ்வியல் நூல் என்னும் கருத்தியலிலிருந்து விலகி மாபெரும் இலக்கியவியல் அல்லது பாவியல் நூல் என்பதற்கு இதுவும் ஒரு வலுவான சான்றாகும். தனிநெடும் பாடல்களாகப் பத்துப்பாட்டுள் அமைந்த இவ்வாற்றுப்படைத்துறை சிறுகுறு பாடல்களுக்கான துறையாகத் தொகை நூல்களில் அமைந்திருக்கின்றது என்பது நோக்கத்தக்கது.

3.2. ஆற்றுப்படை ஒரு பண்பாட்டுக் கருவூலம்

"பசித்தவனுக்கு உணவை வழங்குவதை விட, அதை உருவாக்கிக் கொள்ளும் வழியை அவனுக்குச் சொல்லிக் கொடுப்பதே சிறந்த அறம்" என்பது மேல்நாட்டுப் பொன்மொழி. இன்றைய நடப்பியலின் எதிர்மறைப் போக்கினைச் சிந்தித்தால் அன்றைய ஆற்றுப்படை இலக்கியம் ஒரு பண்பாட்டு இலக்கியம் என்பதை அறிந்து கொள்ள முடியும். தான் தேடிய செல்வத்தைத் தானே துய்ப்பதும், துய்க்க இயலாக் காலத்து மாண்டு போவதும் தேடிய செல்வம் வீணாவதும் நிகழ்கால நடப்பியல். ஆனால் தனக்குப் பரிசளித்தவனின் முழு முகவரியைக் கூறி, அந்த முகவரிக்குச் செல்லும் தடத்தினைச் சிறிதும் வழுவில்லாமல் எடுத்துரைத்து "இன்ன பரிசில் யான்பெற்றேன்" எனப் பெற்ற பெருவளத்தை மறைக்காமல் காட்டி மற்றொருவனையும் வாழச்செய்யும் மனநிலையின் மொழிவழி வெளிப்பாடே ஆற்றுப்படை இலக்கியத்தின் சாரமாகும். சங்க காலத்துக் கலைஞர்களின் பண்பாட்டையும் வாழ்வையும், அவர்களை ஆதரித்துக் கலை

வளர்த்த புரவலர்களின் ஈர உள்ளத்தையும், வீர நெஞ்சத்தையும் ஆற்றுப்படைகள் இலக்கிய ஓவியங்களாகக் காட்டி நிற்கின்றன. "கொடுப்பதூஉம் அழுக்கறுப்பார்கள்" நிறைந்த உலகில் கொடுப்பவன் இருக்கும் இடத்திற்கு வழிகாட்டும் இரவலர்கள் புரவலர்களினும் உயர்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

இலக்கியச் சுவையுணர் திறனும், இலக்கிய ஆய்வுத் திறனும் கைவரப் பெற்றவர்கள் ஒரு நூலைப்பற்றிய தோற்றத்தையும் வளர்ச்சியையும் அறிந்து கொண்டால் அவ்விலக்கியத்தை முற்றும் அறிந்ததாகக் கருதப்படுவர். இசை, கூத்து என்னும் நுண்கலைகள் எவ்வாறு பழந்தமிழகத்தில் போற்றப்பட்டன என்பதையும், கலைஞர்கள் எவ்வாறு ஆட்சியாளர்களால் மதிக்கப் பெற்றனர் என்பதையும் அறிந்து கொள்ள முடியும். அழுக்காறு அறியா அக்காலக் கலைஞர்களின் அகவழகையும் மக்கள் வாழ்வியல் நுட்பங்களைக் கவிதையாக்கும் பழந்தமிழ்ப் புலவர் பெருமக்களின் புலமைத்திறத்தையும் அறிந்து கொள்ள முடியும். வாரி வழங்கும் மன்னர்கள் ஆண்ட திறத்தையும் அவர்தம் வள்ளன்மையைப் பாடிப் புகழ்ந்த இரவலர்கள் மற்றும் புலவர்களின் நன்றியுணர்ச்சியையும் அறிந்து கொள்ளலாம். சுருங்கச் சொன்னால் சங்கக் காலம் தமிழகத்தின் பொற்காலம் என்பதற்கான சான்றுகளில் ஆற்றுப்படை இலக்கியச் சான்றுகள் தனித்துவம் மிக்கன.

இயல் 4. சங்ககால பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள்

ஆற்றுப்படை இலக்கியம் என்பது தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்று. ஆறு - வழி, படை - படுத்தல். எனவே, ஆற்றுப்படை என்றால் வழிப்படுத்தல் அல்லது வழிகாட்டுதல் என்பது பொருள். பரிசு பெற்ற பாணர் முதலியோர் தாம் பெற்ற பெரும் செல்வத்தைத் தம் இனத்தைச் சார்ந்தவர்க்குக் கூறித் தம்மைப் போல் அவர்களும் பயன் பெற, தாம் பரிசுபெற்ற வள்ளல் அல்லது அரசனிடம் வழிப்படுத்துவது ஆற்றுப்படை ஆகும். இவ்வகை அமைப்பில் பாடல்கள் இருக்கும். இம் மரபிற்கு ஆற்றுப்படை என்பது பெயர். பத்துப்பாட்டுத் தொகுப்பில் உள்ள ஆற்றுப்படை நூல்கள்:

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- கூத்தராற்றுப்படை அல்லது மலைபடுகடாம்

திருமுருகாற்றுப்படை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் முருகக் கடவுள். இக்கடவுள் இருக்கின்ற இடங்கள், வழிபடும் முறைகள் ஆகியவற்றைக் கூறி முருகக் கடவுளின் அருளைப் பெறுவதற்கான வழிகள் இப்பாட்டில் கூறப்பட்டுள்ளன. எனவே, அரசன் அல்லது வள்ளலிடம் பொருள்களைப் பெறுவதற்கு உரிய வழிகளைக் கூறுவது போல, முருகக் கடவுளின் அருளைப் பெறுவதற்கு உரிய வழிகளை இப்பாடல் கூறுவதால், இதற்குத் திருமுருகாற்றுப்படை என்னும் பெயர் வழங்கலாயிற்று. இந்நூலுக்குப் புலவராற்றுப்படை என்னும் பெயரும் உண்டு.

பொருநராற்றுப்படை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான். பொருநர் என்றால் புகழ்ந்து பாடுவோர் என்று பொருள். இவர்கள் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் என்று மூவகையினர். பொருநராற்றுப்படையில் போர்க்களம் பாடுவோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். கரிகால் பெருவளத்தான் என்னும் அரசனிடம் பொருநன் ஒருவன் பரிசு பெற்று வந்தான். அவன், தன் எதிரில் வந்த வேறு ஒரு பொருநனிடம் கரிகால் பெருவளத்தானிடம் சென்று பரிசு பெறும் வகையில் வழிப்படுத்தியதாக இந்நூல் அமைந்துள்ளது. ஒரு பொருநன் வேறொரு பொருநனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் பொருநராற்றுப்படை என்னும் பெயர் பெற்றது.

சிறுபாணாற்றுப்படை

நத்தத்தனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது சிறுபாணாற்றுப்படை எனும் இந்நூல். இது 269 அடிகளாலமைந்தது.ஓய்மான் நாட்டு மன்னனான நல்லியக்கோடன் என்பவனைத் தலைவனாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூல், அம்மன்னனிடம் பரிசு பெற்ற சிறுபாணன் ஒருவன் தான் வழியிற் கண்ட இன்னொரு பாணனை அவனிடம் வழிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பெரும்பாணாற்றுப்படை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன். இவன் ஓர் அரசன். இவனிடம் பரிசு பெற்று வந்த ஒரு பெரும்பாணன், அவன் எதிரில் வந்த வேறு ஒரு பெரும்பாணனை அம்மன்னனிடம் சென்று பரிசு பெறும் வகையில் வழிகாட்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஒரு பெரும்பாணன் வேறொரு பெரும்பாணனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் பெரும்பாணாற்றுப்படை என்னும் பெயர் பெற்றது.

கூத்தராற்றுப்படை

இந்நூலின் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய் நன்னன். இந்நூலுக்கு மலைபடுகடாம் என்னும் பெயரும் உண்டு. மலையில் அருவிநீர் விழுகின்ற பொழுது இனிய ஓசை ஏற்படும். இவ்வோசையைக் கடாம் என்று சிறப்பித்துக் கூறுவதால் மலைபடுகடாம் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்று கூறுவர்.

சிலர், யானையை மலையாகவும், அதன் மத நீரை அருவியாகவும் கற்பனை செய்து புலவர் பாடியமையால் மலைபடுகடாம் என்னும் பெயர் வழங்கலாயிற்று என்று கூறுவர். நன்னன் என்ற மன்னனிடம் பரிசு பெற்று வந்த கூத்தன் ஒருவன், தன் எதிரில் வந்த வேறு ஒரு கூத்தனை அம் மன்னனிடம் சென்று பரிசு பெறும் வகையில் வழிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஒரு கூத்தன் வேறொரு கூத்தனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் கூத்தராற்றுப்படை என்னும் பெயர் பெற்றது.

இயல் 5. தொல்காப்பியர் காலம் தொட்டு சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், தற்காலம் - ஒப்பாய்வு:

வள்ளல் ஒருவரிடம் தன் வறுமையைப் போக்கும் வளங்களைப் பெற்றுவந்த ஒருவர். கூத்தர், பாணர், பொருநர், விறலி முதலானோரை அவரிடம் செல்லுமாறு வழி சொல்லி அனுப்புவது ஆற்றுப்படையாகும். சங்க காலத்தில் மன்னன் புகழ் பாடிப் பரிசில் பெறுவது ஆற்றுப்படை நூல்களின் பாடு பொருளாக இருந்துள்ளது. சங்கமருவிய காலம் அறத்தை முன்னிறுத்தி அற இலக்கியங்கள் தோற்றம் பெற்ற காலமாகும். இக்காலகட்டத்தில் ஆற்றுப்படை நூல்களின் பாடு பொருள் அற இலக்கியம் சார்ந்ததாகவே அமைந்தன.

அதுவே பல்லவர் காலத்தை நோக்குவோமானால், அங்கு பக்தி சார்ந்த இலக்கியங்கள் தோற்றம் பெற்றத்தைக் காணமுடிகின்றது. பல்லவர் காலத்தில் மக்களை இறைவனிடம் வழிப்படுத்துவதாக, பக்தி சார்ந்து ஆற்றுப்படை இலக்கியங்கள் பாடப்பட்டன. இங்கு வழிப்படுத்தும் தன்மை மாறவில்லை. காலத்துக்கு காலம் வழிப்படுத்தப்படும் இடமே மாற்றம் பெற்று வந்துள்ளது. பிற்காலத்தில் ஆற்றுப்படை நூலைத் தமிழில் சிற்றிலக்கியங்கள் என்றும், வடமொழியில் பிரபந்தங்கள் என்றும் வழங்கலாயினர். இதனைப் பாட்டியல் வகைகளுள் ஒன்றாக்கினர்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் ஆற்றுப்படைப் பாடல்களை மையமாகக் கொண்டு பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய “பன்னிரு பாட்டியல்” என்னும் இலக்கண நூல் ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறியிருக்கிறது. தமிழைப் பொருத்தவரையில் இலக்கிய வளர்ச்சி என்பது மொழியின் எளிமையாகவே கருதப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியத் தொகுப்புக்களின் மொழிநடையும் அவற்றைத் தொடர்ந்து இலக்கியங்களின் மொழிநடையும் இலக்கியத்தின் ஏனைய கூறுகளில் சிறந்து விளங்கினாலும் மொழிநடையைப் பொருத்தவரையில் எளிமையே அரசாண்டது. இது நீர்த்துப் போகும் அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறது.

ஆற்றுப்படை இலக்கியங்களின் வளர்ச்சிநிலையைப் பொருத்தவரையில் திருஞான சம்பந்தப் பெருமான் பாடிய கோடிக்கரை ஆற்றுப்படை குறிப்பிடத்தக்கது. பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய கச்சியப்ப முனிவரால் இயற்றப்பட்ட திருத்தணிகையாற்றுப்படையும், ஆசிரியர் பெயர் தெரியாத திருப்பாணாற்றுப்படையும் இலக்கிய வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் காணப்படும் புலவராற்றுப்படை பதினேழாம் நூற்றாண்டுவரை தொடர்ந்துள்ளது. திருமேனி இரத்தினக் கவிராயர் என்பார் எழுதிய புலவராற்றுப்படை இந்த நிரலில் வரும். இடைக்கால இலக்கியங்களில் ஏகம்பவாணன் ஆற்றுப்படையும், அருணகிரிநாதர் எழுதிய மற்றொரு திருமுருகாற்றுப்படையும் சிந்திக்கத்தக்கன.

குலாம் காதிர் நாவலர் என்பாரால் எழுதப்பட்ட "புலவராற்றுப்படை" கவனத்தைக் கவர்கின்றதொரு ஆற்றுப்படையாகும். இது மதுரைத் தமிழ்ச் சங்கத்தலைவர் பாண்டித்துரைத் தேவரிடம் புலவர் ஒருவரை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. பெரும்பாலான ஆற்றுப்படை நூல்களில் இரவலர்களும் புலவர்களும் நடந்து சென்று பாட்டுடைத் தலைவனைக் காண்பதைத்தான் கண்டிருக்கிறோம். இந்த ஆற்றுப்படையில் ஆற்றுப்படுத்தப்படுகிறவன் புகைவண்டியில் செல்வதாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பரிசில் பொருளாகக் கைக்கடியாரத்தைப் பெற்றதாகவும் பாடப்பெற்றுள்ளது. சொற்பொழிவாற்றுப்படை, காதலியாற்றுப்படை, மாணாக்கர் ஆற்றுப்படை, ஆசானாற்றுப்படை, செந்தமிழ்ச் செல்வியாற்றுப்படை எனப் பல்வகையாக ஆற்றுப்படைகள் தோன்றியிருக்கின்றன.

இயல் 6. முடிவுரை:

இலக்கியக் கூறுகளில் காலத்திற்கேற்பக் கருத்துக்களும் பாடுபொருளும் வடிவமும் மாறுபடும். ஆனால் கற்பனையும் உணர்ச்சியும் மாறுபடாது. அவை புதுமையாகவும் அடர்த்தி வேறுபாட்டோடும் வெளிப்படும். தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில், ஆற்றுப்படை நூல்களுக்கான அடிப்படை இலக்கணம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியம் பாடல் 88 இல் கூறப்பட்டுள்ள ஆற்றுப்படை நூல்களுக்கான அடிப்படை இலக்கணங்கள், அவை வளர்ந்து வந்த நிலை, இன்றைய காலத்தில் அவற்றின் வளர்ச்சி நிலை போன்றவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியரும் பரிசில் பெற்று வரும்போது எதிரே பரிசில் பெறாதவன் வந்தால், அவனுக்குத் தாம்பெற்ற பெரிய செல்வம் பற்றி அறிவுறுத்தி, சென்று பரிசில் பெற உதவுவர் எனத் தொல்காப்பியம் இலக்கணம் வகுத்தது.

இத்துறை பின்னர்ச் சிறப்பாக வளர்ச்சி அடைந்தது. ஆற்றுப்படை இலக்கியங்களின் வளர்ச்சியினை தொல்காப்பியர் காலம் தொடங்கி, இன்றைய காலம் வரை நாம் நோக்க வேண்டியுள்ளது. சிற்றிலக்கிய வகைமை வளர்ச்சிக்கான அடித்தளத்தை தொல்காப்பியரின் தொல்காப்பியத்திலிருந்து காணமுடிகிறது. ஆற்றுப்படை ஓர் இலக்கிய வடிவம். இலக்கிய வடிவங்களைப் பொருத்தவரையில் தொல்காப்பியம் நெகிழ்ச்சியுடையது. அந்த அடிப்படையில் தற்காலத்திற்கேற்பத் திருத்தலங்களை நோக்கியோ, புகழ்மிகு கல்வி நிலையங்களை நோக்கியோ, அறிஞர்களின் இல்லம் நோக்கியோ கவிஞர்களின் இருக்கை நோக்கியோ ஆற்றுப்படை இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். நிலைமை அவ்வாறில்லை.

பழைமையில் புதுமை தேக்குகின்ற முயற்சி பாரதி, பாரதிதாசனோடு முடிவடைந்துவிட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. அவ்வாறின்றி இன்று "புதிதாய்ப் பிறந்தோம்" என்று இலக்கியங்களும் மகிழ வேண்டும் என்றால் ஆற்றுப்படை முதலிய பழந்தமிழ் வடிவங்கள் தற்காலக் கவிஞர்களின் சிந்தனையிலும், கணிப்பொறியிலும், எழுதுகோலிலும் நர்த்தனம் புரிதல் வேண்டும் என ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர். எங்கள் தமிழ்மொழி இலக்கணம் மற்றும் இலக்கியங்களை அடுத்த தலைமுறையினரும் அறியும் வண்ணம் சிறந்த ஆய்வுகளும், அதுசார் ஆக்கங்களும் உருவாக்கப்படவேண்டும். தொல்காப்பியத்தை

அடிப்படையாகக் கொண்டு, இன்றைய காலப்பின்னணிக்கு ஏற்ப ஆற்றுப்படை நூல்கள் எழுதப்பட வேண்டும் என்பது இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

பார்வை நூல்கள்

1. தொல்காப்பியர் தொல்காப்பியம் - பொருளதிகாரம், கு.சுந்தரமூர்த்தி அஞ்சல், தஞ்சை மாவட்டம், இரண்டாம் பதிப்பு - 1970
2. சங்ககால நூல்கள் - எட்டுத் தொகை, பத்துப் பாட்டு
3. ஆற்றுப்படை இலக்கணம், பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
4. ஔவை துரைசாமிப்பிள்ளை புறநானூறு மூலமும் உரையும், தெ.இ.சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. மறுபதிப்பு - 1967.
5. புலவராற்றுப்படை - நான்காவது நக்கீரர் குலாம் காதிர் நாவலர்

தொ.மா.க.179

தொல்காப்பியம் முதல் கணினி வரை தமிழ் வரிவடிவம் - மாற்றம், சிக்கல், தீர்வு

முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ்
பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கனடா வளாகம்

ஆய்வுச் சுருக்கம்

மனிதன் தொடர்பாடலை மேற்கொள்வதற்காக ஏற்படுத்திக் கொண்ட கருவிகளே சொல்லும் எழுத்துமாகும். ஒரு மொழி, வரிவடிவம் மூலம் தொடர்பை மேற்கொள்ளும் நிலையை அடையப் பல்லாயிரம் ஆண்டுகள் பயணித்திருக்கவேண்டும். தமிழ் மொழி, முழுமையான வரிவடிவம் பெற்றதொரு நிலையையே தொல்காப்பியத்தில் (காலம் பொ. ஆ. மு. 711) காண்கிறோம். தொல்காப்பியர் கால வரிவடிவமே இன்றுவரை மிகச் சிறு மாற்றங்களுடன் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பது தொல்காப்பியரது வரிவடிவக் கோட்பாட்டின் சிறப்பாகும். கணினி யுகத்திலும் மிகப் பெரிய எண்ணிக்கையிலான வரிவடிவங்களைக் கொண்ட தமிழ் பல சிக்கல்களைக் கண்ட போதும் வெற்றிநடை போடுகிறது, போடும் என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

ஆய்வுச் சிக்கல் - உலகுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கணினித் துறையில்,பெரும் எண்ணிக்கையிலான தமிழ் வரிவடிவங்களைக் கணினியில் வடிவமைக்கும் போது முகம் கொடுக்கவேண்டிய சவால்கள் பல.

கருதுகோள் - தொல்காப்பியர், தமிழ் மொழி, 12 உயிரும், 18 மெய்யும், 216 உயிர்மெய்யும், 1 ஆயுதமாக 247 எழுத்துக்களைக் கொண்டது எனத் தமிழ் எழுத்துக்களுக்கு எல்லை வகுத்தார். 216 உயிர்மெய் எழுத்துக்களின் வரிவடிவங்கள் அனைத்தும் ஒரே சீராக அமைக்கப்படவில்லையாயினும் அவர், அவற்றைக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை (தொல். நூன்மரபு நூ. 17). தொல்காப்பியரது வரிவடிவக் கோட்பாடு கணினியில் சிக்கலை எதிர் கொண்டாலும், மொழியின் அடிப்படைக் கோட்பாடுகளில் மாற்றங்களைச் சந்தியாது தீர்வு காண வல்லது என்பது கருதுகோளாகும்.

ஆய்வியல் நெறி - வரலாற்று ஆய்வு, மொழியியல் ஆய்வு.

ஆய்வுச் சான்றுகள்

முதன்மைச் சான்றுகள் - தொல்காப்பியம், உரைகள், ஆய்வுகள்.

துணைச் சான்றுகள் - கணினி தொடர்பான ஆய்வுகள்.

ஆய்வியல் அமைப்பு

இயல் 1. வரிவடிவம் - தொல்காப்பியர் காலத்திற்கு முன்னைய காலம்.

இயல் 2. வரிவடிவம் - தொல்காப்பியர் காலம்,

இயல் 3. கணினித் தமிழ் - சிக்கல்களும் தீர்வுகளும்,

இயல் 4. முடிவுரை.

முகவுரை

மக்ஸ் பிளாங்க் என்னும் மானிடவியலுக்கான அறிவியல் தாபனம் (Max Planck Institute for the Science of Human History, உலக அங்கீகாரம் பெற்ற ஜெர்மானிய நாட்டு ஆய்வுத் தாபனம்) "**திராவிட மொழிகள்** 4500 **ஆண்டுகள் கால வரலாற்றைக் கொண்டவை**" என்று 2018 ஆம் ஆண்டு உலகிற்கு அறியத் தந்திருக்கிறது. ஆனால், 4500 ஆண்டளவிலிருந்த தமிழ் மொழியின் தன்மையை அறிந்து கொள்வதற்குரிய நேரடிச் சான்றுகள் எதனையும் எழுத்து வடிவில் எம் முன்னோர் விட்டுச் செல்லவில்லை. இன்று, அகழாய்வில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளை அறிவியல் வழிநின்று கரிமப் பகுப்பாய்விற்கு உட்படுத்தி, ஆய்ந்து காலக்கணிப்புச் செய்யும் முயற்சியில் இன்றைய ஆய்வாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். **எழுத்தின் தோற்றமே வரலாற்றுக் காலத்தின் தொடக்கம்** என்று கூறிக் கொள்ளும் அளவுக்கு ஆய்வுகள் முன்னேறியுள்ளன.

இயல் 1 வரிவடிவம் - தொல்காப்பியர் காலத்திற்கு முன்னைய காலம்

எந்த மொழியிலும் தொடக்க கால எழுத்துக்கள் ஓவிய எழுத்துக்களாகவே அமைகின்றன என்பது பொது மரபாகும். ஓவிய எழுத்து, பல படிமுறை வளர்ச்சிகளைக் கண்ட பின்னரே தொல்காப்பியர் கூறும் வரிவடிவ நிலையை அடைந்திருக்க முடியும். தொல்காப்பியரின் வரிவடிவக் கொள்கையைப் பார்க்கும் பொழுது, தொல்காப்பியர் காலத்தில் இருந்த தமிழ் எழுத்துக்கள் "தமிழ் மொழி வரலாற்றில் பல நூற்றாண்டுகள் பயணித்தே அந் நிலையை அடைந்திருக்க முடியும்" என்ற முடிவுக்கே வரமுடிகிறது. **மொத்தத்தில் தொல்காப்பியம் தமிழ் மொழி முழு வளர்ச்சி பெற்ற காலத்திலேயே எழுதப்பட்டது என்று கொள்வதில் தவறில்லை**.

தொல்காப்பியமே, இன்று எமக்குக் கிடைக்கும் நூல்களுள் மிகப்பழமையானது. இந்த ஆய்வின் தேவைக்காக, "**தொல்காப்பியத்தின் காலம் பொ. ஆ. மு**. 711" என்று கொள்ளப்படுகிறது.

1. தொல்காப்பியம், **நடுகல் வழிபாடு** பற்றிக் கூறுகிறது.

> *'காட்சி கல்கோள் நீர்ப்படை நடுகல்*
> *சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று*
> *இருமூன்று வகையிற் கல்லொடு புணர"* - *(தொல். பொருள். புற. நூ. 5)*

செயற்கரிய வீரதீரச் செயல் செய்து மாண்டவர்களின் அடையாளமாக நடுகல் நாட்டி வழிபடும் வழக்கம் பண்டைக் காலத்தில் தமிழ் மக்களிடையே இருந்திருக்கிறது என்பதற்கு இந் நூற்பா சான்றாகும். இந் நடுகற்களில் எழுத்துக்கள் அதிகம் இல்லாவிட்டாலும் வரிவடிவம் இருந்ததற்கான சான்றாக இவற்றைக் கொள்ளலாம்.

புதுச்சேரிப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் க. ராஜன் அவரகள் தமிழ் நாட்டில் பொ. ஆ. மு. 1000 ஆம் ஆண்டளவில் மிக உயரமான நடுகற்கள் கிடைத்துள்ளன என்று நிறுவுகிறார். இவர், **பெருங்கற்படைச் சின்னங்கள் நடுகற்களாக மாறியதை நான்கு வளர்ச்சி நிலைகளில்** ஆராய்கிறார்.[1] இவை யாவும் வரிவடிவங்கள் இருந்தமையைக் கூறுகின்றனவே தவிர வரிவடிவங்கள் பற்றிய தெளிவைத் தரவில்லை.

2. நடுகற்கள் தவிர, **மலைக் குகைகளில் அமைந்த பாறைகளிலும்**, **முகப்புக்களிலும்**, **சமண சமயத்தாரின் கல் படுக்கைகளுக்கு அருகிலும் பண்டைய எழுத்துக்களால் அமைந்த கல்வெட்டுக்கள்** காணப்படுகின்றன.

[1]ராஜன். கா. பேரா. தொல்லியல் நோக்கில் சங்ககாலம். பக். 29-30.

3. இவை தவிர, **தமிழக அகழாய்வுகளில் கிடைத்த முழு/ உடைந்த மட்பாண்டங்களிலும் இவ்வெழுத்துக்கள் காணப்படுகின்றன**.

4. **இவ்வாறான மட்பாண்டப் பொறிப்புகள் கடல்கடந்த நாடுகளிலம் கிடைத்திருக்கின்றன**. எகிப்தியத் துறைமுகங்களான குவைசர் அல் காதிம், பெரணிகே முதலிய பகுதிகளிலும் தமிழி எழுத்தில் அமைந்த தமிழ் பொறிப்புகள் கிடைத்திருக்கின்றன.

பாறைக் கல்வெட்டுக்கள், மட்பாண்டங்கள் முதலியவை சாதாரண தொழிலாளியால் அவனது தொழிற்பாட்டை உறுதிசெய்பவையாகவே அமைந்திருக்கின்றன. அகழாய்வுக் களங்களில் கிடைக்கப்பெற்ற இந்த ஆவணங்கள் "**கல்வி அறிவு கீழ்மட்டத் தொழிலாளி வரை சென்றிருக்கிறது என்பதை மட்டுமே உறுதிசெய்கின்றன**."

5. பிற்காலத்தில் எழுத்து வடிவம் பெற்றதாக நிறுவப்பட்டுள்ள **இறையனார் களவியலுரை** தமிழர் வரலாறு பற்றி முக்கியமான சில தகவல்களைக் கூறுகிறது.

முதல், இடை, கடைச் சங்கங்களைப் பாண்டியர் நிறுவினார்,

தலைச் சங்கத்தில் ..... **முரஞ்சியூர் முடிநாகராயர்** உள்ளிட்ட 4449 புலவர்கள் 4440 ஆண்டுகள் சங்கம் இருந்து பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலாய (எத்துணையோ) பாடல்களைப் பாடினார்,

இடைச் சங்கத்தில் அகத்தியனார், தொல்காப்பியர் முதலாக 59 புலவர்கள் உள்ளிட்ட 3700 புலவர்கள் இருந்து, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் முதலாய பாடல்களைப் பாடினர்.

கடைச் சங்கத்தில், **நல்லந்துவனார்**, **மதுரை மருதனிளநாகனார்**, **கணக்காயர் மகனார் நக்கீரன்** உள்ளிட்ட 449 புலவர்கள் இருந்து **நெடுந்தொகை**, **குறுந்தொகை**, **நற்றிணை**. **புறநானூறு**, **ஐங்குறுநூறு**, **பதிற்றுப்பத்து**, **நூற்றைம்பது கலி**, **எழுபது பரிபாடல்**, **கூத்து**, **வரி**, **சிற்றிசை**, **பேரிசை முதலானவற்றைப் பாடினர்**.

இறையனார் களவியருரை கூறும் தகவல்களில் மூன்று சங்கங்கள் இருந்தன என்பதும், பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட அறிஞர் அவை தொடர்ந்து இருந்து வந்தது என்பதும், புலவர்கள் பலர் அந்த அவைகளில் இருந்து பாடல்கள் பாடினர் என்பதும் அவற்றில் பல அழிந்தன என்பதும் ஏற்றுக் கொள்ளத் தக்க தகவல்களாகும். இந்த ஆய்வின் தேவைக்காக "கல்வியில் சிறந்த சான்றோர் பலர்" தொல்காப்பியர் காலத்திற்கு முன் வாழ்ந்திருந்து பாடல்கள் பாடினார்கள்" என்னும் தகவல்களை மட்டும் எடுத்துக் கொண்டு, **தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழ் வரிவடிவம் வளர்ச்சிபெற்ற நிலையில் இருந்திருக்கிறது** என்பதை உறுதி செய்து கொள்ளுவோம்.

இயல் 2 வரிவடிவம் - தொல்காப்பியர் காலம்

"தமிழ் நெடுங்கணக்கு" என்னும் பதம் தமிழிலுள்ள உயிர், மெய், உயிர் மெய், ஆய்தம் ஆகிய எழுத்துக்களைக் குறிக்கும். இப் பெயர்கள், தமிழ் எழுத்துக்களின் தன்மையையும் குறிக்கின்றன. **மொழிக்கு உயிர்**, **மெய் ஆகிய எழுத்துக்களே அடிப்படை** என்பதைத் தொல்காப்பியர்,

"எழுத்தெனப் படுப
அகர முதல் னகர இறுவாய்
***முப்பஃது** என்ப" – தொல். நூன்மரபு. நூ. 01.*

உயிர் - 12, மெய் - 18 ஆக மொத்தம் **முதல் எழுத்துக்கள்** 30.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தமிழ், உயிர் 12, மெய் 18, உயிர்மெய் 216, ஆய்தம் 1 **என்று, மொத்தம்** 247 **எழுத்துக்களைக் கொண்டது என்று தெளிவாக் கூறுகிறது**. **குற்றியலிகரம்**, **குற்றியலுகரம்** என்னும் சார்பெழுத்துக்களுக்குத் தனியாக வரிவடிவம் வகுக்காவிட்டாலும் உகரமும் இகரமும் குறுகி ஒலிக்கும் இடங்களில் அவை அரை மாத்திரையுடைய **மெய் எழுத்துப் போல புள்ளி பெறுவதால் அதனையும் தனியான ஒரு வரிவடிவமாகச் சில அறிஞர் கொள்வார்கள்**.

இத்தனை சிறப்பாக இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் கூறும் எழுத்துக்களின் வரிவடிவங்கள் "இவை" தான் என்று எம்மால் உறுதியாக அடையாளம் காட்ட முடியாது உள்ளது.

பண்டைக் காலத்தில், கற்பாறைகள், செப்பேடுகள், ஓலைகள் முதலியவற்றில் எழுதினார்கள். எழுது சாதனங்களின் தன்மை, அழகுணர்ச்சி முதலிய காரணங்களால் வரிவடிவங்கள் பல விதமான மாற்றம் பெற்றன.

பாறைகளில் எழுதும்போது வளைகோடுகளாக எழுதுவது கடினம், நேர் கோடுகளாக எழுதுவது இலகுவானது.

ஓலையில் எழுதும் போது புள்ளிகள், நேர்க் கோடுகள் இடுவது கடினம். வளை கோடுகளாகவே எழுதமுடியும்.

அழகுக்காக மேல் கோடுகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

தொல்காப்பியர் அனைத்து எழுத்துக்களுக்கும் வரிவடிவம் கொடுக்கவில்லை. குறிப்பாக, மேலே தரப்படும் மூன்று நூற்பாக்களில் உயிர், மெய், உயிர்மெய் ஆகிய எழுத்துக்களுக்குரிய வரிவடிவத்தைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" - தொல். எழுத்து. நூன்மரபு 15

"எகர ஒகரத்து இயற்கையும் அற்றே" - தொல். எழுத்து. நூன்மரபு 16

"புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உரு உரு ஆகி அகரமொடு உயிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவு திரிந்து உயிர்த்தலும்
ஆயீர் இயல உயிர்த்தல் ஆறே." - தொல். எழுத்து. நூன்மரபு 17

தமிழ் உயிர் மெய் எழுத்துக்களில் சில எழுத்துக்கள், **ஒரு ஒலிக்கு இரு வரிவடிவங்கள் இணைந்து வருவதை**, அதாவது கால் (**கா**) பெறல், மேல் விலங்கு (**கி**, **கீ**) பெறல், கீழ் விலங்கு (**கு**, **கூ**) பெறல், கோடு (**கெ**, **கே**) பெறல் என்பவற்றைக் கோடிட்டுக் காட்டத் தவறவில்லை.

இவற்றுடன், பனம்பாரனார் சிறப்புப்பாயிரத்தில் "**மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி**" என்று கூறியிருப்பதையும் இணைத்துப் பார்க்கும்போது "**வரிவடிவத்தில் மயக்கம்**" பற்றிய கருத்து அக்காலத்தில் இருந்ததோ என்னும் ஐயம் எழுகிறது. அதனால் தான் தொல்காப்பியர் "புள்ளி" வைக்கும் எழுத்துக்கள் (மெய் எழுத்துக்கள், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம், மகரக் குறுக்கம்) பற்றிச் சிறப்பாகக் கூறியிருக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்த நூற்பாக்கள் மூலம் அறியக்கிடப்பவை -

அனைத்து **மெய் எழுத்துக்களும் புள்ளி** பெறுகின்றன. எடு; க், ங், ச்.

உயிர் எழுத்துக்களில் "**எகரம்**", "**ஒகரம்**" ஆகிய இரு குறில் எழுத்துக்களும் மெய் எழுத்துக்களைப் போலவே **எழுத்துக்கு மேலே புள்ளி பெறுகின்றன**.

எ், ஒ் - குறில்கள். எ , ஒ - நெடில்கள்.

ஏனைய உயிர்கள், **குறிலுக்கு அருகில் புள்ளி** இட நெடிலாகும். அ. = ஆ

உயிர் மெய் எழுத்துக்களில் (அகரம் ஏறிய மெய் எழுத்துக்கள்) புள்ளி தவிர்க்கப்பட்ட நிலையில், **க**, **ங**, **ச** எனக் குறிலாக எழுதப்பட்டன.

உயிர் மெய் எழுத்துக்களில் "அகரம் ஏறிய மெய் எழுத்துக்கள் தவிர்ந்த" "புள்ளி இல்லா ஏனைய எழுத்துக்கள்", "**ஏனை உயிரொடு உருவு திரிந்து உயிர்க்கும்**" என்கிறார்.

"உருபு திரிந்து உயிர்த்தலாவது,

"**மேலும் கீழும் விலங்கு பெறுதல்**, கி, கீ, மேல் விலங்கு, கு, கூ, கீழ் விலங்கு,

கோடு பெறல் - கெ, கே,

புள்ளி பெறுதல் - கா, ஙா, சா , தொல்காப்பியர் காலத்தில் "புள்ளி" என்று கூறியதை இன்று நாம் "கால்" என்கிறோம்.

புள்ளியும் கோடும் உடன் பெறுதல் - கொ, ஙொ, சொ

என்கிறார் நச்சினார்க்கினியர்.

ஐ (**அகர இகரங்களின் கூட்டு**), **ஔ** (**அகர உகரங்களின் கூட்டு**) ஆகிய இரு கூட்டெழுத்துக்களும் தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்பும் கூட்டொலியாகவே, இன்று நாம் எழுதுவது போல "ஐ" என்றும் "ஔ" என்றுமே எழுதப்பட்டன.

இவை தவிரவும், குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகிய "தனக்கெனத் தனி வடிவம்" அற்ற **குற்றியலிகரமும் குற்றியலுகரமும்** "**புள்ளி பெற்று**" அவற்றின் மாத்திரை அளவைக் குறித்து நிற்கின்றன என்கிறார்.

பொ. ஆ. பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நன்னூலாரும் எகர ஒகரக் குறில் உயிர்கள் புள்ளி பெறும் என்கிறார்.

> *"தொல்லை வடிவின எல்லா எழுத்தும்; ஆண்டு*
> *எய்தும் எகர ஒகரம், மெய் புள்ளி " (நன்னூல்.98)*

பிற்கால வரலாற்றில் வரிவடிவம் - மாற்றங்கள்

தொல்காப்பியர் காலத்திற்கும் ஐரோப்பியர் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் வரிவடிவத்தில் பெரு மாற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள் பெருமளவில் ஏற்படவில்லை. உள்நாட்டு அரசர்கள் ஆட்சி, அதே எழுது சாதனங்கள், கல்வெட்டு, செப்பேடு, ஓலைச் சுவடி முதலியவை காரணமாக வரிவடிவங்களிலும் பெரு மாற்றம் ஏற்படவில்லை.

பண்டைக் காலத்தில் குறிலுக்கு விதிக்கப்பட்ட "புள்ளி இடுதல்", ஓலையில் எழுதும் போது பின்பற்றப்படாமல், குறில், நெடில் ஆகிய இரு வடிவங்களும் ஒரே மாதிரி எழுதப்பட்டன. இந்தக் குழப்பத்தை வீரமாமுனிவர், **அ**, **இ**, **உ என்னும் ஏனைய குறில் உயிர்களுக்கு ஒப்பாக எகர ஒகர குறில்களை**ப் புள்ளியின்றி அமைத்ததுடன் **நெடில் எகரத்திற்குக் "காலும்" நெடில் ஒகரத்திற்குக் கீழ் சுழியும் போடுவதான** மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் தீர்த்து வைத்தார்.

எ, ஒ = குறில். ஏ, ஓ = நெடில்.

தமிழ் வரிவடிவங்கள், கணினிக்கு அறிமுகமாகு முன்னுள்ள இடைக்காலப் பகுதியில் மாற்றம் அதிகமின்றி இருந்ததைக் குறித்துக் கொள்ளுவோம்.

கிரந்த எழுத்துக்களின் சேர்க்கை - இடைக்காலத்தில் தமிழ் இலக்கியத்தில் வடமொழிக் கலப்பு அதிகரித்தது. கிரந்த எழுத்துக்களாகிய **ஜ்**, **ஷ்**, **க்ஷ்**,**ஸ்**, **ஹ்**, **ஸ்ரீ** என்னும் ஆறு எழுத்துகளும் தமிழ் எழுத்துகளாக வழங்கத் தொடங்கின. சிலர் வடமொழிச் சொற்களை, அச்சொற்களின் ஒலிகளின்படியே தமிழில் உச்சரிக்க வேண்டும், எழுதவேண்டும் என்பதற்காக **இந்த ஆறு கிரந்த எழுத்துகளையும் தமிழ் நெடுங்கணக்கோடு சேர்த்துக்** கொண்டனர். **ஜ்**, **ஷ்**, **க்ஷ்**,**ஸ்**, **ஹ்** என்ற ஐந்து கிரந்த எழுத்துக்களுடன் பன்னிரு உயிரையும் இணைக்கும்போது (5*12) 60 கூட்டு வடிவங்களும் அவற்றுடன் மேற்கூறிய ஆறு கிரந்த எழுத்துக்களும் சேர மொத்தத் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை, விரும்பியோ விரும்காமலோ (247+60+6)313 ஆக அதிகரித்திருக்கிறது.

தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் - தற்காலத் தமிழில் **தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம்** முக்கியமானது. தமிழில், **க்**, **ங்**, **ச்**, **ஞ்**, **ட்**, **த்**, **ந்**, **ப்**, **ம்**, **ய்**, **ர்**, **வ்**, **ழ்**' என்னும் பதின்மூன்று மெய் எழுத்துகள் '**ஆ**, **எ**, **ஏ**, **ஐ**, **ஒ**, **ஓ**' என்னும் ஆறு உயிர்களோடு சேர்ந்து உயிர்மெய்களாக வரும்போது அவற்றின் உயிர்மெய் வடிவங்கள் (13*6) 78 ஓர் ஒழுங்கான அமைப்பில் உள்ளன. காட்டாக -

கா, கெ, கே, கை, கொ, கோ.
சா, செ, சே, சை, சொ, சோ.
தா, தெ, தே, தை, தொ, தோ.
பா, பெ, பே, பை, பொ, போ.

மேலே குறிப்பிட்ட 13 எழுத்துக்களைத் தவிர்ந்த, 'ண், ல், ள், ற், ன்' ஆகிய ஐந்து மெய் எழுத்துகள் மேலே குறிப்பிட்ட 'ஆ, எ, ஏ, ஐ, ஒ, ஓ' என்னும் ஆறு உயிர்களோடு சேர்ந்து உயிர்மெய்களாக வரும்போது அவற்றின் வரிவடிவங்கள் (5*6) 30இல் 17 வரிவடிவங்கள் ஓர் ஒழுங்கான அமைப்பில் காணப்பட்டன. ஏனைய 13 வரிவடிவங்களும் ஒழுங்கான அமைப்பில் இல்லை. காட்டாக கீழே தரப்படும் அட்டவணையைப் பார்க்கவும்.[2]

உயிர்கள் / மெய்கள்	ஆ	எ	ஏ	ஐ	ஒ	ஓ
ண்	ணா	-	-	ணை	ணொ	ணோ
ல்	-	-	-	லை	-	-
ள்	-	-	-	ளை	-	-
ற்	று	-	-	-	றொ	றோ
ன்	னா	-	-	னை	னொ	னோ

மேலுள்ள அட்டவணையிலுள்ள 13 எழுத்து வடிவங்களையும், 'கா, கெ, கே, கை, கொ, கோ' போன்ற ஏனைய உயிர்மெய்களின் வரிவடிவ அமைப்பில் எழுதினால் ஓர் **ஒழுங்கு முறையும்**, **எளியமுறையும்** கிடைக்கும் எனக் கருதிய தந்தை பெரியார் அவ்வெழுத்துகளின் வரிவடிவங்களில் சீர்திருத்தம் செய்தார். திருத்தம் வருமாறு -

[2] இல. சுந்தரம், முனைவர், கணினித்தமிழ்.

வ.எண்	பழைய வடிவம்	சீர்திருத்த வடிவம்
1.	ணை	ணா
2.	ணை	ணை
3.	ணை	ணொ
4.	ணை	ணோ
5.	லை	லை
6.	ளை	ளை
7.	ரு	றா
8.	ரு	றொ
9.	ரு	றோ
10.	னை	னா
11.	னை	னை
12.	னை	னொ
13.	னை	னோ

பெரியாரின் இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை பொ. ஆ. பி. 1978 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு சட்டமாக்கியது.

இங்கு நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விடயம், தமிழ் வரிவடிவங்களில் மாற்றம் ஏற்பட்டதே தவிர அவற்றின் ஒலியன்கள், ஒலிக்குறிப்புகளில் மாற்றங்கள் இல்லாத தன்மையாகும். இம் மாற்றம் என் போன்ற பாவனையாளர்களிடையே எவ்வித குழப்பத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எழுத்துக்கள் "நீண்டு வளர்ந்துள்ளமை" புலனாகும். ஆனால், கணினி அமைப்பில் இது சிரமம் அதிகமின்றி எழுத முடிகிறது. தமிழ் எழுத்து முறையில் மாற்றமின்றித் தனி எழுத்துருவ வடிவத்தில் மட்டுமே மாற்றம் ஏற்பட்ட தமிழ் எழுத்துக்களை மின்கணினியில் அமைத்தவர், ஈழத்தில் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பின்னர் கனடாவில் குடியேறியவருமான கலாநிதி. செ. உவெஸ்லி இதயஜீவகருணா என்பவர்.

இ, **ஈ**, **உ**, **ஊ** ஆகிய நான்கு உயிர் எழுத்துக்களும் 18 மெய் எழுத்துக்களுடனும் சேர்ந்து வரக்கூடிய சீரான ஒழுங்கு வரிவடிவம் அமைக்கப்படவில்லை.

தற்கால ஆரம்பப் பகுதியிலிருந்து, தமிழ் எழுத்து வரிவடிவங்களில் ஒழுங்கு முறையை ஏற்படுத்துவதன் மூலம் பெரும் எண்ணிக்கையிலான எழுத்து வரிவடிவங்களைக் கொண்ட தமிழை மிகக் குறைந்த எழுத்து வடிவங்களைக் கொண்டு எழுதலாம் என்ற கருத்து நிலவியது. பலர் முயன்றும் வந்தனர், வருகின்றனர். எழுத்துச் சீர்திருத்தகாரரின் குறிக்கோள் தமிழ் எழுத்துக்களின் அல்லது குறியீடுகளின் எண்ணிக்கையைக் குறைப்பது. ஆகார ஐகார உயிர்மெய்களில் ஒரு சீரான அமைப்பைக் கொண்டு வந்ததன் மூலம் ணா, னா, றா, லை, ளை, னை, ணை ஆகிய வரிவடிவங்களின் பழைய வடிவங்கள் தவிர்க்கப்பட்டு புதிய சீரான வடிவங்கள் நிலைத்துவிட்டன. மீதமுள்ள எழுத்துக்களைச் சீர் திருத்தம் செய்யும்போது தொலைநோக்குடன் செயற்படவேண்டும்.

இயல் 3 வரிவடிவம் - கணினித் தமிழ் - சிக்கல்களும் தீர்வுகளும்,

மின்கணினி மூலம், ஆங்கிலத்திற்கு நிகராக, இயந்திர, மின்வலு நுட்பங்களுடன் அச்சமைப்பைச் செய்யலாம் என்பதை நாம் இன்று அனுபவம் வாயிலாக அறிகிறோம். ஆனால் அத்தகைய நிலையைத் தமிழ் கணினி மூலம் நாம் அனுபவிப்பதற்கு பல தமிழ் ஆர்வலர்களின் அயராத உழைப்பே காரணம். **மிகப் பெரிய எண்ணிக்கையிலான தமிழ் வரிவடிவங்களைக் கணினியில் இணைத்துக் கொள்வதில்**, **அறிஞர்**, **சிக்கல்களையும் சவால்களையும் எதிர்கொண்டு அவற்றை கடந்து தீர்வு கண்டார்கள்**, **தொடர்ந்து காண்கிறார்கள் என்பதை நிறுவுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்**.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் கணினியில் தமிழை உள்ளீடு செய்வதற்கு வசதி கிடையாது. தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகைகள் உருவாக்கப்படவில்லை.முதலில் தமிழை உள்ளீடு செய்யும் வசதிகள்

உருவாக்கப்படவேண்டும். மெல்ல மெல்லத் தமிழ் உரையை ரோமன் எழுத்துக்களில் உள்ளீடு செய்து அதனைத் தமிழ் எழுத்துருக்களில் மாற்றுவதற்கு வசதி செய்யப்பட்டது. தமிழ் எழுத்துக்களுக்கான எழுத்துருக்கள் உருவாக்கப்பட்டன.

அடுத்து. தமிழ் விசைப்பலகைகள் உருவாக்கப்பட்டன. இதனால் நேரடியாகத் தமிழைக் கணினியில் உள்ளீடு செய்யும் வசதி ஏற்பட்டது. வேட், வேட்பெஃபெக்ற், வேட்ஸ்டார், பேஜ்மேக்கர் முதலிய மென்பொருட்களில் தமிழ் பயன்படுத்தும் வாய்ப்பு வளர்ந்தது.

எழுத்துருக்கள் மேசைக் கணினியில் பயன்படுத்தப்பட்டாலும் இணையத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் தான் பிரபல்யமானது. யுனிகோட் (ஒருங்குறி) வருகையினால் இணையத்தில் தமிழ் படிப்பது 2010 ஆம் ஆண்டு முதல் எளிமையாக்கப்பட்டது. இன்று, பேச்சொலியைக் கேட்டுத் தானாகத் தட்டச்சு செய்யும் அளவுக்கு அறிவியல் முன்னேறியிருக்கிறது.

கணினி உருவானபோது தமிழ்க் கணினிக்கான முயற்சிகளும் 1980 களில் தொடங்கிவிட்டது. முதலில் தமிழை இணையத்தில் தொடக்கிவைத்தவர் சிங்கப்பூரைச் சேர்ந்த நா. கோவிந்தசாமி என்பவர்.

மனிதனது அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்களுள் மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பெரும்பாலான துறைகளில் அதிகம் பயன்பாட்டில் உள்ளது கணினியாகும். இன்று, கணினியின் பயன்பாடு அற்ற துறைகளே இல்லை என்று கூறுமளவுக்குக் கணினியின் பயன்பாடு காணப்படுகிறது. கணினியால் ஏற்படும் சாதக பாதகமான விளைவுகள் ஒருபுறம் இருக்க, கணினி, மனித வாழ்க்கையின் அனைத்துத் துறைகளினதும் வேகத்தைத் துரிதப்படுத்தியுள்ளது மறுக்கமுடியாதது.

இன்று, தமிழ் கணினி என்பது நாம் சொன்னதைச் செய்யும் ஒரு கருவியாக அமைந்துவிட்டது. ஆனால், அவ்வாறு செயற்படுவதற்கு தமிழ் அறிஞர்கள் எத்துணை தூரம் கடும் பயணம் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்றி அறிதலோடு நினைவில் கொள்ளவேண்டும்.

கணினியின் பிரதான தொழிற்பாடுகளைச் செயல்படுத்தும், **மையச் செயலகம்** (CPU), **உள்ளீட்டகம்** (Input Unit), **வெளியீட்டகம்** (Output Unit) எனக் கணினி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது. கணினியின் செயற்பாடுகளுக்குத் தளமாக விளங்கும் பாகங்கள் ஒவ்வொன்றும் "**வன்பொருள்**" எனப்படும். முதன்மை வன்பொருட்கள் இணைக்கப்பட்டது தான் கணினி. வன்பொருளை (Hardware) இயக்கவும் மென்பொருட்களை (OS) அடையாளம் காணவும் அவற்றிற்குக் கட்டளை இடவும் இணைக்கும் மென்பொருளாக **இயக்கி மென்பொருட்கள்** உள்ளன. இவற்றுடன் நாம் செய்யவேண்டிய செயற்பாடுகளை எளிமையாகவும் விரைவாகவும் துல்லியமாகவும் செய்துதரும் வகையில் அவரவர் தேவைக்கேற்ப துறைசார்ந்து உருவாக்கப்படும் மென்பொருட்கள் **பயன்பாட்டு மென்பொருட்கள்** ஆகும். கணினியின் பாதுகாப்பிற்காகச் செயற்படும் **பயனீட்டு மென்பொருட்கள்** (Utility Software), இயக்க முறைமை மென்பொருட்களிலேயே கூடுதல் வசதியாக உள்ளிணைக்கப்படுகின்றன.

அதிமுக்கியமான செயற்பாடுகள் பற்றிய சிறு விளக்கத்துடன் இந்த ஆய்வுக்குள் செல்லலாம்.

கணினியில் தமிழைப் பயன்படுத்த உதவும் விசைப்பலகை பற்றியும் ஆஸ்கி, **டேம்**, **யுனிகோடு போன்ற குறியேற்றங்கள் பற்றியும் எழுத்துருக்கள் பற்றியும் அவற்றில் உள்ள குறைகள்** பற்றியும் ஆராயலாம்.

கணினித் தமிழைப் புரிந்து கொள்வதற்கு அடிப்படையில் மூன்று தொழில் நுட்பங்களின் பயன்பாட்டை அறிந்து கொள்ளவேண்டும்.[3]

விசைப்பலகை ((Keyboard)

[3] [3] இல. சுந்தரம், முனைவர், கணினித்தமிழ், பக்.106

குறியேற்றம் (Encoding)
எழுத்துருக்கள் (Fonts)

இவை மூன்றும் இணைந்து செயற்பட்டால் தான் நாம் ஒரு மொழியைத் திரையில் பார்க்கலாம்.

விசைப்பலகை - இது ஓர்உள்ளீட்டுக் கருவி. இதில் விசைப் பொத்தான்கள் உள. இந்த விசைப் பொத்தான்களை,

எழுத்து விசை (Alpha Key),
எண் விசை (Numeric Key),
செயற்பாட்டு விசை (Functional Key),
சிறப்பு விசை (Special Key),
கட்டுப்பாட்டு விசை (Control Key),
அம்புக்குறி விசை (Arrow Key),
இடைவெளி விசை (Space Bar)

என்று வகைப்படுத்துவர்.

குறியேற்றம் ((Encoding)

ஒரு மொழியின் எழுத்துக்களைக் கணினிக்கு ஏற்றமாதிரி மாற்றுவதை எழுத்துக் **குறியேற்றம்** (chracter encoding) என்கிறோம். **ஒவ்வொரு எழுத்தையும் அறிந்து கொள்வதற்குரிய எண்கள் கணினியில் அமைக்கப்படுகின்றன.** கணினி, 0, 1 ஆகிய இரும எண்களை மட்டுமே புரிந்து கொள்ளும். கணினி ஒரு மொழியின் எழுத்துக்களைப்புரிந்து கொள்ளவேண்டுமானால் அந்த மொழி எழுத்துக்களை 0, 1 ஆகிய இரும எண்களைக் கொண்டு இரும எண்மான மதிப்புக் கொடுக்கவேண்டும்.

கணினி கண்டுபிடிக்கப்பட்டபோது, முதலில் ஆங்கில எழுத்துக்களுக்கும் அரபு எண்களுக்கும் சில கட்டளைக் குறியீடுகளையும் கணினி புரிந்து கொள்ளும் வகையில் 128 இடங்களைக் கொண்ட ASCII (American Standard Code for Information Interchange) என்னும் குறியீட்டு அமைப்பில் இரும எண்களின் மதிப்புக்களைக் கொடுத்தனர். இவ்வாறு எழுத்துக்களுக்கு இரும எண்மான மதிப்பு வழங்குவது குறியேற்றம் எனப்படும். எந்த விசையை அழுத்தினால் எந்த எழுத்து வரவேண்டும் என்று தீர்மானிப்பது குறியேற்றமாகும்.

ஒரு மொழியைக் கணினி மொழியாக்குவதற்கு அம் மொழியிலுள்ள அத்தனை எழுத்துக்களுக்கும் ஒவ்வொரு எண்ணை உரியதாக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு எழுத்துக்கு எண்ணை உரியதாக்கும் முறை குறியேற்றம் அல்லது குறியீட்டு முறை (Characted Encoding) எனப்படும்.

ஒவ்வொரு எழுத்துக்கும் எண்கள் கணினியில் இருக்கின்றன. இவ் **எண்கள்** 0, 1 **என்னும் இரு எண்களால் உருவாக்கப்பட்டிருக்கும். இந்த இரண்டு எண்களும்** on, off ஆகிய இரு செயல்களை அடிப்படையாகக் கொண்டவை. இந்த எண்களைத் திரையில் எழுத்துக்களாகக் காண்பிப்பது எழுத்துருவாகும் (Font). இம் முறையில் விசைப்பலகையில் உள்ள எல்லா விசைகளுக்குமான மதிப்புகளும் குடியேற்றம் மூலம் கணினிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. விசைப்பலகை மூலம் தட்டச்சுச் செய்யும்போது அந்த விசைக்கான மதிப்பு உள்ளீடாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒரு எழுத்துருவில் (Font) அந்த எண்ணுக்குரிய எழுத்து அல்லது வரிவடிவம் திரையில் வெளியிடப்படும்.

ஆஸ்கி குறியீடு 7 பிட் அமைப்பினைக் கொண்டிருந்தது. இந்த அமைப்பில் மொத்தம் 128 இடங்கள் இருந்தன. இந்த 128 இடங்களில் 32 இடங்கள் கணினி இயக்கக் குறுங்கட்டளைகளுக்காக ஒதுக்கப்பட்டன. மிகுதி இடங்களில் ஆங்கிலம் பெரிய எழுக்குக்களுக்கு (Capital letters) 26 இடங்களையும் சிறிய எழுத்துக்களுக்கு (Small letters) 26 இடங்களையும் எண்களுக்கு 10 இடங்களையும்மீதம் இருந்த இடங்களைப் பிற குறியீடுகளுக்கும் வழங்கி 128 இடங்களுள் ஆங்கில மொழியின் கணினிச்

செயற்பாட்டிற்குத் தேவையான அனைத்துக் குறியீடுகளையும் அடக்கி ஆங்கிலத்தைக் கணினியில் பயன்படுத்தினர்.

இந்தக் குறியீட்டில் தமிழைப் பயன்படுத்தும் முயற்சியில் தமிழை ஒலிபெயர்ப்புச் செய்து ரோமன் வடிவில் பயன்படுத்தினர். இதனால் தமிழ் ஆங்கில எழுத்துக்களாலேயே காணமுடிந்தது.

இதன் பின் ஆஸ்கியின் 8 பிட் குறியேற்றத்தில் 256 இடங்கள் கிடைத்தன.

தமிழ். ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் ஒரே எழுத்துருவைப் பயன்படுத்தும் வகையில் 128 இடங்களில் தமிழ் எழுத்துக்களையும் 128 இடங்களில் ஆங்கில எழுத்துக்களையும் இட்டு உருவாக்கப்பட்டது இரு மொழிக் குறியீடு (Tamil Vilingual - TAB) ஆகும். இதன் மூலம் தமிழும் ஆங்கிலமும் கலந்து தட்டச்சு செய்யும்போது எழுத்துருக்களைத் தனித்தனியாக எழுத்துரு மாற்றவேண்டிய நிலை மாறும்.

ஒருங்குறியில் தமிழுக்கு ஒதுக்கப்பட்ட 128 இடங்களில் 50 இடங்கள் காலியாக உள்ளன. இதில் உயிர் எழுத்துக்கள் 12, அகரம் ஏறிய மெய்யெழுத்துக்கள் 18 ஆகிய 30 எழுத்துக்கள் உள. இவற்றைக் கொண்டு உயிர்மெய் எழுத்துக்களை உருவாக்கவேண்டும். தமிழில் உள்ள எல்லா எழுத்துக்களுக்கும் இடங்கள் இல்லாததால் இரண்டு எழுத்துக்களைக் கொண்டு மூன்றாம் எழுத்தை உருவாக்கவேண்டி உள்ளது. இதற்குத்ஹதான் இடை ஊக்கிகள் உள்ளன. இதற்கு இடை ஊக்கி மென்பொருட்கள் தேவை. இதனை, Keyboard Driver , Tamil Typing Software Tamil Writers என்றும் கூறுவர்.

கணினி உலகம் முழுவதும் ஒரே குறியேற்றம் என்ற பயன்பாட்டின் அடிப்படையில் இயங்க உருவான ஒருங்குறி (Unicode) முறையைப் பயன்படுத்தி இணையம், கணினி, பதிப்பு என்ற அனைத்துக் கணினித் துறைகளும் யுனிகோடில் இயங்கத் தொடங்கிவிட்டன.இணையத்தளம், மின்னிதழ்கள் முதலியவற்றில் இன்று ஒருங்குறியின் பயன்பாடு நாளும் பெருகிக்கொண்டே வருகிறது.

ஆனால், அச்சு ஊடகங்களில் இன்னமும் பழைய ஆஸ்கி, டேம் முறையிலான குறியேற்றங்களில் தட்டச்சு செய்து பயன்படுத்தும் மென்பொருட்களே பெரிதும் பயன்பாட்டில் உள்ளன.

ஆங்கிலத்தைப் போலத் தமிழையும் எவ்வித இடை ஊக்கி மென்பொருட்களின் துணையுமின்றி நேரடியாத் தட்டச்சு செய்து பயன்படுத்துவதற்கு ஒருங்குறியில் தமிழ் எழுத்துக்கள் அனைத்திற்கும் இடம் வழங்கப்படவில்லை. இதில் தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் இடம் வழங்குவதற்குத் தமிழ் அனைத்து எழுத்துருக் குறியேற்றமான TACE குறியேற்றத்தில் நாம் அனைவரும் பயன்படுத்தினால் பயன்பாட்டின் அடிப்படையில் ஒருங்குறியில் அனைத்து எழுத்துக்களுக்கும் இடம் கிடைக்க வழிவகை ஏற்படும்.[4]

தமிழில் குறியீட்டு முறையிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள்

தமிழில் உள்ள 247 எழுத்துக்களில் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு ஒருங்குறி குறியீடு அல்லது இடம் ஒதுக்கப்படாமல், 12 **உயிரெழுத்துக்கள்**, 18 **அகரமேறிய உயிர்மெய் எழுத்துக்கள் மற்றும் ஒரு ஆயுத எழுத்து ஆகியவை மட்டுக்குமே இடம் கொடுக்கப்பட்டுள்ளது** (https://en.wikipedia.org/wiki/Tamil_(Unicode_block). **மேலும்**, 5 **கிரந்த அகரமேறிய உயிர்மெய் எழுத்துக்களுக்கும் ஒருங்குறியின் தமிழ் பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.** இது **சில சிக்கல்களை** ஏற்படுத்தியது. எ.கா **தமிழ் எழுத்துக்களை சேமிக்க**, **கூடிய சேமிப்பகம் தேவை.** இந்திய மொழிகளுக்கு பொதுவாகத் தரப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டே தமிழ் எழுத்துக்களை முழுமையாக உருவாக்க முடியும். இது கணினி நிரல்கள் கொண்டு பின்புலத்தில் தானாக நடக்கும் செயற்பாடுதான். **தமிழில் கிரந்த**

[4]இல. சுந்தரம், முனைவர், கணினித்தமிழ், பக்.118.

எழுத்துக்கள் சேர்க்கப்பட்டது தொடர்பாகவும் சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. சில அறிஞர்கள்/நிரலர்கள் UTF-8 குறியேற்ற முறை சரியானதே என்று, குறிப்பாக சில குறிப்பான நிரலாக்கப் பணிகளுக்கு அது சிறப்பாக இருப்பதாகக் கூறுகிறார்கள்.

முடிவுரை

தமிழ் எழுத்துக்களின் பண்டைய வடிவங்கள், அவற்றின் பிற்கால மாறுதல்கள் முதலியவற்றைப் பற்றி விரிவாகக் கண்டோம். **தொகுத்துக் காண்கையில். உயிர் எழுத்துக்களில் இ**, **ஈ**, **உ**, **ஊ** ஆகிய நான்கு உயிர் எழுத்துக்களுக்கும் 18 மெய் எழுத்துக்களுடனும் சேர்ந்து வரக்கூடிய சீரான ஒழுங்கு வரிவடிவம் அமைக்கப்படவில்லை. இதன் விளைவாகக் கணனியில் குறி இடப்படும் எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றன.

எழுத்துச் சீர்திருத்தத்தில் பெரும்பாலானவர்கள், தற்போதய எழுத்துமுறையையே தக்கவைத்துக் கொண்டு அவற்றில் ஒரு சீரான அமைப்பை உருவாக்க முயன்றனர். இந்த முறையில் பெரு மாற்றம் பெறும் வரிவடிவங்கள் உகர ஊகார மெய்களாகும். அகரத்தை அடிப்படையாகக் கொண்டு மற்ற உயிர்களையுமே உயிர்க்குறிகள் கொண்டு எழுதலாம் என்கின்றனர்.

மொத்தத்தில் சீர்திருத்தவாதிகளின் குறிக்கோள் தமிழ் எழுத்துக்கள் அல்லது குறியீடுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதாகும். ஆகார ஐகார உயிர்மெய்களின் குறியீடுகளில் மாற்றம் கொண்டு வந்ததன் மூலம் பழைய உருக்கள் தவிர்க்கப்பட்டு புதிய ஒரு சீரான அமைப்பு முறை உருவாகி, இன்று வழக்கத்திலும் குறையின்றி வந்துவிட்டது.

தற்போது உகர ஊகார உயிர்மெய்கள் தான் அடுத்து கவனத்தில் உள்ளவை.

உ, **ஊ** - **உகர வரிசையில் மூன்று குறியீடுகள் உள**.

கால் - எழுத்தின் கீழ் கோடிட்டு உகரம் ஏற்றல். பு, சு, வு, யு, - 5 எழுத்துக்கள்

கீழ் வளைவு - எழுத்தின் கீழ் அரை வளைவு கொடுத்து உகரம் ஏற்றல் - கு, டு. ரு. ளு. ழு, மு - 6 எழுத்துக்கள் இந்த வடிவில்.

காலும் கீழ் வளைவுச் சுளியும்இணைந்து உகரம் பெறல் - நு, லு, ணு, ஞ று, னு, து, - 7 குறியீடுகள்.

இவை மூன்று வித்தியாசமான வடிவங்களைக் கொண்டதாகக் காணப்பட்டாலும் இவை அனைத்தும் தனி எழுத்துக்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மிகவும் அதிகமாகப் பயன்படும் எழுத்து வடிவங்கள் பெரிதாக இருப்பின் கால ஓட்டத்தில் அவை குறுகி எளிமையான சிறிய வடிவைப் பெறுவது இயல்பு, இது Law of minimum Effort என்பர்.

தமிழ் எழுத்துருக்களைக் கணினியில் குறியேற்றம் செய்வதில் பல சிக்கல்கள். தமிழ் எழுத்துருக்களுக்கான குறியேற்றத்தில் தரப்படுத்தல் இல்லாமல் இருந்தது. ஒரு குறிப்பிட்ட தமிழ் மென்பொருள் மூலம் தட்டச்சுச் செய்த ஒரு தமிழ் ஆவணத்தை மற்றொரு தமிழ் மென்பொருள் கொண்டு வாசிக்கவோ, பதிப்பிக்கவோ இயலாத ஒரு நிலை நீடித்தது. இதற்கு அஸ்கி (ASCII) என்ற குறியேற்ற முறையும் ஒரு தடையாக அமைந்தது. தமிழ் விசைப்பலகைகளும் தரப்படுத்தப்படவில்லை.[5] சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் கணினியில் தமிழை உள்ளீடு செய்வதறகு வசதி கிடையாது. தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகைகள் உருவாக்கப்படவில்லை.முதலில் தமிழை உள்ளீடு செய்யும் வசதிகள் உருவாக்கப்படவேண்டும். மெல்ல மெல்லத் தமிழ் உரையை ரோமன் எழுத்துக்களில் உள்ளீடு செய்து

[5] ந. தெய்வ சுந்தரம், தமிழில் கணினி வளர்ச்சி

அதனைத் தமிழ் எழுத்துருக்களில் மாற்றுவதற்கு வசதி செய்யப்பட்டது. தமிழ் எழுத்துக்களுக்கான எழுத்துருக்கள் உருவாக்கப்பட்டன.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறுக்குதல், சீராக அமைத்தல் மூலம் தமிழ் எழுத்து முறையைக் கற்பது எளிதாகிறது என்பது சிலர் வாதம். ஆனால் கற்பதற்கு இலகுவாகலாம், பயன்பாட்டுக்கு இலகுவாக அமையுமா என்பது ஆய்வுக்கு உரியது.

தொ.மா.க. 204

தொல்காப்பியத்தில் இலக்கியக் கோட்பாட்டுருவாக்கம்

தருமராசா அஜந்தகுமார்
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
tajanthakumar@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியத்தில் இருந்து உருவாக்கப்பட்டதே இலக்கணம் ஆகும். அவ்வாறு உருவாக்கப்பட்ட இலக்கணநூல்களில் தலையாயதான தொல்காப்பியத்தில் இலக்கியக்கோட்பாடு எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது என்பதனை ஆராய்வதாகவே இந்த ஆய்வு அமைகின்றது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் இலக்கியக்கோட்பாட்டைத் தனக்குள்ளே கொண்டமைந்த பகுதியாகும். இலக்கியம் ஆக்கப்படும் முறையையும் அதன் பின்னணியையும் தெளிவுபடுத்தி அதனை நுகர்கின்ற - சுவைக்கின்ற விதத்தையும் தொல்காப்பியர் தொகுத்தும் வகுத்தும் உரைத்துள்ளார். செய்யுளியலில் இலக்கியக்கொள்கையில் அதிகம் சிலாகிக்கப்படும் அவயவிக்கொள்கையைக் காணமுடியும். செய்யுள் ஆக்கப்படும் முறையையும் விதிமுறைகளையும் சுட்டிப்பாகவும் - விளக்கமாகவும் தொல்காப்பியர் எடுத்துரைக்கின்றார். அவை ஆக்கப்படும் பின்னணியையே அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல் என்பவற்றில் பேசுகின்றார். உவமவியல் இலக்கியத்தின் எடுத்துரைப்புமுறை பற்றியது ஆகும் . அதனை நுகரும் - இரசிக்கும்

கலையினையும் உள்ளடக்கத்தினைச் செழுமையூட்டும் உணர்ச்சியின் பயன்பாட்டையும் மெய்ப்பாடு என்ற இயலில் எடுத்துரைக்கின்றார். மரபியலில் ஆக்கப்படும் நூல்கள், அவற்றின் வகைகள், வழிநூல்களின் வகைகள், நூல்களின் குற்றங்கள், நூல்களின் உத்திகள் என பனுவலாக்கம் பற்றிய தெளிவூட்டலை மேற்கொள்கின்றார். இங்கு இலக்கண நூல் ஒன்று இலக்கியத்தை உருவாக்கும் முறைபற்றியும் அதனைச் சுவைக்கின்ற வகை பற்றியும் ஆழ்ந்து நோக்கிய விதம் கவனத்திற்குரியது. இலக்கணம் உரைத்தல், இலக்கியக் கூறுகளை அடையாளம் காட்டல், படைப்பின் கருப்பொருள், படைப்பின் பின்னணி, படைப்பினை ஆக்கும் முறைகளும் வகைகளும், அதனை செழுமையூட்டுதலும் நுகரவைத்தலுமாய பயன்பாட்டுமுறைமை என்று இன்றைய நவீன திறனாய்வு வலியுறுத்தும் விடயங்களை பன்னெடுங்காலத்திற்கு முன்பே தொல்காப்பியம் விளக்கியுரைத்துள்ளது. தொல்காப்பியரிடம் எவ்வகையான இலக்கியக்கொள்கைகள் காணப்பட்டிருக்கின்றன என்பதனை வகைபிரித்து விளக்குவதும் அதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துவதுமே இந்த ஆய்வின் நோக்கமாகும். மேலும் இன்றைய நவீன நோக்குநிலையில் திறனாய்வுச்சிந்தனைகளுடன் தொல்காப்பியம் எவ்வாறு ஒத்தும் வேறுபட்டும் இயங்குகின்றது என்பதனையும் இன்றைய அதன் நிலைத்தன்மை பற்றியும் தெளிவுபடுத்தவேண்டியது அவசியமாகும். விவரண ஆய்வும் ஒப்பியல் ஆய்வும் இங்கு பயன்படுத்தப்படுகின்றன. இதன்வழி சங்க இலக்கியங்களின் வழி உருவாக்கப்பட்ட தொல்காப்பியரின் இலக்கியக்கோட்பாடு எவ்வாறு சங்க இலக்கிய மரபை வெளிப்படுத்திக்கொண்டு - புதிய காலத்திற்கான இலக்கிய ஆக்கம் மற்றும் நுகர்தலுக்கான ஒரு வெளியாகவும் தன்னைத் தகவமைத்துள்ளது என்பதனை நோக்குவதே இன்றைய காலத்திற்குப் பயனுள்ளது ஆகும்.

திறவுச்சொற்கள்: இலக்கியக்கோட்பாடு, சுவைத்தல், திறனாய்வு, பொருளதிகாரம், நிலைத்தன்மை

அறிமுகம்

தொன்மையைக் காத்து இயம்புவதைத் தனது நோக்காகக் கொண்டு நூன்மரபு முதல் மரபியல் வரையான 27 இயல்களில் 'முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி' உருவாக்கப்பெற்றது தொல்காப்பியம் ஆகும். எழுத்ததிகாரம் 483 சூத்திரங்களையும் சொல்லதிகாரம் 463 சூத்திரங்களையும் பொருளதிகாரம் 656 சூத்திரங்களையும் கொண்டது. தொல்காப்பியரின் நோக்கமே பொருளதிகாரம்தான். சூத்திரங்களின் எண்ணிக்கை மாத்திரமன்றி அவரின் ஆக்கமுறைமையும் வெளிப்பாடும் அதனைத் தெளிவாக்குகின்றது. 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' போன்ற நூல்களின் தோற்றம் வாழ்க்கைக்கான இலக்கணமாக தொல்காப்பியத்தை நிலைநிறுத்தி வருகின்றது. அதன் வளர்ச்சியாகவே தொல்காப்பியத்தை இனவரைவியல் நோக்கில் ஆராயும் போக்கு இன்று இன்னும் ஆழமும் விரிவும் பெற்றுவருகின்றது, ஆயினும் வாழ்க்கைக்கான இலக்கியம் என்பதைத் தாண்டி 'இலக்கிய ஆக்கம்' அல்லது கவிதையாக்கம் ஒன்றிற்கான அடிப்படைகளை உரையாடும் கோட்பாட்டு நூலாக அமைவுபெறுவதைக் காணலாம். இந்தக் கோட்பாட்டு நூலின் உயிர்நாடியாக அமைவது பொருளதிகாரம் ஆகும். பொருளதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியத்தில் இலக்கியக் கோட்பாட்டுருவாக்கம் நிகழ்ந்துள்ள முறைமையை வெளிப்படுத்துவதாக இந்த ஆய்வு அமைகின்றது.

இலக்கியமும் இலக்கியக்கோட்பாடும்

இலக்கிய உருவாக்கம் பற்றிய அறிவினைப் புகட்டுவதாகவும் இலக்கிய ஆக்கம் ஒன்றினை விமர்சிக்க கற்றுத்தருவதாகவும் இலக்கியக் கோட்பாடு அமையலாம். உருவம், உள்ளடக்கம் பற்றிய பிரக்ஞையின் வெளிப்பாடே இலக்கியக்கோட்பாடு ஆகும். கொள்ளப்படுவதாகிய கொள்கையின் இறுகிய விதிமுறைத் தோற்றமே கோட்பாடு ஆகும். தமிழர்களின் சிந்தனை மரபையும் இலக்கிய மரபையும் ஒருங்கு வெளிப்படுத்தும் இலக்கியக் கோட்பாடு என்னும் போது தொல்காப்பியத்திடமே நாம் வந்துசேரவேண்டியுள்ளது. இலக்கிய அமைப்பினைப் பற்றிய ஆய்வினை விஞ்ஞானபூர்வமானதாக - தர்க்கபூர்வமானதாக தொடங்கிவைத்து இலக்கியவியல் என்ற துறைக்கு வித்திட்டவர் தொல்காப்பியர் ஆவார். தொல்காப்பியர் 'முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி பாடலுள் பயின்றவை நாடி' உருவாக்கிய கோட்பாடுகள் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன.. மரபுநிலை திரியா மாட்சியவாகிய கொள்கை கொண்ட தொல்காப்பியர் தனதும் தனக்கும் முந்திய காலத்திற்குமான கொள்கைகளைக் கோட்பாடாக்கியுள்ளார். இலக்கண மரபுகளை விதி இலக்கணமாக வகுக்காமல் விளக்க இலக்கணமாக வகுத்துள்ள தொல்காப்பியரின் அணுகுமுறையானது அறிவியல்பூர்வமானதாகும். மொழி நூலாகவோ வாழ்க்கை நூலாகவோ அதனைப் பார்ப்பதை விட இலக்கியகோட்பாட்டுநூலாகப் பார்ப்பதே சிறந்தது என்ற கருத்து அறிஞர்களிடம் காணப்படுகின்றது.

கோட்பாட்டாக்க முறைமை என்பது இந்திய அல்லது தமிழ் மரபில் இல்லாதது என்று பொருள்படுத்திக்கொள்ளக் கூடாது. கோட்பாட்டு முறைமை வழி இலக்கியங்களை ஆராயும் அறிவுமுறை தமிழ் இலக்கிய மரபில் தொன்மையானது. தொல்காப்பியமரபு இத்தகைய மரபே ஆகும். தொன்மையான திணைக்கவிதை மரபைத் தொல்காப்பியம் புதியதாக்கி அன்பின் ஐந்திணை மரபாகக் கோட்பாட்டாக்கம் செய்கின்றது.(துரை.சீனிச்சாமி, தொல்காப்பியமும் இலக்கியவியலும்)

தொல்காப்பியம் பொருளதிகாரம் பலர் நினைத்தது போல் அல்லது சிலர் நினைப்பது போல் ஒரு வாழ்வியல் நூலன்று. வளம் கொழிக்கும் ஒரு பாவியல் நூலாகும்.(ச.அகத்தியலிங்கம்)

புலவர்க்குரிய பொருட்பகுதியை மூன்றாம் படலமாக வகுத்தார். (சிவலிங்கனார், அகத்திணையியல், ப 41)

இந்தவகையில் தொல்காப்பியர் இன்றைய இலக்கிய விமர்சனங்களில் மேனாட்டு இலக்கிய விமர்சனங்களில் காணப்படும் பல்வேறு உண்மைகளை, செய்திகளை ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்லுவதைத் தெளிவாகக் காணலாம். அத்தோடு உலகளாவிய இலக்கியக்கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் அளவிற்கு

தொல்காப்பியம் ஆழ்ந்த அகன்ற நுண்மைப் பொருள் மிக்கதாக அமைக்கப்பட்டுள்ளதையும் நோக்கமுடிகின்றது.

இலக்கிய ஆக்கத்திற்குத் துணைநிற்கும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய அனைத்தையும் ஒட்டுமொத்தமாக இணைத்து ஆராய்ந்திருக்கும் தொல்காப்பியரின் பார்வையானது மொழியை முதன்மைப்படுத்தி இலக்கியத்தை ஆராய்கின்ற அமைப்பியல் திறனாய்வாளருள் ஒருவரான ரோலன் பார்த்தின் திறனாய்வுத் தன்மையோடு ஒத்திருக்கிறது (தமிழவன், ஸ்ட்ரக்சுரலிசம், ப 12 - 13)

செய்யுள் உறுப்புகளாகத் தொல்காப்பியர் கூறியுள்ளவை அரிஸ்டாட்டிலின் உறுப்பியல்கோட்பாட்டோடு ஒத்து எண்ணத்தக்கவை எனக் கருதுகிறார் தெ.பொ.மீ *(The Theory of Poetry in Tolkappiyam, Prof T.P.M sixty - first birthday commemoration volume 1961, P.96)*

திவேதி என்ற வடமொழி ஆய்வாளர் அலங்காரம், தொனி, ரீதி, லட்சணம், குணம், தோஷம் ஆகியவைகளை வடமொழியின் திறனாய்வுக் கோட்பாடுகளாகக் கொள்வது போல தொல்காப்பியர் கூறியுள்ள மெய்ப்பாடு, உவமை, உள்ளுறை, வனப்பு, வண்ணம், மரபு ஆகியவைகளைத் தமிழ்த் திறனாய்வுக் கோட்பாடுகளாகக் கொள்ளலாம், (சி.கனகசபாபதி, தமிழ் இலக்கிய விமர்சகர்கள், சுவடு (தொ), புதுக்கோட்டை, 1979, ப 45)

தொல்காப்பியரின் இலக்கியக்கோட்பாட்டுருவாக்க வகைமைகள்

தொல்காப்பியப் பொருளதிகாரம் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் இயலான அகத்திணையியல் அகப்பாடல் பற்றிய பொதுக்கொள்கையை வழங்குகின்றது. புறப்பாடல்கள் பற்றிய கொள்கையைப் புறத்திணையியல் வழங்குகின்றது. திருமணத்திற்கு முன்னும் பின்னுமான தளங்களை களவியல், கற்பியல் ஆகியன பேசுகின்றன. பொருளியல் அகப்பாடலில் பயன்பாடும் சில இலக்கிய உத்திகளையும் சிறப்புக்கூற்று மரபுகளையும் மையப்படுத்துகின்றது. மெய்ப்பாடு மெய்ப்பாடுகளையும் உவமையியல் உவமைகளையும் விளக்குகின்றது. செய்யுளியல் கவிதையின் அமைப்பு, வகைமைக் கோட்பாடு யாப்புக்கோட்பாடு போன்றவற்றை அளிக்கின்றது. மரபியல் சொல், வருணனை போன்றவற்றைக் குறித்த மரபுகளை வழங்குகின்றது.

இலக்கியத்தைப் படைப்போன், பயன்படுத்துவோர் ஆகிய ஆகிய இருசாராருக்கும் படைக்கும் செயற்பாங்கு படைக்கப்பட்ட பொருள் என்பன குறித்துப் பொதுவாக விளங்கும் கருத்துக்கூறுகளே இலக்கியக்கொள்கை ஆகும். அதாவது இலக்கியத்தின் தோற்றம், இயல்பு, பண்பு, பயன் ஆகியன பற்றிக் கருத்துவிளக்க வடிவத்தில் அமைந்ததே இலக்கியக்கொள்கை ஆகும். இலக்கியக்கொள்கையே குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் குறிப்பிட்ட வகை இலக்கியம் குறிப்பிட்ட தன்மைகளுடன் தோற்றுவதற்கு ஏதுவாயுள்ளது. இக்கொள்கையானது ஒவ்வொரு காலத்திலுள்ள பொருளாதார சமூக அரசியல் சூழ்நிலைகளால் பெருமளவில் உருவாக்கப்படுகின்றன.

தொல்காப்பியரின் இலக்கியக்கோட்பாட்டுருவாக்க சிந்தனையைப' பின்வரும் அம்சங்கள் மூலமாகப் புரிந்துகொள்ளலாம்.

1. இலக்கியம் பற்றிய கருத்து
2. இலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றிய கருத்து
3. இலக்கியத்தின் உருவம் பற்றிய கருத்து
4. இலக்கியத்தை நுகர்தலும் திறனாய்தலும்

இலக்கியம் - இலக்கிய ஆக்கம் பற்றிய கருத்துநிலை

இலக்கியம் என்பது தன்னுடைய தன்னை - சமூகத்தின் உயிர்த்துடிப்பை வெளிப்படுத்தும் ஒரு மொழிவழிக்கலை ஆகும். அந்த இலக்கியத்தை ஆக்குவது தொடர்பான கோட்பாட்டு சிந்தனைகளைத்

தொல்காப்பியப் பொருளதிகாரம் எடுத்துரைத்துநிற்கின்றது, இலக்கிய ஆக்கத்தைப் பொறுத்தவரையில் 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்துச் சொல்லும் பொருளும் நாடி முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோனே போக்கறுப் பனுவல்' என்ற அணுகுமுறை மிக முக்கியமானது. முறைமை நிலைப்பட்ட தனது சிந்தனையின் வழியாகக் கண்டுகொண்டவற்றைத் தொகுத்துத் தருகின்றார். தொகுத்துத் தருவனவற்றின் ஊடாகவே தமிழின் மொழிநிலை, இலக்கிய நிலை, அசைவியக்க இயல்புகள் தெரியப்படுத்தப்படுகின்றன என்பதாகும்.

செய்யுளியலில் மாத்திரமன்றி சொல்லதிகாரம் எச்சவியலில் செய்யுள் ஈட்டச்சொற்கள் மற்றும் மொழி அல்லது பொருள் புணர் இயல்பு பற்றிக் கூறப்பட்டுள்ளமை. செய்யுளை ஆக்குதற்குரிய செய்யுள்களில் கொண்டு வந்து ஆளுதற்குரிய சொற்களாக ஈட்டச்சொற்கள் என்பன குறிக்கப்பெற்றுள்ளன. மொழி ஆளுகை நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டால் போதும் அதன் வழி செய்யுளாக்கம் இயல்பாக நிகழும் என்ற ஆக்கக்கருத்து இங்கே உள்ளடங்கியுள்ளது.

செய்யுளியலானது இலக்கிய ஆக்கம் பற்றிய கருத்தினைத் தெளிவுபடுத்துகின்றது. செய்யுள் எவ்வாறு ஆக்கப்படுகின்றது என்பது பற்றித் தொல்காப்பியம் மிக விரிவாகப் பேசுகின்றது. செய்யுளியல் முதலாவது சூத்திரம் மிக நுண்ணிதான சிறந்த கட்டமைப்புள்ள ஒரு சூத்திரமாகும். அந்தச் சூத்திரத்தில் ஒன்பது அலகுகள் உள்ளன. இவற்றினை அடுத்து அந்தப் பாடலுக்குப் பொருளாக அமைகின்ற திணை, கைகோள், கூற்று என்பன முக்கியமாகின்றன. திணை சூழலியற் பின்புலம், கைகோள் கைக்கொள்ளப்பட்டுள்ள விடயமாகும். கூற்று என்பது பாத்திரம் கூறுகின்ற கிளவி. தொல்காப்பியர் செய்யுளில் அழகியல் நிலைப்பாடுகள் என எட்டினைக் கூறுவார். அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழை என்பனவே அவையாகும். அம்மை, அழகு என்பன ஓசையொழுங்கு நிலைப்பட்டவை. தொன்மை விருந்து என்பன பொருள் ஒழுங்கு நிலைப்பட்டவை. செய்யுளியல் என்னும் இயலானது ஒரு செய்யுளானது எத்தனை அம்சங்களைக் கொண்டிருகும் என்பதனை மிக ஆழமாகக் காட்டுவதாகும். செய்யுளில் வந்து உறுவதே உறுப்பு என்கின்றார் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

செய்யுளியல் பகுதியில் 34 செய்யுள் உறுப்புகள் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வுறுப்புகள் கவிதை மொழி பற்றியும் திணையை உணர்ந்தறியும் கூறுகள் பற்றியும் விளக்குகின்றன. இவற்றில் பாட்டின் அடி அமைக்கும் முறை, அடிகள் பாவாகும் முறை, பாக்கள் இலக்கிய வகையாகும் முறை, அடி பா நிலைகளில் ஒட்டு;மொத்தமாய் ஒன்றித்தியங்கும் நிலை, அடியில் பல்வேறு ஒலிநயங்கள் இடம்பெறுதல், வாய்மொழி சார்ந்த எடுத்துரைத்தலிலுள்ள 8 மொழிவடிவக் குரல் பாங்குகள்(வனப்பு) ஆகியன விளக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒட்டுமொத்தமாக இணைத்து நோக்கினால் வாய்மொழி மரபு வழியிலாகச் செய்யுள் அமைவு பெறுதலும் இந்த அமைவுக்குள் திணைசார்ந்த பாடல்கள் யாத்தற்குரியவராக உருவமைத்தலும் எனப் புதிய ஒரு கவிதை ஆக்க முறைமையைக் காணமுடிகின்றது. தொல்காப்பியம் செய்யுளியல் முதற்சூத்திரத்தை நோக்குவோர்க்கு இது புலனாகும். மாத்திரை முதல் அளவியல் ஈறாகச் சொல்லப்படும் பன்னிரு உறுப்புகள் யாப்புச் சம்பந்தமானவை. திணைதொடக்கம் வண்ணம் வரை கூறப்படும் பதினான்கு உறுப்புகள் பெரும்பான்மை பொருள்சம்பந்தமானவை. 'இவ்விருபத்தாறு உறுப்பும் ஒன்றொன்றினை இன்றியமையாவென்பது பெற்றாம்.' அவயவிக்கொள்கையின் சாரத்தையே இரத்தினச் சுருக்கமாக விளக்கியிருக்கிறார் உரையாசிரியர்.

செய்யுளியலின் ஒவ்வொரு அலகும் பற்றிக் கூறும்போது தொல்காப்பியர் தமிழின் பாடல் ஆக்கமரபினை எவ்வாறு நுண்ணிதாகப் பார்த்திருக்கிறார் என்பதையும் அதேவேளையில் அந்தப் பகுதிகள் ஒன்றிணைந்து முழுமையை எவ்வாறு தோற்றுவிக்கின்றன என்பதையும் பூரணமான ஒரு கொள்கையாகப் பார்த்துள்ளார் என்பதும் தெரிய வருகின்றது.

தொல்காப்பியம் காட்டும் இலக்கிய ஆக்கச் சூழல் என்பது சங்க ஆக்கப்பாடல் மரபினைத் தொகுத்தும் வகுத்தும் பார்ப்பது மாத்திரமல்லாமல் மிக நுண்ணிதாகச் சென்று அவற்றோடு தொடர்புடைய பல்வேறு அமிசங்களையும் எடுத்துக்கூறி அகத்துக்கு ஒரு திட்டவட்டமான ஒரு கொள்கை மரபு உண்டு என்பதையும் புறத்துக்கான பாடல் மரபு வளர்ந்து வந்த முறையினையும் காட்டுகின்றது.

சங்ககாலம் என வழங்கப்படும் சான்றோர் இலக்கிய காலத்திலே கவிதைகள் இக்கொள்கையின் அடிப்படையிலேயே தோன்றின என்பதற்கு தொல்காப்பியமே சான்றாக அமைகின்றது. அவயவிக்கொள்கையிலே பொருள், வடிவம் என்ற பாகுபாடு இல்லை. இரண்டும் கூறுகளாக உறுப்புகளாக இசைவுபட்டே உயிருள்ள கவிதை பிறக்கிறது.

நாடகவழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல்சான்ற புலனெறி வழக்கம் என்று தொல்காப்பியம் இலக்கியம் ஆக்கப்பெறும் முறையினைக் கூறுகின்றது. நாடக வழக்காவது , சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வருவனவாகத் தொகுத்துக் கூறுதல் என்ற நச்சினார்க்கினியார் உரை கூறுவார். அரிஸ்ராட்டில் கவிதையை 'புனைந்துரை' Fictive என்று கூறுவது இங்கு கவனத்திற்குரியது. இன்றைய இலக்கியத்திறனாய்வு உலகத்தின் பார்வையோடும் தொல்காப்பியரின் பார்வை ஒத்துப்போவது முக்கியமான விடயமாகும்.

இலக்கியத்தை வித்தியாசமான முறையில் வாசகர்கள் கவனித்துப் பார்ப்பதற்கு ஒரு காரணம் என்னவென்றால் அதனுடைய கூற்றுகள் உலகத்தோடு ஒரு தனிச்சிறப்பான உறவைக் கொண்டுள்ளன. இந்த உறவை நாம் 'புனைவுரீதியானது' என்று அழைக்கிறோம். இலக்கியப்படைப்பு என்பது ஒரு புனைவுலகத்தை வெளிப்படுத்திக் காட்டும் ஒரு மொழியியல் நிகழ்வாகும் (ஜானதன் கல்லர், இலக்கியக்கோட்பாடு, 47)

இவ்வாறு இலக்கியம் - இலக்கிய ஆக்கம் பற்றிய கருத்துநிலையினைத் தொல்காப்பியர் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

இலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றிய கருத்துநிலை

'புறவய யதார்த்தத்தின் கலைப்படைப்பே இலக்கியத்தின் உள்ளடக்கம்' இவ்வரையறையில் உள்ள புறவய யதார்த்தத்திற்கும் அவனுடைய உள்ளத்தில் பிரதிபலிக்கும் அகவயக்கருத்துகளுக்கும் (படிமம்) உள்ள உறவை நாம் சிந்திக்கிறோம். வேறுசொற்களில் கூறுவதானால் உண்மைக்கும் இலக்கியப் படைப்பிற்கும் உள்ள உறவை இது குறிப்பிடும். சமூகச் சூழலின் உண்மையையும் அது கலைப்படைப்பாக மாறுகிறபோது கலை உண்மையாக உருவாவதையும் நாம் ஒப்பிட்டு ஆராய்கிறோம்.(வானமாமலை, நா. இலக்கியத்தில் உருவமும் உள்ளடக்கமும், 19)

இலக்கியத்தில் இன்று உள்ளடக்கம் பற்றிய தீர்க்கமான சிந்தனைகள் காணப்படுகின்றன. அதே தீர்க்கமும் தெளிவும் தொல்காப்பியரிடம் காணப்பட்டிருக்கின்றன. அகத்திணை, புறத்திணை ஆகிய உள்ளடக்கங்கள் குறித்து அவரது தெளிவு முக்கியமானது. அகத்திணையை முதல், கரு, உரிப்பொருள் சார்ந்தும் புறத்திணையைத் துறை சார்ந்தும் வெளிப்படுத்துகின்ற போக்கு தொல்காப்பியரிடம் காணப்பட்டிருக்கின்றது.

தொல்காப்பியம் புறப்பாடல்கள் பற்றிய விளக்கத்தில் ஒவ்வொரு திணைக்குமான போர்நிலை நடவடிக்கைகளையும் அவற்றோடு தொடர்புடையனவற்றையும் விரிவான துறைகளாக்கித் தருகின்றது. அகத்திணையியலோடு ஒப்புநோக்கும்போது புறத்திணையியலில் விடய ஒழுங்கு செம்மையாகவுள்ளது. அகத்திணையியலில் பாத்திரங்கள், பாத்திரங்களுக்கான கூற்றுகள் முதன்மைப்படுத்தப்பட புறத்திணையியலில் பாடலுக்கான சூழமைவுகள் மிகத் தெளிவாக்கப்படுகின்றன.

அத்தோடு மேலைத்தேய ஆரம்ப இலக்கியக் கோட்பாடுகளில் அறம் வலியுறுத்தப்பட்டதைப் போலவே தொல்காப்பியரின் சிந்தனையும் அறநெறிப்பட்டதாகவே இருந்திருக்கிறது.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் (தொல். களவியல் நூற்பா 1)

அகப்பாடல் மரபின் அடிப்படையாக முதல், கரு, உரிப்பொருட்களை கூறுகின்றார். இவ்வுலகத்துப் பொருட்களை உறுப்பினாலும் தொழிலினாலும் பண்பினாலும் பாகுபடுத்தி நோக்குதல் அரிதினும் அரிது. ஆயினும் தொல்காப்பியர் ஒரு வரையறைக்குள் கொண்டு வந்தே இவ்வாறு பேசுகின்றார்.

'முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை' (அகத்திணையியல் 3)

இதற்கு இளம்பூரணர்,

'சான்றொர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங்கால் முதற்பொருள் எனவும் கருப்பொருள் எனவும் உரிப்பொருள் எனவும் சொல்லப்பட்ட மூன்று பொருண்மையுமே அவை சொல்லுங்காலத்து முறைமையாற் சிறந்தன' என்கின்றார்.

தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பல்வேறு திணைகள், கைகோள் போன்றவை மட்டுமன்றித் தலைமகன், தலைமகள் போன்றோர் கூற்று போன்றவற்றையெல்லாம் மிக விரிவாகப் பேசிச் செல்லுவார். கூற்றிலும் கூட ஒவ்வொரு திறனுக்கும் உரியவெல்லாம் பட்டியலிட்டுக்காட்டியுள்ளார்.

அகத்திற்கும் புறத்திற்கும் இலக்கணரீதியிலான ஒரு தருக்கப்பொருத்தத்தை தொல்காப்பியம் செய்துள்ளது. இம்முயற்சி வியக்கத்தக்கதான அறிவியல் முயற்சியாகக் காணப்படுகின்றது. அகத்திணைகளையும் புறத்திணைகளையும் இணைத்து ஒப்பாய்வு செய்து ஒற்றைமரபுக்குள் கொண்டு வரும் முயற்சி தொல்காப்பியத்திற்கு முன்னே தொடங்கியிருக்கவேண்டும். என்ன காரணங்களால் ஒரு குறிப்பிட்ட அகத்திணையும் ஒரு குறிப்பிட்ட புறத்திணையும் ஒத்துள்ளன என்ற விளக்கங்கள் தொல்காப்பியத்தில் இல்லை. அவை அன்று கற்றோரிடையே நன்கு அறியப்பட்டிருந்த காரணத்தால் தொல்காப்பியம், சுருக்கம் கருதிச் சொல்லாமல் விட்டிருக்கலாம். இவ்விளக்கங்களை மத்திய தொல்காப்பிய உரையாசிரியர்கள் முந்திய மரபை ஒட்டியும், தத்தம் மேதா விலாசத்தைக் காட்டியும் தந்துள்ளார்கள். திணைகளைப் பற்றிய இந்தவிதமான விமர்சனப் பாங்கான நடவடிக்கையானது வெளிப்படையாக வேறு வேறு பொருள்களைப் பற்றிய சங்க அகப்புறப் பாடல்களை ஒரு வலுவான தருக்கத்தின் அடிப்படையில் இணைக்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாட்டு உருவாக்கச் செயற்பாடென்பதில் ஐயமில்லை(ராஜ்கௌதமன், 2006:55:56)

பாடுபொருள் - உட்பொருள் - உணர்ச்சிக்கூறுகள் என்று படைப்பின் ஆக்கக்கருத்துகள் தொல்காப்பியரால் கவித்துவமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இலக்கியத்தின் உருவம் பற்றிய கருத்துநிலை

இலக்கியத்தில் உள்ளடக்கத்தை விட அதன் உருவமே அதன் அழகியலை - தரத்தை தீர்மானி;க்கிறது என்ற கருத்து இலக்கியத் திறனாய்வாளர்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றது. தொல்காப்பியமானது உள்ளடக்கம்(பாடுபொருள்) பற்றிய ஆழ்ந்த கருத்தை வெளிப்படுத்தியதைப் போலவே உருவம் பற்றிய பிரக்ஞையையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

'உருவத்தின் இரு தன்மைகள், வருணனையும் உணர்ச்சி வெளியீடும் ஆகும். இதன் கூறுகள் பல உருவ அமைப்பை உருவாக்க உதவும். அவற்றுள் சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம்.

1. கலை இயைபு
2. கதைப்பின்னல்
3. கலையின் உள்ளடக்கம் , உருவம் இவற்றின் ஒருமை

4. உள்ளடக்கத்தின் சாரம் உருவத்தில் பொதிந்திருத்தல்
5. அனுபவத்தின் பொதுமை உருவத்தில் வெளிப்படுதல்
6. உருவ உள்ளடக்க விகாரங்கள்

மேற்கூறிய கூறுகள் உருவ அமைப்பை உருவாக்கத் துணைசெய்யும். (நா.வானமாமலை, இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும் 54 -55)

என்று இன்று திறனாய்வாளர்கள் எதிர்பார்க்கும் உருவம் பற்றிய சிந்தனைகளைத் தொல்காப்பியர் எவ்வாறு தகவமைத்திருந்தார் என்று நோக்குதல் தகும்.

தொல்காப்பியர் பாடுபொருளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாரோ அந்தளவுக்கு கவிதையின் உருவத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்துநின்றார். அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகியவையும் பிறவும் பாடுபொருள் பற்றிக் கூறுகின்றன. செய்யுளியல், உவமவியல், பொருளியல் (சில சூத்திரங்கள்), மெய்ப்பாட்டியல் ஆகியன பெரும்பாலும் பாடலின் வடிவம் பற்றிக் கூறுவனவாகும்.

கோட்பாட்டாக்கப் பின்புலத்தில் இலக்கிய வடிவங்கள் அல்லது வகைகள் குறித்தும் தொல்காப்பியம் காட்டுகின்றது. பாட்டு, உரை, பிசி, அங்கதம், முதுசொல், மந்திரம் என்பன அவையாகும்.

இலக்கியக்கொள்கையில் ஒன்றாகப் பேசப்படும் அவயவிக்கொள்கையின் செல்வாக்கினைத் தொல்காப்பியத்தில் காணமுடிகின்றது. செய்யுளின் உறுப்புகள் ஒன்று சேர்ந்து தரும் முழு அனுபவத்தினை விளக்குகின்றார். இலக்கியம் அடிப்படையில் மொழியாலானது. மொழி என்பது ஒலியால் ஆனது. அந்த ஒலியின் ஒழுங்கில் இருந்து அழகு தோற்றம் பெறுகின்றது. அந்த ஒலியொழுங்கை உருவாக்கும் யாப்பைக் குறித்து செய்யுளியலில் பலவிதமாக விளக்கியுள்ளார்.

ஆடுகளத்தைப் பாடுபொருளிற்கேற்ப அமைத்தபிறகு. இன்னும் பாடுபொருளை அழகாகக் காட்டுவதற்குத் துணைசெய்யும் பின்புலமாக, அந்தந்த நிலம்சார்ந்த கருப்பொருட்களை முன்னுக்குக் கொண்டு வருகிறார். அழகியல் உருவாக்கத்தில் பின்புலக்காட்சிகள், பின்புல இசைகள் எவ்வளவு பெரும்பணியை ஆற்றிக்கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். தனது பாடுபொருளான நாடகவழக்கை உலகியல் வழக்காக மக்கள் மனதில் ஏற்றுக்கொள்ளவைப்பதற்கு இந்த முதற்பொருள், கருப்பொருள் கோட்பர்டு - பணி செய்துள்ளன எனச்சொல்லவேண்டும். இவ்வாறு பாடுபொருளையும் அதன் பின்புலத்தையும் தனது நிலம்சார் கவிதையியல் கொண்டே வடிவமைக்கிறார். (பஞ்சாங்கம், க. புதிய கோட்பாட்டுநோக்கில் பழந்தமிழ் இலக்கியம், 10)

யாப்பு - உருவமாக விளங்குவதைப் போலவே மொழியும் உருவச்செம்மையில் கணிசமான பங்கு வகிக்கின்றது. செய்யுள் மொழி பற்றிய தொல்காப்பியர் தீர்க்கத்தை சொல்லதிகாரத்திலும் பொருளதிகாரத்திலும் நாம் காணமுடியும். உவமவியலில் யார் யார் என்னென்ன சொற்களால் தம்மை வெளிப்படுத்தவேண்டும் என்ற வரையறைகள் தொல்காப்பியரின் கோட்பாட்டுருவாக்கத்திற்குச் சான்று பகிர்கின்றன. (கிழவி சொல்லின் அவளறி கிளவி - உவம 26)

யாப்பு, இலக்கிய வடிவங்கள், எடுத்துரைப்புமுறைகள், மொழி இவையெல்லாம் பற்றிய தொல்காப்பியரின் இலக்கணமுறைமைகள் அவரின் கோட்பாட்டாக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றன. உள்ளடக்கத்திற்கு அழுத்தமான இடத்தைக் கொடுத்து அவற்றின் உட்கூறுகளை விளக்கியது போலவே உருவத்திற்கும் எடுத்துரைப்பிற்கும் முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளது. ஒன்று நீங்கினால் இன்னொன்று முழுமைபெற முடியாது என்ற தெளிவை நாம் கவனங்கொள்ளமுடிகின்றது,

2.4 இலக்கியத்தை நுகர்தலும் திறனாய்தலும்

இலக்கியத்தை ஆக்குதல் என்பதற்கான விளக்கமுறையுடன் தேங்கிவிடாமல் இலக்கியத்தை நுகர்தல் - சுவைத்தல் - விமர்சித்தல் ஆகிய பொறிமுறைகளைப் பற்றியதான தொல்காப்பியரின் சிந்திப்பும் சித்திரிப்பும் கோட்பாட்டுத்தளத்தில் முக்கியமானது ஆகும்;. தனக்கு முந்தியதும் தன்னுடைய காலத்தினதுமான சிந்தனைகளைத் தொகுத்து வரன்முறையாக்கியாக்கியுள்ள நெறிமுறைமையே இன்றைய காலம் வரையான தொல்காப்பியத்தின் நிலைப்பிற்கு காரணமாக உள்ளது.

தமிழ் இலக்கிய மரபிலே இலக்கணம்தான் ஓரளவுக்கு இலக்கிய விமரிசனம் செய்யவேண்டிய காரியத்தையும் செய்ய முற்பட்டு வந்திருக்கிறது(க.நா.சு, விமரிசனக் கலை ப 1) என்ற கருத்தையும் நாம் இங்கு இணைத்துப் பார்க்கும்போது இதன் முக்கியத்துவத்தைத் தெளிவாக விளங்கிக்கொள்ளலாம். உரை என்பதற்கு தொல்காப்பியம் கூறியுள்ள விளக்கம் இலக்கியத்தை விளங்குதல் - விளக்குதல் - விமர்சித்தலுக்குரிய தளத்தை ஏற்படுத்துவதாகும்.

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றியமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரை எனப்படுமே (மரபியல் 105)

இங்கு உரை என்பது உட்பொருளுடன் இன்னும் பல பின்னணிகளை விளக்கும் விளக்கமுறைத்திறனாய்வாக மலரவேண்டும் என்று தொல்காப்பியர் கூறுவது இன்றைய திறனாய்வுச் சிந்தனைகளுடன் பொருந்திப் போகின்றது.திறனாய்வு பற்றிய நேரடிக்கருத்துகளும் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

இறைச்சியிற் பிறக்கும் பொருளு மாறுளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே (தொல் பொருள் பொருளியல் 34)
உவமப் பொருளின் உற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான (தொல்.பொருள். உவமவியல் 207)

போலச் செய்தல் கொள்கை, வெளியீட்டுக்கொள்கை, பயனீட்டுக்கொள்கை, புறநிலைக் கொள்கை என்று திறனாய்வுக்கொள்கைகளை நான்கு வகைமைக்குள் அடக்குவர். தொல்காப்பியரின் திறனாய்வுச் சிந்தனைகளின் சாரமாக 'வெளியீட்டுக்கொள்கை' அமைகின்றது எனலாம். மெய்ப்பாட்டியல் இக்கருத்திற்கு உரமாக அமைகின்றது. இலக்கியம் என்பது உணரும் வல்லமை பெற்ற உணர்வுடை மாந்தர்களாலேயே அறியப்படக்கூடிய நுட்பக்கலை என்ற கருத்து மெய்ப்பாட்டியலில் வெளிப்பட்டுள்ளது,

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே (தொல்.பொருள் மெய். 27)

உணர்ச்சி வெளிப்பாடாகக் கவிதையைக் கொள்வது இன்றைய மேலைநாட்டுத் திறனாய்விலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

கருத்து கவிதைக்குப் பிரதானமன்று உணர்ச்சி பிரவாகத்திலேயே கவிதை மலர்கின்றது. உணர்ச்சி ததும்பும் பாடல்களில் உண்மைக்கவிதை களிநடம் புரிகின்றது. பொருள் விளக்கம் முதலியன அறிவுத்துறையை சார்ந்தவை. கவிதைக்கு உயிர்நாடி உணர்ச்சிதான். கவிதை சொல்லப்படும் பொருளன்று: சொல்லும் முறையேயாகும். (ஏ.இ.ஹௌஸ்மன், கவிதையின் பெயரும் இயல்பும்)

நிறைவுரை

தொல்காப்பியம் என்பதை மொழி நூலாகவும் இலக்கணநூலாகவும் வாழ்க்கைநூலாகவும் கொண்டாலும் இலக்கியநிலையில் அது கோட்பாட்டுநூலாகப் பெறுகின்ற முதன்மையே அதிக கவனத்திற்குரியது. அறிவியல் அணுகுமுறையும் இன்றைய காலத்திற்கும் இயங்கும் திறனும் அதன் வல்லபத்திற்குச் சான்றாக அமைகின்றது. இலக்கியக்கோட்பாடு என்பது 'குறிப்பிட்ட ஓர் இலக்கியக் கொள்கை

காரணமாக இலக்கியத்தின் உருவிலும் பொருளிலும் ஏற்படும் அமைவுநெறி அல்லது ஒரே சார்பான அமைவுநெறிகளின் தொகுதி' என்று நோக்கும்போது தொல்காப்பியரிடம் இலக்கியம் பற்றிய தெளிவும் இலக்கிய ஆக்கத்தில் உருவம், உள்ளடக்கம் என்பவற்றில் காட்டு;ம் நுணுக்கமும் திறனாய்தலுக்கு வழிகாட்டும் நுட்பமும் இன்றைய உலக இலக்கியக் கோட்பாடுகளுடன் தன்னை நிலைநிறுத்தும் ஆற்றலுடன் தொல்காப்பியம் நிற்கின்றது என்பதற்குச் சான்றாகின்றது. தமிழ் இலக்கியத்திற்கான கோட்பாட்டு நூலாகவும் வழிகாட்டி நூலாகவும் காலாதி காலத்திற்கும் தொல்காப்பியம் நிலைத்துநிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

துணைநின்ற நூல்கள் நூல்கள்

1. இளங்குமரன், இரா.(1988) இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. கணேசையர்(பதி),(2007). தொல்காப்பியம் மூலமும் நச்சினார்க்கினியார் உரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. கைலாசபதி,க.(1972) இலக்கியமும் திறனாய்வும், வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.
4. கௌமாரீஸ்வரி,எஸ்.(பதி) (2005), தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
5. சம்பத்;,இரா.(2006) இலக்கியமும் இலக்கியக்கோட்பாடும், உமா பதிப்பகம்;, புதுச்சேரி;.
6. சிவத்தம்பி,கா.(2007), தமிழின் கவிதையியல், குமரன் புத்தக நிலையம், சென்னை -கொழும்பு.
7. சிவத்தம்பி,கா.(2009), சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும்;, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
8. சிவத்தம்பி,கா.(2002) இலக்கியமும் கருத்துநிலையும்;, மக்கள் வெளியீடு, சென்னை.
9. சீனிச்சாமி,துரை.(2013) தொல்காப்பியமும் இலக்கியவியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
10. சுப்புரெட்டியார்;,ந.(1963) தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பழனியப்பா பிரதர்ஸ்;, சென்னை.
11. பஞ்சாங்கம், க.(2007) தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அன்னம், தஞ்சாவூர்
12. பஞ்சாங்கம்,க (2012) புதிய கோட்பாட்டு நோக்கில் பழந்தமிழ் இலக்கியம், அன்னம், தஞ்சாவூர்.
13. மணவாளன்,அ,அ.(2010) இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
14. மணவாளன்,அ,அ.(மொ.பு), (1976), அரிஸ்டாட்டலின் கவிதையியல், என்.சி.பி.எச், சென்னை.
15. மாதையன், பெ.(2013) சங்கக் கவிதையியல், இராசகுணா பதிப்பகம், சென்னை.
16. மாதையன்,பெ.(2009) அகத்திணைக்கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும்;, பாவை பப்ளிகேஸன்ஸ்;, சென்னை.
17. வானமாமலை,நா.(2009) இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும்;, பல்கலைப்பதிப்பகம், சென்னை.
18. ஜானதன் கல்லர(ஆர்.சிவகுமார்);;.(2005) இலக்கியக்கோட்பாடு மிகச்சுருக்கமான அறிமுகம், அடையாளம் வெளியீடு, சென்னை.
19. ஜெயராசா,சபா.(2012) தமிழியலும் திறனாய்வுக்கலையும், சேமமடு பதிப்பகம், சென்னை.
20. ஜீன் லாறன்ஸ்,செ, பகவதி,கு(தொ.ஆ) (1998), தொல்காப்பிய இலக்கியக்கோட்பாடுகள(கருத்தரங்கக் கட்டுரைகள்);, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
21. ஹார்ட் ஜார்ஜ்,எல்.(மொ.பெ கமலக்கண்ணன்),(2022) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

தொ.மா.க. 208
தொல்காப்பியப் புறத்திணைக் கோட்பாடு - ஓர் ஆய்வு

முனைவர் மெய்ஞானி பிரபாகரபாபு
அயனாவரம்
சென்னை - 600023 தமிழ்நாடு, இந்தியா
meignani.peacemaker@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்மொழியின் தொன்மையையும் தன்னிகரற்ற பண்பாட்டுத் தனித்தன்மைகளையும் ஆவணமாக்கித் தந்திருக்கும் ஒப்பற்ற நூல் தொல்காப்பியம். பண்டைத் தமிழரின் காதல் உணர்வுகளையும் சமூக வாழ்க்கை முறைமைகளையும் காட்சிப்படுத்துவதில் தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் முதனிலை வகிக்கிறது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் இடம்பெறும் அகத்திணையியல் முதல், கரு, உரிப்பொருள் அடிப்படையில் திணைப்பாகுபாடுகளை வகுத்துக் காட்ட, புறத்திணையியல் பண்டைக்கால மாந்தரின் புறவாழ்க்கை சார்ந்த கோட்பாடுகளை முன்வைக்கிறது. இலக்கியத்தில் காதலைத் தவிர பிற எல்லாமும் புறத்திணையின் கூறுகளாகின்றன. பொதுவாக போர், மறம், கொடை, ஈகை, போன்றவை புறத்திணைக் கூறுகளாக அமைந்துள்ளன. புறத்திணை எனபது பெரும்பான்மை போர்களைச் சார்ந்ததாகவே காணப்படுகிறது. புறத்திணைகள் பற்றிப் பல்வேறு விளக்கங்கள் தொல்காப்பியம், பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் தரப்பட்டுள்ளன. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை ஆகிய ஏழும் தொல்காப்பியம் கூறும் புறத்திணைகள்.

தொல்காப்பியத்தில் புறத்திணையியலில் கூறப்பட்டுள்ள ஏழுதிணைகள் அகத்திணையியலில் கூறப்பட்ட ஏழு திணைகளோடு இயைபுபடுத்தியும் காட்டப்பட்டுள்ளன. அகத்திணைகளோடு பொருத்திக் காட்ட வேண்டிப் புறத்திணைகளை ஏழு என்று குறிப்பிடுகிறார் நச்சினார்க்கினியர். அவை, குறிஞ்சி - வெட்சி; முல்லை - வஞ்சி; மருதம் - உழிஞை; நெய்தல் - தும்பை; பாலை - வாகை; பெருந்திணை - காஞ்சி; கைக்கிளை - பாடாண் என்றவாறு. புறத்திணைகளான காஞ்சி, பாடாண் ஆகியவை போர்த் தொடர்பான செய்திகளைக் கூறுகின்றன. காதல் தவிர மற்ற எல்லாவற்றையும் கூறும் புறத்திணைகளின் வழி பண்டைக் காலப் புறவாழ்க்கை அமைந்திருந்ததை முன்வைத்துத் திணைகள் வெளிக்காட்டும் போர்த் தகவல்கள் தொல்காப்பிய நூற்பாக்களின் உதவியால் எடுத்துக் கூறப்பட்டு வருகின்றன.

சங்க காலப் புறத்திணைப் பாடல்கள், குறிப்பாகப் புறநானூற்றுப் பாடல்கள் வாயிலாகப் போர்கள் பற்றிய நிலைப்பாடுகளையும் நடைமுறைகளையும் போர் பற்றிய செய்திகளையும், அரசர்களின் ஆட்சிச் சிறப்பையும், புலவர்கள், பாணர்கள்பால் அரசர்கள் கொண்டிருந்த மதிப்பு, ஈடுபாடு, இரக்கம் ஆகியவற்றை அறிய முடிகிறது. மேலும் அப்பாடல்களில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள், அக்கால மக்களின் சமூக வாழ்வியலை முழுமையாக எடுத்துக் காட்டுகின்றன. அகத்திணைகளும் புறத்திணைகளும் கொண்ட பொருத்தப்பாடு எவ்வாறான அடிப்படைகளில் இயைபு படுத்திக் கூறப்பட்டுள்ளன என்பதை தொல்காப்பியம், பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை மற்றும் பிற ஆய்வு நூல்களின் அடிப்படையில் நுட்பமாக ஆய்வு செய்யப்பட்டு நிறுவும் ஆய்வுக் கட்டுரைக்கான ஆய்வுச்சுருக்கம் ஈண்டு முன்வைக்கப்படுகிறது.

காதல் வாழ்க்கை சார்ந்த அகத்திணைகளைப் போர்முறைகள் சார்ந்த புறத்திணைகளோடு பொருத்துவதில் ஆய்வாளர்களிடையிலும் பல்வேறு மாறுபட்ட கருத்தியல்கள் நிலவுவதை முன்னிறுத்தி இவ்வாய்வில் திணைகள் விரிவான விளக்கங்களோடு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு இந்த ஆய்வுக்கட்டுரையில் பொருத்திக்கப்பட்டுள்ளன. காதலுக்கான உணர்வுகளும் வீரத்துக்கான உணர்வுகளும் திணைக்குத்திணை வெவ்வேறாக இருக்க அவை எவ்வாறு அக, புற மாந்த உணர்வுகளின் முழுமையாகப் பொருந்தி வருவதும்

ஐயத்திற்கிடமின்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புறத்திணைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் தன்மைகளையும் அவற்றிற்குரிய துறைகளையும் விளக்கிப் புறத்திணைப் பாகுபாடுகளோடு அகத்திணைகள் கொள்ளும் ஒற்றுமை முன்வைக்கப்பட்டுள்ளது.

காதலும் வீரமும் ஒன்றுக்கொன்று தொடர்புற்று விளங்குவதைத் தக்க சான்றுகளோடு பொருத்திக் கட்டப்பட்டுள்ளது. சங்க காலப் போர்களில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளையும், அவற்றின் ஒழுங்கமைவுகளையும் எடுத்துச் சொல்கிறது. வீரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த அன்றைய புறவாழ்க்கையின் மனநிலையில் காதல் வாழ்க்கையின் மனநிலைகள் ஒன்றுவதை உளவியல் பார்வையில் உற்றுநோக்கியக் கருத்தாய்வுகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அகத்திணைகள் ஏழுக்கும் புறத்திணைகள் ஏழுக்கும் இடையிலான ஒருமிப்புகளால் தொல்காப்பியரின் கூரிய சமூக நோக்கினை வெளிப்படுத்துவதை அறிய வைக்கிறது. புறத்திணைகளும் அகத்திணைகளும் எந்த அடிப்படையில் பொருந்துகின்றன என்பதை எடுத்துக் காட்டும் ஆவணமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அகப் புறப் பொருள்களைப் பிரித்து விளக்கியுள்ள தொல்காப்பிய நூற்பாக்களின் அடிப்படையில் புறத்திணைப் பாகுபாடுகளை விளக்கி திணைகள் அனைத்தும் காட்சிக்குக் காட்சி உணர்வு சார்ந்தவைகளாகவே உருவாக்கப்பட்டிருப்பதாகத் தொல்காப்பிய நூற்பாக்கள் மற்றும் புறநானூற்றுப் பாடல்கள் தரும் சான்றுகளின் வழி இவ்வாய்வு நிறுவுகிறது.

முன்னுரை

தமிழ்மொழியின் தொன்மையையும் தன்னிகரற்ற பண்பாட்டுத் தனித்தன்மைகளையும் ஆவணமாக்கித் தந்திருக்கும் ஒப்பற்ற நூல் தொல்காப்பியம். பண்டைத் தமிழரின் காதல் உணர்வுகளையும் சமூக வாழ்க்கை முறைமைகளையும் காட்சிப்படுத்துவதில் தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் முதனிலை வகிக்கிறது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் இடம்பெறும் அகத்திணையியல் முதல், கரு, உரிப்பொருள் அடிப்படையில் திணைப்பாகுபாடுகளை வகுத்துக் காட்ட, புறத்திணையியல் பண்டைக்கால மாந்தரின் புறவாழ்க்கை சார்ந்த கோட்பாடுகளை முன்வைக்கிறது. இலக்கியத்தில் காதலைத் தவிர பிற எல்லாமும் புறத்திணையின் கூறுகளாகின்றன. பொதுவாக போர், மறம், கொடை, ஈகை, போன்றவை புறத்திணைக் கூறுகளாக அமைந்துள்ளன. புறத்திணை எனபது பெரும்பான்மை போர்களைச் சார்ந்ததாகவே காணப்படுகிறது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை ஆகிய ஏழும் தொல்காப்பியம் கூறும் புறத்திணைகள். அதே போன்று அகத்திணைகள் ஏழினைச் சுட்டுகிறது தொல்காப்பியம். அவையாவன, குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை பெருந்திணை கைக்கிளை ஆகும்.

காதல் தவிர மற்ற எல்லாவற்றையும் கூறும் புறத்திணைகளின் வழி பண்டைக் காலப் புறவாழ்க்கை அமைந்திருந்ததை முன்வைத்துத் திணைகள் வெளிக்காட்டும் போர்த் தகவல்கள் தொல்காப்பிய நூற்பாக்களின் உதவியால் எடுத்துக் கூறப்பட்டு வருகின்றன. புறத்திணைகள் பற்றிப் பல்வேறு விளக்கங்கள் தொல்காப்பியம், பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களில் தரப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தில் புறத்திணையியலில் கூறப்பட்டுள்ள ஏழுதிணைகள் அகத்திணையியலில் கூறப்பட்ட ஏழு திணைகளோடு நெருக்கமாக இயைபுபடுத்தியும் கூறப்பட்டுள்ளன. அகத்திணைகளும் புறத்திணைகளும் கொண்ட பொருத்தப்பாடு எவ்வாறான அடிப்படைகளில் இயைபு படுத்திக் கூறப்பட்டுள்ளன என்பதை நச்சினார்க்கினியர் உரைநூல் மற்றும் பல்வேறு ஆய்வு நூல்களின் அடிப்படையில் நுட்பமாக ஆய்வு செய்யப்பட்டு முன்வைக்கும் ஆய்வுக் கட்டுரை இதுவாகும்.

திணைகளின் பொருத்தப்பாடுகள்

எவ்வெத்திணைக்கு எவ்வெத்திணை புறன் ?

வெட்சித்திணை குறிஞ்சியென்னும் அகத்திணைக்குப் புறன்; வஞ்சித்திணை முல்லைக்குப்புறன்; உமிஞைத்திணை மருதத்துக்குப் புறன்; தும்பைத்திணை நெய்தற்குப்புறன்; வாகைத்திணை பாலைக்குப்புறன்; காஞ்சித்திணை பெருந்திணைக்குப்புறன்; பாடாண்திணை கைக்கிளைக்குப்புறன் என்பர் தொல்காப்பியர்.

வெட்சிதானே குறிஞ்சியது புறனே (தொல்.புற 59), வஞ்சி தானே முல்லையது புறனே (64), உழிஞை தானே மருதத்துப் புறனே (66), தும்பை தானே நெய்தலது புறனே (70), வாகை தானே பாலையது புறனே (73) என்று தொல்காப்பியம் நுதலிற்று. இன்ன இன்ன திணைகள் இன்ன இன்ன அகத்திணைகள் புறன் என நூற்பா யாத்த தொல்காப்பியர் என்ன காரணத்தால் இவை ஒன்றுக்கொன்று புறனாயின என்பதனை யாண்டும் கூற வில்லை. ஆகவே, உரையாசிரியர்கள் இவை புறனாதற்குரிய காரணங்களாக முதல். கரு உரிப்பொருள்களின் அடிப்படையில் காணலாகும் சில ஒப்புமைகளைச் சுட்டுகின்றனர்.

அகத்திணைகளோடு பொருத்திக் காட்ட வேண்டிப் புறத்திணைகளை ஏழு என்று குறிப்பிடுகிறார் நச்சினார்க்கினியர். அவை, குறிஞ்சி - வெட்சி; முல்லை - வஞ்சி; மருதம் - உழிஞை; நெய்தல் - தும்பை; பாலை - வாகை; பெருந்திணை - காஞ்சி; கைக்கிளை - பாடாண் என்றவாறு. புறத்திணைகளான காஞ்சி, பாடாண் ஆகியவை போர்த் தொடர்பான செய்திகளைக் கூறுகின்றன. காதல் தவிர மற்ற எல்லாவற்றையும் கூறும் புறத்திணைகளின் வழி பண்டைக் காலப் புறவாழ்க்கை அமைந்திருந்ததை முன்வைத்துத் திணைகள் வெளிக்காட்டும் போர்த் தகவல்கள் தொல்காப்பிய நூற்பாக்களின் உதவியால் எடுத்துக் கூறப்பட்டு வருகின்றன.

சங்க காலப் புறத்திணைப் பாடல்கள், குறிப்பாகப் புறநானூற்றுப் பாடல்கள் வாயிலாகப் போர்கள் பற்றிய நிலைப்பாடுகளையும் நடைமுறைகளையும் போர் பற்றிய செய்திகளையும், அரசர்களின் ஆட்சிச் சிறப்பையும், புலவர்கள், பாணர்கள்பால் அரசர்கள் கொண்டிருந்த மதிப்பு, ஈடுபாடு, இரக்கம் ஆகியவற்றை அறிய முடிகிறது. மேலும் அப்பாடல்களில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள், அக்கால மக்களின் சமூக வாழ்வியலை முழுமையாக எடுத்துக் காட்டுகின்றன. அக்காலத்தில் அறமும் மறமும் அறவழியிலேயே மேற்கொள்ளப்பட்டன என்பதையும் அறிய முடியும்.

அகத்திணைகளும் புறத்திணைகளும் கொண்ட பொருத்தப்பாடு எவ்வாறான அடிப்படைகளில் இயைபு படுத்திக் கூறப்பட்டுள்ளன என்பதை தொல்காப்பியம், பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை மற்றும் பிற ஆய்வு நூல்களின் அடிப்படையில் நுட்பமாக ஆய்வு செய்யப்பட்டு நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

காதலும் போரும்

காதல் வாழ்க்கை சார்ந்த அகத்திணைகளைப் போர்முறைகள் சார்ந்த புறத்திணைகளோடு திணைகள் விரிவான விளக்கங்களோடு இந்த ஆய்வுக்கட்டுரையில் பொருத்திக் காட்டப்பட்டுள்ளன. காதலுக்கான உணர்வுகளும் வீரத்துக்கான உணர்வுகளும் திணைக்குத் திணை வெவ்வேறாக இருக்க அவை அக, புற மாந்த உணர்வுகளின் தன்மைகளோடு முழுமையாகப் பொருந்தி வருவதும் ஐயத்திற்கிடமின்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. புறத்திணைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் தன்மைகளையும் அவற்றிற்குரிய துறைகளையும் விளக்கிப் புறத்திணைப் பாகுபாடுகளோடு அகத்திணைகள் கொள்ளும் ஒற்றுமை முன்வைக்கப்பட்டுள்ளது.

சங்க காலப் போர்களில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளையும், அவற்றின் ஒழுங்கமைவுகளையும் எடுத்துச் சொல்கிறது. வீரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த அன்றைய புறவாழ்க்கையின் போர் நிகழ்வுகளுடன் காதல் வாழ்க்கையின் மனநிலைகள் ஒன்றுவதை உளவியல் பார்வையில் உற்று நோக்கியக் கருத்தாய்வுகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. அகத்திணைகள் ஏழுக்கும் புறத்திணைகள் ஏழுக்கும் இடையிலான ஒருமிப்புகளால் தொல்காப்பியரின் கூரிய சமூக நோக்கினை வெளிப்படுத்துவதை அறிய வைக்கிறது. புறத்திணைகளும் அகத்திணைகளும் எந்த அடிப்படையில் பொருந்துகின்றன என்பதை எடுத்துக் காட்டும் ஆவணமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

திணைகள் ஒப்பீடு

முதலாவதாக, அகத்திணைகளோடு பொருத்திக் காட்ட வேண்டிப் புறத்திணைகளை ஏழு என்று குறிப்பிடுகிறார் நச்சினார்க்கினியர்.

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழு திணை என்ப (தொல். அக. 1)

இந்த முதல் சூத்திரத்தில் கைக்கிளை முதலாப் பெருந்திணை என்று குறிப்பிடுவது கைக்கிளை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல், முல்லை, பெருந்திணை எனும் அகப்பொருள் திணைகள் ஏழாம். இந்நூற்பாவில் முற்படக் கிளந்த எழுதிணை என்று கூறுவதிலிருந்து வெட்சி, முதல் பாடாண்டினை வரையிலான புறத்திணைகள் ஏழு பிற்பாடு வரவுள்ளன என்பதை வரையறுத்து உணர்த்துகிறது. தொல்காப்பியத்துக்கு முன்பிருந்தே இவ்வாறு ஏழு பொருள்கள் கூறும் வழக்கம் இருந்துள்ளது.

அகம், புறம் எனப் பொருளை வரையறுத்தல் கருத்தாவதால் அப்படியாக ஆகுதல் -

அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின் (புறத்.1)

என்பதை அறிய முடியும். இவ்வதிகாரத்தில் கூறப்பட்ட பொருள் எண்ணிக்கை பதினான்கு என்பதாகும். அவை, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன. இனி ஒவ்வொன்றாகக் காண்போம்.

1. குறிஞ்சியும் வெட்சியும்

குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருள்களாகக் கூறப்படுபவை புணர்தலும், புணர்தல் தொடர்பான ஒழுக்கமும் ஆகும். புணர்தல் என்பது கூடுதல், சேருதல் எனும் பொருள்படக் கூறப்படுகிறது. தலைவனும் தலைவியும் தாம் உடன்பட்டுப் பிறர் அறியாமல் புணர்தல்.

தலைவனும் தலைவியும் புணர்தலுக்கு முன் ஒருவரையொருவர் பார்த்தும் விழைந்தும் நெருங்கி உரையாடியும் காதல் உறவில் ஈடுபடுகின்றனர். பழகுதலால் உடன்பட்டுக் களவொழுக்கத்தில் ஈடுபடுகின்றனர். புணர்தலே உணர்ச்சிகளால் போர்க்களமாகிறது. புறவாழ்வில் ஒரு வேந்தனும் பகைவேந்தனும் முரண்பட்டுப் பொருதுதல் இங்கே பார்க்கப்பட வேண்டியதாகிறது. இதன் அடிப்படையில் அகத்திணைகளையும் புறத்திணைகளையும் ஒவ்வொன்றாகப் பொருத்திக் காட்டலாம். அக, புறப் பொருள்களைப் பிரித்து விளக்கியுள்ள தொல்காப்பிய நூற்பாக்களின் அடிப்படையில் புறத்திணைப் பாகுபாடுகளை விளக்கித் திணைகள் அனைத்தும் உணர்வு சார்ந்தவைகளாகவே உருவாக்கப்பட்டிருப்பதாகத் தொல்காப்பிய நூற்பாக்கள் மற்றும் புறநானூற்றுப் பாடல்கள் தரும் சான்றுகளின் வழி இவ்வாய்வு நிறுவுகிறது.

வெட்சிக்குத் தொல்காப்பியம் காட்டும் பதினான்கு துறைகளாக ஆநிரைகளை கவர எழும் படையின் பேரரவம், படைகள் தம்மூரைக் கடக்கையில் ஊரிடத்து நிகழும் நற்சொல்லைக் கேட்டல், பக்கத்து உள்ளோர் அறியாதவாறு செல்லுதல், பகை ஒற்றர்களின் கருத்து கெடுமாறு தாம் பகைவரை ஒற்றறிதல், ஒற்றறிந்த பின் பகைவேந்தனை சூழ்ந்து தாக்குதல், போர் முற்றியபின் பகைவர் ஊரை அழித்தல், ஊரின் பசுக்கூட்டத்தைக் கவர்தல், பின்பற்றி வந்து தாக்கும் பகைவரை எதிர்த்து போரிடல், கவர்ந்த பசுக்கூட்டங்களை அவை நோகாதவாறு ஓட்டி வருதல், தம் சுற்றத்தார் கவலையுடன் நிற்கும் இடத்துக்கு (பொதுவாய் ஊரின் வெளிப்பக்கம்) வந்து சேருதல், கவர்ந்து வந்த ஆநிரைகளைத் தம் ஊரில் கொண்டுவந்து நிறுத்துதல், வீரர்கள் அப்பசுக்களைத் தம்முள் பகிர்ந்து கொளல், வெற்றி களிப்பில் மதுவுண்டு ஆடுதல், தாம்பெற்ற பசுக்களைப் பிறருக்கும் கொடையளித்து மகிழ்தல் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

வெட்சித்திணையின் துறைகள் அனைத்தும் குறிஞ்சித்திணையின் களவொழுக்கத்தில் ஒத்திருப்பதை நிறுவலாம். குறிஞ்சித்திணையில் பொருத்தும்போது, அகத்திணையில் பகைவர் என்பதை பகை உள்ளம் கொண்டவர்களாகக் கருதாமல் இதுகாறும் அச்சத்தால் நெருக்கம் தவிர்த்திருந்த இரு சாராராகவே கருதுதல் வேண்டும்.

வெட்சித்திணையில் கூறப்படுவதுபோல் காதலரின் உள்ளம் கவரும் நோக்கம் உருவாகி உணர்ச்சிப் போராட்டத்தில் ஒரு படையே திரள்கிறது. உள்ளத்துக்குள் இடைவிடாத இரைச்சல் உருவாகிறது. தமது உள்ளத்தின் எல்லையைக் கடக்கையில் தோழியின் நற்சொல் கேட்கப்படுகிறது. பக்கத்தில் உள்ளோர் பிறர் எவரும் அறியாதவாறு காதலரிடம் செல்லுதல் நிகழ்த்தப்படுவது. இது காதலன், காதலி என இருவருக்கும் பொருந்தவல்லது.

காதல் நோக்கத்தில் இடர் ஏற்படுத்தக்கூடிய பிறரது எண்ணம் கெடுமாறு சூழ்நிலையை அறிந்து கொள்ளல். நற்றாய், செவிலித்தாய் அறியாதவாறு கமுக்கமாகச் செயல்பட்டுத் தோழிக்கு உணர்த்துதல். பாடல்கள் வழி, பல சூழ்நிலைகளில் தோழியே உதவுவதைக் காண முடிகிறது.

தகுந்த பகற்குறி, இரவுக்குறிக்காண சூழலை ஒற்றறிந்த பின் காதலர்க்கு அறிவுறுத்திச் சந்தித்தல் நிகழ்கிறது. இரு தரப்பும் பொருதுதல் ஏற்படுகிறது. காதலரிடையில் நெருக்கம் முற்றியபின் அச்சத்தையும் நாணத்தையும் அழித்தல், களவில் ஈடுபடுதல் உண்டாகிறது. ஒருவர் மற்றவரைக் கவர்தல், உடல் ஒன்றிப்

புணர்தல், கொள்ளை கொள்ளுதல், தலைவி இதுகாறும் காத்துவந்த கற்பினைக் கவர்தல். தன்னைப் பின்பற்றி வந்து களவில் ஈடுபட முனைந்த தலைவனை எதிர்கொண்டு தானும் களவில் பொருந்துதல் ஆகியவை நிகழ்கின்றன. உள்ளம் கவர்ந்த தலைவியை அன்பு மேலீட்டோடு அழைத்து அளவளாவுதல் நிகழ்கிறது.

தலைவி தனது நற்றாய், செவிலித்தாய் உள்ள எல்லை வரை தலைவன் அழைத்து வருவதும், களவில் இருந்த தலைவி தனது நற்றாய், செவிலித்தாய் உள்ள ஊருக்குத் தலைவன் கூட்டி வந்து விடுதலும், தலைவன் தலைவியை மனதளவில் தன்னுடையவளாக ஏற்றுக் கொள்வதும் நடக்கிறது. (தலைவியின் களவொழுக்கம் பற்றி அறியாத சுற்றத்தினர், நற்றத்தாய், செவிலித்தாய் போன்றவர்கள் அவளை வழக்கம்போல் அழைத்துப் பழகுதலும் ஆம்). அடுத்து, தலைவியின் காதல் கிடைத்துக் களவும் நிகழ்ந்ததில் தலைவன் வெற்றிக்களிப்பில் மகிழ்தலும், தான் தலைவியைப் பெற்ற இன்பத்தின் தகவலைப் பிறருக்கும் கொடுத்து மகிழ்தலும் நிகழ்கிறது. இவ்வாறாக, குறிஞ்சியோடு வெட்சி நிரல்படப் பொருந்துவது ஈண்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

2. முல்லையும் வஞ்சியும்

முல்லை திணைக்குரிய உரிப்பொருள் “இருத்தலும் இருத்தல் நிமித்தமும்” என்பதாகும். வஞ்சி சார்ந்த துறைகளாக, செல்லும் படையின் பேரரவம், பகைவர் நாட்டை தீயிட்டழித்தல், விளக்கிச் சொல்லப்படும் படையின் பெருமை, வேந்தன் வீரர்களுக்கு பரிசில்கள் கொடுப்பது, போர்செய்து வெற்றி பெறுதல், வேந்தனால் சிறப்பிக்க (மாராயம்) பெற்றவரின் பெறுமையை கூறல், பகைவரை ஒரு பொருட்டாக நினையாது போர்செய்த பேராண்மை, பெருகிவரும் வெள்ளத்தை தடுத்துநின்ற கல்லனையைப் போல ஒருவன் எதிர்த்து வந்த படையை தனியனாய் தாங்கிய சிறப்பு, வீரர்களுக்கு சோறு அளித்த பெருஞ்சோற்று நிலை, வெற்றி பெற்றவர்களின் விளக்கம், தோல்வியடைந்தவரின் அழிவைக் கூறல், பகைவர் நாடு அழிவதற்கு இரங்கும் வள்ளைப் பாட்டு, பகையோடு போராடி சோர்ந்த வீரர்களைத் தழுவிக்கொள்ளல் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

வஞ்சித்திணையின் துறைகளுக்கேற்ப, தலைவியின் உள்ளத்தை அலைக்கழிக்கும் உணர்ச்சிப் படையின் படையின் பேரரவம், தலைவன் நினைவால் காமத்தீ உருவாதல், தோழியே ஏளனமாகக் கூறினாலும் தலைவனின் பெருமையைத் தலைவி உணர்த்துதல் நிகழ்கிறது. தலைவன் மீண்டு வந்து வருகையே தலைவிக்குப் பரிசாக அமைகிறது. தலைவன் வருகையை வெற்றியாக எண்ணி தலைவியும் ஆற்றாமை தணிந்து உள்ளம் அமைதி கொண்டு தலைவனின் சிறப்பைத் தோழிக்குக் கூறுதல் ஆகியவை நிகழ்கின்றன. இவ்வாறாக, முல்லை திணைக்குப் புறனாக வஞ்சி அமைகிறது.

3.மருதமும் உழிஞையும்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என அழைக்கப்பட்டது. இதனால் மருத நிலத்தில் வாழ்ந்தோர் உழவுத் தொழில் புரிவோராவர். தலைவன், தலைவி உறவில், தலைவன் மாறுபட்டுப் போதல் இயல்பாகக் கருதப்பட்டது. அவ்வாறு மாறுபட்டுப் போகிற தலைவனைத் தன் வழிப்படுத்துவதற்காகத் தலைவி கையாளுகிற கருவி ஊடல். வயல்நிலம் வாழ்வுக்கு வேண்டிய பொருள் தந்து வளம் சேர்ப்பது போலவே ஊடலும் இன்பத்திற்கு மேலும் இன்பமூட்டி வாழ்வில் செழுமை சேர்ப்பதாகக் கருதப்படுகிறது.

உழிஞை தானே மருதத்துப் புறனே என்கிறது தொல்காப்பியம். 1.இரு பெரு வேந்தர் தம்முள் மாறுபட்டு, எதிர்த்துச் செல்லும் ஆற்றலின்றி மதிலகத்தில் இருந்த வேந்தனது மதில் பெரும்பான்மையும் மருத நிலத்தில் அமைந்திருத்தல், 2.மதிலை வளைத்து முற்றுகை இடுதற்கு வேந்தனும் அந்த மருத நிலத்தில் இருத்தல், 3.தலைவன் வாயில் வேண்ட, தலைவி அதற்குடன்படாது கதைவடைத்துக்கொண்டு வீட்டினுள்ளே இருத்தலாகிய மருதத்திணை ஒழுகலாற்றைப் போன்றே புறத்தே மதில் வளைத்துக் கொண்ட வேந்தன் அறனுள் நுழைதலை விழைய, உள்ளிருந்த வேந்தன் அவன் நுழைதற்கு உடன்படாது அரணின் கதவை அடைத்திருத்தல் 4.மருதம்போல் இதற்கும் பெரும்பொழுது வரைவின்மை உண்டாம். 5.மருதத்திற்குச் சிறந்த சிறுபொழுதாகிய விடியற்காலமே போர் செய்தற்குக் காலமாதல் 6.புலத்தலும் ஊடலும் மருதத் திணையாதல் போல அரணை

முற்றியும் விடாது பற்றியும் அகத்துள்ள படையும் மதிலின் புறத்துள்ள படையும் தம்முள் ஆகியவற்றால் ஒத்திருத்தல் என்பார் நச்சினார்க்கினியர். இவ்வாறாக, மருதத்தின் புறனாக உழிஞை அமைகிறது.

4. நெய்தலும் தும்பையும்

நெய்தலும் தும்பையும் ஒன்றுவதற்கான காரணங்களாகக் கூறப்படுபவை இவை.

1.நெய்தலுக்குரிய அகன்ற மணல் போலவே காடும் மழையும் கழனியும் அல்லாத களரும் மணலும் பொருகளமாகிட வேண்டுமாதலானும் 2.பெரும்பொழுது வரைவின்மையானும் 3.ஏற்பாடு போர்த்தொழில் முடியும் காலமாதலானும் 4.இரக்கமும் தலைவிக்கே பெரும்பான்மை உரித்தானது போலக் கணவனை இழந்தார்க்கன்றி வீரர்க்கு இரக்கம் இல்லாமையானும் 5.அவ்வீரர் குறிப்பின் அருள்பற்றி ஒருவரை ஒருவர் நோக்கிப் போரின்கண் இரங்குபவாதலானும் 6.ஒருவரும் ஒழியாமல் இறந்துபட்டுழி, கண்டோர் இரங்குவராதலானும் நெய்தற்குத் தும்பை புறனாயிற்று என்பது நச்சினார்ச்சிக்கினியம்.

பலரும் ஒருவனை அணுகிப் போரிடுவதற்கு அஞ்சிச் சேய்மையில் நின்று அம்பினால் எய்தும், வேல்கொண்டு எறிந்தும் போர் செய்ய, அவர்கள் செலுத்தும் அம்பும் வேலும் அவ்வீரனது உடம்பில் வண்டியின் உருளையில் உள்ள ஆரக்கால்கள் போலச் செறிவாகத் தைத்தமையால் சிறிது ஒழியத் தேய்ந்த உயிரால் துளங்காது நிலைநின்ற உடம்பானது நிலத்தில் விழாமல் நிற்கும் நிலையும், வாளும் திகிரியும் முதலியவற்றால் ஏறுண்ட தலையோ உடலோ பெரிய நிலத்தைத் தீண்டாது எழுந்தாடும் உடம்பினது நிலையும் இருவகைப்பட்ட சிறப்பினை உடையது தும்பைத்திணை என்கின்றார் தொல்காப்பியர். இவ்வாறாக, மருதத்தின் புறனாக உழிஞை அமைகிறது.

5.பாலையும் வாகையும்

வாகையினைப் பற்றிய நச்சினார்க்கினியர் விளக்கம் இங்கு நோக்கத்தக்கது. குற்றமற்ற கொள்கையினரால் தத்தமக்குரிய அறிவு ஆண்மை, பெருமை முதலிய ஆற்றல் கூறுபாடுகளை ஏனையோரினும் வேறுபட மிகுத்து மேம்படுத்தல் வாகை என்னும் ஒழுக்கமாம். நச்சினார்க்கினியர், 'வலியும் வருத்தமும் இன்றி இயல்பாகிய ஒழுக்கம்தானே' என்பதாக உரை வகுக்கிறார். பாலையதன் புறன் வாகையெனக் கூறுதற்குக் காரணங்கள் கீழ்வருமாறு:

1.பாலை தனக்கென நிலமின்றி நானிலத்திலும் நடப்பதுபோல வாகையும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்னும் புறத்திணை நான்கன் இடமாக நடக்கின்றது. தனக்கென நிலம் இன்றாகின்றது. 2.பாலைக்குப் புணர்ச்சியில் நீங்கி இல்லறம் நிகழ்த்திப் புகழெய்துதற்குப் பிரியுமாறுபோலச் சுற்றத் தொடர்ச்சியின் நீங்கி அறப்போர் செய்து துறக்கம் பெரும் கருத்தினால் செல்லுதலானும் வாளினும் தாளினும் நிறையினும் பொறையினும் வென்றி எய்துவோரும் மனையோரை நீங்கிச் செல்லுதலானும் பிரிவு உளதாகின்றது. 3.நாளும் நாளும் ஆள்வினை அழுங்க இல்லிருந்து மகிழ்வோர்க்கு இல்லையால் புகழ் என ஆள்வினைச் சிறப்பினைக் கூறிப் பிரியுமாறு போல இதற்குத் துறக்கமே எய்தும் ஆள்வினைச் சிறப்புக் கூறுதலும் உளதாகிறது 4.பாலை பெருவரவிற்றாய் வருகின்றது. இவ்வாறாக, பாலையின் புறனாக வாகை அமைகிறது.

முடிவுரை

புறத்திணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு துறையையும் கூர்ந்தாய்வு செய்திடுகையில் அவற்றின் உள்ளார்ந்த கருத்தியல்கள் அகத்திணையில் உள்ள உணர்ச்சிக் கூறுகளுக்குப் பெரிதும் பொருந்துவதைக் காண முடியும். புறத்திணைகளின் துறைகளை ஆய்ந்து அகத்திணைகளோடு இயைந்து வருவதை இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, வெட்சி குறிஞ்சிக்கும் வஞ்சி முல்லைக்கும் உழிஞை மருதத்துக்கும் தும்பை நெய்தலுக்கும் வாகை பாலைக்கும் புறனாக அமைவதை இக்கட்டுரை ஐயமற விளக்குகிறது.

தொ.மா.க. 219

தொல்காப்பியர் சுட்டும் வண்ணமும் அருணகிரிநாதர் பாடல்களும்

முனைவர் கு. அகிலா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை தன்நிதிப் பிரிவு
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை - 59.
g.akila@mcc.edu.in

ஆய்வுச் சுருக்கம்

தொன்மையும் வளமையும் கொண்ட தமிழ் மொழியின் பெருமையைப் பறைசாற்றும் தமிழர் வாழ்வியல் களஞ்சியமே தொல்காப்பியம்.எழுத்து, சொல், பொருள் ஆகிய மும்மை அதிகாரப் பகுப்புடன், ஒன்பது இயல்களுடன் 1611 நூற்பாக்களோடு விளங்கும் ஒப்பறு இலக்கண நூல் தொல்காப்பியம்.

பொருள் அதிகாரத்தின்கண் சொல்லப்பட்டுள்ள இயல்களுள் எட்டாவதாக மொழியப்படுவது செய்யுளியல். எழுத்து, அசை, சீர், அடி, யாப்பு ,தூக்கு ,தொடை, நோக்கு, பா,வனப்பு ,வண்ணம் முதலான செய்யுள் உறுப்புகளோடு செய்யுளுக்குரிய பொருளையும் வரையறை செய்யும் விதமாக இவ்வியல் அமையப்பெற்றுள்ளது . தொல்காப்பியர் உரைக்கும் 34 வகை செய்யுள் உறுப்புக்களுள் 26 ஆவதாகச் சுட்டப்பெறுவதே வண்ணம் எனும் உறுப்பு. ஒலி வேறுபாட்டை உணர்த்தி ஓசையை ஒழுங்கமைதி செய்து பாட்டிற்கு உயிராய்நின்று இசைப்பதே வண்ணம்.

தொல்காப்பியர் சுட்டுகின்ற வண்ணம் என்பது குறித்தும், இருபது வகையான வகைமைகள் குறித்தும், சந்தம் எனும் சொல்லாடல் குறித்தும் இவ்ஆய்வுக்கட்டுரை விளக்க முற்படுகிறது. மேலும் இலக்கியங்களில் அணிசெய்யும் வண்ணப் பாக்கள் குறித்தும் குறிப்பாகச் சந்தக்கவிராசரான அருணகிரிநாதரின் படைப்புக்களான திருப்புகழ், திருவகுப்பு ,கந்தர்அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, திருஎழுகூற்றிருக்கை ஆகியவற்றில் மிளிரும் வண்ணப் பாடல்களை விளக்கமாக எடுத்துரைப்பதே இவ்ஆய்வினுடைய மையப் பொருண்மையாகும்.

முன்னுரை

தொன்மையும் வளமையும் கொண்ட தமிழ் மொழியின் பெருமையைப் பறைசாற்றும் தமிழர் வாழ்வியல் களஞ்சியமே தொல்காப்பியம். எழுத்து, சொல், பொருள் ஆகிய மும்மை அதிகாரப் பகுப்புடன் ஒன்பது இயல்களுடன் 1611 நூற்பாக்களுடன் விளங்கும் ஒப்பறு இலக்கண நூலே தொல்காப்பியம். தொல்காப்பியத்தில் பொருள் அதிகாரத்தின் கண் அமைந்துள்ள எட்டாவது இயலே செய்யுளியல் .இவ்வியலில் யாப்பின் உறுப்புக்களான மாத்திரை ,அசை, சீர், தூக்கு பா, வண்ணம் முதலான 34 உறுப்புகளை குறித்து விரித்துரைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் வண்ணம் எனும் செய்யுள் உறுப்பு குறித்தும் வண்ணத்தின் வகைகள் குறித்தும் வண்ணமும் சந்தமும் குறித்தும், இயற்பா இசைப்பா வேறுபாடுகள் குறித்தும் இக்கட்டுரை விவரிக்கின்றது. தொல்காப்பியர் சுட்டும் 20 வகை வண்ணம் தொடர்பான செய்திகளையும் அவ்வண்ணங்கள் அருணகிரிநாதரின் பாடல்களில் பொருந்தி மிளிர்கின்ற தன்மை குறித்தும் எடுத்தியம்பி ஆய்வுக்கு உட்படுத்துவதே இக்கட்டுரையின் மைய நோக்கமாகும்.

- வண்ணம் - விளக்கம்
- இயற்பாவும் இசைப்பாவும்
- வண்ணமும் சந்தமும்
- அருணகிரிநாதர் பாடல்களில் மிளிரும் வண்ணங்கள்

எனும் பகுப்புகளை உள்ளடக்கியதாக இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

செய்யுளின் முருகியல் தன்மையை வெளிக்கொணரும் ஒலிக்கூறுகளே வண்ணம் எனப்படுகிறது. ஆசு வல்லவர்க்கும் வண்ணம் புலியா என்பது முதுமொழி அத்தகைய கடின தன்மை கொண்ட வண்ணப் பாடல்களை புனைவதும் அவற்றை விளங்கிக் கொள்வதும் சவாலுக்கு உரியதே.வண்ணம் எனும் சொல்லாடல் குறித்த தனியான சிறப்பான விளக்கம் தொல்காப்பியத்தில் இடம் பெறவில்லை.ஆயினும் பேராசிரியர், வெள்ளைவாரணர் முதலான உரையாசிரியர்களின் விளக்கங்கள் கூர்ந்து நோக்கத்தக்கது. இளம்பூரணர் உரையில் வண்ணம் என்பதற்கான விளக்கம் தனியாகக்குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. மேலும் யாப்பியல் நூல்களில் வண்ணம் குறித்த செய்திகள் ஒழிபியலில் மட்டுமே இடம்பெற்றுள்ளன எனும் கருத்து "தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள் உரையாசிரியர்களின் நோக்கு" எனும் நூலின் வழி பெறப்படுகிறது. வண்ணம் எனும் சொல்லாட்சி குறித்த உரையாசிரியர்களின் விளக்கங்கள் வருமாறு

பேராசிரியர்	வண்ணம் என்பது ஒரு பாவின் கண்ணே நிகழும் ஓசை விகற்பம்
நச்சினார்க்கினியர்	ஓசை விகற்பம்-வண்ணம்; ஒரு பாடலின் கண் நிகழும் ஓசை சந்த வேறுபாடே வண்ணம்
வெள்ளைவாரணர்	வண்ணம் நூறும் அதற்கு மேலும் என்போர் யாப்பருங்கல ஆசிரியர் முதலியோர் அன்னோர் கூறும் வண்ணங்கள் யாவும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய வண்ணங்களில் அடங்கும்.
பாலசுந்தரம்	வண்ணம் ஓசை நடை
தேவநேயப் பாவாணர்	எழுத்தொத்த அடிகளைக் கொண்ட பாட்டொலி
பஞ்ச மரபு (இசை நூல்)	வண்ணம் என்பது நிறமாகவும் பாட்டின் கண்ணே நிகழும் ஓசை விகற்பமாகவும் திகழ்கிறது

இயற்பாவும் இசைப்பாவும்

பாடல்களின் கலைநயம் சார்ந்த உறுப்பாக வண்ணம் திகழ்வதாக அறிஞர்கள் உரைத்துள்ளனர்.பல்வேறு அறிஞர்களின் கருத்துப்படி வண்ணம் என்பது ஓசை விகற்பமாகவும் ஒலிக்கூறுகளின் பண்பினை அளக்கும் கருவியாகவும் பாட்டினை மெருகேற்றி இனிமை நல்கும் இசைக் கூறாகவும் வண்ணம் விளங்குவதை உணர முற்படலாம். இவ்வாறாக இயற்றமிழ் நூல்களிலும் இசைத்தமிழ்

நூல்களிலும் வண்ணம் எனப்படும் ஓசைகளின் சேர்க்கையாகப் பயின்று வந்தாலும் பல இடங்களில் ஒன்றுபட்டும் வளர்ச்சிநிலையில் சிற்சில இடங்களில் மாற்றம் கொண்டும் விளங்கும் தன்மையை பேரறிஞர்களின் ஆய்வுகளிலிருந்து அறிய முற்படலாம்.

வண்ணம் எனும் ஒலிக்கூறு இயற்தமிழிலும் இசைத் தமிழிலும் இணைந்து வருகின்ற போக்கினை யாப்பிலக்கண நூல்களிலும் இசை இலக்கண நூல்களிலும் காணலாம். தொல்காப்பியர் குறிப்பிடும் சில வண்ணங்களான வல்லெழுத்து மிக்கு பயின்று வரும் வல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிக்கு பயின்று வரும் மெல்லிசை வண்ணம் இடையின எழுத்து மிக்கு பயின்று வரும் இயைபு வண்ணம் முதலான வண்ணங்கள் இசைத்தமிழுக்கும் பொருந்துவனமாகவே உள்ளன.

அறிவனார் இயற்றிய பஞ்ச மரபு என்னும் இசைப்பனுவலிலும் ,சிகண்டியார் இயற்றிய இசை நுணுக்கம் எனும் நூலிலும் வண்ணம் இசைப்பாவினுடைய உறுப்பாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.இயற்தமிழ் மற்றும் இசைத்தமிழ் இவ்விரண்டிலும் ஓசை விகற்பமாக வண்ணப் பாடல்கள் இயற்றப்பட்டிருப்பினும் சில வேறுபாடுகளும் தோன்றவே செய்துள்ளன அவற்றுள் ஒரு சில பின்வருமாறு:

இயற்றமிழ்	இசைத்தமிழ்
எழுத்துக்கள் அளபெடுக்கும்	எழுத்துக்கள் அளபெடுப்பது அரிது
ஓசைக்கு அளவு முறைமை உண்டு	அளவு கடந்தும் ஒலிக்கும் (கந்தவே……ளே)(தம்பிரா….னே)
கூறியது கூறல் எனும் பண்புக்கூறு குறைவு	இசை இன்பம் கருதி சொற்களை மீண்டும் மீண்டும் கூறுதல்
சீர் வாய்ப்பாடு கொண்டு நிறைவு பெறுதல் (மா,விளம்)வெண்பா ஆசிரியப்பா முதலான பாவினங்களில் வண்ணம் பயின்று வரும்	தாளம் கணக்கிட்டு நிறைவு பெறுதல்; அடிகளில் வைப்பு , நடை முதலான கூறுகளில் வண்ணம் பயின்று வரும்.
யாப்பு நூல்களில் தனிச்சொல் எனும் சொல்லாட்சி குறிப்பிடப்படுவதுண்டு (நெல்லுக்கிறைத்த நீர்…..செய்யுளில் தொல்லுலகில் என்பது தனிச்சொல்)	தூங்கல் தாழிசை எனும் அமைப்பு முறை குறிக்கப்படுகிறது.இது கண்டிகை என அழைக்கப்படும் கைத்தல நிறைகனி எனும் திருப்புகழில் அச்சிறு முருகனை அக்கண மணமருள் பெருமாளே (பெருமாளே -தொங்கல்

இவ்வாறாக இயற்றமிழ் நூல்களிலும் இசைத் தமிழ் நூல்களிலும் வண்ணம் எனப்படும் ஓசை விகற்பம் பயின்று வந்தபோதிலும் சில இடங்களில் வேறுபட்டும் பல இடங்களில் ஒன்றுபட்டும் அமைந்துள்ள திறனை உணரலாம்.

வண்ணமும் சந்தமும்

ஒலிகளின் அடிப்படையில் உற்று நோக்கும்போது வண்ணம் தாமே நாலைந்து என்ப"(செய்யுளியல்நூற்பா-204) எனத் தொல்காப்பியர் சுட்டும் பாஅ வண்ணம் முடுகு வண்ணம் ஈறாகச் சொல்லப்படும் இருபது வகையான வண்ண வகைமையே காலத்தால் முற்பட்டது . அவ்வண்ணங்களின் நீட்சியே சந்தம். சந்தம் எனும் சொல்லாட்சியே தற்போது புழக்கத்தில் வழக்கமாக இருக்கின்றது.இசைத்தமிழ்

நோக்கில் மாற்றங்கள் சில இருப்பினும் வண்ணப் பாடல்கள் மரபின் தொடர்ச்சியே சந்தப்பாடல்கள் என்பது மறுக்க இயலா உண்மை.

வண்ணமும் சந்தமும் குறித்து ஒப்பீட்டுநோக்கில் செய்யப்பெற்ற பல்வேறுஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட செய்திகள் கீழ்க்கண்டவாறு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

- ஓசைகளை அலகிடும் கருவியாகச் சந்தம் விளங்குகிறது. வண்ணமே சந்தம்
- இதுஓசைகளைக் கூறுபடுத்தி இயல்,இசை , நாடகத் துறைகளில் உணர்ச்சிகளை மேலோங்கச் செய்கிறது .
- சந்தம் பாட்டிற்கு முருகியலைத் தருவதால் இது அழகு என்றும் வழங்கப்படுகிறது. ஓசையும் அழகும் ஒருங்கே இணைந்து சந்தப்பாக்களாக மிளிர்கின்றன.
- சங்க இலக்கியம் ,அற இலக்கியம், காப்பிய இலக்கியம் பக்தி இலக்கியம் ,சிற்றிலக்கியம் ,சித்தர் பாடல்கள் ,தனிப்பாடல்கள் என இலக்கிய வகைமைகள் அனைத்திலும் சந்தக்கூறுகள் நீக்கமற நிறைந்துள்ளன.
- நாட்டார் வழக்காற்றியல் பாடல்களில் (சிந்து,கும்மி,வில்லுப்பாட்டு, கதைப்பாட்டு) இடம்பெறும் பாடல்களில் சந்தநயமே இசை இன்பத்தை நிறைத்து கருத்துப்புலப்பாட்டிற்கு வழிவகுக்கிறது. (சான்று : தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட...)
- "சந்தஸ்" எனும் வடமொழிச்சொல்லின் திரிபாகச் சந்தம் எனும் சொல் வந்ததாக வடமொழி வல்லுநர்கள் கருத்துரைத்துள்ள போதிலும் இது முற்றிலும் தமிழ்ச்சொல்லாகவே இசை அறிஞர்கள் சான்றுகள் காட்டி நிறுவியுள்ளனர்.
- ("சந்தி ,சந்திப்பு , சந்தித்தல் முதலிய சொற்கள் சந்து எனும் வேர்ச்சொல்லிருந்து பிறந்து சேர்தல் என்ற பொருண்மை பெறும்" - வீ.ப.கா சுந்தரம்)
- சந்தத்திற்கு அடிப்படையாக அமைவன வன்மை, மென்மை அசைகள். அசைகள் இடைவெளி விட்டு திரும்பத்திரும்ப வருகின்ற பொழுது சந்தம் தோன்றும் (உம். தத்த தத்த தந்த தந்த தன தன)

சந்தஅமைப்பிற்கு ஆறு உறுப்புகள் அடிப்படையாக அமைந்துள்ளன. அவையாவன:

சந்தம்	அசைகள் ஒரே அளவுடன் இடைவெளி விட்டு வருதல்
துள்ளல்	கலிப்பாவின் ஓசையாக பயின்று வருதல்
குழிப்பு	பல துள்ளல்கள் சேர்ந்து பிறப்பது
தொங்கல்	மூன்று குழிப்புகளுக்குப் பின் தனிச்சொல் போலத் தோன்றுவது
கலை	தொங்கல் ஒரு கலை
அடி	இரண்டு கலைகள் அமைவது அடி. எட்டு கலைகள் சேரப் பிறப்பது வண்ண விருத்தம்.

ஆறு வகையான அடிப்படை உறுப்புகளைக் கொண்டு பிறக்கின்ற சந்தங்களை இரண்டு வகையாகப் பகுப்பர்.அவையாவன:

முதற்சந்தம் (8 வகை)

தத்த, தாத்த, தந்த, தாந்த, தன, தான, தன்ன, தய்ய

சார்புச் சந்தம் (8 வகை)

தத்தா, தாத்தா, தந்தா, தாந்தா, தனா, தானா, தன்னா, தய்யா

- இந்தச் சந்தங்கள் செய்யுளில் ஒன்றோடொன்று விரவி கலப்புச் சந்தமாகவும் உருப்பெறும் (சான்று :தனத்த ,தத்தன....)
- செப்பல்,அகவல்,துள்ளல்,தூங்கல் எனும் ஓசைகள் சந்தப்பாடல்களில் இடம்பெற்றிருந்த போதிலும் முடுக்கு ஓசையான துள்ளல் ஓசையே பெரும்பான்மையாகப் பயின்று வந்தள்ளதாக
- செப்பல்,அகவல்,துள்ளல்,தூங்கல் எனும் ஓசைகள் சந்தப்பாடல்களில் இடம்பெற்றிருந்த போதிலும் முடுக்கு ஓசையான துள்ளல் ஓசையே பெரும்பான்மையாகப் பயின்று வந்தள்ளதாக அறிஞர்கள் சுட்டியுள்ளனர்.
- மேலும் சந்தப்பாக்களில் பயின்றுவரும் தன மற்றும் தனா என்ற அசையைக் கொண்ட சந்தத்தைத் தவிர்த்து பெரும்பாலும் நேர் அசைகளால் ஆகி தேமா எனும் ஈரசைச்சீரைப் பெற்று வரும்.
- சான்று:தத்த>நேர்/நேர்=தேமா
- சந்தங்கள் கலந்து வருகையில் தோன்றும் மூவசைச் சீர் ,நாலசைச் சீர்களைச் " சந்தக்குழிப்பு" என்பர் சான்று: தானத்தன>தா/னத்/தன> நேர்/நேர்/ நிரை= சந்தக்குழிப்பு
- வெண்பா, கலிப்பாவில் இடம்பெறும் 'தனிச்சொல்' எனும் கூறு சந்தப்பாடல்களில் "தொங்கல்" எனும் பெயராக இடம்பெறுகின்றது.அருணகிநாதரின் சந்தப்பாக்களே இதற்குச் சான்று. (பெருமாளே , அருள்வோனே.... திருப்புகழ்). சந்தப்பாடல்களைக் கணக்கிடுவதற்கு மாத்திரையளவுகள் சொல்லப்பட்டுள்ளன.

குறில்- = 1 மாத்திரை
நெடில். = 2 மாத்திரை
குறில் ஒற்று =2 மாத்திரை
நெடில் ஒற்று = 2 மாத்திரை
ஐ,ஔ = 1 மாத்திரை

குறிப்பு:{நேரசை,நிரையசை தவிர்த்து இடம் பெறும் ஒற்றெழுத்துகள் சந்த மாத்திரை பெறுவதில்லை.சில சமயம் இறுதிச் சீர் ஆக குறில் வருகையில் தாளம் கருதி நெடில் போல் 2 மாத்திரையாகக் கொள்ளப்படும்}

சங்க இலக்கியப் பாடல்களின் யாப்புநடை சந்தப் பாடல்களுக்கு ஆதாரமாய்த் திகழ்கின்றன. யாப்பின் தொடைஅமைப்பை தழுவியே சந்தப்பாடல்கள் இயற்றப்படுள்ளன.தளைகள் அமையப்பெற்றிருக்கும் சந்தப்பாக்கள் வெகு குறைவே.

திருப்புகழ்ப்பாடல்களில் பயின்று வந்துள்ள சந்தங்களை ஆராய்ந்த இசை வல்லுநர்கள் அவை மூன்று மூன்றாக ,நான்கு நான்காக ,ஐந்து ஐந்தாக,ஏழு ஏழாக ,ஒன்பது ஒன்பதாகத் தனித்தோ இணைந்தோ வருகையில் அவற்றிற்கான தாள சொற்கட்டுகளைப் பொருத்தி கணக்கிட்டனர்.

{தனதன>தகதிமி>நான்கன்மானம்>சதுச்ர நடை}.

தாளக்கருவிகளான, மத்தளம், முழவு, பேரி, திமிலை, தட்டுப்பறை

முதலான கருவிகளுக்கு ஏற்பவும் சந்தங்கள் இசைக்கப்படுவதாக சந்த ஆராய்ச்சியாளர் மோகனரங்கன் பதிவு செய்துள்ளார். சான்று: (தனத்தன தனத்ததந் திமிதிமிதிமிதிந் தகுத்தகுதகுதந் தனபேரி..(திருப்புகழ்269)

பண்டைக்காலம் தொட்டே யாப்பும் சந்தமும் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்தே சொல்லப்பட்டுள்ளன. தொல்காப்பியம் கூறும் வண்ணம் எனும் செய்யுளின்உறுப்பே பிற்காலத்தில் சந்தப் பாடல் அமைப்பு தோன்றுவதற்கு காரணமாகவும் அடிப்படையாகவும் விளங்கியது எனலாம்.

இசைத்தமிழின் இலக்கணத்தைக் கருத்தில் கொண்டு பாடல்களில் ஒருசில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றாலும் அவை வரவேற்கத்தக்கதே என்பதே முத்தமிழ் வல்லுநர்களின் ஒருமித்த கருத்தாகும்.

அருணகிரிநாதர் பாடல்களில் மிளிரும் வண்ணங்கள்

சந்தம் கொண்டு கவிப்புணைந்து இசையால் இறைவனை பாடிப் பரவியவர் அருளகிரிநாதர் ஒலிக் கூறுகளில் புதுமை தன்னை புகுத்தி ஏராளமான சந்தப் பாடல்களைப் புனைந்தவர். இயல் இசை நாடகம் என முத்தமிழ் கூறுகளையும் கற்றுணர்ந்த அவரின் புலமைக்கும் பக்திக்கும் சான்றாய் நிற்பன அவரது படைப்புக்களே !திருப்புகழ் திருவகுப்பு கந்தர்அந்தாதி கந்தர்அனுபூதி கந்தர் அலங்காரம் திருஎழுகூற்றிருக்கை வேல்மயில்சேவல் விருத்தங்கள் ஆகிய பக்திப் பனுவல்களின் பாடல்கள் அனைத்தும் வண்ண பாடலாய் மிளர்கின்றன.

தொல்காப்பியர் பகரும் வண்ணங்கள்

அவைதாம்,
பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகு வண்ணம் என்று
ஆங்கு என மொழிப அறிந்திசினோரே. (நூற்பா-205)

எனும் நூற்பாவின்வழி வண்ணம் இருபது வகைமைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.

பாஅ வண்ணம்
தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம்
மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம்
அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம்
குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம்
நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம்
புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம்
ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம்
அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம்
ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம்
முடுகு வண்ணம்

நிரல்படுத்தப்பட்ட இவ்வகைமைகளை ஐந்து வகைக்கூறுகளாக வகுப்பது குறித்து ஆய்வறிஞர் சோ.ந.கந்தசாமி பதிவுசெய்கையில்,

"தொல்காப்பியர் கூறும் வண்ணங்கள் அனைத்தும் அவர் பயின்ற இலக்கியங்களில் அமைந்திருந்தவை என்று கருதுதல் வேண்டும் அவருக்கு முற்பட்ட இலக்கண நூல்களிலும் அவை இருந்தவை எனலாம் பா வண்ணம் முதல் முடுகு வண்ணம் முடிய உள்ள 20 வண்ணங்களையும் வரலாற்று முறையால் கூறினர் என்பவர் உரையாசிரியர்கள் அவற்றின் அமைதியை நுணுகி நோக்கின் சில அடிப்படைக் கொண்டு அவ்வண்ணங்களை பாகுபடுத்தி உள்ளார் என்பது புலனாகும்"1 எனக் குறிப்பிட்டுள்ளார். அவை முறையே

எழுத்து அடிப்படையில் அமைந்தவை -

- ஒன்பது வண்ணங்கள் (வல்லிசை, மெல்லிசை, இயைபு அளபெடை, நெடுஞ்சீர், குறுஞ்சீர், சித்திரம், நலிபு, அகைப்பு)
- ஓசை அடிப்படையில் உள்ளவை- ஐந்து வண்ணங்கள்(ஒழுகிசை, தூங்கல், ஏந்தல், உருட்டு, முடுகு)
- பொருள் அடிப்படையில் -மூன்று வண்ணங்கள்(அகப்பாட்டு ,புறப்பாட்டு ,எண்)
- தொடை அடிப்படையில்- இரண்டு வண்ணங்கள்(தாஅ, ஒரூஉ)
- சீரடிப்படையில்- ஒரு வண்ணம்(பாஅ வண்ணம்)

இவ்வடிப்படையில் அருணகிரிநாதரின் பாடல்களைப் பகுத்து ஆய்வுக்குட்படுத்திய திறத்தினை இப்பகுதி எடுத்தியம்புகிறது.

எழுத்து அடிப்படையில் அமைந்த வண்ணங்கள்
வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.(நூற்பா-208)

வல்லிசை வண்ணம்-க் ச் ட் த் ப் ற் ஆகிய எழுத்துகள் பாடலின்கண் மிக்கு பயின்றுவரல்)

1கைத்தலநிறைகனி அப்பமோடவல்பொரி
கப்பிய கரிமுக அடிபேணி,
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ கற்பகமெனவினை கடிதேகும்
திருப்புகழ்-)

2.முத்தைத்தரு பத்தித்திரு நகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர எனவோதும்(முதல் திருப்புகழ்)

3.பத்தித் துறையிழந் தான்ந்த வாரி படிவதினால்
புத்தித் தரங்கங்கத் தெளிவதென்றோபொங்குவெங்குருதி
(கந்தர் அலங்காரம் -35ஆவது பாடல்)

4.திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்த

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே (கந்தர் அந்தாதி54)

மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே. (நூற்பா-209)

மெல்லிசைவண்ணம்-(ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்ஆகியஎழுத்துக்கள் பாடலின்கண் மிக்கு பயின்றுவரல்)

1.சந்ததம் பந்தத் ..... தொடராலே
சஞ்சலந் துஞ்சித் ..... திரியாதே
கந்தனென் றென்றுற் ..... றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் ..... றிடுவேனோ(திருப்புகழ்-13)

2.தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் ..... கொஞ்சவேநின்
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடம ணைந்துநின் ..... றன்புபோலக்
கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் ..... சிந்துவேலும்(திருப்புகழ்-62)

3.நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானைபதம் பணிவாம்(கந்தர் அனுபூதி-காப்புப்பாடல்)
இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.(நூற்பா-210)

இயைபு வண்ணம் - (ய்,ர்,ல்,வ்,ழ்,ள் ஆகிய எழுத்துக்கள் பாடலின்கண் மிக்கு பயின்றுவரல்)

1.அல்லிவிழி யாலு முல்லைநகை யாலு
மல்லல்பட ஆசைக் ..... கடலீயும்
அள்ளவினி தாகி நள்ளிரவு போலு
முள்ளவினை யாரத் ..... தனமாரும்(திருப்புகழ்-530)

2.உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய்வருவாய்அருள்வாய்குகனே(கந்தர் அனுபூதி-54)

3.விழிக்குத்துணை, திருமென் மலர்ப்பாதங்கள், மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை, முருகா எனும் நாமங்கள், முன்பு செய்த
பழிக்குத் துணை, அவன் பன்னிரு தோளும், பயந்த தனி
வழிக்குத் துணை, வடிவேலும்செங்கோடன் மயூரமுமே!
(கந்தர் அலங்காரம் -70)

நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.(நூற்பா- 212)

நெடுஞ்சீர் வண்ணம்-நெடில் எழுத்துகள் பாடலில் விரவிவருதல்)

1.பாலோ தேனோ பலவுறு சுளையது
தானோ வானோர் அமுதுகொல் கழைரச
பாகோ வூனோ டுருகிய மகனுண ..... வருண்ஞானப்

பாலோ வேறோ மொழியென அடுகொடு
வேலோ கோலோ விழியென முகமது
பானோ வானூர் நிலவுகொ லெனமகண் ..... மகிழ்வேனை(திருப்புகழ் -822)

2.வேதா கமசித்ர வேலாயுதன் வெட்சிபூத்தண்டைப்
பாதார விந்தம் அரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான மற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மாதிரி யாதொரு பூதர்க்குமே கந்தர் அலங்காரம் -17

2.குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும். (நூற்பா-213)

குறுஞ்சீர் வண்ணம்- குறில் எழுத்துகள் பாடலில் விரவிவருதல்)

1.இருவினை யஞ்ச மலவகை மங்க
இருள்பிணி மங்க ..... மயிலேறி
இனவரு ளன்பு மொழியக டம்பு
வினதக முங்கொ ..... டளிபாடக்
கரிமுக னெம்பி முருகென ணண்டர்
களிமலர் சிந்த ..... அடியேன்முன்
கருணைபொ ழிந்து முகமும லர்ந்து
கடுகிந டங்கொ ..... டருள்வாயே(திருப்புகழ்-401)

2.நிறைமதி முகமெனு ..... மொளியாலே
நெறிவிழி கணையெனு ..... நிகராலே
உறவுகொள் மடவர்க ..... ளுறவாமோ
உனதிரு வடிவியினி ..... யருள்வாயே
மறைபயி லரிதிரு ..... மருகோனே
மருவல ரசுரர்கள் ..... குலகாலா
குறமகள் தனைமண ..... மருள்வோனே
குருமலை மருவிய ..... பெருமாளே.(திருப்புகழ்-225)

3.பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன் மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே.(கந்தரலங்காரம்- 67)

சித்திர வண்ணம்

நெடியவும் குறியவும் நேர்ந்து உடன் வருமே.(நூற்பா- 214)

சித்திர வண்ணம்- நெடில்குறில் எழுத்துகள் பாடலில் விரவிவருதல்)

1. வாசித்து காணாணாதது பூசித்து கூடாணாதது
வாய்விட்டு பேசாணாதது நெஞ்சினாலே
மாசற்கு தோணாணாதது நேசற்கு பேராணாதது
மாயைக்குச் சூழாணாதது விந்துநாதம் (திருப்புகழ்561)

2. தீராப் பிணிதீர சீவாத் ..... துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் ..... கருள்வாயே

பாரோர்க் கிறைசேயே பாலாக் ..... கிரிராசே
பேராற் பெரியோனே பேரூர்ப் ..... பெருமாளே (திருப்புகழ்957)

3.தேனென்று பாகென் றுவமிக் கொணாமொழித் தெய்வ வள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே. (கந்தர் அலங்காரம்-9ஆவது பாடல்)

ஓசை அடிப்படையில் அமைந்த வண்ணங்கள்

ஒழுகு வண்ணம் ஓசையின் ஒழுகும். 218

ஒழுகு வண்ணம்-ஒழுகிய ஓசையால் நீரோடை போல செல்லும் நிலைப்பாட்டை உடையது

1.நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம ..... வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரீ பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம ..... பரசூரர் (திருப்புகழ்-170)

2.அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளீ தானாட - அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள - மவையாட
மதுர வாணீ தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட - மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி - வரவேணும் (திருப்புகழ்-1053)

ஏந்தல் வண்ணம்

சொல்லிய சொல்லின் சொல்லியது சிறக்கும். 223

ஏந்தல் வண்ணம்- ஒரே சொல் மிகுதியாக இடம்பெற்று பாடலை அணி செய்யும்

1.அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ்மீற ..... வருளாலே

அந்தரியொ டுடனாடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு ..... மகிழ்வாக

மண்டலமு முநிவோரு மெண்டிசையி லுளபேரு
மஞ்சினனு மயனாரு ..... மெதிர்காண

மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
மைந்துமயி லுடனாடி ..... வரவேணும்..(திருப்புகழ்-736)

2. ஆனபய பக்திவழிபாடுபெறு முத்தியது
வாகநிகழ் பத்தசன வாரக் காரனும்
ஆரமது ரித்தகனி காரணம் தற்றமைய
னுருடனு ணக்கைபரி தீமைக் காரனும்
ஆகமம்வி ளைத்தகில லோகமு நொடிபளவில்
ஆசையாடு சுற்றுமதி வேகக் காரனும்
(திருவேளைக்காரன் வகுப்பு1,2,3)

உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்.(நூற்பா- 224)

உருட்டு வண்ணம் - குறில்எழுத்துகள்அதிகமாகப் பயின்றும், அராகம் (நான்குசீர்களுடன் ஈரடி அல்லது அதற்கு மேற்பட்ட அடிகளில் குறிலிணை வருதல்- [இருகுறில்-நிரையசை])பயின்றும்,உருண்ட ஓசையுடன் விரைவுதன்மையை உணர்த்தியும் பாடல்கள் அமைந்திருக்கும்.பொதுவாக போர்க்கள நிகழ்வை விறுவிறுப்புடன் எடுத்துக் கூறும் தன்மையைப் பெற்றிருக்கும்.

1.சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவர் ருயிர்க்குஞ் ..... சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் ..... றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் ..... பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் ..... செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் ..... தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் ..... கொடுசூரர்..(திருப்புகழ்-269)

2.உததியிடை கடவும்மர கதவருண குலதுரக
உபலளித கனகரத சதகோடிசூரியர்கள்
உதயமென அதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவில் இருள்அகல ஒருசோதிவீசுவதும்....
(திருவகுப்பு-சீர்பாத வகுப்பு-1,2)

3. முடுகு வண்ணம்

அடி இறந்து ஓடி அதன் ஓரற்றே.(நூற்பா-225)

முடுக்கு வண்ணம்- நான்கு சீர்களுக்கும் அதிகமாகச் சீர்கள் பெற்று அராகத்தோடு பயின்று வரும்.

1.பரிமள மிகவுள சாந்து மாமத
முருகவிழ் வகைமலர் சேர்ந்து கூடிய
பலவரி யளிதுயில் கூர்ந்து வென்று முகில்போல(திருப்புகழ் 375)

2.தரணியில்அரணிய முரண் இரணியன்உடல் தனைநக நுதிகொடு
சாடோங்குநெ டுங்கிரி ஓடேந்துப யங்கரி
தமருக பரிபுர ஒலிகொடு நடம்நவில் சரணிய சதுர்மறை
தாதாம்புய மந்திர வேதாந்தப ரம்பரை
திருவகுப்பு-தேவேந்திர சங்க வகுப்பு-1,2)

3.திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை
விருத்தனென உளத்திலுறை கருத்தன்மயில்
நடத்துகுகன் வேலே (வேல்வகுப்பு-16)

பொருள் அடிப்படையில் அமைந்த வண்ணங்கள்

எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும். (நூற்பா-220)

எண்ணு வண்ணம்-எண்கள் அடிப்படையிலும் எண்ணிக்கை அடிப்படையிலும் அமையும்.

1.இரவுபகற் பலகாலும் இயலிசைமுத் ..... தமிழ்கூறித்
திரமதனைத் தெளிவாகத் திருவருளைத் ..... தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே பரசிவதத் ..... துவஞானா
அரனருள்சற் புதல்வோனே அருணகிரிப் ..... பெருமாளே. (திருப்புகழ்528)

2.ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் ..... என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய ..... தென்றுநாளும் (திருப்புகழ்114)

3.ஒருபது மிருபது மறுபது முடனறு
முணர்வுற இருபத ..... முளநாடி
உருகிட முழுமதி தழலென வொளிதிகழ்
வெளியொடு வொளிபெற ..... விரவாதே (திருப்புகழ்245)

4.ஓர்உருவு ஆகிய தாரகப் பிரமத்து
ஒருவகைத் தோற்றத்து இருமரபு எய்தி
ஒன்றாய் ஒன்றி இருவரில் தோன்றி
முவாது ஆயினை! (திரு எழுகூற்றிருக்கை)

தொடை அடிப்படையில் அமைந்த வண்ணங்கள்

தாஅ வண்ணம்

இடையிட்டு வந்த எதுகைத்தாகும்-207

தாஅ வண்ணம்-ஓரடிவிட்டு ஓரடியில் எதுகை(இரண்டாம் எழுத்து)

தாவிநின்று அமைதல்.

1.அகரமும்ஆகி அதிபனும்ஆகி அதிகமும்ஆகி
அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி
அவர்மேலாய்
இகரமும்ஆகி எவைகளுமாகி இனிமையுமாகி
வருவோனே
இருநில மீதில் எளியனும்வாழ எனதுமுன்ஓடி
வரவேணும்....(திருப்புகழ்-1307)

2. அதிருங் கழல்ப ணிந்து ..... னடியேனுன்
அபயம் புகுவ தென்று ..... நிலைகாண
இதயந் தனிலி ருந்து ..... க்ருபையாகி
இடர்சங் கைகள்க லங்க ..... அருள்வாயே....(திருப்புகழ்-435)

3.வேதாள பூதமொடு காளிகா ளாத்ரிகளும்
வெகுளுறு பசாசகணமும்
வெங்கழு குடன்கொடி பருந்துசெம் புவனத்தில்
வெம்பசி ஒழிக்கவந்தே
ஆதார கமடமுங் கணபண வியாளமும்
அடக்கிய தடக்கிரியெலாம்
அலையநட மிடுநெடுந் தானவர் நிணத்தசை
அருந்திப் புரந்தவைவேல்
தாதார் மலர்ச்சுனைப் பழநிமலை சோலைமலை
தனிப்பரங் குன்றேரகம்.....(வேல் விருத்தம்-3)

ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும். 219

ஒரூஉ வண்ணம்-தொடைவகைகள் (எதுகை,இயைபு .....)

நீங்கியதாக (செந்தொடை)அமையப்பெறும்.

அடல்பு னைந்த வேலும் மயிலும் என்றும் வாழி
அரிய தொன்று கூற அருகி ருந்து கேண்மின்
அளவில் பலகாய மோடாடி அண்டர்
அறிய விளையாட லா(ம்)மூல ஒன்றில்(திருவகுப்பு-சித்துவகுப்பு 1,2)

தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்(நூற்பா 222)

தூங்கல் வண்ணம் - வஞ்சிப்பாவினுடையதூங்கலோசை பயின்றுவந்து அமையும்.

1.சடலை பட்டலை உடல் எனப்படு
தரும சித்திர கூடம் ஆனவை
தவிர நாட்கள் வெளியில் நிற்பன
சமய தர்க்கவி ரோத வாதிகள்
(திருவகுப்பு-திருஞானவேழவகுப்பு-1,2)

2.இருமல்உ ரோகம் முயலகன் வாதம்
எரிகுண நாசி விடமே நீ
ரிழிவுவி டாத தலைவலி சோகை
எழுகள மாலை இவையோடே...(திருப்புகழ்-243)

3.மதியால்வித் தகனாகி மனதாலுத் ..... தமனாகிப்
பதிவாகிச் சிவஞான பரயோகத் ..... தருள்வாயே
நிதியேநித் தியமேயென் நினைவேநற் .... பொருளாயோய்

கதியேசொற் பரவேளே கருவூரிற் ..... பெருமாளே.(திருப்புகழ்-931)

தொன்றுதொட்டு அக்காலம் முதற்கொண்டே வண்ணம் எனும் யாப்பின்உறுப்பு ஓசைக்கூறுகளையும் இசைக்கூறுகளையும் பாட்டினுள் உள்ளடக்கியதாய் விளங்கி பாட்டின் இனிமை தன்மையை மெருகேற்றச் செய்யும் மையக் காரணியாக விளங்குவதை உணர முற்படலாம்.அருணகிரிநாதர் பாடல்களில் மிகுதியாக பயின்று பெறும் வண்ணங்களே முதன்மை நோக்கில் இக்கட்டுரையினூடே ஆய்வு நோக்கில் ஆராயப் பெற்றுள்ளன. ஆய்வுக்குட்படுத்தப்படாத அளபெடை வண்ணம் அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம், பாவண்ணம், நலிபு வண்ணம், அகப்பு வண்ணம் ஆகிய ஆறு வண்ணங்கள் குறித்து எதிர்வரும் காலத்தில் ஆய்வுசெய்து தரவுகளை வெளிக்கொணருதல் அவசியம்.அத்தகைய ஆய்வுப் பதிவுகள் அருணகிரிநாதரின் பாடல்களில் புத்தொளி பாய்ச்சி தொல்காப்பியரின் வண்ணக் கோட்பாட்டினை வண்ணமுறச் செய்யும் என்பதில் சங்கையில்லை.

சான்றெண் விளக்கம்

1. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், (முதல் பாகம் - முதல் தொகுதி), ப. 272.

துணைநூற்பட்டியல்

1. தமிழ்யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் (முதல் பாகம்-முதற்தொகுதி) முனைவர் சோ.ந.கந்தசாமி, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு 1989.
2. தொல்காப்பியச்செய்யுள்உறுப்புகள் உரையாசிரியர்களின் நோக்கு கு.முதற்பாவலர், முத்தமிழ் நிலையம், முதற்பதிப்பு-2021.
3. தொல்காப்பியம்-பொருளதிகாரம்-இளம்பூரணர், பதிப்பாசிரியர் பேராசிரியர் மு.சண்முகம் பிள்ளை, பாரிநிலையம், முதற்பதிப்பு-1996.
4. திருப்புகழ் இசைவழிபாடு, திருப்புகழ் அன்பர்கள், புது தில்லி, முதற்பதிப்பு-1993
5. தமிழ்க்கவிதைகளில் சந்த அமைப்பு, டாக்டர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன், இராயல் பிரிண்டர்ஸ்,சென்னை, முதற்பதிப்பு-1991
6. திருவகுப்பு,வேல் மயில் சேவல் விருத்தங்கள், திருஎழுகூற்றிருக்கை, முனைவர் ம, இராமகிருஷ்ணன், திருப்புகழ்ச் சங்கமம், முதற்பதிப்பு-2012
7. திருப்புகழ்ச்செல்வம், வலையப்பேட்டை ரா., திருப்புகழ்ப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-2008
8. தொல்காப்பியச் செய்யுளியல் ஓர் அறிமுகம், பேரா.முனைவர் பெரு.தியாகராசன், கழக வெளியீடு, முதற்பதிப்பு-2011
9. தொல்காப்பிய ஆராய்ச்சி, பேராசிரியர் சி.இலக்குவனார், அபிராமி பதிப்பகம், முதற்பதிப்பு-2000
10. பஞ்சமரபில் இசை மரபு, முனைவர் அங்கயற்கண்ணி, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு-1984
11. உலகத் தமிழிசை ஆய்வுகள் (மூன்று தொகுதிகளும்), பதிப்பாசிரியர்கள், முனைவர் கோ.விஜய ராகவன், முனைவர் கு.சிதம்பரம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு-2019
12. தொல்காப்பியரின் வண்ணக்கோட்பாடும் சங்க இலக்கியமும், முனைவர்ப.ஞானமணி, காவ்யா வெளியீடு, முதற்பதிப்பு-2021
13. கம்பனில் இசைத்தமிழ், முனைவர் சு.அரிமளம் பத்மநாபன், உமா பதிப்பகம், முதற்பதிப்பு-2016.

நேர்காணல்

1. கவிஞர் சாமி. குருநாதன் கல்யாணி, ஆராய்ச்சியாளர், திருப்புகழ் மன்றம், குரோம்பேட்டை, 2016 (அக்டோபர் மாதம்)
2. முனைவர் எம்.ஏ பாகீரதி, இசைத்துறைத் தலைவர், இராணி மேரிக் கல்லூரி, 2024 (ஜூன் மாதம்)

தொ.மா.க. 221

தொல்காப்பியம் சுட்டும் பாவும் பொருண்மையும் - பாக்களின் வளர்ச்சியில் ஆசிரியப்பா

குமரகுரு கணபதிப்பிள்ளை
தமிழ் முதுமானி, கனடா.
kkana124@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பா என்பது ஓசையால் அமைவது. ஓசை வேறுபாட்டிற்கேற்ப அதன் பெயரும் வேறுபடுகின்றது. தொல்காப்பியம் ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலிப்பா என பாக்கள் நால்வகை1 எனக் கூறுகின்றது. இதில் ஆசிரியப் பா காதல், போர் ஆகிய பொருண்மைகளில் அகப்பொருள் பாடுவதற்குப் பயன்பட்டன. இவற்றைத் தொகை நூல் பாடல்களில் காணலாம். பொருண்மை மாற்றத்திற்கேற்ப ஆசிரியப்பா எவ்வாறு மாற்றமடைந்தது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியர் கலியும் பரிபாடலும் அகப்பொருள் பாடல் பாடுவதற்குச் சிறந்தவை2 என்று கூறினும், குறளடி முதல் கழிநெடிலடி ஈறாகிய பதினேழு நிலத்திலும் வருதல் இனிய ஓசையுடைமை, மிகுந்த அடிகளைக் கொண்டிருத்தல் என்பனவற்றால் தொல்காப்பியர் ஆசிரியப் பாவை முதலில் கூறினார்3.

சங்க காலத்தைத் தொடர்ந்து, சங்கம் மருவிய காலத்து மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றம் இலக்கியத்திலும் பிரதிபலிக்கின்றது. காதல், போர் என்பனவற்றுக்குப் பதிலாக மக்களுக்கு அறம் போதிக்க வேண்டிய தேவை முக்கியம் பெறுகின்றது. எனவே புலவர்கள் அறத்தைப் பொருண்மையாகக் கொண்டு பாடுவதற்கு வெண்பாவைப் பயன்படுத்துகின்றனர். பொருண்மைக்கேற்ப பாவும் மாற்றமடைவதைப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் காணலாம்.

அடுத்து புலவர்கள் மக்களின் நீண்ட வாழ்வியலைக் பாடுவதற்கு தனிப்பாடல்களுக்கு மாற்றீடாக தொடர்நிலைச் செய்யுள்களைப் பயன்படுத்தியுள்ளனர். இவற்றை சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரட்டைக் காப்பியங்களில் காணலாம்.

காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள், நாயன்மார்கள், ஆவ்வார்கள், சமண பௌத்த துறவிகள் எனப் பல்வகைப்பட்டோர் இறைவன்மீது பக்கிகொண்டு பாடல்களைப் பாடினர். இங்கே பக்தி பாடுபொருளாகவும், பா இனங்களில் ஒன்றான விருத்தம் பாடல் வடிவமாகவும் உள்ளது. இந்த மாற்றம் தமிழ் இலக்கியத்திலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

தொடர்ந்து தமிழ் இலக்கியத்தில் சிற்றிலக்கியங்களின் செல்வாக்கைக் காணலாம். குமரகுருபரர் முதல் பாரதியார் வரை பலர் சிற்றிலக்கியங்கள் படைத்துப் புகழ் பெற்றுள்ளனர்.

இன்றைய இலக்கியப் பரப்பில் புதுக்கவிதை கைக்கூ, வசன கவிதை என்பனவும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மேலும் புகலிடத் தமிழ் இலக்கியம் என்ற புதிய இலக்கியத்தின் வருகை, வளர்ச்சி என்பனவும் அவதானிக்கத்தக்கது.

பாடலின் பொருண்மையும், பா வடிவமும் மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கமையத் தொடர்ச்சியாக மாற்றம் பெற்று வந்துள்ளன. புகலிடத் தமிழ் இலக்கியத்தில் ஈழப் போர்க்கால நிகழ்வுகள் மிகுதியாகப் பாடப்பட்டுள்ளன. புகலிட இலக்கியத்தில் புகலிடத்தின் தட்ப வெப்பம், பல்லினக் கலாசாரச் சூழல், என்பன பாடுபொருளில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளன.

1.0 முன்னுரை

தமிழ் மொழியில் எமக்குக் கிடைக்கப்பெற்ற நூல்களில் மிகப்பழமையானது தொல்காப்பியம். இது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களைக் கொண்டது. முதலிரண்டு அதிகாரங்களும் எழுத்துக்கும், சொல்லுக்குமுரிய இலக்கணத்தை எடுத்துரைக்கப் பொருளதிகாரம் மக்களின் வாழ்வியலை எடுத்தியம்பும் இலக்கியத்துக்குரிய இலக்கணத்தை எடுத்துரைக்கின்றது.

தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுளுக்கான இலக்கணத்தை எடுத்துரைத்துள்ளமை அனைவரும் அறிந்த செய்தியே. தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளில் பதினோராவது உறுப்பாக "பா"வைச் சுட்டி, பாவினது வகையை நான்காக வகுத்து, அவற்றுக்கான இலக்கணத்தையும் இயம்பியுள்ளார். ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என்னும் நால்வகைப் பாக்களில் ஒன்றான ஆசிரியப்பாவின் தோற்றம், யாப்பு, பொருண்மை, வகைகள், வளர்ச்சி என்பனவற்றையும், ஆசிரியப் பாவின் வளர்ச்சியில் அதனை ஆரம்பத்தில் அகம் புறம் எனும் இரு பொருண்மைகளைப் பாடுவதற்குப் பயன்படுத்தியமையும் முதலில் ஆராய்வாம். அடுத்து குறிஞ்சிப்பாட்டிலும் சிலப்பதிகாரத்திலும் தொடர்நிலைச் செய்யுள் பயன்படுத்தியுள்ளமை பற்றியும், பா இனங்களில் ஒன்றான ஆசிரிய விருத்தம்; பக்தி இலக்கியங்களையும், சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களையும் பாடுவதற்கும் கையாண்டுள்ளமை பற்றியும் விளக்கித் தொல்காப்பியம் "சுட்டும் பாவும் பொருண்மையும் - பாக்களின் வளர்ச்சியில் ஆசிரியப்பா" என்பதையும் ஆய்வுசெய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.1.பாக்களின் தோற்றம்

அனைத்து நாடுகளிலும் பாட்டு வாய்மொழி இலக்கியமாகத் தோன்றி அவ்வவ் நாட்டு மக்களின் செவ்வியல் பண்பாட்டிற்கு பெரிதும் முன்னோடியாக அமைந்துள்ளது என்பது ஆய்வுகளால் நிறுவப்பட்டுள்ளது.[1] தமிழ் மொழியின் இலக்கிய மரபு என்பது பாட்டு மரபாகும். வாய்மொழி இலக்கியங்களான பாடல்கள் கதைகள், பழமொழிகள், என்பன வளர்ச்சியடைந்து காலப்போக்கில் எழுத்து மொழியிலான செவ்வழி இலக்கியத்துக்கு வழிவகுத்தன. ஒரு மொழியில் தோற்றம் பெறும். செவ்வியல் இலக்கியங்கள் யாவும் செய்யுள்களால் ஆனவை. இவைபற்றிய செய்திகளை நாம் அறிந்துகொள்வதற்குத் துணையாக எமக்குக் கிடைத்திருப்பது சங்கப் பாடல்களாகும். இவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள பொரும்பாலான பாடல்கள் ஆசிரியப் பாவினால் அமைந்தவையாகும்.

2.0 செய்யுள் உறுப்புகளும் பாவகைகளும்

செய்யுள் உறுப்புகள்

செய்யுள் என்பது செய்யப்படுவது என்ற பொருள் தருவதாகும். ஒரு கட்டிடத்தைப் பல்வேறு பொருட்களைக் கொண்டு கட்டுவது போன்று, தொல்காப்பியர் செய்யுள் செய்வதற்குத் தேவையான முப்பத்தினான்கு உறுப்புக்களைச் செய்யுளியலில் தந்துள்ளார். இதில் 26 முதன்மை உறுப்புக்களையும் 8 வனப்புக்களையும் அழகுற எடுத்துக் காட்டி அவற்றை இரண்டு தொகுதிகளில் உள்ளடக்கியுள்ளார். அவை "மாத்திரை, எழுத்தியல், அசை, சீர், அடி, யாப்பு, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவு, திணை, கைக்கோள், கூற்று, கேட்போர், களன் (இடம்), காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு, வண்ணம் என 26 உறுப்புக்கள் முதல் தொகுதியில் அடங்குகின்றன. இவற்றையே செய்யுளுக்குரிய அடிப்படையான உறுப்புகளாகவும், செய்யுளின் பொருளை புலப்படுத்துவதற்குரிய உறுப்புகளாகவும் கூறியுள்ளார். இரண்டாவது தொகுதியில் எண்வகை வனப்புகளாக அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பனவற்றைச் சேர்த்துள்ளார். இந்த எட்டு வனப்புகளும் செய்யுளை அழகு படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த 34 உறுப்புகளையும் தொல்காப்பியர்

"மாத்திரை யெழுத்தியல், அசைவகை எனாஅ

யாத்த சீரே அடியாப் பெனாஅ....''செய்யுளியல் (நூ.பா -1)[2]

நூற்பாவில் காட்டியுள்ளார்.

2.2 பாவும் அதன் வகைகளும்

பா அல்லது பாட்டு என்பதை நோக்கின் மேலே எடுத்துக்காட்டிய 34 செய்யுளுறுப்புகளில் ஒன்றாகப் பா காட்டப்பட்டுள்ளது. ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா என்பன முக்கிய பா வகைகளாகும். இதனை

''ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே'' செய்.நூ -101)

என நூற்பாவில் காட்டியுள்ளார். மேற்கூறிய பாவகை நான்கிலும் வெண்பா தவிர ஏனைய மூன்று பாக்களும் தொல்நிலையில் வாய் மொழி வழக்கிலிருந்து நாளடைவிற் கலைத்திறன் வாய்ந்தவர்களது செய்கையாக எழுத்திலக்கிய நிலையை எய்தின என்பது ஆய்வுகளால் புலப்படுத்தப்பட்டுள்ளது[3]. இவை தவிர மேலும் இரண்டு பாக்களைக் கூறி அவற்றுக்கும் இலக்கணம் வகுத்துள்ளார்.

''கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே'' (செய்யுளியல்- 115)

கைக்கிளைப் பொருண்மை வெண்பாவினால் வருவதோடு முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண்டடியும் ஆசிரியமாகி இருபாவினாலும் வருவதனை மருட்பா எனக் கொள்ளப்படுகிறது. இதனையே

''மருட்பா ஏன இருசார் அல்லது
தானிது என்னுந் தன்மை இன்றே'' (தொல் செய் - 81)

என மருட்பா பற்றி செய்யுளியல் நூற்பா எடுத்துரைக்கின்றது. மருட்பா என்பது தனித்த பாவகையன்று. அது வெண்பாவையும் ஆசிரியப்பாவையும் உறுப்பாக கொள்வதாகும். எனவே தனக்கென ஓர் ஓசையின்றி அகவலோசையையும் செப்பல்லசையையும் பெற்று வருவது மருட்பாவாகும்.

பரிபாடலுக்கான இலக்கணம்:

பாவகை நான்கு எனக்கூறிய தொல்காப்பியர் மருட்பாவைக் கூறியது போன்று பரிபாடலைக்கூறி அதற்கும் இலக்கண்ம் வகுத்துள்ளார்.

''பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயல்நெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்துஎன மொழிப'' (தொல். செய் - 116)

இந்நூற்பாவில் பரிபாடல் என்பது தொகைநிலை வகையாற் பா இது என்று சொல்லப்படும் இலக்கணம் இன்றி அனைத்துப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கும் உரியது எனக் எனக்கொள்ளலாம்.

செய்யுளியல் நூற்பா 101 க்கு உரை கண்ட இளம்பூரணம் அதனை ஆசிரியமெனவும், வஞ்சியெனவும், வெண்பாவெனவும், கலியெனவும் நான்கியல்பினையுடைத்து என்று சொல்வார், பாவினது வகையை விரிக்கும் காலத்து என்றவாறு[4] காட்டியுள்ளாரேயன்றிப் பா என்றால் என்ன என்பதற்குரிய விளக்கத்தைக் கூறவில்லை. இதற்குப் தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் தரும் விளக்கத்தை நோக்கின்

"பா என்பது சேட்புலத்திருந்த காலத்தும் ஒருத்தன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடம் ஓதும்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்த்தற் கேதுவாகி பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை என்றும் அவற்றிற்கு விளக்கம் கூறியுள்ளார்"[5]

பேராசிரியர் கருத்துப்படி பா என்பது பரந்துபட்ட ஓசை உடையது என்பதும், ஓசை வேறுபாட்டிற் கேற்ப பாக்கள் வெவ்வேறு பெயர்களைப் பெறும் என்பதும் அறியப்படுகிறது. இவ் ஓசையை தொல்காப்பியர் தூக்கு எனக்குறிப்பிட்டு அது பற்றி மேலும் ஏழு நூற்பாக்களில் கூறியுள்ளார். அகவலோசை உடையது ஆசிரியப் பா என்பதை

"அகவ லென்ப தாசிரி யம்மே" (தொல்.செய்- 77)

என்ற நூற்பாவில் அகவல் என்பது ஆசிரியப்பாவுக்குரியது என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். **எ(-கா)**

செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட் டியானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே (குறு.தொ -1)

இக் குறுந்தொகைப்பாடலில் எழுத்தின் அளவு மிகாமலும் குறையாமலும் ஒலிக்க அதன்வழி அகவலோசை பிறந்தமை காணப்படுகின்றது. அகவிக் கூறுவதால் அகவல் என்பது காரணப் பெயராகும்.[5]

அகவல் பாவுக்குரிய ஓசையைப் போன்று ஏனைய பாக்களுக்குரிய ஓசைகளையும்

அ) "அஃதன் றென்ப வெண்பா யாப்பே" (செய்யுளியல்- 78)

ஆ) "துள்ளல் ஓசை கலி என மொழிப" (செய்யுளியல்- 79)

இ) "தூங்கல ஓசை வஞ்சி யாகும்" (செய்யுளியல்- 80)

ஈ) "மருட்பா ஏனை இருசார் அல்லது

தானிது என்னுந் தன்மை யின்றே" (செய்யுளியல்- 81)

இவ்வாறு நான்கு பாக்களையும் அவற்றிற்குரிய ஓசைகளையும் எடுத்துரைத்த தொல்காப்பியர் அவ்வகைப் பாக்களுக்குரிய இலக்கணத்தையும் வருமாறு கூறியுள்ளார்.

2.3. ஆசிரியப்பாவின் இலக்கணம்

ஆசிரியப்பா பெரும்பான்மை இயற்சீரானும் ஆசிரிய உரிச்சீரானும். ஆசிரியத் தளையானும் அகவலோசையானும் நாற்சீரடியானும் சிறுபான்மை பிற சீரானும் தளையானும் அடியானும் வருவது ஆசிரியப்பாவாகும்[6]. இளம்பூரணர் தளைபற்றிக் குறிப்பிடுகின்றபோதும் தொல்காப்பியம் எடுத்துக்காட்டும் 34 செய்யுள் உறுப்புகளில் தளை இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 34 செய்யுள் உறுப்புக்களை எழுத்து, அசை, சீர், தளை, அடி தொடை என தளையையும் உள்ளடக்கி இலக்கணமும் வகுத்துள்ளனர். இந்தப் பயன்பாடு யாப்பருங்கலக்காரிகையின் வரவைத் தொடர்ந்தே ஏற்பட்டது. மேலும் ஆசிரியப் பாவிற்கு ஈற்றெழுத்து வரையறுத்துணர்த்தவில்லை. அத்துடன் அனைத்து ஈறுகளும் கொண்டு ஆசிரியப்பா முற்றுப்பெறும் என்பதும் தொல்காப்பியர் கருத்தாகும்.[7] இதுபற்றிய விரிவான விளக்கத்தை பின்னர் தோன்றிய யாப்பருங்கல விருத்தியரையின் பின்வரும் பாடல் எடுத்துக்காட்டாக அமைகிறது.

"கோல்மா கொட்குமென் றஞ்சுவல் ஒன்றார்க்
கிருவிசும்பு கொடுக்கும் நெடுவேல் வழுதி
கூடல் அன்ன குறுந்தொடி அரிவை
ஆடமை மென்றோள் நசைஇ நாடொறும்
வடியமை எஃகம் வலவயின் ஏந்திக்
கைபோற் காந்தட் கடமலர் கமழும்
மைதோய் வெற்பன் வைகிருள் வருமிடம்" (யாப்.வி.ப.262)[8]

பாடலின் ஈற்றடி பிறவற்றால் வந்திருப்பதும் நோக்கத்தக்கது. ஆனால் ஆசிரியப்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடியும் என்பதை யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர் முதல் புலவர் குழந்தை வரையான யாப்பிலக்கண ஆசிரியர்கள் பின்பற்றுகின்றனர். இவ்வாறு ஆசிரியப்பாவின் யாப்பு விதிகள் வளர்ச்சி/ மாற்றம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

2.4. ஆசிரியப்பாவின் வகை

ஆசிரியப்பாவின் வகைகள் அடிகளின் எல்லையை அடிப்படையாகக் கொண்டு நான்கு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் வகைகளை விரிவாக நோக்கலாம்.

வகைi. நேரிசை ஆசிரியப்பா: (ஈற்றயடி முச்சீரால் வருவது) இதற்கான இலக்கியச் சான்றாகப் பின்வரும் எடுத்துக்காட்டு அமைகிறது.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பீ
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ,
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நிறையவு முளவோ நீ அறியும் பூவே[9] *- (குறு. 2) இறையனைர்*

வகைII. இணைக்குறள் ஆசிரியப்பா: பாடலின் இடை இடையே முச்சீர் வருவது

இணைக்குறள் ஆசிரியப்பாவாகும்.

"நீரின் தன்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே" (யாப்.வி.பக்.257)

வகைIII. நிலமண்டில ஆசிரியப்பா: எல்லா அடியும் அளவடியாக ஒத்துவருதனை நிலமண்டில ஆசிரியப்பா என்பர். நாற்சீரால் அமைவது அளவடியாகும்.

"வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை யாகுமதி!
யாஃஅ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந். 18)

வகைIV. அடி மறிமண்டில ஆசிரியப்பா:

எல்லா அடியும் ஒத்துவரும் பாட்டினையே அடி மறிமண்டில ஆசிரியப்பா என்று அழைப்பர்[10]. இப்பாடலின் எந்த அடியை முதலில் வைத்துப் பொருள் கொள்ளினும் பொருள் மாறுபடாமல் இருப்பதாகும். அதாவது ஒவ்வொரு அடியிலும் பொருள் முற்றுப் பெறுவது. அடியை முன்னும் பின்னும் மாற்றி பொருள் கொள்ளுமாறு நிற்றலால் இப்பெயர்பெற்றது. தொல்காப்பியர் இதற்கான இலக்கணத்தை சொல்லதிகாரத்தில் பின்வரும் நூ.பாவில் எடுத்துக் காட்டியுள்ளார்.

"நிரல் நிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே" (சொல்.அதி.08)

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் சுவலே

சாரல் நாட நீவர லாறே" (யாப். விரு. ப. 259)

மேற் கூறிய ஆசிரியப்பாவின் வகைகளைவிட மேலும் சில ஆசிரியப்பாவின் வகைகளையும் நோக்கலாம். இவை ஆசிரியத்தளையுடன் இயற்சீர் வெண்டளையும், வஞ்சித்தளையும் மயங்கி வந்தவையாகும்.

(I) **அடிமயங்காசிரியம்**: முச்சீரடி முதலாக அறுசீரடி ஈறாக மயங்கி (கலந்து) வருவது இவற்றுக்கான இலக்கணத்தை தொல்காப்பியம் பின்வரும் நூற்பாவில் எடுத்துரைக்கின்றது.

"அறுசீ ரடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே" (தொல். செய் 61)

இதற்கு இளம்பூரணர் பின்வருமாறு விளக்கம் தருவார்: அறுசீரடி யாசிரியத்தளையொடு பொருந்தி நடைபெற்று வரூஉம், நேரடிக்கு முன்னதாக ஆசிரியப்பாவின்கண் என்றவாறு. இதனை மேலும் விளக்கமாக நோக்கின், நான்கு சீர்கள் கொண்ட அளவடி முதலடியாக வரும். அதனை அடுத்து ஆசிரியத்தளை பொருந்தியதாய் அறுசீர்களைக் கொண்ட கழிநெடிலடி இடம்பெறும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுப் பாடல் மூலம் விளக்கலாம்.

"சிறியகட் பெறினே யெமக்கீயும் மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணும் மன்னே
.....

ஈ.யாது வீயும் உயிர்த்தவப் பலவே" (புறம்-235)

எனவரும் பாடல் 20 அடிகளைக் கொண்டது. இந்த இருபதடி ஆசிரியத்துள் ஏழாம் அடியும் பன்னிரெண்டாம் அடியும் முச்சீராலும், மூன்றாமடி தொடக்கம் ஆறாமடி வரையான நான்கடியும் மற்றும் பதினான்காம் அடியும் ஐஞ்சீராலும், இரண்டாமடியும் பதினோராமடியும் அறு சீராலும், ஏனைய அடிகள் நாற்சீராலும் வந்துள்ளன. இவ்வாறு வருவது அடிமயங்காசிரியம் என்று அழைக்கப்படும். இதனை இப்பாடல் அடிகள் மூலம் விளக்கலாம்.

முச்சீரால் வந்த அடிகள்

அடி7. அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கும் மன்னே;
அடி12. புரப்போர் புன்கண் பாவை சோர

ஐஞ்சீரால் வந்த அடிகள்

அடி3. யாம்பா டத்தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே;
அடி4. சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே;
அடி5 பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே;
அடி6. என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே;
அடி14. சென்றுவீழ்ந் தன்றுஅவன்

ஆறு சீரால் வந்த அடிகள்

அடி2 பெரியகட் பெறினே
அடி11. இரப்போர் கையுளும் போகிப்

நாற்சீரால் வந்த அடிகள்

அடி1 சிறியகட் பெறினே, யெமக்கீயும் மன்னே;
அடி8. நரந்தம் நாறும் தன் கையால்
அடி9. புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே;
அடி10 அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
அடி13. அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
அடி15 அருநிறத்து இயங்கிய வேலே.
அடி16. ஆசாகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ?
அடி17. இனிப், பாடுநரும் இல்லை; பாடுநர்க்குஒன்று ஈகுநரும் இல்லை;
அடி18. பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
அடி19. சூடாது வைகியாங்குப் பிறர்க்குஒன்று
அடி20 றீயாது வீயு முயிர்தவப் பலவே.

(II) **வெள்ளடிமயங்காசிரியம்**: வெண்பாவடி மயங்கிய வருவது. இதற்குத் தொல்காப்பியம் தரும் இலக்கணத்தை நோக்கின்

"இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரீ மரபின் நிற்கவும் பெறுமே" (தொல்.செய் -59)

இதற்கு இளம்பூரணர் பின்வருமாறு விளக்கம் தருவார்: ஈரசைச் சீர்கள் மாறி நிற்க உண்டாவது இயற்சீர் வெண்டளையாகும். இத்தளையால் முழுமைபெற்ற அடிகளோ தளைகளோ ஆசிரியப்பாவில் நிற்றற்குரிய மரபொடு நிற்கப் பெறுதலும் உண்டு. ஆசிரியப்பாவில் வெண்பாவுக்குரிய தளையுடன் கூடிய அடிகள் கலந்து வரும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் மூலம் நோக்கலாம்.

"நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை
கடல்பா டொழிய இனமீன் முகந்து"
..... *(அகம் - 30)*

என்ற பாடலின் "கடல்பா டொழிய இனமீன் முகந்து" என்பது இயற்சீர் வெண்டளையால் வந்த அடியாகும்.

"எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறிக்
கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்பவர் சென்ற ஆறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே". (குறுந் - 12)

இப்பாடலின் முதலடி இயற்சீர் வெள்ளடியால் வந்துள்ளதால் இது வெள்ளடி விரவிய (மயங்கிய) ஆசிரியம் எனப்படும்.

(III) **வஞ்சியடி மயங்கா சிரியம்**: வஞ்சியடி மயங்கி வருவது. இதற்கு தொல்காப்பியம் தரும் இலக்கணத்தை நோக்கின்

"ஆசிரிய நடைத்தே வஞ்சி" (தொல்.செய் -103)

இதற்கு இளம்பூரணர் பின்வருமாறு விளக்கம் தருவார்:

ஆசிரியப்பா போன்ற நடையை ஒத்தது வஞ்சி என்கிறார்.

"இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
.....
முந்நீர் வரைப்பக முழுதுடன் துறப்பதே"[11] (புறம் - 363)

மேற்படி புறநானூற்றுப் பாடலில் 12 ஆவது அடியாக வந்த

"**உப்பிலாஅ அவிப்புழுக்கல்**" முதலாக வந்த மூன்று அடியும் வஞ்சியடியாகும்.

ஆசிரியப்பா அடியாலும், தொடையாலும், ஓசையாலும், பொருளாலும் பெயர் வேறுபாட்டைப் பெற்று வருமென்றும், இந்த வகைப்பாட்டை யாப்பருங்கலக்காரிகை ஆசிரியரே உணர்த்தினார் என்று இலக்கணிகள் கூறுகின்றனர்[12]. ஆனால் தொல்காப்பியத்தில் மேற்கூறிய பகுப்பு முறைகள் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன என்பதை "மண்டலம் குட்டம்" எனவரும் நூற்பா மூலம் அறிந்து கொள்ளலாம்.

மண்டலம் குட்டம் என்றிவை இரண்டும்
செந்தூக் கியல என்மனார் புலவர் (தொல்.செய் -113)

நூற்பாவில் வந்த "மண்டலம்" (நாற்சீரடி), "குட்டம்" முச்சீரடி) ஆகிய இரண்டும் ஆசிரியப்பாவில் கலந்து வரும்.

3.0 **பாவும் பொருண்மையும்**:

பாவின் வகைகளை செய்யுளியலில் கூறிய தொல்காப்பியர் அப்பாக்கள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று முதற் பொருள்களையும் எடுத்துரைப்பதற்குரியன என்று பின் வரும் நூற்பாவில் எடுத்துரைக்கின்றார்.

"*அந்நிலை மருங்கின் அரமுத லாகிய*
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப" *(செய்யுளியல்- 102)*

என்ற நூற்பாவினை ஆழ்ந்து படிக்கும்போது இதன் உரை வருமாறு: "பா என்பது ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி என்னும் அந்நிலை மருங்கினவாய் வரும்பொழுது அப்பாக்கள் அறம் முதலிய மும்முதற் பொருட்கும் உயிரினவாய் அவற்றினைப் பாவி (பொருத்தி) வரும்" என்பதாம்.[13]

இதனைப் பின்பற்றி யாப்பருங்கல விரித்தியரை ஆசிரியர் "செய்யுள் தாமே" எனத்தொடங்கும் நூற்பா உரையில் "அறம் பொருள் இன்பம் வீடு என இவற்றைப் பாவி (பொருத்தி) நடத்தலின் பா என்பதும் காரணக்குறி "என்று கூறுகின்றார்.[14]

வாழ்த்துக்குரிய பாக்களுக்கான இலக்கணம்:

பாடு பொருனை எடுத்துக்கூறிய தொல்காப்பியர் வாழ்த்துக்குரிய பாக்கள் இவை இவையென பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.

"*வாழ்த்தியல் வகையே நாற்பாவுக்கும் உரித்தே*" *(செய்யுளியல்- 105)*

என்றும், புறநிலை வாழ்த்துக்கு கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய இருபாக்களும் இடம்பெறாது என்றும், ஆசிரியப்பாவும், வெண்பாவுமே இடம் பெறும் என்பதையும்

"*வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்*
பழிதீர் செல்வமொடு வழி வழி சிறந்தது
.....*வஞ்சியும் பெறாஅ*" *(செய்யுளியல் - 106)*

என்ற நூற்பா மூலம் தொல்காப்பியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

4.0 **ஆசிரியப்பா**

4.1 **ஆசிரியப்பாவின் வளர்ச்சி**

சங்க இலக்கியம் எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களிலன் தொகுக்பாகும். இதிலுள்ள பாடல்களின் பாடுபொருள் அகம் புறம் பற்றியதாகும். அவற்றில் அதிகளவான பாடல்கள் அகவல் பாவினால் ஆக்கப்பட்டவையாகும்.

அகத்துறைப் பாடல்கள் ஒவ்வொன்றும் திணை, துறை அடிப்படையிற் பாடப்பட்ட தனிப்பாடல்களாகும். இப் பாடல்களைத் தொடர்ந்து, பத்துப்பாட்டில் தொடர்நிலைச் செய்யுளின் தொடக்கம் காணப்படுகின்றது. தலைவன், தலைவி இருவருக்கும் இடையிலான களவொழுக்கம் தனித்தனியாகவன்றிக் கோவையாகத் தொகுத்து கபிலரால் பாடப்பட்டதே குறிஞ்சிப்பாட்டாகும். "தொடர் நிலைச் செய்யுளின் தொடக்கக் கால்கோள் விழாவை இங்குக் காணலாம்."[13] இவற்றின் தாக்கமே மேல்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்களைத் தொடர்ந்து சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான காப்பியங்கள் அகவல் பாவினால் அமைந்த தொடர்நிலைச் செய்யுளில் ஆக்கப்பட்டவைகளாகும். மரபுவழிப் பாக்களுக்கு இனமாக பாவினங்களின் வருகையால் புதிய யாப்பு வடிவம் தமிழிலக்கியப் பரப்பில் செல்வாக்குப் பெற்றதை அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் சான்றாக உள்ளன. இவ்வாறு புதிய யாப்புகள் தோற்றம் பெற்ற போதும் ஆசிரியப்பாவின் பயன்பாடு தொடர்ந்துள்ளமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது பல்லவர் காலத்தில் உருவான **பெருங்கதை** ஆகும். அகவற் பாவாலான இக்காவியம் நடையமைப்பிலும் பொருட் சிறப்பிலும் சிறந்ததொன்றாகக் கருதப்படுகிறது.[15]

4.2 பாவினத்தின் வருகை

தொடர்நிலைச் செய்யுளில் உருவான நாடகக் காப்பியமான சிலப்பதிகாரத்தைத் தொடர்ந்து, பாவினத்தின் வருகை பழைய மரபில் தாக்கத்தை ஏற்படுத்தியது. சங்க இலக்கியப் பாடல்களையும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் பாடுவதற்கும் அகவல், வஞ்சி, வெண்பா, கலி ஆகியவை கையாளப்பட்டுள்ளன. "நாளடைவிலே இலக்கியப் பொருண்மரபும் சூழலும் மாற்றமடையும்போது புதிய பாவடிவங்கள் தேவைப்படலாயின "[14] இந்த அடிப்படையிலேயே மரபாகப் பேணப்பட்ட பாக்களுக்கு இனமாக **தாழிசை, துறை, விருத்தம்** என்பன தோன்றின.

4.3 இசைப்பாக்களின் வருகை

இசைப் பாக்களின் வருகை தமிழ் யாப்பு பரிணாம வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகின்றது. கலிப்பா, பரிபாடல் ஆகிய பாக்களும், மற்றும் பல்லவர் காலத்தில் பெருவழக்காயிருந்த தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களும் இசைப்பாடல் வகையைச் சார்ந்தவையாகும். இவற்றைத் தொடர்ந்து வண்ணப்பா, சந்தப்பா, சிந்துப்பா, உருப்படி எனும் இசைப்பாக்களின் வருகை இடம்பெறுகின்றது.

இசைப்பாக்கள் "வண்ணப்பா, இசைப்பா என்னும் பெயர்களால் வழங்கப்படுகின்றன. வண்ணப்பா, சந்தப்பா என்ற பெயரிலும் இசைப்பாக்கள் சிந்து, கும்மி, கீர்த்தனை முதலியனவாகப் பெயர் வழங்குவன"[16]

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புக்களில் ஒன்றாக வண்ணத்தைக் குறிப்பிட்டுள்ளார். இது இருபது வகைப்படும் என்று அறியப்படுகிறது. பாக்களில் நிகழும் ஓசை விகற்பமாகிய சந்த வேறுபாட்டிற்கு வண்ணம் என்று விளக்கம் தருகிறார் தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர். இவை ஒவ்வொன்றும் பலதரப்பட்ட ஓசை விகற்பங்களை உடையவை. நாயன்மார்களும், ஆழ்வார்களும் மக்களை இறைவன்பால் நெறிப்படுத்த விரும்பிய கருத்துக்களை உணர்ச்சியுடன் எடுத்துக் கூறுவதற்கு விரும்பினர். இதற்காக அவர்கள் பல்வேறுபட்ட ஓசை வகைகளைக் கையாண்டு இசைப்பா பாடல்களைப் "**பதிகம்**" என்னும் வடிவத்தில் பாடினர். பதிகம் பத்துப்பாடல்களை உள்ளடக்கியது. சில பதிகம் பதினொரு பாடல்களையும் கொண்டிருக்கும். இதிலுள்ள சிறப்பம்சம் ஒரு பதிகத்திலுள்ள பாடல்கள் யாவும் ஒரே ஓசை உடையனவாக அமைந்திருக்கும். இதனால் பாடலைப் படிக்கத் தொடங்கும்போது இருக்கும் உணர்ச்சி இன்பம் படிப்படியாக வளர்ந்து உச்சம் பெற்று, பின்பு குறைந்து செல்வதைக் காணலாம்.

இசைப்பாக்களின் வருகையைத் தொடர்ந்து காப்பியங்கள் அமைப்பதற்கு நடைமுறையிலிருந்த ஆசிரியப்பா, வெண்பா என்பனவற்றைக் கைவிட்டுப் புலவர்கள் பாவினங்களைக் குறிப்பாக விருத்தப்பாவினத்தைக் கையாளத் தொடங்கினர். விருத்தப்பாவின் வளத்தை கம்பர், திருத்தக்கதேவர் முதலியோர் இயற்றிய பெரும்காப்பியங்களில் காணலாம். இசைப்பாடல்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டிய பெருமைக்குரியவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களுமே ஆவர்.

5.0 முடிவுரை

தொல்காப்பியம் எடுத்துரைக்கும் பாவகை, அவற்றின் பொருண்மை என்பன பற்றியும், பாக்களில் ஆசிரியப்பாவுக்கான இலக்கணமும் விளக்கப்பட்டுள்ளது. வாய்மொழி இலக்கியத்திலிருந்து வளர்ச்சியடைந்த செவ்வியல் இலக்கித்தை எடுத்துக்காட்டும் பா வடிவமாக ஆசிரியப்பா அமைந்துள்ளமை நன்கு விளக்கப்பட்டுள்ளது. மக்கள் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அமைய ஆசிரியப்பாவின் யாப்பு வளர்ச்சியில் புதிய யாப்புக்களின் தோற்றம் - மாற்றம் என்பன ஏற்பட்டுள்ளதைக் காணலாம். இதில் தொடர் நிலைச் செய்யுள்களின் பயன்பாடு, குறிப்பாக பா வினத்தின் வருகை, இசைப்பாடல்களின் பயன்பாடு என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான விடையங்களை இக்கட்டுரை ஆராந்துள்ளது.

5.1 ஆய்வு முடிவுகள்

- ஆசிரியப்பா தனிப்பாடல்கள் பாடுவதற்குரியது என்ற நிலைமாறி தொடர் நிலைச் செய்யுள்களையும் பாடமுடியும் என்பதைக் குறிஞ்சிப்பாடல் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
- ஆசிரியப்பாவின் வகைகளான நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என்பன பற்றிய இலக்கண விதிகளை யாப்பருங்கலக் காரிகைக்கு முன்பே தொல்காப்பிய செய்யுளியலிற் காட்டப்பட்டுள்ளன.
- தொல்காப்பியம் சுட்டும் முப்பத்தி நான்கு செய்யுள் உறுப்புகளைப் பின்வந்த யாப்பிலக்கண ஆசிரியர்கள் அவற்றை ஆறு உறுப்புகளாகப் பயன் படுத்தியுள்ளமையும் விளக்கப்பட்டுள்ளது.
- தொல்காப்பியம் செய்யுள் உறுப்பாகக் குறிப்பிடாத தளை பின்வந்த யாப்பிலக்கண ஆசிரியர்களால் உறுப்பாக ஏற்கப்பட்டுள்ளமையும் விளக்கப்பட்டுள்ளது.

சுருக்கக் குறியீடு:

1 .நூ.பா - நூற்பா
2. தொ.செ - தொல்காப்பியம் செய்யுளியல்
3. குறு.தொ - குறுந்தொகை
4. யா.வி - யாப்பருங்கல விருத்தியுரை
5. சொ..அதி - சொல்லதிகாரம்
6. புறம் - புறநானூறு
7. அகம் - அகநானூறு
8. ப - பக்கம்

அடிக்குறிப்புகள்

1. பாலசுந்தரம் இளையதம்பி பேராசிரியர், தமிழர் நாட்டுப்புற இயல் களஞ்சியம், ஆதிலஷ்மி ஆஃப்செட், சென்னை 2019 ப.xxiv
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் இளம்பூரணம் நூற்பா பதிப்பாசிரியர் பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை முல்லை நிலைய வெளியீடு மறுபதிப்பு 2008, சென்னை. ப 53.

3. சுப்பிரமணியன் கலாநிதி நா,ஆய்வுகள் பார்வைகள் பதிவுகள் தொகுதி - 1, சவுத் விஷன், சென்னை 2005, ப.106
4. பாலசுப்பிரமணியன் டாக்டர் சி, தொல்காப்பியக் கட்டுரைகள், பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 1995, ப.143
5. தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் பேராசிரியர் உரையும் பின்னான்கியல்கள் பாகம் - இரண்டு, கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 2ஆம் பதிப்பு 2007, ப.205.
6. திருஞானசம்பந்தம் பேராசிரியர் ச. .தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும்,கதிர் பதிப்பகம், திருவையாறு, 2020, ப.293.
7. தொல். பொருளதிகாரம், ப.101
8. தொல். பொருளதிகாரம், ப.101
9. குறுந்தொகை மூலமும் உரையும் டாக்டர் உ.வே.சாமிநாததையர் உரையுடன், டாக்டர் உ.வே.சாமிநாததையர் நூல்நிலையம், சென்னை, எட்டாம் பதிப்பு, 2020, ப.7
10. தொல். பொருளதிகாரம், ப.102
11. உரைவேந்தர் தமிழ்த்தொகை 22, புறநானூறு - 2, ஔவை துரைசாமி உரையுடன், இனியமுது பதிப்பகம், சென்னை, 2009. ப.440
12. யாப்பருங்கலக்காரிகை அமிர்தசாகரர் இயற்றியது, மூலமும் குணசாகரர் உரையும், ஆசிரியர் ந.மு.வேங்கடசாம் நாட்டாரவர்கள், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 24 ஆம் பதிப்பு, 1999, ப. (அ.சு)
13. பாலசுப்பிரமணியன் டாக்டர் சி, தொல்காப்பியக் கட்டுரைகள், பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 1995, ப.146.
14. பாலசுப்பிரமணியன் டாக்டர் சி ப. 146
15. செல்வநாயகம் பேராசிரியர் வி. தமிழ் இலக்கிய வரலாறு, குமரன் புத்தக இல்லம், மீள்பதிப்பு 2003, ப.83
16. சுப்பிரமணியன் கலாநிதி நா, ப.119.

துணைநின்ற நூல்கள்

1. இளையதம்பி பாலசுந்தரம் பேராசிரியர், தமிழர் நாட்டுப்புற இயல் களஞ்சியம், ஆதிலஷ்மி ஆஃப்செட், 2019
2. இளங்கோவடிகளருளிச்செய்த சிலப்பதிகார மூலமும்அரும்பதவுரையும் அடியார்கு நல்லாருரையும் டாக்டர் உ.வே.சா.பதிப்பு, சென்னை, 2008
3. கந்தசாமி சோ.ந.முனைவர், “தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்” - முதற்பாகம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.
4. குழந்தை புலவர், யாப்பதிகாரம், பாரிநிலையம் சென்னை, ஏழாம் பதிப்பு, 1995.
5. திருமுருகன் இரா. சிந்துப்பாவியல் (அரங்க நடராசன் உரையுடன்) பாவலர் பண்ணை, 1994.
6. தொல்காப்பியம் பொருளதிகாரம் (இறுதி நான்கு அதிகாரங்களும்) மூலமும் இளம்பூரணர் உரையும் பதிப்பாசிரியர் பேராசிரியர் மு.சண்முகம்பிள்ளை முல்லை நிலை.ம், சென்னை, மறுபதிப்பு 2008
7. வீரபத்திர முதலியார் தி. விருத்தப்பாவியல் (விருத்தப்பா யாப்பியல்)
8. தணிகாசல முதலியார் ஈ.என். திருத்திய பதிப்பு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,லிட், சென்னை, 1984.

தொ.மா.க. 222

தொல்காப்பியம் இன்றளவும் பயன்பாட்டில் இருந்துவருவதற்குக்குரிய காரணங்கள்

முனைவர் **இல. சுந்தரம்**
முதல்வர், கனடா முதல்மொழி படிப்பகம்
ilasundaram@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பிய விதிகள் இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்து உலகளாவிய மொழியியல் கூறுகளுடன் தற்காலத்தில் பயணித்துத் தற்காலத்திற்கும் பொருந்திவருகின்றன. இதன்பிறகு தோன்றிய தமிழிலக்கண நூல்கள் தொல்காப்பியத்தை அடிப்படையாகக்கொண்டே தமிழிலக்கணத்தை எடுத்தியம்பிவருகின்றன. தமிழ்மொழிப் பயன்பாட்டில் நிகழ்ந்த மாற்றங்களையும் வழக்கிழந்தவற்றையும் வளர்ச்சிகளையும் உள்ளடக்கிக் காலந்தோறும் தமிழ் இலக்கண நூல்கள் புதிதாகத் தோற்றம்பெற்றுவருகின்றன. இவ்வகையில் 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 21ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமான 1970-2020 வரையிலான ஐம்பதாண்டுகாலத்தில் தமிழ் இலக்கண நூல்கள் நூற்பா-உரை வடிவிலும், உரைநடை வடிவிலும், கட்டுரைகளாகவும் ஆய்வு நூல்களாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தொல்காப்பியத்திற்குப் பிறகு தோன்றிய இலக்கண நூல்கள் அனைத்தும் தொல்காப்பியத்தினை முதன்மை நூலாகவும் நன்னூலினைச் சார்பு நூலாகவும் கொண்டே வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இதற்குரிய காரணங்களாக மொழியின் அடிப்படையும் புதியனவற்றை ஏற்றுக்கொள்ளும் தழுவு விதிகளும் புறனடைகளும் தொல்காப்பியத்திற்குள் இருப்பதாகப் பொதுநிலையில் குறிப்பிடலாம். இந்தக் கண்ணோட்டத்தில் தொல்காப்பியம் எழுத்து, சொல்லிலக்கண விதிகள் பெரும்பாலும் இன்றளவும் மாறாது நிலைபெற்றிருப்பதற்குரிய காரணங்களை ஏற்கெனவே 2019இல் ஆய்வாளரால் வெளியிடப்பட்ட ‘தற்காலத் தமிழில் தொல்காப்பிய இலக்கணக் கூறுகளின் வளர்ச்சியும் பயன்பாடும்’ எனும் கட்டுரையின் ஆய்வுத் தொடர்ச்சியாக இக் கட்டுரை அமைகிறது.

குறிசொற்கள்: தொல்காப்பியத்தின் தற்காலப் பயன்பாடு, தற்காலத்தில் தொல்காப்பியம், தொல்காப்பியமும் தமிழிலக்கண வளர்ச்சியும்.

முன்னுரை

தொல்காப்பிய விதிகள் அனைத்தையும் தற்கால இலக்கணத்தோடு ஒப்பிடும்போதுதான் தற்கால இலக்கண மாற்றங்களை அடையாளம் காணவும்; தற்காலத்தில் வழக்கொழிந்துபோன பழந்தமிழ் இலக்கண விதிகளைக் கண்டறியவும் முடியும். தற்காலத்தில் மொழியியல் (Linguistics) துறையின் வளர்ச்சியாலும் ஆங்கில இலக்கணத்தின் ஒப்பீடு (English Grammar comparison) காரணமாகவும் பிறமொழிக் கலப்பின் காரணமாகவும். சொற்களின் வழக்கின்மை காரணமாகவும் தமிழ்மொழிப் பயன்பாட்டு இலக்கணத்தில் (Applied Grammar) பல்வேறு திரிபுகளும் வளர்ச்சிகளும் தோன்றல்களும் ஏற்பட்டுள்ளன. இவை எவையெவை என்பதையெல்லாம் இத்தகைய ஆய்வுகளின் வாயிலாகவே கண்டறிய முடியும்.

தமிழின் தொன்மை இலக்கண நூலான தொல்காப்பியம் பல இலக்கிய இலக்கண நூல்களைக் கொண்டு நீண்டதொரு வரலாற்றுத் தொடர்ச்சியைத் தமிழ்மொழி பெற்றுத் திகழ்கிறது. இத்தகைய தொன்மை, தொடர்ச்சி, வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்ட தமிழ்மொழி வரலாற்றில், தொல்காப்பியர் காலத் தமிழுக்கும் தற்காலத் தமிழுக்கும் இடையே இலக்கணக் கூறுகளில் எவ்வகையான மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பது ஆராயப்பட்டு வகைதொகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த முந்தைய ஆய்வின் தொடர்ச்சியாகத் தொல்காப்பியம் இன்றளவும் பயன்பாட்டில் இருந்துவருவதற்குக்குரிய காரணங்களை மட்டும் ஆராய்வதாக இந்தக் கட்டுரை அமைகிறது.

தொல்காப்பியத்திற்குப் பின்பு தோன்றிய நூல்களுள் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் கூறும் ‘வீரசோழியம்’, ‘நேமிநாதம்’, ‘நன்னூல்’, ‘இலக்கண விளக்கம்’, ‘தொன்னூல் விளக்கம்’, ‘சுவாமிநாதம்’, ‘முத்துவீரியம்’ ஆகிய ஏழு நூல்களும் சொல்லிலக்கணத்தை மட்டும் கூறும் ‘பிரயோக விவேகம்’, ‘இலக்கணக் கொத்து’ ஆகிய இரண்டு நூல்களும் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றிற்கு அடுத்த நிலையில் இ. சாமுவேல் பிள்ளையின் ‘தொல்காப்பிய நன்னூல்’, தண்டபாணி சுவாமிகளின் ‘அறுவகை இலக்கணம்’, த. சரவணத்தமிழனின் ‘தமிழ்நூல் (தமிணூல்)’, பாவலரேறு ச. பாலசுந்தரத்தின் ‘தென்னூல்’, ‘வளர்தமிழ் இலக்கணம், மி. காசுமானின் ‘தமிழ்க் காப்பு இயம்’ போன்ற நூல்களின்வழி தமிழிலக்கண மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஆராயமுடிகின்றது.

பழந்தமிழ் இலக்கணிகள் இலக்கண நூல் செய்யும்போது, சுருக்கம் என்ற உத்தியை முன்னிறுத்தி வந்துள்ளனர். மனனக் கல்வி முறையில் இலக்கணங்களைக் கற்கவும் கற்பிக்கவும் செய்யவேண்டிய தேவையின் அடிப்படையில் அவர்கள் வாழ்ந்த காலத்திற்கு முன்பு தோன்றிய இலக்கண நூல்களில் சிலவற்றைப் பின்பற்றி புதியவற்றை உருவாக்கியுள்ளனர். அவ்வாறு பின்பற்றும்போது சில இலக்கணக் கூறுகள் வழக்கொழிந்துபோனவையாக, அதாவது அவர்கள் காலத்தில் பயன்பாட்டில் இல்லாமல் இருந்தவற்றை நீக்குதலும் புதிதாகச் சில கூறுகள் தோன்றுதலும் வளர்ச்சி பெறுதலும் நிகழ்ந்திருக்கின்றன. ஆகவே, அவற்றை உட்படுத்திப் பழைய இலக்கணங்களிலிருந்து சிறிது மாறுபட்டுச் சிலவற்றை கைவிட்டுவிட்டுச் சுருக்கமாக இலக்கண நூல்கள் புதிது புதிதாகத் தோன்றியுள்ளன. மேலும், ஒருவர் உருவாக்கிய இலக்கண நூல் வாய்மொழி இலக்கணமாகக்கூட இருந்திருக்கும்; அது அனைவருக்கும் போய்ச் சேராமல் இருந்திருக்கவும் கூடும்.

தொல்காப்பியத்திற்குப் பிறகு பல்வேறு இலக்கண நூல்கள் இங்குத் தோன்றியுள்ள போதிலும் அவை அதனதன் தன்மையில் சிறப்பாக நிலைபெற்றிருந்தாலும் தொல்காப்பியத்தோடு அவற்றை ஒப்பவைத்து எண்ணும்போது அவற்றின் விழுமியங்கள் மாறுபடவே செய்கின்றன. தமிழ்ச் சமூகத்தின் தொன்மை மரபின் அடையாளமாக ஒரு செறிவான தன்மைக்குள் கட்டப்பட்டுப் பல நூற்றாண்டுகளைக் கடந்து தொல்காப்பியம் வாழ்ந்துவருகிறது. இத்தனை நூற்றாண்டுகள் நிலைபெற அதன் திட்டமிட்ட முறையிலான ஒழுங்கமைவு மற்றும் செய்நேர்த்தி, எல்லாக் காலத்திற்குமான பொருத்தப்பாடு, பல்வேறு காலங்களில் எழுந்த பலப்பல உரைகள், முதனூல் வழிநூல் என்ற மரபில் பிற்கால இலக்கணங்களுக்கு முதனூலாக நின்றமைதல், சமயச் சார்பின்மை ஆகிய அனைத்தும் மிகமுக்கியக் காரணங்களாக அமைகின்றன.

தொல்காப்பியத்தைத் தற்காலத் தமிழ் இலக்கணத்தோடு ஒப்பிட்டு நோக்க வேண்டுமானால் தொல்காப்பியமும் மொழியியலும் எந்தெந்த இடங்களில் பொருந்திப்போகின்றன என்பனவற்றைக் கண்டறிய வேண்டியுள்ளது. இதற்குத் தொல்காப்பியத்தை மொழியியல் அடிப்படையில் அணுகி ஆய்வுசெய்யப்பெற்ற நூல்களை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்க்கலாம்.

தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் கூறிவந்த முறையில் எழுத்து, சொல் இலக்கணங்களைக் கூறும் மரபிலக்கண முறையில் அல்லாமல் இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பவரும் தமிழின் இலக்கணத்தைப் பயன்பாட்டு அடிப்படையில் அறிந்துகொள்ளும் வகையில் மொழியியல் அடிப்படையில் ஒலி, ஒலியன், உருபு, உருபன், தொடர், பொருண்மை எனத் தமிழ் இலக்கணத்தைக் கூறும் நூல்களும் வெளிவந்துள்ளன. இவ்வகையில் கு. பரமசிவத்தின் 'இக்காலத் தமிழ் மரபு', எம்.ஏ. நுஃமானின் 'அடிப்படைத் தமிழ் இலக்கணம்', ச. அகத்தியலிங்கத்தின் 'தமிழ்மொழி அமைப்பியல்', பொற்கோவின் 'இக்காலத் தமிழ் இலக்கணம்', செ. சீனி நைனா முகம்மதுவின் 'நல்ல தமிழ் இலக்கணம்', 'புதிய தமிழ்ப்புணர்ச்சி விதிகள்' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தொல்காப்பிய விதிகளும் இன்றைய பயன்பாட்டு நிலையும்

பழஞ்சொல் வீழ்ச்சியும் புதுசொல் புகுதலும் காலந்தோறும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. தனக்கு முன் நிலவிய இலக்கணக் கொள்கைகளை இலக்கணமாக முறைப்பட வகுத்து, காலத்திற்கு ஏற்ப மொழி வளரும் என்ற அறிதிறனையும் உணர்ந்து சில இலக்கண விதிகளையும் புறனடைகளையும் தழுவு விதிகளையும் தொல்காப்பியர் வகுத்துள்ளார்.

தொல்காப்பியத்தின் தற்காலப் பயன்பாட்டை அறிந்துகொள்ளும்போது மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை அடையாளம் காணமுடியும். தொல்காப்பியர் 1. இயல்பு, 2. மெய்பிரிதாதல் (திரிதல்), 3. மிகுதல் (தோன்றல்), 4. குன்றல் (கெடுதல்) என்று வரிசைப்படுத்தியுள்ளார். இதனை நன்னூலார் 1. இயல்பு, 2. தோன்றல், 3. திரிதல், 4. கெடுதல் என்று வரிசைமுறையில் சிறிது வேறுபடுத்திக் கூறியுள்ளார். இருசொற் புணர்ச்சியில் மேற்குறித்த நான்கு நிலைகளில் மாற்றங்கள் ஏற்படும் என்று நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கணித அடிப்படையிலான மொழியின் புணர்ச்சி நிலை இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தபோதிலும் மாற்றம்பெறவில்லை. இது தமிழ்மொழியின் ஒருவகைக் கட்டமைப்பு எனலாம். இந்தக் கட்டமைப்பு விதியைத் தொல்காப்பியர் காலத்தில் இருந்த இலக்கணக் கூறுகளையும் தற்காலப் பயன்பாட்டில் உள்ள இலக்கணக் கூறுகளையும் ஒப்பிட்டுப்பார்த்து எடுத்தாள முடியும்.

'கடிசொல் இல்லை காலத்துப்படினே' என்று தொல்காப்பியரும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்று நன்னூலாரும் குறிப்பிட்டுச் சென்றிருக்கின்றனர். தமிழ் இலக்கண வரலாற்றை நோக்கும்போது தொல்காப்பியத்திற்குப் பின்வந்த எல்லா நூல்களுமே அவ்வக்கால மொழி மாற்றங்களை உள்ளடக்கி, வழக்கில் இல்லாதவற்றை நீக்கி, சூழல், சமயம் போன்றவற்றைச் சார்ந்து சுருக்கம் என்னும் நிலையில் பல்வேறு இலக்கண விதிகளை வகுத்துத் தந்திருக்கின்றன.

தொல்காப்பியர் எழுத்ததிகாரப் புணரியலில் இரண்டு சொற்கள் புணரும்போது அந்தச் சொற்களில் நிலைமொழியாக எவையெவை வரும் வருமொழியாக எவையெவை வரும் என்று தெளிவாக வரையறை செய்துள்ளார். பெயருக்கு முன் பெயரும், பெயருக்கு முன் வினையும், வினைக்கு முன் பெயரும், வினைக்கு முன் வினையும் என நான்கு வகையில்தான் நிலைமொழியும் வருமொழியும் அமையும் எனக் கட்டமைப்பினைக் கண்டறிந்து குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியத்தை இக்காலப் பயன்பாட்டுத் தமிழ் எழுத்திலக்கணத்தோடு ஒப்பிட்டு,

1) 'இயல்பு' - 'தற்கால நிலையில் மாறாது நிலைபெற்று இருப்பவை' என்ற பகுப்பிலும்
2) 'திரிதல்' - 'தற்கால நிலையில் மாற்றம் பெற்றுள்ளவை' என்ற பகுப்பிலும்
3) 'கெடுதல்' - 'தற்கால நிலையில் பயன்பாட்டில் இல்லாதவை' என்ற பகுப்பிலும்

வகைப்படுத்தித் தொகுத்துரைக்கப்படுகின்றன. இவற்றுள், 'கெடுதல்' என்னும் பிரிவை,

1) முழு நூற்பாவும் பயன்பாட்டில் இல்லாதவை,
2) ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையும்,
3) சொல் வழக்கொழிந்ததனால் நிலைபெறாதவை,
4) செய்யுளுக்குரியன என்பதால் பயன்பாட்டில் இல்லாதவை

என்று நான்கு வகைகளில் பகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

‘தோன்றுதல்’ என்னும் பகுப்பு பல்வேறு நிலையில் விரிந்துசெல்வதாலும், மொழியியல் அடிப்படையைக் கொண்டு தற்கால இலக்கணக் கூறுகள் நுணுகி ஆராயப்பெற்றுள்ளதாலும், புதிதாகத் தோன்றியவற்றைத் தனிநிலையில் ஆய்வு செய்யும் வகையில் தரவுகள் விரிவான நிலையில் செல்வதனாலும் சில தரவுகளைக் கொண்டு மட்டும் ஆராயப்படுகிறது. திரிதல், கெடுதல், இயல்பு என்னும் மூன்றும் தொல்காப்பிய எழுத்து, சொல்லதிகார விதிகளைக் கொண்டு இங்கு ஆராயப்படுகின்றன.

தொல்காப்பிய எழுத்ததிகாரமும் தற்கால எழுத்திலக்கணப் பயன்பாடும்

இயல்	தற்கால நிலையில் பயன்பாட்டில் இல்லாதவை				மாற்றம் பெற்றுள்ளவை	மாறாது இருப்பவை	மொத்த நூற்பாக்கள்
	முழு நூற்பாவும் பயன்பாட்டில் இல்லாதவை	ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையும்	சொல் வழக்கொழிந்ததனால் நிலைபெறாதவையும்	செய்யுளுக்குரியவை			
1. நூன்மரபு	3	1	0	1	0	28	33
2. மொழிமரபு	14	4	0	5	4	22	49
3. பிறப்பியல்	0	0	0	0	0	21	21
4. புணரியல்	5	4	1	0	2	28	40
5. தொகைமரபு	2	1	7	0	0	20	30
6. உருபியல்	1	5	6	0	6	12	30
7. உ. மயங்கியல்	9	4	29	7	4	40	93
8. பு. மயங்கியல்	15	10	38	2	0	45	110
9. கு. புணரியல்	8	3	19	1	13	33	77
மொத்தம்	**57**	**32**	**100**	**16**	**29**	**249**	**483**









*மேலே 1 முதல் 9 வரை வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளவை தொல்காப்பிய எழுத்து, சொல்லதிகார இயல் எண்கள் ஆகும்.

இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து தற்கால எழுத்திலக்கணத்திற்குப் பொருந்திப்போகும் இலக்கண விதிகள் தொல்காப்பியத்துள் காணப்படுகின்றன. இவ்வகையில் எழுத்திலக்கணத்தில் உள்ள 483 நூற்பாக்களுள் 249 நூற்பாக்கள் மாறாது நிலைபெற்றுள்ளன. 29 நூற்பாக்கள் மாற்றம்பெற்றுள்ளன. பயன்பாட்டில் இல்லாதவை என்று பகுக்கும்போது முழு நூற்பாவும் பயன்பாட்டில் இல்லாதவையாக 57 நூற்பாக்களும், ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையும் 32 நூற்பாக்களும், சொல் வழக்கொழிந்ததனால் நிலைபெறாதவையாக 100 நூற்பாக்களும், செய்யுளுக்குரியன என்பதாக 16 நூற்பாக்களும் என மொத்தம் 205 நூற்பாக்கள் தற்காலப் பயன்பாட்டில் பெருவழக்காக இல்லாமல்போயுள்ளன.

ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையும் என்னும் பகுப்பில் உள்ள ஒவ்வொரு நூற்பாவிலும் கூறப்பட்டுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட விதிகளுள் ஒன்றிரண்டு நிலைத்தும் ஒன்றிரண்டு நிலைபெறாமலும் உள்ளன. எனவே, அவற்றைத் தற்காலத்தில் பயன்பட்டுவருவதாகவே கருத வேண்டியுள்ளது. எந்த வகையான இலக்கணக் கூறுகள் தற்காலப் பயன்பாட்டில் இல்லாமல்போயுள்ளன என்று இயலடிப்படையில் பார்க்கும்போது 29 உயிர் மயங்கியல் நூற்பாக்களும் 38 புள்ளி மயங்கியல் நூற்பாக்களும் 19 குற்றியலுகரப் புணரியல் நூற்பாக்களுமாக மொத்தம் 86 நூற்பாக்கள் அமைந்துள்ளன. இதன் காரணமாகத் தொல்காப்பியத்திற்குப் பின்வந்த எழுத்திலக்கண நூல்கள் மேற்குறித்த மூன்று இயல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்று கருதமுடிகிறது.

அகர ஈற்றுச் சொற்கள், குற்றியலுகரச் சொற்கள், ஐகார வேற்றுமை, மொழியிறுதியில் வரக்கூடிய சொற்கள் எனப் பொதுவான சொற்புணர்ச்சிக்கு இலக்கணம் கூறுகிற முறையினால் பெரிதும் பயன்பாட்டில் இல்லாமல்போன நூற்பாக்கள் குறைவாக உள்ளன. ஆனால், சில குறிப்பிட்ட சொற்களைக் கூறி இதற்கு முன் வன்கணம் வந்தால் இவ்வாறு மாறும் என்று கூறுகிற முறையினால்தான் தொல்காப்பிய விதிகள் பல இன்று அதிகமாகப் பயன்பாட்டில் வழக்கொழிந்துபோயிருக்கின்றன.

தொல்காப்பியத்திற்குப் பின்பு தோன்றிய இலக்கண நூல்களையும் அவற்றின் இயல் பாகுபாடுகளையும் அவற்றுள் இடம்பெற்றுள்ள நூற்பா எண்ணிக்கையையும் வைத்துப் பார்க்கும்போது தொல்காப்பியர் உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய மூன்று இயல்களையும் 93+110+77 = 280 நூற்பாக்களில் விளக்கியுள்ளார் என்பது தெரிகிறது. பிற்காலங்களில் தொல்காப்பியத்தைத் தழுவி எழுதப்பெற்ற நன்னூல், உயிரீற்றுப் புணரியல் 53, மெய்யீற்றுப் புணரியல் 36, உருபுப் புணரியல் 18 என 107 நூற்பாக்களிலும் இலக்கண விளக்கம், உயிரீற்றுப் புணரியல் 66, மெய்யீற்றுப் புணரியல் 29, உருபுப் புணரியல் 11 என 106 நூற்பாக்களிலும் சுருக்கியுரைத்துள்ளன. இவற்றை வைத்துப் பார்க்கும்போது தொல்காப்பியர் கூறிய இவ்வாறான உயிரீற்று, மெய்யீற்று, குற்றியலுகர ஈற்றுப் புணரியல் விதிகளில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் பெரிதும் வழக்கிழந்துபோனமையால் அவற்றை விடுத்து, தம் காலத்தில்

பயன்பாட்டில் இருப்பவற்றையும் தொல்காப்பியர் காலத்திற்குப்பிறகு தோன்றிய புதியவற்றையும் கருத்தில் கொண்டு பிற்கால இலக்கண நூல்களை உருவாக்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

தொல்காப்பியச் சொல்லதிகாரமும் தற்காலச் சொல்லிலக்கணப் பயன்பாடும்

இயல்	தற்கால நிலையில் பயன்பாட்டில் இல்லாதவை				மாற்றம் பெற்றுள்ளவை	மாறாது இருப்பவை	மொத்த நூற்பாக்கள்
	முழுநூற் பாவும் பயன்பாட்டில் இல்லாதவை	ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையும்	சொல் வழக்கொழிந்ததனால் நிலைபெறாதவையும்	செய்யுளுக்குரியவை			
1. கிளவியாக்கம்	0	4	0	3	2	52	61
2. வேற்றுமையியல்	0	0	0	0	14	8	22
3. வே. மயங்கியல்	4	1	0	2	5	22	34
4. விளிமரபு	2	2	2	8	7	16	37
5. பெயரியல்	1	2	0	2	4	35	44
6. வினையியல்	2	13	1	2	1	31	50
7. இடையியல்	0	2	24	3	1	18	48
8. உரியியல்	0	7	69	0	4	20	100
9. எச்சவியல்	1	0	1	8	4	53	67
மொத்தம்	**10**	**31**	**97**	**28**	**42**	**255**	**463**









தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் உள்ள 463 நூற்பாக்களுள் 255 நூற்பாக்கள் மாறாது நிலைபெற்றுள்ளன. 42 நூற்பாக்கள் மாற்றம்பெற்றுள்ளன. பயன்பாட்டில் இல்லாதவை என்று பகுக்கும்போது முழு நூற்பாவும் பயன்பாட்டில் இல்லாதவையாக 10 நூற்பாக்களும், ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையுமாக 31 நூற்பாக்களும், சொல் வழக்கொழிந்ததனால் நிலைபெறாதவையாக 97 நூற்பாக்களும், செய்யுளுக்குரியன என்பதாக 28 நூற்பாக்களுமாக மொத்தம் 166 நூற்பாக்கள் தற்காலப் பயன்பாட்டில் பெருவழக்காக இல்லாமல்போயுள்ளன.

எந்த வகையான இலக்கணக் கூறு அதிகமாகத் தற்காலப் பயன்பாட்டில் இல்லாமல்போயுள்ளன என்று இயலடிப்படையில் பார்க்கும்போது, 69 உரியியல் நூற்பாக்களும், 24 இடையியல் நூற்பாக்களும் அமைந்துள்ளன. உரியியல் தற்காலத்தில் அகராதியியலாகப் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதையும் தொல்காப்பிய உரியியல் பழந்தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருள்தரும் தன்மையில் அமைந்துள்ளமையையும் கருதுதற்குரியன.

மாற்றம்பெற்றவற்றுள் அதிகமானவையாக வேற்றுமையியலில் உள்ள 24 நூற்பாக்களுள் 14 நூற்பாக்கள் மாற்றம் பெற்றுள்ளன. இவை குறிப்பாக வேற்றுமை உருபுகளும் அவற்றின் நிலைக்கலன்களுமாக அமைந்துள்ளன. ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையுமான பகுப்பின் வினையியலில் 13 நூற்பாக்கள் அமைந்துள்ளன. இவ்வாறு ஒவ்வோர் இயலின் எண்ணிக்கை அடிப்படையிலான வேறுபாடுகளைத் தெரிந்துகொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட வரைபடங்கள் சில மேலே கொடுக்கப்பட்டுள்ளன. ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையும் என்னும் பகுப்பில் உள்ள ஒவ்வொரு நூற்பாவிலும் கூறப்பட்டுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட விதிகளுள் ஒன்றிரண்டு நிலைத்தும் ஒன்றிரண்டு நிலைபெறாமலும் உள்ளன. எனவே, அவற்றைத் தற்காலத்திலும் பயன்பட்டுவருவதாகவே கருதவேண்டியுள்ளன.

தொல்காப்பியம் தற்காலத்தில் (2018) எவ்வாறு பயன்படுகிறது என்பதை அறிந்துகொள்ள, தொல்காப்பியர் புணர்ச்சி இலக்கண விதிகளுக்குச் சில இடங்களில் எடுத்துக்காட்டுச் சொற்களைக் குறிப்பிடாததால் இளம்பூரணர், சேனாவரையர் போன்ற உரையாசிரியர்கள் கூறிய எடுத்துக்காட்டுச் சொற்களைக் கொண்டே அதன் பயன்பாடு ஆராயப்பட்டுள்ளன.

தமிழ்மொழி தொன்மை, தொடர்ச்சி, வளர்ச்சி என்னும் பாங்கில் நிலைபெற்றுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொல்காப்பியர் கூறிய தமிழ்மொழியின் அமைப்பும் இலக்கணக் கூறுகளும் இன்றளவும் அடிப்படையில் மாற்றம் பெறவில்லை. சொல் பயன்பாட்டு நிலையிலும் புணர்ச்சிகளும் மாற்றம்பெற்றுள்ளன. எனினும், அதன் அடிப்படைக்கட்டமைப்பில் மாற்றம் நிகழவில்லை. தொல்காப்பிய விதிகள், சங்க இலக்கியத்தையும் பிற இலக்கிய ஆக்கங்களை அறிந்துகொள்ளவும் துணையாக இருந்துவருகின்றன.

தற்கால நிலையில் மாறாது நிலைபெற்றதற்குரிய காரணங்கள்

ஒரு மொழியின் அக அமைப்பு (Deep Structure) என்றும் மாறாது. அதன் புற அமைப்பே (Deep Structure) மாறுபடும் என்பர். இதற்குப் பிறமொழியின் தாக்கமே காரணம் என்று மொழியியலாளர்கள் குறிப்பிடுவர். இவ்வகையில் தொல்காப்பிய விதிகள் இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்து உலகளாவிய மொழியியல் கூறுகளுடன் தற்காலத்தில் பயணித்துத் தற்காலத்திற்கும் பொருந்தும் விதமாகப் பல விதிகள் அமைந்திருக்கின்றன. எழுத்ததிகாரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது சொல்லதிகாரத்தில் மாறாது நிலைபெற்றவையின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. இதற்கு முக்கியக் காரணம் எல்லா மொழிகளுக்கும் பொதுவான பெயர், வினை சார்ந்த விதிகளாகும்.

1. தொல்காப்பியத்துள் உலகப் பொது இலக்கணம்

தொல்காப்பியர் கூறிய எழுத்து, சொல்லிலக்கணங்களில் தமிழ்மொழியின் இலக்கணம் மட்டுமின்றி உலகமொழிகள் அனைத்துக்குமான சில பொதுப் பண்புகளும் காணப்படுகின்றன. எனவேதான், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் மாறாது நிலைபெற்றிருப்பதற்கு இத்தகைய பொதுக்கூறுகளும் காரணமாக அமைகின்றன. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றை இத்தகைய பொது இலக்கணக் கூறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சொல்லதிகாரத்திலேயே எல்லா மொழிகளுக்கும் பொதுவான இலக்கண விதிகள் காணப்படுகின்றன.

மொழியியல் என்பது தமிழ் மொழியியல், ஆங்கில மொழியியல் என்று வேறுபடாதது. இவ்வகையில் உலகில் எந்த மொழியை எடுத்துக்கொண்டாலும் அவற்றில் இருக்கும் பொதுமையான கூறுகளை மொழியியல் விளக்கும். பொதுவாக ஒரு மொழியின் கூறுகளை மொழியியல் விளக்குவதில் பல வகையுள்ளன. தொல்காப்பியத்தில் மொழியியல் கூறுகள் அதிக அளவில் காணப்படுகின்றன என்று கூறி, தொல்காப்பியத்திற்கும் மொழியியலுக்கும் தொடர்பு இருக்கிறது என்றும் தொல்காப்பியர் ஒரு சிறந்த மொழியியலாளர் என்றும் குறிப்பிடுவதற்கு இத்தகைய உலகப் பொது இலக்கணம் (Universal Grammar) தொல்காப்பியத்தில் காணப்படுவதேயாகும்.

உயர்திணை, அஃறிணை என்னும் திணைப் பாகுபாடு, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் பால் பாகுபாடு, ஒருமை, பன்மை, தன்மை, முன்னிலை, படர்க்கை போன்றவை எல்லா மொழிகளுக்கும் உரித்தானவை. இவை பற்றித் தொல்காப்பியர் கூறியவை பெரும்பான்மையாக மாறவில்லை. ஏனெனில் இவை மொழியின் பொது இயல்பாகும்.

> "மொழியில் கிடைப்பனவற்றுள் முதல் நூல் என்று கருதப்படும் தொல்காப்பியம் உலக இலக்கணங்களில் காணப்படும் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. சிறந்த பல ஒருங்கிணைந்த கொள்கைகளை அடிப்படையாக வைத்துச் செம்மையாக ஆக்கப்பட்ட இலக்கணம்."

உலக இலக்கணங்களில் சிறந்த ஒன்றாகத் தொல்காப்பியம் திகழ்கிறது என்று ச. அகத்தியலிங்கம் (2002) குறிப்பிடுவது இங்கு நோக்குதற்குரியது.

> "தொல்காப்பியம் தமிழ்மொழி அமைப்பை எழுத்து, சொல் என்ற இரண்டு அதிகாரத்தில் விளக்குவது என்பது எல்லோரும் அறிந்ததே. அதே சமயத்தில் அவைகளில் பொது மொழியியல் கோட்பாடுகளும் கலந்துள்ளன என்பது பரவலாக அறியப்படவில்லை. அவைகளைத் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் உலகப் பொது இலக்கணம் (Universal Grammar) என்று கூறுவார். அகத்தியலிங்கம்தான் (1985) முதன்முதலில் தொல்காப்பியரின் தொடரியல் விளக்கத்தில் மாற்றிலக்கண மொழியியல் கோட்பாடு புதைந்துள்ளது என்று விளக்கியவர். உதாரணமாகத் தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பிறப்பியல் சூத்திரங்கள், புணரியலில் 5 முதல் 10 சூத்திரங்கள், கிளவியாக்கத்தில் சூ. 13 முதல் 21 வரை... முதலியவை எல்லா மொழிக்கும் பொதுவான தொடரியல் உண்மைகள் ஆகும்."

மேற்குறித்த செ.வை. சண்முகத்தின் (2001) கூற்று தொல்காப்பியத்துள் உலகப் பொது இலக்கணம் காணப்படுகிறது என்பதைப் புலப்படுத்துகிறது. இத்தகைய கூறுகளைக் கொண்டிருப்பதால் தொல்காப்பியம் தற்கால உலகமயமாதல், பிறமொழிச் சொற்கலப்பு, இலக்கணக் கலப்பு நிகழ்ந்துள்ள காலகட்டத்திலும் பொருந்திப்போவதற்குக் காரணமாக அமைகின்றது என்பதை உறுதிசெய்கிறது.

2. தமிழ்மொழியின் அடிப்படைக் கட்டமைப்பு

தொல்காப்பியர் காலத்தில் நிலவிய தமிழ்மொழியமைப்பும் தற்காலத்தில் நிலவும் தமிழ்மொழியமைப்பும் பெரும்பான்மை ஒத்துப்போவதற்குக் காரணம் அதன் அடிப்படைக் கட்டமைப்பு (Basic Structure) ஆகும்.

> "தொல்காப்பியம் ஒரு அமைப்பியல் இலக்கணம் (Structural Grammar) பொதுமைப்படுத்திக் கூறுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கும். தொல்காப்பியர் இலக்கண விதிகளும் மொழியமைப்பின் பொதுமையை வற்புறுத்துவதாக இருக்க வேண்டும் என்று விரும்புவர். நன்னூல் ஒரு மொழிப்பயிற்சி (Pedagogical) இலக்கணம். விதிகளைத் தொகுத்துக் கூறுவதற்கு மட்டுமே அவர் முக்கியத்துவம் கொடுப்பவர்."

என்ற க. வெள்ளைவாரணனாரின் (2001) கருத்து தொல்காப்பியம் அமைப்பியல் இலக்கணம் என்பதையும் அது தமிழ்மொழியின் இலக்கணக் கூறுகளைப் பொதுமைப்படுத்தி உரைக்கிறது என்பதையும் விளக்குகிறது.

எல்லா மொழிகளுக்கும் பொதுவான உலகப் பொது இலக்கணக் கூறுகள் தொல்காப்பியத்தில் காணப்படுவதாலும் தமிழ்மொழியின் அடிப்படைக் கட்டமைப்பு மாறவில்லை என்பதாலும் மொழிவளர்ச்சியை ஏற்றுக்கொள்ளும் தழுவு விதிகளைப் புறனடை விதிகளாக வகுத்துள்ளதாலும் தொல்காப்பியம் இன்றளவும் மிகுதியான மாற்றங்களின்றி நிலைபெற்றுள்ளது.

3. புறனடையும் தழுவு விதிகளும்

தொல்காப்பியரின் விவரிப்பு முறை என்பது பொதுமைப்படுத்திக் கூறி, பின்பு அதற்கு விதிவிலக்காக வருவனவற்றைத் தொகுத்துரைப்பதாக அமையும். மேலும், ஓர் இடத்தில் கூறிய விதியை மீண்டும் கூறாமல் 'அதனோரற்றே' என்று மாட்டேற்று முறையில் கூறுகிற முறையினையும் காணமுடியும். இது தவிர, ஒவ்வோர் இயல் முடிவிலும் அந்தந்த இயலில் கூறப்பட்ட விதிகளுக்குப் புறனடையையும் குறிப்பிடுகிறார். ஒவ்வோர் அதிகாரத்திற்கும் புறனடையைக் காணமுடியும். இவ்வாறு தொல்காப்பியத்தில் காணப்படும் புறனடை நூற்பாக்களைத் தொகுத்துப் பார்க்கும்போது, மொழியின் பிற்கால வளர்ச்சியை மனத்தில் நிறுத்தித் தழுவு விதிகளையும் அமைத்துள்ளார் என்பது புலப்படும். இவற்றின்வழி, சில பொதுமைகளையும் காணமுடிகிறது.

> "எந்த இலக்கண ஆசிரியனும் மொழியின் முழுப் பரப்பையும் தனக்குள் கொண்டுவருதல் இயலாததாகும்... சொல்லப்பட்டவற்றைக் கொண்டு சொல்லப்படாதவற்றையும் அவற்றோடு சார்த்தி ஒப்புமை ஆக்க முறையில் உணர்ந்துகொள்க, முடித்துக்கொள்க என்ற முறையிலேயே புறனடை விதிகள் அனைத்துக்குமான பொதுவியல்பு சென்றுகொண்டிருக்கும்"

என்னும் க. வீரகத்தியின் (1984) இந்தக் கூற்று, புறனடையின் பொதுவியல்பினைச் சுட்டுகிறது. தொல்காப்பியர் இரண்டுவிதமான புறனடை விதிகளை அமைத்துள்ளார் என்பதனைப் பண்டிதர் க. வீரகத்தியின் (1984) பின்வரும் கூற்றும் உறுதிசெய்கிறது.

> "மொழியியல் வல்லுனரான தொல்காப்பியர் இருவிதமாகப் புறனடை விதிகளைத் தெரியத்தருகின்றார். அவை எழுத்ததிகாரத்தில் ஒருவிதம், சொல்லதிகாரத்தில் மறுவிதமாக உள்ளன. எழுத்ததிகாரத்தில் தாம் விதித்தவற்றின் இயல்புக்கு வேறுபாடாகக் காணப்படுவனவற்றை வழக்கொடு சேர்த்து நுட்பமதியால் தெரிந்துகொளல் வேண்டும் என்பர் (483). எழுத்ததிகாரம் ஒலித்தன்மை, ஒலிக்கான இயல்பு, ஒலிமாற்றம் பற்றியதாதலின் இங்கு வழக்கென்பது பேச்சு மொழியையே கருதும். இது தொல்காப்பியருக்கே உரிமையதான மொழியியல் புலமை நுட்பம் ஆகும். சொல்லதிகாரத்திலோ புறனடை விதியின் போக்கு வேறு கோலம் கொள்கிறது. எடுத்தோதியவற்றைக் கொண்டு ஓதாதனவற்றையும் ஒட்டியுணர்க என்பர். இவ்விதமான புறனடை விதிகள் சொல்லதிகாரத்தில் நான்கு உண்டு."

தொல்காப்பிய விதிகள் பல தற்காலத்திற்கும் பொருந்திவருவதற்குரிய காரணமாக இத்தகைய புறனடை நூற்பாக்களும் தழுவு விதிகளும் அமைந்துள்ளன. எழுத்ததிகாரத்தைப் போன்று சொல்லதிகாரத்தில் உள்ள புறனடை விதிகளையும் தழுவு விதிகளையும் தனியே பிரித்து வகைப்படுத்த முடிவதில்லை. ஏனெனில், இத்தகைய புறனடையும் தழுவுவிதிகளும் மொழியின் வளர்ச்சிக்கு இடமளிக்கும் நெகிழ்வு விதிகளாகவும் வழுவமைதிகளாகவும் அமைந்துள்ளன. ஒவ்வொரு இலக்கணக் கூறுகளுக்கும் விதி

கூறும்போது இவ்வாறு அமைந்துள்ளது, இதுபோன்று வரும் பிறவற்றையும் சேர்த்துக்கொள்க என்பன போன்று பிற்காலங்களில் தோன்றுபவற்றையும் சேர்த்துக்கொள்ளும் தழுவு விதிகளைக் காணமுடிகிறது.

ஒரு நூலாக இருந்தாலும் அல்லது மொழியாக இருந்தாலும் கால மாற்றத்தால் நிகழும் வளர்ச்சிக்கு இடம் கொடுக்காமல் இருக்குமானால், அது வழக்கற்றுப்போய்விடும். இவ்வாறல்லாமல் தமிழ்மொழியும் தொல்காப்பியமும் மொழிவளர்ச்சிக்கு இடமளிக்கும் வகையில் உள்ளதால் தொடர்ச்சி அறுந்துபோகாமல் புதியனவற்றை உள்வாங்கிக்கொண்டு பயன்பாட்டில் இருந்துவருகிறது.

நிறைவாக

தொல்காப்பியம் கூறியுள்ள இலக்கண விதிகள், பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இன்றளவும் மாறாமல் நிலைபெற்றிருப்பதற்கு அடிப்படைக் காரணம் எல்லா மொழிகளுக்குமான பொது இலக்கணக் கூறுகள் சில அவற்றுள் அடங்கியுள்ளதாகும். இதனாலேயே தொல்காப்பியமும் இன்றைய மொழியியல் பார்வையும் பெருமளவில் பொருந்திப்போகின்றன. தமிழ்மொழியின் அடிப்படை இலக்கணக் கூறுகள் (Core Grammar) மாற்றம்பெறவில்லை. புணர்ச்சி நிலையில் இரு சொற்களுக்குள் நடைபெறும் தோன்றல், திரிதல், கெடுதல் ஆகியவற்றில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தொல்காப்பியர் பெரும்பான்மையாகச் சுட்டியுள்ளவை தமிழ்மொழிக்கு மட்டுமான தன்மைகள் மட்டுமன்றிப் பொதுவாக எல்லா மொழிகளுக்கும் பொருந்தக்கூடிய இலக்கணக் கூறுகளாக (Universal Grammar) உள்ளன. எனவே, பெரும்பான்மையான கூறுகள் இன்றளவும் எவ்வகை மாற்றமுமின்றி வழங்கிவருகின்றன.

பழஞ்சொல் வீழ்ச்சியும் புதுசொல் புகுதலும் காலந்தோறும் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. தனக்கு முன் நிலவிய இலக்கணக் கொள்கைகளை இலக்கணமாக முறைப்பட வகுத்துக் காலத்திற்கு ஏற்ப மொழி வளரும் என்ற அறிதிறனையும் உணர்ந்து சில இலக்கண விதிகளையும் புறனடைகளையும் தழுவு விதிகளையும் தொல்காப்பியர் வகுத்துள்ளார் என்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது.

'தமிழ்மொழியின் சிறப்பு, அதன் தொன்மை என்பதைக் கடந்து தொடர்ச்சியான பயன்பாட்டிலேயே இருக்கிறது' என்ற கூற்றுக்கு ஏற்பத் தமிழ்மொழியின் அமைப்பு இருந்துவருகிறது என்பதை அறியமுடிகிறது. இத்தகைய தன்மையால், பெரும்பான்மையான கூறுகள் இன்றளவும் எவ்வகை மாற்றமுமின்றி வழங்கிவருகின்றன. இந்தத் தொடர்ச்சியின் வலிமையே தமிழ்மொழியைப் பேச்சுமொழியாகவும் எழுத்துமொழியாகவும் இன்றளவும் நீடித்திருக்கச் செய்துள்ளது.

தற்காலத்தில் தமிழ் இலக்கணம் கற்றல், கற்பித்தல் நிலைகளில் ஆங்கில இலக்கணத்தோடு ஒப்பிட்டே பயன்படுத்தப்படுகிறது. தற்காலத் தமிழ் இலக்கணமும் மொழிப் பயன்பாடும் ஆங்கிலத்தை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இலக்கணக் கூறுகள் ஒவ்வொன்றையும் ஆங்கில இலக்கணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய இலக்கணமாகவே இன்று மாறிவிட்டது. இந்நிலையில் தமிழைத் தாய்மொழியாகப் பெற்றிராத பிற மொழியினருக்கோ அல்லது தமிழைக் கற்கவேண்டும் என்ற தேவை ஏற்படக்கூடிய சிலருக்கோ இம்முறைப்படி கற்றுக்கொடுக்கவேண்டிய நிலை தற்காலத்தில் எழுந்துள்ளது. ஒவ்வொரு மொழியினரும் தம் தாய்மொழிக்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலை மொழியாக ஆங்கிலத்தை அறிந்திருக்கின்றனர். இத்தகு நிலைக்கு எல்லா மொழி பேசும் சமூகத்தினரின் வாழ்வியல் கூறுகளில் ஆங்கில மொழி ஏற்படுத்திய தாக்கமே இதற்குக் காரணமாக இருக்கமுடியும்.

தமிழிலக்கண வரலாற்றில் தொல்காப்பியம் தொடர்ந்து முக்கியத்துவம் பெற்று இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் பயன்பட்டுவருவதற்கு,

1) தொல்காப்பியத்துள் அமைந்துள்ள பொது இலக்கணக் கூறுகள்
2) தமிழ்மொழியின் அடிப்படைக் கட்டமைப்பு
3) புறனடையும் தழுவு விதிகளும்

ஆகிய மூன்று முக்கியக் கூறுகளையும் தொல்காப்பிய எழுத்ததிகார, சொல்லதிகார விதிகள் தற்கால நிலையில் மாறாது நிலைபெற்றதற்குரிய காரணங்களாகக் குறிப்பிடலாம். இதேபோல

1) நிலைமொழியையும் வருமொழியையும் தனிச்சொல்கொண்டு குறிப்பிட்டமை,
2) சொல்லின் வழக்கின்மை,
3) செய்யுளுக்குரியன என்பதால் பயன்பாட்டில் இல்லாமை

ஆகிய மூன்றையும் தற்கால நிலையில் குறிப்பிட்ட சில எழுத்ததிகார, சொல்லதிகார நூற்பாக்கள் பயன்பாட்டில் இல்லாமல் போனதற்குரிய முக்கியக் காரணங்களாகக் கூறலாம்.

இத்தகைய தரவுகள் தமிழ்மொழியில் எந்த வகையான இலக்கணக் கூறுகள் அதிகமாகத் தற்காலப் பயன்பாட்டில் இல்லாமல்போயுள்ளன என்பதைத் தொகுத்துப் பார்க்க உதவும். தமிழ்மொழியின் அமைப்பினைக் கூறும் தொல்காப்பியத்தைத் தற்காலப் பயன்பாட்டின் அடிப்படையில் ஒப்பிட்டுப்பார்க்கும்போது தொல்காப்பியர் காலத் தமிழுக்கும் தற்காலத் தமிழுக்கும் இடையே பல நிலைகளில் மொழிக்கலப்பு நிகழ்ந்திருந்தாலும் தமிழ்மொழியின் அமைப்பும் அதன் அடிப்படைக் கட்டமைப்பும் மாறவில்லை. இதனாலேயே, தொல்காப்பிய நூற்பாக்கள் கூறும் இலக்கண விதிகள் பலவும் இன்று பொருந்திவருகின்றன.

இதேபோல, சில நூற்பாக்கள் தற்காலத்திற்குப் பொருந்திவராமல் இருப்பவை மொழியில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதைக் காட்டுகின்றன. மாற்றங்களை வகைப்படுத்தி ஆராய்ந்து நோக்கியதில் சில விதிகள் தற்காலத்தில் பெருவழக்கின்றிப் பயன்பாட்டில் இல்லாமல்போய்விட்டன, சில விதிகள் திரிபடைந்துள்ளன எனும் முடிவைப் பெறமுடிகிறது.

தமிழ்மொழியின் அடிப்படை இலக்கணக் கட்டமைப்பு மாறவில்லை என்பதும் அதனாலேயே இன்றளவும் தொல்காப்பியம் பயன்பாட்டில் இருந்துவருகிறது என்பதும் தமிழ்மொழியின் அமைப்பை எல்லா நிலைகளிலும் உள்வாங்கித் தொல்காப்பியர் தொலைநோக்குப் பார்வைகொண்டு இலக்கண விதிகளை வகுத்துள்ளார் என்பதும் இதன்வழி அறியவரும் முடிபாகும்.

தொல்காப்பியர் இத்தகைய இலக்கணக் கூறுகளைக் குறிப்பிடவில்லை என்ற கருத்தை நிலைநாட்டுவதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. தொல்காப்பியர் காலகட்டத்தில் நிலவிய இலக்கணக் கூறுகளையும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் இலக்கணக் கூறுகளையும் ஒப்பிட்டு, எந்தெந்த இலக்கணக் கூறுகள் தற்காலப் பயன்பாட்டில் இல்லாமல் போயின, எவையெவை மாறாது தற்காலத்திலும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன என்பவற்றை எடுத்துரைப்பதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மொழியின் தொன்மையும், அறுபடாத தொடர் பயன்பாட்டையும், கால ஓட்டத்தால் ஏற்படும் வளர்ச்சியை உள்வாங்கிக்கொள்ளும் நெகிழ்வுத் தன்மையையும் கொண்டமைந்துள்ளது தமிழ்மொழி என்பதைப் புலப்படுத்துகிறது. தொல்காப்பியம் என்றும் இலக்கண, இலக்கிய ஆராய்ச்சிக்கு அடித்தளமாய்; தொடக்கமாய் அமையத்தக்கன.

இத்தகைய செய்திகள் தொல்காப்பியர் காலம் < - > தற்காலம் என்னும் இரண்டு நெடுங்கால எல்லை இடைவெளிகளில் இலக்கண மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் தமிழிலக்கண ஆராய்ச்சியின் பெருந்தரவாக அமையும். தொல்காப்பியக் காலத்திலேயே நமது தமிழ்மொழி செழுமையான பண்படுத்தப்பட்ட மொழியாகவும் செறிவான இலக்கணத்தையும் கொண்டிருந்தது என்ற கூற்று எக்காலத்திற்கும் பொருந்தும் என்பதையே இந்த ஆய்வுக் கட்டுரையும் தெளிவுபடுத்துகிறது.

துணைநூல்கள்

1. அகத்தியலிங்கம் ச., 2002, தமிழ்மொழி அமைப்பியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
2. அகத்தியலிங்கம் ச., முருகையன் க. (ப. ஆ), 1972, தொல்காப்பிய மொழியியல் (க. தொ.), மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.
3. காசுமான் மி., 2005, தமிழ்க்காப்பு இயம், காசுமான் பதிப்பகம், நாகர்கோவில்.
4. சண்முகம் செ.வை., 2001, எழுத்திலக்கணக் கோட்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
5. சரவணத்தமிழன் த., 1972, தமிழ்நூல் (தமிணூல்), தமிழன் பதிப்பகம்.
6. சித்தார்த்தன், 2003, இலகு தமிழில் இனிக்கும் தமிழ் இலக்கணம், நர்மதா வெளியீடு, தி. நகர், சென்னை.
7. சீனி நைனா முகம்மது செ., 2013, நல்ல தமிழ் இலக்கணம், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி.

8. சீனி நைனா முகம்மது செ., 2013, புதிய தமிழ்ப்புணர்ச்சி விதிகள், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி.

9. சீனிவாசன் இரா., 2000, தமிழ் இலக்கண மரபுகள், தி பார்க்கர், இராயப்பேட்டை, சென்னை.

10. சுப்பிரமணியன் ச.வே. (ப. ஆ.), 2009, தமிழ் இலக்கண நூல்கள் - மூலம் முழுவதும் குறிப்பு விளக்கங்களுடன், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

11. சுப்பிரமணியன் பா.ரா., (ப. ஆ), 2005, சொல் வழக்குக் கையேடு, மொழி அறக்கட்டளை, ஈஞ்சம்பாக்கம், சென்னை.

12. சுயம்பு பெ., 2004, தமிழ்மொழி அமைப்பும் வரலாறும், இலக்குமி நிலையம், இராயப்பேட்டை, சென்னை.

13. நுஃமான் எம்.ஏ., 2007, அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி.

14. பரமசிவம் கு., 2011, இக்கால மொழியியல் அறிமுகம், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி.

15. பரமசிவம் கு., 2011, இக்காலத் தமிழ் மரபு, அடையாளம், புத்தாநத்தம், திருச்சி.

16. பாலசுந்தரம் ச., 1991, தென்னூல், தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர்.

17. மாணிக்கம் வ.சுப., தொல்காப்பியம் நிலைபெற்றது ஏன்? ஆய்வுக்கோவை(க.தொ.), ப.410.

18. வீரகத்தி க., 1984, இலக்கண விதிமூலங்களும் விதிகளும், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிராட்வே, சென்னை.

தொ.மா.க. 227

தொடரும் தொல்காப்பிய மரபு

முனைவர் மு. இளங்கோவன்
கா. மா. அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி - 605 008
muetamil@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் மொழியின் பெருமைக்கு வளம் சேர்க்கும் நூல்களுள் தொல்காப்பியம் குறிப்பிடத்தகுந்த நூலாக விளங்குகின்றது. ஆசிரியர் தொல்காப்பியர் மிகச் சிறந்த திட்டமிடலுடன் இந்த நூலை வடிவமைத்துள்ளார். காலப் பழைமையால் இந்த நூலில் சில இடைச்செருகல்களும், விடுபாடுகளும் இருப்பதாக ஆய்வறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். எனினும் எழுத்திலக்கணம் குறித்தும் சொல்லிலக்கணம் குறித்தும் பொருளிலக்கணம் குறித்தும் தொல்காப்பியர் குறிப்பிடும் செய்திகள் உலக மொழியியல் அறிஞர்களை வியப்புக்கு உள்ளாக்கியுள்ளது. தொல்காப்பியர் தம் காலத்துக்கு முன்பிருந்த மரபுகளுக்கும் கருத்துகளுக்கும் முதன்மையளிப்பவராக இருந்துள்ளார். மொழிப, கருதுப, என்மனார் என்று வரும் குறிப்புகளைக் கொண்டு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்த செய்திகளை உடன்பட்டு, தம் இலக்கண நூலை உருவாக்கியுள்ளார் என்று கருதுவதற்கு இடம் உள்ளது.

தொல்காப்பியர் மரபு போற்றலுக்கு முதன்மையளிப்பவர். எனவே, நூல் மரபு, மொழிமரபு, தொகை மரபு, விளிமரபு, மரபியல் என்று ஐந்து இயல்களில் மரபார்ந்த செய்திகளை நுட்பமுடன் விளக்கியுள்ளார். “மாற்றருஞ் சிறப்பினை உடையது” மரபு என்று குறிப்பிடுகின்றார். தொல்காப்பியத்தின் வழியாகப் பழந்தமிழகத்து மக்களின் இயற்கையுடன் இயைந்த வாழ்வு, நிலம், பொழுது குறித்த பேரறிவு, தெய்வம், உணவு, மரம், பறவை, இசை, எண்ணுப்பெயர்கள், அளவுப்பெயர்கள், மக்கள் வழக்குகள், அகவாழ்வு, புறவாழ்வு முதலியனவற்றை அறியமுடிகின்றது.

எழுத்து மரபாகவும் சொல் மரபாகவும் வழக்கிலிருந்த செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் பகுத்தும் காட்டும் தொல்காப்பிய நூற்பாக்களின் வழியாக அக்காலத்து மக்கள் மொழிக்கு முதன்மையளித்துள்ள பாங்கினை அறிந்துகொள்ள முடிகின்றது. எல்லாச் சொல்லும் பொருள் குறித்து வரும் என்பதும், பிறமொழிச் சொற்களை எழுதும்பொழுது தமிழ் மரபுக்கு ஏற்ப எழுத வேண்டும் என்பதும் வினாவுக்கு நேரடியாக விடை நல்குதல் வேண்டும் என்பதும் மக்களின் மொழி குறித்த ஆழமான புரிதல்களைக் காட்டுகின்றன.

சங்கப்புலவர்கள், திருவள்ளுவர், சிலம்பாசிரியர் முதலியோர் தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளனர். காலவோட்டத்தில் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள சில செய்திகள் (கலி, பரிபாடல், நேர்பசை, நிரைபசை இலக்கணம் முதலியன) நிலைக்காமல் மறைந்து போனதை அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். தொல்காப்பியர் காலத்தில் இல்லாமல் தம் காலத்தில் வழங்கும் புதிய செய்திகள், நூல் நுவல்பொருள்களைத் தொல்காப்பியத்திற்கு உரை வரைந்த உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். இவற்றின் வழியாகத் தொல்காப்பியத்தின் தொடர்ச்சி, ஈராயிரம் ஆண்டு இலக்கிய வரலாற்றில் எவ்வாறு தொடர்ந்து புலவர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது. மேலும் மொழிக்காப்புக்குத் தொல்காப்பியம் முன்வைத்த கருத்துகளையும் இக்கட்டுரை நினைவூட்டுகின்றது. இன்று மக்களிடம் அறிமுகமாக உள்ள மரப்பெயர்கள், ஊர்ப்பெயர்கள், எண்ணுப்பெயர்கள் முதலியவற்றை எடுத்துரைப்பதுடன் “மூடு” என்ற அஃறிணைப் பெண்பால் பெயர் வழக்கில் அருகிவிட்டது என்று பேராசிரியர் குறிப்பிடுவதை எடுத்துக்காட்டி, மூடு என்ற சொல் இன்றும் கொங்கு வட்டாரத்தில் மக்கள் வழக்கில் உள்ளதை நினவூட்டித் தொல்காப்பிய மரபு இன்றும் தொடர்ந்தவண்ணம் உள்ளதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

முன்னுரை

தமிழ் மொழிக்குச் சிறப்பினைச் சேர்க்கும் நூல்களுள் தொல்காப்பியம் முதன்மையானதாகும். தொல்காப்பியம் நூலில் தமிழ் மொழியின் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் குறித்த செய்திகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியர் தம் காலத்துக்கு முன்பிருந்த நூல்களைக் கற்றும் தம் காலத்தில் வழக்கிலிருந்த நூல்களைக் கற்றும் தம் கருத்துகளை நுட்பமாகப் பதிவுசெய்துள்ளார்.

தொல்காப்பிய நூற்பாக்களை உற்று நோக்கும்பொழுது இந்த நூல் மிகவும் திட்டமிட்டு எழுதப்பட்டுள்ளமை புலனாகும். இதன் கட்டுக்கோப்பைக் குலைக்கும் முயற்சியில் இடைச்செருகல்கள் பிற்காலத்தில் இணைக்கப்பட்டிருக்கலாம் என்று அறிஞர் ப. மருதநாயகம் கருதுகின்றார்(தொல்காப்பியம் முதல் முழு மொழிநூல்(2019). முனைவர் பொற்கோ உள்ளிட்ட அறிஞர்கள் தொல்காப்பிய நூலில் விடுபாடுகளும் இடைச்செருகல்கள் சிலவும் இருக்க வாய்ப்பு உள்ளதைக் குறிப்பிடுகின்றனர் (தொல்காப்பிய நெறியில் மொழியியல் ஆய்வுகள், முன்னுரை, பக்கம் 10). முதுமுனைவர் இரா. இளங்குமரனார் தொல்காப்பிய நூற்பாக்கள் சில இடம் மாறிக் கிடப்பதாக ஒப்புவார்(தொல்.சொல். இளம். 2003, பக். 27). மேலும் தொல். எழுத்து. நூற்பா. 329, 330 ஆகியவற்றுக்கு முனைவர் கு.சுந்தரமூர்த்தியார் விளக்கம் வரையும் பொழுது "உரும்" என்பதை விளக்கும் ஒரு நூற்பா ஒன்று இருந்து தவறியிருக்கலாம் என்னும் வேங்கடராசலு ரெட்டியார் அவர்களின் கருத்தினை எடுத்தாண்டுள்ளார்(பக்.333). எனவே, தொல்காப்பியம் காலப்பழமையால் உருக்குலைவுக்கு ஆளாகியிருத்தல் கூடும் என்று முடிவுக்கு வர இயலும். எனவே இந்த நூல் தொடர் ஆராய்ச்சிக்கு இடம்தரும் நூலாகவும் விளங்கிவருகின்றது. இந்த நூலில் இடம்பெற்றுள்ள அக்கால மரபுகள் சில வழக்கில் இல்லை எனினும் பல மரபுகள் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன. தொல்காப்பியம் குறிப்பிடும் மரபுகள் சங்கப்பனுவல்களைப் படித்து, முழுமையாக அறிந்துகொள்வதற்குப் பேருதவிபுரிகின்றன.

தொல்காப்பியர் தம் நூலில் என்ப, என்மனார், மொழிப, கருதுப என்று தம் நூற்பாக்களில் முன்னோர் மொழிபொருளை வழிமொழிந்துள்ள பாங்கு போற்றுதலுக்கு உரியது. மரபு தொடர்ச்சியைக் குறிக்கும் அரிய குறிப்புகளாக இவை தெரிகின்றன. தொல்காப்பியர் தமிழ் மொழியின் அமைப்பினையும் தமிழர்களின் படைப்புத்திறனையும் பல்வேறு நூற்பாக்களின் வழியாக வெளிப்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் கருத்துகளை உள்வாங்கிக்கொண்ட புலவர் பெருமக்கள் ஈராயிரம் ஆண்டுகளாகத் தொல்காப்பிய மரபில் நின்று படைப்புகளை நல்கி வருகின்றமை வளமான தொல்மரபு அடுத்த தலைமுறையை வழிநடத்துகின்றமைக்குச் சான்றாக அமைகின்றது.

சங்க இலக்கியங்களுக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது தொல்காப்பியம் என்று குறிப்பிடும் இளங்குமரனார் தொல்காப்பியர் குறிப்பிடும் பரிபாடல் இலக்கணம், கட்டளையடி இலக்கணம், நேர்பசை, நிரைபசை இலக்கணம், உரையாப்பு, நூல்யாப்பு, வாய்மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, முதுசொல்யாப்பு உள்ளிட்ட யாப்பு வகைகளை அறியும் வகையில் சங்க நூல்களில் செய்திகள் இல்லை என்கின்றார். மேலும் "கள்" ஈறு தொல்காப்பியத்தில் அஃறிணை ஈறாக வழங்கப்படும் என்று குறிப்பிடுகின்றது ஆனால் "பூரியர்கள்", "மற்றையர்கள்" என்று திருக்குறளில் உயர்திணை ஈறாக வழங்குகின்றது. எனவே சங்க நூல்களும் தொல்காப்பியமும் காலத்தால் இடைவெளி கொண்டுள்ளது என்பது இளங்குமரனாரின் கருத்தாகும். எனவே தொல்காப்பியத்தின் சாயலைச் சங்கப் பனுவல்களில் பார்க்க இயலுமே தவிர, சங்கப் பனுவல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் சிற்சில வழக்கு வேறுபாடுகள் இருப்பதைக் கவனிக்கமுடிகின்றது. தொல்காப்பியம் சங்க நூல்களுக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. எனினும் தொல்காப்பியர் குறிப்பிட்ட பல செய்திகள் பின்னாளில் தனி இலக்கியங்களாகவும் வகைகளாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன.

தொல்காப்பியர் குறிப்பிடும் ஐந்திணைகளை மனத்துள்கொண்டே திருவள்ளுவர் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற பொருண்மையில் காமத்துப்பாலை வழங்கியுள்ளார். தொல்காப்பியர் குறிப்பிடும் கைக்கிளை என்பது சிற்றிலக்கிய அமைப்பில் முத்தொள்ளாயிரத்தில் அமைந்து இன்பச்சுவை

ததும்பும் பாடல்களாக வளர்ந்துள்ளன. மேலும் ஏறிய மடல் திறம் என்பது பெரிய திருமடல் சிறிய திருமடல் என்று ஆழ்வார்களால் பாடப்பட்டுள்ளது. மறம் என்பது கண்ணப்பர் திருமறம் ஆனது என்பர் இரா. இளங்குமரனார். தொல்காப்பியர் குறிப்பிடும் காட்சி, கால்கோல், நீர்ப்படை, நடுதல், வாழ்த்தல் என்பது சிலப்பதிகாரத்து வஞ்சிக்காண்டமாக வளர்ந்துள்ளது. உவமையியல் செய்திகள் தண்டியலங்காரமாகவும், அகத்திணைச் செய்திகள் அகப்பொருள் விளக்கமாகவும், புறத்திணைச் செய்திகள் புறப்பொருள் வெண்பா மாலையாகவும், செய்யுளியல் செய்திகள் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகையாகவும் வளர்ந்துள்ளமையை நோக்கும்பொழுது, தொல்காப்பிய மரபு தொடர்ந்து செழித்து வளர்ந்துள்ளதை அறியமுடிகின்றது.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் சொல்லியுள்ள அரிய உண்மைகளை இற்றை மொழியியல் அறிஞர்கள் வியப்புடன் உற்றுநோக்குகின்றனர்(மருதநாயகம், ப. தொல்காப்பியம் முதல்முழு மொழிநூல், முன்னுரை). எழுத்துகளின் பிறப்பினைக் குறித்தும் எழுத்துகளால் அமையும் சொற்களின் புணர்ச்சிகள் குறித்தும், தொடர்கள் குறித்தும் அமைந்துள்ள தொல்காப்பியர் கருத்துகள் நுட்பம் சான்றவையாகும். தொல்காப்பியர் காலத்தில் வழக்கிலிருந்த மரபுகள், சொற்கள், சில வழக்கிறந்தன எனினும் பெரும்பான்மையான மரபுகள் இன்றும் தொடர்வதை எண்ணிப்பார்க்கும்பொழுது தமிழ்மொழியின் தொன்மையையும் தமிழர்களின் மரபார்ந்த வாழ்வியலையும் அறிந்துகொள்ளமுடிகின்றது.

மரபு போற்றும் தொல்காப்பியர்

தொல்காப்பியர் தமது முன்னோர் வழி நின்று, தமிழ் மொழியின் எழுத்து மரபினையும், சொல் மரபினையும், செய்யுள் இயற்றும்பொழுது பின்பற்றத்தகுந்த பொருள் மரபினையும் தம் நூல் முழுவதும் பல்வேறு நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ளார். எழுத்ததிகாரத்தில் நூல் மரபு, மொழி மரபு, தொகை மரபு பேசியவர் சொல்லதிகாரத்தில் விளிமரபு பேசிப், பொருளதிகாரத்தில் மரபியல் என்ற தலைப்பில் பல்வேறு மரபு செய்திகளை விளக்கியுள்ளார். இவை யாவும் தொல்காப்பியரின் மரபுபோற்றும் பண்புக்குச் சான்றாகும்.

மரபு என்பது முன்னோர்கள் எவ்வாறு எதனைக் குறித்தனரோ அவ்வாறு சொல்வது - பின்பற்றுவது ஆகும். தொல்காப்பியர்

"மாற்றருஞ்சிறப்பின் மரபு" (மரபியல்,545),
"சொல்லிய மரபின்" (மரபியல்,570),
"மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை" (மரபியல்,636)
"மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்" (மரபியல்,637)
மரபுநிலை திரியா மாட்சிய வாகி" (மரபியல்,639)

என்று மரபின் முதன்மையைப் பதிவு செய்துள்ளார். பிற்கால இலக்கண ஆசிரியரான பவணந்தி முனிவரோ தம் நன்னூலில்,

"எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" (நூற்பா 388)

என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு இணையான நூற்பா தொல்காப்பியத்தில்,

வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கண் ஆக லான" (நூற்பா 638)

என்று இடம்பெற்றுள்ளது.

உயர்ந்தோர் வழங்கும் ஒழுகலாறே வழக்கு என்கின்றது தொல்காப்பியம். அவ்வாறு வழங்கிய செய்யுள் வழக்கு, பேச்சு வழக்கினைத் துணைக்கொண்டு தொல்காப்பியர் தொல்காப்பியத்தை இயற்றியுள்ளார்.

எழுத்ததிகாரத்தில் இடம்பெறும் மரபு தொடர்ச்சி

எழுத்ததிகாரம் எழுத்துகளின் எண்ணிக்கை, எழுத்துகளின் பெயர், முறை, வடிவம், அளவு, மயக்கம் முதலிய செய்திகளை முன்வைக்கின்றது. தமிழை எழுதும் பொருள்கள் (ஓலை, துணி, கல், செப்பேடு, தாள், கணினி) காலந்தோறும் மாறி வந்திருப்பினும் அவற்றின் அடிப்படையில் எழுத்து வடிவங்கள் மாறி இன்றைய வளர்ச்சி நிலையைப் பெற்றுள்ளன. எனினும் பழந்தமிழகத்தில் எழுத்துகளை எவ்வாறு எழுதினர் என்பதைப் பல நூற்பாக்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" என்பது தொல்காப்பியம். இளம்பூரணர் கருத்துப்படி ம் என்ற எழுத்துப் பண்டைக்காலத்தில் ப் என்று எழுதப்பட்டமை தெரிகின்றது. பன்னிரு உயிரெழுத்துகளுடன் பதினெட்டு மெய்யெழுத்துகளும் சேர்ந்து ஒலிக்கும்பொழுது புள்ளி நீங்கி, மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும் அமையும் என்பவை இன்றளவும் தொடர்ந்துவரும் உண்மையாக உள்ளது. அதுபோல் எழுத்துகளுக்கு அமையும் மாத்திரை அளவும் ஒலிப்புமுறைகளும் இன்றும் ஒத்துள்ளன.

மொழிமரபில் குறிப்பிடப்படும் மொழிக்கு முதலாகும் எழுத்துகளும் மொழிக்கு இறுதியாக அமையும் எழுத்துகளும் தொல்காப்பிய மரபில் நின்று எழுதப்பட்டுள்ளமையைப் பழம்புலவர்களின் நூல்களிலிருந்து அறியலாம். ஆனால் இன்று மாறுபட்டு எழுதும் போக்குத் தமிழகத்தில் நிலவுவதையும் கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது. தமிழ் எழுத்துகளுடன் கிரந்த எழுத்துகளை இணைத்தும் ஆங்கில எழுத்துகளை இணைத்தும் ஆங்கிலச் சொற்றொடர்களைச் சுருக்கியும், ஆங்கிலச் சொல்லில் திரைப்படப்பெயர்களை அமைத்தும் தமிழ் மொழிக் கலப்பு வரைமுறையின்றிச் செய்யப்படுகின்றது. இத்தகு மொழிக்கலப்பை - எழுத்துக்கலப்பை அன்றே கண்டித்து,

"வடசொற் கிளவி வடிவெழுத்தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என்று அரணிட்டு மொழியைக் காத்தவர் தொல்காப்பியர்.

பிற்காலத்துக் கம்பர் தம் இராமகாதையில் சானகி, வீடணன், இலக்குவன், வசிட்டன், அனுமன் என்று தமிழ் மரபு போற்றி எழுதியுள்ளமை இவண் எண்ணிப்பார்க்கத் தகுந்தது.

தொல்காப்பியர் மெய்யெழுத்துக்கள், மெய்யொலிகள் குறித்து விரிவாகச் சிந்தித்துள்ளார். தனி மெய்கள் ஒலிவடிவிலும் வரிவடிவிலும் அகரத்தோடு பொருந்தியும் பிற உயிர்களுடன் பொருந்தியும் நடக்கும் என்கின்றார். இன்னின்ன எழுத்துகள் இன்னின்ன எழுத்துகளுடன் இணைந்தே மெய்ம்மயக்கமாக அமையும் என்கின்றார். ய,ர,ழ என்ற மூன்று ஒற்றுகளுடன் க,ச,த,ப,ங,ஞ, ந, ம என்ற ஒற்றெழுத்துகள் கூடி ஈரொற்றாய் நிற்கும் என்றும் ர, ழ என்பன தனிக்குற்றெழுத்துடன் ஒற்றாக வாரா எனவும், நெடிலினை அடுத்த ர, ழ ஒற்றாக வரும் என்கின்றார். இன்றளவும் இம்மரபு தொடர்ந்து வருவதை அறியமுடிகின்றது.

சொற்கள் ஒன்றுடன் ஒன்று புணரும் முறையைத் தொல்காப்பியர் விரிவாகச் சிந்தித்துள்ளார். பெயருடன் பெயரும் பெயருடன் வினையும், வினையுடன் வினையும் வினையுடன் பெயரும் என்று சொற்கள் புணர்வதைக் குறிப்பிடும் தொல்காப்பியர் அவ்வாறு புணரும்பொழுது தோன்றல், திரிதல், கெடுதல் உள்ளிட்ட மாற்றங்களைப் பெறும் என்கின்றார்.

எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபாடு மட்டும் அமையும் புணர்மொழிகள் தமிழில் உள்ளன என்பதைத் தொல்காப்பியர் பதிவுசெய்துள்ளார். எடுத்தல், படுத்தல், நலிதல் என்ற ஓசை வேறுபாட்டின் காரணமாகப் பொருள் வேறுபட்டு நிற்கும் சொற்கள் தமிழில் உள்ளன(நூற்பா 142). இதற்குச் சான்றாகச் செம்பொன்பதின்தொடி, குன்றேறாமா என்பனவற்றை உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுவர். இன்றைய வழக்கில் பழைய மாணவர் விடுதி, புதிய மகளிர் விடுதி முதலிய தொடர்களை அறிஞர்கள் எடுத்துக்காட்டுவது உண்டு.

தொகை மரபு என்னும் இயலில் உயிரீறு 12, மெய்யீறு 11 குற்றியலுகர ஈறு 1 ஆக 24 ஈறுகளும் ஒரே விதமான புணர்ச்சி விதிகள் பெறுவதைப் பழங்காலந்தொட்டு வரும் மரபிலிருந்து பிழையாது கூறப்பட்டுள்ளது.

உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்னும் மூன்று இயல்களிலும் தமிழ்ச் சொற்களின் புணர்ச்சியைப் பற்றி எடுத்துரைத்தாலும் தமிழர் வாழ்வியல், பழக்க வழக்கம், இயற்கையோடு இயைந்த வாழ்வு, வணிகமுறை, எண்ணியல் அறிவு, கணக்கியல் அறிவு, மரம், செடி, கொடிகள், விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிரிகள், குயின் (மேகம்), பொற்குடம்(333), முதலிய செய்திகள் பலவும் குறிப்புகளாகச் சிதறிக்கிடக்கின்றன. அவற்றைத் தொகுத்தும் விரித்தும் ஆராயும்பொழுது தமிழகத்தில் வழக்கில் இருந்த உண்மைகள் பலவற்றை வெளிக்கொண்டு வர இயலும். தமிழகத்தில் இருந்த அளவுப்பெயர்கள், எண்ணுப்பெயர்கள் குறித்த பல குறிப்புகளை நூற்பா வழியாகவும், எடுத்துக்காட்டுகளின் வழியாகவும் அறிய இயலும். அதுபோல் தொல்காப்பியர் குறிப்பிடும் ஒன்பதைக் குறிக்கும் “தொண்டு” என்னும் சொல் வழக்கு வீழ்ந்துள்ளதையும் அறியமுடிகின்றது. ஒன்று + பஃது என்பது புணரும்பொழுது ஒருபஃது(200, 438,439) என்று வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார். இன்றும் சிற்றூர்ப்புறங்களில் உழவர்கள் வழக்கில் இச்சொல் வழக்கில் உள்ளது

வெயில்(378) மழை(378), பனி(242), வளி(243), இருள்(403), தெய்வம், வழிபடு தெய்வம், உணவு, பறை, மரம், உலகம், களவு, கற்பு, குறித்துப் பல நூற்பாக்கள் பேசுகின்றன.

பாழ்ங்கிணறு(368), ஏழாயிரம்(392), ஏழிரண்டு(395), குமிழம்பூ, குமிழங்காய், குமிழம்பழம்(387), மகிழம்பூ, மகிழம்புறா(387), ஆலங்கோடு(376), பூலங்கோடு(376), வேலங்கோடு(376), நெல், செல், கொல், சொல்(372), பீர்க்கங்காய், பீர்க்கம்பூ (364, 366), முன்றில் (356), தற்புகழ்ச்சி(354), சாத்தங்குடி(351), கொற்றங்குடி(351), கன்னக்கோல்(347), தேன்(341), தேன்குடம் (341,342,243,244), மீன்(340), மீன்கண், மீன்சினை, முதலான இன்றைய வழக்கில் உள்ள சொற்களைக் குறித்தெல்லாம் தொல்காப்பியர் சிந்தித்துள்ளார்.

ஈம்- சுடுகாடு, (ஈமக்குடம், ஈமச்சடங்கு_, கம் - பொன்வேலை (கம்மியர்) உரும்-இடி(329), ஆயிரத்தொன்று(318), குளக்கரை(313), மாநகரக் காவல், மரக்கிளை(311), “மகர இறுதி வேற்றுமை யாயின் துவரக்கெட்டு வல்லெழுத்து மிகுமே”(311)., மண்குடம் - மட்குடம்(303),, கோவில்(294), வேணவா(289) பனைக்கொடி(286), பனாட்டு(285), பனங்காய்(284), ஆவிரை(ஆவாரம்பூ)(284), பூங்கொடி(269), கடுக்காய்(260), இடக்கர்ப்பெயர்(பீ - 251), புளி(245,246), உதிமரம்(24), நாழி(241)(ஒரு படி), உரி(241(அரை படி), பதக்கு(240), மாமரம்(232), ஆ- பசு(232), நிலா(229), பல, சில(214), பற்பல சிற்சில, பலப்பல, சிலச்சில(216), சாவ (210), பலவற்றை(175), நின்னை(180), மரத்தை(186), எல்லாம்(190), எல்லாரும்(192), வரகு(196), கலம்(169), பதக்கு(172), இரண்டேகால், ஏழே முக்கால்(165), வேப்பங்கிளை(416), தேக்கங்கட்டை(416), வண்டு(421), பெண்டு(421,422), உள்பொருள்(431), வடகிழக்கு, வடமேற்கு(433), தென்கிழக்கு(433) தென்மேற்கு(433), பதினொன்று, பதினெட்டு(434), பன்னிரண்டு(435), பத்தாயிரம்(46), மூன்று, நான்கு ஐந்து, ஆறு, ஒன்று, ஒன்பது, நூறு, தொண்டு, முந்நூறு, நானூறு, ஐந்நூறு, தொள்ளாயிரம், ஓராயிரம்(464), முவ்வாயிரம்(466,60), நாலாயிரம்(467), ஐயாயிரம்(468), ஆறாயிரம்(469), மா(அளவு)(480) முதலிய இற்றை மக்கள் வழக்கில் உலவும் பல சொற்களைத் தொல்காப்பியர் ஆராய்ந்துள்ளமை வியப்பளிக்கின்றது.

தொல்காப்பியர் குறிப்பிடும் எண்ணைக் குறிக்கும் தாமரை, வெள்ளம் ஆம்பல்(394) உள்ளிட்ட சொற்கள் இன்று வழக்கில் இல்லை. ஆயின் இடைக்கால இலக்கியங்களில் இச்சொற்கள் வழக்கில் இருந்துள்ளன.

சொல்லதிகாரத்தில் தொல்காப்பியர் அக்காலத்தில் மக்கள் வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இருந்த சொற்கள், சொற்றொடர்கள் குறித்து விரிவாகச் சிந்தித்து உரிய மரபினைப் போற்ற வேண்டும் என்று

வலியுறுத்தியுள்ளார். சொற்கள் என்பவை தமிழில் பொருள் தரக்கூடியவை என்று விளக்கம் சொல்கின்றார். சொற்கள் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும் என்கின்றார். ஒவ்வொரு சொற்களுக்கும் உரிய விளக்கம், அதன் பண்புகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

ஒரு மொழியைக் கற்பார் அம்மொழியில் வழங்கும் சொற்கள், சொற்றொடர்கள் குறித்து விரிவாக அறிதல் முதன்மைக் கடமையாகும். சொற்களை இடம் அறிந்து பயன்படுத்த வேண்டும் என்பது தொல்காப்பியர் கொள்கை. ஈ, தா, கொடு என்பன ஒன்றுபோல இருந்தாலும் பொருள் பொதிந்த சொற்களாகும் என்கின்றார். இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோனைக் குறித்து வருவனவாகும் இச்சொற்கள் என்பதைத் தொல்காப்பியர் சிறப்பாக எடுத்துக்காட்டுவார்.

வினாக்களைக் கேட்டால் உரிய விடையை நேரடியாகச் சொல்ல வேண்டும். அல்லது தொடர்புடைய வகையில் சொல்லவேண்டும் என்கின்றார். “கனடாவுக்கு எவ்வாறு செல்ல வேண்டும்?” என்றால் வானூர்தியில் செல்ல வேண்டும் என்று நேரடியாக விடை தருதல் வேண்டும். உளுந்து கிடைக்குமா? என்றால் பயிறு அல்லது இல்லை என்று விடை தரலாம் என்கின்றார். “புலிகொல் யானை” என்றால் புலியால் கொல்லப்பட்ட யானை எனவும் புலியைக் கொன்ற யானை எனவும் பொருள் உண்டு என்று குறிப்பிட்டு, இதனைத் தடுமாறு தொழிற்பெயர் என்கின்றார்(நூற்பா 95).

உயர்திணைப் பெயரை உயர்திணைக்கு உரிய ஈறு கொடுத்து முடித்தல் வேண்டும் எனவும் அஃறிணைக்கு உரிய பெயரை அஃறிணைக்கு உரிய ஈறு கொடுத்து முடித்தல் வேண்டும் என்கின்றார். நிகழ்காலத்தில் நடைபெறுவதை விரைவு காரணமாக இறந்தகாலத்தில் குறிப்பிடலாம் என்கின்றார்(241). வழு என்றும் வழுவமைதி என்றும் தொல்காப்பியர் பல்வேறு சொற்களையும் சொற்றொடர்களையும் காட்டியுள்ளார். தகுதியான சொற்களை ஆளுதல் வேண்டும் என்பது அக்காலத்து மக்களின் எண்ணம் என்பதை அறிந்த தொல்காப்பியர் அதனை வலியுறுத்துகின்றார். இயற்கைப் பொருளை இயல்பாகக் கூறுதல் வேண்டும் என்பதும் செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூற வேண்டும் என்பதும் அக்கால மரபாகும்.

உவமை கூறும்பொழுது வினை, பயன், மெய், உரு அடிப்படையில் உவமை கூறுவது மரபு என்று தொல்காப்பியம் கூறும். அதுபோல் சில பொருள்களை இன்னது என்று காட்ட இயலாது என்று குறிப்பிட்டு அன்பு, கருணை, பாசம் என்பவற்றைக் “காட்டலாகப் பொருள்” என்கின்றார். செய்யுளியலில் முப்பத்திரண்டு செய்யுள் உறுப்புகளை முன்னோர் வழி நின்று முறையுறத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

தொல்காப்பியரின் மரபியல் என்னும் இயலில் மக்களிடம் நிலவிய மரபுசார்ந்த செய்திகள் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. உயிர்களை ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை பகுத்துரைத்துள்ளார். இருதிணைக்கும் உரிய இளமைப் பெயர்கள், ஆண்பால் பெயர்கள், பெண்பால் பெயர்கள் என்று பலவகைப் பாகுபாடுகளில் பெயர்கள் தரப்பட்டுள்ளன. தமிழ்ச் சொல் செழுமையை விளக்க இச்சொல் விளக்கங்கள் இருந்தாலும் வழக்கிழந்த சொற்களையும் வழக்கில் உள்ள சொற்களையும் வழக்கில் மாற்றம்பெற்ற சொற்களையும் அறிந்துகொள்வதற்கு மரபியல் இருதிணைப் பெயர்களின் விளக்கம் உதவுகின்றது. பெண்பாலைக் குறிக்க 13 பெயர்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

மரபியலுள் இடம்பெறும் ”மூடும் கடமையும் யாடல பெறா” என்ற நூற்பாவுக்கு உரை வரைந்த பேராசிரியர் இவை இப்பொழுது வழக்கினுள் அரிய“ என்று “மூடு” குறித்துக் குறிப்பிடுவார். இவ் விளக்கத்தின் காரணமாக வழி வழியாகத் தொல்காப்பியம் கற்றவர்களும் மூடு என்ற பெண்பாலைக் குறிக்கும் சொல் வழக்கில் இல்லை என்று குறிப்பிட்டு வந்தனர். ஆயின் இன்றும் கொங்கு வட்டாரத்தில் மூடு என்பது பெண் ஆட்டுக்குட்டியை வழங்கும் வழக்குச்சொல்லாக நின்று நிலவுவதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். எனவே தொல்காப்பியர் குறிப்பிடும் மரபுச் செய்திகள் சில வழக்கொழிந்தன எனினும் பற்பல இன்றும் வழக்கில் உள்ளன.தொல்காப்பிய ஒளி விளக்கு என்றும் தமிழின் சிறப்பை வெளிச்சம்மிட்டுக் காட்டிக்கொண்டே இருக்கும்.

உரை

தொ.மா.க.111

தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வதில் சி.கணேசையரின் உரைவிளக்கக் குறிப்புகளின் வகிபாகம்

திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ் கற்கைகள் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
jude_ruby@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்மொழியின் அரும்பெரும் இலக்கணச் சொத்தாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியரால் இயற்றப்பட்ட இந்நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களில் அமைந்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் விளக்குகின்றது. தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வதற்கு பின்வந்த உரையாசிரியர்கள் பலர் வழியமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், பேராசிரியர், கல்லாடனார் எனப் பலர் இம்முயற்சியில் முன்னோடிகளாகப் பணியாற்றியுள்ளார்கள். எனினும் இன்றுவரை தொல்காப்பியரின் கருத்துக்களைச் செவ்வனே புரிந்துகொள்வதில் விவாதங்களும் சர்ச்சைகளும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. தொடர் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தொல்காப்பிய உரைகளுக்கான விளக்கக் குறிப்புகள் பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரி, எஸ்.வையாபுரிப்பிள்ளை, ரா.ராகவையங்கார், கா.நமசிவாய முதலியார், திரிசிரபுரம் கனகசபைப்பிள்ளை, மன்னார்குடி சோமசுந்தரம்பிள்ளை முதலான பலரால் எழுதப்பட்டன. இலங்கையில் சி.வை.தாமோதரம்பிள்ளை, சி.கணேசையர் ஆகியோர் இத்துறையில் தம் பங்களிப்பை வழங்கியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இத்தகைய பின்னணியில் இலங்கைத் தமிழ் அறிஞரும் இலக்கணத்தில் புலமை மிக்கவருமான மகாவித்துவான் சி.கணேசையர் (1878 - 1958) தொல்காப்பிய உரைகள் தொடர்பாகவும் தமிழ் இலக்கண விடயங்கள் தொடர்பாகவும் எழுதிய கட்டுரைகள் கவன ஈர்ப்புப் பெறுகின்றன.தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வதில் சி.கணேசையரால் எழுதப்பட்ட உரைவிளக்கக் கட்டுரைகளின் அல்லது குறிப்புகளின் முக்கியத்துவத்தையும் பங்களிப்பையும் வெளிப்படுத்துவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இதன் மூலம் இலங்கைத் தமிழறிஞர்களின் இலக்கணத்துறை சார்ந்த செயற்பாடுகள் மற்றும் புலமை குறித்தும் அறிந்துகொள்ள முடியும்.இந்த ஆய்வில் விளக்க முறை, ஒப்பீட்டு முறை, பகுப்பாய்வு முறை ஆகிய ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.ஆய்வு எல்லை கருதி அவற்றுள் அளபெடை, தொகைநிலை, வடசொல், பொருட்புடைபெயர்ச்சி, பிறிதுபிறிதேற்றல் ஆகியனவே இங்கு ஆய்விற்கு ஆதாரங்களாக எடுத்தாளப்படுகின்றன.

திறவுச் சொற்கள்: உரைவிளக்கம், பொருட்புடைபெயர்ச்சி, தொகைநிலை, பிளவுபட்டிசைத்தல், ஒருங்கிசைத்தல்

அறிமுகம்

தமிழ்மொழியின் அரும்பெரும் இலக்கணச் சொத்தாகத் தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியரால் இயற்றப்பட்ட இந்நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களில் அமைந்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் விளக்குகின்றது. தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வதற்கு பின்வந்த உரையாசிரியர்கள் பலர் வழியமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள். இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், பேராசிரியர், கல்லாடனார் எனப் பலர் இம்முயற்சியில் முன்னோடிகளாகப் பணியாற்றியுள்ளார்கள். எனினும் தொல்காப்பியரின் கருத்துக்களைச் செவ்வனே புரிந்துகொள்வதில் விவாதங்களும் சர்ச்சைகளும் இன்றுவரை தொடர்ந்த வண்ணமேயுள்ளன. தொடர் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழகத்திலும் இலங்கையிலும் கி.பி பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுவரும் ஆரோக்கியமான உரையாடல்களும் கருத்து மோதல்களும், முடிவை நோக்கிய ஊகங்களும், நிறுவுகைகளும் முக்கியமானவை. தமிழ் உலகில் இவற்றின் முக்கியத்துவம் மிக அரிதாகவே உணரப்பட்டும் எடுத்துக் கூறப்பட்டும் வந்துள்ளன.

குறிப்பாகத் தொல்காப்பியம் மற்றும் அதன் உரைகள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள உரைவிளக்கக் குறிப்புகள் தற்போதைய சூழலில் தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வதில் பேருதவி புரிகின்றன. தொல்காப்பியத்தினதும் அதன் உரைகளினதும் சிறப்புக்களையும் அவை வெளிப்படுத்தும் கருத்துக்களையும் புரிந்துகொள்வதில் உரைவிளக்கங்களாக அமையும் குறிப்புகள் பெருந்துணை புரிகின்றன.

அது மட்டுமன்றி இலக்கண விடயங்களை ஒப்பீட்டுக் கற்கவும் கற்பிக்கவும், தெளிவாகவும் எளிமையாகவும் புரிந்து கொள்ளவும், பல்வேறு உரைகளை ஒருசேர நோக்கவும் இவை வழிவகுக்கின்றன.

தமிழ்நாட்டில் தொல்காப்பிய உரைகளுக்கான விளக்கக் குறிப்புகள் பி.சா.சுப்பிரமணியசாஸ்திரி, எஸ்.வையாபுரிப்பிள்ளை, ரா.ராகவையங்கார், கா.நமசிவாய முதலியார், திரிசிரபுரம் கனகசபைப்பிள்ளை, மன்னார்குடி சோமசுந்தரம்பிள்ளை முதலான பலரால் எழுதப்பட்டன. இலங்கையில் சி.வை.தாமோதரம்பிள்ளை, சி.கணேசையர் ஆகியோர் இத்துறையில் தம் பங்களிப்பை வழங்கியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இத்தகைய பின்னணியில் இலங்கைத் தமிழ் அறிஞரும் தமிழ் இலக்கணத்தில் புலமை மிக்கவருமான மகாவித்துவான் சி.கணேசையர் (1878 - 1955) தொல்காப்பிய உரைகள் தொடர்பாகவும் தொல்காப்பியம் குறிப்பிடும் இலக்கண விடயங்கள் தொடர்பாகவும் எழுதிய கட்டுரைகள் கவன ஈர்ப்புப் பெறுகின்றன.

தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்வதில் சி.கணேசையரால் எழுதப்பட்ட உரைவிளக்கக் கட்டுரைகளின் அல்லது குறிப்புகளின் முக்கியத்துவத்தையும் பங்களிப்பையும் வெளிப்படுத்துவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இதன் மூலம் இலங்கைத் தமிழறிஞர்களின் இலக்கணத்துறை சார்ந்த செயற்பாடுகள் மற்றும் புலமை குறித்தும் அறிந்துகொள்ள முடியும்.

தொல்காப்பியத்தின் உரைகள் மற்றும் உரையாசிரியர்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட அளவிற்கு உரை விளக்கங்கள் மற்றும் உரை விளக்கங்களை எழுதியோர் தொடர்பான ஆய்வுகள் வெளிவரவில்லை. சி. கணேசையர் பற்றிய கட்டுரைகளிலும் அவரது ஒட்டுமொத்தமான இலக்கிய மற்றும் இலக்கணப் பங்களிப்பு குறித்து நோக்கப்பட்டதேயன்றி அவரது உரைவிளக்கப் பங்களிப்பு குறித்து விரிவாகவும் ஆழமாகவும் நோக்கப்படவில்லை. இந்த ஆய்வு, இவ்விடயம் தொடர்பாக ஓரளவு விரிவாகவும் ஆழமாகவும் நோக்க முற்படுகின்றது. இதன்மூலம் தொல்காப்பியத்தின் மற்றுமொரு பரிமாணத்தை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் அதேவேளை, இலங்கைத் தமிழறிஞர்கள் தொல்காப்பியப் பனுவலையும் அதன் உரைகளையும் தெளிந்த முறையில் அளிக்கை செய்யும் தன்மையையும் மதிப்பீடு செய்ய முடியும்.

மகாவித்துவான் சி.கணேசையர் (1878 - 1955) :

சி.கணேசையர், யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சின்னையர் - பொன்னம்மை தம்பதியினரின் மகனான இவர், தனது பெரிய தந்தையால் நடத்தப்பட்ட சைவப் பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்புவரை கல்வி கற்றார். அதன் பின்னர் வித்துவசிரோன்மணி ந.ச.பொன்னம்பல பிள்ளையின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இலக்கணக்கல்வி பயின்றார். பொன்னம்பலபிள்ளை அவர்களின் இறப்பின் பின்னர் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரிடம் இலக்கணமும் வடமொழியும் கற்றார்.

இவர், தனது இருபத்தைந்தாவது வயது தொடக்கம் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' இதழில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை எழுதிவந்தார். இலக்கியம், இலக்கணம், சைவ சித்தாந்தம் ஆகியன தொடர்பாக இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் அமைந்திருந்தன.

புலவராக, வாழ்க்கை வரலாற்றாசிரியராக, இலக்கிய உரையாசிரியராக, இலக்கண ஆராய்ச்சியாளராக எனப் பல துறைகளில் இவர் பணியாற்றியிருப்பினும் இலக்கணத்துறையிலேயே இவரது ஈடுபாடு அதிகமாக இருந்தது. தொல்காப்பியப் பாயிரம் மற்றும் முதற்சூத்திரம் என்பவை தொடர்பாக இவருக்கும் அரசன் சண்முகனாருக்குமிடையே நடைபெற்ற விவாதங்கள் பிரசித்தமானவை.

'தொல்காப்பியக் கடல்' என்னும் சிறப்புப் பெயரால் சி.கணேசையர் குறிக்கப்பெறுவது தொல்காப்பியத்தின் மீதான இவரது புலமைக்கு ஆதாரமாக அமைவதாகும்.

சி.கணேசையர் தொல்காப்பிய உரைகளின் ஏட்டுப்பிரதிகளைத் தேடிப்பெற்று அவற்றை ஒப்பு நோக்கி தொல்காப்பியம் முழுவதையும் தமது உரைவிளக்கக் குறிப்புகளோடு வெளியிட்டார். தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் இவரால் விளக்கக் குறிப்புகள் எழுதப்பட்டன.

'இப்பதிப்புகள் வெளியான பின்னர் தமிழ் நாட்டறிஞர், ஐயரின் அறிவின் பெருமையையும், ஆற்றலையும் உள்ளவாறுணர்ந்து மதிக்கலாயினர்' (வேலுப்பிள்ளை.ஆ, 1984) அவரால் எழுதப்பட்ட இலக்கண உரைவிளக்கக் கட்டுரைகளுள் தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி, அளபெடை, வடசொல், உடம்படுமெய், போலி எழுத்து, ஆறனுருபு பிறிதுருபேற்றல், இருபெயரொட்டாகு பெயரும் அன்மொழித்தொகையும், சிறுபொழுதாராய்ச்சி, மெய்ப்பாடு, பொருட்புடைபெயர்ச்சி ஆகியன குறிப்பிடத்தக்கன. இவரால் எழுதப்பட்ட இத்தகைய கட்டுரைகளிற் பெரும்பாலானவை செந்தமிழ் இதழில் வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வு எல்லை கருதி இவரது கட்டுரைகளுள் அளபெடை, தொகைநிலை, வடசொல், பொருட்புடைபெயர்ச்சி ஆகியனவே இங்கு ஆய்விற்கு ஆதாரங்களாக எடுத்தாளப்படுகின்றன.

அளபெடை:

'நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழுஉத லென்மனார் புலவர்' (தொல்: எழு: 6)

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் கருதியது எதுவென்பதை இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்கள் கூறும் உரைகளையும் நன்னூல் மற்றும் நன்னூல் உரையாசிரியர்களின் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து சி.கணேசையர் நிறுவியுள்ளார்.

'அளபெடை - அளபெடுப்பது: என்றது அளபெடுத்தலையுடையதாய எழுத்தை. அளபெடுக்குங்கால் நெட்டெழுத்தேழும் அளபெடுக்கும் எனவும், அவை இவ்வளவு மாத்திரை நீண்டனவென்பதை அவ்வவற்றிற் கினமாகிய குற்றெழுத்துக்கள் காட்டி அவற்றின் பின்னே நிற்கும் எனவும் நன்னூலார் கூறுவர்' என கட்டுரையின் ஆரம்பத்திலேயே நன்னூலாரின் கருத்தை சி.கணேசையர் குறிப்பிட்டுள்ளார்.

(கணேசையர்.சி, 2012, பக். 48)

அடுத்து அளபெடை குறித்த தொல்காப்பிய நூற்பாவிற்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் கூறியுள்ள உரைகளைத் தந்து அவ்விருவரும் நெடிலும் குறிலும் சேர்ந்து நின்று அளபெடுக்கும் எனக் கருதியுள்ளமையை விளக்கியுள்ளார். 'நீண்ட மாத்திரையையுடைய அளபெடையெழுத்துப் பெறவேண்டின், ஓரளபும் இரண்டளபுமுடைய குறிலையும் நெடிலையும் பிளவுபடாமற் கூட்டி எழுதுக' என இளம்பூரணரும், 'வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் ஓசையும் பொருளும் பெறுதல் காரணமாக இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையின் மிக்கொலித்தலை விரும்புவாராயின், தாங் கருதிய மாத்திரையைத் தருதற்குரிய எழுத்துக்களைக் கூட்டி அம்மாத்திரையை எழுப்புக' என நச்சினார்க்கினியரும் பொருளுரைப்பர்.

நன்னூலார், உரையாசிரியர்கள் ஆகிய இவ்விரு திறத்தாரினும் எவர் கூற்றுப் பொருத்தமுடையது என்பதை இக்கட்டுரையில் ஆதார விளக்கங்களோடு சி.கணேசையர் நிறுவியுள்ளார். அவரது கருத்துப்படி அளபெடை என்பது அளபெடுத்தலையுடையதாகிய ஓரெழுத்தையே உணர்த்தும் என்பதும் ஓரெழுத்தே தன்னளபினும் எழுந்தொலிக்கும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றன. தனது இக்கருத்தை நிறுவுவதற்காகப் பின்வரும் வாதங்களை அவர் முன்வைத்துள்ளார். (கணேசையர்.சி, 2012, பக். 49) இவற்றைச் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

அ) இரண்டெழுத்து கூடி ஒலிக்கும்போது எவ்வளவு ஒலிக்கும் என்றோ

எவ்வாறு ஒலிக்குமென்றோ தெரியாமை.

ஆ) இரண்டெழுத்து கூடி ஒலிக்கும்போது மூன்று மாத்திரையைவிட

மிக்கொலித்தலால் அது பொருந்தாமை.

இ) நீட்டம் வேண்டி ஓரெழுத்தை நீட்டும்போது அதனையே வேண்டிய

அளபு நீட்டலாமாதலின் மற்றோரெழுத்தைக் கூட்டி நீட்ட வேண்டும்

என்னும் யாப்புறவு இல்லை.

ஈ) இன்னிசையளபெடையில் குற்றெழுத்தொன்றே நெடிலாக நீண்டு

பின் அளபெடுக்கின்றது.

மேற்கூறியவற்றால் ஈரெழுத்துக் கூடி நீளுமென்பது பொருந்தாது எனத் தன் கருத்தை வலிமையாகக் குறிப்பிட்டு குறித்த தொல்காப்பிய நூற்பாவிற்கான தன் உரையைப் பின்வருமாறு தருகின்றார்.

> *'நீட்டம் வேண்டின் - (ஓரெழுத்து முன்னையிலும்) மாத்திரை மிக்கு ஒலித்தலை விரும்பின், அவ்வளபுடையகூட்டி - விரும்பிய மாத்திரையையுடைய எழுத்துக்களை (அளவின் பொருட்டு) அவ்வெழுத்தோடு கூட்டி, எழுஉதல்- (அவ்வளபாக) அவ்வெழுத்தினிசையை எழுப்புக, என்மனார் புலவர் - என்று சொல்லுவர் புலவர் என்பதே' (கணேசையர். சி, 2012, பக்.49)*

மேலும் தொல்காப்பியர் பல்வேறு இடங்களில் கூறியுள்ள நூற்பாக்களைத் தொகுத்துரைத்து ஓரெழுத்தே நீளுமென்பதன்றி இரண்டெழுத்துக்கூடி நீளுமென்பது தொல்காப்பியர் கருத்தல்ல என்றும் கூறியுள்ளார். அவர் குறிப்பிடும் தொல்காப்பிய நூற்பாக்களின் குறிப்பிட்ட சில அடிகள் வருமாறு:

'அளபிறந்துயிர்த்தலும்', 'ஒற்றிசை நீடலும்', 'நீடவருதல் செய்யுளுளுரித்தே', 'உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்' என்பன அவற்றுட் சிலவாகும். இவற்றுள் ஒன்றினை இங்கு நோக்கலாம்.

அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையோடு சிவணிய

நரம்பின் மறைய என்மனார் புலவர் (தொல்: எழு: 33)

என்பதில் உயிரெழுத்துக்கள் எல்லாம் தமக்குச் சொல்லப்பட்ட அளவினைக் கடந்து ஒலித்தலையும் ஒற்றெழுத்துகள் தம் ஒலி முன் கூறிய அளபின் நீடலையும் குரல் முதலிய ஏழிசையோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினது இசை நூற்கண்ணும் உள எனச் சொல்லுவர் அவ்விசை நூலாசிரியர் என்று சொல்லுவர் புலவர் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அவ்வளபுடைய கூட்டுதல் என்பது அளவின் பொருட்டல்ல என்பதும் அவ்வெழுத்துக்கள் வரிவடிவில் அறிகுறியாய் வரும் என்பதும் இவரது முடிபுகளாம். (கணேசையர்.சி, 2012, பக். 50)

'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்த குற்றெழுத்தே' (தொல்:எழு: 41)

என்னும் நூற்பாவில் குற்றெழுத்து இசைநிறைக்கும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதால் இக்குற்றெழுத்து எழுத்தாகக் கொள்ளப்படாது எனவும் ஒலி வடிவில் இவ்வளபெடை ஓசை அவ்வவ்வின எழுத்தாய் நீண்டொலிக்கும் என்பதும் தொல்காப்பியரது கருத்தாகும் எனவும் குறிப்பிட்டு தனது கருத்திற்கு ஆதரவாக சிவஞானமுனிவர் நன்னூல் விருத்தியுரையில் 'இசை கெடின்' என்னும் நூற்பாவில் வரும் 'குறியே' என்பதற்கு வரிவடிவில் அறிகுறியாம் எனவும் 'குற்றுயிர் அளபினீறாம்' என்பதற்கு ஒலிவடிவினீறாம் எனவும் கூறியுள்ளமையைக் குறிப்பிட்டுள்ளார். (கணேசையர்.சி, 2012, பக். 51)

தவிரவும் 'அவ்வளபுடையகூட்டி' என்பதற்கு அவ்வளபுடைய ஓசைகளை அதிகப்படுத்தி எனவும் பொருள் கொள்ளலாமெனவும் ஓசைகள் என்பது எழுத்தொலிகளை எனவும் நான்கு மாத்திரையும் கொள்ளலாம் என்பதற்காகப் பன்மையாகக் கூறினாரெனவும் குறிப்பிட்டுள்ளார். (கணேசையர்.சி, 2012, பக்:52)

நச்சினார்க்கினியர் நெட்டெழுத்தே அளபெடுக்கும் எனக் கூறிய கருத்து பொருத்தப்பாடு உடையதெனக் கூறும் சி.கணேசையர், நெடிலும் பிளவுபடாமல் வருவதனை அளபெடை எனக் கொள்வதையே என்கிறார். மேலும் நெட்டெழுத்துக்கள் நீளும்போது நீண்ட அவற்றையும் ஓரெழுத்தாகக் கொள்ளலாமோ என்னும் ஐயத்திற்கு விடையிறுக்கும் சி.கணேசையர், அவை மொழிக்குக் காரணமாய் வேறு எழுத்தோடு சேர்ந்தாயினும் தனித்தாயினும் பொருள் தராமையால் அவை எழுத்தாகக் கொள்ளப்படா எனப் பதிலுரைத்து அளபெடை நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைத்தாலும் மொழிக் காரணமாய் வேறு பொருள் தராமல் இசை நிறைப்பதற்காய் மாத்திரை பெற்றதாய் நிற்பதால் வேறெழுத்தென எண்ணப்படாதென சூத்திர விருத்தியில் கூறுகிறாரென்பதை எடுத்துக் காட்டி வலியுறுத்தியுள்ளார்.

இதைத் தவிர்த்து நெடிலும் குறிலுமாகிய இரண்டெழுத்தும் பிளவுபடாமற் கூடியொலிக்கும் எனப் பொருள் கொள்வது பொருந்தாது என்பதைப் பல வழிகளிலும் எடுத்துக் கூறி அவ்வாறு பொருள் கொள்வது தொல்காப்பியரது கருத்துக்கு முரணானது மட்டுமன்றி அவரையும் பிழைபடுத்துவதாக அமையும் எனவும் கூறியுள்ளார். இதன் மூலம் குறித்த தொல்காப்பிய நூற்பாவிற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறும் உரை பொருந்தாது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

நெட்டெழுத்தொன்றே நீண்டு அளபெடுக்கும் என்பது சேனாவரையரது கருத்தாகும் என்பதை சொல்லதிகாரம் 152ஆம் நூற்பாவுரையில் அவர் கூறும் 'அளபிறந்தனவென்றது நெட்டெழுத்து அளபெடையாயும் அளபெடை மூன்று மாத்திரையினிறந்தும் சேய்மைக்குத் தக்கவாறு நீண்டிசைக்குமென்றவாறு' என்னும் மேற்கோளை எடுத்தாண்டு குறிப்பிட்டுள்ளார். (கணேசையர்.சி, 2012, பக். 54)

கட்டுரையின் இறுதியில் அளபெடுக்கும்போது நெடிலும் குறிலும் கூடிநின்று அளபெடுக்கும் என்பது பொருந்தாது எனவும் நெட்டெழுத்தேழே அளபெடுக்கும் எனவும் குற்றெழுத்துக்கள் குறியாய் வரும் எனவும் மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

தொகைநிலை

'ஈண்டு நாம் ஆராய்வது மாணாக்கருக்கு உணர்வு பெருகலாகிய பயன் குறித்தேயாகலின், பெரியோருரைக்கண் ஆராய்ச்சி நிகழ்த்தி அவர்களை அவமதித்தான் இவன் என்னுங் குற்றம் நம்மேல் அணுகாதென்பதே துணிபு' (கணேசையர்.சி, 2012, பக். 28) என கட்டுரையின் ஆரம்பத்தில் சி.கணேசையர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் இக்கட்டுரை அறிஞர்களை நோக்கி எழுதப்பட்டதல்ல எனவும் மாணவர்கள் விளக்கம் பெறுவதற்காகவே எழுதப்பட்டதெனவும் அறிய முடிகின்றது.

தொகைநிலையாவது வேற்றுமை முதலிய பொருள்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒன்றுபடத் தம்முள் இயைந்து நிற்றல் எனவும் தொகும்போது பெயரும் பெயரும், பெயரும் வினையும் தொகுமெனவும் சேனாவரையர் குறிப்பிட்டுள்ளார். உரையாசிரியர் முதலியோர் பெயரும் பெயருமே தொகுமெனவும் பிளவுபட்டிசைத்தலாலே பெயரும் வினையும் தொகாதெனவும் கூறுவர்.

பெயரும் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை யுருபு நிலைபெறு வழியுந்
தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும் (தொல்: எழு: 132: 1-3)

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையாசிரியர் கருத்துரைக்கும்போதே மேற்கண்ட விளக்கத்தினைத் தந்துள்ளார். விளவினைக் குறைத்தான், விளவினைக்குறைத்தவன் ஆகிய உதாரணத்தையும் அவர் தந்துள்ளார். இது குறித்து சி.கணேசையர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'இவர் இங்ஙனங்கூறியது பெயரும் பெயருமே தொகுமென்னும் வடநூல் விதியை மேற்கொண்டேயாம். வடநூலில் வினைகொண்டு முடிவதெல்லாங் காரகமெனப்படுமாயினும், வினைகொண்டு முடிதற்கண் உருபு விரிந்தல்லது தொக்குவாரா. தமிழ்நூலில் விரிந்தன்றித் தொக்கும் வருதலின் தொகையெனவேபடும். வடநூல் விதியையுந் தமிழ்நூல் விதியையும் ஒப்பக் காண்பது இரண்டற்கும் மாறுபாடில்லாதவிடத்தேயாம். உள்ளவிடத்திலே ஒப்பக் காணில் ஒன்றோடொன்று முரணும். இத்தொகையில் இரண்டற்கும் மாறுபாடுண்மையின் ஈண்டு வடநூல் விதியை மேற்கோடல் பொருந்தாது. மேற்கொள்ளின் தமிழ் வழக்கொழியும். ஆதலால் தமிழ் நூல் வழக்கையுணர்ந்து உரை செய்தலே முறையாம். இம்முறையைப் பெரிதும் அங்கீகரித்து உரை செய்தவர் சேனாவரையரொருவரே. ஆதலின் தமிழ் வழக்கறிந்து பெயரும் வினையுந் தொகுமெனக் கொண்ட சேனாவரையருரையே யீண்டுப் பொருத்தமாம்' (கணேசையர்.சி, 2012, பக். 29) இதன் மூலம் சேனாவரையருரையின் பொருத்தப்பாட்டை வலியுறுத்தும் சி.கணேசையர், இலக்கண விதிகளில் வடமொழி தமிழ்மொழி ஆகிய இரண்டிற்கும் பொருந்திப் போகும் சந்தர்ப்பங்களில் மட்டுமே ஒப்பக் காண வேண்டும் என்பதையும் அவ்வாறில்லாதவிடத்து வலிந்து ஒப்பக் காண்பது பொருத்தமற்றது எனவும் வலியுறுத்துவதையும் தமிழ்நூல் விதி தனித்துவமானது என்பதையும் இவற்றையுணர்ந்தே உரை செய்தல் வேண்டும் எனவும் கருத்துரைப்பது அவதானிக்கத்தக்கதாகும்.

'எல்லாத் தொகையு மொருசொன் னடைய' (தொல்: சொல்: எச்சவியல்: 420) என்னும் நூற்பாவிற்கு உரை கூறுகையில் ஒரு சொன்னடையவெனப் பொதுப்படக் கூறியதனால் யானைக்கோடு, கொல்யானை பெயர்ச்சொன்னடையவாதலும் நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் என வினைச்சொன்னடையவாதலும் கொள்க எனவும் அவை வேற்றுமை உருபேற்றலும் பயனிலை கோடலுமாகிய பெயர்த்தன்மையும், பயனிலையாதலும் பெயர் கோடலு முதலாகிய வினைத்தன்மையும் உடையவாதல் அவ்வச் சொல்லோடு கூட்டிக் கண்டு கொள்க எனவும் சேனாவரையர் கூறுவார்.

சேனாவரையரால் கூறப்பட்ட கருத்தே தொல்காப்பியர் முன்வைத்த கருத்துமாகும் என்பதை தொல்காப்பியரின் நூற்பாவின் துணைகொண்டே சி.கணேசையர் விளக்குவதைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

அ) பிரிந்தொருங்கிசைத்தலைப் பெயருக்கும் வினைக்கும் பொதுவாகக் கூறியமை.

ஆ) விரிதலையும் தொகுதலையும் முறைநிரனிறைவகையாலே விளங்க வைத்தமை.

இ) உரையாசிரியர் முதலானோர் கூறியதே கருத்தாயின் தொல்காப்பியர், 'பெயரும் தொழிலும் பெயரும் பிரிந்தொருங்கிசைப்ப' என விளங்கச் சூத்திரம் இயற்றியிருப்பார். அவ்வாறு சூத்திரம் அமையவில்லை.

தொல்காப்பியரின் கருத்திற்கு ஒப்பவே சேனாவரையரது உரை அமைவதனை மேலும் சில விளக்கங்களைக் கூறி சி.கணேசையர் மீளவும் வலியுறுத்தியுள்ளார். அவற்றைச் சுருக்கமாக பின்வருமாறு குறிப்பிடலாம்.

அ) பெயரும் தொழிலும் என்பதில் பெயரை முற்கூறினமையால் பெயரும் பெயரும் பெயரும் வினையும் எனப் பொருள் கொள்ளுதலே முறையானது. அதைத் தவிர்த்து பெயரும் தொழிலும் பெயரும் பெயரும் எனப் பொருள் கொள்ளுதல் முறையானதல்ல.

ஆ) 'பெயரினாகிய தொகை' எனப் பெயரும் பெயரும் இயையும் தொகையையே முன்வைத்து உம்மையால் தழுவிய பெயரும் தொழிலும் இயையும் வினையாகிய தொகையைப் பின் வைத்தமை.

இ) ஒருங்கிசைத்தலை எதிர்நிரனிறையாகக் கொண்டு பெயரோடு முடிக்கலாமெனின் அது மயங்க வைத்தலாய் முடியும்.

மேலும் சிவஞான முனிவரது உரையை சேனாவரையரின் உரையுடன் ஒப்பிட்டு சேனாவரையரது கருத்துடன் மாறுபடும் சிவஞானமுனிவரது கருத்தினை மறுத்துரைத்துள்ளார். அதாவது பெயரும் வினையும் இயைவதையும் தொகையெனக் கொள்கிறார் சேனாவரையர். சிவஞானமுனிவரோ பெயரானது பயனிலையைக் கொள்வதால் உருபு தொக்கு வந்தாலும் அது தொகையெனப்படாது என்று குறிப்பிட்டு நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் என்பன போல்வனவற்றை உதாரணங்களாகவும் தந்துள்ளார். இதனை மறுக்கும் சி.கணேசையர், நிலங்கடந்தான் என்பது உருபு விரியாமையாலே இரு சொல்லும் பிளவுபடாது ஒட்டிநின்று ஒரு சொற்பட நிற்கிறது எனவும் நிலத்தைக் கடந்தான் என விரியாக நிற்குமிடத்து உருபு இடையே விரிந்து நின்று இரு சொல்லையும் பிளவுபடச் செய்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். (கணேசையர்.சி, 2012, பக்: 31) அத்துடன் குன்றக்கூகை பறந்தது என்னும் உதாரணத்தையும் தந்து அதனை விளக்கியுமுள்ளார்.

குன்றக்கூகை பறந்தது என்புழிக் குன்றக்கூகை என்பது பறந்தது என்னும் வினைக்கு எழுவாயாய் நின்றாற்போலக் குன்றத்தின்கட்கூகை பறந்தது என்புழியும் குன்றத்தின்கட்கூகை என்பது ஒரு சொல்லாய்ப் பறந்தது என்னும் பயனிலைகொண்டு நில்லாதோ எனின் நில்லாது. என்னை? ஆண்டுக் குன்றத்தின்கண் என்பது பறந்தது என்பதனோடு முடிந்து குன்றத்தின்கட்பறந்தது எனவும் பொருள்பட்டு மயங்கநிற்றலின் என்பது. குன்றத்தின்கட்கூகை என்பதைக் குன்றத்தின் கண்ணுள்ளகூகை என விரித்து முடித்தல் அமையுமன்றோவெனின், அமையுமேனும் ஆண்டு உட்டொடர் பலவாய விரியாகுமன்றித் தொகையாதல் நிரம்பாதென்க. ஆதலின் உருபுதொகப் பெயரும் பெயரும், பெயரும் வினையும் இயைவதே தொகைச்சொல் என்பதற்கிழுக்கின்மையறிக. (கணேசையர். சி, 2012, பக்: 33) என தர்க்க முறைப்படி இதனை விளக்கியுள்ளார்.

அடுத்து நச்சினார்க்கினியரது கருத்தும் சேனாவரையர் உரையோடு மாறுபட்டு நிற்பதை எடுத்துக்காட்டியுள்ளார். செய்தான்பொருள், இருந்தான்மாடத்து என்பன பிளவுபட்டு இசைத்தலால் இருசொற்றொகுதல் தொகையெனக்கொண்ட சேனாவரையர் கருத்து பொருந்தாதெனக் குறிப்பிடும் நச்சினார்க்கினியர், உருபு தொகுதலே தொகையென்கிறார். எனவே சொற்பிளவுபடினும் உருபு தொகுதலே தொகையென்ற நச்சினார்க்கினியர் கருத்து பொருத்தமற்றதெனவும் சி.கணேசையர் வலியுறுத்தியுள்ளார். இக்கட்டுரையின் இறுதியிலே இலக்கண விளக்கம், பிரயோக விவேகம் ஆகிய இலக்கண நூல்களிலிருந்தும் நூற்பாக்களை எடுத்துக்காட்டி நிறைவு செய்கின்றார்.

எனவே சேனாவரையரது கருத்துக்கு முரணான கருத்துக்களை நிராகரித்து தக்க ஆதாரங்களையும் விளக்கங்களையும் முன்னிறுத்தி சேனாவரையர் தொகைநிலைபற்றிக் கூறியுள்ள கருத்தினை வலுப்பெறச் செய்து தொல்காப்பியர் தொகைநிலை பற்றி கூறிய கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார் சி.கணேசையர்.

வடசொல்

வடசொல் குறித்து தொல்காப்பியர் கூறியுள்ள கருத்துக்களையும் அதனை அடியொற்றி உரையாசிரியர்கள் குறிப்பிடும் விளக்கங்களையும் கூறி தனது கருத்தினையும் இக்கட்டுரையில் சி.கணேசையர் பதிவு செய்துள்ளார். தமிழில் வந்து வழங்கும் ஆரியச்சொல் வடசொல் எனப்படும் என அதற்கான வரைவிலக்கணத்தை ஆரம்பத்தில் குறிப்பிட்டு முற்காலத்தில் தமிழில் வந்து வழங்கிய ஆரியச்சொற்கள் மிகச் சிலவாக இருந்திருப்பினும் தற்காலத்தில் ஆரியநூல்கள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டமையால் அச்சொற்கள் அதிகமாகக் கலந்துள்ளன எனவும் முற்காலத்தில் வடசொற்கள் போன்றனவாய்ச் சில சொற்கள் தமிழிலும் வழங்கியிருந்தன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (கணேசையர்.சி, 2012, 6) தொல்காப்பியத்திலிருந்தும் அதன் உரைகளிலிருந்தும் உதாரணங்களும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ளன. தொல்காப்பிய நூற்பாவில் குறிப்பிடப்படும் 'தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவி' (தொல்:சொல்:4:3) பால்பிரிந்திசைப்பதற்குக் காட்டிய தேவன், தேவி, தேவர் என்னும் உதாரணங்களாலும் தொல்:சொல்:57ஆம் நூற்பாவில் குறிப்பிடப்பட்டுள்ள உலகம், பூதம் என்னும் சொற்களாலும் அறியக்கிடப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (கணேசையர்.சி,2012,பக்:6-7) தொடர்ந்து இக்கட்டுரையில் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர் ஆகியோரின் கருத்துக்களையும் தந்து தொல்காப்பியரின் கருத்தினைத் தெளிவுபடுத்தியுள்ளார். அவற்றைச் சுருக்கமாக இங்கு நோக்கலாம்.

'வடசொற்கிளவி வடிவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' (தொல்:சொல்: 401)

என்னும் நூற்பாவிற்கான உரையிலே 'வடசொற் கிளவியாவது வடசொற்கே உரிய எனப்படும் சிறப்பெழுத்தினீங்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தாலியன்ற சொல்' என சேனாவரையர் குறிப்பிட்டு அதன் விசேடவுரையிலே 'வடசொல்லாவது வடசொல்லோடு ஒத்த தமிழ்ச்சொல் என்றாரால் உரையாசிரியரெனின்: அற்றன்று' என மறுப்பார்.

மேலும் 'சகரக் கிளவியு மவற்றோரற்றே

அஐ ஔவெனு முன்றலங் கடையே' (தொல்:எழு:62)

என்னும் நூற்பாவிற்கான உரையில் எடுத்துக்காட்டப்படும் சாலை, சிலை ஆகிய சொற்களையும்

'கதந பமவெனு மாவைந் தெழுத்தும்
எல்லா வுயிரொடும் செல்லுமார் முதலே' (தொல்:எழு:61)

என்னும் நூற்பாவிற்கான உரையில் எடுத்துக்காட்டப்படும் தேவர், தடம், பீடம், மாலை, மீனம் ஆகிய சொற்களையும் குறிப்பிட்டு உரையாசிரியர் உரை மூலம் தெரியவரும் வடசொற்களை சி.கணேசையர் விளக்கியுள்ளார். 'கடிசொல்லில்லைக் காலத்துப் படினே' (தொல்:சொல்:452) என்னும் நூற்பாவிற்கான உரையில் சம்பு என்னும் சொல்லை சேனாவரையர் எடுத்துக்காட்டியுள்ளதாகவும் நச்சினார்க்கினியரும் சகடம், நீலம், நேமி, மாலை, பௌவம், முகம் ஆகிய சொற்களைக் குறிப்பிட்டுள்ளதாகவும் கூறி நன்னூல் உரையாசிரியரான மயிலைநாதரும்

'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே' (நன்னூல்: 426)

என்னும் நூற்பாவில் வரும் 'புதியன புகுதல்' என்பதற்கு சம்பு என்னும் சொல்லை எடுத்துக் காட்டியுள்ளமையையும் குறிப்பிட்டுள்ளார். (கணேசையர்.சி,2012, பக்: 7)

இவ்வாறு வடசொல் பற்றிய தொல்காப்பியரின் கருத்தினை தொல்காப்பிய உரைகளிலிருந்தும் நன்னூல் உரையிலிருந்தும் உதாரணங்களை எடுத்துக்காட்டி அக்கால மரபினை விளக்கியுள்ளார்.

இக்கட்டுரையின் இறுதியில் அவர் கூறியுள்ள பின்வரும் கருத்துக்கள் முக்கியமானவை. 'தேவன், தேவி, தேவர், காலம், உலகம், பூதம், வருணன், யாமம், மங்கலம், தேயம், தாபதம், நிமித்தம், உவமம், மந்திரம், சூத்திரம், ஆநந்தம் முதலிய வடசொற்களெல்லாம் தொல்காப்பியத்து வருதலின், தொல்காப்பியர் வடமொழியை விலக்கினாரல்லர் என்பாருமுளர். அகத்தியரும் கொண்டாரென்பர். இனிச் சிலர் தமிழ்மொழிகள் ஆரியத்துச் சென்று வழங்குவனவுமுள என்பர். ஆகையினாற் சொற்களை ஆராய்ந்து வரையறுத்தல் மிகவரிது' (கணேசையர்.சி,2012, பக்: 8) வடசொல் குறித்த தொல்காப்பியரின் கருத்து தொடர்பாக பின்வந்தோர் கருதியனவற்றையும் சொற்களை வரையறை செய்வது கடினம் என்பதையும் அவரது கூற்றில் காணலாம்.

பொருட்புடைபெயர்ச்சி

'இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்றலாறே' (தொல்:சொல்:200)

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு 'இறப்பும், நிகழ்வும், எதிர்வும் என்று சொல்லப்படும் அம்மூன்று காலமும் குறிப்பு வினையொடும் பொருந்தும் மெய்ந்நிலைமையையுடைய வினைச்சொல்லானவை தோன்றுநெறிக்கண் என்றவாறு. எனவே, காலமூன்றாவன இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்பதூஉம், வெளிப்படக் காலம் விளக்காதன குறிப்புவினை யென்பதூஉம் பெற்றாம்.' என சேனாவரையர் பொருளுரைத்துள்ளார்.

மேலும் 'இறப்பாவது தொழிலது கழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை. எதிர்வாவது தொழில் பிறவாமை. தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சியாகலின், அஃதொருகண நிற்பதல்லது இரண்டுகண நில்லாமையின், நிகழ்ச்சியென்ப தொன்று அதற்கில்லையாயினும், உண்டல், தின்றலெனப் பஃறொழிற்றொகுதியை ஒரு தொழிலாகக் கோடலின், உண்ணாநின்றான், வாராநின்றான் என நிகழ்ச்சியும் உடைத்தாயிற்று என்பது' எனவும் அவர் தொடர்ந்து விளக்கமும் உரைத்துள்ளார்.

பொருட்புடைபெயர்ச்சி என்னும் தலைப்பிலான சி.கணேசையரின் கட்டுரை, சேனாவரையரின் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள 'பொருளினது புடைபெயர்ச்சி' என்பதைப் பற்றியதாக அமைந்துள்ளது. பொருளினது நிலைபெயர்தலே பொருளினது புடைபெயர்ச்சியாகும். அதாவது ஒரு பொருள், தான் முன்னிருந்த நிலையிற் பெயர்ந்து அசைவு பெறுதல். அசைவு பெறுதல் பொருளாகும். அப்பொருளின் செயலின்றி கருவிகள் அசையா. இக்கருத்தினை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது. தனது கருத்தினை சேனாவரையரின் வழிநின்று விளக்கும் சி.கணேசையர் நச்சினார்க்கினியர், சிவஞானமுனிவர் ஆகியோரது கருத்துக்களையும் இங்கு விளக்கி பொருத்தமானவற்றை ஏற்றும் பொருத்தமற்றவற்றை விலக்கியும் விளக்கமளித்துள்ளார். தனது கருத்தை வலியுறுத்துவதற்காக

வினையே செய்வது செயப்படு பொருளே (தொல்:சொல்: 112)

என்னும் நூற்பாவிற்கான நச்சினார்க்கினியரின் உரையை ஆதாரமாகக் காட்டுகின்றார். நச்சினார்க்கினியர், வினைப்பெயரையும் வினைச்சொல்லையும் தோற்றுவிக்கும் உண், தின், செல், கொள், வனை என்பன முதலாகிய வினையும், அவ்வினையைச் செய்யும் வினைமுதலும், அவ்வினைமுதல் அதனைச் செய்ய அத்தொழிலை உறும் பொருளும், அத்தொழிலைச் செய்கின்ற இடமும், அத்தொழிலைச் செய்கின்ற காலமும், அவ்வினைமுதல் தொழிலைச் செய்கின்ற காலத்து அதற்குத் துணையாம் கருவிகளும் என உரைத்துள்ளார். இவ்விளக்கத்தினை சி.கணேசையர் எடுத்தாண்டுள்ளார்.

மேலும் இங்கு உண், தின் முதலிய வினைகள் எனக் கூறப்பட்டவை முதனிலைகளையல்ல எனவும் அம்முதனிலைகளால் உணர்த்தப்படும் சிறப்புத் தொழில்களையே எனவும் கூறுகின்றார். ஏனெனில் அத்தொழில்களும் வினை நிகழ்தற்குக் காரணமாகின்றன. எவ்வாறெனில் உண்டான் என்னும்போது உண்டலைக் கருதியே வினைமுதலாகிய கருத்தா அத்தொழிலைச் செய்வதால் ஆகும். உண்டல் என்னும் தொழில், வினைமுதலால் செய்யப்படுவதால் அத்தொழிலும் செயப்படுபொருளோடு ஒத்ததாய் செய்தற்குக் காரணமாயிற்று. இதனால் செய்தல் பொதுத்தொழில் எனவும் உண்டல் சிறப்புத் தொழில் எனவும் சி.கணேசையர் விளக்கியுள்ளார். இதன்படி பொதுத்தொழில் செய்தற்றொழிலைக் குறிக்கும் எனவும் சிறப்புத் தொழில் அதனுள் சிறப்பான தொழிலைக் குறிக்குமெனவும் கொள்ளலாம்.

வினைச்சொல் என்பது பொருளின் புடைபெயர்ச்சியாகிய தொழிலின் நிகழ்ச்சியை உணர்த்தும் சொல்லாகும் என்பதை வலியுறுத்தும் சி.கணேசையர், முற்குறிப்பிடப்பட்ட 'வினையே செய்வது செயப்படுபொருளே' (தொல்:சொல்:112) என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு சேனாவரையரின் பின்வரும் உரையையும் எடுத்துக்காட்டியுள்ளார். 'வனைந்தான் என்றவழி, வனைதற்றொழிலும், வனைந்த கருத்தாவும் வனையப்பட்ட குடமும், வனைதற் கிடமாகிய நிலமும், அத்தொழி னிகழங் காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வனைந்ததனானாய பயனுமாகிய எட்டும் பற்றி அத்தொழி னிகழ்ந்தவாறு கண்டு கொள்க'

மேலும் சிவஞானமுனிவரது இரு கருத்துக்களை இக்கட்டுரையில் சி.கணேசையர் மறுத்துரைத்துள்ளார்.

1. பொருளின் புடைபெயர்தற் குணமே பொருளின் தொழிற்பண்பாததலால் 'பொருட்புடைபெயர்ச்சி என்பது பொருட் பண்பின் புடைபெயர்ச்சி' என சிவஞானமுனிவர் கூறுவது பொருந்தாது.
2. பொருட்புடைபெயர்ச்சியே வினையாகவும் அதன் நிகழ்ச்சியே வினைநிகழ்ச்சியாகவும் இருப்பதால் 'புடைபெயர்ச்சியெனினும் வினைநிகழ்ச்சி எனினும் ஒக்கும்' என சிவஞானமுனிவர் கூறுவது பொருந்தாது.

இதன் மூலம் சிவஞானமுனிவரது கருத்துக்களில் பொருத்தமானவற்றை ஏற்றும் பொருந்தாதவற்றை மறுத்தும் சி.கணேசையர் கருத்துரைத்துள்ளமையைக் காணலாம். மேலும் புடைபெயர்ச்சியும் வினைநிகழ்ச்சியும் வெவ்வேறானவை என்பதை உதாரணம் காட்டி வலியுறுத்துகின்றார். சாத்தன் நடந்தான் என்னும்போது சாத்தனது புடைபெயர்ச்சியே (நிலைபெயர்தல்) நடத்தலாகிய தொழிலாகின்றது. அதனால் அப்புடைபெயர்ச்சி வினைநிகழ்ச்சியிலிருந்து வேறானதாகும். அந்நடத்தல் தொழில் சாத்தனால் செய்யப்பட்டு நிகழ்வதால் அத்தொழில் நிகழ்ச்சி வேறானதாகும். எத்தொழிலை ஒருவன் செய்தாலும் அத்தொழில் அவனால் செய்யப்பட்டு நிகழும்போது தொழிலுக்கு நிகழ்ச்சியும் செய்வோனுக்கு புடைபெயர்ச்சியும் உளவாதலால் தொழிலுக்கு (வினைக்கு) புடைபெயர்ச்சி என்பது பொருந்தாது எனக் கூறி புடைபெயர்ச்சியும் வினைநிகழ்ச்சியும் வெவ்வேறானவை என அவர் நிறுவுகின்றார். புடைபெயர்ச்சி பொருளுக்கேயன்றி வினைக்கு அல்ல என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதிப்பீடு

தொகுத்து நோக்குமிடத்து சி.கணேசையர், தான் எழுதிய இலக்கணக் கட்டுரைகளில் தான் விளக்க எடுத்துக்கொண்ட பொருளை அறிமுகம் செய்து வரையறை செய்வதுடன் தொல்காப்பிய இலக்கண விதிகளை மையப்படுத்தி அவை குறித்து உரையாசிரியர்களும் பின்வந்த இலக்கணகாரர்களும் கூறுவனவற்றையும் விளக்கி தொல்காப்பிய நூற்பாக்களைத் தெளிவுபடுத்தியுள்ளார். உரையாசிரியர்களின் கருத்துக்களை விளக்கும்போது பொருத்தமானவற்றையும் ஏற்புடைத் தன்மை உள்ளவற்றையும் தர்க்க ரீதியான விளக்கங்களுடன் நிறுவியுள்ளதுடன் ஏற்க முடியாதவற்றையும் நிராகரிக்க வேண்டியவற்றையும் குறிப்பிட்டு அவற்றை அவ்வாறு செய்ய வேண்டியதிலுள்ள நியாயங்களையும் பொருத்தமான ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். அத்துடன் வடமொழி இலக்கண மரபுடன் இயைந்துபோகும் தமிழ் இலக்கண விதிகளை

ஏற்கும் அதேவேளை தமிழ் மரபிற்குப் பொருத்தமில்லாத வடமொழி விதிகளையும் விளக்கங்களையும் புறந்தள்ளவும் அவர் தயங்கவில்லை. தமிழ் மரபை நிறுவுவதில் அவர் அதிக கவனம் செலுத்தியுள்ளார். இங்கு ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட அளபெடை, தொகைநிலை, வடசொல், பொருட்புடைபெயர்ச்சி ஆகிய அவரது கட்டுரைகளில் இப்பண்புகளைக் காண முடிகின்றது.

எனவே தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் புரிந்து கொள்வதற்கு சி.கணேசையரின் உரைவிளக்கக் குறிப்புகள் துணைபுரிந்துள்ளன என்பதுடன் தமிழ் இலக்கணத் துறையிலான இலங்கைத் தமிழறிஞரின் பங்களிப்பினையும் அறிந்துகொள்ள முடிகின்றது. சி.கணேசையரின் ஆய்வுகள் குறித்த பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் பின்வரும் கூற்று சி.கணேசையரின் சிறப்பினை வெளிப்படுத்தும் மிக முக்கியமான கருத்தாகும் 'கணேசையர் பெருந்தொகையான இலக்கணக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அவை யாவும் தொகுக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும். கணேசைய இலக்கணப் புலமை ஏற்றவகையிலே மதிப்பிடப்பட்டு வெளிக்கொண்டு வரப்பட்டால் அவரின் புகழ் உயரலாம்: இலங்கைத் தமிழறிஞர்களின் இலக்கணப் பாரம்பரியம் தமிழ் கூறும் நல்லுலகிலும் சர்வதேச மட்டத்திலும் அங்கீகாரம் பெறலாம்'

அடிக்குறிப்புகள்

1. இக்கட்டுரை இலக்கண வரம்பு என்னும் தொகுப்பு நூலில் 2012: பக் 170 - 216 இணைக்கப்பட்டுள்ளது.
2. அவரது இருபது கட்டுரைகள் அடங்கிய தொகுப்பினை 'இலக்கண வரம்பு' என்னும் பெயரில் கொழும்பு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 2012இல் வெளியிட்டுள்ளது.
3. இக்கட்டுரை செந்தமிழ் இதழ் தொகுதி 26, பகுதி - 07இல் வெளிவந்தது.
4. இக்கட்டுரை செந்தமிழ் தொகுதி: 26, பகுதி 1இல் வெளிவந்தது.
5. இக்கட்டுரை செந்தமிழ் இதழின் தொகுதி-20, பகுதி- 07இல் வெளிவந்தது
6. இக்கட்டுரை செந்தமிழ் இதழில் தொகுதி 43, பகுதி 6இல் வெளிவந்தது.

துணைநின்ற நூல்கள்

1. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், சி.கணேசையர் உரை விளக்கக் குறிப்புகளுடன், 1952 (இரண்டாம் பதிப்பு), இலங்கை, சுன்னாகம், திருமகள் அழுத்தகம்.
2. தொல்காப்பியம், சொல்லதிகாரம், மூலமும் சேனாவரையர் உரையும்,
3. சி.கணேசையர் உரை விளக்கக் குறிப்புகளுடன், 1938 (முதலாம் பதிப்பு), இலங்கை, சுன்னாகம், திருமகள் அழுத்தகம்.
4. நன்னூல் மூலமும் சங்கர நமசிவாயர் உரையும், 1925, பதிப்பாசிரியர்: உ.வே.சாமிநாதையர், சென்னை.
5. கணேசையர்.சி, 2012, இலக்கண வரம்பு, பதிப்பாசிரியர்: ஸ்ரீ பிரசாந்தன், கொழும்பு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

தொ.மா.க.171

இலக்குவனாரின் தொல்காப்பிய ஆராய்ச்சி

கணபதிப்பிள்ளை விக்னேஸ்வரன்
தமிழ் முதுகலை, அண்ணாமலை கனடா
kanavig@yahoo.ca

ஆய்வுச் சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டில் தலை சிறந்த விளங்கிய தமிழ் அறிஞர்களுள் பேராசிரியர் சி.இலக்குவனாரும் ஒருவர் ஆவர். இவர் அறிஞர் அண்ணாவின் சமகாலத்தவரும் அவருடன் நெருங்கிப் பழகி அவரிடம் இருந்து பாராட்டுக்களையும் உதவிகளையும் பெற்றவர் ஆவர். அறிஞர் அண்ணாவுடன் மட்டுமல்லாமல் மறைமலை அடிகளால் தோற்றுவிக்கப்பட்ட தனித்தமிழ் இயக்கத்தில் இணைந்து தேவநேயப் பாவாணர் பாரதிதாசன் பெருஞ்சித்திரனார் போன்ற தனித்தமிழ் பற்றாளர்களுடன் சேர்ந்து பணியாற்றியுள்ளார். இவரது தனித்தமிழ்ப் பற்றினால் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் பலவற்றில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்றவர். இருபதாம் நூற்றாண்டில் முடங்கிப் போயிருந்த தொல்காப்பிய ஆராய்ச்சியை தட்டி எழுப்பியவர் இவரே என்றால் மிகையாது.

இவர் இலக்கிய நூல்கள் பல எழுதி இருந்தாலும் திருக்குறளையும் தொல்காப்பியத்தையும் ஆராய்வதிலேயே தன் வாழ்நாளில் பெரும்பகுதியை அர்ப்பணித்திருந்தார். அவ்வாறு அவர் ஆராய்ந்து எழுதிய நூல்களில் தொல்காப்பிய ஆராய்ச்சியும் ஒன்றாகும். இது 256 பக்கங்களைக் கொண்ட சிறிய நூலானாலும் தொல்காப்பிய உரை நூல்களில் காணப்படும் பல்வகை முரண்பாடுகளும் இதில் ஆராயப்பட்டுள்ளன.

இதுவரை தொல்காப்பியத்துக்கு உரை எழுதியவர், அதனை ஆய்வு செய்தவர் அனைவரும் ஏதோ ஒரு பக்கச் சார்புடனே அதாவது தனித்தமிழ்ப் பற்றாளராக அல்லது வடமொழிப் பற்றாளராக உள்ளனர். உரையாசிரியர்களில் இளம் பூரணரின் உரையே ஓரளவு பக்கச் சார்பற்றதாக திகழ்கிறது. இப் பக்கச்சார்புக்கு இலக்குவனார் விதிவிலக்கு அல்லர். அவரும் தனித் தமிழ்ப் பற்றிலேயே ஆராய்ந்துள்ளார்.

இவ்வாறாக இவர் ஒரு சார்பாக எழுதிய தொல்காப்பிய ஆராய்ச்சி எனும் நூலை முழுவதுமாக ஆராய்ந்து இருபது பக்கங்களில் அடக்குவதென்பது எனக்கு இயலாத காரியம். ஆகவே இந் நூலில் கூறப்பட்ட தொல்காப்பிய காலக் கருத்துக்களையும் பொருளதிகாரத்தில் அகத்திணை இயலில் இருந்து சில கூற்றுக்களையும் பற்றி இவர் கூறியவற்றைப் பிற அறிஞர் கூற்றுடன் ஒப்பிட்டு ஆராயலாம்.

தமிழர்க்கென்று தமிழர் ஒருவரால் தமிழில் முதன் முதலில் எழுதப்பட்ட நூலாகிய தொல்காப்பியத்தின் காலத்திற்கும், அந்நூலில் உள்ள பொருளதிகாரத்தில் அகத்திணையியலின் களவு மற்றும் கற்புப் பகுதிகளில் கூறப்பட்டுள்ள நூற்பாக்கள் சிலவற்றுக்கும் வடமொழிப் பற்றுள்ள உரையாசிரியர்களும், வேறும் சில தமிழ் அறிஞர்களும் கூறியுள்ள கருத்துக்களுக்கு 20 ஆம் நூற்றாண்டில் சிறந்து விளங்கிய பேராசிரியர் சி.இலக்குவனார் தன் தொல்காப்பிய ஆராய்ச்சி என்னும் நூலில் கூறியுள்ள மாற்றுக் கருத்துகளை மேலும் சில தமிழ் அறிஞர்களின கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் காலம்

தொல்காப்பியர் தரும் தொல்காப்பியமிது
ஒல்காத் தமிழனுக் குயிர்தரும் செல்வம்--தமிழண்ணல்

தொல்காப்பியம் இரண்டாம் உலக ஆழிப்பேரழிவின் பின்பு கிடைத்த முதல் தமிழ் நூலாகும் இந்நூலில் பண்டைய தமிழர் வாழ்வியல் முறையையும் அக் காலப் புலவர்கள் கையாண்ட தமிழ் வரி வடிவங்களையும் இலக்கண இலக்கிய கோட்பாடுகளையும் எடுத்துக் கூறியுள்ளார் ஒல்காப் புகழ் கொண்ட தொல்காப்பியர்.

தொல்காப்பியம் பற்றி ஞா. தேவநேயப்பாவாணர் குறிப்பிடுகையில் "வரலாற்றுக்கெட்டாத தொன்முது பழங்காலத்தில் குமரிக்கண்ட தென்கோடியில் தோன்றியதும் நாகரிக மாந்தனூலைத் (Critical Anthropology)தொடங்கி வைத்ததும் உலகமுதற்றாயுயர் தனிச் செம்மொழியான ஒண்டீந் தமிழிலெழுந்த ஒல்காப்பெருமை தொல்காப்பியம்" என்கின்றார் .

தொல்காப்பிய காலத்தை பல்வேறு தமிழறிஞர்களும் பல்வேறு விதமாக கூறிவந்துள்ளனர். தமிழக ஆராய்ச்சியாளர் சிலர் திருவள்ளுவரின் மேலிருந்த அதீத பற்றினால் திருவள்ளுவர் தொல்காப்பியருக்கு முன் இருந்தவர் எனத் தங்களின் ஆராய்ச்சி நூல்களில் வெளியிட்டனர். இது ஒரு தவறான தகவல் என்று பின்வரும் எடுத்துக்காட்டுகளால் பேராசிரியர் இலக்குவனார் நிறுவுகிறார்.

முதலாவதாக தொல்காப்பியர் “கள்” என்னும் ஈறு பலவின்பாலை உணர்த்த வரும் என்று கூறியுள்ளார். ஆனால் திருவள்ளுவர் “கள்” ஈற்றை உயர்திணைப் பன்மையை உணர்த்தவும் பயன்படுத்தியுள்ளார்.

"துறந்தார்க்கு துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்"

என்னும் குறளில் மற்றையவர் என்பதே பன்மைச் சொல்லாக நிற்க அமையும். ஆயினும் மற்றையவர்கள் என “கள்” ஈறும் சேர்க்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் திருவள்ளுவர் காலத்துக்கு பிற்பட்டவர் ஆயிருப்பின் “கள்” ஈறும் அஃறிணைப் பன்மையை மட்டும் உணர்த்தும் என்னும்

“கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே”

என்னும் நூற்பாவை இயற்றியிருக்க மாட்டார். ஏனெனில் தொல்காப்பியர் வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகத்தின் வழக்கும் செய்யுள் இலக்கியங்களை ஆராய்ந்து இலக்கணம் கூறப் புகுந்த இலக்கண ஆசிரியர். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவர் இலக்கண ஆசிரியர் ஆனால் இலக்கிய ஆசிரியர், இலக்கண ஆசிரியர் கூறியுள்ள இலக்கண வரம்பைக் கடந்து செல்லும் இயல்பு உடையவர்கள். இதற்குத் தொல்காப்பியரும் உடன்படுகிறார்.

"கடி சொல் இல்லை காலத்துப் படினே" (சொல் 56)

என்னும் வரிகளால் கூறுகின்றார்.

இரண்டாவதாக தொல்காப்பியர் உவம உருபுகளை தொகுத்துக் கூறிய பட்டியலில் “அற்று” “அனைய” என்பவைகளும் அவற்றின் அடியாக பிறந்தவைகளும் சேர்க்கப்படவில்லை. ஆனால் திருவள்ளுவர் “அற்று” என்பதனை 11 இடங்களிலும் “அனைய” என்பதனை 16 இடங்களிலும் பயன்படுத்தியுள்ளார். ஆகவே தொல்காப்பியர் திருவள்ளுவருக்கு பின் வாழ்ந்து இருந்தால் திருக்குறள் என்னும் இலக்கிய நூலில் காணப்பட்ட உவமை உறுப்புகளை கூறாது விட்டிருப்பாரா? ஆகவே தொல்காப்பியர் திருவள்ளுவருக்கு காலத்தால் முற்பட்டவர் என்பது உண்மையாகிறது என்னும் பேராசிரியர் இலக்குவனாரின் கருத்து உண்மையாகிறது.

அத்துடன் பின்வரும் கூற்றின் மூலமும் தொல்காப்பியர் திருவள்ளுவருக்கு காலத்தால் முந்தியவர் என்பதனை நிரூபிக்கிறார். திருவள்ளுவர் தமது நூலில் "ஆல்" என்பதனை மூன்றாம் வேற்றுமை உருபாக 57 இடங்களில் பயன்படுத்தி உள்ளார். தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமை உருபு ஆக "ஆன்" என்பதனை கூறினாரே அன்றி "ஆல்" என்பதனை கூறினாரிலர். தொல்காப்பியர் திருவள்ளுவருக்கு பிற்பட்டவர் ஆயிருப்பின் "ஆல்" என்பதனை மூன்றாம் வேற்றுமை உருபாகக் கூறியிருப்பார். அன்றியும் சொல்லாராய்ச்சி முறைப்படி நோக்குமிடத்து "ஆன்" அடியாகவே "ஆல்" தோன்றியுள்ளது என்றும் அறியலாம். ஆதலின் தொல்காப்பியர் திருவள்ளுவருக்கு காலத்தால் முற்பட்டவர் என்று கூறுவது மறுக்க முடியாத உண்மையாகும்.

தொல்காப்பிய சிறப்பு பாயிரம் வழி தொல்காப்பிய காலம்.

தொல்காப்பியத்துக்கு பனம்பாரனார் கூறியுள்ள சிறப்புப் பாயிரம் மூலம் தொல்காப்பிய காலத்தை அறிய முற்படுகிறார் இலக்குவனார் அவர்கள். பனம்பாரனார் கூறியுள்ள பாயிரமாவது

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலம்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து
அறம்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டு ஆசான்கு அரில்தவத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன் எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்தபடிமை யோனே.

நச்சினார்க்கினியர் கூற்றுப்படி ஒரு நூலுக்கு பாயிரம்

செய்பவர் தம் ஆசிரியரும் தம்முடன் கற்ற ஒரு சாலை மாணாக்கரும் தம் மாணாக்கரும் ஆவர். இதில் பனம்பாரனார் எந்த வகையினர் என்பதற்கு தமிழ் அறிஞர்கள் இடையில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு சாரார் தொல்காப்பியப் பாயிரம் பிற்காலத்தில் அதாவது உரையாசிரியர் காலத்தில் எழுதப்பட்டிருக்கலாமெனவும் வாதிடுகின்றனர். இருப்பினும் உச்சிமேற்புலவர் நச்சினார்க்கினியரின் கூற்றுக்களை எடுத்து நோக்கினால் முந்து நூல் என்பது அகத்தியமும் மாபுராணமும் பூதபுராணமும் இசை நுணுக்கமும் ஆகும். ஆனால் இவை பற்றிய செய்திகள் விளக்கமாக கிடைத்தில. ஆதலின் இவை ஆய்வுக்கு பயன்படா என்கிறார் இலக்குவனார்.

நிலம் தரு திருவின் பாண்டியன் பற்றி நச்சினார்க்கினியர் குறிப்பிடுகையில் "மாற்றாரது நிலத்தைக்கொள்ளும் போர்த்திருவினை உடைய பாண்டியன் மாகீர்த்தி அவையின் கண்ணே" என்று பொருள் கூறிப் பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் ஆண்டு வீற்றிருந்து ஆட்சி செய்தான் ஆதலின் அவனும் அவன் அவையில் உள்ளோரும் அறிவு மிகுந்தோரும் கேட்டிருப்ப" என்று விளக்கமும் கூறுகிறார். இங்கு ஓர் அரசன் 24 ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தான் என்று கூறுவது உண்மைக்கு மாறுபட்ட அறிவியலுக்கு ஒவ்வாத செய்தியாகும். அளவு கடந்த கற்பனை இதனை ஏற்றுக்கொள்வது கடினம் என்கிறார் இலக்குவனார்.

பாயிரத்தில் வரும் நான் மறை என்பதற்கு தைத்திரியம், பௌடிகம், தலவகாரம், சாமவேதம் என்றும் இருக்கு, யசு, சாம, அதர்வணம் என்னும் பிரிவுகளும் பல்வேறுபட்ட அறிஞர்களால் முடிவில்லாமல் ஆராயப்பட்டு

வரும் ஓர் விடயமாகவும் உள்ளது. இப்பாயிரம் தொல்காப்பியர் காலத்திலேயே எழுதப்பட்டது என எடுத்துக் கொண்டால் இங்கு ஐந்திரமும் அறிந்த தொல்காப்பியன் நான்கு மறைகளையும் கற்றுத் தேர்ந்த அதங் கோட்டாசான் என்னும் பாண்டியன் மாகீர்த்தியின் அவைப் புலவர் முன் அரங்கேற்றினார் என்பதே பொருள். இதில் கூறப்படும் ஐந்திரம் என்றால் என்ன? என எடுத்து ஆராய்ந்தால் ஐந்திர வியாகரணம் என்பது வடமொழியில் முதன் முதலில தோன்றிய இலக்கண நூல் என்பர்.

இது இந்திரனால் செய்யப்பட்டதால் ஐந்திரம் என பெயர் பெற்றது என்பர்.

ஆசிரியர் (தொல்காப்பியர்) நூல் செய்கின்ற காலத்தில் வழங்கிய வடமொழி இலக்கணம் ஐந்திரம் எனப்படுதலாலும் பாணினீயம் கேட்கப்படாமையாலும் வடமொழிக்கு முதல் இலக்கணம் ஐந்திரம் எனவும் அதற்குப் பின்னரே பாணினீயம் தோன்றியது எனவும் வடமொழியாளர் கொள்ளுதலாலும் தொல்காப்பிய நூலானது வடமொழிப் பாணினீயத்துக்கு முற்பட்டது என்பது தானே போதரும். "

இவ்வாறு பேராசிரியர் கா.சுப்ரமணிய பிள்ளை MA, ML கூறுகிறார் இக்கருத்துடைய பலர் உள்ளனர் என இலக்குவனார் கூறுகிறார்.

ஐந்திரம் போல பாணினீயம் தொல்காப்பியருக்கு முற்பட்டதெனின் பனம்பாரனார் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனக் கூறியது போல் பாணினீயம் நிறைந்த தொல்காப்பியர் எனக் கூறியிருப்பார்.

ஆகவே தொல்காப்பியரின் காலத்துக்கு பின்னேதான் பாணினீயம் தோன்றியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

மகாவித்துவான் பாஷா கவி சேகரன் இரா.இராகவையங்கார் தமது தமிழ் வரலாறு என்னும் நூலில் (பக்351) கூறுகின்றார் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனப் பாயிரத்துக் கூறலான் இத் தொல்காப்பியனார் காலத்தே ஐந்திர வியாகரணவுணர்ச்சி சிறந்ததாக மதிக்கப்பட்டதென நினைதல் தகும். பரணர் பாடிய ஐந்தாம் பத்துக்கொண்ட செங்குட்டுவன் தம்பியான இளங்கோ அடிகள் காலத்தே இவ் ஐந்திர வியாகரணம் வழக்கற்று அருகியதென்பதும் அவர் காடுகாண் காதையில்

"புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூ லெய்துவிர்" எனவும்

"கப்பத்திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டியற்கையின் விளங்கக் காணாய்" எனவும்

கூறுதலால் அறியப்படும். இதனால் ஐந்திரம் வழங்கிய காலத்துக்கும் ஐந்திரம் அருகிய காலத்திற்கும் இடையிட்ட காலம் பேரளவினதே ஆக வேண்டப்படும். ஆதலாலும் தொல்காப்பிய காலம் பிந்தியது ஆகாது என்று ஒருதலையாக கொள்க" என மகாவித்துவான் பாஷா கவி சேகரன் கூறுவதாக இலக்குவனார் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

பாணினீயின் காலம் கி.மு 350 முதல் எட்டாம் நூற்றாண்டு வரை எனப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமாக கூறி வருகின்றனர்.

வழமை போல தமிழ் அறிஞர் வையாபுரி பிள்ளையார் தமிழ் நூற்களின் காலத்தைப் பின் தள்ளுவதைக் கண்டித்து இலக்குவனார் கூறும் கருத்துக்களை இங்கு மீண்டும் எடுத்து ஆய்வதில் எவ்விதப் பயனும் இல்லை என்பதே எனது நோக்கு. தமிழ் நூல்களின் காலங்களை பின்தள்ளி கூறுவது வையாபுரிப் பிள்ளையார் போன்ற சில தமிழ் அறிஞர்களின் தனி அழகாகும்.

பிற்கால ஆய்வாளர் சிலர் ஐந்திரம் என்பதனை ஐந்திறம் எனக்கொண்டு எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்ற ஐந்தின் தன்மைகளையும் கற்றுத் துறை போகிய தொல்காப்பியர் என்று சொல்வதை இலக்குவனார் கண்டிக்கிறார். அவர் கூறுவதாவது, தொல்காப்பியர் காலத்தில் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பிரிவுகளே கொண்டனர் என்பது

"எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" என்ற சிறப்புப் பாயிரத் தொடராலும் எழுத்து சொல் பொருள் என்ற முப்பிரிவு கொண்டே தொல்காப்பியர் தம் இலக்கண நூலை யாத்துள்ளுமையாலும் நன்கு உணரலாம். யாப்பும் அணியும் பொருளின் உட்பிரிவுகளாக சொல்லப்பட்டன. எனவே பனம்பாரனார் கூறும் ஐந்திரம், ஐந்திறம் என மாற்றப்படுதல் பொருத்தமுடியது. அம்மாற்றம் உண்மைச் சான்றுக்கு மாறுபட்டதாகி விடும் என்பதனைத் தேர்ந்து அறிவீர்களாக" எனவும் குறிப்பிடுகிறார்.

தமிழ் மொழிப் புலமையாளர் வடமொழியும் பிற மொழிகளும் கற்பதில் தவறில்லை என்கிறார் இலக்குவனார். அது ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மைதான். அவர் அதற்கு விளக்கம் கூறுகையில் ஆரிய மொழி மட்டுமல்லாது வேறு மொழி இலக்கணங்களையும் திறம்படக் கற்றிருந்தால் ஒப்புமைக் கல்விக்கு அது பயனளிப்பதோடு கற்பவர் அறிவையும் பெருகச் செய்யும். அதுமட்டுமல்லாது பிற மொழிகளில் மிளிரும் பொதுவியல்புகளை தம்மொழிக்கு ஊறு பயவாது நன்மை பயக்கும் வகையில் பயன்படுத்துதல் கூடும்.

பிற மொழிகளைக் கற்றல் தொல்காப்பியருக்கும் உடன்பாடு என்பது வழி நூல் வகைகளுள் மொழிபெயர்த்து அதர் பட யாத்தலை சேர்த்திருப்பதால் உணரலாம் என்கிறார். ஆனால் அதே நேரத்தில் தம் மொழிப் புலமை கொள்ளாமல் பிறமொழிப் புலமையை விரும்புதலும் தம்மொழி மறந்து பிறமொழி போற்றிக் கற்றலும் வெறுக்கத்தக்கன. பிறர் கட்டாயம் இன்றி தம் இயல்பால் வேட்கை மிகுந்து பிற மொழிகளை கற்றலும் அவற்றுள் புலமைப்படுதலும் வரவேற்கத் தக்கனவே. ஆகவே தொல்காப்பியரின் ஆரிய மொழிப் புலமை வரவேற்கப்பட்டுப் பாராட்டப் பெற்றுள்ளது என்று அறிதல் நன்று" என்கிறார். இக்கருத்தினை பன் மொழிப் புலவர் க. அப்பாத்துரை பிள்ளை, வ.சு.ப மாணிக்கனார் மற்றும் தனித்தமிழ் வேண்டி முழங்கி வந்த தேவநேயப் பாவாணர் உட்பட அனைவரும் வலியுறுத்துகின்றனர்.

தொல்காப்பியர் வடமொழிப் புலமையைப் பெற்றிருந்தார் என்பது அவர் காலத்திலேயே வடமொழி தமிழ்மொழிக்குள் ஊடுருவத் தொடங்கிவிட்டது என்பதனை தொல்காப்பியத்தில் ஆங்காங்கு தோன்றியிருக்கும் வட சொற்கள் மூலம் அறியலாம். எடுத்துக்காட்டாக மறையோர் தேஎத்து மன்றல் எட்டு என்னும் ஆரியரின் எண் வகைத் திருமணங்களை குறிப்பதாகும்.

இந்த நூற்பாவை இடைச் செருகல் என்றும், இது போல் வடமொழிச் சொற்கள் தோன்றும் நூற்பாக்கள் சிலவும் இடைச் செருகலாகும் என்பது அறிஞர் பேராசிரியர் ப.மருதநாயகம் அவர்களின் குற்றச்சாட்டாகும். அவர் தன் கூற்றுக்கு தகுந்த விளக்கத்தையும் அளிக்கிறார்.

ஆனால் இந் நூற்பாக்களுக்கு எல்லாம் உரை எழுதிய உரை ஆசிரியர்கள், இவை இடைச் செருகல் என அறியாமல் இருந்திருப்பார்களா? அல்லது அதனால் பாதகம் இல்லை என நினைத்திருப்பார்களா? என்பது கேள்விக் குறி.

> *செய்யுளியலில் "இடைச்சுர மருங்கில் கிழவன் கிழத்தியோடு வழக்கியல் ஆணையில் கிளத்தற்கும் உரியன்"*

என்னும் நூற்பாவில் "ஆணை" என்னும் சொல்"ஆக்கினை" இன் திரிபாகும் என்கிறார் இளம்பூரணர்.

இதேபோல் மேலும் ஐந்து நூற்பாக்களில் வடவெழுத்துக்களை கையாண்டுள்ளார் தொல்காப்பியர் என இளம்பூரணர் குறிப்பிடுவதாக "இளம்பூரணர் உரை நெறி" எனும் தன் நூலில் (பக் 27) குறிப்பிடுகிறார் முனைவர் ச.குருசாமி.

தொல்காப்பியர் காலத்தில் தான் ஆரியம் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கி இருக்க வேண்டும். அது எவ்வாறு தமிழகத்தினுள் ஊடுருவியது என்பதனை இலக்குவனார் தனது தொல்காப்பிய ஆராய்ச்சி என்னும் நூலில் பக்கம் 22,23,24 இல் குறிப்பிட்டுள்ளமை ஏற்புடைத்தே.

அதாவது தமிழகத்தில் முதன்முதலில் குடியேறிய வேற்றுநாட்டார் வட ஆரியரே. அவர்களுள் கற்றவர், தமிழ்நாட்டு அரசர்களுடனும் புலவர்களுடனும் கலந்து உரையாடித் தொடர்புகளை மேற்கொண்டுள்ளனர். கற்றாரைக் கற்றோர் காமுறுவர் என்பதற்கு இணங்க தமிழ்ப் புலவரும் அவர்களுடன் நெருங்கிப் பழகி பண்டைய தமிழ்பண்பாட்டின்படி அவர்களை உபசரித்து அனுசரித்தனர். புகலிடம் தேடி வந்தவர்களிடம் பொல்லாங்கு காட்டாது முகமன் கூறி வரவேற்று உறவாடினர். இரு சாராரும் ஒருவர் மொழியை மற்றவர் பயின்றனர். ஓர் இனத்தவர் இன்னொரு இனத்தவருடன் பழகுங்கால் இரு சாராரின் மொழிகளும் பண்பாடுகளும் கலை கலாச்சாரங்களும் ஒன்றினுள் இன்னொன்று கலப்பது இயற்கையே. ஆரியர் தமிழர் மொழி பண்பாட்டை தமதாக்கிக் கொண்டதைப் போல் தமிழர்களும் ஆரியர் மொழி பண்பாட்டை தமதாக்கி கொண்டனர்.

தனித்தமிழ், தமிழர் தனிப் பண்பாடு என ஆவேசமாக தமிழ் அறிஞர்கள் மேடைகளில் புத்தகங்கள் பத்திரிகை ஊடகங்களில் பேசி வரும் இக்காலகட்டத்தில் கூட ஆரியத் திருமண முறைகள், வழிபாட்டு முறைகளும் பரவிக் கிடப்பதை காணக்கூடியதாக உள்ளது. இதனை எவராலும் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது.

ஆரியர் புகலிடம் தேடிவந்தனரே ஒழிய தமிழரைக் கைப்பற்றும் நோக்கில் வரவில்லை என்பதே இலக்குவனாரின் ஆணித்தரமான எண்ணம். ஆகவே அக்காலகட்டத்தில் வாழ்ந்த தொல்காப்பியரும் ஐந்திரம் நிறைந்த வடமொழியை கற்றுத் தேற வாய்ப்பு இருந்தது. அதனால் தான் பனம்பாரனார் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என பாடியுள்ளார்.

வடமொழி தமிழ் மொழிக்குள் ஊடுருவுவதை அறிந்து தான் தொல்காப்பியர் தமிழுக்கென்று தமிழ் மொழி அழிந்துவிடாமல் காத்திட தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலை வகுத்தார் என்று முனைவர் தமிழண்ணல் போன்ற இக்கால அறிஞர் கூறும் கூற்றும் எண்ணத்தக்கது

தொல்காப்பியத்தில் அவர் கூறும் இலக்கணங்களும் அதற்கு முன் இருந்தவர்கள் கூறும் இலக்கணங்களும் காணப்படுகின்றன.

தொல்காப்பியர் தமக்கு முன் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களால் இயற்றப்பட்ட நூல்களில் இருந்தும் இலக்கணத்தை வடித்துள்ளார் என்பதனை அவர் தன் நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ள “என்ப” “என் மனார் புலவர்” “எனப்படுபவ” எனனும் வாக்கியங்கள் மூலம் நாம் அறிய முடிகிறது.. ஆகவே தொல்காப்பியருக்கு முன்பே தமிழ்மொழி சிறந்து இருந்திருக்கிறது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

மேலும் புத்தர் காலம் தொல்காப்பியர் காலத்திற்கு முந்தியது என்னும் அறிஞர்களின் கருத்துக்கு இலக்குவனார் விளக்கமளிக்கையில் “தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் புத்தமதம் பரவி இருந்தால் புத்த மதம் பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் நிச்சயம் இடம் பெற்றிருக்கும். ஆனால் அது பற்றிய செய்திகள் எதனையும் தொல்காப்பியர் கூறவுமில்லை சங்க நூல்கள் எதுவும் கூறவுமில்லை. ஆகவே தொல்காப்பியம் புத்தருக்கு முன் தோன்றியது என்பதனை எவரும் மறுக்கமுடியாது” என்கிறார்.

ஆகவே ஆய்வுகள் கூறுவது போல் புத்தர் காலம் கி.மு500 என்றால் தொல்காப்பியர் காலம் அதற்கு முன்பானதே. அது கி.மு 700 ஆகவும் இருக்கலாம் என்கிறார் இலக்குவனார்.

இலக்குவனாரின் இக் கூற்றும் தற்பொழுது நடைபெறும் அகழாய்வு அறிஞர்கள் கூறும் தொல்காப்பிர் காலம் கி.மு711 என்பதுடன் பொருந்தி இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் இலக்குவனாரின் தொல்காப்பிய ஆய்வு அறிவாற்றல் நன்கு புலப்படுகிறது.

முடிவாக, தொல்காப்பியம் தோன்றிய காலம் எதுவாக இருப்பினும், தொல்காப்பியம் தமிழர்கென்று தமிழில் எழுதப்பட்ட முதல் தமிழ் நூல் ஆகும். ஆழிப் பேரழிவின் பின் கிடைக்கப்பெற்ற ஒரே ஒரு தனித்தமிழ் நூல் அந்நூலை கட்டி காத்து அதனை சிதைய விடாது, கணினி, மொழியியல் என்னும் போர்வையில் தேவையற்ற மாற்றங்களை செய்யாது அதனை முழுமையாக இளம் தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்வது நம் தலையாய கடமையாகும்.

இளவயதினரும் எளிதாக விளங்கிக் கொள்ளும் வண்ணம் பேராசிரியர்கள் தமிழண்ணல், ச.திருஞானசம்பந்தம் போன்றவர்கள் எழுதிய நூல்களைப் போல் இலகு நடையில் உரை விளக்கங்கள் எழுதுவது நம் கடமையாகும். இது இலக்கண நூல்தான் என்றாலும் இதில் மக்கள் வாழ்வியல்முறை, கலை கலாச்சாரம், அறிவியல் எல்லாம் கலந்திருப்பதை இளம் தலைமுறையினர்க்கு விளங்க வைக்க வேண்டும். அதுமட்டுமல்லாது இது கற்றறிந்தவர் மட்டுமே கற்கும் நால் என்னும் எண்ணத்தை மாணவர் மத்தியில் இருந்து களைவது நம் கடமையாகும்.

பொருள் அதிகாரம்

எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் படைத்த தொல்காப்பியர் ஓர் இலக்கியம் எவ்வாறு படைக்கப்பட வேண்டும் என்பதனையும் பண்டைய காலத்தில் தமிழ் மக்களின் மேன்மை மிகு நாகரீக வாழ்வைப் பற்றியும் இவ் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார். உலகில் எந்த ஒரு மொழியின் இலக்கண நூல்களிலும் இதுபோன்ற பிரிவு காணப்படவில்லை.

இந்த அதிகாரம் ஒன்பது இயல்களைக் கொண்டது. இதில் முக்கிய பெரும் பிரிவுகளாக விளங்குவன அகமும் புறமும்ஆகும். இந்த "அகம்" " புறம்" என்றால் என்ன என்பதற்கு, "மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாதது அகம்", "பகிர்ந்து கொள்ளக்கூடியது புறம்" என்று சுருக்கமாக விடை அளிப்பார் அறிஞர் அண்ணா.

இது பற்றி இலக்குவனார் குறிப்பிடுகையில், "தமிழ் நூலார் இலக்கியங்களை அகம் என்றும் புறமென்றும் இரு வகையாக பிரித்தனர். ஆங்கில நூலார் வகுத்துள்ள, தன்னைப் பற்றியதும் (subjective poems) பிறரை, பிறவற்றினைப் பற்றியதும் (objective poems) என்ற பிரிவுகளோடு 'அகம்' 'புறம்' என்பன ஒருவகையில் ஒத்திருப்பதைக் காணலாம். அகம், சிறப்பாகத் தன்னைப் பற்றி குறியாது போயினும் புறம் பிறரையும் பிறவற்றையும் குறிக்கும். ஆனால் பழந்தமிழர், அகம்- காதல் பற்றியும், புறம் - காதலின் தொடர்பாக விளையும் பிறவற்றையும் குறிக்கும் எனப் பொருள் கொண்டு, அவ்வகையிலேயே இலக்கியங்களை படைத்துள்ளனர்" என்கிறார்.

உலக மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு என வகுக்கப்பட்ட பொருட்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன ஆகும். இல்வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பதோடு இம்மை பயப்பதாயும் விளங்குவது இன்பம், இவ் இன்பமே அகத்திணை என்கிறார் பேராசிரியர் சு. திருஞானசம்பந்தம்.

காதல் அகத்தின் பாற்படும் என்பதற்கு ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்தில் பிறந்த பேரின்பம் கூட்டத்தின் பின்னர், அவ்விருவருக்கும் ஒருவருக்கொருவர் தத்தமக்கு புலனாக இவ்வாறு இருக்கின்றது என கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருள் ஆதலின் அதனை அகம் என்றார் ஆசிரியர். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஒரு ஆகுபெயர் எனவும் உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர் கூற்று சிறப்புடையதாகும்.

காதலே உலக உயிரினத் தோற்றத்திற்கும், அதிக அளவில் எல்லா மொழிகளிலும் இலக்கியத் தோற்றத்திற்கும் உறுதுணையாக இருந்துள்ளது. காதலையே மூலப்பொருளாக கொண்டு, தொல்காப்பியரால் கூறப்பட்ட அகத்திணையியலில், இலக்குவனார் கூறும் சில கருத்துக்களை எடுத்து நோக்குவோம்;

காதல் ஒழுக்கத்தை ஏழு வகையாகப் பிரித்தார் தொல்காப்பியர். அவையாவன கைக்கிளை, அன்பின் ஐந்திணை, பெருந்திணை. இதில் கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். இதற்கு இலக்குவனார் விளக்கம் அளிக்கையில் கைக்கிளை என்பது ஆண் பெண் எனப்படும் இருவரில் ஒருவர் மட்டும் காதலித்தல் ஆகும். காதலைப் பற்றி அறிந்து அதன் இன்பம் பெறத் துடிக்கும் பக்குவம் பொருந்தப் பெறாத இளையவள் ஒருத்தியிடம் ஒருவன் தன் காதல் குறிப்பை அறிவித்து அவளிடம் இருந்து அதற்குரிய வாய்ப்பினை பெறாது வருந்துவான். இவளை யான் தலைவியாக கொண்டால் தான் உயிர் வாழ்வேன், இல்லையேல் என் வாழ்வினால் பயனில்லை, என் காதல் நோய்க்கு இவளே மருந்தாவாள், அங்ஙனம் இருந்தும் அவளும் என்னை விரும்பிலள், அவள் பெற்றோரும் இவளை எனக்கு மணம் செய்ய எண்ணிலரே எனத் தனக்குத்தானே சொல்லிச் சொல்லி நினைத்து நினைத்து மனம் வருந்துவான். காதல் எண்ணம் அவனிடம் இருக்கிறது. அவளிடம் இல்லை. இதுவே ஒரு தலைக் காதல் என்கிறார்.

இதைத் தான் எல்லா இலக்கியங்களும் அறிஞர்களுமே கூறி வருகின்றனர். மேலும் காதல் வயது அடைந்துள்ள பெண்ணைக் கண்டு விரும்பி அவள் காதலிக்காமல், ஆடவன் மட்டும் காதலித்தாலும் அது கைக்கிளை தான். பெண் காதலித்து ஆண் காதலிக்காமல் இருந்தாலும் கைக்கிளை தான் என்று ஒரு புதுவிதக் கருத்தினை கூறுவதும் சிறப்புடையது.

இதே கருத்தை வ.சு.ப மாணிக்கனார் தனது தமிழ் காதல் என்னும் நூலில் ஒரு வயது வந்த பெண்ணும் ஆணும் ஒருவரை ஒருவர் காணும் அந்த நொடிப் பொழுதில் இருவருக்கும் ஒரு கணம் காம உணர்வு ஏற்பட்டு மறையக்கூடும். அதுவும் கைகிளை வகைப்படும் என்று கூறுவதும் சிந்திக்கத் தக்கது.

பெருந்திணை என்பது பொருந்தாக் காதல், அன்பின் ஐந்திணை என்பது உளமொத்த காதல். அதுவே தமிழர் வாழ்வின் அடித்தளம்.

"காதல் என்பதே நல்லறமாம் - அதைக் கட்டி அணைப்பதே இல்லறமாம்"

“திணை” என்பது ஒழுக்கத்தையும் இடத்தையும் குறிக்கும்.

நிலமும் அவற்றின் ஒழுக்கங்களும்

1. *குறிஞ்சி- மலையும் மலை சார்ந்த இடமும்- கூடல் ஒழுக்கம்*
2. *பாலை---- குறிப்பிட்ட நிலமில்லை --- பிரிதல் ஒழுக்கம்*
3. *முல்லை-- காடும் காடு சார்ந்த இடமும்-- இருத்தல் ஒழுக்கம்*
4. *மருதம்-- வயலும் வயல் சார்ந்த இடமும்-- ஊடல் ஒழுக்கம்*
5. *நெய்தல் - மணலும் மணல் சார்ந்த இடமும்- இரங்கல் ஒழுக்கம்*

இங்கு பாலைக்கு நிலம் இல்லை. எல்லா நிலத்துக்கும் பொதுவானது. மழை பொய்ப்பதனால் எந்த நிலம் வரட்சி அடைகிறதோ அது பாலை எனப்படுகிறது. பாலை நிலம் பற்றி தொல்காப்பியர் எதுவும் கூறவில்லை.

சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் தான் முதல் முதலில் பாலை நிலம் பற்றி கூறுகிறார்.

அகத்திணை பாடல்களுக்கு வரும் பொருட்கள் மூன்று. அவையாவன முதல், கரு, உரி என்பவை. முதல் எனப்படுவது நிலமும் பொழுதும்.

நிலம் நான்கு வகையாக பிரிக்கப்பட்டு, அவ்வவ் நிலங்களுக்குரிய தெய்வங்களையும் பின்வரும் நூற்பாவால் குறிப்பிடுகிறார்,

"மாயோன் மேய காடுறை உலகம்
சேயோன் மேய மை வரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேயப் பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என
சொல்லிய முறையில் சொல்லவும் படுமே"

இதற்கு இலக்குவனார் விளக்கமளிக்கையில்,ஒரு நிலப்பகுதியை குறிப்பிடுங்கால் அந்நிலப் பகுதியில் சிறப்பாக கிடைக்கும் விளை பொருள்களையோ செய்பொருள்களையோ எடுத்து மொழிவதுதான் இயல்பு. ஆனால் ஆசிரியர் தொல்காப்பியர் அந்நிலத்து மக்களால் வழிபடப்படும் கடவுளைச் சிறப்பாக எடுத்து மொழிகின்றார். மக்களுக்கு கடவுள்ப் பற்றும், கடவுள் உணர்வும் இன்றியமையாதது என்பதனை வலியுறுத்தவே ஆசிரியர் இவ்வாறு கூறியுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள மாயோன், சேயோன், வேந்தன், வருணன் முதலிய கடவுளர்கள் திருமால் முருகன் இந்திரன் ஆவார்கள் என்றும் இவர்கள் ஆரியர்களினால் வணங்கப்பட்டவர்கள் என்றும் , அதனால் ஆரியர்களின் தொடர்பு தமிழருக்கு உண்டான பிறகுதான் இக்கடவுள் வழிபாடு தமிழகத்தில் நிலை பெற்றது என்றும் கருதுவோரும் உளர்.

ஒரு பெயரோ ஒரு உருவமோ ஒன்றுமில்லா கடவுளுக்கு பல பெயர்களிட்டுப் பல வழியாக வழிபடுதல் தமிழர் இயல்பு. பெயர் பல வாயினும் கடவுள் ஒருவரே என்ற உணர்வு தமிழருக்கு என்றும் உண்டு என்று கூறுகிறார். இக்கூற்று முற்று முழுதாக உண்மையானதே. ஏனெனில் பண்டைய நம் தமிழர்கள் அறிவியலில் ஓங்கி வளர்ந்திருந்தனர் என்பதனைச் சங்க இலக்கியங்களைக் கற்பதன்மூலமும் தொல்காப்பியருக்கு முன்பே எழுதப்பட்ட இலக்கியங்களில் இருந்து தொல்காப்பியர் தமிழிலக்கணத்தை வகுத்துக் கொண்ட நெறியில் இருந்தும் அறியக்கூடியதாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் தொல்காப்பியரே ஒரு அறிவியல் சிந்தனையாளர் என்பது அவர் வகுத்த நூலில் காணப்படும் அறிவியல் சிந்தனைகளின் மூலம் காணலாம். "கூர்ப்பு" பற்றிய அறிவை நம் முன்னோர் அறிந்திருந்தனர் என்பதனை தொல்காப்பியரின்

"கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்" (உரி -18 ம் நூ.பா) என்னும் நூற்பா மூலம் அறிந்து கொள்ளலாம். காதல் அறம் என்பது பரிமாணம்(evolution) எனப்படும். "கூர்தல்" என்ற சொல் முன்பு உள்ளதொன்று மென் மேலும் சிறப்பதைக் குறிக்கும். இக் கருத்தையே, தொல்காப்பியருக்குப் பல நூறு ஆண்டுகளின் பின் வாழ்ந்த "சார்ல்ஸ் டாவின்" எனும் அறிவியல் விஞ்ஞானி தனது கூர்ப்புக் கொள்கையாக origin spec (உயிர்களின் தோற்றம்) என்னும் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நம் மூதாதையினர் அறிவியல் சிந்தனையாளரே என்பதனை சங்க நூல்களில் இருந்தே காணலாம். புராண இதிகாசங்களில் கூறப்படுவது போல் இங்கு கற்பனை கதைகளுக்கும், கட்டுக் கதைகளுக்கும் இடமில்லை. சங்க இலக்கியங்களில் வரும் எல்லாச் செய்திகளும் இயற்கையானதாக மனித வாழ்வோடு ஒத்திருப்பதையும் காணலாம். இலக்கியங்களின் வர்ணனைகளில் கூட கற்பனை இராது. இயற்கையாகக் கண் முன் காணும் காட்சிகளே உவமைகளாகவும் கூறப்பட்டிருக்கும.

ஆதித் தமிழனுக்கு உலகம் எப்படி தோன்றியது என்னும் கேள்விக்கு அவன் அறிவில் இருந்து பதில் கிடையாத போதே அவன் கடவுள், தெய்வம் என்ற ஒன்றை உருவாக்கி இருக்க வேண்டும். இயற்கையின் சீற்றத்தையும் அழிவுகளையும் கண்டு பயந்தபோது இது ஏதோ ஓர் தெய்வத்தின் செயல்தான் என எண்ணித் தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டான்.

அப்படி உலகத்தை தோற்றுவித்த கடவுளும் உலகம் முழுவதற்கும் ஒன்றுதான் என்ற கொள்கை உடையவனாகவே இருந்தான்.

இக்கடவுட் தத்துவத்தை தான் அன்றைய அறிவியல் சிந்தனையாளரான புத்தர் கூட கடவுள் பற்றி உன்னால் அறிய முடியவில்லையானால் அது இல்லை என்று விட்டுவிடு. விண்ணைப் பற்றி உன்னால் அறிய

முடியவில்லையானால் விண் தத்துவத்தை விட்டு விடு. உன் கண் முன்னே உன் அறிவுக்குத் தோன்றுவதை மட்டும் உன்னிப்பாகக் கவனித்து அங்கு என்ன நடக்கிறது என்று கவனி என்றார். இதுவே புத்தரது பாலி மொழியில் “விபாசன” என்று அழைக்கப் படும். வீண் கற்பனைக்கு இடம் கொடாதே என்றார்.

ஆகவே இங்கு மாயோன் என்றால் அழியாதவன், சேயோன் என்றால் சேய்மையில் உள்ளவன், அறிவுக்கு எட்டாதவன். வேந்தன் என்றால் தலைவன், விரும்புவதற்குரியவன். வருணன் என்றால் நிறங்களுக்கு உரியவன் என நான்கு பெயர்களும் ஒருவரையே குறிக்கிறது என்னும் இலக்குவனார் கூற்று நூற்றுக்கு நூறு விகிதம் ஏற்புடையது.

வடமொழியில் உள்ள புராண இதிகாச நூல்களைக் கற்ற உரையாசிரியர்கள் தொல்காப்பியத்துக்கு உரை எழுதிய காலத்தில் அக்கதைகளில் அதிக ஈடுபாடு கொண்டு உள்ளத்தில் அவற்றை பதித்த வண்ணம் தொல்காப்பியத்துக்கு உரை எழுதி விட்டனர்.

அதனால் தான் என்றும் அழியாதவன் என்று கருதப்பட்ட இறைவன் பிறப்பு இறப்பு தொழிலை செய்யும் திருமால் என்று கருதப்பட்டு விட்டார். உண்மைப் பற்றில்லார், அறிவுக்கு எட்டாதவன் எனக் கருதப்பட்ட இறைவன் முருகனாகிச் சிவனின் புதல்வனாகி இளையோனாகி கணபதியின் தம்பியாகி விட்டான். யாவருக்கும் தலைவனாக விரும்பப்படும் இறைவன் வேந்தன், தேவர்களுக்கு அரசனாய் இந்திரன் ஆகிவிட்டான். பெருநிற வண்ணனாம் எல்லா நிறங்களுக்கும் காரணமாகிய இறைவன் வருணன், ஆரிய நூல்களில் கூறப்படும் மழைக் கடவுளான வருணன் ஆகிவிட்டான்.

உரையாசிரியர்களின் உரைப்பொருள் மாற்றம் உண்மையை உணர முடியாமல் செய்துவிட்டது. வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலக இயல்பினை விளக்க வந்த ஆசிரியர் பிறநாட்டு மொழியியல்பை உரைத்தனர் என்றால் அறிவொடுபட்ட உரையாகாது அன்றோ! ஆகவே இந்நூற்பாவில் கூறப்படும் கடவுட்கொள்கை தமிழருக்கே உரியதாகும் என்கிறார் இலக்குவனார்.

இங்கு கூறப்படும் கடவுள், தெய்வம் இரண்டும் வேறு வேறு என்பவரும் உளர். கடவுள் என்றால் கடந்து உள்ளே செல்லல் என்பது பொருள் என்பர். இது ஆன்மீக தத்துவம் ஆகும். தொல்காப்பியம் ஓர் அறிவியல் நூல். ஆகவே இங்கு கடவுளும் தெய்வமும் ஒன்றுதான்.

"தெய்வம் வடசொல், கடவுள் தென் சொல் "என்று சொல்பவரும் உளர். தெய்வம் என்பது தூய தமிழ்ச் சொல்லே! தெய்வமும் கடவுளும் ஒன்றே. தெய்வம் என்ற சொல் தேய் என்ற வேர்ச் சொல்லினின்றும் தோன்றியிருக்கக்கூடும். உயிர்களின் துன்பத்தை தேய்ப்பது தெய்வம். மக்கள் கடவுளை நினைக்கத் தொடங்கியது துன்ப நீக்கத்திற்காகவே. இன்றும் பலர் துன்பம் வரும்போதுதான் கடவுளை நினைக்கிறார்கள். கோயிலுக்குச் செல்கிறார்கள். பூசைகள் செய்கிறார்கள். ஆதலின் தெய்வம் என்னும் தமிழ்ச்சொல் தேய் என்ற அடியினின்று தோன்றியதாக கொள்ளலாம் என்கிறார் இலக்குவனார்

காதலையும் வீரத்தையும் போற்றி வாழ்ந்த பண்டைய தமிழர் வாழ்வில் முதலிடம் வகிப்பது காதல். இதனைக் களவு என்கின்றனர், தொல்காப்பியரும் இலக்கிய நூல் ஆசிரியர்களும். பிறர் அறியாமல் பெண்ணும் ஆணும் சேர்ந்து பழகுவதால் அது களவு எனப்பட்டது. இக்களவுக்குப் பின் முக்கிய இடத்தினை வகிப்பது பிரிவும் திருமணமும். பிரிவு திருமணத்துக்கு முன்பும் ஏற்படலாம். அதாவது ஒரு பெண், ஆண் இருவரது காதலை அவரது பெற்றோர் உறவினர் ஏற்றுக் கொள்ளாதபோது காதலர் இருவரும் மனமொத்து தமரை விட்டு, வீட்டை விட்டு, ஊரைவிட்டுப் பிரிந்து செல்வர். அதாவது தலைவன் தலைவியை அவளது பெற்றோர் உறவினருக்குத் தெரியாமல் வேறு இடத்துக்கோ ஊருக்கோ கூட்டிச் சென்று மணமுடிப்பான். இதனை “கொண்டு தலைக் கழிதல்” என்று

"கொண்டுதலை கழிதலும் பிரிந்தவண் இரங்கலும்

உண்டென மொழிப ஓரிடத்தான"

என்னும் நூற்பாவால் விளக்குகிறார் தொல்காப்பியர்.

கொண்டதலைக் கழிதல் பற்றியும் பிரிந்தவண் இரங்கல் பற்றியும் பல பாடல்கள் பற்பல புலவர்களால் இயற்றப்பட்டுள்ளதைச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

பிரிதல் திருமணத்துக்கு முன்பும் நடைபெறும். பின்பும் நடைபெறும். பிரிதல் இடம்பெறும் நிலையை தொல்காப்பியர் ஆறு வகைப்படுத்துகிறார்.

1. ஓதல் 2. பகை 3.தூது 4.துணை 5. பொருள் வயிற் பிரிதல் 6.பரத்தையிற் பிரிதல்

இப் பிரிவுகளுக்குரிய இலக்கணங்கள் தொல்காப்பியத்தில் பொருளதிகாரம் நூற்பா 27இல் தொடங்கி பல நூற்பாக்களில் விரிவாக எடுத்துக் கூறுகிறார். இதில் பரத்தையிற் பிரிவு தவிர்ந்த ஏனையவை திருமணத்துக்கு முன்னும் பின்னும் நடைபெறும். பரத்தையிற் பிரிவு திருமணத்துக்கு பின்பு தான் நடைபெறும். பரத்தையற் பிரிவு என்பது தலைவியின் மகப்பேற்றுக் காலங்களில் தலைவன் தன் உடலின்பத்திற்காகப் பிறபெண்களை நாடுவான்.

பிரிவுகள் எவரெவருக்கு உரியவை எனக் கூறுங்கால்

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" என்றார் தொல்காப்பியர். இங்கு குறிப்பிடப்படும் உயர்ந்தோர் என்று சொல்லுக்கு உரையாசிரியர்கள் கூறிய கூற்றுக்கள் அனைத்தையும் இலக்குவனார் கண்டிக்கிறார். "உயர்ந்தோர் எனக் கூறலின் வேளாளரை ஒழிந்தோர் என்றுணர்க என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். இவ்வாறு முற்றிலும் பொருந்தா உரை கூறித் தொல்காப்பியத்தை இழிநிலைக்கு கொண்டு வந்து விட்டனர் உரையாசிரியர்கள் என கடுமையாகச் சாடுகிறார்.

இலக்குவனார் மேலும் கூறுகையில் “உரையாசிரியர் காலத்தில் தமிழகத்தில் ஆரிய நாகரிகம் ஓங்கி வளர்ந்து, நால்வகை வருணநெறியும் தமிழ் நாட்டில் செல்வாக்கு பெற்றிருக்கலாம். தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் இது இடம் பெற்றிலது. அன்றியும், தொல்காப்பியர் தமிழக மக்கள் வாழ்வினைக் கூற வந்தனரே அன்றி தமிழருக்கு தொடர்பில்லாத பிற நாட்டினர் வாழ்க்கை பற்றிக் கூறுவதற்காக நூல் செய்திலர். தொல்காப்பியருக்குப் பிற்பட்டுத் தோன்றிய திருவள்ளுவர் உழவரை உயர்ந்தோர் என சிறப்பித்திருந்த போது, அவருக்கு முன்பு வாழ்ந்த தொல்காப்பியர் உழவரை அதாவது வேளாளரை உயர்ந்தோர் அல்லர் என ஓதி இருத்தல் எங்ஙனம் சாலும்?ஆதலின் உரையாசிரியர்கள் நால் வகை வருணம் பற்றி கூறுவனவெல்லாம் தொல்காப்பியர் கொள்கைக்கும், காலத்துக்கும் முரண்பட்டன, பொருந்தாது என்று அறிதல் வேண்டும்" என்கிறார்.

மேலும் இலக்குவனார் கூறுகையில் “ தொல்காப்பியம் தோன்றிப் பன்னெடுங் காலத்தின் பின்பே அதாவது 1800 வருடங்களுக்குப் பின்னே தான் உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்கு உரை எழுதி உள்ளனர். எவ்வாறெனின் தொல்காப்பியம் தோன்றியது கி.மு 700, அதற்கு உரை எழுதிய முதல் ஆசிரியர் இளம்பூரணர் காலம் கி.பி 11ம் நூற்றாண்டு என்கிறார் அடியார்க்குநல்லார். ஆகவே கால வேறுபாடு 1800 வருடங்கள் ஆகும்.

ஆகவே உரையாசிரியர்கள் ஒரு நூலுக்கு உரை எழுதும் போது நூல் தோன்றிய காலத்தை மனதில் வைத்துக்கொண்டு தான் அதற்கு ஏற்ப உரை எழுதி இருக்க வேண்டும். அப்படி அவர்கள் கொள்ளவில்லை எனச்சாடுகிறார்.

உரையாசிரியர்கள் கூறுவது போல் தொல்காப்பியர் காலத் தமிழர்கள் மத்தியில் சாதி வேற்றுமை இருந்திருக்க முடியாது. தற்போது கூட வேத ஆகமத்தை நேசிப்பவர்களே வரருணாசிரமத்தை கடைப்பிடிக்கின்றனர். ஆகவே இலக்குவனார் கூறுவது முற்றிலும் சரியானதே.

மேலும் பொருள் ஈட்டும் பொருட்டு (பொருள் வயிற் பிரிவு) எவரும் எங்கும், செல்லலாம், இன்ன இடத்துக்கு இன்னார் தான் செல்ல வேண்டும் என்ற வரையறையோ கட்டுப்பாடோ கிடையாது. இந்தக் கருத்துக்களை வற்புறுத்துவதே பின்வரும் நூற்பாக்களாகும்.

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டி
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே" (நூ பா- பொ 30)

"மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே" (நூ பா - பொ 31)

இவைகளுக்கு பொருள் கூறிய இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும்

தமிழ் நூல் நெறிமுறைக்கு மாறாக ஆரியர் நெறியினைத் தழுவிக் கொண்டுள்ளனர். நால்வர் என்பதற்கு நான்கு நில மக்களும் என்று பொருள் கொள்ளாது நான்கு வருணத்தினர் என்றும், மேலோர் என்பதற்கு மேன்மையுற்றோர் என்று பொருள் கொள்ளாது இரு பிறப்பினரான மேல் வகுப்பு மூவர் என்றும் அவர்களில் சிறந்தவர் பிராமணர் என்றும் பொருள் கொண்டு விட்டனர் என உரையாசிரியர்களின் மேல் குற்றம் சாட்டுகின்றார் இலக்குவனார். இங்கு நால்வர் என்பது நால்வகை நிலத்தவர் என்றும் மேலோர் என்பது மேன்மையுற்றோர் என்றுமே தொல்காப்பியர் கூறியிருப்பார் என்று இலக்குவனார் கூறுவதில் தவறு ஏதும் இல்லை.

"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை"

இந்த நூற்பா மூலம் தொல்காப்பியர் காலத்திலேயே மக்கள் கடல் கடந்து சென்றனர் என்பதனை அறியக் கூடியதாக இருக்கிறது. கடல் கடந்து செல்வது பெரும்பாலும் தலைவன் பொருள் ஈட்டும் பொருட்டே நடைபெற்றுள்ளது. அப்படிக் கடல் கடந்து பொருள் ஈட்டச் செல்லும் பொழுது தலைவன் தன் தலைவியை அழைத்துச் செல்வது அக்காலத்தில் வழக்கத்தில் இல்லை. உள்நாட்டில் பொருள் தேடச் செல்லும் போதும் தலைவியை அழைத்துச் செல்வதான பாடல்கள் இலக்கியங்களில் மிக மிகக் குறைவு. ஆனால் பெண்கள் கடல் கடந்து வெளிநாடு செல்வது அக் காலத்தில் வழக்கத்தில் இல்லை.

இதற்குக் கருத்து கூறுகையில் "கடல் கடந்து செல்வது அக்காலத்தில் பெண்களுக்குத் தடை செய்யப்பட்டது" என்கிறார் இலக்குவனார். ஆனால் தொல்காப்பியர் அப்படிக் கூறவில்லை. "வழக்கம் இல்லை" என்றுதான் குறிப்பிடுகிறார்

இதற்குக் காரணம் கூறுகையில் சில அறிஞர்கள் "பெண்களைக் கலத்தில் ஏற்றி அழைத்துச் செல்லும் பொழுது கடற்கொள்ளையரினால் பல சிக்கல்கள் ஏற்படலாம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதிலேயே தலைவன் தன் காலத்தைச் செலவிட நேரிடும்" என்பார்கள். பெண்ணானவள் அதிக காலம் தாய் தந்தை உறவுகளைப் பிரிந்து இருக்க மாட்டாள். அதனால் பொருள் வேண்டியளவு தேடமுன்பே வீடு திரும்ப வேண்டும் என்று தலைவனை வேண்டுவாள் என்பார்கள். அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் குழந்தைகளைக் கலத்தில், அலை கடலில் கொண்டு செல்வது என்பது இயலாத காரியம்.

ஆகவே குழந்தைகளையும் வீட்டையும் பராமரிக்கத்
தலைவியானவள் வீட்டில் இருந்து தான் தீர வேண்டும். இதற்குக்
காரணம் கூறும் இலக்குவனார், "மனைவி வீட்டில் இருக்க

கணவன் கடல் கடந்து வெளிநாடு சென்றால் மனைவியை நாடி மீண்டும் நாட்டுக்கு திரும்பி விடுவான். மனைவியும் உடன் செல்வானேயானால் சில வேளைகளில் நாட்டுக்கு திரும்பாமல் அந்த நாட்டிலேயே தங்கிவிடலாம் என்னும் எண்ணம் அவர்களுக்கு ஏற்படக்கூடும். எந்நாட்டில் இருந்தாலும் அந்த நாட்டை வளப்படுத்தி அதனைத் தமதாக்கி வாழும் எண்ணம் தோன்றுவது மனித இயற்கை. ஆகவே நாட்டின் நலன் கருதி நாட்டுப்பற்றுக் காரணமாக இத்தடையை ஏற்படுத்தினர் என்கிறார். இது உண்மைதான், இதுவே தான் தற்பொழுது உலகெங்கும் நடைபெறுகிறது. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு ஏதோ ஒரு வகையில் அதாவது தொழிலோ கல்வியோ அல்லது அகதிகளாகவோ குடியிருப்பவர்கள் அவரவர் குடியேறிய நாட்டை வளப்படுத்துவதோடு தாமும் பொருளீட்டி அந்நாட்டின் குடியுரிமையையும் பெற்று தாம் பிறந்து வளர்ந்த தாய் நாட்டையும் மறந்து வாழ்கின்றனர். ஆகவே அக்காலத்தில் தமிழ்ச் சான்றோர்கள், தமிழர்களே தமிழ்நாட்டைப் பலப்படுத்தி ஆண்டு அனுபவிக்க வேண்டும் என்னும் பெருநோக்கில் இத்தடையை

ஏற்படுத்தியிருப்பர்" என்கிறார்

இந்நூற்பாவில் கூறப்பட்ட "முந்நீர்" என்பதற்கு தமிழறிஞர் டாக்டர். வ.சுப.மாணிக்கனார் தன் தமிழ்க் காதல் என்னும் நூலில் (பக்152) இல் "தமிழகம் கிழக்கு தெற்கு மேற்கு ஆகிய முத்திசையானும் நீர்வளைவுண்டது. 'முந்நீர்' என்னும் தமிழ்க்கிளவி இம் முப்புறம் கடலமைப்பைச் சுட்டுவது, சுட்டுவதற்கென்றே தோன்றியது" என்னும் ஒரு மிகச் சிறப்பான, ஏனைய உரையாசிரியர், சங்கநூல் உரையாசிரியர் குறிப்பிடாத ஓர் புது விளக்கத்தினைத் தருகின்றார்.

இதே போல் பெண்களுக்கு வழக்கத்தில் இல்லாத இன்னுமோர் செயலும் இருந்தது. அதனை

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான" என்னும் நூற்பா கூறுகிறது.

இங்கும் பெண்களுக்குத் "தடை" செய்யப் பட்டது என்றுதான் இலக்குவனார் குறிப்பிடுகிறார். இதுவும் தவறான சொற் பிரயோகமே. "தடை"என்று தொல்காப்பியர் கூறவில்லை, நெறிமை இல்லை என்றே குறிப்பிடுகிறார்.

அதாவது அகத்திணை ஏழனுள் எத்திணை இடத்தும் மகடூஉ (பெண்) மடல் ஏற விரும்புதல் சிறப்புடைய நெறிமை இல்லை .

இதனை வள்ளுவரும்

"கடல் அன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்"

என்னும் குறட்பாவால் கூறுகிறார். அதாவது கடல் போன்ற காதல் நோயினால் வருந்தியும், மடல் ஏறாமல் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கும் பெண்பிறப்பைப் போல் பெருமையுடைய பிறவி எதுவும் இல்லை.

இதன்மூலம் அக்காலத்தில் பெண்மை எவ்வளவு தூரம் போற்றப் பட்டது என்பதை அறியமுடிகிறது.

இங்கு மடலேறுதல் என்பது ஒரு ஆண், தான் விரும்பிய பெண்ணை இயல்பான முறையில் அடைய முடியவில்லை எனில், பனங் கருக்கு மட்டையால் குதிரை ஒன்று செய்து அதன்மேல் ஏறி அதனை இழுக்கச் செய்து அதன் மேல் சவாரி செய்து தன் உடலை வருத்துவான். அப்படிச் சவாரி செய்யும் போது, தான்

விரும்பிய பெண்ணின் உருவப்படத்தையோ பெயரையோ தன் கைகளில் பதித்திருப்பான். இந்தப் பரிதாபத்தைப் பார்க்கும் ஊர்ச் சான்றோர் பெண்ணின் பெற்றோரை அணுகி அப்பெண்ணை அவனுக்கு திருமணம் செய்து வைக்குமாறு வேண்டுவர். இவ்வுத்தி ஏழு திணைகளில் பெருந்திணைக்குரியது. இக் கொடிய செயல்லில் பெண்கள் அக்காலத்தில் ஈடுபட மாட்டார்கள்

பெண்கள் இயற்கையாகவே நாணம் கொண்டவர். இவ்வாறு செய்தல் பெண்மைக்கு இழுக்காகும். தாய்மைக்கும் இழுக்காகும். உயிர்களின் தோற்றத்திற்கு மிக முக்கிய காரணமாக விளங்கும் தாய்மை அக்காலத்திலேயே மிகவும் போற்றப்பட்டது என்பது இதனால் அறியக்கூடியதாக உள்ளது. இதையே தொல்காப்பியரும் வற்புறுத்தினார். இதனைச் சரிவர உணர்ந்து கொள்ள முடியாமல் தற்போதைய நாகரீக உலகில் சில பெண்ணிய வாதிகள் தொல்காப்பியர் ஆணாதிக்கவாதி என்று கூறுவது மிகவும் வருந்தத்தக்கது.

அடுத்ததாக தமிழ்த் திருமண முறை பற்றி எடுத்து நோக்குவோம். தமிழர் திருமணங்கள் பற்றி தொல்காப்பியர் கூறுவனவற்றை இலக்குவனார் இவ்வாறு ஆராய்கிறார்.

காதலர்களின் களவு வாழ்க்கையின் வெற்றி திருமணமே. இத்திருமண முறை நாட்டுக்கு நாடு இனத்துக்கு இனம் வேறுபாடு உடையது. எவ்வாறாயினும், காதலர் இருவரும் மனமொத்துக் காதலித்து திருமணம் செய்து கொள்வதே அதிசிறந்தது என்று எல்லா நாட்டவரும் இனத்தவரும் கருதுகின்றனர். இருந்தாலும் சில இனங்களின் மதக்கட்டுப்பாடு அதனைத் தடுக்கிறது. ஆனால் பண்டைத் தமிழ்க் காதலர் இருவர் மனமொத்துத் திருமணம் செய்வதையே அனுசரித்து வந்தனர் என்பது தொல்காப்பியரின் நூற்பாக்களால் தெளிவாகிறது.

தொல்காப்பிய காலத்திலேயே தமிழருக்கும் வடமொழியினருக்கும் ஆன தொடர்புகள் ஏற்பட்டுவிட்டது என்பது அனைத்து அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். வடமொழியரை மறையோர் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதற்கு இலக்குவனார் கருத்து வெளியிடுகையில்,

"வடமொழியாளர் தமது நூல்களுள் சிலவற்றை தமிழருக்கு புறம்பாக மறைத்து வைத்து கொண்டமையின் மறையோர் என அழைக்கப்பட்டனர் போலும்" எனக் கூறுவார். இக் கருத்து ஓரளவு ஏற்புடைத்தே. மறையோர் கூறும் எட்டு வகை திருமண முறைகளை தொல்காப்பியர் "மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்"என்னும் வரிகளால் குறிப்பிடுகிறார். இந்த வரிக்கு விளக்கம் அளித்த உரையாசிரியர்கள் அவற்றைப் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்று குறிப்பிடுகின்றனர். (இந் நூற்பா இடைச் செருகல் என அறிஞர். பேராசிரியர் மருதநாயகம் குறிப்பிடுவதாக மேலே குறிப்பிடப் பட்டுள்ளதும் நோக்கத் தக்கது) இதில் காந்தருவம் என்பது தமிழர் காதல் திருமண முறைக்கு ஒத்துள்ளது. இந்தக் காந்தருவத்துக்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கம் தேவ சாதியைச் சார்ந்த ஒத்த பண்புடையவர் கந்தர்வ குமாரனும் கந்தர்வக்கன்னியும் ஆவர். அவர்கள் இருவரும் கொடுப்போரும் கொள்வோரும் இன்றித் தாமே கூடும் கூட்டம் என்பர். கந்தர்வம் கற்பின்றி அமையவும் பெறுமாம். ஆனால் தமிழ்க் காதல் (களவு) கற்பின்றி அமையாது என்பார் நச்சினர்க்கினியர்.

இக்கருத்தை ஆராய்ந்த இலக்குவனார் "காதலர் இருவரும் சந்தித்து மணந்து கொள்ளுதல் என்ற அளவில் தமிழ்க் களவு முறையும் வடமொழிக் கந்தர்வ முறையும் ஒத்திருப்பதால் வடமொழிக் கந்தர்வ முறையை போன்றது தமிழ்க் களவுக்கூட்டம் என்று ஆசிரியர் (தொல்காப்பியர்) கூறி இருத்தல் வேண்டும். இவ் எண்வகை முறை காலத்தால் பிற்பட்டது என்று சிலர் கூறுவர். மகாபாரதத்தில் இம்முறை குறிப்பிடப்பட்டுள்ளது. The social institutions of ancient Indians pages 153-154 என்னும் ஆவணம் மகாபாரதம் கிமு பத்தாம் நூற்றாண்டில் தோற்றப்பட்டது எனக் குறிப்பிடுகிறது. கிமு ஏழாம் நூற்றாண்டினரான தொல்காப்பியர் தாம் அறிந்த வடநாட்டு முறைகளுடன் தமிழ்நாட்டு மணமுறையை ஒப்பிட்டார். வட நாட்டு முறைகள் தமிழ்நாட்டில் அன்று இடம்பெறவும் இல்லை, அவற்றைத் தழுவ வேண்டுமென்று தொல்காப்பியர்

கூறவும் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள காதல் மண முறையைக் குறிப்பிட்டு அந்த முறை தான் இலக்கியத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று விதித்துள்ளார். வாழ்வில் எப்படி இருந்தாலும் இலக்கியத்தில் வடநாட்டு மண முறைகளத் தழுவினால் என்ன என்று வினவலாம். வாழ்க்கை தான் இலக்கியத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும் என்று கருதியே தொல்காப்பியர், தமிழர் காதல் மணமுறையையே விரித்துச் சொல்லி இலக்கிய யாப்புக்கு வழிகாட்டி உள்ளார்" எனக் கூறுகிறார்.

இவ்வளவு தொன்மை மிக்க காலத்தில் இவ்வகையான ஓர் அரிய அறிவியல் சார்ந்த இலக்கண நூலை இயற்றியவர் திறமையை எம்மால் கனவில் கூட எண்ணிப் பார்க்க முடியாது. எழுத்துகள் எவ்வாறு எழுதப்பட வேண்டும், சொற்கள் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும், வாழ்வியல் எவ்வாறு அமைகப்படல் வேண்டும் என்பதனைத் தெள்ளத் தெளிவாக எடுத்து இயம்பிய ஒரே ஒரு நூல் தொல்காப்பியம் எனலாம். இதனை இலக்குவனார் போன்ற தமிழ் அறிஞர்கள் கூறுவது போல், இந்நூலில் உள்ள ஒவ்வொரு நூற் பாக்களுக்கும் பொருளைத் தெளிவாக விளங்கிப் படித்து அதன்படி ஒழுகுவது ஒவ்வொரு தமிழரதும் தலையாய கடமையாகும்.

தொ.மா.க. 178

தொல்காப்பியமும் தமிழ் நூற்காவலர்களும்

சசிகலா ஜீவானந்தன்
முதுகலைத் தமிழ், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், கனடா
sashijeeva@hotmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் என்பது இன்று எமக்கு கிடைக்கப் பெறும், இலக்கிய வடிவில் அமைந்த மிகப் பழமையான இலக்கண நூலாகும். இந்நூலை இயற்றியவர் ”ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியன் “ எனப் போற்றப் பெறும் தொல்காப்பியனார் ஆவார். இந்நூல், நமது பண்டைய இலக்கியங்களைப் புரிந்து கொள்ள உதவுவதுடன், பழந்தமிழர் வரலாற்று கருவூலமாகவும் திகழ்கின்றது. தமிழ் உரையாசிரியர்கள், செய்யுள் வடிவில் இருந்த அவ்வரிய இலக்கண நூலை உரை வடிவில் விரித்து எழுதியவர்கள். மொழிகள் காலப்போக்கில் மாற்றமடைந்து பழைய சொற்கள் வழக்கிழந்து புதிய சொற்கள் தோன்றின. இதனால் ஒரு காலத்தில் இயற்றப்பட்ட நூல்களை பல நூற்றாண்டின் பின் வருவோரால் புரிந்து கொள்வதற்கு உரையாசிரியர்கள் உரைகள் எழுதினர். அவ்வுரையும் புரிந்து கொள்ள முடியாமல் ஏற்பட்ட நிலையில் உரைக்கு உரையும் எழுதினர்.

இந்த ஒப்புயர்வற்ற இலக்கண நூலை இன்றைய மக்களும் விளங்கிக்கொள்வதற்கு இவ்வுரையாசிரியர்கள் ஓர் இணைப்புப் பாலமாக இருந்தனர். இவர்கள் ”யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்று உலக மக்களை அறை கூவி அழைத்துப் புலமை விருந்தளித்த நல்லவர்கள், அறிவுச்செல்வத்தை அள்ளி வழங்கிய வள்ளல்கள், கல்விக் கோயிலின் :பெருவாயிலைத் திறந்துவிட்ட மேலோர்கள்.

ஆய்வின் நோக்கம்

பழந்தமிழ் நாகரிகத்தின் செம்மையினையும், செம்மாந்த பெருநிலையினையையும், தெள்ளத்தெளிய விளக்கிக்காட்டும் இத்தொல்காப்பிய நூலிற்கு, அன்று முதல் இன்று வரை கால மாற்றத்திற்கேற்ப பல்வேறு கருத்துக்களைத் தம் உரைத்திறத்தால் உரை எழுதிய உரையாசிரியர்கள், எவ்வாறு அவற்றை மக்கள் மனதில் இன்று வரை பதித்தனர் என்றும், அவர்களின் தொண்டுகளையும், புலமைச்சிறப்புக்களையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வுச்சிக்கல்

தொல்காப்பியத்துக்கு பலர் உரை எழுதியுள்ளனர். ஒவ்வோர் உரையாசிரியர்களும், மிகுந்த திறமையுடன் உரை எழுதியுள்ளனர். இவ்வாறு பலர் உரை எழுதியிருப்பது சிக்கலாகும். பல உரைநூல்கள் எழ வேண்டிய காரணம் ஏன்?

கருதுகோள்

தொல்காப்பியத்தில் உள்ள எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களையும் காலம் கடந்து இன்றும், இன்றைய மக்கள் விளங்கிக் கொள்வதற்கு காரணம் தமிழ் நூற்காவலர்கள் ஆகிய உரையாசிரியர்களே ஆவார். இதுவே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வியல் அணுகுமுறைகள்

1. வரலாற்று ஆய்வு: தொல்காப்பிய உரைகளின் அறிவியல் வரலாறு பற்றி ஆய்வு செய்வது,

2. சமூக ஆய்வு: தொல்காப்பிய உரைகளின், சமூகம், உறவுகள், சமூக நடத்தை, சமூக அமைப்பு முறை, சமூக வாழ்க்கை முறை பற்றி ஆய்வு செய்வது,

3. இலக்கிய,இலக்கண ஆய்வு:

தொல்காப்பிய இலக்கண அமைப்பு,வகை, பாகுபாடு பற்றியும், இலக்கியப்படைப்புக்களின் ஆழமான ஆய்வு பற்றியும் ஆகும்

முதன்மைச்சான்றுகள்: தொல்காப்பியம்: இளம் பூரணர், நச்சினார்கினியர், சேனாவரையர், கல்லாடர் ,தெய்வச்சிலையார், முதலியோர் உரைகள்

துணைச்சான்றுகள்: உரையாசிரியர்கள் மு.வை அரவிந்தன், தமிழ் இலக்கிய இலக்கண உரையாசிரியர்கள்- அண்ணமலைப் பல்கலைகழகம், உரையாசிரியர்களும் உரை மரபும்- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்

இயல் 1: தொல்காப்பியமும் இளம்பூரணரும்:

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டு அதனை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் இளம்பூரணர் ஆவார். இவரது உரை ஆழமான தெளிந்த நீரோடை போன்றது. தொல்காப்பியம் இன்றும் வாழக்காரணம் இவரது உரையேயாகும். ”தொல்காப்பியம் பண்டைத்தமிழரின் தொன்மையையும் நாகரிகச்சிறப்பையும் விளக்கும் பழம்பெரும் நூல்” என்று டாக்டர் மு. வரதராசன் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இளம்பூரணர் காலம் பதினோராம் நூற்றாண்டாக இருக்கலாம் என கருதுகின்றனர். இவர் “பிறர் உட்புகுந்து காண முடியா வண்ணம் இருண்டு கிடந்த தொல்காப்பியம் என்னும் சரக்கறையுள், தம் அறிவென்னும் அவியாவிளக்கைக் கொண்டு துருவி, ஆங்கே குவிந்து கிடந்த அரிதான குவியல்களை உலகிற்கு முதலில் விளக்கிக் காட்டிய பெருந்தகை” ஆவார். இவர் தொல்காப்பியத்தை தானாக ஆராய்ந்து கற்று “தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் “ என தொல்காப்பியம் முழுவதற்கும் உரை எழுதியதுடன்

தொல்காப்பிய இயக்கமும் ஆரம்பித்து தொல்காப்பியம் இன்று வரை எம் கைகளில் நிலைத்திருக்க காரணமாக இருந்தார்.

இவரின் உரைநடையில் பொதுவான ஓர் நெறியை உரை முழுவதும் மேற்கொண்டுள்ளார் எனக் கூறலாம். அதிகார விளக்கம், இயல் பற்றிய சுருக்கம், நூற்பா நுதலும் பொருள், தெளிவுரை, சொற்றொடர் விளக்கம், மேற்கோள் விளக்கம் என்ற பொது அமைப்பு அவர் உரையில் காணப்படும்.

இளம்பூரணரின் உரைச் சிறப்பாக, நாட்டுவளப் பெயர்களை எடுத்துரைத்தல், தொழில் மரபுகளைக் கூறுதல், சமணப் பொறையை வெளிப்படுத்தல், சரித்திர வரலாற்று காலகட்டத்தை எடுத்துரைத்தல், மூலஆசிரியரிடத்தில் பெருமதிப்பு வைத்தல், பிறமொழிப் பயிற்சியோடு உரை எழுதுதல், வினாவிடைப் பாங்கினைக் கையாளுதல், சொற்பொருள் தருதல், பல்துறை அறிவோடு உரை செய்தல், தம் காலத்து நாகரிகம், பண்பாட்டைப் புலப்படுத்தல், மேற்கோள்காட்டுதல், பாடவேறுபாடுகளைத்தருதல், சொல் நயங்களைப் பயன்படுத்தல், அடைமொழி நயங்களைக் கையாளுதல், தொடர் நயங்களைக் கையாளுதல், , பால் நயங்களைக் கையாளுதல் போன்றனவாகும்.

இவரின் உரைத்திறனுக்கு வழுச்சேர்க்க எடுத்துக்காட்டாக,

> *"அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதலாகி*
> *உளவெனப்பட்ட ஒன்பதிற்றே எழுத்தே*
> *அவை தாம்*
> *கசதப என்றா நமவ என்றா*
> *அகர உகரமோடு அவைஎன மொழிப" (எழு-171)*

இங்கே இளம்பூரணர் அளவுப்பெயரில் உகரம் காட்டியும், நிறைப்பெயரில் உகரம் காட்டாமலும் உள்ளார். காரணம் அன்றே உகரம் வழக்கிழந்துவிட்டது.

இவர் உரையில் இவருக்கு தயக்கமும் ஐயமும் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்று:

தொல்காப்பிய இலக்கணக் கொள்கைகளைப் புரிந்து கொள்வதற்கு காலயிடையீடும், புதிய இலக்கணக் கொள்கைகளும், பழைய இலக்கணம் பற்றிய பல வேறு கருத்தும் இவருக்கு தயக்கத்தை ஏற்படுத்தியது. இருந்தும் பல நூற்றாண்டுகள் கழித்து, அந்நூலின் கருத்தை உள்ளதை உள்ளவாறு கூறியதுடன் அவற்றை முற்றும் முடிந்த முடிபாக கொள்ளவில்லை.

> *"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே*
> *வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள்பெயரே*
> *பல்லோர்க் குறித்த முறைனிலைப்பெயரே*
> *பல்லோர்க் குறித்த சினைநிலைப்பெயரே*
> *பல்லோர்க் குறித்த திணைநிலைப்பெயரே*
> *கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே*
> *இன்றிவரென்னும் எண்ணியற் பெயரோடு*
> *அன்றியனைத்தும் அவற்றியல் பினவே. " (சொல் -162)*

இங்கு இவர் "இன்றிவரென்னும் எண்ணியற் பெயர் என்ற அடிக்கு ஒருவர், இருவர் மூவர் என விளக்கம் தந்ததுடன், இன்றிவர் என்பது இத்துணைவர் எனவும் ஐயம்படக் கூறுகின்றார்.

இவரின் உரைச்சிறப்புக்களில் நாட்டுவளப்பெயர்களை எடுத்துரைத்தலுக்கு எடுத்துக்காட்டாக

> *" ஊரெனப்படுவது உறையூர் நாடெனப்படுவது சோனாடு"- (சொல்-250)*
> *"செந்தமிழ் நிலம் என்பது வையையாற்றின் வடக்கு, கருவூரின் கிழக்கு,*
> *மருவூரின் மேற்கு"-(சொல் 392)*

இவரின் சொல்லதிகார உரைகளில் அடிக்கடி இவர் நாட்டு வளங்களைப் பயன்படுத்தியதைக் காணலாம்.

மேலும் தொழில் மரபுகளைக் கூறுதலுக்கு எடுத்துக்காட்டு

அவனுக்குச் சோறு இடுதல், உழுது வரும் சாத்தன், கூழ் உண்டான், எருது வந்தது, ஏர்ப்பின் சென்றான் என்பது போன்ற உழவுத்தொழில் பற்றிய சான்றுகளைத் தருகின்றார். அத்துடன் தொழில் மரபுகளைத் தன் உரை மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

சமயப்பொறையை வெளிப்படுத்துங்கால், இவர் சமண சமயத்தைச் சார்ந்தவராக இருப்பினும் பெருந்தன்மையோடு பிற சமயக் கடவுளர்களையும் ஆங்காங்கே சுட்டிக்காட்டுகின்றார். எனவே இவர் சமயப்பொறை மிக்கவர் என்பதைக் காட்டுகின்றது. மேலும் புகழ் பெற்ற வடமொழி இலக்கண நூலான பாணினீயத்தையும் இளம்பூரணர் தம் உரையில் பயன்படுத்தியுள்ளார்.

சரித்திர வரலாற்றுக் காலகட்டத்தினை காட்டுகையில் இளம்பூரணர் எழுத்ததிகார உரையில் இரு இடங்களில் (எழுத்து- 125,248) " பரணியாற் கொண்டான்" என்ற எடுத்துக் காட்டினைக் கையாண்டுள்ளார். வீரராசேந்திர சோழனை பாட்டுடைத்தலைவனாகக் கொண்ட சங்கமத்துப் பரணியை சுட்டிக்காட்டப்படுகின்றது. அவரின் காலமும் பதினோராம் நூற்றாண்டு என்பது தெளிவாகின்றது. இவ்வாறு சரித்திர வரலாற்றைக் கூறுவதன் மூலம் அவர் காலமும் திறனும் அறிய முடிகிறது.

வினாவிடைப்பாங்கினைக் கையாளுதல்: வினாவிடைப் பாங்கினை பண்டைய உரையாசிரியர்கள் பலரும் கடைப்பிடித்த நெறிகளுள் ஒன்றாகும், கற்பவர்களுக்கு விளங்கும் வகையில் வினாக்களைக் கேட்டு

அதற்கு விடைகளை அளித்ததன் மூலம் உரைகள் அமைத்தனர். "இத்துணையும் பிரிவு அறுவகைப்படும், அஃதே பரத்தையற் பிரிவு என்பதோ எனின், அது நிலம் பெயர்ந்து உறையாமையானும், சிறக்காமையானும், அறமுறைமை செய்யப்பிரிதலும், பொருள்காரணமாகப் பிரிதலுமின்றி பிரிதலினாலும், கற்பியலில் கூறப்படும் என்க"(பொருள் 30) இங்கே தொல்காப்பியர் அகத்திணை இயலில் பரத்தையர் பிரிவில் கூறாமைக்கான காரணங்களை வினா விடை நெறி விளக்கங்களை பயன்படுத்தி விளக்கினார்.

சொற்பொருள் தருதல்: இளம்பூரணர் பல இடங்களில் சொற்களின் பொருளை நன்கு விளக்கிச் சொல்கின்றார். மாணாமை என்ற சொல்லுக்கு மிகாகை என்ற பொருளும், உயர்வு என்ற சொல்லுக்கு குலத்தால் உயர்தல், தவத்தால் உயர்தல், நிலையால் உயர்தல், உபகாரத்தால் உயர்தல் என விளக்குகின்றார். எழில் என்பதற்கு அழகு எனப் பொருள் கூறுகின்றார். ஆங்காங்கே சுவையான நயமான சொற்பொருள் விளக்கங்களை எழுதியுள்ளார். அவ்விளக்கங்கள் அருமையும், எளிமையும் அழகும் பெற்றுத்திகழ்கின்றன. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை,பத்துப்பாட்டு, பதினென்கீழ்கணக்கு, போன்ற நூல்களிலிருந்து பல பாடல்களை மேற்கோள் காட்டுகின்றார்.

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலன"- (பொருள்-206)

செறிவு என்பது அடக்கம், நிறைவு என்பது அமைதி, செம்மை என்பது மனம் கோடாமை, செப்பு என்பது சொல்லுதல், அறிவு என்பது நன்மை, தீமை பயப்பனவும் அறிதல், அருமை என்பது உள்ளக்கருத்தினை அறிதல் இவை எல்லாம் பெண்களுக்கு உரித்தானவை எனக் கூறுகின்றார். இவ்வாறு பல அருமையான சொல்லாடல்களை எமக்கு அவர் தந்து சென்றுள்ளார்.

மேலும் ஒழிய என்னும் வினையச்சம், எவ்வாறு முடிந்தது எனின், அது பாத்திய என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது. அப்பெயரெச்சம் பண்பு என்னும் பெயர் கொண்டு ஐந்திணை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாகி நின்றது என உரைப்ப" - இது இளம்பூரணரின் உரை நடை வரிகளாகும்.

இயல் 2: தொல்காப்பியமும் சேனாவரையரும்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை கண்டவருள் சேனாவரையர் உரையே இன்றுவரை புலவர் உலகம் போற்றும்பெருமையுடன் வாழ்கின்றது. அதற்குக் காரணம் இவர் உரை திட்பமும் நுட்பமும் வாய்ந்தது, சுருங்கச் சொல்லி உய்த்துணர வைக்கும் இயல்புடையது, தருக்கநூல் முறை வழுவாமல், தடை விடைகள் பல எழுப்பி நிற்பதுடன் பிற உரைகளை மறுத்தும், கருத்தை நிலை நாட்டுகின்றது. தூய தமிழ் நடை கொண்டு சிங்க நோக்காக நூலின் முன்னும் பின்னும் நோக்கி விளக்கம் தருகின்றது.

மேலும் சேனாவரையர் என்ற பெயருக்கு படைத்தலைவர் என்று பொருள். இவரின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர்.

இவரின் உரையின் புலமைப் பெருமிதம், ஆராய்ச்சி வன்மை, கருத்துத் தெளிவு என்பவற்றை உரை முழுவதும் காணலாம். ஆற்றல் வாய்ந்த சொற்களை ஆராய்ந்து எடுத்து, ஆழமான பொருளைத் திணித்து, ஆழ்ந்து பலமுறை கற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு சிறப்புக்களும் வாய்ந்த சேனாவரையர் காலந்தோறும் புலவர் பெருமக்களின் போற்றுதலைப் பெற்று வாழ்வதில் வியப்பில்லை.

சூத்திரத்தின் அமைப்புக்களின் படி தாமே வினா எழுப்பி விடை கூறுவதும் இவரின் சிறப்பாகும்.

அவை தாம்
"தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியான் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலும் காலை
வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும். "

இங்கே சூத்திரத்தின் இறுதி அடியைப் பிரித்து ஒரு சூத்திரமாக உரையாசிரியர்கள் உரைத்ததை எடுத்துக் கூறி அவ்வாறு பிரித்தது சிறந்தது எனவும், சூத்திரத்தையும் குறளடியையும் சேர்த்து இவ்வாறு செய்வார்கள் எனவும் சுட்டிக் காட்டுகின்றார். எடுத்துக்காட்டாக

அடிமறிச் செய்தி
அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது
தடுமாறும்மே பொருள்தெரி மருங்கின் ஆகும்.

சூத்திரங்களின் ஓசை நயத்திலும், பலமுறை ஓதி ஓதிப் பண்பட்ட அவரது செவி நுட்பமும் அவரின் ஓர் உரைச் சிறப்பாகும். இம்முறையும் எமக்கு எளிதில் புரிவதற்கு ஓர் வழிகாட்டியாகும்.

கட்டுரைச் சுவைபட "தாமே" நின்றது.

காலந் "தாமே முன்றென மொழிப" (சொல் .199)

செய்யுள் இன்பம் நோக்கி அளபெழுந்து நின்று வினாவின் கிளவியென அதன் பொருளை உணர்த்துகின்றது. இப்படிப் பல இடங்கள் இவருக்குரிய சிறப்பம்சமாகும்.

எடுத்துக்கட்டாக

யாஅர் என்னும் வினாவின் கிளாவி
அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே(சொல் 210)

சேனவரையரின் நுண்பொருள் கண்டு உரையெழுதும் திறமைக்கு கீழ் உள்ள நூற்பா சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும் (சொல் -4)
சேனாவரையரின் ஆராய்ச்சித்திறன் பற்றிப் பார்க்கையில்

எல்லே இலக்கம்- (தொல்-269)

இங்கு எல் என்பது இடைச்சொல் என்பது தொல்காப்பியர் கருத்து, ஆனால் சேனாவரையர் எல் என்பதை உரிச்சொல்லாக கொள்ள வேண்டும் என்பது அவர் கருத்தாகும். ஆனால் ஆசிரியர் இடைச்சொலாக கூறியமையால் இடைச்சொல்லென்று கோடும், என்று கூறி இங்கு சேனாவரையர் தன் கருத்தை குறிப்பிட்டு தொல்காப்பியரையும் மதிக்கின்றார். இங்கே இவரின் சொல்லாட்சித்திறன் வெளிப்படுகின்றது.

பன்முகத்திறன்: சேனாவரையர் வடமொழிப்புலமை பெற்றிருந்தாலும் தமிழ்மொழி பண்பாட்டிற்கு ஏற்பவே பல்வேறு சான்றாதாரங்களைக் கொண்டு உண்மையை நிறுவியுள்ளார்.

மரபுக்கு எடுத்துக்காட்டு: ஒரு பொருளுக்குரிய சொல்லை வேறொரு சொல்லால் வழங்குவது மங்கல வழக்கு.

ஒரு பொருளுக்குரிய சொல்லை வேறொரு சொல்லால் வழங்குதல்

"தகுதியும் வழக்கும் தழீயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இலவே.

எடுத்துக்காட்டு: செத்தாரை துஞ்சினார் என்றும், சுடு காட்டை நன்காடு என்றும், ஓலையைத் திருமுகம் என்றும் கூறினார்.

உழவு: -விளையும் பயிர் நன்கு செழித்து வளர நீரும் உரமும் முக்கியமானது என்பதை அந்தக்கால மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளதைக் காட்டுகின்றது.

எருப்பெய்து இளங்கலை கட்டு நீர்க்கால்யாத்தமையின்

பைங்கூழ் நல்லவாயின.

வேளாண்மை: இயற்கைப் பொருளை அதன் இயல்பிலேயே எடுத்துரைப்பது சிறப்பாகும்.

"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்(தொல் 19)
நிலம் வலிது,தீ வலிது, உயிர் உணரும்

வணிகம்: பழங்காலத்தில் வணிகர்கள் விற்கும் முறையில் சில உத்திகளைக் கையாண்டனர். ஒரு பொருள் இல்லை என்று சொன்னால் இல்லை என்று கூறாமல் இருக்கிற பொருளை வைத்து அதற்கு ஏற்ப பொருள் கூறுவது உயர்ந்த மரபாகக் கருதப்படுகிறது.

உளுந்தல்ல கொள்ளு உள்ளதென விடையளித்தல். இங்கே ஓர் பொருள் இல்லை என்று கூறுதல் மரபில்லை என எடுத்துக் காட்டுகின்றார்.

வழக்கு: மக்கள் காலங்காலமாக தங்கள் வாழ்வில் பயன்படுத்தும் சொற்களே வழக்கு உள்ள சொற்கள் என அழைக்கப்படுகிறது.

"தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீரிடத்த"- (தொல்-29)

எனக்கு தந்தான், நனக்கு தந்தான்

ஏவல்: ஒருவரைப்பார்த்து இதைச் செய் என்று வினவியவழி அதை நீ செய் என மறை முகமாக கூறுதல் ஏவலாகும்.

"தெப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான"- (தொல்-15)

சாத்தா உண்டியோ? என வினாவிய படி நீ உண் என்றும் வயிறு குத்தும் எனில் பசித்தேன் என்றும் மறைமுகமாக கூறலாகும்.

உணவு: ஒவ்வொரு உயிருக்கும் இன்றியமையாதது ஒன்று உணவு. அவ்வுணவின் முக்கியத்துவத்தை பல இடங்களில் சேனாவரையர்

"வேறுவினைப் பொதுச்சொல் இரு வினை கிளவார்"(சொல்-46)
சோறுங்கறியும் அயின்றார்.

அடிசில்- உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன

பட்டம்: மன்னர்கள் , தளபதிகளின் செயலினைப் பாராட்டி பட்டங்கள் வழங்குவதைப் மரபாக கொண்டிருந்தனர்.

சிறப்பி னாகிய பெயர்நிலைக்கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்- (சொல் 41)

எ.கா: ஏனாதி நல்லுதலுடன்- படைத்தலைவன்

காவிதி கன்னத்தை -வேளாளர் அத்துடன் புலமை காரணமாக அளிக்கப்பெறும் சிறப்புப் பெயர்கள் யாவும் இயற்பெயருக்கு முன்னதாக அமையும் என்பதை சேனாவரையர் உரை முன்மொழிகின்றது.

சாதிப்பெயர்கள்: சேனாவரையர் தம் காலத்துச் சாதிப் பிரிவுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். பார்ப்பனச்சேரி, (சொல்-49), நான்மறை முதல்வர், போன்றனர். இங்கு அவர் கால சமுதாயப் பிரிவுகளை நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

சேனாவரையர் சொல்லதிகார உரையில் மாந்தர்களின் பெயர்களையும் திறன் மிகு மாந்தர்களுக்கு சூட்டப்படும் சிறப்புப் பெயர்களையும், சாதிப்பெயர்கள், குடிப்பெயர்கள், இயற்பெயர், பட்டப்பெயர், அளவைப்பெயர், என்று பெயர்களையும் அவர் கால சமூக வழக்காற்றினையும் சுட்டிக்காட்டுகின்றார்.

இயல் 3: தொல்காப்பியமும் ஏனைய உரையாசிரியர்களும்:

நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடார் ஆகியோரும் தொல்காப்பியத்திற்கு உரை கண்டு இன்று வரை தொல்காப்பியம் எம்கையில் தவழக் காரணமானவர்கள்.

நச்சினார்க்கினியர்: "உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்" என்ற புகழாரமே இவர் உரையின் சிறப்புக்குச் சான்றாகும். இவர் உரைநடை அழகு, சற்றுக்கடினம் வாய்ந்தது. இவர் கி.பி பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனலாம்.

இவரின் உரையமைப்பில் விருத்தியுரைக்குரிய பகுதிகளான கருத்துரை, பொழிப்புரை, எடுத்துக்காட்டு, அகலவுரை என அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் வினாவிடை மூலம் விளக்கம் தருதல், பிற உரையாசிரியர்களின் கருத்துக்களை மறுத்தல், ஏற்றல்,நூற்பாக்களின் கிடைக்கை முறை சுட்டுதல் போன்றவற்றுடன் இளம்பூரணர், சேனாவரையர் போன்ற உரையாசிரியர்களின் உரைகளை சில இடங்களில் தழுவியும், சில இடங்களில் மறுத்தும் அமைந்துள்ளது இவரின் சொல்லதிகார உரை.

உரைச்சிறப்புகள்: "நச்சினார்க்கினியர் நூலறிவோடு நுண்ணறிவும் உடையவர். பல்கலை வித்தகர், சமயம், இசை, நாடகம் பற்றிய அறிவு, ஆடை அணி பற்றிய நுண்ணிய விளக்கம், பல இனத்து மக்களின் பழக்க வழக்கம், பண்பாடு இவற்றை அறிந்தவர். தமிழில் உள்ள இலக்கணம், இலக்கியம், நிகண்டு காவியப்புராணம் ஆகியவற்றை நன்கு அறிந்தவர். சோதிடம், மருத்துவம், பற்றியும், கட்டடக்கலை பற்றியும் போதிய அறிவு இவரிடம் உண்டு. பயிர்வகையும் உயிர்வகையும் பற்றி நிறைய அறிந்தவர்" என ஆராய்ச்சியாளர் மு.வை அரவிந்தன் குறிப்பிடுகிறார்.

உரை இயல்பு: நச்சினார்க்கினியர் தம் உரையில் தெளிவும் விளக்கமும் அமையுமாறு எழுதி தேவையான இடங்களில் இலக்கணம் கூறி வினை முடிவுகளைக்கூறி விளக்குவார். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது, சிங்க நோக்கோடு உரை எழுதுவது இவரின் உரை இயல்பாகும்.

தொல்காப்பியர் செய்யுளுக்கு உரிய உறுப்புகளுள் ஒன்றாக "மாட்டு " என்பதைக் குறிப்பிடுகின்றார். (செய் 210)

"அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலையிலும்
இயன்று பொருள் முடியத்தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்"

இச்சூத்திரத்துக்கு இளம்பூரணர், சேனாவரையர் போன்றோர் கூறியுள்ள கருத்து வேறு, நச்சினார்க்கினியர் கூறிய கருத்து வேறு. மாட்டு என்ற பெயரால் நச்சினார்க்கினியர் செய்யுட்களை கலைத்து, அடிகளை மாற்றிச் சொற்களைப் பிரித்து முன்பினாகக் கூட்டி வலிந்து பொருள் கொண்டு தம் கருத்தைப் பாட்டில் திணித்து விடுகின்றார்.

இயல் 4: உரைகளின் முக்கியத்துவம்:

ஒரு காலத்தில் பண்புகளுக்கும் சூழல்களுக்கும் ஏற்ப எழுதப்பட்ட இலக்கியங்களும் இலக்கணங்களும் பல நூற்றாண்டு கால, கால இடைவெளி காரணமாக தெளிவாகப் புரிய முடியவில்லை. வழக்கிழந்த சொல்லமைப்புக்கள், சொற்பொருள் மாற்றங்கள், பண்பாட்டு வழக்காறுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இப்புரிதல் அற்ற நிலைமைகள் ஏற்பட்டது. எனவே இந்நிலைமைகளை உரையாசிரியர்கள் தம் உரைகளின் மூலம் தெளிவு படுத்தினர்.

இலக்கண, இலக்கிய வரலாற்றில் உரைகளுக்கு மிக உயர்ந்த இடமுண்டு. தமிழ் மொழி வளர்ச்சிக்கும் இலக்கண இலக்கியப் பயிற்சிக்கும் உரைகள் பேருதவி புரிகின்றன. உரைகள் தோன்றியது நமது நற்பேறாகும். அவை தோன்றியிராவிடில் பழம்பெரும் இலக்கண இலக்கியச் செல்வங்கள் அழியாமல் இருந்திருப்பினும் விளங்காமல் இருந்திருக்கும். பல தலைமுறை வேறுபாடுகளைத் தாண்டிப் பிற்காலத்தவர்கள் அவ்விலக்கியங்கள, உரிய கால, இடச் சூழ்நிலைகளைக் கொண்டு அறிந்துகொள்வதற்கு உரைகள் உற்ற துணையாக இருக்கின்றன. மூல நூல்களில் கடினமான சொற்களும் சொல்வழக்குகளும் மரபுகளும் இருப்பதால், இவை தடைக்கற்களாக இல்லாமல், மூல நூல்களை முறையாகப் புரிந்து கொள்ள உரைகள் உதவுகின்றன. ஆழமான சில கருத்தியல்களும், வேரூன்றிக் கிடக்கின்ற அக்காலத்திய பழக்கவழக்கங்களும் பண்பாடுகளும் உரைகள் மூலமாகப் புலப்படுகின்றன. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றோரின் உரைகளில் அவர்களின் தத்துவக் கருத்துக்களும் மற்றும் பண்பாட்டு மரபுகளும் காணப்படுவதைக் காணலாம்.

மேலும் உவமம் உள்ளிட்ட உத்திமுறைகள், பாடல் அமைப்பு முறைகள் பாவடிவங்கள் அவற்றிடையே ஏற்பட்ட மாற்றங்கள் முதலியவற்றை அறியவும் உரைகள் துணை செய்கின்றன.

தமிழ் மொழியின் அமைப்பு, காலந்தோறும் எவ்வாறு மாறுதல் அடைந்து வந்துள்ளது என்பதையும், தமிழ் மக்களின் வாழ்க்கை நிலை, அரசியல் மாறுதல், பழக்கவழக்கம் ஆகியவற்றையும் உரைகள் உணர்த்துகின்றன.

உரையாசிரியர்கள் மேற்கோளாகத்தரும் பாடல்கள், மூல நூல்களில் ஏற்படும் ஐயத்தைப் போக்கவும் கருத்தை ஆழமாக அறியவும் உதவுகின்றன.

சில பழைய நூல்களில் மறைந்தும் குறைந்தும் உள்ள பகுதிகளுக்கு உரிய பாடல்களை உரைகளே நமக்கு தந்துள்ளன. மறைந்துபோன தமிழ் நூல்களின், அவற்றை இயற்றிய புலவர்களின் பெயர் அந்நூல்களின் சில பகுதிகள் ஆகியவற்றைப் பேணிக்காத்து வருபவை உரைகளாகும்.

தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், ஆகிய இரண்டிற்கும் அமைந்துள்ள உரை விளக்கங்கள் மொழியியல் ஆராய்ச்சிக்குத் துணைபுரிகின்றன. இவ்வாறே பிற்கால இலக்கண உரைகளும் அவ்வக்காலத்துத் தமிழ் மொழி அமைப்பை அறிய முடிகிறது.

முடிவுரை

உரைகள் என்பவை சொற்பொருள் விளக்கம் தருகின்றன. கருத்துரை, மேற்கோள் , பிறர் கருத்துக்களை ஏற்கவோ மறுக்கவோ செய்கின்றன, புதிய வழக்குகள், புதிய செய்திகளைச் கூறுகின்றன. எனவே தொல்காப்பியத்தை நாம் விளங்கிக் கொள்வதற்கு உரைநூல்கள் அவசியமாகும். இவ்வுரைநூல்களை தந்த உரையாசிரியர்கள் கல்விக்கோயிலின் பெருவாயிலைத் திறந்துவிட்ட மேலோர்கள் ஆவார்கள்.

தொ.மா.க. 200

தொல்காப்பியமும் கல்லாடனார் உரைச்சிறப்பும்

முனைவர் **ம.ஏ. கிருட்டினகுமார்**
தமிழ்ப்பேராசிரியர்,
காஞ்சிமாமுனிவர் அரசுப்பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி - 605008,
mekrishnakumar72@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்மொழி இலக்கணத்திற்குரிய முதல் நூலாக மட்டுமின்றி முதன்மை நூலாகவும் அமைகிறது. அதன்வழி நின்றே பிற இலக்கண நூல்கள் தோன்றலாயின. கல்லாடனார் தொல்காப்பியத்தின் அருமையினை தம் உரையின்வழி வெளிப்படுத்துவதனைக் காணவிழைவதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

கல்லாடனார் எழுதிய ஏழு இயல்களின் உரையினைக்கொண்டே கல்லாடனாரின் உரைத்தன்மை மதிப்பிடமுடிகிறது. சொல்லதிகாரம் என்னும் அதிகாரப் பெயரே காரணப்பெயராவதனை முதலில் எடுத்துக்காட்டுகிறார். அவ்வாறே அதிகாரம் என்பது 'முறைமை' என்னும் பொருளினை உடையதனை எடுத்துக்காட்டி இலக்கண வரம்பின் நிலையினை எடுத்துரைக்கிறார்.

"எழுத்தல்லோசையும், எழுத்தொடு புணராது பொருள் அறிவிக்கும் ஓசையும் , எழுத்தொடு புணர்ந்தே பொருளை அறிவுறுத்தாது இறிஞி மிறிஞி யென்றால் போல வரும் ஓசையும்" என எளிதில் ஓசைவகைகளை உணர்த்திவிடுகிறார். "செப்பும் வினாவும் வழா அல் ஓம்பல்" என்னும் நூற்பாவின் உரை கல்லாடனார் உரையின் தெளிவினை உணர்த்திவிடுகிறது.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதிய கல்லாடனார் பதினைந்தாம் நூற்றாண்டு. சிவபெருமானைப் பாடிய கல்லாடம் என்னும் நூலை இயற்றிய கல்லாடர் பதிமூன்றாம் நூற்றாண்டு எனக் கல்லாடர் பெயரில் தமிழுக்குத் தொண்டு செய்த புலமையுடையோரை அறியமுடிகிறது. கல்லாடனார், இளம்பூரணர் மற்றும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியே எழுதியுள்ளதனைக் காணமுடிகிறது. கல்லாடனாரின் உரை சிறந்த ஆய்வுரையாக அமைந்துள்ளதனைக் காணமுடிகிறது.

முன்னுரை

இலக்கியம் பயிர். இலக்கணம் வரப்பு. வரப்பு கட்டாவிட்டால் தண்ணீர் வழிந்தோடி விடும். அவ்வாறே இலக்கியத்தின் சுவையும் நிலைபெறாது ஓடிவிடும். இலக்கணக் கட்டுப்பாட்டால்தான் இலக்கியம் காலத்தை வென்று நிற்கிறது. தொல்காப்பியமானது தமிழ்மொழி இலக்கணத்திற்குரிய முதல் நூலாக மட்டுமின்றி முதன்மை நூலாகவும் அமைகிறது. அதன்வழிநின்றே பிற இலக்கணநூல்கள் தோன்றலாயின. ஆயினும் தொல்காப்பியத்தைக் காட்டிலும் சொல்லில் எளிமையும் பொருளில் அருமையுமாக அமையும் ஆற்றலுள்ள பிற இலக்கண நூல்கள் தோன்றவில்லை. இத்தகைய பெருமையினை ஒவ்வொரு உரையாசிரியரும் தம் உரையின்வழி உணர்த்திவிடுகின்றனர். அவ்வாறே கல்லாடனாரும் தொல்காப்பியத்தின் அருமையினை தம் உரையின்வழி வெளிப்படுத்துவதனைக் காணவிழைந்ததே இக்கட்டுரையாக ஆக்கம் பெற்றுள்ளது.

தொல்காப்பிய உரைகள்

உரையாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்களான நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் முழுமையாக உரை எழுதியிருப்பர் என்னும் கருத்துண்டு. ஆனால் அவை முழுமையாகக் கிடைக்காததால் சில இயல்களுக்கே உரைஎழுதியதாகக் கொள்ளமுடிகிறது. சேனாவரையரும், தெய்வச்சிலையாரும் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை செய்துள்ளனர். ஆனால் அவர்களும் முழுமையாக உரை செய்திருக்கக் கூடும் என்னும் கருத்தும் உண்டு. இளம்பூரணர் உரையே முழுமையாகக் கிடைத்திருக்கிறது. பழைய உரையாசிரியர் உரை ஒன்றும் உள்ளது. பேராசிரியர் உரை, பொருளதிகாரத்தில் பின் நான்கு இயல்களுக்கு மட்டுமே உரை செய்துள்ளார். பிற இயல்கள் கிடைத்தில. அதனால் இவற்றிற்கு மட்டுமே உரை எழுதியதாகக் கொள்ளமுடிகிறது. இக்கூற்றுக்களின்வழி, கிடைத்த இலக்கண நூல்களைவிட தொலைந்த இலக்கண நூல்களின் தொகை பெரிதெனத் தெளியமுடிகிறது.

கல்லாடனார் உரையும் மரபுரைக்கும்

தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களில் அழிந்துபோனவை எண்ணற்றவை. மிஞ்சி நின்றவையே தமிழ்மொழியின் கட்டமைப்பையும் தமிழர் வாழ்வின் கட்டமைப்பையும் விளக்கி நிற்கிறது. ஓலைச்சுவடியைப் படிஎடுத்து இத்தனை ஆண்டுகளாக இலக்கணத்தையும் இலக்கியத்தையும் போற்றிப் பாதுகாத்த தமிழர்ப் பெருமையினை உலகமே வியக்கும். தமிழரின் இப்பெருமையினை உலகத்தோர்க்கு அறிவுறுத்தும் வகையில் கல்லாடனார் உரையும் அமைகிறது.

கல்லாடனார் உரைச்சிறப்பு

இலக்கணப் புலமையும் சமூக உணர்வும், உளவியல் திறனும் உடையவரே உரையாசிரியராவர். கல்லாடனார் உரையானது, அவருடைய இலக்கணப் புலமையினையும் தொல்காப்பியத்தில்கொண்ட ஈடுபாட்டினையும் புலப்படுத்திவிடுகிறது. எனவே, அவர் தொல்காப்பிய முழுமைக்கும் எழுதியிருக்கவேண்டும் எனக் கூறப்படுகிறது. அவற்றை இயற்கைச் சீற்றத்தாலோ, செயற்கைச் சீற்றத்தாலோ இழந்திருக்கக்கூடும். அவர் உரைஎழுதிய எழுத்திகாரம் கிடைக்கவில்லை. பொருளதிகாரமும் கிடைக்கவில்லை. சொல்லதிகாரத்தில் இடையியலில் பதிமூன்றாம் நூற்பாவரை மட்டுமே கிடைத்துள்ளது. மேலும் உரியியல் , எச்சவியலும் கிடைக்கவில்லை எனக் கூறுவர். அவர் எழுதிய ஏழு இயல்களின் உரையினைக்கொண்டே கல்லாடனாரின் உரைத்தன்மையினை மதிப்பிடமுடிகிறது. நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர் மூவரையும் நன்று கற்று உரைசெய்தவர் கல்லாடனார் என்பதனை,

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்திற்கு
உரையிடை யிட்ட விரகர் கல்லார் (ப.15)

என்னும் தொடர் புலப்படுத்திவிடுகிறது. கற்றுத்தேர்ந்த கல்லார் இவர் ஒருவரே என்பதனையும் இப்பாடல் உணர்த்திநிற்கிறது.

கல்லாடனார் ஒருவரல்ல

தமிழர்கள் மிஞ்சிய இலக்கண, இலக்கியச் சொத்துக்களை உடையவர்களானதால் அவற்றின் பெருமையினை உணரவில்லை. போற்றிப்பாதுகாக்காது தவறவிட்டுவிட்டனர் என்பதனை அறியமுடிகிறது. கிடைக்காத அந்நூல்களில் சிலவற்றின் பெயரினையேனும் கிடைத்த இவ்வுரைக்குறிப்புகள் உணர்த்திநிற்கின்றன.

கல்லாடனார் என்னும் பெயர் சிவபெருமானையே குறிக்கும். பாண்டிய நாட்டில் 'கல்லாடம்' என்னும் ஊரில் எழுந்தருளிய சிவபெருமானை 'கல்லாடர்' எனக் குறிப்பிட்டுள்ள வழக்கத்தை அறியமுடிகிறது.

அப்பெயரினைக்கொண்ட கல்லாடர், மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரில் நூறு துறைகளுக்கு நூறு பாடல் எனத் தேர்வு செய்து உரை செய்துள்ளதனைக் காணமுடிகிறது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் இந்நூலை வெளியிட்டபொழுது சிவபெருமானே நூறு முறை தலையாட்டி மகிழ்ந்ததாகக் குறிப்பிடுவர். இதன்வழி இந்நூலின் அருமையினை உணரமுடிகிறது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய கடைச்சங்க கல்லாடர் இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர். பதினோராம் திருமுறையில் 'திருக்கண்ணப்ப தேவர் திருமறம்" என்னும் நூலை எழுதிய கல்லாடர் ஒன்பதாம் நூற்றாண்டு. தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதிய கல்லாடனார் பதினைந்தாம் நூற்றாண்டு. சிவபெருமானைப் பாடிய கல்லாடம் என்னும் நூலை இயற்றிய கல்லாடர் பதிமூன்றாம் நூற்றாண்டு. இவ்வாறு கல்லாடர் என்னும் பெயரில் தமிழுக்குத் தொண்டு செய்த புலமையுடையோர் பலரைக் காணமுடிகிறது.

சொல்லதிகார விளக்கம்

எழுத்தைவிட சொல்லே முதன்மையானது. ஏனெனில் சொல்லானது, எழுத்துக்கு முன்னதாகத் தோன்றியது. சொல் தோன்றிய பிறகே எழுத்து தோன்றியிருக்கவேண்டும். எனவே சொல்லதிகாரமே முதன்மையானது எனக் கூறுவதும் உண்டு. சொல்லானது காலத்திற்கேற்ப புதுப்புதுச் சொற்களை உருவாக்கிக் கொள்கிறது. ஆனால், எழுத்துக்கள் அவ்வாறு புதுப்பிக்கப்படுவதில்லை எனவே சொல்லே உயர்ந்ததென்று கூறுவதனையும் காணமுடிகிறது.

சொல்லதிகாரம் என்னும் அதிகாரப் பெயரே காரணப்பெயராவதனை முதலில் எடுத்துக்காட்டுகிறார். அவ்வாறே அதிகாரம் என்பது 'முறைமை' என்னும் பொருளினை உடையதனை எடுத்துக்காட்டி இலக்கண வரம்பின் நிலையினை எடுத்துரைக்கிறார். சொல்லை முறைமைப்படுத்தி உணர்த்துவதால் 'சொல்லதிகாரம்' எனப் பெயரிடப்பட்டதனை தம் உரையின் வழிஉணர்த்துகிறார் கல்லாடனார்.

சொல்லதிகாரத்திற்கு முதன்மைக் கொடுக்கும் பொருட்டு இக்கூற்றுக்கள் அமைகின்றன. எனினும், எழுத்தின்றி சொற்களை அறிதல் இயலாதென்பதனையும் உணர்த்தும்வகையிலேயே தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தை முன்வைத்தார் என்பதனை உணர்ந்துகொள்ளமுடிகிறது.

சொல்லும் பொருள் விளக்கமும்

சொல் தன்னை உணர்த்தும்தன்மை போன்றே பொருளையும் உணர்த்துதல் வேண்டும். இரண்டும் சீராக அமைந்தாலன்றி ஒன்றின் சிறப்பு மேலாகவும் மற்றொன்று தாழ்வாகவும் அமையும் என எண்ணியே தொல்காப்பியர் முறையாக வகைப்படுத்தியுள்ளதனை எடுத்துக்காட்டுகிறார் கல்லாடனார்.

"ஆசிரியர் முன்னைய நூற்பாவில் பெறப்பட்ட கருத்தினையே வலியுறுத்தி சொற்கள் பொருளையும் தன்னையும் உணர்த்துமாற்றை ஒருங்கு ஓதினார்" (ப.304) என சுந்தரமூர்த்தி தம் குறிப்புரையில் கூறுவதும் கல்லாடனாரின் உரைச்சிறப்பை உணர்த்துகிறது.

சிவணுதல் என்னும் சொல்

'சிவணுதல்' என்பது 'கூடுதல்' என்னும் பொருளையுடையது. எனவே, உரையாசிரியர்கள் அனைவரும் 'கூடி' என்னும் பொருளிலேயே விளக்கம் தருகின்றனர். கல்லாடனார் 'கூட' என்னும் பொருள்படக் கூறியுள்ளார். 'சிவண' எனக் குறிப்பிடப்படுவதனைக் காணமுடிகிறது. முன்னரே இச்சொல்வழக்கு இருந்ததனை சுந்தரமூர்த்தி குறிப்பிடுகிறார் (ப.251)

திணையொடு பழகிய பெயர்கள்

திணையென்பது ஒழுக்கமென்றும், ஒவ்வொரு நிலத்தில் வாழ்வோரும் அந்நிலத்திற்குரிய ஒழுக்கத்தோடு வாழ்வர் என்பதனையும் இலக்கணம் உணர்த்துகிறது. இதனை, குறிஞ்சித்திணை, முல்லைத் திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை என வகைப்படுத்தியுள்ளதன்வழித் தெளியமுடிகிறது. அவ்வாறே ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய மக்கள் பெயரும் குறிப்பிடப்படுகிறது. அதனை

"பிறபிற நிலத்து மக்கட் பெயர்களும் அவ்வத் திணைக்கே உரியவாயிருத்தலின் இவையெல்லாம் 'திணையொடு பழகிய பெயர்கள்' எனப்பட்டன' (ப. 308) என்னும் கூற்று தெளிவுபடுத்துகிறது. அவ்வாறு இலக்கண அடிப்படையில்நின்று இலக்கியம் செய்வித்த புலவர்களின் பெருமையினையும் தெள்ளிதின் உணரமுடிகிறது.

'ன' கர ஒற்று ஆண்பாலாகும்

ஈற்றெழுத்தைக்கொண்டே ஆண்பால் பெண்பால் என வகைப்படுத்தமுடியும். பிறவெல்லாம் பொதுவாகவே அமையும். தமிழ்ப்பண்பாட்டு முறைமையில் மட்டுமின்றி மொழி அமைப்பிலும் பெண்மைக்குரிய உரிமையினை அளித்துள்ளதனை இதன்வழி உணரமுடிகிறது. இதனைக் கல்லாடனார். உண்டாள், உண்டார் என்னும் சொற்களில் உள்ள ஈற்றெழுத்தே பெண்பாலையும் பலர் பாலையும் உணர்த்துகிறது எனத் தெளிவுறுத்துகிறார். இதனை

னகர வொற்றினையே விதந்து 'னஃகான் ஒற்றே ஆடூஉ அறி சொல்' (ப.253) என எளிமையாக விளக்கிவிடுகிறார்.

தமிழின் சிறப்பே தகுதி வழக்கு

ஒரு சொல்லைக் கூறுவதினும் மற்றொரு சொல்லைக் கூறுதல் நன்றெனின் அச்சொல்லையே பயன்படுத்தவேண்டும். 'வெல்லுஞ்சொல்' எனத் திருவள்ளுவர் கூறுவதனை இலக்கணத்தில் காணமுடிகிறது. அதுவே, தகுதி வழக்கு.

மங்கலம், இடக்கரடக்கல், குறிநிலைவழக்கு என்னும் மூன்றும் பொருள்விளக்கும் சொல்லாக இருப்பினும் பெரியோர்முன் கூறுதல் தகுதியன்று என மாற்றுச்சொல்லால் கூறுதலாகும்.

"*அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்*" *(எச்சவியல்:442)*

என்னும் நூற்பாவின் விளக்கமாகவே தகுதிவழக்கு அமைகிறது. மங்கலம் என்பது "மங்கலமல்லாத சொல்லை விடுத்து மங்கலம்முடிய சொற்களைக் கூறுவதாம். (செத்தார் எனக் கூறாமல் சிவனடி சேர்ந்தார்). இடக்கரடக்கல் என்பது இழிந்தசொல்லென எண்ணி வேறொரு சொல் கூறுதல். (கழிவறைக்குச் செல்வதனை ஒப்பனை அறைக்குச் சென்றுவிட்டு வருவதாக் கூறுவது). குழுவின் வந்த குறி நிலையாவது ஒரு குழுவினர் அவர்களுக்கு மட்டுமே புரியும்வகையில் பேசிக்கொள்வது. (பெரிய தலைக்கட்டு) இவர்முடிவே முடிவாகும் என்னும் பொருளைக்கூறுவது. (ப.260). இவ்வாறு சொற்களைப் பண்புடைய சொற்களாகக் கூறும் வழக்கிருந்ததனை தொல்காப்பியரின்வழி உணர்த்துகிறார் கல்லாடனார்.

இலக்கணத்தோடு பொருந்தா இலக்கணப்போலி

இலக்கண முறைப்படி கூறுவது இலக்கண வழக்கு எனக் குறிப்பிடப்படுகிறது. அவ்வழக்கத்தினின்று மாறுபடினும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதுவே, இலக்கணத்தோடு பொருந்தாத மரூஉ (ப.261) எனக் குறிப்பிடப்படுகிறது. இதனையே இலக்கணப்போலி எனவும் உணர்த்தப்படுகிறது. 'இல் முன்' என்பது 'முன்றில்' என வருவதனையும் 'இல் வாய்' என்பது 'வாயில்' என வருவதனையும் காணமுடிகிறது.

இடும் பெயரே இயற்பெயர்

குழந்தை பிறந்தவுடன் காரணமின்றி இடும் பெயர் இயற்பெயராகிறது. பின்னாளில் அப்பெயருக்குரிய தன்மையுடன் அக்குழந்தை வளரவேண்டும் என்னும் விழைவினாலேயே அவ்வாறு பெயரிடுவதனைக் காணமுடிகிறது. அஃறிணை உயிர்களுக்கு தம் விருப்பப்படி பெயரிடுவதே விரவுப்பெயராகும். இதனால், உயர் திணை அஃறிணை என வரையறுக்க இயலாத நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. "பறவை முதலியவற்றிற்குத் தத்தம் விருப்பம்போல் இட்டு வழங்கும் பெயர்கள் விரவுப்பெயராம்" (ப.272) என்னும் கூற்று விரவுப்பெயராகும் முறையினை விளக்கியுரைக்கிறது.

திணை வழு

உயர்திணைக்கு அஃறிணை முடிவாதலும், அஃறிணைக்கு உயர்திணை முடிவாதலும் திணைவழுவாகும். இதனை மிக எளிமையாக எடுத்துக்காட்டுகிறார். மூக்கு, கொப்பூழ் என்னும் சினைப்பெயர்கள் அதனை மட்டும் குறிப்பிடும்பொழுது அஃறிணையாகவும் உயர்திணைப் பெயரோடு குறிப்பிடும்பொழுது உயர்திணையாகவும் குறிப்பிடப்படுகிறது.

'மூ'க்கு நல்லது'' என அஃறிணையில் முடிவதனையும் 'மூக்கு நல்லாள்'' என உயர்திணையில் முடிவதனையும் (ப.283) எடுத்துக்காட்டித் தெளிவுறுத்துகிறார் கல்லாடனார்.

தடுமாறு தொழிற்பெயர்

ஒரு தொழிற்பெயர்த்தொடரில் பொருள் மயக்கம் ஏற்படுமாயின் அதனைத் தடுமாறு தொழிற்பெயர் எனக் குறிப்பிடுவர். "புலியைக் கொன்ற யானை என இரண்டனுருபை வைத்து விரிப்புழி புலி செயப்படுபொருளாய், யானை வினைமுதலாய் நிற்கும். புலியாற் கொல்லப்பட்ட யானை என மூன்றனுருபை வைத்து விரிப்புழிப் புலி வினைமுதலாய், யானை செயப்படு பொருளாய் நிற்கும்" (ப. 293) என்னும் உரை மிகத்தெள்ளிதின் தடுமாறுதொழிற்பெயரை உணர்த்திவிடுவதனைக் காணமுடிகிறது. "புலியைக் கொன்ற யானை, புலியால் கொல்லப்பட்ட யானை" எனப் பொருள் தடுமாறும் இடத்தினை மிக எளிதாக விளக்கிவிடுகிறார் கல்லாடனார்.

நான்கு வகை ஓசை

முறைப்படுத்தப்படாத ஓசை, முறைப்படுத்தப்பட்ட ஓசை என்பனவே சொல் அல்லாமலும், சொல்லாகவும், பொருள்தருவதனைத் தொல்காப்பியர் வழிநின்று விளக்குகிறார் கல்லாடனார்.

"எழுத்தல்லோசையும், எழுத்தொடு புணராது பொருள் அறிவிக்கும் ஓசையும் , எழுத்தொடு புணர்ந்தே பொருளை அறிவுறுத்தாது இறிஞி மிறிஞி யென்றால் போல வரும் ஓசையும்" (ப.25)

என எளிதில் ஓசைவகைகளை உணர்த்திவிடுகிறார். தொல்காப்பியரின் வரையறைகளைச் சீராக விளக்கும் வகையில் கல்லாடனார் உரை அமைந்துள்ளதனைக் காணமுடிகிறது.

செப்பும் வினாவும்

"செப்பும் வினாவும் வழா அல் ஓம்பல்" என்னும் நூற்பாவிற்குரியஉரை கல்லாடனாரின் உரைத்திறனை உணர்த்திவிடுகிறது. 'செப்புதல்' என்பது விடை கூறுதல். 'வினாதல்' என்பது வினா தொடுத்தல். இவை முறையாக அமைதல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். இந்நூற்பாவிற்கு உரை எழுதும் கல்லாடனார், உடன்படுதல், மறுத்தல் என்னும் இரு பொருளில் செப்புதல் அமையவேண்டும் என்கிறார். மேலும்

"நுந் நாடியாது என்றார்க்குப் பாண்டிநாடு என்றார் போல்வன. இவ்விரண்டனுள் அடங்காதெனினும் ஒருவகையான் அடக்கிக்கொள்ளப்படும்" (ப.13)

எனத் தெளிவுறுத்துகிறார். இதன்வழி முறையாக விடையிறுத்தலையும் முறையாக விடை உணர்தலையும் புலப்படுத்திவிடுகிறார்.

வேற்றுமை நிற்கும் இடம்

வேற்றுமை உருபுகள் சொல்லின் இறுதியில் நிற்கும். ஒவ்வொரு சொல்லின் ஈற்றிலும் வேற்றுமை நின்று தொடரின் பொருளைத் தெளிவாக்குகிறது. 'மரம் வளர்த்தான்' என்பதனைக் காட்டிலும் 'மரத்தை வளர்த்தான்' என்னும் தொடர் சிறப்புடையதாவதனை உணரமுடிகிறது.

இச்சொற்களில் இரண்டாம் வேற்றுமை உருபு ஈற்று நின்று விளக்குவதனை

வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை
ஈற்றுநின் றியலும்தொகைவயிற் பிரிந்தே (வேற்றுமையியல் -84)

என்னும் நூற்பா விளக்கிவிடுகிறது. இதனை

"வேற்றுமைச் சொல்லினது பொருளை விரித்துணர்த்துங்காலத்து, அவ்வேற்றுமைப் பொருள்கள் பெயரது ஈற்றின் கண்ணே நின்று நடக்கும்" (ப.102) எனத் தெளிவுறுத்துகிறார் கல்லாடனார். (உயிர்மெய் எழுத்தில்) மெய் முதலிலும் (சொல்லில்) வேற்றுமை இறுதியிலும் நிற்கவேண்டும் என இலக்கியமுறையாலும் நோக்கமுடிகிறது.

வேற்றுமையைப் போற்றல்

இலக்கணத்தில் வேற்றுமையைப் போற்றுவதன்வழி தொடர்கள் தெளிவடைகின்றன. எனவே, வேற்றுமைகளுடன் இயற்றல் வேண்டும் என்பதனை

வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்'' (வேற்றுமை மயங்கியல் -112) ப. 123

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் உணர்த்திவிடுகிறார். ஆகுபெயரிலும் வேற்றுமை அவ்வாறே அமைதல் வேண்டும் என்பதனை,

"அவ்வாகுபெயர்களை ஐ முதலிய ஆறு வேற்றுமைப் பொருண்மையிடத்தினும் இயைபுடைமையைப் பாதுகாத்து அறியல் வேண்டும்" (ப.124) எனத் தெளிவுறுத்துகிறார் கல்லாடனார். 'தொல்காப்பியம் என்பது தொல்காப்பியனால் செய்யப்பட்டதென மூன்றாவதன் பொருண்மைத்து' என எடுத்துக்காட்டியுள்ளதனையும் காணமுடிகிறது.

விளி வேற்றுமை

'விளித்தல்' என்பது பெயரினைக் கொண்டே விளிப்பதாகும். எனவே, இதனை 'வேறோர் வேற்றுமையாகக் கொள்ளுதல் வேண்டாம் என்னும் கருத்து இருப்பினும் இதனை எட்டாம் வேற்றுமையாகக் கொண்டார் (ப.301) என்பதனை உணரமுடிகிறது. விளிகொள்ளாத பெயர்களை "தான் என்னும் 'ஆன்' ஈற்றுப்பெயரும் சுட்டெழுத்தை முதலாகவுடைய அன் ஈற்றுப்பெயர்களும், யான் என்னும் ஆன் ஈற்றுப்பெயரும், வினாப்பொருண்மை உணர்த்தும் அன் ஈற்றுப் பெயரும் அவ்வனைத்துப் பெயரும் மேற்கூறியவாற்றான் ஆயினும் பிறவாற்றான் ஆயினும் விளிகோடல் இல"(303) எனத் தெளிவாக உரை எழுதியுள்ளதனைக் காணமுடிகிறது. இதன்வழி முன்னோர் மரபினைப் போற்றும்வகையில் இலக்கணம் அமைத்துள்ள திறத்தினை எடுத்துரைக்கிறார் கல்லாடனார்.

ஈற்றயல் நீளும் விளிச்சொற்கள்

விளி ஏற்கும் இடங்களைப் பற்றிக் கூறும் தொல்காப்பியர் 'ல' கார 'ள' கார ஈற்றுப்பெயர்கள் விளி ஏற்கும் முறையின் தனித்தன்மையினை எடுத்துக்காட்டுகிறார்.

எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே
நின்ற ஈற்றயல் நீட்டம் வேண்டும் (ப.136)

என்னும் நூற்பாவின்வழித் தெளிவுறுத்துகிறார்.

'ல' கார 'ள' காரம் என எஞ்சிய இரண்டெழுத்தினையும் இறுதியாகவுடைய பெயர்கள் ஈற்றினின்ற எழுத்திற்கு அயலெழுத்து நீண்டு விளியேற்றல் வேண்டும்" (ப.136)

எனத் தெளிவுறுத்துகிறார் கல்லாடனார். 'மக்கள் - மக்காள்' என விளியேற்பதனை உணர்த்திவிடுகிறார்.

சொற்கள் இரண்டே

தாமாகத் தோன்றும் சொற்கள் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமே என்பதனால் சொற்கள் இரண்டு எனக் குறிப்பிட்ட முன்னோர்களின் பெருமையினை சூத்திரமாக்கினார் தொல்காப்பியர்.

சொல்லெனப்படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே (ப.142)

எனத் தெளிவுறுத்துகிறார். இடைச்சொல்லாகிய சொல்லும் உரிச் சொல்லாகிய சொல்லும் பெயர்வினைகட்கு இடமாகிய இடத்தே தோன்றும். தாமாகத் தோன்றா (ப.161) எனத் தெளிவுறுத்துகிறார் கல்லாடனார்.

'எல்லாம்' என்னும் சொல் வழக்கு

'அனைத்தும்' என்னும் சொல்வழக்கு 'எல்லாம்' என்னும் சொல்வழக்குக்கு மாற்றாக எழுத்து நடையில் இடம்பெற்றுவருவதனைக் காணமுடிகிறது. 'எல்லாம்' என்னும் சொல்வழக்கு உயர்திணை, அஃறிணை பன்மைக்குப் பொதுவாக அமைவதனை,

எல்லாம் என்னும் பெயர் நிலைக் கிளவி
பல்வழி நுதலிய நிலைத்தாகும்மே (ப.159)

என்னும் நூற்பா எடுத்துரைக்கிறது. "எல்லாம் என்று சொல்லப்படும் பெயராகிய நிலைமையையுடைய சொல் இருதிணைப் பன்மையிடத்தையும் கருதிய நிலைமைத்தாகும்" (ப.159) எனத் தெளிவுறுத்துகிறார் கல்லாடனார். 'எல்லாம் வந்தார்', 'எல்லாம் வந்தன' என்னும் எடுத்துக்காட்டுகளுடன் இரு திணைக்கும் உரித்தாகும் நிலையினையும் எடுத்துக்காட்டுகிறார்.

பெண் மகன் என்னும் வழக்கு

மகளையும் மகனைப் போலவே சுட்டும் வழக்கம் இருந்துள்ள சமுதாயத்தினை எடுத்துக்காட்டுகிறார் தொல்காப்பியர். பெண்மகள் எனக் கூறாது பெண்மகன் எனக்கூறும் வழக்கினை

மகடூஉ மருங்கில் பால் திரி கிளவி
மகடூஉ இயற்கை தொழில்வயி னான (ப.163)

என்னும் நூற்பாவின் வழிவெளிப்படுத்தியுள்ளார்.

"இதுவும் ஓர் மரபு வழுவமைதி எனக் கொள்க. இதுவும் அந்நீர்மைத்தாகலின் ஈண்டுப் போந்தது எனக் கொள்க" (ப. 163) எனக் கல்லாடனார் தெளிவுபடுத்தியுள்ளார். "தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" (திருக்குறள் - 69) என்னும் திருக்குறளின் மயக்கத்தைத் தீர்ப்பதாகவும் இந்நூற்பா அமைகிறது. மகனை என்பது மகளுக்கும் பொருந்தும் என்பதனை இதன்வழி உணரமுடிகிறது.

வினைமுடிந்ததெனும் பொருள் உணர்த்தல்

வினைமுற்றின் தன்மையினை உணர்த்தும் தொல்காப்பியர் வினையெச்சத் தொடர் அமையும் முறைகுறித்து விளக்குகிறார். வினையெச்சங்கள் அடுக்கி வரும்பொழுது ஒரு முற்றினைக் கொண்டே முடியும். பிற வினையெச்சங்கள் அனைத்தும் செயல் முடிந்த நிலையினை உணர்த்தி நிற்கும் என்பதனை

பன்முறை யானும் வினையெஞ்சு கிளவி
சொன்முறை முடியா தடுக்குந வரினும்
முன்னது முடிய முடியுமன் பொருளே (ப.199)

என்னும் நூற்பாவால் உணர்த்துகிறார் தொல்காப்பியர் . இதற்கு உரை கூறிய கல்லாடனார் "ஒரு சொல்லொடு ஒரு சொல்லாய் முறைமுடியாதே பலவாயடுக்கி வரினும், முன்னின்ற எச்சம் முடியவே அல்லாதனவும் பொருள் முடிந்தனவாம்" (ப.200) எனத் தெளிவுறுத்தி, "உழுது உண்டு தின்று ஓடிப் பாடி வந்தான்" என்னும் தொடரினையும் எடுத்துக்காட்டுகிறார்.

விரைவுப் பொருளில் காலமயக்கம்

விரைவினை உணர்த்தும்பொழுது நடவாத செயலை நடைபெற்றதாகக் கூறும் வழக்கினை எடுத்துரைக்கிறார் தொல்காப்பியர். அலுவலகத்திற்குப் புறப்படுபவன் வீட்டில் இருந்துகொண்டே 'இதோ வந்துவிட்டேன்' எனக் கூறும் வழக்கத்தினைக் காணமுடிகிறது.

வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்தகாலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர் (ப.209)

என்னும் நூற்பா இவ்வழக்கினை உணர்த்துகிறது. "உண்ணா நின்றேன், போதுவல் என்னாது 'உண்டேன், போந்தேன்' என்னும் இவை அமைதற்குக் காரணம். செய்யாததனைச் செய்ததாக்கித் தன் விரைவு தோன்றக்கூறும் கருத்தினன் ஆதலின் என்பது. இதுவும் சொல்லொடு சொல் மயக்கம்" (ப. 209) எனக் கல்லாடனார் தெளிவுபடுத்துகிறார்.

இடைச்சொல்லின் இடங்கள்

இடைச்சொற்கள் நிற்கும் இடங்களைச் சிறப்பாகத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளதனை

அவைதாம்,
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை எல்லாம் உரிய என்ப (இடையியல் - 253) ப. 218

என்னும் நூற்பாவை எடுத்துக்காட்டி விளக்குகிறார். "மேல் வகுக்கப்பட்டவைதாம் முன்னிடத்தும் பின்னிடத்தும் பெயர்வினையாகிய மொழிகளை அடைந்துவருதலும் அச்சொற்கள் தம்மீறு ஒருவழி எழுத்து வேறுபட்டு வருதலும் மற்றோர் இடைச்சொல் தான் நிற்குமிடத்தே நிற்றலுமாகிய அத்தன்மையுடைய இலக்கணம் எல்லாவற்றிற்கும் இலக்கணமாதற்குரிய" (ப.218) என விளக்குகிறார் கல்லாடனார். இடைச்சொற்களாலேயே தொடர்கள் சிறப்புடையதாவதனை உணர்த்திவிடுகிறார். இடைச்சொற்களின்றேல் பொருளுணர்தல் கடினமாகும். பிறழ உணர்தல் மிகுதியாகும் எனத் தெளிவுறுத்துகிறார்.

இடைக்கிடைப்பு

இடையில் நிற்கும் சொற்களையே இடைபிறவரல் என்னும் சொல்லால் எடுத்துக்காட்டுகிறார் கல்லாடனார்.

தத்தம் எச்சமொடு சிவணுங் குறிப்பின்
எச்சொல்லாயினும் இடைநிலை வரையார் (தொல்.-239,)

என்னும் நூற்பாவின்வழி, எச்சச் சொற்களுக்கும் அவற்றைக் கொண்டுமுடியும் பெயர் வினைகளுக்கும் இடையே பொருந்தும் பிற சொற்கள் வருதலும் உள. இவ்வாறு இடையில் பிற வருவதனை 'இடைக்கிடைப்பு' (ப. 315) எனக் குறிப்பிட்டுள்ளார் கல்லாடனார் எனக் குறிப்புரையில் சுந்தரமூர்த்தி குறிப்பிடுகிறார்.

அசைநிலை இசைக்காக

'அசைநிலை' என்னும் வழக்கு செய்யுளின் இசையை நிறைவிக்கும் பொருட்டு அமையும். கற்பதற்கேற்ற வகையில் அசைநிலைகொண்டு இலக்கியம் படைத்த முன்னோர் புலமையைத் தொல்காப்பியர் எடுத்துக்காட்டுகிறார்.

'அது கொண்கன் தேரே' என்பதனைவிட 'அதுமன் கொண்கன் தேரே' என 'மன்' என்னும் அசைச்சொல்லுடன் கூறுவது சிறப்புடையதாகிறது. இடைநிலைகளில் ஒன்றான அசைநிலையை இடையியலில் இறுதியாக விளக்கிச்சொல்கிறார் தொல்காப்பியர்.

"பொருள் உணர்த்துவனவாய தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவற்றை இறுதியாகவும் பொருள் உணர்த்தாத அசை நிலை, இசை நிறைகளை முன்னும் கூறியதற்கு உரிய காரணத்தை இந்நூற்பா உரையில் இறுதியாக ஆராய்கின்றார் இவ்வுரையாசிரியர். இந்நுண்மை பிறர் உரைகளில் காணப்படாததாகும்" (ப.317) எனக் கல்லாடனார் உரையினைப் போற்றும் சுந்தரமூர்த்தியின் கருத்து இங்கு எண்ணத்தக்கது.

கல்லாடனார் உரையின் இயல்பு

இலக்கணத்திற்கு உரை எழுதுவது மிகவும் நுண்மையானது. அரிதான பொருளையும் எளிதாகச் சொல்லும் கலை உரையாசிரியர்களுக்கே உரியது. அவ்வகையில் மிகவும் எளிதாகவும் பொறுப்புணர்வுடனும் கல்லாடனார் உரைஎழுதிச் செல்கிறார். நாற்பது இடங்களில் போலும் (ப.20) என்றும் பல இடங்களில் "இரண்டனுள் நல்லது தெரிந்து உரைக்க" (ப. 21) எனக் கூறியுள்ளதன்வழி முன்னோர் மரபினைப் போற்றியும் இக்காலத்திற்கேற்ற வகையில் எளிமைப்படுத்தியும் கூறியுள்ளதனைக் காணமுடிகிறது.

நிறைவாக

- தொல்காப்பியம் என்னும் இலக்கண வரையறையை விஞ்சிநிற்கும் அளவிற்கு முன்னும்பின்னும் ஓர் இலக்கண நூல் கிடைக்காததே அவ்விலக்கண நூலின் அருமையினை உணர்த்திநிற்கிறது.
- இக்காலத்து அறிஞர்கள் திருக்குறளுக்கு உரை எழுதுவதைப் போலவே முன்னைய காலத்தில் தொல்காப்பியத்திற்கு உரை எழுதினர். அவை அனைத்தும் கிடைத்தில. கிடைத்தனவற்றைக் கொண்டே இன்று உரையினை அறிந்துகொள்ளமுடிகிறது.
- கல்லாடனார், இளம்பூரணர் மற்றும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியே எழுதியுள்ளதனைக் காணமுடிகிறது. கல்லாடனாரின் உரை சிறந்த ஆய்வுரையாக அமைந்துள்ளதனைக் காணமுடிகிறது. ஒவ்வொரு நூற்பாவையும் ஆய்ந்து விளக்கியுள்ளதன்வழி அவர் புலமையினை உணரமுடிகிறது.
- கல்லாடனாரின் உரை இடையியலோடு நின்றுபோகிறது. இலக்கணத்தை விரித்துரைக்கும் பொழுது பிறமொழியாளரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் விளக்கமளித்தல் வேண்டும் என்னும் எண்ணத்துடன் பொருள் கூறியுள்ள திறத்தை உணரமுடிகிறது.
- தொல்காப்பியத்தின் முழுமைக்கும் கல்லாடனாரின் உரை கிடைத்திருப்பின் மேலும் தொல்காப்பியத்தின் அருமையினை உணர்ந்துகொண்டு தமிழ்மொழிவளத்தினை அறியஇயலும் எனத் தெளியமுடிகிறது.

துணைசெய்த நூல்

1. கல்லாடனார் விருத்தியுரை, சுந்தரமூர்த்தி.கு, விளக்கவுரை, தொல்காப்பியம் சொல்லதிகாரம், கழகவெளியீடு, 1964

தொ.மா.க. 211

வ.உ. சிதம்பரம் பிள்ளை வெளியிட்ட தொல். பொருள். (அகத். புறத். இயல்கள்) இளம்பூரணர் உரையின் பதிப்பாண்டு எது?

முனைவர் ஆ. மணி
துணைப்பேராசிரியர் - தமிழ்,
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி,
புதுச்சேரி - 605 003,
manikurunthogai@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரையின் அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரு இயல்கள் மட்டும் கொண்ட பதிப்பு ஒன்று வ.உ. சிதம்பரம் பிள்ளையால் வெளியிடப்பட்டுள்ளது. அப்பதிப்பு பற்றிய அறிஞர் பெருமக்களின் கருத்துரைக்களை எடுத்துரைத்து, வ.உ.சி. யால் பதிப்பாண்டு குறிக்கப்படாத அப்பதிப்பு எந்த ஆண்டிலில் வெளிவந்தது என்பதைக் கண்டறிந்து விளக்குவது இவ்வுரையின் களமும் தளமும் ஆகும். இம்முயற்சிக்குத் தொல்காப்பியப் பதிப்புக்களும், அவை பற்றிய ஆய்வுகளும் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் இன்றியமையாத கருத்துக்கள் சில எம்முடைய பருந்துப் பார்வையில் உரை ஆய்வுகள் (அறியப்படாத அரிய தரவுகளுடன்) என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன என்பது நினையத்தக்கது. அந்நூற் கருத்துக்களின் விரிவாக்கமே இக்கட்டுரையாகும்.

உரைக்களம்

தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரையின் அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரு இயல்கள் மட்டும் கொண்ட பதிப்பு ஒன்று வ.உ. சிதம்பரம் பிள்ளையால் வெளியிடப்பட்டுள்ளது. அப்பதிப்பு பற்றிய அறிஞர் பெருமக்களின் கருத்துரைக்களை எடுத்துரைத்து, வ.உ.சி. யால் பதிப்பாண்டு குறிக்கப்படாத அப்பதிப்பு எந்த ஆண்டிலில் வெளிவந்தது என்பதைக் கண்டறிந்து விளக்குவது இவ்வுரையின் களமும் தளமும் ஆகும். இம்முயற்சிக்குத் தொல்காப்பியப் பதிப்புக்களும், அவை பற்றிய ஆய்வுகளும் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் இன்றியமையாத கருத்துக்கள் சில எம்முடைய பருந்துப் பார்வையில் உரை ஆய்வுகள் (அறியப்படாத அரிய தரவுகளுடன்) என்னும் நூலில் இடம்பெற்றுள்ளன என்பது நினையத்தக்கது. அந்நூற் கருத்துக்களின் விரிவாக்கமே இக்கட்டுரையாகும்.

வ.உ.சி. யின் தொல். பொருள். இளம்பூரணம் வெளியான ஆண்டு எது?

வ.உ.சி. வெளியிட்ட தொல். பொருள். அகத். & புறத். இயல்களுக்கான இளம்பூரணர் உரைப் பகுதியின் பதிப்பாண்டினை அறிய முயலும்போது பின்வரும் குறிப்புக்கள் காணக் கிடைக்கின்றன.

மு. இராகவையங்கார் குறிப்பு

இலங்கையைச் சேர்ந்த கு. ஸ்ரீகாந்தன் என்பவர் தொல்காப்பியப் பொருளதிகாரக் கட்டுரைப்போட்டி ஒன்றை நடத்தினார். அக்கட்டுரைப்போட்டிக்கென மு. இராகவையங்காரால் எழுதப்பட்ட நூல் பொருளதிகார ஆராய்ச்சி என்னும் நூல். அந்நூல் எழுதப்பட்ட பத்தாண்டுகளுக்குப் பின்னரே அச்சிடப்பட்டது என்பதை "இவ்வியாசத்தை நான் எழுதி முடித்து ஏறக்குறைய பத்து வருஷங்களாகியும், இதுவரை அச்சிடாமல் தாழ்க்கும்படி நேர்ந்தது என் துரதிஷ்டமே" (மு. இராகவையங்கார் 1960: IV) என மு. இராகவையங்கார் எழுதியுள்ள முதற்பதிப்பின் முகவுரை நமக்கு உணர்த்துகின்றது. மேலும், முன்னர்த் தரப்பட்டுள்ள கு. ஸ்ரீகாந்தன் அவர்களின் 20.08.1912ஆம் நாளிட்ட கடிதப்பகுதியும்; அவர் எழுதிய 14.01.1922 ஆம் நாளிட்ட ஆங்கில முன்னுரைப் பகுதியும் இதனை உறுதிப்படுத்துகின்றன. மேற்கருத்துக்களின்படி 1912 இலேயே எழுதி முடிக்கப்பட்ட அக்கட்டுரையில், "தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கு இளம்பூரணவடிகள் எழுதிய உரையுள் அகத்திணை புறத்திணைப் பகுதிகள் மட்டும் இப்போது வெளிவந்துள்ளன வாதலால், அப்பகுதிகளிற் கண்ட விசேடங்களையும் கீழ்க்குறிப்பிற் காட்டியிருக்கிறேன்" என்பது மு. இராகவையங்கார் (1960: IV) குறிப்பு. இந்த முதற்பதிப்பின் முகவுரை 20.01.1922இல் எழுதப்பட்டதாகும். இதன் மூலம், தொல். பொருள். அகத். புறத். இளம். உரை 1922 சனவரிக்கு முன்னரே வெளிவந்துள்ள உண்மை புலனாகும். ஆயினும், இது எவர் பதிப்பு என்பது அவண் குறிக்கப்படவில்லை. இதே செய்தி நூலுள்ளும் 5ஆம் பக்கத்தில் குறிக்கப்பட்டபோதிலும் அவணும் அஃது யார் பதிப்பு என்பது இல்லை.

பு. சிதம்பர புன்னைவனநாதன் குறிப்பு

1922 ஜீன் முதல் வாரத்தில் (துந்துபி ஆண்டு வைகாசி 18) எழுதப்பட்ட பதிப்புரையில் பு. சிதம்பர புன்னைவனநாதன் (1922: XXV) "சில வருடங்களுக்கு முன் சென்னைப் போலிஸ் அசிஸ்டெண்டு கமிஷனர் ஸ்ரீ எஸ். பவானந்தம் பிள்ளையவர்களால் பொருளதிகார நச்சினார்க்கினியம் வெளியிடப்பட்டிருப்பதுடன்; வக்கீல் வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்களால் அகத்திணை புறத்திணையியல்களின் இளம்பூரணம் அச்சிடப்பட்டுள்ளது" என எழுதியுள்ளதும் மேற்கருத்துடன் இணைத்து நோக்கத்தக்கது.

எல்.டி. பர்னட் குறிப்பு

எல்.டி. பர்னட் இலண்டன், பிரிட்டீஷ் அருங்காட்சியக நூலகத்தில் உள்ள தமிழ் நூல்களின் துணை அட்டவணை ஒன்றைத் தயாரித்து 1931இல் வெளியிட்டார். அந்நூலில் வ.உ.சி.யின் தொல்காப்பிய இளம்பூரணப் பதிப்பைக் குறித்துள்ளார். அப்பதிப்பு 136 பக்கங்கள் கொண்டது என்பர். பர்னட் (1931: 433)

நூலில் அச்சக முகவரி தரவில்லை. அவர் தரும் விவரம் வருமாறு: சிதம்பரம் பிள்ளை. வ.உ. (பதி.ஆ.). [1919]. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் (அகத்திணையியல், புறத்திணையியல்). [சென்னை]: ... . பதிப்பக ஊர்ப் பெயரும் பதிப்பாண்டும் எல்.டி. பர்னட் நூலில் பகர அடைப்புக் குறியில் உள்ளன. இதற்குக் காரணம் பதிப்பாண்டு, ஊர் ஆகியன அப்பதிப்பில் இல்லையென்பதனால், எல்.டி. பர்னட் தாமாகக் குறித்துள்ளதே ஆகும்.

ம.பொ.சி. குறிப்பு

கப்பலோட்டிய தமிழன் என்னும் பெயரில் நூலெழுதிய ம.பொ.சிவஞானம் (1949:100) "செந்தமிழ் வல்ல சிதம்பரனார் அரிய தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழ் மக்களுக்கு உதவுமாறு பதிப்பித்துள்ளார். அவை, திருக்குறள் - மணக்குடவர் உரை - அறத்துப்பால்; தொல்காப்பியம் எழுத்து - சொல் - பொருள் - இளம்பூரணம்; இன்னிலை ஆகிய நூற்களாகும்" என்கின்றார். இவற்றுள் தொல்.சொல்லதிகாரப் பதிப்பு வ.உ.சி.யால் வெளியிடப்படவில்லை என்பது நினையத்தக்கது.

இ.மு. சுப்பிரமணிய பிள்ளை குறிப்பு

இ.மு. சுப்பிரமணிய பிள்ளை (1952: 85 - 86) எழுதிய நெல்லைத் தமிழ்ப் புலவர்கள் (முதற்புத்தகம்) என்னும் நூலில் ".. .. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் பொருளதிகாரம் இவைகளுக்கு இளம்பூரணர் உரையையும் ஆராய்ந்து இவர் அச்சிற் பதித்து வெளியிட்டார். .. .. .. பொருளதிகாரம் இளம்பூரணம் முழுமையும் 15-1-1936-ல் அச்சிட்டு வெளிவந்தது" என்ற குறிப்பு உள்ளது. பதிப்பாண்டு 1936 என உள்ளது நினையத்தக்கது.

எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பு

1936இல் வெளியான தொல்.பொருள். இளம்பூரணப் பதிப்பின் பதிப்பாசிரியர்களுள் ஒருவராக வ.உ.சி.யுடன் இணைத்துக் குறிக்கப்பட்டுள்ள எஸ். வையாபுரிப்பிள்ளையின் குறிப்பு சற்று விரிவானதாயினும், அதனையும் காண்போம்.

1907 ஆம் ஆண்டு திருநெல்வெலி கீழரத வீதி அம்மன் சன்னதி எதிரில் நடந்த கூட்டத்தில் வ.உ.சி. பேசியதை முதன்முறையாகக் கேட்டார் இந்து கலாசாலை மாணவராக இருந்த வையாபுரிப்பிள்ளை(1959: 366 - 367). இதனை அவர் நான் கண்ட வ.உ.சி. என்னும் கட்டுரையில் பதிவு செய்துள்ளார். முதலில் பம்பாய் மாகாண வ.உ.சி. மலரில் வெளியான இக்கட்டுரை பின்னர் அவருடைய தமிழ்ச்சுடர் மணிகள் என்னும் நூலிலும் இடம்பெற்றது. அக்கட்டுரை உணர்த்தும் கருத்துக்கள் சில வருமாறு: 'போலிக் குற்றங்கள் சுமத்தி வ.உ.சி.யை 1908 மார்ச்சு மாதத்தில் கைது செய்தனர். அதனால் மாணவர்கள் பள்ளி செல்ல மறுத்து 13.03.1908இல் ஊர்வலம் சென்றனர். அதில் வையாபுரிப்பிள்ளையும் (1959: 387) கலந்து கொண்டார்.

"வ.உ.சி.யின் விடுதலையின் பின், அவர் ஒரு புது மனிதராக மாறிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். இதுவரையும் தேசிய விஷயங்களில் உழைத்து வந்தவர் இப்பொழுது தமது தாய்மொழியாகிய தமிழின் பொருட்டு உழைக்க முன் வந்து சென்னையிலேயே சில ஆண்டுகள் தங்கினார். அப்பொழுது தொல்காப்பியத்தை இவர் கற்றுக் கொண்டிருந்த சமயம். .. .. .. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் இயற்றிய உரை எளிதாக இருத்தல் கண்டு அதனை அச்சிடும் தொழிலில் இவர் முயன்றார். இதனைத் தெரிந்த நெல்லை அறிஞர் ஒருவர் இவருக்கெனப் பிரதிகள் சிருஷ்டித்துக் கொடுக்க முன் வந்தனர். என்னிடம் இளம்பூரணர் உரைப்பிரதி இருப்பதாகத் தெரிந்து எனக்கு வ.உ.சி. 1913இல் ஒரு கடிதம் எழுதினார். .. .. .. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இவர்களால் வெளியிடப்பெற்றது. பொருளதிகாரத்தில் முதல் இரண்டு இயல்களும் இவர்களே பரிசோதனை செய்து வெளியிட்டார்கள். இவ்விஷயத்தில் சென்னையில் இவர்களுக்கு உதவி புரிந்து வந்தவர்கள் திரு. செல்வக்கேசவராய முதலியார் முதலியவர்கள்" (வையாபுரிப்பிள்ளை 1959: 379 - 380).

”தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மற்றை எழு இயல்களையும் வெளியிட வேண்டும் என்ற ஆத்திரம் வ.உ.சி. அவர்களுக்கு மிகுதியாக இருந்தது. அவற்றை நான் பதிப்பித்து வெளியிடுதல் வேண்டும் என்று வ.உ.சி. அவர்கள் விரும்பினார்கள். இவர்களிட்ட ஆணையை நானும் மேற்கொண்டு தொல்காப்பியம் பொருளதிகாரம் முழுமையையும் பதிப்பித்தேன். அப்பதிப்பு எங்கள் இருவர் பெயராலும், வாவிள்ள ராமசாமி சாஸ்துருலு பதிப்பகத்திலிருந்து வெளிவந்தது” (வையாபுரிப்பிள்ளை 1959: 381).

”1936-ல் சென்னை சர்வ கலாசாலையில் தமிழாராய்ச்சித் துறைத்தலைவரது நியமனம் நடைபெற இருந்தது. அதற்கு நான் முயன்று வந்தேன். .. .. .. அச்சமயம் வ.உ.சி. அவர்கள் சென்னைக்கு வரநேர்ந்தது. பிறர் செய்யும் முயற்சிகளையெல்லாம் ஒருவாறு தெரிந்து கொண்டு, தாமே என்னிடம் வந்து, இம்முயற்சியில் நான் வெற்றிபெற வேண்டும் என்று எடுத்துக் கூறினார்:. நாங்கள் இருவரும் பதிப்பித்த தொல்காப்பியப் பிரதிகள் சில தந்து, அவற்றை நியமனக் கமிட்டி உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்கள். உள்ளத்தூய்மையோடு கூறிய இந்த மொழிகள் எனக்குப் பெரியதோர் ஊக்கத்தைக் கொடுத்தன. இம்முயற்சியில் நன் வெற்றியும் பெற்றேன்” (வையாபுரிப்பிள்ளை 1959: 382).

தில்லித் தமிழ்ச்சங்க மலர்க் குறிப்பு

தில்லித் தமிழ்ச் சங்கம், சுடர் - வ.உ.சி. மலர் - மலர் - 13 என்னும் தலைப்பில் மலர் ஒன்றை 1964இலில் வெளியிட்டுள்ளது. அதில், வ.உ.சி. ஒரு பதிப்பாசிரியர் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதிய நாரண துரைக்கண்ணன் (தில்லித் தமிழ்ச் சங்கம் 1964: 70 - 71) வ.உ.சி. தன் கடைசி காலத்தில் தொல்காப்பிய இளம்பூரணர் உரையை நல்ல முறையில் பதிப்பித்து பல பகுதிகளாக வெளியிட்டிருக்கிறார். அதற்கு தமிழ்நாடு பத்திரிக்கையின் ஆசிரியராக இருந்த டாக்டர் வரதராசுலு நாயுடு உதவினார் என்ற தகவலைத் தருகின்றார். இளம்பூரணப் பதிப்புக்கள் வந்த ஆண்டு, வரதராசுலு நாயுடு எப்பகுதிப் பதிப்புக்கு உதவினார் என்பதுபற்றிய தகவல்கள் அவண் இல்லை என்பது குறிக்கத்தக்கது.

அதில் ”காலம் தாழ்த்திப் புகழ்பெற்ற அறிஞர்” என்னும் தலைப்பில் கட்டுரை எழுதிய பெ.நா. அப்புசாமி (தில்லித் தமிழ்ச் சங்கம் 1964: 128) “வ.உ.சி. சில தமிழ்நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். அவற்றுள் ஒன்று குறள். அது நல்ல பதிப்பு. மற்றொன்று தொல்காப்பியம், இளம்பூரணரின் உரையுடன். இதன் எழுத்ததிகாரப் பதிப்போடு (1928) நானும் சிறிது தொடர்பு கொண்டிருந்தேன். அந்த நூல் சென்னையில் அச்சேறி வந்தது. நண்பர் வையாபுரிப்பிள்ளை அதை அச்சேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஒருவர்க்கு இருவர்மேல் என்ற முறையிலும், நூலில் உள்ள ஈடுபாட்டின் காரணத்தாலும் நானும் வையாபுரிப்பிள்ளையோடு இருந்து இருவருமாகப் புரூப் பார்த்து வந்தோம். பிள்ளையவர்களுக்கு அதைச் சீராகப் பதிப்பிக்கும் பொறுப்பும் அளிக்கப்பட்டிருந்தது” என எழுதுகின்றார். தொல். எழுத்து. இளம்பூரணர் உரையின் 1928ஆம் ஆண்டுப் பதிப்பு வ.உ.சி.யால் அம்பாசமுத்திரம் அகத்தியர் பிரஸிலும், பதிப்பாண்டு குறிக்கப்படாத இதே பதிப்பு ஒன்று தூத்துக்குடி, வேலாயுதம் பிரிண்டிங் பிரஸிலும் அச்சாகின என்பது நினையத்தக்கது. இவை இனியும் விரிவாக ஆராயத்தக்கன.

ப. ஜீவானந்தம் குறிப்பு

பொதுவுடமை இயக்கவாதியான ஜீவா தாமரை என்னும் இலக்கிய ஏட்டில் எழுதிய கட்டுரைகள், அவர் இயற்கையெய்திய பின்னர் கலையும் இலக்கியமும் என்னும் பெயரில் 1967இலில் முதற்பதிப்பாக வெளிவந்தன. அத்தொகுப்பில் “செந்தமிழ்ச் செல்வர் வ.உ.சி.” என்னும் கட்டுரை முதற் கட்டுரையாக உள்ளது. அதில், ப. ஜீவா (1967:5) “தொல்காப்பியப் பொருளதிகாரத்தை வெளியிடத் துடித்தார். முதல் இரண்டு இயல்களை தமிழகத்தின் முதல் தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்றவரும் தமிழ்ப் பெரியாருமான செல்வகேசவராய முதலியாரின் துணையோடு பரிசோதனை செய்து பதிப்பித்து வெளியிட்டார்” என்ற குறிப்பு உள்ளது. அவண் பதிப்பித்த ஆண்டு குறிக்கப்படவில்லை என்பது நினையத்தக்கது.

மு. அருணாசலம் குறிப்பு

தமிழ் இலக்கிய வரலாறு - பதினோராம் நூற்றாண்டு என்னும் நூலில் மு. அருணாசலம் (1971: 395) பிற்சேர்க்கை: 2இல் தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் - பதிப்பு வரலாறு என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் வ.உ.சி.யின் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல் பதிப்பு வெளிவந்த ஆண்டு என 1928ஐக் குறித்துள்ளார்.

க.த. திருநாவுக்கரசு குறிப்பு

தொல்காப்பிய நூலடைவைச் செய்த க.த. திருநாவுக்கரசு (1972: 8-9) "சிதம்பரம் பிள்ளை. (வ.உ.), பதி. தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை - அகத்திணையியல், புறத்திணையியல். சென்னை, வாவிள்ள இராமசாமி சாஸ்திரலு & சன்ஸ், சென்னை, 1920, 1-136" எனக் குறிப்பிடுகின்றார். ஆனால், அகத். புறத். பதிப்பு வாவிள்ள இராமசாமி சாஸ்திரலு & சன்ஸ் பதிப்பல்ல என்பது குறிக்கத்தக்கது.

க.ப. அறவாணன், தாயம்மாள் அறவாணன் குறிப்பு

க.ப. அறவாணன், தாயம்மாள் அறவாணன் ஆகியோர் தொகுத்தெழுதிய தொல்காப்பியக் களஞ்சியத்தில் (1975: 120) "1928 வ.உ. சிதம்பரம்பிள்ளை. பொருள். இளம்பூரணர் முன்னிரண்டியல்கள்" என்ற குறிப்புள்ளது.

கொண்டல் சு. மகாதேவன் குறிப்பு

கொண்டல் சு. மகாதேவன் (1977: 202) பதிப்பித்த தமிழ்நூல் விவர அட்டவணை (1916 -1920 நான்காம் தொகுதி - மூன்றம் பகுதியில்) எழுத்து சொல் என்னும் தலைப்பில் 1031ஆம் நூலாக தொல்காப்பியம் இளம்பூரணம் முதற்பதிப்பு, வி.ஒ. சிதம்பரம்பிள்ளை. பெரம்பூர்: இந்தியா பிரிண்டிங் பிரஸ், சென்னை. ஆகஸ்ட் 1919. உ.ப. 136. விலை 1-4-0 " என்னும் குறிப்புத் தரப்பட்டுள்ளது.

பொன். கோதண்டராமன் குறிப்பு

பொன். கோதண்டராமன் (1977: 9-14) தமிழிலக்கண அகரவரிசையில் தொல்காப்பியப் பதிப்புக்களைத் தொகுத்துத் தந்துள்ளார். அவ்வரிசையில் வ.உ.சி.யின் இளம்பூரணப் பொருளதிகாரப் பதிப்புக்களாக

"தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம் பதிப்பு, வ.உ.சிதம்பரம்பிள்ளை, 1933, சென்னை, ப.528.

தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம் பதிப்பு, வ.உ.சிதம்பரம்பிள்ளை, 1933, சென்னை, ப. 137 - 312.

தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம் பதிப்பு, வ.உ.சிதம்பரம்பிள்ளை, 1935, சென்னை, ப. 352 - 488.

தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணம் பதிப்பு, வ.உ.சிதம்பரம்பிள்ளை, 1954, (இரண்டாம் பதிப்பு), சென்னை, ப. 170"

ஆகியன சுட்டப்பட்டுள்ளன. 1921, 1928 ஆண்டுகள் சுட்டப்படவில்லை.

மு. சண்முகம் பிள்ளை குறிப்பு

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாய்வு இதழில் தொல்காப்பியப் பதிப்புக்கள் குறித்து எழுதிய மு. சண்முகம் பிள்ளை (1978: 38) "இவர்கள் (வ.உ.சி.) வெளியிட்ட இப்பதிப்பு எப்பொழுது வெளியானது என்பது பற்றிய ஆண்டுக் குறிப்பைத் தந்தாரிலர். ஆனால், 1922-ல் சிதம்பர புன்னைவனநாத முதலியார் வெளியிட்ட தொல்காப்பிய மூலப்பதிப்பின் பதிப்புரையில் ஒரு விளக்கம் உள்ளது.

"வக்கில் வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்களால் அகத்திணை, புறத்திணையியல்களின் இளம்பூரணம் அச்சிடப்பட்டுள்ளது" (பதிப்புரை - பக். XXV)

என்னும் குறிப்பிலிருந்து 1922க்கு முன்னரே இப்பதிப்பு வெளியிடப்பெற்றமை தெளிவாம். பெரும்பாலும் 1921-ல் இப்பதிப்பு வெளிவந்திருத்தல் வேண்டும்" என்கின்றார்.

வெ. பழநியப்பன் குறிப்பு

தமிழ்ப் புலவர் வராலற்றுக் களஞ்சியத்தை எழுதிய வெ. பழநியப்பன், உ. பழநி ஆகியோர் (1984: 415 - 416) "தொல்காப்பியம் பொருளதிகாரத்தையும் எழுத்ததிகாரத்தையும் ஏட்டுப்பிரதிகளை ஒப்புநோக்கியும் ஏடு பார்த்து எழுதி வைத்திருந்தோரின் கையெழுத்துப் படிகளை ஒப்புநோக்கியும், பதிப்பிக்கும் முயற்சியைத் தொடங்கினார். இம்முயற்சிக்குப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் உதவியும் கிடைத்தது. தொல்காப்பியத்தை அச்சியற்றிப் பார்த்தபின் (1936) இறந்தார்" என ஒவ்வொரு பதிப்பும் வெளிவந்த ஆண்டு, முறைமை குறித்த விவரம் ஏதுமில்லாமல் எழுதிச் செல்வது குறிக்கத்தக்கது.

தி.நெ. வள்ளிநாயகம் குறிப்பு

செக்கிழுத்த செம்மல் என்னும் நூலெழுதிய தி.நெ. வள்ளிநாயகம் என்பார் (1985:138) 1941இல் தொல்காப்பிய இளம்பூரண எழுத்ததிகாரப் பதவுரைப் பதிப்பு, துத்துக்குடி, விக்டோரிய பிரிண்டிங் பிரஸில் வெளிவந்ததாகக் குறித்தபோதிலும் பொருளதிகாரப் பதிப்புக்களைக் கூறவில்லை. எனினும், 'இந்நூலில் எடுத்தாளப்பட்ட நூல்கள்' என்னும் பகுதியில், "தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம் - வ.உ. சிதம்பரம்பிள்ளை - 1928 - வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி" (தி.நெ.வள்ளிநாயகம் 1985:157) என்ற பதிப்பினைச் சுட்டியுள்ளார்.

தி. லீலாவதி குறிப்பு

தமிழ் தந்த வ.உ.சி. என்னும் தலைப்பில் நூலெழுதிய சென்னை, இராணி மேரிக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் தி. லீலாவதி (1986: 31) "1928இல் பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல் ஆகியவை அடங்கிய இளம்பூரணம், வ.உ.சிதம்பரம் பிள்ளை பதிப்பாசிரியன் என்ற பெயருடன் வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி என்ற முகவரியுடன் வெளியிடப்பட்டது" என எழுதுகின்றார்.

கோ. கிருட்டிணமூர்த்தி குறிப்பு

தொல்காப்பிய ஆய்வின் வரலாறு என்னும் முனைவர் பட்ட ஆய்வேட்டு நூலில் கோ. கிருட்டிணமூர்த்தி (1990: 34) "1921-இல் பொருளதிகாரத்தின் அகத்திணையியல், புறத்திணையியல் இரண்டினையும் இளம்பூரணருரையுடன் வ.உ. சிதம்பரம் பிள்ளை அச்சிட்டு வெளிப்படுத்தினார்" என்கின்றார். இது மு. சண்முகம் பிள்ளை கருத்தாகும்.

ச.வே. சுப்பிரமணியன் குறிப்பு

தொல்காப்பியப் பதிப்புகள் பற்றிய சிறந்த நூலொன்றைச் செய்த ச.வே. சுப்பிரமணியன் (1992: 90) "வ.உ. சிதம்பரம் பிள்ளை - தொல்காப்பியம் - பொருள் (அகத்திணையியல், புறத்திணையியல்) இளம்பூரணம் 1921.

இவர் 1921இல் பொருள் அகத்திணையியல், புறத்திணையியல் இரண்டிற்கும் இளம்பூரணர் உரையை வெளியிட்டுள்ளார். இப்பதிப்பிற்கு பதிப்புரை இல்லை எனத் தோன்றுகின்றது" என்று கூறியுள்ளார்.

அ. சங்கரவள்ளிநாயகம் குறிப்பு

வ.உ.சி.யும் தமிழும் என்னும் பெயரில் நூலெழுதிய அ. சங்கரவள்ளி நாயகம் (1994: 88) "தொல்காப்பியம் எழுத்ததிகாரத்திற்கும் பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை ஆகிய இரு இயல்களுக்கும் இளம்பூரணர் உரையினைப் பதிப்பித்துள்ளார்" என ஆண்டு குறிப்பிடாமல் எழுதுகின்றார். பின்னிணைப்பில் முதன்மை நூல்கள் என்னும் பட்டியலில் இப்பதிப்பினைச் சுட்டி 1928 என ஆண்டு குறித்துக் கோயிற் பட்டி (1994: ப.எ.இ.) என ஊர்ப்பெயரும் குறித்துள்ளார்.

கே.எம். வேங்கடராமையா முதலானோர் குறிப்பு

கே.எம். வேங்கடராமையா, ச.வே. சுப்பிரமணியன், ப.வெ. நாகராசன் (1996: 390) ஆகியோர் செய்த தொல்காப்பிய மூலம் பாடவேறுபாடுகள் - ஆழ்நோக்காய்வுப் பதிப்பின் பின்னிணைப்பில் தொல்காப்பியப் பதிப்புகள் வரிசையில் 17ஆம் பதிப்பாக, "1921 பொருள் (1,2) இளம்பூரணர், வ.உ.சி." எனப் பதிப்பாண்டு குறிக்கப்பட்டுள்ளது.

இரா. இளங்குமரன் குறிப்பு

சுவடிக்கலை என்னும் நூலைச் செய்த இரா. இளங்குமரன் (1999: 198) "தொல்.பொருள். இளம்பூரணம் - 1928 - அகத்திணை இயல், புறத்திணை இயல் ஆகிய இரண்டு இயல்களுக்கு மட்டும் இளம்பூரணர் உரையுடன் கூடிய பதிப்பு இது. இதனைப் பதிப்பித்தவரும் வ.உ. சிதம்பரனாரே ஆவர். இதுவும் பதவுரையாகப் பதிப்பிக்கப் பெற்றதே. இதுவும் 1920இல் பதிப்பிக்கத் தொடங்கப்பெற்று 1928இல் நிறைவாகியது. எழுத்து இளம்பூரணத்திற்கு முன்னரே இது வெளியாகிவிட்ட குறிப்புள்ளது. தூத்துக்குடி, வேலாயுதம் பிரிண்டிங் பிரசில் வெளியான இப்பதிப்பில் முகவுரை முதலிய இல்லை" என்கின்றார்.

நா. வானமாமலை குறிப்பு

நா. வானமாமலை (1999: 41, 52) எழுதிய வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி என்னும் நூல் 1980இல் முதல் பதிப்பாக வந்தது. அதன் மறுஅச்சு 1999இல் வந்தது அதில், "இணைப்பு 1 வ.உ.சி. நூல்கள் என்னும் பகுதியில் பதிப்பு என்னும் பகுதியில் 10. தொல்காப்பியம்: எழுத்து: இளம்பூரணம், 11. தொல்காப்பியம்: பொருள்: இளம்பூரணம்" ஆகியவை பதிப்பாண்டுகள் இல்லாமல் குறிக்கப்பட்டுள்ளன. மற்றொரு இணைப்பாகிய வரலாறு படைத்த வ.உ.சி. வாழ்க்கை என்னும் பகுதியில் 1934 திருச்செந்தூரில் வ.உ.சி.யின் திருக்குறள் உரை வெளியிடப்பட்டது என்னும் குறிப்பு உள்ளபோதும் தொல்காப்பியப் பதிப்புக்கள் இடம்பெறவில்லை.

மா.ரா. அரசு குறிப்பு

வ.உ.சி. வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் நூலெழுதிய மா.ரா. அரசு (2002: ப.எ.இ.) பின்னிணைப்பில் வ.உ.சி.யின் நூல்கள் காலவரிசை என்னும் பட்டியலில் தொல்காப்பியம் இளம்பூரணம் பொருளதிகாரம் (பதிப்பு) 1928 எனக் குறித்துள்ளார். இது அகத். புறத். இயல்களின் பதிப்பாகலாம். எஞ்சிய இயல்களின் பதிப்புக்கள் இப்பட்டியலில் இல்லை என்பது நினையத்தக்கது.

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் வ.உ.சிதம்பரனார் பற்றி நூலெழுதிய மா.ரா. அரசு (2005: 89) "1920ஆம் ஆண்டே தொல்காப்பிய இளம்பூரணர் எழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் அச்சிடத் தொடங்கினார். இருப்பினும், இவற்றுள் பொருளதிகாரத்தின் முற்பகுதியே முதலில் வந்தது" என ஆண்டுக் குறிப்பில்லாமலேயே எழுதுகின்றார். எனினும், வ.உ.சி.யின் நூல்கள் (காலவரிசை) என்னும் பகுதியில் தொல்காப்பியம் இளம்பூரணம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்) - இரண்டாம் பதிப்பு - 1928 எனக் குறித்துள்ளார் (மா.ரா. அரசு 2005: ப.எ.இ.). என்றாலும், முதல் பதிப்பு ஆண்டு இல்லை; குறிப்பும் இல்லை.

எஸ். கண்ணன் குறிப்பு

வ.உ.சி. ஒரு பன்முகப்பார்வை என்னும் பெயரில் நூலெழுதிய எஸ். கண்ணன் என்பவர் (2005: 51) "தொல்காப்பியத்திற்கு மிகுதியான பதிப்புகள் வாராதிருந்த காலகட்டத்தில் (1928) வ.உ.சி. தொல்காப்பிய இளம்பூரணர் உரைப்பதிப்பினை மேற்கொண்டார்" என எழுதுகின்றார். இதன்மூலம் அவர் கருத்து தொல்காப்பிய இளம்பூரணர் உரைப் பதிப்பு (இன்ன அதிகாரம் என்ற குறிப்பு அவண் இல்லை) 1928 ஆம் ஆண்டு என்பதாகும்.

தி. இராஜரெத்தினம், மோ.கோ. கோவைமணி குறிப்பு

ச. சிவகாமி பதிப்பித்த தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் என்னும் பெயரிய கருத்தரங்கத் தொகுப்பில் வ.உ.சி. பதிப்புக்கள் பற்றிக் கட்டுரை எழுதிய தி. இராஜரெத்தினம் (2009: 139 - 140) "வ.உ.சி. தனது முதல் தொல்காப்பியப் பதிப்பாக அகத்திணையியல், புறத்திணையியல் எனும் இரண்டு இயல்களையும் பதிப்பித்து வெளியிட்டார் (1921)" என்கின்றார். இக்கருத்து மு. சண்முகம் பிள்ளை முன்னரே நிறுவிய கருத்து என்பதையும் அவண் குறித்துள்ளார்.

இதே தொகுப்பில் பொருளதிகாரப் பதிப்புகள் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதிய மோ.கோ. கோவைமணி (2009: 73) "1921ஆம் ஆண்டு அகத்திணையியல், புறத்திணையியல் சேர்ந்த இளம்பூரணத்தை, வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் பதிப்பித்துள்ளார்" என்கின்றார்.

சி. இலட்சுமணன் குறிப்பு

சுவடிப் பதிப்பாசிரியர்கள் என்னும் நூலில் நெல்லை மாவட்டப் பதிப்பாசிரியர்கள் குறித்து எழுதியுள்ள சி. இலட்சுமணன் (2011: 31) தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையைப் பதிப்பாண்டு, எப்பகுதி என்ற விவரம் இல்லாமல் குறித்துள்ளார். எனினும், அவர், எழுத்ததிகாரப் பதிப்பினை விட்டுவிட்டார்.

பிறர் குறிப்பு

பா. மதுகேஸ்வரன் (2010: 21,22,42), இரா. வெங்கடேசன் 2014: XII), பா. தண்ணரசி (2013: 3), திப்பு சுல்தான் (தொல்காப்பியப் பதிப்புகள் (அடைவு, ஆவணம், வரலாறு)- 19 மே 2012, https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/19809-2012-05-19-07-12-42), பா. ஜெய்கணேஷ் (July 2, 2012, இருபதாம் நூற்றாண்டில் தொல்காப்பியப் பதிப்புகள், http://ilamaran writings.blogspot. com/2012/07/1_02.html) ஆகியோர் தொல். பொருள். அகத். புறத். பதிப்பின் ஆண்டு 1921 எனக் குறித்துள்ளனர். இரா.வெங்கடேசன் (05 Oct 2014, வ.உ.சி. என்னும் பதிப்பாளன், https: // www.hindutamil.in/news/literature/20176-.html) என்னும் கட்டுரையில், "1931-ல் பொருளதிகாரத்தின் அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரண்டு இயல்களைக் கொண்ட முதல் தொகுதியை வெளியிட்டுள்ளார். பொருளதிகார இளம்பூரணர் உரை ஏடுகளை அறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளை, தி. நா. சுப்பரமணிய அய்யர், த. மு. சொர்ணம் பிள்ளை ஆகிய அறிஞர் பெருமக்களிடமிருந்து வ.உ.சி. பெற்றுள்ளார்" என வேறு விதமாகப் பதிப்பாண்டு குறித்துள்ளார். தொல்காப்பியப் பதிப்புரைகள் என்னும் நூலிலும் (பா. இளமாறன் 2021: 73) இப்பதிப்பு 1921இல் வந்ததாகவே குறிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்கள் அனைத்தையும் இணைத்துப் பார்க்கும் பொழுது வ.உ.சி.யின் தொல். பொருள். அகத். புறத். இயல்கள் பதிப்பு 1919, 1920, 1921, 1928, 1931, 1933 ஆகிய ஆண்டுகளில் வந்துள்ளதாக அறிஞர் பெருமக்கள் கருத்துரைத்துள்ளனர் எனத் தெரிகின்றது. சுவடி கொடுத்தோர், பதிப்புக்கு உதவியோர் குறித்தும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட செய்திகள் அவர்களால் கூறப்பட்டுள்ள உண்மையும் புலனாகின்றது.

இவ்வளவு குழப்பங்களுக்கும் காரணம் வ.உ.சி. முதன்முதலாகப் பதிப்பித்த அகத். புறத். நூலில் பதிப்பாண்டு இல்லை என்பதுதான். பெரும்பாலானோர் 1921 எனக் குறிக்கக் காரணம் அப்பதிப்பின்

மென்படியில் 1921 எனக் கையால் எழுதப்பட்ட ஆண்டே. அது மட்டுமல்லாது 01.06.1928ஆம் நாளிட்ட (தொல். எழுத்து. இளம்பூரணர் உரைப்பதிப்பின் பதிப்புரை) பதிப்புரையில் "இவ்வெழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் 1920-ம் வருடத்தில் அச்சிடத் தொடங்கினேன். பொருளதிகாரம் அகத்திணையியல் புறத்திணையியல்கள் அச்சாகி வெளிவந்துள்ளன. இஃது இப்பொழுது வெளிவருகின்றது" என வ.உ.சி. (1928:2) மாறுபட எழுதியதும் பலரும் பதிப்பாண்டு 1921 என்பதை நம்பக் காரணமாகும்.இருக்கின்ற குறிப்புக்களில் மிக அண்மைக் காலக் குறிப்பாக அமைவது சிதம்பர புன்னைவனநாத முதலியார் குறிப்பே. எனினும், அதிலும் ஆண்டு இல்லை என்பது நினையத்தக்கது. எனவே, நாம் வேறு தரவுகளைத் தேட வேண்டிய நிலைக்கு ஆளாகின்றோம். அவற்றைக் காண்போம்.

செந்தமிழ் இதழ்ச் சான்று

செந்தமிழ் இதழின் பழைய இதழ்களைப் படித்துக் கொண்டு வரும்போது, 1919ஆம் ஆண்டு ஜீலை - ஆகஸ்ட் இதழில் (தொகுதி 17, பகுதி 9, சித்தார்த்தி - ஆடி) வ.உ.சி.யின் தொல். பொருள். அகத். புறத். இயல்கள் பதிப்பு பற்றிய மதிப்புரை, அதன் பத்திராதிபரால் எழுதப்பட்டதைக் காண முடிந்தது. இதன்மூலம், அப்பதிப்பு 1919ஆம் ஆண்டு ஜீலை - ஆகஸ்டுக்கு முன்னரே வந்துள்ளது தெளிவாகின்றது. அம்மதிப்புரையில், "ஸ்ரீமான் வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் அகத்திணையியலும் புறத்திணையியலுமாகிய பாகத்தை அச்சிட்டிருக்கிறார்கள். அதன் பிரதியொன் றெனக்கு அளிக்கப்பட்டதை அவகாசம் கிடைத்தபோது இடையிடையே படித்துப் பார்த்தேன். அது படிப்பவர்களுக்கு உரைப்பகுதி நன்கு விளங்கும்படி பத்தி பிரித்து நல்ல காகிதத்திற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது" எனப் பத்திராதிபர் (1919: ப.எ.இ.) எழுதியிருப்பது குறிக்கத்தக்கது. இவ்வுண்மையை மற்றொரு செய்தியினைக் கொண்டும் உறுதிப்படுத்தலாம் என்பதால், அதனையும் அறிவோம்.

மற்றொரு சான்று: வாழிடக் குறிப்புக் கொண்டு உறுதிப்படுத்துதல்

வ.உ.சி. வெளியிட்ட தொல்.பொருள். அகத். புறத். பதிப்பில் "வ.உ.சிதம்பரம் பிள்ளை, பிரம்பூர், சென்னை" என முகவரி தரப்பட்டுள்ளது. எனவே, இப்பதிப்பு அவர் சென்னை, பிரம்பூரில் இருந்த காலத்தில்தான் வெளியானது என்பது உறுதி. எனவே, வ.உ.சி. பிரம்பூரில் இருந்த காலத்தை அறிவது அகத்., புறத். பதிப்பின் பதிப்பாண்டினைத் தெளிவுபடுத்தும் என்பதால், அதனைக் காண்போம்.

வ.உ.சி. யின் வாழிடங்கள்

'வ.உ.சி. 12.03.1908ஆம் நாள் திருநெல்வேலியில் கைது செய்யப்பட்டார். 26.03.1908 நாள் தொடங்கிய வழக்கு விசாரணையின் முடிவில் வ.உ.சி.க்கு 40ஆண்டு சிறைதண்டனையும், சுப்பிரமணிய சிவாவுக்கு 10 ஆண்டு தீவாந்திர சிட்சையும் வழங்கப்பட்டது. வ.உ.சி. உயர்நீதிமன்றத்தில் முறையிட்டதன்மூலம் சிறைதண்டனை 6 ஆண்டாகக் குறைக்கப்பட்டது. இது நடந்தது 04.11.1908 அன்று. முதலில் கோவை சிறையிலும் பின்னர் கண்ணனூர் சிறையிலும் இருந்தார். 1912 திசம்பரில் சிறையிலிருந்து மீண்ட வ.உ.சி. கோவைக்கு அருகிலுள்ள திருப்போரூர்த் தலத்தில் சில காலம் இருந்த பின்னர் சென்னையில் மயிலை, சிந்தாதிரிப்பேட்டை, பிரம்பூர் ஆகிய பகுதிகளில் வாழ்ந்தார். 1912இலிருந்து 1919 வரை சென்னையிலேயே வ.உ.சி. இருந்தார். ஏழு ஆண்டுகள் சென்னையில் வ.உ.சி. இருந்தார். 1918இல் புதுச்சேரியை விட்டு வெளியேறிய பாரதி 1919 வாக்கில் சென்னைக்கு மறுபடியும் வந்து சேர்ந்தார். சுதேசமித்ரன் பத்திரிகையிலேயே வேலைக்குச் சேர்ந்தார். வ.உ.சி. பிரம்பூரில் குடியிருக்கிறார். பிறகு சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்கிறார். அங்கு 1919 - 1922 வரை இருந்தார். 1922 இலிருந்து கோவில்பட்டிக்கு வ.உ.சி. குடிபெயர்ந்தார்' (எஸ். கண்ணன் 2005: 11 - 21) என்றும் வரும் செய்திகளைக் காணும்போது வ.உ.சி. சிறையிலிருந்து மீண்டு 1913 முதல் (1912 எனச் சொன்னாலும் 1912 திசம்பரில் சிறையிலிருந்து வந்த வ.உ.சி. சில காலம் திருப்போரூர்த் தலத்தில் இருந்தார் என்பதால் 1913 எனக்

கொள்வதே பொருந்தும் எனத் தோன்றுகின்றது) 1919 வரை சென்னையில் பிரம்பூரில் இருந்தார் என்பதும் தெளிவாகின்றன.

இந்திய இலக்கியச் சிற்பிகள் - வ.உ.சிதம்பரனார் என்னும் நூலை எழுதிய மா.ரா. அரசு (2005: 21 - 23) மேற்குறித்த செய்திகளில் பலவற்றை நாள் விவரங்களுடன் தந்துள்ளார். அவர் கருத்துக்களின் சுருக்கம் வருமாறு: வ.உ.சி. திருநெல்வேலியில் கைது செய்யப்பட்ட நாள் 12.03.1908. நீதிபதி பின்ஹே வழங்கிய தீர்ப்பில் சுப்பிரமணிய சிவாவுக்கு உதவியதற்காக 20 ஆண்டு ஆயுள் தண்டனை, அரச நிந்தனைக்காக 20 ஆண்டுகள் என 40 ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. சிவாவுக்கு உதவியதற்காக நான்கு ஆண்டுகள் நாடு கடத்தல் தண்டனையாகவும், அரச நிந்தனைக்காக விதிக்கப்பட்ட 20 ஆண்டு ஆயுள் என்பது ஆறு ஆண்டுகள் நாடு கடத்தல் தண்டனையாகவும் மாற்றப்பெற்று இரு தண்டனைகளும் ஒரே நேரத்தில் அனுபவிக்கும்படியும் 04.11.1908 அன்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. இலண்டன் பிரிவியு கவுன்சில் மன்றத்தில்செய்யப்பட்ட மேல்முறையீட்டால் நாடு கடத்தல் தண்டனை, கடுங்காவல் தண்டனையாக மாற்றம் பெற்றது. 09.07.1908 முதல் 30.11.1910 வரை கோவைச் சிறையிலும், 01.12.1910 முதல் கண்ணனூர் சிறையிலும் இருந்த வ.உ.சி. சிறையில் கிடைத்த தண்டனைக் காலக் குறைப்பால் ஏறத்தாழ 18 மாதங்கள் குறைக்கப்பெற்று 24.12.1912 அன்று விடுதலை பெற்றார். ஆக, நான்கு ஆண்டுகள் ஆறு மாதங்கள் வ.உ.சி. சிறையில் இருந்தார். விடுதலையான வ.உ.சி. 1913இல் சென்னை சென்றார். வ.உ.சி.யின் பல படைப்புக்கள் அவர் சென்னையில் இருந்த காலத்தில் வெளியானவை. அவருடைய கோவை வாழ்க்கை 1920 -1924 அமைந்தது கோயில்பட்டி வாழ்க்கை 1924 - 1932வரை அமைந்தது. 1932இல் தூத்துகுடி சென்ற வ.உ.சி. தம் இறுதி நாளாகிய 18.11.1936 வரை அங்கு வாழ்ந்தார் என்பர். இ.மு. சுப்பிரமணிய பிள்ளை (1952: 58-75) எழுதிய நெல்லைப் புலவர்கள் என்னும் நூலிலும் இச்செய்திகள் சில மாற்றங்களுடன் இடம்பெற்றுள்ளன. வ.உ.சி. 1913 முதல் 1919 வரை சென்னையில் வாழ்ந்தார் என்பதை இதுகாறும் கண்ட செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. எனவே, சென்னை, பிரம்பூர் எனக் குறிக்கப்பட்டுள்ள பதிப்பும் 1919இல் வெளிவந்தது என்பதும் பொருத்தமுடையதாகும்.

முடிப்புரை

இதுகாறும் கண்ட செய்திகளின் மூலம் வ.உ.சி. யின் தொல். பொருள். அகத். புறத். இயல்கள் பதிப்பு வெளியான ஆண்டு 1919 ஆகஸ்டுக்கு முன்னர் தான். பலரும் கூறுமாறு அதற்குப் பின்னர் அன்று என்பது உறுதியாகின்றது. எல்.டி. பர்னட், கொண்டல் மகாதேவன் ஆகியோர் 1919 எனப் பதிப்பாண்டினைக் குறித்துள்ளது நினையத்தக்க செய்தி. வ.உ.சி.யின் வாழிடக் குறிப்புக்களும் இக்கருத்திற்குத் துணையாவதும் நாம் அறிய வேண்டிய செய்தியாகும். எனவே, வ.உ.சி. யின் தொல். பொருள். அகத். புறத். இயல்கள் பதிப்பு வெளியான ஆண்டினை 1921 என்றோ, பிறவாறோ குறிப்பது வரலாற்று முரணாகும்.

துணைநூல்கள்

1. அரசு. மா.ரா. 2002 (முதல் பதிப்பு). வ.உ.சி. வளர்த்த தமிழ். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
2. அரசு. மா.ரா. 2005 (முதல் பதிப்பு). இந்திய இலக்கியச் சிற்பிகள் வ.உ.சி. (வ.உ.சிதம்பரனார்). புதுதில்லி: சாகித்திய அகாதெமி.
3. அருணாசலம். மு. 1971 (முதல் பதிப்பு). தமிழ் இலக்கிய வரலாறு - தமிழ்ப் புலவர் வரலாறு - பதினோராம் நூற்றாண்டு. திருச்சிற்றம்பலம்: காந்தி வித்தியாலயம்.
4. அறவாணன். க.ப., தாயம்மள் அறவாணன். 1975. தொல்காப்பியக் களஞ்சியம். சென்னை: பாரி நிலையம்.
5. இராகவையங்கார். மு. 1960. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி. மானாமதுரை: மு.ரா. நாராயண ஐயங்கார்.

6. இலட்சுமணன். சி. 2011 (முதல் பதிப்பு). சுவடிப் பதிப்பாசிரியர்கள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
7. இளங்குமரன். இரா. 2001. சுவடிப் பதிப்பியல் வரலாறு. சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.
8. இளமாறன். பா. 2008 (முதல் பதிப்பு). பதிப்பும் வாசிப்பும் - தமிழ் நூல்களின் பதிப்பு மற்றும் ஆய்வு. சென்னை: சந்தியா பதிப்பகம்.
9. இளமாறன். பா. 2021 (முதல் பதிப்பு). தொல்காப்பியப் பதிப்புரைகள் [1847 முதல் 1948 வரை: தொகுதி - 1]. சென்னை: பரிசல் புத்தக நிலையம்.
10. கண்ணன். எஸ். 2005 (முதல் பதிப்பு). வ.உ.சி. ஒரு பன்முகப்பார்வை. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
11. கோதண்டராமன். பொன். (க.ஆ.). 1977. 'தமிழிலக்கண அகரவரிசை". தமிழாய்வு தொகுதி - 5. சி. பாலசுப்பிரமணியம் (பதி.ஆ.). சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.
12. கோதண்டராமன். பொன். 1977. தமிழிலக்கண அகரவரிசை. சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம். (தமிழ்த்துறை வெளியிடும் தமிழாய்வு ஐந்தாம் தொகுதியிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது) என்பது நூற்றலைப்புப் பக்கக் குறிப்பு. மேலது கட்டுரை. இது தனி நூல்.
13. சங்கர வள்ளி நாயகம். அ. 1994 (முதல் பதிப்பு). வ.உ.சி.யும் தமிழும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
14. சண்முகம்பிள்ளை. மு. (க.ஆ.). 1978. 'தொல்காப்பியப் பதிப்புகள்'. தமிழாய்வு தொகுதி - 8. சி. பாலசுப்பிரமணியம் (பதி.ஆ.). சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.
15. சம்பந்தன். மா.சு. 1997 (திருத்திய பதிப்பு). அச்சும் பதிப்பும். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
16. சிவகாமி. ச. (பதி.ஆ.). 2009 (முதல் பதிப்பு). சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும். சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
17. சிவஞானம். ம.பொ. 1949 (ஐந்தாம் பதிப்பு). கப்பலோட்டிய தமிழன். சென்னை: இன்ப நிலையம்.
18. சிவஞானம். ம.பொ. 1949 (ஐந்தாம் பதிப்பு). கப்பலோட்டிய தமிழன். சென்னை: இன்ப நிலையம்.
19. சுப்பிரமணிய பிள்ளை. இ.மு. 1952 (முதல் பதிப்பு). நெல்லைத் தமிழ்ப் புலவர்கள் (முதல் புத்தகம்). சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
20. சுப்பிரமணியன். ச.வே. 1992. தொல்காப்பியப் பதிப்புகள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
21. தண்ணரசி. பா. 2013. தமிழ்ச் செவ்வியல் நூல்கள் பதிப்பு வரலாறு (1812 - 1964) - (வெளியிடப்பெறாத முனைவர் பட்ட ஆய்வேடு). சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம்.
22. தில்லித் தமிழ்ச் சங்கம் (பதி.ஆ.). 1964. சுடர் - வ.உ.சி. மலர் - மலர் - 13. .. .. ..: இமயப் பதிப்பகம்.
23. பழநியப்பன். வெ., உ. பழநி. 1984. தமிழ்ப் புலவர் வராலற்றுக் களஞ்சியம் பகுதி 2 [க - ச]. அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
24. மகாதேவன். கொண்டல் சு. (பதி.ஆ.). 1975 (முதல் பதிப்பு). தமிழ்நூல் விவர அட்டவணை (1916 - 1920) - நான்காம் தொகுதி - முதல் பகுதி. .. .. ..: தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு.
25. மகாதேவன். கொண்டல் சு. (பதி.ஆ.). 1977 (முதல் பதிப்பு). தமிழ்நூல் விவர அட்டவணை (1916 - 1920) - நான்காம் தொகுதி - மூன்றாம் பகுதி. .. .. ..: தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு.
26. மகாதேவன். கொண்டல் சு. (பதி.ஆ.). 1977 (முதல் பதிப்பு). தமிழ்நூல் விவர அட்டவணை (1916 - 1920) - நான்காம் தொகுதி - இரண்டாம் பகுதி. .. .. ..: தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்கக வெளியீடு.
27. மணி. ஆ. 2021. பருந்துப் பார்வையில் உரை ஆய்வுகள் (அறியப்படாத அரிய தரவுகளுடன்). புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

28. மணி. பெ.சு. (மொ.பெ.அ.). 1995 (முதல் பதிப்பு). நவபாரதச் சிற்பிகள் வ.உ. சிதம்பரம் பிள்ளை. புதுதில்லி: பப்ளிகேஷன்ஸ் டிவிசன்.
29. மதுகேசுவரன். பா. 2008 (முதல் பதிப்பு). தொல்காப்பியப் பதிப்பு வரலாறு. சென்னை: சந்தியா பதிப்பகம்.
30. மதுகேசுவரன். பா. 2010 (முதல் பதிப்பு). தொல்காப்பியப் பதிப்பு ஆவணம். சென்னை: ந. ஆனந்தி. (2008 நூலே மீள்பதிப்பு).
31. லீலாவதி. தி. 1986 (முதல் பதிப்பு). தமிழ் தந்த வ.உ.சி. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
32. வானமாமலை. நா. 1999 (மறு அச்சு). வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி. சென்னை: மக்கள் வெளியீடு.
33. விசயராகவன். கோ & தி. மகாலட்சுமி (பதி.ஆ.). 2012 (முதல் பதிப்பு). சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
34. வெங்கடேசன். இரா. 2014 (முதல் பதிப்பு). தமிழ்ப் புலமை மரபில் தொல்காப்பியம். சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ்.
35. வையாபுரிப்பிள்ளை. எஸ். 1959 (மூன்றாம் பதிப்பு). தமிழ்ச்சுடர் மணிகள். சென்னை: பாரி நிலையம்.
36. வ.உ.சி.யின் தொல்.பொருள். அகத்.& புறத். பதிப்பு முகப்பு

தொல்காப்பியம்

இளம்பூரணம்

MAHAMAHOPADHYAYA
U. V. S. IYER LIBRARY
SANTI NAGAR :: MADRAS-90.

MAHAMAHOPADHYAYA
U. V. S. IYER LIBRARY
SANTI NAGAR :: MADRAS-90.

பொருளதிகாரம்

அகத்திணையியலும் புறத்திணையியலும்.

MAHAMAHOPADHYAYA
U. V. S. IYER LIBRARY
SANTI NAGAR :: MADRAS-90.

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

பிரம்பூர், சென்னை.

கடவுள்துணை.

செந்தமிழ்.

தொகுதி-கஎ.] சித்தார்த்தி ஆடிமீ [பகுதி கூ

Vol. XVII. July—August, 1919. No. 9.

பதார்த்ததீபிகை.

செந்தமிழ் கள-ந் தொகுதி களசு-ம் பக்கத்தொடர்ச்சி.

மன விவரணம்.

இன்பதுன் பம்முத லெய்தக் கருவி யெழின்மனமாம்
மன்பதை தோறும் பிரியாம னிற்கும் வழக்குண்மையின்
என்ப தனந்தம் பரமாணு ரூப மெப்போதுமுள்ள
தொன்பது மேறி சொற்றே னினிக்குண மோதுவனே.

(இ-ள்.) சுகம், துக்கம் முதலியவற்றை நேரே கண்டடைதற்குக் கருவியாகிய இந்திரியமே மனமாகும். அஃது உயிர்தோறும் பிரியா மல் நியதமாய் நிற்கும் வழக்குள்ளதாதலின் அனந்தம் எனப்படுவது. பரமாணுரூபமுடையது; நித்தியமாயுள்ளது. இவ்வளவே ஒன்பது பதார்த்தங்களையுஞ் சொன்னேன். இனிக் குணங்களைச் சொல் லுவேன் எ-று.

எழில்—அழகு—மன்பதை—மக்கட்பரப்பு; ஆகுபெயர். என் பது—என்று சொல்லப்படுவது. மேறி என்பது மகடூஉ முன்னிலை.

புத்தகமதிப்புரை.

(1) தொல்காப்பியவுரை; இளம்பூரணம்:—இவ்வுரை பழமையாலும், தெளிவுடைமையாலும் சுருங்கக்கூறலாலும் தான்முழுவதற்கு மூலதாயிருத்தலாலும், பிறவுரை பலவற்றையும் பிறப்பித்தபெருமையாலும் எல்லா வுரைகளிலும் சிறந்ததாகப் போற்றத்தக்கது. இதன் ஒருபகுதியாகிய எழுத்ததிகார வுரைமாத்திரம், தனித்து முன்பு பதிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய இரண்டதிகாரவுரையும் இதுகாறும் பதிக்கப்படாது சிதல்வாய்ப்பட்டருகிவருவதை நன்குபரிசோதித்து அச்சிட்டுத் தமிழுலகுக்குபகரிக்கக்கருதிய ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்கள் அகத்திணையியலும் புறத்திணையியலுமாகிய பாகத்தை அச்சிட்டிருக்கிறார்கள். அதன் பிரதியொன்றெனக்கு அளிக்கப்பட்டதை அவகாசம் கிடைத்தபொழுது இடையிடையே படித்துப்பார்த்தேன். அது படிப்பவர்களுக்கு உரைப்பகுதி நன்குவிளங்கும்படி பத்திபிரித்து நல்லகாகிதத்திற் பதிக்கப்பட்டிருக்கிறது. அச்சில் வெளிவந்ததும், வெளிவராததுமான உதாரணச்செய்யுள் பலவற்றிற்கும் ஆகரம்காட்டி நன்குபரிசோதித்துப் பதிக்கப்பட்டுவருவதாய்த் தெரிகிறது. இன்னும், பின்னும் முன்னும் அடுத்தடுத்துத் தொடுத்து ஒருபுத்தகமாம்படி ஏனைப்பகுதிகளையும் அச்சிட்டு வெளியிடக்கருதிய குறிப்பும் காணப்படுகிறது. பிள்ளையவர்கள் இந்நன்முயற்சியிற் றலையிட்டிருப்பது தமிழ்மக்களாற் பாராட்டத்தக்கது. பழைய தமிழ்வழக்கும் தமிழிலக்கண விலக்கியவமைதியும் ஆராயப்புகுவார்க்குப் பெரிதுமுபகாரமாகுமருமைவாய்ந்த இவ்வுரை முழுதும் அச்சிட்டு வெளியிடும் இப்பெரியகாரியம் இடையூறின்றி முடியும்படி இறைவனருள்புரியவும், தமிழபிமானச் செல்வர்கள் இதனை யாதரித்துப் பிள்ளையவர்களை இன்னும் ஊக்கமுடையவராக்கவும் வேண்டுகின்றேன்.

பத்திராதிபர்.

ஒப்பீட்டியல்

தொ.மா.க.160

அகத்திணை மரபில் அமைந்த தமிழ் - யப்பான் காதற் பாடல்கள்

முனைவர் சிவ இளங்கோ
புதுச்சேரி
ilangosiva57@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழின் சிறப்புக் கூறுகளில் பெரும் கருவூலமானது பொருள் இலக்கணம். குறிப்பாக அகத்திணை மரபு என்னும் செறிவார்ந்த இலக்கிய அமைப்பு உலகின் வேறு எந்த மொழியிலும் இல்லை. ஆனால் அகத்திணை போன்ற ஒரு மரபு, யப்பான் வாழ்வியலில் இருந்திருக்கிறது. "உச்சி - கொதோ" என்னும் அகம் - புறம் என்று பொருள்படக்கூடிய சொல்லாடலும் யப்பான் மொழியில் இருந்தது. அதன் விளைவுதான் யப்பான் மொழியில் உருவான, காதல் பாடல்களான 'மன்யோஷு' என்னும் இலக்கியம்.

உள்ளத்து உணர்வுகளை அகம், புறம் என்று பகுத்து, அதற்குரிய தளங்களையும், அதற்குரிய முதல், உரி, கருப்பொருள் யாவற்றையும் விளக்கிக் கூறினால் மட்டுமே சங்க இலக்கியங்களைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு யப்பானியர் உட்பட பிற மொழியாளர்களுக்குக் கிட்டும். தமிழ் மொழியில் உள்ள சங்க இலக்கியங்களின் அதே கூறுகள், யப்பானிய மொழியின் இலக்கியமான மன்யோஷுவுக்கும் பொருத்திக் காட்டிய போதுதான் யப்பானியர்களுக்கு இருமொழி இலக்கிய உறவுகள் குறித்தும், தங்கள் பழைய இலக்கியங்களை அதன் மரபார்ந்த அமைப்பு வழியில் புரிந்து கொள்ளவும் ஏதுவானது.

அக ஒழுக்கமும், காதலும், உணர்ச்சிகளும் தமிழர்களுக்கு மட்டுமே சொந்தமானதல்ல. உலகம் முழுவதும் அவை இயல்பாக நடந்தேறி வருகின்றன. அதேபோல காதல் பாடல்களும் உலக நாடுகளில் எல்லாம் ஏராளமாகவே உண்டு. அவை பழங்காலத்தில் இருந்தும் தொடர்கின்றன. ஆனால் ஐந்திணை மரபு அவற்றிடம் இல்லை. அதனால் அகத்திணை மரபும் அங்கில்லை. பழமை போற்றி வாழும் சில நாடுகளில் அகவொழுக்கப் பாடல்கள் இருந்தும் பொருள் விளங்காமல் புரிந்து கொள்ளப்படாமல் இருக்கின்றன. அப்படி யப்பான் நாட்டின் இலக்கியங்களின் புரிதலுக்காகப் பாடல்களை விளங்கிக் கொள்ளத் தமிழின் அகத்திணை மரபு விளக்கங்கள் கை கொடுத்தன என்பதையும் உலகறிய வேண்டும். தொடக்கத்தில் இதற்கான விளக்கத்தைப் பிற மொழிகளில் தேடிய யப்பானின் மொழியியல் அறிஞர் சுசுமு ஓனோ, இந்திய மொழிகளிலும் தேடியிருக்கிறார்.

தொல்காப்பியப் பொருள் இலக்கணம், சங்க இலக்கியம் கூறும் அகத்தினை மரபு ஆகியவற்றை யப்பானிய மொழி வழி கற்றுக் கொண்ட ஓனோ, தமிழின் சங்க இலக்கியச் சொற்களை, யப்பானின் மன்யோஷூ சொற்களோடு ஒப்பீடு செய்து யப்பானிய இலக்கிய இதழ்களில் 450 க்கும் மேற்பட்ட ஒப்பாய்வுக் கட்டுரைகளை எழுதினார். இதன் பயனாக, அதுவரை படிக்காமலும், படித்தாலும் புரிந்து கொள்ளாமல் இருந்த மன்யோஷு உள்ளிட்ட தங்கள் பேரிலக்கியங்களைத் தாங்களும் படிக்கலாம் என்று யப்பானியர்கள் நினைத்தனர். நம்பவும் தொடங்கினர். எழுதத் தொடங்கினர். இதன் அடுத்த கட்டமாக மன்யோஷுப் பாடல்களைத் தற்கால யப்பான் மொழியில் மொழிபெயர்க்கும் பணிகள் நடைபெற்று ஏறத்தாழ ஆயிரம் பாடல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

குறிசொற்கள்: அகத்திணை மரபு, யப்பானிய மொழி, மன்யோஷு, ஐந்திணை மரபு, மொழியியல், சுசுமு ஓனோ, ஒப்பாய்வு, வாய்மொழிப் பாடல், நிஹோங்கோ, கடல் வழி வணிகம், யவனர், தெற்காசிய நாடுகள், தூரக் கிழக்கு நாடுகள், செவ்வியல் மொழி

முன்னுரை

மொழிகளின் எழுத்துரு உருவான காலத்திற்கு முன்பே பழமை வாய்ந்த செவ்வியல் மொழிகளின் இலக்கியங்கள் உருவாகி இருந்தன. அவை பாடலாகவும், இசைப் பாடல்களாகவும் வாய்மொழி வடிவத்தில் இருந்தன. குறிப்பாகத் தமிழ் போன்ற பழைய செம்மொழி மரபுப் பாடல்களின் சந்த அமைப்பும், எதுகை, மோனை உத்திகளும் தமிழ் இலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்களாகவே நீண்ட காலங்கள் நிலைத்திருக்க உதவின. தமிழில் பழமையான இலக்கியமான தொல்காப்பியம், அது வாய்மொழி இலக்கியமாக இருந்த காலத்திலேயே தமிழில் எழுத்து முறை தோன்றி விட்டது. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என்னும் இலக்கண வைப்பு முறையில் எழுத்ததிகாரம் முதலில் இடம் பெற்றிருப்பதை வைத்தே இதனை உறுதி செய்யலாம்.

பெருங்கற்காலப் பண்பாட்டின் போது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுப் பாறைக்கீறல்களும், எழுத்துப் பொறிப்புகளும் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருந்திருக்கின்றன. இதே காலத்தின் சங்க இலக்கியப் பாடல்களில் பெருங்கற்காலச் சமூக, பண்பாட்டு நிகழ்வுகள் இடம் பிடித்துள்ளன. இக்காலத்தை இன்னும் பின்னோக்கிச் செலுத்தும் படியான சான்றுகள் கீழடியிலும், ஆதிச்சநல்லூரிலும் கிடைத்து வருகின்றன. ஆக, நீண்ட கால வாய்மொழிப் பாடல்கள், கதைகள், தொன்மங்கள், பிற்காலத்தில் எழுத்துரு பெற்ற இலக்கியங்களாகப் புதிய வடிவம் பெறுவதென்பது உலகின் பல பகுதிகளிலும், பல மொழிகளிலும் நடந்தேறி வந்திருக்கின்றது.

தமிழ் அகத்திணை மரபின் தனித்தன்மை

தமிழ் அகத்திணை மரபு உலகம் தழுவியது என்று தொல்காப்பியர் கூறுவதைப் போல (தொல். பொருள். அகத். 57), உலகின் எல்லா மொழிகளிலும் காதல் பாடல்கள் உருவாகி இருக்கின்றன. அதேநேரம் உருவாக்கப்பட்ட அத்தனைக் காதல் பாடல்களும் அகத்திணைப் பாடல்கள் அல்ல. அகத்திணை மரபு என்பது சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. இலக்கண மரபுகளைக் கொண்டது. தொன்று தொட்டு வருவது. செய்யுள் வகை, யாப்பியல் வகைகளைக் கொண்டது. தொல்காப்பியர் கூறியபடி திணை, கைகோள், கூற்றுவகை, கேட்போர், களன், காலவகை, பயன், மெய்ப்பாடு, எச்சவகை, முன்னம், பொருள், துறைவகை ஆகிய 12 உறுப்புகளும் அகப்பொருள் பாடல்களுக்கு அடித்தளமாய் அமைந்திருக்கின்றன (தொல். பொருள். செய்யுளியல், 1:5-8).

“யாயும் ஞாயும் யாராகியரோ” என்னும் குறுந்தொகைப் பாடலுக்கு (40) ஏற்ப, அகப்பொருளுக்குக் காதலின் பிறப்பும் வளர்ச்சியும், அது இயங்கும் முறைகளில் உள்ள வேறுபாடுகளும், உணர்ச்சிக் கற்றையும் அடிப்படையான கோட்பாடுகளாக இருக்கின்றன. உள்ளத்தில் பீறிட்டு எழும் காமம், காதல் ஆகிய இச்சைகளைப் பாடல் அல்லது செய்யுளில் வெளிப்படுத்தும் போது, ஓர் ஒழுங்கு முறையைக் கற்பித்து, பல துறைகள் அடங்கிய அகப்பொருள் இலக்கணமாக அமைப்பதுதான் அகத்தினை மரபின் தனித்தன்மை ஆகும். அதனை வெளிப்படுத்தும் மரபில் தலையாய பொருளாக நிற்பவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய பொருள்களைக் கொண்ட பொருள் இலக்கணம் ஆகும். இந்தப் பொருள் இலக்கணம் இயற்கையின் தன்மையில் அமைந்திருப்பதால் தான், முதற் பொருளாகிய நிலமும், பொழுதும் தமிழ் அகத்திணை மரபில் திணைக் கோட்பாடாக உருவாகிறது. இயற்கையானது முதல், கரு, உரி என்ற கூறுகளைக் கொண்டது. இவை ஒன்றொன்றும், ஒவ்வொன்றுடனும் கொள்ளும் உறவு திணை எனப்படும். இவ்வாறு நிலம் - பொழுது, அகமாந்தர் ஒழுகலாறு ஆகியவற்றின் இணைப்பே திணை வாழ்வியலாக மலர்கிறது (நெடுஞ்செழியன், க. 2017:242-243).

உயிர்களுக்குப் பாலுணர்ச்சி இயற்கையானது என்பதால், மனிதனுக்குள் இருக்கும் காதல் பாடல், இசை என்று ஏதாவது ஒரு வடிவத்தில் வெளிப்பட்டே தீர்கிறது. யானைக்கு ஏற்படும் மதத்தைப் போலவும், யாரைக் கண்டால் மகிழ்ச்சி உருவாகிறதோ அது காமத்தில் போய் முடிவதைப் போலவும்,

"... ... ... யானை
குளகுமென் றாண்மதம் போலப்
பாணியு முடைத்து காணுநர்ப் பெறினே!"
(குறுந்தொகை, பாடல்: 136)

இயல்பான காமத்தைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இதனின் மேற்சென்று, விரும்பிய ஒருத்தியை ஒரே ஒரு முறையாவது அடைந்து விட்டால், பின் அரைநாள் வாழ்க்கை கூடத் தேவையில்லை என்று காமத்தையே வாழ்வியலாகவும் தமிழ் அகத்திணை உச்சப் புள்ளியைத் தொடுகிறது.

"பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒரு நாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலம் யானே"

என்னும் குறுந்தொகை (280) பாடல் வழி உளவியலும், வாழ்வியலும் ஓரியலில் இணைவதை நக்கீரரும், அதற்கு உரை எழுதிய பேராசிரியரும் உணர்த்துகின்றனர் (நெடுஞ்செழியன், க. 2017:241).

கி. மு. எட்டாம் நூற்றாண்டின் மாபெரும் கிரேக்கக் காவியங்களான ஹோமரின் 'இலியட்', 'ஒடிசி' ஆகிய காவியங்கள் ஹங்கேரி, யூகோஸ்லாவிய நாட்டுப் புறப் பகுதிகளின் நாடோடிப் பாடல்கள், புலம்பெயர் கதைகள், தொன்மங்கள், வட்டாரக் கதைகள் போன்ற வாய்மொழி மரபுப் பாடல்களைச் சேர்த்துத் தொகுக்கப்பட்ட காவியங்களாகக் கருதப் படுகின்றன. யப்பான் மொழியிலும் இதுபோன்ற வாய்மொழிப் பாடல்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டுக் கால அளவில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றின் பத்துத் தொகுப்புகளை இன்றைய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

யப்பான் காதல் பாடல்கள் அறிமுகமும், அவை எதிர்கொள்ளும் சிக்கல்களும்

யப்பானிய மொழியும், தமிழ் மொழியும் ஒரே மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்னும் கோட்பாடு வலுப்பெற்று வரும் நிலையில், யப்பானின் பழமையான காதற் பாடல்களும், தமிழ் மொழியின் சங்க அகப் பாடல்களும் மிக நெருங்கிய ஒற்றுமைப்பட்ட பண்புகளைக் கொண்டுள்ளன. இந்நிலை, யப்பானிய காதல் பாடல்களான மன்யோஷூ பாடல்களைத் தமிழில் மொழி பெயர்த்துத் தொகுப்பு இலக்கியங்களாக நூல் வடிவம் பெறும் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது (மனோன்மணி சண்முகதாஸ் 2014:V). யப்பான் மொழி இலக்கியங்களில், காலத்தால் முந்தியதாகக் கருதப்படுவதும், வாய்மொழி இலக்கியமாக இருந்துப் பின்னர் தொகுக்கப்பட்டது தான் மன்யோஷூ (Manyoshu) என்னும் செவ்விலக்கியம். "பத்தாயிரம் இலைகளின் தொகுப்பு" என்று பொருள்படும் மன்யோஷூவைத் தமிழில் சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களைப் போல் யப்பானியர்கள் தற்போது கொண்டாடுகின்றனர். ஆனால் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு மன்யோஷூவை யப்பானியர்களே புரிந்து கொள்வதில் இரண்டு முக்கியமான தடைகளை எதிர் கொண்டனர். ஒன்று மொழி; மற்றொன்று அதன் அகத்திணை மரபுக்கு உட்பட்ட அமைப்பு முறை.

முதலாவது தடையான 'மொழி' என்பதின் சிக்கல் என்னவென்றால், ஏறத்தாழ கி.பி. எட்டாம் நூற்றாண்டின் எழுத்துருவில் தொகுக்கப்பட்ட மன்யோஷூப் பாடல்களுக்கு, அவை தொகுக்கப்பட்ட காலத்தின் மொழி தற்போது நடைமுறையில் இல்லை. அதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் தொல் சீன மொழியையும், அதன் எழுத்துருவையும் (தற்போதைய சீன மொழியும், அதன் எழுத்து முறையும் வேறானவை) அறிந்து இருக்க வேண்டும். இந்தத் தொடர்பை அறிந்த ஆய்வாளர்கள் யப்பானிலும், கொரியாவிலும் உண்டு. இது ஒரு புதிய விளக்கத்தை அளிக்கிறது. அதாவது யப்பானிய மொழியில் வாய்மொழி இலக்கியங்கள் இருந்தாலும் எழுத்துரு இல்லாத காரணத்தால் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் அவற்றைத் (மன்யோஷூ - Manyoshu, கோஜிகி - Kojiki உட்பட) தொகுக்கும் முயற்சிகள் நடைபெற்ற போது, தொல் சீன மொழியின் (கி.மு. 2) எழுத்துருவில் தான் அவை தொகுக்கப்பட்டன. அதை 'மன்யோகன' (Manyogana) வரிவடிவம் என்று குறிப்பிட்டார்கள். இவ்வகையில் பழஞ்சீனமும், யப்பான் குறியீடுகளும் கொண்ட மன்யோகன மொழி அறிந்தவர்கள் மட்டுமே, யப்பானின் பழைய இலக்கியமான மன்யோஷூவைப்

படிக்கும் நிலை உருவானது. "பிற நாட்டார் பெரிதும் வெறுக்கின்ற சீன எழுத்துகள்" என்று சுசுமு ஓனோ ஒரு நூல் மதிப்புரையில் குறிப்பிடுவதன் நோக்கம், தங்கள் மரபுவழி இலக்கியங்கள் தங்கள் மொழியின் எழுத்துருவில் இல்லாத வெறுப்பு நிலை காரணமாக இருக்கலாம்.

மன்யோஷுவை யப்பானியர்கள் புரிந்து கொள்வதில் மற்றொரு சிக்கல் என்னவென்றால் தமிழின் சங்க இலக்கியப் பாடல் போன்ற அகத்திணை மரபு அமைப்பு முறைகள், மன்யோஷுப் பாடல்களிலும் காணப்பட்டதுதான். இதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், தமிழின் சங்க இலக்கியப் பாடல்களைப் புரிந்தவர்களே யப்பானின் இலக்கிய வடிவமான மன்யோஷுவைச் சரியாகவும், எளிதாகவும் புரிந்து கொள்ள முடியும். தெற்காசிய நாடுகளின் மொழிகளும், தூரக் கிழக்கு நாடுகளின் மொழிகளும் ஏதோ ஒரு வகையில் தமிழுடன் தொடர்புடையதாகவே இருந்ததை இருபதாம் நூற்றாண்டில் தான் யப்பானிய - தமிழ் ஆய்வாளர்களின் தொடர்பால் புரிந்து கொள்ள முடிந்தது.

மொழியைப் படிக்க முடிந்தாலும், பாடல்களில் உள்ள உள்ளுறைச் செய்திகளைப் புரிந்து கொள்வதில் சிக்கல் எப்போதுமே உள்ளது. நமது சங்க இலக்கியப் பாடல்களை இன்றைய மாணவர்கள் நேரடியாகப் படித்துப் பொருள் விளங்கிக் கொள்ள முடியாது. அதற்கான திணை, துறை, காதல் பாடல்களாக இருந்தால் அகத்திணை மரபு, கவிதை இலக்கணம் ஆகிய இவ்வளவும் பேராசிரியர்கள் விளக்கிச் சொல்லும் போது தான் அதன் முழுமையான விழுமியங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அதே சிக்கல் யப்பானிய மொழி இலக்கியமான மன்யோஷுவிற்கும் நிகழ்ந்தது.

உலகின் செவ்வியல் மொழிகளில் பழமையான காதல் பாடல்கள் இருப்பின், அவை தமிழின் அகத்திணைப் பாடல்களோடு தொடர்பு படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன. இது ஒரு வகையில் தமிழின் தொன்மையான பரவலைக் குறிப்பதாக இருந்தாலும், பிற செவ்வியல் மொழிக் காதல் பாடல்களின் அடிப்படைப் பொருள் தமிழின் அகத்திணை அறிந்தவர்களுக்கு மட்டுமே முழுமையாக விளங்கும் வகையில் அமைந்திருப்பது பெரும் ஆர்வத்தையும், ஆச்சரியத்தையும் கொடுப்பதாக உள்ளது. அகத்திணை மரபில் மிகவும் இனிமையானது உவமயங்களைப் தெரிந்து கொள்வதும், உள்ளுறை உவமங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்வதும் ஆகும். இந்த உத்தியைக் கண்டு கொண்டு விட்டால், பிற செவ்வியல் மொழியாளர்களுக்கும், தங்கள் பழமையான பாடலின் உண்மையான பொருள் புரிந்து விடும்.

மன்யோஷு பாடல்களின் வரிவடிவம்

தமிழகம் - சீன வணிக உறவுகளைப் 'பட்டுச்சாலை' (silk route) என்னும் வரலாறு தெரிவிப்பதைப் போல, தமிழகம் - யப்பான் உறவுக்குப் பெரும் பாலமாக அமைந்திருப்பது யப்பான் இலக்கியமான மன்யோஷு தான். வாய்மொழி இலக்கியமாக உருவெடுத்த மொழி யப்பான் ஆகவும், அதன் வரி வடிவம் தொல் சீனமாகவும் அமைந்திருந்தாலும், அதன் அமைப்பு முறை தமிழின் சங்க இலக்கிய அகத்திணை மரபைச் சார்ந்தே இருந்தது. இதற்கு ஒரு வரலாற்று விளக்கமாக யப்பானில் மன்யோஷு காதல் பாடல்களை வாய்மொழி இலக்கியமாக உலவ விட்டவர்கள் யாயோஇ (Yayoi) என்ற, கி. மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த இனக்குழுவினர் என்றும், இவர்கள் தமிழகத்திலிருந்து கொரியா சென்ற ஆயர் குலத்தினரே என்றும் ஒரு சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அப்படிச் சென்ற அந்த ஆயர் குலத்தினர் கொரியாவில் இருந்து யப்பானுக்கும் சென்றனர். கொரியா, சீனத்தோடு நிலவியல் வழியில் இணைந்து இருப்பதால், சீனாவோடு கொரியாவுக்கு உறவும் உண்டு; அதைவிடப் பகைமையும் உண்டு. கொரியாவில் எப்போதெல்லாம் உள்நாட்டுக் கலவரங்கள் எழுகின்றனவோ அப்போதெல்லாம் கொரியர்கள் கடல் வழி அருகில் இருக்கும் யப்பானுக்குச் சென்று விடுவார்கள் என்பதும், இது பழங்காலம் தொட்டு நடந்து வருகிறது என்பதும் ஆய்வாளர்கள் கூற்றுதான். மேலும் யப்பானுக்கு அரிசி விளைவிக்கும் முறையைக் கற்றுக் கொடுத்தவர்கள் தமிழர்கள் என்ற செய்தியும் உள்ளது. அப்படி யப்பான் சென்ற தமிழர்கள், தங்கள் மொழியையும் யப்பானியர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்க வாய்ப்புள்ளது

தமிழின் இலக்கிய அமைப்பும், அகத்திணை மரபும், பண்பாட்டுக் கூறுகளும் இப்படித்தான் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து இருக்கின்றன என்பதை இருபதாம் நூற்றாண்டு ஆய்வுகள் நிரூபித்து வருகின்றன.

தமிழ் - யப்பான் மொழி உறவு குறித்த ஆய்வுகள்

யப்பானின் பழமையான இலக்கியமான மன்யோஷுவைப் புரிந்து கொள்ளத் தடையாக இருந்த மொழி மற்றும் பாடல் அமைப்பு முறை ஆகிய இரண்டிலும் தீவிர கவனம் செலுத்தி, முப்பது ஆண்டுகளுக்கும் மேல் ஆய்வு செய்து, அத்தடைகள் இரண்டும் நீங்கக் காரணமாக அமைந்தவர், யப்பான் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த சுசுமு ஓனோ (1919 - 2008). இவர் யப்பானிய மொழியியல் துறையில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். யப்பானின் பல பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணி புரிந்தவர். புகழ்பெற்ற யப்பான் மொழிக் கழகத்தின் பேரவை உறுப்பினர். பண்டைய யப்பானிய ஒலி அமைப்பு உட்பட, கி.பி. எட்டாம் நூற்றாண்டு யப்பானிய இலக்கியங்கள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டவர்.

"பிற மொழிகளுடன் யப்பானிய மொழியை ஒப்பிட்டுப் பார்க்கும் ஆய்வினைச் செய்த அனுபவம் இருந்தும் கூட, இவ்வளவு பெருந்தொகையான ஒப்புமையான சொற்களைக் கொண்ட ஒரு மொழியைச் (தமிழைச்) சந்தித்திருக்கவில்லை. தமிழ் மொழியும், யப்பானிய மொழியும் தனியே சொற்களின் நிலையில் ஒற்றுமை உற்று இருப்பது மட்டுமின்றி, இலக்கண அமைப்பிலும் மிகப்பெரிய ஒற்றுமை நிலையானவை ஆகும். சங்க காலத்திலும், அதற்குப் பிற்பட்ட காலத்திலும் தமிழ் மொழியின் செய்யுள் வடிவம் யப்பானிய மொழியின் மரபான ஓசை அமைப்புடைய செய்யுள் வடிவத்துடன் ஒற்றுமைப்பட்டுள்ளது. யப்பானிய மொழியின் மன்யோசுவின் ஆய்வினைச் சங்க இலக்கியத்துடன் சேர்த்து ஆராய்வது தமிழ் - யப்பானிய மொழி ஆய்வு வளர்ச்சியை உறுதிப் படுத்துகின்றது" என்று சுசுமு ஓனோ கூறுகிறார்.

யப்பான் மொழி அமைப்பில் எட்டு உயிரொலிகள் உண்டு. அனைத்தும் குறில் மட்டுமே. அதில் நெட்டெழுத்து இல்லை. அதனால் யப்பான் மொழியில் முதல் உயிரொலி, இரண்டாம் உயிரொலி, இறுதி அசை உயிரொலி என்று சொற்சட்டங்களை ஓனோ வகுத்தார். சொற்சட்டம் (Lexical law) என்பது ஜப்பானிய இலக்கிய ஆக்கங்களின் சொற்களஞ்சியத்தில் இடம்பெறும் சொல் பகுப்புகளின் விகிதத்திற்கான புள்ளியியல் சட்டமாகும். அதாவது, சொற்களை ஆய்ந்து, சொற்கள் இடம் பெறும் வகையில் இருக்கும் ஓர் ஒழுங்கு முறை. ஜப்பானிய இலக்கியங்களான மன்யோஷு (Manyoshu); கோஜிகி (Kojiki); கென்ஜி மோனோகதாரி (Genji - A tale of Genji, Monogatari - இலக்கிய நடை) முதலிய பத்து இலக்கிய நூல்களில் உள்ள சொற்களை ஆராய்ந்து, இதை அடியொட்டிய ஆய்வை மன்யோஷு உரையாகவும், அகராதியாகவும், பண்பாட்டுக் கூறுகளாகவும், பிற செம்மொழிகளோடு ஒப்பியல் ஆய்வுகளாகவும் விரித்தவர் ஓனோ.

இந்த ஆய்வுகளின் தொடக்கத்தில் ஓனோ, யப்பானிய - கொரிய மொழிகளின் ஒப்பியல் ஆய்வில் ஈடுபட்டிருந்தார். அதில் அவருக்குச் சரியான விடை கிடைக்காத போதிலும், வேறு ஒரு முக்கியமான தகவல் அவருக்குக் கிடைத்தது. எச். பி. ஹல்பெர்ட் என்பவரின் ஆய்வான, 'திராவிட மொழிக் குடும்பம் - கொரியா மொழி ஒப்பியல் இலக்கணம்" (Hulbert, H.B., A Comparative Grammar of the Korean language and the Dravidian Family of Languages) என்னும் ஆய்வு நூல்தான் அது. மொழியியல் வல்லுனரான ஹல்பெர்ட், 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் மாபெரும் ஆய்வை மேற்கொண்ட கால்டுவெல் உடன் இணை ஆய்வாளராகப் பணியாற்றியவர். மேலும் துலன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஸ்டீபன் ஏ. டைலர் என்பாரின் ஆய்வான, "திராவிடமும் யூரேலியனும் : சொற் சான்றுகள்" (Stephen A. Tyler, Dravidian and Uralian: The Lexical Evidence, Tulane University) என்ற நூலும் கிடைத்து ஓனோவின் ஜப்பான் - தமிழ் ஒப்பியல் ஆய்வை மேலும் விரிவு படுத்தியது.

யப்பானிய மொழியியல் அறிஞரான அகிராவோ அவர்களின் "யப்பானிய - திராவிட மொழிகள் ஒப்பாய்வு" நூலை வாசித்த பின் தமிழ் லெக்சிகன் குறித்து அறிந்த ஓனோ, அதற்காகத் தமிழ்நாட்டுக்கு

வந்து, சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் பொற்கோ அவர்களிடம் தமிழ் கற்றார். யப்பான் பேராசிரியர் இமென்யூ, முனைவர் பொற்கோ ஆகியோரின் தூண்டுதலால் யப்பான் - தமிழ் ஒப்பியல் ஆய்வினைத் தொடர்ந்தார்.

பேராசிரியர் ஓனோ, 1957 ஆம் ஆண்டில் "யப்பானிய மொழிகளின் தோற்றம்" என்ற நூலை வெளியிட்டார். அதே ஆண்டில் வேறு சில ஆய்வாளர்களின் துணையுடன் மன்யோஷு பாடல்கள் தொகுதியை வெளியிட்டார். பின்னர் 1980 ஆம் ஆண்டு வரை யப்பான் மொழியின் தோற்றம், ஒப்பியல் நோக்கில் ஜப்பான் - கொரிய மொழிகள், ஒப்பியல் நோக்கில் யப்பான் - தமிழ் என்று பல ஆய்வுகளை மேற்கொண்டார். இவர் தமிழகத்தில் செய்த களப்பணிகளில் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகள், தரவுகளின் அடிப்படையில் நிகழ்த்திய ஆய்வுரைகளின் தொகுப்பினை யப்பான் தொலைக்காட்சி ஒளிபரப்பியது. இதை யப்பானிய மக்கள் பெருமளவில் பார்த்து ரசித்தனர். 1981 ஆம் ஆண்டில் ஓனோ பிறிதொரு பேராசிரியருடன் இணைந்து "யப்பானிய ஒரு பொருட் பன்மொழி அகராதி" ஒன்றை உருவாக்கினார். இம்முடிவுகளைக் கொண்டு, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு "யப்பானிய - தமிழ் மொழி தொடர்பு ஒப்பியல் ஆய்வு" என்ற கட்டுரையை வழங்கினார். அக்கட்டுரை வழி பண்டைய யப்பானிய (கி.மு. 8) மொழி அமைதி, ஒலி அமைப்புகள் பற்றிக் கூறிய ஓனோ, ஏறத்தாழ மூன்றாயிரம் யப்பானியச் சொற்களைத் தமிழ் மொழியோடு ஒப்புமைப்படுத்திப் பட்டியலிட்டு இருந்தார். அவருடைய இந்தப் புதிய ஆய்வு, தமிழர்கள் பலருக்கும் புதிய ஆய்வுக் களங்களை அறிமுகம் செய்தது.

தமிழின் சிறப்புக் கூறுகளில் பெரும் கருவூலமான பொருள் இலக்கணம், குறிப்பாக அகத்திணை மரபு என்னும் செறிவார்ந்த இலக்கிய அமைப்பு உலகின் வேறு எந்த மொழியிலும் இல்லை. ஆனால் அகத்திணை போன்ற ஒரு மரபு, யப்பான் வாழ்வியலில் இருந்திருக்கிறது. "உச்சி - கொதோ" என்னும் அகம் - புறம் என்று பொருள்படக்கூடிய சொல்லாடலும் யப்பான் மொழியில் இருந்தது. அதன் விளைவுதான் யப்பான் மொழியில் உருவான, காதல் பாடல்களான மன்யோஷு என்னும் இலக்கியம். உள்ளத்து உணர்வுகளை அகம், புறம் என்று பகுத்து, அதற்குரிய தளங்களையும், அதற்குரிய முதல், உரி, கருப்பொருள் யாவற்றையும் விளக்கிக் காட்டிய போதுதான் சங்க இலக்கியங்களைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு யப்பானியர்களுக்குக் கிட்டியது. தமிழ் மொழியில் உள்ள சங்க இலக்கியங்களின் அதே கூறுகள், யப்பானிய மொழியின் இலக்கியமான மன்யோஷுவுக்கும் பொருத்திக் காட்டிய போதுதான் யப்பானியர்களுக்கு இருமொழி இலக்கிய உறவுகள் குறித்தும், தங்கள் பழைய இலக்கியங்களை அதன் மரபார்ந்த அமைப்பு வழியில் புரிந்து கொள்ளவும் ஏதுவானது.

இதன் விளைவாக இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ் அவரது மனைவி முனைவர் ச. மனோன்மணி ஆகியோர் யப்பான் பல்கலைக்கழக ஆதரவுடன் யப்பான் சென்று ஓனோவின் ஆய்வில் இணைந்தனர். அவர்களின் ஆய்வுப் பரப்பு, சொற்பொருள், ஒலியமைப்பு, ஒப்பீட்டு நிலை, இருமொழி இலக்கண வகைப்பாட்டு நிலைகளிலும், பண்பாட்டு நிலைகளிலும் ஒப்பீட்டு நிலை, ஒற்றுமை மற்றும் தன்மைகளையும் நுண்ணாய்வு செய்யும் நிலையாக வளர்ந்தது. இதனைத் தொடர்ந்து இலங்கை, தமிழ்நாட்டில் இருந்து தமிழ்ப் பேராசிரியர்களை யப்பானுக்கு அழைத்து, யப்பான் மொழிப் பேராசிரியர்களையும் சேர்த்து இருமொழி ஒப்பியல் தொடர்பாகப் பல கருத்தரங்கங்களை நடத்தினார் ஓனோ. இதனால், யப்பான் - தமிழ் இருமொழிச் சொற்கள், அவற்றின் ஒலி அமைப்பு, இலக்கணப் பொருள் அமைப்பு, தொடர் அமைப்பு, இலக்கிய ஒற்றுமை, பண்பாட்டு ஒற்றுமை ஆகிய பொருண்மைகளில் ஆய்வுகள் யப்பானில் தொடர்ந்தன.

தொல்காப்பியப் பொருள் இலக்கணம், சங்க இலக்கியம் கூறும் அகத்தினை மரபு ஆகியவற்றை யப்பானிய மொழி வழி கற்றுக் கொண்ட ஓனோ, தமிழின் சங்க இலக்கியச் சொற்களை, யப்பானின் மன்யோஷூ சொற்களோடு ஒப்பீடு செய்து யப்பானிய இலக்கிய இதழ்களில் 450 க்கும் மேற்பட்ட

ஒப்பாய்வுக் கட்டுரைகளை எழுதினார். இதன் பயனாக, அதுவரை படிக்காமலும், படித்தாலும் புரிந்து கொள்ளாமல் இருந்த மன்யோஷு உள்ளிட்ட தங்கள் பேரிலக்கியங்களைத் தாங்களும் படிக்கலாம் என்று யப்பானியர்கள் நினைத்தனர். நம்பவும் தொடங்கினர். இதனால் உற்சாகமுற்ற ஓனோ, யப்பானின் பல பகுதி மக்களையும் அழைத்து மன்யோஷு பயிற்சி வகுப்புகளை நடத்தினார். யப்பான் மொழிப் பேராசிரியர்களாலும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாத அவர்களின் இலக்கியங்களை, தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் அதன் அடிப்படையில் ஓனோ புரிய வைத்த போது, சாதாரண மக்களும் மன்யோஷுவைப் புரிந்து கொண்டு, அதைப்பற்றி அவர்களும் கட்டுரைகள் எழுதத் தொடங்கினர்.

இதன் அடுத்த கட்டமாக 'மன்யோகன' என்னும் யப்பானின் இணை எழுத்துரு வடிவத்தில் இருந்த மன்யோஷுப் பாடல்களைத் தற்கால யப்பான் மொழியில் மொழிபெயர்க்கும் பணிகள் நடைபெற்று ஏறத்தாழ ஆயிரம் பாடல்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. அப்பாடல்களின் மொழிபெயர்ப்பின் அமைப்பிற்குச் சங்க இலக்கியங்களின் அமைப்பு முறை அவர்களுக்குப் பெரிதும் கை கொடுத்தது. நாட்டு உணர்வும், சமூக அக்கறையும், விழுமியமும் இவ்விரு மொழி இலக்கியங்களிலும் உண்டு. அதே நேரம், சங்க இலக்கியப் புலமை இல்லாமல் மேற்குறிப்பிட்ட ஆய்வுகளைத் தொடர்ந்து இருக்க முடியாது. அதற்குத் தமிழ் - யப்பான் ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்று இருக்க வேண்டும் என்று நிரூபித்தவர் மொழியியல் அறிஞர் சுசுமு ஓனோ.

மன்யோசு அகப்பாடல் ஒன்றின் தமிழ் மொழிபெயர்ப்பை வாசித்தல் பொருத்தமானதாக அமையும்.

"கூடையும் எழிற் கூடையும் கொண்டிருக்கும்!
குந்தமும் எழிற் குந்தமும் கொண்டிருக்கும்!
குன்றவில் களை பறித்திடும் குறுமகள்,
கூறக்கூடுமோ? நின் இல்லம் எங்குளதோ?
வானம் பார்த்திடும் யமத்தோ நாட்டு மன்னன்
என்றிலை இங்கே கூறினன்; இயம்பிடு
உன் இல்லம், பெயர், யானும் அறிந்திடவே!"

யப்பானில் ஒரு குன்றின் மேல் தன் உணவுத் தேட்டத்திற்காகக் குந்தம் என்னும் களை பறிக்கும் கருவி மூலம் இளந்தழை பறிக்கும் ஓர் இளம் பெண்ணிடம், அவள் நின்றிருந்த கோலத்தால் ஈர்க்கப்பட்ட அந்நாட்டு மன்னன் அவளிடம் பெயர், இல்லம் பற்றி வினவுகிறான்.

மேற்குறித்த மன்யோசு பாடலில் காதல் எங்கே இருக்கிறது? மேலோட்டமாகப் பார்க்கும் போது இது ஓர் இயல்பான நிகழ்வாகத்தான் கொள்ள முடியும். ஆனால் தமிழ் அகத்திணை மரபின் பொருள் இலக்கணம் கூறும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய அகத்திணைப் பொருள்களோடு அச்சூழலை, நிகழ்வை, எண்ணங்களைப் பொருத்திப் பார்க்கும் பொழுது அதில் குறிப்பிட்டுள்ள சில சொற்கள், அதனுடைய உள்ளுறை உவமம் என்று உட்பொருள் தேடி, திணை, துறைகளோடு அதை விவரிக்கும் பொழுது அது அகத்திணைக் காதல் பாடலாக வடிவம் கொள்கிறது.

முன்பு தன்னைத் தேடி வர வழி கொடுத்த, கூர் வேலை ஒத்த பாதையைத் தலைவன் மறந்து விட்டானோ என்ற தலைவியின் கூற்றில், தன்னையே மறந்து விட்டானோ என்று தொனிக்கும் நுட்பமும், அலை போலச் செல்லும் ஆற்று நீர் திரும்பிச் செல்லாதது போல நானும் சொன்ன சொல் தவற மாட்டேன் என்று தலைவன் தன் காதலைத் தொடர்வதாக வரும் கூற்றும் அகத்திணை மரபின் உச்ச நிலையான உள்ளுறை உவமத்தின் முழுச் சுவையையும் வெளிப்படுத்துவதாய் அமைகின்றன. “கடவுளும் இலவே” என்று கூறும் புறநானூற்றுப் பாடலின் தொகுப்பினைக் கொண்ட சங்க இலக்கியங்களின் கடவுள் கொள்கையைப் போலவே மன்யோஷு பாடலில் வரும் ஒரு காதலனின் மன உணர்வில், காதலின் தன்மையை இயற்கைப் பொருட்களான வானத்தோடும், நிலத்தோடும் ஒப்பிட்டுக் கூறி, இயற்கைக்கு அழிவில்லை; அது போல் தமது

காதலும் அழிவற்றதாக இருக்க வேண்டும் என விரும்பும் தன்மையில் கடவுள் பற்றிய கொள்கையும் ஒன்றுபட்டு இருப்பதைக் காண முடிகிறது (மனோன்மணி சண்முகதாஸ் 2014:26,62,55).

இப்படியாக மன்யோசு பாடல்கள் அனைத்தையும் அகத்திணை மரபினில் பொருத்திக் காட்டி, அவற்றை மன்யோசு காதல் பாடலாக மொழி பெயர்த்தார் முனைவர் ச. மனோன்மணி.

இந்தியக் காதற் பாடல்களில் அகத்திணை மரபுகள்

அக ஒழுக்கமும், காதலும், உணர்ச்சிகளும் தமிழர்களுக்கு மட்டுமே சொந்தமானதல்ல. உலகம் முழுவதும் அவை இயல்பாக நடந்தேறி வருகின்றன. அதேபோல காதல் பாடல்களும் உலக நாடுகளில் எல்லாம் ஏராளமாகவே உண்டு. அவை பழங்காலத்தில் இருந்தும் தொடர்கின்றன. ஆனால் காதல் பாடல்கள் யாவற்றிலும் ஐந்திணை மரபு இல்லை. அதனால் அகத்திணை மரபும் அவற்றிலில்லை. பழமை போற்றி வாழும் சில நாடுகளில் அகவொழுக்கப் பாடல்கள் இருந்தும் பொருள் விளங்காமல் புரிந்து கொள்ளப்படாமல் இருக்கின்றன. அப்படி யப்பான் நாட்டின் இலக்கியங்களின் புரிதலுக்காகப் பாடல்களை விளங்கிக் கொள்ளத் தமிழின் அகத்திணை மரபு விளக்கங்கள் கை கொடுத்தன என்பதையும் உலகறிய வேண்டும். தொடக்கத்தில் இதற்கான விளக்கத்தைப் பிற மொழிகளில் தேடிய ஓனோ, இந்திய மொழிகளிலும் தேடியிருக்கிறார். தமிழ் மொழியை அறிவதற்கு முன்பு அவர் இந்தோ - ஆரிய மொழிகளில் இதற்கான விடையைத் தேடினார். ஆனால் அவற்றில் உள்ள அக மரபுகள் தமிழில் இருந்து பெறப்பட்டவை என்பதை ஓனோ அறிந்து, அதன் பின்னர் திராவிட மொழிக் குடும்பத்தில், தெலுங்கு மொழியில் தன் தேடலைத் தொடர்ந்தார். பிறகு தமிழ் மொழி குறித்து அறிந்த அவர், தன் தேடலின் முழு விடையை மிகப் பழமையான தமிழ் மொழியின் அகத்திணை மரபில் கண்டடைந்து, மகிந்தார்.

தொகுப்புரை

தமிழர்களின் கடல் வழி வணிகம் மேற்குத் திக்கில் கிரேக்கம், உரோமம் உள்ளிட்ட யவனர்களின் நாடுகளிலும், கீழ்த் திசையில் தெற்காசிய நாடுகளிலும், தூரக் கிழக்கு நாடுகளிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைபெற்று வந்தன. பிற்காலச் சோழ மாமன்னர்கள் இராஜராஜன், இராஜேந்திரன் காலங்களில் தெற்காசிய நாடுகளில் படையெடுப்புகளும், போர்களும் நிகழ்ந்து, அதைத் தொடர்ந்த தமிழர்களின் புலம்பெயர் நிகழ்வுகளால் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாட்டின் தாக்கங்கள் அந்நாடுகளில் இயல்பான மாற்றங்களாக உருவெடுத்தன. வேளாண்மை உள்ளிட்ட தொழில்கள், பிற கலைப் பொருள் உருவாக்கத் தொழில்களுக்காகச் சென்று, அங்கேயே தங்கிவிட்ட தமிழர்களால், பொங்கல் உள்ளிட்ட தமிழர்களின் விழாக்களும் அங்குக் கொண்டாடப்பட்டு வருகின்றன. பாண்டிய நாட்டுப் பெண் ஒருத்தி கொரியாவின் அரசியாதல், அகத்திணை மரபில் அமைந்த யப்பான் மொழியின் பழமையான காதல் பாடல்கள், கொரிய - யப்பான் அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த குகைக் கல்வெட்டுகள், பானை ஓடுகளில் தமிழ் / சிந்துவெளிக் குறியீடுகள் காணப்படுதல் ஆகிய இவையெல்லாம் தமிழ் மொழியோடும், தமிழ்ப் பண்பாட்டோடும் கொரிய மொழிக்கும், யப்பானிய மொழிக்கும், அவற்றின் பண்பாடுகளுக்கும் உள்ள நெருங்கிய உறவை எடுத்து இயம்புகின்றன. இம் முயற்சியில் ஈடுபட்ட மொழியியல் அறிஞர் பேராசிரியர் சுசுமு ஓனோ அவர்களுக்கு அகத்திணை மரபை எடுத்துக் கூறிய தமிழ்நாடு, இலங்கைத் தமிழ், மொழியியல், வரலாற்றுப் பேராசிரியர்களின் பங்களிப்பால் மன்யோஷு உள்ளிட்ட பழமையான யப்பானிய அகத்திணை இலக்கியங்களின் உண்மைப் பொருளை, யப்பானிய மக்களுக்கு அறியத் தந்தன. தற்போது இவ்வாய்வுகள் பரவலாக மேற்கொள்ளப்படாமல் தேக்க நிலையில் உள்ளன.

முடிவுரை

1) இனி வரும் காலங்களில் தமிழகம் - யப்பான் - கொரியா நாடுகள் இடையேயான கடல் வழித் தொடர்புகள் பற்றிய ஆய்வுகள் பெருக வேண்டும்.
2) தூரக் கிழக்காசியத் துறைகள் வழி வரலாறு, மொழியியல் பற்றிய ஆய்வுகளை வரும் தலைமுறையினர் அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்ள முன்வர வேண்டும்.

3) இதற்குத் தென்கிழக்காசிய, தூரக் கிழக்காசிய நாடுகளின் பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைகளும், ஆய்விருக்கைகளும் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட வேண்டும். தென் கிழக்காசிய நாடுகளின் பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைகள் வழி ஆய்வுகள் தொடங்க தமிழ்நாடு அரசு நிதி உதவி அளிக்கும் அறிவிப்பை 22. 8. 2002 அன்று செய்திருப்பது, தமிழ் ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.
4) யப்பான் மன்யோசுப் பாடல்களின் மொழிபெயர்ப்பு 19 ஆம் நூற்றாண்டில் தொடங்கிப் பிரெஞ்சு, ஆங்கிலம், யேர்மன் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்புத் தொகுதிகள் வெளியிடப்பட்டு விட்டன. தமிழில் தற்போது தான் யப்பான் பாடல்களின் மொழிபெயர்ப்பு நிகழ்ந்து வருகிறது. தமிழின் சங்கப் பாடல் அமைப்பு, பழந்தமிழ்ச் செய்யுள் வடிவம், இலக்கண அமைப்பு ஆகியவற்றில் தமிழ் மொழியும், யப்பானிய மொழியும் ஒற்றுமைப் பட்டிருப்பதால், மொழிபெயர்ப்புப் பணிகள் பெருகுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ள நிலையில், இவ்வாய்வுகள் இன்னும் பரவலாக்கப்பட வேண்டும்.
5) அகப்பொருள் மரபு நிலையில் சங்க இலக்கியப் பாடல்களுக்கு வகுக்கப்பட்டுள்ள திணை, துறை விளக்கங்கள் அனைத்தும் மன்யோசுக் காதல் பாடல்களுக்கும் பொருந்துவனவாய் உள்ளதால், சங்க இலக்கியப் பாடல்களின் தொகுப்பு நிலையிலே மன்யோசு அகப்பாடல்களையும் வகுத்துக் கொண்டால், தமிழ் மொழியில் மன்யோசுப் பாடல்களை விளங்கிக் கொள்வதும், மொழிபெயர்ப்பதும் எளிதாக இருக்கும் என்று மன்யோசுப் பாடல்களின் 11 வது மொழிபெயர்ப்புத் தொகுப்பை வெளிக் கொணர்ந்திருக்கும் இலங்கையைச் சேர்ந்த முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் கருதுகிறார் (மனோன்மணி சண்முகதாஸ் 2014: xxii). இது தமிழறிஞர்களாலும், ஆய்வாளர்களாலும் பரிசீலிக்கப்பட வேண்டும்.
6) தமிழைச் செவ்வியல் மொழியாக உலகறியச் செய்த சங்க இலக்கியங்களைப் பிற உலக மொழிகளில் மொழிபெயர்ப்பதன் மூலம் தமிழ் மொழியின் சிறப்பையும், தனித்துவத்தையும் உலகோர் அறியச் செய்யலாம்.
7) தமிழே உலகின் மூத்த மொழி என்று வெறுமனே முழங்கிக் கொண்டிருப்பதை விட, இப்படிப்பட்ட ஆய்வு முடிவுகளின் வழி தான் உலக நாடுகள் தமிழைச் செம்மொழியாக ஏற்றுக் கொள்ளும் நிலையை உருவாக்கிட முடியும்.

குறிப்புகள்:

[1] "ஓமர் என்பவர் பண்டைய கிரேக்க இலக்கியத்தின் பெருங்காப்பியப் படைப்புகளான இலியட், ஒடிசி ஆகியவற்றை எழுதிய புகழ்பெற்ற இதிகாசக் கவிஞர். ஓமர் என்பவர் உண்மையில் வாழ்ந்தாரா, ஒடிசியும், இலியட்டும் அவரால் படைக்கப்பட்டனவா என்பது குறித்து மேனாட்டு அறிஞர்களுக்கு இடையே ஐயமும், ஆராய்ச்சி விவாதங்களும் இருந்து வந்ததுண்டு. விக்கிபீடியா / ta.m.wikipedia.org

[1]யப்பான் இலக்கியத்தின் பத்துத் தொகுப்புகள்

'கோஜிகி' (கி.பி. 712 - பண்டைய விடயங்களின் பதிவுகள்);

'நிஹான் ஷோகி' (கி.பி. 720 - கிரானிக்கல்ஸ் ஆப் ஜப்பான்);

'தங்கா' (குறுங்கவிதை);

'சாக்கா' (நீண்ட கவிதைகள்);

'மகுரா கோடோபா' (தலையணை வார்த்தை);

'ஃபுடோகி' (தொகுக்கப்பட்ட வர்த்தமானி);

'மன்யோஷு' (தமிழ் அகத்திணை மரபில் அமைந்த காதற்பாடல்கள் - நரா காலம் 710 - 784);

'கென்ஜி மோனோகதாரி' (Genji A tale of Genji, Monogatari).

சண்முகதாசு, அ., பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, சுசுமு ஓனோ நூற்றாண்டுப் பிறந்தநாள் கருத்தரங்க உரை, 13, 14.8.2022, தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம்.

[1] சுசுமு ஓனோ, ச. மனோன்மணி எழுதிய "மன்யோசு: ஜப்பானிய காதல் பாடல்கள்" நூலின் மதிப்புரை. (1992 ஆம் ஆண்டு, பங்குனி மாதம், 30 ஆம் நாள்) / சண்முகதாசு, அ., சுசுமு ஓனோ நூற்றாண்டுப் பிறந்தநாள் கருத்தரங்கம், 13, 14.8.2022, தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம்.

[1] கண்ணன் நா. முனைவர், சண்முகதாஸ், அ., பேராசிரியர் சுசுமு ஓனோ நூற்றாண்டுப் பிறந்தநாள் கருத்தரங்கம், 14.8.2022, தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம் / விக்கிப்பீடியா.

[1] சுசுமு ஓனோ, ச. மனோன்மணி எழுதிய "மன்யோசு: ஜப்பானிய காதல் பாடல்கள்" நூலின் மதிப்புரை, 1992 ஆம் ஆண்டு, பங்குனி மாதம், 30 ஆம் நாள்.

[1] சண்முகதாஸ், அ., சுசுமு ஓனோ நூற்றாண்டுப் பிறந்தநாள் கருத்தரங்கம், 13.8.2022, தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம்

[1] ஜப்பானிய எழுத்தாளர்கள் சீன எழுத்துகளைத் தங்களின் எழுத்து முறையாக ஏற்றுக் கொண்டனர். ஜப்பானியரின் தொடக்க கால நூல்கள் சீன மொழியிலேயே எழுதப்பட்டன. சீன எழுத்துக்களின் ஒலிப்பு மதிப்பைப் பயன்படுத்தி மட்டுமே ஜப்பான் இலக்கியங்களை அறிய முடியும் / encyclopaedia Britannica.

[1] சண்முகதாஸ், அ., மனோன்மணி சண்முகதாஸ், சுசுமு ஓனோ நூற்றாண்டுப் பிறந்தநாள் கருத்தரங்கம், 13.8.2022, தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம் / கூகுள் இணைய தளம்.

[1] மனோன்மணி, ச., சுசுமு ஓனோ நூற்றாண்டுப் பிறந்தநாள் கருத்தரங்கம், 13.8.2022, தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம்.

[1] சண்முகதாஸ். அ., மனோன்மணி, ச., மொழிபெயர்ப்பு, "மன்யோசு: யப்பானியக் காதற் பாடல்கள்", கொழும்பு தமிழ்ச் சங்க வெளியீடு, 1992 / இலண்டன் தமிழ் அருங்காட்சியக, சங்க இலக்கியப் பண்பாட்டுத்தளத்தில் 'மன்யோசு' என்ற தலைப்பில் 10.4.2021 இல் நடத்திய கருத்தரங்கம் / முனைவர் ச. மனோன்மணி / தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம். / tamildigitallibrary.in

[1] மேற்படி

[1] மேற்படி

துணைநின்ற நூல்கள்

1. இளவழகனார், தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம், தமிழ் நெறி விளக்கப் பதிப்பகம், சேலம், 1938.
2. கண்ணன், நா., முனைவர், கொரியா, "கொரியாவின் தமிழ் ராணி", ஆழி பதிப்பகம், சென்னை.
3. தொல்காப்பியர், தொல்காப்பியம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்., திருநெல்வேலி, 1943.
4. நெடுஞ்செழியன், க., பேராசிரியர், "தமிழ் அகத்திணை மரபுகளும் இந்தியக் காதற் பாடல்களும்", நெல் பதிப்பகம், மதுரை, 2017.
5. நொபோரு கராஷிமா (தொகுத்தவர்) "சுருக்கமான தென்னிந்திய வரலாறு - பிரச்சனைகளும் விளக்கங்களும்", அருட் செல்வர் நா மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம், பொள்ளாச்சி, 2018.

6. மனோன்மணி, ச., முனைவர், "மன்யோசு: யப்பான் காதற் பாடல்கள்", கொழும்பு தமிழ்ச் சங்க வெளியீடு, 1992.
7. மனோன்மணி சண்முகதாஸ், முனைவர், "ஜப்பானியக் காதற் பாடல்கள்", உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.
8. மனோன்மணி சண்முகதாஸ், முனைவர், ஜப்பானியக் காதற் பாடல்கள், கோகுலம் வெளியீடு, யாழ்ப்பாணம், 2014.

தொ.மா.க. 174

ஜப்பானிய மன்யோசு காதற்பாடல்களுக்கான கவிதைக்கோட்பாடு உருவாக்கம்: தொல்காப்பியப் பனுவலியல் பின்னணியிலிருந்து

நி. கனகராசு
தனிநிலை ஆய்வாளர்,
பொள்ளாச்சி
kanagarasu1996@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

செவ்வியல் காலத்தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் மொழி, இலக்கியம் குறித்த அளவையியல் பனுவலாகவும் அமைந்துள்ளது. இன்றைய ஆய்வுகள் பல்துறைப் பார்வைகளோடு அணுகும் முறையியலைக் கொண்டமைகின்றன. குறிப்பாக, பனுவியல், ஒப்பியல் குறித்த பார்வைகள் தொல்காப்பியத்தைச் சமகாலத் தன்மைக்கு எடுத்துச்செல்லும் தன்மையுடையனவாக உள்ளன. தமிழை உலகநிலையில வைத்துப் பல்வேறு மொழி, இலக்கிய, பண்பாடுகளுடன் ஒப்பீடுசெய்யும் ஆய்வுகள் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து நிகழ்கின்றன. குறிப்பாக, கிரேக்கம், இலத்தீன், சீனம், சமஸ்க்ருதம், பிராகிருத மொழிகளுக்கிடையேயான ஒப்பாய்வுகள் புதிய பார்வைகளை முன்வைத்துள்ளன. அவற்றுள் கீழைத்தேய ஒப்பாய்வுகளில் 20 நூற்றாண்டின் பிற்பகுதியில் பேராசிரியர் சுசுமு ஓனோ முன்னெடுத்த தமிழ்-ஜப்பானிய ஒப்பாய்வு முதன்மையானது. அவர் வேர்ச்சொல் ஒப்பாய்வை முதன்மைப்படுத்தினார். இவருடன் இணைந்து பேராசிரியர்கள் பொற்கோ, அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் தமிழ் - ஜப்பானிய மொழி, இலக்கிய, இலக்கண, பண்பாட்டு ஒப்புறவுகளை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

ஜப்பானிய மொழியில் செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படும் மன்யோசு இலக்கியத்தின் 10, 11 ஆகிய தொகுதிகளைத் தமிழில் மனோன்மணி சண்முகதாஸ் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். இத்தொகுதிகள் சங்க அகப்பாடல் மரபைப் போன்று காதலுணர்வை இயற்கையின் பின்னணியிலிருந்து எடுத்துரைக்கின்றன. பிரிவு, காத்திருப்பு ஆகிய உள்ளடக்கங்கள், முதல்-கரு-உரி அமைப்பு, கூற்று, தலைமக்கள் பெயர் குறிப்பிடாதத் தன்மை, உள்ளுறை உத்தியைக் கையாள்தல் ஆகிய கூறுகள் தமிழ் அகப்பாடல் மரபுடன் ஒத்திசைவாக உள்ளன. பருவத்தை முதன்மைப்படுத்திய காதற்பாடல்கள் சங்க அகப்பாடல்களுடன் உள்ளடக்க மற்றும் எடுத்துரைப்பு நிலைகளில் ஒன்றுபட்டுள்ளபோதும் இவற்றை வாசிப்பதற்கான இலக்கிய அளவை சார்ந்த இலக்கண நூல் ஜப்பானிய மொழியில் உருவாகவில்லை. இவற்றை விளங்கிக்கொள்ளவும், மன்யோசு அகப்பாடல்களுக்கான இலக்கியக் கோட்பாட்டை உருவாக்கவும் தொல்காப்பியக் கவிதையியல் துணைபுரிவதாக அமைந்துள்ளது. ஏனெனில், ஐயப்பப்பணிக்கர், கோவை ஞானி, பெ.மாதையன், க.ஜவகர் போன்றோர் தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக்கோட்பாட்டை உலகளாவிய நிலையில் வைத்துப் பார்க்க இயலும் எனத் தனது ஆய்வுகளில் குறிப்பிடுவதிலிருந்து இப்பார்வை முதன்மைபெறுகின்றது. அவ்வகையில் ஜப்பானியக் கவிதைகளுக்குமான தனித்த இலக்கியக் கோட்பாட்டைக் கண்டறியும் முயற்சி அமைகின்றது.

முன்னுரை

செவ்வியல் காலத்தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் மொழி, இலக்கியம் குறித்த அளவையியல் பனுவலாகவும் அமைந்துள்ளது. இன்றைய ஆய்வுகள் பல்துறைப் பார்வைகளோடு அணுகும் முறையியலைக் கொண்டமைகின்றன. குறிப்பாக, பனுவியல், ஒப்பியல் குறித்த பார்வைகள் தொல்காப்பியத்தைச் சமகாலத் தன்மைக்கு எடுத்துச்செல்லும் தன்மையுடையனவாக உள்ளன. தமிழை உலகநிலையில வைத்துப் பல்வேறு மொழி, இலக்கிய, பண்பாடுகளுடன் ஒப்பீடுசெய்யும் ஆய்வுகள் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து நிகழ்கின்றன. குறிப்பாக, கிரேக்கம், இலத்தீன், சீனம், சமஸ்க்ருதம், பிராகிருத மொழிகளுக்கிடையேயான ஒப்பாய்வுகள் புதிய பார்வைகளை முன்வைத்துள்ளன. அவற்றுள் கீழைத்தேய ஒப்பாய்வுகளில் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பேராசிரியர் சுசுமு ஓனோ முன்னெடுத்த தமிழ்-ஜப்பானிய ஒப்பாய்வு முதன்மையானது. அவர் வேர்ச்சொல் ஒப்பாய்வை முதன்மைப்படுத்தினார். இவருடன் இணைந்து பேராசிரியர்கள் பொற்கோ, அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் தமிழ் - ஜப்பானிய மொழி, இலக்கிய, இலக்கண, பண்பாட்டு ஒப்புறவுகளை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

ஜப்பானிய மொழியில் செவ்வியல் இலக்கியமாகக் கருதப்படும் மன்யோசு இலக்கியத்தின் 10, 11 ஆகிய தொகுதிகளைத் தமிழில் மனோன்மணி சண்முகதாஸ் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். இத்தொகுதிகள் சங்க அகப்பாடல் மரபைப் போன்று காதலுணர்வை இயற்கையின் பின்னணியிலிருந்து எடுத்துரைக்கின்றன. பிரிவு, காத்திருப்பு ஆகிய உள்ளடக்கங்கள், முதல்-கரு-உரி அமைப்பு, கூற்று, தலைமக்கள் பெயர் குறிப்பிடாதத் தன்மை, உள்ளுறை உத்தியைக் கையாள்தல் ஆகிய கூறுகள் தமிழ் அகப்பாடல் மரபுடன் ஒத்திசைவாக உள்ளன. பருவத்தை முதன்மைப்படுத்திய காதற்பாடல்கள் சங்க அகப்பாடல்களுடன் உள்ளடக்க மற்றும் எடுத்துரைப்பு நிலைகளில் ஒன்றுபட்டுள்ளபோதும் இவற்றை வாசிப்பதற்கான இலக்கிய அளவை சார்ந்த இலக்கண நூல் ஜப்பானிய மொழியில் உருவாகவில்லை. இவற்றை விளங்கிக்கொள்ளவும், மன்யோசு அகப்பாடல்களுக்கான இலக்கியக் கோட்பாட்டை உருவாக்கவும் தொல்காப்பியக் கவிதையியல் துணைபுரிவதாக அமைந்துள்ளது. ஏனெனில், ஐயப்பப்பணிக்கர், கோவை ஞானி, பெ.மாதையன், க.ஜவகர் போன்றோர் தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக்கோட்பாட்டை உலகளாவிய நிலையில் வைத்துப் பார்க்க இயலும் எனத் தனது ஆய்வுகளில் குறிப்பிடுவதிலிருந்து இப்பார்வை முதன்மைபெறுகின்றது. அவ்வகையில் ஜப்பானியக் கவிதைகளுக்குமான தனித்த இலக்கியக் கோட்பாட்டைக் கண்டறியும் முயற்சிக்கான முன்மொழிதலை இக்கட்டுரை அமைகின்றது.

பனுவலியல் நோக்கில் தொல்காப்பியம்

இலக்கியச் சங்கேதம் எனப்படும் குறிச்செயல்பாட்டை (ஒழுங்கு, அமைப்பு) தொல்காப்பியம் நிகழ்த்துகின்றது. தொல்காப்பியச் செய்யுளியல் இலக்கிய ஆக்கம் (பழந்தமிழ் பனுவலாக்கம்) குறித்துப் பேசும் பகுதியாக அமைகின்றது. இப்பகுதியில் பனுவலை உருவாக்கல் மற்றும் பொருளுரைப்பு இவற்றை உள்ளடக்கிய அலகுகள் உள்ளன. திணை, கூற்று, துறை, காலம், இடம், யாப்பு போன்ற இலக்கிய/செய்யுளாக்கக் கூறுகள் பனுவலாக்கக் குறிகளாக இயங்குகின்றன. எனவே, "தொல்காப்பியம் பிரதியாக்கம் அல்லது பனுவலாக்க உத்திக்கான அடிப்படைகளையே விவரிக்கிறது என அடுத்த தளத்திற்கு விரிவுபடுத்தலாம்" (ஜமாலன். ப.31) கதையாடலுக்கான களமாகப் பொருளதிகாரத்தின் முற்பகுதிகள் அமைகின்றன. இவை சூழல், களம், இடம், மரபு குறித்த அறிவை வழங்குகின்றன. கதையாடலை முதல், கரு, உரி என்ற பொருள் குறித்த வகைப்பாடு விளக்குகிறது. இவை பனுவலின் பகுதியைக் கட்டமைகின்ற கூறுகளாகும். கூற்று, நோக்கு, முன்னம் மற்றும் மாட்டு என்பன பனுவலாக்க அமைப்பாகவும் பொருளுரைப்புக் கூறுகளாகவும் விளங்குகின்றன.

செய்யுளியல் உறுப்புகளை அதன் தொழிற்பாடு அடிப்படையில் கோ.பிரேமானந்தன், "உள்ளடக்கம் சார்ந்தவை (மொழி அலகுகள்), வடிவம் சார்ந்தவை (வடிவ அலகுகள்)" (மு.கு.நூ., பக்.89-94) என வகைப்படுத்தியுள்ளார். பனுவலின் செய்தி, கதை எனும் நிலையில் திணை, கைகோளும் கதையாடலைப்

பனுவலாக்கும் துணைமைக் கூறுகளாக கூற்று-கேட்போர், இடம்-காலம், முன்னம், பயன்-மெய்ப்பாடு, எச்சம் போனறவற்றையும், மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி போன்றவற்றை அடிப்படை அலகுகளாகவும் மரபு, தூக்கு, தொடை, பா, நோக்கு போன்றவை சொல்லாடலுக்கான அலகுகளாகவும் உள்ளன. நோக்கு சொல்லாடலையும் கதையாடலையும் இணைப்பதாக அமைகிறது. பனுவலுள்ளே உறைந்திருப்பது உள்ளுறை. கதையாடலை விவரிக்கும் முறையில் உள்ளுறை, இறைச்சி அதன் அடிக்கருத்தை விளங்கிக் கொள்ள பயன்படுத்தப்படுகின்றன.

மன்யோசு காதற்பாடல்களின் கவிதைக்கோட்பாடு உருவாக்கம்: தொல்காப்பியப் பனுவலியல் பின்னணியிலிருந்து தொல்காப்பியப் பனுவலியல் பார்வை அகம், புறம் என்ற பாடுபொருள் பகுப்பு மற்றும் கூற்று, களம், காலம் இவற்றை உள்ளடக்கிய பொருளுரைப்பு முறையியலைக் கொண்டிருப்பதால், சங்கப் பாடல்களை மட்டுமின்றி மற்ற உலக இலக்கியங்களுக்கும் விரிவுபடுத்திப் பொருள்கொள்ள முடியும். இதற்கான முன்னெடுப்புகள் அய்யப்பப் பணிக்கர், க.ஜவகர் போன்றோரால் தமிழ்ச்சூழலில் நிகழ்த்தப்பட்டுள்ளன.

காதற்பாடல்களைப் பொருள்கொள்வதற்கான முறையியல் பண்டைய ஜப்பானிய மொழியில் கிடைக்காமையால், ஜப்பானியச் சூழலை உள்வாங்கிய வாசகர்களாலேயே படித்துப் பொருள்கொள்வதில் தெளிவின்மை ஏற்படுவதாக மனோன்மணி சண்முகதாஸ் (நேர்காணல். வெளிவராதது. 2022) குறிப்பிடுகிறார். மன்யோசிற்கு உரை கண்ட சுசுமு ஓனோ தொல்காப்பியப் பின்புலத்தில் வாசித்தறியும் முயற்சி மன்யோசு இலக்கியத்திற்குப் புரிந்துகொள்ள உதவுவதை வரவேற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இரா. இரம்யா குறுந்தொகை மற்றும் மன்யோசு தொகுதி பத்து குறித்த ஆய்வில், கூற்று அடிப்படையில் இருமரபையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். மனோன்மணி சண்முகதாஸ், "தமிழர் - யப்பானியர் அகப்பொருள் மரபு ஓர் ஒப்பீட்டாய்வு" (1987), "ஜப்பான் - மன்யோசு செவ்வியல் இலக்கியத்தைக் கற்கத் தொல்காப்பியம் ஒரு திறவுகோல்" எனும் கட்டுரைகளில் (2020) தொல்காப்பியத் திணை, முதல், கரு, உரி அமைப்பு, கூற்று, முன்னம் ஆகிய அடிப்படைகளில் பொருத்தி விளக்கியுள்ளார். மன்யோசு காதற்பாடல்களை ஆய்வுசெய்த அ.சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் அவற்றின் அமைப்பு முறையையும் பொருள் தெளிவின்மையை விளக்குவது குறித்த உரையாடலில், "ஒருகாலத்தில் செவ்வியல் மொழியான இலத்தீனின் இலக்கண நெறிகள் பல ஐரோப்பிய மொழிகளுக்கு இலக்கண நெறிகளை உருவாக்க மாதிரியாகக் கொள்ளப்பட்டன. அதுபோல, மன்யோசு காதற் பாடல்களை வகைப்படுத்துவதற்குச் செவ்வியல் தமிழின் இலக்கணநூலான தொல்காப்பியம் குறிப்பிடும் காதல் உள்ளடக்கங்களை மாதிரியாகப் பயன்படுத்தலாம்" (Tamil-Japanese Relationship, P.152) என்கின்றனர். இப்பின்புலத்திலிருந்து தொல்காப்பியப் பனுவலியல் நோக்கில் மன்யோசு வேனிற்பருவப் பாடல்களை வாசித்தறியும் முயற்சி அமைகின்றது. தொல்காப்பியக் கவிதையியல் போன்று மன்யோசு காதற்பாடல்களுக்கான கவிதை முறையியலை இதனூடாக வரையறுக்க இயலும். இதனடிப்படையில் மன்யோசு வேனிற்பருவப் பாடல்களுக்கு (124) உள்ளடக்க அடைவு (முதல், கரு, உரிப்பொருள், கூற்று, அகச்சூழல்/முன்னம்) வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (காண்க. குறியியல் நோக்கில் ஐங்குறுநூற்றுப் பாலைத்திணைப் பாடல்களும் மன்யோசு வேனிற்பருவப் பாடல்களும் ஓர் ஒப்பீடு, தமிழ்நாடு மத்தியப பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்ட முனைவர்பட்ட ஆய்வேடு, பிப்.2024)

அகம் - புறம் பகுப்பு

மன்யோசு பாடல்களை 'உச்சி' (Uchi-உள்), 'சொதொ' (Soto-வெளி) எனப் பகுத்துக் காணும் பார்வை ஜப்பானியர்களிடமுண்டு. இப்பகுப்பு அகம், புறம் என்பதோடு ஒற்றுமையுடையதாக உள்ளது. இருப்பினும் இலக்கியக்கொள்கை நிலையிலான பகுப்பாக வரையறுக்கப்படவில்லை. மன்யோசு பாடல்களை அதன் பாடுபொருள் அடிப்படையில் அகம், புறம் எனப் பகுத்துப் பார்க்க இயலும். அவற்றைத் தனிக்கொள்கையாகவும் இதனூடே வளர்த்தெடுக்க முடியும். இதனடிப்படையில் 20 தொகுதிகளில்

இடம்பெறும் பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு மனோன்மணி சண்முகதாஸ் 12 வகைப்பாடுகளுக்குள் அடக்கியுள்ளார். (ஜப்பானியக் காதல் பாடல்கள், பக்.18-19)

பாவடிவம் - உள்ளடக்கம் இணைப்பு

மன்யோசு பாடல்களில் தங்க என்ற பாவடிவம் பருவத்தோடு காதலுணர்வை இணைத்துப் பாடுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. வேனில், கோடை, கார், பனி ஆகிய பருவங்களே பாடல்களின் முதன்மைக்களமாக அமைகின்றது. பாலைத்திணையைப் போலவே காலமே இதற்கு நிலமாகின்றது. இவற்றோடு பிரிவும் காத்திருப்புமாகிய உள்ளடக்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இருவரும் சந்திப்பது குறித்த காத்திருப்பு, ஏக்கம், வேட்கை குறித்த உணர்வுகள், வாகா/தங்க பாவடிவத்தின் கூறுகளான ஆளுருவாக்கம் (Personification), மகுறகொதப (Makurakotoba), உருவகம் (Metaphor) இவற்றின் மூலம் வெளிப்படுகின்றன. எனவே தொல்காப்பிய அமைப்பில் மன்யோசுப் பாடல்களைக் காண்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

முதல் - கரு - உரி அமைப்பு

மன்யோசு பத்தாவது தொகுதிப் பாடல்களுக்குப் பருவமே முதன்மையாக அமைவதால், பருவம் குறித்த சொல் கட்டாயம் இடம்பெற வேண்டுமென்ற பயில்முறை இருந்திருப்பதாக அறிய முடிகின்றது. பருவமும் பருவநடவடிக்கைகளும் வெளிப்படை மற்றும் குறிப்பு நிலையில் அமைந்து உரிப்பொருளை விளக்குகின்றன. பலவேளைகளில் இயற்கை நிகழ்வைச் சொல்லும் பாடலாகவே அமைய, அவற்றின் உருவகத்தன்மையை, பண்பாடு, சமூகம், வரலாற்றுச் சூழலிலிருந்து விளக்க வேண்டியுள்ளன. அதனைக் காதலுணர்வு கொண்ட பாடலாகப் படித்தறிய ஆளுருவாக்கத் தன்மையைக் கண்டறிவது பொருளுரைப்பின் அடிப்படை அலகாக வாசகருக்கு அமைகின்றது. சான்றாக,

"நேற்றுதான் சென்ற
ஆண்டு முடிந்திட்டதோ
வேனிற் புகாரும்
கசுகவின் மலையில்
விரையப் படருதே" (மன்.1843)

எனும் பாடலில் வேனிற் புகார் (வேனில் பனிமூட்டம்), 'கசுக' மலை ஆகியன முதற்பொருளாகவும், தலைவனின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தலைமகளின் உணர்வு (காத்திருப்பு நீள்தல்) உரிப்பொருளாகவும் அமைகின்றன. அதுபோல,

"ககிசி நரல்
தகமிதாவின் சாரல்
சகுர மலர்
உதிர்ந்து வந்திடுமே
காணும் மாந்தரும் உண்டோ" (மன்.1866)

எனும் பாடல், தலைமகளின் கூற்றாக அமைகின்றது. பண்பாட்டுச் சூழலை (Cultural Context) அடிப்படையாகக் கொண்டு பொருளுரைக்க வேண்டியுள்ளது. பண்பாட்டு நிலவியல் பின்னணியில், சகுர மலர் வேனிற் காலத்திற்குரிய மலராகவும்; மலரை அடிப்படையாகக் கொண்ட 'ஹனாமி' (மலர்க்காட்சி) விழாவையொட்டிய காதற்பாடலெனப் பொருள்கொண்டால், தகமதொவின் மலைச்சாரலில் 'கிகிசி' பறவை குரல்கொடுக்க வேனிற்பருவம் வந்ததை அறிந்துகொண்ட தலைமகள், தலைவனுடன் இணைந்து 'சகுர'மலரைக் காண்பதற்காகக் (ஹனாமி) காத்திருக்கும் உணர்வு வெளிப்படுவதாகக் கூறலாம். மலர் காண்பது வாழ்வின் புத்தெழுச்சியின் அடையாளமாகக் கருதப்படுகின்றதென்ற குறிப்புப் பொருளை உணரமுடியும். உரிப்பொருளை உணர்ந்துகொள்வதில் கூற்றும், களம்-காலம் (சூழல்) ஆகியன முதன்மை பெறுகின்றன. பருவமும் இயற்கைப் பொருள்களின் நடவடிக்கையும் இணைந்து உணர்வுநிலையைக்

குறிப்பாக வெளிப்படுத்துவதைக் காணும்போது, தொல்காப்பியப் பனுவலியல் வாசிப்பு பொருத்தமுடையதாகின்றது.

கூற்று மரபு

சங்கப் பாடல்களைப் போலவே தனிக்கூற்றுப் பாடல்களாக அமையும் மன்யோசு பத்தாவது தொகுதியின் பாடல்களைப் படிக்கும்பொழுது அவற்றுள்ளும் கூற்று மரபுள்ளதை உணர முடியும். அவை தலைவன், தலைவி, நெஞ்சு, இயற்கையுடன் விளித்துப் பேசும் ஒருபாற்கூற்று என்ற நிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தாய் கூற்றிலமைந்த பாடலொன்றும் உண்டு (மன்.1889). பெரும்பாலான பாடல்கள் தன் நெஞ்சோடும் இயற்கைப் பொருட்களோடும் பேசும் கூற்றுநிலைப் பாடல்களாக அமைந்துள்ளன. மன்யோசு பாடல்களில் தலைவி, தலைவன் கூற்றுகளில் யாரிடம் கூறியது என்பது அறிய இயலவில்லை. எனவே, அதுபோன்ற பாடல்கள் தன்நெஞ்சிற்குக் கூறும் தன்மையினவாகவே கொள்ளப்பட்டுள்ளன. இவை குறித்த கவிதைக்கொள்கைகளும் உரையாசிரியர்களிடம் தெளிவான விளக்கங்கள் இல்லாமையாலும், தொல்காப்பிய மாதிரியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. சான்றாக,

"காலைப் புகாரின்
வேனில் கதிர் மடியும்
மரங்களிடை
நகர்ந்திடு நிலவை
என்றுவரை காத்திடும்?" (மன்.1876)

இப்பாடல் தலைமகள் கூற்றாக அமைகின்றது. வேனிற் பருவம் வந்தும், வராமலிருக்கும் தலைவனை எண்ணி, 'காலைப் பனிக்காற்றின் கதிர்கள் மடியும் மரங்களிடையே நகரும் நிலவைக் காண்பதற்கு என்றுவரை காத்திருக்க வேண்டியுள்ளதோ' எனத் தலைமகள் வருந்தித் தன் நெஞ்சிற்குக் கூறியது இப்பாடலின் முன்னமாகும். இங்கு நிலவு தலைவனுக்கான குறியீடாவதைக் கொண்டு இப்பாடல் தலைமகள் கூற்றாகக் கொள்ளப்படுகிறது. எனவே, குறிப்புப் பொருளை எடுத்துரைப்பதில் சங்க அகப்பாடல்கள் போன்றே மன்யோசு காதற்பாடல்களிலும் கூற்றின் இடம் முதன்மையாக அமைகின்றது.

பனுவல் குறியியலில் கூற்று (பேச்சு) எனும் உறுப்பு குறிப்பீட்டுத் தன்மையில் அமைகின்றது. இப்பார்வை பனுவலைப் படித்துணரும் நிலையில் பெறப்படுகின்றது. பாடலைக் குறிப்பானாகக் கொண்டால், பாடல் உணர்த்தும் பொருள் அல்லது அது யாரின் குரல் எனும் நிலையில் குறிப்பீடாக விளங்குகின்றது.

உள்ளுறை

மன்யோசு பாடல்களில் உறைந்திருக்கும் குறிப்புப் பொருளைக் கண்டறிய தொல்காப்பியம் குறிப்பிடும் உள்ளுறை என்ற கவிதை எடுத்துரைப்புக் கூறு துணையாகின்றது. ஆனால் இத்தகைய கவிதைக்கூறை, ஜப்பானிய கவிதை மரபு தனியாகப் பெயரிடவில்லை. உள்ளுறையானது, 1:1 எனும் விகிதத்தில் அமையும் குறிப்பீட்டுப் பொருள் கொண்ட அமைப்பாகும். இது கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு பாடலின் அடிக்கருத்தை விளக்கத் துணைநிற்கும் கூறாகும். இதனுள் பருவம், நிலத்திற்கேற்ற கருப்பொருள் அமைய வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. சான்றாக,

"உகுவிசுவும்
கிளை கடக்க உமெ
சிதறிட்டது
சகுர மலரது
காலமும் நெருங்கிடும்" (மன்.1854)

இப்பாடலில், வேனிற் பருவம் வந்ததை அறிவிக்கும் குறியீடாக உமெ மலர் காட்டப்பட்டுள்ளது. 'உகுவிசு' பறவை 'உமெ' மரத்தின் கிளையிலிருந்து கடந்து செல்லும்பொழுது அம்மர மலர் சிதறிவிட்டது. சகுரமலர் பூக்கும் காலமும் நெருங்கப்போகிறது என்பது பாடலின் நேரடிப்பொருள் / புறப்பொருள் (Denotation) ஆகும்.

தலைமகனின் வருகைக்காகக் காத்திருக்கும் பெண், காலம் நீள்வதைக் கண்டு வருந்தும் சூழலாகக் கொண்டு படிக்கும்பொழுது (குத்துக்கோட்டு நிலையில்), உகுவிசு - பொருள்தேடி நெல்வயலுக்குச் சென்றுள்ள தலைமகன்; உமெ மலர் சிதறல் - தலைமகளின் நலிவு; சகுர மலர் - வேனிற் பருவத்தின் அடுத்த நகர்வு; குறித்த காலம் நீள்தல், ஹனாமி வருகை குறித்த ஏக்கம் என்ற உள்ளுறைப் பொருள்தளத்தில் அமைகின்றன.

ஜப்பானிய நிலவியல், பருவகால, பண்பாட்டு நடைமுறைகளை அறியும் வாசகருக்கே (Informed Reader) இப்பருவப் பாடல் காதற்தனிமையில் காத்திருக்கும் பெண்ணின் உணர்வெனவும் அதன் உள்ளுறைப் பொருளைக் கண்டறியும் தன்மையையும் அறிய இயலும். பருவப் பாடல்களாக இனங்காணப் பெறும் பத்தாவது தொகுதிப் பாடல்கள் பருவ நடவடிக்கைகளைக் கூறுவதன் வாயிலாக உள்ளுறைப் பொருள்களைக் கொண்டு காதலுணர்வை வெளிப்படுத்துவதை அறியலாம். இவற்றை விளக்கத் தொல்காப்பியப் பார்வை கைகொடுக்கும்.அகம் - புறம் எனும் பாடுபொருள் நிலையிலான பகுப்பு, அகப்பாடல்களை முதல்-கரு-உரி என வகைப்படுத்திக் காணல், கூற்று, களம்-காலம் (சூழல்), உள்ளுறை எனும் எடுத்துரைப்புக்கூறு ஆகிய கவிதைக்கோட்பாட்டின் பின்னணியில் அணுக மன்யோசு காதற்பாடல்கள் எளிதாகின்றன.

மகுறகொதப (தலையணைச் சொற்றொடர்)

மன்யோசு காதற்பாடல்களில் கையாளப்பட்டுள்ள உத்தியாக 'மகுறகொதப' உள்ளது. "மகுரகொதப என்னும் சொற்றொடரைத் தலையணைச் சொற்றொடர் எனத் தமிழிலே நேரடி மொழிபெயர்ப்புச் செய்யலாம்." (மனோன்மணி சண்முகதாஸ். ஜப்பானியக் காதற்பாடல்கள், ப.7) இது ஐந்து அசைகளாலான பெயர்ச்சொல்லாகும். "மகுறகொதப அல்லது தலையணைச்சொல், ஒருசொல் அல்லது தொடராக அமைந்து தொடரும் சொல் அல்லது தொடரில் தங்கி நிற்கும். அது ஒரு குறிப்பிட்ட சொல்லாக அல்லது தொடராக அமைந்திருக்கும். கிரேக்க செவ்வியல் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல்லணிகளை ஒத்ததாக இது காணப்படுகின்றது." (Pierson J.L. The Makura-kotaba of the Manyoshu, P.ii) அதாவது அடைமொழி போன்று கையாளப்பட்டுள்ளது. ஒரு இடத்தின் பெயர், பருவச்சொல் போன்றன தலையணைச் சொல்லாக வருகின்றன. சான்றாக, "தளிர்கள் தாழும் வேனில்", "அடி இழுக்கும் மலை". இவை பாடலின் அடிக்கருத்தை விளங்கிக் கொள்ள துணைசெய்கின்றன. இவ்வடிவம் காதற்பாடல்களுக்குரியதாக உள்ளது. இது மேல்நிலைப் பொருள், ஆழ்நிலைப் பொருளெனும் இருதளங்களைக் கொண்டிருக்கிறது. காதற்பாடல்களில் திரும்பத் திரும்ப வரும் தொடரமைப்பாகவும் விளங்குகின்றது. இது வாய்ப்பாடு போன்றிருக்கும். இது, "1.உவமை, 2.அடைமொழி, 3.உருவகம், 4.குறிப்புப்பொருள் அல்லது பண்பாட்டுப்பொருள் ஆகிய நிலைகளில் மன்யோசுப் பாடல்களில் வந்துள்ளது." (மனோன்மணி சண்முகதாஸ் நேர்காணல், 2022)

Fuyu gomori	"பனி மறையும்
Faru sari kureba	வேனிலும் வந்திடவே
Asifiki no	அடி இழுக்கும்
Yama ni mo noni mo	மலையிலும் வயலிலும்
Uguvisu naku mo	உகுவிசு நரலும்" (மன்.1824)

இப்பாடலில், பனி மறையும் வேனில், அடி இழுக்கும் மலை என்பன தலையணைச் சொற்றொடராக வந்துள்ளன. சில பாடல்களில் மட்டுமே இவ்வாறு இரு தலையணைச் சொற்றொடர்கள் வருவதுண்டு. வேனில் பருவத்தின் வருகைக்கு அடையாக, பனி மறைதல் வந்துள்ளது. மலையின் தன்மையைக் குறிப்பிட அடி இழுக்கும் எனும் தொடர் வந்துள்ளது. இங்கு 'அடி இழுக்கும் மலை' என்பது அடைமொழி என்பதைக் கடந்து குறிப்பு/பண்பாட்டுப் பொருளைக் கொண்டிருக்கிறது. அதாவது, மலையின் மீது ஏறுபவர்களுக்கு மலையேற்றம் துயரைக் கொடுக்கும். காலைப் பிடித்திழுக்கும் தன்மையிருக்கும். எனவே, அத்தகைய துயர் கொண்ட மலையிலும் உகுவிசுவின் பறவையின் குரல் ஒலிக்கும் என்றது, தலைவனுக்கு வேனில் வருகையை அது தெரிவிக்கும் எனத் தலைமகள் குறிப்பிடுவதாக அமைகிறது.

ஐங்குறுநூற்றுப் பாலைத்திணைப் பாடல்களிலும் பெயர்ச்சொற்களை விளக்க இதுபோன்ற அடைமொழி, உருவகம், குறிப்புப்பொருள் நிலைகளில் தொடர்கள் வருகின்றன. சான்றாக, "சிறுகண் யானை யாள்வீழ்த்துத்/ திரிதரும் நீளிடை யருஞ்சுரம்" (ஐங்.314), "கழைமுதிர் சோலைக் காடு" (ஐங்.315.4), "அரும்பதங் கொண்ட பெரும்பத வேனில்" (ஐங்.400.1-3). இவை போன்று நிலம், பருவம் சார்ந்த அடைகள், உருவகங்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

மன்யோசு 11 ஆவது தொகுதியிலுள்ள தலையணைச் சொற்றொடர்களை உள்ளுறையுடன் பொருத்தி மனோன்மணி சண்முகதாஸ் ஆய்வுசெய்துள்ளார். (ஜப்பானிய மன்யோசுக் காதற் பாடல்களில் மகுறகொதப (Makura kotoba) ஓர் ஆய்வு. 11ஆவது உலகத்தமிழராய்ச்சி மாநாடு. சென்னை, 2023.) மேற்கொண்டு மற்ற காதற்பாடல்களுடனும் பொருத்திப் பார்க்க முடியும்.

இவ்வாறு பல்வேறு தொல்காப்பியக் கவிதைக்கூறுகளைக் கொண்டு, மன்யோசு காதற்பாடல்களுக்கு வடிவம், உள்ளடக்கம், உத்தி எனும் நிலைகளில் பொருத்திப் பார்க்க இயலும். இம்மாதிரியைக் கொண்டு 8, 10, 11 ஆம் தொகுதிகள் மற்றும் மற்ற தொகுதிகளில் கலந்துள்ள காதற்பாடல்களைத் காதல் பாடல்களையும் தொல்காப்பிய அடிப்படையில் பகுத்து ஆராய இயலும். இதன்மூலம் மன்யோசுக் கவிதைகளுக்குத் தொல்காப்பிய அடிப்படையிலான ஒரு வாசிப்பைக் கொடுக்க இயலும்.

துணையன்கள்

1. இரம்யா இரா., தமிழில் குறுந்தொகை, ஜப்பானியத்தில் மன்யோசு தொகுதி
2. பத்து ஓர் ஒப்பாய்வு. முனைவர்பட்ட ஆய்வு, இந்திய மொழிகள் மையம், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி, 2017.
3. பிரேமானந்தன் கோ., சிலப்பதிகாரம், மணிமேகலை பெண்மையின் நாடகம்
4. (குறியியல் ஆய்வு). முனைவர்பட்ட ஆய்வேடு. புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம். புதுச்சேரி, 2002.
5. மனோன்மணி சண்முகதாஸ். ஜப்பானியக் காதற் பாடல்கள், உலகத்
6. தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.
7. மனோன்மணி சண்முகதாஸ். தமிழர் - யப்பானியர் வாழ்வில் தைப்பொங்கல்.
8. …… யாழ்ப்பாணம், 2003.
9. மனோன்மணி சண்முகதாஸ். மன்யோசு காதற் காட்சிகள். கொழும்பு
10. தமிழ்ச்சங்கம். இலங்கை, 1992.
11. மனோன்மணி சண்முகதாஸ். ஜப்பானியக் காதற் பாடல்கள். கோகுலம்.
12. யாழ்ப்பாணம், 2000.
13. மனோன்மணி சண்முகதாஸ். ஜப்பானிய மன்யோசுக் காதற் பாடல்களில்
14. மகுறகொதப (Makura kotoba) ஓர் ஆய்வு. 11ஆவது உலகத்தமிழராய்ச்சி மாநாடு. சென்னை, 2023.
15. மனோன்மணி சண்முகதாஸ். தமிழர் - யப்பானியர் அகப்பொருள் மரபு ஓர்
16. ஒப்பீட்டாய்வு. ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு. மலேசியா, 1987.
17. ஜமாலன். சொற்களால் நெய்யப்படும் உலகு. நன்னூல் பதிப்பகம்.
18. திருத்துறைப்பூண்டி, 2021.
19. ஜவகர் க. திணைவெளி - திணையியல் கட்டுரைகள். புதுப்புனல். சென்னை, 2020.
20. Haruo Shirane, Japan and the Culture of the Four Seasons - Nature, Literature, and
21. the Arts, Columbia University Press, New York, 2012.
22. Sanmugadas Arunasalam & Manonmani Sanmugadas. Tamil-Japanese Relationship.
23. Institute of Asian Studies. Chennai, 2011.
24. Victor Dickins F. The Makura-kotpba of Primitive Japanese Verse.1908.

தொ.மா.க. 226

தொல்காப்பியம் - தெக்கனே கிரம்மதிகா - அல்-கிதாப்பு ஆகிய மூன்று மரபிலக்கணங்களின் ஒலியியல் விளக்கம்: ஓர் ஒப்பாய்வு

முனைவர் த. சுந்தரராஜ்
விரிவுரையாளர்,
ஆசிய மொழிகள் & பண்பாட்டுத் துறை, தேசிய கல்விக் கழகம்,
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்
sundarasu@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

தமிழ், கிரேக்கம், அறபு ஆகிய மூன்று செம்மொழிகளும் நீண்ட இலக்கண மரபைக் கொண்டவை. தத்தம் இலக்கண மரபில் தோன்றிய மிகப்பழமையான நூல்களாகவும், இன்றும் பயன்பாட்டில் இருக்கும் முதல் மரபிலக்கணங்களாகவும் தொல்காப்பியம் - தெக்கனே கிரம்மதிகா (τέχνη γραμματική) - அல்-கிதாப்பு (الكتاب) ஆகிய மூன்று இலக்கணங்களும் திகழ்கின்றன. இம்மூன்று இலக்கண நூல்களில் காலத்தால் பழமையானது தொல்காப்பியம்(கி.மு.300). கிரேக்க இலக்கணமான தெஹ்நி க்ரம்மதிகி(கி.மு.200) தொல்காப்பியத்தை விட நூறாண்டுகளுக்குப் பிந்தியது. அறபு இலக்கணமான அல்-கிதாப்போ(கி.பி.800), தொல்காப்பியத்தை விட ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிந்தியது. வெவ்வேறு சிந்தனைப் பள்ளிகளிலிருந்து தோன்றிய இம்மூன்று இலக்கணங்களும் தத்தம் மரபின் முதன்மையான இலக்கணங்களாகத் திகழ்வதால், தத்தம் மொழியின் ஒலிகளைப் பற்றி விரிவாக விளக்குவதோடு, வளமான கலைச்சொல் பயன்பாட்டைக் கொண்டிருக்கின்றன.

இம்மூன்று மரபிலக்கணங்களும் தத்தம் மொழியின் ஒலிகளை விரிவாக விளக்குகின்றன. ஒலிகளை விளக்கும் ஒலியியல் விளக்குமுறையில், ஒலியியல் கொள்கையில் இம்மூன்று மரபிற்கும் இடையில் பல ஒற்றுமைகளும் சில வேறுபாடுகளும் இருக்கின்றன.

ஒலியியல் விளக்கம், ஒலிகளை வகைப்படுத்தும் முறை, ஒலிவகைகளுக்கு சூட்டப்படும் பெயர்கள், கலைச்சொல் உருவாக்கம், ஒலிப்பிடம், ஒலிப்புமுறை சார்ந்த ஒலிப்பியல் கொள்கைகள் ஆகியவற்றோடு, ஒட்டுமொத்த இலக்கணத்தில் ஒலியியலுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் முதலியவற்றையும் ஒப்பிட்டு, ஒவ்வொரு இலக்கணிக்கும் அல்லது இலக்கணத்திற்கும் உள்ள தனிச்சிறப்புகளை இனம் காட்டும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

குறிசொற்கள்: தொல்காப்பியம், தெக்கனே கிரம்மதிகா, அல்-கிதாப்பு, ஒலியியல், மரபிலக்கணம்.

முன்னுரை

முதலில், தொல்காப்பியம் - தெக்கனே கிரம்மதிகா - அல்-கிதாப்பு என்னும் மூன்று பெயர்களைப் பற்றிப் பார்ப்போம். தொல்காப்பியம் என்பது தமிழில் இன்று கிடைக்கும் மிகப்பழமையான இலக்கண நூலின் பெயர். தெக்கனே கிரம்மதிகா என்பது கிரேக்க மொழியில் இன்று கிடைக்கும் மிகப்பழமையான இலக்கண நூலின் பெயர். அல்-கிதாப்பு என்பது அறபு மொழியில் இன்று கிடைக்கும் பழமையான இலக்கண நூலின் பெயர். இம்மூன்று இலக்கண நூல்களும் வெவ்வேறு காலகட்டங்களில் தோன்றின. தொல்காப்பியம் கிமு.300-இல் தோன்றியதாகவும், தெக்கனே கிரம்மதிகா கிமு.200-இல் தோன்றியதாகவும் கருதப்படுகின்றன. அல்-கிதாப்பு கிபி.800-இல் தோன்றியது.

வெவ்வேறு நிலப்பரப்பில், வெவ்வேறு மொழிக்குடும்பங்களின் மூலமொழிகளாக விளங்கும் தமிழ், கிரேக்கம், அறபு ஆகிய மூன்று செம்மொழிகளில் தோன்றிய இம்மூன்று மரபிலக்கணங்களை ஒப்பிடுவதற்கு அடிப்படைக்காரணங்கள் இரண்டு. ஒன்று, இம்மூன்று இலக்கணங்களும் தத்தம் மொழிமரபில் இன்று கிடைக்கும் முதல் மரபிலக்கணம் என்னும் தகுதி. இரண்டு, செம்மொழிகளின் முதல் இலக்கணங்களாக விளங்கும் இம்மூன்று இலக்கணங்களையும் ஒப்பிடுவதன் வழி, ஒவ்வொரு இலக்கணத்தின் தனித்தன்மைகளை இனம் காண்பதோடு, பொதுப்பண்புகளையும் அறிந்துகொள்வது. இந்த ஒப்பீடு முழுக்கமுழுக்க ஒலியியல் கோட்பாடு, ஒலியியல் விளக்கம் என்னும் இரு சிறு மொழியியல் கூறுகளின் வழி மேற்கொள்ளப்படுகிறது.

ஒலியியல் பகுதி

இம்மூன்று மரபிலக்கணங்களும் தத்தம் மொழியின் ஒலிகளைப் பற்றி விளக்கும் இலக்கணப்பகுதிகளைப் பார்ப்போம். தொல்காப்பியம் தமிழ் ஒலிகளின் ஒலிப்பிடம், ஒலிப்புமுறை பற்றி மூன்றாவது இயலான பிறப்பியலில் பேசுகிறது. தமிழ் ஒலிகளின் வகை, தொகை பற்றி நூன்மரபு என்னும் முதல் இயலில் பேசுகிறது. ஆயினும் எழுத்ததிகாரம் முழுக்க தமிழ் ஒலிகளின் அமைப்பு, நிலை, வருகை பற்றிய விளக்கங்கங்கள் விரவியிருக்கின்றன. தெக்கனே கிரம்மதிகா 'உறுப்புகள்'(στοιχείου) என்னும் ஆறாவது பகுதியில் கிரேக்க ஒலிகளின் எண்ணிக்கை, வகை-தொகை, ஒலிப்பிடம், ஒலிப்புமுறை போன்ற ஒலியியல் கருத்துகளை விவரிக்கிறது. அல்-கிதாப்பு அறபு ஒலிகளின் ஒலிப்பிடம், ஒலிப்புமுறை பற்றி 565-வது இயலில் பேசுகிறது. அதனைத் தொடர்ந்து வரும் ஆறு இயல்களோடு சேர்த்து (இயல்:565-571), நூலின் இறுதியில் அமைந்துள்ள ஏழு இயல்களில் அறபு ஒலிகளைப் பற்றிய ஒலியியல் விளக்கம் விரவிக்கிடக்கிறது. தொல்காப்பியத்திலும் அல்-கிதாப்பிலும் இயல் அமைப்பும், பகுப்பும் கட்டொழுங்கோடு அமைந்திருக்கின்றன. ஆனால் தெக்கனே கிரம்மதிகாவில் இயல் வடிவிலான அமைப்பைக் காணமுடியவில்லை. தெக்கனே கிரம்மதிகா என்னும் முழு நூலே ஓர் இயல் அளவில் தான் அமைந்திருக்கிறது. இன்றைய பதிப்பில் 15 பக்கங்களில் அமைந்த மிகச்சிறிய இலக்கண நூல் தான் இந்தக் கிரேக்க இலக்கணம். ஆனால் தொல்காப்பியம் 1610 நூற்பாக்களிலும், உரைநடை வடிவில் அமைந்த அல்-கிதாப்பு 900 பக்கங்களிலும் அமைந்த மிக விரிவான இலக்கண நூல்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டிலும் தெக்கனே கிரம்மதிகா-வை ஆய்வுசெய்த பல அறிஞர்கள் அதனை ஓர் முழுமையான இலக்கணநூலாக அங்கீகரித்தனர்.[6] ஆனால், இருபத்தோராம் நூற்றாண்டில் தற்கால மொழியியல் வளர்ச்சியின் பின்புலத்திலிருந்து ஆய்ந்த சில மொழியியலாளர்கள், அது ஒரு முழுமையான இலக்கண நூல் அல்ல, கிரேக்க மொழியைக் கற்பிக்கப் பயன்பட்ட ஒரு 'சுருக்கமான இலக்கணக் கையேடு' என்று அழைக்கிறார்கள்.[7]

---

[6] Thomas Davidson(1874); Alan Kemp (1989).

[7] Minna Seppänen, 2014, *Defining the art of grammar: Ancient perceptions of γραμματική and grammatica,P.*48.

ஒலியியல் விளக்கத்தின் தொடக்கம்

தொல்காப்பியத்தின் ஆசிரியரான தொல்காப்பியர், தெக்கனே கிரம்மதிகா-வின் ஆசிரியரான டையோனிசியஸ் த்ராக்ஷ், அல்-கிதாப்பின் ஆசிரியரான ஸீபவைஹி ஆகிய மூன்று மரபிலக்கணிகளும் தம் இலக்கண விளக்கத்தில் ஒலியியல் பகுதியை எவ்வாறு தொடங்குகிறார்கள் என்று பார்ப்போம்.

தொல்காப்பியர் "எழுத்தெனப் படுப" என்றும், டையோனிசியஸ் த்ராக்ஷ் "இருபத்து நான்கு எழுத்துகள்(γράμματά-க்ரம்மதா)" என்றும், ஸீபவைஹி "இருபத்து ஒன்பது மூல அறபு எழுத்துகள்(حروف - ஹுரூஃபி[2])" என்று தங்கள் ஒலியியல் விளக்கத்தைத் தொடங்குகிறார்கள். இம்மூன்று மரபிலக்கணிகளும் 'எழுத்து' என்னும் கலைச்சொல்லின் வழியே தங்களது ஒலியியல் விளக்கத்தைத் தொடங்குகிறார்கள். ஒரு மொழியில் உள்ள மொத்த எழுத்துகள் யாவை? என்னும் வினாவிற்கான விடையாகவே அவர்களது விவரிப்புகள் அமைந்துள்ளன. அந்த விவரிப்புகள் சுருங்கக்கூறி விளங்க வைக்கும் முறையில் அமைந்துள்ளன. முதலில் மொத்த எழுத்துகளின் எண்ணிக்கையைத் தொகுத்துக் கூறிவிட்டி, பின்பு அவற்றின் வகைகளைப் பகுத்துக் கூறுகின்றார்கள்.

> *"எழுத்து எனப்படுப*
> *அகர முதல் னகர இறுவாய்*
> *முப்பஃது என்ப*
> *சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே" - தொல்காப்பியம். எழு.1*

> *"எழுத்துகள் இருபத்து நான்கு, ஆல்ஃபா (α)-முதல் ஒமேகா (ω) வரை"*[8]
> *(γράμματά ἐστιν εἰκοσιτέσσαρα ἀπο τοῦ α μέχρι τοῦ ω.)*
> *- தெக்கனே கிரம்மதிகா, உறுப்புகள் (6).*

> *"இருபத்து ஒன்பது மூல அறபு எழுத்துகள்"*[9]
> *(حروف الأصل الأحادية والعشرون حرف)*
> *- அல்-கிதாப்பு, இயல் 565.*

இவை மொத்த எழுத்துகளைப் பற்றிய விளக்கம். இங்கு தொல்காப்பியரும் டையோனிசியஸ் த்ராக்ஷும் ஒரே முறையில், அதாவது அகரவரிசையின் முதல் எழுத்தையும், இறுதி எழுத்தையும் மட்டும் சுட்டி, ஒட்டுமொத்த எழுத்துத்தொகுதியை அவற்றின் எண்ணிக்கையைக் கொண்டு விளக்குகிறார்கள். ஆனால் ஸீபவைஹி, 'இருபத்து ஒன்பது மூல அறபு எழுத்துகள்' என்னும் தொடரைத் தொடர்ந்து, அறபு அகரவரிசையில் உள்ள ஒவ்வொரு எழுத்தையும் வரிசையாகச் சுட்டுகிறார். ஒரு மொழியில் உள்ள ஒலித்தொகுதியை அல்லது அகரவரிசையை விளக்கும் போது, வரிசைமுறையைப் பிரதிபலிக்கும் முதல் எழுத்தையும், இறுதி எழுத்தையும் சுட்டுதல், ஒலித்தொகுதியின் ஒட்டுமொத்த எண்ணிக்கையைச் சுட்டுதல் என்னும் இரு பண்புகளையும் மரபிலக்கணிகள் முதன்மையாகக் கருதுகிறார்கள்.

ஒலியியல் விளக்கத்தின் தொடக்கப்புள்ளியாக அமையும் 'எழுத்து' என்னும் கலைச்சொல் பயன்பாட்டில் இம்மூன்று மரபிலக்கணிகளுக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. தொல்காப்பியர் கையாளும் 'எழுத்து', டையோனிசியஸ் த்ராக்ஷ் பயன்படுத்தும் 'க்ரம்ம'(γράμμα), ஸீபவைஹி கையாளும் 'ஹற்ஃப்' (حرف) ஆகிய மூன்று கலைச்சொற்களையும் ஒப்பாய்வு செய்த த.சுந்தரராஜ், அந்த ஒப்புமையைப் பற்றி பின்வருமாறு விவரிக்கிறார்.

---

[8] த. சுந்தரராஜ், *தெக்கனே கிரம்மதிகா* (தமிழ் மொழிபெயர்ப்பு)

[9] த. சுந்தரராஜ், *தொல்காப்பியமும் அல்-கிதாப்பும்*, ப.215.

"தமிழ், கிரேக்கம், அறபு ஆகிய மூன்று செவ்வியல் மரபின் முதல் இலக்கணிகளும் ஒலியை குறிக்க தனிக்கலைச்சொல் ஏதும் பயன்படுத்தவில்லை. ஒலிக்கு அவர்கள் பயன்படுத்தும் கலைச்சொல் ('எழுத்து','க்ரம்ம','ஹ்^{2}ற்ஃப்') 'பலபொருள் ஒரு சொல்'-ஆக அமைந்திருக்கிறது. அதாவது, ஒலியை குறிக்க அவர்கள் கையாளும் 'எழுத்து', 'க்ரம்ம', 'ஹ்^{2}ற்ஃப்' என்னும் கலைச்சொற்கள் தத்தம் இலக்கணத்தில் ஒலியனியல் பொருள்களான (1)ஒலி (phone), (2)ஒலியின் வரிவடிவம்(grapheme), (3)ஒலியன் (phoneme) ஆகிய மூன்று பொருள்களை குறித்து வருகின்றன. தொல்காப்பியரும் டையோனிசியஸ் த்ராக்ஷும் ஒலியை குறிக்க கையாளும் சொற்களின் ('எழுத்து', 'க்ரம்ம') நேர்ப்பொருள் (Literal meaning) 'வரிவடிவம்' ஆகும். எனவே அக்கலைச்சொல்லை ஒலி, ஒலியன், ஒலியின் வரிவடிவம் என ஒலியனியல் பொருள்களில் மட்டும் தொல்காப்பியரும் டையோனிசியஸ் த்ராக்ஷும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் ஸீபவைஹியின் 'ஹ்^{2}ற்ஃப்', (மொழியின்) 'சிறு கூறு' அல்லது 'சிறு துண்டு' என்னும் நேர்ப்பொருளைக் (Literal meaning) கொண்டது (M.G.Carter, 2004,p.53).அதாவதும் மொழியின் 'சிறு கூறு/துண்டு' என்னும் பொதுப்பொருளில் அமைவதால், அச்சொல்லை அவர் தொடரியல், உருபனியல், ஒலியனியல் ஆகிய மூன்றிற்கும் பொதுவான கலைச்சொல்லாக ஏழு பொருள்களில் பயன்படுத்துகிறார்.

'எழுத்து', 'க்ரம்ம', 'ஹ்^{2}ற்ஃப்' ஆகிய கலைச்சொற்கள் தத்தம் இலக்கணங்களில் பலபொருள்களைக் குறித்து வந்தாலும், அவற்றுள் முதன்மையான பொருள்களாக வரிவடிவமும் ஒலிவடிவமுமே இருக்கின்றன".[10] மேலும், அம்மொழிகளின் பொது வழக்கில் அச்சொற்களின் முதன்மைப் பொருளாக வரிவடிவமே திகழ்கிறது.

எழுத்து என்றால் என்ன? என்பதற்கான துல்லியமான வரையறையை தொல்காப்பியரும், ஸீபவைஹியும் கொடுக்கவில்லை. ஆனால், டையோனிசியஸ் த்ராக்ஷ் பின்வருமாறு வரையறுக்கிறார்.

"இருபத்து நான்கு எழுத்துகள், ஆல்ஃபா (α/அ/a)-விலிருந்து ஒமேகா (ω/ஒ/ō) வரை. அவற்றை 'க்^{3}ரம்மத' / γράμματά (எழுத்துகள்) என்று அழைப்பர், ஏனென்றால் அவை வரையப்பட்ட கோடுகளிலிருந்தும் (γραμμαῖς/க்^{3}ரம்மைஸ்), கீறல்களிலிருந்தும் (ξυσμαῖς/க்ஸிஸுமைஸ்) உருவாக்கப்பட்டவை. தொடக்க காலத்தில் 'எழுது' (γράψαι-க்^{3}ராப்சை) என்னும் வினை 'கீறல்' (ξῦσαι/க்ஸியுஸை) என்னும் பொருளில் கையாளப்பட்டது, ஹோமரின் இலியட்டில் (XI.388):

"இப்போது, என் உள்ளங்கால் கீறப்பட்டதால், நீங்கள் பெருமை கொள்கிறீர்கள்" என்று வருகிறது.

இதே எழுத்துகளை 'ஸ்**தொய்**ஹெய்**ய** / στοιχεῖα' (**உறுப்புகள்** / elements) என்றும் அழைப்பர். ஏனென்றால் அவை தங்களுக்குள் குறிப்பிட்ட வரிசையையும் ஒழுங்கையும் கொண்டுள்ளன."[11]

இங்கு டையோனிசியஸ் த்ராக்ஷின் வரையறை, 'எழுத்து' என்னும் சொல்லுக்கு பொதுவழக்கில் இருந்த 'வரிவடிவம்' என்னும் பொருளை மட்டும் முதன்மைப்படுத்தும் மேலோட்டமான வரையறையாக நின்றுவிட்டது. 'எழுத்து' என்னும் சொல்லை மொழியியல் கலைச்சொல்லாக அணுகும் முறையில் இந்த வரையறை அமையவில்லை. ஆனால் இந்த மூன்று மரபிலக்கணிகளின் மீமொழியில் அது வெளிப்படுகிறது.

ஒலி-மாற்றொலி

மொழியில் உள்ள ஒலிகளைப் பற்றிய பொது விளக்கத்தில், மூல அல்லது முதன்மையான ஒலிகளைத் தொடர்ந்து மாற்றொலிகளைப் பற்றி விவரிக்கும் முறை தொல்காப்பியர், ஸீபவைஹி ஆகிய இருவரிடமும்

[10] த. சுந்தரராஜ் (2022). 'தொல்காப்பியம் – தெஹ்நி க்ரம்மதிகி - அல்கிதாப்பு ஆகிய மூன்று மரபிலக்கணங்களும் ஒலியைக் (phone) குறிக்கக் கையாளும் கலைச்சொற்கள்: ஓர் ஒப்பீடு', ப.120.

[11] த. சுந்தரராஜ், *தெக்கனே கிரம்மதிகா* (தமிழ் மொழிபெயர்ப்பு)

காணமுடிகிறது. ஆனால் டையோனிசியஸ் த்ராக்ஷின் கிரேக்க ஒலிகளைப் பற்றிய விளக்கத்தில் மாற்றொலியை பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை.

மாற்றொலி பற்றிப் பேசும் தொல்காப்பியரும், ஸீபவைஹியும் மாற்றொலிக்கோட்பாட்டிலும், விளக்கத்திலும் நிறைய வேறுபடுகிறார்கள். தொல்காப்பியர் மாற்றொலிகளை மூல ஒலிகளுக்கு நிகராகக் கருதி அவற்றை "எழுத்தோரன்ன" என்று குறிப்பிட்டாலும், தமிழ் ஒலித்தொகுதியின் மொத்த எண்ணிக்கைக்குள் அடக்காமல், மூன்று மாற்றொலிகள் (சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே) என்று தனியே குறிப்பிடுகிறார். ஆனால் ஸீபவைஹி மூல அறபு ஒலிகள் இருபத்து ஒன்பதோடு, பதிமூன்று மாற்றொலிகளையும் இணைத்து, அறபு ஒலித்தொகுதியின் மொத்த எண்ணிக்கை 42 என்று குறிப்பிடுகிறார். ஆனால் மூல அறபு ஒலிகள் 29 தான் என்பது இன்று வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. இந்த இடத்தில் தொல்காப்பியரின் மொழியியல் தெளிவை நாம் கண்டுணரலாம். அதாவது மாற்றொலி என்பது மாற்றத்திற்குரியது, மூல ஒலிகளே மாறாதவை என்கிற மொழியியல் தெளிவு தொல்காப்பியருக்கு இருந்தது. அதனால் தான் தமிழ் மரபிலேயே, தொல்காப்பியர் மூன்று மாற்றொலிகளைக் குறிப்பிட, பிற்காலத்தில் (13-ஆம் நூற்றாண்டு) வந்த நன்னூலார் (பவணந்தி முனிவர்) பத்து சார்பெழுத்துகளைக் குறிப்பிடுகிறார்.

அதே போன்று, மூல ஒலிகளின் பெயர், முறை, தொகை ஆகிய மூன்றும் தமிழ் இலக்கண மரபில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே உள்ளன. எனவே, அவற்றை "என்ப" என்னும் மேற்கோளோடு சுட்டுகின்றார். ஆனால், சார்பெழுத்துகளை அவ்வாறு மேற்கோளோடு சுட்டவில்லை, ஏனென்றால் அவற்றின் பெயர்களும், எண்ணிக்கையும் தொல்காப்பியரே உருவாக்கியவை. இலக்கண விளக்கத்தில் இதுபோன்ற ஆய்வுமுறையை தொல்காப்பியரிடம் காணலாம். ஆனால் இந்த இடத்தில் ஸீபவைஹி அவ்வாறு விளக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாற்றொலிக்கோட்பாட்டில் இருவரும் வேறுபடுகிறார்கள். தொல்காப்பியர் மாற்றொலிகளை சார்ந்து வரும் மரபுடையன/"சார்ந்து வரல்", "எழுத்தோரன்ன" என வரையறுக்கிறார். "சார்ந்து வரல்" என்றால், மொழியில் தனித்து இயங்காது மூல ஒலிகளுடன் சேர்ந்து வரும் இயல்புடையன என்பதாகும். "எழுத்தோரன்ன" என்றால் மூல எழுத்தைப் போன்றது எனப் பொருள். இவ்வாறு மூல ஒலிகளை மூலமாகக் கொண்டு அல்லது அவற்றைச் சார்ந்து வருவதே 'மாற்றொலி' என்பது தொல்காப்பியரின் விளக்கம். ஆனால், ஸீபவைஹி மாற்றொலியை "நுட்பமான ஒலிவேறுபாடுகளுடன் பேசுவதற்கு உதவுபவை" என்றும், அல்-குற்ஆனும் அறபுக்கவிதைகளும் இவற்றைச் சிறப்பொலிகளாக ஏற்றுக்கொள்கின்றன" [12] என்றும் வறையறுக்கிறார். இந்த வரையறையை விட மாற்றொலியைச் சுட்ட ஸீபவைஹி பயன்படுத்தும் கலைச்சொல் தான் அவரது மாற்றொலிக் கொள்கையை தெளிவுபடுத்துகிறது. ஸீபவைஹி மாற்றொலியை "ஃபுறூஉ" (فُرُوع) என்று அழைக்கிறார். அதன் பொருள் 'மூல ஒலியிலிருந்து பிரிந்த ஒலி' (Derived sound) அல்லது 'கிளை ஒலி' (branche) என்பதாகும். அதாவது, தொல்காப்பியர் சார்ந்து வருவது என்றும், ஸீபவைஹி பிரிந்து வருவது என்றும் மாற்றொலியை வரையறுக்கிறார்கள். இந்த முரண் மாற்றொலியை அவர்கள் அணுகும் முறையிலிருந்து தோன்றுகிறது.

உயிர்-மெய்

ஒலிகளை முதலெழுத்து-சார்பெழுத்து என வகைப்படுத்திய பின், முதல் எழுத்துகளை உயிர் -மெய் என பகுத்து விளக்குகிறார்கள். மெய்யொலியின் பிறப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டது உயிரொலியின் பிறப்பு என்னும் கருத்தில் இம்மூன்று மரபிலக்கணிகளும் ஒன்றுபடுகிறார்கள். இது தற்கால ஒலியியல் அறிஞர்களும் மெய்ப்பித்த பொதுவான ஒலியியல் கோட்பாடு. எனவே மூவரும் உயிரொலிகளின் பிறப்பையும், மெய்யொலிகளின் பிறப்பையும் தனித்தனியை விளக்குகின்றனர். தொல்காப்பியரும்

[12] A.A.Al-Nassir (1993: 17)

டையோனிசியஸ் த்ராக்ஷும் முதலில் உயிரையும் (தொல்.எழு.84-88 / *தெக்கனே கிரம்மதிகா*, உறுப்புகள் (6), பின்பு மெய்யையும் (தொல்.எழு.89-100) குறிப்பிடுகின்றார்கள். ஸீபவைஹி முதலில் மெய்யையும் (ஹா.ப.,தொ.4,ப.433), பின்பு உயிரையும் (ஹா.ப.,தொ.4,ப.435) விவரிக்கிறார்.

உயிரொலிகளின் ஒலிப்புமுறை

உயிரொலிகளின் ஒலிப்புமுறை பற்றிய கருத்தாக்கத்தில் தொல்காப்பியரும் ஸீபவைஹியும் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கின்றார்கள். தொல்காப்பியர் தமிழ் உயிர்களின் பொது ஒலிப்புமுறையாக, "...தந்நிலை திரியா மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும்" (தொல்.எழு.84) என்று, மிடற்றின் வழி எவ்விதத் தடையுமின்றி தோன்றும் மூச்சுக்காற்றைச் சுட்டுகிறார்.அதன்பின்பு ஒவ்வொரு உயிரின் சிறப்பு ஒலிப்புமுறையை (தொல்.எழு.85-88) குறிப்பிடுகிறார். டையோனிசியஸ் த்ராக்ஷ் உயிரொலியின் பொது ஒலிப்புமுறையை பின்வருமாறு விவரிக்கிறார், "இவை 'உயிரெழுத்துகள்' (φωνήεντα/பொ²நியெந்த) என்று அழைக்கப்படுகின்றன, ஏனென்றால் அவை முழுமையான குரல் ஒலிகளாக (φωνή/பொ²நி-voiced) ஒலிக்கின்றன, α,η/அ,ஏ ஆகிய ஒலிகளைப் போன்று" (*தெக்கனே கிரம்மதிகா*, உறுப்புகள் (6). ஸீபவைஹி "மிடற்றிலிருந்து விரியும் (வெளியேறும்) மூச்சுக்காற்றில் *(அல்-ஹாவீ (ஏழாம்)* ا - [a]பிறக்கும்" (ஹா.ப.,தொ.4,ப.435) என்கிறார்.

இங்கு இந்த மூன்று இலக்கணிகளும் உயிரொலிகளின் பொது ஒலிப்புமுறையை வரையறுக்கும் போது, மெய்யொலியின் ஒலிப்புமுறையையோடு ஒப்பிட்டு, உயிரொலியை வேறுபடுத்தும் முதன்மையான பண்பை மட்டும் குறிப்பிடுகிறார்கள்.

> *"...தந்நிலை திரியா மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும்" – தொல்காப்பியர்*
> *"முழுமையான குரல் ஒலிகளாக ஒலிக்கின்றன" – டையோனிசியஸ் த்ராக்ஷ்*
> *"மிடற்றிலிருந்து வெளியேறும் மூச்சுக்காற்றில் பிறக்கும்" – ஸீபவைஹி*

தொண்டையிலிருந்து வெளியேறும் மூச்சுக்காற்றின் தன்மையில், உயிரொலிக்கும், மெய்யொலிக்கும் உள்ள வேறுபாட்டை முதன்மையான அளவுகோளாகக் கொள்கிறார்கள். தொல்காப்பியரின் 'தந்நிலை திரியா' என்பதும், டையோனிசியஸ் த்ராக்ஷின் 'முழுமையான குரல் ஒலிகளாக' என்பதும், ஒலிப்புமுறையில் மெய்யொலிகளைப் போன்று, நாக்கு, அண்ணம், பல் முதலிய ஒலியுறுப்புகளால் மூச்சுக்காற்று தடைபடாமல், 'முழுமையாக ஒலிக்கும்' என்னும் உயிரொலியின் முதன்மையான ஒலிப்புமுறையை உணர்த்துகின்றனர். தற்கால ஒலியியல் அறிஞர்களின் கருத்தும் இதுவேயாகும். தமிழ் உயிரொலிகளின் பொதுவான ஒலிப்புமுறையும், ஒவ்வொரு உயிரொலியின் சிறப்பு ஒலிப்புமுறையையும் முறயாக விவரிக்கிறார் தொல்காப்பியர். ஏழு கிரேக்க உயிர்களுக்கும் பொதுவான ஒரே ஒலிப்புமுறையை மட்டும் குறிப்பிடுகிறார் டையோனிசியஸ் த்ராக்ஷ். ஸீபவைஹி அறபு உயிரொலிகள் அனைத்திற்கும் ஒலிப்புமுறை கூறவில்லை. ஆறு அறபு உயிரொலிகளில் முதன்மையாகத்திகழும் மூன்று நெட்டுயிர்களைப் பற்றிப் பேசுகிறார். அதிலும் முதன்மையான நெட்டுயிரான 'ஆ'(ا)-வின் ஒலிப்புமுறையை மட்டும் விளக்குகிறார். டையோனிசியஸ் த்ராக்ஷும் ஸீபவைஹியும் தொல்காப்பியரைப் போன்று உயிரொலிகளை அவற்றின் ஒலிப்புமுறையின் அடிப்படையில்,

1.அங்காப்பு (நடு உயிர்)
2.அண்பல் முதல் நா விளிம்புறல் (முன்னுயிர்)
3.இதழ் குவிவு (பின்னுயிர்)

என வகைப்படுத்தி விளக்கவில்லை. இதற்கு தமிழைப் போல கிரேக்கமும், அறபியும் அதிக எண்ணிக்கையில் உயிரொலிகளைக் கொண்டிராதது காரணமா? என்று நோக்கினால், டையோனிசியஸ் த்ராக்ஷும் ஸீபவைஹியும் தங்கள் இலக்கணத்தில் உயிரொலி விளக்கத்திற்கு அளித்திருக்கும் இடத்திற்கு மட்டுமே பொருந்தும். அ-இ-உ என்னும் வேறுபட்ட மூன்று உயிர்களும் தமிழைப் போல, கிரேக்கத்திலும்

அறபியிலும் இருக்கின்றன. வேறுபட்ட அந்த மூன்று ஒலிப்புமுறையில் தான் தொல்காப்பியர் தமிழ் உயிர்களை பகுத்துக் கூறுகிறார். இன்றைய தற்கால மொழியியலிலும் இந்த முறைதான் தொடர்கிறது. ஆனால் தொல்காப்பியரின் இந்த உயிரொலிப் பகுப்பாய்வை டையோனிசியஸ் த்ராக்ஷ், ஸீபவைஹி ஆகிய இரு மரபிலக்கணிகளிடமும் காணமுடியவில்லை.

மெய்யொலி

மெய்யொலி பற்றிய இம்மூன்று இலக்கணிகளின் ஒலியியல் விளக்கத்தை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்: மெய்யொலிகளின் பட்டியல், வகைப்பாடு, ஒலிப்பியல். மெய்யொலிகளின் ஒலிப்பிடம், ஒலிப்புமுறை பற்றி தொல்காப்பியரும், ஸீபவைஹியும் விரிவாகப் பேசுகிறார்கள்.மெய்யொலிகளை அவற்றின் ஒலிப்பிடத்தின் அடிப்படையில் தொகுத்துக்கூறும் இவ்விருவரில் ஸீபவைஹி, அறபுமொழியின் இயல்பிற்கேற்ப ஒலிப்புமுறையின் அடிப்படையில் அறபு மெய்யொலிகளை பல்வேறு வகைகளாகப் பகுத்து விளக்குகிறார்.

தொல்காப்பியரும், ஸீபவைஹியும் தத்தம் மொழியிலுள்ள மெய்யொலிகளை விளக்கும் போது, சில விளக்கமுறைகளில் ஒன்றுபடுகிறார்கள். குறிப்பாக மெய்யொலிகளின் ஒலிப்பிடங்களை விளக்கும் போது ஒலியெழுப்பிகளைப் பகுத்தல், வரிசைப்படுத்தல், வெவ்வேறு இன ஒலிகளை ஒரே ஒலிப்பிடத்தில் சுட்டுதல், ஒலிப்பிட வரிசையை உருவாக்குதல் முதலிய கூறுகளில் இந்த ஒற்றுமையை காணமுடிகிறது.

மெய்யொலிகளைத் தோற்றுவிக்கும் ஒலியெழுப்பிகளை இயங்கும் ஒலியெழுப்பி, இயங்கா ஒலியெழுப்பி என இரண்டாகப் பகுக்கும் முறையில் தொல்காப்பியர், ஸீபவைஹி ஆகிய இருவருமே ஈடுபடுகிறார்கள். இருவரும் ஒலியெழுப்பிகளைக் கையாளும் வரிசைமுறையிலும் ஒன்றுபடுகின்றனர். மெய்யொலிகளின் ஒலிப்பிடங்களை விளக்கும் போது இருவருமே முதலில், இயங்கும் ஒலியெழுப்பியையும்(நா) பின்னர், இயங்கா ஒலியெழுப்பியையும் (அண்ணம்) குறிப்பிடும் முறையைப் பின்பற்றுகிறார்கள்.

தொல்காப்பியர் 18 தமிழ் மெய்யொலிகளை அவற்றின் இயல்பைக் கொண்டு, வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகையாகப் பகுக்கிறார். டையோனிசியஸ் த்ராக்ஷ் 17 கிரேக்க ஒலிகளை அவ்வொலிகளின் இயல்பை அடிப்படையாகக் கொண்டு, 'அரையுயிர்'(8), 'ஓசை குறைந்த ஊமை ஒலிகள்'(9) என இரண்டாகப் பகுக்கிறார்.[13] இரண்டாவது வகையான 'ஓசை குறைந்த ஊமை ஒலிகளை' வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்றாக உள்வகைப்பாடு செய்கிறார். ஸீபவைஹி 28 அறபு மெய்யொலிகளை பின்வருமாறு ஒன்பது வகையாகப் பகுக்கிறார்,

குரல்நாள அதிர்வுடைய ஒலிகள் (Voiced)
குரல்நாள அதிர்வில்லா ஒலிகள் (Unvoiced)
இறுக்கமான ஒலிகள் (Tight) / அடைப்பொலிகள் (Stops)
இறுக்கமற்ற ஒலிகள் (Slack) / உரசொலிகள் (Fricatives)
மருங்கொலிகள் (Lateral)
மூக்கொலிகள் (Nasality)
வருடொலிகள் (Trilled)
மூடிய நிலையில் தோன்றும் மெய்யொலிகள் (Cover)

[13] அரிஸ்டாட்டில் தன் கவிதையியலில் (Poetics), பேச்சொலியை உயிர், அரையுயிர், ஊமை (ஒலி) (mute consonant) என மூன்று வகையாகப் பகுக்கிறார். அதாவது மெய்யொலியை 'ஊமையொலி' என்று வரையறுக்கிறார்.

திறந்த நிலையில் தோன்றும் மெய்யொலிகள் (Open)

டையோனிசியஸ் த்ராக்ஷ் மெய்யொலி என்றால் என்ன? என்பதை இவ்வாறு வரையறுக்கிறார், "இவை ஏன் 'மெய்கள்' என அழைக்கப்படுகின்றன என்றால், அவற்றால் தனித்துநின்று பேச்சொலியை உருவாக்க முடியாது, உயிருடன் இணைந்து தான் உருவாக்க முடியும்". தொல்காப்பியரிடம் இவ்வகை வரையறையைக் காணமுடியவில்லை. ஆனால் அவர் பயன்படுத்தும் உயிர்-மெய் என்னும் கலைச்சொற்கள் அவ்வின ஒலிகளின் இயல்பை மிக நுட்பமாக உருவகப்படுத்துகின்றன. மேலும், தமிழின் மூல ஒலிகளின் வகைகளை மிகப்பொருத்தமாக உயிர்-மெய் என்னும் பொருண்மைமிக்க கலைச்சொற்களால் வழங்கும் மரபு, தமிழில் தொல்காப்பியருக்கு முன்பிருந்தே தொடர்வதை,

"ஒகர இறுவாய்ப்
பன்னீர் எழுத்தும் உயிர் என மொழிப". (தொல்.எழு. 8)
"னகர இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய் என மொழிப". (தொல்.எழு.9)

என துல்லியமாக மேற்கோள் காட்டி விவரிக்கிறார்.

துணைநூற்பட்டியல்

1) கழகம். 2004. *தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரையுடன்*, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், முதல் பதிப்பு 1955, பக்.12+260.
2) சுந்தரராஜ், த. (டிச.2024). *தெக்கனே கிரம்மதிகா* (தமிழ் மொழிபெயர்ப்பு)
3) _____. 2022. *'தொல்காப்பியம் - தெஹ்றி க்ரம்மதிகி - அல்கிதாப்பு ஆகிய மூன்று மரபிலக்கணங்களும் ஒலியைக் (phone) குறிக்கக் கையாளும் கலைச்சொற்கள்: ஓர் ஒப்பீடு'*, பெயல் -ஆய்விதழ், Vol.VIII, (2/Apr-Sep.).
4) _____. 2021.*தொல்காப்பியமும் அல்-கிதாப்பும்*, காலச்சுவடு பதிப்பகம்.
5) சுப்பிரமணியன்.ச.வே.(பதி.) 2007. *தமிழ் இலக்கண நூல்கள் (மூலம் முழுவதும்-குறிப்பு விளக்கங்களுடன்)*, மெய்யப்பன் பதிப்பகம்,பக்.799.
6) _____.2009.*தொல்காப்பியம் உரைவளக்கோவை* (சுவடி,பதிப்பு, பாட வேறுபாடுகளுடன்), எழுத்ததிகாரம் (நூன்மரபு - குற்றியலுகரப் புணரியல்), மெய்யப்பன் பதிப்பகம்.
7) Alan Kemp.1986. *The Tekhnē Grammatikē of dionysius thrax*, Translated into English, University of Edinburgh.
8) Al-Nassir A.A.1993.*Sibawayhi the Phonologist: A critical study of the phonetics and phonological theory as presented in his treatise Al-Kitāb*, Kegan Paul International, Londan &New York, pp.142.
9) Carter Michael G.2004. *Sibawayhi*, Oxford University Press,New Delhi,pp159.
10) Gustavus Uhlig (Ed.), 1883. Διονυσίου τοῦ Θραικὸς τέχνη γραμματική, Published by B.G. Teubner Verlagsgesellschaft, Leipzig.
11) Muhammad Abd al-Salam Harun (Ed.). 1977. *Kitāb Sībawayhi* (كِتَاب سِيبَوَيهِ) 4thvolume, First edition:1968-1976, Cairo.
12) Sastri, Subrahmanya.P.S. 1999. *Tolkāppiyam English translation - Eḻuttatikāram*, Kuppuswami Sastri Research Institute, First Ed. 1933, pp.XXI + 105.
13) Thomas Davidson, (Eng.Tr). 1874. *The Grammar of Dionysios Thrax.*
14) Zvelebil Kamil, 1972-1975, "Tolkāppiyam Eḻuttatikāram - English translation", *Journal of Tamil Studies*, No.1-8.

வாழ்வியல்

தொ.மா.க. 101

தொல்காப்பியப் புறத்திணைக் கோட்பாடுகள் - வரலாற்று நோக்கில் களவேள்வி குறித்த ஆய்வு

அகத்தியன் சிவமணி
மென்மியப் பொறிஞர், பெங்களூரு.
agathiyansivam@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பண்டைக்கால மொழி மற்றும் பண்பாட்டு மரபை அறிந்துகொள்ளத் தொல்காப்பியம் பெரும் ஆவணம். உலகில் மானுடனாய் பிறந்த அனைவருக்கும் பொதுவானது காதலும் வீரமும். தொல்காப்பியர் காதலுக்கு அக இயலும் வீரத்திற்குப் புற இயலும் என இரண்டிற்கும் இலக்கணம் வரைந்துள்ளார். புறத்திணை இயலில் வாகைத்திணை முக்கியமானதாகும். வாகை எனும் சொல்லுக்கு “வெற்றி” எனப் பொருள்படும். ஒவ்வொரு துறையிலும் மாந்தன் தம் திறனை வெளிப்படுத்தி பெறும் வெற்றி சிறப்பினை கூறுவது வாகைத்திணை. வாகைத்திணையின் வகைகள் பதினெட்டு என “கூதிர்வேனில்” எனத் தொடங்கும் நூற்பா(தொல்.பொருள்.75) மூலம் தொல்காப்பியர் விளக்குகிறார். வாகைத்திணையில் இடம் பெரும் களவேள்வி சங்ககாலத்தில் எதன் அடிப்படையில் நடைபெற்றது? என வரலாற்று நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

குறிசொற்கள்: களவேள்வி, வேள்வி, யாகம், பார்ப்பனர், இராசசூய யாகம்.

முன்னுரை

பண்டைக்கால மொழி மற்றும் பண்பாட்டு மரபை அறிந்துகொள்ளத் தொல்காப்பியம் பெரும் ஆவணம். உலகில் மானுடனாய் பிறந்த அனைவருக்கும் பொதுவானது காதலும் வீரமும். தொல்காப்பியர் காதலுக்கு அக இயலும் வீரத்திற்குப் புற இயலும் என இவ்விரண்டிற்கும் இலக்கணம் வரைந்துள்ளார். புறம் என்பது அகத்திற்கு மறுதலையானது. அகத்திற்கு இணையான புறத்தையும் தொல்காப்பியரே குறிப்பிடுகிறார்.

வாகை எனும் சொல்லுக்கு "வெற்றி" எனப் பொருள்படும். ஒவ்வொரு துறையிலும் மாந்தன் தம் திறனை வெளிப்படுத்தி பெறும் வெற்றி சிறப்பினை கூறுவது வாகைத்திணை (தொல்காப்பியம். பொருளதிகாரம்.74,75). வாகைத்திணையின் வகைகள் பதினெட்டு என "கூதிர்வேனில்" எனத் தொடங்கும் நூற்பா (தொல்காப்பியம். பொருளதிகாரம்.75)மூலம் தொல்காப்பியர் விளக்குகிறார். இவற்றில் மறத்திற்கு ஒன்பது எனவும் அறத்திற்கு ஒன்பது எனவும் உள்ளன. மறத்திற்கு உரியதாகக் குறிக்கப்படும் ஒன்பது வகைகளில் "மறக்களவழி" முக்கியமானதாகும். போர்க்களத்தில் நடைபெறும் செயல்களை குறிப்பதாக மறக்களவழி உள்ளது. இவற்றில் களவேள்வி என்பது உரையாசிரியரால் வேத யாகங்களுடன் இணைத்து உரை கொள்ளப்பட்டது, சிலர் பேய்களுக்கு களத்தில் இறந்தவர் உடல்களை உணவாக அளித்தல் எனும் மிகைப்படுத்தப்பட்ட விளக்கம் தருகின்றனர்.

சங்ககாலத்தில் களவேள்வி எதன் அடிப்படையில் நடைபெற்றது? என வரலாற்று நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

புறத்திணை மரபும் சங்க இலக்கியங்களும்

திணை என்பது ஒழுக்கம்[14]. வீர ஒழுகலாறுகளையும் அவற்றுடன் தொடர்புடையனவாக அமையும் நிகழ்வுகளையும் புறத்திணை என குறித்தனர்.

வெட்சி, வஞ்சி, ஊழிஞை, தும்பை என்ற நான்கும் போருடன் தொடர்புடைய திணைகள் ஆகும். போரினால் பெரும் வெற்றியையும் பிற துறைகளில் பெறும் மேம்பட்டினையும் வாகை திணை உள்ளடக்கியது. பெருமை பொருந்திய ஆண்மகனின் அருஞ்செயல்களையும் ஒழுகலாறுகளையும் விவரிப்பது பாடாண் திணை. பல்வேறு நிலையாமை பொருளைப் புலப்படுத்துவது காஞ்சி திணை.

சங்க இலக்கியங்களில் புறத்திணை முழுமையாக அமைந்த பாடல்களை கொண்டவை புறநானூறும், பதிற்றுப்பத்தும் ஆகும். புறநானூறை தொகுத்தவர்கள் ஒவ்வொரு பாடலுக்கும் திணையும் துறையும் வகுத்துள்ளனர். இங்கனம் வகுக்கும் போது தொல்காப்பிய இலக்கணத்தை விட புறப்பொருள் வெண்பாமாலையினைக் கருத்தில் கொண்டுள்ளனர் என்பது புலப்படுகிறது[15].

இவ்விரு புற இலக்கியங்களைத்தவிர பத்துப்பாட்டு, பரிபாடல் அகியவற்றில் புறத்திணைத் தொடர்புடைய பாடல்கள் இடம்பெறுகின்றன.

தொல்காப்பியரின் புறத்திணை இயல்கள்

சங்க இலக்கியங்கள் எழுந்த காலம் என்பது மக்கள் உணவு திரட்டு உண்ணும் நிலையிலிருந்து, உணவு உற்பத்தி நிலையை நோக்கி நோக்கி நகர்ந்து கொண்டிருந்த காலம். அரசுகள் வளமான நிலங்கள் மற்றும் வணிகத்திற்காக போரிட்டு கொண்டிருந்த காலம்.

தொல்காப்பியரின் புறத்திணைக்கோட்பாடுகள் அவற்றை பிரதிபலிப்பனவாகவே உள்ளன.

---

[14] செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி, Volume- IV, Part – II, பக்.22

[15] சோ.ந.கந்தசாமி, தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் , சென்னை: செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம், (2023, பக்:731)

போருக்கான ஆரம்பமாக அரசனின் வெட்சி வீரர்கள் பகை அரசனின் ஆநிரைகளை கவர்ந்து வருவர்[16]. வெட்சிக்குரிய இலக்கணமாக கூறும் நூற்பாவில்[17] "மனைக்குரிய மரபினது கரந்தை அன்றியும்" என்று கரந்தை என்ற குறியீட்டினை பயன்படுத்தி உள்ளனர். ஆயினும் தொல்காப்பியர் அதனை தனித்திணையாக கொள்ளவில்லை. நிரை கோடல் வெட்சி, நிரை மீட்பு கரந்தை. உடன் நிகழும் இப்போர்ச் செயல்களையும் வெட்சி என ஒரு திணையாக கொண்டார் தொல்காப்பியர். கரந்தைக்குரிய 21 துறைகளை 63 ஆம் நூற்பாவில் குறித்துள்ளார்[18].

அரசன் தன் நாட்டு பொருளியலை மேம்படுத்தும் நோக்கில் மாற்று அரசனுக்குரிய ஆநிரைகளை கவர்தலும், அவற்றை மாற்று அரசன் மீட்டலும் முறையே வெட்சி[19], கரந்தை[20] என தொல்காப்பியர் குறித்தார்.

வளமான நிலத்தை அல்லது வணிக பெருவழிகளை கைக்கொள்ளும் ஆசை காரணமாக நடைபெறும் போர் வஞ்சித் திணை[21]. இதற்கு 13 துறைகள் உள்ளன.

ஒரு நாட்டினை வெற்றி கொள்ளும் பொருட்டு அந்நாட்டின் மதிலை வளைத்து போர் செய்வது உழிஞை திணை[22]. இப்போர் புரிவர் உழிஞை பூவை சூடுதல் மரபு. மதிலை வென்று அந்நாட்டின் செல்வத்தைக் கவர்வதே இப்போரின் நோக்கம்.

மதிலின் உள்ளிருப்போர் அதனை காக்கும் பொருட்டு நிகழ்த்தும் நிதழ்ந்தும் போர் நொச்சி[23]. மதிலை உள்ளிருந்து காக்கும் அரசன் வீழ்ந்து செயலை நொச்சி குறிக்கிறது. ஆயினும் தொல்காப்பியர் இதனை தனித்திணையாக கொள்ளவில்லை. புறப்பொருள் வெண்பா மாலையில் "மகள் மறுத்து மொழிதல்" என்ற துறை நொட்சிக்குரியதாக கூறப்படுகிறது[24].

பொருளியல் பெருக்கத்திற்காக நிகழ்த்தப்பெறும் வெட்சிப்போரையும், ஆளும் நிலப்பரப்பை அகலப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பெரும் வஞ்சிப்போரையும் விட, வேந்தர் இருவர் தம்முள் யார் வலிமை பெற்றவர் என்பதைத் தீர்மானிக்கும் நோக்கில் நடைபெறும் போருக்கு தும்பை [25] என்பது பெயராயிற்று.

காஞ்சி என்பது பலவகை நிலையாமையினைப் பொருளாக கொண்டது[26]. இதில் 20 துறைகள் உள்ளன. முதல் 10 துறைகள் பெருமையையும், அடுத்த 10 துறைகள் துன்ப நிலையையும் விளக்குபவை. புறப்பொருள் வெண்பா மாலையில் வஞ்சித்திணைக்கு மாறுதலையாகக் காஞ்சித்திணை இடம் பெறுகிறது[27].

---

[16] "வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்” — (தொல்.பொருள்.60)

[17] "அனைக்குரி மரபினது கரந்தை யன்றியும்" - (தொல்.பொருள்.63:14)

[18] நடுகல் எடுக்கும் முறைகளையும் இந்த நூற்பாவில் விளக்கியுள்ளார்.

[19] தொல்.பொருள்.60

[20] தொல்.பொருள்.63

[21] "வஞ்சி தானே முல்லையது புறனே" - (தொல்.பொருள்.64)

[22] "உழிஞை தானே மருதத்துப் புறனே" - (தொல்.பொருள்.66)

[23] "அகத்தோன் வீழ்ந்த நொச்சியு மற்றதன்" - (தொல்.பொருள்.69:5)

[24] புறப்பொருள் வெண்பாமாலை.94

[25] "தும்பை தானே நெய்தலது புறனே" - (தொல்.பொருள்.72)

[26] "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" - (தொல்.பொருள்.76)

[27] புறப்பொருள் வெண்பாமாலை - 61

பெருமை பொருந்திய ஆண்மகனின் அருஞ்செயல்களையும் ஒழுகலாறுகளையும் விரித்துரைப்பது பாடாண் திணை[28].

வாகை எனும் சொல்லிற்கு வெற்றி எனப்பொருள். ஒவ்வொரு துறையிலும் மாந்தர் தம் ஆற்றலை வெளிப்படுத்தி எய்தும் வெற்றிச்சிறப்பினை கூறுவது வாகைத்திணை[29]. இத்திணைக்குரிய சிறப்புகளை இரு நூற்பாக்களில் தொல்காப்பியர் கூறியுள்ளார்[30]. வாகையின் வகை 18 என " கூதிர்வேனில் " என தொடங்கும் நூற்பாவில்[31] தொல்காப்பியர் உரைக்கிறார். அறத்திற்கு 9 எனவும், மறத்திற்கு 9 எனவும் வகுக்கிறார்.

மறத்திற்கு உரியதாக குறிக்கப்படும் 9 உம் போரை குறிப்பன.

குளிர் மற்றும் கோடைக் காலத்தில் போர் விருப்பம் உடையோர் பாசறையில் இருந்தது போர்க்கடமை ஆற்றுதல்.

ஏர் உழவன் விளைநிலத்தில் செய்யும் செயல்களும் , போர்வீரனின் போர்க்களத்தில் நிகழும் செயல் (களவழி - களத்தில் நிகழும் செயல்கள்)

வென்ற அரசனின் தேர் முன் நடைபெறும் குரவைக் கூத்து

அவன் தேரின் பின் சென்று மறவர், விறலியர் ஆடிய பின் குரவை கூத்து.

பெரும்பகையை தடுக்கும் வீரனின் வேல் ஆற்றல்.

பெரும் பகைவரை தடுக்கும் ஆற்றல்

நிலையற்ற வாழ்வின் வீரவல்லாமையை பாடுதல்

பகைவரும் நாணும்படி வஞ்சினம் கூறி, தம் உயிரைக் களப்பலியாக (அவிப்பலி) வழங்குதல்

பகைவரை பகை நட்பாக கொண்டு ஒழுகும் தன்மை

மறத்திற்கு உரியதாகக் குறிக்கப்படும் ஒன்பது வகைகளில் “மறக்களவழி” முக்கியமானதாகும். போர்க்களத்தில் நடைபெறும் செயல்களைக் குறிப்பதாக மறக்களவழி உள்ளது. இதை இளம்பூரணர் “ஏரோர் களவழி கூறுதலும் அன்றி போரோர் களவழி தேரோர் தோற்றுவித்த வென்றியும்” என உரைப்படுத்தியுள்ளார். மறக்களவழி களம் பாடுதல் , களவேள்வி பாடுதல் என இருவகைப்படும்.

இதில் களவேள்வி என்பது பிராமணரின் வேத யக்ஞமாக இருக்கலாம் என பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் களவேள்வி என்பது தொல்குடி சமூகத்தின் உற்பத்தி பங்கீட்டின் நீட்சியே ஆகும்.

தொல்குடிகளின் உற்பத்தி பங்கீடு - பாதீடு

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பால், பாதீடு எனும் சொல் தொல்குடி வாழ்க்கையில் நிலைபெற்றிருந்த சமபங்கீடு முறையினை சுட்டுகிறது. பால் என்பது "பால்வரை தெய்வமாக" உருவாயிற்று[32].

---

[28] "பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே” — (தொல்.பொருள்.78)

[29] "வாகை தானே பாலையது புறனே" - (தொல்.பொருள்.73)

[30] தொல்.பொருள்.74, 75.

[31] தொல்.பொருள்.75

[32] இரா. பூங்குன்றன், தொல்குடி வேளிர் வேந்தர், சென்னை: NCBH (2022, பக். 16)

பாதீடு எனும் சொல்லின் பொருள் பங்கீடு என்பது ஆகும்[33].

ஆய்வாளர் கைலாசபதி கிரேக்க பால்வரை தெய்வமான Moyira -வை ஒப்பீட்டு ஆய்ந்து எழுதி உள்ளார்[34].

உலகின் பல்வேறு தொல்குடி மக்களிடம் இந்த உற்பத்தி பங்கீடு முறை இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. வேதகால ஆரியரிடமும் இம்முறை "யக்ஞம்" என்ற பெயரில் புழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

சங்க இலக்கியங்களில் பாதீடு செய்தது குறித்த பாடல்கள் உள்ளன. அவற்றில் குடி வாழ்க்கையோடு தொடர்புடைய சில பாடல்களும் உள்ளன.

"வில்லின் தந்த வெண் கோட்டு ஏற்றை
புனை இருங் கதுப்பின் மனையோள் கெண்டி
குடி முறை பகுக்கும் நெடு மலை நாட" - *நற்றிணை 336:4-6*

"கானவன் எய்த முளவு மான் கொழுங் குறை
தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி, கிழங்கொடு
காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்
ஓங்கு மலை நாடன், நின் நசையினானே" - *நற்றிணை 85: 8-11*

இவ்விரு பாடல்களிலும் பாதீடு செய்தவள் பெண். இவள் குழுவின் தலைவியாக இருக்கலாம். அவள் "கொடிச்சி" எனக் குறிக்கப்படுகிறாள்.

தொல்குடி சமுதாயத்தில் உற்பத்தி பொருளின் மீதும், அதனை பகிர்ந்தளிப்பதிலும் தாயின் ஆதிக்கம் இருந்ததை இது உணர்த்துகிறது.

வெட்சி குறித்துக் கூறும் தொல்காப்பியர் பாதீட்டினை ஒரு துறையாகக் கூறுகிறார்[35].

அடித்துக் கொண்டு வந்த மாட்டினை மறவர்களும் மற்றவர்களும் மற்றவர்களும் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வைக் குறிக்கும் பாடல் அகநானூற்றில் உள்ளது[36].

பண்டைய நாளில் பாதீடு என்பது ஆநிரையை கவரும் போது மட்டுமின்றி பிற பொருட்களையும் கவர்ந்த போதும் நடைபெற்றது[37].

---

[33] செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி , Volume- VI, Part – I, பக்.601

[34] K.Kailasapathy, The concept of destiny in Early Tamil Literature, in proceeding of the Conference Seminar of Tamil Studies, Held at Madurai 1981, Volume 1, Page: 95-104.

[35] "தந்துநிறை பாதீ டுண்டாட்டுக் கொடையென" - (தொல்.பொருள்.61)

[36] "இரவுக் குறும்பு அலற நூறி நிரை பகுத்து
இருங் கல் முடுக்கர்த் திற்றி கெண்டும்
கொலை வில் ஆடவர் போல பலவுடன்" - அகநானூறு 97:4-6

[37] "விளர் ஊன் தின்ற வீங்குசிலை மறவர்
மை படு திண் தோள் மலிர வாட்டி
பொறை மலி கழுதை நெடு நிரை தழீஇய
திருந்து வாள் வயவர் அருந் தலை துமித்த
படு புலாக் கமழும் ஞாட்பில் துடி இகுத்து
அருங் கலம் தெறுத்த பெரும் புகல் வலத்தர்

மேலும் ஐங்குறுநூற்று பாடல் வரிகளில் தலைவி அறுவடை சிறப்பாக நடைபெற்று நெல் அதிகம் கிடைக்க வேண்டும் என்றும், பசுக்கள் நிறையப் பால் தர வேண்டும் என்றும் அதன் மூலம் தான் கொடுக்க நிறைய இரவலர் வர வேண்டும் என வேண்டுகிறாள்[38].

சங்ககால வேந்தர், வேளிர் எழுச்சி பெறுகையில் வாணிகமும் வாணிக பெருவழிகளும் சிறப்புற்றன, இருப்பினும் மக்கள் தொல்குடிவாழ்வின் பாதீடு முறையை பின்பற்றினர்.

இன்னும் பொங்கல் பண்டிகையின் போதும் நாட்டார் தெய்வ வழிபாட்டின் போதும் இப்பாதீடு முறையைக் காணலாம்.

வேதங்களின் யக்ஞம்

நெருப்பின் உதவியுடன் ஆரியச் சமூகம் எந்த புதிய உற்பத்தி முறையில் பிரவேசித்ததோ அதுவே யக்ஞம்.

யஜ்னா (தமிழ் வடிவம் - யக்ஞம்) என்பதன் பொருள் “அவர்கள் ஒன்று கூடி உருவாக்கினார்கள்” என்பதாகும்[39].

பிரம்மன் ஆரிய மனிதனின் கம்யூன் ஆகும். யக்ஞம் அதன் பொருளுற்பத்தி முறை என S.A.டாங்கே குறிப்பிடுகிறார்[40].

பிற்கால யாகங்களில் இருந்து வேறுபட்ட முறையில், உழைப்பின் பயனாக யக்ஞ பலன் ஒரு குழுவின் பொதுப்பலனாக இருந்தது. ஒவ்வொருவர்க்கும் சமமாக வினியோகிக்கப்பட்டது. ஆரியரின் உற்பத்தி பங்கீட்டில் பெண்களும் பங்கெடுத்தனர்[41]. இது பிற்கால யாகசாலைக்கு முரணான விடயம்.

ஆரியர்களின் "ஹேதர்" எனும் சடங்கு தெய்வங்களையும் மனிதர்களையும் ஒன்று கூடும் படி அழைப்பது. அதிகாலையில் ஆற்ற வேண்டிய இச்சடங்கில் குழு உறுப்பினர்கள் பிரம்மா எனும் குழுத்தலைவன் மேற்பார்வையில் ஒவ்வொருவரும் ஒரு வேலையைச் செய்து தம் உழைப்பை அளித்தனர். உற்பத்தி அனைத்தும் (சோமபானம், இறைச்சி, மாவு மற்றும் பல) யக்ஞ மேடைக்கு கொண்டு வரப்பட்டு, தெய்வம் மற்றும் இறந்த முன்னோர்க்கு பங்கு அளிக்கப்பட்டு மீதமிருப்பவை (ஹேதசேஷம்) குழு உறுப்பினர்க்கு வழங்குப்படும். தினசரி ஹவனம் என்பது கூட்டாக உற்பத்தி செய்த உணவை கம்யூன் முழுமைக்கும் வினியோகிக்கும் முறையேயாகும். எனவே ஹவனமும் யக்ஞத்தின் பகுதியே. இது ஆரியரின் உற்பத்தி பங்கீடு ஆகும். இங்கு தாய்க்கு முக்கியத்துவம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொ.ஆ.மு 1600 வாக்கில் இந்தியாவிற்கு புலம்பெயர்ந்த ஆரியர்கள் தங்களின் நிலையை சமூகத்தில் உயர்த்திக்கொள்ளவும், அதை நிலைப்பெறச்செய்யவும் பிறரின் உழைப்பைச் சுரண்டுவதற்கும் ஆளும் வர்க்கத்தோடு இணைந்து யாகம் என்ற முறையை பின்பற்றினர். கூட்டு உழைப்பின் பங்கீடாக இருந்த யக்ஞம் பிராமணரின் மதிப்பை உயர்த்த தேவையற்ற உயிர்ப்பலிகளை செய்யும் யாக முறையாக மாறியது.

வில் கெழு குறும்பில் கோள் முறை பகுக்கும்
கொல்லை இரும் புனம் நெடிய என்னாது“ - அகநானூறு 89:10-17

[38] ஐங்குறுநூறு 1,2 மற்றும் 3 ஆம் பாடல்கள்.

[39] S.A.டாங்கே, பண்டைய இந்தியா, சென்னை: NCBH, 2016, பக்: 66.

[40] Ibid, பக்: 57.

[41] Ibid, பக்: 60.

யாகத்தால் மேல்தட்டு மற்றும் ஆளும் வர்கத்தின் பாவம் நீங்கும் எனும் மாயையின் ஊடாக பெரும் பலனை பிராமணர் அனுபவித்தனர். கிட்டத்தட்ட எல்லா வகை விலங்குகளும், பறவைகளுமே இத்தகைய யாகங்களில் கொல்லப்பட்டது.

கோசல அரசன் நாட்டின் பசேனாதிபதியும், மகத அரசன் பிம்பிசாரனும் பழங்குடிகளோடு நடத்திய போரில் வெற்றி பெற வேண்டி பெரும் செலவில் யாகம் நடத்தினர். பல கிராமங்களை பிராமணர்க்கு கட்டணமாக அளித்தனர். பல கால்நடைகள் உழைக்கும் மக்களிடமிருந்து பிடுங்கப்பட்டு பலி இடப்பட்டன[42].

அரக்கத்தனமான உள்நோக்கத்துடன் யாகங்களில் செய்யப்பட்ட எல்லையற்ற படுகொலைகள், பொருளாதாரத்திற்க்கு அடிப்படையான வாழும் வழிகள் எல்லாம் நீர்த்துப்போகச் செய்ய தொடங்கியது. இவ்வாறான உயிர்ப்பலிகளைத் தடுக்கும் நோக்கம் கொண்டே அவைதீக சமயங்கள் எழுந்தன (சைன, பௌத்த, ஆஜிவிக). பின் அசோகனால் உயிர்பலி தடைசெய்யப்பட்டது (முழுமையாக அல்ல)[43]. பின்னர் கால ஓட்டத்தில் உயிர்ப்பலியைக் கைவிட்டு இன்று நாம் காணும் ஹோமம் எனும் வடிவில் மக்களைச் சுரண்டுகின்றனர்.

தமிழின் வேள்வி

வேள்வி எனும் தமிழ்ச்சொல் "வேள்" எனும் சொல் மூலம் கொண்டு பிறந்தது. இதற்கு திருமணம், விருப்பம் முதலிய பொருள் உண்டு[44]. மேலும் இச்சொல்லிற்கு கொடை, மணம், பூசை முதலிய பொருள்களும் உள்ளன.

[வேள் -> வேள் -> வேள்வி]

திரவிட மொழிகளான மலையாளம் மற்றும் தெலுங்கில் வேள்வி என்றும், கன்னட மொழியில் பேலுவ எனும் பெயரில் மேற்கண்ட பொருட்களைத் தருகிறது[45].

விரும்பி செய்யும் பலவினைகளை குறிப்பதாக பாவாணர் குறிப்பிடுவார்.

திருமணம்[46], விருந்தினர்[47], தெய்வம்[48], பேய்களுக்கு படைப்பு[49] அல்லது கொடை அளித்தல் போன்ற வினைகளுக்கு இச்சொல் பயன்பட்டுள்ளது.

போரின் நடைபெறும் போது போர்க்களத்தின் கொடூர நிலையை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பின்வருமாறு விளக்குகிறார்.

"நெற்கதிர்களைக் கொன்று களத்திற் குவித்துப்போர் அழித்து, அதரிதிர்த்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட் பலிகொடுத்துப் பின்னர் பரிசிலர்க்கு முகர்ந்து கொள்ள வரிசையின் அளிக்குமாறு, அரசனும் நாற்படையும் கொன்று களத்திற்குவித்து எருது களிறாக வாண் மடலோச்சி அதரிதிரித்துப் பிணக்குவையை நிணச சேற்றோடு உதிரப் பேருலைக்கண் ஏற்றி ஈனா வேண்மாள் இடத்தாழந்தட்ட கூழ்ப்பலியை பலியாகக்

---

[42] D.D.கோசாம்பி, பண்டைய இந்தியா, சென்னை: NCBH, 2021, பக்: 279.

[43] Ibid, பக்: 340.

[44] செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி, Volume- VIII, Part – III, பக்.252

[45] Ibid and Dravidian Etymology Dictionary, 2nd Edition, 1984, Pg: 506 [DED 5544].

[46] "நாம்முன்பு தொண்டு கொண்ட வேள்வியில்" - பெரியபுராணம் , தடுத்தாட்கொண்டது – 127.

[47] திருக்குறள் 87, 88.

[48] பரிபாடல் : 19-41.

[49] "பண்ணி தைஇய பயம் கெழு வேள்வியின்"- அகநானூறு 13:11

கொடுத்து எஞ்சி நின்ற யானை, குதிரைகளையும் ஆண்டு பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகர்ந்துகொள்ளக் கொடுக்கலாம்”[50].

இது குறித்து ஆய்வாளர் ஜார்ஜ். எல். ஹார்ட் பின்வருமாறு உரைக்கிறார்.

"பழந்தமிழர்கள், இரண்டு செயல்களையும் தங்களது வாழ்வில் தவறாது கடைபிடித்து வந்துள்ளனர். தங்களின் நிலையான வாழ்வுக்கும், நாட்டின் வளத்திற்கும் போர், அறுவடை ஆகிய இரண்டும் அடிப்படை எனக்கொண்டு வாழ்ந்தனர் " என உரைக்கிறார்[51]. இக்காரணம் கொண்டே தொல்காப்பியரும் அறுவடை மற்றும் போர் நிகழ்வை ஒப்புமை படுத்துகிறார் போலும்.

பேய் மகளிர்

தசையும் கொழுப்பும் குருதியும் குடலும் உண்டு குரவை கூத்தாடும் பேய் மகள் அச்சம் தரும் வகையில் சங்க இலக்கியத்தில் இடம்பெறுகிறாள்[52].

இப்பேய் மகளிர் உண்டு மகிழப் போரில் தோற்கடிக்கப்பட்டு மாண்டு போன வீரரின் தலையை அடுப்பாகவும், அறுக்கப்பட்ட கைகள் தோள் மூட்டுடன் சேர்த்து அகப்பையாக உபயோகப்படுத்தப்படும்[53].

பேய் மகளிர் தமக்கு மடை (நரமாமிசம்) கொடுத்த வெற்றி வீரனைப் புகழ்ந்து போர்க்களத்தில் பிணங்களுக்கிடையே ஆடுவதாத நம்பப்படுகிறது. எல்லா பேய்களும் பங்கு பெறும் நடனமாக இது இருந்தது[54]. இவ்வாடல் "துணங்கை" என குறிக்கப்படுகிறது.

இப்பேய்மகளிர் குறித்து ஆய்வாளர் க.கைலாசபதி தம் கட்டுரையில் "பேய்மகளிர் உண்மையான மகளிரே. ஆனால் பெண்தெய்வ வழிபாட்டிற்காக பிணந்திண்ணிகளாவுகம் இருந்தனர்" எனக் குறிப்பிடுகிறார்[55].

அதே வேளை வேளாண் வளர்ச்சியும், இரும்பு பயன்பாடும் புழக்கத்தில் இருந்த சங்க காலத்தில் நரமாமிசம் உண்ணும் ஒரு பிரிவினர் வாழ்ந்திருப்பரா என்ற சந்தேகம் எழுவது இயல்பு.

புராதன உலகில் தாய் தெய்வம் மந்திர சடங்கு வழிபாட்டின் வழியாக வழிபடப்பட்டது. மந்திரமும் சடங்கும் பெண்களுக்குரியதாக இருந்தது நோக்கத்தக்கது[56].

புதிதொரு மனித உயிரை உலகிற்குத் தருபவளாகக் காணப்பட்ட தாய் அசாதாரண சக்தி படைத்தவளாக இருந்தமையால் பெண்ணிடமே அந்த மந்திரசக்தியும் இயல்பாக குடி கொண்டது. தாய்தெய்வ வழிபாடு உலகெங்கும் ஒரு காலத்திலே தோன்றியதற்குரிய காரணமே, பெண்களைத் தலையாக மாந்திரீகராகவும் ஆக்கிவைத்தது.

---

[50] தொல்காப்பியம் – நச்சினார்க்கினியர் உரை, மெய்யப்பன் பதிப்பகம், 2009, பக்: 353.

[51] ஜார்ஜ்.எல்.ஹார்ட், தமிழ்ச் செவ்விலக்கியங்கள், சென்னை: NCBH, 2022, பக்: 54.

[52] புறநானூறு 371:21-26.

[53] புறநானூறு 372 பாடல் இது குறித்து விவரிக்கிறது.

[54] “பிணை யூபம் எழுந்து ஆட“ – மதுரைக் காஞ்சி: 27

[55] க.கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், சென்னை: காலச்சுவடு பதிப்பகம், 2023, பக்:75.

[56] B.Briffault, The Mothers,2 : 620-3 and George Thomson, “ Studies in Ancient Greek Society “, Pg: 212-213.

புராதன உலகின் மந்திரம் மற்றும் சடங்குகளைச் செய்த பெண்களின் உருவகமாக பேய் மகளிர் சங்ககால புலவர்களால் உருவகப்படுத்தப் பட்டிருக்க வேண்டும். இது பின்னாளில் வளர்ந்து பரணி இலக்கியம் ஆக வளர்ச்சி பெற்றது.

அதே வேளை சங்ககாலத்தில் தாய்வழிச்சமூகம் மாறத்தொடங்கியது. சங்ககாலத்தில் ஆண்வழிச்சமூகம் அறிமுகமாகியதாகவும், அதே வேளை தாய்வழிச்சமூகம் தொடர்ந்தது எனவும் ஆய்வாளர் மே.து.ராசுகுமார் குறிப்பிடுகிறார்[57].

களவேள்வி

போரில் வெற்றி பெற்ற அரசன், வெற்றிக்களிப்பில் போர்க்களத்தில் தன்னை நாடிவரும் இரவலர், பாணர், விறலியர், பிராமணர் போன்றோருக்கு பரிசுகள் வழங்குதல் மற்றும் போரின் வெற்றிக்குத் துணையாக இருந்த வீரர்களுக்கு போர் எனும் உற்பத்தி முறையில் கிடைத்த கொள்ளைப்பொருட்கள் மற்றும் வளநிலங்களை பகிர்ந்தளிக்கும் பாதீடு முறையே களவேள்வி ஆகும்.

போரில் வென்ற நாட்டு வீரர்களுக்குக் கொள்ளை பொருட்களில் பங்கு வழங்கப்பட்டமை சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கிறது.

புறநானூறு 285:15-17 பாடல் வரிகளில் வெற்றியில் கிடைத்த வளமான நிலங்கள், போரில் பங்கு கொண்ட ஒரு சிலருக்கு ஒதுக்கி பங்கிட்டு தரப்பட்டுள்ளன. இவ்வாறு வளமான கழனிகள் வெற்றிக்கு பின்னர் வேறு சிலருக்கு பங்கிட்டு கொடுகைகப்பட்டதால், போரில் கலந்து கொண்ட சீறூர் மன்னனுக்கு வளமில்லாத கரம்பை சீறூர் மட்டுமே கிடைத்திருக்கிறது[58].

அகநானூறு 144:18-19 பாடல் வரிகளில் போர் வெற்றியில் கிடைத்த செல்வங்கள் பற்றிக் கூறப்படுகிறது[59].

கலித்தொகை 148:23-24 பாடல்வரிகளில் போர் வெற்றியின் வாயிலாக நிலங்கள் பெற்றதும் அதனைக் காதலி மகிழ்வுடன் வெளிப்படுத்தியதும் தெரிகிறது[60].

புறநானூறு 297:4-8 பாடல்வரிகளில் போரில் வென்ற மன்னருக்கு துணைபுரிந்த குழுக்கள் அல்லது சீறூர் மன்னர்கள் வயல்கள் நிறைந்த வளமான மருத நிலங்கள் (தண்ணடை) வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்[61].

---

[57] மே.து.ராசுகுமார், தாயும் மனம் திரியும்: பெண்வழியிலிருந்து ஆண்வழி உரிமைக்கான மாற்றத்தின் தொடக்க வெளிப்பாடு, சமூக விஞ்ஞானம் இதழ், 2009(ஜூன் – செப்டெம்பர்), 2009 (அக்டோபர் – டிசம்பர்), 2010 (ஜனவரி- மார்ச்).

[58] “அலமரும் கழனித் தண்ணடை ஒழிய
இலம்பாடு ஒக்கல் தலைவற்குஓர்
கரம்பைச் சீறூர் நல்கினன் எனவே“ - புறநானூறு 285: 15-17

[59] “அமர் ஓர்த்து அட்ட செல்வம்
தமர் விரைந்து உரைப்பக் கேட்கும் ஞான்றே“ - அகநானூறு 144: 18-19

[60] “போய் அவர் மண் வௌவி வந்தனர்
சேய் உறை காதலர் செய் வினை முடித்தே“ - அகநானூறு 144: 18-19

[61] “கன்றுடை மரையாத் துஞ்சும் சீறூர்க்
கோள்இவண் வேண்டேம் புரவே நார்அரி

புறநானூறு 312 பாடல் ஒரு ஆண்மகனின் கடமையாக போரில் கலந்து கொண்டு வெற்றி ஈட்டி வேந்தனிடமிருந்து வள நிலம் பெறுதல் வேண்டும் என உரைக்கிறது[62].

புறநானூறு 287:9-10 பாடல் வரிகளும் போரில் கைப்பற்றப்பட்ட நிலம் பங்காக அளிக்கப்பட்டதை உரைக்கிறது[63].

மலைபடுகடாம் 86-89 பாடல்வரிகளில் வேல் கொண்டு வென்ற வீரர்க்கு அரசன் கடமை செய்தலை குறிக்கிறது[64]. மேற்கண்ட உதாரணங்கள் மூலம் போருக்குப்பின் போரில் வென்ற வீரர்களுக்கு போரின் உற்பத்தியின் பங்கீடாக நிலம் மற்றும் செல்வங்கள் வழங்கப்படமை தெரிகிறது.

களவேள்வி என்பது வெற்றியைக் கொண்டாடுதலாகவே காணப்படுகிறது. போர் வெற்றியின் பயனாகக் கிடைத்த கொள்ளை பொருட்களையும் செல்வங்களையும் பரிசிலாக பெற பிராமணர், பாணர், விறலியர், இரவலர், புலவர்கள் உள்ளிட்ட பலர் போர்க்களம் நாடி வந்தனர்.

பரிசில் பெற வந்தவர் அனைவரும் தத்தமது திறனை வெளிப்படுத்தி பரிசில் பெற்றிருப்பர். தம் திறனை வெளிப்படுத்தி வென்ற அரசனைப் புகழ்ந்து ஆடிப்பாடி புலவர்கள், பாணர்கள், விறலியர் முதலியோர் தம் உழைப்பின் பயனாக பரிசில் பெற்று செல்வர். பாணர்கள் வழமையான பொற்றாமரை பூவை கொடையாகப்பெற்றனர்[65]. யானைகள், சிற்றூர்கள் முதலியவை பாணர்க்கு வழங்கப்பட்டமை தெரிகிறது[66]. ஔவையார் போன்ற சில புலவர்களும் கூட பாணர் என்பது குறிப்பிடத்தக்கது[67].

பதிற்றுப்பத்து 76:7-9 பாடல் வரிகளில் பாசறையில் தங்கி இருந்த அரசன் முற்பகலிலும் பிற்பகலிலும் தம்மிடம் இரந்து வந்த வறியவர்க்கு கொடுத்தலில் குறையாமல் செல்வத்தையும் பகைவரிடம் இருந்து கைப்பற்றிய குதிரைகளையும் மிகுதியாக பரிசளித்தமை குறிப்பிடப்படுகிறது[68].

அதை வேளை, வேதமந்திரங்களோடு தொடர்புடைய, வேறு உற்பத்தித் திறனோ உற்பத்தி கருவிகளை உருவாக்கிக்கொள்ளும் கற்றல் ஆற்றல் இல்லாத பிராமணர்கள் தமக்கு தெரிந்த வேத மந்திரங்களை ஓதி பூவும் பொன்னும் புனல் படச்சொரிந்து தானம் பெற்றுச் சென்றிருக்கவேண்டும்.

நனைமுதிர் சாடிநறவின் வாழ்த்தித்
துறைநனி கெழீஇக் கம்புள் ஈனும்
தண்ணடை பெறுதலும் உரித்தே வைந்நுதி“ – புறநானூறு 297:4-8

[62] “நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே”- புறநானூறு 312:4

[63] “நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதல் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே“ – புறநானூறு 287:9-10

[64] “இகந்தன ஆயினும் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக்
கொடைக்கடன் இறுத்தவன் தொல்லோர் வரவும்“ -மலைபடுகடாம் 86-89

[65] புறநானூறு 12,69,126,141, பொருநர் ஆற்றுப்படை: 169-170

[66] அகநானூறு 106, புறநானூறு 302

[67] புறநானூறு 307

[68] “இரந்தோர் வாழ நல்கி இரப்போர்க்கு
ஈதல் தண்டா மா சிதறு இருக்கை
கண்டனென் செல்கு வந்தனென் கால்கொண்டு “ - பதிற்றுப்பத்து 76: 7-9

பிற்கால உரையாசிரியர்கள் மயங்குவது போன்று வெற்றி பெறுவதற்காகக் பிராமணரை வைத்து களத்தில் அரசர்கள் வேத யாகம் செய்தனர் என்ற கூற்று ஏற்புடையதாக இல்லை. மேலும் சங்க காலத்திலும் அதையடுத்த காலப் பகுதிகளிலும் பார்ப்பனர் சமூக மேன்மையைப் பெற்றுவிடவில்லை, அதற்கு அவர்கள் நீண்ட காலம் காத்திருக்கவேண்டியிருந்தது என ஆய்வாளர் மே.து.ராசுகுமார் குறிப்பிடுகிறார்[69].

புறநானூறு 26:11-15 பாடல்வரிகள், பிராமணர் போர்க்களத்தில் இருந்தாக கூறப்பட்டாலும் அவர்கள் வேத யாகங்களை நடத்துவதற்காக அங்கு செல்லவில்லை[70].

போர் வெற்றியின் பயனாக கிடைத்த கொள்ளை பொருட்களையும் செல்வங்களையும் பரிசிலாக பெற பிராமணர், பாணர், விறலியர், இரவலர், புலவர்கள் உள்ளிட்ட பலர் போர்களம் நாடிவருவர். மேற்கூறிய அனைவரும் வேளாண் உற்பத்தியில் ஈடுபடாதவர்.

புறநானூறு 372:12-13 பாடல்வரிகளில் "புலவர் பரிசிலுக்கு நாடியதும்"[71], மதுரைக் காஞ்சி 749-752 பாடல்வரிகளில் "ஆட்சியாளர்கள் இரவலர்களை அழைத்து பரிசில் வழங்கி இருப்பதும், அதில் அந்தணர் இருப்பதும் குறிப்பிடத்தக்கது"[72].

பதிற்றுப்பத்து 64:3-5 பாடல்வரிகளில்[73] மற்றும் புறநானூறு 361:4-6 பாடல்வரிகளில்[74] "பார்ப்பனர் போர்க்களத்தில் பரிசு பெறச்சென்றமை புலப்படுகிறது". மேற்கண்ட பாடலில் வேள்வித்தொழிலை மேற்கொண்ட பார்ப்பனர் போர்க்களம் சென்று பரிசில் பெற்றனர் என்ற பொருளில் தான் உள்ளதேயன்றி, போர்க்களத்தில் வேள்வி செய்து பரிசில் பெற்றனர் என்ற பொருளில் அமையவில்லை.

மேலும் பிணக்குவியலுக்கு மத்தியில் வேத யாகம் செய்வரா? என்ற கேள்வியும் இயல்பாக தோன்றுகிறது.

---

[69] மே.து.ராசுகுமார், சிந்தனையாளன் பொங்கல் மலர் 2008.

[70] “அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய
ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே “ - புறநானூறு 26:11-15

[71] “புலவுக்களம் பொலிய வேட்டோய் நின்
நிலவுத்திகழ் ஆரம் முகக்குவம் எனவே “ – புறநானூறு 372:12-13

[72] “பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக என
இருங் கிளை புரக்கும் இரவலர்க்கு எல்லாம்
கொடுஞ்சி நெடுந் தேர் களிற்றொடும் வீசி “ - மதுரைக் காஞ்சி 749-752

[73] “அறம் கரைந்து வயங்கிய நாவின் பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தணர் அருங் கலம் ஏற்ப நீர் பட்டு “ - பதிற்றுப்பத்து 64:3-5

[74] “கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்க்கு,
அருங்கலம் நீரொடு சிதறிப் பெருந்தகைத்
தாயின்நன்று பலர்க்கு ஈத்துத்” - புறநானூறு 361:4-6

போரில் ஈடுபட்ட வீரர்களே வெற்றி வேள்வியில் கலந்து கொண்டு மகிழ்வினை வெளிப்படுத்தியிருக்கின்றனர்[75].

வேந்தர்கள் மட்டுமின்றி அவர்களது படைத்தலைவர்களாக இருந்தவர்களும் (பொருநன்) களவேள்வி நடத்தியிருப்பதை அறிய முடிகிறது[76].

மாறாக அந்தணரின் வேத யாகங்கள்/வேள்விகள் களவேள்வியோடு தொடர்பில்லாமல், அவர்கள் தங்களுக்குள் தங்கள் இருப்பிடத்தில் நடத்திக் கொண்டவை என ஆய்வாளர் மே.து.ராசுகுமார் குறிப்பிடுகிறார்[77].

பெரும்பாண் ஆற்றுப்படை:315-316 பாடல்வரிகள்[78] மற்றும் கலித்தொகை 36:15-26 பாடல்வரிகளில்[79] அந்தணரின் வேள்விகள் போர்க்களத்தில் நடத்தப்பட்டதாக இருக்கவில்லை என்பதை நோக்கவேண்டும்.

யாகங்களும் - வேள்வியும்

வேதங்களில் குறிப்பிடப்படும் யாகங்கள் (யக்ஞம்) மாந்த வளர்ச்சிக்கு உரியனவாக இல்லை. யாகங்கள் குறித்த வேதமாக இருப்பது "யசூர் வேதம்". அசுவமேதம், கோமேதம், நரமேதம், சர்வமேதம் என்பன குறிப்பிடத்தகுந்த பலியிடல்களாகச் சொல்லப்படுகிறது. மேதம் என்பது கொலைப் பலியை குறிப்பிடும் வடசொல்[80]. மேற்குறிப்பிட்ட கொலைப் பலிகள் முறையே குதிரை, மாடு, மாந்தன் மற்றும் பிற அனைத்து கொலைகளுக்கு உரிய என்பனவாக பொருள்படும்.

பொருட்களையெல்லாம் பலியாக்கிய பின்னர், தாமாகவே யாகம் நடத்தி அதில் இறைப் பணியாளர் (விசுவகர்மா) தன்னையே பலியாக்கி கொள்வான் இது சர்வமேதயாகம்[81]. அசுவமேதம் என்பது குதிரை பலியிடும் யாகம்[82]. சாதவாகன் அரசர் ஸ்ரீ சாதகர்ணி அசுவமேத யாகம் செய்ததாக அறியமுடிகிறது[83].

கோமேத யாகம் என்பது மாடுகளை பலியிடுவது. புருசமேத யாகம் என்பது மாந்தர்களை கொன்று நடத்தப்பட்ட தீப்பலி யாகம் ஆகும். அசுவமேத யாகம் போலவே இதுவும் நடத்தப்படும்.

---

[75] “கொன்று களம்வேட்ட ஞான்றை
வென்றி கொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே “ – அகநானூறு 36:22-23

[76] “வள் வாய் அம்பின் கோடைப் பொருநன்
பண்ணி தைஇய பயம் கெழு வேள்வியின் “ - அகநானூறு 13:10-11

[77] மே.து.ராசுகுமார், சங்க காலத்தில் வேந்தர்களும் வேளிர்களும், தமிழர் கண்ணோட்டம் பொங்கல் மலர், 2009

[78] “கேள்வி அந்தணர் அருங் கடன் இறுத்த
வேள்வித் தூணத்து அசைஇ யவனர்“ - பெரும்பண் ஆற்றுப்படை: 315-316

[79] “கேள்வி அந்தணர் கடவும்
வேள்வி ஆவியின் உயிர்க்கும் என் நெஞ்சே“ – கலித்தொகை 36:25-26

[80] ப. அருளி, அயற்சொல் அகராதி (பாகம் 4), புதுச்சேரி : வேரியம் பதிப்பகம் , 2007, பக். 95.

[81] ரிக் வேதம் 10-81-1

[82] பொழிலன், வேத வெறி இந்தியா, சென்னை: மன்பதைப் பதிப்பகம், 2018, பக்.186

[83] Noboru Karashima, A Concise History of South India Issues and Interpretations, New delhi: Oxford university Press, 2014, Pg. 41.

இவை இல்லாமல் இராசசூய யாகம் என்றொரு யாகம் காணக்கிடைக்கிறது. சாதவாகன அரசர் ஸ்ரீ சாதகர்ணி[84] மற்றும் கலிங்க அரசன் காரவேலன்[85] ஆகியோர் இராசசூய யாகம் செய்ததாக அறியமுடிகிறது. ஒரு அரசன் தன்னை சக்கரவர்த்தியாக தன்நிலையை உயர்த்திக்கொள்ள இந்த யாகம் செய்யப்படும்.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி பெயர் புறநானூறு 16, 125, 367, 377 ஆகிய பாடல்களின் அடிக்குறிப்பில் காணப்படுகிறது. ஆனாலும் அத்தகைய பெயர் கொண்ட ஒரு சோழ அரசன் அந்த பாடல்களில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. வேறு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு பாடல்களிலும் இப்பெயர் காணக்கிடைக்கவில்லை. பிற்காலத்தில் புறநானூற்று பாடல்களை தொகுத்தவர் தான் இப்பெயரை சேர்த்திருக்க வேண்டும் என ஆய்வாளர் மே.து.ராசுகுமார் குறிப்பிடுகிறார்[86].

அதே வேளை பெருநற்கிள்ளியின் காலத்தில் அவனை காட்டிலும் பலமான பிற அரசர்கள் தமிழ் நிலத்தில் இருந்தனர். அவர்கள் ஏன் இராசசூய யாகம் செய்யவில்லை? என்ற கேள்வி இவ்வேள்வி குறித்த ஐயத்தை ஏற்படுத்துகிறது.

அதே வேளை பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி என்ற பெயர் புறநானூறு 6,912,15,16 ஆகிய பாடல்களின் அடிக்குறிப்பில் காணப்படுகிறது. ஆனால் இவ்வரசன் மதுரைகாஞ்சியில் " பல்சாலை முதுகுடுமி " என்றே குறிப்பிடப்படுகிறான்[87].

பல்சாலை முதுகுடுமி எனும் பெயரை பல்யாகசாலை என புறநானூறு பாடல்களை தொகுத்தவர், உரையாளர் அல்லது ஏட்டில் எடுத்தெழுதியோர் இவர்களில் ஒருவர் தான் இத்திருத்தலை அல்லது புகுத்தலை செய்திருக்க வேண்டும் ஆய்வாளர் மே.து.ராசுகுமார் குறிப்பிடுகிறார்[88].

மேலும் யாகம் என்ற சொல் எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் பயின்று வரவில்லை. வேள்வி என்பது வேதவேள்வியே அன்றி, களவேள்வியையே பெரிதும் குறித்ததால் பண்டியரை ஆரிய சார்பாக்க "பல்யாக சாலை" என திரித்து விட்டனர் ஆய்வாளர் மே.து.ராசுகுமார் குறிப்பிடுகிறார்[89].

இதை உணராத உரையாசிரியர்கள் "பல்யாக சாலை" என்ற பாடத்தை எடுத்துக்கொண்டு பாண்டியன் பலவேள்விகளை செய்வித்தான் என ஏற்றுக்கொண்டனர்.

அது மட்டுமின்றி "புத்திர காமேஷ்டி" என்றொரு யாகம் உள்ளது. இராமாயணத்தில் தசரதன் இந்த யாகத்தை செய்ததாக தெரிகிறது.

சேர அரசன் பெருஞ்சேரல் இரும்பொறை இந்த யாகத்தை செய்து மகனை பெற்றதாக பதிற்றுப்பத்து 74 ஆம் பாடலை[90] கொண்டு பலர் உரைமயக்கம் கொள்கின்றனர். ஆனால் யாகம் செய்தால் குழந்தை பிறக்குமா? என்ற அடிப்படை கேள்வி இதை ஏற்க மறுக்கும்.

---

[84] Shashi Kant, The Hathīgumphā Inscription of Khāravela and the Bhabru Edict of Aśoka, New Delhi: D.K. Printworld (P) ltd, 2000, Pg.41.

[85] முக்கலிங்க திராவிடம், பே.ரா. K.S.சலம், சென்னை: சிந்தன் புக்ஸ், 2022:பக்: 190.

[86] மே.து.ராசுகுமார், சங்க காலத்தில் வேந்தர்களும் வேளிர்களும், தமிழர் கண்ணோட்டம் பொங்கல் மலர், 2009

[87] “பல்சாலை முதுகுடுமியின்“ - மதுரைக் காஞ்சி 759-767

[88] மே.து.ராசுகுமார், சங்க காலத்தில் வேந்தர்களும் வேளிர்களும், தமிழர் கண்ணோட்டம் பொங்கல் மலர், 2009.

[89] ibid

[90] “கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது

மேலும் இப்பாடலில் பார்ப்பனர் பங்கெடுப்போ அல்லது வேத யாகத்தின் தாக்கம் இருந்ததாக தெரியவில்லை என ஆய்வாளர் மே.து.ராசுகுமார் குறிப்பிடுகிறார்[91].

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்பான் கௌணியன் விண்ணாந்தயன் என்று ஒருவன் செய்ததாக சொல்லப்படும் புறநானூறு 166 ஆம் பாடலிலும் கூட யாகத்தின் பெயர் வெளிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புறநானூறு 6:16 பாடல் வரிகளில் போர் வெற்றிகளுக்கு பின்னர் வழங்கப்படும் பரிசில்களும் முன்னர் குறிப்பிடப்படுகிறது.

புறநானூறு 6:120 "நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே" எனும் பாடல்வரிகளுக்கு உரையாசிரியர் "அந்தணர் உன்னை நீடுவாழ்கவென்றெடுத்த கையின் முன்னே" என உரையெழுதியுள்ளனர். வாழ்த்துதலுக்காக எடுக்கின்ற கைகளுக்கும், ஒன்றைப் பெற வேண்டிக் கைகளை ஏந்துவதற்கும் வேறுபாடுகள் உள்ளன. ஏந்துதல் என்ற சொல்லுக்கான பொருள் வெளிப்படையாகவும் தெளிவாகவும் இருக்கும் போது, அதற்கு முரணான ஒரு பொருள் சொல்லப்படுகிறது.

புறநானூறு 367 ஆம் பாடலும், பொருள் இரந்து வேண்டி நின்ற பார்ப்பனர்க்குப் பொன் தானமாக வழங்கும் படி ஔவையார் வேண்டுகிறார் வேண்டுகிறார். மேலும் இப்பாடலில் இரவலர்க்கு அரிய பொருட்களை குறைவற கொடுத்தவராக வேந்தர்கள் கூறப்படுகின்றனர்.

ஆய்வாளர் அ.பாண்டுரங்கன், இனக்குழு சமுதாயத்தில் வெற்றி பெற்ற தலைவன் தன் வெற்றிக்கு காணிக்கையாக ஓர் மனிதனை பலியாக கொடுக்கும் "அவிப்பலியே" பிராமணர் கூட்டுறவால் களவேள்வியாக படிமலர்ச்சி அடைந்தது என குறிப்பிடுகிறார்[92].

தொல்காப்பியத்தில் வஞ்சினம் கூறும் வீரன் தன்னுயிரைக் கொடுப்பதாக நூற்பா வரிகள் உரைக்கின்றன[93]. மேலும் சங்க இலக்கியத்தை நோக்கும் வேளையில் இத்தகைய மாந்த பலி ஏற்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை. ஒரு வேளை அது தொல்குடி சமுதாயத்தோடு விட்டுப்போன வழக்கமாக இருக்கலாம். ஆய்வாளர் பாண்டுரங்கன் உரைப்பது போல அந்தணர் கூட்டுறவால் களவேள்வியாக மாறி இருக்க துளியேனும் வாய்ப்பில்லை. மேலும் தன் ஆய்வு கட்டுரையில் இதற்கான எந்த சான்றையும் அவர் அளிக்கவில்லை.

மேலும் ஆய்வாளர் அ.பாண்டுரங்கன் வேதங்களில் குறிப்பிடப்படும் ரணகள வேள்வியே, தமிழ் மன்னர்களால் களவேள்வியாக மாற்றப்பட்டு நடைபெற்றது என்று குறிப்பிடுகிறார்[94]. இதற்கும் எந்த சான்றுகளையும் அவர் அளிக்கவில்லை. மேலும் வேதங்களை ஆய்ந்து பார்க்கும் போது இத்தகைய பெயர் கொண்ட யாகம் ஏதும் கிட்டவில்லை. வேத நெறியை தழுவி வாழ்ந்த வட இந்திய மன்னர்கள் கூட இந்த பெயரை உடைய யாகத்தை செய்ததாக சான்று இல்லை என்பது நினைவு கூறத்தக்கது.

வேள்வி வேட்டனை உயர்ந்தோர் உவப்ப " - பதிற்றுப்பத்து 74: 1-2

[91] மே.து.ராசுகுமார், சங்க காலத்தில் வேந்தர்களும் வேளிர்களும், தமிழர் கண்ணோட்டம் பொங்கல் மலர், 2009.

[92] அ.பாண்டுரங்கன், தொல் பொதுவுடைமை சமுதாயத்திலிருந்து நிலவுடைமைச் சமுதாயத்தை நோக்கிய பயணம், செம்மலர் ஆகஸ்ட் 2013, பக். 21.

[93] "தொல்லுயிர் வழங்கிய வலிப்பலி யானும்" - தொல்.பொருள்.75:12

[94] அ.பாண்டுரங்கன், தொல் பொதுவுடைமை சமுதாத்திலிருந்து நிலவுடைமைச் சமுதாத்தை நோக்கிய பயணம், செம்மலர் ஆகஸ்ட் 2013, பக். 21.

முடிவுரை

தொல்குடி சமூகத்தில் இருந்து உருவான சங்க கால வேளாண் வளர்ச்சி சமூகம் தன்னகத்தே தொல்குடி வாழ்வின் கூறுகளைச் சுமந்துள்ளது. இன்றைய நவீன காலத்திலும் அதன் எச்சங்கள் உள்ளன. தொல்குடி சமூகத்தின் உற்பத்தி பங்கீட்டின் பாதீடு முறையின் போர்க்கள மொழிவு/கூற்று (Version) களவேள்வி என்றும், போர்க்களத்தில் வென்ற அரசனால் கொள்ளைப் பொருள், செல்வம் மற்றும் நிலங்களை போரில் பங்கு கொண்ட வீரர்களுக்கும் போரில் பங்கு பெறாத புலவர், பாணர், விறலியர், பாடினி, பிராமணர், வறியவர், இரவலர் முதலியோருக்கு வெற்றிக்களிப்பில் பங்கீடாக வழங்கப்பட்ட நிகழ்வே களவேள்வி. மேலும் இவை வேத யாகங்களோடு எத்தொடர்பும் அற்றது எனவும் மேற்கண்ட சான்றுகள் மூலம் நிறுவுகிறேன்.

தொ.மா.க. 106

தொல்காப்பியமும் கருநாடக இசையும்

முனைவர் அமுதா பாண்டியன், மாதவி
பேராசிரியர், இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
pandianamutha@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் இசையை மையப்படுத்தி எழுதப்பட்ட நூல் இல்லையாயினும், பொருளதிகாரத்தில் கூறப்படும் செய்திகளிலிருந்து இசையைக் குறித்தான முக்கிய செய்திகள் பல பெற முடியும். அகப்புறத்தினை பாகுபாட்டில் அகத்திணைக்கான ஏழு கருப்பொருட்களில் பறையும், யாழுமான இரண்டு இசை குறித்தானது. உவமைகள் பல, இசை தமிழர் வாழ்வில் இன்றியமையாத பங்கினை வகித்ததைப் பறை சாற்றுகின்றன. எடுத்துக்காட்டாக அகத்திணை காதல் வாழ்வில் ஆணுக்கும் பெண்ணுக்குமான இன்பம் பாணன் தன் யாழிசையிலிருந்து பெறும் இன்பத்திற்கு இணையானது என்றுக் கூறப்படுகிறது (தொல், 3:92).

தொல்காப்பியத்தில் செய்யுள் என்னும் சொல் பாட்டினத்தையும் உள்ளடக்கியது (verse and song). தொல்காப்பியர் எழுத்தின் ஓசையும், இசை அலகின் ஓசையும் ஒன்றே "இசையோடு சிவணிய நரம்பின் மறைய" (1:33) என்கிறார். தமிழ் யாப்பு, பாணனுடைய பாடல்களிலிருந்து இயல்பாகப் பிறந்தது. எழுத்ததிகாரத்தில் மாத்திரையைப் பற்றி விரிவாகக் கூறினும், பொருளதிகாரத்தில் அசையையே செய்யுளின் அடிப்படையாக விளக்குகிறார். அசை என்றால் அசைத்தல் என்ற பொருளோடு வரிவடிவத்தையன்றி ஒலி வடிவத்தையேக் குறிக்கிறது. "ஈர் அசை கொண்டும், மூவசை புணர்த்தும் சீர் இயைந்திற்றது சீர்" (3:324) என்று அசையிலிருந்து சீர் பிறக்கும் போது இசையோடு பிறக்கவேண்டும் என்கிறார். அசை என்பது syllable அல்ல என்றும் அது ஒலி அளவே (syllabic instance) என்றும் கூறுகிறார் எல்லீஸ் (மரு 48). சங்கப்பாடல்கள் கீழ் உள்ள பாடலில் காணும் விதமாக மாத்திரை அளவிலும் எழுத்துக்களின் எண்ணிக்கை அளவிலும் பெருமளவில் மாறுபட்டு சீர் அளவில் கடைசி அடிக்கு முந்தைய அடியில் மட்டும் மூன்று சீர்களும், ஏனைய அனைத்து அடிகளிலும் நான்கு சீர்களும் கொள்கின்றன.

தொல்காப்பியர் வேற்று மொழியர்களுக்கு தமிழிலக்கணம் கற்பிப்பதற்காக 'மாத்திரை' குறித்து கூறியிருக்கலாம். அல்லது இது பிற்கால இடைச் செருகலாக இருக்கலாம். ஆனால் யாப்பெருங்கல மரபில் அசையே அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. புலவர்களை புகழ்ந்து பாடுவாதற்காக அகவல் ஓசையுடன் ஈரசை சீர்களைக் கொண்ட அகவற்பா பயன்படுத்தபட்டது. இது இரண்டு துடிகளைகொண்டு கருநாடக இசையின் ஆதி தாளம் ஆகும். மூன்று அசைகளையுடைய வஞ்சிப்பா பயன்பாட்டிற்கு வந்த போது தாள வகைகள் பல பிரிவுகளாக வளர்ந்தன. பாணர்கள் புரவலர்களை சந்தித்து பாடல்களைப் பாடும்போது உடன் சென்ற விறலியர் அப்பாடல்களின் பொருளை முக பாவனைகளாலும், அங்க அசைவுகளாலும் தெளிவுபடுத்தினர். இதனால் பரதக்கலையில் விரல்களும், முக பாவனைகளுமே முக்கிய அங்கம் வகிக்கின்றன. இவ்வாறான நாடகத் தன்மைக்குப் பொருந்துமாறு கலிப்பாவும், பின்னர் பரிபாடலும் தோன்றின.

கலி, பரி பாவகைகளின் தரவு என்ற முதல் அங்கம் அருகக் கடவுளுக்கு உகந்ததான அசோக மரத்தின் தளிர் இலைகளுக்கு பெயரான பல்லவம் என்று பெயர் மாறி கருநாடக இசையில் பல்லவியாகவும் இடைநிலைப்பாட்டு தரவின் பொருளிற்கு நீட்சியாக அனுபல்லவி என்றும் தாழிசை தரவின் அடிகளுக்கு ஒப்பாக மூன்று அடுக்குகளாக விரிவுபெற்று சரணமாகவும், ஆராகம் பல அசைகள் அடர்த்தியாக பின்னப்பட்டு படிப்படியாக விரைவு அடைந்து ஜதியாகவும் கருநாடக இசையில் அமைகின்றன. இவற்றின் அங்க வகைகளே இன்று கருநாடக இசையின் முக்கிய அமைப்பான கீர்த்தனையின் பகுதிகளாக உள்ளன என்பதைக் குறித்த ஆழமான ஒரு ஆராய்ச்சியே இக்கட்டுரை ஆகும். மட்டுமின்றி பண்ணத்தி, வண்ணம் என்பன பற்றியும் புறப்பாட்டில் ஆங்காங்கே கூறப்படும் இசைப்பாடல்களும் குறித்தும் ஆராய்ச்சி செயப்படுகிறது.

முன்னுரை

தொல்காப்பியம் இசையை மையப்படுத்தி எழுதப்பட்ட நூல் இல்லையாயினும், பொருளதிகாரத்தில் கூறப்படும் செய்திகளிலிருந்து இசையைக் குறித்தான முக்கிய செய்திகள் பெற முடியும். அகவற் பாவால் இயற்றப்பட்ட இன்னூல் பாடுவதற்கு ஏற்றது. தமிழின் யாப்பு குறுகலான அசை மற்றும் சீர் எவ்வாறு இயல்பாகவே செய்யுளை இசைக்க ஏற்றவாறு ஆக்குகிறது என்றும், கலி, பரி பாவகைகளின் அங்க வகைகளே இன்று கருநாடக இசையின் முக்கிய அமைப்பான கீர்த்தனையின் பகுதிகளாக உள்ளன என்பதையும் குறித்த ஆழமான ஒரு ஆராய்ச்சியே இக்கட்டுரை ஆகும். மட்டுமின்றி பண்ணத்தி, வண்ணம் என்பன பற்றியும் புறப்பாட்டில் ஆங்காங்கே கூறப்படும் இசைப்பாடல்களும் குறித்தும் ஆராய்ச்சி செயப்படுகிறது.

தொல்காப்பியத்தின் காலத்தை வரையறை செய்வது இந்நாள் வரை சிக்கலாகவே உள்ளது. மேல் நாட்டு அறிஞர்கள் கி.பி முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரையான காலக் கட்டத்தை ஒதுக்குகிறார்கள். உள்நோக்கமற்றும் உள்நோக்கோடும் செயப்பட்ட கணிசமான இடைச்செருகல்கள் கால வரையறையை சவாலானதாக ஆக்குகின்றன. குறுகிய சூத்திரங்களில் உள்ள கருத்துக்களை தெளிவுபடுத்துவதற்கும், பல நூற்றாண்டுகளான சொற்பொருள் மாற்றங்களை விளக்குவதற்கும் பிற்கால மாணவர்கள் சூத்திரங்களை சேர்க்கவோ அல்லது நீக்கவோ செய்தபோது பெரும்பாலான சிதைவுகள் நிகழ்ந்தன என்றும் பல சமயங்களில், சமஸ்கிருத கலாச்சாரத்தின் இயல்புகளை மிகைப்படுத்தும் உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே சிதைவுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் உரையில் உள்ள மொழியியல் மாறுபாடுகளை ஊன்றி ஆராய்ச்சி செய்வதன் மூலம், தொல்காப்பியத்தின் பெரும்பாலான பகுதிகள் சங்கக் பாடல் களுக்கு முன்பே எழுதப்பட்டவை என்றும் அறியலாம் என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளைக் கூறுகிறார் (58). ஆரம்பகால ஆர்வமுள்ள வெளிநாட்டவர்களுக்கு, குறிப்பாக சமஸ்கிருத அறிஞர்களுக்கு, தமிழ் பாடல் மரபுகள் மற்றும் அழகியல் குறித்து கற்பிப்பதற்காக தொல்காப்பியம் எழுதப்பட்டது என்று கார்த்திகேசு சிவத்தம்பி கூறுகிறார்.

தொல்காப்பியம் அதற்கு முன்னான ஒரு வலுவான இலக்கிய பாரம்பரியத்தை நிலைநாட்டுகிறது. பொருளதிகாரத்தில் கூறப்படும் செய்திகளிலிருந்து இசையைக் குறித்தான முக்கிய கருத்துக்கள் பல பெற முடியும். தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ள தமிழ் மொழிக்கான யாப்பு, நடை, அணிகள் மற்றும் தரப்பட்டுள்ள பாடல்களின் வகைகளைக் கொண்டு, தமிழர்களின் இசை மற்றும் இசை வாழ்க்கை பற்றிய அடிப்படையை அறிந்துகொள்வது பயனுள்ளது.

தொல்காப்பியத்தின் முன்றாவது பகுதியான பொருளதிகாரம் தமிழ் பாடல் மரபின் யாப்பிலக்கனத்தை மட்டுமின்றி செய்யுள் பொருளைப்பற்றி வரையறுத்து அதன் தன்மைகளை விரிவாகக் கூறுகிறது. இவ்வகையில் தொல்காப்பியம் தனித்தன்மை வாய்ந்தது. ஏனென்றால் அக்காலக்கட்டத்தில் இத்தகையதொரு மரபு ஏனைய மொழி இலக்கண நூல்களில் இல்லை. பொருளதிகாரம் (செய்யுள் பொருள் மற்றும் கவித்துவம்), அதன் ஒன்பது அத்தியாயங்களில் இலக்கியப் பொருளின் முழு பரிமாணதத்தையும் விளக்குவதால் அவற்றிலிருந்து அக்கால மக்கள் வாழ்க்கை முறையினை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

சில அறிஞர்கள் இந்தப் பகுதி பிற்காலச் சேர்க்கை என்று கருதுகின்றனர். ஆனால் தற்போதுள்ள சில சங்கக் பாடல் களுக்கு முன்பே எழுதப்பட்டதாக உள் சான்றுகள் சந்தேகத்திற்கு இடமின்றி காட்டுகின்றன. பொருளதிகாரத்தில், மனித வாழ்வின் அனைத்து படிமங்களும் திணைகள் எனப்படும் இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவையே செய்யுளின் கருப்பொருளும், பொருளுக்கும் அடிப்படையாக இருக்க வேண்டும்.

இரண்டு திணைகளில், முதலாவதான அகத்தை இல்லறம் அல்லது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள அன்பை சார்ந்தது அல்லது உள்ளம் சார்ந்தது என விளக்கலாம். புறம் என்பது சமூக

வாழ்வு சமுக ஆளுமை என்பதைப்பற்றியது. மனித வாழ்வு இவ்விரண்டு மனித தூண்டுதல்களில் வேரூன்றியுள்ளது - அன்பு மற்றும் சக்தி இயக்கம் அகம் மற்றும் புறம் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகின்றன. பாடல் மரபுகள் இந்த அடிப்படையில் உருவாக்கப் படுகின்றன.

ஏழு அகத்தினைப் பிரிவுகளில், முதல் ஐந்தும் கால-வெளி தொடர்ச்சியின் அடிப்படையில் வைக்கப்பட்டுள்ளன. தமிழகம் கடல் நோக்கிச் சாய்ந்த முக்கோண நிலப்பரப்பின் இருபுறமும் இரண்டு மலைத்தொடர்களை கொண்டுள்ளது. கடல்களுக்கு இடையே மலைத்தொடர்களுகிடையான நிலப்பரப்பின் வாழ்வின் பலவித பரிமாணங்கள் புலவன் மனதில் வளமான பாடற் பொருளை விளைவிற்கிறது.

அகம் பாடல் கட்டமைப்பு கூறுகளாக, தொல்காப்பியம் இந்த திணைகளுக்கு முதல் (சுற்றுச்சூழல்), கரு மற்றும் உரி (காதல் பரிமாணங்கள்) பொருள்களைத்தருகின்றது. முதல் நிலத்தையும் காலத்தையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு நிலமும் ஒரு குறிப்பிட்ட பருவம் மற்றும் நாளின் நேரத்துடன் தொடர்புடையது. ஊரிப்பொருள் என்பது ஒவ்வொரு நிலத்திற்கும் ஒத்துச்செல்லும் காதல் நடத்தை. முதல் ஐந்து திணைப் பிரிவுகளும் அன்பின் வழக்கமான போக்கைக் கையாளுகின்றன; ஆறாவது மற்றும் ஏழாவது, கைக்கிளை (சேராத காதல்) மற்றும் பெருந்திணை (பொருந்தாத காதல்) என்பன. கரு என்பது ஒவ்வொரு திணை வாழ்க்கையின் முக்கியமான இயற்பியல் கூறுகளாகும்.

> *"தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை, செய்தி யாழின் பகுதியோடு தொகையிஇ, அவ் ஆகி பிறவும் கரு என மொழிப " (தொல் 3:18).*

ஒரு இனத்தின் கலாச்சார வளர்ச்சிக்கு இசை சிறந்த சுட்டியாக உள்ளது. மேலே உள்ள இரண்டு கூறுகளில் பறை மற்றும் யாழ் ஆகியவை இசையைக் குறிக்கின்றன. இசை தமிழ் கலாச்சாரத்தின் ஒரு முக்கிய அங்கம். ஒவ்வொரு நிலத்திற்குமான பண்கள் உரிப்பொருள் அல்லது காதல் நடத்தை முறைக்கும் குறிப்பிட்ட பருவங்கள் மற்றும் நேரப் பிரிவுகளுக்கும் பொருத்தமான மற்றும் தனித்துவமான உணர்ச்சிகளைத் தூண்டுகின்றன. இவ்வாறு, ஒவ்வொரு திணைக்கும் ஒதுக்கப்பட்ட இடம் மற்றும் நேர கூறுகள் குறிப்பிட்ட நிலப்பரப்பின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் உள்ளார்ந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்த அவற்றுடன் தொடர்புடைய பண்ணின் வகையைக் கட்டுப்படுத்துகின்றன.

புறத்தின் ஏழு பிரிவுகளும் ஏழு அகம் திணைகளுக்கு இணையாகப் பெறப்படுகின்றன. அடிப்படையில் இசை என்றால் என்ன? தொல்காப்பியர்இசையை வெற்றிடத்தில் அல்லது வாழ்க்கையின் ஒரு அணியாக மட்டுமே விவாதிக்கவில்லை, இசையை வாழ்க்கை, காதல் மற்றும் மொழியின் உள்ளார்ந்த பண்பாக பார்க்கிறார். இயைபு என்றால் ஒன்றுபடுதல் இசைப்பு என்றால் இசைத்தல் என்றும் கூறுகிறார். சங்கப் பாடல்கள் அனைத்தும் இயற்கை மற்றும் வாழ்க்கையைப் பற்றி பாணன் பெற்றுக்கொண்ட உள்ளார்ந்த அறிவைக் காட்டுவது மட்டுமின்றி தாளக்கட்டுடனும் இசையமைப்புடனும் உள்ளன.

இசையில் இருந்து எடுக்கப்பட்ட பல உருவகங்கள் மனித உறவுகளின் பண்பை வெளிப்படுத்துகின்றன. அவை தமிழர்களின் வாழ்வில் இசை பெற்றுள்ள சமரசமற்ற இடத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான காதல் அகம் வாழ்வில் முக்கியமானது. இது இசைக்கலைஞர் தனது இசையின் மீது வைத்திருக்கும் அன்பைப் போன்றது என்கிறார் தொல்காப்பியர்:

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் காமக் கூட்டம் காணும் காலை, மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள் துறை அமை நன் யாழ்த் துணைமையோர் இயல்பே" 3:3:1

தொல்காப்பியத்தில் செய்யுள் என்னும் சொல் பாட்டினத்தையும் உள்ளடக்கியது (verse and song). அதாவது தமிழ் செய்யுள் பாணர் பாடலிலிருந்து இயல்பாகப் பெறப்பட்டது. பாடல் முக்கியமாக தாளம் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு பண் அமைக்கப்பட்டது. சங்கச் செய்யுள்கள் பாணர்களால் பாடப்பட்டு செம்மை

செய்யப்படட பாடல்களேயாகும். அதனால் இச்செய்யுள்கள் பண்களின் இசைத் தன்மையைத் தக்க வைத்துக் கொண்டன. தமிழின் முதல் காவியமான சிலப்பதிகாரம் ஏறக்குறைய பாடல்களின் கோர்வையாகும்.

யாப்பு

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் மாத்திரையைப் பற்றி கூறினாலும் பொருளதிகாரத்தில் அசையையே செய்யுளின் அடிப்படையாக விளக்குகிறார்.1

தமிழ் யாப்பிலக்கணத்திற்கு அசை அடிப்படையானது. அசை என்ற சொல் 'அசை' என்ற மூலச் சொல்லில் இருந்து வந்து, அசைத்தல் மூலமாக பாடலின் 'காலத்தை அமைத்தல்' என்று பொருள் படுகிறது. எழுத்துக்கள் அதிர்வு செய்யும் போது அசை பிறக்கிறது. வீர பாண்டியன் யாப்பெருங்கால விருத்தியில் இருந்து மேற்கோள் காட்டுகிறார்: " எழுத்து அசைத்து இசைகோடலின் அசையே" (181), அதாவது இசை ஒலியை உருவாக்க எழுத்தை அதிரச் செய்யும் போது அசை உருவாகும்.

எழுத்துகளின் அளவு குறையும் போது உயிரெழுத்து நீட்டித்து ஒலிக்கிறது. அதாவது சொற்களில் எழுத்துக்களின் கால அளவை நீட்டியும் சுருக்கியும் செய்யுளின் இசைத் தன்மைக்கும், தாளத்தன்மைக்கும் ஏற்றவாறு மாற்றி அமைக்கப் படுகிறது:

"அளபு இறந்து உயித்தலும், ஒற்று இசை நீடலும் உள் என மொழிப" (1:1:33)

அதாவது எழுத்தின் ஒலி இசைக் குறிப்பின் ஒலியுடன் இணைகிறது. எழுத்தின் ஒலி இசைக் குறிப்பின் காலத்துடன் பொருந்தும்போது, எழுத்தின் ஒலி ஒன்றிணைந்து மறைகிறது. தொல்காப்பியர் எழுத்தின் ஓசையும் இசை அலகின் ஓசையும் ஒன்றே "இசையோடு சிவணிய நரம்பின் மறைய" என்பனார் புலவர் (1:1:33) என்று கூறுகிறார். (சிவணிய - ஒன்றிணைவு; நரம்பு - சுரம் மறைய - மறைந்துவிடும்). பஞ்ச மரபு " யாழேழுத்திற் பாவால் புணர்க்க" (89) என்று கூறுகிறது.

தொல்காப்பியர் இரண்டு அல்லது மூன்று அசைகள் ஒன்றிணைந்து சீர் (மெட்ரிக்கல் ஃபுட்) உருவாக்குகின்றன என்கிறார்.

"ஈர் அசை கொண்டும் மூஅசை புணர்ந்தும் சீர் இயைந்து இற்றது சீர் எனப்படுமே" (3:8:11)

"சீர் இயைந்து இற்றது சீர்" (3:324) என்பத்திலிருந்து அசையிலிருந்து சீர் பிறக்கும் போது இசைத் தன்மையோடு பிறக்கவேண்டும் என்பது பொருள்.

ஒற்றை அசையுடன் கூடிய சீர் அசைச்சீர் எனப்படும், இரண்டு சீர்களைக் கொண்டது இயற்சீர், மூன்று உரிச்சீர் மற்றும் நான்கு பொது சீர் எனப்படும். ஒலியை அடிப்படையாகக் கொண்டு, சுருக்கப்பட்ட 'உ' அல்லது முழு 'உ' ' முறையே நேர்பு மற்றும் நிறைபு எனப் பயன்படுத்தப்படுகிறது. இவற்றைப் பயன்படுத்தினால் இயலசைக்கு பதிலாக உரிஅசை ஆகிவிடும். இது மூன்று சீர் சொற்களைப் பிரிப்பதைத் தவிர்க்க உதவுகிறது. இவ்வாறு இயைந்து சீர் கொள்ளும் போது இசை உணர்வோடு வல்லோர் செய்வர் என்கிறார் தொல்காப்பியர்.

இதை இன்னும் அழுத்தம் கொடுத்து

"அசையும் சீரும் இசையோடு சேர்த்தி வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே" (3:8:10)

இசையை மனதில் கொண்டு அசை மற்றும் சீர் அமைப்பதன் மூலம் செய்யுள் இயற்கையாகவே இசையுடன் அமைகிறது.

தமிழில் அனைத்து உயிர்மெய் எழுத்துகளும்3 இயற்கையாகவே syllable ஆக உள்ளன என்றும், அனைத்து மெய் எழுத்துக்களும் இயல்பாகவே உயிரெழுத்துக்களுடன் இணைகின்றன என்றும், செய்யுள்

எழுத்துக்கள் மாத்திரை கொண்டு அளவிட முடியாது என்றும் எல்லிஸ் கூறுகிறார்: மேலும் "எழுத்தை ஆங்கிலத்தில் சொல்வது போன்று syllable என்று கூறினால் அசையை syllable என்று கூறமுடியாது எனவும், அசையை syllable என்று கூறினால் சீரை குறிக்க வேறு சொல் வேண்டும் என்றும் கூறுகிறார். அதனால் அசையை, ஒலி அளவு (syllabic instance) என்று கூறுகிறார் எல்லீஸ் (மரு 48. கார் மற்றும் ஹார்ட் அவர்களும் இதையே கூறுகின்றனர். இதனால் சங்கப்பாடல்கள் "மாத்திரை என்ற அளவு கோலைக் கொள்வதில்லை. எழுத்துக்களின் எண்ணிக்கை அளவும் ஒவ்வொரு அடியிலும் வேறுபாடாகின்றது. ஆனால் சீர் எண்ணிக்கையில் சரியான அளவில் நிற்கின்றது.

அகவற் சீர் இரண்டு அசைகளின் கூட்டமைப்பால் ஆனது. இதில் நான்கு விதங்கள் இருக்கலாம்: நேர் நேர் - cvc cvc, நிரை நேர் - cvcv cvc, நேர் நிரை - cvc cvcv, நிரை நிரை -- --; ஸ்ரீ --; -- ஸ்ரீ; ஸ்ரீ ஸ்ரீ. அகவல் என்ற சொல் அகவு என்ற வினைச்சொல்லில் இருந்து வந்தது, இது உயர் தொனியில் அழைப்பது அல்லது உரையாற்றுவது. அகவல் சீர் என்பது எழுதும் செயலுக்கு முன்பே வாய்மொழியாகப் பிறந்தது. அகவர் என்பவர் அழைப்பவர்கள். எனவே அகவல் சீரில் இக்டஸ் முதல் எழுத்தில் விழுகிறது.

ஆரம்பகால சங்க செய்யுள்கள் மிக எளிமையான மற்றும் இயற்கையான அகவற் சீரை பெருமளவில் பயன்படுத்தின. இச்சங்கச் செய்யுள்களை ஆராய்ந்தால் பாடல் களில் அடிகள் மாத்திரை அல்லது எழுத்துக்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலன்றி அசைகளின் எண்ணிக்கை அடிப்படையில் அமைந்துள்ளன என்று தெரிகிறது.

இவனிவ /ளைம்பால் /பற்றவும்/ இவளிவன் நிரை நிரை / நேர் நேர்/ நேர் நிரை/ நிரை நிரை
புன்றலை/ யோரி /வாங்குநள் /பரியவும் நேர் நிரை/நேர் நேர்/ நேர் நிரை/ நிரை நிரை
காதற் /செவிலியர்/ தவிர்ப்பவுந் /தவிரா நேர் நேர்/ நிரை நிரை / நிரை நிரை / நிரை நேர்
தேதில்/ சிறுசெரு /வுறுப/ மன்னோ நேர் நேர்/ நிரை நிரை/ நிரை நேர்/ நேர் நேர்
நல்லைமன்/ றம்ம/ பாலே /மெல்லியல் நேர் நிரை/ நேர் நேர்/ நேர் நேர்/ நேர் நிரை
துணைமலர்ப்/ பிணைய /லன்னவிவர் நிரை நிரை/ நிரை நேர்/ நேர் நிரை/
மணமகிழ் /இயற்கை /காட்டி /யோயே. நிரை நிரை/ நிரை நேர்/ நேர் நேர்/ நேர் நேர் குறு 229

மேலே உள்ள எடுத்துக்காட்டில், மாத்திரை மற்றும் எழுத்துக்களைக் கணக்கிட்டால், அவை ஒவ்வொரு அடியிலும் எண்ணிக்கை ரீதியாக வேறுபடுகின்றன. ஆனால் ஒவ்வொரு அடியிலும் எட்டு அசைகளும் (4 சீர்) இறுதியான அடிக்கு முந்தின அடியில் ஆறு ஆசைகளும் (3 சீர்) உள்ளன. இது பல பாடல்களிலுள்ள பொதுவான அமைப்பாக உள்ளது. 4

எழுத்தின் ஒலியளவு சீரின் அளவுக்குக் கட்டுப்பெற்றது:

> "*எழுத்து அளவு எஞ்சினும் , சீர் நிலை தானே குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப*" *(தொல் 3:8: 41)*

அதனால் அசை தாளத்திற்கு ஏற்றாற் போல் இருக்கிறது. மார், " அசை என்பது இசை நேரத்தின் ஒரு அலகாக லகு5 என்று குறிக்கலாம்… சீர் என்பது நேர அளவீடு. தாளக் கூறுகளின் அடிபடையான லகு, இரு சீர் சேர்க்கையால் ஆனது" என்று கூறுகிறார் (411). கலித்தொகை கடவுள் வாழ்த்திலும் பன்னிரெண்டாம் பாடலிலும் 'சீர்' என்ற சொல் தாளத்திற்கே ஆகி வருகின்றது.

மேலும், தாள ஒத்திசைவில் ஏதேனும் இடைவெளியை நிரப்ப சீர் எப்போதும் அசையைக் கட்டுப்படுத்துகிறது என்றும் கூறுகிறார். "சீர் என்பது குறிப்பிடத்தக்க இசைக் கட்டமைப்பாகும், ஏனெனில் இது பாலையின்(scale) சிறப்பியல்புகளை தன்னகத்தே கொண்டிருக்கும்" என்கிறார் வீர பாண்டியன் (182).

செய்யுள் அடி

செய்யுள் அடி சீரால் ஆனது. அசை வடிவங்கள் அடியில் மிகவும் மீள்தன்மை கொண்டவை. தொல்காப்பியர், "அடியின் சிறப்பே பாட்டு எனப்படுமே (3:8:34) என்று கூறுகிறார். ஆனால் அவர் எழுத்துக்களின் அடிப்படையில் அடிகளை வகைப்படுத்துகிறார்.

எழுத்துக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அடியை வரையறுப்பதில் உள்ள உள்ளார்ந்த குறைபாடு தமிழுக்கே உரித்தான தளை என்னும் கருதுகோளுக்கு பயன் அற்றதாகிறது. இருப்பினும், காக்கைப்பாடினியம்6 (பின்னர் யாப்பெருங்கலம் மற்றும் அமுத சாகர் எழுதிய யாப்பெருங்கலக்காரிகை) மூலம் பாதுகாக்கப்பட்ட தமிழ் யாப்பு பாரம்பரியம், சீர்களின் எண்ணிக்கையின்படி வரிகளின் நீளத்தைக் கணக்கிடுகிறது (சிர் வகை ஆடி):

குறளடி - இரண்டு சீர்கள்; சிந்தடி -3 சீர்கள்; அளவடி - நான்கு சீர்கள்; நெடிலடி- ஐந்து சீர்கள்; கடிநேடிலடி - 6 சீர்கள்

சங்கச் செய்யுள்கள் என்பது பாணர்களின் பாடல்களின் மேல் எழுதப்பட்ட மற்றும் முழுமைப்படுத்தப்பட்ட பதிப்புகள் ஆகும். எனவே, தமிழ் பாடல் களில், அடியின் நீளம் நேர அலகுகள் அல்லது சீர் அல்லது கால அளவினால் இயல்பாக தீர்மானிக்கப்படுகிறது. அவற்றில் உள்ள எழுத்துக்கள் அல்லது எழுத்துக்களின் எண்ணிக்கையால் அல்ல. இசைரீதியாக பொதுவாக பா அடிகள் அமைப்பு நான்கு (சில நேரங்களில் ஆறு) துடிப்புகளைக் கொண்டுள்ளது. இது கர்னாடக இசையில் தாளத்தில் ஆதி தாளம் என்று பேர் பெறுகிறது. இது இன்றும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது, பழமையானது மற்றும் எளிமையானது.

தொல்காப்பியர் வேற்று மொழியர்களுக்கு தமிழிலக்கணம் கற்பிப்பதற்காக 'மாத்திரை' குறித்து கூறியிருக்கலாம். அல்லது இது பிற்கால இடைச் செருகல்களால் ஏற்பட்ட பிழையாகலாம். ஆயின் யாப்பெருங்கல மரபில் அசையை அடிப்படையாகக் கொண்ட அடி வகைகளே விளக்கப்படுகின்றன.

புரவலர்களை புகழ்ந்து பாடுவாதற்காக அகவல் ஓசையுடன் ஈரசை சீர்களைக் கொண்ட அகவற்பா பயன்படுத்தபட்டது. இது இரண்டு துடிகளையுடைய ஆதிதாளம் என்பது ஆகிறது. இதுவே இன்றும் கருநாடக இசையின் அடிப்படை தாளம் ஆகும். மூன்று அசைகளையுடைய வஞ்சிப்பா பயன்பாட்டிற்கு வந்த போது தாள வகைகள் பல பிரிவுகளாக வளர்ந்தன. 7

பாணர்கள் புரவலர்களை சந்தித்து பாடல்களைப் பாடும்போது உடன் சென்ற விறலியர் அப்பாடல்களின் பொருளை முக பாவனைகளாலும், விரல் அங்க அசைவுகளாலும் தெளிவுபடுத்தினர். இதனால் பரதக்கலையில் விரல்களும், முக பாவனைகளுமே முக்கிய அங்கம் வகிக்கின்றன.

அரசவையில் இத்தகைய விளக்கக்காட்சிகள் ஒரு வகையான நாடக நிகழ்ச்சிகளாக நடைபெற்றன. இவ்வாறான நாடகத் தன்மைக்குப் பொருந்துமாறு செப்பல் ஓசை (அறிவிப்பு) உடைய வெண்பாவும், துள்ளல் ஓசை (குதித்தல்) உடைய கலிப்பாவும், தூங்கல் ஓசை (ஆற்றின் ஓட்டத்தின் தாளம் அல்லது மெதுவாக மந்தமான அணிவகுப்பு) உடைய பரிபாடலும் தோன்றின.

ஆசிரியப்பாட்டு, நெடுவெண் பாட்டு மற்றும் குறுவெண் பாட்டு ஆகிய வெண்பாவின் வகைகள் அவற்றின் அமைப்பிற்காகப் பாராட்டப்படுகின்றன.

பா வகைகளில் கலி, பரி வகைகள் பல அங்கங்களை உடையவைகளாக மேலும் மேலும் வளர்ந்தன. இசை ஆராய்ச்சியில் கலிப்பா மற்றும் பரிபாடல் வகைகள் குறிப்பிடத்தக்கவை. ஏனெனில் கர்நாடக இசை வடிவங்களின் அடிப்படைக் கூறுகளை அவற்றின் கூறுகளில் காணலாம். இவற்றின் அங்க வகைகளே இன்று கருநாடக இசையின் முக்கிய அமைப்பான கீர்த்தனையின் பகுதிகளுக்கு அடிகோலின. ஆகையால்,

இவற்றைக் குறித்த சிறுகுறிப்பு இங்கு இன்றியமையாதது. கலிப்பா என்ற சொல் கலி (கலித்தல்) என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் வேகப்படுத்துதல், வியத்தகு முறையில் முன்னோக்கிப் பாய்தல் மற்றும் அலைகள் போன்று விரிந்து கொண்டே செல்வது என்பன.

தொல்காப்பியர் (1) ஒத்தாழிசை (2) கலிவெண்பாட்டு, (3) கொச்சகம் மற்றும் (4) உறழ்கலி ஆகியவற்றைக் கலிப்பாவின் வகைகளாகத் தருகிறார் (3:442). ஒத்தாழிசைக் கலிப்பாவின் இரண்டு வகைகளில், முதல் வகை தரவு, இடைநிலைப்பாட்டு, போக்கு, அடை ஆகிய நான்கு அங்கங்களைக் கொண்டது. இரண்டாவது வகை கடவுள்களைப் போற்றுவது. இவ்வகையிலும் வண்ணகம் ஒருபோகு என இரு வகைகள் உண்டு. (3:450) வண்ணகம் தரவு, தாழிசை, எண் மற்றும் வாரம் ஆகியப் பகுதிகளைக் கொண்டுள்ளது (3:451). மற்றொன்றான ஒருபோகு கொச்சக ஒருபோகு மற்றும் அம்போதரங்கம் என இருவகைப்படும். கொச்சக ஒருபோகு பத்து முதல் இருபது அடிகள் வரை உள்ளது. மற்றும் பல்வேறு பகுதிகளின் கலவையின் மூலம் கட்டமைக்கப்படுகிறது. கொச்சக ஒருபோகை வரையறுக்கும் பண்புகள்:

"தரவுயின்றி ஆகித் தாழிசை பெற்றும், தாழிசை இன்றி தரவு உ டைத்து ஆகியும், எண் இடை இட்டுச் சின்னம் குன்றியும், அடக்கியல் இன்றி அடி நிமிர்ந்து ஒழுகியும், யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடையது கொச்சக ஒருபோகு ஆகும் என்ப" (3:459)

அம்போதரங்க ஒருபோகு 15-60 வரிகள் கொண்டு எருட்டு (இது தரவின் மற்றொரு பெயர், முரு 14ο02), கொச்சகம், அராகம், சிற்றேன் மற்றும் வாரம் என ஐந்து பகுதிகளைக் கொள்ளும்.

கலிவெண்பாட்டு வெள்ளடி என்ற யாப்பு வகையிலானது. தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், சொற்சீரடி, முடுக்கியலடி என்ற பகுதிகளைக் கொண்டது கொச்சக்கலி. கொச்சகக்கலியில் வெண்பாவினால் ஆன தரவு மற்றும் சுரிதகம் ஆகியவை பல ஐந்து அடி பாகங்களுடன் நடுவில் வரலாம்.

கொச்சகம் என்பது ஆடையின் மடிப்புகளைப் போல அடுக்கி வருவது. மடித்து வரும் பகுதியைப் பொறுத்து தரவு கொச்சகக்கலி, தாழிசை கொச்சகக்கலி அல்லது மயங்கு கொச்சகக்கலி என பல வகை கொச்சக் கலிகள் உள்ளன. தெய்வபாணி கலிப்பா எனப்படும் கொச்சகம் கடவுளைப் போற்றுவதாகத் தொல்காப்பியர் கூறுகிறார். எனவே, தொல்காப்பியர் காலத்தில், கடவுள்கள் மீதும் பாடல்கள் பாடப்பெற்றன.

உரக்கலி உரையாடல்களாக வருவன. இதில் சுரிதகம் என்னும் உறுப்புக் கிடையாது.

யாப்பெருங்கலத்தின் வகைப்பாடு சற்று வித்தியாசமானது. பொதுவாக, கலிப்பாவின் வகைப்படுத்தல், அதன் அங்கங்களின் அடிபடையில் செய்யப்படுகிறது. அங்கங்கள் முதன்மை உறுப்பு என்றும் துணை உறுப்பு என்றும் தொகுக்கப்படுகின்றன. முதல் உறுப்பான தரவு, எல்லா வகை கலியிலும் தோன்றும், தாழிசை ஒரு சிலவற்றில் தோன்றாது. எல்லிஸ் தரவு மற்றும் தாழிசையை முறையே கழுத்து மற்றும் கீழ் பகுதி என்று அழைக்கிறார் (மரு 93). மற்ற உறுப்புகளான தனிச்சொல், இடை நிலைப்பாட்டு, அராகம், சுரிதகம். வண்ணகம், அம்போதரங்கம் ஆகியவை வகைக்கு ஏற்ப சேர்க்கப்படுகின்றன அல்லது தவிர்க்கப்படுகின்றன. ஒவ்வொரு வகையின் அமைப்பு மற்றும் இசை விளைவைப் புரிந்துகொள்ள பொதுவான பாகங்களைத் தனித்தனியாக படிப்பது உதவியாக இருக்கும். மேலும், கலிப்பாவின் கூறுகளை பகுப்பாய்வு செய்தால் கர்நாடக இசையில் பல்வேறு இசை வடிவங்களை உருவாக்க எவ்வவாறு அங்கங்கள் சேர்க்கப்பட்டன என்பது நமக்குப் புலப்படும்.

தரவு

பொதுவாக எல்லா வகை கலிப்பாவிற்கும் இதுவே முதல் பகுதி. நான்கு முதல் 12 அடிகள் வரை இருக்கலாம். இதுவே பல்லவியாக மாறியது. அருகக் கடவுளுக்கு உகந்ததான அசோக மரத்தின் தளிர் இலைகளுக்கு பல்லவம் என்பது பெயர். மற்றும் 'முதலில் பாடுவது' என்றும் பொருள் கொண்டு பல்லவி என்ற சொல் தரவுக்கு பதிலாக வந்தது.

இடைநிலைப் பாட்டு

தரவிற்கு அடுத்து வரும் இப்பகுதி நான்கு அடி உடைய தரவை விட குறைவான அடிகளை கொள்ள வேண்டும். இடைநிலைப் ப்பாட்டு என்பது தரவில் உள்ள கருப்பொருளின் நீட்சியாகும். இது இன்று பல்லவியின் நீட்சியாக அனுபல்லவி என்று அழைக்கப்படுகிறது (3:446). தரவும் இடைநிலைப்பாட்டும் சேர்ந்து முதல் பகுதியாகிறது.

தாழிசை

தரவின் அடிகளுக்கு ஒப்பாக மூன்று அடுக்குகளாக படிப்படியாக விரிவுபெற்று வருவது தாழிசை (3:454). மற்றும் தாழிசையில் உள்ள அடிகளின் எண்ணிக்கை தரவில் உள்ள அடிகளின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கும். அதாவது, தரவுக்கு நான்கு அல்லது எட்டு அடிகள் இருந்தால், தாழிசையில் முறையே ஆறு அல்லது பன்னிரண்டு அடிகள் இருக்கும். பொதுவாக மூன்று நிலைகளில் பாடப்படுகிறது. தாழிசையே பின்னர் சரணம் ஆனது.

தனிச்சொல் :

இது அடை என்றும் அழைக்கப்படுகிறது. தாழிசைக்கு தொடர்புடையதாக தாழிசையைத் தொடர்ந்து வருவது இது. பொதுவாக ஆங்கு, எனவாங்கு என்ற சொற்கள் தனிச்சொல்லாக பயன்படுத்தப்படுகின்றன.

அராகம் : 8

அராகம் அம்போதரங்கத்திற்கு முன்பாக அமைவது. பல அசைகள் அடர்த்தியாக பின்னப்பட்டு படிப்படியாக விரைவு அடையுமாறு அமைக்கப்படுகிறது. இப்பகுதி பரதக்கலையில் ஜதியாக உருப்பெற்றுள்ளது. குறுகிய எழுத்துக்களின் விரைவான வரிசை இந்த கூறுக்கு தனித்துவமானது. அராகத்தின் எடுத்துக்காட்டு: (யாப்பெருங்கலம் 118):

தடுமுழுசெழி தாடமல ரிடமைத்தாய் தாழில் போடுது நழுவிரை புதுமலர் தெரிதரு கருணையிடல் விரிவழக்க முழுக்க முழுக்க முழுக்க தைவா துணையொடு பிணைவண் துடை முழுது மொழிகளி நுரைதரு திரையொடு கயிற்றொடர் புதையடுகாள்;

நடனத்தில் ஜாதி போல் அராகம் இங்கு வேகமெடுக்கிறது.

அம்போதரங்கம் மற்றும் எண் :

கடலலைகளைப் போன்று எழும்பி, விரிவடைந்து விரைவு பெற்று கரையை அடையும் போது அமைதியுறுவது போன்று இப்பகுதி அமையும். 'எண்' என்பது அம்போதரங்கத்தின் அடிகளின் சீர் எண்ணிக்கையை பொறுத்து அமையும். நான்கு சீர்களைக் கொண்ட இரண்டு அடிகள் உடையது பேரெண் என்றும், நான்கு சீர்களையுடைய நான்கு அடிகள் உடையது அளவெண் என்றும், மூன்று சீர்களை உடைய அடிகளைக் கொண்டது இடையெண் என்றும் இரண்டு சீர்களைக் கொண்ட அடிகளை உடையது சிற்றென் என்றும் அழைக்கப்பெறும் என்று யாப்பெருங்கலம் கூறுகிறது.

4- சீர் அடி

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன் கடல் வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்; விரிவிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும் பொருகளி ரட்டோய் புரையு நின்னுடை;

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை; தண் சுடருறு தவிர்த்த ஆழியை; ஒளியியலுவண மோங்கிய கொடியினை; வலிமிகு சகட மாற்றிய வடிவினை;

3-சீர் அடி

போரவுணர்க் கடந்தோய் நீ; புணர்மருதம் பிளந்தோய் நீ; நீரகிலமளந்தோய் நீ; நிழறிகழைம் படைத்தோய் நீ;

2- சீர் அடி
ஊழி நீ; உலகு நீ; உருவும் நீ; அருவும் நீ; ஆழி நீ; அருளும் நீ; அறமும் நீ; மறமும் நீ;

சுரிதகம்

இதுவே கலிப்பாவின் கடைசிப் பகுதி. இது போக்கு என்றும் வைப்பு என்றும் அழைக்கப்படுகிறது. மற்றும் தரவுக்கு சமமான அல்லது குறைவான அடிகளைக் கொண்டுள்ளது.

பரிபாடல்

பரிபாடலிலும் பொதுவாக இப்பகுதிகள் காணப்படுகின்றன. பரிபாடலுக்கு குறிப்பிட்ட அமைப்பு இல்லை. வெண்பா மற்றும் கலிப்பாவிலிருந்து வளர்ந்தது. பாவினங்கள் கலந்து பரிபாடலை உருவாக்குகின்றன. தொல்காப்பியர் பரிபாடல் என்பது அகத்திற்குரியது என்கிறார். ஆனால் தற்போதுள்ள பரிபாடல்கள் கடவுள்களுக்கு உரித்தானவை. எனவே முந்தைய காலத்தில் அகத்திற்காக எழுதப்பட்டவை அழிந்து போயின என்று அறிகிறோம்.

பரிபாடலும் கலிப்பாவும் பாட்டுகள் அமைப்பதற்கு மிகுந்த ஆர்வத்தையும் உற்சாகத்தையும் அளித்திருக்க வேண்டும். பா எழுதுவதும் இசை அமைப்பதும் வெகு துரிதமாக வளர்ந்து ஒருவர் பாடல் எழுதுவதும், இன்னொருவர் இசை அமைப்பதுமாக இசைக்கலை பரிபாட்டுக்காலத்தில் பண்பட்ட உச்சநிலையை அடைந்தது. பாடல்கள் இசை நன்கு அறிந்த புலவர்களால் எழுதப்பட்டு, புலமை மிக்க இசையாசிரியர்களால் இசை அமைக்கப்பட்டன.

இவ்வாறு கலிப்பாவின் பகுதிகள் கருநாடக இசை வடிவங்களின் பல்வேறு கூறுகளாக வளர்ந்தன. தரவு என்ற முதல் அங்கம் கருநாடக இசையில் பல்லவியாகவும், தரவின் பொருளிற்கு நீட்சியாக இருந்த இடைநிலைப்பாட்டு அனுபல்லவி என்றும், தரவின் அடிகளுக்கு ஒப்பாக விரிவுபெற்று அடுக்குகளாக இருந்த தாழிசை சரணமாகவும், பல அசைகள் அடர்த்தியாக பின்னப்பட்டு படிப்படியாக விரைவு அடைந்த அராகம் ஜதியாகவும் கருநாடக இசையில் அமைகின்றன.

பண்ணத்தி

பாவினங்களில் சொற்களின் இசைத்தன்மை பொருளை குறித்து ஒலிக்கும் போது அப்பாடல்கள் பண்ணத்தி என்று அழைக்கப்பட்டன: பாட்டிடைக் கலந்த பொருள் ஆகி, பாட்டின் இயல - பண்ணத்தியே. இசைத்திறனைப் பற்றிய உயர்ந்த உணர்வுடன் எழுதப்பட்ட பாடல்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பாடப்படும் பாடல்கள் பண்ணத்தி என்று அழைக்கப்பட்டது. அவற்றைப் பாடுவதற்கு தனித்துவமான பண்கள் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

தொல்காப்பியர் பண்ணத்தியை பிசியிலிருந்து வேறுபடுத்துகிறார். பிசி பொருள் முக்கியத்துவம் வாய்ந்த புதிர்களாகும். பண்ணத்தி அதன் பன்னிரண்டு வரிகளின் வரம்பை மீறலாம். அதனால் அவை மேலும் மேலும் பரவிப் பாட எதுவாய் இருக்கும். தற்போது, இந்த விரிவாக்கம் ஆளத்தி அல்லது ஆலாபனை என்று அழைக்கப்படுகிறது.

வண்ணம்

தொல்காப்பியர் ஓசை ஒழுக்கத்தை முன்னிறுத்தி வண்ணத்தை பா வண்ணம், தான வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயைபு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம், சித்திர வண்ணம், நலிப்பு வண்ணம், அகப்பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம், ஒழுகு வண்ணம், ஒற்று வண்ணம், எண்ணுவண்ணம், அளப்பு வண்ணம், தூங்கல் வண்ணம், ஏந்தல் வண்ணம், உருட்டு வண்ணம், முடுக்கு வண்ணம் என இருபதாக வகைப் படுத்தியுள்ளார். இது பாடலின் தாளத் தன்மையைக் காட்டுவது. இவைகளின் உணர்ச்சித் தன்மையை இவைகளின் பெயர்களில் இருந்து

புரிந்து கொள்ளலாம்; எடுத்துக்காட்டாக, ஒழுகு வண்டம் சீராகப் பாய்வது போன்றும் மெல்லிசை வண்டம் ஏராளமான நாசி ஒலிகளுடன் இருக்கும்.

புறப்பாட்டிலும், பல வகை இசைப்பாடல்களும் அவை பாடப்பெறும் நிகழ்வுகளும் கூறப்படுகின்றன. வெட்சித் திணையில் நிரைகளைக் கவர்ந்த நிலையில் கொற்றவையை போற்றுவதற்காக வேலன் வேடம் கொண்டு காந்தல் கூத்து ஆடப்பெற்றது. மலைவாழ் மக்களால் அரசனைபுகழ்ந்து பாடுவதும், வெற்றி பெற்றோர் கால்களில் சதங்கைகள் பூட்டும் விதமாகவும் வள்ளி கூத்து ஆடப்பெற்றது. வஞ்சித் திணையில் கொற வள்ளி ஆடப்பெற்றது. வாகைத்தினையில் வெற்றிபெற்ற அரசன் தேரின் முன்பாகவும், பின்பாகவும் முன் தேர் குரவையும், பின்தேர் குரவையும் ஆடப் பெற்றன.

கைக்கிளையின் புறமாக பாடாண் திணை உள்ளது. இந்த திணை வகையில் அதிகமான பாடல் வகைகள் வகைப்படுத்தப்படுகின்றன. பாடாண் எட்டு பண்புகளை உடையது. அவை வெற்றியைப்பாடும் வள்ளி, வெகுமதி பெற்றுக்கொண்ட புலவன், மற்றொரு புலவனை அரசனிடம் ஆற்றுப்படுத்தும் புலவராற்றுப்படை, அரசனை புகழ்ந்துபாடும் புகழ்தல், வணங்கல் செய்யும் பரவல் என ஆறுவகைப் பாடல்களாக உள்ளன.

தொல்காப்பியர் எப்பொழுதும் நடைமுறைக்குரியவர், மேலும் மக்களின் நிகழ்த்து மரபு தொடர்ந்து மாறுவதால், அவர் ஒருபோதும் வலிமையான விதிகளை அமைக்கவில்லை. அவரைப் பொறுத்தவரை, பாடுவதற்கும் நடனமாடுவதற்கும் ஒதுக்கப்பட்டவை தவிர, பழங்காலத்தவர்களால் பயன் படுத்தப்பட்ட வேறு எந்த அமைப்பையும் இசை அமைத்து பாடலாம். அதனால் அவர் அகம் மற்றும் புறம் ஆகியவற்றின் பண்புகளை பாடல்களாகக் கட்டமைக்கும்போது, சாதாரண பயன்பாட்டில் பாடுவதற்கும் ஆடுவதற்கும் உள்ள வடிவங்களுடன் பழங்காலத்தவர்களால் வணக்கம் மற்றும் போற்றுதலுக்காக குறிக்கப்பட்ட பிற வகைகளையும் சேர்த்துக்கொள்ளலாம் என்கிறார் (3:82).

பாணர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காகப் பாடினர். ஏறக்குறைய எல்லா வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும் பாடுவதற்கும் பணிபுரிவதற்கும் அவர்கள் பணியமர்த்தப்பட்டனர். எனவே இசை முறைகள் நேரம் மற்றும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் வகைப் படுத்தப் பட்டன.

கொடுப்போர் ஏத்தி கொடார் பழித்தலும், அடுத்து ஊர்ந்து ஏத்திய இயன்மொழி வாழ்த்தும், சேய் வரன் வருத்தம் விட வாயின் காவலர்க்கு உரைத்த கடைநிலையானும், கண்படை கண்ணிய கண்படை நிலையும், கபிலை கண்ணிய வேள்வி நிலையும், வேலை நோக்கிய விளக்கு நிலையும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறாவும், ஆவயின் வருஉம் புறநிலை வாழ்த்தும், கைக்கிளை வகையோடு உளப்பட தொகைஇ, தொக்க நான்கும் உள என மொழிப.

பாடாண் திணையின் கடைசி சூத்திரத்தில் அத்திணையின் உற்பிரிவுகளாக துயிலெடை நிலை, ஆற்றுப்படை, பெருமங்கலம், மண்ணுமங்கலம், குடைநிலை வாழ்த்து முதலிய ஒன்பது வகையானப் பாடல்களை பட்டியலிட்டுள்ளார். ஆனால் நமக்கு இன்று கிடைத்துள்ளது, ஆற்றுப்படை என்ற ஒரே வகையின் ஐந்து பாடல்கள் தான்.

குறிப்புகள்

முதல் அத்தியாயத்தில் மாத்திரையின் அடிப்படையிலான ஒலியியலின் மரபுகளை விளக்கிய பின், தொல்காப்பியர் செய்யுளியலில் மாத்திரையை ஒரு உறுப்பாகமட்டுமே கூறி பின்னர் அசையையே விளக்குகிறார். மேலும் உயிரெழுத்துகளின் ஒலி அளவையும், அதே போல் மெய்யெழுத்துக்களையும் நீட்டிப்பது குறித்தும் கூறுகிறார். அதனால் செய்யுளில் எழுத்துக்கள் மாத்திரையால் கட்டுப்படவில்லை.

மாத்திரை என்பது நேர அளவீடு, கண் சிமிட்டுவதற்கு அல்லது விரல் ஒடிப்பதற்கு எடுக்கப்படும் நேரம். சமஸ்கிருதக் பாடல் களில் உரைநடை பற்றிய விவாதத்தில் மத்திரை (குறுகிய உயிர் -ஒரு அளப்பு,

நீண்ட உயிர்-2 அளப்பு, மற்றும் பல) பயன்படுத்தப்படுகிறது. தொல்காப்பியர் ஒவ்வொரு எழுத்துக்கும் இந்தக் கால அளவைக் கொடுத்து செய்யுளை அல்லது இசையைப் பொறுத்தமட்டில் அசை எனப்படும் அதிர்வுகலால் அளவிடப்பட்ட கால அளவில் எழுத்துக்கள் விரியும் என்று கூறுகிறார்.

எழுத்து என்ற சொல் அதன் எழுத்து வடிவத்தைக் குறிக்க தற்போது பயன்படுத்தப்படுகிறது, ஆனால் ‘எழு’ என்பதன் பொருள் 'உயர்வது', அல்லது ‘எழுவது’ ஆகும். எனவே இது இயல்பாக ஒலிப்பு அமைப்பைக் குறிக்கிறது. தொல்காப்பியர் பொதுவாக இந்த பொருளில் தான் இந்த சொல்லைப் பயன்படுத்துகிறார். ஆனால் அரிதான சந்தர்ப்பங்களில், அவர் எழுத்து வடிவத்தைக் குறிக்க பயன்படுத்துகிறார் (மீனாட்சி சுந்தரனார் பக். 58). எழுதும் செயலுக்கு முன்பே பேச்சு மொழி இருந்தது. மற்றும் எழுதுவதற்கு முன்பு பாணர் பாடல் பாடினர். ஒலி தன்மைக்கு நெருக்கமானதொரு எழுத்து வடிவம் தமிழ் பிராமிக்கு முன்பே தமிழகத்தில் இருந்திருக்கலாம் என்கிறார் கே.முருகையன். பிராமி எழுத்து அறிமுகப்படுத்தப் பட்டவுடன் அந்த ஒலி அடிப்படையிலான வரிவடிவம் வழக்கற்றுப் போயிருக்கலாம்.

எழுத்தும் அதன் மாத்திரமும் தமிழின் செய்யுளுக்கு பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது. யாப்பெருங்கால காரிகை எந்த தயக்கமும் இன்றி அசையை பாடலுக்கான அடிப்படை அலகாக ஆக்குகிறது. மலையாளம், தெலுங்கு மற்றும் கனாடா இலக்கணமும் தமிழில் உள்ள யாப்பின் கூறுகளைப் பகிர்ந்து கொள்கின்றன. ஆனால் அவை சமஸ்கிருத இலக்கணத்தை மாதிரியாகக் கொண்டுள்ளதால் பல சிக்கல்கள் அவர்கள் யாப்பிலக்கனத்தில் உள்ளன.

லகு தாளத்தின் அடிப்படை அலகு. ஒரு தட்டு மற்றும் ஒரு வீச்சு (எண்ணும்) ஆகியவற்றை கொண்டது. இரண்டாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் காக்கைப்பாணியம் எழுதப்பட்டுள்ளது என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் யாப்பெருங்கலம் மற்றும் யாப்பெருங்கலக் காரிகை 10ஆம் நூற்றாண்டில் அமிர்த சாகர் எழுதியுள்ளார்.

தாள வகைகலில் விரல்களால் எண்ணப்படுகின்றன. லகு மற்றும் 3,4, 5,7 மற்றும் 9 துடிப்புகள் கொண்ட தாளங்களுக்கு தமிழ் மொழியில் சொற்கள் உள்ளன. ஆனால் தற்சமயம் சம்ஸ்கிருத சொற்களாலேயே அழைக்கப்படுகின்றன. அராகம் என்ற சொல் ராகம் என்ற சொல்லைப் பிறப்பித்திருக்கலாம்

துணை நுல்கள்

1) அமிர்தசாகர் (2004). யாப்பெருங்கலக்காரிகை - புத்துரை. அ. குமாரசாமி புலவர். சென்னை: தேன் புத்தக நிலையம்
2) S. Ilakkuvanaar (1963). Tolkaapiyam in English. Madurai: kuralneri pathippakam.
3) மருதநாயகம், ப. (2011). எல்லிசரின்தமிழ் யாப்பிலக்கணம் சென்னை: காவ்யா.
4) Murugan, V. (2000). Tolkāppiyam in English. Chennai: Institute of Asian Studies.
5) பாண்டியன், அமுதா (2021) கருணாமிர்த சாகரம்: சுருக்க திரைநாய்வு உரை. திருத்தப்பட்ட பதிப்பு. சென்னை, பரிசல் புத்தக நிலையம்.
6) பாண்டியன், வீர சி. (2009). Tamil̲ இசையில் புதிய கண்டுபிடிப்புகள். சேகர் பதிப்பகம்
7) பிள்ளை, TP , மீனாட்சி சுந்தரம் (2007). தமிழ் மொழி வரலாறு முல்லை நிலையம். சென்னை.
8) சிவத்தம்பிகார்த்திகேசு. தமிழில் இலக்கிய வரலாறு. தஞ்சாவூர். தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தொ.மா.க.122

பழந்தமிழர்களின் குலத்தொழில்கள் (தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு)

முனைவர் ச. சுப்புலெட்சுமி
உதவிப்பேராசிரியர்
மகாலெட்சுமி மகளிர் கலை அறிவியல் கல்லூரி
பருத்திப்பட்டு, ஆவடி. சென்னை, தமிழ்நாடு. இந்தியா. 600071
subhaselva24@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பழந்தமிழர்களின் தொழில் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது ஐவகை நிலங்கள் சார்ந்த தொழில்கள்தான். ஆனால் பழந்தமிழர்கள் தத்தம் குலம்சார்ந்த தொழில்களில் முனைப்புடன் செயல்பட்டு வந்துள்ளனர். பண்டைய காலத்தில் வழக்கிலிருந்த தொழில்களில் பெரும்பாலானவை கைத்தொழில்களாகவே இருந்தன. இத்தகைய பழந்தமிழர்களின் குலத்தொழில்களைத் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள்வழியாக ஆராயலாம். மரபுவழியாகச் செய்யப்பட்டுவந்த கைவினைப் பொருட்கள் மற்றும் குலத்தொழில்கள் மெல்ல மெல்ல மறையத் தொடங்குகிறது. கைவினைப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வும், குலத்தொழில்களின் மேன்மையையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

உலகமயமாதலின் காரணமாக நலியுற்ற கைவினைப் பொருட்கள் மற்றும் குலத்தொழில்கள் அழிவின் விளிம்பை நோக்கிச் செல்கின்றன. பண்டைய தமிழர்களின் குலத்தொழில்கள் மற்றும் தொழிற்சார் கருவிகள், கலைச்சொற்கள் போன்றவற்றைத் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கிய நூல்களின்வழி அறியலாம். தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள கம்மியர் குலத்தொழில் ஆய்வு எல்லையாக் கொள்ளப்படுகிறது.

பண்டைய காலத்தில் வழக்கிலிருந்த தொழில்களுள் பெரும்பாலானவை கைத்தொழில்களாகும். இரும்பை உருக்கிக் கருவிகள் செய்தல் (தொல்.புறத்.71), பொன்னை உருக்கி நகைகள் செய்தல், உலோகங்கள் உருக்கிப் பொருட்கள் செய்தல்(தொல்.புறத்.72) போன்ற தொழில்களை மேற்கொண்டுள்ளனர் என்பதைத் தொல்காப்பியத்தின் வழியாக அறியலாம். இவர்கள் பயன்படுத்திய கருவிகள், கலைச்சொற்கள் ஆகியன நிழற்படங்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'கம்மியர்' என்ற கம்மாளர்கள் தொழில் அடிப்படையில் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதும் அவர்கள் பயன்படுத்திய தொழிற்சார் கருவிகள் பற்றியும் தொல்காப்பிய நூற்பா மற்றும் சங்கப் பாடல்கள்வழி அறியலாம். தமிழ்மொழியின் செழுமையை உலகிற்கு வெளிப்படுத்துவதாகத் தொழிற்சார் கலைச்சொற்கள் அமைகிறது. இத்தகைய கலைசார் மரபுச்சொற்கள் அழிந்துவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தமிழ்ச் சொற்றொகுதியில் அவற்றிற்குரிய இடம் வழங்கப்பட வேண்டும்.

முன்னுரை

பழந்தமிழர்களின் தொழில் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது ஐவகை நிலங்கள் சார்ந்த தொழில்கள்தான். ஆனால் பழந்தமிழர்கள் தத்தம் குலம்சார்ந்த தொழில்களில் முனைப்புடன் செயல்பட்டு வந்துள்ளனர். பண்டைய காலத்தில் வழக்கிலிருந்த தொழில்களில் பெரும்பாலானவை கைத்தொழில்களாகவே இருந்தன. இவை பெருமளவு மனித முயற்சிகளாகவே இருந்தன. இவற்றிற்கு பயன்பட்ட கருவிகள் எளிய அமைப்பினை உடையவை. ஒரு தொழில் செய்பவன் தான் செய்யும் தொழிலுக்கு உரிமை உடையவனாக இருந்தான். இத்தொழிற்கள் அவன் வாழ்ந்த சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் குலத்தொழிலாகச் செய்யப்பட்டன. இத்தகைய பழந்தமிழர்களின் குலத்தொழில்களைத் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள்வழியாக ஆராயலாம். மரபுவழியாகச் செய்யப்பட்டுவந்த கைவினைப் பொருட்கள் மற்றும் குலத்தொழில்கள் மெல்ல மெல்ல மறையத் தொடங்குகிறது. கைவினைப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வும், குலத்தொழில்களின் மேன்மையையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இக்குலத்தொழிற்களுள் ஒன்றாக கம்மாளர் குலத்தொழில் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வு நோக்கம்

உலகமயமாதலின் காரணமாக நலியுற்ற கைவினைப் பொருட்கள் மற்றும் குலத்தொழில்கள் அழிவின் விளிம்பை நோக்கிச் செல்கின்றன. பண்டைய தமிழர்களின் குலத்தொழில்கள் மற்றும் தொழிற்சார் கருவிகள், கலைச்சொற்கள் போன்றவற்றைத் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கிய நூல்களின்வழி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு எல்லை

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள கம்மியர் குலத்தொழில் ஆய்வு எல்லையாக் கொள்ளப்படுகிறது.

தொல்காப்பியர் கூறும் தொழில்

தொல்காப்பியர் கூறும் புறத்திணை ஏழினுள் ஒன்று வாகைத்திணையாகும். இதில் முயற்சியுடைய ஒவ்வொருவரும் தத்தம் தொழிலையும், ஒழுக்கத்தையும் பலபடியாகச் சிறப்பித்துக் கூறுதல் வாகைத்திணை என வழங்கப் பெறும்.

புறத்திணையியல் நூற்பா ஒன்றில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அறிவர், தாபதர், பொருநர் எனப்பட்ட எழுவர் தொழில்களும் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ளன.

“அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்
பாலறி மரபில் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோடு ஆங்கெழு வகையால்
தொகைநிலை பெற்றது என்மனார் ” (புறத். 20)

என்ற நூற்பாவால் இதனை அறியலாம். 1. அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழிலும் பார்ப்பாருக்குரியவை. 2. ஐவகை மரபின் அரசர் பக்கம், ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடியோம்புதல் ஆகிய ஆறும் வணிகர்க்குரியவை. 3. இருமூன்று மரபின் ஏனோர் பக்கம். ஏனோர் வணிகரும், வேளாளரும். 4. மூவகைக் காலமும் நெறியினாற்றிய அறிவன் தேயம். அறிவன் என்ற கணியனைக் குறிப்பிடுகின்றார். 5. நாலிரு வழக்கில் தாபத பக்கம். எட்டு வகைப்பட்ட நெறிகளில் தவம் புரிவார்க்கு உரியனவும் என இருவகை என்று கூறுவர். 6. பாலறி மரபின் பொருநர். போர்த்தொழிலில் ஈடுபடல் இவரது தொழிலாகும்.

இவ்வாறு இன்னார் தொழில் இன்னது என்று கூறுமளவிற்குப் பண்டைத் தமிழர் ஒவ்வொருவரும் தத்தம் தொழிலைச் சிறப்புறச் செய்து, பல்வகைத் தொழிலையும் முன்னேற்றமுறச் செய்து சிறப்புடன் வாழ்ந்தனர்.

தொல்காப்பியத்தில் 'கம்' என்னும் சொல்

தொல்காப்பியத்தில் 'கம்' என்னும் சொல் 'கம்மியர்' என்னும் பொருளில் பயின்று வந்துள்ளது.

"ஈமும் கம்மும் உருமென் கிளவியும்" (தொல்.எழுத்து.328)

நன்னூலில்,

"ஈமுங்
கம்மு முருமுந் தொழிற்பெயர்
மானும்
முதலன வேற்றுமைக் கவ்வும்" (நன்னூல்.நூ.223)

இதனை விளக்க முற்பட்ட சங்கர நமச்சிவாயர், 'கம்' என்னும் சொல்லுக்கு 'கம்மியர்' என்னும் பொருள் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்.

கன்னார்த் தொழில்,

"மின்னும் பின்னும் பன்னும் கன்னும்
அந்நாற் சொல்லும் தொழிற்பெய ரியல"-(தொல்.எழுத்.345)

என்ற நூற்பாவிலும், கொல்லர்த் தொழில்,

"நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல" -(தொல்.எழுத்.371)

என்ற நூற்பாவிலும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன.

கம்மியர் தொழில்

கம்மியர் பற்றி எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சேந்தன் திவகார நிகண்டு பின்வருமாறு கூறுகிறது.

"கம்மியர், யவனர், கொல்லர், தபதியர்,
அக்கசாலையர், சிப்பியர், அதனோடு
வித்தகர், வித்தியர், புனைவர், அறிவர், என்
றத்தகு கம்மாளர் பெயரென அறைவர்"

இங்கு கம்மியர் என்பது கம்மாளர் பெயரைக் குறிக்கின்றது. இவர்கள் செய்யும் தொழிலின் அடிப்படையில் ஐந்து வகையாகப் பிரிக்கப்படுகின்றனர். தச்சர், கொல்லர் (**தொல். எழுத்து**.371), கன்னார் (**தொல்.எழுத்து**.345), தட்டான், கல்தச்சர் போன்றோர்கள்.

ஐந்தொழில் கம்மாளர்

கம்மாளர் எனப்படுவோர் தமிழ்நாட்டிலும், இலங்கையின் வடகிழக்கு பகுதியிலும் வாழும் ஒரு தமிழ் சாதியினர் ஆவார். இவர்கள் தச்சர், கொல்லர், கன்னார், தட்டார், கற்தச்சர் என ஐந்தொழிலை அடிப்படையாக கொண்டு வாழ்கின்றனர். தமிழ் கம்மாளர்கள் தமிழ் இனத்தின் தொன்மைக்குடிகள் என்பதற்கான பலச் சான்றுகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன.

தொழிற்சார் சொற்கள்

கொல்லர் - இரும்பாலான ஆயுதங்கள், விவசாய கருவிகள் செய்வதைத் தொழிலாக கொண்டவர்கள்.

தச்சர் - மரத்தால் ஆன கலைப்பொருட்கள், இசை கருவிகள் செய்வதைத் தொழிலாக கொண்டவர்.

கன்னார் - இரும்பில்லா உலோகங்களான தாமிரம், பித்தளை, வெண்கலம், ஐம்பொன் இவற்றால் ஆன சிலைகள், அலங்கார பொருட்கள், கலை பொருட்கள், பண்ட பாத்திரங்கள் செய்வதை தொழிலாக கொள்ளப்பட்டனர்.

பொற்கொல்லர் - வெள்ளி இவற்றால் ஆன நாணயங்கள் மற்றும் ஆபரணங்கள் செய்வதைத் தொழிலாக கொண்டவர்.

கற்தச்சர் (சிற்பி) - கற்களாலான கோவில்கள், கடவுள் சிலைகள், வீட்டு உபயோக கல் சாதனங்கள் செய்வதைத் தொழிலாகக் கொண்டவர்கள்.

கொல்லுத்தொழில்

பண்டையத் தமிழரிடையே இரும்புத் தொழில் செய்யும் கொல்லன் இருந்தான். அவன் தொழில் செய்யும் உலைக்கூடம் என்ற ஒன்றை வைத்திருந்தான். அதற்கு கொல்லுப்பட்டறை என்று பெயர். அவன் வைகறைப் பொழுதினிலே வேலை செய்யத் தொடங்கினான். அவன் இரும்படித்த ஓசை கேட்டு மாடத்து உறங்கிய புறவின் சேவல் அஞசி உறக்கத்திலிருந்து விழித்த்து. இத்தகைய காட்சி ஒன்று பெரும்பாணாற்றிப்படையில்,

"கருங்கைக் கொல்லன் இரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்து
இறையுறை புறவின் செங்காற் சேவல்
இன்துயில் இரியும்"

என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியப் பாடல்களில் கொல்லனது உலைக்களக் காட்சி பல்வேறு நிலையில் உவமைகளாகக் காட்டப்பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கொல்லன் தொழில் புரிந்த இடத்தைப் புறப்பாடல் 'கொற்றரை' எனக் குறிக்கிறது. அதற்கு உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் உரை எழுதும் பொழுது 'பணிக்களரி ஆகிய குறிய கொட்டில்' என்றும் குறிப்பிடுகிறார். அந்நாளில் போர்த்தொழிலுக்கு பயன்படும வேல் முதலிய கருவிகளைத் திருத்தமாக வடித்துத் தருதல் கொல்லனின் தலையாய கடமையாகக் கருதப்பட்டிருப்பதைப் புறநானூறு, "**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்க்குக் கடனே**" (**புறநானூறு**.312) எனக் கூறுகிறது.

"**உலைக்கல் லன்ன பாறை யேறி**" (**குறுந்**.12) கொல்லனின் உலைக்கல் உவமையாகக் காட்டப்படுகின்றன.. கொல்லர்களின் கடமைகள், சமூகத்தில் கொல்லர்களுக்கு இருந்த மதிப்பு, கொல்லர்களின் அறிவியல் அறிவு, கொல்லர்களுக்கான கருவிகள் ஆகியன சங்க பாடல்களில் உவமைகளாக எடுத்தாளப் பெற்றுள்ளன. கொல்லன் பட்டறையில் பயன்படுத்தப்பட்ட ஊதுலைக் கருவி தோலால் செய்யப்பட்டது.

"மென் தோல் மதியுலைக் கொல்லன் முடிகொடிற் றன்ன கவைத்தான் அலவன்" (பெரும்பாணாற்றுப்படை 206)

தச்சுத்தொழில்

தச்சு என்பது ஒன்றையும் மற்றொன்றையும் பொருத்தி இணைப்பதாகும். இத்தச்சுத் தொழிலைச் செய்வோர் தச்சர் எனப்பட்டனர். கல்தச்சு தொழிலைச் செய்வோர் கல்தச்சர் எனவும், மரத்தச்சு தொழிலைச் செய்வோர் மரத்தச்சர் எனவும் வழங்கப்பட்டனர். இவ்விருவகை தச்சர்களுக்கும் கம்மாளர் என்ற பெயரும் உண்டு. தச்சுத்தொழில் பரம்பரைத் தொழிலாகும். சங்க காலத்திலிருந்தே தச்சுத்தொழில் இருந்துள்ளது என்பதற்கு பல சான்றாதரங்கள் உள்ளன. மரத்தொழில் செய்து வந்த தச்சன் சங்க காலத்து இலக்கிய வழக்கில் மரங்கொல் தச்சன் என வழங்கப்பட்டான். மரங்கொல் என்பது மரத்தை வெட்டுதல் என பொருள்படும். இவ்வழக்கினை மரங்கொல் தச்சன் என்னும் புறநானூற்று (206) பாடல் அடியால் அறியலாம்.

"மரங்கொல் தச்சர் கைவல் சிறாஅர்

மழுவுடைக் காட்டகத்து" (புறம் . 206)

சங்க கால இலக்கியங்களில் திறமை வாய்ந்த தச்சர்களைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இவர்கள் தச்ச தொழிலை குலத் தொழிலாகக் கொண்டனர். தச்சர்கள் தம் மக்களை இளம் வயதிலேயே தொழிலில் நன்கு பழகி வைத்தனர். பொம்மை தேர் செய்து விளையாடுபவர்கள் பின்னர் பெரும் தச்சர்களாகின்றனர்.

"தச்சச் சிறார் நச்சப் புனைந்த
ஊரா நற்றேர்" (பெரும். 248 - 249)

மரங்கொல் தச்சர் எனப்பட்ட இவர்கள் திறமையோடு கலை நுணுக்கம் தெரிந்தவர்களாகவும் இருந்தனர். சங்க இலக்கிய பாடலான நெடுநல்வாடையில் நக்கீரனார் அரண்மனை மதில்கதவு, வாயில்களின் நிலைக்கால் அமைப்பு, வாயில் நெடுநிலை ஆகியவற்றைக் குறித்து கூறுகையில் தச்சர்களின் தொழில் மேம்பாடு குறித்து பாடுகின்றார்.

"ஒருங்குடன் வளை இ ஓங்கு நிலை வரைப்பில்
பரு இரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇ
துணைமாண் கதவம் பொருந்தி இணை மாண்டு
நாளோடு பெயரிய கோலமை விழு மரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாளோடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரை தீர்ந்து
ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை" (நெடுநல்வாடை 79-86)

என்றனர்.

மிகப்பெரிய அரண்மனை வாயிற் கதவுகளை இணைமாண்பு பட புணர்த்தல் அரியதாகும். இதனை கைத்தொழில் வல்ல தச்சன் பொருத்துகிறான். நெடுநிலை கதவுகளைப் பொருத்த பருவிரும்பு தேவைப்படுகின்றது. அதாவது இரும்பாகிய ஆணி, பட்டம் முதலியவற்றால் ஒன்றாய் இணைக்கின்றனர். மரத்தால் ஆகிய கதவாகலில் செவ்வரக்கு பூசி மேடுபள்ளமன்றிச் செய்கின்றனர். இக்கதவுகள் தொழில் திறனும் திண்மையும் வாய்ந்தவை. இக்கதவுகளை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் பொழுது சேர்க்கும் இடம் தோன்றாமல் ஒரே மரத்தில் செய்தாற் போன்று தோன்றுவதால் இரட்டையாய் மாட்சிமைக்கப்பட்ட கதவு என்னும் பொருளில் 'இணைமாண்டு' என்றனர். இக்குறிப்பு அக்காலத்தில் வாழ்ந்த தச்சர்களின் தொழில் திறனைக் காட்டுவதாகும்.

தச்சுத்தொழில் பரம்பரைத் தொழிலாகும். இத்தொழிலைச் செய்பவர்கள் கம்மாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். சங்க காலத்திலிருந்தே தச்சுத்தொழில் இருந்துள்ளது என்பதற்கு பல சான்றாதரங்கள் உள்ளன. சில தொழில்கள் மட்டுமே குடும்பத்தொழிலாக இருக்கும். அந்த வகையில் தச்சுத்தொழில் ஒரு குடும்பத்தொழிலாகும். மரபு வழியாக செய்து வரும் தொழில்களில் தச்சுத் தொழிலும் ஒன்று.

வேளாண் தொழிலுக்கு பயன்படும் கருவிகள் தச்சர்களால் செய்யப்படுகின்றது. ஏர்க்கலப்பை, மண்வெட்டி, களைக்கொட்டு, பரம்படிக்கும் பலகை, அடிவாள், ஏற்றச்சால் (கலவை ஏற்றம்) ஆகிய கருவிகள் தச்சர்கள் செய்கின்றார்கள்.

"எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே" (புறம்.87)

ஒரு நாளில் எட்டுத் தேர்கள்ச் செய்யக்கூடிய தச்சன் ஒரு மாதம் முயன்று மிகுந்த கவனத்துடன் ஒரு தேர்க் காலை உருவாக்கினான் என்ற செய்தி இடம் பெறுகின்றது. தச்சனது இயல்பான தொழில் திறனும் கலைப்படைப்பும் கூறப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

கன்னார்தொழில் (உலோகத்தொழில்)

பண்டைத் தமிழர் பல்வகை உலோகங்களைப் பயன்படுத்தித் தங்களுக்குத் தேவையான பொருட்களைச் செய்வதில் சிறப்புப் பெற்றிருந்தனர். இரும்பு, பொன் ஆகிய உலோகங்கள் செய்யும் கொல்லர்கள் இருந்த்து போலவே வெண்கலம், செம்பு முதலிய உலோகங்கள் உருக்கும் திறம் பெற்று அவற்றால் மக்கள் பயன்படுத்துவதற்குரிய பல்வகையான பொருட்களையும் செய்யக்கூடியவர்கள் இருந்தனர். வெண்கலத்தை உருக்கிக் கலங்கள் முதலியன செய்பவர் கஞ்சகாரர்கள் என்றும், செம்பினால் கலம் (பாத்திரம்) செய்பவர் செம்புக்கொட்டிகள் என்றும் அழைக்கப்பட்டனர். செம்பு, வெள்ளி, பொன் ஆகிய உலோகங்களைக் கொண்டு கலன்கள் செய்யப்பட்டதறகான சில சான்றுகள் சங்க இலக்கியப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

நற்றிணைப் பாடலொன்றில் கம்மியன் செம்பால் செய்து கடைந்து வைத்த பானை எனப் பொருள்பட '**கம்மியர் செம்பு சொரி பானை**'(**நற்** 152) என்ற குறிப்பு காணப்படுகின்றது. மேலும் மதுரைப் பறஞ்சேரியில் இருந்த சமணப் பள்ளியின் சுவர்கள் செம்பினாற் செய்தாற் போல உறுதி பெற்றிருந்தன. (**மது**.485). மதுரைக் கடைத்தெருவில் செம்பு நிறுத்து வாங்கப்பட்டது. (**பெரும்**.514) பாண்டியன் அரண்மனை அந்தபுரத்து நெடுஞ்சுவர்கள் செம்பிட்டுச் செய்தாற் போன்றே உறுதியும் வேலைப்பாடும் பெற்றிருந்தன (**நெடுநல்**. 112) போன்ற சான்றுகளினின்றும் செம்பு என்ற உலோகம் பழக்கத்திலிருந்தமையும் அதைப் பயன்படுத்தி பொருள் செய்யவல்ல தொழில் திறம் வல்ல கம்மியர் இருந்தமையையும் அறியலாம்.

பொற்கொல்லர் தொழில்

அழகுக்கு அழகு செய்வன அணிகள். அணிதலால் அணியாம். பழங்காலச் சமூகத்தில் பொது மக்கள் அணிந்த அணிகளிலும் அரசாண்ட மன்னனது முடி மிக நுண்ணிய வேலைப்பாடு கொண்டது. சங்க இலக்கியப் பாடல்களில் பல குறிப்புகள் பொன் வேலை பற்றியும் பொற்கால்லர் திறமை பற்றியும் காணப்படுகின்றன. பொற்கொல்லர் அணிகள் செய்யப் பயன்படுத்திய கருவிகளுள் அரம் என்ற கருவி பயன்படுத்தியமைக்கான பல சான்றுகள் (**அகம்**.24) கிடைக்கின்றன. பொற்கொல்லர் தொழிற்றிறம் பற்றியக் குறிப்பும், புடமிடல், பேழை, தலையணி, கழுத்தணி, இடையணி பற்றியக் குறிப்பும் காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் பொன் வேலை செய்வோரைப் பொற்கொல்லர், பொன் செய் கம்மியன் (**நற்**.158) என்றழைத்தனர்.

நெடுநல்வாடையில்,

> "*கைவல் கம்மியன் கவின்பெறப் புனைந்த*
> *செங்கேழ் வட்டஞ் சுருக்கிக் கொடுந்தறிச்*
> *சிலம்பி வானூல் வலந்தன தூங்க*" *(நெடு. 56 – 59)*

நற்றிணையில் மட்டும் மூன்று பாடல்களில் 'கம்மியன்' என்ற சொல் பயின்று வந்துள்ளது. புறநானூற்றுப் பாடலொன்றிலும் இச்சொல் இடம் பெற்றுள்ளது. இந்த நான்கு இடங்களிலும் பொன் நகைகள் வடிவமைத்துத் தரும் பொற்கொல்லர்களைச் சுட்டுகிறது.

> "*கைவல் கம்மியன் கவின்பெறக் கழாஅ*
> *மண்ணாப் பசுமுத் தேய்ப்ப*" *(நற்.94)*
> *தொழிற்சார் கருவிகள்*

பண்டைய காலத்தில் வழக்கிலிருந்த தொழில்களுள் பெரும்பாலானவை கைத்தொழில்களாகும். இரும்பை உருக்கிக் கருவிகள் செய்தல் (தொல்.புறத்.71), பொன்னை உருக்கி நகைகள் செய்தல், உலோகங்கள் உருக்கிப் பொருட்கள் செய்தல் (தொல்.புறத்.72) போன்ற தொழில்களை மேற்கொண்டுள்ளனர் என்பதைத் தொல்காப்பியத்தின் வழியாக அறியலாம். இவர்கள் பயன்படுத்திய கருவிகள், கலைச்சொற்கள் ஆகியன நிழற்படங்கள் மூலமாக விளக்கப்பட்டுள்ளன.

"குடையும் வாளும் நாள்கோள் அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமுங் கடைஇ" (தொல்.புறத். 71)
"களிற்றோடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வானோர் ஆடும் அமலையும் (தொல். புறத். 72)

தச்சுக்கருவிகள்

இழைப்புளி, உளி, வாள், ஆணி, துளைக்கருவி, அரம், ஆப்பு, ஈர்வாள், சீவுளி, கிராம், துறப்பணம், திருப்புளி, திருகாணி, கோடாலி, திருகாணிச்சாவி, இடுக்கி, குறடு இக்கருவிகள் பற்றிய குறிப்புகள் சங்க பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

கொல்லன் பயன்படுத்தும் உபகரணங்கள்

குறடு, துருத்தி, மின் துருத்தி, வெட்டும் வாள், பட்டறைக்கல், சம்மட்டி, இடுக்கி, பதிவச்சுருக்கட்டை. இவைகள் அனைத்தும் நிழற்படங்களாக பின்இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

கஞ்சக்கருவிகள்

கஞ்சக்கருவிகள் என்பது வெண்கலம் அல்லது ஐம்பொன்னால் வார்க்கப்படும், கைமணி, சேகண்டி முதலியவைகளாகும். கஞ்சம் என்றால் வெண்கலம் என்று பொருள். தூய வெண்கலத்தால் தயாரிக்கப்படும் கஞ்சக்கருவிகளை தகுந்த இலக்கண வரம்பறிந்து மிக நுணுக்கமாக இசைக்க வேண்டும்.

தொழிற்சார் சொற்கள்

1) உளி - மரத்தைச் செதுக்கப் பயன்படுத்தப்படும் கருவி. இதில் பல வகைகள் உள்ளன.
2) இழைப்புளி - மரக்கட்டையை சம படுத்துவதற்கு பயன்படும்.
3) திருப்புளி (screwdriver) - திருகுகளை இறுக்க அல்லது தளர்த்த பயன்படுத்தப்படும் கருவி.
4) சீவுளி - மரத்தைச் சீவுவதற்க்கு பயன்படுத்தப்படும் உளி வகை.
5) தரங்கு - உளியின் கூர்மையானப் பகுதி.
6) சாணக்கல் - உளி முதலிய கருவிகளைக் கூர்மையாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் கல்.
7) தட்டுப்பொல் - மரத்தினாலான ஒரு வகை சுத்தியல். உளிகளைச் செயற்படுத்தப் பயன்படுத்தப்படுவது.
8) தொறப்பணம் (drilling machine) - துளையிடப் பயன்படும் கருவி.
9) தொறப்பண வில் - தொறப்பணக் கருவியை இயக்கப் பயன்படுத்தப்படுவது. ஒரு தடியில் கயிற்றைக் கட்டி அக்கருவியை சுத்தி இரு பக்கமும் சுழலச் செய்வது.
10) பிரிவுப்பார்த்தல் - ஒரே அளவு உயரத்தில் இருக்க வேண்டிய மரப்பகுதிகள் சமச்சீராக உள்ளதா என சரிபார்த்தல்.
11) பொழி - சதுரமாகவோ அல்லது நீள் சதுரமாகவோ மரத்தில் அமைக்கப்படுகின்ற துளை.
12) வீச்சடித்தல் - மர அமைப்பை உருவாக்கும் போது தேவையான உருவ அமைப்பை பெற எதிரெதிர்ப் பக்கங்கள் சமச்சீராக வரும் வகையில் செதுக்குதல்.
13) வெளித்தல் - இணைக்கப்பட்ட இரண்டு மரத்துண்டங்களுக்கு இடையில் இடைவெளி வருதல்.
14) படிமானம் - இரண்டு பலகைகள் ஒன்றுடன் ஒன்று சரியாகப் பொருந்துதல்.
15) அருகு - மரத்தின் கூர்மையான பாகங்கள் மனிதருக்கு தீங்கு ஏற்படாத வண்ணம் கூர் மழுங்க செய்தல்.
16) கடைசல் கட்டை - மரத்தினைத் தேவையான அளவிற்கு ஏற்ப மனிதன் தன் கையால் அல்லது இயந்திர விசை மூலம் சுழலச் செய்து உளியின் மூலம் உருவாக்கப்படும் மரக்கடைச்சல்.
17) புடமிடல் - தங்கத்தை தூய்மையாக்குதல்.
18) பேழை - அணிகலன்கள் பாதுகாப்புடன் இருக்க அமைக்கப்பட்ட நகைப்பெட்டி.

முடிவுரை

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'கம்மியர்' என்ற கம்மாளர்கள் தொழில் அடிப்படையில் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதும் அவர்கள் பயன்படுத்திய தொழிற்சார் கருவிகள் பற்றியும் தொல்காப்பிய

நூற்பா மற்றும் சங்கப் பாடல்கள்வழி அறியப்பட்டுள்ளது. சங்க காலத் தச்சர்களின் கலை நுணுக்கத்தோடு கூடிய தொழில் திறனைக் காட்ட சங்க பாடல்களின் உவமைகள் போதுமானவையாகும். பண்டைய தமிழர்கள் கன்னார்த் தொழிலில் திறமையுடையவராய்த் திகழ்ந்திருந்தனர் என்பதை அவர்கள் பயன்படுத்திய புழங்குப் பொருட்களின் மூலம் அறியலாம். இரும்பை பொருளாகக் கொண்டு தொழில் செய்த மக்கள் கருங்கைக் கொல்லர் என்றே பல பாடல்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

தற்காலத்தில் பொன்நகை செய்பவரைத் தட்டான் என்றும் மரப்பொருள் செய்பவரைத் தச்சன் என்றும் சுட்டுகின்ற வழக்கம் நிலவுகிறது. சங்க காலத்தில் இருந்த வழக்கத்தைப் போன்று தமிழகத்தின் சில பகுதிகளில் மரப்பொருள் செய்யும் தொழிலாளரைக் கம்மாளன் என்றும், பொன்நகைகள் செய்யும் தொழிலாளரைக் கம்மியர் என்றும் சுட்டும் வழக்கம் நிலவுகிறது. ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் ஒரு சொல் நிலைபெற்று வந்துள்ள வரலாற்றை இச்சொல் வழக்கு காட்டுவதாக உள்ளது.

தமிழ்மொழியின் செழுமையை உலகிற்கு வெளிப்படுத்துவதாகத் தொழிற்சார் கலைச்சொற்கள் அமைகிறது. இத்தகைய கலைசார் மரபுச்சொற்கள் அழிந்துவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தமிழ்ச் சொற்றொகுதியில் அவற்றிற்குரிய இடம் வழங்கப்பட வேண்டும். அவற்றை காக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பின்னிணைப்பு

கொல்லன் உலைக் களம்



நிழற்படங்கள்

இழைப்புளி 	**திருப்புளி** 
அளவுநாடா 	**குறடு**
உளி 	**மூலைமட்டம்**
பதிவச்சுருக்கட்டை 	**துறப்பண அழுத்தி**
இடுக்கி 	

துணைநூற் பட்டியல்

1. ஆறுமுக நாவலர், நன்னூல் காண்டிகை உரை, பாரி நிலையம், சென்னை.
2. இளம்பூரணர், தொல்காப்பிய எழுத்ததிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.
3. உ .வே. சாமிநாதையர், பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்கினியர் உரையும், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்.
4. வித்துவான் டாக்டர்.எம். நாராயண வேலுப்பிள்ளை, உரைநடைத் தமிழில் சங்க இலக்கியம் - எட்டுத்தொகை, .நர்மதா வெளியீடு, சென்னை
5. தமிழண்ணல், தொல்காப்பிய பொருளதிகாரம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
6. டாக்டர் வி. சி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

தொ.மா.க.124

தொல்காப்பிய அகத்திணைக் கோட்பாடுகளும் கோவை நானூறும்

முனைவர் செ. கற்பகம்
இணைப்பேராசிரியர் (ம) துறைத்தலைவர்
இசைத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613010
karpagamsureshkumar@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

அகத்திணை எனினும் தமிழ் எனினும் ஒக்கும். ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவிக்க சங்கப்புலவர் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு அகத்திணையில் அமைந்தள்ள அறத்தொடு நிற்றல் துறையைச் சார்ந்தாகும். இப்பாடலின் மூலம் அகமும் தமிழும் ஒன்று என்ற நிலை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் கூறும் அகநெறி தொன்மை உடையது. இதனைத் தொல்காப்பிய அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் போன்ற இயல்களில் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. அகத்திணை,

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழு திணை என்ப -(தொல். பொருள்.அகத்.நூ.1)

கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை ஏழும் அகத்திணைப் பாகுபாடுகளாகும். இவற்றுள் குறிஞ்சி முதல் பாலை வரை இடைநிற்கும் ஐந்திணை ஒரு கூட்டமாக வழங்கப்படும். கைக்கிளையை ஒரு தலைக்காமம் என்றும், ஐந்திணையை ஒத்த காமம் என்றும்,பெருந்திணையை ஒவ்வாக் காமம் என்றும் கூறப்படும். இவை முதல், கரு, உரி என்ற முப்பொருள்கள் அடிப்படையில் அமையும். எழுவகைக் காதல் ஒழுக்கங்கள் உரிப்பொருள்களாகும். இவை அனைத்தும் அறநலத்தன உலகம் ஒப்புவது, மக்கட்கு இயல்வது, இலக்கியத்திற்கு இசைத்தது என்று டாக்டர் வ.சுப. மாணிக்கனார் அகத்திணைக் காதல் என்ற நூலில் (பா. 39) இல் விளக்குகிறார். இவை களவு, கற்பு என்ற இரண்டு கைக்கோள்களில் அமையும். களவியலில் காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கர்கூட்டம், பாங்கியர் கூட்டம் என்ற நான்கு உட்பிரிவுகள் உள்ளதனை தொல்காப்பிய செய்யுளியல் நூற்பா எண் 178 குறிப்பிடுகிறது. கற்பியல் உட்கூறு இரண்டு வகைப்படும். 1.மறை வெளிபடுதல் 2. தமரின் பெறுதல் என்ற இரண்டையும் செய்யுளியல் நூற்பா எண் 179 குறிப்பிடுகிறது. இவற்றைக் கூற்று அடிப்படையில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதனையும் தொல்காப்பிய செய்யுளியல் 181 முதல் 187 வரை உள்ள நூற்பாக்கள் குறிப்பிடுகின்றன.

இவற்றை விரித்துக்கூறும் தொல்காப்பியர் அகத்திணைக்கோட்பாடுகள் பிற்காலத்தில் துறைக் கோட்பாடுகளாக வளர்ந்தன. அகத்திணை மாந்தர்களாக தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி போன்றோர் அமைந்துள்ளனர். கேட்போர் யார் உரைப்போர் யார் என உணரும் வகையில் நாடகப் பாங்கொடு அமைந்துள்ளன. இவற்றை மையமிட்டுப் பிற்காலத்தில் அகப்பொருள் கோவை நூல்களும், இலக்கண நூற்களும் வளர்ந்தன. அகப்பொருள் கோவை நூற்களாக உள்ள குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியவற்றை ஒட்டி கோவை நூற்களும் தோன்றலாயின. அன்பின் சிறந்த

முன்னுரை

அகத்திணை எனினும் தமிழ் எனினும் ஒக்கும். ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவிக்க சங்கப்புலவர் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு அகத்திணையில் அமைந்துள்ள அறத்தொடு நிற்றல் துறையைச் சார்ந்ததாகும். இப்பாடலின் மூலம் அகமும் தமிழும் ஒன்று என்ற நிலை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் கூறும் அகநெறி தொன்மை உடையது. இதனைத் தொல்காப்பிய அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல் போன்ற இயல்களில் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. அகத்திணை,

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழு திணை என்ப (தொல்.பொருள்.அகத்.நூ.1)

கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை எழும் அகத்திணைப் பாகுபாடுகளாகும். இவற்றுள் குறிஞ்சி முதல் பாலை வரை இடைநிற்கும் ஐந்திணைகளும் ஒரு கூட்டமாக வழங்கப்படும். கைக்கிளையை ஒரு தலைக்காமம் என்றும், ஐந்திணைகளை ஒத்த காமம் என்றும், பெருந்திணையை ஒவ்வாக் காமம் என்றும் கூறப்படும். இவை முதல், கரு, உரி என்ற முப்பொருள்கள் அடிப்படையில் அமையும் அறநலத்தன. உலகம் ஒப்புவது, மக்கட்கு இயல்வது, இலக்கியத்திற்கு இசைத்தது என்று டாக்டர் வ.சுப.மாணிக்கனார் அகத்திணைக் காதல் என்ற நூலில் (பா.39)இல் விளக்குகிறார். இவை களவு, கற்பு என்ற இரண்டு கைக்கோள்களில் அமையும். களவியலில் காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியர் கூட்டம் என்ற நான்கு உட்பிரிவுகள் உள்ளதனைத் தொல்காப்பியச் செய்யுளியல் நூற்பா எண்.178 குறிப்பிடுகிறது. கற்பியல் உட்கூறு இரண்டு வகைப்படும். 1.மறை வெளிபடுதல், 2.தமரின் பெறுதல் இவை இரண்டையும் செய்யுளியல் நூற்பா எண்.179 குறிப்பிடுகிறது. இவற்றைக் கூற்று அடிப்படையில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதனையும் தொல்காப்பியச் செய்யுளியல் 181 முதல் 187 வரை உள்ள நூற்பாக்கள் குறிப்பிடுகின்றன.

இவற்றை விரித்துக் கூறும் தொல்காப்பியர் அகத்திணைக் கோட்பாடுகள் பிற்காலத்தில் துறைக் கோட்பாடுகளாக வளர்ந்தன.

அகத்திணை மாந்தர்களாக தலைவன், தலைவி, தோழி, பாங்கன், பாங்கி போன்றோர் அமைந்துள்ளனர். கேட்போர் யார் உரைப்போர் யார் என உணரும் வகையில் நாடகப் பாங்கொடு அமைந்துள்ளன. இவற்றை மையமிட்டுப் பிற்காலத்தில் அகப்பொருள் கோவை நூல்களும், இலக்கண நூற்களும் வளர்ந்தன. அகப்பொருள் நூற்களாக உள்ள குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு ஆகியவற்றை ஒட்டி கோவை நூற்களும் தோன்றலாயின. அன்பின் சிறந்த தலைமக்களது இன்ப அன்பின் ஒழுகலாறுகளைத் தொல்காப்பியமும் சங்க நூற்களும் தனித் தனியாகக் கூறியவற்றை ஒரு நிரல்பட அமைக்கும் நிலையில் நாடகக் காப்பியம் போல் அகத்திணை கோவை நூல்கள் தோன்றின. இக்கோவை நூல்களில் தொல்காப்பியர் கூறும் கிளவித் தலைவன் இடம்பெறுகிறார். மேலும் கோவை நூற்குரிய பாட்டுடைத் தலைவனும் இடம்பெறுகிறார்.

கோவை நானூறு என்று அழைக்கப்படும் நானூறு பாடல்களையும் 380துறைகளையும் கொண்டுள்ள நூல் மாணிக்கவாசகர் இயற்றிய திருச்சிற்றம்பலக் கோவையாகும். அகஒழுகலாற்றைத் தெய்வத் தமிழொடு இணைத்து 400 செய்யுட்களால் அமைந்த இந்நூல் தொல்காப்பிய அகத்திணைக் கோட்பாட்டிற்கும் பிற்காலத்தில் தோன்றிய தெய்வத்தமிழ்க் கோட்டிற்கும் பாலமாக அமைந்துள்ளது. பாண்டிக்கோவை என்ற நூல் முன்னர் தோன்றினாலும் கோவை நானூறு என்ற சிறப்புக்குரியதாகத் திருச்சிற்றம்பலக் கோவையே அமைந்துள்ளது. தொல்காப்பியர் உரைக்கும் களவு கற்பியல் கோட்பாடுகளை 25 கிளவிக் கொத்துகள் வாயிலாக 400 பாடல்களில் குறிப்பிடுகின்றது.

இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, இரவுக்குறி, இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல், உடன்போக்கு, ஒருவழித் தணத்தல், ஓதல் பிரிவு, காவல் பிரிவு, குறைநயப்புக்கூறல் போன்ற 25 கிளவிக் கொத்துகளை உள்ளடக்கிய 400 பாடல்களை நாடகப் பாங்கொடு இந்நூல் கொண்டுள்ளது. தொல்காப்பிய அகத்திணைக் கோட்பாட்டை விரித்துரைக்கும் நாடகநூல் கோவை நானூறு ஆகும்.

கோவை நானூறு

கோவை நானூறு என்ற நூல் திருச்சிற்றம்பலக் கோவை நூலைக் குறிக்கும். இது மாணிக்கவாசகர் அருளியது. அகத்திணை ஒழுகலாற்றை 380 துறைகளாக வகுத்தமைத்து நானூறு செய்யுட்களால் அமைந்த முதல்நூல் கோவை நானூறு ஆகும். அகப்பாடல்கள் கொண்ட குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு போல் 400 பாடல்களைக் கொண்டுள்ளது.

திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள் கொண்(டு) ஓங்குதெய்வ
மருவளர் மாலையார் வல்லியின்
ஒல்கி அனநடையாந்(து)
உருவளர் காமன்தன் வென்றிக்
கொடிபோன்(று), ஒளிர்கின்றதே

-திருச்சிற்றம்பலக் கோவை, காட்சி.1

திருச்சிற்றம்பலக் கோவை 25 வகை கிளவிக் கொத்துடன் 380 துறைகளையும் 400 பாடல்களையும் கொண்டுள்ளது. கிளவிக் கொத்துக்கள், திருக்குறள் காமத்துப் பால் 25 அதிகாரங்கள் போல் எண்ணிக்கையில் உளது. ஒரு துறைக்கு ஒரு பாடல் வீதம் 364 பாடல்களும் ஒரு துறைக்கு இரு பாடல்கள் வீதம் (12) 24 பாடல்களும் ஒருதுறைக்கு மூன்று பாடல்கள் வீதம் (4) 12 பாடல்களையும் கொண்டுள்ளது.

வ.எண்	அதிகாரப் பெயர்	பாடல் எண்கள்
1.	இயற்கைப் புணர்ச்சி	18
2.	பாங்கர் கூட்டம்,	30
3.	இடந்தலைப்பாடு	1
4.	மதியுடம் படுத்தல்	10
5.	இருவரும் உள்வழி அவன் வரவுணர்த்தல்	2
6.	முன்னுறு உணர்தல்	1
7.	குறையுற நயப்புக்கூறல்	4
8.	நாணநட்டம்	5
9.	நடுங்க நாட்டம்	1
10.	மடல்திறம்	9
11	குறைநயப்புக்கூறல்	9
12.	சேட்படை	26
13.	பகற்குறி	32
14.	இரவுக்குறி	33
15.	ஒருவழித்தணர்த்தல்	13
16.	உடன்போக்கு	56
17.	வரைவு முடுக்கம்	16
18.	வரைபொருள் பிரிதல்	33
19.	மணச்சிறப்புரைத்தல்	9

20.	ஓதல் பிரிவு	4
21.	காவல் பிரிவு	2
22.	பகைதணிவினைப்பிரிவு	2
23	வேந்தற்கு உற்றுழிப் பிரிவு	16
24.	பொருள் வயிற் பிரிவு	20
25.	பரத்தையர்ப் பிரிவு	49
		400

(நூற்பா. மேற்.70)

இவற்றுள் ஒன்றுக்கும் மேற்பட்ட பாடல்கள் கொண்டவை பின்வருமாறு,

வ. எண்	**துறை**	**பா.எண்**	**பாடல்கள்**
1.	அறத்தொடு நிற்றல்	225, 229	2
2.	ஆய்த்துய்த்தல்	47, 124	2
3.	ஆற்றாதுரைத்தல்	73, 163	2
4.	இடத்துய்த்து நீங்கல்	119, 163	
5.	உள்மகிழ்ந்துரைத்தல்	123, 351	2
6.	கலவி கருதிப்புலத்தல்	366, 392	2
7.	கவன்றுரைத்தல்	24, 227	2
8.	குறிப்பறிதல்	82,111	2
9.	குறியிடம் கூறல்	116, 154,210	3
10.	தளர்வகன்றுரைத்தல்	40,164	2
11.	தேர் வரவு கூறல்	295,326, 349	3
12.	பிரிந்தமை கூறல்	271, 316, 338	3
13.	பிரிவுநினைவுரைத்தல்	309, 333	2
14.	மருங்கணைதல்	45, 121, 165	3
15.	முகிலொடு கூறல்	329, 348	2
16.	வரவுணர்ந்துரைத்தல்	160, 192	2
	ஆக		36

ஒரு துறைக்கு ஒரு பாடல்கள் வீதம் 364

ஒருதுறைக்கு இரு பாடல்கள் வீதம் 12

ஒருதுறைக்கு மூன்று பாடல்கள் வீதம் 4

ஆக 380

கொளு

கோவை நானூறு நூலில் உள்ள 400 பாடல்களுக்கும் அவற்றின் கருத்துரைப் பகுதிகளாக 400 கொளுக்கள் உள்ளன. பாடலின் கருத்துரைப் பகுதியாகக் கொளு அமைந்துள்ளது. இக்கொளுக்கள் திருவாதவூரார் காலத்தையொட்டியோ பின்னரோ இயற்றியிருக்க வேண்டும். இத்தகைய கொளுக்களைப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் தாம் சொல்லக்கருதிய துறையின் விளக்கமாகக் கருதினார். திருக்கோவையில் அமைந்துள்ள கொளுக்கள். அவ்வவ்ப் பாடல்களில் அமைந்துள்ள துறைகளை அறிந்து கொள்ளத் துணை நிற்கின்றன . துறை:காட்சி

கொளூ: *மதிவாணுதல் வளம் வஞ்சியை*
கதிர்வேலவன் துண்ணுற்றக் ப.1

கைகோள்

தொல்காப்பியர் அகத்திணை ஒழுகலாறுகளைக் கைகோள், கூற்றுக்கள், அடிப்படையில் அமைந்துள்ளார். கைகோள்கள் இருவகைப்படும். 1.களவு, 2.கற்பு

களவு இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கர் கூட்டம், தோழியற் கூட்டம் என்று நான்கு வகையில் அமையும். அவற்றைச் சார்ந்து வருபவையும் களவாகும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாலும் தோழியிற் புணர்வும் என்று
ஆங்க நால் வகையினும் அடைந்த சார்பொடு
மறையென மொழிதல் (மறையோர் ஆறே.(தொல்.நூ.1442)

களவொழுக்கம் வெளிப்படுதல், களவொழுக்கம் இன்றித் தமரானே பெறுதலும், இவை முதலாக முறையில் திரியாது, மகிழ்தலும், புரித்தலும் ஊடலும், ஊடல் தீர்தலும், பிரிதலும் என்பவற்றொடு பொருந்திவருவனவற்றைக் கற்பு என்கிறார்.

மறை வெளிப்படுதலும், தமிரின் பெறுதலும்
இவை முதலாகிய இயல்நெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப்படுமே நூற்.1443

துறைகள்

கோவை நானறில் 380 துறைகள் உள்ளன. சங்கப் பாடல்கள் கூற்றுப் பற்றிய பாடல்களாக அமைந்துள்ளன. பின்பு தோன்றிய கோவை, அகப்பொருள் இலக்கணநூற்கள் துறை பற்றிக் கூறியுள்ளன. கோவை நானூறு நூல் துறை பற்றிக் கூறிட வழிகாட்டியாக அமைந்துள்ளது. இயற்கைப் புணர்ச்சியில் 18 துறைகள் அமைந்துள்ளன. இதுபற்றி திருக்கோவை நெறி விளக்கநூல் குறிப்பிடுகின்றது.

காட்சி ஐயம் தெளிதல் நயப்பே
உட்கோள் தெய்வம் துணிதல் கைக்கிளையொடு
கலவியுரைத்தல் இருவயின் ஒத்தல்
கிளவி வேட்டல் நலம்புனைந் துரைத்தல்
பிரிவு உணர்த்தலொடு பருவரல் அறிதல்
அருட்குணம் உரைத்தல், அணிமை கூறல்
ஆடிடத் துய்த்தல் அருமை அறிதல்
பாங்கியை அறிதல் எனஈ ரொன்பான்
நீங்காஇயற்கை நெறியென மொழிப
(திருக்கோவை நெறிவிளக்கம்.மேற்.திருக்கோவையார்,

பன்னிருதிருமுறை ஆய்வு மையம், கோவை, 2016,ப.70)

காட்சி, ஐயம், தெளிதல், நயப்பு, உட்கோள், தெய்வத்தை மகிழ்வித்தல், புணர்ச்சி துணிதல், கலவியுரைத்தல், இருவயின் ஒத்தல், கிளவி வேட்டல, நலம்புனைந்துரைத்தல், பிரிவுஉணர்வித்தல், பருவலரறிதல், அருட்குணமுரைத்தல், இடமளித்துள்ள வற்புறுத்தல், ஆடிடத்துய்த்தல், அருமையறிதல், பாங்கியையறிதல் என இவை பதினெட்டும் இயற்கைப் புணர்ச்சிக்குரிய துறைகளாம். இவை போல ஏனைய 24 கிளவிக் கொத்துக்களுக்கு உரிய துறைகள் விளக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் கூறும் கூற்றுக் கோட்பாடு பின்பு துறைக் கோட்பாடாக வளர்ந்துள்ளது. தொல்காப்பியர் களவு, கற்புக் கைகோள்களில் கூற்றுக்குரியோர், கூற்றிற்குரியர் அல்லாதோர் பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

களவில் கூற்றுக்குரியோர்,

பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி
சீர்த்தகு சிறப்பின் கிழவன், கிழத்தி யோடு
அளவியல் மரபின் அறுவகை யோரும்
களவினில் கிளவிக்கு உரியர் என்ப *தொல்.1445*

கற்பில் கூற்றிற்குரியோரையும் தொல்காப்பியம் கூறியுள்ளது.

பாணன், கூத்தன் விறலி பரத்தை
யாணம் சான்ற அறிவர், கண்டோர்
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அவையொடு தொகைஇத்
தொல்நெறி மரபின் கற்பிக்குரியர் *தொல்.1446*

தலைவன், தலைவி, தோழி போன்ற பாத்திரங்கள் வாயிலாகக் கூறிய மரபு கூற்றுக்களொடு துறையாகவும் வளர்ந்துள்ளது. கோவை நானூறு துறையமைதிகள் நம்பியகப் பொருள் விளக்க நூலுக்குத் துணை நிற்கின்றது.

துறை - பாங்கன் வினாதல்

கொளூ- *கலிகெழு திரள்தோள் மெலிவது கண்ட*
இன்னுயிர்ப் பாங்கன் மன்னனை விரையது

சிறைவன் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும் என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆழ்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல் புக்கோ புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந்து எய்தியதே *பா.20*

இதுபோல் ஏனைய துறைகளும் பாடல்களும் அமைந்துள்ளன.

கோவை நானூற்றின் பொருள் சுருக்கம்

கோவை நானூறு அகப்பொருள் செய்திகளை நாடகப் பாங்கு போல் அமைத்துள்ளது. இறையருள் கூட்ட ஒருவனும் ஒருத்தியும் தனியொரு பொழிலிடத்து எதிர்ப்பட்டு அன்பினாய்க் கூடுவர். இக்கூட்டம் இயற்கைப் புணர்ச்சி எனப்படும். அடுத்த நாள் அதே இடத்தில் முன் தந்த தெய்வம் இன்றும் தரும் என வந்து கண்கூடுவர். இது இடந்தலைப்பாடு எனப்படும். அடுத்தநாள் அத்தலைவன் அவன் தோழனிடம் கூறி அவன் துணையால் அப்பொழிலிடம் வந்து தலைவியைக் கூடுவான் இது பாங்கன் கூட்டம் எனப்படும். அடுத்தநாள் இவ்வாறு கூடுதல் தகாது என்று தலைவியின் தோழியை நாடி அவள் கூட்டுவிக்க கூடுதல் தோழியிற் கூட்டம் எனப்படும்.

தோழியும் தலைவியும் இருக்கும் பொழுது தலைவன் வருவதும் தன்னிடம் பேசுவதும் போவதுமாக இருக்கக் குறிப்பறிந்து உடன்பட்டும் இருவரையும் தோழி சேர்த்து வைப்பாள். தோழியின் துணையால் தலைவனும் தலைவியும் பகலிலும் இரவிலும் கூடுவர். இவர்தம் கூட்டத்தை ஊரார் அறிவர் என்று அஞ்சி தலைவியை உடன் மணந்து கொள்ள வற்புறுத்துவாள். வந்து போவதற்கு ஏற்படும் இடையூறுகளையும் சுட்டிக் காட்டுவாள். பொருள் தேடிவந்து மணந்து கொள்ள தலைவன் பிரிதலும் உண்டு. பொருள் காரணமின்றி வேறு ஏதேனும் காரணங்களாலும் தலைவன் வாராநிலை ஏற்படுவதும் உண்டு.

ஊரில் இவர்கள் நடத்தைப் பற்றி அலர் எழும். அதனால் தோழி யாரும் அறியாவகையில் இருவரையும் வேறுஊருக்கு அனுப்பி வைப்பாள். அப்படி போவது உடன்போக்கு எனப்படும். உடன்போக்குச் சென்றவர் பற்றி செவிலித் தாயும் நற்றாயும் அறிவர். உடன் சென்றவர் தலைவன் ஊரில் மணம் முடித்தலும் உண்டு. இல்லையேல் மீண்டும் வந்து தலைவி இல்லத்தில் மணம் முடிப்பர்.

இல்லற வாழ்வில் தலைவன் பொருள், தூது, காவல் முதலிய காரணங்களால் பிரிதலும் உண்டு. பரத்தமை காரணத்தாலும் பிரிதலும் உண்டு. ஊடல் தீர்ந்து கூடி வாழ்வர். இவ்வகையில் கோவை நானூறுற்றின் கதைப்பகுதி அமைந்திருக்கும்.

தொல்காப்பியமும் கோவை நானூறும் சில காட்சிகள்

தொல்காப்பியர் கூறிய அகத்திணைக் கோட்பாடுகள் கோவை நானூறில் கூறப்பட்டுள்ள நிலைகளை ஒப்பிட்டு ஆராய்வோம். பாங்கி மதியுடம்படுத்தல் என்ற கிளவிக் கொத்தில் தோழியின் அறிவைத் தன் காதலுக்குத் தலைவன் ஒருப்படுத்திக் கொள்வான். தோழியின் துணையால் களவொழுக்கத்தை நீட்டிக்கும் நிலையின் தலைவன் கூற்று நிகழும்.

ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்
நீரில் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும், தோழி
குறையவள் சார்த்தி மெய்யுறக் கூறலும் *தொல்.1048*

இப்பகுதி பத்துத் துறைகளில் (பா.50-59) கோவை நானூறில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1.பாங்கிடைச் சேறல், 2.குறையுறத்துணிதல், 3.வேழம் வினாதல், 4.கலைமான் வினாதல், 5. வழிவினாதல், 6.பதி வினாதல், 7.பெயர் வினாதல், 8.மொழி பெறாது கூறல், 9.கருத்தறிவித்தல், 10.இடைவினாதல், வேழம்வினாவுதல் பாடலைக் காண்போம்.

இருங்களி யாய் இன்று யானிறு மாப்பஇன் பம்பணிவோர்
மருங்களி யாஅனல் ஆடவல் லோன்தில்லை யான் மலையீங்கு
ஒருங்களி யார்ப்ப உமிழ்மும் மதத்திரு கோட்டு இருநீள்
கருங்களி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே. *பா.52*

பகற்குறி இரவுக்குறியும்

இரவுக்குறிக்குரிய இடம், பகற்குரிக்குரிய இடம், அல்ல குறிப்படுதல் போன்ற தொல்காப்பிய அகக் கோட்பாடுகள் கோவை நானூற்றிலும் உள்ளன. பகற்குறி, இரவுக்குறி ஆகிய இருவகைக் குறியும் பிழையுற்ற காலையும், காணாத பொழுது மிகுதி கழியுமிடத்தும், தான் வராது செல்லமாட்டான் வந்திருப்பான் எனக் கருதி அதற்குரிய அடையாளங்கள் உண்டா? எனப் பார்த்துச் செயலற்ற பொழுதும், அவன் தன் வீட்டில் புகுந்தபொழுது அவனைத்தன் விருந்தினனாகக் கருதிய பொழுதும் காலம் கருதி அவனை விருந்தினனாக ஏற்றுக் கொள்ள விரும்பும் பொழுதும் பொருள் முயற்சிக்காக ஏற்படும் பிரிவின் பொழுதும் நாணம் உள்ளத்தை வருத்த அதனைக் கைவிடுதலைக் கருதிய இடத்தும் மணம் செய்து கொள்ள வேண்டித் தோழி அவனிடம் கூறிய குற்றமற்ற சொற்களொடு தன்இயல்பைக் கூறுமிடத்து மணத்திற்கு உட்பட்ட பொழுதும் அதற்கு எதிரிடையாகத் தமர், பிறருக்கு மணம் செய்ய நினைத்த போதும் தலைவிக்குக் கூற்று நிகழும் என்று தொல்காப்பியர் நூற்பா எண்.1053இல் கூறியவற்றில் பலதுறைகளாக கோவை நானூறு இடம் பெற்றுள்ளன. பகற் குறியில் 32 பாடல்களும், இரவுக்குறியில் 33 பாடல்களும் பிறவும் உள்ளன.

இரவுக்குறிநேர்தல்

கூளி நிரைக்க நின்று அம்பலத்து ஆடி குரைகழற்கீழ்த்
தூளி நிறைந்த சுடர்முடி யோஇவள் தோள் நசையால்
ஆளி நிரைத்தடல் ஆனைகள் தேரும் இரவில் வந்து

மீளி உணர்த்தி வினையேன் உரைப்பதென் மெல்லியற்கே -பா.151

வரைவு முடுக்கம் என்ற கோவை நானூறு 17வது கிளவிக் கொத்தில் வருத்தம் மிகக் கூறி வரைவுகடாதல், பெரும்பான்மை கூறி மறுத்தல், உள்ளது கூறி வரைவுகடாதல், ஏதங்கூறி வரைவு விலக்கல், பழி வரவுரைத்துப் பால் கூறல் போன்ற நிலைகளில் தோழிக் கூற்றும் துறைகளும் அமைந்துள்ளன. இதிலே தலைவன் சிறைப்புறமாக நிற்கையில் கூறும் நாகரிகத் தன்மைக் கூற்றும் உளது.

நீண்ட திருமுடியின் மேல் மீன்கள் பொருந்திய கங்கையாகிய பெண்ணை வைத்து அதனொடு அனைத்தையும் உடையவளாகிய உமையவளைத் தன் மேனியில் ஒரு பக்கத்தில் வைத்த சிவபெருமானது விண்ணைத் தொடும் மதில்கள் கொண்ட தில்லை நகரத்தை ஒக்கும் வளையல்கள் அணிந்த தலைவி அழகு பொருந்திய சோலையின் கண்ணே ஆண் குரங்கு மாங்கனி ஒன்றைத் தேனில் தோய்த்துப் பெண் குரங்கிற்கு வாயில் கொடுத்து மகிழ்ந்த காட்சியைக் கண்டு என்று தோழி கூறும் பாடல் மந்திமேல் வைத்து வரைவு கடாவுதலாகக் கோவை நானூறில் பா.257இல் இடம்பெற்றுள்ளது. இதுபோல் பல நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன.

வான்தோய் பொழில்எழில் மாங்கனி மந்தியின் வாய்க் கடுவன்
தேன்தோய்த்து அருத்தி மகிழ்வகண் டாள்திரு நீள்முடிமேல்
மீன்தோய் புனற்பெண்ணை வைத்துடை யாளையும் மேல் வைத்தான்
வான்தோம் மதில்தில்லை மாநகர் போலும் வரிவளையோ - பா.257

உள்ளுறை, இறைச்சி

தொல்காப்பியரின் அகக்கோட்பாட்டு அகநிகழ்வுகளை வெகு நாகரிகமாக வெளிப்படுத்த, உள்ளுறை, இறைச்சி என்ற உவமை நிலைகள் முக்கியப் பங்கு பெறுகின்றன.

உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு எனக் கெடலரும் மரபில் உள்ளுறை ஐந்து வரும். தொல்.1187 இது பேச்சு நாகரிகத்தைக் குறிக்கும் உத்தியாகும். உள்ளுறை மேலே தெரியும் பொருளைத் தழுவி உள்ளே அதற்கு இணையான பிறிதொரு பொருளைத் தெளிவுபடுத்தும்

உள்ளுறுத்த இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து இறுவது உள்ளுறை உவமம் *தொல்.994*
உள்ளுறை உவமம் ஏனை உவமம் என்று
தள்ளாதாகும் திணை உணர் வகைத்தே *தொல்.992*

உள்ளுறை உவமம் அவ்வவ் திணைக்குரிய கருப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு வரும். அதிலும் தெய்வம் ஒழிந்த தன் மேல் வரும். இப்பாடல்கள் இன்ன திணையின் என உணர வழிவகுக்கும். புள்ளொடும் விலங்கோடும் பிறவோடும் தோன்றும் என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

இவ்விலக்கண அமைதியில் வரும் உள்ளுறை உவமப் பகுதிகள் கோவை நானூற்றில் பா.எண்கள்.99, 128, 133, 159, 168, 193, 250, 252, 254, 260, 262, 264, 265, 276, 369, 377, 381 உள்ளன.

பாம்பைப் பிறைச் சந்திரனுக்குப் பக்கத்தில் ஆடும்படியாகத் தன் தலையில் வைத்த இறைவனது சிற்றம்பலத்தை உடைய மதில் சூழ்ந்த தில்லையில் வாழ்கின்ற கயல் போன்ற கண்களை உடைய எங்கள் தலைவியின் கண்ணாகிய அம்புகளால் உண்டாகிய மயக்கத்தை நீங்காத விரதம் எதற்கு? என்று தலைவன் கூறும் பாடல் கோவை நானூறில் 381வது பாடலாக அமைந்துள்ளது. இதில் மதிக்குத் தீங்கிழைக்க வந்த அரவை அத்தன்மை மாற்றி மதிக்கு உண்டாக்கிய அச்சத்தையும் தீர்த்து அவ்வவ்மரபை அதன் பக்கத்தே தங்கி ஆடும் வண்ணம் முடித்தோனது தில்லை நன்னாட்டில் பொலிபவர்க்கு, தன் சிவந்த பார்வையாம் என்னை எஞ்சப் பண்ணி நிற்பானா அத்தன்மை மாற்றி எமக்கு உண்டாகின்ற அச்சத்தையும் நீக்கி அவரை என் அருகிருந்து விளையாடச் செய்யாது புறக்கணித்திருத்தல் சாலாது எனத் தலைவன் உள்ளுறை உவமம் கூறிய நிலையில் இப்பாடல் அமைந்துள்ளது.

கயல்வந்த கண்ணியர் கண்ணினை யால்மிகு காதரத்தால்
மயல்வந்த வாட்டம் அகற்றா விரதம்என் மாமதியின்
அயல் வந்த ஆடரவு ஆடவைத்ததோன் அம் பலம்நிலவு
புயல் வந்த மாமதில் தில்லைநன் னாட்டுப் பொலிபவரே -381

இறைச்சி

உள்ளுறை உவமை வகைகளுள் இறைச்சியும் ஒன்றாகும். இறை எனின் தங்குதல். உவமையில் உள்ளே தங்குதல். உள்ளுறை போல் ஒவ்வொரு சொல்லிற்கும் உவமம் காண வேண்டியதில்லை. பாடலில் உள்ள எல்லாச் சொற்களும் ஒன்று சேர்ந்து அப்பாடலில் குறிக்காத பொருளைக் கூறினால் அது இறைச்சி எனப்படும். இதனைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

இறைச்சி தானே பொருள் புறத்ததுவே 1175
இறைச்சியில் பிறக்கும் பொருளு மார் உளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே 1176
அன்புறு தகுந இறைச்சியுள் சுட்டலும்
வன்புறை மருங்கின் வருந்திய பொழுதே 1176

கோவை நானூற்றில் இரண்டு பாடல்கள் 96, 183 இறைச்சியின் பால் வந்துள்ளது.

தேனுக்கு உறைவிடமாகிய வேங்கை மாப்பூக்கள் உதிர்ந்து கிடக்கும் பாறையை யானை கண்டு, அதனை அஞ்சாதன்மை உடைய புலி என்று அஞ்சிய மேகம் தவழும் மலையை உடைய தலைவனே. குறவர் மலையில் உள்ள வேங்கை மரப்பூக்களொடு தெய்வத்திற்குரிய செங்கழுநீர் மலரை நாங்கள் சூட்டப் பெறுவோமோ என்ற பொருளில் பா.96 அமைந்துள்ளது. ஒன்றினைப் பிறிதொன்றாகப் பிறழ உணரும் நாடன் ஆதலால் தெய்வத்திற்குரிய நறுமலரைச் சூடாத குற மகளிராகிய எம்மை அம்மலரைச் சூடுவோமாக என்று பிறழ உணர்ந்தாய் என்பது இப்பாடலில் உள்ள இறைச்சியாகும்.

சுடரொடு புலம்பல் என்ற துறையில் அமைந்த பாடல் 187இல் இறைச்சிப் பொருள் உள்ளது. சார்ந்தார்க்கு அச்சம் தரும் துறைவராதலின் இவரும் தம்மைச் சார்ந்தார்க்கு அச்சம் விளைவித்தார் என்று இறைச்சிப் பொருள் வந்துள்ளது.

தீர்த்தர்அங் கன்தில்லைப் பல்பூம் பொழில் செப்பும் வஞ்சினமும்
ஆர்த்தர்அங் கம்செய்யு மால் உய்யு மாறென்சொல் ஆழ்கடரே 187:3:4

கோவை நானூறு என்கிற திருச்சிற்றம்பலக் கோவை தொல்காப்பிய அகப்பொருளைப் பக்தி மார்க்கத்தில் அமைத்துத் தில்லைச் சிற்றம்பலத்தான் சிறப்புரைக்கும் நூலாகும். காதலும் பக்தியும் கலந்து சுவைக்கும் கற்கண்டாகும். கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்துள்ள நூல். மணிவாசகர் கூற கூற இறைவன் தன் கைப்பட எழுதி கைச்சாத்திட்ட நூல்

ஒரு பெண் அவளோடத்த ஆணுக்கே உரியவள் என்பதனைக் கலித்தொகை குறிப்பிடுவது போல் கோவை நானூறும் குறிப்பிடுகின்றது. ஒத்த பண்புகள் உடைய தலைவன் தலைவியர் பண்புகளைத் தொல்காப்பியமும் சுட்டியுள்ளது. சந்தனமும் கடலில் விளைந்த முத்தும் வெண்சங்கும் தான்பிறந்த இடங்கட்குப் பயன்படாது தம்மை விரும்பியவர்க்கே மெய்க்கு அணியாகும்.

கரும்பியல் சந்துந் தொடுகடன் முத்தும்வெண் சங்குமெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணி யாம் வியன் கங்கை யென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம் பலமனைய
கரும்பன மென்மொழி யாருமந் நீர்மையர் காணுநர்க்கே பா.248

பண்டைத் தமிழ் மக்கள் மடலூர்தல் மேற்கொள்ள மாட்டார். மேற்கொள்வதாக உரைப்பர். அப்பொழுது தலைவியின் உருவினை எழுதி அதனை மடல்குதிரைக்கு முன் வைத்துத் தோழி தலைவியின் குரலையும் சில உறுப்புகளையும் எழுதலறியா இது குறித்துத் தொல்காப்பியமும் சுட்டியுள்ளது. மேலும்,

உயிரினும் சிறந்தது நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்று *தொல்.களவு.22*

இக்கருத்துக் கோவை நானூறையும் இடம் பெற்றுள்ளது. உயிரினைக் கூறாது கோவை நானூறு தாயைக் கூறுகிறது.

இக்கோவை நூலுள் இடம்பெறும் தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலிய அனைவரும் இந்நூலின் பாட்டுடைத் தலைவனாகிய இறைவனை ஏற்றிப் போற்றுவர். ஆடலரசன் திருவருள் நிலையமாகிய திருச்சிற்றம்பலத்தின் புகழ்கூறும் நூல். இப்பாடல்களில் அகத்துறைகள் அமைந்துள்ளன போல் தெய்வத் தத்துவப் பொருள்களும் உள் கிடையாக அமைந்துள்ளன.

பா.எண்.1 **காட்சி -தத்துவப் பொருள்**

முதல் பாடலில் பல நிலங்களுக்குரிய பூக்களைக் கூறியதால் பல் நிலங்களில் சென்று துய்க்கும் இன்பமெல்லாம் தில்லையில் வாழ்வார் அங்கே துய்ப்பர். இம்மை இன்பத்திற்குக் காரணம் தில்லை. ஈசர் தில்லை என்பதால் மறுமை இன்பம் தானே வரும் என்கிறது. பா.எண்.400 ஊதியம் எடுத்துரைத்து ஊடல் தீர்த்தல் சிவபெருமான் திருவடிக்கு அன்பராயினார் என்று உரைக்கின்றது. இப்பாட்டினில் தத்துவம் பொருள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. யாவர்க்கும் ஊதியமாய் நிற்றல் கூறப்பட்டது.

கற்பு

கைக்கோள்களுள் கற்பும் ஒன்றாகும். தொல்காப்பியர் கற்பியல் ஒரு தனி இயலையும் தந்துள்ளார். இதன்கண் 53 நூற்பாக்கள் உள்ளன. கற்பு மணம், கொடுப்போர் இன்றியும் வதுவை, கரணம் தோன்றக் காரணம், கரணமுடிந்த காலை எழுந்த தலைமகன் கூற்று, தலைமகள் கூற்று, தோழிகூற்று, காமக்கிழத்தியர் கூற்று, பிறவாயிலோர் கூற்று, செவிலித்தாய் கூற்று, அறிவர் கூற்று, தலைமகன் ஊடல், ஊடலின் பொழுது தலைமகள், தோழி கூற்று, தலைவன் பணி மொழி, தலைவியின் அருள்மொழி, கூத்தர் கூற்று, இளையோர் கூற்று, பார்ப்பார் கூற்று, பகைவயின் பிரிவு, பாசறைப் புலம்பல், பரத்தையிற் பிரிவு, கல்வி, காவல், பொருள் வயிற் பிரிவுகள் போன்றன கூறப்பட்டுள்ளன.

கோவை நானூறில் மணச்சிறப்புரைத்தல், ஓதற்பிரிவு, காவல் பிரிவு, பகைதணி வினைப்பிரிவு, வேந்தர்க்கு உற்றுழிப்பிரிவு, பொருள் வயிற் பிரிவு, பரத்தையர் பிரிவு என்ற பகுதிகள் இடம் பெற்றுள்ளன.

கல்விப் பிரிவு பற்றித் தொல்காப்பியம் கூறுவதனை ஓதல் பிரிவு என்று கோவை நானூறு குறிப்பிடுகின்றது

துறை- கல்வி நலங் கூறல்

கொளு - கல்விக்கு அகல்வர் செல்வத் தவரெசை

நெறிகுழல் பாங்கிக்கு அறிவறி வித்தல்

சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையில்
ஆரள வில்லா அளவுசென் றார்அம் பலத்துள்நின்ற
ஓரள வில்லா ஒருவன் இருங்கழல் உன்னினர் போல்
ஏரள வில்லா அளவினர் ஆகுவர் ஏந்திழையே *பா.308*

வேந்துறு தொழில் பற்றி பிரிவு ஏற்படுவதனை நூ.1135 தொல்காப்பியம் குறிப்பிட பகை தனிவினைப் பிரிவு என்று கோவை நானூறு குறிப்பிடுகின்றது.

துறை-பகை தனிவினைப் பிரிவு

கொளு- துன்று பகை தணிப்ப மன்னவன் பிரிவு

நன்னறுக் கோதைக்கு முன்னி மொழிந்தார்

மிகைதணித் தற்கரி தாமிரு வேந்தர்வெம் போர்மிடைந்த
பகை தணித் தற்குப் படர்தலுற் றார்தமர் பல்விறவித்
தொகை தணித் தற்கென்னை ஆண்டு கொண் டோன்தில்லைச் சூழ்பொழிவாய்
முகை தணித் தற்கு அரி தாம்பைரி தாழ் தரு மொய்குழலே *314*

பரத்தையர் பிரிவு ஊடல் உரிப் பொருளைச் சார்ந்து அக இலக்கணங்கள் உரைக்க 49 பாடல்களுள் கோவை நானூறும் உரைத்துள்ளது. இதனைப் பிற தெய்வ வழிபாட்டை நுகர்தல் என்று குறிப்பிடுகின்றது. திருவாசக வியாக்கியானம் "உரைத்த சிவானந்தம் ஆண்டு எல்லாம் பூரணமாய்க் கண்ட அனுபூதி" என்கிறது. (மேற்.திருக்கோவையார்.419)

இதனுள்ஊடல் தணிவித்தல், அணைந்த வழி ஊடல், புனலாட்டுவித்தமைக் கூறிப் புலத்தல், கலவி கருதிப் புலத்தல், மதித்துரைத்து ஊடல், ஊடல் நீராடி உரைத்தல், கனி மொழிந்து உரைத்தல் போன்ற துறைகள் உள்ளன. திருக்குறள் காமத்துப் பாலில் உள்ள புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்ற அதிகாரப் பாடல்களொடு இணைத்து ஆராயலாம்.

கவலை கொண்ட பேய்க் கூட்டங்கள் முட்டிக் கரணம் இட்டுப் பாடும் சுடுகாட்டில் ஆடுவதை விரும்புகின்ற அழிவில்லாத சிவபெருமானது தில்லையை ஒத்தவளே, பிள்ளையைத் தழுவி முத்தம் கொண்டு நம் தலைவன் தோன்றுவதால் நின் மனத்திலுற்ற கவலையை நீக்கி அவனுக்குப் பண் செய்வாயாக என்று தோழி கூறும் கோவை நானூறு பாடல் (39) இது

கவலங்கொள் பேய்த் தொகை பாய்தரக் காட்டிடை ஆட்டு வந்த
தவலங் கிலாச்சிவன் தில்லையன் னாய்தழு விம்முழு விச்
கவலங் கிருந்தநம் தோன்றல் துணையெனத் தோன்றுதலால்
அவலங் களைந்து பணிசெயற் பாலை அரசனுக்கே *389*
வாடா ஊடல் நீடு வாடியது என்ற கொளு வில் *394*
திருத்தேன் உயநின்ற சிற்றம் பலவர் தென் னம்பொதியில்
இருந்தேன் உயவந்து இணைமலர்க் கண்ணின் நோக்கருமை
பெருந்தேன் என்நெஞ் சுகப்பிடித்து ஆண்டநம் பெண்ணமிழ்தம்
வருந்தேல் அதுவன்று இதுவோ வருவதோர் வஞ்சனையே *394*

தீராத ஊடல் நீண்டு கொண்டே செல்லும் நிலையில் தலைவன் வாடி தளர்ச்சி யுற்றுத் தன் நெஞ்சொடு கூறிய லையில் இப்பாடல் அமைந்துள்ளது.

கல்லாடம்

மாணிக்கவாசகர் இயற்றிய திருச்சிறம்பலக்கோவையில் 100 துறைகளைத் தேர்ந்தெடுத்து 102 அகவல் பாடல்களில் அமைந்த நூல் கல்லாடமாகும். தொல்காப்பிய அகப்பொருள் இலக்கணத்தின் வழி எழுந்த கோவை நூற்கள் போல திருச்சிற்றம்பலக் கோவை வழி எழுந்த நூல் கல்லாடமாகும். கல்லாடர் என்று இயற்றியவர் பெயரால் இந்நூல் கல்லாடம் என்று பெயர் பெற்றது .கல்லாடர் என்ற பெயரில் பலர் உள்ளனர். ஆயினும் கல்லாடம் நூல் படைத்த கல்லாடர் 11 ஆம் நூற்றாண்டினர் ஆவார்.

கோவை நானூறில் உள்ள அகமரபுகள் போல் களவு, கற்பு கைக்கோள்களில் 100 பாடல்களைக் கொண்டுள்ளது. களவில் 60 பாடல்களும், கற்பில் 40 பாடல்களும் அமைந்துள்ளன. களவில் தோழி கூற்றில் 24 பாடல்கள் உள்ளன. தலைவி கூற்றில் 14, தலைவன் கூற்றில் 14, செவிலி கூற்றில் 12, நற்றாய் கூற்றில் 2, கண்டோர் கூற்றில் 4, பாடல்கள் உள்ளன. கற்பில் தோழி கூற்றில் 14, தலைவன் கூற்றில் 9,செவிலி கூற்றில் 3 வாயிலோர் ,பரத்தையர் கூற்றுக்களில் பாடல்கள் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலக் கோவை தில்லைச்சிற்றம்பலத்தானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளமைபோல் கல்லாடம் மதுரைச் சொக்க நாதரைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டுள்ளது. முன்னது400 பாடல்களையும் பின்னது 100 பாடல்களையும் கொண்டுள்ளன. முன்னது கட்டளைக்கலித்துறை யாப்பிலும் பின்னது அகவற்பாவிலும் அமைந்துள்ளது. இரண்டுமே அகப்பொருள் உரைக்கும் தெய்வத்தமிழ் நூற்களாகும். கல்லாடத்தில் கைக்கிளை பெருந்திணைப் பாடல்கள் இடம்பெறவில்லை.

கோவை நானூறிலிருந்து 100 துறைகளை மட்டும் கல்லாடம் எடுத்துக்கொண்டுள்ளது.

தொடர் எண்	**கிளவிக் கொத்து**	**கோவை நானூறு துறைகள்**	**கல்லாடம் துறைகள்**
1.	இயற்கைப்புணர்ச்சி	18	4
2.	பாங்கற் கூட்டம்	30	2
3.	இடந்தலைப்பாடு	1	--
4.	மதியுடம் படுத்தல்	10	1
5.	இருவரும் உள்வழி அவன் வரவுணர்த்தல்	2	--
6.	முன்னுறவுணர்தல்	1	---
7.	குறையுறவுணர்தல்	4	---
8.	நாண நாட்டம்	1	---
9.	நடுங்க நாட்டம்	1	---
10.	மடல் திறம்	9	1
11.	குறைநயப்புக்கூறல்	8	1
12.	சேட்படை	26	6
13.	பகற்குறி	32	3
14.	இரவுக்குறி	33	10
15.	ஒருவழித்தணத்தல்	18	5
16.	உடன்போக்கு	56	12
17.	வரைவுமுடுக்கம்	16	2
18.	வரைபொருட்பிரிதல்	33	11
19.	மணச்சிறப்புரைத்தல்	9	4
20.	ஓதற் பிரிவு	4	3
21.	காவல் பிரிவு	2	1
22.	பகை தணிவினைப்பிரிவு	2	1
23.	வேந்தர்க் குற்றுழி பிரிவு	16	6
24.	பொருள் வயிற் பிரிவு	20	6
25.	பரத்தையர் பிரிவு	49	20
		400	100

அகப்பொருள் இலக்கிய நுட்ப உத்தி இறைச்சி கோவை நானூற்றில் இரண்டு பாடல்களில் இடம்பெற்றுள்ளமை போல் கல்லாடத்தில் பா. 31... 21-25 அடிகளிலும் பா.எண் 18:35- 41 அடிகளிலும் காணலாம்.

கூடற் கிறைவ னிருதா னிருத்துங்
கனவயா வென்றி நெஞ்சினர் நோக்கம்
பிறவியும் குற்றமும் பிரிந்தன போலப்
வீரமு தோயு மாறின்
வாரித் துரறவடற கென்னா தும்மே (பா. 31:21-25)

வாரித்துறைவன் . இப்பாடல் கோவை நானூற்றில் 287ஆம் பாடலுக்குரிய விளக்கமாக அமைந்துள்ளது. வெறியாட்டுத் தொடர்பானது. (முனைவர் பழ. முத்தப்பன், கல்லாடம் மூலமும் உரையும். 2015, ப.127) இதுபோல பல அகச் செய்திகளை இரு நூற்களிலும் காணலாம்.

இத்தகு வளம் நிறைந்த கோவை நானூறு நூல் பற்றி குறிப்பிடும் ஒரு பழம் பாடல் அதன் பல் வளங்களை நமக்குத் தெரிவிக்கின்றது. பண்டைய இலக்கண நூலின் வழிவந்து பிற்காலத்தில் தோன்றிய இலக்கிய நூற்களும் வழிகாட்டியுள்ளது.

ஆரணங் காண் என்பரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன னூலதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காய சிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே

சான்றாதாரங்கள்

1. திருக்கோவையார், பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை, ஏப்ரல் 2016
2. முனைவர் பழ. முத்தப்பன், கல்லாடம் மூலமும் விளக்கவுரையும், உமாபதிப்பகம், சென்னை, பிப்ரவரி 2015.
3. புலவர் இரா.இளங்குமரன், இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, டிசம்பர் 1999.
4. க.ஜெயலலிதா, கல்லாடம் ஒரு திறனாய்வு, பதிப்பிக்கப் பெறாத ஆய்வேடு, அ.வீரையா வாண்டையார் நினைவு திருபுட்பம் கல்லூரி, பூண்டி, ஆகஸ்டு 2009.

தொ.மா.க. 126

தொல்காப்பியத்தில் பறை

ஜெயதீபா தனபாலசிங்கம்
முதுகலை, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்
theeba2780@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இன்று தமிழில் கிடைத்துள்ள நூல்களுள் பிகப் பழமையானது தொல்காப்பியம். இது ஒரு இலக்கண நூல். வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த நூலும் இதுவே தான். தொல்காப்பியம், தமிழரின் மொழி, வரலாறு, கலை, பண்பாடு முதலிய அனைத்துக்கும் இன்று முதன்மைச் சான்றாக விளங்குகிறது. பண்டைக் காலத்தில் கலைஞன் தன்னை விடத், தனது இசைக் கருவிகளையே உயரிய சொத்தாகக் கொண்டான். பறை, பேசுவதை இசைக்கவல்ல ஒரு இசைக் கருவி மட்டுமல்ல, தோற்கருவிகளின் தாயாகவும், கற்காலத்தின் முதல் தொடர்பு சாதனமுமாகவும் விளங்கியது.

தொல்காப்பியம் பொருளதிகாரம் பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட வாழ்வியல் இலக்கணமாகும். “சான்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங்கால் உலகத்துப் பொருட்கள் எல்லாம் மூவகையாகி, முதல், கரு, உரி என்பனவற்றுள் அடங்கும்” என்கிறார் உரையாசிரியர் இளம்பூரணர். இம் மூன்றனுள், கருப்பொருள் அந்தந்த நிலத்திற்கே உரியதாகி வேறு நிலங்களில் காண அரியதாகும் தன்மையது.

தொல்காப்பியத்துள் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய “பறை” தனியாகக் கூறப்பட்டுள்ளது. பண்டைக் காலம் முதலாக மனிதனது வாழ்வியலில் மிக முக்கியமான இசைக் கருவியாக இருந்த பறை, அறிவியல் வளர்ச்சி காரணமாக அண்மைக்காலமாக அதன் முக்கியத்துவத்தை இழந்து வருகிறது. ஆனால் பண்பாட்டு அடிப்படையில் பறையின் முக்கியத்துவம் மீட்டெடுக்கும் முயற்சி நடைபெறுகிறது.

பழந் தமிழரின் வாழ்வோடு பிண்ணிப் பிணைந்திருந்தது பறை. பிற்காலங்களில் தொழில்நுட்ப வளர்ச்சிகளாலும், சமூக மாற்றங்களாலும் பறையின் முக்கியத்துவம் இழந்து வருகிறது. அதன் பெருமைகளை வெளிக் கொணர வேண்டும் என்பதும், மீண்டும் உயிர்ப்புடன் பாதுகாக்க வேண்டும் என்பதும் இவ் ஆய்வின் நோக்கமாகும்.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் சிறு பகுதியிலேயே பறை பற்றிய குறிப்பு காணப்படுவதால் பறையைப் பற்றி ஆய்வது மிகவும் சிக்கலானது. பண்டைக் காலம் முதல், மக்கள் வாழ்வின் இன்பம், துன்பம், வீரம், பகை, வெற்றி, தோல்வி முதலாய அனைத்து நிகழ்வுகளிலும் பிரிக்கமுடியாத பெரும் பங்கை வகித்து வந்த “பறை” இன்று, அதன் முக்கியத்துவம் இழந்த நிலையிலும் பண்பாட்டின் அடையாளமாக இன்றும் விளங்குகிறது என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

முதன்மைச் சான்றுகளாகத் தொல்காப்பியம், தொல்காப்பிய உரைகளும் துணைச் சான்றுகளாக இசை, பறை சார்ந்த ஆய்வுகளும் அமையும். வரலாற்றியல் மற்றும் சமூகவியல் அணுகுமுறையில் ஆராயப்படுகிறது.

ஆய்வியல் அமைப்பு: இயல் 1. தொல்காப்பியத்தில் பறை, இயல் 2. சங்க இலக்கியத்தில் பறை, இயல் 3. பிற்கால இலக்கியங்களில் பறை, இயல் 4. முடிவுரை

குறிசொற்கள்: தொல்காப்பியத்தில் இசை, தொல்காப்பியத்தில் பறை, இசையும் தொல்காப்பியமும்

முன்னுரை

இன்று தமிழில் கிடைத்துள்ள நூல்களுள் பிகப் பழமையானது தொல்காப்பியம். இது ஒரு இலக்கண நூல். வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த நூலும் இதுவே தான். தொல்காப்பியம், தமிழரின் மொழி, வரலாறு, கலை, பண்பாடு முதலிய அனைத்துக்கும் இன்று முதன்மைச் சான்றாக விளங்குகிறது. பண்டைக் காலத்தில் கலைஞன் தன்னை விடத், தனது இசைக் கருவிகளையே உயரிய சொத்தாகக் கொண்டான். பறை, பேசுவதை இசைக்கவல்ல ஒரு இசைக் கருவி மட்டுமல்ல, தோற்கருவிகளின் தாயாகவும், கற்காலத்தின் முதல் தொடர்பு சாதனமுமாகவும் விளங்கியது.

தொல்காப்பியம் பொருளதிகாரம் பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட வாழ்வியல் இலக்கணமாகும். "சான்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங்கால் உலகத்துப் பொருட்கள் எல்லாம் மூவகையாகி, முதல், கரு, உரி என்பனவற்றுள் அடங்கும்" என்கிறார் உரையாசிரியர் இளம்பூரணர். இம் மூன்றனுள், கருப்பொருள் அந்தந்த நிலத்திற்கே உரியதாகி வேறு நிலங்களில் காண அரியதாகும் தன்மையது.

தெய்வம் உணாவே மா மரம் புள் பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப (அகத்திணையியல் 30)

எனக் கருவுக்கு வகுக்கப்பட்ட இலக்கணத்துள் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய "பறை" தனியாகக் கூறப்பட்டுள்ளது. பண்டைக் காலம் முதலாக மனிதனது வாழ்வியலில் மிக முக்கியமான இசைக் கருவியாக இருந்த பறை, அறிவியல் வளர்ச்சி காரணமாக அண்மைக்காலமாக அதன் முக்கியத்துவத்தை இழந்து வருகிறது. ஆனால் பண்பாட்டு அடிப்படையில் பறையின் முக்கியத்துவம் மீட்டெடுக்கும் முயற்சி நடைபெறுகிறது.

நோக்கமும் தேவையும்

பழந் தமிழரின் வாழ்வோடு பிண்ணிப் பிணைந்திருந்தது பறை. பிற்காலங்களில் தொழில்நுட்ப வளர்ச்சிகளாலும், சமூக மாற்றங்களாலும் பறையின் முக்கியத்துவம் இழந்து வருகிறது. அதன் பெருமைகளை வெளிக் கொணர வேண்டும் என்பதும், மீண்டும் உயிர்ப்புடன் பாதுகாக்க வேண்டும் என்பதும் இவ் ஆய்வின் நோக்கமாகும்.

1)ஆய்வுச் சிக்கல் - தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் சிறு பகுதியிலேயே பறை பற்றிய குறிப்பு காணப்படுவதால் பறையைப் பற்றி ஆய்வது மிகவும் சிக்கலானது.

2)கருதுகோள் - பண்டைக் காலம் முதல், மக்கள் வாழ்வின் இன்பம், துன்பம், வீரம், பகை, வெற்றி, தோல்வி முதலாய அனைத்து நிகழ்வுகளிலும் பிரிக்கமுடியாத பெரும் பங்கை வகித்து வந்த "பறை" இன்று, அதன் முக்கியத்துவம் இழந்த நிலையிலும் பண்பாட்டின் அடையாளமாக இன்றும் விளங்குகிறது என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

3)சான்றுகள் - முதன்மைச் சான்றுகள் - தொல்காப்பியம், தொல்காப்பிய உரைகள்

துணைச் சான்றுகள் - இசை, பறை சார்ந்த ஆய்வுகள்

4)ஆய்வு நெறி - வரலாற்று ஆய்வு, சமூகவியல் ஆய்வு.

5)ஆய்வியல் அமைப்பு -இயல் 1. தொல்காப்பியத்தில் பறை, இயல் 2. சங்க இலக்கியத்தில் பறை,

இயல் 3. பிற்கால இலக்கியங்களில் பறை, இயல் 4. முடிவுரை

இயல் 1 தொல்காப்பியத்தில் பறை

உலகிலுள்ள மொழிகளுள் தொன்மையான மொழி தமிழ். காலத்தால் தொன்மையான, எமக்குக் கிடைத்த தமிழ் மொழியின் மூத்த நூல் தொல்காப்பியம். எழுத்து, சொல். பொருள் என மூன்று அதிகாரங்களைக் கொண்ட இந்நூல் ஒரு இலக்கண நூலாக இருந்தாலும், பொருளதிகாரத்தில், மக்கள் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், அரசியல் முதலிய தகவல்களைத் தருகின்றது. அதாவது வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த நூலாக உள்ளது.

ஆதி காலத்தின் சொத்து என்று கூறப்படும் பறை, பேசுவதை இசைக்கவல்ல ஒரு இசைக் கருவி மட்டுமல்ல, தோற்கருவிகளின் தாயாகவும் கற்காலத்தின் முதல் தொடர்பு சாதனமாகவும் விளங்கியது. ஆதிகாலத்தில் மனிதன் உடைந்த பானைகளின் வாயிலில் தோலைக் கட்டி குச்சியால் அடித்து ஒலி எழுப்பினான் என்பது வரலாறு. இப்படிப்பட்ட பறை ஆதிகாலத்தில் தமிழரின் ஆதியிசைக் கருவியும், தமிழரின் வாழ்வோடு பிண்ணிப் பினைந்தும் இருந்தது.

இவ்வாறு இருந்த பறை பெரும்பறை, சிறுபறை எனப் பின் அழைக்கப்பட்டது. இதில் பெரும்பறை முரசு எனப் பெயர் பெற்று போர்க்காலங்களில் போர் முரசாகவும், பல செய்திகளை அறிவிக்கும் கருவியாகவும் பயன்படுத்தப்பட்டது. சிறு பறைகள் மக்களின் விழாக்கழுக்காகப் பயன்படுத்தப் பட்டன. ஒரு நாட்டில் போர் நிகழ்வதை வீரர்களுக்கு அறிவிக்கப் போர்ப் பறையும், வெள்ளப்பெருக்கை அறிவிப்பதற்கு காவற்பறையும், மதம் கொண்ட யானையை அறிவிக்கப் பறை, அரசன் தன் வெற்றியை அறிவிக்க வெற்றிப் பறை, அரசன் கொடையை அளிப்பதற்குப் பறை(கொடை முரசு), ஆரியர் கூத்தாடவும், விலங்குகளின் தொல்லகளிலிருந்து விலகவும் தொண்டகப் பறை, அறுவடையின் போது அரிப்பறை, ஏறு தழுவும்போது ஏறுகோட்பறை, நகர மக்களுக்குச் செய்திகளை அனுப்ப கோட்பறை, குரவையாட தொண்டகச் சிறு பறை, இறப்புக்கு தண்ணகப் பறை(சாவுப்பறை) என பறையைப் பயன்படுத்தினான் ஆதித் தமிழன்.

அகத்திணையியல், புறத்திணையியல் பகுதிகளில் பறையும் பறையின் பயன்பாடும் கூறப்பட்டிருக்கிறது. ஐவகை நிலத்திற்குமுரிய வேறுபட்ட பறைகள் பற்றிப் பிரித்துக் காணலாம். இன்று, பறையின் தொன்மையையும் அதன் பயன்பாட்டையும் எடுத்தியம்பும் நூல் தொல்காப்பியம்.

உரையாசிரியர் இளம்பூரணர் “சன்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங்கால் உலகத்துப் பொருட்களெல்லாம் மூவகையாகி, முதல், கரு, உரி என்பனவற்றுள் அடங்கும்” என்கிறார். இம் மூன்றினுள்ளும் கருப்பொருளானது அந்தந்த நிலத்திற்கே உரியதாகி வேறு நிலங்களில் காண அரியதாகும் தன்மை உடையது.

“தெய்வம் உணாவே மா மரம் புள் பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப” (அகத்திணையியல் 20)

எனக் கருப்பொருளுக்கு வகுக்கப்பட்ட இலக்கணத்துள் பறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனை உரையாசிரியர்கள் அந்தப் பறையை ஒவ்வொரு நிலத்திற்கும் பொருத்திப் பார்த்து ஐந்திணைகளிற்கும் உரிய “பறையை” வெவ்வேறு பெயர்களால் கூறியுள்ளார்கள். இது உரையாசிரியர்களின் சிறப்பு.

தொண்டகப்பறை

குறிஞ்சி நிலத்தில் முருகக் கடவுளை வணங்குவதற்கும், வெறியாட்டத்தின் போதும் இந்தத் தொண்டகப்பறை வாசிக்கப் படுவது வழக்கமாக இருந்தது. இதற்குச் சான்றாக பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான திருமுருகாற்றுப் படையில் நக்கீரர்

“குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர்”(197)

எனப் பாடுகிறார். அதாவது, தொண்டகம் என்ற சிறிய பறைக்கு ஏற்றபடி வேலனாட்டம் ஆடிய வேலன் கட்டிய கண்ணியை அணிந்து கொண்டு பல மகளிரோடும் முருகன் எழுந்தருள்கின்றான் எனப் பாடுகின்றார். இது தவிர அகநானூறில் கபிலர்,

கறங்கு வெள் அருவி பிறங்கு மலைக் கவாஅன்,
தேம் கமழ் இணர வேங்கை சூடி,
தொண்டகப் பறைச் சீர் பெண்டிரொடு விரைஇ,
மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து,
இயல் முருகு ஒப்பினை (118)
எனவும்,
குறுந்தொகையில் பெருந்தேவனார்
சிறு தினை விளைந்த வியன்கண் இரும் புனத்து
இரவு அரிவாரின், தொண்டகச் சிறு பறை
பானாள் யாமத்தும் கறங்கும்.(375)↥
எனவும்,
இளங்கோவடிகள் வஞ்சிக்காண்டத்தில்
தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்(16)

எனவும் பாடியுள்ளதன் மூலம் தொண்டகப் பறையானது சங்ககாலத்திலும், பிற்காலங்களிலும் எவ்வாறு தமிழரின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

ஏறுகோட்பறை

முல்லை நில மக்கள் ஏறு தழுவும் பொழுது முழக்கும் பறையாகும். அதாவது முல்லை நிலத்தில் கன்னிகளே காளைகளை வளர்ப்பர். அந்தக் காளைகளை எந்த ஆடவர் அடக்குகிறாரோ அடக்கும் ஆடவருக்குச் சொந்தமானவளாகின்றாள் அந்தக் கன்னி. அந்தத் தருணத்தில் அந்நிலத்திலுள்ள ஆடவர் ஏறுகோட்பறையை அறைவர். இது அந்நிலத்தில் மணச்சடங்கு முறையாக இருந்தது. இதற்குச் சான்றாக முல்லைக் கலியில்

சொல்லுக பாணியேம் என்றார் அறைக என்றார் பரித்தார்
மாணிழை ஆறாகச் சாறு

என்பதன் மூலம் அறிய முடிகிறது.

நெல்லரிப்பறை

மருத நில மக்கள் வயல் சார்ந்த தொழில் புரியும் போதும், வழிபாட்டு நேரங்களிலும், ஆடல் பாடல்களின் போதும் இந்தப் பறை வாசிக்கம்படும். இதற்குச் சான்றாக பதிற்றுப்பற்றில்

கழனி யுழவர் தண்ணுமை இசைப்பின்(41)

என்று கூறப்பட்டுள்ளது. இந்த நெல்லரிப் பறையையே கிணைப்பறை, தண்ணுமை என்றும் கூறுகிறார்கள்.

நாவாய்ப்பறை

நெய்தல் நில மக்கள் தமது வாழ்க்கையில் நிகழும் எல்லா நிகழ்வுகழுக்கும், மீன் பிடிக்கச் செல்லும் போதும் நாவாய்ப் பறையை முழக்குவர். இதனை பம்பை எனவும் அழைப்பர்.

ஆறெறிப்பறை

பாலை நிலத்தில் ஆறலைக் கள்வர்களால் முழங்கப்படுகிறது. அதாவது வழிப்பறி செய்தோர் தாங்கள் வழிப்பறி செய்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கு ஆறெறிப் பறையை முழக்குவார்கள்.

தொல் காப்பியம் பொருளதிகாரத்தில் கரந்தையின் துறைகள் என்ற பகுதியில் வாள் போரினால் வென்ற அரசிளங்குமரனை, அந்த நாட்டு மக்கள் அவனைப் பாராட்டி அவனுக்கு பறை முதலிய ஒலிக் கருவிகள் முழங்கும் என பறை அறைந்து வெற்றியக் கொண்டாடினர் என பின்வரும் நூற்பா மூலம் அறியலாம்.

வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க(63)

இயல் 2 சங்க இலக்கியத்தில் பறை

பறை, பண்டைக் காலத்தில், தமிழர் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து இருந்தது. மக்கள், ஒன்று கூடுவதற்காகவும், விலங்குகளிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட ஒரு வழிமுறை பறை அறைதலாகும். பறை, ஐந்திணை மக்களின் தொழிலுக்கும், கலைக்கும் பயன்படுத்தப்பட்டது. அரச விரிவாக்க காலத்தில் எழுந்த எட்டுத் தொகை, பத்துப் பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களில் பறை முக்கிய இடத்தைப் பெறுகிறது. குறிஞ்சிப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தற்பறை, பாலைப்பறை என ஐந்திணைகளிலும் பறை முழக்கிய செய்திகள் கூறப்படுகின்றன. பறை, தாள வாத்தியமாகவும், போருக்கு அறை கூவும் தொடர்பாடல் கருவியாகவும் இருந்தது.

தீட்டைப்பறை, தொண்டகச் சிறு பறை, தொண்டகப்பறை, அரிப்பறை, மன்றோல் சிறுபறை, மென்பறை, இன்னிசைப்பறை, பொருநர்பறை, ஆடுகளப்பறை எனப் பல பெயர்களில் சங்க இலக்கியங்களில் பறை குறிப்பிட்டப்பட்டுள்ளது. அதாவது சங்க இலக்கியங்களில் நானூறு இடங்களில் பறை குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அவற்றில் எண்பத்து ஆறு வகையான பறைக் கருவிகள் இருந்தது என்றும், அவற்றில் முப்பத்து இரண்டு வகையான பறை இன்று இனங்காணப்பட்டு, அவை சென்னையிலுள்ள தொல்பொருள் காப்பகத்தில் வைக்கப் பட்டு உள்ளது என்றும் ஆய்வாளர் த. பார்த்தீபன் தினமணிப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார்.

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புற நானூறு, மற்றும் பத்துப் பாட்டு நூல்களிலும் பறை பற்றிப் பேசப்பட்டுள்ளது.

2.1 நற்றிணை

நற்றிணை எட்டுத்தொகையிலுள்ள அகம் சார்ந்த நூலாகும். இந்நூலிளுள்ள செய்யுட்கள் ஐந்திணைகளுக்கும் பிரிக்கப்பட்டுள்ளது.

பெரு முது செல்வர் பொன்னுடைப்புதல்வர்
சிறு தோட் கோத்த செவ் அரிப்பறையின்
கண்ணகத்து எழுதிய குரீஇப் போல(58)

கூறியுள்ளார். அதாவது பெரிதான முதிர்ந்த செல்வத்தைப் பெற்றோரது பொன் அணிகளையுடைய புதல்வர்கள், சிறிதான தோலிலே கோத்துக்கொண்டு செல்லும், செவ்வையாக ஒலிக்கும் பறையினது கண்ணகத்தே எழுதப்பட்டுள்ள குருவியானது அடிக்கப்படுதலைப் போல என அரிப்பறையை சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

2.2 குறுந்தொகை

அகம் சார்ந்த நூல்களில் ஒன்றான குறுந்தொகையில் மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன்

தழலும்ந்தட்டையும் முரியும் தந்து இவை
ஒத்தன நினக்கு எனப் பொய்த்தன கூறி(223)

பறை வகையில் ஒன்றான தட்டையைக் கூறியுள்ளார். அதாவது கிளிகளை விரட்டுவதற்குப் பயன்படும் கருவிகளாகிய தழலையும், தட்டையையும், தழையாடையையும், எனக்குக் கொடுத்து, என்பதில் கிளிகளை விரட்டப் பயன்படுத்தும் பறை தட்டை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2.3 அகநானூறு

இந் நூலில் பழந்தமிழரின் அகவொழுக்கம், அவர்களது பெருமை, அறம், வாழ்வியல் போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன. அத்துடன் பரை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

வாடல் உழுஞ்சில் விளைநெற்று அம்துணர்

ஆடுகளப் பறையின், அரிப்பன ஒலிப்பக்(45)

அதாவது உலர்ந்த வாகை மரத்திலுள்ள முதிர்ந்த நெற்றுக்களைக் கொண்ட தொத்துகள், ஆடுகளத்திலுள்ள கூத்தர்கள் ஒலிக்கும் பறையினைப் போல விட்டு விட்டு ஒலிக்குமென ஆடுகளத்தில் கூத்தர்கள் பறை முழங்குவதைக் காட்டப்பட்டுள்ளது.

2.4 புறநானூறு

இது புறம் சார்ந்த நூலாக இருப்பதால் இங்கு பெருமளவில் பறை வீரத்தை உணர்த்துவதற்காகவும், வெற்றியை அறிவிப்பதற்காகவும், போரிற்கு அறை கூவுவதற்காகவும் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் காணலாம்.

நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்பத்
தணிபறை அறையும் அணிகொள் தேர்வழி(68)

பா வரிகளின்மூலம் பறை பற்றி அறிய முடிகிறது.

இயல் 3 பிற்கால இலக்கியங்களில் பறை

3.1 திருப்புகழில் பறை

திருப்புகழில் பறையும், முரசும், உடுக்கையும், ஒலிக்கின்ற கூட்டமான பறைகளும் எனக் கூறப்பட்டுள்ளதைப் பின் வருமாறு காணலாம்

சிறு பறையும் முரசு துடி சத்தக் கணப் பறையும்(156)

3.2 திருக்குறளில் பறை

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் திருக்குறளிலும் பல இடங்களில் பறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதாவது

"அறைபறை அன்னர் கயவர்தாம்
கேட்ட மறைபிறர்க்குய்த் துரைக்க லான்"

என்கிறார் வள்ளுவர். அதாவது தான் கேட்டறிந்த மறைபொருளை பிறருக்கு வலியக் கொண்டு போய் சொல்லுவதால் அறியப்படும் பறை போன்றவர் என்கிறார்.

3.4 மற்றய இலக்கியங்களில்

நாண்மணிக் கடிகையில் "பறை பட வாழா அசுணமா" என்றும், சிலம்பில் "துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய" என்றும், நாலடியாரில் "பல்லாறறியப் பறையறைந்து"(86), பழமொழி நானூறில் "ஓர்த்தது இசைக்கும் பறை" என்றும் கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

இயல் 4 முடிவுரை

பறை காலப்போக்கில் தொழில்சார் கலையாக மாறியது. அதன் பின் எழுந்த சாதியத்தாலும், கால ஓட்டத்தாலும் பறையின் பெருமை குறைந்து கொண்டு சென்றது. இன்று இப் பறைக்கு உயிர் கொடுத்து வருகின்றார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு தேவைகளுக்காகவும் பறைக் கருவி மக்களிடையே பின்னிப்பிணைந்து இருந்து வந்திருக்கின்றது

தொல்காப்பியம், பொருளதிகாரம், மக்கள் வாழ்வியல் கூறும் நூல். பறை மக்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்திருந்த ஒரு வாத்தியக் கருவி. தமிழரின் பாரம்பரிய இசைக் கருவியான பறையின் தேவையும், பயன்பாடும் நவீன தொழில் நுட்பத்தின் பயன்பாடு காரணமாக வரலாற்றில் அது பெற்ற முக்கியத்துவத்தைக் காலப்போக்கில் இழந்து, இன்று பண்பாட்டுக் குறியாகப் போற்றும் அளவுக்கு அதன் பயன்பாடு குன்றியிருக்கிறது. அதன் முக்கியத்துவம் இழந்த நிலையிலும் பண்பாட்டின் அடையாளமாக இன்றும் விளங்குகிறது என்பது இவ்வாய்வின் முடிவாகும்.

தொ.மா.க. 130

தொல்காப்பியப்பிரதி கட்டமைக்கும் விளிம்புநிலை மக்கள்

பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
mssivasubramaniam@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

தொல்காப்பியப்பிரதியில் 'வழக்கு' என்பது உயர்ந்தோருடையது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. உயர்ந்தோர் வாயிலாகத்தான் செயல்கள் நடைபெறுகின்றன என்பது தொல்காப்பியரின் கருத்து. உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடு இங்கே அடையாளப்படுத்தப்படுகின்றது. 'அடியோர் வினை வலர்' என்ற சொல்லாட்சிகள் தொல்காப்பியரது விளிம்புநிலையினைப் பிரதிபலிக்கின்றன. அத்துடன் தொல்காப்பியத்தில் நிலப்பாகுபாட்டினையும், தொழிற்பாகுபாட்டினையும் அடிப்படையாகக்கொண்டு திணைக்கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. ஊரான், கிழான், ஆயர், எயினர், நுழையர், உழவர், பரதவர், கள்வர் என்ற பாகுபாடு தொழிலையும், நிலத்தையும் அடிப்படையாகக்கொண்டு உருவாகியுள்ளது. பின்னர் சாதி, இனம் என்ற முறைமையில் அவை கட்டமைக்கப்பட்டுள்ளது.

நால்வர்ண சாதி அமைப்பில் வரும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் பற்றிய செய்திகள், தொல்காப்பியத்தில் விரிவாகவே பேசப்பட்டுள்ளன. இவை திணை அடிப்படையில் வந்தவை அல்ல. வடமொழி மரபு பின்பற்றப்பட்டு உயர்ந்தவர்களாக அவர்கள் காட்டப்பட்டுள்ளனர். ஆனால் மேற்கூறப்பட்ட உரிமைகள் விளிம்புநிலை மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதையும் தொல்காப்பியப்பிரதி எடுத்தியம்புகின்றது. விளிம்புநிலையைச் சார்ந்தோர் அடிமைகள் என்றும், வினைவலர் என்றும், இழிந்தோர் என்றும், ஏவல் மரபினர் என்றும் சுட்டப்பட்டுள்ளனர். நால்வகை வர்ணத்தார்களுள் விளிம்புநிலை மக்கள், நிலவுடைமையைச் சார்ந்தவர்களுக்கு அடிமை வேலை செய்பவர்கள் என்றும், எவல்வேலை செய்பவர்கள் என்றும், எவ்வித உரிமையும் இல்லாதவர்களென்றும் தொல்காப்பியத்தில் காட்டப்பட்டுள்ளனர்.

தொல்காப்பியத்தில் நால்வர்ணச் சாதி அமைப்பில் வரும் பிராமணர், வைசீகர், சத்திரியர், சூத்திரர் பற்றிய செய்திகள் விரிவாகவே பேசப்பட்டிருந்தாலும், அவை திணை அடிப்படையில் வந்தவை அல்ல. இங்கு வடமொழி மரபு பின்பற்றப்பட்டு உயர்ந்தவர்களாகவே அவர்கள் காட்டப்பட்டனர். ஆனால் அவ்உரிமைகள் விளிம்புநிலை மக்களுக்கு மறுக்கப்பட்டிருந்தன. விளிம்புநிலையைச் சார்ந்தோர் 'அடிமைகள்', 'வினைவலர்', 'இழிந்தோர்', 'ஏவல் மரபினர்' என்ற பார்வையிலேயே தொல்காப்பியத்தில் காட்டப்பட்டுள்ளனர். அவர்கள் நிலவுடைமையைச் சார்ந்தவர்களுக்கு அடிமை வேலை செய்பவர்கள் என்றும், ஏவல்வேலை செய்பவர்கள் என்றும், எவ்வித உரிமையும் இல்லாதவர்களென்றும் நடத்தப்பட்டனர். ஆண்களே சமூகமட்டத்தில் உயர்நிலையில் இருந்தனர்;. பெண்கள் இரண்டாம் நிலைப்பட்ட விளிம்பு நிலைக்குரியவர்களாகவே பார்க்கப்பட்டனர். இதன்பொருட்டே பெருமை, வலிமை, அறிவு, அழகு, ஆள்வினை, செயலூக்கமான பாலியல் அதிகாரம் என்பன ஆண்களுக்கு உடைமையாகின. ஆனால் உடல் அழகு, மென்மை, பணிவு அடங்கிய பாலியல் கற்பு ஒழுக்கமும், சேவை, செயல், மடமை, நாணம் என்பனவும் பெண்ணுக்கு வரையறுக்கபட்டன. இங்கு ஆண் - பெண் சமூகநிலைத்தன்மைகள் வேறாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எனவே தொல்காப்பியத்தில் ஆணைவிடப் பெண் ஒடுக்கப்பட்டவளாகவும், ஆணதிகாரத்திற்கு உட்பட்டுச் செயற்படுபவளாகவும் காட்டப்பட்டுள்ளாள். குறிப்பாகச் சொல்லப்போனால் தொல்காப்பியப்பிரதியில் பெண்கள் விளிம்புநிலை மாந்தராகவே கட்டமைக்கப்பட்டுள்ளாள். எனவே தொல்காப்பியப் பிரதியை மறுவாசிப்புக்கு உட்படுத்தி, அதில் கட்டமைக்கப்படுள்ள விளிம்புநிலை மக்கள் பற்றிய கருத்துக்களை அடையாளப்படுத்த வேண்டிய தேவையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிமுகம்

தொல்காப்பியம் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், தமிழ்மொழியின் பண்பாட்டையும் எடுத்துரைக்கும் பழம்பெரும் நூலாகும். வாழ்க்கையை எடுத்தியம்பும் இலக்கியத்திற்கு இலக்கணம் கூறும் நூலாகத் தொல்காப்பியப் பொருளதிகாரப்பிரதி அமைகின்றது. தொல்காப்பியத்தைப் பல திறனாய்வாளரும் பல வகையில் ஆய்வு செய்துள்ளனர். அப்போக்கில், இவ்வாய்வு தொல்காப்பியத்தில் விளிம்புநிலை மக்கள் பற்றியதாக அமைகின்றது. தொல்காப்பியத்தின் காலம் கி.பி 5ஆம் நூற்றாண்டு என்று முன்னர் கூறப்பட்டது. ஆனால் கல்வெட்டு ஆராய்ச்சி - கீழடி ஆய்வுகளின்படி தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டுக்கு உரியதாக முன்தள்ளப்பட்டுள்ளது. ஆரியக் கொள்கையைப் பின்பற்றித் தொல்காப்பியப் பிரதி பிராமணர், வைசீகர், சத்திரியர், சூத்திரர் கொள்கையை முன்வைக்கிறது. உயர்ந்தோர் அடியோர் என்ற கொள்கை தொல்காப்பியப் பிரதியில் பேசப்படுகின்றது. ஆரம்பத்தில் வேளாண்மைச் சமூகமும் பின்னர் தாய்வழிச் சமூகமும் தோன்றிப் பின்னர் நிலவுடைமைச் சமூகம் உற்பவிக்கப்பட்டபோதுதான் முற்றுமுழுதாக அதிகாரம் மற்றும் சமூக மேல்நிலையாக்கம் என்பவை ஆண்களுக்குரியதாக மாறிற்று. நிலம் ஆண்களின் உடைமையாக மாறும்பொழுது பெண்களும் ஆண்களின் உடைமைகளாக மாற்றப்பட்டனர். உலக வரலாற்றில் தந்தைவழிச் சமூகம் முதல் இன்றுவரை (நவீன காலச் சமூகம்வரை) ஆண்களே சமூகமட்டத்தில் உயர்நிலையில் உள்ளனர். பெண்கள் இரண்டாம் நிலைப்பட்ட விளிம்பு நிலைக்குரியவர்களாகவே பார்க்கப்படுகின்றனர்.

விளிம்பு நிலை மக்கள்

விளிம்பு நிலை மக்கள் என்ற சொல் இலக்கிய வட்டத்தில் அதிகம் பேசப்படுகின்ற சொல்லாகும். சாதி, சமயம், பொருளாதாரம், மற்றும் தொழில்ரீதியாக முன்னேறியவர்களை 'மேல்தட்டு மையம்' எனவும், அவர்களுக்குக் கீழ் உள்ளவர்கள் 'விளிம்பு நிலையினர்' எனவும் பொருள் கொள்ளலாம். 'விளிம்புநிலை மக்கள்' என்று சுட்டப்படும் நபர்கள் சமூகத்தில் எந்தவிதமான அங்கீகாரமும் இல்லாதவர்களாவர். தங்களுடைய உரிமைக்காகப் போராடுபவர்கள். தற்போது இருக்கின்ற நிலையைத் தக்கவைத்துக் கொள்வதில் அந்தமக்கள் மிகுந்த கவனமாக இருக்கின்றனர். வருவாய் குன்றிய பல தொழில்களைச் செய்யும் மக்கள், புறக்கணிக்கப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகியோர் விளிம்புநிலை மக்கள் ஆவர். 'சமுதாய அடுக்கில் கீழ்நிலையில் - விளிம்பில் - ஓரத்தில் இருப்பவர்களையே இச்சொல்லாட்சி குறிக்கின்றது. அதாவது சாதி, சமயம், பால் - இனம் என்ற எல்லாத் தளங்களிலும் ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, தாழ்நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் விளிம்புநிலைக்குரிய மனிதர்களாவர். அம்மக்களின் வாழ்க்கை தினம்தினம் செத்துப் பிறப்பது போன்றே அமைகின்றது. அன்றாடத் தேவையான உணவிற்குப் பெரும் உழைப்பினைக் கொடுத்தாலும், அதற்கான விலைதான் கிடைப்பதில்லை. தொழில்நிலையில் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகள் அவர்களது மனநிலையைச் சிதைத்து, குழப்பமான சூழலை உருவாக்குகின்றன. விளிம்புநிலை மக்கள் வாழ்க்கையில் ஆசைகள், கனவுகள் போன்றவை கானல்நீராய் அமைகின்றன. அவரவர் தொழிலை அவர்களது சந்ததியினரே பரம்பரையாகச் செய்யவேண்டும் என்கின்ற நிலையும் அச்சமூகத்தில் காணப்படுகின்றது.

தொல்காப்பியப்பிரதி நால்வகை வர்ணத்தாரின் செயற்பாடுகளைப் பாகுபடுத்தியும், அவற்றை முன்னிறுத்தியும் பேசுவதைப் பார்க்கலாம். தொல்காப்பியம் அதிகாரப் பகிர்வுகளை நால்வர்ணத்தாருக்கும் உரியதாகவே காட்டுகின்றது. நால்வகை வர்ணப்பாகுபாடு பிறப்பின் அடிப்படையில் அமைந்தது என்பதை ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை. மனுதர்மசாஸ்திரத்தையே தொல்காப்பியம் பின்பற்றுகின்றதை நாம் இங்கு அவதானிக்கலாம்..

தொல்காப்பியப்பிரதியானது உயர்ந்தோர் வாழ்க்கையை அடியொற்றியமைக்கப்பட்டது. அடிமைகள் என்றும், வினைவலர் என்றும், ஏவல்மரபினர் என்றும் உடைமையாளருக்காக உழைக்கும் அடிமட்டத்து உழைப்பாளிகளுக்குத் தொல்காப்பியப் பனுவல் பெயர் சூட்டியுள்ளது. 'அவர்கள் நால்வகை

வர்ணத்தாருக்காக உழைப்பவர்கள்' என்பதைத் தொல்காப்பியப்பிரதி முன்வைக்கின்றது. மனுதர்மம் பெண்களை ஒடுக்கப்பட்டவர்களாகவே கருதியது. அதேபோன்று தொல்காப்பியமும் பெண்களை ஒடுக்கப்பட்டவர்களாகவே காட்டியுள்ளது.

தொல்காப்பியப்பிரதியில் 'வழக்கு' என்பது உயர்ந்தோருடையது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. உயர்ந்தோர் வாயிலாகத்தான் செயல்கள் நடைபெறுகின்றன என்பது தொல்காப்பியரின் கருத்து. உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடு இங்கே அடையாளப்படுத்தப்படுகின்றது. 'அடியோர் வினை வலர்' என்ற சொல்லாட்சிகள் தொல்காப்பியரது விளிம்புநிலையினைப் பிரதிபலிக்கின்றன. அத்துடன் தொல்காப்பியத்தில் நிலப்பாகுபாட்டினையும், தொழிற்பாகுபாட்டினையும் அடிப்படையாகக்கொண்டு திணைக்கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம். ஊரான், கிழான், ஆயர், எயினர், நுழையர், உழவர், பரதவர், கள்வர் என்ற பாகுபாடு தொழிலையும், நிலத்தையும் அடிப்படையாகக்கொண்டு உருவாகியுள்ளது. பின்னர் சாதி, இனம் என்ற முறைமையில் அவை கட்டமைக்கப்பட்டுள்ளதையும் காண்கிறோம்.

தொழிலின்கண் பாகுபாடு

'பெயரும் வினையும் என்று ஆயிருவகைய
திணை தொறும் மரீஇய திணைநிலைப் பெயரே' (தொல். அகம். சூ. 22)

ஒவ்வொரு திணையிடத்தும் (நிலம்) வாழ்பவர்களின் திணைநிலைப் பெயர் அவர்களின் நிலத்தையும், தொழிலையும் அடிப்படையாகக் கொண்டது என்கிறார்.

'ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே' (தொல். அகம். சூ. 24)

முதலில் முல்லைத்திணைக்குரிய ஆண் மகன் பெயராக 'ஆயர்' எனவும் அவர்களின் தொழிற்பெயர் 'வேட்டுவர்' எனவும் குறிப்பிடுகின்றது.

'ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை
ஆன வகைய திணைநிலைப் பெயரே' (தொல். அகம். சூ. 23)

முல்லைத்திணைக்கு உரியவர் போன்று ஏனைய திணைக்கு உரியவர்களும் அத்தன்மையில் தத்தம் திணைக்குரிய பெயர்களைக் கொண்டு விளங்குபவராவர் எனத் தொல்காப்பியம் குறிப்பிடும். இளம்பூரணர் பின்வருமாறு குறிப்பிடுவர்.

திணை	ஆடவர்	மகளிர்	தலைவன்
குறிஞ்சி	கானவர்; குன்றவர் வேட்டுவர்	குறத்தி	வெற்பன்
பாலை	மறவர் எயினர்	மறத்தியர் எயிற்றியர்	மீளி விடலை
மருதம்	கடையர் உழவர் களமர்	கடைசியர் உழத்தியர்	ஊரன் மகிழ்நன்
நெய்தல்	நுளையர்	நுளைச்சியர்	சேர்ப்பன்
முல்லை	கோபாலர்	இடைச்சியர்	ஆயர் வேட்டுவர்

நிலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலத்தலைவர் பெயரும், தொழிலை அடிப்படையாகக் கொண்டு தலைவன் - தலைவியர் பெயரும் வழங்கப்பட்டுவந்த நிலையை இங்கு காணலாம். இனப்பாகுபாடு என்பது புவியியலையும், தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தப்பட்டது.

'அடியோர் பாங்கினும் விளைவலர் பாங்கினும்

கடிவரை இலபுறத்து எண்மனார் புலவர்' (தொல். அகம். சூ. 25)

பிறருக்கு ஏவல் செய்கின்றவர்களைப் 'பிறர் ஏவிய தொழிலைச் செய்கின்றவர்கள்' என்ற வகையில் தொல்காப்பியத்தில் அடியோர் ஏன்ற கீழ்நிலையில் ஒடுக்கு முறையில் வாழும் மக்களை விளிக்கின்றது. ஆணுக்கும் - பெண்ணுக்கும் இடையில் நிலவுகின்ற தொழிற்பாகுபாடே பால் அடிப்படையில் அமைந்த தொழிற்பாகுபாடாகும். குழந்தையைப் பிறப்பித்தல், பராமரித்தல், வீட்டுடன் தொடர்புடைய வேலைகள் பெண்களுக்குரியவையாகக் கட்டமைக்கப்பட்டன. வீட்டுக்கு வெளியிலான முகாமைத்துவ வேலைகள் ஆண்களுக்குரியவைகளாகவே கட்டமைக்கப்பட்டுள்ளதனையும் காண்கின்றோம்.

உயர்ந்தோருக்குரியவை

நிலத்தை அடிப்படையாகக் கொண்டும், ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டும் இனம்பிரிக்கப்படுகின்றது. அக ஒழுக்கம் என்பது உயர்ந்தோர்க்குரியது, ஒடுக்கப்பட்ட மக்களுக்குரியது என வகுக்கப்பட்டுள்ளதை நோக்கலாம். பிரிவு பற்றிக் கூறும்பொழுது கல்வியும் தூதும் உயர்ந்தவர்களுக்குரியது என்பதைத் தொல்காப்பியம் கூறும். அவற்றுள்,

'ஓதலும் தூதும் உயர்ந்தோர்மேனே' (தொல். அகம். சூ. 28)

அரசர் வணிகர் போன்றோருக்கு உரியதாகக் கல்வியும், தூதும் சொல்லப்பட்டது. கல்வி கற்றலும், தூது உரைத்தலும் உயர்ந்தோரால் மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். கல்வியில் மேன்மையடைந்த ஔவையார், அதியமானுக்காகத் தொண்டைமான் இளந்திரையனிடத்துத் தூது சென்ற இடத்தைப் புறநானூற்றுப்பாடல் (பாடல்: 95) சான்று தருகின்றது.

அந்தணர், அரசர்கள் தூது உரைத்தலைப் பாரதக்கதை வாயிலாக அறியலாம். கண்ணபிரான் தருமருக்காகத் தூது செல்கிறார்.

'உயர்ந்தோர்க்குரிய ஒத்தினான்' (தொல். அகம். 33)
'உயர்ந்தோர் பொருள் வாயின் ஒழுக்கத்தான்' தொல். அகம். 35)

ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன உயர்நிலை மக்களுக்கே உரியனவாகக் கூறப்படுகின்றன. விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு மேற்குறிப்பிட்ட விடயங்கள் கூறப்படவில்லை.

வர்ணப்பாகுபாடு

தொல்காப்பியப் பிரதியில் ஆரியச் செய்திகள் பரவலாக்கம் பெற்றுள்ளதையும் காணலாம். நால்வகை வர்ணப் பாகுபாட்டில் பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் என்போரைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. அந்தணர் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

'நூலே கரகம் முக்கோல் மனையே
ஆயுங்காலை அந்தணர்க்குரிய' (தொல். மரபு. 615)

'முப்புரிநூல் பூணுதல்' ஏழு வயதுப்பருவத்தில் அந்தணச் சிறுவர்களுக்குச் செய்யும் சடங்குமுறையாகும். 'கரகம்' என்பது 'கமண்டலம்' ஆகும். ஆசமனம் செய்வதற்குரிய புனித நீர்க்கலசம். 'முக்கோல்' என்பது திரிசூலம் ஏந்துதலாகும். இவை அந்தணர்களுக்குரிய பொருள்களாகும்.

'அந்தணர்க்கு அரசு வரைவின்றே'

பிராமணர்களுக்கும் அரசாளும் உரிமை இருக்கின்றதைத் தொல்காப்பியம் கூறுகின்றது. அரசர்கள் பற்றிக் கூறும்பொழுது,

'படையும் கொடியும் குடையும் முரசும்
நடைநவில் புரவியும் களிறும் தேரும்

தாரும் முடியும் நேர்வன பிறவும்

தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய' (தொல். மரபியல். 616)

படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், மாலை, மகுடம் ஆகியனவும் அரசர்க்கு உரியனவாகும்.

'வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது

இல்லென மொழிய பிறவகை நிகழ்ச்சி' (தொல். மரபியல். 625)

மேற்படி சூத்திரங்களில் வைசிகன் பெறுவது, வணிகத்தால் பெறுதற்குரிய வாழ்வாகும். சூத்திரர் உழவுத்தொழில் செய்து உணவைப் பெறுவது அல்லாமல் பிறவகையில் செய்வதில்லை எனக் கூறப்படுகின்றது. உயர்ந்தோருக்குரியதான மரபுகளைத் தொல்காப்பியம் தெளிவாகவே பேசியுள்ளது. பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர்களுக்குரிய மரபுகளைத் தொல்காப்பியம் அகத்திணையியல் மரபியல் என்பனவற்றில் பரவலாகப் பேசுகின்றது. மேலும் வடமொழி மரபினையும் தொல்காப்பியம் கூறுகின்றது. ஆரியக் கொள்கையினை எடுத்தியம்புகின்றது. ஆரியக் கொள்கையை உயர்ந்ததாகவே கூறுகின்றது.

'அன்ன ராயினும் இழித்தோர்க்கு இல்லை' (தொல். மரபு. 629)

ஒடுக்கப்பட்டவர்களுக்கு உயர்ந்தோர்க்குரிய பொருள்கள் இல்லை எனத் தொல்காப்பியம் எடுத்தியம்புகின்றது. தொல்காப்பியம் ஆரியக் கொள்கையைப் பின்பற்றவில்லை என்றும், ஆரியக் கொள்கையைப் பின்பற்றுகின்றது என்றும் பிரதிவாதங்கள் நிகழுகின்றன. ஆரியக்கொள்கை இடைச்செருகலாக சேர்க்கப்பட்டதென்றும் குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியம் ஆரியக் கொள்கையினையும் பின்பற்றுகிறது என்றே கூறவேண்டும். ஆரியக்கொள்கையினால்தான் உயர்ந்தோர் - தாழ்ந்தேதர் என்ற முரண்பாடு வளர்த்தெடுக்கப்படுகின்றது. தொல்காப்பியம் அரசியல் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தளங்களில் நால்வகை வர்ணத்தாருக்கும் உரிய கருத்தாக்கங்களைக் குறிப்பிடுகின்றது. மனுதர்ம சாத்திரம் கூறும் நால்வகை வர்ணப் பாகுபாட்டின் அதிகாரங்களையே தொல்காப்பியமும் கூறுவது குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம், நால்வர்ணப் பாகுபாடு பிறப்பிலிருந்து தோன்றியதாகக் கூறவில்லை. தொல்காப்பியர், விளிம்புநிலை மக்கள் பற்றி எத்தகைய அக்கறையும் கொள்ளவில்லை. நிலவுடைமை சார்ந்த ஏற்றத்தாழ்வுகள் இருந்ததைத் தொல்காப்பியப் பிரதியூடாகக் கண்டுகொள்ளலாம்.

ஆணாதிக்கநிலையும் பெண்ணிய ஒடுக்குமுறையும்

தொல்காப்பியப் பிரதி ஆணாதிக்க சமுதாயத்தின் எதார்த்த நிலைமைகளூடாகப் பல செய்திகளை வெளிப்படுத்துகின்றது. தந்தைவழிச் சமுதாயத்தின் ஆண் ஆதிக்கப் போக்கு உள்ளிட்ட கருத்தாக்கங்கள் உயர் வர்க்க மக்களிடமும் காணப்படுவதை அவதானிக்கலாம். தொல்காப்பியம் ஆண்களின் இயல்பைக் கூறும்பொழுது,

'பெருமையும் உரனும் ஆடூஉமேன' (தொல். களவு. 95)

ஆண்களுக்குப் பெருமை மற்றும் வலிமை கூறப்பட்டுள்ளன. மேலும் புகழ், அறிவு, கடமை, உரிமை, ஆள்வினை அதிகாரம் என்பனவற்றையும் வெளிப்படுத்துகின்றது. அதேவேளை பெண்ணை,

'அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்பர்' (தொல். களவு. 96)

அச்சம், நாணம், மடம் ஆகிய மூன்றும் பெண்களுக்கு இன்றியமையாத இயல்புகளாகும். தொல்காப்பியப் பிரதியில் குறிப்பிட்டமையை அடியொற்றியே பெண்களுக்கு இயல்பான நாணம் உண்டாகும் எனத் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

'யான் நோக்குங்கால் நிலன் நோக்கும் நோக்கக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்' (குறள்: 1094)

இங்கு பெண்களின் இயல்புசார் அடக்குமுறை பேணப்படுவதைக் காணலாம். மேலும் நளவெண்பா,

'நாற் குணமும் நாற்படையா ஐம்புலனும் நல் அமைச்சா

ஆர்க்கும் சிலம்பே அணிமுரசே - வேற்படையும்
வாளுமே கண்ணா வதனமதி குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு' (நளவெண்பா, சுயம்வரகாண்டம், பா. 32)

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களும், நான்கு படைகளாகி விளங்குவதைக் காட்டுகின்றது. இவ்வாறு தொல்காப்பியப் பிரதியும் பின்வந்த இலக்கியங்களும் பெண்களின் இயல்புகளை இவ்வாறு பகிர்ந்து வருவதை நோக்கலாம். பெண் அச்சம், நாணம், மடம் இயல்புகளை உடையவளாக, இரக்கமுடையவளாக, மெல்லியவளாக, அழகுடையவளாக, உணர்ச்சியை அடக்கும் ஆற்றல் அற்றளவாக, செயற்திறனற்றவளாக எடுத்தியம்பப்படுகிறாள்.

'சொறிவும் நிறையும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான' (தொல். பொருள். நூ. 206)

'உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர் தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று' (தொல். களவு. 111)

'கற்பின் ஆக்கத்து நிற்றள் கண்ணும்' (தொல். களவு. 113)

'வெளிப்படை தானே கற்பினொடு ஒப்பினும்' (தொல். களவு. நூ. 139)

பெண்கள், கற்பு - ஒழுக்கம் - அறியாமையில் வாழ்வதே பெண்களின் நற்குணங்கள் எனச் சொல்லப்பட்டு வந்தது. அச்சம், நாணம், மடம் என்ற கொள்கைகளை வலியுறுத்திப் பெண்களை ஒடுக்கும் சக்திகளாக மாற்றினர். தொல்காப்பியப் பிரதி இதனையே தெளிவாக முன்வைக்கின்றது.

'சொல்லெதிர் மொழிதல் அளுமைத்து ஆதலின்
அல்ல கூற்று மொழி அவள் வாயினான' (தொல். களவு. நூ. 108)

பெண் என்பவள், எதிர்த்து மொழி பேசக்கூடாது எனத் தொல்காப்பியப் பனுவல் மொழிகின்றது. பெண் ஒடுக்கப்படுவதற்குக் காரணமே எதிர்த்துப் பேசவிடாமல் மறுதலித்தலின் பொருட்டேயாகும். பெண் தனது ஜனநாயக உரிமைகளை எதிர்த்துப் பேசவேண்டும். பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்து, அவர்கள் ஆண்களைச் சார்ந்தே வாழ்பவள் எனக் காட்டப்பட்டுள்ளாள்.

மேலும்,

'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லிய பொறையும் நிறையும் வல்லித்தின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்' (தொல். கற்பு. நூ. 150)

மேற்குறிப்பிட்ட நூற்பாவில் விருந்தினரை உபசரித்தல், சுற்றத்தாரை உபசரித்தல் போன்ற கடமைகளும், 'கற்பும், நற்பால் ஒழுக்கமும்' எனக் கட்டுப்பாடுகளும் பெண்களுக்கு விதிக்கப்படுகின்றன. ஆண்களுக்கு உரிய கட்டுப்பாடுகளைத் தொல்காப்பியப் பனுவல் பேசவில்லை. தொல்காப்பிப்பிரதி, அகத்திணை ஒழுக்கத்தில் தலைவி தனது விருப்பத்தைத் தலைவனிடம் வெளிப்படுத்த உரிமையில்லாதவளாகவே காட்டுகின்றது.

'காமத்திணையில் கண்நின்று வரூஉம்

நாணும் மடனும் பெண்மை ஆகலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள் வயின் ஆன' (தொல். களவு. நூ. 106)

காம ஒழுக்கத்தில் நிலைபெறும் நாணமும், மடமும் பெண்மைக்குரியது. ஆதலால் தலைவன், தலைவியிடத்துக் குறிப்பினாலும் - இடத்தினாலும் வேட்கை புலப்படுத்தலே அல்லாது வெளிப்படையாகப் புலப்படாது என்ற செய்தியைத் தொல்காப்பியப் பிரதி வெளிப்படுத்துகிறது. மேலும்,

'சொல்லெதிர் மொழிதல் அருமைத்து ஆதலின்
அல்ல கூற்று மொழி அவள் வயின் ஆள' (தொல். களவு. 108)

தலைவன், கருதிக்கூறும் புணர்ச்சிக்குத் 'தலைவி பதிலுரை மொழிதல் இல்லை' எனவும் தொல்காப்பியம் கூறும்.

'தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல்
எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை' (தொல். களவு. நூற். 116)

எனவே தலைவி தன்னுடைய வேட்கையைத் தலைவன்முன் நின்று உணர்த்தும் தன்மை இல்லை எனக் கூறுகிறது.

'தற்புகழ்க் கிளவி கிழவன் முற்கிளத்தல்
எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை' (தொல். கற்பு. 178)

'தலைவனின் எதிரில் தலைவி தன்னைப் புகழ்ந்து பேசுதல் இல்லை' எனவும் தொல்காப்பியப் பிரதி தெரிவிக்கின்றது. கடல் கடந்து செல்லும்போது மகளிரை உடன் கொண்டு செல்வதில்லை. தலைவன் தலைமகளைச் சுற்றத்தாரிடம் விட்டுச்செல்லுதலையும் தொல்காப்பியப் பனுவல் சான்றுபகர்கின்றது.

'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை' (தொல். அகம். நூ. 37)

தலைவன் ஓதுதல் பகை, தூது, பொருளீட்டுதல் என்னும் வகையில் பிரிந்து செல்லும்பொழுது தலைவியைக் கடல்கடந்து உடன்கொண்டு செல்லுதல் இல்லை என இங்கே கூறப்பட்டுள்ளது. இதனை உரையாசிரியர் இளம்பூரணர் காலிற்பிரிவு, கலத்திற்பிரிவு என இருவகைப்படுத்தி 'கலத்தின்பிரிவு மகளிர்பால் இல்லை' என்று கூறுகின்றார்.

'எத்திணை மருங்கினும் மகடூஉ மடல் மேல்
பொற்புடை நெறிமை இன்மையான' (தொல். அகம். 38)

மகளிர் தம் காதல் நிறைவேறும்பொருட்டு மடல் ஏறுதல் இல்லை. இதனைத் திருவள்ளுவரும்

'கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப்
பெண்ணின் பெரும் தக்கது இல்' (குறள். 1137)

'மகளிர் மடலேறாத தன்மை' இங்கே சுட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பெண்களை ஒடுக்கப்பட்டவர்களாகவே தொல்காப்பியப் பிரதியும் - பின்வந்த இலக்கியங்களும் காட்டுகின்றன. இக்கருத்துக்கள் மனுதர்மசாஸ்திரத்திலும் வருகின்றன. ஆணுக்கு மட்டும் சமூக இயக்கம். ஆனால் பெண்ணுக்கு அது மறுக்கப்பட்டிருந்ததை வரலாறு காட்டுகின்றது.

தொல்காப்பியப் பிரதியில் ஆண்கள் ஆள்வினையில் (போர், பொருளீட்டல், வேளாண்மை, கல்வி) ஈடுபட்டுப் பொருளும் - புகழும் - அதிகாரமும் ஈட்டுபவர்களாகக் காணப்பட்டனர். பெண்களுக்கு அவை மறுக்கப்பட்டதைத் தொல்காப்பியப் பனுவல் வெளிப்படுத்தியுள்ளது.

'அறு வகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்' (தொல். புறம். 74)

பிரமணர், சத்திரியர், வைசீகர், சூத்திரர் என்போரின் ஒழுக்கமுறைகள் இங்கு கூறப்பட்டுள்ளன. வருணப்பாகுபாடு புறத்திணையியலிலும் பேசப்பட்டுள்ளதைத் தொல்காப்பியப்பிரதி சுட்டியுள்ளது.

முடிவுரை

தொல்காப்பியத்தில் நால்வர்ணச் சாதி அமைப்பில் வரும் பிராமணர், வைசீகர், சத்திரியர், சூத்திரர் பற்றிய செய்திகள் விரிவாகவே பேசப்பட்டிருந்தாலும், அவை திணை அடிப்படையில் வந்தவை அல்ல. இங்கு வடமொழி மரபு பின்பற்றப்பட்டு உயர்ந்தவர்களாகவே அவர்கள் காட்டப்பட்டனர். ஆனால் அவ்உரிமைகள் விளிம்புநிலை மக்களுக்கு மறுக்கப்பட்டிருந்தன. விளிம்புநிலையைச் சார்ந்தோர் 'அடிமைகள்', 'வினைவலர்', 'இழிந்தோர்', 'ஏவல் மரபினர்' என்ற பார்வையிலேயே தொல்காப்பியத்தில் காட்டப்பட்டுள்ளனர். அவர்கள் நிலவுடைமையைச் சார்ந்தவர்களுக்கு அடிமை வேலை செய்பவர்கள் என்றும், ஏவல்வேலை செய்பவர்கள் என்றும், எவ்வித உரிமையும் இல்லாதவர்களென்றும் நடத்தப்பட்டனர். ஆண்களே சமூகமட்டத்தில் உயர்நிலையில் இருந்தனர்;. பெண்கள் இரண்டாம் நிலைப்பட்ட விளிம்பு நிலைக்குரியவர்களாகவே பார்க்கப்பட்டனர். இதன்பொருட்டே பெருமை, வலிமை, அறிவு, அழகு, ஆள்வினை, செயலூக்கமான பாலியல் அதிகாரம் என்பன ஆண்களுக்கு உடைமையாகின. ஆனால் உடல் அழகு, மென்மை, பணிவு அடங்கிய பாலியல் கற்பு ஒழுக்கமும், சேவை, செயல், மடமை, நாணம் என்பனவும் பெண்ணுக்கு வரையறுக்கபட்டன. இங்கு ஆண் - பெண் சமூகநிலைத்தன்மைகள் வேறாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எனவே தொல்காப்பியத்தில் ஆணைவிடப் பெண் ஒடுக்கப்பட்டவளாகவும், ஆணதிகாரத்திற்கு உட்பட்டுச் செயற்படுபவளாகவும் காட்டப்பட்டுள்ளாள். குறிப்பாகச் சொல்லப்போனால் தொல்காப்பியப்பிரதியில் பெண்கள் விளிம்புநிலை மாந்தராகவே கட்டமைக்கப்பட்டுள்ளாள். எனவே தொல்காப்பியப் பிரதியை மறுவாசிப்புக்கு உட்படுத்தி, அதில் கட்டமைக்கப்படுள்ள விளிம்புநிலை மக்கள் பற்றிய கருத்துக்களை அடையாளப்படுத்த வேண்டிய தேவையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துணைநின்ற நூல்கள்கள்

1. திருக்குறள், (2009), பூம்புகார் பதிப்பகம், சென்னை.
2. நளவெண்பா, புகழேந்திப்புலவர், கௌரா பதிப்பகம், சென்னை.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், (2008), வ. த இராமசுப்பிரமணியம உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
4. முருகேசபாண்டியன், மறுவாசிப்பில் மரபிலக்கியம், (2011) நற்றிணை பதிப்பக வெளியீடு, சென்னை.

தொ.மா.க. 131

தொல்காப்பியத் தமிழ்ச் சமூகம்: ஒரு சட்டப் பார்வை

முனைவர் ப. மோகன்தாசு
வழக்குரைஞர், புதுச்சேரி
bmdoss_b@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியத் தமிழரின் வாழ்க்கை முறையை இக்காலச் சட்டக்கோட்பாடுகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது எழும் சிந்தனைகள் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகின்றன. தொல்காப்பியச் சமுதாயம் மரபிற்கு பெரிதும் மதிப்பு கொடுத்த சமுதாயம். இக்கால சட்டக்கோட்பாடுகளிலும் மரபுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பல வழக்குகளில் தொன்றுதொட்டு பின்பற்றப்படும் மரபுகளின் அடிப்படையில் தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன.

தொல்காப்பியத் தமிழ்ச் சமுதாயம் பெண்கள் கடல் கடந்து பயணம் செய்தற்குரிய உரிமையை மறுத்திருக்கின்றது. மடல் ஏறுதல் என்னும் சமுதாயப் பழக்கத்தை ஆண்களுக்கே உரிய ஒன்றாகக் காட்டுகிறது. காதல் மிகுந்திருந்த போதிலும் பெண் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி இயந்திரத்தனமான வாழ்க்கை வாழ வேண்டும் என்று அறிவுறுத்தியது. இல்லறத் தலைவி எச்சுழ்நிலையிலும் கணவன் முன் தன்னையோ தன் குடும்பத்தையோ உயர்வாகப் பேசிக் கொள்ளல் கூடாது. தலைவி தன் மனத்தில் எழும் காதல் வேட்கையினைத் தலைவனிடம் வாய்விட்டுச் சொல்லுதல் கூடாது. மேற்கூறிய இவ்வரையறைகள் இக்கால அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள பாலினப் பாகுபாடு கூடாது என்ற சமஉரிமைக் கோட்பாட்டிற்கு முரணானதாக அமைந்துள்ளது. தொல்காப்பியச் சமுதாயத்தில் ஆடவர்கள் பரத்தையருடன் தொடர்பு கொண்டிருந்தது ஒழுக்கக் குறைபாட்டை உணர்த்துகிறது. இக்காலச் சட்டங்களின்- படி கணவன் வேற்றுப் பெண்களுடன் உறவு வைத்துக்கொண்டால் மணவி;லக்கு கோரும் உரிமை மனைவிக்கு உண்டு.

தொல்காப்பியத் தமிழர்தம் சமுதாய அகவாழ்வில் உடன் போக்கு, அறத்தொடு நிற்றல் போன்ற செயல்கள் இருந்தன. மேலும் அக வாழ்க்கையில் அறிவுரை கூறும்பொழுது உள்ளுறை, இறைச்சி என்னும் முறைகளைக் கையாண்டது பண்டைச் சமுதாயத்தினரின் உளநூல் அறிவை வெளிப்படுத்தும். மனநலச் சட்டக்கோட்பாடுகள் அண்மைக் காலங்களில் தான் வளர்ச்சி; பெற்றுள்ளன. ஆற்றுப் படுத்துதல்:

தலைவன் தலைவியர் களவு வாழ்க்கையில் தோழிக்கும் பங்குண்டு இக்காலத்தில் திருமணத்திற்குப் பின் இணையரிடையே எழும் பூசல்களைச் சமரசத் தீர்வு மூலம் விடைகாண சட்டக்கோட்பாடுகள் வழிவகுக்கின்றன. மத்தியஸ்தரின் வேலையையே தொல்காப்பியக் காலத்தில் தோழி செய்து தலைவன் தலைவிக்கு இடையே களவு வாழ்க்கைக் காலத்திலேயே உறவுப் பாலம் அமைத்து சமரச முயற்சிகளை மேற்கொண்டுள்ளது சட்ட நோக்கில் ஒரு முன்னேறிய படியாகும்.

இயற்கையைப் போற்றுதல், மனித நேயம்: போர்புரியும் விதிகள்;, முதலியன: நமது அரசியலமைப்புச் சட்டத்தில் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது இந்தியக் குடிமகனின் கடமையாகக் கூறப்;பட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான மக்கள் சுற்றுச் சூழல் தொடர்பான விதிமுறைகளைப் பின்பற்றாததால் புவி வெப்பமயமாதல் மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் மலிந்துள்ளன. தொல்காப்பியச் சமூகம் இயற்கையைப் பற்றிய நல்ல புரிதலைக் கொண்டிருந்ததால் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டிருந்தனர். மனித நேயம் மற்றும் அனைத்து உயிர்களுடனும் பரிவுடன் இருத்தல் ஆகிய அரசியலமைப்புச் சட்டக் கோட்பாடுகள் மறை பொருளாக தொல்காப்பியத்தில் உணர்த்தப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தின் புறத்தினைகள் படைகளின் போர் நெறிமுறைகளை விளக்குகின்றன. அவைகள் இக்கால சர்வதேச உடன்படிக்கையின் கீழ் வகுக்கப்பட்டுள்ள போர் விதிமுறைகளை நினைவுபடுத்துகின்றன. அரசனுக்கு நீதித் துறையில் துணை செய்ய அறங்கூரவையத்தார் இருந்தது இக்காலத்தில் நீதிமன்றங்கள் சிறப்பு அதிகாரத்தின் மூலம் பல்வேறு துறைசார் வல்லுனர்களின் உதவியைப் பெறுவதை ஒத்துள்ளது.

முன்னுரை

'என்றுமுள தென்தமிழ்' நூல்களில் இன்றைக்குக் கண்டு இன்புறும் அளவில் இருக்கும் தொன்மையான நூல் தொல்காப்பியமேயாகும். தொல்காப்பியம் விளக்க முறை இலக்கண நூல் ஆதலின் அது கூறும் சமுதாயம் எப்படி யெப்படி இருந்ததோ அப்படியப்படியே கூறியதாகும். தொல்காப்பியப் பொருள் அதிகாரம் தமிழரின் வாழ்க்கை நிலைப்பற்றிப் பேசுகிறது. தொல்காப்பியத் தமிழரின் வாழ்க்கை முறையை இக்காலச் சட்டக்கோட்பாடுகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது எழும் சிந்தனைகள் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகின்றன.

தொல்காப்பியப் பொருளதிகாரமும் தமிழரின் வாழ்க்கை நிலைகளும்

ஒரு சமுதாயம் பல நூறாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து அனுபவித்து அறிந்து கொண்டு பின்பற்றிய சமுதாய வாழ்க்கை முறைகளையே தொல்காப்பியப் பொருளதிகாரம் சுட்டுகின்றது. ஆகவே தொல்காப்பியம் காட்டும் சமுதாயம், ஒரு பழமையான, அனுபவ முதிர்ச்சியுடைய நிறைவான ஒன்றாகும். ஒரு நிறைவான, ஆண்டு அனுபவித்த சமுதாயத்தால்தான்; வாழ்வியலை அகம், புறம் என இரு பெரும் பிரிவுகளாகக் காண இயலும். சமுதாய அனுபவ விளைவால்தான் அக வாழ்விலும், புற வாழ்விலும் அறம் என்ற கொள்கையைக் காணமுடியும்.

மரபுகளைப் போற்றிய சமுதாயம்

தொல்காப்பியச் சமுதாயம் மரபிற்கு பெரிதும் மதிப்பு கொடுத்த சமுதாயம். மரபு நிலை திரிதல் என்பது வாழ்வியலில் இல்லை *(தொல்காப்பியம் காட்டும் சமுதாயம் - முனைவர் ப.ச.ஏசுதாசன்-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.-ப.8);. மரபின் முக்கியத்துவம் கருதி தொல்காப்பிய இயல்கள் பலவும் பெயரிடப்பட்டுள்ளன. நூன்மரபு, மொழிமரபு, தொகை மரபு, விளிமரபு,

மரபியல் என்பன மரபின் பெயர் கொண்ட இயல்களாகும். இக்காலச் சட்டக் கோட்பாடுகளிலும் நீதிமன்றத் தீர்ப்புகளிலும் மரபுகளுக்கு (குலவழக்காறுகளுக்கு) முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. *அருள்மிகு மகாலட்சுமி அம்மன் திருக்கோயில் மகாலட்சுமி மும்முடியார் குல நல சங்கம் எதிர் மாவட்ட ஆட்சியர், கரூர் வழக்கில் (நீதிப் பேராணை மனு எண்.16701/2019-ல் 29.05.2020-ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது) மனுதாரர் மகாலட்சுமி திருக்கோயில் ஆடித் திருவிழாவில் பக்தர்களின் தலைகளில் பூசாரி தேங்காய் உடைப்பதைத் தடுக்கும் வகையில் எதிர்மனுதாரருக்குத் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரினார். மனுவைத் தள்ளுபடி செய்த மேதகு சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.ஆர்.சுரேஷ் குமார் இந்தியாவிலும் பண்டைய தமிழகத்திலும் பன்னெடுங் காலமாக வழக்கத்தில் இருக்கும் தீ மிதித்தல், அலகு குத்துதல் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டினார். இது தொடர்பாகப் பின்வரும் கலிங்கத்துப் பரணியில் உள்ள பாடலை மேற்கோள் காட்டியுள்ளார்:-

'அடிக்கமுத்தி னெடுஞ்சிரத்தை யரிவ ராலோ
அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவு மாலொ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ'

ஆகவே பக்தர்கள் தங்கள் குல வழக்கப்படி தலையில் தேங்காய் உடைத்து நேர்த்திக்கடன் செல்லுத்துவதைத் தடுக்க இயலாது என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மகளிருக்கு இல்லாப் பயண உரிமை

தொல்காப்பியத் தமிழ்ச் சமுதாயம் பெண்கள் கடல் கடந்து பயணம் செய்தற்குரிய உரிமையை மறுத்திருக்கின்றது என்பதாகவே அல்லது தலைவன் கடல் கடந்து செல்லும் பொழுது தலைவியை அழைத்துக்கொண்டு செல்லக்கூடாது, என்பதாகவே ஒரு வரையறை செய்துள்ளது. "முந்நீர் வழக்கம்

மகடூஉவோடு இல்லை" என்ற தொல்காப்பியத் பொருளதிகார நூற்பா 37 ஈண்டு கவனிக்கத் தக்கதாகும். இக்கால அரசியலமைப்புச் சட்டத்தில் பாலின பாகுபாடு கூடாது என்ற

சமஉரிமைக் கோட்பாட்டிற்கு முரணானதாக அவ்வழக்கம் அமைந்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 14-ன் படி எந்த நபருக்கும் சட்டத்தின் முன் சம உரிமையையும் இந்திய நிலவரையில் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பையும் அரசு மறுக்கக்கூடாது. விதி 15-ன் படி சமயம், இனம், பாலினம், பிறந்த இடம் அல்லது வேறு எதன்பேரிலும் குடிமகனுக்கு எதிராக அரசு வேறுபாடு காட்டுதல் கூடாது. அக்காலச் சமூகம் தவறு செய்ததை அரசு சரி செய்திருக்க வேண்டும்.

பெண் மடல் ஏறுதல் இல்லை

மடல் ஏறுதல் சமுதாயப் பழக்கத்தை ஆண்களுக்கே உரிய ஒன்றாகக் காட்டுகிறது தொல்காப்பியம்.

"எத்தினை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான"

என்று பொருளதிகார நூற்பா 38 விளம்புகிறது. தலைவன் ஒருவன் தான் விரும்பிய தலைவியை அடைய முடியா நிலையில், அவளை அடைய வேறுவழியே இல்லாத பொழுது பனங்கருக்கினால் ஆகிய குதிரையைச் செய்து, அதன்மேல் சிறவர்கள் இழுத்துச் செல்ல இவர்ந்து, தன் கையில் தான் விரும்பிய தலைவியது உருவம் வரையப் பெற்ற ஓவியத்துடன் சான்றோர்கள் கூடும் பொதுமன்றத்திற்கு வர, அவர்தம் உதவியுடன் தான் விரும்பிய தலைவியை அடைதல் உண்டு. பெண் தன் பெண்மையை, நாணத்தைக் காக்கும் பொருட்டு எந்நிலையிலும் மடலேறுதல் இல்லை. காதல் மிகுதிருந்த போதிலும் பெண் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி இயந்திரத்தனமான வாழ்க்கை வாழ வேண்டும் என்று அக்காலச் சமூகம் அறிவுறுத்தியது. இதுவும் இக்காலச் சமஉரிமைக் கோட்பாடிற்கு முரணான ஒன்றாகும்.

தலைவி பெருமை பேசாதிருத்தல்

பொறுப்பு மிக்க இல்லறத் தலைவி எச்சூழ் நிலையிலும் கணவன் முன் தன்னையோ தன் குடும்பத்தையோ உயர்வாகப் பேசிக் கொள்ளல் கூடாது.

ஆகவேதான் பொருளதிகார நூற்பா 178 "தற்புகழ்க் கிளவி கிழவன்முற் கிளத்தல் எத்திறத் நானும் கிழத்திக் கில்;லை" எனத் தெளிவுபட உறுதியாகக் கூறியுள்ளது. கணவனைப் போன்றே கல்வி கற்றல், பொருளீட்டுதல் போன்ற அனைத்து செயல்களிலும் இக்காலப் பெண்கள் ஈடுபட்டு வருகிறார்கள். பெண்ணின் அடிப்படை உரிமையை, குறிப்பாக கருத்துச்சுதந்திரம் கொண்ட பேச்சுரிமையை இதுமீறுவதாகும்.

கணவனின் கவலையைக் குறைக்க வேண்டிய மனைவியின் கடமை

குடும்ப வாழ்க்கையில் கணவன் கவலை அடையவதற்குரிய சூழல்கள் பலவாகும். "அத்தருணத்தில் கணவனுடைய கவலையைக் குறைத்தலே மனைவியின் கடமையாகும். இதனை

"தாய்போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிய

கவவொடு மயங்கிய காலை யான"என்ற பொருளதிகார நூற்பா 171 வெளிப்படுத்துகின்றது. இதுவும் கணவனுக்கு அவ்வாறன கடமையைப் போதிக்காத போது பாலினச் சமன்பாடு என்ற சட்டக்கோட்பாட்டிற்கு முரணானதாகும்.

காதல் வேட்கையைத் தலைவி வாய்விட்டுச் சொல்லுதல் கூடாது

தலைவி தன் மனத்தில் எழும் காதல் வேட்கையினைத் தலைவனிடம் வாய்விட்டுச் சொல்லுதல் கூடாது என்று தொல்காப்பியம்

"தன்னுறு வேட்கை கிழவன் முற் கிளத்தல்
எண்ணுங்காலைக் கிழத்திக் கில்லைப்

பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்

பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப" பொருளதிகார நூற்பா 116-ல் கூறியுள்ளது. இதுவும் பாலின சமன்பாட்டை மீறுவதாகும்.

அறத்தொடு நிற்றல்

பண்டைத் தமிழர்தம் சமுதாய அகவாழ்வில் உடன் போக்கு, அறத்தொடு நிற்றல் போன்ற செயல்கள் இருந்தன என்பதை தொல்காப்பியத்தின் வாயிலாக அறியலாம். மேலும் அக வாழ்க்கையில் அறிவுரை கூறும்பொழுது உள்ளுறை, இறைச்சி என்னும் முறைகளைக் கையாண்டு அறிவுறுத்திய திறம், பண்டைச் சமுதாயத்தினரின் உளநூல் அறிவை வெளிப்படுத்தும் சாதனங்களாகும். மனநலச் சட்டக்கோட்பாடுகள் அண்மைக் காலங்களில்தான் வளர்ச்சி பெற்றுள்ளன. இதனை நோக்குங்கால் தொல்காப்பியச் சமுதாயத்தில் மனநலத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தது தெளிவாகிறது.

பூசல்கள் தீர்ப்பதில் தோழியின் பங்கு

தலைவன், தலைவியர் களவு வாழ்க்கையில் தோழிக்கும் பங்குண்டு. தோழியின் துணை காதல் வாழ்வு செழிக்க, வளரப் பெரிதும் உதவும், தலைவியின் களவு வாழ்க்கை அறியாத தலைவியின் பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்ய முயலுவதுண்டு, இந்த இடர்மிகு நிலையில் தோழி அறத்தொடு நின்று தலைவியது உள்ளத்தைச் செவிலித் தாய்க்கு வெளிப்படுத்துவாள். செவிலித்தாய் அறத்தொடு நின்று அதனை நற்றாய்க்கு அறிவிப்பாள். நற்றாய் அறத்தொடு நின்று தன் மகளுக்கு அவள் விரும்பும் தலைவனை மணம் முடித்தற்குரிய ஏற்பாடுகளைத் தன் கணவன் வழியாகச் செய்வாள். இவ்வகையான ஒரு தொடர்பு ஒரு முறை தமிழ்ச் சமுதாயத்தில் நிலவியதைத் தொல்காப்பியத்தால் அறியலாம். இக்காலத்தில் திருமணத்திற்குப் பின் இணையரிடையே எழும் பூசல்களைச் சமரசத் தீர்வு மூலம் விடைகாண சட்டக்கோட்பாடுகள் வழிவகுக்கின்றன.

இந்தியாவின் சிறப்புத் திருமண சட்டம், 1954-ன் விதி 34(2) மற்றும் இந்து திருமண சட்டம், 1955-ன் விதி 23 (2) ஆகியவற்றின்படி திருமண உறவுகளின் அடிப்படையில் எழும் வழக்குகளில் பரிகாரம் வழங்குவதற்கு முன்னால் நீதிமன்றங்கள் வழக்கில் தொடர்புடைய தரப்பினரிடையே சமரச முயற்சிகளை மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளன. மிக அண்மையில் பாராளுமன்றம் இயற்றியுள்ள மத்தியஸ்த சட்டம், 2023-ன்படி மத்தியஸ்த முயற்சிகளை வழக்கு தொடுப்பதற்கு முன்பே மேற்கொள்வதற்கு வழிவகை உண்டு. மத்தியஸ்தரின் வேலையையே தொல்காப்பியக் காலத்தில் தோழி செய்துள்ளாள். தலைவன், தலைவிக்கு இடையே திருமணத்திற்கு முன்னரே களவு வாழ்க்கைக் காலத்திலேயே உறவுப் பாலம் அமைத்து சமரச முயற்சிகளை மேற்கொண்டுள்ளதை பொருளதிகார நூற்பா 112 மூலம் அறியமுடிகிறது. வருமுன் காக்கும் முயற்சி என்பதால் அதுவும் சட்டநோக்கில் மேலானதாகும்.

பரத்தமை

தொல்காப்பியச் சமுதாயத்தில் ஆடவர்கள் பரத்தையருடன் தொடர்பு கொண்டிருந்தது ஒழுக்கக் குறைபாட்டை உணர்த்துகிறது. பரத்தமை கடிந்து பேசப்பட்ட நிலமை தொல்காப்பியத்தில் இல்லை. இது தொடர்பான பொருளதிகாரப் பாடல் 229 பின்வருமாறு:-

"கற்புவழிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்
உளத்து ஊடல் உண்டுஎன மொழிப"

அதாவது 'கற்புவழிப்பட்ட தலைவி உலக இயல்பினைக் கருதித் தலைமகனுடைய புறத்தொழுக்கத்திற்கு உடன்படுவாள். ஆயினும் தலைவியின் உள்ளத்தில் ஊடல் நிகழும் என்று சொல்லுவர் புலவர்' என்பதாகும். ஆனால் இக்கால சட்டங்களின் படி கணவன் வேற்று பெண்களுடன் உறவு வைத்துக்கொண்டால் மணவி;லக்கு கோரும் உரிமை மனைவிக்கு உண்டு. அவ்வகையில் பெண்உரிமை இக்காலத்தில் போற்றப்படுகிறது.

கைம்மை மகளிர் நிலை

தொல்காப்பியக் காலத்தில் இறந்த கணவனை எரியூட்டுங்கால் மனைவி உடன் தீப்பாயும் பழக்கம் இருந்தது. தொல்காப்பியம் காஞ்சித் திணையின் ஒரு கூறாக இதனைக் குறித்துள்ளது. வடநாட்டார் இதனைச் 'சதி' என்றனர். கணவன் இறந்தாலும் தானும் உயிர் விட்ட மனைவியின் மாண்பினை நோக்கிய சான்றோர்களின் அனுதாப இரங்கல் உரை

'மூதானந்தம்' எனப்படும். கணவன் இறந்த பின் அவனை எரிக்கும் ஈமத்தில் மனைவி தானும் புகுந்து உயிர்விடுதல் 'நளியழல் புகுதல்' எனப்படும். தலைவியின் செல்வநிலை, குடும்பநிலை, கருதி சான்றோர்கள் தடுக்க முயன்றும் அதனை ஏற்றுக் கொண்டு தீப்பாய்தல் காஞ்சித்திணையின் மற்றொரு கூறாகும். இதனையே உடன்கட்டை ஏறுதல் என்பர். கணவனை இழந்த மனைவியர் அனைவரும் அத்துன்பம் தாழாது உயிர் துறந்து விடுதல் என்பது இயற்கைக்குப் பொருந்தாத ஒன்று. ஆயினும் கைம்மை நோன்பு நோற்று, மறுமையில் அவனையே தம் கணவனாக அடைய முயலுதலே பெரும்பான்மையான மகளிர் இயல்பு. இதனைத் 'தாபத நிலை' என்று தொல்காப்பியம் சுட்டியுள்ளது. பெண் சமூகத்தில் தனித்து வாழுவது துன்பமே தவிர இன்பம் இல்லை என்பதும் ஆணின்றித் தனித்து வாழும் பெண்ணிற்கு சமூக மதிப்பில்லை என்பதையே மேற்கூறிய பழக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஆனால் இக்காலச் சட்டங்கள் பெண்களின் நிலையை முன்னேற்றம் அடையச் செய்துள்ளன. இந்தியப் பாராளுமன்றம் இயற்றியுள்ள சதி (தடை) சட்டம், 1987-ன்படி கணவன் இறந்த பிறகு பிணத்தை எரியூட்டும்போது மனைவி அத்தீயில் பாய்ந்து உடன் கட்டை ஏறுதலைத் தடை செய்கிறது. மேலும் இக்காலச் சட்டங்கள் விதவைகளின் மறுமணத்தை ஆதரித்து அங்கீகாரம் வழங்கியுள்ளன.

அன்பின் ஐந்திணைகள்

தொல்காப்பியச் சமுதாயத்தால் போற்றப்பட்ட அன்பின் ஐந்திணைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவேயாம். மனித வாழ்வில் மனித உணர்வுகளுக்கு முதலிடம் தரப்பட்டுள்ளமை இத்திணைகளுக்குக் குறிக்கப்பட்டுள்ள உரிப்பொருளின் வாயிலாக அறிந்து இன்புறுதற்கு உரியதாகவுள்ளது. இவ்வன்பு வாழ்க்கையின் குறிக்கோள் அறத்தின் மேல் மனத்தைச் செலுத்துவதற்கேயாகும்.

"காமஞ் சான்ற கடைக் கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" எனப் பொருளதிகார நூற்பா 190 கூறியுள்ளது. இவ்வாறான அறத்தின் வழி நிற்கும் குடும்பங்கள் நீதிமன்றப்படியேறுவது அரிதான ஒன்றாகும் ஆனால் இக்காலத்தில் குடும்ப வாழ்க்கையில் அறக்குறிக்கோள் இல்லாதால் குடும்ப நீதிமன்றத்தில் வழக்குகள் நிறைந்து தேங்கியிருப்பது பெரிய குறைபாடு ஆகும்.

போர் அறம்

1907-ல் உலகநாடுகள் கூடி ஹேக் உச்சி மாநாட்டில் எடுத்த முடிவுகளின்படி போர் துவங்குவதற்கு முன்னால் தெளிவான முன்னறிவிப்பு செய்ய வேண்டிய கடமை போர் புரிய உத்தேசிக்கும் நாட்டிற்கு உள்ளது. அவ்வாறே போர் துவங்குவததற்கு முன் இறுதி அறிவிப்பு செய்ய வேண்டும் என்ற விதியும் உள்ளது. போரில் ஈடுபடும் நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய சட்டக் கோட்பாடுகள் இக்காலத்தில் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன. 1949-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஜெனிவா உடன்படிக்கைப்படி வரையறையற்ற மற்றும் தான்தோன்றித்தனமான தாக்குதல்களை போர் புரியும் நாடுகள் தவிர்க்க வேண்டும். அந்த ஒப்பந்தத்தின் கருத்தை ஒட்டிய அறப்போர் தொல்காப்பியம் வகுத்துள்ள போர் விதிமுறைகளை ஒத்துள்ளன. புறத்திணையியலில் வெட்சித்திணை முதலான பாடாண் திணை ஈறான திணைகளில் தொல்காப்பியர் போர் விதிமுறைகளை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நூற்பா 60 வெட்சித்திணையின் இலக்கணம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறது.

“வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்”.

அதாவது வேந்தனால் ஏவிவிடப்பட்ட படைமறவர் வேற்றுநாட்டிற்குச் செல்வர். பறர் அறியாதபடி அங்குள்ள ஆநிரைகளைக் களவினால் கவர்ந்து வருவர். பேர் செயவதற்குரிய செயல்களுள் தொடக்கமாக அமைவது ஆநிரை கவர்தலாகும். எனவேதான் போர் தொடுத்தலின் அறிவிப்பாக விளங்கும் வெட்சித்திணை தொல்காப்பியரால் முதலில் கூறப்பட்டது. வெட்சித்திணையின் 16 துறைகள் பற்றி தொல்காப்பிய நூற்பா 61 இயம்புகிறது.

‘நோயின்று உய்த்தல்’

என்பதும் அதில் ஒன்றாகும். அதாவது கவர்ந்து கொண்ட ஆநிரைகளைத் துன்பமுறாத வகையில் ஓட்டி வருதல் என்பதாகும். பகைவரின் ஆநிரைகளாகினும் அவற்றை போர் புரியும் நாடு பாதுக்காக்க வேண்டிய கடமை வலியுறுத்தப்பட்டு;ள்ளது சிறப்பான ஒன்றாகும். கரந்தைத் திணையில் அமைந்த பாடல் 63 பின்வருமாறு குறிப்பிடுகிறது:-

“.....உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப் போந்தை வேம்பே
ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்”

அதாவது மிகுந்த பகைகொண்ட பெருவேந்தர்களும் மறவர்களும் தாம் இன்னார் என்பதைக் காட்டுவதற்காக அடையாளப் பூக்களைச் சூடிக் கொண்டு போர் புரிவர். அவ்வாறே இதர திணைகளிலும் தொல்காப்பிய நூற்பாக்கள் விவரிக்கும் போர் முறைகள் ஒரு இலக்கண வரையறைக்குள் பொருந்திய வகையில் அமைந்துள்ளது. போர் வீரர்கள், போர்த்; தளபதிகள் மற்றும் போரில் ஈடுபடும் அரசர்கள் பகைவர் நாட்டின் போர்வீரர்களுடன் நேருக்கு நேர் மோதிப் போர் செய்ததை தொல்காப்பியம் பதிவு செய்துள்ளது. கொரில்லாப்போர் போன்று மறைந்திருந்து தாக்குதல், தான்தோன்றித் தனமான தாக்குதல் மற்றும் வரையரையற்ற தாக்குதல் ஆகியவற்றைக்கு அவ்விதிமுறைகளில் இடமில்லை என்பது மகிழ்வுக்குரிய செய்தியாகும். மேலும் தொல்காப்பியக் காலப் போர் முறைகள் வாழ்வியலோடு ஒத்திருந்தது. மன்னர்கள் தாங்கள் நினைத்த போதெல்லாம் போர் புரிதல் மரபன்று என்று கருதினர். கார், கூதிர், முற்பனி பிற்பனி, இளவேனில், முதுவேனில் என பருவங்கள் ஆறு வகைப்படும். அவற்றில் கூதிர் பருவமும் வேனிற் பருவமும் போர்க்குரிய பருவங்களாகக் கருதப்பட்டது. மன்னர்கள் போர் மீது கொண்ட வேட்கையால் பாசறை அமைத்து தங்கிப் போர் புரிந்தனர். இதனையே பொருளதிகார நூற்பா 75 பின்வருமாறு குறிப்பிடுகிறது:-

“கூதிர் வேனில் என்றுஇரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்

”போரின் காரணமாக ஆட்சிக் குழப்பமோ, பஞ்சமோ, மக்கள் மேற்கொள்ளும் தொழிலுக்கு இடையூறோ ஏற்படக்கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். எனவேதான் உழவுத்தொழில் செய்வோர் அறுவடை முடிந்து ஓய்வாக இருக்கும் கூதிர் மற்றும் வேனிற் காலங்களை போர் புரிவதற்கு ஏற்ற காலமாக தேர்ந்தெடுத்தனர்.; தொல்காப்பியத் தமிழ்ச் சமூகத்தின் காலமறிந்து போர் புரியும் பண்பாடு மிகவும் போற்றுதலுக்குரியதாகும். மேலும் வாகைத் திணையில் அமைந்துள்ள ‘ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கு’ என்ற துறையை இத்தருணத்தில் குறிப்பிடுவது சாலச்சிறந்ததாகும்.

*(பொருளதிகாரம் பாடல் 75) நாடு கைப்பற்றப்பட்ட பின்னர் பகை நாட்டினருடன் சினமின்றிச் சேர்ந்திருத்தலை அது குறிக்கின்றது. தொல்காப்பியம் சுட்டும் மனித நேய மாண்புதான் என்னே!.

தொல்காப்பியச் சமூகத்தில் திருமணச் சடங்குகள்

சடங்கு முறையில் ஒன்றாகக் கற்புத் திருமணத்தை தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளர். நூற்பா 140 பின்வருமாறு குறிப்பிடுகிறது:-

“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற்; கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே”

அதாவது “கற்பு மணம் என்று சொல்லப்படுவது, திருமணச் சடங்குடன் பெண்ணைக் கொள்ளுதற்கேற்ற தகுதியுடைய தலைவனுக்குத் தலைவியைக் கொடுப்பதற்கு உரிமையுடைய பெற்றோர் கொடுப் தலைவன் மணந்து கொள்வதாகும்” என்பதாகும் *(தொல்காப்பியம், இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், 2006 பக்கம் 245). நூற்பா 141 பின்வருமாறு குறிப்பிடுகிறது:-

“கொடுப்போர் இன்றியும் கரண முண்டே
புணர்ந்துடன் போகிற காலை யான”

அதாவது “தலைவியின் பெற்றோர்க்குத் தெரியாமல் தலைவன் தலைவியைத் தன்னூர்க்கு அழைத்துக் கொண்டு போய் வரும்போது பெண்ணைக் கொடுக்கும் பெற்றோர்கள் இல்லாமலே திருமணச் சடங்கு நடைபெறுவதும் உண்டு. இத்தகைய திருமணச் சடங்குகள் செய்யும் உரிமை தமிழ்க் குடியிலே பிறந்த அனைவருக்கும் உண்டு” என்பதாகும் *(மேலது, பக்கம் 246). நூற்பா 142 பின்வருமாறு குறிப்பிடுகிறது:-

“மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
கீழோர்க் காகிய காலமும் உண்டே”

அதாவது “மேலோராகிய அந்தணர், அரசர், வணிகர்களுக்கு என்று ஏற்பட்ட இந்தச் சடங்குகள் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட மற்ற தமிழர்களுக்கும் உரியன என்று ஏற்பட்ட காலமும் உண்டு” என்பதாகும் *(மேலது, பக்கம் 246)

திருமணத்திலே சில சடங்குகள் செய்யப்படவேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். தொல்காப்பியர் காலத்தில் சில திருமணச் சடங்கு முறைகளை மக்கள் செய்து வந்துள்ளனர் என்பதை மேற்குறித்த பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

திருமணச் சடங்குகளுக்கான சட்ட அங்கீகாரம்

மனிதனின் நடத்தை மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றை அனைத்து நிலைகளிலும் நெறிப்படுத்தும் காரணியாக விளங்கும் சட்டம் அவனது திருமண வாழ்விலும் தன் பங்கைச் செய்கிறது. மதச் சம்பிராதாயத்தைப் பின்பற்றி நடத்தும் திருமணங்களில் அச்சடங்குகளை மேற்கொள்ளவேண்டிய கடமையை சட்டங்கள் வலியுறுத்துகின்றன. உதாரணமாக, இந்தியாவில் இந்து திருமணச் சட்டம், 1955-ல் விதி 7 இந்து திருமணத்தில் சடங்குகளின் முக்கியத்துவத்தை அங்கீகாரம் செய்துள்ளது. அதில் மணமகன் அல்லது மணமகள் ஆகியோரது குல வழக்கத்தின்படி திருமணச் சடங்குகளை மேற்கொண்டு திருமணம் நடத்தப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு குலவழக்கத்தின்படி பின்பற்றப்படும் சடங்குகள் மற்றும் சம்பிராதாயங்களில் ‘சப்தபதி’ (அதாவது மணமக்கள் இருவரும் புனிதத் தீயை வலம் வந்து 7 காலடிகள் நடக்கும் சடங்கு) என்பது உள்ளடங்கியபோது இருவரும் நடந்து 7-வது காலடியை முடிக்கும்போது திருமணம் முடிந்து இருவரையும் கட்டுப்படுத்தும். இந்து திருமணச் சட்டத்தில் விதி 7-ல் திருத்தம் செய்யப்பட்டு 7-அ என்ற உபவிதி சேர்க்கப்பட்டு சுயமரியாதை அல்லது சீர்திருத்த திருமணங்களையும் சட்டம் அங்கீகரித்துள்ளது. சுயமரியாதை திருமணத்தில் மணமகன் மணமகளை

மனைவியாக ஏற்றுக்கொள்வதாகவும், மணமகள் மணமகனைக் கணவனாக ஏற்றுக்கொள்வதாகவும்; இரண்டு சாட்சிகள் முன்னிலையில் அறிவிப்பு செய்தல் அல்லது மணமகனும் மணமகளும் ஒருவரை ஒருவர் மாலை அணிவித்து அல்லது மோதிரம் அணிவித்து திருமணத்தை நிகழ்த்தலாம்.. மேலே கூறியது போல், பார்சி திருமணமும் சடங்குகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இந்தியாவில் பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், 1936-ல் விதி 3 திருமணச் சடங்குகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அதன்படி பார்சி திருமண முறையில் ‘ஆசீர்வாத்’ என்ற திருமணச் சடங்கை மதகுரு இரண்டு பார்சி சாட்சிகள் முன்னிலையில் நடத்தாவிட்டால் திருமணம் சட்டப்படி செல்லாது என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு

சட்டங்கள் மத சம்பிராதாயத்தைப் பின்பற்றி நடத்தப்படும் திருமணங்களில் திருமணச் சடங்குகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளன. சட்ட நூல்களுக்கு முன்னோடியாகத் தொல்காப்பியம் விளங்குகிறது என்று இத்தருணத்தில் சொல்வதில் தவறில்லை.

தொல்காப்பியத்தில் பொதிந்துள்ள சுற்றுச் சூழல் சட்டக் கோட்பாடுகள்.

நமது அரசியலமைப்புச் சட்டம், 1950-ன் விதி 48-அ சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது தொடர்பான அரசுக்கான வழிகாட்டு நெறிமுறைகளைக் குறிப்பதாகும். 1976 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் சட்டத் திருத்தம் மூலம் சேர்க்கப்பட்ட அந்த விதி பின்வருமாறு குறிப்பிடுகிறது: நாட்டின் சுற்றுச் சூழலை அரசு பாதுகாக்கவும் மேம்படுத்தவும் வேண்டும.; மற்றும் நாட்டின் வனங்கள் மற்றும் வன விலங்களைப் பாதுகாத்தல் வேண்டும். 1976 இல் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு திருத்தத்தின் மூலம் அடிப்படைக் கடமைகள் தொடர்பான விதி 51-அ அரசமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. அதில் ஏழாவதாகப் குறிப்பிடப்படும் கடமை பின்வருமாறு: இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரும் காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும், வாழும் உயிரினங்களிடத்தில் இரக்கம் காட்டவும் கடமைப்பட்டுள்ளார்கள். மேலும் இந்திய பாரளுமன்றத்தால் இயற்பட்ட சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம், 1986-ல் விதி 2-அ வின்படி சுற்றுச் சூழல் என்பதில் நீர், காற்று, நிலம் ஆகியவற்றுக்கு இடையேயும் நீர், காற்று, நிலம் ஆகியவற்றுக்கும், மனித இனம் மற்றும் இதர உயிரினங்கள், தாவரங்கள் இடையேயும் உள்ள உறவுமுறை ஆகியவை உள்ளடங்கும். அச்சட்டத்தின் விதி 3 இன் கீழ் மத்திய அரசு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் பெற்றுள்ளது.

குறிப்பாக, சூழலுக்கு மாசு ஏற்படுத்தக்கூடிய உற்பத்தி முறைகள் மற்றும் பொருட்களை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க இயலும். இயற்கையில் பிரிக்க முடியாத வண்ணம் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் போன்ற மூலக்கூறுகளால் இந்த உலகம் உருவாகியிருக்கிறது என்பதை

"நிலம் நீர் விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழா அமைத்
திரிவுஇல் சொல்லோடு தழாஅல்

என்று பொருளதிகார நூற்பா 635 இயம்புகிறது. தொல்காப்பியர் இந்த அண்டவியலை மூன்றாகப் பிரிக்கிறார். முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள். இவை மட்டுமல்லாமல் இதனைப் பலவகையாகப் பகுக்கின்றார். முதல் எனப்படுவது, முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் இதனை மேலும் வகைப்படுத்துகிறார்.; இதனையே,

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்பு ணர்ந்தோரே"

என்கிறது* (பொருளதிகாரம், நூற்பா 4) பொழுது, சிறுபொழுது பெரும்போழுது என்றார். சிறுபொழுதினை ஒரு நாளை கூறுபடுத்தியும். பெரும் பொழுதினை ஓர் ஆண்டினைக் கூறுபடுத்தியும் பகுத்துள்ளார். கருப்பொருள் என்ற பகுதியில் தாவரம், விலங்குகள், மனிதன், சூற்றுச்சூழல் அனைத்தும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மானிட உறவுகள், வாழ்க்கை நடைமுறைகள், மரபுகள், அவற்றின் பகுப்புக்கள் என விரிந்து செல்கிறது.

...14-

அவற்றுக்குள் இருக்கும் பலவகை அம்சங்களை வகைப்படுத்தலுக்கும் உள்ளாக்குகிறார். இயற்கையுடனான தொடர்போடு மனிதன் வாழும் சூழ்லியலை பொருளதிகார நூற்பா 20 பின்வருமாறு எடுத்துரைக்கிறது.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகை,
அவ்வகை பிறவும் கருவென மொழிப''

மனித வாழ்விற்குத் துணையாகவும் பகையாகவும் விளங்கக்கூடிய இவற்றை நோக்குவதன் மூலம் உயிரினங்களுடன் மனிதனுக்கு உண்டான தொடர்பான பண்டைய சூழ்லியலில் அறிவு புலப்படுகிறது. இயற்கையுடன் இயைந்து வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை ஒட்டி அமைந்த பாங்கினை திணை வழியே சுட்டுகிறார் தொல்காப்பியர். வாழ்க்கை நெறியாகிய ஒழுக்கம் வெளிப்பட உரிப்பொருளின் சிறப்பு நமக்கு புலனாகிறது. இத்தருணத்தில்

''*புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்*
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே''

என்ற தொல்காப்பிய நூற்பா 16 முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் ஒரறிவு உயிர் முதல் மனித உயிர் வரை பூமியில் அனைத்தும் வகைப்படுத்தும் பின்வரும் பொருளதிகார நூற்பா 571 மிகவும் போற்றுதலுக்குரிய சூழலியல் அறிவை வெளிப்படுத்துகிறது:-

''*ஒன்றறி வதுவே உற்றறி வதுவே*
இரண்டறி வதுவே அதனோடு நாவே
மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே
ஆறறி வதுவே அவற்றோடு மனனே''

தொல்காப்பியமும் தமிழ்க் குடிமகனின் வாழ்வுரிமைக் கோட்பாடும்

இந்திய அரசியலமைப்பு சட்டம், 1950 ஒவ்வொரு குடிமகனுக்கும் வாழ்வுரிமை வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ளது. அச்சட்டத்தின் விதி 21 உயிரையும் தனிப்பட்ட உரிமையையும் பாதுகாத்தல் தொடர்பாக இயம்புகிறது. அதன்படி சட்டத்தால் உருவாக்கப்பட்ட நடைமுறையிலன்றி, மற்றைய வகையில் ஒரு நபரின் உயிரையோ, தனிமனித சுதந்திரத்தையோ பறித்தல் கூடாது. மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம் *புத்ததேவ் கர்மாஸ்கர் எதிர் மேற்கு வங்க மாநில அரசு வழக்கில் (தீர்ப்பு சட்ட இதழ் சி.டி.ஜே. 2021 உ.நீ.ம தீர்ப்பு 1123-ல் வெளியிடப்பட்டுள்ளது). வாழ்வுரிமையில் சுயமரியாதையுடன் வாழும் உரிமை, அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் இருப்பிடம் ஆகியவற்றைப் பெறும் உரிமை ஆகியவையும் அடங்கும் என்று எடுத்துக்காட்டியள்ளது. சட்டக்கோட்பாடுகளில் கடமையும் உரிமையும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல் அமைந்துள்ளன. நிறைய சந்தர்ப்பங்களில் ஒரு குடிமகனின் உரிமை இன்னொரு குடிமகனின் அல்லது அரசாங்கத்தின் கடமையோடு தொடர்புடையதாக விளங்குகிறது. அரசியலமைப்பு சட்டம் ஒவ்வொரு குடிமகனுக்கும் வாழ்வுரிமையை உறுதியளித்துள்ளதால் அதனைக் காப்பாற்ற அரசாங்கம் கடமைப் பட்டுள்ளது. அந்த வகையில் குடிமகனின் உரிமைகள் நிறைவேற்றப்படுகின்றன. தொல்காப்பியக் காலத்தில் செங்கோல் ஆட்சி புரிந்த தமிழக மன்னர்கள் குடிமக்களின் தேவையை பூர்த்தி செய்தனர். மேலும் மக்களும் தேவைப்படுபவர்களுக்கு வேண்டிய பொருட்களையும் வசதிகளையும் அறம் செய்தல் என்ற வகையில வழங்கினர். இல்வாழ்க்கையைக் கூட 'இல்லறம்' என்ற அறவழியில் நடத்தியதால் அது சாத்தியமாயிற்று. தம்மை நாடி வருவோரை முக மலர்ச்சியுடன் வரவேற்று உண்டி முதலியவைகளை அளித்துப் பழகும் செயலே சிறந்த விருந்தோம்பல் பண்பாடாகும். இதைத்தான் 'விருந்து புறந்தருதல்' என மனைவிக்குரிய மாண்புகளில் ஒன்றாகக் குறிப்பிடுகிறது.

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் *(பொருளதிகார; நூற்பா 150) தொல்காப்பிய பொருளதிகாரப் பாடல் 74 பார்ப்பனர் முதல் பொருநர் ஈறாக அனைத்து சமூகத்தினரின் ஒழுக்க நிலையைத் தொகுத்துக் கூறுகிறது. அதன்படி பார்ப்பனர், அரசர் மற்றும் வணிகர் ஆகிய அனைவரும் ஈதலைக்

கடைப்பிடித்தனர். மேலும் வணிகரும் வேளாளரும் ஆநிரை காத்தல் செய்தனர் மேலும் வேளாளருக்குரிய ஒழுக்கமாக விருந்தோம்பல் கருதப்பட்டது. அவ்வகையில் வறியோர் மற்றும் வழிப்போக்கர் ஆகியோரின் உணவு மற்றும் இதர அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. அதுவன்றியும் தொல்காப்பியக்கால சமூதாய அறங்களில் ஆற்றுப்படுத்தல் என்ற ஒன்றினைத் தலையாயதாகச் சுட்டலாம் தான் வாழ்ந்தால் மட்டும் போதாது, பிறரும் வாழ வேண்டும், வாழ வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் விளைவாக "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கொள்கைக்கிணங்கத் தாம் பெற்ற பேறுகளைப் பிறருக்குத் கூறி அவர்களும் அப்பேறு பெறுமாறு வழிப்படுத்துவது இத்துறையின் இயல்பாகும். தொல்காப்பியம் இதனைக்

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"

*(தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 88) எனக் குறித்துள்ளது.

நீதி; பரிபாலனம்

தொல்காப்பியக் காலத்தில் நீதி வழங்குவதற்கு 'அவை' என்னும் அமைப்பு இருந்ததை பொருளதிகார நூற்;பா 75 'எட்டுவகை நுதலிய அவையத்தானும்' என்று சுட்டிக்காட்டுகிறது. இதற்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் எட்டுவகை அவை இருந்தன என்றும் அனைத்து வகை அவையங்களிலும் அவையத்தார் இருந்தனர் என்றும் இயம்புகிறார். எட்டு வகை அவையாவன:- குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்பதாகும் (தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணனார் உரை, சாராதா பதிப்பகம், 2006, பக்கம் 120). இவ்வுரைக்கு எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ள ஆசிரியமாலை புறத்திரட்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பேர் ஒழுக்கம் பூண்டு காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையின்
காத லின்பத்துள் தங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்காறு இன்மை அவாஅ இன்மைமென
இருபெரு நிதியமும் ஒருதாம்; ஈட்டும்
தோலா நாவின் மேலோர் பேரவை"

தொல்காப்பியக் காலத்தில் மன்னராட்சியில் அவையத்தாரின் மாண்புகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ள உயர் பண்புகள் இக்கால நீதிமன்ற நடுவர்களுக்கும் பொருந்துவது பெருமை மிக்கதாகும். இத்தருணத்தில் இக்கால நீதிமன்றங்களில் தொல்காப்பியத்தை மேற்கோள் காட்டி தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுவது நலம் பயக்கும். *வி.எஸ். சிவக்குமார் எதிர்; தமிழ்நாடு அரசு வழக்கு (தீர்ப்பு சட்ட இதழ் ச.pடி.ஜே. 2008 செ.உ.நீ. தீர்ப்பு 1654-ல் வெளியிடப்பட்டுள்ளது). சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட நீதிப் பேராணை மனுவாகும். இந்து கோவில்களில் வழக்கமாக சமஸ்கிருதத்தில் நடைபெறும் அர்ச்சனைகளுடன் கூடுதலாக பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழிலும் அர்ச்சனைக்கு

ஏற்பாடு செய்த இந்து அறநிலையத் துறையின் செயல்பாடுகள் இந்திய அரசமைப்புச் சட்ட விதி 25 உறுதியளித்துள்ள மதத்தைப் பின்பற்றும் உரிமையைப் பாதிப்பதாக மனுதாரர் வாதிட்டார். மனுவைத் தள்ளுபடி செய்த மேதகு சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பில் மேதகு உச்ச நீதிமன்றம் 2.4.1992-ல் நீதிப்பேராணை மனு 294/1974-ல் வழங்கிய உத்தரவைச் சுட்டிக்காட்டியது. அந்த உத்தரவில் அருட்தொண்டர்கள்; பயன்படுத்திய மொழியே இறைவனின் மொழியாகும். என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதாக சுட்டிக்காட்டியுள்ளது. அதனடிப்படையில் பக்தர்கள் விரும்பும் தமிழில் அர்ச்சனை

செய்வதற்கு தொல்காப்பியம் பச்சைக் கொடி காட்டியுள்ளது. எனவே இக்கால நீதிபரிபாலனத்திலும் தொல்காப்பியம் பங்கு பெற்றுள்ளது. மிகவும் இனிக்கும் செய்தியாகும்.

தொல்காப்பியக் கால ஆட்சிமுறையும் இன்றைய ஆட்சி முறையும்

தொல்காப்பியக் காலத்தில் மன்னர் ஆட்சி முறை அமுலில் இருந்தது. பொருளதிகார நூற்பா 74-ல் அனைத்து தரப்பு மக்களின் ஒழுக்கங்களைப் பற்றிக் கூறும்போது "ஐவகை மரபின் அரசர் பக்கமும்" என்று மன்னனைப் பற்றிக் கூறுகிறார் தொல்காப்பியர். அதாவது அரசரின் மேம்பாட்டுக்குரிய ஒழுக்கங்கள் ஐந்து என்பதாகும். ஈதல், குடிஓம்புதல் போன்றவை ஆட்சிமுறை தொடர்பானவை ஆகும் அதிலும் குடிஓம்புதல் என்பது மக்கள் நலம் சார்ந்த அறக்கோட்பாடு ஆகும். பாடாண் திணையில் அமைந்துள்ள நூற்பா 88-ம் இத்தருணத்தில் சுட்டிக்காட்ட வேண்டிய ஒன்றாகும். "நடைமிகுத்து ஏத்திய குடைநிழல் மரமும்" என்ற சொற்றொடர் அரசனின் குளிர்ந்த நிழல் தரும் நல்லாட்சியைச் சிறப்பிப்பதற்குக் காரணமாக அமைவது வெண்கொற்றக் குடை என்பதைக் குறிக்கும். மேற்குறித்த இரண்டு நூற்பாக்களும் அக்கால மன்னன் செங்கோலாட்சி செலுத்தி வந்ததை உறுதி செய்கின்றன. இன்றைய மக்களாட்சியை ஒப்பிடும் போது, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அத்தியாயம் 3-ல் அடிப்படை உரிமைகள் குடிமக்களுக்கு அரசால் உறுதியளிக்கப்பட்டுள்ளன. பிரிவு 14-ல் குறிப்பிடப்படும் சமத்துவ உரிமை மற்றும் பிரிவு 21-ல் குறிப்பிடப்படும் வாழ்வுரிமை மற்றும் தனிமனித சுதந்திர உரிமை ஆகியவை மிகவும் முக்கியமானவை. அரசியல் அமைப்புச் சட்டத்தில் அத்தியாயம் 4-ல் அரசுக்கான கொள்கை தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை விதி 38-ல் அரசு மக்கள் நலனுக்கான முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியுடன் கூடிய ஒரு ஒழுங்குநிலை உருவாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியல் சட்டப் பரிணாம வளர்ச்சியில் தொல்காப்பியக் கால முடியாட்சி முறை இக்காலக் குடியாட்சி முறையைவிடத் தாழ்ந்து விடவில்லை என்பது தெளிவாகிறது.

ஆட்சிமுறைச் சட்டக் கோட்பாட்டில் குடிமகனின் கடமையும் அடங்கும். தொல்காப்பியமும் அதன் அடிப்படையில் அமைந்த சங்க இலக்கியங்களும் தமிழ் குடிமக்களுக்கு வீரச்செயல்முறையில் நாட்டைக் காத்தல் ஒரு கடமைப் பண்பாக வலியுறுத்தியுள்ளன. தொல்காப்பிய புறத்திணைகளில் உ;ள்ள விரிவான போர் முறைகளை நன்கு ஆய்வுசெய்யுங்கால், போரிடுதல் ஒவ்வொரு தமிழ்க் குடிமகனின் வாழ்வில் ஒரு அங்கமாகவே இரு;ந்ததைக் குறிப்பால் உணரமுடிகிறது. பல்வேறு புறத்திணைகளில் போர் புரியும் முறைகள் விரிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன பகைவரை அழித்து ஒடுக்குவதற்குக் காரணமாக அமையும் வீர வாளினைப் புனிதநீராட்டி 'வாள் மங்கலம்' என்ற பெயரில் வழிபட்ட மறத்தமிழர்களைத் தொல்காப்பியம் அடையாளம் காட்டுகிறது *(பொருளதிகார நூற்பா 88 வரி 11). போர் வீரனின் கடமை உணர்வும் இத்தருணத்தில் உற்று நோக்கத்தக்கதாகும். பொருளதிகார நூற்பா 173 'எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்;' என்று செப்புகிறது. அதாவது போர் செய்து பகைவரை வெற்றி கொள்ளும் அரிய செயலுக்குரியது பாசறை ஆகும். நினைத்துப் பார்ப்பதற்கும் அரியதாய் விளங்கும் அப்பாசறையில் தலைவியோடு தங்கியிருக்கும் இயல்பு தலைவனுக்கு இல்லை என்பதாகும். மன்னர் ஆட்சியில் செழித்து விளங்கிய தமிழ்க் குடிமகனின் நாடு காக்கும் கடமை நமது மக்களாட்சியில் சுட்டிக்காட்டப் படுவதற்கு நீண்ட காலம் ஆகியது. நமது அரசியலமைப்பு சட்டத்தில் இந்திய குடிமகனின் கடமைகள்.

42-வது சட்டத்திருத்தம் மூலம் 1976-ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டு 03.01.1977 முதல் அமுலுக்கு வந்துள்ளன. அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 51-ஆவின் ஒரு கூறின்படி இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவரும் நாட்டைப் பாதுகாக்கவும், தேசப் பணியாற்றவும் அழைக்கும்பொழுது வந்து அவ்வாறு பணியாற்றுவதற்கும் கடமைப்பட்டவர்களாவார்கள். அதே சட்ட விதியின் இன்னொரு கூறின்படி இந்தியக் குடிமக்கள் 'தேசம் முன்னேற்றப் பாதையில் முனைந்து பல சாதனைகளை நிகழ்த்திடுகின்ற வகையில், துறைதோறும் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் சிறப்படைய முயற்சிக்கவும், தொண்டாற்றவும்

கடமைப்பட்டவர்களாவார்கள். மேற்படி சட்ட விதிகள் தொல்காப்பியச் சமூக விதிகளை ஒத்திருப்பது மகிழ்;வுக்குரிய செய்தியாகும். ஈண்டு பொருளதிகார நூற்பா 269-ஐ உற்று நோக்குவது நலம் பயக்கும். தலைவன், தலைவியர்க்கான ஒப்புமைக் குணங்களாக பின்வருபவனவற்றை அது குறிப்பிடுகிறது:- சிறந்த ஒழுக்கத்தை மேற்கொள்ளும் நல்ல குடும்பத்தைச் சார்ந்து இருத்தல், கடமையை ஆற்றும் முயற்சியுடமை, பிறரின் வருத்தத்தைக் கண்டு இரக்கம் காட்டுதல், நுண்ணுனர்வு ஆகியனவும் அதில் அடங்கும் தொல்காப்பியக்கால தமிழ்ச் சமூகத்தில் குடிமகனின் கடமைகளாக வலியுறுத்தப்பட்ட மேற்படி குணங்கள் அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ள இக்காலக் குடிமகனின் கடமைகளோடு ஒப்பிடுதல் நலம் பயக்கும். உயிரினங்கள் அனைத்துடன் பரிவுடன் நடந்து கொள்ளுவது, நமது கூட்டுக் கலாச்சாரத்தில் மிக உயர்ந்த பாரம்பரியத்தை மதித்தல், பாதுகாத்தல், மனித நேயத்தை வளர்த்தல், வன்முறையை விட்டொழித்தல் போன்ற கடமைகளை இத்தருணத்தில் நினைவு கூறலாம். தனிமரம் தோப்பு ஆவதில்லை எனினும், தோப்பு உருவாகுவதிற்கு தனிமரங்களின் பங்கு அவசியமாவது போல் ஒவ்வொரு தனிக் குடிமகனின் கடமைகள் சமூதாய வளர்ச்சிக்கு அவசியமாகிறது.

முடிவுரை

தொல்காப்பியத் தமிழரின் வாழ்க்கை முறையை இக்காலச் சட்டக் கோட்பாடுகளுடன் தொடர்பு படுத்தும் போது புலப்படும் வேறுபாடுகள் பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியின் இருவேறு நிலைகளைக் குறிக்கின்றன. ஆயினும் சில சட்ட முறைகளில் தொல்காப்பியப் பழக்க வழக்கங்கள் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளதைக் காண முடிகிறது. இத்தருணத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் பின்வரும் வைர வரிகளை சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்:- “இந்தக் கட்டுரை எழுதப்படும் 2018-இல் இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு 68 அகவையாகிறது. இந்த 68 ஆண்டுகளில் இந்திய அரசமைப்புச் சட்டம் 101 முறை திருத்தப்பட்டிருக்கிறது. ஆனால் 3000 ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட தொல்காப்பியரின் தமிழ்மொழிச் சட்டம் இன்றுவரை ஒரு திருத்தத்திற்கும் ஆளாகாமல் உயிர்ப்போடு இயங்கி வருகிறது. சட்டம் வகுத்த தொல்காப்பியருக்கும் அது பெருமை கட்டிக்காத்த தழிழர்களுக்கும் அது பெருமை.” அவ்வாறே நாம் அனைவரும் இச்சந்தர்ப்பத்தி;ல்; பெருமை கொள்ளலாம். *(தமிழாற்றுப்படை, வைரமுத்து, சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட், 2019, பக்கம் 24)

தொ.மா.க. 139

தொல்காப்பியர் காலத்துக்கு முன்னும் பின்னும் தமிழக மெய்யியல் நிலை

வாணிசிறி சிவபாதசுந்தரம்
தமிழ் ஆசிரியர்
கனடா-ஒன்ராரியோ
vanisry@hotmail.com

ஆய்வுச் சுருக்கம்

பழந் தமிழ் இலக்கியங்களில் தற்போது கிடைத்த இலக்கியங்களில் மிகவும் தொன்மையானது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு மேலான பழமை பெற்ற நூல் .இது தமிழ் இலக்கணங்களுக்கு மூல நூலாக இருப்பதுடன் தமிழ் மொழியின் ஐந்திலக்கண மரபையும் கொண்டுள்ளது. தொல்காப்பியம் மொழியின் இலக்கணத்தைக் கூறுவதுடன் ஆதித் தமிழரின் காதல்,வீரம்,வாழ்வியல் மற்றும் மெய்யியல் குறித்த தகவல்களும் பதிவு செய்யபட்டுள்ளது.

மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதற்காக தோற்றிவிக்கபட்ட இயக்கங்கள் தான் மதங்கள் ஆகும். இவ் மதங்கள் யாவும் மனிதனை நல்வழிப் படுத்தி வாழ்வில் அறத்தோடு வாழ வழி செய்கின்றது.இவ்வாறு மனிதனை நல்வழிப் படுத்த தோன்றிய மதங்கள் பல காலப்போக்கில் அழிந்து விட்டன. சில அழியும் நிலையில் இருக்கின்றன. இவற்றுள் சில மதங்கள் மட்டும் செழித்து வேர்விட்டு வளர்ந்து வருகின்றன.இவ்வாறு அழிந்த மதங்களுள் ஒன்று தான் ஆசீவகம். ஆசீவர்கள் தமிழகத்தை போல ஈழத்திலும் வாழ்ந்துள்ளார்கள் என, இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்) யாழ்பாணம் நீர்வேலியைச் சேர்ந்த முனைவர் ஜெகநாதன் அரங்கராஜ் என்பவர் ஆராய்ந்துள்ளார். ஆசிவகர்கள் தங்கியிருந்த கற்குகைகளில் தமிழ் எழுத்துக்கள் காணப்பட்டதாக ஆதாரங்கள் கிடைத்துள்ளது.இக் கல்வெட்டுக்கள் பொ ஊ.மு 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. புலால் உண்ணாமை, கொல்லாமை போன்ற நல்ல கருத்துக்களை பௌத்தம்,சைனம்,ஆசீவகமும் சேர்ந்து பரப்பின. தமிழரின் சமயம் என்பது தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளைக் கொண்ட ஒரு பாரம்பரிய சமய மற்றும் வாழ்வியல் முறையாகும். ஆகவே தமிழர்கள் இறை நம்பிக்கை கொண்டவர்களாக காணப்பட்டனர். சைவம், வைணவம், பௌத்தம், சமணம், ஆசீவகம் பேன்ற சமய மரபுகளைத் தமிழர்கள் பல்வேறு காலத்தில் பவவிதமன முறையில் கடைப்பிடித்துள்ளனர்.

ஐயனார், கண்ணகி, மதுரை வீரன் போன்ற வழிபாடுகளும் தமிழரிடம் இருந்தன. மேலும் சங்க காலத்தில் சிவன் கோயில்கள் புகார்,காஞ்சி,மதுரை போன்ற நகர்களிலில் இருந்தன என்பதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.ஆகவே தொல்காப்பியத்திற்கு முன்னும் பின்னும் தமிழரிடம் கடவுள் கொள்கைகள் இருந்துள்ளன என்பது நிருபனமாகின்றது.

முன்னுரை

பழந் தமிழ் இலக்கியங்களில் தற்போது கிடைக்கும் இலக்கியங்களில் மிகவும் தொன்மையானது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு மேலான பழமை பெற்ற நூல் இது. தொல்காப்பியமானது தமிழ் இலக்கணங்களுக்கு மூல நூலாக இருக்கின்றது. அத்துடன் தமிழ் மொழியின் ஐந்திலக்கண மரபையும் கொண்டது.எழுத்து சொல் மற்றும் மொழியின் இலக்கணத்தயும் கூறுவதுடன் ஆதித் தமிழரின் காதல் வீரம் வாழ்வியல் அத்துடன் **மெய்யியல்** குறித்த தகவல்களும் தொல்காப்பியதில் பதிவு செய்யபட்டுள்ளது.

இப் பண்பாட்டு பெட்டகமான தொல்காப்பியம் தமிழின் இலக்கணத்தை கூறுவதோடு மட்டுமல்லாது தமிழரின் இறைத் தன்மையையும் தொல்காப்பிய பொருளதிகாரத்தில் காணக் கூடியதாகவுள்ளது.மேலும் **சமய உணர்வையும் தமிழையும் பிரிக்க முடியாது** என்கின்ற பெரிய உண்மையை எடுத்துக் சொல்லும் நூல் தொல்காப்பியம். நூலின் செழுமையான ஆழம் அதன் பண்பாட்டு தகவல்கள் எல்லாவற்றையும் ஆராயும் போது இது பழங்கால தமிழரின் வாழ்வியலையும் வழிபாட்டு முறைகளையும் பறை சாற்றி நிற்கின்றது.

இனி பண்டைத் தமிழரின் வழிபாடு எவ்வாறு தோன்றியது என நோக்கும் போது, தமிழ் மொழியானது நீண்ட வரலாற்றையும் சமய பயன்பாடு மற்றும் அறிவியல் தன்மைகளயும் ஆதிகாலதில் இருந்தே கொண்டுள்ளதால் அது ஒரு மெய்யியல் கோட்பாடுகளை கொண்டதாக இருந்துள்ளது. இதைக் கொண்டு பார்த்தால் தமிழரின் உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டு விளங்கிய சமயம் ஆசீவகமாகும்.ஆசீவகத்தை பற்றிய செய்திகள் அதிக அளவில் தமிழில் கிடைக்க பெறுகின்றன. வேறெந்த மொழிகளிலும் கிடைக்ககாத கூடுதலான தகவல்கள் இதில் காணப்படுகின்றன.அதனால் ஆசீவகதில் உள்ள சமயக் கோட்பாடுகள் தொல்காப்பியர் காலத்திற்கு முந்தியது ஆகும். ஆகவே தொல்காப்பியர் காலத்திற்கு முன் சென்று இறைக் கோட்பாடுகளை ஆராய்வது சிறப்பாகும்.

மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்பதற்காகத் தோற்றிவிக்கபட்ட இயக்கங்கள் தான் மதங்கள் ஆகும். இவ் மதங்கள் யாவும் மனிதனை நல்வழிப் படுத்தி வாழ்வில் அறத்தோடு வாழ வழி செய்கின்றது.இவ்வாறு மனிதனை நல்வழிப்படுத்த தோன்றிய மதங்கள் பல காலப்போக்கில் அழிந்து விட்டன. சில அழியும் நிலையில் இருக்கின்றன. இவற்றுள் சில மதங்கள் மட்டும் செழித்து வேர்விட்டு வளர்ந்து வருகின்றன.இவ்வாறு அழிந்த மதங்களுள் ஒன்று தான் ஆசீவகம்.இவ் மதம் வட இந்தியாவில் தோன்றி தென்னிந்தியாவில் வளர்ந்தது, பின்பு வேறு சமயங்களின் வளர்ச்சியாலும் அரசியல் பின் புலன்கள் காரணத்தாலும் அழிந்துவிட்டன. மனிதனை மனிதனாக வளர்க இவ் மதம் நன்றே தன் பணி செய்துள்ளது.

வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும் போது .பொ ஊ.மு 6ஆம் நூற்றாண்டு தத்துவ எழுச்சிக் காலம் என்பார்கள்.இக் கால கட்டத்தில் தான் இந்தியாவில் அறிஞர்கள் பலர் தோன்றினர். அவர்கள் பல்வேறு பட்ட குழுக்களாகவும் பிரிந்து பணியாற்றத் தொடங்கினர். மனிதனின் துன்பத்தையும் ஏற்றத் தாழ்வுகளையும் கண்டே இந்திய ஞானிகள் தத்துவ தேடலில் ஈடுபட்டனர் என்று கூறினார் இந்திய தத்துவ ஞானி கி.லஷ்மணன்.(இந்திய தத்துவ ஞானம், சில சிறப்பியல்புகள்,ப 2).காலம் செல்ல சில மதங்கள் இயற்கைக்கு மாறான கதைகளும் புனைகதைகளும் வரலாற்று தகவல்களை கதைகளாக இட்டுக் கட்டி பரப்பினர். இக்காலத்தில் வைதீக மதம் கர்மா என்ற கோட்பாட்டை கொண்டுவந்தது.இவர்கள் **அவைதீகர்** ஆவார்கள் இவர்கள் வேதச் சடங்குகளையும் சாதிப் பகுப்பு தன்மையயும் எதிர்த்தார்கள், அதற்குப் பின் தான் மதங்களும் தத்துவ சிந்தனை குழுக்களும் உண்டாகியது.

ஆசீவகம் என்ற சமணம் தான் தமிழரின் ஆதிசமயம் ஆகும். இதுவே தமிழர்களின் ஆதி மதம் என்றும் இது பண்டைய இந்தியாவிற்குள் வந்த பிற சமயத்தவர்களால் அழிக்கபட்டது என வரலாறுகள் கூறுகின்றது.ஆசீவகத்தில் இருந்து பொ.ஊ.மு 6ஆம் நூற்றாண்டில் சைனமும், புத்தமும் தோன்றியது. இதில் பௌத்தம் என்பது கௌதம புத்தர் வழியாகவும் சைனம் என்பது மகாவீரர் வழியாகவும் ஒரே கால

கட்டத்தில் தோன்றியது ஆகும்.இன்று நாம் வழிபடும் ஐயனாரே ஆசீவக சமயத்தை தோற்றுவித்தவர் என சங்க கால இலக்கியங்களில் ஆதாரம் உள்ளன.இவ் ஆசீவகம் நம் பண்டைத் தமிழர்களின் அறிவுப் பெட்டகம் என்பதை அமெரிக்க இந்தியவியல் ஆராட்சியாளரான ஹென்ரிக் ராபர்ட் ஜிம்மர் கூறியுள்ளார்.

ஆசீவகம் நம் ஆதி தமிழரின் சமயமாக, சாதிகள் இல்லாத சமூகமாகவும்,கடவுள் வணக்கமற்ற, ஏற்றத் தாழ்வுகளற்ற சமூதாயத்தை உண்டாக்கக் கூடியதாக வளர்ந்தது.இதனால் மக்களால் பெரிதும் மதிக்கபட்ட சமயமாக இருந்தது.

இச் சமயத்தின் செல்வாக்கு உயர உயர பிற சமயத்தவருக்கு பொறுத்தருளும் தன்மை இல்லாமல் போய்விட்டது.அடக்குமுறைகள் படையெடுப்புகள் மூலம் ஆசீவகத்தையும்,சமணத்தையும் அழித்தனர். ஆசீவக கோவில்கள் யாவும் சிவ வைணவ கோவில்களாக மாற்றப்பட்டன. இன்று தமிழ் நாட்டில் உள்ள கோயில்கள் பல சிவன் கோயில்கள்,பெருமாள் கோயில்கள் அக் காலத்தில் கடவுளே இல்லாத கோயில்களாக இருந்துள்ளன என அறிய கூடியதாக உள்ளது.

ஆசீவர்களைப் பற்றி எந்தவித வரலாற்றுக் தகவல்களும் ஆசீவகர்களால் குறித்து வைக்கப்படவில்லை. இவர்கள் எப்போது தமிழகத்துக்கு வந்தார்கள் என்பதும் அறியமுடியவில்லை.ஆசீவர்கள் தமிழகத்தை போல ஈழத்திலும் வாழ்ந்துள்ளார்கள் என (**இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்**) **யாழ்பாணம் நீர்வேலியைச் சேர்ந்த முனைவர் ஜெகநாதன் அரங்கராஜ்** என்பவர் ஆராய்ந்துள்ளார்.இவர்கள் அசோகன் வாழ்ந்த காலத்திலும் அதாவது **பொ.ஊ.மு** 270 இல் தமிழகத்தில் மிகவும் பிரபல்யமாக இருந்திருகின்றார்கள்.உலகின் பல இடங்களுக்கு பௌத்த சீடர்கள் மதம் பரப்புவதற்கு சென்றுள்ளார்கள். இதனால் பௌத்தத்திற்கு எதிராக நிற்க முடியாமல் ஆசீவகம் நிலை தடுமாறியதுடன் பாதிக்கபடவும் செய்தது. ஒரு தலைக்கு இவ்வளவு பொன் என ஆசீவர்களின் தலை பேரம் போனதாக கூறப்படுகிறது. வேற்றின மத அழிப்பில் அசோகனால் 18,000 ஆசிவகர்கள் கொல்லபட்டுள்ளார்கள். சமணர் காலத்திலெயே ஆசீவர்கள் தமிழகத்தில் கால் பதித்துவிட்டனர்.

ஆசீவகர்களை அம்மணர் என்றும் சொல்வார்கள்.பின்பு அச் சொல் மருவி சிரமணர்,சமணர் என்று வழங்கியது.இவர்கள் குகைகளிலும் மலைகளிலும் வாழ பின்பு வந்த சைன துறவிகளால் முற்றுகையிடபட்டு அந்த இடங்களில் அருகரை வைத்து வழிபட்டனர். ஆசீவர்கள் சைனர்களின் கற்படுக்கைகளில் தங்கியதால் அவர்களையும் சமணர்கள் என்று அழைக்கபட்டனர்.

ஆசிவகர்கள் தங்கியிருந்த கற்குகைகளில் தமிழ் எழுத்துக்கள் காணப்பட்டதாக ஆதாரங்கள் கிடைத்துள்ளது.இக் கல்வெட்டுக்கள் பொ ஊ.மு 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. புலால் உண்ணாமை, கொல்லாமை போன்ற நல்ல கருத்துக்களை பௌத்தம்,சைனம், ஆசீவகமும் பரப்பின. இது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.இதனால் இச் சமயங்களிடையே சமய போர் உண்டாகியது எனலாம்.

பொ ஊ பி 7ஆம் நூற்றாண்டிற்கு பின்பு ஆசீவகம் இல்லாமல் போய்விட்டது.ஆனால் அதன் வேர்கள் தமிழ் நாட்டில் ஊன்றத் தொடங்கின. ஆசீவகம் வழக்கொழிய மற்றய சமயங்கள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டன. வேதம் அழியும் நிலையில் சென்றதால் பௌத்தத்தையும் சைனத்தையும் தூற்றியது வேதம்.புனை கதைகளை கட்டி தம் மதம் வளர்தனர்.ஆசீவக கடவுளரை எல்லைப்புற கடவுளாக்கி விட்டனர். இவர்களெடுத்த முயற்சிகள் யாவும் வீணாகியது ஏனெனில் ஆசீவக கோட்பாடுகள் யாவும் தமிழரின் மனதில் நன்றாகவே பதிந்து விட்டது. இதனால் வேதம் ஆசீவகத்தை ஏற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.அதனால் கொல்லமையை ஏற்றது.ஆசிவக் கொள்கைகளையும் எற்றுக்கொண்டது.

பொ.ஊ.பி 2 ஆம் நூற்றாண்டில் இந்துமத எழுச்சிக்கு பின் அழிந்த சமயம் பொ.ஊ.பி 7 ஆம் நூற்றாண்டு தொடக்கம் பொ.ஊ.பி 14ஆம் நூற்றாண்டுவரை தனித்து இயங்கியது.அவர்களின் கோட்பாடுகளும் பரவத் தொடங்கின.தமிழர்களிடயே கடவுட் கோட்பாடுகளும் துளிர்த்தன.

ஆசீவர்களின் கோட்பாடுகள்

ஆசீவர்களின் துறவு வாழ்க்கை மிகவும் சிரமமானது பயிற்சிகளைக் கொண்டது.அதாவது ஆடையின்றி இருக்க வேண்டும், அதே சமயம் வேறு சமயத்தவர்கள் கண்களில் படாமல் ஒடி ஒளியும் தன்மையும் காணப்பட்டது.அத்துடன் காடுகளில் தங்குவது பருவ காலங்களில் குளிரைப் பொருட்டாக எடுக்காமல் தவத்தில் இருப்பது,வெளவால் போல் மரங்களில் தொங்கி பயிற்சி செய்வது,முற்படுக்கையில் படுத்தல், ஐந்து வகை தீயின் நடுவில் தவம் செய்தல்,தாழியில் இருந்து தவம் செய்தல் போன்றவையாகும். ஆசீவர்கள் பலர் தங்களுடைய வாழ்வை தவத்தில் கழித்துக் கொள்வார்கள். இறப்பதற்கு முன்பு நான்கு இறுதிப் பானங்களையும் நான்கு உப பானங்களையும் குடிப்பார்கள்.பின்பு எட்டு வகையான இறுதி நிகழ்வுகளையும் நடத்துவர் என அறிய முடிகிறது.

சைனர்களின் நூலாகிய பகவதி சூத்திரதில் ஆசீவக திசை போக்கர்களால் கூறப்பட்ட எட்டு வகையான நிமித்தங்கள் கூறப்பட்டுள்ளன.அத்தோடு மக்கா என்னும் இரண்டு உறுதிப் பொருட்களும் சேர்த்து பத்து உறுப்புகளாக உள்ளது. ஆனால் அபயதேவன் என்பவர் தன்னுடைய நூலில் நிமித்தங்கள் எட்டு எனக் கூறியுள்ளார்.அவையாவன, **இறைமை**, **சகுனம்**, **வான்**, **நிலம்**, **உடல்**, **ஓசை** , **பண்பு**, **சுவை**, என்பவையாகும்.இவற்றைப் பார்க்கும் போது எனக்கு வள்ளுவரின் திருக்குறள் நினைவு வருகின்றது.

சுவை,ஒளி,உறு,ஓசை,நாற்றம் என்றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

அதாவது,சுவையும்,ஒளியும்,உறும்,ஓசையும்,நாற்றமும் என்று கூறப்படுகின்ற ஐந்தினது கூறுபாடும் ஆராய்வான் அறிவின் கண்ணதே உலகம் ஆகும்.ஆகவே ஐந்துடன் முதல் நிலம் பொழுதும் இறையும் சேர்ந்து இவ் வெட்டும் என்று கூறலாம் என்பர் அறிஞர். இவ்வாறு முதலும்,கருவும் இன்று வழக்கத்திலுள்ள ஞானேந்திரியமும் இந்த நிமித்தங்களுடன் பொருந்துகின்றன.

சைனத் துறவியான காலகர் இந்த 8 மகா நிமித்தங்களையும் ஆசிவகர்களிடமிருந்த கற்றவர்களாக கூறப்படுகின்றது.(அபய தேவன் பட்டியல்)இதில் இருந்து பெரும்பாலான ஆசிவர்கள் கணியர்களாகவும் வானியல் தெரிந்தவர்களாகவும் இருந்துள்ளனர் என முனைவர் பாசாம் கூறியுள்ளார்.

ஆசீவகம் பல புனித நூல்களைக் கொண்டதென தமிழ்ச் சங்க நூல்கள் உறிதிப் படுத்தியுள்ளன.மேலும் அபயதேவன் குறிப்பில் கனவை பற்றி விளக்கியுள்ளார்.கனவு என்பதற்கு அவரின் விளக்கமானது தன்னைக் கடந்த நிலையாகும் எனவும் ஆழ்ந்த நிலையிலேயே கனவு வரும் எனவும் அழ்ந்த நிலையில் ஞானேந்திரியம் இயங்காது என கபிலரும் சாங்கிய காரிகயில் கூறியுள்ளார்.சைனர்களுக்கு முன்பே பல புனித நூற்களை ஆசிவகம் கொண்டுள்ளதை அறிய முடிகின்றது.இதற்கு கூடுதல் சான்றாக மணிமேகலையயும் நீலகேசியையும் பார்கலாம்.ஆசிவகத்தில் அணு அமைப்பு, ஆசிவர்களின் உறுதிப்பொருள்கள் பற்றியும் கூறுகின்றது.

ஆசீவர்களின் ஊழ்கோட்பாடு

ஆசீவகத்தின் முதன்மையான கோட்பாடு ஊழ் கோட்பாடாகும்.இதனை நாம் விதி என்று சொல்லுவோம். ஊழ் என்பதற்கு ஆசீவகம் கூறும்பொருள் இயற்கை நிகழ்வு என்பதே. அணுக்களின் புணர்வினாலும், பிரிவினாலும்(காலம், கருவி போன்றவற்றின் துணையினால்) ஏற்படும் இயற்கை மாற்றத்தையே இந்த ஊழ் எனும் சொல் குறிக்கும். நல் ஊழ் மற்றும் தீ ஊழ் என்ற பாகுபாடு இல்லை.இந்த விதிக் கோட்பாட்டை சைன,பௌத்த மதங்களில் இல்லை.ஊழ் என்பதற்கு ஆசீவகம் கூறும் பொருள் இயற்கை நிகழ்வு என்பதாகும்.அணுக்களின் புணர்வினாலும் பிரிவினாலும் ஏற்படும் இயற்கை மாற்றத்தையே இந்த ஊழ் குறிக்கின்றது. இந்த ஊழின் தாக்கத்தால் மனிதர்களின் வாழ்வில் தாக்கங்கள் ஏற்படும்.அத் தாக்கங்கள் மிகவும் பெரியதாக இருக்கும்.இதை விதி என்றும் தமிழர் கூறுவார்கள். மனிதன் வசதி

வாய்ப்புகளோடும் சமூதாயத்தில் நல்ல செல்வாக்காகவும் அல்லது மிகக் துன்பமான வாழ்வும், கோழைத் தன்மை நிரம்பியவராகவும், வலிமை இல்லதவராகவும் இருப்பதற்கு காரணம் விதியின் தாக்கம் ஆகும்.இதையே ஆசீவகமும் கூறுகின்றது. இல்லாதது தோன்றாது, உள்ளது இல்லாமல் போகாது,நாம் எவ்வளவு தான் முயன்றாலும் இல்லாததை உண்டாக்க முடியாது, அதே போல் உள்ளதை அழிக்கவும் முடியாது இவாறான கோட்பாடுகளை ஆசிவகம் எடுத்துக் கூறுகின்றது.

மற்கலி கர்மா மீது நம்பிக்கை இல்லாதவர். உயிரானது 8,40,00,000 கல்ப ஆண்டுகள் பிறக்கும், இது இயற்கையாக நடக்கும் விடயத்திற்கு அப்பாற்பட்டது ஏனென்றால் உயிர் மீண்டும் பிறக்காது என்பது ஆசிவர்களின் நம்பிக்கை.

மேலும் எதுவும் இயற்கை தன் விருப்பப்படி ஒன்றும் செய்யாது. இக் கோட்பாடனது அகரியவாதம் என்பர் ஆசீவகர். இதன் கருத்து யாதெனில் ஒரு உயிருக்கு கேடும், நன்மையும் அடுத்தவர்களால் ஏற்படுவது இல்லை என்பதாகும்.ஆகவே கேடும் நன்மையும் தற்செயலாக நடைபெறுவது ஆகும்.

ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு இயல்பு கொண்டுள்ளனர். இந்த பண்புகள் யாவும் அவரவர் இயல்புகளுக்கு ஏற்ப நிகழ்வுகள் நடக்கும் என்பது ஆசீவர்களின் கோட்பாடு.உதாரணமாக குதிரை மிக வேகமாக ஓடும் தன்மை கொண்டது.அதற்காக எல்லா நேரங்களிலும் ஓடுவதில்லை.அதேபோல் எருமையால் வேகமாக ஓட முடியாது ஏனெனில், அதனது இயல்பான குணம் வேகமாக ஓட முடியாது. அவ்வாறே பொருட்கள் யாவும் அதனதன் இயல்புகளால் செயற்படும்.அவ்வாறே முள் மிகவும் கூர்மையானது அதன் இயல்பு குத்தும் தன்மையைக் கொண்டது அதுபோலவே குதிரையும் அதன் வேகமும் காணப்படும். அதாவது குதிரையானது தேவைப்படும் போது மட்டும் அது தன் வேகத்தைக் காட்டும் அவ்வாறே ஒரு மனிதனின் இயல்பான குணமானது தேவைப்படும் போது அவன் அழுவான் அதற்காக எப்பொழுதும் அழுவதில்லை. இவ்வாறே சிலப்பதிகாரத்தில் கோவலனின் நிலையும் ஆகும். அதாவது ஒருவரின் இயல்பானது ஊழின் வழிதான் நடைபெறும் என ஆசீவகம் கூறுகிறது.

ஆசீவகர்களின் கோட்பாட்டின் படி, எல்லாப் பொருள்களும் ஐந்து வகை அணுக்களாலானவை என்று கூறுகின்றது.நிலம், நீர், தீ, காற்று, உயிர் என்ற ஐந்து அணுக்களும் ஒவ்வொரு பொருளின் உருவாக்கத்திலும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் ஒன்று சேரும் பின் தேவைப்படும் போது பிரிந்து விடும். ஆகவே எல்லாப் பொருட்களிலும் உயிர் அணு தவிர்ந்த ஏனைய அணுக்கள் எல்லாம் இடம் பெற்றிருக்க வேண்டும். இந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து ஒருபொருளை உருவாக்கும் போது உருவாகும் பொருளின் தன்மைக்கு ஏற்ப நான்கு, மூன்று, இரண்டு,ஒன்று என்ற வகையில் இடம் பெறும் . இந்த அணுக்களை ஒன்று சேர்ப்பதில் உயிர் அணு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்த அணுக்களுக்குக் குறிப்பிட்ட சிறப்புத்தன்மை, செயல்பாடு, என்ற இரண்டும் உள்ளன.அவற்றையே சீர், பால் எனப் பிற்கால இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

சதுவா நியதங்கள்

ஆசீவகர்கள் இவ் பூமியில் உயிர்கள் தோன்றுவதுமில்லை அழிவதுமில்லை என்பதில் அழிக்கமுடியாத நம்பிக்கை கொண்டவர்களாக காணப்பட்டனர். மேலும் இவர்கள் இருப்பது கெடுவதும் இல்லை இல்லாதது தோன்றுவதும் இல்லை என்பதில் ஆணித்தரமாக நம்பும் தன்மையை கொண்டவர்களாக காணப்பட்டனர்.இவர்களின் ஊழ்கொள்கையை சதுவா நியதங்கள் என்கின்ற கோட்பாடு காணப்படுகிறது.

அவையாவன கர்மாவின் படி எது நடக்கவேண்டுமோ அது யார் தடுத்தாலும் நடந்தே தீரும். எப்படி எமக்கு எழுதியுள்ளதோ அது நடந்தே தீரும் என்பதும், எந்த அளவு நடக்க வேண்டுமோ அந்த அளவுதான் நடக்கும் என்பதும் இவ்வளவு கால எல்லைக்குள் நடக்க இருப்பது அக் கால எல்லைக்குள் நடக்கும் என்பதை, ஆசீவர்கள் நான்காக வகுத்துள்ளார்கள் அவற்றை ஆசீவர்கள் சதுவா நியதங்கள் என்பார்கள்.இந்த நான்கு வகையான கோட்பாடுகளையும் நாம் நீலகேசியில் காணலாம்.

1. **ஆவது ஆகும்**-ஒரு பெண்ணை அரிவைப் பருவத்தையுடைய பெண் ஆவது ஆம் என்கிற நியதியாகும்.
2. **ஆகும் அளவு ஆகும்**_ அப் பெண் குழந்தை நன்றாக பேணி வளர்க்கபடும் போது அது கட்டாயம் அரிவை பருவத்தை அடையும்.
3. **ஆம் காலத் தாம்**- அக் குழந்தை இவ்வளவு தான் வளரும் என்பது அதன் நியதி. ஆகவே அவ் அரிவைப் பருவ வளர்சியை அது கட்டாயம் அடையும்.
4. **ஆகும் பொழுது ஆகும்**- எது எந்த நேரத்தில் நடக்க வேண்டுமோ அந்த நேரத்தில் தான் நடக்கும் ஆகவே அப் பெண் குழந்தையானது அரிவைப் பருவத்தை கட்டாயம் அடைந்தே தீரும்.

இவ் வகையான கோட்பாடுகள் யாவும் தமிழரின் எண்ணக் கருவில் உதித்த கோட்பாடுகளாகும்.இக் கோட்பாடுகள் யாவும் இன்றளவும் நம் மத்தியில் இருக்கின்றது.இந்த கோட்பாடுகள் யாவும் பொ.ஊ.மு 6ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் பேசப்பட்டுள்ளது.

ஆறு தவிர்க்க முடியாதவை

ஆசீவர்களின் கோட்பாடுகளில் ஆறுவகையான கோட்பாடுகள் மிகவும் முக்கியமாக கடைப் பிடிக்கபடுகிறது.அவையாவன **பேறு**, **இடையூறு**, **இழப்பு**, **உறுமிடத்தய்துதல்**,**து க்கமுறுதல்**, **அவற்றின் நீக்கம்**, **பிறப்பு**, **இறப்பு** ஆகினவாகும். இதிலிருந்து ஆசீவகர்கள் கூறுவது என்னவெனில் இவைகள் யாவும் முற்கூட்டியே தீர்மானிக்கபட்டவை ஆதலால் இவற்றிலிருந்து நாம் தப்பிக்க முடியாது என்பதாகும்.

ஊழ் என்கின்ற சொல்லானது ஆசிவர்களினது நியதிக் கொள்கைகளை விளக்குகின்றது. ஆனால் இச் சொல்லானது தமிழ் இலக்கியங்களில் தமிழ் அறிஞர்களால் உபயோகிக்கப் பட்டிருக்கின்றது. ஊழ் என்பதும் வினை என்பதும் இன்றய காலகட்டதில் ஒரு பொருளை கொண்டதாக விளங்கினாலும், ஆரம்ப கால கட்டத்தில் வேறு வேறு கொள்கைகளைக் கொண்டதாக இருந்திருக்கின்றது.

இக் கருத்துக்கள் யாவும் ஆரம்ப கால தமிழ் நாட்டு மக்களிடையே இருந்துள்ளது.அக் கால மக்கள் **மனிதனை விட ஏதொ ஒரு இயக்கம் இருந்துள்ளது எனவும் அதுதான் எம்மை இயக்கிக் கொண்டிருக்கின்றது எனவும் நம்பினர்**.அதை ஊழ் எனவும் வினைப் பயன், தெய்வம் என்று வகுத்துக் கொண்டனர்.இதை விதி என்றும் கூறினர். இன்றைக்கும் நாம் இவ் விதிப் பயனையும் ஊழ் வினையையும் ஏதோ ஒரு இயக்கம் எம்மை இயக்கிவிக்கின்றது என உணர்கின்றோம். இக் கோட்பாடு எண்ணங்கள் தான் ஆசீவர்களால் பரப்பப்பட்டு இன்றளவும் எம்மிடயே உள்ளது.

ஊழ் என்பதை தலைவிதி என்றும் பரவலாக புரிந்து கொள்ளப்படுகிறது. ஒருவர் பிறக்கும் போதே தலையில் எழுதப்பட்ட விதி என்று பொதுவாகக் எண்ணப்படுகிறது.வள்ளுவர் கூட இதனை '**வகுத்தான் வகுத்த வகை**' என்று கூறியுள்ளார். இவ்வாறே ஆசீவகர்களிடம் இருந்து ஊழ் கோட்பாடுகள் யாவும் மக்களிடையே பரவியது.

மேலும் பௌத்தர்கள் சைனர்களின் கொள்கைகளானது மனிதனின் அனுபவங்கள் யாவும் அவனது வினையின் பயனே ஆகும் என்பர். நெல்லு விதைத்தவன் அறுவடை செய்வான் என்பதும் அவனவன் செய்ததிற் கேற்ப பலாபலன் கிடைக்கும் எனவும் நல்லதும் கெட்டதும் அவரவர் விதிப்படி நடக்கும் என்பதும் இவர்களின் கோட்பாடாகும் இதை சைனர்கள் மாத்திரம் அல்லது இந்துக்களும் நம்புவர்.

வினையைப் பற்றி இவ் மூன்று சமயங்களும் கருத்தால் வேறுபட்டாலும், உலகத்தில் நடைபெறும் விடயங்கள் யாவும் ஊழ்ளின் படியே நடக்கின்றது என நம்பினர்.

ஆசீவத்தின் குறியீடு

யானை, வெள்ளை யானை என்பது ஆசீவகத்தின் மிக உயரிய குறியீடு. அந்த யானை தான் முருகனின், ஐயப்பனின், இந்திரனின் வாகனமாக காட்டியிருப்பார்கள். இவர்கள் அனைவரும் ஆசீவக சித்தர்கள்.

ஆசீவகச் சின்னங்களுள் மிக அதிகமாக அறியபடும் முத்திரை இந்த திருநிலை. இரண்டு பக்கமும் நீரூற்றும் யானைகளுக்கிடையில் பூ மீது அமர்ந்திருக்கும் பெண்ணுருவமே திருநிலையின் வடிவமாகும். இச் சின்னமே ஆசீவகர்களின் வீடுகளில் முற்புறம் அமைந்திருக்கும்.இன்றும் தமிழர் விழாக்களில் இவ் யானைச் சின்னம் இடம்பெறுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.இதனை கயலச்சுமி என்பர்.

தழிழர் மத்தியில் திருமண வீடுகளில் மங்கலமான பொருள் தாலியாகும். இத் தாலியில் பொருத்தபட்டிருக்கும் காசுகளில் ஒரு பக்கம் இந்த சின்னம் பொறிக்கபடிருக்கும். இது ஒன்றே போதுமானது நாம் தமிழர் அனைவரும் ஆசீவக மரபில் வந்தவர்கள் என்பதற்கு ஆதாரமாகும்.

மேலும் கோயில்களில் தேர்த்திருவிழாவின் போது சிலைகளின் பின்புறத்தில் மரத்தாலான ஒரு வளைவு சிற்ப வேலைபாடுகளுடன் அமைத்திருப்பார்கள்.அதை **பிரபை** என்ற வேற்று மொழிச் சொல்லாக அழைப்பர். அந்த வளைவில் இரண்டு பக்கமும் யானைகள் தும்பிக்கையை உயர்த்திக் கொண்டிருக்கும். இதுவும் ஆசீவகத்தோடு நமது மரபை காட்டி நிற்கின்றது.

அத்துடன் யானை முருகன்,ஐயப்பன்,இந்திரனின் வாகனமாக கொள்வார்கள்.இவர்கள் அனைவரும் ஆசீவக சித்தர்களாகும்.இங்கு கூறப்படும் இந்திரன் இலகிம சித்தி உள்ளிட்ட ஐந்திர சித்தியில் தேர்ந்தவர். இதன் காரணமாக இவரின் பெயர் ஐந்திரசித்தன் -இந்திரசித்தன் என்ற இலங்காபுரி இராவணன் மகன் ஆவார். இவர் சக்கரத்தின் துணைக்கொண்டு கருவிகள் பல படைத்ததால் அது எண் திறம் என்று அழைக்கப்பட்டு இயந்திரமாகியது.இந்த ஐய நிலை , ஐயன் போன்ற சொல் மூலத்திலிருந்து தான் ஐயர், ஐயங்கார் போன்ற சொற்கள் எல்லாம் பிற்காலத்தில் தோன்றின.

ஆசீவகம் கூறும் முதல் இரண்டு ஐயனார்களான ஆதிநாதர் சிவனும், பார்சுவ நாதரான திருமாலும் தான் இவ் சைவ வைணவ சமயங்களின் தெய்வங்களாகும்.பார்சுவ நாதரின் கொள்கைகள் வானியல் கோட்பாடு அவர் தான் முதன் முதலில் கோள்களின் நகர்தலை திறம்பட கணித்தார் அவர் வரைந்த கோள்களின் நகர்தல் பற்றிய வரைபடம் தான் சக்கரமாக காட்சிப் படுத்தியிருக்கிறார்கள், நிலாக்கல்லில் படுத்து விடிய விடிய விண் ஆய்வை மேற்கொள்வார் காலையில் அயர்ந்து உறங்கிப்போவார் அவரது சீடர்கள்,பிள்ளைகள் பாடி எழுப்புவார்கள் அதுவே இன்று சுப்ரபாதமானது,பனியால் ஏற்பட்ட கபம் தீர தைலக்காப்பு செய்வார்கள், துளசி நீர் தருவார்கள் இவையெல்லாம் இன்றும் பெருமாள் கோயில்களில் காணலாம். இந்த சித்தர் தான் கோள்களின் தூரத்தை அளவீடுகளை கணக்கிட்டு சொன்னார், இதனால் தான் வைணவ கோயில்களை விண்ணகரம் என்கிறோம், திருமாலின் வாகனமாக கழுகை காட்டுகிறோம், அண்டத்தின் இந்த கணக்கீடுகளை தந்ததால் தான் அவர் உலகளந்த பெருமாள் ஆனார். அதனால் தான் அவர், திருவரங்கத்தில் விண்ணாய்வு செய்யும் நிலையில் காணப்படுகிறார். இந்த 108 என்ற எண்ணின் சிறப்பும் இதுவே. இந்த அண்டத்தின் கணக்கீடுகள் 108 இல் அடக்கம் என்பதால் தான் அவருக்கு 108 திவ்ய தேசங்கள் ஆகும்.

ஆசீவர்களின் வீடுகளில் காணும் பிரதான சின்னமாக இருபுற முத்தலைக் கோல் காணப்படுகின்றது. இச் சின்னமானது வீட்டுவாசலில் இரண்டு பக்கமும் வரையபடும். இந்த முத்திரை ஒவ்வொரு வருடமும் புதிப்பிக்கபடும். இது போகிப் பண்டிகையையன்று தமிழ் மக்கள் வெள்ளையடிக்கபட்ட சுவரில் வரைவர்.இக் குறியீட்டின் மேல் முனையிலுள்ள **யகர** வடிவம் உயிர் ஓம்பலை குறிக்கும். இக் குறியீடு தண்டிக்கும் கருவியாக இருந்திருக்கிறது.

முல்லை நில மக்கள் தங்கள் பசுக் கூட்டங்களைக் காப்பற்றுவதற்காக இக் கருவியை பயன்படுத்தினர். அக் கால கட்டத்தில் காட்டில் வாழ்ந்த மனிதன் தன்னை கொல்ல வரும் மிருகங்களை கொல்லுவதற்கு பயன்படுத்தினர் என அறிய முடிகிறது.இக் கோலை சிவப்பு நிறத்தில் நிறம் தீட்டபட்டிருக்கும் பகைவரைக் கொல்லும் அடையாளமாக.இ குறியீடு மாலவன் வழிபாட்டின் நாமமாக போற்றப்படுகின்றது.இதில் மேல் நோக்கிய முனை சிவன் வழிபாட்டிலும் கீழ் நோக்கிய முனை கொற்றவை வழிபாட்டில் கொற்றவையின் முத்தலைக் கோலாகவும் காணப்படுகிறது. இருபக்க முத்தலைக் கோலின் மேல்புறம் சிவனுக்கும்,கீழ்புறம் கொற்றவை வழிபாட்டின் வளர்ச்சி பெற்று காளி,சக்தி என்று வழங்கபட்ட பெண் தெய்வங்களுக்கு பகிரப்பட்டது என அறியமுடிகிறது.

வீடுபேறு

உயிர்கள், ஒரு தனி அணுவை - அறிந்து கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவை. இவற்றையே தெய்வக் கண்ணுடைய உயிர்களெனவும் கூறுவர். இத்தகைய நல்லுயிர்கள் தம் தகுதிக்கேற்ப இருவகை வீடுபேற்றை எய்துவதாக ஆசீவகர்கள் கூறுவர்.ஆசீவர்கள் வீடுபேற்றை இரண்டாக வகுப்பர்.அதில் அவர்கள் உயிரானது 84 இலட்சம் மகாகல்ப ஆண்டுகள் மீண்டும் மீண்டும் பிறந்து வீடுபேற்றை அடைவர் என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள்.இவர்கள் இறந்தவர்களை தாழியிற் கவிழ்த்தல் என்ற முறையில் நிலத்தில் புதைப்பர். இதை மணிமேகலை எரித்தல், புதைதல் ஆகிய வழக்கங்களுடன் **தாழியில் கவிழ்த்தல் போன்றவற்றையும் கூறுகின்றது.இத் தகவல்களை இன்றும் கோடுமணல், ஆதிச்சநல்லூர் போன்ற பண்டைய தொல்போருளாராட்சியில் காணக்கிடைகின்றது**.இலங்கையிலும் ஆசீவர்கள் தாழியிற் இடும் வழக்கத்தை கொண்டிருந்தனர். பௌத்த மத பரவலுக்கு பின்பு ஐயனார் வழிபாட்டிலும் இன்றும் தாழியில் தீபம் ஏற்றி மறைவாக வணங்கும் தன்மையை பண்டைத் தமிழரின் எச்சமேயாகும்.இன்று காணப்படும் ஐயனாரை வணங்கும் முறையை நம்மவர்கள் நாட்டுபுற வழிபாடுக்குள் அடக்கிவிட்டனர். ஆனால் ஆசீவகத்தின் தன்மைகள் இல்லாத சமயங்களே இல்லை என்பது திண்ணம். ஆசீவகம் என்பது பழங்காலத்தில் இருந்த வாழ்வியல் முறை அதை கொண்டு தான் சைவமும் வைணவமும் சமயங்களாக தோற்று விக்கப்படுகின்றன.ஆசீவகர்கள், குகைகளில் பாழிகளில் தான் தங்கியிருந்தனர். ஒவ்வொரு சதுர்த்தி,சதுர்த்தசி நாளில் மலையில் இருந்து கீழே இறங்கி வந்து அரச ஆல மரத்தடியின் கீழ்ழிருந்து மக்கள் குறைகளுக்கு தீர்வு செல்வார்கள் இவர்களின் குறியீடான யானை தான் அரசமரத்தடி பிள்ளையார் ஆனார், சதுர்த்தி நாள் சங்கட சதுர்த்தி வழிபாடு ஆனது. இவர்கள் நடத்திய பாழிகள் (படுக்கைகள்) தான் இன்று கல்விச்சாலைகளை நாம் பள்ளிகள் என அழைகின்றோம்

.ஆசீவகம் பற்றி நாம் அறிந்தால் இன்று காணப்படும் சமயங்களின் மூலம் எது என்றும்

தெரிந்துக்கொள்ள முடியும். ஆசீவகம் எதையெல்லாம் தனது தெய்வங்கள் என காட்டியதோ அவை யாவும் சைவத்திலும் வைணவத்திலும் இருக்கும் தெய்வங்கள் தான்.

ஆசீவகம் பற்றிய மூல நூல் எதுவும் எமக்கு கிடைக்கவில்லை, நமக்கு கிடைத்ததெல்லாம்

பிற சமயங்களில் விமர்சிக்கப்பட்டதைக் கொண்டு பலர் எழுதிய ஆய்வு கட்டுரைகளை

அடிப்படையாக கொண்டு முனைவர் நெடுஞ்செழியன் அவர்கள் தமிழகத்திலும் தமிழ்

இலக்கியங்களிலும் நீண்ட காலம் ஆய்வை மேற்கொண்டு ஆசீவகமும் ஐயனார் வரலாறும் என்ற நூலை எழுதியிருக்கிறார். தமிழர் மெய்யியல் ஆசீவகத்தில் இருந்து தான் தொடங்குகிறது. அது வட நாட்டு சமயமல்ல தமிழர் சமயம் என ஆதாரங்களுடன் நிறுவுகிறார், இன்றளவும் ஐயனாரை குலதெய்வமாக கொண்டவர்கள் தமிழர்களே ஆவார்கள்.

தொல்காப்பிய கால சமயம்

பண்டைத் தமிழரின் வாழ்கை பற்றி விளங்குகின்ற சங்க இலக்கிய காலகட்டம் என்பது, பொ.ஊ.மு 2 ஆம் நூற்றாண்டு முதல் நானூறு ஆண்டுகள் என்பது அறிஞர்களின் கருத்தாகும். இப் பரந்த உலகில் பல இனக்குழுக்கள், சமூக அமைப்புகள் வழக்கில் இருந்த போது, தமிழ் அடையாளம் மக்களை ஒன்றாக்கியது.

வேட்டைச் சமூகம் வலுவாக இருந்தபோது இன்னொரு பக்கம் இனக்குழுத் தலைவரின் கீழ் வாழ்ந்த மக்கள் ஓரளவு பொருளாதார வளத்துடன் இருந்தனர். புதிதாக உருவான வேந்தரின் அதிகாரமானது புதிய வகை அரசியல் நிலைமை ஏற்படக் காரணமாகியது.போக்குவரத்து, தகவல்தொடர்பு வசதிகளற்ற நிலையில், இனக்குழு வாழ்க்கையின் எச்சங்கள், சங்க காலத்தில் செல்வாக்குடன் விளங்கியது.திணைசார்ந்த வாழ்க்கையில் சங்க காலத்தில் காட்டை எரித்து பயிர் செய்தல்,கால்நடை வளர்த்தல் போன்ற பொருளாதார மாறுதல்கள் ஏற்பட்டன. பல வேறு இனக்குழுக்களின் தனித்துவமான சமூக அமைப்புகள் கலைக்கபட்டு உண்டான வாழ்க்கையில் மனிதர்கள் இயற்கை மீது நாட்டம் செலுத்தினர். இயற்கையை புரிந்து கொள்வது அவர்களுக்கு கடினமானதாக இருந்தது. இயற்கையின் ஆவேசமும் மரணமும் என திக்குமுக்காடிய மக்கள் எதாவது செய்து, இயற்கையை அமைதிப்படுத்த முயலும் போது கடவுள் பற்றிய புரிதல் மனிதர்களுக்கு வந்திருக்க வேண்டும். இயற்கையை விளங்கிக் கொண்டு அதற்கும் தங்களுக்குமான உறவினை வளர்துக்கொள்ளும் போது ஏதோ ஒரு சக்கி எல்லாவற்றையும் இயக்குவதாக் கண்டனர். அதனால் மாந்திரிகத்தின் மூலம் இயற்கையை தொடர்பு கொள்ள முடியுமென நம்பி மந்திரம்,சடங்குகள் என ஆரம்பித்தனர். மந்திரம் செய்வதுடன் பலியிட்டு வழிபாட்டின் மூலம் மாய சக்தியை அமைதிகொள்ள வைக்கலாம் என எண்ணினர். இதுதான் சங்கத் தமிழரிடத்தில் சமயம் தோன்றியதிற்கான மூலமாகும்.கடவுள் என்றது அக்காலத்தில் உருவமற்ற ஆற்றலையே கொண்டதாக விளங்கியது.சூர்,அணங்கு,சூலி,முருகு போன்ற கடவுள்கள் இயற்கை சார்ந்த இடங்களில் இருப்பதான நம்பிக்கை,சங்க காலத்தில் வலுவாக இருந்தது.அணங்கு,வரையர் மகளிர்,சூர் போன்ற பேராற்றல்கள் பெண்களைப் பிடித்து அவர்களை உடல்மெலிவாக்கி துன்பம் கொடுப்பதாக கருதினர். அச்சம்,வருத்தம் என்று பொருள் கொடுக்கின்ற வகையில் அணங்கு, பேய்,சூர் போன்ற பெயர்களால் கடவுள்கள் சொல்லப்பட்டாலும் அவற்றின் ஆற்றல் காரணமாக அவை வணங்கப்பட்டன. புரதான சமயப்படி அச்சம் தான் அவர்களின் கடவுள் கொள்கைக்கு காரணம் எனலாம். மனிதர்களுக்கு நன்மை தீமை செய்யும் சிந்தனை தான் சடங்குகளைச் செய்யத் தூண்டின.ஏதோ ஒரு மாய சக்கிதான் ஏதாவது கெடுதல் செய்யக்கூடும் என்ற நம்பிக்கை தான் சங்கத் தமிழரிடத்தில் சமயம் உருவாவதற்கு காரணம்.இதை பரிபாடலில் காணலாம் (**கண்டார்க்குத் தாக்கு அணங்கு இக்காரிகை காண்மின்** -11-122)

மக்கள் இயற்கையின் ஆற்றலுக்கு பயந்து தன்னை மாற்றியதும் அல்லாமல் இயற்கையின் ஆற்றல்களை கடவுளாகவும் கொண்டான்.பிற்காலத்தில் தாய்த் தெய்வங்களின் ஆளுமை பரந்து விரிந்த போது மழையாகிய மாரி மாரியம்மன் ஆனது.வழிபட்டால் நன்மையும் வழிபடாவிட்டல் தீமையும் நடக்கும் என்ற பண்புகளைக் கொண்ட மற்றொரு தெய்வம் காளி,கருப்பு என்கின்ற கருத்துக்கொண்ட கார் என்பதிலிருந்து காளி வந்ததாகும். என்று தமிழ்க் கடவுள்களின் தொடக்கம் பற்றி பக்தவத்சல பாரதி என்பவர் பொன்.கோதண்டராமனை சுட்டி காட்டியுள்ளார்.

மேலும் தொல்காப்பியத்தை உற்று நோக்கினால் தமிழருடைய வரலாற்றை பார்கும் போது தொல்காப்பியர் காலத் தமிழர்களிடம் சமய நிலையைத் தொல்காப்பியம் வாயிலாக அறியமுடிகிறது.பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கபட்டது தான் தொல்காப்பியம். இதில் உலகில் உள்ள முதல், கரு,உரி என்கின்ற முப்பொருளில் அடக்கியுள்ளார். ஆகவே தொல்காப்பியர் உயிர் வாழ்வதற்கு அமைந்த நிலத்தையும் காலத்தையும் முதற் பொருள் என்றும் முதற் பொருளைச் சார்ந்து கருப் பொருள் என்றும் ,மக்களுக்குரிய அகம், புறமாகிய ஒழுக்கங்களை உரிப்பொருள் என்றும் பகுத்தார்.

'தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப' (தொல்,பொருள் நூ.20)

ஆகவே, தொல்காப்பியர் காலத்தில் தெய்வம் வாழ்வின் ஒரு அங்கமாக இருந்துள்ளதுஎன அறிய முடிகிறது..மக்கள் வாழ்ந்த நிலத்திற்கும், காலத்திற்கும்,அவரவர் தேவைக்கும் ஏற்ப அவர்கள் வழிபாடு இருந்துள்ளது.

மனிதன் தங்களுடைய பலம் ஒரு எல்லைக்குட்பட்டது என்பதை அறிந்து கொண்டான் அப்போதே கடவுள் கோட்பாடு உண்டாகியது. அவை வழிபாட்டு மரபாய் மாறியது. அந்த அடிப்படையில் பண்டைய தொல்காப்பிய காலத் தமிழர் தெய்வக் கோட்பாடுகள் ஐநில மக்கள் வாழ்வியலுக்கேற்ப உருவாகி இருக்கின்றன. இவை யாவும் இன்றைய வழிபாடுகளைப் போல அப்பொழுது காணப்படவில்லை.

இது இவ்வாறு இருக்க, ஆசீவகத்தில் இருந்த கடவுட் கொள்கைகள் தொல்காப்பியர் காலத்திலும் தொடர்ந்தது.தொல்காப்பியர் கால சமயம் எவ்வாறு இருந்தது என உற்றுநோக்கினால் ஆசீவகத்திற்கு பின் பொ ஊ.மு 7ஆம் நூற்றாண்டில் இத் தொல்காப்பியத்தை தொல்காப்பியர் படைத்தார் . மக்களின் பண்டைய வரலாற்றினையும் வாழ்க்கை முறையையும் நாகரீகத்தையும் உணர்வதற்கு அந்நாட்டில் காணப்படும் கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள், நிலத்தின் கீழ் புதைந்த கட்டட வகைகள், பண்டைய நாணயங்கள் அந்நாட்டில் வழங்கும் பண்டைய இலக்கியங்கள் முதலியவை முக்கியக் கருவிகளாகும். பண்டைத் தமிழர்களின் வாழ்கை முறை, பண்பாடு, நாகரீகம் கடவுட் கொள்கை ஆகியவற்றை அறிவதற்கு பேருதவியாக இருப்பது சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் என்ற ஒப்புயர்வற்ற இலக்கணம் ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழ் மொழியின் தலைசிறந்த இலக்கணம் தொல்காப்பியம். தமிழ் மக்களது பேரறிவின் கருவூலமாக திகழ்கிறது.இது "**சமய உணர்வையும் தமிழையும் பிரிக்க முடியாது**" என்கின்ற உண்மையை முதன் முதலாக எடுத்துக் கூறும் நூல். குறிப்பிட்டுச் சொல்வதானால் தொல்காப்பியப் பொருளதிகாரம் தமிழ்நாட்டின் பண்டைய இந்து சமய வழிபாட்டு உணர்வை கூறியுள்ளது.

தொல்காப்பியத்தில் எவ்வாறு கடவுட் கொள்கையை தொல்காப்பியர் கையாண்டுள்ளார் என்றால் , இயற்கையை வணங்கிய மக்கள் சிறிது சிறிதாகச் சங்க இலக்கியம் தொடங்கி நடுகல் வழிபாட்டை கொண்டு அதற்கு உருவம் கொடுத்து சமய வழிபாட்டில் ஈடுபட்டனர்,

இப்படித்தான் வாழ வேண்டும் என்ற உணர்வு ஒரு சமூகத்தில் எப்போது தோன்றுகிறதோ அப்போது சமயத்தின் ஆரம்ப நிலையாகும். ஆகவே தொல்காப்பியர் காலத்திற்கு முன் ஆசீவகம் என்னும் சமயம் கடவுட் கோட்பாடுகளை காட்டியுள்ளது. இதை தொடர்ந்து தொல்காப்பியர் கடவுள்,தெய்வம் என்ற சொற்களை பாவித்துள்ளார்.

ஆசீவர்கள் வினைக் கொள்கைகளை பற்றி திடமான கொள்கை கொண்டவர்களாக காணப்பட்டது போல் தொல்காப்பியர் திடமான கோட்பாடுகளை எடுத்துக் கூறியுள்ளார். அதாவது உடப்பை எடுத்த உயிர்கள் அப் பிறவியில் செய்யும் செயல்கள் தான் வினைகள் என கூறுகின்றார். இவ் உயிர்கள் செய்யும் செயலில் இருந்து நன்மையும் தீமையும் இருக்கும் .மேலும் கர்ம வினையின் பயனால் உயிர்கள் பிறப்பெடுக்கின்றன. இப் பிறப்பு அவரவர்களின் கன்ம வினையினால் பிறப்பெடுக்கும்.அதனால் அவரவர் செய்த வினயின் தன்மைக்கு ஏற்ப ஒவ்வொரு பிறப்பிலும் கன்ம வினை தொடரும் என்பதாகும்.

இப் பிறப்பானது அவர்களின் விருப்பு வெறுப்புக் கேற்ப வருவதானது ஒரு மரதிலிருந்து விதையும், விதையிலிருந்து மரமும் வருவதைப் போன்றது. தொல்காப்பியர் உயிர்கள் பவாகும் அவைகள் அவைகளின் அறிவிற்கேற்ப ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிர்கள் தனித்தியங்கும் தன்மை கொண்டது என்கின்றார்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதவே அதனொடு நாவெ
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே

நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" (தொல்-மர 27)

என்ற பாடலில் ஓரறிவு,ஈரறிவு,மூவறிவு என்று உயிரானது பல என்கின்றார்.மேலும்

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"

(தொல்-பொரு-27) இல் எல்லா உயிர்க்கும் என்ற வாக்கியத்தில் உயிரானது பவ வகையானது எனவுன் அவ் உயிரின் இன்பமானது அவ் உடம்பின் மீது இருக்கின்ற வினைத் தன்மையை பொறுத்ததாகும் என்று கூறுகின்றார்.உயிரை நாம் கண்ணால் காணமுடியாது ஆனால் உடப்பின் அசைவோடு உயிரின் தன்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம் எனவும் உயிர் எழுத்து ,மெய் எழுத்துக்களைக் கூறும் போதே அதன் இயக்கத்தையும் காட்டியுள்ளார்.அதாவது,

"மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே (தொல்-எழுத்து 18)

தொல்காபியர் உயிரைப் பற்றி கூறியுளார்.மேலும் இறைவனை பற்றிக் கூறும் போது

வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும் (தொல்- மர 96)

பழைய கற்காலம் முதல் தமிழர்களிடையே சமயவுணர்ச்சி இருந்தது.ஆதியும் அந்தமும் இல்லாத ஒன்று உண்டென மக்கள் நம்பினர். இதை நான் ஆசீவர்களின் ஊழ் கோட்பாட்டிலும் சுட்டியுள்ளேன். இறை வேறு, உயிர் வேறு என்ற தத்துவத்தை தொல்காப்பியர் கால மக்கள் தெரிந்து கொண்டுள்ளனர். எல்லாவற்றையும் கடந்தவன் இறைவன் எனவும் அவன் இயல்பாகவே கன்மம் நீங்கியும் உணர்தபடாமல் உணரும் தன்மை கொண்டவன் இறைவன் என்றும் நினைத்தனர்.

மேலும் தொல்காப்பியர் ஆன்மீகத்தோடு பக்தி உணர்வோடும் கடவுள் வழிபாட்டை அந்தந்த நிலப்பகுதிகளோடு தொடர்புபடுத்தி காட்டியுள்ளார்.தொல்காப்பிய கால மக்கள் கடவுளை உருவமாகவும்,அருவமாகவும்,அருவுருவமாகவும் வழிபட்டனர்.இதில் சிவ வழிபாடு,சக்தி வழிபாடு,இலிங்க வழிபாடு,ஞாயிறு வழிபாடு,திங்கள் வழிபாடு போன்றவை மிகவும் புழக்கத்தில் இருந்த வழிபாடுகளாகும். தொல்காப்பியர் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தொய்வத்தை கூறியுள்ளார்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" (தொல்- பொருள் -அகம்-பாடல் 5)

என தொல்காப்பிய நூற்பாவானது **மாயோன்**,**சேயோன்**,**வேந்தன்**,**வருணன்** என நான்கு கடவுளைப் பற்றி கூறி பின்பு அக் கடவுள்கள் போற்றப்பட்ட நிலங்களைப் கூறுகின்றார். இதன்படி காடும் காடு சார்ந்த முல்லை நிலத்திற்கு மாயோன் (திருமால்)எனவும், மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்திற்கு முருகன் கடவுளாகவும்,வயலும் வயல் சார்ந்த நிலமான மருதத்திற்கு இந்திரனும், கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தின் கடவுளாக வருணணுமாக குறித்துள்ளார்.இதில் கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை துடி கொட்டி ஆடி வெற்றியைக் கொண்டா டி வணங்கினர் என அறிய முடிகிறது. அது மட்டுமல்லாமல் பாலை நில மக்களது வாழ்வானது வறட்சியும்,போர்களங்களும் பிணங்களும் ,பிணத்தை தின்னும் பேய்களும் கொண்டதாக அந் நிலம் காணப்பட்டது. அதனால் பேய்க்குத் தலைவியாக காளியை(கொற்றவை) தெய்வமாக பண்டைத் தமிழர் கொண்டனர்.அது மட்டுமல்லாது பண்டைய காலப் போர் மரபில் வழிபாட்டுச் சடங்குகள்

நிகழ்ந்துள்ளது என தொல்காப்பியம் உறுதிபட சொல்லியுள்ளது. இவ்வாறு தொல்காபியர் கால தெய்வக் கோட்பாடானது அச்சம் முற்காப்பு,நன்றியறிவு,பாராட்டு அன்பு, கருதுகோள் ,அறிவுவளர்சி போன்றவற்றின் அடிப்படையிலேயே இறை வழிபாடு தோன்றியதாக அறிய முடிகிறது.

அடுத்ததாக, தொல்காப்பியத்தில் காணும் வெறியாட்டு என்ற சொல் சங்க இலக்கியதில் சொல்லப்படவில்லை.இச் சொல்லை மக்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்தியதாக அறியமுடிகிறது.இச் சொல்லை சங்கப்புலவர்கள் பேச்சுவழக்காக எடுத்துக் கொண்டு அதற்கு ஈடான இலக்கிய வழக்கினை பயன்படுத்தியிருக்கலாம் என ஜெகதீசன் கூறுகின்றார். முருகு என்கின்ற தெய்வத்திற்கு எற்பட்ட வெறியைத்தான் வேலன் வெறியாட்டு என்றனர்.இது தமிழரின் வழிபாடாக காணப்பட்டது.இவ் வழிபாடு சமூக கூட்டமைப்பினால் எற்பட்டதாகும். கடவுட் கோட்பாட்டில் முதலில் வந்தது முருகனின் வழிபாடுதான்.இது பிற்காலங்களில் தமிழ் நாட்டில் முருகன் வழிபாட்டிற்கு அடிகோலியது எனலாம்.இது ஒரு இனக்குழு வழிபாடாகும்.ஆரம்ப காலங்களில் உருவங்கள் வைத்து வணங்கவில்லை. அது போல முருகனுக்கு அடையாளமாக வேலை வைது வணங்கினர் என்கின்றார் முனைவர் சி.சேதுராமன்.வேலன் வெறியாட்டு எனும் இந்தப் பண்டைய வழிபாட்டு மரபு சில மாற்றங்களுடன் இன்றும் வழக்கில் இருக்கின்றது.தஞ்சை மாவட்டத்தில் நடைபெறும் கன்னிமார் வழிபாடான வெறியாடல் போன்றவை இந்த வேலன் வெறியாடலின் தொடர்ச்சி தன் என்கின்றனர் அறிஞர்கள்.இலங்கையில் மட்டக்களப்பிலும் **சடங்கு** என்கின்ற வழிபாட்டு மரபு தமிழரின் பண்டைய மரபின் தொடர்ச்சியாகும்இனி தொல் காப்பியத்தில் நடுகல் வழிபாட்டை பார்போமானால்,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணர (தொல் நூ1006)

என தொல்காப்பியம், போர்க்களத்தில் இறந்த வீரரை நினைத்து நடுகல் நட்டு வழிபட்ட முறையைக் காணக் கூடியதாகவுள்ளது. சங்க இலக்கியங்களிலும் இவ் நடுகல் வழிபாடு காணக்கிடைகின்றது.குறிஞ்சித் திணையில், மலை சார்ந்த வாழ்வில் ஆநிரை கவர்தல்,மீட்டலில் ஈடுபட்டு, வீரமரணம் அடைந்தவர்களுக்கே நடுகல் நட்டு வழிவழியாக வழிபாடு நடைபெற்றது. இதை நாம் புறநானூற்றிலும் (பாடல் 265,264,232 329) சிலப்பதிகாரதில் கண்ணகிக்கு கல்லெடுத்து வந்து வணங்கிய முறையையும் காணக் கூடியதாகவுள்ளது."**வெற்றி சிறப்பின் வெவ்வாய் வேலன்**" (தொல் 1004)என்ற வரிகளால் போருக்கு போகும் போது வெற்றி பெற வேண்டும் என வேலனை வணங்கியதாகவும் **மாயோன் மேய மன்பெறு சிறப்பின்** (தொல் 1006) மாயோனைத் தெய்வமாகக் வணங்கிய சிறப்பையும் மேலும் தங்கள் வணங்கும் தெய்வம் ஊரையும் தங்களையும் காத்தருளும் என்ற நம்பிக்கையைக் கொண்டவர்களாக காணப்பட்டனர்.

திணைத் தெய்வங்கள் யாவும் பண்டைத்தமிழர் வழிபாட்டில் வழிவழியாக கும்பிடபட்டு பின் காலம் செல்லச் செல்ல வழிபாட்டில் பவகையான மாற்றங்கள் நடந்தது. தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் **இறை,இறைவன்** என்ற சொற்களை ஒன்பது இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். இறை, இறைவன் என்ற சொற்கள் ஆதி தமிழரிடத்தில் தலைவனைக் குறிக்கும் சொல்லாகவும் அறியக் கூடியதாகவுள்ளது.

மேலும் தீயும் இடியும் போன்ற இயற்கைக்கும் நச்சு உயிர்களுக்கும்,பேய்களுக்கும் பயந்து தெய்வ வழிபாடு தோற்றம் பெற்றது.கொள்ளை நோய்,பஞ்சம்,இயற்கை சீற்றங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளளும் அடிப்படையில் அச்சம் தோன்றியது. இதன் காரணமாகத் தான் வழிபாடு தோன்றியது எனலாம்.தங்களுடைய உயிர் வாழ்க்கைக்கு அவசியமான கதிரவன்,சந்திரன்,மரம், பசு போன்றவையும் தெய்வமாக நன்றியறிவின் பொருட்டு வணங்கினான்.வீரனையும் மழை வரவழைத்தும், தீயோரைச் சாபித்தும்,கோபத்தால் ஊரினை எரித்தும்,உடன்கட்டை ஏறியும்,கடுங்கற்பைக் காக்கும் கற்புக்கரசிகளுக்கும் கல்நட்டு விழா எடுத்து கொண்டாடினர்.இத்தகைய வழிபாட்டு முறைதான் நம் தமிழரின் வழிபாட்டு முறை.

இவையே தொல்காப்பியம் கூறும் பழந்தமிழரின் வழிபாட்டு முறையாகும். இதுவே பிற்காலங்களில் சமயமாக வளர்ச்சி பெற்றது.

தொல்காப்பியர் காலத்தில் ஊழ்

தொல்காப்பியர் காலத்தில் 'ஊழ்' என்ற சொல்லானது மெய்யியலோடு சம்மந்த பட்டதாக காணப்பட்டது. ஊழ் என்ற சொல்லுக்கு முறைமை என்பது பொருளாகும். அதாவது இருவினைப் பயன் செய்தவனையே அது அடையும் என்பது நியதி. தொல்காப்பியம் களவியலில் நூற்பா(2)

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

இதில் ஊழ் என்பது இருவரை திருமண பந்தத்தில் இணைப்பது இவ் ஊழ் என்கின்றார். ஆகவே இவ் ஊழ் கோட்பாட்டை வைத்துப் பார்க்கும் போது மெய்யியல் தன்மையில் தன்னை உணர்தல் மற்றும் தன்னுணர்வு நிலையிலிருந்து உயர்ந்து இறைநிலையை உணர்வதும் அவசியமானதாகக் காணப்பட்டது.இதில் இறைநிலை என்றும் நிலைபேறு கொண்டதாக அமையும்.

மேலும் தொல்காப்பியர் இளமை நிலையாமை,செல்வம் நிலையாமை,யாக்கை நிலையாமை ஆகியவற்றை "**நில்லா உலகம் புல்லிய நெறித்தே**" (தொல் புறம்,நூ16) என தொல்காப்பியம் கூறுகிறது. ஆகவே தொல்காப்பியர் காலத்திலும் இறைக் கொள்கைகள் இருந்துள்ளன.

தொல்காப்பியர் காலத்தில் மெய்யியல் விடயங்களை கொடிநிலை,கந்தழி,வள்ளி போன்ற சொற்கள் காணப்பட்டுள்ளன. இவை கடவுளோடு தொடர்பு கொண்டவையாக காணப்படுகின்றன.

"அமரர் கண் முடியும் அருவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப' (தொல் புறம் நூ 21)

என்று இவ் நூற்பா காட்டுவதை காணலாம்

இக் காலத்தில் கோயில்களில் நடைபெறும் கொடியேற்றம் என்ற திருவிழா நடைபெறுகின்றது.இது ஆணவம் நீங்கிய உயிரினை உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லுவதின் குறீயீடு ஆகும். உலகின் எல்லா நாட்டிலும் கொடி என்பது மிகவும் பெருமைப்படக் கூடியதாகவுள்ளது. கொடியின் நிறங்களும்,வடிவங்களும் பல்வேறு உயர்வுப் பொருளை உணர்த்தி நிற்கின்றன.

தொல்காப்பியர் காலத்தில் மக்கள் தமக்கு மேலான ஏதோ ஒரு சக்தி உள்ளது என திடமான நம்பிக்கை கொண்டிருந்தனர்.தங்களின் கைகளுக்கு அடங்காத சக்தியை வழிபாட்டின் மூல கட்டுக்குள் கொண்டு வரலாம் எனவும் அவ்வாறு வந்ததை கொண்டு தங்கள் விருப்பத்தை நிறைவேற்றலாம் எனவும் நம்பினர். தாம் தொழிலுக்கு போகும் போது தெய்வத்தை வணங்கி விருச்சி கேட்டுச் செல்லும் வழக்கம் இருந்துள்ளது.இயற்கையோடு அமைந்த சூழலுக்கு ஏற்ற வழிபாட்டு முறையையே தொல்காப்பியம் காட்டுகின்றது. பிற்காலத்தில் சைவம், வைணவம் என்று தனித்தனியே பிரிந்து வளர்ந்த சமயங்களின் தொடக்கம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னதாக இருந்தாலும் அம் மதங்கள் பிரிந்து தனித்தனியே வளரத் தொடங்கியது பிற்காலங்களில் ஆகும்.

கி.பி 6 ஆம் நூற்றாண்டளவுகளில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றித் தமிழ் நாட்டில் இல்லாமல் போகும் நிலையிலிருந்த மத உணர்ச்சியை கொழுந்துவிட்டு எரியச் செய்தனர்.அழிந்து போகும் தறுவாயில் இருந்த கோயில்கல் யாவும் சென்று அப்பரும் சம்பந்தரும் ஒன்றாக சேர்ந்து பதிகங்கள் பாடி சமய வாழ்விற்கு புத்துயிர் கொடுத்தனர்.

இறுதியாக, தொல்காப்பியம் சுட்டிக்காட்டும் கடவுள்களில் மாயோன் முல்லைக் கலியிலும், முருகன் குறிஞ்சிப் பாடல்களிலும் வேந்தன் மருதத் திணையில் மன்னனாக காணப்பட்டான். வருணண் வழிபாடு காணக்கிடைக்கவில்லை. சுறாக்கொம்பை வருணன் என உரயாசிரியரே கூறுகின்றார்.

குறிஞ்சி நிலத்தில் கொல்லிப் பாவை வழிபடபட்டுள்ளது.

முருகனாக கருதப்பட்ட மராமரம் குறிஞ்சியில் மட்டுமன்றி,முல்லையிலும் வழிபடபட்டது.

முல்லை நிலத்தில் தலைவியின் கற்பு தெய்வமாகப் வணங்கப்பட்டது.முன்னோர் வழிபாடு இருந்தது.

நீர்நிலைகளிலும்,கரைகளிலும் தெய்வம் உறைவதாக நம்பி முறைப்படி தொழுதனர்.

வேங்கை மரம், நீர்த்துறைத் தெய்வம், ஊரெல்லைத் தெய்வம் முதலிய வழிபாடுகள் மருதத் திணைப் பாடல்களில் காணப்படுகின்றன.

திருச்செந்தூர் முருகன் நெய்தல் நிலத்தில் எழுந்தருளி இருப்பினும் மருதப் பாடலில் போற்றப்படுகின்றான்.கொற்றவையும்,அருந்ததியும்,திருமகளும் போற்றப்படுகின்றனர்.

ஊர்காவல் தெய்வம்,கடல் தெய்வம் நீர்நிலைத் தெய்வம், கடவுள் மரம் போன்ற வழிபடு தெய்வங்களைச் சங்க இலக்கிய நெய்தல் நிலப் பாடல்களில் காணக்கிடைகின்றன.எல்லா நிலங்களிலும் கடவுள், தெய்வம், அணங்கு, புத்தேளிர் எனப் பொதுப் பெயர்களால் வழி எல்லா நிலங்களிலும் கடவுள், தெய்வம்,அணங்கு,புத்தேளிர் எனப் பொதுப் பெயர்களால் வழிபடு தெய்வங்களும் சுட்டப்படுகின்றன. தொல்காப்பியம் காட்டாத பல தெய்வ வழிபாடுகள் இருந்துள்ளது.

தொகுக்கபட்டுள்ள சங்கப் பாடல்களை பார்த்தால் வைதீக சமயக் கருத்துக்கள், சங்கப் புலவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவை பாடல்களின் வழியே மக்களிடம் அறிமுக படுத்தபட்டுள்ளன. அதேவேளை பண்டைத் தமிழர்களின் தொல் சமயமானது,இயற்கையை முன்வைத்த நிலையில் மக்களிடம் செல்வாக்குடன் தனித்து விளக்கியதையும் சங்கப்பாடல்களில் காணலாம். சங்கத் தமிழர்களின் காலம் என்பது அரசியல் பொருளாதார வேறுபாடுகளைக் கொண்ட தும் ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டதுமான சமூகம் ஆகும். இதனால்தான் ஒரு குறிப்பிட்ட கடவுளை காணமுடியவில்லை. ஆதிகால சமயம் வைதீக சமயம்,பௌத்த சமயம்,சைன சமயம் ஆகிய சமயங்கள் சமமாக இல்லாமல் தமிழர்களிடயே காணப்பட்டன. இனக்குழு வாழ்க்கையில் மீதியாக இருந்த சங்க காலத்தில் தமிழரின் சமயமானது தொல் சமயத் தன்மையுடையதாக காணப்படுகிறது.

சங்கம் மருவிய கால சமயம்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அன்பும் அறமுமென இருவிதமான வாழ்வுதான் இருந்தது. இதைத் தவிர வேறெதுவும் அக் கால மக்களிள் அறிந்திருக்கவில்லை. இத் தமிழரிடத்து சமயம் என்று ஒன்று தோன்றியது சங்கம் மருவிய காலத்தில்தான்.

தலைவன் தலைவியரது காதல் வாழ்வும்,வீரத்தையும் காட்டும் போர் மட்டுமல்லாதுவெறொன்றும் அறியாத ப்ழம்தமிழரிடத்து அன்பு இழிவானது,உயிர் பலிக் கூடாத செயல் என்று அறச்சிந்தனைகளோடு பொ.ஊ பி 2ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழரிடத்தில் உள்ளே வந்தது தான் சமண சமயமும், பௌத்த சமயமும் ஆகும்.

வேட்டையாடி வீரத்தைக் காட்டி வாழ்ந்த பழங் தமிழருக்கு" **ஊனைத்தின்று ஊனைப் பெருக்காதே**" என்ற நல்லுரைகளும் அறத்தின் வழி நின்று பொருள் திரட்டி மகிழ்வுடன் வாழ்ந்து வீட்டு நிலையை அடைவதே சிறந்தது என்ற கோட்பாடுகளை உணர்த்தவே பதினெண்கீழ்கணக்கு இலக்கியங்களும்,பல இலக்கண நூல்களும் சமண பௌத்த சமயத்தவரால் தோன்றியது. அன்பும் வீரமும் மட்டுமே தம்முடைய

வாழ்கை என்றிருந்த பண்டைத் தமிழர் வாழ்வில் வடக்கே இருந்து வந்த புத்தர்,மகாவீரரின் சமய சம்பந்தமான போதனைகளோடும் தமிழும் தன்னை இலக்கிய வழத்துடன் உயர்திக் கொண்டது. இதற்கு சமய வளர்ச்சி பெரிதும் கைகொடுத்தது.மேலும் இவ் இலக்கியங்களை தமிழர் தம்முடைய மணிமகுடம் போல் போற்றினர்.

தமிழரின் சமயம் என்பது தமிழர்களின் மெய்யியல் கோட்பாடுகளைக் கொண்ட ஒரு பாரம்பரிய சமய மற்றும் வாழ்வியல் முறயாகும். ஆகவே தமிழர்கள் இறை நம்பிக்கை கொண்டவர்களாகவே இருந்துள்ளனர். சைவம்,வைணவம்,பௌத்தம்,சமணம்,ஆசீவகம் பேன்ற சமய மரபுகளைத் தமிழர்கள் பல்வேறு காலத்தில் பவவிதமன முறயில் கடைபிடித்துள்ளனர். ஐயனார்,கண்ணகி,மதுரை வீரன் போன்ற வழிபாடுகளும் தமிழரிடம் இருந்தன. மேலும் சங்க காலத்தில் சிவன் கோயில்கள் புகார்,காஞ்சி,மதுரை போன்ற நகர்களிலில் இருந்தன என்பதற்கான சான்றுகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

துணைச் சான்றுகள்

1. டாக்டர். ர.விஜயலட்சுமி,தமிழகத்தில் ஆசீவர்கள்
2. தொல்காப்பியரது கடவுட் கொள்கை(முனைவர். திருமதி.செ .ஸ்ரீதாஸ்)
3. சங்கத்தமிழரின் சமய வாழ்வியல்
4. தொல்காப்பியத்தில் மெய்யியல் சிந்தனைகள்(முனைவர் கா.திருநாவுக்கரசு)

தொ.மா.க. 142

அறிவியல் சொல்லும் மெய்ப்பாடுகளும் தொல்காப்பிய மெய்ப்பாடுகளும்

முனைவர் ஜோதி தேமொழி
செயலாளர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
சான் பிரான்சிஸ்கோ, அமெரிக்கா
jsthemozhi@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

உலக மொழிகளில் மக்களின் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த தனிச்சிறப்புக் கொண்டது தொல்காப்பியம். ஒருவரின் உள்ளத்து உணர்ச்சிகள் பிறருக்குப் புலனாகுமாறு புற உறுப்புகளில் தோன்றுவதே மெய்ப்பாடு ஆகும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மெய்ப்பாட்டியல் எட்டு வகையான மெய்ப்பாடுகளை வகைப்படுத்துகிறது. அவற்றை, 1) சிரிப்பு, 2) அழுகை, 3) இழிபு, 4) வியப்பு, 5) அச்சம், 6) பெருமிதம், 7) சினம், 8) மகிழ்ச்சி என எட்டு வகை மெய்ப்பாடுகளாகத் தொல்காப்பியர் வகைப்படுத்துகிறார். எண்வகை மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் நான்கு நான்கு (8x4=32) காரணிகளின் மூலம் 32 வழிகளில் மேற்கூறிய உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்படும் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். இன்றைய அறிவியலும் உளவியல் கோட்பாடுகளின்வழி (Psychological Theories) மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்கும் உணர்ச்சிகளை விளக்குகிறது. இன்றைய அறிவியல் உலகம் வகைப்படுத்தி விளக்கும் உள்ளத்தின் உணர்வுகளின் வெளிப்பாட்டைத் தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வது; குறிப்பாக, 'புளட்சிக்' கோட்பாட்டுடன் (Plutchik's theory) உளவியல் நோக்கில் ஒப்பிடுவதன் மூலம் ஓர் ஒப்பீட்டு ஆய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

குறிசொற்கள்: தொல்காப்பியம், மெய்ப்பாடுகள், உணர்ச்சிகள், எண்வகை மெய்ப்பாடுகள், 'புளட்சிக்' உளவியல் கோட்பாடு.

முன்னுரை

உலக மொழிகளில் காணப்பெறும் பன்மொழிகளின் இலக்கண நூல்களுடன் ஒப்பிடுகையில், மக்களின் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த ஒரே நூல் தொல்காப்பியம் மட்டுமே. மற்ற மொழிகளின் இலக்கண நூல்கள் சொல், தொடர் மற்றும் பாடல்களுக்கு இலக்கணம் வகுத்தாலும் மக்களின் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுக்கவில்லை. இப்பண்பினால் தொல்காப்பியம் இலக்கண நூல்களுள் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

தொல்காப்பிய மெய்ப்பாடுகள்

பொருளதிகாரத்தின் ஆறாவதாக அமைந்திருக்கும் மெய்ப்பாட்டியல் எண்வகையாக மெய்ப்பாடுகளை வகைப்படுத்துகிறது. மெய் - உடம்பு; பாடு - படுதல், தோன்றுதல். அஃதாவது, ஒருவரின் உள்ளத்து உணர்ச்சிகள் பிறருக்குப் புலனாகுமாறு புற உறுப்புகளில் தோன்றுவதே மெய்ப்பாடு ஆகும். ஒருவரின் மெய் வேறுபாடு அறிந்து மற்றவர் ஒழுக வேண்டிய திறப்பாடு பற்றி வகுக்கும் தொல்காப்பியர் 1) நகை , 2) அழுகை, 3) இளிவரல், 4) மருட்கை, 5) அச்சம், 6) பெருமிதம், 7) வெகுளி, 8) உவகை என எட்டு வகை மெய்ப்பாடுகளைப் பட்டியல் இடுகிறார்.

"நகை அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப" (தொ. பொ. 247)

என்று மேற்கூறிய பாடலில் தொல்காப்பியர் காட்டுவது சிரிப்பு, அழுகை, இழிபு, வியப்பு, அச்சம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி என மெய்யின் புறப்புலப்பாடுகள் எட்டு வகை மெய்ப்பாடுகளாகும்.

அத்துடன்;

"பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்
கண்ணிய புறனே நால்நான்கு என்ப" (தொ.பொ. 245)

என்ற மேற்கண்ட பாடல் வரியின்படி எண்வகை மெய்ப்பாட்டுக் களன்கள் (இடங்கள்) ஒவ்வொன்றும் நன் நான்கு பொருள்களில் வரும் என்றும் தொல்காப்பியர் மேலும் விளக்குகிறார். அதாவது (8 x 4 = 32) பொருள்களில் மூலமாக உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்படும் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். இவற்றை விரிவாகவும் கீழ் வரும் நூற்பாக்கள் மூலமும் விளக்குகிறார்.

1. "எள்ளல் இளமை பேதைமை மடன் என்றுள்ள
உள்ளப்பட்ட நகை நான்கு என்ப" (தொ. பொ. 248)

நகை மெய்ப்பாடு: இகழ்தல், இளமை, அறியாமை, அறிந்தும் அறியாதது போலிருத்தல் - ஆகிய நான்காலும் சிரிப்பு ஏற்படும்.

2. "இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே" (தொ. பொ. 249)

அழுகை மெய்ப்பாடு: இழிவு, இழப்பு, தளர்ச்சி, வறுமை - ஆகிய நான்காலும் அழுகை ஏற்படும்.

3. "மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே" (தொ. பொ. 250)

இளிவரல் மெய்ப்பாடு: முதுமை, நோய், துன்பம், எளிமை - ஆகிய நான்காலும் இளிவரலாகிய இழிபு ஏற்படும்.

4. "புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மகிமை சாலா மருட்கை நான்கே" (தொ. பொ. 251)

மருட்கை மெய்ப்பாடு: அறிந்திராத புதுமை, அளவிலா பெருமை, அளவில் மிகக் குறைந்த சிறுமை, ஒன்று பிறிதொன்றாகும் ஆக்கம் - ஆகிய நான்காலும் வியப்பு ஏற்படும்.

5. "அணங்கே விலங்கே கள்வர் தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே" (தொ. பொ. 252)

அச்சம் மெய்ப்பாடு: கண்ணுக்குப் புலப்படாமல் இருந்து வருத்தும் சூர் முதலான தெய்வங்கள், கொடிய விலங்குகள், கள்வர், அரசன் - ஆகிய நான்காலும் அச்சம் ஏற்படும்.

6. "கல்வி தறுகண் புகழ்மை கொடை எனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" (தொ.பொ.253)

பெருமிதம் மெய்ப்பாடு: கல்வி, அஞ்சாமை, கிடைக்கும் புகழ், வழங்கும் கொடை - ஆகிய நான்காலும் பெருமிதம் தோன்றும்.

7. "உறுப்பறை குடிகோள் அலை கொலை என்றன
வெறுப்ப வந்த வெகுளி நான்கே" (தொ. பொ. 254)

வெகுளி மெய்ப்பாடு: உறுப்புக்களை அறுத்தல், துன்புறுத்தல், வைதல், அறிவால் பெற்ற புகழை அழித்தல் - ஆகிய நான்காலும் வெறுக்கத்தக்கச் சினம் தோன்றும்.

8. "செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என
அல்லல் நீத்தே உவகை நான்கே" (தொ. பொ. 255)

உவகை மெய்ப்பாடு: செல்வத்தால் ஏற்படும் நுகர்ச்சி, மேன்மையான அறிவுப் புலமை, உள்ளம் ஒத்தவரோடு இணைதல், கூடி ஆடும் விளையாட்டு - ஆகிய நான்காலும் மகிழ்ச்சி ஏற்படும்.

மேலே கூறப்படும் இந்த எட்டு வகையான மெய்ப்பாடுகளின் அகச்சுவை கூறுகளாவன; 1. உடைமை, 2. இன்புறல், 3. நடுவுநிலை, 4. அருளல், 5. தன்மை, 6. அடக்கம், 7. வரைதல், 8. அன்பு, 9. கைம்மிகல், 10. நலிதல், 11. சூழ்ச்சி, 12. வாழ்த்தல், 13. நாணுதல், 14. துஞ்சல், 15. அரற்று, 16. கனவு, 17. முனிதல், 18. நினைதல், 19. வெரூஉதல், 20. மடிமை, 21. கருதல், 22. ஆராய்ச்சி, 23. விரைவு, 24. உயிர்ப்பு, 25. கையாறு, 26. இடுக்கண், 27. பொச்சாப்பு, 28. பொறாமை, 29. வியர்த்தல், 30. ஐயம், 31. மிகை, 32. நடுக்கு ஆகிய இந்த 32 மெய்ப்பாடுகள்(தொ. பொ. 256) சிறப்பில்லா மெய்ப்பாடுகள் கீழ் இடம் பெறுகின்றன.

அடிப்படை மனித உணர்ச்சிகள் முகத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்கும் உணர்ச்சிகள் என்பதை இன்றைய அறிவியல் உலகமும் உளவியல் கோட்பாடுகள் (Psychological Theories) மூலம் விளக்குகிறது. உளவியல் என்பது மக்களின் செயல்கள், நடத்தைகள், உள்ளத்திறன் பற்றி அறிய உதவும் ஓர் அறிவியல். ஆகவே, இன்றைய அறிவியல் உலகம் வகைப்படுத்தி விளக்கும் அவ்வுள்ளத்தின் நிகழ்வுகளை; தொல்காப்பியம் காட்டும் புறத்தார்க்கும் புலப்படுவதும் வெளிப்படக்கூடியதுமான மெய்ப்பாடுகளை உளவியல் நோக்கில் ஒப்பிட்டு ஆராய்வது, குறிப்பாக, 'புளட்சிக்' கோட்பாட்டுடன் (Plutchik's theory) ஒப்பிட்டு ஆராய்வது என்ற அடிப்படையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

தொல்காப்பியரும் 'இராபர்ட் புளட்சிக்கும் - ஓர் ஒப்பீடு

இந்த ஆய்வில், மனித உணர்வுகளின் வகைப்படுத்துவதில் 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அமெரிக்க உளவியல் அறிஞர் 'இராபர்ட் புளட்சிக்' (Robert Plutchik) கையாண்ட உணர்வுகள் வகைப்பாடு முறையை ஒப்பிடலாம். 'இராபர்ட் புளட்சிக்' உணர்வுகள் கோட்பாடு (Robert Plutchik's Theory of Emotions) விலங்குகள் மற்றும் மனிதர்களில் உணர்ச்சிகளின் கருத்தாக்கத்திற்கான அடித்தளத்தை நிறுவியது.

உணர்வுகளின் வெளிப்பாடு குறித்த இவரது உளவியல் கோட்பாட்டின் அடிப்படை, மனவளர்ச்சிக் கோட்பாடு (psycho-evolutionary theory of emotions); இக்கோட்பாட்டின் அடித்தளம் என்பது ஒரு உயிரினத்தின் உணர்வுகள் சமூகச் சூழ்நிலை, எதிர்கொள்ளும் செயல்பாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்ப தகவமைத்து வெளிப்படுத்தப் படுபவை என்று விளக்கமளிக்கிறார் புளட்சிக், இது முதன்மை மற்றும் இரண்டாம் நிலை உணர்ச்சிகளை வேறுபடுத்துகிறது.

புளட்சிக் எட்டு முதன்மை உணர்வுகளை அடையாளம் கண்டு அவற்றை "சக்கரம்" வடிவத்தில் மாறுபட்ட எதிரெதிர் இணையாக ஒழுங்கமைத்துக் காட்டினார். மகிழ்ச்சி - சோகம், கோபம் - பயம், நம்பிக்கை - வெறுப்பு, ஆச்சரியம் - எதிர்பார்ப்பு, இந்த அமைப்பை உணர்வுகள் சக்கரத்தில் காணலாம் (படம் 1).

இவரும் தொல்காப்பியர் கூறிய எண்வகை மெய்ப்பாடுகள் போன்று; 1. மகிழ்ச்சி(Joy), 2. அழுகை(Sadness), 3. இழிபு/ வெறுப்பு(Disgust), 4. வியப்பு (Surprise), 5. அச்சம்(Fear), 6. சினம்(Anger), 7. எதிர்பார்ப்பு(Anticipation), 8. நம்பிக்கை(Trust) ஆகிய எட்டு முதன்மை உணர்ச்சிகள் இருப்பதாக வரையறுத்தார்.

'புளட்சிக்' உளவியல் கோட்பாட்டு குறிப்பிடும் எட்டு உணர்வுகளும் தொல்காப்பியர் காட்டும் சிரிப்பு, அழுகை, இழிபு, வியப்பு, அச்சம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி ஆகிய எட்டு வகை மெய்ப்பாடுகளுடன் பெருமளவிற்கு இசைந்து செல்வதைக் காணலாம்.

தாம் குறிப்பிடும் முதன்மை உணர்வுகள் தோன்றக் காரணம் எவையெவை என்பதையும் கீழ்வருமாறு விவரிக்கிறார் புளட்சிக்:

- மகிழ்ச்சி: மகிழ்ச்சி, மகிழ்ச்சி மற்றும் நேர்மறையான அனுபவங்களுடன் தொடர்புடையது.
- அழுகை: இழப்பு, ஏமாற்றம் மற்றும் எதிர்மறை உணர்வுகளுடன் தொடர்புடையது.
- வெறுப்பு: விரும்பத்தகாத அல்லது புண்படுத்தும் ஒன்றின் மீதான வெறுப்பிலிருந்து எழுகிறது.
- வியப்பு: எதிர்பாராத ஒன்று நடக்கும்போது ஏற்படும் உணர்வு.
- அச்சம்: ஆபத்து, அச்சுறுத்தல் மற்றும் உயிர்வாழும் உள்ளுணர்வுகளுடன் தொடர்புடையது.
- சினம்: விரக்தி, எரிச்சல் மற்றும் வலுவான எதிர்வினைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது.
- எதிர்பார்ப்பு: எதிர்கால நிகழ்வுகளை எதிர்நோக்குவதை உள்ளடக்கியது.
- நம்பிக்கை: மனநிறைவு மற்றும் அமைதியின் உணர்வைப் பிரதிபலிக்கிறது.

இவ்வாறாக புளட்சிக் முதன்மை உணர்வுகள் தோன்ற எவையெவை காரணம், உணர்வுகளுடன் தொடர்புடையவை எவை என்று சுட்டுபவைதான் தொல்காப்பியர் கூறும் எட்டு முதன்மை மெய்ப்பாடுகளின் 32 (8 x 4 = 32) மெய்ப்பாட்டு நிலைக்களன்கள் (தொல். பொ. 248 - தொல். பொ. 255) ஆகும்.

மேலும், புளட்சிக்கின் கோட்பாடு முதன்மை மற்றும் இரண்டாம் நிலை (primary and secondary) என்ற உணர்ச்சிகள் அடித்தளத்தை நிறுவியது. இரண்டாம் நிலை உணர்வுகள் முதன்மை உணர்வுகளின் கலவையாகும். அவை மிகவும் சிக்கலானதாகவும் நுணுக்கமாகவும் இருக்கும் என்கிறார் புளட்சிக்.

எடுத்துக்காட்டாக;

- பொறாமை உணர்வு: சோகம் மற்றும் கோபம் ஆகிய உணர்வுக் கலவையின் வெளிப்பாடு
- அவமான உணர்வு: பயம் மற்றும் வெறுப்பு ஆகிய உணர்வுக் கலவையின் வெளிப்பாடு
- குற்ற உணர்வு: மகிழ்ச்சி மற்றும் அச்சம் ஆகிய உணர்வுக் கலவையின் வெளிப்பாடு
- ஆர்வம்: நம்பிக்கை மற்றும் வியப்பு ஆகிய உணர்வுக் கலவையின் வெளிப்பாடு.

▪ என்பது புளட்சிக் உணர்வுகளை வகைப்படுத்தும் முறைக்குத் தரும் விளக்கம்.

இது எண்வகை மெய்ப்பாட்டுக் களன்கள் தவிர்த்து மெய்ப்பாட்டிற்குரிய பிறநிலைக்களன்கள் என்று தொல்காப்பியர் வகைப்படுத்தும் 32 சிறப்பில்லா மெய்ப்பாடுகள் (தொல். பொ. 256) என அறியப்படுபவற்றின் விளக்கமாக அமைந்திருப்பதையும் காணலாம். அவர் காட்டும் இரண்டாம் நிலை உணர்வுகள் தொல்காப்பியர் வகைப்படுத்தும் சிறப்பில்லா மெய்ப்பாடுகளுக்கு இணையானது எனவும் கூறலாம். இவ்வாறாக அண்மைய அறிவியல் உலகம் கூறும் உளவியல் கோட்பாடுகளுடன் தொல்காப் பியரின் மெய்ப்பாட்டியல் கருத்துகளை ஒப்பிட்டு ஆராய இயலும்.

படம் - 1 : புளட்சிக்கின் எட்டு முதன்மை உணர்வுகள்

படம் - 2 : புளட்சிக்கின் எட்டு முதன்மை உணர்வுகள் தோன்றும் காரணங்கள்



படம் - 3 : தொல்காப்பியர் காட்டும் எட்டு மெய்ப்பாடுகள்



படம் - 3 : தொல்காப்பியர் காட்டும் எட்டு மெய்ப்பாடுகளும் அவற்றுக்கான மெய்ப்பாட்டு நிலைக்களன்களும்

முடிவுரை

உணர்வுகளைக் குறித்த அறிவும் ஆய்வும் வரலாற்றில் பலகாலமாகவே இருந்தாலும்; உளவியல் என்ற முறையான ஓர் அறிவியல் துறையின் கீழ் அறிவியல் நோக்கில் அறியவும் ஆராயவும் முற்பட்ட காலம் வெகு அண்மையில் 19 ஆம் நூற்றாண்டில்தான். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் (1879) லீப்ஜிக்கில் வுண்டின் ஆய்வகத்தை நிறுவியதன் மூலம் உளவியல் ஓர் அறிவியல் துறையாக வெளிப்பட்டது.

உளவியல் கூறும் நவீன அறிவியல் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் இணையான கருத்தாக்கங்கள் 2500 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் காணக் கிடைப்பது மிக வியப்பானது. அறிவியல் என்னும் ஒரு துறைக்குத் தேவையான நுண்ணிய கூர்ந்த கவனிப்பும், பார்த்தவற்றை ஆவணப்படுத்தி நுணுகி ஆய்ந்து விளக்கமளித்து அவற்றை ஆவணப்படுத்தும் அறிவியல் போக்கும் பழந்தமிழர்களிடையே இயல்பாக அமைந்து இருந்ததையே இந்த ஒற்றுமை காட்டுகிறது.

தொல்காப்பிய நூற்பா குறிப்பிடும் சிரிப்பு, அழுகை, இழிபு, வியப்பு, அச்சம், பெருமிதம், சினம், மகிழ்ச்சி என்ற இந்த எட்டு வகை உணர்வுகளும் அல்லது மெய்ப்பாடுகளும் தமிழருக்கு மட்டுமன்றி உலக மனித இனத்தில் உள்ள எவருக்குமே பொதுவாக அமைந்தவை. அவற்றை இலக்கண நூலின் பொருளதிகாரத்தின் பகுதியாக்கிய சிறப்பு தொல்காப்பியரின் அறிவு மேன்மையைக் காட்டுகிறது .

சுவை எனவும் குறிப்பிடப் படும் மெய்ப்பாடுகள் எட்டு என வரையறுத்த தொல்காப்பியர்; தான் குறிப்பிடும் எட்டு மெய்ப்பாடுகள் அல்லது சுவைகள் ஒவ்வொன்றும் அவை பிறப்பதற்கான நான்கு நிலைக்களன்களையும் காட்டியுள்ளார். எனவே, எட்டு சுவைகள் பிறப்பதற்கு அடிப்படையாக முப்பத்திரண்டு நிலைக்களன்கள் தொல்காப்பியரால் குறிப்பிடப் படுகிறது. புளட்சிக்கின் கோட்பாடும் இந்த வகையிலேயே உளவியல் விளக்கம் தருவதைக் காணமுடிகிறது.

வெவ்வேறு பண்பாட்டு மாறுபாடுகள் உணர்ச்சி அனுபவங்கள் மற்றும் அவற்றின் வெளிப்பாடுகளை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இருப்பினும் இது போல உணர்வுகளைப் பகுத்தாயும் புளட்சிக்கின் கோட்பாடும், தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளுக்கும் உணர்வுகளின் அடிப்படைப் புரிதலை வழங்குகிறது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வழியில்லை,

சான்றாதாரங்கள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் நூற்பாக்கள்
2. தொல்காப்பியம் உரைவளம், பொருளதிகாரம்: மெய்பாட்டியல், தொகுப்பும் குறிப்பும் ஆ . சிவலிங்கனார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1998
3. Theories of Emotion (Emotion: Theory, Research, and Experience Vol. 1), Robert Plutchik, Henry Kellerman. Academic Prss, 1980.
4. Plutchik, R. The nature of emotions: Human emotions have deep evolutionary roots, a fact that may explain their complexity and provide tools for clinical practice. Am. Sci. 2001, 89, 344-350.

பின்னிணைப்பு

தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் நூற்பாக்கள்

‘உய்த்துணர்வு இன்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடு ஆகும்,’ - தொல். பொ. 516

"பண்ணைத் தோன்றிய எண்நான்கு பொருளும்
கண்ணிய புறனே நால்நான்கு என்ப" - தொல். பொ. 245

"நகை அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப" - தொல். பொ. 247

‘எள்ளல் இளமை பேதைமை மடம் என
உள்ளப் பட்ட நகைநான்கு என்ப.’ - தொல். பொ. 248

‘இளிவே இழவே அசைவே வறுமை என
விளிவுஇல் கொள்கை அழுகை நான்கே.’ - தொல். பொ. 249

‘மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே.’ - தொல். பொ. 250

‘புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.’ - தொல். பொ. 251

‘அணங்கே விலங்கே கள்வர்தம் இறைஎனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே.’ - தொல். பொ. 252

‘கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே.’ - தொல். பொ. 253

‘உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே.’ - தொல். பொ. 254

‘செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே.’ - தொல். பொ. 255

மெய்ப்பாட்டிற்குரிய பிறநிலைக்களன்கள் - சிறப்பில்லா மெய்ப்பாடுகள்
ஆங்கவை ஒருபால் ஆக ஒருபால்
உடைமை[1] இன்புறல்[2] நடுவுநிலை[3]அருளல்[4]
தன்மை[5] அடக்கம்[6] வரைதல்[7] அன்பு[8] எனாக்
கைம்மிகல்[9] நலிதல்[10] சூழ்ச்சி[11] வாழ்த்தல்[12]
நாணுதல்[13] துஞ்சல்[14] அரற்றுக்[15] கனவு[16] எனாஅ
முனிதல்[17] நினைதல்[18] வெரூஉதல்[19] மடிமை[20]
கருதல்[21] ஆராய்ச்சி[22] விரைவு[23] உயிர்ப்பு[24] எனாஅக்
கையாறு[25] இடுக்கண்[26] பொச்சாப்புப்[27] பொறாமை[28]
வியர்த்தல்[29] ஐயம்[30] மிகை[31] நடுக்கு[32] எனாஅ
இவையும் உளவே அவையலங் கடையே. - தொல். பொ. 256

இதுமேல் கூறிவந்த எண்ணான்கும் அன்றி இவை முப்பத்திரண்டும் அவைபோல மெய்ப்பாட்டிற்குரிய பிறநிலைக்களன்களாகும்

தொ.மா.க. 165

இயற்கை - தொல்காப்பியத்தை முன்னிலைப்படுத்திய ஆய்வு

கலாநிதி சாந்தி கேசவன்
பேராசிரியர் - இந்துநாகரிகம்
இந்துநாகரிகத்துறை
கலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
kesavans@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கண நூல்களுக்குள்ளே தொல்காப்பியமே சிறந்த இலக்கண நூலாகத் திகழ்கின்றது. இலக்கண விளக்க நூலார் "இலக்கணமாவது தொல்காப்பியம் ஒன்றுமே" என்று கூறுவதில் இருந்து தொல்காப்பியம் ஒப்புயர்வுள்ள நூலாகத் திகழ்கின்றமை விளங்குகின்றது. இதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள், கற்பனையாக இலக்கண விதிகளைப் படைக்காமல் பழந்தமிழர் நாகரிகத்தின தொன்மையான பல்வேறு உண்மைச் செய்திகளையே குறிப்பிடுகின்றது.

தொல்காப்பியம், பொழுது, நிலம் ஆகிய இரண்டின் இயல்பு இயற்கை எனப்படும் என வரைவிலக்கணப்படுத்தும் அதேவேளை பண்டைத் தமிழர் தோன்றி வளர்ந்த ஒவ்வொரு காலச் சூழ்நிலைகளிலும், அவை இயற்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. தொல்காப்பியம் கூறும் இயற்கை பற்றிய செய்திகளை இதுவரை யாரும் தெளிவாகவும் ஆழமாகவும் ஆராயவில்லை. இந்தவகையில் இயற்கையைக் பற்றிய பல்பரிமாணத் தகவல்களை எதிர்கால சந்ததியினரிற்கு இட்டுச் செல்வதே இக்கட்டுரையாளரின் முக்கிய நோக்கமாகும்.

தொல்காப்பியத்தில் இயற்கை பற்றிய செய்திகளை இதுவரை எவரும் ஆழமாக ஆய்விற்குட்படுத்தாததினால் இவ்வாய்வு முதல் நிலை, முன்னோடி ஆய்வாக அமையும். தொல்காப்பியத்தில் இயற்கை பற்றிய இவ்வாய்வு இடம்பெறுவதனால் இயற்கை பற்றி ஆய்வு செய்யும் ஆர்வலர்களிற்கு இது பெரிதும் பயன்படும் வகையில் அமையலாம். அழிந்துவரும் இயற்கையின் பெருமைகளை அறிந்து அதனை பராமரிக்கும் எண்ணத்தை ஏற்படுத்துவதற்கும் இவ்வாய்வு துணைபுரியும் எனலாம்.

வளர்ந்து வரும் நவீன உலகில் இயற்கையானது அழிந்துவரும் அபாய நிலையில் உள்ளது. தொல்காப்பியம் கூறுவது என்ன? இதன் வழி; இயற்கையை பாதுகாப்பது எவ்வாறு? பழந்தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள இயற்கை பற்றிய சிந்தனைகளை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

திறவுச் சொற்கள்: தொல்காப்பியம், இயற்கை, பழந்தமிழர், இலக்கண நூல், ஐவகை நிலங்கள்.

அறிமுகம்

தமிழ் நூல்களிற்குள்ளே சிறந்த நூலாகத் திகழும் தொல்காப்பியம் என்ற சொல், நூலைக் குறிக்கும் போது ஒரே சொல்லாகவும், பொருளை விளக்கும்போது அது தொல்+காப்பு+இயம் என்று முச்சொற்களாகப் பிரிந்து பொருள் தருவதாகவும் அமைகின்றது. இது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும்பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. இலக்கண விளக்க நூலார் "இலக்கணமாவது தொல்காப்பியம் ஒன்றுமே" என்று போற்றினும் இந்நூல் இலக்கண விதிகளை மட்டும் படைக்காமல் பழந்தமிழர் நாகரிகத்தின் தொன்மையான பல்வேறு இலக்கியச் செய்திகளையும் குறிப்பிடுவதனால் தொல்காப்பியம் ஒப்புயர்வுள்ள நூலாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியம் பொழுது, நிலம் ஆகிய இரண்டின் இயல்பு இயற்கை எனப்படும் என வரையறைக்குட்படுத்தும் அதே வேளை பண்டைத் தமிழர் தோன்றி வளர்ந்த ஒவ்வொரு காலச் சூழ்நிலைகளிலும் அவை இயற்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்களைப் பற்றியும் விபரிக்கின்றது. தொல்காப்பியம் கூறும் இயற்கை பற்றிய செய்திகளை இதுவரை யாரும் தெளிவாகவும் ஆழமாகவும் ஆராயவில்லையாதலால் இயற்கையைப் பற்றிய பல்பரிமாணத் தகவல்களை எதிர்கால சந்ததியினரிற்கு கொண்டு செல்வதே இக்கட்டுரையாளரின் நோக்கமாகும்.

இயற்கை

இயற்கை என்பது அண்டத்தின் இயற்பியல் என்று பொருள்படும். அதாவது இயல்பாகவே உருவானது, நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் இயற்கை அன்னையின் படைப்புக்களாகும். தாவரங்கள், விலங்குகள், வாயு மண்டலம், நீர் மண்டலம், தரை மண்டலம், காலநிலை என நாம் காணும் அனைத்துமே இயற்கை என்பதனுள் அடங்குகின்றது. அதாவது, பூமி தோன்றியதில் இருந்து தற்போது வரை தாய்க்கும் சேய்க்குமான தொடர்பு போலவே இயற்கைக்கும் எமக்குமான உறவு காணப்படுகின்றது. இதனை தொல்காப்பியர் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளார்.

கருப்பொருள்

தொல்காப்பியத்தில் கருப்பொருள் பற்றி எடுத்துரைக்கையில் அக்காலகட்டத்தின் சூழல், உணவு, சுற்று உயிரினங்கள் என்பன பற்றி எடுத்துரைத்துள்ளதனைக் காணலாம். இதனை,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு
அவ்வகை பிறவும் கருவென மொழிப"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா. 20)

எனும் பாடலில் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம். இதில், தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில், பண் ஆகியவையும், தீ, நீர், ஊர் போன்ற பிறவும் கருப்பொருள் என்று கூறப்பட்டுள்ளதனைக் காணலாம். அகப்பொருள் இலக்கியத்தில் ஒரு திணைக்குரிய பூவும், புள்ளும் அத்திணைக்குரிய நிலத்தொடும் பொழுதொடும் பொருள் தர வந்திருப்பினும் அவை வந்த நிலத்திற்கும் பொழுதிற்கும் உரிய கருப்பொருளாகக் கொள்ளப்படுகின்றது.

ஐம்பூதங்கள்

அனைத்து ஜீவராசிகளும் பஞ்சபூதங்களால் அல்லது ஐம்பூதங்களின் சேர்க்கையினாலானவை

"நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகமாதலின்
இரு திணை ஐம்பால்
இயனெறி வழாமைத்
திரிவு இல் சொல்லொடு தழா அல் வேண்டும்"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா.91)

இயற்கையில் பிரிக்கமுடியாத வண்ணம் ஒன்றையொன்று பின்னிப் பிணைந்த நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்ற ஐம்பூதங்களால் பிரபஞ்சம் தோற்றம் பெற்றுள்ளது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றதனைக் காணலாம்.

வளி (காற்று)

நவீன காலத்தில் அண்டவியல் (Cosmology) எனும் துறை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இயற்கை அண்டவியல் பற்றிய அறிவியலைக் கூறும் தொல்காப்பியம், உலகம், ஐம்பூதங்களாலானது என அக்காலத்திலேயே பேசுகின்றது.

"*வளி என வரூஉம் பூதக் கிளவியும்*
அவ்வியல் நிலையல் செவ்வியல் தென்ப"

(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உயிர் மயங்கியல், நூற்பா.40)

எனும் பாடல் ஊடாக ஐம்பூதங்களில் ஒன்றாகிய வளி பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது.

நீர்

பஞ்சபூதங்களில் ஒன்றான நீர், "நீரின்றி அமையாது உலகு" என்ற வாக்கிற்கிணங்க உயிர்களின் வாழ்வில் பல்வேறு தேவைகளிற்கு இன்றியமையாததாக அமைந்துள்ளது. அந்தவகையில் மனிதன் இயற்கையோடு இணைந்த நீர்வழிப் பயணம் செய்தான்.

"*முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை*"
(தொல்காப்பியம், பொருளதிகாரம். அகத்திணையியல், நூற்பா. 37)

இதில் "கடல்வழிப் பயணம்" பற்றிக் குறிப்பிடுவதில் இருந்து, கடல் மார்க்கமாகவும் மக்கள் பயணம் சென்று வந்துள்ளமையினைக் காணலாம். அத்துடன், நீர் வாழ் உயிரினங்கள் பற்றியும் அது எடுத்துரைக்கின்றது.

"*நீர் வாழ் சாதியும் அதுபெறற் குரிய*"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா - 44)

தீ

"தீ" இயற்கையின் ஒர் அம்சமாகவும், ஐம்பூதங்களில் ஒன்றாகவும், மக்களால் போற்றி வழிபாடு செய்யும் அம்சமாகவும் விளங்குகின்றது. இதனை தொல்காப்பியத்திலும் வேள்வியில் தீ பெறும் முக்கியத்துவத்தை விளக்குவதாக அமைந்துள்ளதனைக் காணலாம்.

" *கொடுப்போர் ஏத்திக் கொடா அர்ப் பழித்தலும்*
.....
கபிலைக் கண்ணிய வேள்வி நிலையும் ....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா - 29)

இதில் வழிபாட்டில் தீயின் முக்கியத்துவமும், வேள்வி செய்தவர்களிற்கு வழங்கப்படும் தானம் பற்றியும் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம்.

ஆகாயம்

விண்மீன்கள் நிறைந்த வானம் நம் கண் பார்வையின் எல்லையைத் தாண்டி பரந்து காணப்படுகின்றது. அந்தவகையில், தொல்காப்பியத்தில் அண்டத்தின் ஒர் அங்கமான ஆகாயமானது "விசும்பு" என அழைக்கப்பட்டுள்ளதனையும் காணலாம்.

"*நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்.....*"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல்;, நூற்பா.91)

இதனைத், தாயுமானவர் "பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிலைத்திருக்கும் பரிபூரணானந்தம்" என்று குறிப்பிடுவது நினைவில் கொள்ளத்தக்கது.

நட்சத்திரங்கள்

மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விண்மீன் நாளில் பிறப்பர். அம்மீன்கள் ஒவ்வொன்றும் நிற்கும் அமைப்பிற்கேற்ப அவர்களது எதிர்காலம் கணிக்கப்படும் என்பதனை பின்வரும் பாடலின் ஊடாக அறியலாம்.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும் ....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா 16, வரி - 4,5,6)

என்பதால், தொல்காப்பியக் காலத்தில் மூவகைக் காலத்தையும் ஆய்ந்து கூறும் காலக் கணிதர்கள் இருந்துள்ளனர் என்பதுடன் நட்சத்திரங்களின் அமைப்பினைக் கொண்டு குறித்த நேரத்தில் பிறக்கும் குழந்தையின் ஆயுள் பற்றியும் அதன் எதிர்காலம் பற்றியும் குறித்துள்ளமையினையும் அறியமுடிகின்றது. இவற்றின் மூலம் இயற்கையின் அம்சமான பிறப்பு, இறப்பு, ஆகாயம், நட்சத்திரம் என்பன விதந்துரைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

காலம் - பொழுது - நிலம்

தமிழர்களது தர்மம் பூமியிலிருந்தும், இயற்கையில் இருந்தும், நம் ஆன்மாவிலிருந்தும் முழு பிரபஞ்சத்தையும் நமக்குள் அரவணைக்க வைக்கிறது என டேவிட் ஃப்ராலி (Dr. David Frowley) குறிப்பிடுவது போல உலக இலக்கியங்களில் எங்கும் காணப்படாத "திணை" என்ற பொருளில் நிலங்களை வகுத்து அந்நிலங்களிற்குரிய பண்புகள் பற்றி விளக்கும் நூல் தொல்காப்பியமாகும்.

காலம்

வாழ்வில் காலம் முக்கியமான ஒன்று. இது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என வகைப்படுத்தப்படுகின்றது. இக்காலங்கள் காலவோட்டத்தில் இடம்பெறும் செயல்களை அடிப்படையாகக் கொண்டவை.

"இறப்பே நிகழ்வே எதிர தென்னும்
திறந்தியன் மருங்கில் தெரிந்தனர் உணரப்
பொருள் நிகழ் வுரைப்பது கால மாகும்"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூற்பா - 194)

எனும் பாடலில் ஒரு பொருள் நிகழ்ச்சி இடம்பெறும் பாலமாக காலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். இந்த மூன்று காலங்களும் இன்னோரிடத்தில்

"..... மறுவில் செய்தி மூவகைக் காலமும்....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா.16, வரி - 4)

என்று பாடப்படுவதைக் காணலாம்.

பொழுது

பொழுது என்பது காலத்தினையே எடுத்துரைக்கின்றது. இது ஒரு வருடத்தின் நாள், கிழமை, வருடம், அறுவகைப் பெருபொழுது, அறுவகைச் சிறுபொழுது என்பனவற்றை உள்ளடக்கும். அத்துடன் நிலம் எனப்படும்போது, திணை நிலங்களும் அவற்றின் சுற்றுச் சூழலும் அடங்கும்.

"முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா. 4)

எனும் பாடல் ஊடாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். முதல் பொருள் என்று சிறப்பித்துக் கூறப்படுவது நிலமும் பொழுதும் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பொழுது என்பதில் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய ஆறு பருவகாலங்களும் சிறுபொழுது என்பதில் வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, இரவு, யாமம் எனும் ஆறு பொழுதுகளும் அடங்கும். இந்த ஒவ்வொரு பெரும்பொழுது சிறுபொழுதுகளும், இயற்கையான புவியியலுக்கேற்ப நானிலங்களோடு இணைத்து தொல்காப்பியத்தில் சிறப்பிக்கப்படுகின்றன. உதாரணமாக கார்காலமானது மனதிற்கு இனிமையை அளிக்கும் சிறந்த பெரும்பொழுதாகும். அப்பொழுதின் மாலைச் சிறுபொழுதினை காடும் காடுசார்ந்த இடமுமான முல்லை நிலத்தோடு இணைத்து

"காரும் மாலையும் முல்லை"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா - 6)

என்று பாடுகின்றது தொல்காப்பியம். இப்பாடலில், ஆவணித் திங்களும் புரட்டாசித் திங்களுமாகிய கார் காலம் குறிப்பிடப்படுவதுடன், அக்காலத்து மாலைப் பொழுது (மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை) சிறப்பாகக் கூறப்படுகின்றது. முல்லைத் திணைக்குரிய பெரும் பொழுது, சிறு பொழுது என்பனவும் எடுத்துரைக்கப்படுகின்றன.

திணை ஒழுக்கம்

நானிலங்களிலும் வாழும் மக்களது வாழ்க்கை முறையே திணை ஒழுக்கம் எனப்படும். இவ் ஒழுக்கமானது குறிப்பிடப்படும் போது அந் நிலங்களிற்குரிய பூக்களின் பெயர்களை மையப்படுத்தி அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. அத்தகைய திணை ஒழுக்கம் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியம், இயற்கையோடு இணைந்த அச்சூழலை வர்ணனைகள் மூலம் எடுத்துரைத்துள்ளதனையும் காணலாம்.

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா 21)

என மேற்குறிப்பிடப்பட்ட பாடலில், ஒரு திணைக்குரிய பூவும், புள்ளும் அகத்திணைக்குரிய நிலத்தோடும் பொழுதோடும் பொருந்தி வந்திலவாயினும் அவை வந்த நிலத்திற்கும் பொழுதிற்கும் உரி கருப்பொருளாகக் கொள்ளப்படும் எனவும் குறித்த நிலவகையினர் இயற்கையோடு பின்னப்பட்டுள்ளனர் என்பதனையும் அவர்களின் திணைக்குரித்தான பறவைகள், பூக்கள் என்பன பற்றி எடுத்துரைக்கப்படுவதன் ஊடாகக் இயற்கையின் அம்சங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளதனைக் காணலாம்.

நிலம்

ஐம்பூதங்களில் ஒன்றான நிலம் பற்றி தொல்காப்பியம் பல இடங்களில் பேசுகிறது.

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் - நூற்பா 21)

எனவும்

".....வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்... "
(தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமையியல், நூற்பா.20)

எனவும்

"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே....."
(தொல்காப்பியம், சொல்லதிகாரம், பெயரியல், நூற்பா. 11)

எனவும்

"இருநிலத் தீண்டா அருநிலை....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா. 13)

எனவும் குறிப்பிடுவதனைக் காணலாம். திணை என்ற பகுதி நிலம் பற்றி பேசுவதாக அமைந்துள்ளது. அவற்றை நான்கு நிலங்களாக வகைப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாகும்.

குறிஞ்சி

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். குறிஞ்சி என்பது மலைப்பகுதிகளில் அதிகமாக வளரும் குறிஞ்சிப்பூ சார்ந்து தோன்றிய பெயர். இந்நிலத்தில் வாழ்பவர்கள் மலையில் உள்ள வளங்களைக் கொண்டு தமது வாழ்க்கையினை வாழ்ந்தனர். இந் நிலம் பற்றித் தொல்காப்பியர்,

"வேந்து வினை இயற்கை வேய்தன் ஓரீஇய
ஏனோர் மருங்கினும் எய்திடன் உடைத்தே...."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா. 34)

எனும் பாடலில், குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம்.

"..... குறிஞ்சி
கூதிர்யாமம் என்மனார் புலவர்"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா - .6,7)

ஐப்பசித் திங்களும் கார்த்திகைத் திங்களுமாகிய கூதிர்க் காலமும், நகர் பிறவும் முறையே குறிஞ்சித் திணைக்குரிய பெரும் பொழுது, சிறு பொழுது பற்றியும் குறிப்பிட்டுக் கூதிர்காலத்திற்கான இயற்கை சூழலினையும் வர்ணித்திருப்பதனைக் காணலாம்.

முல்லை

காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை எனப்படும் இங்கு மந்தை வளர்ப்பே பிரதான தொழிலாகக் கொள்ளப்பட்டதுடன் வேட்டையாடுதலும் இடம்பெற்றது. மக்கள் காடுகளுடன் இணைந்த வாழ்வினையே தம்மோடு கொண்டிருந்தனர்.

"காரும் மாலையும் முல்லை...."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா - 6)

மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் ஆகும். இங்கு வாழ்பவர்கள் உழவர்கள் ஆவார். மருத நிலம் பற்றி தொல்காப்பியம் விபரிக்கையில், இராப்பொழுதின் பிற் கூறியவைகளையும், பகற்பொழுதின் முற்கூறாகிய விடியலும் மிகுந்த திணைக்குரிய சிறுபொழுதுகள் நிலவும் திணையாக குறிப்பிடுகின்றார். இதனை நோக்குகையில் காலைப் பொழுதின் காட்சிகளும் மாலைப் பொழுதின் காட்சிகளும் பொழுதுகளின் சூழல் நிலையினையும் அப்பொழுதுகளின் இயற்கைச் செழிப்பினையும் நம் மனக்கண்முன் கொண்டு வருகின்றன. இதனை,

"வைகறை விடியன் மருதம்....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா.9)

எனும் பாடலூடாக அறிய முடிகின்றது.

நெய்தல்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் ஆகும். இங்கு மீனவர்கள் உப்பு விளைவித்தல், மீன் பிடித்தல் தொழில்களை மேற்கொண்டு தமது வாழ்வினை இயற்கையுடன் இணைந்து வாழ்ந்துள்ளதனைக் காணலாம். தொல்காப்பியர் நெய்தல் நிலம் பற்றி வர்ணிக்கும் போது,

"..... நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும் ....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா.10)

நெய்தல் திணைக்குரிய சிறு பொழுது பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். இதில் நெய்தல் நிலம், அங்கு நிலவும் பொழுது (காலநிலை) என்பன பற்றி சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.

பாலை

ஐந்தாவது நிலப்பகுதியாகிய பாலை பற்றி தொல்காப்பியத்துக்குப் பிந்தைய சங்க இலக்கியங்கள் விரிவாகப் பாடும் போதும் தொல்காப்பியத்தில் விரிவான குறிப்பில்லை.

இயற்கை - இறைவழிபாடு

தொல்காப்பியம் "மக்கள்" ஆறறிவு (தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல் - 33) என்று பிறவுயிர்களில் இருந்து பிரித்துக் கூறும் அதேவேளை ஒவ்வொரு திணைக்குமுரிய நிலங்களிற்கென தனித்தனியே தெய்வங்கள் வகுக்கப்பட்டிருப்பதுடன் அத்தெய்வங்கள் உறையும் இயற்கையின் கொடையான நிலத்துடன் தொடர்புபடுத்தி எடுத்துரைக்கின்றது. இதனை,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா.5)

எனும் செய்யுள் ஊடாக அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் தெய்வங்கள் உறையும் சூழல் பற்றி எடுத்துரைப்பதனை நோக்குகையில் நால்வகை நிலங்களும் நான்கு வகையான இயற்கை அமைப்பினைக் கொண்டுள்ளதும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

நால்வகை திணைக்குரிய நிலங்களிலும் தெய்வங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான பூசை முறைகள் என்பன பேணிப் பாதுகாக்கப்பட்டதுடன் அவை நால்வகை திணைக்குரிய மக்களாலும் இயற்கையுடன் இணைந்து காக்கப்பட்டன. என்பதனை, "மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே...." என்னும் பாடல் மூலமாகவும், நால்வகை நிலங்களுக்கும், உரிய தெய்வங்களிற்குச் செய்யப்படும் பூசனை, விழா ஆகியவற்றையும் பேணிக் காக்கும் அதன் காவற் பிரிவு நால்வகை மக்களிற்கும் உரியது என்பதனையும் காணலாம்.

இயற்கை பொருட்களான ஆறு, கடல், மலை, காடு, பெரிய மரங்கள், வளி, தீ என்பன கடவுளாக வழிபடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் கூறும் வழிபாடுகளைப் பற்றி நோக்கும் போது, இயற்கை வழிபாடே இங்கு முதன்மை பெறுவதனைக் காணலாம். இதனை,

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா. 30)

எனும் பாடல் ஊடாக, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகைத் திணைகளுக்குரியனவாக மேற்சொல்லப்பட்ட தெய்வங்களிற்குரிய பூசை முதலியன முறையாக நடைபெறுவதனையும், மக்கள் தம் நிலைகளிற்கேற்ப பழியின்றி நடந்துகொள்வதனையும் அறத்தின் வழி பிழையின்றி நடந்து கொள்வதனையும் குறிப்பிடுகின்றது. இதில் இயற்கையோடு ஒன்றிய திணை வாழ்வில் வழிபாடு எந்தளவிற்கு முக்கியமானது என்பதுடன் அவ் வழிபாடுகளும் அவ் இயற்கையோடே ஒன்றிய வழிபாடாக அமைந்திருப்பதனையும் அறிய முடிகின்றது.

முருக வழிபாடு

மலையும் மலைசார்ந்த நிலமாகிய குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகன் பற்றிய செய்திகள் தொல்காப்பியத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் வழிபாட்டு முறைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். சான்றாக,

"வெறியறி சிறப்பின் செவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்து புகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா - 5, வரி - 1 - 6)

வெறியாடுதலைச் செய்யும் கடமைகளை அறியும் சிறப்பினையும் உயிர்க்கொலை செய்யுமாறு கூறுகின்ற கொடிய வாயினையும் உடைய வேலன், காந்தள் மாலையணிந்து தெய்வமேறி ஆடுகின்ற காந்தளும், மிகவும் பகையினை உடைய அரசன், பகைவர்களிற்கும் தன் படைக்கும் வேறுபாடு காணவேண்டி அடையாளமாக அணிந்த உயர்ந்த புகழையுடைய பனம்பூ, வேப்பம்பூ, அத்திப்பூ ஆகிய பூவும் வாடுகின்ற கொடியல்லாத வள்ளியென்னும் கூத்தும், வீரர்களால் புகழப்பட்ட கெடாத வீரக்கழல் நிலையும், புறங்காட்டி ஓடாது வெருண்டு நிற்கும் பகை மன்னனது எண்ணத்தை தாவரங்களோடு பொருத்திக் காண்கின்ற உன்னத நிலையும் வேலன் வழிபாட்டிற்கு பயன்படுத்தப்பட்ட பூக்களும், சடங்கு முறைகளும் தொல்காப்பிய காலத்தில் பின்பற்றப்பட்டிருப்பதனைக் காணலாம்.

கொற்றவை வழிபாடு

தொல்காப்பிய காலத்தில் இயற்கையோடு இணைந்த தாய்த்தெய்வ வழிபாடும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை,

"மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா 4)

எனும் பாடலில், மறத் தொழிலின் பயன் பெறும் குடியினது பெருமையைக் கூறுதலும், சிறப்புப் பொருந்திய வீரமகனின் தன்மையினை எடுத்துக் கூறுவதனைக் காணலாம். குறிஞ்சிக்குப் புறனாகிய வெட்சித் திணையாம் குடிநிலை என்றதனால் இது மைந்தர்க்கும் மகளிர்க்கும் பொதுவானது இதில் கொற்றவை வீரத்தின் கடவுளாகவும் போர்க் கடவுளாகவும் வழிபடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சூரிய, சந்திர வழிபாடு

அறுவகைச் சமயங்களில் ஒன்றான சௌரம் எனப்படும் சூரிய வழிபாடானது, ரிக்வேதம் காலத்தில் சிறப்புற்று விளங்கியதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய சூரிய வழிபாட்டு நெறி தொல்காப்பிய காலத்திலும் இடம்பெற்றது .

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா.27)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. கன்னிப் பெண்கள் தங்களது திருமணம், தாங்கள் விரும்பும் வண்ணமே நிறைவேறுதல் வேண்டும் என வேண்டிப் பிறையைத் தொழுவது தொன்மை வழக்கு. அவ்வியற்கை வழிபாட்டினைப் போன்றே கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய இயற்கைப் பொருள்கள் மூன்றுக்கும் தெய்வத் தன்மை ஏற்றி வழிபட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஞாயிற்றுத் தொகுதியின் தலைவனான சூரியன் பற்றியும், தண்மை ஒளி பரப்பும் சந்திரன் பற்றியும் குறிப்பிடும் தொல்காப்பியச் செய்யுளினூடாக சூரிய, சந்திர வழிபாடு இடம்பெற்றுள்ளதனையும் அறியமுடிகின்றது. இதனை,

"ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல்....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூற்பா- 192)

எனும் செய்யுளில், சூரியன் மற்றும் சந்திரன் என்பவற்றின் முக்கியத்துவம் மற்றும் நிலைப்பாடு என்பனவும் எடுத்துரைக்கப்பட்டு, இவை அனைத்தும் கேட்போர் (மக்கள் அல்லாத ஆனால் இயங்கக் கூடியவை) எனும் நிலையில் உயர்த்திக் கூறப்பட்டுள்ளதனையும் காணலாம்.

நடுகல் வழிபாடு

தொல்காப்பியக் காலத்தில் இயற்கை வழிபாட்டுடன் நடுகல் வழிபாடும் முக்கிய இடம் பெறுகின்றன. நடுகல் வழிபாடானது, போரில் வீரமரணம் எய்தியவர்களைத் தெய்வமாக நினைத்து இவர்களைப் புதைத்த இடத்தில் அவர்கள் நினைவாக கற்களை நாட்டி வழிபாடு செய்வர். இவ் நடுகற்களில் வீரமரணம் எய்திய வீரனது பெயர் அல்லது உருவம் பொறித்துக் காணப்படும். இதனை.

"..... காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்த மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்
சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா - 5, வரி - 19 - 22)

இதில் நடுகல் வழிபாட்டிற்கான கற்கள், இயற்கையாகக் கிடைக்கப்பட்ட குறித்த சில கற்களையே தெரிவுசெய்து வழிபட்டமையினைக் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம்.

மரங்கள்

தாவரங்கள் இயற்கையின் கொடையாகும். இத்தகைய கொடையின் ஓர் அங்கமான மரங்கள் பற்றித் தொல்காப்பியர் தனது பாடல்களில் குறிப்பிட்டுள்ளதுடன், அவற்றின் சிறப்புக்கள் பற்றியும் எடுத்துரைப்பதனையும் காணலாம்.

"..... வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்து புகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மா பெருந் தானையர் மலைந்த பூவும் ....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா. 5, 2 - 3,4,5 வரி)

எனும் பாடலில், போரிடும் மறவர் தம்மிடையே வேறுபாடு தெரிய வேண்டிச் சூடிய பெரும்புகழை உடைய சத்தத்தினை வேறுபடுத்தி உரிய பனை, வேம்பு, ஆத்தி என்னும் பூக்களின் பெயர்களால் வழங்கும் துறைகளாகும் எனக் குறிப்பிடுகின்றார். அதாவது மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் சில நகர்களைக் குறிப்பிடும் போது அங்கு சிறப்புப் பெற்று விளங்கும் மரங்களின் பெயர் கொண்டு விபரிப்பதனைக் காணலாம். அத்துடன்,

"..... மா மரம் புட்பறை செய்தி....."

(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா - 20)

என்பதில் மரம் குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

மரங்களும் அவற்றின் அங்கங்களும்

இயற்கையின் ஓர் அங்கமான மரங்களும் அவற்றின் அங்கங்களான இலை, பூ, தண்டு, காய் என்பன பற்றியும் அவற்றின் பண்புகள் பற்றியும் இடம்பெற்றுள்ளது.

"இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்
மரனொடு வருஉம் கிளவி யென்ப"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா - 89)

எனும் பாடலில், இலை, தளிர், முறி, தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை என்று கூறப்படுபவை எல்லாம் மரத்தினுடைய உறுப்புக்கள் என்றும், இருவகை உயிர்ப்பும் இல்லாதனவற்றுள் இவ்வுயிர்ப்புப் பெயர் பெறுவன ஒரு முழு மரம் எனப்படும் எனக் குறிப்பிடுவதனைக் காணலாம்.

புல் மற்றும் புற்களின் அங்கங்கள்

புற்கள் பல்வேறு வகைகளைக் கொண்டன. அவை எவ்வாறான உறுப்புக்களைக் கொண்டிருந்தால் அவை புற்கள் என ஏற்கப்படும் என்பதனை தொல்காப்பியர் விளக்குகின்றார்.

"தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே சேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா - 88)

தோடு, மடல். ஓலை, ஏடு, இதழ், பனை, ஈர்க்கு, குலை, என்பனவும், பிறவும், புறக்காழனவாகிய புல்லின் கண் பொருந்திய உறுப்புக்கள் ஆகும். இவையும் புல்லெனப்படும் எனவும் குறிப்பிடப்படுகின்றதனைக் காணலாம்.

சோலைகள்

தொல்காப்பியம் இயற்கையை மட்டுமன்றி மக்களால் இயற்கைக்கு இணைவாக அமைக்கப்பட்ட இயற்கையின் அம்சமான குளிர்மையான சோலைகள் பற்றியும் பாடுகிறது:

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்....."
(தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூற்பா - 75 - வரி - 3)

விலங்குகள்

இயற்கையின் அம்சங்களில் முக்கிய அங்கமான உயிரினங்களில் விலங்குகளும் முக்கிய இடம் வகிக்கின்றன. அத்துடன் விலங்குகள் மக்களால் வளர்க்கப்பட்டதுடன், மக்களால் நன்றாகப் பராமரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் புறத்திணை மரபிலே யானை, குதிரை என்பன வளர்க்கப்பட்டது பற்றியும் அவை மக்களிற்கு பயன்பட்ட முறை தொடர்பாகவும் எடுத்துரைத்துள்ளதனைக் காணலாம்.

"தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், நூற்பா - 17)

எனும் பாடலில் புறத்திணையில் நடைபெறும் போர் பற்றி குறிப்பிடும் போது யானை, குதிரை என்பன மக்களால் பழக்கப்படுத்தி தமது போர் மற்றும் தமது இதர வேலைகளிற்கும் பயன்படுத்தியுள்ளதனைக் காணலாம்.

விலங்குகளும் அவற்றிற்குரிய ஆண், பெண் இனங்களுக்கு வழங்கப்படும் பெயர்கள் பற்றியும் தொல்காப்பியம் குறிப்பிடப்படுகின்றது. எடுத்துக்காட்டாக,

"குரங்கின் ஏற்றைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
.....
கடிய லாகா கடனறிந் தோர்க்கே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா - 69)

குரங்கின் ஆணைக் "கடுவன்" எனவும், மரத்தில் வாழும் கூகைகள் "கோட்டான்" எனவும் சிவந்த வாயினையுடைய கிளியைப் "தத்தை" எனவும் செவ்விய வாயினையுடைய பூனையை "பூசை" எனவும், ஆண் குதிரையை "சேவல்" எனவும், கருநிறப் பன்றியை "ஏனம்" எனவும், ஆண் எருமையைக் "கண்டி" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இயற்கையின் அழகை மாத்திரம் வெறுமனே இரசித்துவிடாது விலங்குகளை நுட்பமாக அவதானித்து அவற்றின் குட்டிகளுக்கும் பெயர் சூட்டுமளவு இயற்கை மீது ஆர்வம் கொண்டவர்கள் தொல்காப்பிய காலத் தமிழர் என்பதை உணரமுடிகின்றது.

உயிரினப் பகுப்பும் கூர்ப்பும்

புவியில் உதித்த உயிர்கள் அனைத்தும் இயற்கை சார்ந்ததாயினும், அவற்றிற்குரிய அறிவும் இயல்பும் தனித்துவமானவை. இவை கூர்ப்பின் வழியே நடைபெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வுயிர்களின் அறிவைப் பற்றித் தொல்காப்பியம்

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா - 30)
"நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறவே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா - 31)

"மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறவே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா - 32)

"மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறவே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், நூற்பா - 33)

இதில், உயிர்களின் வகைகளும் அவற்றின் அறிவுப் பகுப்புக்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். அந்தவகையில் சிதலும் எறும்பும் மூன்றறிவுடையன என்றும் அட்டைகளிற்கும் மூன்றறிவு என்றும் குறிப்பிட்டு, நண்டும், தும்பியும் நான்கறிவுடையன எனவும் நான்கு கால்களைக் கொண்ட விலங்குகளும், பறவைகளும், பாம்பு, மீன், முதலை, ஆமை முதலியன ஐந்தறிவுடைய உயிரினங்கள் எனவும், மனிதன் ஆறறிவுடையவன் எனவும் குறிப்பிட்டு விளக்குவதனைக் காணலாம்.

முடிவுரை

தொல்காப்பியத்தின் ஊடாக பழந்தமிழர்கள் காலத்தில் வழக்கில் இருந்த இயற்கையியலுடன் தொடர்பான பழக்கவழக்கங்களையும் அக்கால மக்களது வாழ்வில் இயற்கை எந்தளவிற்கு சிறப்பிடம்

பெற்றுள்ளது என்பதனையும் அறியமுடிவதுடன், மக்கள் இயற்கையோடியைந்த வாழ்க்கைக்குக் கொடுத்திருந்த முதன்மையினையும் கண்டுகொள்ள முடிகின்றது.

தொல்காப்பியத்தில் இயற்கையின் இடத்தை ஆழமாக புரிந்துகொள்ளும் இம்முயற்சி, தமிழ் மொழி சார்ந்த காலமாற்றங்களினூடே தற்காலச் சிந்தனை மரபு ஆய்வுகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்பதற்கான முன்னோடி முயற்சிகளில் ஒன்றாகும். இந்த ஆய்வு, தொல்காப்பியத்தில் இயற்கை பற்றிய செய்திகளைச் சுட்டிக்காட்டும் முன்னிலை ஆய்வுகளுள் ஒன்றாக அமைகின்றமையால், தொல்காப்பியர் காலத்தில் தமிழர் மத்தியில் இயற்கையின் வகிபாகம் என்ன என்பதனை ஆய்வு செய்யும் ஆர்வலர்களுக்கு இது பெரிதும் பயன்படும்.

இயற்கையின் அம்சமான மனிதனின் வாழ்க்கை நிலையற்றது. ஆனால், இயற்கை என்றும் நிலைத்து நிற்கக்கூடிய ஒன்று. அளவுக்கு மிஞ்சிய மனிதப்பாவனையின் காரணமாகவும், அபிவிருத்தியின் காரணமாகவும் இயற்கை வளங்களையும், இயற்கையின் கொடைகளையும் நாம் இன்று இழக்கும் நிலையில் உள்ளோம். இயற்கை எதையும் எதிர்பாராது தன்னில் தங்கியிருக்கும் அனைவருக்கும் அள்ளிவழங்குவதாக உள்ளது. மனிதனோ எல்லாவற்றையும் எதிர்பார்ப்போடு செய்பவனாக உள்ளான். இயற்கையைப் போலவே எவ்வித எதிர்பார்ப்புமின்றி தன் கடமைகளைச் செய்யும்போது மனிதன் பூரணமான மனிதனாகின்றான் என்பது வெள்ளிடைமலை.

இயற்கையின் கூறுகளான தாவரங்களும் விலங்குகளும் மனித வாழ்க்கைக்கு மட்டுமன்றி ஏனைய உயிரின நிலைத்திருப்பிற்கும் காரணமாக அமைகின்றன. உணவு, மூலிகை, நீர் வளப் பாதுகாப்பு, தாவரப் போர்வையால் நிலப் பாதுகாப்பு, இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு என்பன கிடைக்கின்றன. சூழலின் அனைத்துவித செயற்பாடுகளிலும் மரங்களும் தாவரப் போர்வைகளுமே முக்கிய பங்குவகிக்கின்றன.

காடுகள், வன விலங்குகள், பூச்சிகள், பறவைகள் என்பனவும் தற்காலத்தில் அபிவிருத்தி மற்றும் இன்னபல காரணங்களினால் அழிவடைந்து வருகின்றன. நீர் மாசடைதல், வளி மாசடைதல், நிலம் மாசடைதல், ஓசோன் படை சிதைவு, அமில மழைப் பொழிவு எனப் பல்வேறு அபாயங்கள் ஏற்பட்டு வருவதனால் எதிர்கால சந்ததியினர் பெரும் இன்னல்களை எதிர்கொள்ளவேண்டிய நிலைக்குட்படுத்தப்படுகின்றனர். ஆனால் பல்லாயிரம் வருடங்களிற்கு முன்பு தோன்றிய தொல்காப்பியத்தில் அன்றே இயற்கையையும், இயற்கை வளங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணக்கரு முகிழ்த்துள்ளதனைக் காணலாம்.

இக்கட்டுரையிலுள்ள இயற்கை குறித்த தொல்காப்பிய விவரிப்புக்கள், தமிழர் வாழ்க்கை இயற்கையுடன் இணைந்து நின்றதை பிரதிபலிக்கின்றன. தொல்காப்பியம் சுட்டிக்காட்டும் தமிழர் வாழ்வியலில் இயற்கையுடன் கூடிய மனோதத்துவ ரீதியான புரிதல் முக்கிய இடம் வகித்தது என்பதனையும், தமிழர் பாரம்பரியத்தில் இயற்கை நிலையான ஆதாரம் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றது. இந்தப் புரிதலுடன் எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரும் தொல்காப்பிய மரபில் நின்று இயற்கையைப் பேணவேண்டும் என்பதே இக்கட்டுரையாசிரியரது வேணவா.

துணைநின்ற நூல்கள்

1. தரமணி, (17.06.2019), நச்சினார்க்கினியார் உரை, எழுத்ததிகார மூலமும் உரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. மூவேந்தன்.ப.சு, தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை), தமிழாய்வுத் துறை, அருள்மிகு சுப்பிரமணிசுவாமி அரசினர் கல்லூரி, திருத்தணி.

3. வெள்ளைவாரணனார்.க, (1978), தொல்காப்பியம் - வரலாறு (மூன்றாம் பதிப்பு), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
4. சிதம்பரம்.வ.உ, (1928), தொல்காப்பியம் - இளம்புரணர் எழுத்ததிகாரம் பதவுரை.
5. தேவநேயப்பாவணர், (1944), தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் உரை, தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகம், திருநெல்வேலி.
6. பாலசுப்பிரமணியன்.சி, (1995), தொல்காப்பிய கட்டுரைகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
7. சுப்பிரமணியன்.சா.வே, (2008), தொல்காப்பியம் முழுதும் விளக்கவுரை, மெய்யப்பன் பதிப்பகம்.
8. தேவநேயப்பாவாணர்.ஞா, (2017), பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், கௌரா பதிப்பகம், ப. 156
9. மயிலை சீனி. வேங்கடசாமி, (2008), தொல்காப்பியம் பன்முகவாசிப்பு, மாற்று வெளியீடு, ப.42
10. மாணிக்க நாயக்கர்.பா.வே, (1968), தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம், சைவசித்தாந்த நூற்பதிப்புகக்கழகம், ப.5
11. புலியூர்கேசிகள், 2003, தொல்காப்பியம் பொருளதிகாரம் - தெளிவுரை, பாரிநிலையம்,
12. (1978), தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை), கழக வெளியீடு, சென்னை.
13. (1969), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை), கழக வெளியீடு, சென்னை.

தொ.மா.க. 170

தொல்காப்பியத்தில் நாட்டுப்புறக் கூறுகள்

கலாதேவி அரியராசா
முதுகலை, தஞ்சைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம், இன்று, தமிழில் கிடைக்கும் நூல்களுள் காலத்தால் முந்தியது. தமிழ் மொழி, இலக்கியம், இலக்கணம் முதலியவை நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில் தொல்காப்பியம் தொகுக்கப்பட்டது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதனை உறுதிப்படுத்தும் வகையில், தொல்காப்பியர், தனக்கு முன் இலக்கணம் படைத்த ஆசிரியப் பெருமக்களை, தொல்காப்பியத்தில், 200 க்கும் மேற்பட்ட இடங்களில் நினைவு கொள்கிறார். தொல்காப்பியம் கூறும் "பண்ணத்தி" போன்ற சில இலக்கிய வடிவங்கள், அவர் காலத்திற்கு முற்பட்ட காலங்களில் வழக்கிலிருந்த நாட்டுப்புறப் பாடல்களின் எச்சங்களாக இருக்கலாம் என்ற கருத்தை வலியுறுத்துவதாகவுள்ளன. பாணர்களின் வாய்மொழிப் பாடல்கள் படிப்படியாக அவற்றின் முக்கியத்துவத்தை இழக்க அந்த இடங்களைப் புலவர்கள் நிரவினார்கள் என்பது தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது. இதையே, பேரா. கா. சிவத்தம்பி அவர்களும், 'பாணர் மரபிலிருந்து விடுபட்டுப் பாடல் என்பது பிரக்ஞை பூர்வமான ஒரு புலமைத் தொழிற்பாடாகக் கருதப்படும் நிலையிலேயே தொல்காப்பியம் தோன்றியுள்ளது" என்கிறார்.

ஆய்வுச் சிக்கல் - தொல்காப்பியத்தில், ஆங்காங்கே கூறப்பட்டிருக்கும் நாட்டார் பாடல்களின் எச்சங்களை அடையாளங் கண்டு பிரித்தெடுப்பது சிக்கல்.

கருதுகோள் - தமிழ் மொழியில், சங்கப் புலவர்களது பாடல்கள் புதிய பாதையில் பயணிக்கு முன்பாகவே பாணர்களது நாட்டார் பாடல் வகைகள் வழக்கில் இருந்திருக்கின்றன, தொல்காப்பியர் தவிர்க்க முடியாத காரணத்தாலேயே நாட்டார் பாடல்களின் எச்சங்களைத் இணைத்துக் கொண்டார் என்பதே இந்த ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வியல் நெறிமுறை - வரலாற்று ஆய்வு, சமூகவியல் ஆய்வு, ஒப்பாய்வு.

முதன்மைச் சான்றுகள் - தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள்

துணைச் சான்றுகள் - நாட்டார் பாடல்கள் தொடர்பான முன்னைய ஆய்வுகள்,

பேரா. கா. சிவத்தம்பி - தொல்காப்பியமும் கவிதையும்,

அம்மன்கிளி முருகதாஸ் - சங்கக் கவிதையாக்கம் - மரபும் மாற்றமும், சங்க இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்.

ஆய்வமைப்பு - இயல் 1 - நாட்டுப்புறவியல், இயல் 2. தொல்காப்பியத்தில் நாட்டுப்புறவியல்

இயல் 3 - நாட்டுப்புறவியலும் தொல்காப்பியச் செய்யுளியலும், இயல் 4. முடிவுரை

பாடல் பாடும் புலவனுக்கு, பாடல் பாடுவதற்குரிய இலக்கணமாக அமைக்கப்பட்ட தொல்காப்பியம், பொருளதிகாரத்தில், நாட்டார் பாடல்களின் எச்சங்கள் பலபேசப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கூத்துகள், விடுகதைகள், பழமொழிகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், சடங்குகள் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். கொற்றவை வழிபாடு, சகுனம் பார்த்தல், குறி கேட்டல் எனப் பல பழக்கவழக்கங்கள் இன்னும் மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். தொல்காப்பியத்தை நாட்டுப்புறவியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வது தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக அமையும்.

முன்னுரை

நாட்டுப்புறவியல் என்பது பல்வேறு மரபுகளின் வழி வந்த விடயங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான பழைய மரபுக் கற்கை நெறி. மேலும் வாய்மொழி மரபில் வழங்கி வந்த அவர்களின் பழக்க வழக்கங்கள், கொண்டாட்டங்கள், அவர்களின் பிறப்புத் தொடங்கி இறப்பு வரை அவர்களால் கைக்கொள்ளப்பட்ட அத்தனை நிகழ்வுகளையும் தன்னகத்தே கொண்டதுதான் நாட்டுப்புறவியல். உலகம் முழுவதிலும் இத்தகைய நடைமுறை இருந்திருக்கின்றது.

நாட்டுப்புற இலக்கியப் பிரிவில் நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் என்பன அடங்கும். நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கொண்டாட்டங்களை இன்னுமொரு பிரிவாகவும் பார்க்கலாம். அவையாவன திருவிழாக்கள், நாட்டுப்புறக் கலைகள், சமய நம்பிக்கைகள் மற்றும் ஆடல்கள், பாடல்கள், விளையாட்டுகள், இன்னும் பலவும் இதில் அடங்கும். இவை யாவும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே எல்லா நாடுகளிலும் வளர்ந்து வந்திருகின்றது.

நோக்கம்

தொல்காப்பியத்தில் நாட்டுப்புறக் கூறுகள் எவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றன என்பது பற்றிய ஒரு ஆய்வை மேற்கொள்வது.

தொல்காப்பியம் தமிழில் தோன்றிய நூல்களில் மிகவும் பழமையானது. தொல்காப்பியத்தில் பழந்தமிழர் தொடர்பான செய்திகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் பண்ணத்தி, பிசி, முதுமொழி, பொய்ம்மொழி, நகைமொழி, நிலக் கடவுள் வழிபாடுகள் போன்றவை நம் தமிழர் பண்பாட்டில் நிலவி வந்த எழுதப்படாத இலக்கிய வகைகளாகும்.

எட்டு இலக்கிய வகைகள் தோன்றுவதற்கு முன்பே நாட்டுப்புற இலக்கியம் தோன்றியுள்ளது. ஒவ்வொரு மொழியிலும் எழுத்து தோன்றுவதற்கு முன்பே கதைகளும் பாடல்களும் தோற்றம் பெற்று விட்டன என்று ஆய்வாளர் நா. வானமாமலை கூறுகின்றார்.

"பாணர் மரபிலிருந்து விடுபட்டுப் பாடல் என்பது பிரக்ஞை பூர்வமான ஒரு புலமைத் தொழிற்பாடாகக் கருதப்படும் நிலையிலேயே தொல்காப்பியம் தோன்றியுள்ளது. - என்கிறார் கார்த்திகேசு சிவத்தம்பி

நாட்டுப்புற இலக்கியங்கள் பற்றி தொல்காப்பியம் செய்யுளியலில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

> *"பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே, அங்கதம்*
> *முதுசொல்லோடு அவ்வேழ் நிலத்தும்*
> *யாப்பின் வழியது என்மனார் புலவர்" - செய்யுளியல் 75,*

என்றும்

> *"எழுநிலத்து எழுந்த செய்யுள் தெரியின்*
> *அடிவரை இல்லன ஆறுஎன மொழிப." - செய்யுளியல் 157,*

"அகமும் புறமுமாகிய எழுநிலத்தும் தோன்றிய செய்திகளை ஆராயின் அடிவரையின்றி வரும் இலக்கணத்தன ஆறாம் என்றவாறு" என்கிறார் பேராசிரியர்.

"பாட்டு உரை ....." என்னும் நூற்பா மூலம் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, முதுசொல், அங்கதம் என்று ஏழு வகை பற்றி கூறியுள்ளார்.

அடிவரையறை இல்லாத இலக்கிய வகைகள் இன்னவை என்று பட்டியலிடும் பொழுது ஆறென மொழிப என்கிறார்.

> *"அவைதாம்*

நூலி னான, உரையி னான,
நொடியொடு புணர்ந்த பிசியி னான,
ஏது நுதலிய முதுமொழி யான,
மறைமொழி கிளந்த மந்திரத் தான,
கூற்றிடை வைத்த குறிப்பி னான" (செய்யுளியல் -158)

அடிவரையறையுள்ள செய்யுட்களின் இலக்கணத்தை விபரித்த தொல்காப்பியர், தொடர்ந்து, அடிவரையற்ற இலக்கணவகைகளைக் கூறுகிறார்.

இந் நூற்பாவில் நூல், உரை, பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்பு மொழி என்னும் ஆறு இலக்கிய வகைகள் சொல்லப்படுகின்றன. நூல் என்பது இலக்கணம், அது புலவரால் படைக்கப்படுவது. உரை என்பது உரைநடை. பிசி என்பது விடுகதை அல்லது புதிர். முதுமொழி என்பது பழமொழி. மந்திரம் என்பது தமிழிலே வழங்கிய மந்திரநூல். குறிப்பு மொழி என்பது குறிப்பால் பொருளை உணர்த்தும் வகை.

இவ்வாறு முன்னோர் வகுத்த இலக்கிய வகைகளை விரித்துக் நுறியவர் பண்ணத்தி என்னும் புதியதொரு வகை இலக்கியம் பற்றிக் குறிப்பிடுகிறார். அடிவரையறையற்ற இலக்கியத்தின் பின் இதனைக் குறிப்பிடுவதால் பண்ணத்தியும் அடிவரையறை அற்றது என்று கொள்ளலாம். அத்துடன் வழக்கு மொழியாக வரும் இலக்கிய வகைகளின் பின் கூறப்படுவதால் பண்ணத்தியும் ஒருவகை வாய்மொழி இலக்கியமாகக் கருத இடமுண்டு.

தொல்காப்பியம் பண்ணத்தி பற்றிக் கூறுவதாவது-

"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத் தியே" (செய்யுளியல் -173)

இந்த நூற்பாவுக்கு உரை விளக்கம் தந்த பேராசிரியர் "பழம் பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி" என்று கூறுகின்றார்.

இந்த நூற்பாவை நாட்டுப்புறப் பாடலுக்குரிய இலக்கணமாக சிலர் கருதுகின்றனர். ஆனால் பண்ணத்தி என்பது நாட்டுப்புற பாடல்களைக் குறிக்கவில்லை. நாட்டுப்புறப் பாடலைக் குறிக்கின்றதா என்பது இன்னமும் கேள்விக்கான பதிலாகும். ஆனால் தொல்காப்பியர் குறிப்பிடும் நூற்பாவுக்கு இளம்பூரணர் உரையை நோக்கினால் பண்ணைத் தோற்றுவித்தலால் பண்ணத்தி எனக் காரணப்பெயர் கொண்டதாக விளக்குகின்றார். தாழிசை, துறை, விருத்தம் ஆகிய பாவினங்கள் இசைநலம் கொண்டவை. அவற்றையே பண்ணத்தி எனச் சுட்டுகிறார். இத்துடன் இசைத்தமிழைச் சார்ந்த சிற்றிசையையும், பேரிசையையும் பண்ணத்தியைச் சார்ந்தவைகளாக இனம் காண்கிறார். இளம்பூரணரின் பார்வையில் தொல்காப்பியர் காலப் பண்ணத்தியே பின்னர் பாவினங்களாக விரிவடைந்தது.

தொல்காப்பியத்திற்கு ஆராய்ச்சி உரை வரைந்த ச.பாலசுந்தரனார்,

> *"இசைத்தமிழ் மரபில் தோன்றி இயற்றமிழ்ப் பகுதியாக வழங்கும் பண்ணத்தி என்னும் பாவகை என்றும், இப்பாவகையாவது கழனி உழவர் பாட்டும், மழைப்பாட்டும், வெள்ளப்பாட்டும், ஏர்ப்பாட்டும், நடவுப்பாட்டும், நெற்களப்பாட்டும், கிணைப்பொருநர் பாடும் போர்க்களப்பாட்டும், வெற்றிப்பாட்டும், கட்டும் கழங்கும் காண்பார் பாடும் பாட்டும் போலவனவாகும். நாட்டுப்பாடல் என இக்காலத்து வழங்கும் பாடல்கள் இப்பண்ணத்தி வழி வந்தவைகளே. பள்ளு முதலாய சிற்றிலக்கியங்கள் இதன்வழித் தோன்றியவை எனலாம் என்று விளக்குவர்."*

தொல்காப்பியர் குறிப்பிடும் எண் வகை வனப்புகளில் ஒன்றாகிய "புலன்" என்பதே நாட்டுப்புறப் பாடலைக் குறிக்கின்றது என்ற முரண்பட்ட கருத்தையும் பலர் வைக்கின்றனர்.

"சேரி மொழியான் செவ்விதின் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்

புலன் என மொழிப புலன் உணர்ந்தோரே" *(மெய்யுளியல் -241)*

இந்த நூற்பாவுக்கு உரை எழுதிய பேராசிரியர் தெரிந்த மொழி என்பதற்கு பாடபேதமாக சேரி மொழி என்று குறிப்பிடுவர். இங்கு பேராசிரியர் குறிப்பிடும் சேரி மொழி என்பது நாட்டுப்புற மக்களின் இசை என்றே கூறலாம். இவ்விசைக்கு தொல்காப்பியர் அடிவரை அறையும் இலக்கணமாக கூறியுள்ளார். இதற்கு

"அதுவே தானும் பிசியொடு மானும்." *(செய்யுளியல் -174)*

என்ற நூற்பாவில் பிசியோடு ஒத்து வருவது பண்ணத்தி என்றும் அது 12 அடிகளில் வரும் என்பதும் அதற்கு மேல் வந்தாலும் நீக்குதற்கு உரியதன்று என்று கூறுகிறார். ஆனால் இக்கால ஆய்வாளரான பேராசிரியர் சொ. கந்தசாமி என்பவர் பிசி என்ற விடுகதை இரண்டு அடி அளவில் வருவதால் இதுவும் இரண்டடியாகவே வரும் என்று கூறுகின்றார்.

கடைச்சங்க காலத்தில் 'பண்' என்ற சொல்லை திருவள்ளுவரும் ஓரிடத்தில் கையாண்டு உள்ளார்.

"பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்". *(குறள் 573)*

இக்குறள் மூலம் கண்ணோட்டத்தை விளக்க வந்தவர் பண்ணை அதாவது இசையை உவமையாகக் காட்டி அக்கால மக்களுக்கு 'பண்' நாடறிந்த சொல்லாக இருந்திருக்கிறது என்பதைச் சொல்லுகின்றார்.

"சங்க கால பாடல்களும் தொடக்க காலத்தில் வாய்மொழி பாடல்களாகவே இருந்து வந்திருக்கிறது. அவை கலைமாந்தர்களால் மக்களிடையே பாட்டாகவும் கூத்தாகவும் வழங்கப்பட்டுள்ளன"

என்பதை பேராசிரியர் கைலாசபதி "தமிழ் வீர நிலை கவிதை" என்ற நூலில் கூறியுள்ளார். வாழ்க்கையின் எல்லாக் கூறுகளையும் கண்ணாடி போல் காட்டும் அகம் சார்ந்த, புறம் சார்ந்த தமிழ் இலக்கியங்களில் அவை வளர்வதற்கு நாட்டுப்புறப் பாடல்களே கை கொடுத்து உதவி, இன்றும் வாழ்ந்து கொண்டிருக்க வழி சமைத்தன.

தமிழர் தாம் வாழ்ந்த நிலத்தை ஐவகை நிலமாகப் பிரித்து முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகுத்து வாழ்வாங்கு வாழ்ந்தனர். முப்பொருள்களின் கண்ணாடிகளாக விளங்கும் சங்க பாடல்களைப் போல சங்க காலத்தில் பாடப்பட்ட ஒரு நாட்டுப்புறப் பாடலாவது நமக்கு முழு வடிவில் கிடைத்திருக்கின்றது என்று உறுதியாகக் கூறி விட முடியாது.

நாட்டுப்புறப் பாடல்களின் வளர்ச்சியும் வளர்ச்சியின்மையும் மாறி மாறி வந்திருக்கின்றன. ஆனால் பாணர்களின் வாய் மொழி சார்ந்த இசைப் பாடல்கள் புறம் தள்ளப்பட்டு, புலவர்களின் ஆக்கங்கள் ஏற்றம் பெற்றிருக்கின்றன என்பதைத் தெளிவாகக் காண முடிகின்றது. தொல்காப்பியத்தில் "பண்ணத்தி" போன்ற இலக்கிய வகைக்கு வழங்கப்பட்டுள்ள இடம் ஒரு வகையில் பாணர் மரபை தவிர்க்க முடியாத ஓர் ஏற்பாடாகக் கருத வேண்டியுள்ளது.

நாட்டுப்புற பாடல்களின் முழுமையான இயல்களை அறிந்து கொள்ள வேண்டுமானால் அப்பாடல்களைப் பாடுவோர், கேட்போர், பாடல் வழங்குமிடம், அங்கு வாழ்ந்த மக்களின் வரலாற்று, பின்னணி, கலை, பண்பாடு, சமயம், பொருளாதாரம் முதலான பல்வேறு தன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

தொல்காப்பியத்தில் பிசி

மரபு வகை நாட்டார் வழக்காறுகளில் நிலைத்த தொடர் அமைப்பைக் கொண்டது விடுகதை. தொல்காப்பியத்தில் வரும் பிசி என்ற சொல் பல்வேறு பகுதி மக்களால் பிதிர், புதிர், வெடி என்று பெயரிட்டு வழங்கப்படுகின்றது. ஈழத்திலும் விடுகதையை "நொடி" என்றும் அழைப்பர். அதாவது இது ஒரு சொல்

விளையாட்டு. மூளைக்கு வேலை கொடுத்து சிந்திக்க வைக்கின்ற, மற்றவரின் அறிவுத்திறனை பரிசோதிக்கின்ற ஒருவகை விளையாட்டாகவும் கொள்ளலாம்.

இதையே தொல்காப்பியர்

"ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவ கிளர்ந்த துணிவினானும்
என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே" (தொல்.செய்-169)

இந்த நூற்பாவில் விடுகதை என்ற நாட்டுப்புற இலக்கிய வகையினை தொல்காப்பியர் 'பிசி' என மொழிந்துள்ளார்.

விடுகதைகள் பொதுவாக இப்படி இருக்கும்.

கேள்வி: 'கண்ணிருக்கும் பிராணி அல்ல, பால் இருக்கும் பசுவும் அல்ல, நீர் நிறைந்திருக்கும் குலமும் அல்ல. அது என்ன?'

இதற்கான விடை தேங்காய் என்பதே

அதே போல் இன்னொன்று,

கேள்வி: "எட்டுக்கால் ஊன்றி, இருகால் படம் எடுத்து, வட்டக் குடை பிடித்து, வாராராம் வன்னியராம். அது என்ன?

இதற்கான விடை: நண்டு என்பதே.

இந்த விடுகதைகளில் பல வகை உண்டு. உடன்பாடும் எதிர்மறையும் அமையும் விடுகதை, முற்று உருவமாக அமையும் விடுகதை, விடுகதை வர்ணனையும் செயல்முறையும் அமையும் விடுகதை, செயல் வருணனை அமையும் விடுகதை என பல்வேறு விடுகதைகளும் உள.

தொல்காப்பியத்தில் முதுமொழி

தமிழ் மொழியில் 2000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே பழமொழிகள் பெரிதும் வழக்கில் இருந்திருக்கின்றன என்பதைத் தொல்காப்பியம் அறியத் தருகின்றது. உலக மொழிகளில் முதன் முதலாகப் பழமொழிக்கு இலக்கணம் வகுத்தவரும் தொல்காப்பியரே. இதற்கு அவரின் செய்யுள் இலக்கியம் சான்று பகர்கின்றது.

நாகரீகம் வாய்ந்த இனக்குழு மக்களிடையே உருவகப் பண்புடைய அறிவுக் கூர்மை கொண்ட சுருங்கிய வடிவ மொழிகள் முதுமொழிகள், பழமொழிகள் எனப்பட்டன. இதனை மூதினை, முதுசொல், பொன்மொழி, தோன்றுபடு கிளவி எனப் பல்வேறு பெயர்களில் கூறுவர்.

இதனைத் தொல்காப்பியர் தன்னுட்பாவில்

"நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்தப் பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏதுநுதலிய முதுமொழி". என்கிறார்.

"இது நுண்மை விளங்கவும், சுருக்கம் விளங்கவும், மென்மை விளங்கவும் என்றும் இன்னோரன்ன விளங்கவும் என்று இத்தகையன விளங்குமாறு தோன்றிக் கருதின. பொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக் குறித்தன முதுமொழி" என்று இந்நூற்பாவிற்கு இளம்பூரணரும் உரை எழுதுவார்.

பழமொழிகள் வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாசகங்களாகவும், மிகக் குறுகிய சொற்களில் அமைந்தும் காணப்படுகின்றன. உண்மைகளை வெளிப்படுத்தவும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதன் பயன் எடுத்துச் சொல்லவும், எச்சரிக்கை செய்யவும் பழமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை உலகம் முழுவதும் அவரவர் வாழ்க்கைக்கு ஏற்ப மாறுபட்டு வரும். உலகின் அனைத்துப் பாகங்களில் வாழும் பாமர மக்கள் முதல் கற்றோர் வரையிலும் தாம் அறிந்த பழமொழிகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

உதாரணம்: "பல்லுப் போனால் சொல்லுப் போகும்"

தொல்காப்பியத்தில் நம்பிக்கைகள்

தொல்காப்பிய காலத்தில் பலவிதமான நம்பிக்கைகள் நிலவியிருந்தன. அவைகள் ஊழ்வினை, சகுனம் பார்த்தல், பேய் இருப்பதாக நம்புதல், மந்திர தந்திரங்களை நம்புதல், நடுகல், கடவுள் என்று பலவகை ஆகும்.

ஊழ்வினை

தொல்காப்பியர் ஊழ்வினையில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்ததாக எடுத்துரைக்கின்றார். பால் என்னும் வார்த்தையில் தொல்காப்பியர் கூறும் இந்த நம்பிக்கையை இக்கால மக்கள் தலைவிதி, விதி, வினை, நியதி என்னும் சொற்களால் குறிப்பிடுகிறார்கள். வினையை நல்வினை, தீவினை என்றும் இரண்டாகப் பிரித்துக் கூறுவர்.

"காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயி ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரித் திசையா உயர்திணை மேன" *(தொல். கிளவி – 58)*

என்ற நூற்பாவில் தலைவனும் தலைவியும் எதிர்பட்டு சந்தித்து காதல் கொள்வதற்கு பால் என்னும் விதியே காரணம் என்று மக்கள் நம்பினர். இக்கருத்தை

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" *(தொல். களவு – 2)*

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் தெரிவிக்கின்றார்

விருச்சி (நிமித்தம்)

மக்கள் நம்பிக்கைகளில் சகுனம் பார்த்தலும் ஒன்று. இதனைத் தொல்காப்பியர் 'பாக்கத்து விருச்சி' என்று அழைக்கிறார். நல்ல சகுனமாக ஒரு நற்சொல்லைக் கேட்பது விரிச்சி கேட்பது ஆகும். தலைவனும் தலைவியும் சந்திப்பதற்கு, தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஆறுதல் கூற, போர் தொடங்குவதற்கு முன்னரும் சகுனம் பார்க்கும் வழக்கம் இருந்தது.

தொல்காப்பியத்தில்

"படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகியசெலவே புடைகெட" *(தொல், புறப். வெட்சி 3)*

நன் நிமித்தம், தீ நிமித்தம் என நிமித்தம் இருவகைப்படும். தொல்காப்பியர் நாள் நிமித்தம், புள் நிமித்தம், பிறவகை நிமித்தம் என மூன்று வகையான நிமித்தங்களைப் பற்றிக் கூறுகிறார்.

"அச்சமும் உவகையும் எச்சம் இன்றி,

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்;
காலம் கண்ணிய ஓம்படை-உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் முன்றொடு கண்ணிய வருமே" *(தொல் - புறத்-இயல் 90)*

நல்ல சகுனங்களைக் காணும் போது மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். தீய சகுனங்களைக் கேட்கும் போது கவலை கொள்கிறார்கள். இதற்கு உதாரணமாக பல்லி சொல்லுதல், ஆந்தை அலறுதல், நாய் ஊளை இடுதல், காகம் கரைதல் இவைகளைக் கூறலாம்.

மக்கள் ஒரு செயலை செய்வதற்கு முன் நாளும் கோளும் பார்க்கின்றனர். கற்பு மணம் கொண்டவர்கள் கெட்ட நாட்களில் புணர்ச்சி நிகழ்த்த மாட்டார்கள். ஆனால் களவு மணத்தில் ஈடுபட்டுள்ள தலைவன் தலைவி கெட்ட நாளிலும் புணர்ச்சியில் ஈடுபடுபவர். இதனை

"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்,
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை" *(தொல்-பொருள்-களவு-44)*

தீய ஓரையிலும், தீய நாளிலும், புணர்ச்சியைக் கைவிட வேண்டும் என்ற கொள்கை, மறைந்த ஒழுக்கமாம், களவுக் காலத்தில் தலைவனுக்கு இல்லை என்ற நம்பிக்கையும் இருந்துள்ளதை தொல்காப்பியர் சுட்டி காட்டுகின்றார்.

பேய் நம்பிக்கை

தொல்காப்பியர் காலத்தே மக்களிடத்தே பேய்கள் பற்றிய நம்பிக்கை இருந்திருக்கிறது.

"பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்" (தொல். நூ. 1025)
பேஎத்த மனைவி ஆஞ்சியானும்" (தொல். நூ. 1025)

என்ற அடிகளின் வழியாக, போரில் இறந்துவிட்ட அல்லது விழுப்புண்பட்ட வீரர்களைப் பேய்கள் நின்று பாதுகாக்கும் என்ற நம்பிக்கையும், பழந்தமிழக மக்களின் நம்பிக்கையாக இருந்திருக்கிறது.

மந்திரம்

மந்திரத்தை பண்டைய தமிழர் மறைமொழி எனவும் அழைத்தனர். அதனை தொல்காப்பியம் எடுத்துக்காட்டுகிறது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" - (தொல்: 1484)

இதில் தொல்காப்பியர் 'மறைமொழி தானே மந்திரம் என்ப' என முடித்து மறைமொழியைத் தான் மந்திரம் என்று சொன்னார்கள் என்பதை 'என்ப' என்ற சொல்லால் சுட்டுகிறார். அதாவது அவருக்கு முன் வாழ்ந்த பண்டைய தமிழர்கள் மறைமொழியை மந்திரம் என்று சொன்னார்கள் என்கிறார்.

மறைமொழி என்றால் என்ன? இந்த மறைமொழிக்கும் வேதங்களுக்கும் அதாவது மறைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை மிகத்திருத்தமாக

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்" - (குறள்: 28)

எனும் திருக்குறள் சொல்கிறது. மறைமொழிக்கு ஒரு சக்தி உண்டு. அந்தச்சக்தி, ஒரு விளைவை ஏற்படுத்தும் என்பதை இக்குறளின் 'மறைமொழி காட்டிவிடும்' எனும் தொடர் குறிக்கிறது. ஒரு விளைவை உண்டாக்கும் வாய்மொழியை, மறைமொழி என்றும் மந்திரம் என்றும் பண்டைத்தமிழர் அழைத்தனர் என்பதை நாம் அறியலாம்.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் நிறைமொழி மாந்தர் என மனிதரில் சிலரைச் சொல்கிறார்களே, அந்த நிறைமொழி மாந்தர் யாவர்? மனிதருக்கு நிறைவைத் தருவது எது? பொருளும் போகமும் கல்வியும்

எப்போதும் மனிதனுக்கு நிறைவைத் தரமாட்டா. எந்த மனிதனுக்கும் நிறைவைத் தருவது மனநிறைவே ஆகும். மனநிறைவு உள்ளவரின் மனம் அழுக்கற்று சுத்தமாக இருக்கும். அத்தகையோரே நிறைமொழி மாந்தராவர். அதனால்

"மனமது சுத்தமானால் மந்திரம் செய்யத் தேவையில்லை"

என்ற பழமொழியும் தமிழில் தோன்றியது. அப்படிப்பட்டோர் சொல்லும் சொல்லே மந்திரம் ஆக மாறிவிடும் என்றால் அவர்கள் ஏன் மந்திரம் சொல்லவேண்டும்?

தமிழில் மந்திரம் என்ற சொல் மன் + திரம் = மந்திரம் எனப்புணரும். மன் என்பது மேன்மை, மிகுதி என்பவற்றையும் திரம் என்பது உரம், உறுதி, சக்தி என்பவற்றையும் குறிக்கும். ஆதலால் தமிழில் மந்திரம் - மிகுந்தசக்தி உடையது என்ற கருத்தில் சொல்லப்படுகின்றது. அதுவும் நிறைமொழி மாந்தர் ஒரு சொல் சொன்னால் மட்டுமல்ல நினைத்தாலும் கூட மந்திரம் அதன் விளைவை ஏற்படுத்தும். தமிழர் கூறிய மந்திரத்தில் ஆணை இடுபவருக்கு, மந்திரசக்தி கட்டுப்பட்டு நடக்கும்.

நடுகல் வழிபாடு

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணர" (தொல். நூ. 1006)

என்று தொல்காப்பியம், போர்க்களத்தில் இறந்துபட்ட வீரரை நினைத்து நடுகல் நட்டு வழிபட்ட முறையைக் குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியங்களிலும் இத்தகு நடுகல் வழிபாட்டு முறையைக் காண முடிகின்றது. குறிப்பாக குறிஞ்சித் திணையில், மலையும் மலை சார்ந்த வாழ்வில் ஆநிரை கவர்தல், மீட்டலில் ஈடுபட்டு, வீரமரணம் அடைந்தவர்களுக்கே 'நடுகல்' நட்டு வழிவழியாக வழிபாடு நிகழ்ந்திருக்கின்றது.

நடுகல் வழிபாட்டு முறை பல்வேறு இடங்களில் காணப்பட்டுள்ளது. "இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஓர் குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைக்கலாம். அங்குள்ள ஒரு பொருளில் நுழைந்து கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை உலகமெங்கும் பண்டைய மக்களின் பண்பாட்டில் காணப்படுகிறது" என்பர். புறநானூற்றிலும் (பா. 265, 264, 232, 329) சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குக் கல்லெடுத்து வந்து வழிபட்ட செய்தியைக் காண முடிகிறது. சிலம்பில் வஞ்சிக் காண்டத்தில் விஞ்சி நிற்கும் வழிபாட்டுச் செய்திகளும் காதைகளின் பெயர்களும், நடுகல் வழிபாட்டு மரபை உணர்த்தும்.

கடவுள்

"காமப்பகுதி கடவுளும் வரையார்" (தொல். நூ. 1029)

என்ற நூற்பாவில் காமக் குறிப்பை வைத்து இலக்கியம் பாடுகின்ற பொழுது தேவரிடத்தும் மக்களிடத்தும் வரையார் என்று உரையாசிரியர் விளக்கம் தருகின்றனர். மேலும்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றுங் (தொல். நூ. 1034)
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (தொல். நூ. 1034)

என்று கொடிநிலை, கந்தழி, வள்ளி-மூன்று துறையும் கடவுள் வாழ்த்தோடே பொருந்தி வரும் என்றும்,

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்" (தொல். நூ. 1027)

என்று, தேவர் நிலைமையில் வைத்து வாழ்த்துதற்குரிய அறுவகை நிலையான சான்றோர், புலவர், வேந்தர், ஆன், மழை, உலகம் என அறுவகையில் வாழ்த்துதல் மரபெனவும் தொல்காப்பியர் சுட்டுகின்றார். இவை கடவுளை வாழ்த்தும் வகை பற்றிய குறிப்பாகும். இதன் வழி கடவுளை பாடும் மரபை பண்டையோர் கொண்டிருந்ததையும் அறிய முடிகிறது.

திணைத் தெய்வங்கள் வழிவழி வணங்கப்பெற்று, காலவோட்டத்தில் தமிழர் வழிபாட்டு மரபில் மாற்றங்கள் நிகழ்ந்து புறச்சமயங்கள் வந்து கலந்து கலப்பு வழிபாட்டு மரபு தோன்றிவிட்டது. 'தெய்வம்' என்ற சொல் தொல்காப்பியத்தில் ஒன்பது இடங்களில் இடம்பெற்றுள்ளன. 'இறை', 'இறைவன்' என்ற சொற்கள் பண்டைய காலத்தில் தலைவனைக் குறிக்கும் சொல்லாகவும் காணப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழிலக்கியங்களில் 'சமயம்' என்ற சொல்லே இல்லை. அதற்குப் பிற்பட்ட நூல்களில் தான் சமயம், மதம் என்ற சொற்கள் காணப்படுகின்றன. எனவே, சங்க காலத்தில் மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பினும் அவர் சிவன், திருமால் போன்ற கடவுளர்களை வழிபட்டாலும் சைவ சமயம், வைணவ சமயம் போன்ற சமயப்பற்று வேரூன்றவில்லை என்பது தெரிகின்றது.

'தெய்வம்' என்பது கருப்பொருளிலேயே கூறப்பட்டுள்ளது. கருப்பொருளானது நிலத்தில் காலத்தால் கருக்கொள்ளும் பொருளாகும். இவை தோன்றி நின்று மறைவனவேயாகும். இதன் மூலம் 'தெய்வம்' என்று குறிப்பிடப்படுவது இறந்த முன்னோர்களே எனக் கருதவும் இடமுண்டு. தெய்வ வழிபாடே அன்றி நிலையான 'கடவுள்' என்ற கொள்கைப் பற்றி தொல்காப்பியத்தில் எங்கும் சுட்டப்பெறவில்லை என்பது ஆராயத்தக்கதாகும்.

ஐந்திணைத் தெய்வம் பற்றி பலர் விளக்கம் தந்திடினும் தேவநேயப்பாவாணர் தெளிவுறச் சுட்டுகின்றார்.

> "*குறிஞ்சி நிலத்து மக்கள் தம் தெய்வத்தை தீயின் கூறாகக் கொண்டதால் சேந்தன் (சிவந்தவன்) சேயோன் என்று பெயரிட்டு அழைத்தனர். முல்லைநிலத்து மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக முதற்கண் மழையே இருந்ததால் முகிலையே தெய்வமாகக் கொண்டு 'மால்' என்று தம் தெய்வத்திற்கு பெயரிட்டு வழிபட்டனர். மருத நிலத்து மக்கள் இவ்வுலகில் தீவினையை விட்டு நல்வினை செய்து வாழும் கொள்கை கொண்டோராக, இம்மையில் வேந்தனாக அறவாழ்க்கை நடத்தினால், மறுமையில் தேவர் கோனாய்ப் பிறப்பான் என்ற கொள்கை கொண்டு தேவர்கோனைத் தேவர் 'வேந்தன்' என்றனர். மேலும், உழவுத் தொழிலுக்கு இன்றியமையாத மழையானது விண்ணிலிருந்து பொழிகிறது. இவ்விண்ணுலக வேந்தனே 'இந்திரன்' ஆயினான். நெய்தல் நிலத்து மக்கள் கடலை நம்பியே வாழ்க்கை நடத்தியதால் தம் தெய்வத்தைக் கடல் தெய்வமாகவே கொண்டு அதற்கு 'வாரணன்' அல்லது 'வருணன்' என்று பெயரிட்டு வணங்கினர். பாலை நிலத்து மக்களின் வாழ்வு வறட்சியும், போர்க்களங்களும், பிணங்களும், பிணந்தின்னிப் பேய்களும் கொண்டதால் பேய்களுக்குத் தலைவியாகிய 'காளி'யை தெய்வமாகக் கொண்டனர். இத்தகைய ஐந்நிலத்து மக்களும் தம் வாழ்வியலோடு ஒன்றி வந்த இயற்கையை பொருத்தி தெய்வத்தை தோற்றுவித்தனர்.*"

மேற்கூறிய கருத்தை தேவநேயர் "தமிழர் மதம்" நூலில் தெளிவுற குறிப்பிடுகின்றார்.

> *"மாயோன் மேய காடுறை உலகமும்*
> *சேயோன் மேய மைவரை உலகமும்*
> *வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
> *வருணன் மேய பெருமணல் உலகமும்*
> *முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்*
> *சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"*

மேலும், பண்டைய தமிழரின் தெய்வ வழிபாட்டு முறைகளுக்குக் காரணமாக 1. அச்சம், 2. முற்காப்பு, 3. நன்றியறிவு, 4. பாராட்டு, 5. அன்பு, 6. கருதுகோள், 7. அறிவு வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் இறை வழிபாடு தோற்றம் பெற்றதாகவும் குறிப்பிடுகின்றார்.

"தங்கள் கண்ணுக்குப் பச்சைப்பசேல் எனக் காட்சி வழங்கிய காட்டின் இயற்கை அழகை மால் என்று வழுத்தினர்" - இவ்வாறு சொல்வது மூத்த பெரும் தமிழறிஞரான திரு.வி.க.

பழந்தமிழ் மக்கள் வணங்கியது இயற்கையை. அதுவே இயற்கையை ஒட்டிய தெய்வங்களாக நாளடைவில் வளர்ச்சி பெற்றது.

தொல்காப்பியத்தில் கூத்து

தொல்காப்பியத்தில் நாட்டியம், நாடகம் இரண்டுமே கூத்து என்ற வரையறைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கூத்தர் எனக் குறிப்பிடப்படுபவர் நடிப்பு நிறைந்த நாடகவியலையும் ஆடல், அபிநயம் மற்றும் அடவு நிறைந்த நாட்டியவியலையும் ஒருங்கே வளர்க்கும் கலைப்பிரிவினர் ஆவர். கூத்தரும் விறலியும் பொருள் பெறவேண்டி மன்னர் முன் ஆடுதலை பின்வரும் நூற்பா விளக்கி நிற்கின்றது.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச்சொன்ன பக்கமும்" *(தொல். புறம். 88)*

என அதன் வெளிப்பாடு அமையும்.

மேலும் **உண்டாட்டு மற்றும் வெறியாட்டு** குறித்த விளக்கங்களையும் தொல்காப்பியம் நமக்கு சிறப்பாகச் சொல்லியுள்ளதையும் இங்கு குறிப்பிடலாம். உண்டாட்டு என்பது தனது எதிரியின் நாட்டின் மீது படை நடாத்தி அந்நாட்டிலுள்ள பசுக்களை கவர்ந்து வந்து அவற்றைத் தனது நாட்டு மக்களுக்கு பகிர்ந்தளித்த பின்னர் மகிழ்ச்சியில் கள்ளினைப் பருகி ஆடுவதைக் குறிப்பதாகும். வெறியாட்டு என்பது தமிழர்தம் அகவாழ்வோடும் புறவாழ்வோடும் தொடர்புபட்டதாக அமைவது. வெட்சித் திணையில் சொல்லப்படுகின்ற இருபத்தியொரு துறைகளில் இது முதலில் சொல்லப்படுவதைப் பார்க்கலாம்.

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை திரிதல் வேண்டி....." *(தொல். புறம். 6)*

என்ற பாடலடிகள் இதனை நன்கு விளக்கி நிற்கின்றது. தனது அரசனுக்கு வெற்றிகிட்டவேண்டி தெய்வத்தை வணங்கிப் போற்றிப் பாடியாடுவது இங்கே வெளிப்படுகின்றது. இவ்வாறே காதல் நோயால் துன்புற்று உடல் மெலிந்து வாடும் தலைவியின் நிலையறியவும் வெறிக்கூத்து ஆடப்பட்டிருப்பதையும் தொல்காப்பியம் கூறும்.

"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்..."

என்ற பாடலடிகள் இதனை விளக்கி நிற்பதைக் காணலாம்.

வாகைத் திணையில் தேர்ப் படையையுடைய மாற்றரசனை வெற்றி பெற்ற தமது மன்னனின் தேரின் முன்னாலும் பின்னாலும் போர் வீரர்கள் கூட்டமாக ஆடிச் செல்வதை

"தேரோர்...
வென்றகோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும்.."

என வரும் பாடலடிகள் வெளிப்படுத்துகின்றது. இது ஒருவகைக் குரவைக் கூத்தாகும். வெற்றி பெற்ற மன்னன் வெற்றிக் களிப்பினால் தேர்த் தட்டிலே நின்ற வண்ணம் தனது வீரர்களோடு கைகோர்த்து ஆடுவது முன்தேர்க் குரவையென்றும் அம்மன்னனின் தேரின் பின்னால் மறவரும் விறலியரும் மன்னனின் புகழ்பாடி ஆடுவது பின்தேர்க் குரவையென்றும் அழைக்கப்பட்டதைத் தொல்காப்பியம் குறிப்பிடும். ஆய்வாளர்கள் இதனை ஆரடிவிருத்தியில் உள்ளடக்குவர். இது வீரம் மிகுந்த மானிடரை தலைவனாக முன்னிறுத்துவதாக அமையும். அத்தோடு இவ்வாடலனது விரைவான தாளகதியுடன் ஆரவாரம் மிகுந்த ஆடலாக அமைந்திருக்கக் கூடுமென்பதே பொதுவான கருத்தாகும்.

அன்றைய வள்ளிக் கூத்து குறித்தும் தொல்காப்பியத்தில் அறிய முடிகின்றது.

"வாடாவள்ளி வயவர் ஏந்திய .."

என்ற பாடலடி போரிலே தமது நாடே வெற்றி பெற வேண்டுமென முருகனை வேண்டி ஆடுவதைக் குறிப்பிடுகின்றது.

அதேபோல் போரில் தன் வீரத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தி வெற்றி பெறக் காரணமான வீரனுக்குக் கழல் அணிவித்து மற்றைய போர் வீரர்கள் ஆடிய கூத்து கழல் கூத்து எனக் குறிப்பிடப்பட்டதைத் தொல்காப்பியம் நமக்குத் தெரிவிக்கின்றது.

".....வயவர் ஏந்திய
ஓடாக் கழல்நிலை..."

என வரும் பாடலடிகள்மூலம் இதனை அறிந்து கொள்ள முடியும்.

இதே போன்ற பிறிதொரு ஆட்டமே வாள் அமலைக் கூத்தாகும். போரிலே பகை மன்னனின் யானையையும் கொன்று அம் மன்னனையும் கொன்றபின்னர் வெற்றிபெற்ற அரசனின் போர்வீரர்கள் இறந்து கிடக்கும் மன்னனைச் சுற்றிச் சுற்றித் தங்களது வாள்களை சுழற்றிய வண்ணம் பாடியாடுதலே அமலைக் கூத்தாகும். இதனை

".....களிற்றோடு
பட்டவேந்தனை ஆட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும்"

என்ற பாடலடிகள் விளக்கி நிற்கின்றது.

நாட்டுப்புறக் கதைகள்

'பொய்மொழி கதைகள் பாட்டு உரைநூலில் வாய்மொழி பிசியே' என வரும் நூற்பாவில் ஏழுவகை யாப்பைப் பற்றி தொல்காப்பியம் கூறுகையில் **'உரை' என்பது நாட்டுப்புறக் கதைகள்** பற்றிய சொல்வதாகும் என்று சு. சண்முகசுந்தரம் அவர்கள் கூறுகின்றார். மரபு வழிப்பட்ட நாட்டுப்புறக் கதைகள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னதாகவே வாய் மொழியாக வந்துள்ளது. **கதை சொல்லும் ஆர்வமும் கதை கேட்கும் ஆர்வமும்** இருந்தன என்பதை தொல்காப்பிய இலக்கணம் கூறுகிறது.

"நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும். மரபு வழிப்பட்டதாகும். பல நூற்றாண்டு காலமாக மக்களிடையே வாய்மொழியாக வழங்கி வருவதால் திரிவடைவதை காண்கிறோம். கதைகளின் மூல ஆசிரியர் யார் என அறியவொன்னாமையும் ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்கும் தன்மை உடையன என்பதும் நாட்டுப்புறக் கதைகளின் இயல்புகள் ஆகும்".

இவ்வாறு தொல்காப்பியர் நாட்டுப்புறக் கதைகளின் இயல்பைச் சுட்டிக்காட்டுகின்றார்.

"பொருளோடு புணராப் பொய்ம் மொழியானும்
பொருளோடு புணர்ந்த நகைமொழியானும்" (தொல்.செய்-166)

என்ற நூற்பாவில் அறியலாம்.

இந்நூற்பாவிற்கு உரை கண்ட பேராசிரியர் ஒரு சிறுகதையைக் கூறி விளக்கம் தந்துள்ளார். யானையும், குருவியும் தம்முள் நட்புக்கொண்டு இன்ன இன்ன இடத்திற்குப் போய் இன்னவாறு செய்தன என்று ஒருவன் புனைந்துரைக்கும் வகையெல்லாம் அதன்பால் அடங்குவன என்பார். இதனைப் பார்க்கும் போது தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு வழக்கில் வந்த கதைகள் தொல்காப்பியத்திலும் வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

"தொன்மை தானே சொல்லுங் காலை உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" - (தொல்.செய்-229)

தொன்மை என்பதற்கு

> *"உரியோடு புணர்ந்த பழமை பொருளாக வருவது தொன்மை என்னும் வனப்பாகும். உரையோடு புணர்தல் நெடுங்காலமாக பலராலும் சொல்லப்பட்டு வழங்கி வருதல் பழமை - பழங்கதை"*

என்னும் விளக்கத்தை க. வெள்ளைவாரணர் கூறுகின்றார். எனவே தொல்காப்பியர் காலத்திலேயே தொன்மை என்னும் பழங்கதைகள் இருந்து வந்துள்ளமையை அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தையும் நாட்டுப்புறவியலையும் ஆராயும் போது அவற்றின் தோற்றம், பயன்பாடு, மறைவு, பேணல் என்பன பற்றிய தேடல் முதன்மை பெறுகின்றது. நாட்டுப்புறக் கூறுகள் அதன் வடிவம் மாறுகிறது. வளர்ச்சி தேய்கிறது. மீண்டும் உயிர் பெற்று மறு உருவம் பெற்றுக் கொள்கிறது. இது குறித்து பேராசிரியர் வானமாமலை அவர்கள் கூறுவது நோக்கத்தக்கது.

> *"அருகி வருகின்ற கதைப் பாடல்கள், கூத்துக்கள், பாடல்கள் அனைத்தையும் சேகரித்து வெளியிட வேண்டும். எனவே எழுத்தில் பரவுவது வாய்மொழிப் பரவலை விட விரிவானது. எழுத்தில் பரவும் நாட்டார் பண்பாட்டுப் படைப்புகள் எல்லாம் மீண்டும் உயிர்பெற்று வருவதில்லை. வாழுகின்ற மரபு என்பது எந்நாளும் வாழ்கின்ற மரபன்று. சமூகப் பண்பாடுகள் மாறுதல்கள் ஏற்படும் வரை ஒரு மரபு வாழும். பிறகு தேய்ந்து புதிதாக உள்ள பண்பாட்டுப் படைப்புகளோடு சேர்ந்து புத்துருவம் கொள்ளும்."*

என வானமாமலை கூறுவது நாட்டுப்புற ஆய்வுக்கு பொருத்தமாகும். எனினும் இவரின் கருத்துப்படி பண்டைய நாட்டுப்புற இலக்கிய பொருண்மைகள், வடிவங்கள், இசை வடிவங்கள் முதலியவற்றின் செவ்வியல் வடிவங்களாகவே சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன என்ற புரிதல் இவரிடம் காணப்படுகின்றது

சங்க கால இலக்கியங்களை நோக்கும் போது ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை ஆகிய மூன்று இலக்கியங்களும் நாட்டுப் புறவியலின் இலக்கியப் பண்புகள் பெரிதும் பயின்று வந்துள்ளமையைக் காணலாம். சான்றோர் எனப் போற்றப்படும் சங்க காலப் புலவர்கள் நாட்டுப்புறப் புலவர்களின் அடிச்சுவட்டில் அடி புதைத்துச் சென்றுள்ளனர். உயிர்ப்பும் அழகும் ஒருங்கே அமைய நாட்டுப்புறப் பாடல்களின் கூறுகளைப் பெரிதாக கையாண்டுள்ளனர். சங்க கால மக்களின் வாழ்க்கை ஓட்டத்துக்கு நாட்டுப்புறப் பாடல்கள் முக்கிய பங்கு வகுத்திருக்கின்றன என்பதற்கு சங்க இலக்கியப் பாடல்களின் வரிகளே சான்று பகர்கின்றன.

முடிவுரை

தமிழரின் சமூகத்தின் தொன்மை மரபின் அடிப்படையாக தொல்காப்பியம் உயிர்ப்புடனும் இளமைச் செருக்குடனும் என்றும் பயணித்துக் கொண்டிருக்கிறது. தொல்காப்பியம் பெருங்கடலில் ஒரு சிறு துளியாக நாட்டுப்புற ஆய்வானது பழந்தமிழரின் பண்பாட்டுச் செல்வத்தையும் வாழ்வியல் முறைகளையும் ஏந்தி நிற்கின்றது. நாட்டுப்புற இலக்கியங்களுக்குத் தனக்கென ஒரு வரலாறு இல்லை. பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், நம்பிக்கைகள், தெய்வங்கள், விளையாட்டுகள், திருவிழாக்கள் ஆகியவைகளைக் கொண்டு நாட்டுப்புறவியல் விரிந்து நிற்கின்றது.

பாடல் பாடும் புலவனுக்கு, பாடல் பாடுவதற்குரிய இலக்கணமாக அமைக்கப்பட்ட தொல்காப்பியம், பொருளதிகாரத்தில், நாட்டார் பாடல்களின் எச்சங்கள் பல தவிர்க்க முடியாத காரணத்தால் பேசப்படுகின்றன.

நாட்டுப்புறக் கூறுகள் பல பாடல்களில் நிறைந்து காணப்படுகின்றன. நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கூத்துகள், விடுகதைகள், பழமொழிகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், சடங்குகள் என நீண்டு செல்லும் நாட்டுப்புறவியல் கூறுகளை தொல்காப்பியர் விரிவாக எடுத்துக் கூறுகின்றார். தெய்வமாக கொற்றவை வழிபாடுகள் மற்றும் சகுனம் பார்த்தல், என பல உள்ளன. பல பழக்கவழக்கங்கள் இன்னும் மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். மேலும் பல பழமொழிகள் இன்றும் வழக்கத்தில் உள்ளன.

தொல்காப்பியத்தில் பகிர்ந்துள்ள நாட்டுப்புறச் சிந்தனைகளை மற்றும் கருத்தியல் வெளிப்பாடுகளின் விரிந்த ஆய்வானது தமிழ் சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்வுக்கும், அறிவு உலகில் ஒளி பரப்பும் உன்னத இலக்கியமாக திகழும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

துணைநின்ற நூல்கள் நூல்கள்:

1. திருக்குறள் - ஜி வரதராஜன்
2. தொல்காப்பியம் - புலியூர் கேசிகன்
3. தொல்காப்பியம் - இளம்பூரணர்
4. நாட்டார் பாடல் - நா. வானமாமலை
5. நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு - முனைவர் அழகப்பன்
6. புறநானூறு - புலியூர் கேசிகன்
7. குறுந்தொகை - புலியூர் தேசிகன்
8. நாட்டுப்புறவியல் களஞ்சியம் - பேராசிரியர் பாலசுந்தரம் இளைய தம்பி
9. கலித்தொகை - சி வை தாமோதரன் பிள்ளை
10. இலக்கிய திறன் - மு வரதராசனர்
11. காதல் வாழ்வு - தமிழண்ணல்
12. தொல்காப்பியமும் கவிதையும் - பேரா. கா. சிவத்தம்பி
13. சங்கக் கவிதையாக்கம் - மரபும் மாற்றமும், சங்க இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும் - அம்மன்கிளி முருகதாஸ் -
14. நடுகற்களும் நம்பிக்கைகளும் - நா. வானமாமலை (ஆராய்ச்சி மலர்)
15. தமிழர் மதம் - தேவநேயப்பாவாணர்

தொ.மா.க. 172

தொல்காப்பியரின் பாலைத்திணையும் பாலைக்கலியில் காஞ்சித்திணையும்

மருத்துவர் துளசி. விக்னேஸ்வரன்
முதுகலைத் தமிழ், அண்ணாமலை வளாகம், கனடா.
thulavi@yahoo.com

ஆய்வுச் சுருக்கம்

கற்றவர் மகிழ்ந்து போற்றும் நூல்களில் முதன்மையானது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இலக்கியங்களிலே கலித்தொகையானது கற்றவர் ஏத்தும் கலி என்னும் அடையினைக் கொண்டு திகழ்கிறது. இவ்விரு நூல்களின் சில கூறுகளே இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கலித்தொகையின் முதல் தொகுதியான பாலைக்கலியில் பாலைத் திணை எனப்படும் பிரிதல் ஒழுக்கம் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளது. அதாவது, காதலர் இருவர் கருத்தொருமித்து வாழும் வாழ்வில் பிரிவு ஏற்படுவதும் உண்டு. பொருள் தேடும் பொருட்டு அல்லது போர் மேற்கொண்டு செல்லும் பொருட்டு அல்லது கல்வி நிமித்தம் தலைவன் தலைவியைப் பிரிந்து வேற்றூர் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அதனால் வீட்டில் தனியே இருக்கும் தலைவி வாடி வருந்துவதும், அவள் தோழி தலைவன்பிரிந்து செல்வதைத் தடுக்கும் முகமாக பல்வேறு உத்திகளைக் கையாண்டு பிரிவைத் தடுப்பதுமான நிகழ்வுகளைப் பாலைக்கலியில் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் புலவர் கலிப்பா யாப்பில் திறம்படப் பாடியுள்ளார். இவர் ஒரு சேர மன்னர் பரம்பரையைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்கண நூலான தொல்காப்பியம் கூறும் அன்பின் ஐந்திணையில் ஒன்றான பாலைத் திணை நடுவண் ஐந்திணையாகக் கூறப்படுகிறது. பாலைத் திணையில் பிரிதல் ஒழுக்கம் உரிப்பொருளாக அமைந்துள்ளது.

அடுத்துக் காஞ்சித்திணையை எடுத்துக் கொள்ளலாம். புறத்திணைகளில் கூறப்பட்ட ஏழு திணைகளில் ஆறாவதாகக் காஞ்சித் திணை என்னும் உலக நிலையாமைக் கருத்துகள் கூறப்படும் திணை வைக்கப்பட்டுள்ளது. இதில் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை மற்றும் செல்வம் நிலையாமை பற்றிப் பல செய்திகள் கூறப்படுகின்றன. ஆய்வுக்கு எடுக்கப்பட்ட பாலைக்கலியில் அகப் பொருளான காதலைப் பாடும் அதே சமயம் நிலையாமைக் கருத்துகள் சொல்லப்படும் பாடல்களும் உள்ளன. அகப்பாடல்கள் காதல் இன்பத்தையே மையக் கருத்தாக எடுத்துரைக்கும் போது, ஆற்றமுடியாத் துன்பம் என மக்கள் கருதும் இறப்பு மற்றும் இழப்புப் பற்றிய நிலையாமைச் செய்திகள் எவ்வாறு பொருந்தும் என்பது ஆராயப்படுகிறது.

அன்பினால் இணைந்த தலைவன் தலைவியர் இடையே நிகழும் அகத்திணைக்குரிய செய்திகளைப் பாடும் பாலிக்கலிப் பாடல்களில் உலக நிலையாமை பற்றிக் கூறும் காஞ்சித் திணைக் கூறுகள் எவ்வாறு பொருந்தலாம் என்பதையே இக்கட்டுரை ஆராய்கிறது. தொல்காப்பியத்தில் அன்பின் ஐந்திணைகளில் ஒன்றான பாலைத் திணை அகத்திணைக்குரியதாக அமைந்த அதே சமயத்தில், நிலையாமை பற்றிக் கூறும் காஞ்சித்திணையானது புறத்திணைக்கு உரியதாகக் கூறப்படுகின்றது. ஒன்றுக்கொன்று முரணான கருத்துகள் சங்கப்பாடல்களில் எவ்வாறு கருத்தொருமித்து அமைகின்றன என்பதை இக்கலிப்பாடல்கள் மூலம் அறிந்துகொள்ளலாம்.

ஆய்வுச்சிக்கல்

தொல்காப்பியம் சொல்லும் திணை மயக்கம் என்பது, அன்பின் ஐந்திணைகளுக்குள் அல்லது ஏழுஅகத்திணைகளுக்குள்ளும் ஏற்படும் மயக்கமா அல்லது புறத்திணையும் அகத்திணையும் ஒரு பாடலில் மயங்கி வருமா என்பது ஒருவினாவாகும். அத்துடன் பாலைத் திணைக்குப் புறமெனத் தொல்காப்பியர் வாகைத் திணையைத்தான் கூறுகிறார். அத்தோடு காஞ்சித் திணைக்கு அகமானது பெருந்திணை என்கிறது தொல்காப்பியம். பாலைக்கலியில் பாலைத்திணையின் புறமான வாகைத்திணைக் கூறுகள் காணப்படவில்லை. வாகை என்பது ஒருவர் தம் திறமையால் மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காணப்படுதலைக் குறிக்கும் திணையாகும். போரில் வெற்றி பெற்றவன் வெற்றிவாகை சூடினான் என்பர்.

கருதுகோள்

சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் இவை இரண்டுமே மக்களின் வாழ்வியலை முற்று முழுதும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவை என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. இந்த உண்மையை இரு வேறுபட்ட திணைகளான அகத்திணை புறத்திணைக் கருத்துகள் மூலம் ஆராய்ந்து முடிவு கூறுவது இவ்வாய்வின் கருது கோளாகும்.

ஆய்வியல் நெறி

ஒப்பீட்டாய்வு முறை, பகுப்பாய்வுமுறை

சான்றுகள் தொல்காப்பியம் இளம்பூரணர் உரை,நச்சினார்க்கினியர் உரை

பாலைக்கலி நச்சினார்க்கினியர் உரை, புலியூர்க்கேசிகன் உரை, திருக்குறள், திருமந்திரம்.

ஆய்வு அமைப்பு

இயல் 1 கலித்தொகை

தொல்காப்பிய இலக்கணத்துக்கு அமைய அமைக்கப்பட்ட அகப்பொருட் பாடல்களின் ஒரு தொகைநூல் கலித்தொகை ஆகும்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும் என்மனார் புலவர்" (அகத்திணையியல் 56)

இந்த நூற்பாவானது அகப்பாட்டுகள் எவ்வாறு பாடினால் சிறப்பாக அமையும் என்பதை விளக்குகிறது. "என்மனார் புலவர்" என்று கூறுவதால் தொல்காப்பியத்துக்கு முன்னமேயே அகப்பாட்டுகள் இவ்வாறு தான் அமைக்கப்பட்டிருந்தன என்பது வெளிப்படை. புலவர்கள் தாம் கண்ணால் கண்ட, கேட்ட காதலரின் வாழ்க்கை நிலைகளைத் தமது புனைவுகளாலும், உவமைகளாலும் அழகு படுத்திப் பாடுவதற்குச் சிறந்த யாப்பு, கலிப்பாட்டு, பரிபாட்டு என்னும் இலக்கண வகைகளே, என்கிறார் தொல்காப்பியர்.

ஆசிரியப்பா வகை என்பது, ஒருவர் சொல்வது போலவும் வெண்பா யாப்பு என்பது, ஒருவர் சொல்ல இன்னொருவர் கேட்பது போலவும் அமையும். ஆனால் கலிப்பா,பரிபாட்டு வகைகள், ஒரு நாடக மேடையில் ஒருவரோடு ஒருவர் உரையாடும் தன்மையைத் தோற்றுவதோடு, ஓர் இலக்கிய வாசகருக்குக், கருத்தோடு கவர்ச்சியையும்அளிக்கிறது எனலாம். கேட்பவர் மனதில் ஓர் காதல் நாடகம் அழகிய ஓவியமாக விரியும் என்பதில் ஐயமில்லை.

இதனால் கலித்தொகையைக் "கற்றவர் ஏத்தும் கலி என்னும் அடை கொடுத்து பாடினார் ஒரு புலவர்.

இந்நூலில், அன்பின் ஐந்திணைகளுக்கான கலிப்பாடல்களை எல்லாம், பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி, மருதக்கலி,நெய்தற்கலி எனப் பகுத்தும் தொகுத்தும் அமைத்துள்ளார் நல்லந்துவனார் என்னும் சங்கப் புலவர்.

இயல் 2. தொல்காப்பியரின் காஞ்சி த்திணை

உலக நிலையாமையைக் கூறும் திணை காஞ்சித்திணையாகும். தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தில் அகத்திணையியலுக்கு அடுத்து புறத்திணை இயல் வைக்கப்பட்டுள்ளது. அகத்திணைகளான குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் மற்றும் கைக்கிளை, பெருந்திணை பற்றிக் கூறிய தொல்காப்பியர், புறத்திணையியலில் வெட்சி, வஞ்சி, வாகை, உழிஞை, தும்பை மற்றும் காஞ்சி, பாடாண்திணை என்னும் ஏழு திணைகளைப் பாடினார். அவற்றில் பண்டைய தமிழ் மக்களின் போர் முறைகளையும் அரசியல் மற்றும் அனைத்து அறங்களையும் வரலாற்று நூல் போல பாடியுள்ள விதம் போற்றத்தக்கது.

ஆறாவதாகக் கூறப்பட்ட காஞ்சித் திணையைப் பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாகக் கூறுவதானது,

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே"

என்னும் நூற்பாவால் புலப்படும். இவ்விருதிணைகளும் மக்களுக்கு ஏற்படும் துன்பியல் நிகழ்வுகளைப் பாட ஏதுவானவை என்பது அறிஞர் கருத்தாகும்.

காஞ்சித் திணையில் பொருள் நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை பற்றி

"மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை...."

என்னும் நூற்பாவில் விரிவாகக் கூறப்படும். போரில் ஈடுபடும் இளம் வீரன் மரணம், இறந்தவீரரோடு அவர்தம் காதலியர் மரணம், மகனை இழந்த தாய் புலம்பல், சுற்றத்தாரும் மற்றோரும் படும் கையறு நிலையும், எனப் பல சொல்லி, இறுதியில் இவற்றையெல்லாம் அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கும் சுடுகாட்டை வாழ்த்துவதாக,

"மலர்தலை உலகத்து மரபு நன்கறியப்
பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து"

என்பதாக அந்த நூற்பா முடிவுறும்.

பெருந்திணையில்,

"ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதியும் மிக்க காமத்துமிடல்"

என அதீத காமத்தின் நான்கு நிகழ்வுகள் கூறப்படும். இவை யாவும் துன்பியல் சார்ந்தவையாகும்.

இயல் 3. தொல்காப்பியத்தின் பாலைத்திணை

பாலைத் திணை என்பது தொல்காப்பியர் கூறும் அன்பின் ஐந்திணைகளில் நடுவுநிலைத் திணையாகும். பாலை என்பது ஒருவகை மரம். அது அதிக வெப்ப காலத்தில் நீரற்ற தன்மையிலும் வாடாமல் இருப்பதால் பாலை என்னும் பிரிதல் ஒழுக்கத்துக்கு பாலை என்னும் பெயர் வைத்தார் தொல்காப்பியர். பிரிவின் ஆற்றொணாத் துன்பத்திலும் காதலர் இருவரின் அன்பு குறையாது இருப்பதைப் பாலைமரம் சுட்டுகிறது எனலாம்.

பண்டைத் தமிழர் வாழ்ந்த நிலங்களை நானிலம், அதாவது நான்கு வகை நிலங்கள் எனக் கூறி மலையும் மலை சார்ந்த நிலம் குறிஞ்சி, காடும் காடு சார்ந்த நிலம் முல்லை, வயலும் வயல் சார்ந்த நிலம் மருதம், மணலும் மணல் சார்ந்த நிலம் நெய்தல் என்று கூறி, அவ்வத் திணைகளுக்கு அந்தந்த நிலத்தின் பெயரைச் சூட்டினாராயினும் பாலைக்கு குறிப்பிட்ட நிலம் கூறப்படவில்லை. சிலப்பதிகாரத்தில்

இளங்கோவடிகள்தாம், முதன்முதலாக முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் அதிக வெப்ப காலத்தில் நீரற்ற சுரமாக மாறும்,அதுவே பாலை நிலம் எனக் கூறுவர், என்று கூறுகிறார்.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற்றிரிந்து பாலை என்பதோர் படிவம்
கொள்ளும்"(சிலப்பதிகாரம் - காடுகாண் காதை - வரி64)

தலைவன் பொருள் தேடி வேற்றூர் செல்லும் போது, பாலை நில வழியாக செல்ல வேண்டி வருவதும், அக் கொடும் வழியில் அவன் பலவாறு துன்புறுவதும், தலைவி தன்னுடன் வந்திருந்தால் இந்தத் துன்பத்தை தாங்க மாட்டாளே என ஏங்கி இரங்குவதும் பாலைப் பாடல்களில் காணலாம். அத்தோடு தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவி தலைவனை எண்ணி அழுவதும், தோழி ஆற்றுவதுமாக இப்பாலைத்திணைப் பாடல்களின் "பிரிதல்" என்னும் உரிப்பொருளாக அமைகின்றன. அதைவிடப் ," பிரிதல் நிமித்தம்" எனப்படும் பிரிதலுக்கு முதலில் தலைவன் பொருள் தேடச் செல்வதற்கான ஆயத்தங்கள் செய்வதும், தோழி தலைவியின் நலம் வேண்டித் தலைவனைப் போகவிடாமல் தடுப்பதும், தலைவன் செலவழுங்குவதும் என்பனவும் பாலைத்திணையில் அமைகின்றன.

பாலை நிலத்தின் கருப்பொருட்களாக கொற்றவைத் தெய்வம்,வலியழிந்த யானை, வலியழிந்த புலி என்பனவோடு, மரங்களில் பாலையும் இருப்பையும் கள்ளியும் கூறப்படும். இந்த மரங்கள் மிகக் குறைவான நீர் வளத்துடன் உயிர் வாழும் தன்மை உடையன. இவ்வழியால் செல்லும் வழிப்போக்கரிடம் சூறையாடுவதும், பொருள் கிடைக்காவிடில் அவர்களைக் கொன்று குவிப்பதுமே பாலை நிலத்து எயினரின் தொழிலாகும். பாலைப்பண்ணும், சூறைகோட்பறையும், நீரற்ற சுனைகளும், பாலைப்பாடலின் பிற கருப்பொருட்களாகும்.

முல்லைப் பாடலின் தலைவி அல்லது நெய்தல் தலைவியர் போல் அல்லாது பாலைத்தலைவி பிரிதல் ஒழுக்கத்தில் மிகவும் துன்புறுவாள். பாலைப்பாடல் தலைவி தலைவன் தனியே செல்லும் பாலை நிலத்தின் கொடுமை அறிந்திருப்பதால் அவன் உயிருடன் திரும்பி வருவானா என்னும் கவலையில் மனம் அழிந்து உருகுவாள். அதனால் அவளது உடல் நலம் குறைந்து, அழகு குன்றி வாடுவாள். அதைக் காணப் பொறுக்காத அவளது தோழியானவள் தலைவன் பொருள் தேடப் புறப்படும் போது பல்வேறு செய்திகளைக் கூறி அவன் பயணத்தைத் தடுக்க முயல்வாள். பல பாடல்களில் தலைவனானவன் தோழியின் மதிநுட்பமான பேச்சினாலும் அறிவுரைகளாலும் மனம் மாறித் தன் பயணத்தைத் தள்ளிப் போடுவான். இதனைச் செலவழுங்குதல் (செலவு- பயணம், அழுங்குதல்-தாமதித்தல்) என்பர்.

"செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்" (தொல்- நூற்பா1131)

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பதால் பொருள் தேடித்தான் ஆக வேண்டும் என்னும் காரணத்தால் தலைவன் பிரியத்தான் வேண்டும். எனவே தன் அன்பு மனையாள் கலங்கும்போது அவளை ஆற்றுவித்துப் பின் அவளது அனுமதியோடு பொருள் தேடச் செல்வான் அல்லது செல்ல வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். (வன்புறை-பலவாறு சொல்லிக் கலங்குபவளை ஆற்றுவது)

பேராசிரியர் சோ. ந. கந்தசாமி தோழியின் பண்பு பற்றிக் கூறுகையில், "கேட்டார்ப் பிணிக்கும் தகைமையும், நிரந்தினிது சொல்லும் திறமும், வருத்தாமல் திருத்தும் பண்பும்,குறிப்பாகப் புலப்படுத்தும்அறிவுக் கூர்மையும், தேவைப்படின் அஞ்சாது பேசும் நெஞ்சுரமும் தோழியின் பேச்சுகளில் சுடர் விடுதல் காணலாம்" எனப் புகழ்ந்துரைப்பார்.

இன்னும் சிலபாடல்களில் தலைவன் பிரிந்து போனபிறகு தலைவியைப் பல்வேறுவகையாகச் சொல்லி ஆற்ற முயலும் தோழிக்கு, அது முடியாது போகும்போது தானும் அவளுடன் சேர்ந்து அழுது அரற்றும் காட்சிகளையும் பாடல்களில் காணலாம்.

இயல் 4. பாலைக்கலி

பாலைக்கலி கலித்தொகையின் முதல் தொகுதியாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் 35 பாடல்கள் அழகிய சொல்லோவியங்களாகத் திகழ்கின்றன. இப்பாடல்கள் அனைத்தும் பாலைத்திணையின் கருப்பொருட்களைக் காட்சிப் பொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன.

வேனிற்காலத்துக் கடும் வெயில் காரணமாகக் காட்டு மரங்கள் உலர்ந்து நிழல் தராமல் தோற்றுகின்றன. நிழலின்மையால் நிலம் வெம்மையேறி, அவ்வழியால் செல்லும் மனிதர் முதல் விலங்குகள் வரை நடந்து செல்ல முடியாது துன்புறுத்துகின்றது. அங்குள்ள சுனைகள் எல்லாம் வற்றி உலர்ந்ததால் விலங்குகள் நீர் தேடி அலைகின்றன. "பேய்த்தேர்" என்று புலவர் வருணிக்கும் கானல் நீரை நோக்கிச் சென்று ஏமாறித் தவிக்கின்றன. யானைகள் நீரற்ற சுனைகளில் தமது துதிக்கைகளைப்பதித்து அதன் வெப்பத்தைத் தாங்காமல் வெகுண்டு தாறுமாறாக ஓடுகின்றன. அவை அப்படி ஓடுவதால் வழமையான நடைபாதைகள் சிதிலமடைந்து அவ்வழியால் செல்பவர்களுக்கு வழி தெரியாமல் போய், அவர்கள் காட்டினுள்ளே சுற்றிச் சுழன்று, சிக்கித்தவிக்க நேரிடுகிறது. நீரும் உணவும் நிழலும் இல்லாமல் துன்புறும் வேளையில் வழிப்பறிக் கொள்ளையர் நடை சோர்ந்து செல்பவரை பயமுறுத்தியும், எதிர்த்தால் கொலையும் செய்து விடுகின்றனர். இறந்த உடல்களை எல்லாம் ஒன்றின் மேல் ஒன்றாக மதில் போல அடுக்கி அவற்றுக்கு மேலே இலை தளைகளால் மூடி வைத்துவிடுவர். அந்த மதில் போன்ற வேலியின் நிழலில் பாலை வெப்பத்தைத் தாங்க முடியாத சிறிய விலங்குகள் களைப்பாற வருவதாகப் புலவர்கள் பாடியுள்ளனர். என்னே கொடுமையான காட்சி!

இறந்த உடல்களில் நின்று பெருகும் குருதி, அந்த உடல்கள் மேலே சிவந்த பூக்களால் ஆன மாலை அணிவித்தது போலக் காட்சி அளிக்குமாம்! உயர்ந்த மரக்கிளைகளில் வாழும் கழுகுகள், பருந்துகள் போன்றவை நிலத்தில் விழுந்து கிடக்கும் பிணங்களின் கண்களை கொத்திச் சென்று கூட்டினுள் அடைகாக்கும் தமது பெடைக்கு உணவளிப்பதற்காக வானில் வட்டமிட்ட வண்ணம் பறக்கின்றனவாம்.

இப்படிப்பட்ட கொடுமை நிறைந்த பாலை வழியால் தலைவன் பொருள் தேடிச் செல்வான். வழியில் இணையாகச் செல்லும் பறவைகள், விலங்குகளைக் கண்டதும் தன் தலைவியை எண்ணி ஏங்குவான். தன்னோடு வருவேன் என்று அடம்பிடித்து அழுத தலைவி இந்தப் பாலை வழியில் வந்திருந்தால் அவளது மென்மையான பாதங்கள் சிவந்து துன்புற்றிருக்குமே என்று எண்ணி வருத்தம் கொள்வான்.

இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்ச்சிகளைப் பற்றி ஏற்கனவே பலர் சொல்லிக் கேட்டிருந்த தலைவியோ, தலைவன் தன்னை விட்டு நீங்கிய நாளிலிருந்து தலைவனை எண்ணி எண்ணித் தவித்து உடலும் மனமும் உருகிக் கண்ணீர் விட்டபடி வருந்துவாள்.

காதலர்கள் இருவரும் படும் துன்பங்களை அறியும் தலைவியின் தோழியோ ஒரு சிறந்த மதிநுட்பம் மிகுந்த பெண் மகள். தலைவன் பொருள் தேடச் செல்வதற்கு ஆயத்தம் செய்கிறான் என்பதை அறிந்ததும் தலைவனிடம் நேரே சென்று தனக்குத் தெரிந்த பாலை நிலத்தின் கொடுமையான காட்சிகளை ஒவ்வொன்றாக வரிசைப்படுத்திக் கூறுவாள். "தலைவனே, நீ இப்படிப்பட்ட கொடுமையான வழியால் பொருள் தேடச் செல்ல நினைக்கிறாய். நீ திரும்பி வருவதற்கு எவ்வளவு காலம் செல்லும் எனக் கூறவும் முடியாது. அதுவரை மெல்லியலான தலைவியின் நிலையை ஒரு முறை எண்ணிப்பார்!

"அவளது அழகு இளமை இவை எல்லாம் இழந்து அவள் உயிர் துறக்கும் நிலையும் ஏற்படும். இளமை நிலை இல்லாதது என்பது அறிவுமிக்க உனக்கு நன்றாகத் தெரியும். உடலும் நிலையற்றது. நிலையில்லாத செல்வத்தைத் தேடி ஓடி உனது இளமையான வாழ்நாளைக் குறைக்க எண்ணுகிறாய். உன் காதலியின் உயர்ந்த அன்பினது பொருளைவிட நீ தேடிப் போகும் பொருள் உயர்ந்தது என நினைக்கிறாயா? அவளது

துன்பம் உனக்கு விளங்கவில்லையா?" என்று பலப்பல கூறி அறிவுறுத்தி அவனைப் போக விடாது தடுக்கிறாள்.

இந்நிகழ்வுகள் யாவும் பின்வரும் பாலைக்கலிப் பாடல்களில் புலவர் அழகாக இயற்றியுள்ளார்.

பாலைக்கலி பாடல்11
"இடுமுள் நெடு வேலிபோல கொலைவர்....."
".....நறுநுதல் நீத்துப் பொருள் வயிற் செல்வோய்!
உரனுடை உள்ளத்தைச் செய் பொருண்முற்றிய
வளமையானாகும் பொருளிது என்பாய்
இளமையும் காமமும்நின்பாணி நில்லா
கடைநாளிதுவென்று அறிந்தாருமில்லை....."

இங்ஙனம் இப்பாடலில் தோழி தலைவனைச் செலவழுங்குவிக்கிறாள்.

இப்பாடல் பன்னீரடியில் இகந்து, ஒரு பொருள் நுதலாது, ஆசிரியத்தளை விரவி வந்த சீர்வகைக் கலிவெண்பாவாகும்.

<u>பாடல் 16</u>

"படை பண்ணிப் புனையவும்....."
".....தொல்லெழில் தொலைபிவள் துறந்து நீ...."

என்னும் பாடலில் தலைவன் பொருள் வயிற் பிரிந்து செல்வானாயின் தலைவியின் இளமையும் அழகும் தேய்பிறை போல தேய்ந்து கொண்டே போய் விடும் எனவும்,அழகாக மலர்ந்திருக்கும் தாமரை மலர் மிக விரைவில் வாடிப்போவது போல தலைவியின் அழகும் அற்றுப் போய்விடும் என்றும், குளிர்மையான தாமரைப் பொய்கையின் நீர்மட்டம் ஒவ்வொரு நாளும் குறைந்து குறைந்து போவது போல தலைவியின் வாழ்நாளும் வெகு விரைவில் குறைந்து போய்விடும் என்றும் தோழி தலைவனுக்கு அறிவுரை கூறி அவனது பயணத்தை தவிர்க்கிறாள்.

அழகிய உவமைகளைக் கொண்டு தலைவியின் இளமையும் அழகும் நிலையற்றது என்று தோழி கூறுவதாகப் புனையும் புலவரின் கற்பனையை என்னென்று வியப்பது! இயற்கையில் காணும் பொருட்களால் ஒருவருக்கு விளங்காத பொருளை விளக்கும் உவமைகள் பாடல்களுக்கு முழுமைத் தன்மை அளிக்கின்றன.

".....நீள்கதிர் அவிர்மதி நிறைவுபோல் நிலையாது,
நாளினும் நெகிழ்போடும் நலன் உடன் நிலையுமோ..."
"நாற்றஞ் சால் நளிபொய்கை அடைமுதிர் முகையிற்கு
கூற்றூழ்போற் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ"
தகைவண்டு புதிதுண்ணத் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம் போலும் இளமையும் நிலையுமோ..."

இது நான்கடித்தரவும் நான்கடி இடைநிலைப்பாட்டும் தனிச்சொல்லும் பெற்றுச் சுரிதகத் தரவோடொத்து வந்த ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

<u>பாடல் 17</u>

"அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்பப்
பிரிந்துறை சூழாதி, ஐய!....."

தோழி தலைவனை நோக்கி,

"தலைவனே! பொருளைத் தேடி ஓடும் உனக்கு அங்கே பொருள் ஒன்றும்கொட்டிக்கிடக்கவில்லை அப்பனே!

அப்படிப் பொருளைத் தேடி ஓடாதவர் ஒருவரும் உண்ணாமல் இறந்து போகவில்லை. காதலர் ஒருவரை ஒருவர் தழுவி அன்பால் கலந்தவர்கள் ஏழையாயிருந்தாலும் ஒரே ஆடையை மாறி மாறி உடுத்தாலும் உடுப்பர். இளமை இன்பம் துறக்க மாட்டார். தொலைத்த இளமையை மீண்டும் பெறுபவர் யார்? உன்னால் முடியுமா?" என்று கேட்பதாக இப்பாடல் அமைகிறது.

".....சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது
ஒழிந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்
..... ஒரோஒகை தம்முள் தழீஇ, ஒரோஒகை
ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு."

இது பன்னீரடியில்வந்து ஒருபொருள்நுதலிய கட்டளைக் கலிவெண்பாவாகும்.

<u>பாடல் 19</u>

"பல்வளம் பகர்பூட்டும் பயனிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறுசெயிர்சினஞ் சொரிதலின்..."
".....வளியினும் வரைநில்லா வாழும் நாள்..."

வாழ்நாள் காற்றுப் போல நிலையில்லாதது எனவும்,
".....யாறுநீர் கழிந்தன்ன இளமை..."

ஆற்று நீர் கழிவது போல இளமையும் கழிந்துவிடும் எனவும் தலைவி கூறுவதாக இப்பாடல் நிலையாமையைச் சிறந்த உவமைகளால் விளக்குகிறது.

<u>பாடல் 20</u>

"பால்மருள் மருப்பினுரல்புரை பாவடி...."
".....கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின்பெயர் பெயர்பு உறையும்
அன்ன பொருள் வயின் பிரிவோய், நின்னின்று
இமைப்புவரை வாழாள் மடவோள்...."

தோழி தலைவனிடம் அவரவர் ஊழ்வினைக்கு ஏற்பவே பொருள் சேரும் எனவும், உன்னைப் பிரிந்து கண்ணிமைப் பொழுதும் உயிர்வாழ மாட்டாத உன் காதலியைப் பொருள் தேடும் பொருட்டுப் பிரிவேன் என அருளில்லாத மொழி கூறுகிறாய்..." என்று கடிந்து மொழிகிறாள்.

இது ஓர் ஐஞ்சீரடிவந்து தனிச்சொல்லும் மடக்கியலுமின்றிச் சுரிதகம் பெற்று அடிநிமிர்ந்தோடிய கொச்சகம் என்பார் நச்சினார்க்கினியர்.

இயல் 5. நிலையாமை பற்றிக் கூறும் பிற நூற்கள்

<u>திருக்குறள்</u>

"கூத்தாட் டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்றே"

கூத்து அரங்குக்கு மக்கள் வரும்போது ஒவ்வொருவராக வருவர். கூத்து முடிந்ததும் அனைவரும் ஒரே நேரத்தில் வெளியேறி விடுவர். இவ்வாறே செல்வம் சேர்கையில் கொஞ்சங் கொஞ்சமாகச் சேரும். ஆனால் அது அழியும்போது ஒட்டு மொத்தமாக அழிந்துவிடும். இது செல்வம் நிலையாமை பற்றிய வள்ளுவனார் கூற்றாகும்.

"குடம்பை தனித்தொழிய புள் பறந்தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு"

யாக்கை நிலையாமையை அழகாக விளக்கும் குறள் வரிகள். கூட்டில் இருந்து பறவை பறந்தது போல உயிர் உடம்பில் இருந்து பிரிந்ததும் உடல் அழிந்து விடும் என்பது உண்மையே.

திருமந்திரம்

"தன்னது சாயை தனக்குதவாது
என்னது மாடென்றுஇருப்பார்கள் ஏழைகள்
உன்னுயிர் போம் உடல் ஒக்கப்பிறந்தது
கண்டது காணிநீ கண்டு கொளீரே" (பாடல்170)

தன்னிழல்கூடத் தனக்கு உதவாத போது நீ சேர்த்துவைத்த, உனது என்று சொல்லும் செல்வம் எப்படி உனக்கு உதவும்? உடலோடு பிறந்த உயிர் போகும்போது உடல் உனதுயிரைப் போகாமல் நிறுத்துமா?

செல்வம், யாக்கை நிலையாமை கூறும் மந்திரம் இதுவாகும்.

"ஈட்டிய தேன்பூ மணம் கண்டு இரதமும்
கூட்டிக்கொணர்ந்து ஒரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரத்திட்டு அது வலியார் கொளக்
காட்டிக் கொடுத்தது கை விட்டவாறு" (பாடல்171)

தேனீ ஒவ்வொரு பூவாகத் தேனைச் சேர்த்து வைக்க, வலியார் கொள்வது நிதமும் நடக்கும் செயல்.

செல்வம் நிலையாமைக்கு அழகானதொரு உவமை.

"மாறுதிருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறும், அதனைப் பெரிதுணர்ந்தார் இல்லை
கூறும் கருமயிர் வெண்மயிர் ஆவதும்
ஈறும் பிறப்பும் ஓர் ஆண்டென்றீரே" (பாடல் 192)

இளமை நிலையாமைபற்றிக் கூறும் மந்திரம் ஆகும். கரையிட்ட புதுப் பட்டும் ஓர்நாள் கிழியும். அதேபோல் கறுத்த கூந்தலும் நரைத்துவிடும். இளமை நிலையில்லாதது.

நாலடியார் பாடல் ஒன்றில்,

"பனிபடுசோலைப் பயன்மரம் எல்லாம்
கனி உதிர்ந்து வீழ்ந்தற்று இளமை"

என இளமையும் அதனால் காணும் அழகும் நிலையற்றது என்கிறார் ஆசிரியர்.

முடிவுரை

அகப்பொருள் (காதலின் இன்பதுன்பம்) பாடல்களுக்குத் தொல்காப்பியர், கலிப்பா என்னும் யாப்பு நெறியில் அமைப்பது சிறப்பு என்று கூறியதற்கு இணங்க கலித்தொகைப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன.

ஆய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாலைக்கலியில் காதலர் இருவரும் அவர் கூட்டத்தில் பெறும் இன்பமும், பிரியும் வேளை படும் துன்பமும் பாடற் பொருளாய் உள்ளது. அத்துடன், அவர்கள் பிரியக்கூடாது என்பதில் அக்கறையுள்ள தலைவியின் தோழியானவள், பொருள் தேடுவதற்காகப் பிரிய நினைக்கும் தலைவனுக்கு யாக்கை, இளமை, செல்வம் இவற்றின் நிலையாமை பற்றியும், வாழும்நாளது சின்மையும், இளமையது அருமையும் கூறித் தெளிவு படுத்துகிறாள். தொல்காப்பியம் கூறும் காஞ்சித்திணைப்பாற்படும் நிலையாமைக் கருத்துகள் இவை என்பது தெளிவு.

எனவே அகப்பாடலான பாலைக்கலியில் புறத்திணையான காஞ்சித்திணைக் கூறுகள் இருப்பது வெளிப்படை. ஆனால் பாலைத் திணைக்குப் புறமான வாகைத்திணையின் கருத்துகள் பாடல்களில் காணப்படவில்லை.

அடுத்ததாக, காஞ்சித் திணை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறம் என்கிறது தொல்காப்பியம்.

பெர்ந்திணையின் கூறுகளான மிக்க காமத்துமிடல்,தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் போன்ற உணர்ச்சி நிலைகள் பாலைக் கலியில் ஆங்காங்கே காணப்படுகின்றன. அது தவிரவும், அன்பின் ஐந்திணைக்கான உணர்வு நிலைகளும் குறிப்பாக இருத்தல், இரங்கல் நிலைகளும் சிற்சில இடங்களில் விரவி இருப்பதையும் காணலாம்.

"திணைமயக்குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன் நன்குணர்ந்த புலமையோரே" (அகத்திணையியல் 14)

இந்த அகத்திணை நூற்பாவானது, பாடல்களுக்கிடையே திணை மயக்கம் காணப்படலாம், வழுவல்ல என்கிறது.

அதற்கிணங்க பாலைக்கலிப் பாடல்களில் பல திணைக் கூறுகளும் புறத்திணையான காஞ்சித்திணைத் துறை உட்பட மயங்குவது காணப்படுகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் கூறியது போல் அல்லாமல் முப்பொருட்களாகிய முதல்,கரு, உரி இவற்றுள் நிலம் தவிர்ந்த ஏனைய பொருட்களும் புறத்திணைத் துறைகள் உட்பட அனைத்துப் பொருட்களும் மயங்கும் என்பது தெளிவு.

எது எவ்வாறிருப்பினும் எண்ணிக்கையில் அதிகம் காணப்படும் சங்க அகப்பாடல்களில் புறத்திணைக் கூறுகளும் இருப்பதால் வாசகருக்கு முழுமையான பொருள் கூறும் இலக்கியங்கள் கிடைப்பதில் பலன் அதிகமே!

முற்று முழுதாக அகப்பொருளைப் பாடும் கலித்தொகையில் பாலைக்கலி கூறும் காஞ்சித் துறையின் நிலையாமைக் கருத்துகள் அழகாகப் பொருந்துவதோடு ஒவ்வொரு கணமும் நிலையான இன்பம் காணத்துடிக்கும் மக்கள் வாழ்வில், நிலையாமை ஒன்றுதான் நிச்சயமானது என்பதை அகப் பொருளுக்கே உரிய மென்மைத்தன்மையுடன் விளக்கி இருப்பது போற்றத் தக்கது.

Insights into the Realm of Tolkappiyam: An Economic Perspective Through Expounding the Sangam Age

T. Chandramouli

lalithtchandramouli@gmail.com

Abstract

Tolkappiyam is a well-known work dealing with Tamil grammar and related traits. It brings out the genesis of a Classical Language and often referred in all spheres. Besides, Tolkappiyam is intrinsically related to human life and economics. The scope of Tolkappiyam spans to human life and living in Sangam period, understanding social transitions, understanding the socio-political and economic linkages and expounding the significance of landscapes in the scope of economic transformations. Thus the objective of this paper is to look into the societal and economic transformations in the past through the lens of Tolkappiyam. The future of institutions and human well-being may be judged through understanding the classical literature. Tolkappiyam can be considered as a 'treasure trove'- as it also discusses about life in Sangam period and brings out the nature of landscapes.

Economics, itself is a branch of social science - and Tamil Language and Tolkappiyam present evidences of the historical past which helps a comprehensive study in understanding socio-economic environment. The aspects which this paper touches upon include:

- Sangam period and economic development
- Landscapes and the nature of economic transition
- Social conditions at that time
- Analysing the conditions for the future development of societies.
- The treatise of Tolkappiyam and economics

Introduction

Tolkappiyam is generally considered as an authoritative text on grammar. Though there is no specific period as to the 'birth' of Tolkappiyam, many consider it that it dates back to the First Century. However, Tolkappiyam places before us a tradition and discusses about the nuances of grammar. The words 'tol' and 'kappiyam' touch upon some intrinsic themes, directly collating to the way of living. The word 'tol' is referred to as 'old' or classical and 'kappiyam' could be referred to as treatise. In fact the work of Tolkappiyam touches upon the things of ancient past. Strictly speaking, ancient times means times immemorial, both Tamil and Tolkappiyam, represent culture at that point of time. This stands as the basis of testimony, that ancient literature contains a fountain of information which can directly be 're-searched' in the present context. Some dimensions which may be touched upon include

Socio-economic conditions, then and now

Land-use then and now

Thus in understanding literature, it is also important to understand the nature of societal transformations. Literature besides exhibiting the 'art' of language, also portrays culture and tradition prevalent at that time. What makes Tolkappiyam and Tamil literature unique is the 'classical' and 'traditional' approach[1]. The best way to go forward is to mention about Tamil language and whether Tamil culture is followed. Through economic prism, culture exhibits the growth of societies. Renowned author A K Ramanujam mentions 'in their antiquity and in their contemporaneity, there is not much else in Indian literature equal to these quiet and dramatic Tamil poems. In their values and stances, they represent a mature classical poetry; passion is balanced by courtesy, transparency by ironies and nuances of design, impersonality by vivid detail, austerity of line by richness of implication'. Thus the leaning on literature, would mean entering into a space of 'serendipity', and the explanation of landscapes in the Sangam Age, opens up discussions on life and living. The way people lived and carried on their occupations have direct relevance to economic study. It can credibly be surmised that Tolkappiyam, is a work beyond Grammar, it signifies a way of living, it brings out the richness of land and landscapes and it is no doubt that many authors have extoled the Sangam Age.

Insights into Tolkappiyam and Sangam Age

To begin with, we can sketch the Sangam period, highlighting both language and life. The Sangam Age in itself is an Age of literary excellence; and Sangam literature propounds culture and has a profound influence on all aspects of life. The writings/poems during this time touched upon aspects of feelings, war, virtue, and there is a need for unleashing the intrinsic themes. The lines '*Vanpughazl Moovar Than polilzh Varraipin*' (Tol. 79), portrays the Sangam period - of Cheras, Cholas and Pandyas - and here landscapes are exemplified. In this land of Cheras, Cholas and Pandyas, there is growth of flora[1], and one can enrich the pristine beauty of the region. The landscapes have a unique environ - Mullai (forests), Kurinji (mountains), marutham (farmland), Paalai (dry areas) and Neithal (sea-shore).



'Araiyum Poraiyum Manata Talaiyal
Ennai Tinkal Anaiya Kotunkarait
Tennir cirukulam kilvatu maato' (Puram 118-1-3)

describes about the lakes, may be studied along with the structure of water bodies. Agriculture is the mainstay of the people and water is the required input. These are lessons to water conservation and also planning of towns.

'Kalarpatu Kooval Thonti naalum
Pulaitti Kaliiya Toovel Aruvai' (pura. 311-11,12)

describes about land-use, exhibiting skill in agriculture-the usage of water for irrigation and the need to increase crop germination

By looking at the landscapes one can easily decipher not only about occupations, but also about food habits and customs which can address the demand-supply friction. The food is mainly available from Kurinji, Marutham and Neithal, as people worked in this specific landscapes, depend on what is available in that region. Likewise Sangam period shows that people have moved to places for search of jobs, however exhibited their skill at all places.

Closely associated with rulers and economy is the act of decentralisation. Today Kingship has paved way for democratic traditions and decentralisation. It is through decentralisation that a nation can achieve the socio-economic ends. Decentralised framework will work better even if decision-making is at the lower strata. It is a case of inclusive development[1]. Business organisations of today are with team leaders and for better governance, the rulers vouch for decentralised set up.

Let us try to drift from language, and life to landscapes. As one enquires into the economy of Sangam Age, we can look at the growth of agriculture and industry[1]. In agriculture one can declassify the nature of primary sector. Besides tilling of land and agricultural productivity, there are also occupations such as floriculture, fishing, getting forest produce and even maintaining

medicinal plants and species. All these occupations are performed in different landscapes and have contributed to agricultural economy. It is interesting to note that the Sangam period has showcased a separate model for economic growth intertwining all sectors.

Important aspects revolving around this Age:

Agriculture and Trade
Cattle rearing and cultivation
Happiness and satisfaction
Socio-economic Conditions during Sangam Age

Even before one can delve into the socio-economic conditions, one should throw light on the vicissitudes of life. In Tolkappiyam, human traits, customs and beliefs are extensively mentioned under 'Kalaviyal'. There is a concept of - pleasure, marriage, wealth - which all expound the nature of landscapes; and landscapes in general provide a clue to socio-economic study. The lines '*Ondre Vere Meinreru…*' (Tol. 93), talks about Kurinji or mountainous region, occupation as hunting, portrays life and leisure. Coinciding there is also a mention of other landscapes which exhibit their exclusivity. At another place, Tolkappiyam mentions the word 'Sambalam'.Sambalam[1] also touches upon tradition, thinai and trade. Again Sangam literature and growth of the economy may said to be intertwined. The community 'Umanam' are said to deal with salt and salt trade. Azhagarmalai inscriptions mention about 'salt merchants'.

Tolkappiyam refers to four castes - Arasar (Kings), Anathar (Priests), Vanigar (Trade), Vellalar (Agriculturalists). And there were other groups such as Parathavar, Paanar, Eyinar, Kadambar and Maravar in sangam society. It is interesting to know that people followed custom according to their tradition and have possessed greater qualities of life. A further understanding shows people were engaged in major art forms -music, dance and paintings. There was an inclination to literary aspects of life. Even today there is a debate between work and leisure. Thus the underlining concepts of work-life balance may be borrowed from this Age. This opens up analysis of the linkage between landscapes and economic progress.



In a broader perspective Sangam Age has touched upon socio-economic factors. A reference to it is money and migration. '*Aran Kadaipatta Valkazhkaiyum…'* (Akam 155), shows that people migrated to places to earn their livelihood. This opens up the social strata as women in the family wait for the breadwinner. Articles largely suggest that women were held in high esteem; and what makes the position of women more special is as male population were engaged in various occupations and even in warfare - the Mothers full courage handled the family. This is an important 'social institution' - supporting the family at all times. Besides, there were poets who sing before the King and are paid modestly, and their families also need to be supported. So the role of women is held high in all spheres. As regards to class structures Akam 33 mentions *'Uyirdorka Kuriya Otti Naan, Edu Vanigarku Uriyatoru Pirivu Unarthuthal Noothalirindu'* Definitely there is a reference to various types of professions in Sangam era, and when we mention of richness of landscape, we should also understand about socio-economic conditions and traditional values.

Economic Perspectives at Work

If one begins to understand the economic ills of today, it is more about under-utilisation and mis-utilisation of resources (land). This brings into the study the nature of landscapes. Each of the landscapes bring out unique nature of economic activities. Agriculture and rural development and their significance is clearly seen in this era of digital growth. here also comes a distinction between 'need' and 'wants'. Tolkappiyam mentions of barter system in place during this period. The richness of this period if further exemplified, that even in the mechanism of barter, trade and exchange flourished to a large extent. In Tolkappiyam, the word 'Kodiyum Thedi Kodi Maramum Naati' is used referring to an entrepreneur and entrepreneurship. As we see the growth of informal economy today, we come across skill-based employment and the creation of productive assets. Entrepreneurship today, is the key to economic development. In the Sangam Age, people were engaged in occupations such as weaving, metallurgy, artisanship - ideally would be to pass on to the other generations. This in fact lays foundation for a skilled-based economy and this reflects on the richness of the economy. These productive activities also help in the growth of international trade. Entrepreneurship not only adds to productivity, but also helps to protect a tradition, and today we talk in terms of providing Geographical Indications tag. It is a confidence enshrined on a particular class (or classes) to maintain the original quality and standard.

There was existence of barter system, which only means that there was a developed product market. There may be inefficiencies in the system, but there was a well-developed product market and labour market (skilled workforce). '*Minoonduthu Nerkuvaie…*' (Puram 343;1-8) brings out the nature of barter system. We also get to know people we skilled at metallurgy. A factor which has added value to the richness of Sangam Age is good performance of agriculture and manufacturing. The mere existence and sub-division of landscapes has greatly helped agricultural development; conversely people were also skilled at metallurgy and created the appropriate tools and equipments. This only means that the nature of quality has been sustained and this has a direct impact on foreign trade.

The year 2023 was celebrated as International Year of Millets. Interestingly, India is the largest exporter of millets in the world. The history and millets and millet production dates back to the

Sangam Age. This is the classic example of richness of Sangam Age - of the different varieties of the crop grown, giving importance to millets ages back itself, best use of the landscapes and people living a satisfied life. There is Maruthinai Cheyul '*Setrrunilai Mulaiyeya Sengata Kaaraan…'(*Akam 46), brings to the fold the characteristics of the landscapes and how people lived considering the social status. Their contribution should add to productivity, and this should lead towards greater well-being[1]. The importance of foreign trade can be studied separately. Trade itself arises due to production, manufacturing, demand creation and a liberalised role of the government. The extrinsic and intrinsic aspects of both in Sangam literature and landscape must be widely covered to understand about the flourishing foreign trade. Pavalar (1999), mentions about different types of boats[1] - each of which is for a specific economic activity. This only shows that there should have been a perceptible development of inland waterways, fishing, ship-building, production (development in commodity market) - all of which create direct or indirect opportunities.

Economic objectives are slowly shifting from development to sustainable development to inclusive development. There are changes in technologies and outlook. It is again here we have to rely on Sangam literature to protect the socio-economic tradition. The concepts organic farming, indigenous development, regional growth, entrepreneurship, well-being, good governance -to mention a few - find place in Sangam Age. Thus a mapping of Sangam period to economic developments can pave a study on socio-economic and cultural traditions.

Conclusion

Thus this paper looks upon Tolkappiyam to handle a broad framework of economic and social life in Sangam Age. The other texts at that time give researchers a vital information which demystify the hurdles in macro-economic setting. The tools are available in the 'gamut of literature', and in designing economic framework, there should be a inclusive study so that traditional concepts are synchronised with contemporary aspects so that there is an equitable order is in place. Economics itself gives importance to both qualitative and quantitative data, and ancient texts may be revisited to understand and analyse the growth of institutions.

References

1. Arul Josephine S, Tamil Land-based Thinai Theory and Economic Transformation, International Research Journal of Tamil, Vol.4, Issue S-13, 2022.
2. Devaneyar Paavalar, Sollvalam, Manivaasakar Patthippagam, Chennai, 1999.
3. Jayaram Poduval, Sangam Poetry and a Journey to Kurinji Land, The New Indian Express, Dec. 2021
4. Kadikachalam N, Sangapurmagalil Palturai Arivu, Meyappan Patthippagam, Chidambaram, 2004
5. Mathaiyan P, Sanga Illakiyathil Velan Samutahiyum, New Century Book House, Chennai, 2004
6. Pograj M, The Poverty Level of Sangam Music Resisents, Shanlax, Madurai, 2022
7. Sivalingam A, Tolkappiyam Economy: Textual Economics, International Institute of Tamil Studies, Chennai, 2015.

8. Sivathamby K, Early South Indian Society and Economy: The Tinai Concept, Social Scientist, Vol.3, No.5, 1974.
9. Sundaram G, Administrative Heritage of Southern India - From Sangam Age, Palaniappa Brothers, 2017
10. Shanmughapillai M, Tolkappiyam Porulatikaram Elampurangal, Vol 1&2, Mullai Nilayam, 1998.
11. Trade During Sangam Age, The Peninsula Foundation
12. Varadharaja Iyer E S, Tolkappiyam-Porulatikaram (Ed: Dr Chidambaranatha Chettiar A), Vol.I-Part II, The Annamalai University, 1948
13. Sjctni.edu

Notes

The word 'richness' is deliberately used to show the real significance of Sangam Age, as the realm should not be just restricted to literature but expand beyond life and living.

The main occupations during the Sangam Period were agriculture, manufacturing and weaving. Paddy, pepper and millets were important crops and typically international trade flourished. During this period one can say that there was a good infrastructure system yielding not only to greater produce or productivity, but also made efficient use of landscapes. Market centres existed and this was supplemented by a good administration. One can say economic activity was bustling more importantly because of efficient and appropriate usage of resources. However there was fragmentation (rich and poor class), but there was larger efforts to sustainable use of resources.

Direct Interview (in the month of June/July 2024)

For this paper, Dr N Kanakasabesan, Principal (Retd.), Swami Dayananda Saraswathi College, Manjakudi provided vital inputs on the economy of Sangam Age. Trade and infrastructure of Sangam Period was discuused at length. Dr M A Bhageerathi, renowned musicologist and Professor (Retd.), Queen Mary's College, Chennai articulated the literary aspects in Tolkappiyam and Sangam literature and provided a synthesis to economic study.

Acknowledgment

I would thank my institution for having supported me to present this paper. The materials available in the Library of the institution has been helpful for the purpose of this study. The Department of Tamil also lent its hand.

தொ.மா.க. 185

நாட்டுப்புறவியல் நோக்கில் தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும்

முனைவர் தே. இந்திரகுமாரி
உதவிப்பேராசிரியர்
உருமு தனலட்சுமி கல்லூரி திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு
indirakumari2166@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் பெருமைக்கோர் ஒப்பற்ற சான்றாக விளங்கும் தொல்லிலக்கண நூலே தொல்காப்பியமாகும். இந்நூலே தமிழ் மொழியின் சிறந்த கட்டமைப்பினை இன்றுவரை உலகிற்கு பறைசாற்றி வருகிறது. தொடர்ந்து தமிழ்மொழியில் காலந்தோறும் பல்வேறு சிறந்த இலக்கண மற்றும் இலக்கிய நூல்கள் தோன்றுவதற்கேற்ற அடிப்படையையும் உருவாக்கித் தந்தது. எடுத்துக்காட்டாகத் தமிழில் தோன்றிய முதல் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் தொல்காப்பியத்தின் அக மற்றும் புறத் திணைக் கோட்பாடுகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது குறித்துப் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன என்பதற்கு 'வல்லமை' இணைய இதழில் இடம்பெற்றுள்ள 'தொல்காப்பிய புறத்திணை நோக்கில் சிலப்பதிகாரம்' என்னும் பேராசிரியர் முனைவர்.மு.பழனியப்பன் அவர்களின் ஆய்வுக்கட்டுரையையும், இராம.தட்சிணாமூர்த்தி அவர்களின் 'சிலப்பதிகாரப் புறத்திணைக் கூறுகள்' என்னும் நூலையும் சிறந்த சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

இந்நிலையில் தொல்காப்பியத்தின் திணைக் கோட்பாடுகள் மட்டுமன்றி அதில் இடம்பெற்றுள்ள நாட்டுப்புறவியல் சார்ந்த பல்வேறு கூறுகளும் சிலப்பதிகாரத்தில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் இத்தகைய அமைப்பு முறையும் சிலப்பதிகாரத்தின் நிலைத்த புகழுக்கு ஓரு காரணமாக அமைந்திருக்கிறது என்பதையும் உணர்த்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகிறது.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள 'தொல்காப்பிய ஆய்வுகள்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள அறிஞர் வ.சுப.மாணிக்கனார் அறக்கட்டளையின் பரிசு பெற்ற கட்டுரைகளில் ஒன்றான 'நாட்டுப்புறவியல் நோக்கில் தொல்காப்பியம்' (ஆசிரியர் சு.இந்திரஜித்) என்னும் கட்டுரையை முன் ஆய்வாகக் கொண்டு அதன் தொடர்ச்சியாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

தொல்காப்பியர் சுட்டும் நாட்டுப்புற இலக்கிய வகைகள்

'தமிழுக்குரிய இலக்கணம் வேறு எந்த மொழியிடமும் இருந்து நாம் இரவல் பெற்றதன்று. நமக்கே உரிய மரபுவழிச் சொத்து என்பதற்குச் சிறந்த சான்றாக விளங்குவது தொல்காப்பியமே .நம் தாய்மொழியான தமிழ் தன்னேரில்லாத தனிமொழி என்பதை உணர்த்துவதற்குச் சான்றாக உள்ள இலக்கண நூல் இது ஒன்றே என்று ம.பொ.சி நம்புகின்றார்.'[1] இத்தகைய சிறந்த தொல்லிக்கண நூலாகிய தொல்காப்பியம் குறித்துக் காலந்தோறும் புதிய கோணத்தில் பல்வேறு ஆய்வுகள் தொடர்ந்து வெளிவருகின்றன. அவ்வகையில் தொல்காப்பியத்தில் நாட்டுப்புற இலக்கியங்களுக்குரிய இலக்கண வரையரைகள் சுட்டப்படும் பகுதிகளை ஆராயும் போது அவற்றில் பல்வேறு நாட்டார் இலக்கிய மரபுகளைக் காணமுடிகிறது. பொதுவாக 'புராணங்கள், மரபுக்கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், நாட்டார் பாடல்கள், கதைப்பாடல்கள், இசை, நடனம், சடங்குகள், விழாக்கள், மந்திர வித்தைகள், தொழில்கள் ஆகியவற்றை ஆராய்வதை நாட்டுப்புறவியல் என்பர்'[2] என்கிறார் டாக்டர்.சு.சக்திவேல். இவை குறித்த பல செய்திகள் தொல்காப்பியத்தில் இடம்பெறுவதால் அவரது காலத்திற்கு முன்னதாகவே ஏராளமான வாய்மொழி இலக்கியங்கள் தமிழக மக்களிடையே வழக்கிலிருந்தன என்பது தெளிவாகிறது. எடுத்துக்காட்டாக,

பாட்டு உரைநூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முது சொல்லொடுஅவ்வேழ் நிலத்தும் (தொல்.செய்.79)

எனும் நூற்பா பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம் மற்றும் முதுசொல் என ஏழு வகையான நாட்டுப்புற இலக்கியங்களைப் பட்டியலிடுகிறது.

நாட்டுப்புறப் பாடல்கள்

பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல பண்ணத் தியே (தொல்.செய் 173)

எனும் நூற்பா சிற்றிசையும் பேரிசையுமாகத் தமிழில் பாடப்படும் பாடல்களைப் 'பண்ணத்தி' எனும் சொல்லால் குறிப்பிடுகிறது. பண் + நத்தி என விரியும் இச்சொல் பண்ணை அதாவது இசையை விரும்புவது எனும் பொருளைத் தருகிறது. மேலும் இது பாட்டிடைக் கலந்த பொருளை உடையதாகவும், பாட்டின் இயல்பைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும் என்பதும் தெளிவாகிறது. 'ஒருபாட்டின் ஓசையின்பமும் இசையில்பும் அப்பாடலுக்கென்று அமைக்கப்பட்ட பண்ணமைப்பில் சிறப்படைகின்றன. பண்ணின் இசையமைப்பு பாடலுக்குச் சுவையூட்டுகின்றன. எனவே பண் நிலைகளைப் பெற்ற் பாட்டினைப் பண்ணத்தி என்று அழைக்கலாயினர்'[3] என்கிறார் ஆய்வாளர் இரா.வசந்தமாலை. ஏற்ற பொருளும், இனிய இசையும் இணைந்திருக்கும் இத்தகைய பாடல்கள் தமக்கென இலக்கண வரையறைகள் எதுவும் கொண்டிருப்பதில்லை என்பதால் இவை நாட்டுப்புற பாடல்களையே குறிப்பிடுகின்றன என்பது தெளிவாகிறது.

மேலும் தமிழில் தோன்றிய முதல் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்துப் பாடலில்

திங்களைப் போற்றுதும்..... (சில.01 1)
ஞாயிறு போற்றுதும்..... (சில.01 4)
மாமழைப் போற்றுதும்..... (சில.01 8)
பூம்புகார் போற்றுதும்..... (சில.01 10)

எனும் தொடர்கள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து வந்து நாட்டுப்புறப் பாடல் வடிவில் இசைக்கப்படுவது இங்கு நோக்கத்தக்கது. அவ்வாறே நாட்டுப்புறப் பாடல்களில் ஒரு பொருளைப் பற்றி மூன்றடுக்கு அல்லது நான்கடுக்கு முறையில் சொற்கள் அமைந்து நீண்ட பாடல்களாக வடிவெடுக்கும் மரபு சார்ந்த முறையில்

திங்கள் மாலை வெண்குடையான்..... (சில.07 2)

எனத் தொடங்கும் ஆற்றுவரிப் பாடல்கள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. அவ்வாறே,

கோவா மலைஆரம், கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம், தென்னவர்கோன் மார்பினிலே (சில.17 26)

எனும் ஆய்ச்சியர் குரவையின் உள்வரி வாழ்த்துப் பகுதியிலும் நாட்டுப்புற வகைப் பாடல்களைக் காணலாம். இங்கு வரி என்பது ஒரு வகைக் கூத்திற்கும், ஒருவகைப் பாடலுக்கும் பொதுவாக வழங்கும் பெயரினைக் குறிக்கிறது.

அரங்கும் ஆடலும் தூக்கும் வரியும்
ஆடலும் வரியும் பாணியும் தூக்கும் (சில.10 12)

எனவும் வரிப்பாடல் பற்றி சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

இசைக்கருவிகள்

மேலும் கருப்பொருள் பற்றிக் கூறும் தொல்காப்பிய நூற்பா
தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல்.அகத்.18)

எனக் குறிப்பிடுவதால் அக்காலத்தில் ஐவகை நில மக்களும் ஐவகைப் பறைகள், ஐவகை யாழ் எனப் பல இசைக்கருவிகளைப் பயன்படுத்திய செய்தி வெளிப்படுகிறது.

சிலப்பதிகாரத்தின் மதுரைக்காண்டத்து புறஞ்சேரி இறுத்த காதையானது மூங்கில் மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியில் விடியல் நேரத்தில் கோவலன், கண்ணகி மற்றும் கவுந்தியடிகள் மூவரும் வரிப்பாடல்களைப் பாடும் கொள்கையுடைய அநதணர்கள் வாழும் ஓர் ஊரினை அடைந்த நிகழ்வினை விவரிக்கிறது. அப்போது அந்த இளவேனிற் காலத்து இனிய பொழுதில் கோவலன் அவர்களுடன் யாழிசைத்து மகிழ்கிறான். பின்னர் நீர் கொண்டுவரச் செல்லும்போது வழியில் கோசிகனைக் கண்டு உரையாடித் திரும்புகிறான். அப்போது கொற்றவையின் போர்க் கோலத்தை வருணித்துப் பாடும் சில பாணர்களைக் கண்டு அவர்களுடனும் இணைந்து பண்ணிசைத்து மகிழ்கிறான்.

செந்திரம் புரிந்த செங்கோட்டு யாழில்
தந்திரகத்தோடு திவ்வு உறுத்து யாத்து
ஒற்று உறுப்பு உடைமையின் பற்றுவழி சேர்த்தி
உழைமுதல் கைக்கிளை இறுவாய் கட்டி
வரன்முறை வந்த மூவகை தானத்து
பாய்கலைப் பாவை பாடல் பாணி
ஆசான் திறத்து அமைவரக் கேட்டு (சில.13 106-112)

எனும் இக்காப்பிய வரிகள் யாழ் என்னும் இசைக்கருவியைப் பயன்படுத்தும் முறையையும், அதனை நன்கிசைத்துப் பண்பாடும் பண்டைய தமிழரின் இசையறிவையும் விவரிக்கிறது.

கூத்துக்கள்

இத்தகைய இசையிலும், கூத்திலும் சிறந்த பாணர், கூத்தர், விறலியர் போன்றவர்கள் தலைவன் மற்றும் தலைவியிடையே ஏற்படும் ஊடலைத் தீர்ப்பவர்களாக செயல்பட்டனர் என்பதை

பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணம் சான்ற அரிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பின் பார்ப்பான் முதலா (தொல்.சொல்.188)

என்ற நூற்பாவின் வழி அறியமுடிகிறது. கடைச் சங்க காலத்தில் பண்' என்ற சொல் வழக்கிலிருந்ததை,

பண்ணென்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண் (திருக்குறள் 572)

என்னும் குறள் வழி அறியமுடிகிறது. 'பாடலோடு பொருந்தாத பண்ணினால் எவ்வாறு பயனில்லையோ அதுபோலக் கண்ணோட்டம் இல்லாத கண்களால் பயனில்லை எனப் பொருள் தரும் இக்குறட்பாவில் உவமையாகப் 'பண்' எனும் இசையைக் குறிக்கும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதால் அக்காலத் தமிழரின் இசையறிவு உணர்த்தப்படுகிறது.

தொடர்ந்து வெறியாடல், வாடாவள்ளி, கொற்றவள்ளை, முன்தேர்க் குரவை, பின் தேர்க் குரவை எனப்பலக் கூத்து வகைகளையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

சிலப்பதிகாரமும் வேந்தர்கள் முன்னிலையில் ஆடும் வேத்தியல், பொது மக்கள் முன்னிலையில் ஆடும் பொதுவியல் எனும் இரு வகைப் பிரிவுகளாகக் கூத்துக்களை வகைபடுத்துகிறது. கடலாடு காதையில் ஒரு விஞ்சையன் தன் காதலிக்கு மாதவி ஆடிய கூத்துக்களைப் பற்றி வியந்து கூறும்போது பலவிதக் கூத்துகளைப் பட்டியலிடுகிறான். அவை,

திரிபுரம் எரிய தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒரு திற னாக ஓங்கிய
இமையவள் ஆடிய கொடுகொட்டி ஆடல் (சில.06 .40-43)

என சிவபெருமான் உமையொரு பாகனாக வெற்றிக் களிப்புடன் ஆடிய கொடுகொட்டி,

தேர்முன் நின்ற திசைமுகன் காணப்
பாரதி ஆடிய வியன்பாண்ட ரங்கமும் (சில.06 .44-45)

என பிரம்மன் முன் இறைவன் ஆடிய பாண்டரங்கக் கூத்து,

கஞ்சன் வஞ்சன் கடத்தற் காக
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்
அல்லியத் தொகுதியும் (சில. 06 46-48)

எனக் கம்சனைக் கொல்லும் பொருட்டு மாயோன் ஆடிய கூத்தாகிய அல்லியத் தொகுதி, கண்ணன் வாணாசுரன் எனும் அசுரனை வெல்லும் பொருட்டு ஆடிய மல்லல் கூத்து, (சில.()6 48-49) முருகன் சூரனை வென்று ஆடிய துடிகொட்டி, (சில.06 51) தோற்ற அரசர்கள் முன் முருகன் தன் குடையைச் சாய்த்து ஆடிய குடைக்கூத்து, (சில.06 52-53) குடங்களைக் கொண்டு மாயோன் ஆடிய குடக்கூத்து, (சில.06 55) ஆண்தன்மை நீங்கிப் பெண் தன்மையோடு காமன் ஆடிய பேடிக்கூத்து, (சில.06 56-57) மாயவளாகிய துர்க்கை அசுரரை அழித்த சினத்தோடு ஆடிய மரக்கால் கூத்து, (சில.06 58-59) திருமகள் ஆடிய பாவைக்கூத்து, (சில.06 61) இந்திரனின் மனைவி இந்திராணி ஆடிய கடையக் கூத்து (சில.06 63) எனப்பலவாகும். இத்தகைய கூத்துக்களை மாதவி ஆடியதாக சிலப்பதிகாரம் குறிப்பிடுவது தொல்காப்பியர் வழி நின்று நாட்டுப்புற இலக்கியக் கூறுகளை சிலப்பதிகாரம் பயன்படுத்தியுள்ளது என்பததற்கான சிறந்த சான்றகவுள்ளது.

வழிபாட்டுமுறைகள்

சேரன் செங்குட்டுவன், சீத்தலை சாத்தனார் மற்றும் இளங்கோவடிகள் மூவரும் மலைவளம் காணச் சென்ற போது மலைவாழ் மக்களின் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளை நேரடியாகக் கண்டு களித்தனர் என்ற செய்தியை சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டப் பகுதி கூறுகிறது. வேங்கை மர நிழலில் நின்ற கண்ணகி தன் கணவனுடன் தேவர்கள் போற்ற விண்ணுலகம் சென்ற காட்சியைக் கண்ட குன்றக்குரவர்கள் தங்கள் குலதெய்வமாகிய முருகக் கடவுளைப் பாராட்டி குரவை இசைக்கின்றனர். அப்போது

சிறு குடியீரே சிறு குடியீரே
தெய்வங் கொள்ளுமின் சிறு குடியீரே
தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்

கொடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்
குறிஞ்சி பாடுமின் நறும்புகை யெடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
பரவலும் பரவுமின் விரிவுமலர் தூவுமின்
ஒருமுலை இழந்த நங்கைக்கு
பெருமலை துஞ்சாது வளஞ்சுரக்கெனவே (சில.24 15-22)

எனும் அடிகள் முருகக்கடவுளைப் போற்றி குன்றக்குரவர்கள் ஆடிப்பாடும் காட்சியை நம் மனத்திரையில் நிலை நிறுத்துகின்றன. சிலப்பதிகாரக் காப்பியத் தோற்றத்திற்கு அடிப்படையாக இந்நிகழ்ச்சியே அமைகிறது. எனவே தான், 'தமிழர் இசையோடும், ஆடலோடும் நெருங்கிய தொடர்புடையவர்கள். இசையோடு பாடக்கூடிய பாணர்களை அரசர்கள் ஆதரித்துள்ளனர். தவிர, வென்றிக் கூத்து ஆடுவதில் வல்ல பொருநர், கூத்தர் முதலானோரும், ஆடலில் வல்ல விறலியும் தொல்காப்பியர் காலத்தில் சிறப்பாக ஆதரிக்கப்பட்டனர் என அறியமுடிகிறது'[4] என்கிறார் முனைவர்.கா.இலட்சுமி. இவரது கூற்றிற்கு ஏற்ப,

நாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச்சொன்ன பக்கமும் (தொல். புறத்.36)

என்னும் நூற்பாவின் வழி கூத்தர், பாணர், பொருநர், விறலி எனப் பலக் கலைஞர்கள் தொல்காப்பியர் காலத்திலேயே போற்றப்பட்டனர் என உணரமுடிகிறது.

நாட்டுப்புறக் கதைகள்

நாட்டுப்புற இலக்கிய வகைகளில் ஒன்றாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் 'உரை' என்பது நாட்டுப்புறக் கதைகளையே சுட்டுகிறது. மரபுவழியாகத் தொன்றுதொட்டு வாய்மொழியாக வழங்கிவரும் நாட்டுப்புறக் கதைகள் ஒரு இனத்தின் பண்பாட்டை உணர்த்தும் இயல்புடையவை. பொதுவாக இவற்றில், மனிதக் கதைகள், தெய்வக் கதைகள், விலங்குக் கதைகள், மந்திரக் கதைகள் எனப் பலவகைகள் காணமுடிகிறது. இவற்றுள் மனிதவாழ்வையும் மானுட உணர்வுகளையும் மையமிட்டு சொல்லப்படுபவை மனிதக் கதைகள் எனப்படுகின்றன. காதல், அறம், பயணம், மற்றும் வீரம் எனப் பலவும் இவ்வகையில் இடம்பெறும். தெய்வங்கள் பற்றியும் ஞாயிறு, திங்கள், காற்று உள்ளிட்ட இயற்கைப் பற்றியும் வருவன தெய்வக் கதைகள் எனவும், விலங்குகள் பேசுவதாக மனிதர்களுக்கு அறம் உரைப்பவை விலங்குக் கதைகள் எனவும், மந்திர தந்திரங்களின் வலிமையை உணர்த்தும் கதைகள் மந்திரக் கதைகள் எனவும் வழங்கப்பட்டன. மேலும்

பொருள் மரபில்லாப் பொய் மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகை மொழி யானும் (தொல் செய் 173)

எனத் தொல்காப்பியர் இருவகையான கதைகளைக் குறிப்பிடுகிறார். 'இங்கு பொருள் மரபில்லாப் பொய்மொழி' என்பதற்குப் பேராசிரியர் ஒரு சிறு கதையைக் கூறி விளக்கம் தருகிறார். 'ஒரு யானையும் குருவியும் தம்முள் நட்புக்கொண்டு இன்ன இன்ன இடத்திற்குப் போய் இன்னவாறு செய்தன என்று ஒருவன் புனைந்துரைக்கும் வகையெல்லாம் அதன்பால் அடங்குவன' என்கிறார்'[5]. எனவே தொல்காப்பியரின் காலத்திற்கு முன்னதாகவே இத்தகைய நாட்டுப்புறக் கதைகள் வழக்கிலிருந்தன என்பது தெளிவாகிறது. தொடர்ந்து

தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே (தொல்.செய்.228)

என்று கூறுவதால் தெய்வங்கள் குறித்த கதைகளும், நெடுங்காலமாக மக்களால் சொல்லப்பட்டு வரும் பழங்கதைகளுமே 'தொன்மை' எனச் சுட்டப்பட்டன என்பது உறுதியாகிறது.

சிலப்பதிகாரத்தில் தொல்கதைகள்

செவிவழியாகப் பரவி வந்த நாட்டுப்புறக் கதைகள் பலவும் பிற்காலப் புலவர்களால் மெருகேற்றப்பட்டு இலக்கியங்களில் இடம்பெற்ற தன்மையை சிலப்பதிகாரத்திலும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, 'மாதவி' என்னும் ஒப்பற்ற பாத்திரத்தை அறிமுகப்படுத்தும் போது அவளது குலமரபு பற்றிக் கூறும் ஊர்வசி கதை(சில.3 1-7), தேவந்தியை கண்ணகியின் தோழி) அறிமுகப்படுத்தும் போது மாலதி மற்றும் பாசாண்ட சாத்தன் என்னும் இருவர் பற்றிய கதை,(சில.9,1-40) கோவலனின் நல்லியல்புகளை விவரித்துக் கூறும்போது கீரிப்பிள்ளை ஒன்றைத் தன் பிள்ளை போல வளர்த்த அந்தணப் பெண்ணொருத்தி ஒருநாள் பாம்பிடமிருந்து தன் குழந்தையைக் காப்பற்றிய கீரியைத் தவறாக நினைத்துத் தான் சுமந்து கொண்டிருந்த நீர்க் குடத்தை அதன் தலையில் போட்டுக் கொன்று விட்டு பின்னர் வருந்தி நிற்க, அதற்கான பரிகாரத்திற்குத் தேவையான பொருளுதவியை அந்தப் பெண்ணிற்குக் கோவலன் தந்து உதவிய கதை(சில.15 55-75) எனப் பலகதைகள் இளங்கோவடிகளால் விவரிக்கப்படுகின்றன மேலும் காப்பியத்தின் மையக் கதையோட்டத்திற்குப் பயனளிக்கும் வகையில் மதுரையை நோக்கிச் செல்லும் பயணத்தின் போது கவுந்தியடிகள் கோவலன் மற்றும் கண்ணகிக்கு ஆறுதலாக இராமன், நளன் என இருவரின் வாழ்வியல் தொடர்பான கதைகளைக் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(சில.14, 45-57)கற்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த கண்ணகி நல்லாளின் திருவுருவத்தைக் கல்லிலே சிலையாக்கி தெய்வமாய்க் காட்சிப்படுத்திய பெருமைக்குரிய அடிகளார் கண்ணகி வஞ்சினம் கூறும்போது அக்கற்பரசியின் வாயால் எழுவகைப் பத்தினிப் பெண்டிரின் கதைகளை விவரிப்பதாக அமைத்திருப்பது (சில.21, 1-35) 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்' என்னும் இக்காப்பியத்தின் கொள்கையினை உறுதிபடுத்துகின்ற வாய்ப்பாக விளங்குகிறது.

சங்ககால சமூகத்தில் காதலும், வீரமும் இரு கண்களாகப் போற்றப்பட்டாலும் ஒருபுறம் போரற்ற அமைதியான் சூழலுக்காக மக்கள் காத்திருந்த நிலையில் அரசியல் ஒற்றுமையை வலியுறுத்துவதும், பரத்தமைத் தன்மையால் ஏற்படும் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டுவதும், பத்தினிப் பெண்டிரைப் போற்றுவதும், ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் வணிகர்களின் செல்வாக்கு பாதுகாக்கப்பட வேண்டும் என உணர்த்துவதும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் கொள்கைகளாக விளங்குகின்றன என்றால் காப்பியத்தைப் படிப்பவர்களின் உள்ளங்களில் இவற்றைத் தெளிவாகப் பதியவைப்பதற்கேற்ற சிறந்த உத்தியாகப் பல நாட்டுப்புறக் கதைகள் இளங்கோவடிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது இங்கு தெளிவாகிறது.

விடுகதைகள்

தொல்காப்பியர் குறிப்பிடும் 'பிசி' என்னும் சொல் விடுகதை அல்லது புதிரைக் குறிக்கிறது. விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதை எனப்பட்டது. 'பிசி என்னும் விடுகதையை விளக்க உரையாசிரியர்களான இளம்பூரணாரும், பேராசிரியாரும் தரும் விடுகதைச் சான்றுகள்,

(இளம்) அச்சுப் போல பூப்பூக்கும்

அமலே யன்ன காய்காய்க்கும் - பூசணிக்கொடி

(பேரா) பிறை கவ்வி மலை நடக்கும் - யானை[6]

எனவே அக்காலத் தமிழர்கள் பொழுது போக்கிற்காக மட்டுமன்றி பிறர் அறிவைப் பரிசோதிப்பதற்காகவும் இத்தகைய விடுகதைகளைச் சொல்லி வந்தனர் என்பது புலனாகிறது. மேலும், வினைத்தொகையில்

அமைந்திருக்கும் 'விடுகதை' என்னும் சொல் விட்டகதை, விடுகின்ற கதை, விடும் கதை என விரிந்து முக்காலப் பொருளைத் தருவது சிறப்பிற்குரிய ஒன்றாகும். தவிர, 'பிசி' என்னும் புதிரை

ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவ கிளந்த துணிவினானும்
என்றிரு வகைத்தே பிசி வகை நிலையே (தொல்.செய்.176)

என்று உவமையைப் போல வருவது மற்றும் வெளிப்படையாக வருவது என இருவகையாகத் தொல்காப்பியர் வகைப்படுத்துகிறார். இவற்றில் வெளிப்படையாக வரும் விடுகதை அமைப்பினை சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது.

மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது (சில.27 57,65)

என மாடல மறையோன் சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகியின் வரலாற்றை ஒரு விடுகதையாய்ச் சுருக்கிக் கூறிய பின்னர் ஆடலழகி மாதவி பாடிய கானல்வரிப் பாடல் எவ்வாறு கனகவிசையரின் தலைகளை நெரித்தது என விரிவாக கானல் வரி முதல் கண்ணகி தெய்வமானது வரையிலான கதையை விவரிக்கிறான். இவ்வாறு நாட்டுப்புற இலக்கியத்திற்கே உரிய விடுகதை அமைப்பைச் சிறப்பாகப் பயன்படுத்துவதில் வெற்றி பெறுகிறார் இளங்கோவடிகளார். எனவே தான் 'சிலப்பதிகாரக் காப்பியம் ஒரு கருத்தை மட்டுமன்றி பல கொள்கைகளையும் பாவிகமாகக் கொண்டிருக்கிறது. ஒன்றிலொன்று பின்னி, ஒன்றாலொன்று உருவாகி, ஒன்றையொன்று சிறப்பித்து அமையும் பாங்கினைச் சிலப்பதிகாரம் கொண்டுள்ளது'[7] எனப் பாராட்டுகிறார் முனைவர். ச.வே.சுப்பிரமணியன் அவர்கள். சிலப்பதிகாரக் காப்பியத்தின் இத்தகைய சிறந்த அமைப்பிற்குத் தொல்காப்பிய வழி நின்று பல்வேறு நாட்டுப்புற இலக்கிய வகைகளை ஒன்றிணைத்துள்ள தன்மையும் முக்கியமான காரணமாக அமைந்துள்ளது என்பது இங்கு தெளிவாகிறது.

நாட்டுப்புற நம்பிக்கைகள்

இலக்கியம் என்பது ஒரு காலம் காட்டும் கண்ணாடியாகத் திகழும் இயல்புடையது. ஒரு படைப்பாளி தன்னைச் சுற்றியிருக்கும் சமூகத்தை உற்று நோக்கும் போது ஏற்படும் தாக்கத்தின் விளைவாகவே ஒரு இலக்கியம் மலர்கிறது. அவ்வகையில் இலக்கியங்களுக்குரிய அகத்திணை ஒழுகலாறுகளைப் பற்றித் தொல்காப்பியர் கூறுகையில் அக்கால மக்கள் ஊழ்வினையின் மீது கொண்டிருந்த நம்பிக்கையைச் சுட்டுகிறார். விதி, வினை, ஊழ் என்றெல்லாம் இன்றும் மக்களிடையே நம்பப்படும் ஒன்றினைப் 'பால்' என்னும் சொல்லை அவர் குறிப்பிடுவதை,

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே (தொல்.கள.02)

என்னும் நூற்பாவால் அறியமுடிகிறது. இங்கு ஊழின் வலிமையால் தான் ஒத்த பண்புடைய தலைவனும் தலைவியும் தற்செயலாய் சந்தித்துக் காதல் கொள்வதாய்க் கூறுகிறார். 'இங்கு களவில் கிழவனையும் கிழத்தியையும் ஒன்றுதலைச் செய்யும் உயர்ந்த ஊழின் ஆணையை பாலதாணை எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ஒன்று படுத்தும் ஊழ் ஆகூழ் என்றும், வேறுபடுத்தும் ஊழ் போகூழ் என்றும் தொல்காப்பிய கால மக்கள் நம்பினர்'[8] என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே முற்பிறவியில் செய்த பழவினையை 'ஊழ்' என்று சுட்டும் இளங்கோவடிகள் யாழிசை மேல் வைத்துத் தன் ஊழ் வினை வந்துருத்த தாகலின் (சில.7 52-53) எனக் கோவலனுக்கும் மாதவிக்கும்

இந்திரவிழாவில் கானல் வரிப் பாட்டால் கருத்து வேறுபாடு ஏற்பட்டதற்கு ஊழையே காரணமாக்குகிறார். மேலும் கோவலன் கொல்லப்படுவதற்கு முன்னர் மாதரியின் இல்லத்தில் கண்ணகியை நோக்கி

மாயங்கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி யாவதும் அறியேன் (சில.16 61-62)

என்று புலம்புகிறான். பொற்கொல்லனின் சூழ்ச்சியை அறியாது 'கொன்றச் சிலம்பு கொணர்க' (சில16. !53) எனப் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆணையிட்டதற்கும்,

வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரான் ஆகி (சில.16 148-149}

என்று மன்னனின் ஊழ்வினையைக் காரணமாகக் கூறுவது இங்கு உணரத்தக்கதாகும். மேலும் கோவலனது ஊழ்வினை உருத்த காவலனாகிய பாண்டியனின் செங்கோல் வளைந்து வீழ்ந்ததெனவும் சுட்டுகிறார். (சில.16 217) எனவே தான் ஊழைக் காட்டிலும் வலியது வேறில்லை என்பதை வள்ளுவரும்

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும் (திருக்குறள் 380)

எனும் குறள் வழி வலியுறுத்துகிறார்.

மந்திரங்கள்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறை மொழி தானே மந்திரம் என்ப (தொல்.செய்.480)

எனக் கூறுவதன் மூலம் தொல்காப்பியர் தமது காலத்தில் வாழ்ந்த மக்களிடையே மந்திரங்களின் வலிமை குறித்த நம்பிக்கை இருந்தது என்கிறார். 'இங்கு 'நிறை மொழி என்பது அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களை பயந்தே விடும் மொழி. அவ்வாறு ஆணையுடையராயினும் உயிர்கள் மாட்டு அருளுடையர் ஆவர்'[9] என்பது உணரத்தக்கது. இதனையே,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (திருக்குறள்.28)

என்று முப்பாலாகியத் திருக்குறள் கூறுகிறது. சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி மற்றும் கவுந்தியடிகள் மூவரும் புகாரிலிருந்து மதுரையை நோக்கிச் செல்லும் வழியில் காவிரியின் தென்கரைச் சோலை ஒன்றில் தங்கியிருந்தனர். அப்போது வம்பப் பரத்தையொருத்தி தன்னுடன் வந்த காமுகன் ஒருவனிடம் கோவலன் கண்ணகி இருவரைப் பற்றித் தீயமொழி பேசி எள்ளி நகையாடுகிறாள். அதுகண்டு கோபம் கொண்ட கவுந்தியடிகள்

'முள்ளுடைக் காட்டில் முது நரி ஆக' என (சில.10 232)

என்று சாபமிடுகிறார். அவ்வாறே அவர்களிருவரும் நரிகளாக மாறிவிட அவர்களை மன்னிக்குமாறு கண்ணகி கவுந்தியடிகளிடம் வேண்ட,

பன்னிரு மதியம் படர்நோய் உழந்தபின்
முன்னை உருவம் பெறுக, ஈங்கு இவர் (சில.10 242)

என்று சாபவிமோசனம் தருகிறார் கவுந்தியடிகள். இவ்வாறு தொல்காப்பியர் குறிப்பிடும் மந்திர வலிமை கொண்ட நிறைமொழி மாந்தராகக் கவுந்தியடிகளைப் படைத்துக் காட்டுகிறார் இளங்கோவடிகள். தொடர்ந்து கனவு பற்றிய நம்பிக்கைகள், நடுகல் வழிபாடுகள், பிற சடங்குகள், ஆபரணங்கள், திருவிழாக்கள், உள்ளிட்ட பல நாட்டார் மரபுகளையும் தொல்காப்பியத்தின் வழி நின்று சிலப்பதிகாரம் விவரிக்கக் காணமுடிகிறது.

ஒரு மனித இனம் தனது பழைய மரபினை முழுமையாகப் புரிந்து கொண்டிருந்தால் மட்டுமே நிகழ்கால வாழ்வினை மிகச் சரியாகக் கட்டமைத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெறுகிறது. இந்நிலையில்

மனித உள்ளங்களின் உணர்வு ரீதியானத் தொடர்பு சாதனமாகத் தொன்று தொட்டு இலக்கியங்களே விளங்கிவருவதால் உலகின் அனைத்து மொழிகளிலும் நாட்டுப்புற இலக்கியங்கள் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. எனவே தான் 'உலக வழக்காற்றையும், செய்யுள் வழக்காற்றையும் கொண்டதே ஒருமொழி. அதன் இரு வழக்காறுகளையும் அடிப்படையாகக் கொண்டதே இலக்கணமாகிறது. முதலில் தோன்றிய வாய்மொழி இலக்கியங்களே எழுத்திலக்கியங்களுக்கு ஊற்றுக்கண் என்பதை நன்குணர்ந்த பேராசான் தொல்காப்பியர் அவற்றிற்கு முன்னுரிமை தந்து தம் நூல் முழுமையும் யாத்துள்ளார்'[10] என்கிறார் அறிஞர் டாக்டர் தமிழண்ணல். அவ்வகையில் கற்பரசி கண்ணகியின் வரலாற்றை நமது உள்ளங்களில் என்றென்றும் நிலைநிறுத்தும் சிலப்பதிகாரத்தின் பெருமைக்கு அது தொல்காப்பியத்தின் வழி நின்று நாட்டார் மரபுகளை விவரித்த தன்மையே அடிப்படைக் காரணமாகிறது என்பதைத் தக்க சான்றாதாரங்களுடன் இந்த ஆய்வுக் கட்டுரை விவரிக்கிறது.

சான்றெண் விளக்கம்

1) டாக்டர்.ப.அன்பு ம.பொ.சியின் இலக்கிய நூல்கள் ஒரு மதிப்பீடு உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் முதற்பதிப்பு 1983 ப.எ. 31
2) டாக்டர்.சு.சக்திவேல் நாட்டுப்புற இயல் ஆய்வு மணிவாசகர் பதிப்பு முதற்பதிப்பு 2022 ப.எ.04
3) அரங்க.முருகையன்,இரா.அறவேந்தன்,க.தமிழ்வேலு (பதிப்பாசிரியர்கள்) தொல்காப்பிய ஆய்வுகள் அறிஞர்.வ.சுப.மாணிக்கனார் அறக்கட்டளைக் கட்டுரைகள் உலகத் தமிழாரய்ச்சி நிறுவனம் சென்னை 113 ப.எண் 38
4) முனைவர்.கா.இலட்சுமி நாடகத்தமிழ் நியூ செஞ்சுரி பதிப்பகம் முதற்பதிப்பு 2016 ப.எண் 02
5) மு.குமரகுரு தொல்காப்பியத்தில் நாட்டுப்புற இலக்கிய வகைகள் groups.google.com
6) மு.குமரகுரு தொல்காப்பியத்தில் நாட்டுப்புற இலக்கிய வகைகள் groups.google.com
7) டாக்டர்.ச.வே.சுப்ரமணியன் இளங்கோவின் இலக்கியஉத்திகள் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை113 முதற்பதிப்பு 1984 ப.எண்.23
8) முனைவர்.மு.முத்துச்செல்வன் தொல்காப்பிய நெறியில் முப்பாலில் முப்பத்து மூன்று மாஸ்டர் லேசர் பிரிண்ட் திருச்சி 17 ப.எ.ண் 85
9) முனைவர்.மு.முத்துச்செல்வன் தொல்காப்பிய நெறியில் முப்பாலில் முப்பத்து மூன்று மாஸ்டர் லேசர் பிரிண்ட் திருச்சி 17 ப.எ.ண் 18
10) தமிழண்ணல் இந்திய இலக்கியச்சிற்பிகள்-தொல்காப்பியர் சாகித்திய அகாடமி முதற்பதிப்பு 1998 பவர்மேன் பிரிண்டர்ஸ் சென்னை1 ப.எண்.14

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

1. சில. - சிலப்பதிகாரம்
2. தொல்.செய். - தொல்காப்பியம் செய்யுளியல்
3. தொல்.அகத். - தொல்காப்பியம் அகத்திணையியல்
4. தொல்.கள - தொல்காப்பியம் களவியல்

தொ.மா.க. 191

தொல்காப்பியமும் அரச உருவாக்கமும்

திருமதி சடாச்சரி திருவாதனன்
அண்ணாமலை பல்கலைக்கழகம் கனடா

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் இன்று எமக்குக் கிடைத்துள்ள நூல்கள் யாவற்றிலும் மிகப் பழமைவாய்ந்தது. அது இன்றுள்ள தமிழ் இலக்கணங்களுக்கெல்லாம் முதல் நூல் ஆகும். ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு மேலான பழமை பெற்ற நூல் ஆகும். அதனால் இதன் தொன்மை கருதியும், இந்நூலில் கூறப்பட்ட பல விடயங்கள் கருதியும் பலரும் பல விதமான ஆய்வுகளை மேற்கொண்டவண்ணம் இருக்கும் இக் காலகட்டத்தில் சமூகத்தின் அடித்தளமாகவும் சமூகக் கட்டமைப்பின் உச்ச வரம்பான அரசு என்ற விடயம் தொடர்பாகத் தொல்காப்பியர் எவற்றைக் கூறி இருக்கிறார் என்பதை நோக்குவதும் அவர் இதனை எவ்வழியில் சொல்லாமல் சொல்லியிருக்கிறார் எனும் விடயத்தை தேடி ஆராய்வதோடு பிற்காலத்தில் அரசு ஒன்று கொண்டிருக்கவேண்டிய அடிப்படையான கூறுகளை தொல்காப்பியர் சுட்டிக்காட்ட முனையும் புறத்தினையின் வாயிலாக இதனைக் கண்டறியமுடியும் என்பதையும், இதுவே பிற்கால அரசியல் விஞ்ஞான கோட்பாட்டாளர்களின் கருத்து தோன்ற அடிப்படையாக இருந்திருக்கும் என்பதும் ஆய்வு நோக்கம் ஆகும்.

ஆய்வுச் சிக்கல் :- தொல்காப்பியர் தெளிவாக இவை இவைதான் அரசு என்ற ஓர்வரையறையோ அது தொடர்பான நூற்பாக்களையோ குறிப்பிடவில்லை. எனினும் அவரது நூற்பாக்களில் அரசு சார்பான கருத்துக்கள் இடம்பெறுகின்றதா என்பது பற்றி ஆய்வு செய்வது சிக்கல் ஆகும்.

கருதுகோள் :- தொல்காப்பிய காலத்தின் பின் தோன்றிய காலங்களில் அரசு என்ற ஒன்று தோன்றுவதற்கு தொல்காப்பியரது புறத்தினையில் எழுதினைக்குரிய நிலப்பாகுபாட்டில் அரசின் தோற்றம் காணக்கூடியதாக இருந்திருக்கிறது என்பது கருதுகோள். முதன்மைச் சான்று - தொல்காப்பியம் (பொருள்அதிகாரம்) துணைச் சான்றுகள் - அரசியல் விஞ்ஞானம் (தனபாலசிங்கம்-கிருஷ்ணமோகன்)

ஆய்வு அணுகுமுறை :- சமூகவியல் ஆய்வு, வரலாற்றாய்வு இவ்விரு ஆய்வுகள் மூலம் தொல்காப்பியத்தின் அரச உருவாக்கம் என்ற விடயத்தை ஆராயமுடியும். சமூகவியல் என்பது மனித சமூகத்தின் தோற்றம் பற்றிய ஆய்வு ஆகும். இது சமூகம், மனித சமூக நடத்தை, சமூக உறவுகள், வடிவங்கள் இதன் மூலம் அரச உருவாக்கம் எவ்வாறு நிகழ்ந்திருக்கும் என்றும், வரலாற்று ஆய்வில் அறிஞர் ஸ்பென்சர் கூறுகையில் வரலாறு என்பது சான்றாதாரங்களைக் கொண்ட கதை என்பர். தொல்காப்பியர் அளித்த ஆதாரங்களைக் கொண்டு அரச உருவாக்கம் காணப்பட்டதாக சிக்கலுக்கு விடை கூறுவது.

ஆய்வுப் பகுப்பு :- இவ் ஆய்வுப் பகுப்பு முன்னுரை, முடிவுரை நீங்கலாக மூன்று இயல்களைக் கொண்டது.

முன்னுரை, புறத்தினை அறிமுகம் (எழுதினை வகைகள்), அரசியல் விஞ்ஞான கோட்பாடுகள்.

இவ் இரண்டுக்கும் இடையிலான ஒப்பாய்வு.

தொல்காப்பியமும் அரச உருவாக்கமும் என்னும் விடயத்தில் தொல்காப்பியர் இவ்வாறு இவ்வாறுதான் அரசு தோன்றியது என்று எதுவும் குறிப்பிடவில்லை. இருந்தபோதும் அவரது புறத்தினையில் வெட்சித்தினையில் “வெறியறி சிறப்பின் போரூதை, வேம்பே ஆர் என வருடம்” என்ற அடிகள், சேர, சோழ, பாண்டிய மன்னர்களைக் குறித்திருக்கலாம் என்ற நிலையையும் பிற்கால சங்க கால, சங்கம் மருவிய கால, பல்லவ கால, சோழ கால, நாயக்கர் காலத்தில் தோன்றிய அரசுகளும் அதன் தன்மைகளும் பிற்காலத்தில் தோன்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளர்களுக்கும் அவர்கள் தம் சிந்தனைகளுக்கும் தொல்காப்பியரின் அரச உருவாக்கமே வழிவகுத்திருக்கும் என்பது முடிவாகும்.

முன்னுரை

தமிழ் மொழியில் எமக்குக் கிடைத்துள்ள அரிய பெரும் பொக்கிசமான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியம் என அழைக்கப்படும். இந் நூலினை ஆக்கியோன் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் ஆவார். ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு மேலான பழமை பெற்ற நூல் ஆகும். இப் பழமை பெற்ற நூலின் பெரும் சிறப்பு அதன் மூவதிகாரப் பகுப்பாகும். அறம், பொருள், இன்பம் போலவும் முதல், கரு, உரி தப்பவும் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டிலங்கும் இந்நுல் மொழி இலக்கணம் மட்டுமன்றி தமிழினத்தின் வாழ்க்கைப் பாங்கு இத்தகையது எனக் காட்டும் பாடல் சான்ற புலனெறி வழக்கின் மரபுநிலை திரியா மாட்சி கூறும் அரிய இலக்கியக் கோட்பாட்டு நூலாகும். அது மட்டும் இன்றி சுற்றுப்புறச் சூழல் காட்டும் மாட்சியும் பொருளியலும், சமூகவியலும் உளவியலும், மெய்யியலும், தொழிலியலும் என பல அறிவுத்துறைச் செய்திகளையெல்லாம் ஒருங்கு உணர்த்தும் செறிவும் இந்நூலை ஒரு கருவு+லமாகக் காட்டும்.

ஆகவே சமூகவியல் என்னும் விடயத்தின் ஊடாக அரசியல் சிந்தனைகள் இங்கே உருக்கொண்டெழுந்தன என்பதையும் அறியக்கிடைக்கின்றது. பிற்காலத்தில் தோற்றம் பெற்ற சமூகவியலாளர்கள், அரசியல் கோட்பாட்டாளர்கள் மாக்சிச, கழிலு கோட்பாட்டாளர்களின் அரசியல் சிந்தனைக்கு தொல்காப்பியத்தின் பொருள் அதிகாரத்தில் காணப்படுவதை அவதானிக்கமுடியும். இவ்வுலகத்து வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை முறைகளை வகுத்துரைப்பதே பொருளிலக்கணம் எனப்படும். இப்பகுதி தமிழுக்கே சிறப்புரிமையுடையதாகும். இப் பொருளிலக்கணப் பகுதியில் இன்றியமையாதன அறமும், அரசும் ஆகும். இனி தொல்காப்பியத்தில் அரசு எவ்வெவ் இடங்களில் தோற்றம் பெற்றன எனப் பகுதிகளைக் கண்டறிதல் வேண்டும். தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் இடம்பெறும் ஒன்பது இயல்களில் ஒன்றான புறத்தினையில் அரசு பற்றியும் தனி மனிதனின் ஒழுக்கம், வீரம், புகழ், கொடை போன்ற சிறப்புகளை கூறுகின்றது. அந்தவகையில் அவர் ஏழு தினைகளை அமைத்து அதன்வழி மக்கள் வாழ்வியல் அம்சங்களை மிக நுட்பமாகவும் அழகாகவும் பிற்கால அரசு தோற்றத்திற்கான அடிப்படை அம்சங்களை எடுத்துக்காட்டி இருப்பதனை அவதானிக்கமுடியும்.

தொல்காப்பியத்தின் புறத்தினையியலில் ஏழுவகைத் தினைகளிலும் அரசு பற்றிய அடிப்படையான அம்சங்களைக் காணமுடியும். புறம் எனப்படுவது தரு, தருதனி மனிதனிடத்தும் ஒரு குழுக்களிடத்தும் நிகழும் செயற்பாடுகள் ஆகும். இது வீரம், புகழ், கொடை, அறம், பொருள் போன்றவற்றை உள்ளடக்கியது. அந்த வகையில் தொல்காப்பியர் தனது நூற்பாவில் (56),

> "*அகத்தினை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்*
> *புறத்தினை இலக்கணம் திறப்படக் கிளப்பின்*
> *வெட்சிதானே குறிஞ்சியது புறனோ*
> *உட்குவரத் தோன்றும் ஈரேழு துறைத்தே..*"

இங்கு புறத்தினையான வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் அகத்தினைக்குப் புறம்பான புறத்தினை ஏழு தினைகளையும் குறிப்பிடுவார். இவ் ஏழு தினைகளிலும் இருக்கும் மக்கள் அவர்தம் செயற்பாடுகளை விளக்கும்போது அங்கே ஓர் தன்னிகரில்லாத் தலைவனையும் அவனைத் தாங்கும் படைகளையும் அவன் செயற்பாடுகளையும் உற்று நோக்கின் அங்கே ஓர் தலைமைத்துவத்தையும், அத் தலைமைக்குக் கட்டுப்படும் மனிதர்களையும், ஒழுக்கங்களையும், கோட்பாடுகளையும், செயற்பாடுகளையும் உற்றுநோக்கின் ஓர் மக்கள் கூட்டம் தாமாகவே முன்வந்து ஓர் தலைமை தெரிவதும் அவன் கட்டுப்பாட்டில் தம்மை வழிநடத்துவதையும் அவதானிக்கமுடியும். இதுவே அங்கு தோன்றிய அரசு என்பது எனது ஆய்வு. இவ்வாறு இனி எழுதினைக்கும் எவ்வாறு அரசு தோன்றியது என்பதனை அவதானிக்கமுடியும். ஆரச உருவாக்கம் என்பது ஒருஅரசு கொண்டிருக்கவேண்டிய அடிப்படையிலான அரசியல் கூறுகள் ஆகும். அந்தவகையில் மக்கள், ஆட்சிப் பரப்பு, அரசாங்கம்,

அதிகாரம் என்கிறார் அதன் பாட்டில். இவர் மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆவான். இயல்பாகவே அரசியல் பிராணியாகவும் ஆகிறான் என்பர். மேலும் அரசு என்பது மனித சங்கத்தின் உயர்மிகு வடிவமாகும். அரசு அடிப்படைத் தேவைகளைப் பு+ர்த்தி செய்வதற்காக உருவானதாகும். எனவே அரசு என்பது அவசியமான ஒன்றாகும்.

கார்னர் என்பவர் அரசு என்பது ஒரு மக்கள் கூட்டம் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசிப்பதாகும். அவா;கள் வெளிச் சக்திகளுக்குக் கட்டுப்படாமல் ஒரு முறையான அரசாங்கத்தைப் பெற்று தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்ப்படிதலை அரசுக்குச் செலுத்துகிறார்கள் என்கிறார். இவ்வாறு பேராசிரியர் லாங்கி சிட் ஐஷக், ஹாலன்ட் போன்ற பிற்கால அரசியல் கோட்பாட்டாளர்கள் கருத்துக்குத் தொல்காப்பியர் தனது புறத்தினையில் மிகவும் தெளிவாக, நிலப்பகுப்புக்களிடையேயும் மக்கள் வாழ்க்கை முறையிலும் தெளிவாகக் காட்டியுள்ளார் என்பதனை முதலில் வெட்சி தினை மூலம் எவ்வாறு அரசு தோன்றியது என்பதனை நோக்கின்,

"வெட்சிதானே குறி ஞ்சிக்கு புறனே"

குறிஞ்சி நிலம் மலையும் மலை சார்ந்த பகுதியாகும். அங்கு வாழும் மக்கள் குறவர் என அழைக்கப்படுவர். இங்கே தங்களுக்கு என்ற ஓர் நிலப்பரப்பு இருக்கிறது அங்கே மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றார்கள். இவர்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையான பொருளீட்டலுக்காக செல்வதனை தொல்காப்பியர்,

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து தப்பல் மேவற்றாகும்"

வேந்தர்களால் அனுப்பப்படும் போர் வீரர்கள் ஆ நிரைகளைக் கவர்ந்து வருதல் போன்ற செயல்கள் (இங்கே - வேந்தர் - அவர்) சொல்லை தொல்காப்பியர் உருவாக்கியது புலப்படுகின்றது. அரசு - அரசர் என்ற பதங்கள் தொல்காப்பியத்தில் தெட்டத் தெளிவாகக் கூறப்படுகிறது. அரசு தோற்றத்திற்கு இதுவே அடிப்படையாகும். மேலும் போர்த் துறைகளை அமைத்து போர் செய்யும் திறன் ஓர் தன்னிகர் இல்லாத தலைவனையும் அவன் குழுக்களையும் சாரும். இவ் விடயமும் வெட்சியில் சிறப்பாக பதினான்கு துறை மூலம் கூறப்படும்.

புறத்தினையில் இரண்டாவது வஞ்சி தினையாகும். இது முல்லை நிலத்தை வாழ்விடமாகக் கொண்ட முல்லை நில மக்களை ஆட்சி செய்யும் அரசு ஆகும். இதனை தொல்காப்பியர்,

"வஞ்சிதானே முல்லையது புறனே
எஞ்சா மன்தசை வேந்தனை வேந்தா
அஞ்சு தகத் தலைச் சென்று அடல்குறிதின்றோ"

இங்கே அரசியல் அடிப்படைக் கூறுகளில் ஒன்றான அதிகாரம் (இறைமை) காணமுடியும். இறையாண்மை அரசின் கூறாகும். உயர்ந்த மற்றும் தலையாய அதிகாரமாகும். அரசின் இறையாண்மை அதிகாரம் சட்டங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகின்றது. சட்டம் சார்ந்த ஆணையுரிமை தலையாயது.

இதனைத் தொல்காப்பியர் வஞ்சித் தினையில் வெளிப்படுத்தியிருப்பது புலப்படும். மண்ணாசையால் வேந்தனொருவன் தன்மேற் படையெடுத்து வருவதற்கு முன்பே அவனை வெல்வதற்கு காலம், இடம், வலிமை குறித்து தனது படைகளை ஆணையிட்டு அனுப்புவது ஆகும். இங்கு அரசனின் "ஆணை முதலிடம் பெறும்." இதுவே பிற்கால சிந்தனையாளர்கள் இறையாண்மை என்கின்றனர். (பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜீன்போடிகர் நவீன இறைமைக் கோட்பாட்டின் தந்தை) எனவே அரசு தோற்றத்திற்குத் தேவையான இறையாண்மையினை தொல்காப்பியர் புறத்தினையில் வஞ்சித் தினையில் திறம்பட வெளிப்படுத்தி இருப்பதைக் காணலாம்.

அடுத்து புறத்தினையில் உழிஞைத் தினை. இது மருத நில மக்களின் வாழ்வியலையும் அதிகாரங்களையும் கொண்டது.

"முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனை நெறி மரபிற்று ஆகும் என்பர்"

இத் தினையில் போர் வீரங்களைப் போற்றி வழிபாடு செய்யும் நிலையும் "கல்கோள்" என்னும் செயல்முறையினை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் தமிழர். தொல்காப்பியர் இதன் ஆரம்பத்தினை புறத்தினையில் காணமுடியும். அரசு ஒன்று தன் போர் வீரர்களுக்குச் செலுத்தும் இதன் இறுதி வணக்க நிகழ்வினை தொல்காப்பிய அரச உருவாக்கத்தில் காணமுடிகின்றது. இதனையே பிற்காலத்தில் முதலாம் உலகப்போர் முடிந்த நாளை நினைவுகூறும் இனமாகவும் முதலாம் உலகப் போரில் கலந்துகொண்டு வீரமரணமடைந்த போர் வீரர்களின் நினைவாகவும் ஆண்டு தோறும் நவம்பர் 11 இனை அத்தினமாக கடைப்பிடிக்கிறது. இந்த செயற்பாட்டுக்கு அடித்தளம் இட்டது தொல்காப்பிய புறத்தினையில் உழிஞைத் தினையில் "கல்கோள்" (நீர்படை) நடுதல் என்ற செயற்பாடுகள் போர்வீரனின் நினைவாக கல் ஒன்றினை எடுத்து தூய்மைப்படுத்தி அதனை நிலத்தில் நிறுத்தி அதனை பு+வும் படையலும் இட்டு வழிபாடுசெய்து அவர்களைத் தெய்வமாக்கி வழிபடுவர். (மாவீரர் நாள்)

பலம் அரசின் படைபலம் பற்றிய விடயங்களை தொல்காப்பியத்தில் அத்தனை தினைகளிலும் படைகளும் அதன் வீரர்களின் திறமைகளையும் தொல்காப்பியர் புறத்தினையில் குறிப்பிட்டிருப்பார். "இயங்கு படை அரவம்" என்று தொடங்கும் நூற்பாக்கள் சான்றாக விளங்கும்.

அடுத்த புறத்தினையான தும்பைத் தினையில் அரசு பற்றிய விளக்கங்களைப் பெறமுடியும். தும்பை தினையாவது வலிமையையே பொருளாக போர்க்கருதி வந்த அரசர்கள் சென்று அவனைத் தலையழிக்கும் சிறப்பினை உடையது தும்பை ஆகும். போர் வீரரது உள்ளத்திண்மையை பலரும் அறிய விளக்கும் சிறப்பினையுடையது தும்பைத்தினை ஆகும்.

அஞ்சாது போரிடும் ஆற்றலுக்குரிய ஒரு வீரனை நெருங்கிப் போர் செய்ய அஞ்சுபவர்கள், சேய்மையில் நின்று அம்பெய்துவர், வேற்படையால் தாக்குவர். இவ்வாறு நேருக்கு நேர் நின்று போர்புரியும் மரபினையும் தோற்றுவித்த பெருமை தொல்காப்பியத்தின் புறத்தினையில் குறிப்பிடப்பட்டிருப்பது பிற்கால அரசுகள் உலகமகா யுத்தங்களைப் புரிந்தமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

இவ்வாறு ஏழு தினைகளில் எஞ்சிய வாகை, பாடாந் தினைகளிலும் போர் பற்றிய செய்திகளையும், போர்புரிதலுக்கான காரணங்களையும் இதற்கு முதன்மையான அரசுகள் பற்றியும் தொல்காப்பியர் குறிப்பிடுவதும் மன்னர்கள் தம்மை அடையாளப்படுத்த ஒவ்வொரு தினையிலும் இயற்கையாகக் கிடைத்த மலர்களை மாலையாக சூடியும் கன்னியாக அணிந்துகொண்டு போர் செய்தமையும், பிற்கால இலக்கியங்களிலும் இதுபற்றிய சிறப்பான பாடல்களும் சான்றுகளும் இடம்பெறுவதற்கு வழிகாட்டியாக அமைந்தது எனலாம். தொல்காப்பிய அரச உருவாக்கத்தில் அடித்தளமான இப்பாடல் அடியினை நோக்கின்,

"உறுபகை வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ் போந்தை வேம்பே, ஆர் என வரும் ....." எனச் செய்யுள் குறிப்பது பிற்கால சேர, பாண்டிய, சோழ மூவேந்தர்களின் தோற்றத்திற்கு வழிவகுத்தது என்பதனையும், தொல்காப்பிய புறத்தினையில் முற்றிலும் அரசும் அதன் செயற்பாடுகளும் அரச உருவாக்கத்திற்கான அடிப்படையே ஓர் அரசிற்கு இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களான மக்கள், இறைமை, ஆட்சிப்பரப்பு அரசாங்கம் இவை அனைத்தையும் தொல்காப்பிய புறத்தினையில் ஏழு தினைகளிலும் காணமுடிந்தது. ஆகவே இங்கே அரசு தோற்றம் பெற்றுவிட்டது என்பதனை உறுதியாகக் குறிப்பிடலாம். இங்கு அரசாங்கம் என்பது ஓர் தன்நிகர் இல்லாத மக்கள் கூட்டத்தின் தலைவனைக் கொண்டமைந்தது என்றும் அவனது சொல் கேட்டு நிற்கும் படைகளும், ஏவலாளர்களும் இவ் அரசாங்கத்தில் இடம்பெற்றனர்.

உதாரணமாக, குறிஞ்சி, வெட்சி நிலத்தலைவனும் அவனது கூட்டமும் எவ்வாறு அதே நிலப்பரப்பினை தமதாக்கி அங்கே தமது ஆன் நிரையைக் களவிற்கோடல், மீட்டல் போன்ற நிகழ்வுகளே என்பது இயம்பும்.

பிற்காலக் கோட்பாட்டாளர்கள் கால்மாக் சிந்தனையினை நோக்கின், "எல்லாச் செல்வங்களுக்கும் ஆதிப் பிறப்பிடம் நிலத்தின் உள்ள உடமையே, இந்த மாபெரும் பிரச்சினையைத் தீர்ப்பதைப் பொறுத்தே தொழிலாழி வர்க்கத்தின் எதிர்காலம் இருக்கிறது. இவ்வாறு இவர் சிந்தனைக்கு வித்திட்டதாக நான் ஏழுவகைத் தினைகளையும் நிலப்பாகுபாட்டையும் அதனைப் பாதுகாப்பதற்காக அங்கு வாழும் மக்கள் எடுக்கும் அறம் சார் போர் முறைகளையும் காணமுடிகிறது.

தொல்காப்பிய அரச உருவாக்கம் என்பது தெளிவாகத் திட்டமிடப்பட்ட வரையறைக்கு உள்ள ஏழு தினைகளிலும் காணமுடிகின்றது. மேலும் அரசர்களுக்குரிய பெயர்களான வேந்து, வேளிர், வேள் என்ற சொற்களைக் காணமுடிகின்றது. சேனாவரையர், நச்சினார்கிளியர் ஆகிய இரு உரையாசிரியர்களும் வேள் என்ற சொல்லை ஒளி, அரசர் என்பவற்றுடன் இணைத்தே பொருள்கொள்கின்றனர். வேள் என்பது ஒரு குறிப்பிட்ட குலத்தின் தனிப்பெருந் தலைவன் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். ஒவ்வொரு தொல்குடிக்கும் ஒரு வேள் இருந்திருக்க வாய்ப்புள்ளது.

ஆநிரைகளைக் கவர்வதை மையமாகக் கொண்ட பு+சலில்தாள் முதலிசி வேள் உருவானான். இதன் தொடர்ச்சியாக பு+சல் நிகழும்போதும் மட்டுமின்றி பு+சல் நிகழாத காலங்களிலும் வேள் என்ற குடித்தலைவன் தேவைப்பட்டான். இவ்வாறு அரச உருவாக்கத்திற்கான அடிப்படையான அரசன், வேந்தன் என்ற பதவிகளை வைத்துக்கொண்டு நோக்கின் அங்கே அரச உருவாக்கம் தொடங்கியது எனலாம்.

மேலும் தொல்காப்பியர் மரபியலில் அரசு பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. மரபியல் நூற்பா (622) அரசர்க்குரியன படையும், கொடியும், குடையும், முரசும், நடைநவில் புரவியும் கன்றும், தேரும், தாரும், முடியும், நேர்வன, பிறவும் தெரிவுகொள், செங்கோல் அரசர்க்கு உரிய என்ற நுட்பா ஓர் அரசு அமைவதற்கான அத்தனை துணைக்காரணங்களையும் தெளிவாக விளக்கியிருப்பதன் மூலம் தொல்காப்பியம் அரச உருவாக்கத்திற்கு முன்னின்றுள்ளது.

மேலும் தொல்காப்பிய புறத்தினையில் ஏழுதினைகளில் கூறப்பட்ட அரசு பற்றிய கருத்துக்களே பின்னர் தோன்றிய இலக்கியமான முத்தொள்ளாயிரத்திற்கு வழிகாட்டியாக அமைந்தது. முத்தொள்ளாயிரம் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மீது பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய தொகை நூல் ஆகும். இந்நூல் ஒவ்வொரு மன்னரைப் பற்றியும் 900 பாடல்கள் வீதம் 2700 பாடல்களைக் கொண்டிருந்தது என்றும் இன்று எமக்குக் கிடைத்தன சிலவே ஆகும்.

தொல்காப்பிய புறத்தினையும் முத்தொள்ளாயிரமும் அரசு உருவாக்கத்திற்கு முன் நின்றவை. உதாரணமாக, தொல்காப்பியம் காட்டும் வெட்சித் தினை பதினான்கு துறைகளையும் துறை விதியாக இரண்டு துறைகளையும் கொண்டது. இதில் "முற்றிய ஊர்கொலை" என்ற துறை முத்தொள்ளாயிரத்தின் பாண்டியனைப் பற்றிய பாடலில் பயின்று வந்துள்ளதைக் காணலாம். பகைவர் நாட்டு பசுக்களைக் கவரும்பொழுது ஏற்படும் சண்டையில் பகைவரை அழித்தல் முற்றிய ஊர்கொலை எனப்படும். இதுவே முத்தொள்ளாயிரத்து பறை நிறை கொல்யானைப் பஞ்சவர்க்கு பாங்காயத் திறைமுறையின் உய்யாதோர் தேயம் - முறை முறையின் ஆன் போய், அரிவையர் போய், ஆடவர் போய் ஆயிற்றே ஈன் பேய் உறையும் இடம் (முத் - 106). இது பாண்டிய மன்னனின் போர்த்திறம் கூறும் பாடல்.

இவ்வாறு அனைத்து துறைகளுக்கும் பின்னர் தோன்றிய இலக்கியங்களில் அரசும் அரசு இருந்தமைக்கான ஆதாரமாக தொல்காப்பிய அரச உருவாக்கம் புறத்தினையில் இடம்பெற்றுள்ளது.

மேலும் தொல்காப்பிய மரபியலின் பெயர் மரபுகளையும், நால்வகை வருண மரபுகளையும் இலக்கியப் படைப்பாக்க மரபுகளையும் எடுத்துரைக்கிறது. அவர் காட்டிய நால்வகை வருண மரபுகள் இலக்கிய அளவில் திறனாய்வு நிலையில் ஏற்பதும் மறுப்பதுமாக விளங்குகின்றன. ஆனால் சங்க இலக்கியத்தில் தொல்காப்பியர் காட்டிய நால்வகை வருணங்களும் அவற்றுக்குரிய அடையாளங்களுடன் இடம்பெற்றுள்ளன. மரபியலில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பனவாகும். இங்கு அரச உருவாக்கத்தினை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு தொல்காப்பியத்தில் அரச உருவாக்கம் என்பது புறத்தினையில் சிறப்பாகவும் மரபியலில் அதன் வளர்ச்சியினையும் காணமுடிகின்றது. மக்கள் சேர்ந்து வாழத்தொடங்கியபோது அவர்களுக்கிடையிலான உறவை ஒழுங்குபடுத்த ஓர் அமைப்பு உருவாகிவிட்டது. யார் சொல்வதை யார் கேட்பது? யார் சொல்வதை யார் செயற்படுத்துவது? என்னும் நடைமுறைச் சிக்கல் தோன்றியபோது வலிமை முதலியன பயன்படுத்தப்பட்டது. மக்கள் தொகை மிகுதியாக மிகுதியாக போட்டியும் வலிமையும் பல்வேறு நிலைகளில் உருக்கொள்ளத் தொடங்கின. இச் சூழலில் அதிகாரம் என்பது நன்கு உணரப்பட்டது. துணை என்பது தேவைப்பட்டது. நட்பும் பகையும் பிரித்தறியப்பட்டன. படையும் போரும் உருவாயின. இவற்றின் படிப்படியான வளர்ச்சியில் தலைமை என்னும் பதவி ஏற்பட்டது. குழுத்தலைமை, குடித்தலைமை, தினை நிலத் தலைமை, நாட்டின் தலைமை என அரச உருவாக்கத்தின் அடிப்படை உருவாயின. இதனால் அரசு இல்லாமல் எந்த சமூகமும் நிலைபெறமுடியாது என்னும் நிலை ஏற்பட்டது.

தினை நிலப் பிரிவுகளில் மக்களுக்கிடையே ஏற்படும் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த தலைவர்கள் அல்லது ஆட்சியாளர்கள் சென்றமையைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

“முல்லை முதலாலச் சொச்சிய முறையான் பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும் (தொல் 30) இவ் அடிகளுக்கு இளம்பு+தனார், முல்லை முதலாச் சொல்லிய நிலத்தின் மக்கள் என்றவாறு குறையாமல் பிழைத்து பிழையாமல் அறம் நிறுத்தம் பொருட்டு பிரிவு ஏற்படும் என்று அகத்தினையின் பிரிவு பற்றி குறிப்பிடும் இடத்தில் ஆட்சியாளர் பற்றி குறிப்பிடுகின்றார்.

மேலும் தினை நிலை வாழ்க்கைமுறை நிலவுடைமை அமைப்பாக மாற்ற கொண்ட பிறகு உழவே ஏற்றம் பெற்று பிற தினைகளைவிட மருத தினையே தலைமை பெற்றது. ஆநிரை கவர்ந்து திரட்டியவற்றைப் பாதீடு செய்தது போன்று மருத நிலத்து விளைச்சலை அறுவடை செய்து (பாதீடு) என்றும் பகிர்ந்தளிப்பு நடந்துள்ளது. இதனையே “உழவன் வெற்றி” என்னும் துறை வெற்றியாக கொண்டாடுகிறது. இவ்வாறு பாதீடு என்பது பல்வேறு வடிவில் தமிழகத்தில் அண்மைக்காலம் வரை இருந்தமையை அறியமுடிகிறது. இதனால் அரசிற்கும் சமூகத்திற்குமான செயற்பாட்டில் தொல்காப்பியத்தில் உணவு பங்கீடு முதல் நிலைக்கு உரியதாக வழக்கில் இருந்தமையை அறியமுடிகிறது.

மேலும் அண்மைக் காலங்களில் வெளிக் கொண்டுவரப்பட்ட தொல்லியற் சான்றுகள் முல்லையும் பாலையும் தாங்கி நிற்கின்ற கொங்கு நாட்டுப் பகுதி சேர அரச உருவாக்கத்திற்கு பெரும் பங்கு புரிந்துள்ளது. இம் முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் இங்கு கிடைக்கின்ற இரும்புக் கனிமத்தையும் மணிக்கற்களையும் பயன்படுத்தி தனது தொழில்நுட்பத்தால் மிகச் சிறந்த எஃகு கருவிகளையும் உருவாக்கி மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர். இதன்மூலம் பெற்ற வணிகத்தின் மூலம் வாழ்க்கை மேம்பாட்டையும் சமூகக் கட்டமைப்பிற்கும் அரச உருவாக்கத்திற்கும் அடி கோலியது. இதற்கு இந்தியாவில் கிடைத்த அதிகமான உரோம நாணயங்கள் சான்றாகும்.

மேலும் மக்கள் நலனுக்காகத் தோன்றியது அரசு என்ற அரிஸ்டாடில் கருத்தினை தொல்காப்பிய அரச உருவாக்கத்தின் அடிப்படையே ஆகும். தமிழகத்தில் குடும்பத்தின் விரிவாக்கம் தினை அமைப்பும் அவற்றை ஒருங்கிணைப்பதற்காக அரசும் தோன்றியிருக்க வாய்ப்புள்ளது.

எனவே தொல்காப்பியத்தில் அரச உருவாக்கம் என்பதும் தொல்காப்பிய புறத்தினையில் எழுதினைகளிலும் மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கப்படுவதுடன் தொல்காப்பிய அரச உருவாக்கம் தினையினை அடிப்படையாகக் கொண்டமைந்ததோடு சமூகத்தில் உள்ள சமூகப் பிரிவுகளிடையேயும் இவ் அரச உருவாக்கம் இடம்பெற்றதோடு சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் அங்கீகரிக்கும் மரபு தமிழர் மரபு சமூகப் பரிணாமத்தின் தவிர்க்கவியலாதவாக்கில் அரச உருவாக்கம் நிகழும் போது அந்த யதார்த்தத்தை உள்வாங்கியது தொல்காப்பியம். அதே வேளை அரச உருவாக்கத்தின் தீய விளைவுகளை இயன்ற மட்டும் களையவேண்டும் என்ற முனைப்பும் தொல்காப்பியத்தில் காணக்கிடைக்கிறது. மேலும் அரச உருவாக்கத்தின் உடன் விளைவான போர் புரிதலுக்கு சமூகத்தின் பல பிரிவினரும் ஈடுபட்டனர் என்பது தொல்காப்பியத்தில் சான்றுள்ளது.

எனவே இற்றைக்கு கி.மு 5 ஆம் நூற்றாண்டு அளவுகால அளவைக் கொண்ட தொல்காப்பியம் பிற்கால அரசியல் தத்துவ ஞானிகளுக்கும் பிற்கால கோட்பாட்டாளர்களுக்கும் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு தொல்காப்பியம் ஓர் உந்துசக்தியாகவும் இருந்திருக்க வாய்ப்புள்ளது.

இங்கு கூறப்பட்ட கருத்துக்கள் அவர்களின் அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு முன்னோடியாக அமைந்திருக்கும் என்பதே எனது முடிவு.

தொ.மா.க. 201

தொல்காப்பியர் கூறும் மரபுவழி மாண்புகள்

பேராசிரியர் இரா. ச. குழந்தைவேலன்
தலைவர், கடலூர் மாவட்டத் தமிழ்ச் சங்கம்,
43, சுப்புராயர் வீதி விரிவு, அரியாங்குப்பம், புதுச்சேரி, இந்தியா
rskvelan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியர் காலம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு அக்காலத்தில் அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் என்ற சாதிப் பாகுபாடு இல்லை. நிலத்தின் அடிப்படையில் அது சார்ந்த தொழில் காரணமாக மக்கள் வகைப்படுத்தப்பட்டனர். சாதி வேறுபாடு தொல்காப்பியர் காலத்துக்குப் பின்பு வந்த சங்க காலத்திலும் இல்லை. வடமொழியும், ஆரிய இனமும் இருந்தனர் என்பதைக் காண்கிறோம். ஆனால் வருண வேறுபாடு இல்லை. தொல்காப்பியருக்குப் பின் சுமார் 1500 ஆண்டுகள் பின்னரே உரையாசிரியர்கள் தொல்காப்பியத்துக்கு உரை செய்துள்ளனர். இடைப்பட்ட நீண்ட காலத்தில் மொழிக் கலப்பு, மனுதர்மக் கலப்பு, மதக்கலப்பு ஆகியவை வந்துள்ளன. அவர்கள் வருணம் சார்ந்த நூற்பாக்களைத் தொல்காப்பியத்துள் இணைத்துள்ளனர். பின்னால் வந்த உடையாசிரியர்கள் அவற்றிற்கும் சேர்த்து உரை வழங்கியுள்ளனர். ஆதலின் சாதி பற்றிய நூற்பாச் செய்திகள் மரபியலுள் சேர்க்கப்பட்ட இடைச் செருகல் என்பது ஆய்வறிநர் கருத்தாகவுள்ளது. குறிப்பாக பேராசிரியர் வெள்ளை வாரணனார் இதனைத் தெளிபட வரையறுத்துக் கூறுகிறார். மேலும் பொருளதிகார செய்யுளியலில் கூறப்பட்டுள்ள நூற்பாச் செய்திகள் மரபியலுள் நூல் மரபு என்ற இறுதிப் பகுதியில் வருகின்றன. தொல்காப்பியர் முன்பு கூறியவற்றையே திரும்பவும் கூறியிடுக்க வாய்ப்பில்லை யாதலின் அவையும் இடைச் செருகலாக இருக்கலாம் ஆராய்க! என்று ஆய்வாளருக்கு விட்டுவிடுகிறார். இவ்வாறு செப்பமும் நுட்பமும் மிகுந்த தொல்காப்பிய நூற்பாக்களில் இறுதிப் பகுதியாகிய மரபியல் நூற்பாக்கள் சிறப்பு வாய்ந்தவைகளாகவுள்ளன. அதுவே தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டிய பல இடங்களை பின் வரும் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டுகின்றன.

தொல்காப்பியம் இன்றைய இலக்கிய உலகைவிட்டு விலகிச் செல்வது உணர முடிகிறது. தமிழ் அறிஞர்களே தொல்காப்பியத்தின் பக்கம் செல்வது இல்லை, பழந்தமிழரின் தமிழ் மொழிவரலாறாகவும், வாழ்வியல் வரலாறாகவும் நமக்கு வழிகாட்டுவது தொல்காப்பியம் ஒன்றே. தொல்காப்பியத்தை முதலில் தமிழறிஞர்களிடம் கொண்டு சென்று படிக்கத் தூண்டுவதற்கும், மக்களிடம் கொண்டு சென்று பழந்தமிழர் வாழ்வியலை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் தொல்காப்பியக் கருத்தரங்குகளும், ஆய்வு மாநாடுகளும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். விலகி நின்று பார்க்கும் பொழுது தொல்காப்பியம் கடினமாகத் தோன்றலாம். ஊன்றி கற்கக் கற்க அது எளிமையும், வளமையும் மிக்க வாழ்வியல் நூல் என்பதை அறியலாம்.

தொல்காப்பியம்

தமிழ் மொழியின் தொன்மைக்கும் வளமைக்கும் சான்றாக விளங்குவது ஒல்காப் பெரும்புகழ் கொண்ட தொல்காப்பியம். இது மொழியின் இலக்கணம் மட்டுமல்லாது தமிழின் வாழ்வியல் இலக்கியமாகவும் விளங்குகிறது. தொல்காப்பியம் தன் பெயருக்கேற்பத் தொன்மையான நூல். தொல்காப்பியர் காலம் கி.மு.4 ஆம் நூற்றாண்டு என்று பல்வேறு சான்றுகளுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார் முனைவர் மா. இராசமாணிக்கனார். காரணம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தமிழகத்துக்குள் வந்த சமண, பௌத்த சமயங்கள் பற்றித் தொல்காப்பியத்துள் குறிப்பிடப்படவில்லை. மேலும் அடுத்தடுத்து நிகழ்ந்த கடல்கோள் காரணமாகத் தமிழகத்தின் தெற்கு எல்லை மாறி மாறி அமைந்தது. தமிழகமும் இலங்கையும் கடல்கோள் காரணமாகப் பிரிந்தது. பின்னர் ஏற்பட்ட கடல்கோள் காரணமாக தெற்கு நிலப் பரப்பு அழிந்தது. இதனை,

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

- சிலம்பு காதை 8

என்ற சிலப்பதிகார அடிகளால் காணலாம். பின்னர் ஏற்பட்ட கடல்கோள் காரணமாக தெற்கு எல்லையாக இருந்த ஆறு கொள்ளப் பெற்று தற்பொழுது உள்ள குமரிமுனை எல்லையாயிற்று. தொல்காப்பியத்துக்குப் பாயிரம் வழங்கிய பனம்பாரனார்,

வடவேங்கடம் தென்குமா ?
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகத்து

என்று எல்லை வகுத்தார். தென்குமரி என்பது குமரி ஆறு என்று உரையாசிரியர் பொருள் கூறினார்.

தொல்காப்பியர் வடநூலாகிய பாணினியத்துக்கு முற்பட்ட நூல். அதற்கு முற்பட்ட நூலாகிய வடமொழி ஐந்திரத்துக்கு இணையான காலத்தவர். ஐந்திரம் கற்றுத் தேர்ந்திருந்தவர் என்பதும் பாயிரத்தில் குறிப்பிடப்படுகிறது.

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்

என்பதனால் அறியலாம்.

மேலும் நூல் செய்த ஆசிரியர் தம் பெயரையே நூலுக்கும் சூட்டினார் என்பதனைப் பாயிரம்,

தொல்காப்பியன் எனத் தன்பெயா ் தோற்றி

என்று கூறியுள்ளதனால் அறியலாம்.

தொல்காப்பியம் ஒரு ஒழுங்கான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டு ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. 1602 நூற்பாக்கள் தொல்காப்பியத்தில் உள்ளன. உரையாசிரியர்கள் எண்ணிக்கையில் சில நூற்பாக்கள் கூட்டியும் குறைந்தும் உள்ளன. இதன் பழைய உரையாசிரியர்கள் இளம்பூரணர் சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் முதலியோராவர். இவர்களில் இளம்பூரணர் எழுதிய உரையினைத் தழுவியே நன்னூலார் பவணந்தி முனிவர் நன்னூல் என்னும் இலக்கண நூலைச் செய்தார். இவரது காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு.

தொல்காப்பியம் பழஞ்சங்க நூலாயினும் ஆழ்ந்து கற்பவர்க்கு எளிமையானது. தொல்காப்பியச் செய்திகள் புலவர்களுக்கும், அறிஞர்களுக்கும் எளிதாகச் சென்றடைய அறிஞர் க. சுப்பிரமணிய பிள்ளை உரைநடையில் நூல் எழுதி வெளியிட்டார். அறிஞர் வெள்ளை வாரணனார் தொல்காப்பியம் என்னும் பெயரில் ஆய்வு நூல் எழுதி வெளியிட்டார், பேராசிரியர் சி. இலக்குவனார் தொல்காப்பிய ஆராய்ச்சி

என்னும் நூல் ஒன்றை எளிய நடையில் எழுதி வெளியிட்டார். மேலும் பலர் தொல்காப்பிய விளக்க நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளனர்.

தொல்காப்பியம் எழுத்து, சொல் ஆகிய இரண்டு அதிகாரங்களில் மொழியின் இலக்கணமும், பொருளதிகாரத்தில் வாழ்வியல், இலக்கிய இலக்கணமும் அமைய எழுதப்பெற்றுள்ளது. பொருளதிகாரம் தமிழரின் வாழ்வும் வரலாறுமாக அமைந்துள்ளது. தொல்காப்பியம் தமிழர்க்கு உயிர் நாடி போன்றது. இதனை,

Its subject matter is the history of the Tamil race itself,
The life of the ancient Tamil Country.

- Dravidan India T.R. Sesha Ayyangar

என்ற அறிஞரின் கூற்றால் அறியலாம்.

தொல்காப்பியம் மொழியின் இலக்கணம் மட்டுமல்லாது வாழ்வியல் இலக்கணம். புதிய படைப்பாளிகளுக்கான இலக்கிய நெறி முறைகளையும் கூறியுள்ள ஒரு முழுமையான நூல். இதற்குப் பின்பு இத்தகைய ஒரு முழுமையான நூல் காலத்திற்கேற்றவாறு படைக்கப் பெறவில்லை! தொல்காப்பியத்தின் ஒவ்வொரு பகுதியும் பிற்காலத்தில் தனித்தனி நூல்களாக எழுதப் பெற்றுள்ளன. தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பின்னாளில் நன்னூலாகவும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களில் ஒன்றான அகத்திணையியல் நம்பி அகப்பொருளாகவும், புறத்திணையில் புறப்பொருள் வெண்பா மாலையாகவும், செய்யுளியல் யாப்பருங் கலக்காரிகையாகவும் உவம இயல் தண்டியலங்காரமாகவும் தனித்தனி நூல்களாக புலவர்களால் படைக்கப்பெற்றுள்ளன. இது தொல்காப்பிய நூலின் தனிச்சிறப்பாகும்.

தொல்காப்பியர் மரபுவழியைப் பெரிதும் போற்றுபவர். அவர் காலத்துக்கு முன்பிருந்த ஐந்திரம் என்ற வடமொழி நூலைக் கற்றவர். இதனை, பனம்பாரனார் தம் பாயிரத்தில்,

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்

என்று குறிப்பிட்டிருப்பதனால் அறியலாம். எனினும் அந்த நூலைப் பின் பற்றித் தொல்காப்பியம் எழுதப் பெற்றுது என்று கருத முடியாது. தொல்காப்பியம் போன்றதொரு செப்பமான இலக்கண நூல் தமிழில் தோன்றியுள்ளதென்றால் அதற்குப் பன்னூறு ஆண்டுகள் முன்பு தமிழில் பல நூல்கள் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்தன என்பதற்குச் சான்றுகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன. பனம்பாரனாரும் தம் பாயிரத்தில், முந்துநூல் கண்டு என்று குறிப்பிட்டுள்ளார். ஆதலின் தொல்காப்பியர் தம் நூலை அவருக்கு முன்பிருந்த புலவர்கள் மற்றும் அவர் காலத்தில் இருந்த புலவர்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கொண்டு படைத்துள்ளார் என அறிய இடமிருக்கிறது.

தொல்காப்பியர் கருத்துக்களைப் பிற்காலத்தவர் விளங்கிக் கொள்வதற்கு உரையாசிரியரின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். எனினும் தொல்காப்பிய உரையாசிரியர் காலம் தொல்காப்பியர் காலத்துக்கு மிகவும் பிற்பட்டது. ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்குப் பின்பே முதல் உரையாசிரியரான இளம்பூரணர் தோன்றினார். இவருக்குப் பின்பே பிற உரையாசிரியர்கள் தோன்றினர். இவர்கள் காலத்தில் அரசியல் முறை மாற்றம், வடமொழியின் செல்வாக்கு, சாதி வேறுபாடுகள் வலுப்பெற்று மனுதருமக் கொள்கை, பக்தி இயக்கங்களின் வளர்ச்சி ஆகியவை வழக்கத்தில் இருந்தன. இக்கால உரையாசிரியர்களால் 1600 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல்காப்பியத்துக்கு உரை எழுதுவதில் மிக்க இடர்பாடுகள் இருந்தன என்பது உண்மையாகும். அதனால் உரையாசிரியர்களிடம் முரண்பாடுகளும், குழப்பங்களும் இருந்ததனைக் காண முடிகிறது. உரையாசிரியர்கள் தங்கள் புலமைத் திறனை வெளிப்படுத்தியும், தங்களின் சார்புத் தன்மையின் நோக்கிலும் உரை வழங்கியுள்ளனர் என்ற கருத்தும் ஆய்வாளர்களால் கூறப்படுகிறது. எவ்வாறாயினும் உரையாசிரியர்களின் விளக்கங்கள் தொல்காப்பிய நூலின் திறவு கோலாக அமைந்துள்ளன என்பதை மறுக்கவியலாது.

தொல்காப்பியத்தின் சிறப்புக்களைப் பட்டியலிட்டால் பின்வருமாறு அவற்றைக் காண இயலும். கடல்கோளால் அழிக்கப் பெற்ற தமிழ் நூல்களில் எஞ்சியவற்றுள் நமக்குக் கிடைத்த முதல் நூல் தொல்காப்பியர் படைத்த தொல்காப்பியம் என்னும் நூல் என அறியலாம். தொல்காப்பியர் காலம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு என அறிஞர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது. தொல்காப்பியர் தமக்கு முன்பிருந்த வடமொழி மற்றும் தமிழ் நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். எனினும் தொல்காப்பியர் அவர் காலத்துக்கு முன்பிருந்த தமிழ் நூல்களையும், தம் காலத்துத் தமிழ் நூல்களையும் ஒட்டியே தொல்காப்பியத்தைப் படைத்துள்ளார் என அறியலாம். தொல்காப்பியத்தை மக்கள் விளங்கிக் கொள்வதற்கு உரை விளக்கம் தந்த உரையாசிரியர்களாக இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் முதலியோர் குறிப்பிடப்படுகின்றனர். உரையாசிரியர்கள் ஏறத்தாழ 1600 ஆண்டுகள் பின் வந்தவர்கள்.

தமிழகத்தில் காலப்போக்கில் நிகழ்ந்த பல்வேறு மாறுதல் காரணமாக உரையில் முரண்பாடுகளும் குழப்பங்களும் உள்ளவைகளாகக் கருதப்படுகின்றன. காரணம் ஆட்சி முறை, சாதிய முறையிலான மனு நீதி, சமூக ஏற்றத்தாழ்வு, வடமொழித் தாக்கம், பக்திநெறி ஆகியவற்றால் தொல்காப்பியர் காலத்தை ஒட்டிய செய்திகளை உரையாசிரியர்கள் பின் பற்றி எழுதுவதில் இடர்பட்டிருந்தனர் எனவும் கருத வாய்ப்புண்டு.

மொழி இலக்கணமல்லாது அக்கால வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்துள்ளமையால் தமிழ் மக்களின் வாழ்வியல் வரலாறாக பொருளதிகாரம் விளங்குவதை அறிய முடிகிறது. இது எந்த மொழி நூலுக்கும் இல்லாத தனிச் சிறப்பாகும். இந்நூல்களில் வரும் அகத்திணை, புறத்திணை நூற்பாக்கள் மூலம் பண்டைத் தமிழரின் காதல் வாழ்வு, அவர்தம் கொடை, வீரம், இறந்த போது வருந்திய கையறு நிலை, பற்றற்றதுறவு, பல்வேறு நிகழ்வுகள் முதலியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது. இவை அனைத்தும் தொன்று தொட்டு வரும் மரபு சார்ந்து வருவனவாக ஆசிரியர் தொகுத்துரைத்துள்ளார். இது தமிழர் மொழிக்கும், வாழ்வியலுக்கும் ஆவணமாக விளங்கும் நூல். தொல்காப்பியச் செய்திகள் தமிழ் முதுகலைப் பயிலும் மாணவர்க்குப் பாடமாக மட்டுமே படிக்கப்பெறாமல் தமிழர் அனைவரும் கற்க வேண்டியது இன்றைய தேவையுமாகும்.

மொழிக்கு இன்றியமையா மரபு

தொல்காப்பிய நூலின் இறுதி இயல் மரபியல். மூன்றாவது அதிகாரமாகிய பொருளதிகாரத்தின் 9 ஆவது இயல். மரபு ஒரு மொழிக்கு இன்றியமையாத இலக்கணமாகும். மரபியல் என்று நூலின் இறுதியில் தனியாக அமைந்திருந்தாலும் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியவற்றிலும் மரபு பற்றிய செய்திகள் வருகின்றன. மரபு என்ற சொல்லுக்கு இலக்கணம் என்று பொருள் கொள்வதை நாம் காணமுடிகிறது. எழுத்ததிகாரத்தின் முதல் இயல் நூல் மரபு ஆகும். எழுத்தின் வகை, உச்சரிக்கும் கால அளவு (மாத்திரை), எழுத்துக்களின் எண்கள், வடிவம் முதலிய செய்திகள் கூறப்படுகின்றன. அடுத்து வரும் இயல் மொழி மரபு ஆகும். இங்குச் சொற்களை உருவாக்கும் எழுத்துக்களின் இலக்கணம் கூறப்படுகிறது. சார்பு எழுத்துக்களாகிய குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் இவற்றின் இயக்கம் ஆகியவை பற்றியும் எழுத்துக்கள் சேர்ந்து சொற்களாகும் தன்மை பற்றியும் விளக்கிச் செல்கிறார். இதன்மூலம் மொழிக்கு மரபு எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பதை நூலின் தொடக்கத்திலிருந்தே அவர் மரபினைக் கையாண்டுள்ளதனால் நன்கு அறியலாம்.

தொல்காப்பியர் தமிழ்நாட்டில் தமக்கு முன்பு நெடுங்காலமாக வழக்கில் இருந்து வந்த மரபினைப் பெரிதும் அடியொற்றியே நூலைப் படைத்தவர். தம் நூலுள் சற்றேறக்குறைய 200 இடங்களுக்கு மேல் முன்னோர் கருத்தைக் குறிப்பிட்டுக் காட்டியிருப்பதைக் காணலாம். சான்றாகப் பின்வரும் நூற்பா அடிகளைக் காணலாம்,

பண்டியல் மருங்கின் மரீஇய மரபே - வேற்றுமை மயங்கியல் - 7
வழக்கியல் மரபே - வினையியல் - 47
பாடலுட் பயின்றவை நாடுங்காலை - அகத்திணையியல் - 3
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே - அகத்திணையில் - 5
பாங்குற வுணர்ந்தோர் பன்னுங்காலை - செய்யுளியல் - 5

இவ்வாறு இலக்கண, இலக்கிய, பண்பாட்டு மரபுகளைப் பின்பற்றியே தம் நூலைப் படைத்துள்ளார். பண்டை நூல்கள் கடல்கோள்களால் அழிந்துபட்டக் காரணத்தால் அவற்றைச் சான்று காட்ட இயலவில்லை.

தொல்காப்பியர் காலத்தில் வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலந்தன. அவற்றை வடசொல் என்ற தனி வகைப்பாட்டிலேயே எடுத்துக் காட்டுகிறார். சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று நான்காக வகைப்படுத்திக் கூறுகிறார். இயற்சொல்லும், திரிசொல்லும் அந்த மொழிக்கே உரியவை. திசைச்சொல் காலப்போக்கில் தமிழிலிருந்து கிளைத்த மொழிச் சொற்கள். மலையாளம், தெலுங்கு முதலியன. வடசொல் எனப்து வடமொழியிருந்து தமிழில் வழங்கும் சொற்கள். அவற்றைத் தமிழில் கையாளும் பொழுது வடமொழி எழுத்துக்களை நீக்கி தமிழ் எழுத்துக்களையே கையாண்டு தமிழோசைப் படுத்த வேண்டும் என்கிறார். இதனை,

வடசொற் கிளவி வடிவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

என்ற நூற்பாவால் விளக்கிக் காட்டுகிறார். எடுத்துக்காட்டாக விபீஷணன், லஷ்மணன் ஆகியவை வீடணன், இலக்குவன் என்று தமிழில் வழங்கப்படுகிறது. வடமொழிச் சொற்களைத் தமிழில் வழங்கும் போது தமிழின் எழுத்தும், சொல்லும் சிதையாமல் மூல மொழியின் சொற்கள் சிதைந்தாலும் பொருட்படுத்தாமல் தமிழ்ப்படுத்த வேண்டும் என்கிறார். இதனை, சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் என்ற நூற்பா மூலம் வலியுறுத்துகிறார்.

தொல்காப்பியர் கூறும் மரபு வழிச் செய்திகளை நாம் மூன்று வகையாகப் பிரித்துக் காணலாம். அவை இலக்கண மரபு, இலக்கிய மரபு, பண்பாட்டு மரபு, முற்காலத் தமிழர் மொழிந்த இலக்கணங்களையும், இலக்கியங்களையும், பண்பாட்டுச் செய்திகளையும் அடியொற்றியே தமது நூலைப் படைத்துள்ளார். இலக்கணமரபு எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மூலமும், இலக்கிய மரபு பொருளதிகார மெய்ப்பாட்டியல், உவம இயல், செய்யுளியல் ஆகியவை மூலமும், பண்பாட்டு மரபு அகத்திணை இயல், புறத்திணையியல், களவியல், கற்பியல் மூலமும் எடுத்துக் கூறுப்பட்டுள்ளன என அறியத்தகும். இதுவரை தொல்காப்பிய நூல் எவ்வாறு பண்டைத் தமிழரின் இலக்கண, இலக்கிய, பண்பாட்டு மரபுகளின் அடியொற்றி அவை தொடர்ந்து காக்கப் பெறுதல் வேண்டும் என்பதனைப் பொதுப்பட விளக்கியுள்ளார் என்று கண்டோம்.

நூலின் இறுதி இயலாகிய மரபியலில் மரபு என்றால் என்ன, அதன் இன்றியமையாமை என்ன, அதனை ஏன் பின்பற்ற வேண்டும் என்ற வகையில் விளக்கித் துவங்குகிறார். முதல் நூற்பாவியேயே,

மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பில், - மரபியல்-1

என்று மரபு விலகாமல் காக்கப்பட வேண்டும் என்கிறார். மரபைப் பின் பற்றுவது என்பது பழங்காலத்தொட்டு மொழியை அடுத்தடுத்த தலைமுறைக்குச் சிதைவுறாமல் கொண்டு செல்வதாகும். பிரிதொரு இடத்தில்,

மரபுநிலை திரி'தல் பிறிது பிறிதாகும் - நூல்மரபு-93

மரபை மாற்றினால் பொருள் மாறுபடும் அதனால் மரபை நீக்கி எழுதுதல் வழுவாகும் என்கிறார் தொல்காப்பியர். மரபு எவ்வாறு உருவாகிறது என்பதையும் அவர் கூறுகிறார். நூல்கள் படைக்கும் ஆசிரியர்கள் தொன்று தொட்டுப் பின்பற்றிவரும் வழக்குச் சொல்லே மரபாகக் கருதப்படுகிறது. இதனை, வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே என்றார். உயர்ந்தோரால் படைக்கப் பெறும் முதல் நூற்களும் வழி நூற்களும் மரபு நிலை திரிதல் இல்லாத பெருமைக்கு உரியனவாகும். இதனை மேலும் விளக்கும் பொழுது,

மரபுநிலை திரி யா மாட்சியவாகி
உரைபடு நூல்தாம் இருவகை நிலைய
முதலும் வழியுமென நுதலிய நெறியின - நூ.95

என்று நூற்பா அமைத்துத் தெளிவு படுத்துகிறார். இவ்வாறு தொன்று தொட்டு வழங்கி வரும் ஒரு மொழி தன் கட்டுமானத்தை இழக்காமல் இயங்கி வருவதற்கு மரபு வழுவின்றிக் காக்கப் பெறுதல் வேண்டும் என்பதைப் பெரிதும் வலியுறுத்துகின்றார் தொல்காப்பியர். மரபு மாறாமல் என்றும் காக்கப் பட வேண்டியதன் இன்றியமையாமை பற்றிக் கூறும் தொல்காப்பியர் காலப்போக்கில் ஒரு மொழியில் ஏற்படும் மாற்றங்களையும் எவ்வாறு இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் கூறத் தவறவில்லை. புதிய சிந்தனைகள், தொழில்கள், புதிய கண்டு பிடிப்புகள் வரும் பொழுது அவற்றுக்குப் பெயரிடவும் புதிய சொற்கள் உருவாக்கவும் ஆசிரியர்,

கடிசொல் இல்லை காலத்துப் படினே - நூ.452

என்று வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறார். மாற்றுதற்கியலாத மொழியின் மரபு போற்றப்பட வேண்டும் என்று கூறிய நூற்பாவுக்கு உரை செய்த உரையாசிரியர், ஒரு சார் செய்யுள் இன்பத்துக்கு மாற்றிச் சொல்லுதலும் உண்டு என்று கூறியுள்ளனர். மாற்றம் ஒரு மொழியின் கட்டுக் கோப்புக்குத் தடையாக இருந்து விடக்கூடாது. இலக்கிய இன்பத்துக்காகப் புலவர் மரபு வழியினை மாற்றிக் கூறுவதும் செய்யுள் வழக்கில் வழு அமைதியாக ஏற்றுக் கொள்ளப்படுவதுண்டு என்கிறார் பேராசிரியர். எடுத்துக்காட்டாக,

நும்மினும் சிரந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது நலனே - நற்றிணை 172

இங்குப் புன்னை மரம் தமக்கையாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு மரபு காத்தல் இலக்கணம், இலக்கியம், பண்பாடு ஆகிய தளங்களில் மிகவும் இன்றியமையாதது. மரபு மாற்றத்துக்கு உட்படாதது என்பதனையும் மொழியின் வளர்ச்சிப் போக்கில் செய்யுள் யாக்கும் புலவர் இலக்கிய இன்பத்துக்காக மரபுச் சொல்லை மாற்றியமைக்கலாம். இன்பத்துக்காக மாற்றப்பட்டுள்ளது என்பதை கற்போர் உணர்ந்து கொள்ளும் வகையில் அது அமைய வேண்டும் என அறியலாம். இதுகாரும் ஒரு மொழிக்கு மரபு இன்றியமையாதது என்பதைத் தொல்காப்பிய வழி அறிந்து கொள்ளச் சில சான்றுகளைக் காண இயன்றது.

மரபு வகைகளும் இலக்கணங்களும்

தொல்காப்பியர் மரபியல் என்கிற பொருளதிகார ஒன்பதாவது இயலில் (இறுதி இயல்) உலக வழக்கிலும், நூலிலும் திரிபு இல்லாமலம் மரபு பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இதனை,

நிலம் தீ நீர் வளி விசும் போடைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயனெறிவழாமைத்
திரி வில் சொல்லொடு தழா அல் வேண்டும் - நூ 91

என்னும் நூற்பா மூலம் எடுத்துரைக்கின்றார். மேலும் இதனை வலியுறுத்த,

மரபுநிலை திரி தல் செய்யுட்கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லினான

என்றார். மேலும், செய்யுட்களில் மரபுநிலை திரிதல் கூடாது என்று கூறுகிறார். மரபுச் சொற்கள் மூலம் திணைப் பாகுபாடும், ஐம்பால் பாகுபாடும் தெளிவாக அமையுமாறு சொற்களைக் கையாளுதல் வேண்டும் என்கிறார்.

முதலில் இருதிணைக்கும் வரும் இளமை, ஆண்பால், பெண்பால் மரபுச் சொற்களை ஆசிரியர் பட்டியலிடுகிறார். அவற்றுள் இளமைப் பெயரைக் கூறுமிடத்து,

பா ் ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்று
ஒன்பதும் குழவியோடு இளமைப் பெயரே - நூ.1

பொருட்களின் இளமை பற்றிய மரபுப் பெயர்களைக் கூறிய ஆசிரியர் முதுமை பற்றிய பெயர்களைக் கூறவில்லை. அவை வரையறையில்லாதன என்பர் உரையாசிரியர். அடுத்து ஆண்பால் மரபுப் பெயர்களையும், பெண்பால் மரபுப் பெயர்களையும் கூறிச் செல்கிறார். இவ்வாறு இருதிணைக்கும் வரும் இளமை, ஆண்மை, பெண்மை மரபுப் பெயர்களைக் கூறிய தொல்காப்பியர் அவற்றுள் பல மர வகைகள், ஊர்வன, பறப்பன, விலங்குகள் இளமைக்குரிய மரபுச் சொற்கள் இவையவை என்று பட்டியலிட்டுக் கூறியுள்ளார். பார்ப்பும், பிள்ளையும், பறப்பனவற்றிற்கும், தவழ்வனற்றிற்கும் இளமைப் பெயர்கள். குட்டி பறழ் என்பவை மூங்கா (கீரிப் பிள்ளை) வெருகு, எலி, அணில் ஆகியவற்றின் இளமைப் பெயர் என்கிறார். குருளை, குட்டி, பிள்ளை, மறி, மகவு, கன்று, குழவி, பிள்ளை ஆகிய இளமைப் பெயர்கள் விலங்கு வகை உயிரினங்களின் மரபுப் பெயர்களாகப் பட்டியலிட்டுள்ளார். இவ்வாறு கூறிய இளமைப் பெயர்கள் நெல், புல் ஆகிய ஓரறிவுயிர்க்குக் கூறப்படுவதில்லை என்று கூறுகிறார். இறுதியில் இவ்வாறு கூறிய மரபுப் பெயர்கள் சொல்லப்பட்டவைகளுக்கு அல்லாமல் சொல்லப் படாதவைகளுக்கும் பொருந்தும் என்று கூறினார்.

இதுகாரும் இளமைப் பெயர் பற்றிய இருதிணை ஐம்பால் மரபுப் பெயர்களைக் கூறிய தொல்காப்பியர் மேலும் தெளிவு படுத்துவான் வேண்டி உலக உயிர்களின் பகுப்பைத் தம் நூற்பாக்கள் வாயிலாக விளக்குகிறார்.

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
அறறிவதுவே அவற்றொடு மனனே
நோ ?தின் உணா ் ந்தோா ் நெறிப்படுத்தினரே - நூ.27

இந்த உயிர்வகைப் பாகுபாடு பிற்கால டார்வின் முதலிய அறிஞர்களின் பரிணாம வளர்ச்சிக்கு முற்பட்ட கி.மு. 4 ஆம் நூற்றாண்டுக்கு முந்தை தமிழர் கண்ட அறிவியல் செய்தி. அதனால் தான் ஆசிரியர் தம் இறுதி அடியில், நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே என்று முடித்தார்.

மேலும் ஓரறிவுயிர்கள் எவை, இரண்டறி உயிர்கள் எவை என முறையே ஐயறிவுயிர்கள் எவை அவற்றின் அறிகருவிகளாகிய பொறிகள் முறையே எத்துணை என்று அடுத்தடுத்து வரும் நூற்பாக்களில் தெளிவுபடுத்தியுள்ளார். உற்றறியும் அறிவு முதல் சுவை, நுகர்ச்சி, காண்டல், கேட்டல் ஆகிய புலன்களுக்கு ஐந்து அறிகருவிகள் உள்ளன. இவ்வைந்து பொறிகளும் உடையவை எவை என்று கூறும் பொழுது,

மாவும் புள்ளும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

என்கிறார். இந்நூற்பாவில் மாவும் புள்ளும் என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். மாவும் மாக்களும் என்பது பேராசிரியர் கொண்ட பாடம், விலங்குகள், சில பறவைகள் ஐந்து பொறிகளும் உடையன. மக்களும் ஐம்பொறிகள் உடையவர்கள். மக்களை ஐயறிவுயிர்கள் பட்டியலில் சேர்க்காது அடுத்த நூற்பாவில்,

மக்கள் தாமே ஆறறிவுயிரே

என்றார். ஆதலின் அகக்கருவியாகிய மனம் உடையவர்கள் ஆறறிவுடையவர்கள் என்றுச் சிறப்பித்துக் கூறினார். பேராசிரியர் மன அறிவு இல்லாதவர்கள் மக்களில் சிலர் பிற ஐந்தறிவுடையவர்களாக இருக்கின்றனர். ஆதலின் மாக்களோடு அந்த மக்களையும் ஐயறிவுடையராகப் பாடம் கொண்டார். இக்கருத்து பற்றியே திருவள்ளுவர்,

செவியிற் சுவையுணரா வாயுணா ் வின் மாக்கள் - கு 120

என்று கூறியுள்ளமையை வெள்ளை வாரணனார் எடுத்துக் காட்டியுள்ளார். பிறவும் உளவே என்பதற்கு இளம்பூரணர், தேவர், அசுரர், இயக்கர் முதலாயினோர் என்று உரை எழுதினார். பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே என்பதற்குப் பேராசிரியர், கிளையெனப்படுவோர் தேவரும் தானவரு முதலாயினோர். பிறப்பு என்றதனால் குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும். மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராயடங்கும் என்று விளக்கியுள்ளார். தொல்காப்பியரும்,

ஒருசா ் விலங்கும் உளவென மொழிப - நூ.34

என்று அதன்மேலும் ஒரு நூற்பா கூறியுள்ளார். ஆயினும் இந்நூற்பா இளம்பூரணர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது, பேராசிரியர் உரையில் காணப்படவில்லை. எனினும் பேராசிரியர் தமது உரையில் விலங்கில் சிலவும் ஆறறிவுயிர் பெற்றவை என்று உரை செய்துள்ளார். ஐ வகைப்பட்ட பொறியுணர்வு கட்கும் அடிப்படையாக விளங்குவது மன உணர்வாகும். மனமாகிய அகக்கருவியினை வாயிலாகக் கொண்டே நன்றிது தீதிதுவெனப் பகுத்துணரும் அறிவாற்றல் மக்கள் எனச் சிறப்பித்துக் கூறப்படும் ஒரு சார் உயிர்த் தொகுதிக்கே வெளிப்பட்டு விளங்குதலால்,

மக்கள்தாமே அறறிவுயிரே

என்றார் தொல்காப்பியனார், என்பது வெள்ளைவாரணனார் கருத்து.

தொடக்கத்திலிருந்து இளமை, ஆண்மை, பெண்மை மரபுப் பெயர்களைக் கூறிய தொல்காப்பியர் ஓரறிவுயிராகிய புல், மரம் இவற்றின் மரபுச் பெயர்களைக் கூறுவான் வேண்டி நடுவில் உயிர்ப்பொருள் வகைகளைப் பற்றி நூற்பாக்கள் வழங்கினார். இப்பொழுது விட்ட இடத்திலிருந்து ஆண்பால் மரபுப் பெயர்களைக் கூறிச் செல்கிறார். யானை, பன்றி இவற்றை களிறு என வழங்குவர். புல்வாய், புலி, உழை, மரை கவரி, கராம், ஒருத்தல் என்பவை ஆண்மை மரபும் பெயருக்கு உரியன. இவ்வாறு நூற்பா இரண்டில் கூறிய ஆண்பால் மரபுப் பெயர்களை இனி விளக்கிச் செல்கிறார். அடுத்து நூற்பா மூன்றில் கூறிய பெண்பால் மரபுப் பெயர்களை விளக்கிச் செல்கிறார். நூற்பா 79 இல் உலக வழக்கில் மருவி வழங்கும் மரபுப் பெயர்களைப் பட்டியலிட்டுள்ளார். இவ்வாறு மருவி வழங்குபவற்றை வழு என்று நீக்கப்படுதல் இல்லை என்கிறார். மொழியின் வளர்ச்சிப் போக்கில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் தொல்காப்பியரின் மனப்போக்கை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இதனை,

குரங்கின் ஏற்றைக் கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறைப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடியவந்த வழக்கின் உண்மையிற்
கடியலாகா கடனறிந் தோ ் க்கே - நூ.79

என்ற நூற்பாவில் தெளிவுபடுத்திக் கூறியுள்ளார். நூற்பாவில் வரும் பூசை என்பது பூனையைக் குறிக்கும், கண்டி என்பது ஆண் எருமையைக் குறிக்கும். பெண் ஆண் பிள்ளை என்பன இருதிணைக்கும் பொதுப் பெயராயினும் உயர்திணைக்கு உரியவாய் நாட்டில் வழங்கி வருகின்றன என்று மேலும் ஒரு நூற்பாவில் விளக்கியுள்ளார். இனிவரும் 71 முதல் 85 வரையிலான 15 நூற்பாக்கள் நால் வருணப் பாகுபாட்டை விளக்குவனவாகவுள்ளன. அதனால் பேராசிரியர் வெள்ளை வாரணனார், நால்வகை வருணப் பாகுபாடு தமிழ் நாட்டில் வேரூன்றத் தொடங்கிய பிற்காலத்திலே இம்மரபியலில் இடைச் செருகலாக நுழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொல்காப்பியத்தில் இடைச் செருகல் என்னும் அடுத்த

தலைப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதனைக் காணலாம். அடுத்த 86 முதல் 90 வரையிலான ஐந்து நூற்பாக்களில் புல், மரம் இவற்றின் மரபுப் பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன.

புறத்தே திண்ணிய பட்டை (புறவயிர்ப்பு) உடையன புல் என்று அழைக்கப்பெறும். உட்பகுதியில் வயிர்ப்பு உடையன மரம் என்று அழைக்கப் பெறுவன என்கிறார். இதனை,

புறக்காழனவே புல்லெனப் படுமே - நூ.86
அகக் காழனவே மரமெனப் படுமே - நூ.87

என்ற நூற்பாக்களால் அறியலாம். தெங்கு பனை, கமுகு, முங்கில் முதலியன புறக்காழன. மரங்கள் அகக்காழன மேலும் இவற்றின் உறுப்புக்களையும் நூற்பாக்கள் 88, 89-களில் விரித்துரைத்துள்ளார். நூற்பா 90 இல் புல், மரம் என்னும் இருவகைத் தாவரங்கட்கும் பொதுவாக வழங்கம் உறுப்புகளின் மரபும் பெயர்களைத் தொகுத்துப் பின் வருமாறு கூறுகிறார்.

காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையும் அன்ன - நூ.90

காய் பழம் தோல் செதிள் வீழ் என்பன புல்லும் மரமுமாகிய இருவகைத் தாவரங்கட்கும் பொதுவாக வழங்கும் மரபுப் பெயர்களாகும்.

நூற்பாக்கள் 91 முதல் 94 வரை நான்கு நூற்பாக்கள் மூலம் ஒரு மொழிக்கண் உலக வழக்கில் மரபுச் சொற்களைத் திரிபின்றி வழங்க வேண்டியதின் இன்றியமையாமை வலியுறுத்தினார். இவை பற்றி இக்கட்டுரையின் தொடக்கத்திலேயே விளக்கிக் கூறியுள்ளோம். இங்கு நூல் யாக்கும் செய்யுளுக்கும் மரபின் இன்றியமையை,

மரபுநிலை திரி தல் செய்யுட் கில்லை - நூ.92

என்று கூறினார். நூலின் இறுதிப் பகுதியாகிய மரபியலின் இறுதியில் நூல் மரபு பற்றி செய்திகளைக் கூறி வருகிறார். அவற்றை 95 முதல் 112 வரை 18 நூற்பாக்களில் விளக்கியுள்ளார். புலவரால் செய்யப்படும் நூல், மரபு நிலை திரியாது இயற்றப்படுதல் வேண்டும் என்று கூறியே தொடங்குகிறார். அவ்வாறு யாக்கப்படும் நூல் முதல் நூல் வழி நூல் என இருவகைப்படும் என்கிறார். பின்னர் முதல் நூல் வழி நூல் எவை என்பதை,

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும் - நூ.96
வழியெனப் படுவ ததன் வழித்தாகும் - நூ.97

முதல் நூலை அடியொற்றிச் செய்யப்படுவது வழி நூல் அது நால்வகையாகும் என்றார். அவை தொகுத்தல் விரித்தல் தொகை விரியாகச் சொல்லுதல் வடமொழி நூலை மொழி பெயர்த்தல் எனப்படும். அந்நூலின் இலக்கணம் கூறுமிடத்துச் சூத்திரம் காண்டிகை உரையும், விரிவுரையும் உடையதாகி பத்துவகைக் குற்றமின்றி முப்பத்தியிரண்டு வகை உத்திகளோடுப் பொருந்திவருவன என்கிறார்.

நூற்பா 102 இல் நூலுறுப்பாகிய சூத்திரத்தின் இலக்கணம் கூறுகின்றார். வழிநூலின் நால்வகையினும் கூறப்பட்ட பொருளுடன் சில எழுத்தினால் இயன்ற யாப்புடன் அதன் பொருளை விரித்துரைக்கும் காலத்து அவ்வுரையிற் பொருளெல்லாந் தன்னகத்தடக்கி நுண்ணிய பொருண்மையுடன் பொருந்திய விளக்கமுடையதாகி யாவராலும் மறுக்க ஒண்ணாது நற்சான்றுகளுடன் பொருந்தி இவ்வளவினது என அளக்கவியலாத அரிய பொருள்களையுடையதாய்ப் பல வகையானும் பயனை ஆய்ந்து தெளிவதற்குக் கருவியாய் விளங்குவது சூத்திரத்தின் இலக்கணமாகும் என்பர் ஆசிரியர். மேலும் காண்டிகை மற்றும் உரையின் இலக்கணங்களைக் கூறிச் செல்கிறார். நூற்பா 107 இல் உரையின் இலக்கணம் கூறுகிறார். இவ்விலக்கணப்படி உரை செய்தாலும் முதல் நூலொடு மாறுபடவரின் அது குற்றமுடையதாகும். முதல்வன் செய்த நூலில் பத்துவகைக் குற்றங்களும் அமைதல் இல்லை. குற்றங்கள் பத்து எவை என்பவற்றைப் 110 ஆவது நூற்பாவில் பட்டியலிட்டுக் காட்டுகிறார். ஒரு நூலுக்குச் சிதைவெனப்படும் குற்றங்களைக் கூறியது

கூறல், மாறுகொளச் கூறல் குன்றக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில மொழிதல், மயங்கக் கூறல், கேட்போர்க்கு இன்னா, பழித்த மொழியான் இழுக்கம் கூறல், தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல், என்ன வகையினும் மனங்கோளின்மை ஆகிய பத்தும் என்பர் ஆசிரியர். இறுதி நூற்பா 112 ஆவது. இது முப்பத்தியிரண்டு வகை உத்திகளைப் பட்டியலிடுகிறது. இவற்றை இளம்பூரணர் தந்திரஉத்தியாம் என்பர். தந்திரம் என்பது நூல் என்ற பொருளைக் கொடுக்கும். இவை நுதலிய தறிதல் முதல் உய்த்துக் கொண்டுணர்தல் ஈறாக முப்பத்துயிரண்டாம். இலக்கண நூலாசிரியன் தான் கூற எடுத்துக் கொண்ட பொருளைச் சூத்திரத்தால் புலப்படுத்த மேற்கொண்டு உணர்த்தும் முறைமையே உத்தி எனப்படும். இது தந்திர உத்தி என அடைபுணர்ந்து வழங்கப்பெறும், என்பார் வெள்ளை வாரணனார். இவர் தந்திரம் என்பதற்கு நூல் எனவும் உத்தி என்பதற்கு யுத்தி என்ற வடமொழிச் சிதைவு எனவும் பொருள் காண்கிறார் இளம்பூணரர் என்று எடுத்துக்காட்டுகிறார் வெள்ளை வாரணனார். சில இடங்களில் இளம்பூரணரும் பேராசிரியரும் மாறுபடப் பொருள் கொண்டுள்ளனர் என்றும் எடுத்துக் காட்டுகிறார்.

தொல்காப்பியத்தின் இறுதிப் பகுதியாகிய மரபியல் பிற்காலத்தில் பலமாற்றங்களைப் பெற்றுள்ளது. மரபியலில் கூறப்பட்டுள்ள முப்பத்தியிரண்டு உத்திகளும் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்திலுள்ள முப்பத்தியிரண்டு உத்திகளுடன் ஒத்து காணப்படுகின்றன என்பர் மகாவித்வான் ரா. ராகவையங்கார். ராகவையங்கார்வர்கள் கூறியிருப்பது அத்துணைப் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. தொகையளவில் ஒத்து காணப்படுவதன்றி இலக்கண அமைப்பில் வேறுபட்டுள்ளன என்கிறார் பேராசிரியர் வெள்ளை வாரணனார். மேலும் அர்த்த சாத்திரம் இயற்றிய கௌடில்யர் தமிழ் நாட்டில் காஞ்சி நகரத்தில் வாழ்ந்தவர். அவர் தமக்கு முற்காலத்திலிருந்த தொல்காப்பியம் கற்றுத் தம் நூலை இயற்றினார் என்று ஆய்ந்து கூறுகிறார்.

தொல்காப்பியர் இலக்கணம், செய்யுள், இலக்கியம், பண்பாடு ஆகிய மொழியின் அனைத்து நிலைகளிலும் மரபு பின்பற்றப் படவும் பாதுகாக்கப் படவும் தமது மரபியலில் வலியுறுத்தியுள்ளார். மேலும் மரபியலுள் கூறப்பட்டுள்ள உயிர் வகைகளும், அவற்றின் புலனுணர்வுகள் பற்றிக் கூறியுள்ள செய்திகள் பண்டைத் தமிழரின் அறிவியல் அறிவுக்குச் சான்றாகும். கி.மு. 4 ஆம் நூற்றாண்டவரான தொல்காப்பியருக்குப் பின் சுமார் 15 நூற்றாண்டுகள் கடந்து வந்த உரையாசிரியர் முழுமையாக உரைவளம் காண இயலவில்லை. அவர்கள் காலத்தில் நிகழ்ந்த மாற்றங்களுக்கு ஏற்பவே உரையெழுதியுள்ளனர் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

தொல்காப்பியத்தில் இடைச் செருகல்

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியர் காலம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு என ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளனர். அவர் எழுதிய தொல்காப்பியம் சங்க காலத்துக்கு முற்பட்ட தமிழர்களின் வாழ்வியல் மற்றும் வரலாறு பற்றிய செய்திகளைக் கூறும் நூலாகும். தொல்காப்பியத்தைப் பிற்காலத்தவர் படித்துத் தெரிந்து கொள்ள உரையாசிரியர்களின் உரைகளே திறவு கோலாகும். பிற்கால உரையாசிரியர்களில் மூத்தவர் இளம்பூரணர். இளம்பூரணர் காலம் கி.பி. 12 அல்லது 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். இவருக்குப் பின் வந்த உரையாசிரியர்கள் சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் முதலானோர். தொல்காப்பியருக்குப் பின் 1500 ஆண்டுகள் கடந்தே இவர்கள் உரை செய்துள்ளனர். இடைப்பட்ட காலத்தில் அரசியல் சமூக மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதனால் வருணப் பாகுபாடு, மொழிக்கலப்பு, பக்தி இயக்கம் முதலியவை பற்றிய நூல்கள் தோன்றின. வடமொழிக் கலப்பு, ஆரியப்பண்பாடு ஆகியவை தமிழ் நூல்களில் திணிக்கப் பெற்றன. தமிழரின் அறிவியல் பார்வை தடைபட்டது. இதன் காரணமாகத் தொல்காப்பியத்தில் சாதிப்பாகுபாடு பற்றிய செய்திகள் நூற்பாக்கள் வடிவில் சேர்க்கப்பட்டுள்ளன. இதனைத் தொல்காப்பிய ஆய்வாளரும் உரையாசிரியருமான பேரசிரியர் வெள்ளை வாரணனார் தம் மரபியல் ஆய்வு நூலில் உறுதியாகக் கூறுகிறார்.

தொல்காப்பிய நூலுக்கு இளம்பூரணர் எழுதிய உரையினை ஒட்டியே பவணந்தியார் நன்னூலை எழுதினார். இவரது காலம் கி.பி.13-ஆம் நூற்றாண்டு இளம்பூரணர் இவருக்கு முற்பட்டவர். இளம்பூரணர்

காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு. சேனாவரையர் காலம் கி.பி.13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி இவர் சொல்லதிகாரத்துக்கு மட்டுமே உரை எழுதியுள்ளார். பேராசிரியர் காலம் 14-ஆம் நூற்றாண்டு முற்பகுதி. இவர் பொருளதிகாரத்தின் நான்கு இயல்களுக்கு மட்டுமே உரை செய்துள்ளார். நச்சினார்க்கினியர் காலம் கி.பி.15-ஆம் நூற்றாண்டு. இவர் மூன்று அதிகாரங்களுக்கும் உரை எழுதியுள்ளார். தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியருக்கும் பிற்பட்டவர். இவர் சொல்லதிகாரத்துக்கு மட்டும் உரை எழுதியுள்ளார். கல்லாடர் அனைவருக்கும் பிற்பட்டவர். இவர் சொல்லதிகாரத்துக்கு மட்டும் உரை எழுதியுள்ளார். கல்லாடர் என்ற பெயரில் மூவர் இருந்துள்ளனர். சங்க காலக் கல்லாடர், கல்லாட தேவநாயனார், உரையாசிரியர் கல்லாடர் இவர்கள் காலத்தால் பிற்பட்டவர்களாதலின் தொல்காப்பியத்துக்குத் தெளிவான உரை செய்ய இயலவில்லை.

தொல்காப்பியர் இளமை ஆண்மை பெண்மை முதலியன காரணமாகத் தம் காலத்தில் பயின்று வழங்கிய மரபும் பெயர்களைத் தொகுத்து உணர்த்தும் முறையிலேயே இம்மரபியலை அமைத்துள்ளார். 1 முதல் 70 வரையிலுள்ள நூற்பாக்களும் 86 முதல் 90 வரையுள்ள நூற்பாக்களும் இம்மரபினையே தொடர்ந்து விரித்துரைப்பனைவாக அமைந்துள்ளன. முறையான இத்தொடர்பு இடையில் தடைபட்டுச் சிதைந்து உயர்திணை நான்கு சாதிகளையும் பற்றி 71 முதல் 85 வரையிலான பதினைந்து நூற்பாக்களில் செய்திகளைக் கூறுகின்றன. இவை இதன் கண் புகுத்தப்பட்டுள்ளன என்னும் கருத்தைப் பேராசிரியர் வெள்ளை வாரணனார் தம் ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதியில் முதலில்,

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர் க் குரிய - நூ.71

என்று தொடங்குகிறது. அடுத்து அரசாக்கு உரியவை பற்றி

படையுங் குடியும் முரசும்
நடைநவில் புரவியும் களிரும் தேரும்
தாரும் முடியும் நோன வன பிறவும்
தொகுவுகொள் செங்கோல் அரசர் க்குரிய - நூ.72

அடுத்து, வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை என்றும்,

வேளாண் மாந்தர் க்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி

என்று வேளாண் தொழில் செய்வோர் பற்றியும், மேலும் அந்தணர்கள் அரசர்க்கு நிகராக அனைத்துச் சிறப்புக்களும் பெறுவர் என்றார். இதனை,

அந்தணாளர் க் கரசு வரை வின்றே - நூ.83

என்று கூறி சமூகத்தில் இழிந்தோராகக் கருதப்படுவோர்க்கு எந்த தகுதியும் வழங்கப்படவில்லை என்பதனை,

அன்னராயினும் இழிந்தோர் க்கில்லை - நூ.85

என்றவாறு வருணப் பாகுபாட்டையும் தகுதிகளையும் கூறுவதாக நூற்பாக்கள் அமைந்துள்ளன. மக்களை நில வகையால் பகுத்துரைப்பதன்றி நிறவகையாகிய வருணத்தால் பகுத்துரைக்கும் முறையினைத் தொல்காப்பியர் மக்களின் ஒழுகலாறுகளை விரித்துரைக்கும் முன்னைய இயல்களில் எங்கும் குறிப்பிடவேயில்லை. முன்னைய அகம், புறம் பற்றிய திணைகளில் அவர்கள் வாழும் நிலத்தாலும், செய்யும் தொழிலாளும் பகுத்துரைத்தன்றி வைசிய, வேளாள என்று வருணம் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. 71 முதல் 85 வரையிலான இச்சூத்திரங்கள் நால்வகை வருணப் பாகுபாடு தமிழ் நாடடில் வேரூன்றத் தொடங்கிய பிற்காலத்திலே இம்மரபியலில் இடைச் செருகலாக நுழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கருத வேண்டியுளது என்கிறார் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார். வருணப்பாகுபாடு தமிழகத்தில் வேரூன்றிய காலத்தில் வாழ்ந்தவர்கள் இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள்.

ஆதலால் மரபியலின் இடையிலும் கடையிலும் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட சூத்திரங்களையும் தொல்காப்பியர் வாய்மொழியாகவே எண்ணி உரையெழுதியுள்ளார்கள் எனக் கருத வேண்டியுள்ளது.

நூல் மரபு என்னும் பகுதியில் முதல் நூல் வழி நூல் பற்றிய செய்திகளில் சூத்திரம் காண்டிகைகளின் தன்மைகளைக் கூறுமிடத்தில், நூல் பத்து குற்றமுயின்றி, முப்பத்தியிரண்டு தந்திர உத்தியொடு பொருள் அமையும் என்கிறார். தொல்காப்பியர் செய்யுளியலில் 159 முதல் 165 வரையுள்ள சூத்திரங்களில் நூலின் இலக்கணங்களை விரித்துக் கூறியுள்ளார். அவ்விலக்கணத்தையே மரபியலிலும் கூறியுள்ளமை பொருந்துமா என்று ஆராய வேண்டும். இவை தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னர் இயற்றிச் சேர்க்கப் பெற்றவையாக இருத்தல் வேண்டும். ஏனெனில் கூறியது கூறல் என்ற குற்றத்தின்பாற்படும்.

தொல்காப்பியத்தின் இறுதிப் பகுதியாகிய மரபியல் பிற்காலத்தில் பல மாற்றங்களைப் பெற்றுள்ளது என்பதனை,

வடுவில் காப்பிய மதுரவாய்ப் பொருள் மரபு வீட்டியதால்
வழுதியாட்சியை வளவன் மாற்றிட மதுரை கூப்பிடுநாள்

எனவரும் ஒட்டகக்கூத்தர் பாடல் அடிகளால் உய்த்துணரப்படும். மரபியல் இன்றியமையாத பகுதியானதால் பல உரையாசிரியர்களின் உரையில் வேறுபாடும் பிற்சேர்க்கையும் காணப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக முன்னர்க்கண்ட உயிர் வகை நூற்பாக்களில் ஐயறிவுயிர், ஆறறி உயிர் பற்றிய கருத்துக்கள் யாவும் மரபியல் 32, 33 நூற்பாக்களில் நன்கு புலப்படுத்தப் பெற்றுள்ளன. இதன் மேலும் 34 ஆம் நூற்பா தொல்காப்பிய நூற்பா அல்ல என்றும் முன்னைய நூற்பாக்களை அடியொற்றிப் பிற்காலத்தில் இயற்றப் பெற்ற பழஞ் சூத்திரமாதல் கூடும். இளம்பூரணர் உரையில் மட்டும் 34வது நூற்பாவாக,

ஒருசா ' விலங்கும் உளவென மொழிப - நூ.34

என்று சேர்க்கப் பெற்றுள்ளது. முதற்சூத்திரத்திலேயே ஆசிரியர்,

மக்கள் தாமே ஆறறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே - நூ.33

என்று விளக்கியுள்ளார். மீண்டும் ஒரு நூற்பாவால் விளக்க வேண்டியதில்லை. இவ்வாறு தொல்காப்பிய மரபியலில் பல்வேறு இடங்களில் தொல்காப்பிருக்கும் பின்பு வந்தோரால் நூற்பாக்களாக்கிச் சேர்க்கப் பெற்றுள்ளன. சற்றேறக் குறைய பன்னீராண்டுகளுக்குப் பின்பே இளம்பூரணர் முதலிய உரையாசிரியர்கள் வந்தனர். இடைப்பட்ட காலத்தில் வந்த பல்வேறு இனம் மொழி சார்ந்தவர்கள் தத்தம் கருத்தை நூற்பாக்களாக்கிச் சேர்த்துள்ளனர். பின்னாளில் வந்த உரையாசிரியர்கள் அந்த நூற்பாக்களுக்கும் சேர்த்து உரை எழுதினர் என்பது அறியத்தக்கதாகும்.

தொல்காப்பியத்தின் இறுதி இயலாக இருந்தாலும் மரபியல் இன்றியமையாத இயலாக அமைந்துள்ளது. நன்னூலார் கூறியிருப்பது போன்று

எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயா ' ந்ததோ '
செப்பினா ' அப்படிச் செய்புதல் மரபே

என்றவாறு ஒரு மொழியின் பாதுகாப்புக்கும், கட்டமைப்புக்கும் தொன்றுதொட்டு வரும் மரபு பாதுகாக்கப் பட வேண்டியதாகும். பழந்தமிழர் பேச்சு வழக்கு செய்யுள் வழக்கு இரண்டிலும் மொழியின் மரபு காக்கப்படுதலை இவ்வியலில் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். இவ்வியலில் வரும் உயிர் வகைப் பகுதி பழந்தமிழரின் அறிவியலறிவுக்குச் சான்றாகும். தமிழ் மொழியின் தொன்மை இன்றளவும் பேசப்படுவதற்கும், வழக்கில் உள்ளதற்கும் மரபியல் மாண்புகளை தமிழ்ப் புலவர்கள் போற்றியமையே காரணம் எனலாம். தமிழின் இலக்கண மரபு செய்யுள் மரபு, இலக்கிய மரபு, பண்பாட்டு மரபு ஆகியவை இவ்வியலில் தொல்காப்பியரால் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மரபின் பாதுகாப்பை இவ்வியலில் மாற்றருஞ் சிறப்பின் மரபு என்றும் மரபு நிலை திரியா மாட்சி என்றும் போற்றியுள்ளார் தொல்காப்பியர்.

முடிவுரை

தமிழில் இதுவரை கிடைத்த நூல்களுக்கெல்லாம் மூத்ததும், மிகத் தொன்மை வாய்ந்ததும் தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியமாகும். தமிழகத்தில் தொன்று நிகழ்ந்த பல கடல்கோள்களில் எண்ணற்ற தமிழ் நூல்கள் அழிந்து பட்டன. அவற்றில் மிஞ்சி நமக்குக் கிடைத்த வரலாற்றுக் களஞ்சியம் தொல்காப்பியம். தொன்று தொட்டு வழங்கி வரும் தமிழர் வரலாறு மற்றும் வாழ்வியல் பற்றிய இலக்கண நூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது. மிக நீண்ட கால நாகரிக இலக்கிய வளமுள்ள ஒரு மொழியில் தான் இத்தகைய செப்ப மிகுந்து ஒரு நூல் தோன்ற முடியும். பழந்தமிழரின் மொழி இலக்கணம், செய்யுள், இலக்கியம், பண்பாடு ஆகிய அனைத்து செய்திகளையும் உள்ளடக்கிய திட்பமிகுந்த நூல் தொல்காப்பியம். தொல்காப்பிய நூலுக்குப் பின்னர் இதுபோன்ற ஒரு நூலும் தோன்றாதிருப்பது நாம் அறிய வேண்டிய முக்கியச் செய்தியாகும். தொல்காப்பிய இலக்கணம் ஒன்றையே பிற்காலத்தில் அதன் பல பகுதிகளைத் தனித்தனி இலக்கண நூலாகத் செய்துள்ளனர். பல இலக்கண நூல்கள் தோன்றுவதற்குக் காரணமான ஒப்பற்ற நூல் தொல்காப்பியம் ஒன்றே.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது இயல்கள் உள்ளன. தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் ஒன்பதாவது இறுதி இயல் மரபியல் ஆகும். தொல்காப்பியர் மரபைப் பின்பற்ற வேண்டும் என்பதில் கண்டிப்பானவர். எழுத்து, சொல், நூல், பொருள் ஆகிய அனைத்திலும் மரபு திரிதல் கூடாது என்கிறார். மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும் என்று மொழிச் சிதைவைக்காக்க மரபு இன்றியமையாதது என்கிறார். மொழியின் மாண்புக்கு மரபு பேணிக் காக்கப்படுதல் வேண்டும். இதனை மரபு நிலை திரியா என்ற நூற்பாவில் வலியுறுத்துகிறார். இந்த அடிப்படையிலேயே இதுகாரும், தொல்காப்பிய மரபியல் மாண்புகள் என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.

தொல்காப்பியர் மரபியலில் இளமை, ஆண்மை, பெண்மை இவற்றின் இருதிணை, ஐம்பால் மரபும் பெயர்களைத் தொகுத்துக் கூறுகிறார். தொடக்கத்திலேயே, மாற்றருச் சிறப்பின் மரபியல் பிளப்பின் என்று கூறுகிறார். ஊர்வன, பறவை, விலங்கு ஆகியவற்றின் மரபுப் பெயர்களை கூறி வந்தவர் ஓரறிவுயிராகிய புல் மரம் இவற்றின் மரபுப் பெயர்களைக் கூறவரும் பொழுது உயிர் வகை பற்றிக் கூற வேண்டிய தேவை காரணமாக ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் வரை வழங்கி வரும் மரபுப் பெயர்களைக் கூறியுள்ளார். புலன் கருவிகள் ஐந்து உள்ளவை மாக்கள் மட்டுமன்றி மக்களில் சிலரும் என்று கூறுகிறார். ஆறறிவுடையவர் ஐம்புலக் கருவிகளுடன் மனம் என்ற அகக் கருவி உடையவர்கள் என்று மக்கள் என்று பிரித்துக் காட்டுகிறார். இவ்வாறு முறையாகக் கூறி வந்த தொல்காப்பிய நூற்பாக்களில் 71 முதல் 85 வரையிலான 15 நூற்பாக்கள் இடையறவுப்பட்டு வருண மரபுப் பற்றிப் பேசுகிறது. இவற்றில் இடைச் செருகல் நூற்பாக்கள் காணப்படுகின்றன என்ற ஆய்வு செய்ய வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

தொல்காப்பியர் காலம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு அக்காலத்தில் அந்தணர், அரசர், வணிகர் வேளாளர் என்ற சாதிப் பாகுபாடு இல்லை. நிலத்தின் அடிப்படையில் அது சார்ந்த தொழில் காரணமாக மக்கள் வகைப்படுத்தப்பட்டனர். சாதி வேறுபாடு தொல்காப்பியர் காலத்துக்குப் பின்பு வந்த சங்க காலத்திலும் இல்லை. வடமொழியும், ஆரிய இனமும் இருந்தனர் என்பதைக் காண்கிறோம். ஆனால் வருண வேறுபாடு இல்லை. தொல்காப்பியருக்குப் பின் சுமார் 1500 ஆண்டுகள் பின்னரே உரையாசிரியர்கள் தொல்காப்பியத்துக்கு உரை செய்துள்ளனர். இடைப்பட்ட நீண்ட காலத்தில் மொழிக் கலப்பு, மனுதர்மக் கலப்பு, மதக்கலப்பு ஆகியவை வந்துள்ளன. அவர்கள் வருணம் சார்ந்த நூற்பாக்களைத் தொல்காப்பியத்துள் இணைத்துள்ளனர். பின்னால் வந்த உடையாசிரியர்கள் அவற்றிற்கும் சேர்த்து உரை வழங்கியுள்ளனர். ஆதலின் சாதி பற்றிய நூற்பாச் செய்திகள் மரபியலுள் சேர்க்கப்பட்ட இடைச் செருகல் என்பது ஆய்வறிநர் கருத்தாகவுள்ளது. குறிப்பாக பேராசிரியர் வெள்ளை வாரணனார் இதனைத் தெளிபட வரையறுத்துக் கூறுகிறார். மேலும் பொருளதிகார செய்யுளியலில் கூறப்பட்டுள்ள நூற்பாச் செய்திகள் மரபியலுள் நூல் மரபு

என்ற இறுதிப் பகுதியில் வருகின்றன. தொல்காப்பியர் முன்பு கூறியவற்றையே திரும்பவும் கூறியிடுக்க வாய்ப்பில்லை யாதலின் அவையும் இடைச் செருகலாக இருக்கலாம் ஆராய்க! என்று ஆய்வாளருக்கு விட்டுவிடுகிறார். இவ்வாறு செப்பமும் நுட்பமும் மிகுந்த தொல்காப்பிய நூற்பாக்களில் இறுதிப் பகுதியாகிய மரபியல் நூற்பாக்கள் சிறப்பு வாய்ந்தவைகளாகவுள்ளன. அதுவே தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டிய பல இடங்களை பின் வரும் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டுகின்றன.

தொல்காப்பியம் இன்றைய இலக்கிய உலகைவிட்டு விலகிச் செல்வது உணர முடிகிறது. தமிழ் அறிஞர்களே தொல்காப்பியத்தின் பக்கம் செல்வது இல்லை, பழந்தமிழரின் தமிழ் மொழிவரலாறாகவும், வாழ்வியல் வரலாறாகவும் நமக்கு வழிகாட்டுவது தொல்காப்பியம் ஒன்றே. தொல்காப்பியத்தை முதலில் தமிழறிஞர்களிடம் கொண்டு சென்று படிக்கத் தூண்டுவதற்கும், மக்களிடம் கொண்டு சென்று பழந்தமிழர் வாழ்வியலை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் தொல்காப்பியக் கருத்தரங்குகளும், ஆய்வு மாநாடுகளும் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். விலகி நின்று பார்க்கும் பொழுது தொல்காப்பியம் கடினமாகத் தோன்றலாம். ஊன்றி கற்கக் கற்க அது எளிமையும், வளமையும் மிக்க வாழ்வியல் நூல் என்பதை அறியலாம்.

துணைநூற் பட்டியல்

1.	குறுந்தொகை	டாக்டர் உ.வே. சாமிநாதையர்	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்	1983
2.	சிலப்பதிகார மூலம் உரை	ந.மு. வேங்கடசாமி நாட்டார்	சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்	3ஆம் பதிப்பு 1950
3.	தமிழ் இலக்கிய வரலாறு	ச.வெ. சுப்பிரமணியன்	மணிவாசகர் பதிப்பகம்	1999
4.	தமிழ் மொழி இலக்கிய வரலாறு	டாக்டர் மா. இராசமாணிக்கனார்	பூங்கொடி பதிப்பகம்	1963
5.	தமிழ் மொழி வரலாறு	டாக்டர் சு. சக்திவேல்	மணிவாசகர் பதிப்பகம்	2ஆம் 1991
6.	திருக்குறள் நுண்பொருளுரை	தமிழண்ணல்	மீனாட்சி புத்தக நிலையம் மதுரை	1999
7.	தொல்காப்பியம் உரை	புலியூர்கேசிகன்	பாரி நிலையம் பிராட்வே, சென்னை	7ஆம் 1986
8.	தொல்காப்பியம்-நன்னூல் சொல்லதிகாரம்	க. வெள்ளை வாரணன்	தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்	2015
9.	தொல்காப்பியக் கவிதை இயலும் தமிழ் இலக்கியமும்	இரா. சம்பத்	முரண்களரி படைப்பகம் சென்னை	2012
10.	தொல்காப்பியம் மரபியல்	க. வெள்ளை வாரணன்	மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	பதிப்பு எண் 122
11.	பண்டைத் தமிழர் பண்பாடு ஒரு புதிய நோக்கு	பேரா. பாலசுந்தரம் இளையநம்பி	சுவாமி விபுலானந்தர் தமிழியல் ஆய்வுமையம் ரொறன்ரோ	2017
12.	புறநானூறு மூலமும் உரையும்	ஔவை துரைசாமிப் பிள்ளை	சாரதா பதிப்பம் சென்னை	2ஆம் பதிப்பு 2017
13.	வடமொழி வரலாறு	ஞா. தேவநேயன்	நேசமணி பதிப்பகம் காட்பாடி, வ.ஆ	1967

தொ.மா.க. 210

தொல்காப்பியமும் தமிழ்மொழியின் செம்மொழித் தகைமையும்

இராச்குமார் குணரட்ணம்
ஆசிரியர், கனடாத் தமிழ்க் கல்லூரி
rajgumar@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

உலகில் செம்மொழி என்று போற்றப்படுகின்ற மொழிகளில் முதன்மையான மொழியாக தமிழ்மொழி இருக்கின்றது. தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற நூல்களுல் காலத்தால் முந்தியது தொல்காப்பியம். இந்திய நடுவண் அரசால் தமிழ்மொழியே முதன்முதலாகச் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. இந்திய நடுவண் அரசானது செம்மொழிக்கான மூன்று தகைமைகளை முன்வைத்து தமிழ், சமற்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மற்றும் ஒடியா என்பவற்றைச் செம்மொழிகளாக அறிவித்துள்ளது. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் செம்மொழிக்கான பதினாறு தகைமைகளைக் குறிப்பிட்டு, தமிழே உயர்தனிச்செம்மொழி என்று சிறப்பித்துக் குறிப்பிடுகின்றார். தமிழ் அறிஞர் மணவை முஸ்தபா, செம்மொழி உள்ளும் புறமும் என்ற நூலில் மொழியியலாளர் செம்மொழித் தகுதிக்கு பதினொரு தகுதிப்பாடுகளை வகுத்துள்ளதாக கூறியுள்ளார். இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் தமிழ் மொழியின் செம்மொழித் தகைமைக்கு தொல்காப்பியத்தின் பங்களிப்பை ஆராய்வது ஆகும்.

தொன்மை வாய்ந்த நூல்களோ/பதியப்பட்ட வரலாற்றையோ 1500-2000 ஆண்டுகளுக்கிடையில் கொண்டிருக்க வேண்டும். பல்வேறு அறிஞர்கள் தொல்காப்பியத்தின் காலம் பற்றிக் கூறுகின்ற கருத்துகளையும், தொல்காப்பியத்தின் மொழிவடிவத்தையும், உட்பொருளையும் கொண்டு கணிக்கக்கூடிய காலத்தையும் கருத்தில் கொண்டு தொல்காப்பியத்தின் தொன்மையை நிறுவுவது. மரபு விழுமியங்களைக் கொண்ட வழிவழியாகப் போற்றப்படும் இலக்கியத்தை/நூலைக் கொண்டதாக இருக்க வேண்டும். தொல்காப்பியத்தில் தமிழரின் மரபியல் கூறுகள் எவ்வாறு பேணப்படுவதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. தொல்காப்பியமானது எவ்வாறு வழிமுறையாக போற்றப்படுகின்ற உயரிய நூலாக திகழ்கின்றது என்பதைச் சான்று காட்டி விளக்குவது.

வேறெந்த இனக்குழுமத்திடமிருந்தும் கடன்பெறாத தனித்தன்மையுடைய நூல் மரபைக் கொண்டிருக்க வேண்டும் தமிழ்மொழிய் வேறெந்த இனக்குழுமத்திடமிருந்தும் கடன்பெறாது தனித்தன்மையுடன் இயங்குவதற்கு தொல்காப்பியத்தின் பங்கு பற்றி ஆராயப்படுகின்றது. அத்தோடு, இன்றைய இலக்கியங்களுக்கும், உரையாசியர்களுக்கும், அகரமுதலி போன்றன ஆக்குவோருக்கும் எவ்வாறு வழிகாட்டியாக விளங்குவதை ஆராய்வது. தமிழ்மொழியில் பல்வேறு துறை சார்ந்த சொற்களுக்கான கலைச்சொல்லாக்கதில் தொல்காப்பியத்தின் பங்கை நோக்குவது. தமிழ்மொழிக்கான செம்மொழித் தகைமைக்கு பல நூல்கள் சான்றாக இருக்கின்றன. அவற்றுள் தொல்காப்பியம் முதன்மையான நூலாகத் திகழ்கின்றது என்ற முடிவுக்கே இவ்வாய்வு இடந்தந்துள்ளது.

முன்னுரை

தமிழ் மொழி உலகின் செம்மொழிகளின் ஒன்றாக ஏற்கப்பட்டுள்ளது. உலகமொழிகளில் மூத்தமொழியே தமிழ் என்பதைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழ்மொழியில் எண்ணற்ற இலக்கிய, இலக்கண நூல்கள் படைக்கப்பட்டுள்ளன. அத்தகைய எண்ணற்ற நூல்களுள் எமக்குக் கிடைக்கப்பெற்ற மிகப்பழைமையான நூல் தொல்காப்பியம் ஆகும். அத்தகைய தொல்காப்பியத்தில் தமிழ்மொழிக்கான செம்மொழித் தகைமையை பெற்றுக்கொடுக்கக் கூடிய அனைத்துக் கூறுகளும் உள்ளனவா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.

தொல்காப்பியம் ஒரு இலக்கண நூலாக இருந்தாலும், அதில் இலக்கியத்திற்குரிய கூறுகள் நிறைந்திருக்கிறது. தொல்காப்பியம் தொன்மையான நூலாக இருந்தபொழுதும், அதிலே தொடர்ச்சிக்கான வழிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ் மொழியின் செம்மொழித் தகைமைக்கு, தொன்மை, போற்றத் தகுந்த மரபுவழியான இலக்கிய மரபு, வேறெந்த மொழிகளிலில் இருந்தும் கடன்பெறாது தனித்தியங்குகின்ற திறன், நவீன இலக்கியத்திலிருந்து வேறுபட்ட இலக்கிய மரபைக் கொண்டிருக்கின்ற பண்பு ஆகியவற்றுக்கு தொல்காப்பியத்தைச் சான்றாக காட்டமுடியும் என்ற முடிவுக்கே இந்த ஆய்வு இடந்தந்துள்ளது.

1. முகவுரை

தொல்காப்பியம் என்பது தமிழில் எமக்குக் கிடைக்கப்பெற்ற தொன்மையான அரிய இலக்கண நூல். அதிலே எழுத்து, சொல் என்ற மொழிக் கூறுகளுக்கு மட்டுமல்லாது பொருள் என்று மாந்தனின் வாழ்வியல் கூறுக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இதனை வேறெந்த மொழியிலும் இல்லாத தனிச்சிறப்பென்று கூறப்படுகின்றது.

நோக்கம்: தமிழ் மொழிக்கான செம்மொழித் தகைமைக்கு தமிழ் மொழியில் எழுதப்பட்ட எண்ணற்ற இலக்கியங்களைச் சான்றாகக் காட்டலாம். அவ்வாறு தமிழ்மொழியின் பல்வேறு நூல்களைச் சான்றாக கொள்ளாது, தமிழ் மொழியைச் செம்மொழியாகக் கொள்வதற்கு தொல்காப்பியம் என்ற ஒரே நூலில் உள்ள தகைமைகளே போதுமானவை என்று நிறுவுவதே இந்த ஆய்வின் நோக்காகும்.

1.1 **செம்மொழி விளக்கம்**

செம்மொழி என்பது செம்மை மற்றும் மொழி என்ற இரண்டு சொற்களின் கூட்டாகும் (செம்மை + மொழி = செம்மொழி). செம்மொழி என்ற சொல்லுக்குரிய, செம்மை என்பதற்கு க்ரியாவின் தற்கால அகராதி கூறுகின்ற பண்பட்ட நிலை, சிறப்பு, உயர்வு என்ற பொருள்களை எடுத்துக்கொள்ளலாம். தமிழ்மொழியின் செம்மொழித் தகைமையை நிலைநாட்டுகின்ற பணியில் கால்டுவெல் பாதிரியார், பரிதிமாற் கலைஞர், தேவநேயப்பாவாணர், முனைவர் ச. அகத்தியலிங்கம், வா.செ. குழந்தைசாமி, மணவை முஸ்தபா, பேராசிரியர் கா. சிவத்தம்பி, அவ்வை நடராஜன், பொற்கோ, பேராசிரியர் ஜார்ச் ஹார்ட் முதலான பல அறிஞர்கள் ஈடுபட்டனர்.

தேவநேயப்பாவாணர் தமிழ் மொழியை உயர்தனிச்செம்மொழி என்று கூறி, தமிழ்மொழியானது தொன்மை, முதன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை ஆகிய தகைமைகளைக் கொண்டுள்ளது என்று விளக்கியுள்ளார்.

மணவை முஸ்தபா அவர்கள் 'செம்மொழி உள்ளும் புறமும்' என்ற நூலிலே பின்வரும் பன்னிரு தகுதிப்பாடுகளைக் குறிப்பிடுகின்றார்:

I. தொன்மை
II. தனித்தன்மை

III. பொதுமைப்பண்பு
IV. நடுவு நிலைமை
V. தாய்மைத் தன்மை
VI. பண்பாடு, கலை, பட்டறிவு வெளிப்பாடு
VII. பிறமொழித் தாக்கமிலாத் தனித்தன்மை
VIII. இலக்கிய வளம்
IX. உயர் சிந்தனை
X. கலை, இலக்கியத் தனித்தன்மை, வெளிப்பாடு - பங்களிப்பு
XI. மொழிக்கோட்பாடு

இந்திய நடுவண் அரசின் உள்நாட்டு அமைச்சு பின்வருவனவற்றைச் செம்மொழிக்கான தகைமைகளாகப் பட்டியலிட்டுள்ளது:

I. தொன்மை வாய்ந்த நூல்களோ/பதியப்பட்ட வரலாற்றையோ 1500-2000 ஆண்டுகளுக்கிடையில் கொண்டிருக்க வேண்டும்.

II. மரபு விழுமியங்களைக் கொண்ட வழிவழியாகப் போற்றப்படும் இலக்கியத்தை/நூலைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

III. வேறெந்த இனக்குழுமத்திடமிருந்தும் கடன்பெறாத் தனித்தன்மையுடைய நூல் மரபைக் கொண்டிருக்க வேண்டும்

IV. தற்கால இலக்கிய மரபினின்றும் வேறுபட்ட இலக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும். பழைமையான இலக்கியங்களுக்கும் தற்போதைய இலக்கியங்களுக்குமிடையே தொடர்ச்சி இருக்கவேண்டும் என்ற கடப்பாடு இல்லை.

தேவநேயப்பாவாணர் மற்றும் மணவை முஸ்தாபா கூறிய தகைமைகள் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு விழுமியங்களை உள்வாங்கிக் கொள்ளப்பட்ட தகைமைகள். உலக அளவில் செம்மொழி என்பதற்கான வரைமுறையோ, எவை செம்மொழிகள் என்ற பட்டியலோ இல்லை. “செவ்வியல் இலக்கியங்களைக் கொண்டிருக்கின்ற மொழிகளே செம்மொழிகளாக அடையாளம் காணப்படுகின்றன” என்பது வா.செ.குழந்தைசாமி அவர்களின் கருத்தாகும். அந்தவகையில், இந்திய நடுவண் அரசின் உள்நாட்டு அமைச்சினால் கூறப்பட்ட செம்மொழிக்கான தகைமைகளை இக்கட்டுரையின் ஆய்வுக்காக எடுத்துக்கொள்வதே ஏற்புடையதாகும்.

2. தமிழ்மொழியின் செம்மொழித் தகைமைக்கு தொல்காப்பியத்தின் பங்கு

2.0.1 தொல்காப்பியம் தமிழர் வாழ்வியல் கருவூலம்

தொல்காப்பியம் தமிழ்மொழியின் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் கூறுகின்ற நூல் அல்ல. தமிழ்மொழியின் பெருமையையும், தமிழரின் அறிவு மேம்பாட்டையும், தமிழரின் வாழ்வியல் கூறுகளையும் இயம்புகின்ற நூல். தமிழர் காதலுக்கும் வீரத்திற்கும் கொடுத்திருந்த சிறப்பிடத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

தலைவன் தலைவியிடத்தே தோன்றிய களவு நெறியே (காதல்) கற்பு நெறியாக (திருமண வாழ்க்கையாக) மாறுவதையே சிறப்பாக கூறுகின்றது. ஒவ்வொரு நிலத்திலும் நிகழ்ந்த வேறுபட்ட போர்முறைகளைக் கூறுகின்றது. அவை சமகாலத்திலேயே வெவ்வேறு நிலைகளில் வாழ்ந்த சமுதாயங்களைக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக, பெரிதும் வளர்ச்சியடையாத போர்முறையை வெட்சிப்போரிலும், சற்றே வளர்ச்சியடைந்த போர்முறையை வஞ்சிப்போரிலும் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு தொல்காப்பியம் பண்டைத் தமிழரின் வாழ்க்கையைப் பண்டைத் தமிழரின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

2.1 தொல்காப்பியத்தின் தொன்மை

தொல்காப்பியம் மிகவும் தொன்மை வாய்ந்தது. தமிழ்மொழிக்கான இலக்கண நூலாக மட்டுமன்றி, தமிழரின் வாழ்வியலுக்கான இலக்கண நூலாகவும் இருக்கின்றது. தொல்காப்பியத்தின் காலம் பற்றி திட்டவட்டமாகத் தெரியவில்லை. இதுபற்றி அறிஞரிடையே பல்வேறுபட்ட கருத்து நிலவுகின்றது.

வெள்ளைவாரணனார் கி.மு 5320க்கு முற்பட்டது என்கிறார். தவத்திரு மறைமலை அடிகளார் கி.மு 3500க்கு முற்பட்டது என்கிறார். சோமசுந்தரப் பாரதியார் கி.மு 1000க்கு முற்பட்டது என்கிறார். பேராசிரியர் ஆறு அழகப்பன் கி.மு 5ஆம் நூற்றாண்டு என்று கணித்துள்ளார். சீனிவாச ஐயங்கார் கி.மு. முதல் இரண்டு நூற்றாண்டுக்குள் அடக்குகிறார். வரதராசனார் கி.மு நூற்றாண்டு என்கிறார். பேராசிரியர் எஸ் வையாபுரிப்பிள்ளை கே. ஏ. நீலகண்ட சாத்திரியாரும் கி.பி 4-5ஆம் நூற்றாண்டுக்குள் அடக்குகின்றனர்.

தொல்காப்பியத்தில் காணப்படும் மொழிநடை, சொல் அமைப்பு, அது பேசுகின்ற பொருள் பற்றிய செய்திகளை ஆராய்ந்து தொல்காப்பியர் காலத்தை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்கவேண்டும் என்று துணிகின்றார்கள். சிவகங்கை மாவட்டம் கோவிலூர் திருமடத்தில் நடந்த கூட்டத்தில் தொல்காப்பியர் காலம் கி.மு. 711ஆம் ஆண்டு என்று

ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இன்னொரு வகையில் நோக்கினால், தொல்காப்பியமானது பெருங்கற்படைச் சின்னங்கள் நடுகற்களாக மாறிய நிலையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். இறந்தவர்களின் நினைவாக அவர்களைப் புதைத்த இடங்களில் பெருங்கற்களை நாட்டியதாலேயே இக்காலம் பெருங்கற்படைக் காலம் என்று அறியப்படுகின்றது. இக்காலம் கி.மு. 1000 முதல் கி.மு. முதலாம் நூற்றாண்டு வரை நிலவியிருக்கின்றது. முனைவர் ராஜன் பெருங்கற்படைச் சின்னங்கள் நடுகற்களாக மாறியதை நான்கு வளர்ச்சி நிலைகளாக காட்டுகிறார்:

1. இறந்த வீரர்கள் பதுக்கை எனப்படும் கற்குவியல்களால் மூடப்படுகின்ற நிலை.
2. கற்பதுக்கைகளைச் சுற்றி நெடுங்கற்கள் நடப்பட்ட நிலை
3. நெடுங்கற்கள் மட்டுமே எழுப்பப்பட்ட நிலை
4. நெடுங்கற்கள் நடுகற்களாக மாறிய நிலை

தொல்காப்பியத்தில் வெட்சித்திணைக்குரிய ஒரு துறையாக நடுகல் அமைத்து வழிபடும் முறை கூறப்படுகின்றது.

காட்சி கால்கோள் நீர்படை நடுகல்
சீர்த்தகு மரபில் கல்லொடு புணர (தொல்காப்பியம் புறத்திணை நூற்பா 5)

என்ற புறத்திணை இயல் நூற்பா நடுகல்லைத் தேர்ந்தெடுப்பது, அதனை நீர்நிலையில் படுத்தி குளிர்வித்து இறந்தவர் தொடர்பான விவரங்களை எழுத்தாக வெட்டுதல், நடுதல், கூரை அமைத்தல், வழிபடுதல் என்ற ஆறுநிலைகளைக் காட்டுகின்றது. இது நடுகல் வழிபாட்டின் வளர்ச்சி பெற்ற நிலையைக் காட்டுகின்றது.

தொல்காப்பியத்தின் காலத்தை அகச்சான்றுகளின் வழி அணுகுப்பொழுது, தமிழர் சமூகம் திணைநிலைச் சமூகமாக இருந்து, அரச உருவாக்கம் பெற்று, அரச விரிவாக்கத்தின் தொடக்கநிலையில் எழுதப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது புலனாகும்.

ஏனெனில், அரசர் கடமையைக் கூறுகின்ற இடத்தில்

படையும் கொடியும் குடையும் முரசும்
நடை நவில் புரவியும் களிரும் தேரும்
தாரும் முடியும் நேர்வன் பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய (தொல்காப்பியம் – நூற்பா 1571 (மரபியல்))

என்கிறார்.

அதாவது அரசனானவன், நால்வகைப்படையும், தனக்கென ஒரு கொடியும், வெண் கொற்றக் குடையும், முரசமும், குதிரைப் படையும், யானைப்படையும், தேரும், தோளிலே அணிகின்ற மாலையும், தலையிலே கவிக்கின்ற முடியும், அரியணை, அரண் போன்ற பிறவும் உடையவனாக இருக்க வேண்டும் என்பதை வரையறுக்கின்றது என்பது நோக்குதற்கு உரியது.

தொல்காப்பியரின் ஒருசாலை மாணாக்கராக அறியப்படும் பனம்பாரனார் எழுதிய தொல்காப்பியப் பாயிரத்தில், தொல்காப்பியமானது "நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து" அரங்கேற்றப்பட்டதாக குறிப்பிடுகின்றது. நிலத்தரு திருவிற் பாண்டியன் முற்காலப் பாண்டியரில் ஒருவராக அடையாளம் காணப்படுகின்றான். இதுவும் தொல்காப்பியர் காலத்தில் அரசாட்சி முறை நிலைபெற்றுவிட்டதனை உறுதிப்படுத்துகின்றது.

அவ்வேளையில், தொல்காப்பியம் பெரும்பாலான சங்க இலக்கிய நூல்களுக்கு பல நூற்றாண்டுகள் முற்பட்டது என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகவும் இருக்கிறது. இறையனார் களவியலில் தொல்காப்பியம் இடைச்சங்கத்தாருக்கும் கடைச்சங்கத்தாருக்கும் இலக்கண நூலாக இருந்தாகக் கூறுகின்ற செய்தியும் நோக்கத்தக்கது.

தொல்காப்பியர் ஏறத்தாழ 260 இடங்களில் தமக்கு முன்பிருந்த அல்லது அவரது காலத்தவரான பல இலக்கண ஆசிரியர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர்களை மொழிப, என்ப, என்மனார் புலவர், வரையார் முதலாக பல்வேறு வகைகளில் கூறியுள்ளார். அத்தோடு, தொல்காப்பியர் தனக்கு முன்னிருந்த புலவர்களை அறிவிற் சிறந்தவர்களாக, உயர்மொழிப் புலவர், யாப்பறி புலவர், நூனவில் புலவர், சொல்லியற் புலவர், தொன்னெறிப் புலவர் என போற்றிக் கூறுகின்றார். இது தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழில் செறிவான இலக்கண மரபு இருந்திருப்பதை ஐயத்திற்கு இடமின்றிக் காட்டுகின்றது. அதுமட்டுமல்ல, நன்னூலார் "**இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்**" என்று கூறுவது போல, இலக்கணத்தைக் கூறுவதற்கு முன்பே செறிவான இலக்கியம் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. அவ்வகையில் தொல்காப்பியத்திற்கு முன்பே செறிவான இலக்கியங்கள் தமிழ் மொழியில் இருந்திருக்கின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையாகின்றது.

அத்தோடு, தொல்காப்பியத்தில் காணப்படும் ஆழம், உயரிய பண்பாடு எல்லாம், **தொல்காப்பியம் தமிழரின் பண்பாட்டு வளர்ச்சி பெற்ற நிலையிலேயே உருவாக்கம் பெற்றிருக்கின்றது**. அவ்வகையில் தொல்காப்பியம் தொன்மையான இலக்கணநூலாக இருப்பதோடு, அதற்குப் பன்னெடுங்காலம் முன்பே தமிழ்மொழி சிறந்த இலக்கிய, இலக்கண மரபைக் கொண்டிருந்தது என்பதற்கும் சான்றாகின்றது.

2.2 **தொல்காப்பியம் - மரபு விழுமியங்களைக் கொண்டு போற்றப்படுவது**

தொல்காப்பியத்திலே தமிழரின் மொழிமரபு, அகப்புற வாழ்வியல் மரபு என்பன நிரம்பப்பெற்றுள்ளது. தமிழ்மொழியின் வளர்ச்சியில் பாரிய பங்களிப்பை ஏற்படுத்தி வருகின்றது. தொல்காப்பியம் கூறும் பொருள் இலக்கணம் தமிழ் மொழிக்கே சிறப்பாக அமைந்தது. தொல்காப்பியத்தை இலக்கண நூலாக கற்பிப்பதைத் தாண்டி ஓர் அறிவுத் தோற்றவியல் நூலாக கற்பிக்க வேண்டும் என்பது பேராசிரியர் அ. ராமசாமியின் கருத்தாகும். மேலும் தொல்காப்பியத்துள் "மனித அறிவுருவாக்கம் குறித்த விளக்கங்கள், சமூகவியல் அறிவு,

உடலைப் பயன்படுத்தி உணர்வுகளைக் காட்டும் நடிப்புக் கோட்பாடு, நூலறிவியல் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன" என்றும் கூறியுள்ளார்.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பேராசிரியர் முதலிய பழைய உரையாசிரியர்களும். சிவஞான முனிவர், சோழவந்தான் அரசன் சண்முகனார் முதலிய 17ஆம் நூற்றாண்டு உரையாசிரியர்களும், ச. அகத்தியலிங்கம், சி.என். அண்ணாதுரை, இரா. இராகவையங்கார், இரா. இளங்குமரனார், சி. கணேசையர், புலவர் வெற்றியழகன் என எண்ணற்றோர் அண்மைக்காலத்திலும் உரை எழுதியிருகின்றனர். இத்தனை உரையாசிரியர்களைக் கொண்டிருப்பதே தொல்காப்பியம் தமிழரிடத்து மரபுவழியாகப் போற்றப்பட்டு வருவதற்குரிய பெருஞ்சான்றாகும்.

புலவர் வெற்றியழகன் தொல்காப்பியத்தை, "தொன்னூல்; நம் வாழ்வுக்கு நன்னூல், போற்றுதலுக்குரிய பொன்னூல், அன்று தொடங்கி இன்றுவரை - நிலைபெற்றுள்ள மன்னூல், நம் தமிழ் நூல்களுக்கெல்லாம் முன்னூல்; இதற்கு ஈடிணை எந்நூல்" என்று பாராட்டியிருப்பது சாலப்பொருத்தமாக உள்ளது.

2.3 **வேறெந்த மொழியிலிருந்தும் கடன்பெறாது தனித்தியங்கும் தன்மை**

ஒருமொழியில் பிறமொழியில் பல்வேறு காரணங்களால் பிறமொழிச் சொற்கள் கலக்கின்றன. அவ்வாறு கலக்கின்ற சொற்களை நீக்கினாலும், அதனுள் உள்ள சொற்களைக் கொண்டே இயங்கும் தன்மையையே தனித்தியங்கும் தன்மை என்கின்றோம். தமிழ்மொழியின் தனித்தியங்கும் தன்மைக்கு தொல்காப்பியத்தின் பங்கு அளப்பரியது.

தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில்

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முத்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலம் தொகுத்தோனே (தொல்காப்பியப் பாயிரம்)

என்று கூறப்பட்டுள்ளது. அவ்வகையில், தொல்காப்பியமானது செந்தமிழர் நிலத்திலே விளைந்த இலக்கண நூல். அதுவும், அதற்கு முன்பே புழக்கத்திலிருந்த இலக்கண இலக்கியங்களை முறைப்பட ஆய்ந்தறிந்த பின்பு தொகுக்கப்பட்ட நூல்.

சில அறிஞர்கள் பாயிரத்தில் காணப்படும் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் எனத் தன்பெயர் போற்றி" என்ற அடிகளைக் காட்டி தொல்காப்பியர் வடமொழி இலக்கண நூலைப் பின்பற்றியே இலக்கணம் கூறியிருப்பதாக கொள்கிறார்கள். ஐந்திரம் என்பது இந்திரனால் எழுதப்பட்ட வடமொழிக்கான இலக்கண நூல் என்று கொள்ளப்பட்டதே அதற்குக் காரணம். ஐந்திரம் என்பது தொல்காப்பியத்துக்கு முந்திய நூல் என்று கொண்டால், ஏற்கனவே "**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி**" என்று கூறிய பனம்பாரனார் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்" என்று மீண்டும் கூறியிருக்க வேண்டிய தேவை இல்லை. அப்படியே ஐந்திரம் என்பது வடமொழி நூல் என்று கொண்டாலும், தமிழ்மொழி இலக்கணம் வடமொழியைத் தழுவியது அல்ல என்பதை இன்றைய மொழி ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அந்த வகையில்,

பனம்பாரனார் கூறியது போன்று தொல்காப்பியமானது "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து" வாழ்கின்ற மக்களுக்காக அவர்களது மொழி, பண்பாடு, வாழ்க்கைமுறை என்பவற்றை முறைப்பட அறிந்தே தொகுக்கப்பட்டுள்ள நூல் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

மேலும், செய்யுட் சொற்களை நான்காக வகுத்து அவற்றுள் செந்தமிழ் சிவணிய நிலத்துச் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல் எனவும், வடமொழியின்று பயின்று வரும் சொற்களை வடசொல் என்றும் வைத்திருப்பதாலும், தமிழ்மொழி வடமொழியினின்றும் முற்றிலும் வேறுபட்டது என்று துணியலாம்.

"வடசொல் கிளவி வடிவுமுத்து

ஒரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்" (தொல்காப்பியம் 884)

என்ற நூற்பா வடமொழிச் சொற்களை தமிழ் எழுத்துக்குரிய ஒலிகளாக மாற்றிச் சொல்லாக்கும் முறையைக் குறிப்பிட்டுள்ளார். இந்த வகையில், வேறுமொழிச் சொற்களைக் கடன்பெறுவதாக இருந்தாலும் அவற்றைத் தமிழ்ப்படுத்தியே பயன்படுத்தவேண்டும் என்ற முறைமையைக் கூறியுள்ளார். இத்தகைய முறைமையே, திராவிட மொழிக் குடும்ப மொழிகளில் பிறமொழிகள், தமிழ் மொழியிலிருந்தும் பெரிதும் வேறுபட்டுவிட்ட நிலையில், தமிழ்மொழி தனது தனித்தியங்கும் தன்மையிலிருந்து வழுவாது நிற்பதற்கு ஏதுவக்கியது.

தமிழ்மொழியில் தனித்தியங்குவதற்கு அதனுள் உள்ள வேர்ச்சொல்லின் பங்கு அளப்பரியது. உலக மாற்றத்தில் எத்தனை துறைகள் உருவாக்கம் பெற்றாலும், அவற்றை தனக்குள் இணைத்துக்கொண்டு தேவையான கலைச்சொற்களை ஆக்குவதற்கு தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின் துணையுடன் உருவாக்கக் கூடிய நிலை இருகின்றது. எடுத்துக்காட்டாக 'தொல்' என்ற வேர்ச்சொல்லே தொலைபேசி, தொலைக்காட்சி என்ற கலைச்சொல்லாக்குவதற்கு ஏதுவாகின.

இன்றைய தமிழ் அகராதிகளுக்கும் தொடக்கப்புள்ளியாக இருப்பது தொல்காப்பிய உரியியல்.[1] உரியியலில் தொன்னூறு நூற்பாக்களில் தொல்காப்பியர் தேர்ந்தெடுத்த சொற்கள் எந்தப் பொருளில் வருவன என்பதை விளக்குகின்றார். அத்தோடு, பொருள் விளக்கம் வேண்டிய சொற்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது என்பதை பின்வரும் நூற்பா உணர்த்தும்.

"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா வுரிச்சொல் மேன" (தொல்காப்பியம் 783)

அத்தோடு, பொருள் விளக்கும் முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

1. "பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி" (தொல்காப்பியம் 782) - வழக்கில் இல்லாத சொற்களுக்கு வழக்கில் உள்ள சொற்களைக் கொண்டு விளக்குதல்.

2. "முன்னும் பின்னும் வருபவை நாடி" (தொல்காப்பியம் 872) - பொருள் விளக்கம் வேண்டிய சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ள சொற்களை ஆராய்ந்து விளக்குதல்

3. "ஒத்தமொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்" (தொல்காப்பியம் 872) - சொல்லுக்கு ஒத்தசொல்லாக இருக்கும் சொல்லால் விளங்க வைத்தல்

இவ்வாறு, தொல்காப்பியர் காட்டுகின்ற பொருள் விளக்கம் கூறும் முறைமை எண்ணற்ற உரையாசிரியர்களுக்கும், அகரமுதலி போன்றவற்றை ஆக்குவோருக்கும் சிறந்த வழிகாட்டியாக திகழ்கின்றது.

2.4 தற்காலத்தினின்றும் மாறுபட்ட தனித்துவமான இலக்கிய மரபு

தொல்காப்பியர் வாழ்வியலை அகத்திணை, புறத்திணை என்று இரண்டாக வகுத்துள்ளது வேறெந்த உலகமொழிகளிலும் இல்லாத் தனித்துவமானது. அகத்திணை மரபுக்குள் உட்பட்டு காதலைப் பாடுகின்ற மரபை அகத்திணை என்றும். அகத்திணை மரபுக்குள் உட்படாது காதலைப் பாடுவதும், பிறபொருளைப் பாடுகின்ற மரபை புறத்திணை என்றும் தொல்காப்பியர் வகுத்துள்ளது.

தொல்காப்பியத்தின் பாடுபொருள், கதை மாந்தர், இலக்கிய வடிவம் முதலியன தற்கால இலக்கியத்தினின்றும் முற்றிலும் மாறுபட்ட இலக்கிய மரபைக் காட்டுகின்றது. தொல்காப்பியர் காலத்தில் காதலும் வீரமுமே முதன்மையான பாடுபொருளாக இருந்தன. இக்கால இலக்கியத்தில் மக்களின் வாழ்வியலின் பல்வேறு பகுதிகளும் பாடுபொருளாக இருக்கின்றன. தொல்காப்பியர் காலத்தில் தலைவன், தலைவி தோழி, செவிலித்தாய், நற்றாய் முதலானோர் கதைமாந்தராக கூறப்பட்டனர். இன்றைய இலக்கியங்களில் பொதுமக்களே பெரும்பாலும் கதைமாந்தராக இருக்கின்றனர். தொல்காப்பியர் காலத்தில்

சொற்சுருக்கமும் பொருட்செறிவும் உள்ளதான செய்யுள் வடிவமே பயன்பாட்டில் இருந்தது. தற்காலத்தில் தாளில் எழுதும் முறை, அச்சு எந்திரம், கணினி முதலானவற்றின் வருகை சொற்சுருக்கமும் பொருட்செறிவும் உள்ள செய்யுளிலேயே ஆக்கவேண்டிய கட்டாயத்திலிருந்தும் விடுபட்டது. இதுவே, சிறுகதை, புதினம், கட்டுரை, ஆய்வுரை, செய்தியிதழ்கள், இணைய இதழ்கள் முதலான புதிய உரைநடை வடிவங்களிற்கு வழிகோலியது.

தொல்காப்பியம் பண்டைய மொழியின் அமைப்பைக் கூறுகின்ற இலக்கண நூலாக இருந்தபொழுதும், "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" (தொல்காப்பியம் சொல்லதிகாரம் 446) என்று காலப்போக்கில் மொழியின் இயல்பில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கும் வழிவகுத்துள்ளார். இது தொல்காப்பியர் மரபைப் போற்றியிருப்பதோடு, இயல்பாக ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் இடமளித்துள்ளமையைக் காட்டுகின்றது.

முடிவுரை

தொல்காப்பியம் தனது பெயருக்கு ஏற்ப தமிழருடைய தொன்மை மரபைக் காத்து இயம்புகின்ற நூலாக விளங்குகின்றது. தொன்மையைக் காப்பது என்றால் தொன்மையான எழுத்தைக் காப்பது, தொன்மையான மொழியைக் காப்பது, தொன்மையான பண்பாட்டைக் காப்பது, தொன்மையான ஒழுக்கத்தைக் காப்பது, தொன்மையான மரபைக் காப்பது என்றெல்லாம் கூறலாம். தொல்காப்பியம் தொன்மையான நூலாக நின்று தமிழ்மொழியின் தொன்மைக்கும் சான்று பகர்கின்றது; மரபைப் பேணுவதாகவும், வழிவழியாக போற்றப்படுவதாகவும் நிலைத்திருக்கின்றது, தமிழ்மொழியின் பிறமொழியின்றும் கடன்பெறாது தனித்தியங்கும் தன்மைக்கு கால்கோளிட்டுள்ளது; தற்காலத்திலிருந்தும் மாறுபட்ட தனித்துவமான இலக்கிய மரபைக் கொண்டிருக்கின்றது. அவ்வகையில், தமிழ்மொழியின் செம்மொழித் தகைமையை நிறுவுவதற்கு தொல்காப்பியம் தனிப்பெரும் சான்றாகும் என்ற முடிவுக்கே இவ்வாய்வு இடந்தந்துள்ளது.

தொ.மா.க. 225

தொல்காப்பியத்தில் மரபின் ஆட்சி

சி. சண்முகராஜா
விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
தெற்காசியக் கற்கை மையம், கனடா வளாகம்

ஆய்வுச் சுருக்கம்

தமிழில் தரணிக்குக் கிடைத்துள்ள தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூல் உலக இலக்கண நூல்களுள்ளும் தொன்மையானது என்பதும் தற்போது சான்றுகளுடன் நிறுவப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் தனியாக ஒரு இலக்கண நூலாக மட்டுமன்றி, அந்நூல் தோன்றிய காலத்திலும், அதற்கு முன்னரும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் மரபுகளையும், அவற்றின் தொடர்ச்சியாக வந்த மரபுக் கூறுகளையும் எடுத்துக் கூறும் நூலாகவும் திகழ்கின்றது.

மனித வாழ்க்கை முறைகள் மரபு வழியாக ஏற்படுத்தப் பட்டவை. அவ்வாறே வாழ்க்கையிலிருந்து தோன்றும் மொழியும், இலக்கியமும் மரபு வழிப்பட்டவை. தமிழும் தமிழின் இலக்கிய இலக்கண வளமும் மரபு வழி வளர்ச்சியடைந்து வந்துள்ளன. தொல்காப்பியர் தமக்கு முன்னோர் கண்ட முறைமையின் மரபு நெறி சார்ந்து அம்மரபுக்குக் கட்டுப்பட்டு இலக்கணம் வகுத்துத் தந்துள்ளமை இதனை எடுத்துக் காட்டுகின்றது. அவர் அன்று அமைத்து வைத்த வேலியினுள் இருந்து கொண்டே தமிழ் இன்றும் செழித்து வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த வகையில் தொல்காப்பியம் முழுவதும் அதன் தொடக்கம் முதல் இறுதிவரை ஆட்சி செலுத்துகின்ற மரபு என்னும் சொல் பற்றியும், மரபு சார்ந்த செய்திகள் பற்றியும் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

முன்னுரை

தமிழில் தரணிக்குக் கிடைத்துள்ள தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூல் உலக இலக்கண நூல்களுள்ளும் தொன்மையானது என்பதும் தற்போது சான்றுகளுடன் நிறுவப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் தனியாக ஒரு இலக்கண நூலாக மட்டுமன்றி, அந்நூல் தோன்றிய காலத்திலும், அதற்கு முன்னரும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் மரபுகளையும், அவற்றின் தொடர்ச்சியாக வந்த மரபுக் கூறுகளையும் எடுத்துக் கூறும் நூலாகவும் திகழ்கின்றது.

மனித வாழ்க்கை முறைகள் மரபு வழியாக ஏற்படுத்தப் பட்டவை. அவ்வாறே வாழ்க்கையிலிருந்து தோன்றும் மொழியும், இலக்கியமும் மரபு வழிப்பட்டவை. தமிழும் தமிழின் இலக்கிய இலக்கண வளமும் மரபு வழி வளர்ச்சியடைந்து வந்துள்ளன. தொல்காப்பியர் தமக்கு முன்னோர் கண்ட முறைமையின் மரபு நெறி சார்ந்து அம்மரபுக்குக் கட்டுப்பட்டு இலக்கணம் வகுத்துத் தந்துள்ளமை இதனை எடுத்துக் காட்டுகின்றது. அவர் அன்று அமைத்து வைத்த வேலியினுள் இருந்து கொண்டே தமிழ் இன்றும் செழித்து வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த வகையில் தொல்காப்பியம் முழுவதும் அதன் தொடக்கம் முதல் இறுதிவரை ஆட்சி செலுத்துகின்ற மரபு என்னும் சொல் பற்றியும், மரபு சார்ந்த செய்திகள் பற்றியும் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

‘மரபு’ என்பதற்கான வரைவிலக்கணம்

மரபு என்னும் சொல், மரம் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது என்று சொல்லப்படுகிறது. மரம் பூக்கும், காய்க்கும், கனி தரும், விதை கொடுக்கும், அது தன் விதை பரப்பித் தனது தொடர்ச்சியை நிலை நிறுத்திக் கொள்ளும். மரபும் அவ்வாறே ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்பட்டுக் காலங் காலமாகத் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் ஒரு நிலை. உடலிலும், உணர்விலும் அறிவிலும், சமுதாயத்திலும், மொழியிலும் ஊறி மரத்துப்போகும் ஒன்றையே மரபு என்கிறோம்.

மரபு என்னும் சொல்லுக்கு, வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வரும் இலக்கணம், வழக்கு, ஒழுக்கம் (முறைமை) என்றும் பொருள் கொள்கின்றார் தொல்காப்பியர்.

> *‘செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு ...*
> *வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்....*
> *மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி....’*

என்றவாறு செய்யுள் வழக்கையும், மக்களின் உலகியல் வழக்கையும் ஆய்ந்தறிந்தே தமிழ் நிலத்து மரபின் வழி அவர் தொல்காப்பியத்தைப் படைத்தார் என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் மரபைப் பற்றி அழுத்திக் கூறுவதையும் நாம் உற்று நோக்கலாம்.

செய்யுள் வழக்கு, உலகியல் வழக்கு என்பவற்றிற்குத் தொல்காப்பிய நூற்பா ஒன்று விளக்கம் தருகிறது. **‘வழக்கெனப் படுப உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர்கட் டாகலான’ (தொல். பொருள்.** 638, **மரபியல்** 94) என்ற நூற்பாவிலே கற்றறிந்த உயர்ந்தோரால் போற்றப்படுவனவே வழக்காகும் என்று கூறுகிறார் தொல்காப்பியர். **‘எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்**, **செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே’ (நன். பொதுவியல்** 37) என்று நன்னூலாசிரியரும் தொல்காப்பியரின் கருத்தை வழிமொழிந்து கூறுகிறார். ‘பெரும்பான்மையானவர்கள் ஒரு பொருளை இப்படித்தான் ஏற்றுக்கொள்கின்றார்கள் என்பதற்காக நாமும் அப்படியே ஏற்றுக்கொள்வது குற்றமாகும். நூலறிவிற் சிறந்த சான்றோர் எந்தப் பொருளை எந்தச் சொற்களால் கையாளுகின்றார்களோ அந்தச் சொற்களால்தான் நாமும் அவற்றைக் கையாளவேண்டும், அதுதான் மரபு’ என்று நன்னூலார் தொல்காப்பியரின் கருத்துடன் ஒத்துப்போகின்றார். இதனையே **திருவள்ளுவரும் ‘எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு’ (திருக்குறள்.** 423) என்றார். இவ்வாறாக மரபு என்பதற்குக் கற்றறிந்த உயர்ந்தோராற் போற்றப்பட்டு வழிவழியாக வந்த இலக்கணம், வழக்கு, ஒழுக்கம் (முறைமை) ஆகியவை பொருளாகின்றன என்பது தெளிவாகின்றது.

எழுத்ததிகாரத்தில் மரபு

மூன்று அதிகாரங்களைக் கொண்டது தொல்காப்பியம். ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. தொல்காப்பியத்தின் முதல் அதிகாரம் எழுத்ததிகாரம். எழுத்துக்களின் இலக்கணம் கூறும் எழுத்ததிகாரத்தின் முதலாவது இயலை **'நூன்மரபு'** என்று மரபென்னும் சொல்லையே தலைப்பாகக் கொண்டு தொடங்குகின்றார் தொல்காப்பியர். எழுத்துகளின் வகை, மாத்திரை எனப்படும் எழுத்துகளை ஒலிக்கும் கால அளவு, எழுத்துகளின் எண், வடிவு, ஆகியவற்றை நூன்மரபில் கூறுகின்றார்.

'எழுத்தெனப் படுப அகர முதல னகர இறுவாய் முப்பஃதென்ப சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே' (தொல். எழுத்து.1) என்பது எழுத்ததிகாரத்தின் முதல் நூற்பா. மரபு வழியாகச் சார்ந்து வரும் மூன்று வகையான சார்பெழுத்துகள் தவிர்த்துத் தமிழின் முதலெழுத்துகள் முப்பது என்று தொல்காப்பியர் முதல் நூற்பாவிலேயே 'மரபு' என்னும் சொல்லை எடுத்தாள்கின்றார்.

இரண்டாவது இயல் **'மொழி மரபு.'** அது சொல்லின் இலக்கணம் கூறுவது. அதில் சார்பெழுத்துகள், அளபெடை, எழுத்தாக்கம் ஆகியவை பற்றிக் கூறப்படுகின்றது. 'சொற்களுக்கு எழுத்தால் வரும் மரபு பற்றிக் கூறுவதால் அவ்வியல் மொழி மரபு என்றாயிற்று' என்பார் உரையாசிரியர் இளம்பூரணர். ஐந்தாவது இயல் தொகை மரபு. அது சொற்கள் புணருவதற்கான பொது இலக்கண விதிகளைக் கூறுவது. இவ்வாறு எழுத்ததிகாரத்தில் மரபு என்னும் சொல்லையும் பொருளையும் அழுத்தமாக வலியுறுத்தும் மூன்று இயல்கள் உள்ளன.

சொல்லதிகாரத்தில் மரபு

இரண்டாம் அதிகாரமாகிய சொல்லதிகாரத்தில் நான்காவது இயல் **'விளிமரபு.'** அது எட்டாம் வேற்றுமையாகிய விளி வேற்றுமை, சொற்களில் எவ்வாறு அமையும் என்பதனை விளக்குகிறது. சொல்லதிகாரத்தின் ஒன்பதாவது இயலான எச்சவியலில் புறனடை மரபுகளாகச் சில மரபு வகைகள் கூறப்படுகின்றன. அவையல் கிளவி, இரவின் கிளவி என்பனவாகக் குறிப்பிட்ட சில வேளைகளில் சொல்லத்தக்க அல்லது சொல்லத்தகாத சொற்கள் எவையெவையென இங்கே எடுத்துக்கூறப்படுகிறது. அத்தோடு சொல்லதிகாரத்தில், **'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே' (தொல். சொல். எச்சவியல்** 452) என்று காலப்போக்கில் புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் வருகின்ற போது, புதிய சொற்கள் உருவாக வேண்டிய மரபையும் அவர் வலியுறுத்துவதையும் நோக்கலாம். குறைசொற் கிளவி, ஒருபொருள் உணர்த்தும் இருசொற்கள் என்று சில வகையான சொற்களின் மரபுகளும் அங்கே கூறப்படுகின்றன. கற்றறிந்த உயர்ந்தோர் கூறிய செய்யுள் வழக்கு, உலகியல் வழக்கு மரபு வழியில் எழுத்துகளும், சொற்களும் அவற்றின் வகைகளும் பின்பற்றப்பட்டு தமிழ் மொழி வளம் பெற்றதை இவ்விரு அதிகாரங்களும் சுட்டி நிற்கின்றன.

பொருளதிகாரத்தில் மரபு

உலக இலக்கண இலக்கிய நூல்களில் இல்லாத ஒரு புதுமை மூன்றாவது அதிகாரமான பொருளதிகாரத்தில் உள்ளது. தமிழரின் பொருள் மிக்க வாழ்வியல் மரபுகள், பண்பாட்டுக் கூறுகள் அடங்கிய கருவூலம் அது. பொருளதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அகத்திணை, புறத்திணைக் கோட்பாடுகள் தமிழர் மரபின் தனித்துவத்தைக் காட்டுவன. திணை என்ற சொல்லே ஒழுக்கம் என்பதாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. அவற்றில் கூறப்பட்டுள்ள அகவொழுக்கங்கள், புறவொழுக்கங்கள் பற்றிய மரபுகள் தனித்தனியே விளக்கப்படவேண்டியவை.

பொருளதிகாரத்தின் எட்டாவது இயல் செய்யுளியல். செய்யுளியலில் கூறப்பட்டுள்ள பா வகைகள், அவற்றின் இலக்கணங்கள் செய்யுள் உறுப்புகள் என்பனவெல்லாம், மரபு வழி வந்தவை. காலப்போக்கில் செய்யுள் வடிவங்களில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், இன்றும் தொல்காப்பியச் செய்யுள் மரபுகள் கவிஞர்களால் போற்றிக் கையாளப்படுவதைக் காணலாம்.

செய்யுளின் 34 உறுப்புகளைப் பற்றி கூறும் தொல்காப்பியர் அவற்றுள் ஒன்றாக மரபு என்றும் ஒன்றைக் குறிப்பிடுகிறார். **'மரபேதானும் நாற்சொல் லியலான் யாப்பு வழிப் பட்டன்று' (தொல். பொருள். செய்யுள்** 76) என்பது நூற்பா. மரபு என்பது, பெயர்ச் சொல், வினைச்சொல், உரிச்சொல், இடைச்சொல் என்று நான்கு வகைச் சொற்களால் எழக்கூடியது என்பது அதன் பொருள். சில உரையாசிரியர்கள் நாற்சொல் என்பதற்கு இயற்சொல், திசைச்சொல், திரிசொல், வட சொல் என்றும் உரை கூறியிருக்கிறார்கள். அது ஏற்புடையதாகத் தெரியவில்லை.

தொல்காப்பியத்தில் பல்வேறு பொருள்களில் மரபு என்னும் சொல்

தொல்காப்பியத்தில் மரபு என்னும் சொல்லாட்சி இலக்கணம், மரபு, ஒழுக்கம் (முறைமை), இயல்பு ஆகிய பொருள்களில் எடுத்தாளப்பட்டிருக்கிறது.

மரபு என்னும் சொல்லாட்சி **'இலக்கணம்'** என்னும் பொருளில் வரும் சில இடங்களை இங்கே எடுத்துக்காட்டாகக் காணலாம்.

'சார்ந்துவரல் மரபின் முன்றலங் கடையே.' (தொல். எழுத்து. நூ.1:4)
'தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே.' (தொல். எழுத்து. நூ.356:3)
'மயங்கல் கூடா தம்மரபினவே.' (தொல். சொல். நூ. 11:3)
'எண்ணுங் காலும் அதுவதன் மரபே.' (தொல். சொல். நூ.47:1)
'பண்டியல் மருங்கின் மரீஇய மரபே.' (தொல். சொல். நூ.86:2)
'எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபின்' (தொல். சொல். நூ.103:1)
'தொல்நெறி மரபின் தோன்ற லாறே.' (தொல். சொல். நூ.106:9)
'அன்ன மரபினவே ஆகுபெயர்க் கிளவி' (தொல். சொல். நூ. 110:6)
'ஏனைப் பெயரே தத்தம் மரபின.' (தொல். சொல். நூ.172:5)
'ஏனை மரபின் ஏனோரும் உரியர்.' (தொல். பொருள். நூ.26:1)
'மனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்' (தொல். பொருள். நூ.63:14)
'சீர்தரு மரபில் கல்லொடு புணர.' (தொல். பொருள். நூ.63:21)
'அனைநெறி மரபிற் றாகும் என்ப.' (தொல். பொருள். நூ.66:3)
'தோன்றா மரபின என்மனார் புலவர்.' (தொல். பொருள். நூ.242:3)
'பொழிப்பும் ஒரூஉம் செந்தொடை மரபும்' (தொல். பொருள். நூ.395:1)
'மெய்யுறு மரபின் தொடைவகை தாமே.' (தொல். பொருள். நூ.406:1)
'மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்.' (தொல். பொருள். நூ.545:1)
'சொல்லிய மரபின் இளமை தானே.' (தொல். பொருள். நூ.570:1)
'மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்.' (தொல். பொருள். நூ.637:1)
'மரபுநிலை திரியா மாட்சியவாகி.' (தொல். பொருள். நூ.639:1)'
'அதர்பட யாத்தலொடு அனைமர பினவே.' (தொல். பொருள். நூ.643:2)

மரபு என்னும் சொல் **'முறைமை'** என்னும் பொருளிலே தொல்காப்பியத்தில் பயின்று வந்ததற்கான சில எடுத்துக்காட்டுகளைப் பார்க்கலாம்.

'ஏனை உருபும் அன்ன மரபின.' (தொல். சொல். நூ.107:1)
'அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே.' (தொல். சொல். நூ.445:3)
'தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே.' (தொல். சொல். நூ.383:4)
'மரபு நிலை திரயா மாட்சியவாகி' (தொல். பொருள். நூ48.:1)
'சிறப்புடை மரபினவை களெவன மொழிப.' (தொல். பொருள். நூ.97:5)
'கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியை.' (தொல். பொருள். நூ.140:2)
'கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே.' (தொல். பொருள். நூ.140:3)
'அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய.' (தொல். பொருள். நூ.150:6)
'காமம் கண்ணிய மரபிடை தெரிய' (தொல். பொருள். நூ.194:2)

‘சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇ’ (தொல். பொருள். நூ.194:6)
‘செய்யா மரபில் தொழிற்படத் தடக்கியும்.’ (தொல். பொருள். நூ.194:7)
‘அறத்தியல் மரபிலள் தோழி என்ப.’ (தொல். பொருள். நூ.203:2)
‘நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே.’ (தொல். பொருள். நூ.216:2)
‘கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே.’ (தொல். பொருள். நூ.238:2)
‘நாட்டியல் மரபின் நெஞ்சுகொளில் அல்லது’ (தொல். பொருள். நூ.243:6)
‘மரபே தூக்கே தொடைவகை எனாஅ’. (தொல். பொருள். நூ.310:3)
‘நிலைக்குரி மரபின் நிற்பவும் உளவே.’ (தொல். பொருள். நூ.368:2)
‘மரபே தானும்’ (தொல். பொருள். நூ.385:1)
‘நால்நெறி மரபின தொடைவகை என்ப.’ (தொல். பொருள். நூ.393:2)
‘தத்தம் இயலான் மரபொடு முடியின்.’ (தொல். பொருள். நூ.510:3)
‘மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை. (தொல். பொருள். நூ.636:1)
‘மரபுவழிப் பட்ட சொல்லி னான.’ (தொல். பொருள். நூ.636:2)
‘மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்.’ (தொல். பொருள். நூ.637:1)

மரபு என்னும் சொல் **‘மரபு’** என்னும் பொருளிலேயே தொல்காப்பியத்தில் இடம்பெறும் சில எடுத்துக்காட்டுகளையும் பார்க்கலாம்.

‘இன்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே.’ (தொல். எழுத்;;து. நூ.470:2)
‘அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி’ (தொல். எழுத்;;து. நூ.481:3)
‘நினையுங்காலை தத்தம் மரபின்’ (தொல். சொல். நூ.169:3)
‘அன்ன மரபின் வினைவயி னான’ (தொல். சொல். நூ.170:3)
‘அன்ன மரபின் குறிப்பொடு வரூஉங்’ (தொல். சொல். நூ.211:2)
‘அன்ன மரபிற் காலங் கண்ணிய’ (தொல். சொல். நூ.224:2)

மரபு என்னும் சொல் **‘இயல்பு’** என்னும் பொருளில் தொல்காப்பியத்தில் இடம்பெறும் சில எடுத்துக்காட்டுகளையும் பார்க்கலாம்.

‘பாலறி மரபின் அம்மு வீற்று’ (தொல். சொல். நூ.208:1)
‘பெயர்க்குறி மரபின் செவ்வெண் இறுதியும்’ (தொல். சொல். நூ.285:2)
‘வாரா மரபின் வரக்கூ றுதலும்’ (தொல். சொல். நூ.416:1)
‘என்னா மரபின் எனக்கூ றுதலும்’ (தொல். சொல். நூ.416:2)
‘சிறப்புடை மரபின் அம்முக் காலமும்’ (தொல். சொல். நூ.421:2)

மரபு வழியான அறிவியற் சிந்தனைகள்

தொல்காப்பியத்தின் இறுதி இயலான மரபியல் பண்டைத் தமிழர்களின் அறிவியல் வளத்தைப் பறைசாற்றுவது. மரபியலில் உயர்திணை அஃறிணை என்ற இருதிணைகளுக்கும் பொதுவாக இருக்கிற ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள், இளமைப்பெயர்கள் ஆகியன பற்றி அங்கே கூறப்படுகின்றது. **‘மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற் …’ (தொல். பொருள். மரபியல்** 1) எனத் தொடங்கும் நூற்பாவிலே தொல்காப்பியர், மாற்ற முடியாத சிறப்பினையுடைய மரபின் வழியாக வந்த இளமைப் பெயர்கள் 9, ஆண்பால் மரபுப் பெயர்கள்; 15, பெண்பால் மரபுப் பெயர்கள் 13, என்று பட்டியலிட்டு, அந்தப் பெயர்கள் எந்தெந்த விலங்குகள் பறவைகள் போன்ற உயிரினங்களுக்கு உரியன என்றும் விரித்துக் கூறியுள்ளார். ஆண் குரங்கைக் கடுவன் என்று கூறுதல் போன்ற மருவி இடம் பெற்ற மரபுப் பெயர்கள் பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இது தமிழ் மொழியின் சொல் வளம் மிக்க நாகரிக வரலாற்றுக்கு ஒரு மாபெரும் எடுத்துக் காட்டாகும்.

மரபியலில் தொல்காப்பியர் உயிர் வகை பற்றிக் குறிப்பிடுகின்றார். பதினெட்டாம் நூற்றாண்டில் அறிவியலாளர் சார்ல்ஸ் டார்வின் உயிர்களின் கூர்தலறக் கோட்பாட்டை நிறுவினார். அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் உயிர்வகைப் பகுப்புகளை அறிவியல் ரீதியாக அறிந்து

வைத்துள்ளார்கள் என்பதனை **'ஒன்றறிவதுவே உற்றறிவதுவே' (தொல். பொருள். மரபியல்** 27) என்னும் நூற்பாவில் தொடங்கிப் பல நூற்பாக்களால் மிகவும் தெளிவுபட விளக்கியிருக்கின்றார் தொல்காப்பியர். ஒவ்வொரு வகை உயிரினங்களுக்கும் எடுத்துக்காட்டுகளோடு விளக்கம் தரப்பட்டிருப்பது இன்றைய உயிரியற் கோட்பாடுகளோடு ஒத்துப்போவதாகப் பண்டைத் தமிழரின் அறிவியல் சிந்தனைகள் இருந்திருக்கின்றன என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நான்கு வருணப் பாகுபாடு

மரபியலில் சாதி மரபு பற்றிய நூற்பாக்கள் இடம்பெற்றிருப்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். பண்டைய தமிழர் பண்பாட்டில் இல்லாத நான்கு வருணம் பற்றிய நூற்பாக்கள் மரபியலில் இடம் பெற்றுள்ளன. 71 தொடக்கம் 85 வரையுள்ள 15 நூற்பாக்களில் நான்கு வருணத்துக்கும் உரிய பொருள்கள், கடமைகள் போன்றவை பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. தொல்காப்பியரின் காலத்தின் பின்புதான் நான்கு வகை வருணப் பாகுபாடுகள் தமிழகத்துள் புகுந்து மெல்ல மெல்ல வேரூன்றத் தொடங்கின. சங்க காலத்து இலக்கியங்களில் கூறப்படாத நான்கு வருணப் பாகுபாடுகள் சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களில் இடம்பெறலாயின. அந்தக் காலத்திலேதான் நான்கு வருணப் பாகுபாடுகள் பற்றிய நூற்பாக்கள் தொல்காப்பியத்தினுள் இடைச்செருகலாகப் புகுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இந்நூற்பாக்களைத் தொல்காப்பியர் எழுதவில்லை, இவை இடைச்செருகலே என்பது வெள்ளைவாரணனார் போன்ற பல உரையாசிரியர்களின் கருத்தாகும்.

'நான்கு வருணப் பாகுபாடு தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கிய காலத்திலேயே இவை மரபியலில் இடைச் செருகலாக நுழைக்கப் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கருத வேண்டியுள்ளது. தமிழரோடு தொடர்பில்லாத களப்பிரர் போன்ற அயல் மன்னரது ஆட்சிக்குட்பட்டுத் தமிழ்நாடு அல்லலுற்ற காலத்தில் தமிழ் மக்களினது உரிமை உணர்வினைச் சிதைக்கும் நோக்கத்துடன் இத்தகைய அடிமைக் கருத்துக்கள் தமிழ் நூல்களிலும் ஆங்காங்கே இடம்பெறலாயின. வருணப் பாகுபாடு தமிழகத்தில் வேரூன்றிய காலத்தில் வாழ்ந்தவர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலிய உரையாசிரியர்கள். ஆதலால் மரபியலில் பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட நூற்பாக்களையும் தொல்காப்பியர் வாய்மொழியாகவே எண்ணி அவர்கள் உரையெழுதியுள்ளார்கள்.' என்பது வெள்ளைவாரணரின் கருத்து. இக்கருத்து மொழி ஆய்வாளர்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சிறப்பு மிக்க சிந்தனைக் கருத்துக்களைக் கொண்ட தொல்காப்பியத்தில் பிற்போக்கான இத்தகைய இடைச் செருகல்கள் பல நடந்திருக்கின்றன என்பதற்கு இவை எடுத்துக்காட்டுகள் என்று கூறலாம்.

மரபின் பாதுகாப்பு

மரபின் பாதுகாப்பை உணர்த்தும் வகையில் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள மேலும் சில கருத்துகளை இங்கு நோக்குதல் பொருத்தமானது. மரபியலில் நூல்களின் இரண்டு வகை பற்றி உரைக்க வந்த தொல்காப்பியர் **'மரபுநிலை திரியா மாட்சிய வாகி உரைபடு நூல்தாம் இருவகை நிலைய' (தொல். பொருள். மரபியல்.** 5) என்று மரபு நிலை மாறக்கூடாது என்பதை அடிக்கடி நினைவூட்டுகின்றார். அத்துடன் நூலின் மரபு பற்றியும், ஒரு நூல் எப்படி இருக்க வேண்டுமென்றும், அதில் செய்யக்கூடாத குற்றங்கள் எவையெவையென்றும் கூறுகின்றார். நூலில் ஒரு பொருளை விளக்கக்கூடிய 32 வகையான உத்திகள் பற்றியும் அங்கே விபரிக்கின்றார். **'மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை மரபுவழிப் பட்ட சொல்லி லான' (தொல். பொருள். மரபியல்**, **பொருள்** 636), மரபு வழிப் பட்ட சொல்லினாற் செய்ய வேண்டுதலில் மரபு நிலையில் திரிதல் செய்யுளுக்கு இல்லை என்றும், '**மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்' (தொல். பொருள். மரபியல்** 93) என்று மரபு நிலை திரிபடைந்து மாறி வருமானாற் பொருள் வேறு வேறாகும் என்றும் மொழி இலக்கணத்துக்கு மட்டுமன்றி வாழ்க்கை இலக்கணத்துக்கும் மரபைப் பின்பற்ற வேண்டியதன் இன்றியமையாமையையும், மரபை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டிய தேவையையும் தொல்காப்பியர் எடுத்துச் சொல்கின்றார்.

நிறைவுரை

தொல்காப்பியரின் காலத்துக்கு முன்பே இலக்கிய இலக்கண வளம் பொருந்திய மரபு கொண்ட நாகரிக சமுதாயமாக வாழ்ந்த தமிழினம் இன்று கையேந்தும் நிலையில் இருப்பதை எண்ணிக் கவலை கொள்ளாமல் இருக்க முடியவில்லை. மரபுதான் ஒரு இனத்தின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடியது. மரபு தான் ஒரு மொழியைப் பாதுகாத்து வைப்பது. மரபு ஒரு மொழியின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும், அதன் கட்டமைப்புக்கும் இன்றியமையாதது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அதன் மரபு பேணப்பட வேண்டும். தமிழர் பண்பாடு செழிப்போடு நிலை பெறுவதற்கு மரபு போற்றப்பட வேண்டும். எனவே இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தொல்காப்பியம் முழுவதும் மரபு என்பது இலக்கணம், இயல்பு, ஒழுக்கம், முறைமை, மரபு என்னும் பல பொருள்களில் ஆட்சி செலுத்துவதைக் காண்கிறோம். தொல்காப்பியர் எமக்குப் படைத்தளித்துள்ள தொல்காப்பியத்தின் மரபு வழி நின்று தமிழர் மரபுகளைப் பேணிக் காப்போம். தமிழரெனத் தலை நிமிர்வோம்.

துணைநின்ற நூல்கள் நூல்கள்:

1. இளம்பூரணர், தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்), சாரதா பதிப்பகம், சென்னை 2010
2. இலக்குவனார், சி. தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1061
3. தேய்வேந்திரன், மு. தொல்காப்பிய மரபியலும் சங்க அக இலக்கியங்களும், இளவேனில் பதிப்பகம், தாராமங்கலம், 2018
4. முனைவர் உ. கருப்பதேவன், தொல்காப்பிய மரபியல் சிந்தனைகள் ஆய்வுக் கட்டுரை. புதிய அவையம் ஆய்விதழ், 2023

மொழியியல்

தொ.மா.க. 146

தொல்காப்பியம் பிறப்பியலும் புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழிக் கல்வியும்

சுவந்தி சங்கர்
முதுகலை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
ssuvanthi@yahoo.ca

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் மொழியையும் பண்பாட்டையும் கட்டிக் காக்கும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்டது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல். இன்று, தொல்காப்பியம் பற்றிய விழிப்புணர்வு காலத்தின் தேவையாக உள்ளது. பல்வேறு காரணங்களினால் தாய் மண்ணைவிட்டுப் புலம்பெயர்ந்த தமிழர் இன்று உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தம்முடன் சுமந்து வந்த தமிழ் மொழி, பண்பாட்டு விழுமியங்களைத் தக்கவைத்துக் கொள்வதில் ஆர்வமுடையவராக உள்ளனர். புலம்பெயர்ந்த மண்ணில், இருண்டாம் மூன்றாம் தலைமுறையினர் தமிழ் மொழிக் கல்வியை இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியாகக் கற்பதில் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இதற்கான காரணம் தொல்காப்பியம் கூறும் ஒலியமைப்புப் பற்றிய அடிப்படை அறிவு இல்லாமையே எனலாம்.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம். பிறப்பியல், எழுத்துகளின் ஒலிப்பு முறை பற்றிக் கூறுகின்றது. புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழியை இரண்டாம் மூன்றாம் மொழியாகக் கற்கும் மாணவர்கள் எதிர் நோக்கும் சவால்களைக் கருத்தில் கொண்டு, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், தொல்காப்பியப் பிறப்பியலை அடியாகக் கொண்டு முன்னெடுக்கப்படவேண்டும் என்பது இந்த ஆய்வின் முடிவாகும்.

புலம்பெயர் மண்ணில் தமிழை இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியாகக் கற்பதில் மாணவர், பெற்றார், ஆசிரியர் அனைவருமே பலவிதமான சிக்கல்களை எதிர் நோக்குகிறார்கள். தமிழ் மொழியின் சிறப்புப் பற்றிய அடிப்படைப் புரிதல் அற்றநிலை, வாழ்வாதாரத்தைத் தீர்மானிப்பதில் தமிழ் மொழி பெரும் பங்கு கொள்ளாதநிலை, தமிழை வீட்டு மொழியாகக் கொள்ளாத நிலை, ஆசிரியரின் கற்பிக்கும் திறன் என்று இப்படிப் பல சிக்கல்கள்.

புலம்பெயர் மண்ணில் அரச, தன்னார்வ அமைப்புகள் தமிழ் மொழிக் கல்வியை மேம்படுத்த பல முன்னெடுப்புகளை செயற்படுத்திய போதும் தொல்காப்பியம் பற்றிய புரிதல் இல்லாமையால் தமிழ் மொழிக் கல்வியை வளர்த்துச் செல்வதில் போதிய பலனை எட்டவில்லை. தொல்காப்பியப் பிறப்பியல் அடிப்படையில் தமிழ் மொழி கற்பிக்கப்படும் போது சிக்கல்கள் தவிர்க்கப்படும், மாணவர் எண்ணிக்கை உயரும் தமிழ் புலம் பெயர் மண்ணில் வாழும் என்பதே இந்த ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வின் அணுகுமுறை: வரலாற்று ஆய்வு, பகுப்பாய்வு, இலக்கிய ஆய்வு, கள ஆய்வு.

ஆய்வியல் அமைப்பு: இயல் 1. நடைமுறையில் உள்ள கல்வித் திட்டம், இயல் 2. தொல்காப்பியப் பிறப்பியல் வழிக் கல்வி இயல் 3. தீர்வுகளும் பயனும், இயல் 4. முடிவுரை

புலம் பெயர் நாடுகளில் மாணவர் தமிழ் மொழியைக் கற்பதில் எதிர் நோக்கும் சவால்களைக் கருத்திற் கொண்டு, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், தொல்காப்பியப் பிறப்பியலை அடியாகக் கொண்டு முன்னெடுக்கப்படவேண்டும் என்பது இந்த ஆய்வின் முடிவாகும்.

அறிமுகம்

தமிழ் மொழியையும் தமிழரது மரபையும் கட்டிக் காக்கும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்ட இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இந் நூலை இயற்றிய தொல்காப்பியர், எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் வகுக்காமல், இயற்கையோடு அமைந்த வாழ்வியல் பொருளுக்கும் இலக்கணம் வகுத்துள்ளார். தமிழரது வாழ்க்கையை அகம், புறம் எனப் பிரித்து அவற்றைப் பற்றி இலக்கியம் படைப்பதற்கு இலக்கணம் வகுத்துள்ளது தொல்காப்பியம். பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்து, புலவர்களின் ஊடாக தமிழ் மரபை பேணி வந்தனர் என்றும், தொல்காப்பியம் இடைச்சங்க காலத்தில் அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

தொல்காப்பியத்திற்கு சிறப்பு பாயிரம் எழுதிய பனம்பாரனார், 'தொல்காப்பியன் என தன் பெயர் தோற்றி' என்று கூறுவதில் இருந்து தொல்காப்பியத்தை இயற்றியவரின் இயற்பெயர் 'தொல்காப்பியன்' என்று அறியப்படுகிறது. 'முந்து நூல் கண்டு முறைப்பட தொகுத்தோன்' என்ற அடியின் மூலம் தமிழ் கூறும் நல்லுலகத்தில் அதற்கு முன்னரே எண்ணற்ற இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுத்தப்படுகிறது. தொல்காப்பியரும் தன்னுடைய இலக்கண நூற்பாக்களில் என்ப, என்மனார் புலவர் போன்ற சொற்களை 250க்கு மேற்பட்ட இடங்களில் பயன்படுத்தி இருப்பதன் மூலம், அவருடைய காலத்துக்கு முன்பே தமிழ் மொழிக்கு இலக்கண கோட்பாடுகள் வழி வழியாக வந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றார்.

யாழ்ப்பாண புலவர் சி.வை.தாமோதரம்பிள்ளையால் தொல்காப்பியம் பதிக்கப்பட்ட காலம் தொடங்கி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. தொல்காப்பியரது காலம் பற்றி பல ஆண்டுகளாக தமிழர்கள் மத்தியில் பல்வேறு கருத்துகள் நிலவி வந்தன. 'செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிலையம்' நடத்திய முப்பதுக்கு மேற்பட்ட தொல்காப்பிய கருத்தரங்குகளில், தொல்காப்பியரின் காலத்தையும் நாளையும் வரையறை செய்துள்ளனர். இத் தீர்மானத்தை தமிழக அரசு ஏற்று, உலக செம்மொழி மாநாட்டில் தொல்காப்பியர் காலம் கி.மு. 711 என்று அறிவித்துள்ளது. உலகில் திணை இலக்கியத்தை பற்றி கூறியவர்கள் தமிழர்கள் என்றே கூறலாம். இன்றைய காலகட்டத்தில் தொல்காப்பியம் பற்றிய விழிப்புணர்வு காலத்தின் தேவையாக உள்ளது.

கட்டமைப்பு

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது. தொல்காப்பியத்தில் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை 1610 ஆகும். மொழிக்கு அடிப்படையாக அமைகின்ற எழுத்துக்களைப் பற்றி கூறுவது எழுத்திலக்கணம்; எழுத்துக்களால் உருவாகும் சொற்களைப் பற்றி கூறுவது சொல்லிலக்கணம்; சொற்களில் அடங்கியுள்ள பொருட்கள் பற்றியும், வாழ்க்கை முறைகளைப் பற்றியும் கூறுவது பொருளிலக்கணம் ஆகும். ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாக கட்டமைக்கப்பட்டு 27 இயல்களை தாங்கி நிற்கின்றது. தொல்காப்பியத்தின் நுட்ப திட்பம், பெருமை, பயன் முதலியவற்றை உலகுக்கு அறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் உரையாசிரியர்கள் உரை எழுதியுள்ளார்கள். எழுத்ததிகாரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையும், சொல் அதிகாரத்துக்கு சேனாவரையர் உரையும், பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயலுக்கு பேராசிரியர் உரையும் பெருவழக்காக பயிலப்பட்டு வருகின்றன.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தை எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என மூன்று வகையாகப் பிரித்து காட்டுகின்றார்.



தொல்காப்பியம் தமிழ் மொழியை ஒலியனியல், ஒலியியல், ஒலிப்பியல் என்ற முறையில் விவரிக்கிறது. மொழியின் முதன்மையான ஒலியனியல், உருபனியல் பற்றி எழுத்ததிகாரத்தின் ஒன்பது இயல்களில் பேசப்படுகிறது. ஒரு நூல் எழுதுவதற்கு எழுத்துகள் இன்றியமையாதது. எனவே, தமிழ் எழுத்து மரபு பற்றி உரைக்கும் பகுதி நூன்மரபு என வழங்கப்படுகிறது. அத் தனித்து நின்ற எழுத்துகளும், அவற்றைச் சார்ந்து வருகின்ற சார்பெழுத்துகளும் மொழியில் நிற்கும் தன்மையினை மொழி மரபு எடுத்துக் காட்டுகிறது. அவ் இருவகையாலும் உணர்த்தப்பட்ட எழுத்துக்களின் பிறப்பு முறையை விளக்கமாக உரைப்பது பிறப்பியல் ஆகும். தொல்காப்பியர் எழுத்துக்களின் உருவாக்கத்தை ஒலிப்பான், ஒலிக்கும் இடம், ஒலிப்புமுறை ஆகிய அறிவியல் தன்மையில் இவ்வியலை அமைத்துள்ளார். 'சொல்லாட்சியும் உச்சரிப்பும்' (vocabulary and pronunciation) எனப்படும் விடயத்திற்கு அடிநாதம் ஒலி, ஒலி பின்னே எழுத்து, எழுத்தும் ஒலியும் மொழியும் பிறப்பதற்கான அறிவியலை தொல்காப்பியனார் அன்றே அறிவித்துவிட்டார். ஒலியே மொழி. மொழி எல்லா உயிரினங்களுக்கும் உரியது. எழுத்தோ மனித குலத்துக்கு மட்டுமே உரியது.

'மக்கள்தாமே ஆறறிவு உயிரே' என்கிறார் தொல்காப்பியனார். ஆறறிவு உயிர் என்ற சிறப்பினை மக்களுக்கு வழங்கியது அவரவர்கள் பேசும் மொழியாலே என்பது இதனால் தெளிவாக உணரப்படுகிறது. மனிதன் எப்போது பேசக் கற்றுக் கொண்டு சொற்களைப் படைக்க தொடங்கினானோ, அப்போது அவனது அறிவும் வளரத் தொடங்கியது. அத்துடன் பேச்சுடன் நின்று விடாமல் எழுத்துக் கலையும் வளரத் தொடங்கியது.



தமிழ் மொழி வடிவத்தில் ஒலி வடிவமான எழுத்துகளின் தோற்றங்கள் பேசப்படுகின்றன. தொல்காப்பியரும் முதல் நூற்பாவில்

'எழுத்தெனப் படுவ அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப சார்ந்துவரல் மரபின் முன்றலங் கடையே'

என்று கூறியுள்ளார். தமிழ் மொழியை கற்பதற்கு அடிப்படையான எழுத்துகள் உயிர் எழுத்துகள் 12, மெய் எழுத்துகள் 18 ஆகிய முப்பது எழுத்துகள். இவை முதலெழுத்துகள் என அழைக்கப்படும். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற சார்பு ஒலிகள் மூன்றும் முதலெழுத்துகளைச் சார்ந்தே வரும், தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாதவை ஆகும். எழுத்துகளைத் தெளிவாக ஒலிக்க, எழுத தெரிந்திருத்தல் மிகவும் அவசியமாகும்.

பிறப்பியல்

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழில் உள்ள ஒவ்வொரு எழுத்தொலியும் எந்தெந்த உறுப்புகளின் ஊடாக எவ்வாறு ஒலி எழுப்புகின்றது என்பதனை அறிவியல் நோக்கில் ஆய்ந்து அறிந்து கூறியவர் தொல்காப்பியர். அன்று அவர் கூறிய ஒலிப்புமுறை இன்றளவும் பேச்சு வழக்கில் மாறாமல் இருந்து வருகிறது. பிறப்பியலில் அமைந்த நூற்பாக்களை இளம்பூரணார் 21 ஆகவும், நச்சினார்க்கினியர் 20 ஆகவும் காட்டுகின்றார். ஒலி அளவு கருவிகளோ, பதிவுகளோ இல்லாத காலத்தில் மிக நுண்மையாக ஆய்ந்து கூறப்பட்ட தொல்காப்பிய பிறப்பியல் முதல் நூற்பா பின்வருமாறு.

உந்தி முதலா முந்து வளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி,
எல்லா எழுத்தும் சொல்லுங் காலை
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்பட தெரியும் காட்சி யான
(தொல்.எழுத்து.83)

இந்நூற்பாவிற்கு உரை கூறவந்த நச்சினார்க்கினியர் எனும் உரையாசிரியர். "தமிழெழுத்து எல்லாவற்றிற்கும் பிறப்பினது தோற்றரவைக் கூறுமிடத்து, கொப்பூழ் அடியாகத் தோன்றி முந்துகின்ற உதானன் என்னுங் காற்றுத் தலையின் கண்ணும், மிடற்றின் கண்ணும் நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் என்ற ஐந்துடனே, அக்காற்று நின்ற தலையும் மிடறும் நெஞ்சுங் கூட எட்டாகிய முறைமையையுடைய தன்மையோடு கூடிய உறுப்புகளோடு ஒன்றுற்று இங்ஙனம் அமைதலானே, அவ்வெழுத்துகளது தோற்றரவு வேறுவேறு புலப்பட வழங்குதலை உடைய" என்று கூறுகிறார்.

கொப்பூழ் அடியில் உதானன் என்ற காற்றுத் தோன்றி வருகின்றது என்பது இன்றைய அறிவியல் ஆராய்ச்சிக்கு மாறானது. நெஞ்சில் உள்ள சுவாசப்பையில் இருந்தே காற்றுப் புறப்படும். அக்காற்று மிடற்றின் ஊடாகச் சென்று வாய்க்கு அல்லது வாய்க்கும் மூக்குக்கும் வருகின்றது என இன்றைய மொழியியலார் கொள்வர். இக்காற்றுத் தலைக்கும் செல்கின்றது எனக் கூறும் தொல்காப்பியர், தலை என்று கூறியிருப்பது எதைப் பற்றி எனத் தெரியவில்லை. ஆனால் தலைக்கு இக்காற்றுச் செல்வதில்லை என்கின்றனர் இக்கால மொழியியலாளர்.

பிறப்பியல் கூறும் கருத்துகள்

1) எழுத்துகளின் பொது உறுப்பு
2) உயிரெழுத்துகளின் பிறப்பு
3) மெய் எழுத்துகளின் பிறப்பு
4) சார்பெழுத்துகள் பிறக்கும் முறை
5) தமிழ் எழுத்துகளுக்கு மாத்திரை கூறும் முறை

என ஐந்தாகப் பகுத்துக் காட்டப்பட்டுள்ளது.



பிறக்கும் நிலைகள்:

வளி (air): நாம் பேசும்போது வளி உந்தியிலிருந்து தோன்றும்.

உந்தி (diaphragm): உந்தி என்பது காற்றே. உந்தும் உந்தி diaphragm. உந்தி உறுப்பானது அடி வயிற்றுக்கும் மூச்சுப்பைக்கும் இடையில் உள்ளது. மிடறு (throat): மிடறு என்பது தொண்டையில் உணவுக் குழாயையும், காற்றுக் குழாயையும் இணைத்து வைப்பது. அதாவது மடை மாற்றும். ஒலி உறுப்புகள்: பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணம்.

மொழியில் ஏற்படும் ஒலியன்களை, அடிப்படையில் உயிர், மெய் என இரு வகையாக தொல்காப்பியத்தில் பிரிக்கப்பட்டுள்ளது. உள்ளே இருந்து வரும் காற்று எவ்விதமான தங்கு தடையின்றி வாயின் வழியாக வெளிப்படும் போது உயிரெழுத்துகள் பிறக்கின்றன என தொல்காப்பியர் பின்வரும் நூற்பா மூலம் விளக்குகியுள்ளார்.

"பன்னீர் உயிரும் தன்னிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியில் இசைக்கும்" (தொல் எழுத்து 84)

இவ் பன்னிரண்டு உயிரெழுத்துகளும் ஒலியின் அமைப்பை பொறுத்து மூன்று வகையாக பிரிக்கப்படுகின்றன.

எழுத்துகள்	ஒலிப்பு முறை
அ, ஆ	அங்காந்து கூறும் முயற்சியால் பிறக்கும்
இ, ஈ, எ, ஏ, ஐ	அண்பல் (அணுகுவதற்கு காரணமான பல்) அடி நா விளிம்பும் உறப்பிறக்கும் வேறுபாடு உடையது
உ, ஊ, ஒ, ஓ, ஔ	இதழ் குவித்துக் கூறப்பிறக்கும்



மெய்யெழுத்துக்கள் :

'னகார விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப'

மெய் எழுத்துக்கள் 18 என்பதனை தொல்காப்பிய நூற்பா விளக்குகின்றது. உள்ளே இருந்து வரும் காற்று வாய் வழியாக செல்லும் போது எங்கேயாவது ஓரிடத்தில் நா, இதழ் ஆகிய ஒழிப்பான்களால் தடைப்படுவதால் பிறக்கும் ஒலிகளே மெய்யொலிகள் ஆகும். இவ் மெய் ஒலிகள் ஓசையின் பொருட்டு வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.

எழுத்துகள்	மெய் எழுத்துகளின் வகைகள்
க், ச், ட், த், ப், ற்	வல்லெழுத்துகள்
ங், ஞ், ண், ந், ம், ண்	மெல்லெழுத்துகள்
ய், ர், ல், வ், ழ், ள்	இடையெழுத்துகள்



மெய் எழுத்துகளது சிறப்புப்பிறவி:

எழுத்துகள்	ஒலிப்பு முறை	வரைபடம்
க, ங	முதல் நாவும் முதல் அண்ணமும் உறப்பிறக்கும்	
ச, ஞ	இடை நாவும் இடை அண்ணமும் உறப்பிறக்கும்	
ட, ண	நுனி நாவும் நுனி அண்ணமும் உறப்பிறக்கும்	
த, ந	அண்ணத்தைச் சேர்ந்த பல்லினது அடியாகிய இடத்தே, நாவினது நுனி பரந்து சென்று, தன் வடிவு மிகவும் உறும்படி சேரப் பிறக்கும்	
ப, ம	மேல் இதழும் கீழ் இதழும் தம்மிற் கூடப் பிறக்கும்	

ய	உந்தியில் எழுந்த காற்று மிடற்றிடத்துச் சேர்ந்த அதனாற் பிறந்த ஓசை, அண்ணத்தை அணைந்து உரலாணி இட்டார் போல் செறிய பிறக்கும்	
ர, ழ	நாவினது நுனி மேல் நோக்கிச் சென்று அண்ணத்தை தடவ பிறக்கும்	
வ	மேற்பல்லைக் கீழ் இதழ் கூட பிறக்கும்	
ல, ள	நா மேல் நோக்கிச் சென்று தன் விளிம்பு அண் பல்லின் அடியிலே உறா நிற்க, அவ்விடத்து அவ் அண்ணத்தை அந்நா அழுத்தித் தீண்ட லகாரமாயும், அவ்விடத்து அவ்வண்ணத்தை அந்நாத் தடவ ளகரமாயும், இவ்விரண்டெழுத்தும் பிறக்கும்	
ற,ன	நாவினது நுனி மேல் நோக்கிச் சென்று அண்ணத்தை அழுத்தித் தடவ, றகார னகாரமாகிய அவ் இரண்டும் பிறக்கும்	

தொல்காப்பியத்தில் வியக்க வைக்கும் இலக்கணத்தின் பெருமைகளில் ஒன்று மாற்றொலியன்கள் ஆகும். ஏனைய மொழிகளில் ஒவ்வொரு ஒலிக்கும் இடம் பொறுத்து வேறுபட்ட வரிவடிவம் அமைக்கப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. ஆனால் தமிழ் மொழிக்கு அதன் அயல் எழுத்தின் ஒலியைக் கொண்டு, அதன் ஒலி ஏற்ற, இறக்கம் பெறுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

கடல், சங்கம், அகம் என்ற சொற்களில் வரும் 'ககரம் எல்லா சொல்லுக்கும் ஒரே எழுத்தே எழுதப்பட்டுள்ளது. ஆங்கில மொழியின் ஒலி அமைப்பில் நாம் எழுதுவோமாக இருந்தால் வேறுபட்ட எழுத்துகளை உபயோகிப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கும்.

கடல் - 'க' என்ற எழுத்து, ஆங்கில எழுத்தாகிய k என்பதைப் போன்று மொழிக்கு முதலில் 'ககரம்' வல்லொலியாக வரும்.

தங்கம் - 'ங்' என்ற எழுத்தின் பின்னால் ககரம் வருகின்ற நிலையில் g என்ற ஆங்கில ஒலி கொண்ட எழுத்து எழுதப்படுகிறது.

அகம் - அகரத்தின் பின்னால் வருகின்ற ககரம் h என்ற ஆங்கில எழுத்தின் ஒலியைக் கொண்டு எழுதப்படுகிறது.

இதிலிருந்து தொல்காப்பியரின் தமிழ் எழுத்துகளைப் பற்றி கூறுவதில் அவருடைய ஒலியியல் (Phonetics) ஒலியனியல் (Phonemics) அறிவின் தெளிவு நன்கு விளங்கிக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

புலம்பெயர் தமிழர்

புலப்பெயர்ந்தோர் (Diaspora) என்பது பிறந்து வளர்ந்து, பரம்பரையாக இருந்த தங்கள் நிலப் பகுதியிலிருந்து அல்லது தேசத்திலிருந்து வேலை வாய்ப்பு, இயற்கை சீற்றம், வறுமை, போர், அரசியல் காரணங்களால் வேறு நாடுகளுக்கு நீண்ட காலமாகவோ அல்லது நிரந்நரமாகவோ குடியமர்வோர் புலம்பெயர்ந்தோர் என்று அழைக்கப்படுவர். குறிப்பிடத்தக்க புலம்பெயர் தமிழர் சனத்தொகை ஐரோப்பா, அவுஸ்ரேலியா, தென் ஆபிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். ஈழத் தமிழர்களுள் அதிக எண்ணிக்கையானோர் கனடாவிலும் பிரித்தானியாவிலும் வாழ்கின்றனர். புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள், அந்தந்த நாடுகளில் குடியுரிமை பெற்றவர்களாக உள்ள போதிலும், தமது பிள்ளைகள் தாய் மொழிக் கல்வியை கற்க வேண்டும் என்பதில் அக்கறை உள்ளவர்களாகவும் இருக்கின்றனர். இவர்கள் தம்முடன் தேசிய உணர்வையும் சுமந்து கொண்டு வந்தமையால், தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதிலும், பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்துவதிலும் ஆர்வமுடையவர்களாக காணப்படுகின்றனர். மொழி அழிந்தால் இனம் அழிந்துவிடும். இதை நாம் கண்ணூடாக காண்கின்றோம். மொழி என்பது ஒரு தகவல் தொடர்பு சாதனம்

மட்டுமன்றி, ஒரு பண்பாட்டின், ஒரு இனத்தின் அடையாளமும் ஆகும். அந்த வகையில் அவர்களால் தமிழ் மொழிக் கல்வி கற்கை நெறிச் செயற்பாடுகளுக்கான முன்னெடுப்புகள் எடுக்கப்படுகின்றன.

ஓரினத்தின் வளர்ச்சி, அதன் தாய் மொழியின் வளர்ச்சியில் தான் தங்கி உள்ளது. ஒருவரது வாழ்வியல் சடங்குகள், விழாக்கள், அவர்களது பண்பாடு என்பன எந்த மொழிக்கு உரியதோ அதுவே அவர்களது தாய் மொழியாகும்.

ஆலோசனைகளும் தீர்வுகளும்:

தமிழ் மொழிக் கல்வி

பெற்றோர் -

புலம்பெயர் நாடுகளில் வீடு பிள்ளைகளின் ஆரம்ப கற்றல் பாடசாலை. பெற்றோரே பிள்ளைகளின் முதல் ஆசான். பேசுதல், கேட்டல் மொழித்திறன் விருத்திக்கான அடித்தளம் வீட்டிலேயே முதலில் இடப்படுகின்றது. மனிதன் நெடுங்காலமாக பெற்றோரையும், மற்றோர்களையும் சார்ந்து வாழ்ந்து பலவற்றை கற்க வேண்டியவனாக உள்ளான். இதனை போலச் செய்தல் (imitation) என்பர். ஆரம்ப நிலை மொழி விருத்தியே, தொடர்ந்து வரும் வாழ்நாள் கல்விக்கு அத்திவாரமாக அமைவதோடு தொடர்ச்சியான கல்வி வளர்ச்சிக்கும் வித்திடுகின்றது. வீட்டில் ஆங்கில மொழியில் பிள்ளைகளுடன் உரையாடுவதை தவிர்த்து, தாய் மொழியான தமிழ்

மொழியில் உரையாடுவதை பழக்கப்படுத்திக் கெள்ளுதல் வேண்டும். தூண்டல் - துலங்கள் என்ற கோட்பாட்டு அடிப்படையில் பேச்சு மொழியை குழந்தைகளிடம் சிறந்த முறையில் வளர்க்க முடியும். செவிமடுத்தல் மூலமாகவே குழந்தை பேச ஆரம்பிக்கின்றது. ஆதலாலேயே மொழித்திறன் விருத்தியில் கேட்டல் முதன்மையாக வைக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் மண்ணில் வாழும் தமிழ் பிள்ளைகள் தாய்

மொழியை இரண்டாம் அல்லது மூன்றாம் மொழியாகவே கற்று வருகின்றனர். பன்மொழிப் பண்பாட்டு சூழ்நிலையில் போதனா மொழி முதன் மொழியாக காணப்படுவதால் மாணவர்கள் தமிழ் மொழியை திருத்தமாக கற்பதில் பல இடர்பாடுகளுக்கு உள்ளாகின்றனர். இவர்களுக்கு வழிகாட்டல் மிகவும் அவசியமாகின்றது.

கலைத்திட்டம் -

தாய் மொழியை கற்பித்தல் விடயத்தில் மொழி, கற்றல், கற்பித்தல், சூழல் என்னும் நான்கு விடயங்களில் கருத்து தெளிவை ஏற்படுத்துதல் மிகவும் அவசியமாகின்றது. தமிழ் மொழி கற்பித்தலுக்கான கலைத்திட்டம் தயாரிக்கப்படும் போது இந்த நான்கு விடயங்கள் கருத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். தமிழ் மொழியை நாம் கற்பிக்கப் போகிறோம் எனும் பொழுது அம்மொழியின் எவ்வெவ் அம்சங்கள்

கற்பிக்கப்பட உள்ளன என்பது பற்றிய தெளிவு நமக்கு வேண்டும். இது தமிழ் பற்றி நாம் கொண்டுள்ள கருத்தினை வெளிக்கொணர்வதாகும். அடுத்து, மொழியை கற்பவர் யார்? கற்பிப்பவர் யார்? மொழி கற்பித்தல் என்பது எவற்றை உள்ளடக்கியதாக அமையும்? மொழியை கற்பிக்கும் ஆசிரியரின் பணி யாது? அவரின் பயன்பாடு யாது? கற்பித்தலை அவர் எவ்வாறு மேற்கொள்ளலாம் போன்ற விடயங்களும் கற்கப்படும் - கற்பிக்கப்படும் சூழலைப் பற்றிய அறிதலும் புரிதலும் வேண்டும். அதாவது கற்பவரின் மொழிச் சூழல் யாது? தமிழ் மொழிக் கல்வி இவருக்கு எச் சூழலில், ஏன்? எவ்வாறு அத்தியாவசியம்; தமிழ் மொழி பயிற்றல் பற்றிய எத்தகைய அனுபவம் பின்புலத்துடன் இக் கற்பித்தல் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது போன்ற விடயங்கள் கருத்தில் கொண்டு கலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

முறைசாராக் கல்வி: முன்பள்ளி -

புலம்பெயர் நாடுகளில் முன்பள்ளியிலிருந்து தமிழ் மொழியை கற்க ஆரம்பிக்கும் மாணவர்கள் மிகவும் அரிதாகவே காண்படுகின்றனர். முன்பள்ளி கல்விக்கு பொருத்தமுடைய கற்பித்தல் திட்டமிடப்படல் வேண்டும்.

காட்சிப்படுத்தல், தொடர்புபடுத்தல் (இணைத்தல்), படங்களை வெட்டி ஒட்டுதல், கிறுக்கலும், வரைதலும்.

ஆடல், பாடல், கதை கூறுதல், விளையாடுதல் போன்ற செயற்பாட்டின் மூலமான கற்பித்தல்.

மாணவர்கள் ஆர்வம் காட்டத் தொடங்கியதும் இலகுவான சொற்களஞ்சியங்களை எழுதுவதற்கு ஊக்குவிக்கலாம். கேள்விகள் கேட்கவும்,பேசவும் ,கலந்துரையாடவும் ,வர்ணிக்கவும் வாய்ப்பு வழங்குதல்.

முறைசார்ந்த கல்வி - ஆரம்பநிலை, இடைநிலை, உயர்நிலை வகுப்புகள்

புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழியைக் கற்க வரும் மாணவரின் மொழிப் பின்புலத்தை அறிதல் மிகவும் இன்றியமையாததாகும். பேச்சு மொழியுடன் வகுப்பறைக்குள் நுழையும் மாணவன், வகுப்பறை கற்பித்தல் சூழலிற்கு முகம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கதாக அமைவதற்கு அவர்களிடம் காணப்படுகின்ற மொழித்திறன் விருத்தி பெரும் பங்காற்றுகின்றது. ஆனால் இம் மொழித்திறன் விருத்தியானது அனைத்து மாணவர்களிடமும் ஒரே மாதிரியாகக் காணப்படுவதில்லை. எல்லா மாணவர்களும் ஆரம்ப நிலையிலிருந்து தமிழ் மொழிக் கல்வியை ஆரம்பிப்பது இல்லை. ஆதலால், அனைவருக்கும் ஒரே மாதிரியான பொதுக் கலைத்திட்டத்தையும், கல்வி செயல்களையும் செயல்படுத்திடலாகாது. தனி மனித வேறுபாடுகள் மாணவர்களிடையே குறிப்பாக இரண்டாவது மொழியை கற்கும் குழந்தைகளிடையே இருப்பது மிகவும் இயல்பான ஒன்றாகும்.

ஆதலால் மாணவர்களுக்கான கலைத்திட்டம் நெகிழ்ச்சி உடையதாக இருக்க வேண்டும். மொழியியல் அறிவு கொண்ட மொழியாசிரியர்களே மாணவர்களின் மொழித் திறன் வேறுபாடுகளை பற்றி அறிந்து, அதற்கேற்றவாறு பொருத்தமான கற்பித்தல் அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும்.

இரண்டாவது மொழியை கற்பதற்கான வழிமுறைகள் -

1. மாணவர்களிடையே மொழித்திறன் வளர்ச்சி வெவ்வேறு நிலைகளில் இருப்பதால் அவர்களது தேவையை மதிப்பீடு செய்தல்.

அ) நேர்காணல்: கலந்துரையாடல் 10 - 15 நிமிடங்கள

ஆ) வினா விடை: வாய்மொழி, எழுத்து மொழி (மாணவர்களின் மொழி அறிவுக்கு ஏற்ப நடாத்தப்படல்)

2. தாய்மொழி அல்லாத பிறமொழிகளை கற்கும் மாணவர்கள் பண்பாட்டுத் தாக்கங்களுக்கு உட்படுகின்றனர். ஆதலால் மாணவர்களது சமூகம் மற்றும் பண்பாட்டுச் சூழலை அறிந்திருத்தல்.

3. மாணவருக்கு பரீட்சமான பண்பாட்டுச் சூழலை புகுத்தி கற்பித்திடும் உத்தியை பயன்படுத்துதல்.

4. இரண்டாவது மொழியை கற்றலில் மாணவர், தனது முதல் மொழியைப் பயன்படுத்துதலை அங்கீகரித்தல். இருந்தபோதிலும் கேட்கும் இரண்டாவது மொழியிலேயே அதிக அளவு இடைவினை தொடரும் சொல்லாடல் நடைபெறுதலை ஊக்குவித்தல்.

பேச்சுமொழி - கேட்டல், பேசுதல்

கற்றல்-கற்பித்தலில் செயற்பாட்டில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் மாணவரும், ஆசிரியருமே. எனவே கற்பித்தலை எளிமையாக்குவதற்கு மாணவர் மையக் கல்வி முறையே பின்பற்றப்படுதல் வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் மொழித்திறன்களை வெளிக்கொணர முடியும். கற்பதும் அதனைச் சொல்லிக் காட்டுவதும், குருகுலக் கல்வி முறைக்கு சான்றாகும். ஆசிரியர்கள் வாசிக்கும் போது மாணவனை தன் வயப்படுத்தி எளிமையான சொற்களைச் சொல்லும் போது அவன் செவிமடுத்து கேட்பான். நல்ல மாணவனாக ஒருவன் திகழ்வதற்கு கேட்டல் திறனே முதற்படியாக அமைகிறது என்பது ஆய்வாளர்களின் ஒருங்கிணைந்த கருத்தாக அமைகின்றது.

ஒலியை காது ஏற்கும் செயல் செவிமடுத்தல் எனப்படும். மொழியை கற்பதற்கான முதல் வழி செவியாகும். அதன் வழியே தான் கற்றலின் பெரும் பகுதி நடைபெறுகின்றது. குழந்தையின் செவி மடுக்கும்

ஆற்றலைப் பொறுத்துத்தான் மொழியை பேசுகின்ற அளவும் திறனும் அமையும் என்கின்றனர் ஆய்வாளர்கள். இரண்டாவது அல்லது மூன்றாவது மொழியாக, ஒரு மொழியை கற்கும் போது முதலில் ஏற்படுகின்ற சிக்கல், அம்மொழியை செம்மையாக உச்சரிக்க இயலாமையே ஆகும். எழுத்தொலிகளைப் பற்றிய தெளிவு பெறுவதற்கு அந்த ஒலிகளை உருவாக்கும் ஒலி உறுப்புக்களையும், அவற்றின் முயற்சிகளையும் நன்கு விளங்கிக் கொண்டால், அந்தந்த ஒலிகளை முறைப்படி ஒலிக்கவும், அவ்வாறு பிறக்கும் மொழிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ளவும் முடியும். இன்றைய பாடநூல்களில் தொல்காப்பியம் பற்றிய சிறப்புகள் பேசப்படுவது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. தமிழ் ஆசிரியர்கள் முதலில் தொல்காப்பியம் பற்றி அறிந்திருத்தல் வேண்டும். பாடநூல்களில் தொல்காப்பியம் பற்றிய குறிப்புகள் இல்லாவிட்டாலும் தமிழ் எழுத்துகளின் ஒலிப்புமுறை தொல்காப்பிய பிறப்பியல் கூறும் விதிமுறைகளைப் பின்பற்றியதாக இருத்தல் வேண்டும். மொழிக்கு முதலில் வரும் முப்பது எழுத்துகளின் ஒலிப்புமுறை மாறாமல் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். பேச்சு மொழியை திருத்தமாக உச்சரிப்பதன் மூலம் தான் எழுத்து மொழியை சரியான முறையில் எழுதவும் வாசிக்கவும் முடியும்.

வகுப்பறையில் பேச்சு மொழியினை வளர்த்தல்

ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டும்.

எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவுகளில் தெளிவு பெற எழுத்துகளை ஓசையுடன் பாடிக் காட்டலாம்.

மயக்கம் விளைவிக்கும் எழுத்துத் தொகுதிகளை இனங்கண்டு, ஒலிக்கும் முறைகளை சொற்களைக் கொண்டு விளக்குதல்.

(ஆல், ஆள், ஆழ்)

இரண்டு மாணவர் இணைகளாக ஒருவர் பேச மற்றொருவர் அதைக் கேட்டு சொல்ல வைத்தல். இதன் மூலம் எப்போது பேச வேண்டும், எப்போது செவி சாய்க்க வேண்டும் என்பதை மாணவர்கள் கற்றறிவர்.

பேச்சு மொழியை கற்பதற்கான உகந்த சூழலை அமைத்தல்.

தகவல் பரிமாற்றத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்: ஒன்று சேர்ந்து பாடுதல், வாசித்தல், செய்யுளை ஒப்புவித்தல்.

சொல்வளத்தை பெருக்குதல்: விளையாட்டின் மூலம் கற்பித்தல். ஒரு எழுத்தை தெரிவு செய்தல். பின்பு அது தொடர்பான சொற்களைக் கூறுதல்.தெரிந்த சொற்களை கூறுதல்.

அறிமுகம் இல்லாத புதிய சொற்களைக் கூறி பொருளை விளக்குதல் - (ஆசிரியர் கூறுதல்)

இரண்டாவது மொழியை கற்பிக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள் பேச்சில் உள்ள உச்சரிப்பு குறைபாடுகள், வார்த்தை இணைப்பு குறைபாடு, சீரான வேகமின்றி பேசுதல் போன்றவற்றை சுட்டிக்காட்டி அவற்றை திருத்திக் கொள்ளல்.

செயலியை இயக்கி மாணவர்களைக் கேட்கும்படி செய்துவிட்டு வினாக்களை வினாவுதல். படம் பார்த்து பேசுதல்.

நாம் பேசும் உலகிலேயே வாழ்கின்றோம். வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, திரைப்படங்கள் போன்றவை பேசுதலின்பால் செல்வாக்கு செலுத்தும் தொடர்பாடல் சாதனங்களாக விளங்குகின்றன. நவீன தொழில் நுட்ப சாதனங்களை கற்பிப்பதற்கு உறுதுணையாக கொண்டு செயற்படுவதன் மூலம் புலம்பெயர் மண்ணில் பேச்சு மொழியை வளம்படுத்த முடியும்.

எழுத்துமொழி - வாசித்தல், எழுதுதல்

பேச்சில் வெளிப்படும் எண்ணங்கள் எழுத்து வடிவைப் பெற்றால்தான் அவை நிலைத்து நீடித்திருக்கும். ஒரு சமூகத்தின் பண்பாடு ஓங்கி வளர வேண்டுமெனில், அது எழுத்து வடிவிலான மொழியை பெற்றிருக்க வேண்டும். மொழியின் வாயிலாகவே பண்பாடு பாதுகாக்கப்பட்டு, ஒரு தலைமுறையினரிடம் இருந்து அடுத்த தலைமுறையினரிடம் சேர்க்கப்படுகிறது. வாசித்தல், எழுதுதல் என்னும் இரண்டு திறன்களையும் பெற முறையான கற்பித்தல் தேவைப்படுகிறது. வாசித்தலுக்கும் எழுதுதலுக்கும் எழுத்து வடிவிலான ஒலி குறியீடுகளை புரிந்து கொள்வது அவசியமாகிறது. வாசித்தலின் தொடக்கம் எழுத்துக்களைக் காணும் நிலையாகும். மூளை அறிந்து பொருள் உணரும் போது வாசித்தல் நிகழ்கிறது. வரி வடிவத்தில் உள்ள சொற்களை ஒலி வடிவமாக மாற்றி உச்சரித்தல், உறுப்புகளும் சொற்களை நோக்குகின்ற கண்ணும் ஒத்துழைக்கின்ற போது தான், வாசித்தல் சரியாக நடைபெறும். எழுத்து குறியீடுகள் ஒலி குறியீடுகளாக மாற்றப்படுகின்ற சந்தர்ப்பம் வாசித்தலுக்கு உண்டு. ஒலி வடிவங்களாக வெளிப்படுத்தும் செயற்பாடு மாத்திரம், வாசித்தல் ஆகாது. வாசிக்கும் போது, பொருள் உணர்தலோடு, இணைந்த வகையில் வாசிப்பதே வாசித்தலாகும். தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் வாசிப்பதில் சிரமப்படும் போது, எழுத்துக்குரிய ஒலிப்பை தயங்காமல் ஒலித்து வாசிக்கும்படி தட்டிக் கொடுத்தல் வேண்டும். ஏனெனில் பன்மொழிகளைக் கற்கும் மாணவர்களுக்கு தயக்கம் வருவது இயல்பே. குறில், நெடில் எழுத்துகளை சரியாக இனம் கண்டாலே வாசிப்பதில் ஏற்படும் தடுமாற்றம் குறையும். ஒற்று எழுத்தை நீட்டியோ குறுக்கியோ உச்சரிக்க முடியாது.

அது இயல்பாக உச்சரிக்கப்படும். குறில், நெடில் எழுத்துகளில் தான் மாணவர்கள் கூடுதலான இடர்பாடு அடைகின்றனர். (செல் - சொல்)

எழுத்து

எழுத்துத் திறனானது மொழியின் வழியாக கருத்துகளை வல்லமையுடன் வெளியிடும் திறனைக் கொண்டதாகும். செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல் பாடசாலை தவிர்ந்த ஏனைய புறச் சூழல்கள் உதவும். எழுத்து திறன் வளர்ச்சிக்கு பாடசாலையும் ஆசிரியர்களும் முக்கிய பொறுப்பானவர்கள். எதை எழுதுகின்றார்கள் எனக் குறிப்பது எழுத்து திறனாகாது. எப்படி எழுதுகின்றார்கள் என்பதே எழுதுதல் திறனோடு தொடர்புடையதாகும்.

எழுத்துக்குரிய அடையாளங்கள் அல்லது குறியீடுகளை Symbols அறிந்து கற்றல் வேண்டும். இதற்கு பின்வரும் எழுத்துகளின் அடையாளங்கள் பெரிதும் உதவுகின்றன.



ஒரே ஓசை கொண்ட சொற்களை உச்சரித்து எழுதும் பயிற்சி.

கல் - கால், விடு - வீடு
சொல்லைக் கேட்டு எழுதுதல்.
சத்தமாக வாய்விட்டு சொற்களை சொல்லிக் கொண்டு எழுதுதல்.
மீண்டும் மீண்டும் குறிப்பேட்டை கொடுத்து சொல்ல வைத்தல், கேட்டு எழுதுதல்.
சரியான உச்சரிப்பை அறிந்து சொல்லி எழுதுதல்.
உறுப்பமைய எழுதுவதற்கான பயிற்சிகளை மேற்கொள்ளல்.

இவ்வாறாக புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழிக் கல்வியை கற்பிப்பதற்கான அடித்தளம், தொல்காப்பியத்தை அடியொற்றியதாக அமைக்கப்பட வேண்டும். அத்துடன் மொழியை கற்பிக்கும் ஆசிரியர்கள் தொல்காப்பியம் பிறப்பியல் பற்றிய அறிதல், புரிதல் உடையவராகவும், அதன்படி செயல் திட்டங்களை அறிவியல் முறையில் அமைத்து செயற்படுபவராகவும் இருத்தல் அவசியமாகின்றது. தமிழ் ஆர்வலர்கள் தமிழ் மொழியை கற்பதற்கான புற ஊக்கச் செயற்பாடுகளில் மாணவர்கள ஈடுபடுவதற்கான களங்களை அமைத்துக் கொடுத்தல் வேண்டும். பெற்றோர், ஆசிரியர் மற்றும் சமூகமும் சேர்ந்து, தொல்காப்பியம் பற்றிய விழிப்புணர்வுடன் மாணவர்களுக்கான தமிழ் மொழிக் கல்வி செயற்திட்டங்களில் ஈடுபடுமேயானால், எமது

எதிர்கால சந்ததியினர் தமிழ் ஆக்கங்களை படைத்து அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்வர்.

"மனத்தி னெண்ணி மாசறத் தெளிந்து
இனத்தின் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்" (தொல்.பொருள்)

தொ.மா.க. 153

தொல்காப்பியமும் இக்கால மொழியியலும்

மருத்துவர் **தணிகைவேல் மாரியாயி**
மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத் துறை,
சொகூர் பாரு அரசு மருத்துவமனை
மலேசியா
thanighaivel@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

வேற்று மொழிகளின் தாக்கத்தால், தமிழ் மொழியில் பல கேடுகள் ஏற்பட்டுள்ளன. இந்தக் கேடுகளுக்குக் காரணம் பல. அவற்றுள் ஒன்று, தமிழ் மக்களுக்கு, குறிப்பாகத் தமிழ் எழுத்தாளர்களுக்கு ஆழமான இலக்கணப் புரிதல் இன்மையே. இலக்கணப் புரிதல் இன்மைக்குக் காரணம், இவர்கள் தமிழ் மொழியில் உள்ள அடிப்படை எழுத்துகளை, குறிப்பாக ஒலியன்களை (phoneme) நன்கு உணரவில்லை.

தொல்காப்பியர் காலம் தொட்டு இக்காலம் வரை மொழி அறிஞர் பலர், தமிழ் மொழியில் உள்ள எழுத்துகளை மிக ஆழமாக ஆய்ந்து அதற்கு இலக்கணம் வகுத்து உள்ளனர். ஆனால், தமிழ் ஒலியன்களின் ஆராய்ச்சி என்பது அரிதாகவே உள்ளது. அரிதாக இருக்கும் ஆராய்ச்சிகளும், வேற்று மொழியாளரால் மட்டுமே இதுவரை ஆராய்ச்சி செய்யப்பட்டு, ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை International phonetic association (IPA) என்ற நிறுவனம் தொகுத்து International phonetic alphabets என்று வெளியிட்டுள்ளது. நம் மொழியின் அடிப்படை எழுத்துக் கட்டமைப்பு, குறிப்பாக மெய்யெழுத்துக் கட்டமைப்பு, உலகில் உள்ள வேறு எந்த மொழியிலும் இல்லை. அதனால்தான் தமிழ் மொழியில் மட்டுமே மெய்ம்மயக்க விதிகள் உள்ளன. இன்னின்ன மெய் எழுத்துகள் இன்னின்ன மெய் எழுத்துகளுடன்தான் மயங்கும் என்று தொல்காப்பியம் முதல் பல இலக்கண நூல்கள் விளக்குக்கின்றன. இந்த இலக்கணங்களை மீறித்தான் பல எழுத்தாளர்கள் இன்று எழுதுகின்றனர். மொழிபெயர்ப்புத் துறையில், குறிப்பாக வேற்று மொழிச் சொல்களை ஒலிபெயர்ப்புச் (transliteration) செய்யும் பொழுது, பல விதி மீறல்களும், பல குழப்பங்களும் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டாக, France என்ற ஆங்கிலச் சொல்லை பிரான்ஸ், பிராண்ஸ், பிரான்சு, பிரஞ்சு, பிராஞ்சு, பிரெஞ்சு என்று பலவாறு எழுதுகின்றனர். இதற்குக் காரணங்கள், அடிப்படை ஒலியன்களின் புரிதல் இல்லாததும், ஒரு செந்தர முறைமை இல்லாததுமே ஆகும்.

மற்றொரு சிக்கலும் உள்ளது. ஒலிபெயர்க்கும் பொழுது, ஒரு வினா எழுகிறது. ‘மெய்ம்மயக்க விதிகளை மீறலாமா, மீறக்கூடாதா?’ என்பது அந்த வினா. எடுத்துக்காட்டாக, Nitrogen என்ற சொல்லைத் தமிழில் ஒலிபெயர்த்து நைட்ரோஜன், நைட்ரஜன் அல்லது நைட்ரசன் என்று எழுதுகிறோம். இம்மூன்றிலும், மெய்ம்மயக்கப் பிழைகள் உள்ளன. டகாரத்தைத் தொடர்ந்து ரகாரம் வராது. இதற்கும் காரணம் ஒலியன்களின் புரிதல் இன்மையே. மேலே குறிப்பிட்ட வினாவிற்கு விடை காண்பதாக இந்த ஆராய்ச்சிக் கட்டுரை அமைகிறது.

முகவுரை

நிலம், தீ, நீர், வளி, விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்,
இருதிணை ஐம்பால் இயல் நெறி வழாஅமைத்
திரிவு இல் சொல்லொடு தழாஅல் வேண்டும் *(தொல்காப்பியம் - மரபியல்)*

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு *(குறள் 27)*

இப்படிப் பரந்த உலகப் பார்வையைக் கொண்டவர் நம் முன்னோர். அந்த மரபின் வழிவந்த தமிழர், உலகை ஆரத் தழுவி நேசித்ததனால், அவர்களும், அவர்களால் இவ்வுலகமும் செழித்து இருந்தன. கூடி வாழ்ந்த தமிழருக்கு வேற்று இன மொழித் தொடர்புகள் ஏற்பட்டன. ஆனால், வேற்று மொழிகளின் தாக்கத்தால், இயற்கையான தமிழ் மொழியில் பல சிதைபுகள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சிதைபுகளுக்குக் காரணங்கள் பல. அவற்றுள் முதன்மைக் காரணம், தமிழ் மக்களுக்கு, குறிப்பாக தமிழ் எழுத்தாளர்களுக்கு ஆழமான இலக்கணப் புரிதல் இன்மையே. இலக்கணப் புரிதல் இன்மைக்குக் காரணம், இவர்கள் மொழியில் உள்ள அடிப்படை எழுத்துகளை, குறிப்பாக ஒலியன்களை (phoneme) நன்கு உணரவில்லை. இதற்குக் காரணம், பெரும்பான்மை தமிழர்கள் தமிழ் எழுத்துகளை வரி வடிவ எழுத்துகளாக மட்டும் பார்ப்பதால், அவற்றை ஒலி வடிவங்களாகப் பார்க்கத் தவறி விடுகின்றனர்.

ஆராய்ச்சியின் நோக்கம்

தொல்காப்பியர் காலம் தொட்டு இக்காலம் வரை மொழி அறிஞர் பலர், மொழியில் உள்ள எழுத்துகளை மிக ஆழமாக ஆய்ந்து அவற்றுக்கு இலக்கணம் வகுத்து உள்ளனர். ஆனால், தமிழ் எழுத்துகளுக்கு அடிப்படையாக விளங்கும் தமிழ் ஒலியன்களின் ஆராய்ச்சி என்பது குறைந்த எண்ணிக்கையில் உள்ளது. அரிதாக இருக்கும் ஆராய்ச்சிகளும், வேற்று மொழியாளரால் மட்டுமே இதுவரை ஆராய்ச்சி செய்யப்பட்டு, ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றை International phonetic association (IPA) என்ற நிறுவனம் தொகுத்து International phonetic alphabets என்று வெளியிட்டுள்ளது.

நம் மொழியின் அடிப்படை எழுத்துக் கட்டமைப்பு, குறிப்பாக மெய்யெழுத்துக் கட்டமைப்பு, உலகில் உள்ள வேறு எந்த மொழியிலும் இல்லை. அதனால்தான் நம் மொழியில் மட்டுமே மெய்ம்மயக்க விதிகள் உள்ளன. இன்னின்ன மெய் எழுத்துகள் இன்னின்ன மெய் எழுத்துகளுடன்தான் மயங்கும் என்று தொல்காப்பியம் முதல் பல இலக்கண நூல்கள் நமக்கு விளக்கமாகத் தெளியப் படுத்துகின்றன. இந்த இலக்கணங்களை மீறித்தான் பல எழுத்தாளர்கள் இன்று எழுதுகின்றனர்.

நம் மொழிபெயர்ப்புத் துறையில், குறிப்பாக வேற்று மொழிச் சொல்களை ஒலிபெயர்க்கும் பொழுது, பல விதி மீறல்களும், பல குழப்பங்களும் ஏற்படுகின்றன. எடுத்துக்காட்டு ஒன்று பார்ப்போம். France என்ற ஆங்கிலச் சொல்லைப் பல வகையாக எழுதுகின்றனர். *பிரான்ஸ்*, *பிராண்ஸ்*, பிரான்சு, பிரஞ்சு, பிராஞ்சு, பிரெஞ்சு என்று 6 வகையாக எழுதுகின்றனர். இதற்குக் காரணங்கள், அடிப்படை ஒலியன்களின் புரிதல் இல்லாததும், ஒரு செந்தர முறைமை இல்லாததுமே ஆகும்.

மற்றொரு சிக்கலும் உள்ளது. மெய்ம்மயக்க விதிகளைப் பின்பற்றாமல் பல சொல்கள் ஒலிபெயர்க்கப் படுகிறது. எடுத்துக்காட்டாக, Nitrogen என்ற சொல்லைத் தமிழில் ஒலிபெயர்த்து *நைட்ரோஜன்*, *நைட்ரஜன்* அல்லது கிரந்த எழுத்தைத் தவிர்த்து *நைட்ரசன்* என்று எழுதுகிறோம். இம்மூன்றிலும், மெய்ம்மயக்கப் பிழைகள் உள்ளன. டகார மெய் எழுத்துக்குப் பின் ரகாரம் வராது. இதற்கும் காரணம் ஒலியன்களின் புரிதல் இன்மையே. அடுத்து ஒரு வினா எழுகிறது, 'ஒலிபெயர்க்கும் பொழுது, மெய்ம்மயக்க விதிகளை மீறலாமா அல்லது மீறக்கூடாதா?' என்பது அந்த வினா.

இந்த வினாவிற்கு விடை காண்பதாக இந்த ஆராய்ச்சிக் கட்டுரை அமைகிறது.

ஆராய்ச்சியின் தேவை

மேலே குறிப்பிட்ட ஒலியன்களின் ஆராய்ச்சி முடிபு (IPA), தனி உயிர் மற்றும் மெய் எழுத்துகளை மட்டுமே ஆராய்ச்சிக்கு உட்படுத்தி உள்ளது. மெய் எழுத்துகள், குறிப்பாக வல்லின மெய் எழுத்துகள் மயங்கும் பொழுதும், அது வரும் இடத்தைப் பொருத்தும், பல ஒலித்திரிபுகள் ஏற்படும் என்பதை IPA நிறுவன ஆராய்ச்சியாளர்கள் முழுமையாக உணரவில்லை. அது ஒரு சிறந்த ஆராய்ச்சி முடிபு என்றாலும், தமிழ் மொழி அடிப்படையில் அது ஒரு முடிபு பெறாத ஆராய்ச்சியாகவே உள்ளது.

அதனால், தொல்காப்பியம் முதல் இக்கால மொழியியல் வரை உள்ள ஆராய்ச்சிகளை மறு ஆராய்ச்சிக்கு உட்படுத்தி, ஆழமான தமிழ் ஒலியனியல் ஆராய்ச்சியை மேற்கொள்வது தேவையாக உள்ளது.

ஆராய்ச்சிக் கட்டுரை

தமிழ் மொழியில் எழுத்துகள் 33 (உயிர்-12, மெய்-18, சார்பு-3). இங்கு எழுத்துகள் என்று குறிப்பிடப்படுவது ஒலி வடிவங்களை, வரி வடிவங்களை அல்ல. இந்த எழுத்துகள் தனித்து இயங்கும் பொழுது அவற்றின் ஒலியன்கள் 33. இவை, உயிர்மெய் எழுத்துக்களாகும் பொழுது 216 ஒலியன்கள் ஆகும். ஒரு மெய் எழுத்து இன்னொரு மெய் எழுத்தொடு மயங்கும் பொழுது, ஒலியன்கள் 18×18 என்று 324 ஆக விரியும்.

இந்த 33+216+324 (573) ஒலியன்களை ஆழமாக ஆய்ந்து பார்ப்போம். இக்கட்டுரையில், சில இடங்களில் IPA குறியீடுகள் பயன்படுத்தப் பட்டுள்ளது. அவை, இரு சாய்கோடுகளுக்கு (//) இடையில் வரும்.

உயிர் எழுத்துகள்
தொல்காப்பியத்தில்,

உயிர் எழுத்துகள் எவ்வாறு பிறக்கும் என்ற இலக்கணம் 5 நூற்பாக்களில் மிகச் சுருக்கமாகப் பிறப்பியலில் விளக்கப்பட்டு உள்ளது.

அந்த நூற்பாக்கள்;

க) அவ் வழி,
பன்னீர் உயிரும் தம் நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.

உ) அவற்றுள்,
அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்.

ங) இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப் பால் ஐந்தும் அவற்று ஓரன்ன
அவைதாம்,
அண்பல் முதல் நா விளிம்பு உறல் உடைய.

ச) உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப் பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்.

ரு) தம்தம் திரிபே சிறிய என்ப.

அஃதாவது, தொல்காப்பியர் உயிர் எழுத்துகளை மூன்று வகையாகப் பிரித்து உள்ளார். அவற்றுள் சிற்சில வேறுபாடுகள் மட்டுமே உண்டு என்பதனால், தம்தம் திரிபே சிறிய என்ப, என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர, உயிர் எழுத்துகள் குறில் நெடில் என இரு வகைப்படும் என்பதனை நூல் மரபியலில் விளக்கி உள்ளார் தொல்காப்பியர்.

இக்கால மொழியியலில்

நாக்கின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டு உயிர் ஒலிகளை ஐந்தாகப் பிரித்து, ஐ ஔ எழுத்துகளைக் கூட்டொலிகளாக வகைப்படுத்தி உள்ளனர்.

அவை;

1) முன் அண்ண உயிர் ஒலிகள் (front vowels), இ ஈ /i iː/.

2) பின் அண்ண உயிர் ஒலிகள் (back vowels), உ ஊ /u uː/.

3) முன் இடை உயிர் ஒலிகள் (front mid vowels), எ ஏ /e eː/.

4) பின் இடை உயிர் ஒலிகள் (back mid vowels), ஒ ஓ /o oː/

5) தாழ் நடு உயிர் ஒலிகள் (low centre vowels), அ ஆ /a aː/

மற்றும் கூட்டொலிகள் (diphthongs), ஐ ஔ /aɪ aʊ/.

கூட்டொலிகளைத் தவிர்த்து, குறில் நெடில் வேறுபாட்டைக் காட்ட, நெடில் எழுத்துக்களுக்கு /ː/ என்ற குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

மற்றொரு பாகுபாடும் உள்ளது. இதழ்களின் முயற்சியை அடிப்படையாகக் கொண்டு உயிர் ஒலிகளை இரண்டாகப் பிரித்து, ஐ ஔ எழுத்துகளை கூட்டொலிகளாக வகைப்படுத்தி உள்ளனர்.

அவை;

1) இதழ் குவியா உயிர் ஒலிகள் (unrounded vowels), அஆ இஈ எஏ

2) இதழ் குவி உயிர் ஒலிகள் (rounded vowels), உஊ ஒஓ

மற்றும் கூட்டொலிகள் (diphthongs), ஐ ஔ.

இதழ் குவியா உகர எழுத்தைக் குறிக்க /ɯ/ என்ற குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

இந்த ஆராய்ச்சியில்,

உயிர் எழுத்துகளை மூன்று வகையாகப் பிரித்து உள்ளேன்.

அவை;

க) 6 அடிப்படை உயிர் எழுத்துகள் (அஆ இஈ உஊ)

உ) 4 அகக் கூட்டொலிகள் (எஏ ஒஓ)

ங) 2 புறக் கூட்டொலிகள் (ஐ ஔ)

உயிர் எழுத்துகளை ஒலிப்பதற்கு நாக்கின் முயற்சி அதிகம் தேவை இல்லை என்பது கருத்து. நுணி நா, கீழ்ப்பல்லின் உட்பகுதியில் பொருந்த அனைத்து உயிரெழுத்துகளையும் இயல்பாகவும் எளிமையாகவும் ஒலிக்க முடியும். இவ்வாறு ஒலிப்பதற்கு நாக்கின் (குறிப்பாக நுனி நாக்கின்) முயற்சி அதிகம் தேவையில்லை.

அடிப்படை உயிர் எழுத்துகள் ஆ ஈ ஊ என்ற உணர்ச்சி எழுத்துகள். இம்மூன்றும் குறுகி அ இ உ என்று ஆகும்.

அங்காத்தல் முயற்சியால் பிறப்பது **அஆ**.

இளித்தல் முயற்சியால் பிறப்பது **இஈ**. (இளித்தல் என்பதைப் பல்களைக் காட்டுதல் முயற்சியொடு, முதல் நா விளிம்பு இரு பக்கமும் அண்பல்களைப் பொருந்தும் முயற்சியும் சேர்ந்த நிலை என்று கொள்க)

இதழ் குவித்தல் முயற்சியால் பிறப்பது **உஊ**.

இவற்றில் அகரமும் உகரமும், பேச்சு வழக்கில் தனிச் சிறப்புடையது. அகரம், மொழிமுதல் மற்றும் இடை எழுத்தாக வரும் பொழுது, /a/ என்று அங்காத்தல் முயற்சியால் ஒலிக்கும். ஆனால், மொழியீற்றில் வரும் பொழுது, அங்காத்தல் முயற்சி கொஞ்சம் குறைந்து, இளித்தல் முயற்சி கொஞ்சம் கலந்து /ə/ என்ற ஒலித்திரிபு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, வளர்க என்ற சொல், /valaṙkə/ என்று ஒலிக்கப்படுகிறது. இதை நாம் valaṙka/ என்று ஒலிப்பது இல்லை.

இது போலவே, முற்றியலுகரத்திலும் இடத்திற்கு தகுந்தவாறு ஒலிப்பு முறையில் திரிபு ஏற்படுகிறது. மொழியீற்றில் மட்டும் இதழ் குவித்தல் முயற்சி கொஞ்சம் குறைந்து, இளித்தல் முயற்சி கொஞ்சம் கலந்து /ɨ/ என்று ஒலிக்கும் முற்றியலுகரம், பிற இடங்களில் இதழ் குவித்தல் முயற்சியால் /u/ என்று ஒலிக்கிறது. எடுத்துக்காட்டாக, உழு என்ற சொல், /uɻɨ/ என்று ஒலிக்கிறது. இதை நாம் /uɻu/ என்று ஒலிப்பது இல்லை. அகரம் மற்றும் உகரத்திற்கு இரு வகை ஒலியன்கள் உள்ளதனால், அஆ இஈ உஊ என்ற 6 அடிப்படை உயிர் எழுத்துகளுக்கு 8 **ஒலியன்கள்**.

மற்ற உயிர் எழுத்துகள் (எஏ ஐ ஒஓ ஔ) ஒவ்வொன்றுக்கும் ஓர் ஒலியன் என்று **6 ஒலியன்கள்** இருக்கும்.

இளித்தலோடு அங்காத்தல் முயற்சியால் பிறப்பது **எஏ**. **இதழ் குவித்தலோடு அங்காத்தல்** முயற்சியால் பிறப்பது **ஒஓ**. இவை நான்கும் **அகக் கூட்டொலிகள்**.

உடம்படு மெய்யின்றி அகரத்தின் பின் இகரத்தை ஒலித்தால் **ஐ** பிறக்கும். அதேபோல், **அகரத்தின் பின் உகரத்தை** ஒலித்தால் **ஔ** பிறக்கும். இவ்விரண்டும் **புறக் கூட்டொலிகள்**.

ஆக, 12 உயிர் எழுத்துகளுக்கு **14 ஒலியன்கள்**.

தொல்காப்பிய பிறப்பியலில், இந்த ஒலி வேறுபாடுகளைக் குறிக்க,

தம்தம் திரிபே சிறிய என்ப,

என்ற நூற்பா உள்ளது. மேலே குறிப்பிட்டது போல, பேச்சு வழக்கின் மொழி ஈற்றில் மட்டுமே அகர மற்றும் உகர எழுத்துகளில் ஒலித்திரிபுகள் ஏற்படுவதால், தொல்காப்பியர் இதனை விளக்கி எழுதாமல் விட்டு இருக்கலாம்.

மெய் எழுத்துகள்

தொல்காப்பியத்தில்,

மெய் எழுத்துகளை மூன்றாகப் பிரித்துள்ளார் தொல்காப்பியர். அவை வல்லினம் (கசடதபற), மெல்லினம் (ஙஞணநமன) மற்றும் இடையினம் (யரலவழள). மேலும், மெய் எழுத்துகளின் பிறப்பைக் குறிக்க 12 நூற்பாக்கள் உள்ளன.

அவை,

க) ககார ஙகாரம் முதல் நா அண்ணம்.

உ) சகார ஞகாரம் இடை நா அண்ணம்.

ங) டகார ணகாரம் நுனி நா அண்ணம்.

ச) அவ் ஆறு எழுத்தும் மூ வகைப் பிறப்பின.

ரு) அண்ணம் நண்ணிய பல் முதல் மருங்கில்
நா நுனி பரந்து மெய் உற ஒற்ற
தாம் இனிது பிறக்கும் தகார நகாரம்.

சு) அணரி நுனி நா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்.

எ) நுனி நா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

அ) நா விளிம்பு வீங்கி அண்பல் முதல் உற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

கூ) இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்.

ரு) பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும்.

ரூக) அண்ணம் சேர்ந்த மிடற்று எழு வளி இசை
கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்.

ரூஉ) மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளி இசை யாப்புறத் தோன்றும்,

என்று முடிகிறது.

இவற்றுள், ஒரு சில நூற்பாக்கள் இடைச்செருகலாக இருக்கலாம் என்பது கருத்து. அவற்றை, கட்டுரையின் அடுத்தப் பகுதிகளில் பார்ப்போம்.

இக்கால மொழியியலில்,

மெய் ஒலிகளை இரு வகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். அவை ஒலிக்கருவிப் பாகுபாடு மற்றும் ஒலிப்புமுறைப் பாகுபாடு என்பன ஆகும்.

ஒலிக்கருவிப் பாகுபாடு;

1) ஈரிதழ் (bilabial), ப ம /pa ma/.

2) பல் இதழ் (labiodental), வ /ʋa/.

3) பல் (dental), த ந /t̪a n̪a/.

4) அண்பல் (alveolar), ர ற ன ல /ɾa ta na la/.

5) வளை நா (retroflex), ட ண ள ழ /ʈa ɳa ɭa ɻa/.

6) நடு அண்ணம் அல்லது வல் அண்ணம் (palatal), ச ஞ ய /tɕa ɲa ja/.

7) பின் அண்ணம் அல்லது மெல் அண்ணம் (velar), க ங /ka ŋa/.

ஒலிப்புமுறைப் பாகுபாடு;

1) வெடிப்பொலிகள் (plosive sounds), கசடதப

2) மூக்கொலிகள் (nasal sounds), ஙஞணநமன

3) மருங்கொலிகள் (lateral sounds), ல ள

4) வருடொலிகள் (flap sounds), ர ழ ற

5) அரை உயிர்கள் (semivowels), ய வ

இவற்றைத் தவிர, வல்லின எழுத்துகள் குரல் இலா ஒலிகள் (voiceless sounds), குரல் உடை ஒலிகள் (voiced sounds) என்றும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. வல்லின எழுத்தின் ஒலி, மொழி முதலில், வல்லின மெய் எழுத்தைத் தொடர்ந்து அல்லது மெய் எழுத்தாக வரும் இடங்களில், குரல் இலா ஒலி என்றும், பிற இடங்களில் குரல் உடை ஒலி என்றும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கால மொழியியலில், மேலே குறிப்பிட்ட அந்தப் பாகுபாடுகளில் சில குறைபாடுகள் உள்ளன. அவற்றைப் பார்ப்போம்.

இந்த ஆராய்ச்சியில்,

காற்று எவ்விடத்தில் அதிகம் வெளிப்படுகிறது என்ற அடிப்படையில் மெய் எழுத்துகளை மூன்றாகப் பிரிக்கலாம்.

க) வல்லினம் (கசடதபற) வெடிப்பொலி (நெஞ்சில் நிற்கும் காற்று வெடித்து மிடற்றின் வழி வெளிப்படுகிறது).

உ) மெல்லினம் (ஙஞணநமன) மூக்கொலி (மிடற்றின் வழியும் மூக்கின் வழியும் காற்று வெளிப்படுகிறது). இவற்றுள், மகரம் விதிவிலக்கு (காற்று மூக்கில் மட்டும் வெளியே செல்கிறது).

ங) இடையினம் (யரலவழள) மிடற்றொலி (உயிர் எழுத்துகளைப் போல மிடற்றின் வழி மட்டுமே காற்று வெளிப்படுகிறது).

இந்த ஆராய்ச்சியிற்காக, மெய்யெழுத்துகளை அசையா உறுப்புகள் (அண்ணம், அண்பல், மேல் பல் மற்றும் மேல் இதழ்), அசையும் உறுப்புகள் (நாக்கு மற்றும் கீழ் இதழ்) என்ற அடிப்படையில் இரு வேறு வகையாகப் பிரித்து உள்ளேன். அசையா உறுப்புகள் என்று இங்கு குறிப்பிடுவது, மிடற்றின் வழி வெளிப்படும் காற்று தடைப்படும் இடம் எனக் கொள்க.

இவற்றை, சில வரைபடங்களில் பார்ப்போம்.





முதல் அண்ண ஒலிகள்



இடை அண்ண ஒலிகள்



நுனி அண்ண ஒலிகள்

அண்பல் ஒலிகள்

பல் ஒலிகள்

இதழ் ஒலிகள்

மேலே உள்ள படங்களில், அசையா உறுப்புகள் அடிப்படையில் ஒலிகள் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்ந்து பார்ப்போம்.

மெய்யெழுத்துகளில் இனவெழுத்துகள் என்று நமக்குக் கற்பிக்கப்பட்டது வல்லினமும் மெல்லினமும் (கங சஞ டண தந பம றன).

ஆனால், மெய் எழுத்துகளின் ஒலியன்களை ஆழ்ந்து ஆராய்ந்தால் வல்லின மெல்லின எழுத்துகளோடு இடையின எழுத்துகளும் இணைந்து இனவெழுத்துகளாகும் என்பதனை நாம் ஒலித்து உணர முடியும்.

கஙவொடு ழ, சஞவொடு ய, டணவொடு ள, தநவொடு ர, பமவொடு வ மற்றும் றனவொடு ல என்று மும்மூன்றாக கஙழ, சஞய, டணள, தநர, பமவ, றனல என இவை இனவெழுத்துகளாகும்.

இவற்றை அசையா உறுப்புகள் அடிப்படையில், அஃதாவது அசையும் உறுப்புகள் அசையா உறுப்புகளை எவ்விடத்தில் தொடுகின்றன அல்லது பொருந்துகின்றன என்பதன் அடிப்படையில், நான்காகப் பகுக்கலாம். அவை;

க) அண்ண ஒலிகள் (கஙழ /kaŋaɻa/, சஞய /caɲaja/, டணள /ʈaɳaɭa/). கஙழ முதல் அண்ணம், சஞய இடை அண்ணம், டணள நுனி அண்ணம். இதில் ழகாரம் தனித்துவமானது. நமக்குக் கற்பிக்கப்பட்டது, முதல் அண்ணத்தை நுனி நா வருட ழகாரம் பிறக்கும் என்பது. ஆனால், நாக்கின்

பின் (முதல் நா) பகுதியைக் கொண்டு இயல்பாக முதல் அண்ணத்தை வருடினாலும் ழகாரம் கொஞ்சம் மெல்லிய ஒலிப்பொடு பிறக்கும்.

உ) அண்பல் ஒலிகள் (றனல /tanala/). நுனி நா அண்பல்லை ஒற்ற றனல பிறக்கும்.

ங) பல் ஒலிகள் (தநர /t̪anr̪a/). நாக்கின் முன் பகுதி மேற்பல்களை ஒற்ற தந பிறக்கும். அது போலவே, நாக்கின் முன் பகுதி மேற்பல்களை வருட ரகாரம் பிறக்கும்.

ச) இதழ் ஒலிகள் (பமவ /pamʋa/). வகாரம் பல் இதழ் ஒலி என்றாலும், இயல்பாக ஒலிக்கும் பொழுது மேல் பல்களை விட மேல் இதழே கீழ் இதழோடு அதிகம் பொருந்துவதை நாம் ஒலித்து உணரலாம்.

வல்லினம் நீங்கலாக, மெய் எழுத்துகளுக்கு மொத்தம் **12 ஒலியன்கள்**.

<u>வல்லினம்</u>

வல்லின எழுத்துகளில், அவை சார்ந்து வரும் எழுத்துகளுக்கு ஏற்றார் போல, பல ஒலித்திரிபுகள் ஏற்படுகின்றன. அந்த ஒலித்திரிபுகளை நாம் 7 பிரிப்புகளாகப் பிரிக்கலாம்.

அவை;

க) மொழி முதல் அல்லது மெய் எழுத்தாக வரும் வல்லினம்
உ) வல்லினத்தைத் தொடரும் வல்லினம்
ங) மெல்லினத்தைத் தொடரும் வல்லினம்
ச) இடையினத்தைத் தொடரும் வல்லினம்
ர) குறிலைத் தொடரும் வல்லினம்
சு) நெடிலைத் தொடரும் வல்லினம்
எ) ஆய்தத்தைத் தொடரும் வல்லினம்

மெய்ம்மயக்கங்களில் ஒலித்திரிபுகள் ஏற்படுவதால், அவற்றை தனி ஒலியன்களாகக் கொள்வோம். அவற்றை மெய்ம்மயக்கப் பகுதியில் ஆய்வோம். இங்கு, வல்லின ஒலித்திரிபுகளுக்கு எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

க) கசதப மட்டுமே மொழி முதல் ஆகும்.

கப்பல், சாட்டை போன்ற சொல்களில் கசதப, /ka ca ʈa pa/ என்று ஒலிக்கும் (**4 ஒலியன்கள்**). கசதப புள்ளி எழுத்துகள் மொழி முதல் எழுத்துகள் போலவே ஒலிக்கும். டற புள்ளி எழுத்துகள் /ʈa ta/ என்று ஒலிக்கும் (2 **ஒலியன்கள்**).

உ) காட்சி, பட்டம், கற்போம் போன்ற சொல்களில் கசடதபற குரல் இலா ஒலிகளாக /kha cha ʈha t̪ha pha tha/ போன்று கொஞ்சம் மெலிந்து ஒலிக்கும்.

ங) மஞ்சள், அந்த, பாம்பு போன்ற சொல்களில் கசடதபற குரல் உடை ஒலிகளாக /ga ɟa ɖa ɖ̪a ba da/ போன்று ஒலிக்கும்.

ச) வாழ்க, ஓய்தல் போன்ற சொல்களில் கசதப எப்படி ஒலிக்கும் என்பதைக் குறிக்க IPA குறியீடுகள் இல்லை. இடையின எழுத்தைத் தொடர்ந்து டற மயங்கா.

ரு) உடை, உறை போன்ற சொல்களில் கசடதபற குரல் உடை ஒலிகளாக /ɣa ɢa ɾa ðа ʋa ra/ போன்று ஒலிக்கும் (6 **ஒலியன்கள்**)

சு) பாதை, ஆசை போன்ற சொல்களில் கசடதபற /ɣha ɢha ɾha ðha ʋha rha/ போன்று குறில் எழுத்துகளுக்குப் பின் வரும் வல்லினத்தை விட கொஞ்சம் மெலிந்து ஒலிக்கும் (**6 ஒலியன்கள்**).

எ) எஃகம், கஃசு போன்ற சொல்களில் கசடதபற எப்படி ஒலிக்கும் என்பதைக் குறிக்க IPA குறியீடுகள் இல்லை. அவை நெடில் எழுத்துக்களுக்குப் பின் வரும் வல்லினத்தை விட மேலும் மெலிந்து ஒலிக்கும் (6 **ஒலியன்கள்**).

மெய்ம்மயக்க வல்லின எழுத்துகள் நீங்கலாக, இது வரை, வல்லின எழுத்துகளுக்கு **24 ஒலியன்கள்**.

பட்டியலில் உள்ளவாறு, மேல் இருந்து கீழ், வல்லின எழுத்துகளை ஒலிக்கும் பொழுது அவற்றின் வலிமை படிப் படியாகக் குறைந்து வருவதை நாம் ஒலித்து உணர முடியும். இதுவும் தமிழ் மொழியின் தனிச்சிறப்பு. அஃதாவது, வல்லின எழுத்துகளில், அவை வரும் இடங்கள், மற்றும் சார்ந்து வரும் எழுத்துகளுக்கு ஏற்றார்போல ஒலியன்களில் திரிபுகள் ஏற்படுகின்றன. இதுவே இயற்கை. இந்த விதியை நாம் ஆழ்ந்து உணர்ந்து உள் வாங்கிக் கொள்ள வேண்டும். இந்த ஒலித்திரிபுகளுக்கு இது வரை தமிழில் எந்த இலக்கணமும் முறையாக எழுத்தப் படவில்லை. தொல்காப்பியத்திலும் இந்த இலக்கணம் இல்லை. தொல்காப்பியத்தில் இருந்து இதனைச் சார்ந்த நூற்பாக்கள், படி எடுத்தவர்களால் நீக்கப்பட்டு இருக்கக் கூடும்.

தொல்காப்பியப் பிறப்பியலில் இது விளக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், தொல்காப்பியத்தில் பல இடைச் செருகல்கள் உள்ளது போல, பிறப்பியலிலும் பல நூற்பாக்கள் நீக்கப்பட்டு அல்லது மாற்றி அமைக்கப்பட்டு இருக்கக் கூடும். இஃது ஆரிய சூழ்ச்சியாக இருப்பதற்கு வாய்ப்புண்டு. இக்கூற்றுக்குக் காரணங்கள் பல.

அவற்றுள் சில;

க) தொல்காப்பியத்தில் உள்ள 27 இயல்களில், மிகக் குறைந்த எண்ணிக்கையில் 20 நூற்பாக்கள் மட்டுமே பிறப்பியலில் உள்ளது. பல நூற்பாக்கள் நீக்கப்பட்டு இருப்பதற்கு வாய்ப்புண்டு.

உ) அணரி என்ற சொல் தொல்காப்பியத்தில் ஈர் இடங்களில் மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது. அவை,

அணரி நுனி நா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்.
நுனி நா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும.

இவ்விரு நூற்பாக்கள், வடமொழியில் இல்லாத றகாரம் மற்றும் ழகாரம் பற்றியவை. அணரி என்ற சொல் முதல் நூற்பாவில் முதல் சொல்லாகவும், இரண்டாம் நூற்பாவில் இடம் மாற்றி மட்டும் வைக்கப் பட்டுள்ளது.

இது தவிர, முதல் நூற்பாவில் நுனி நா அண்ணம் என்று உள்ளது. இஃது உண்மை எனின், டணவும் றனவும் ஒரே இடத்தில் பிறக்கும் என்றாகிவிடும். ஆனால், டணவும் றனவும் ஒரே இடத்தில் பிறக்காது என்பது, தமிழ் பேசும் தமிழர் அனைவருக்கும் தெரியும்.

இரண்டாம் நூற்பாவில் ரகார ழகாரம் வருடொலி என்ற குறிப்பு இருப்பினும், நுனி நா எவ்விடத்தில் அண்ணத்தை வருடும் என்ற குறிப்பு இல்லை.

இன்னும் ஒரு பிழையான நூற்பாவும் உள்ளது. மேலே குறிப்பிட்ட இரண்டு நூற்பாக்களைத் தொடர்ந்து வரும் அடுத்த நூற்பா,

நா விளிம்பு வீங்கி அண்பல் முதல் உற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

இந்த நூற்பாவும் 'ஆயிரண்டும் பிறக்கும்' என்று முடிகிறது.

நூற்பாவில் ளகாரம் வருடொலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ளகார எழுத்தை ஒலித்துப் பார்த்தால் அது வருடொலி அல்ல, ஒற்றொலிதான் என்பதை மிக எளிமையாக நாம் புரிந்து கொள்ள முடியும்.

மூல நூற்பாக்கள் நீக்கப்பட்டு, தமிழ் இலக்கணம் அறியாதவர்களால் இம்மூன்று நூற்பாக்கள் செருகப் பட்டிருப்பதற்கு வாய்ப்பு அதிகம்.

ங) தனிநிலை என்று அறியப்படும் ஆய்தம் எவ்விடத்தில் பிறக்கும் என்ற குறிப்பு இல்லை. மூல நூற்பா நீக்கப்பட்டு இருப்பதற்கு வாய்ப்பு உண்டு.

ச) கடைசி நூற்பாவில் அந்தணர் பற்றிய குறிப்பு. இஃது இடைச்செருகலாக இருக்க வாய்ப்பு உண்டு.

ரு) மெய்கள் மயங்கும் வேளையில் ஏற்படும் ஒலித்திரிபுகள், குறிப்பாக இடம் சார்ந்த வல்லின எழுத்துகளின் ஒலித்திரிபுகள் பிறப்பியலில் விளக்கப் படவில்லை.

சூ) உயிர் எழுத்துகளில் ஒலித் திரிபுகள் ஏற்படும் என்பதைக் குறிக்க 'தம்தம் திரிபே சிறிய என்ப' என்று எழுதி இவ்வளபு ஆழமாக மொழியை ஆய்ந்த தொல்காப்பியர் உறுதியாக மெய் எழுத்துகளின் ஒலித்திரிபுகளையும் விளக்கி இருந்திருப்பார். அந்த நூற்பாக்கள் நீக்கப்பட்டு இருக்கக் கூடும்.

மெய்ம்மயக்கம்

வல்லின எழுத்தகளைப் போல, மெல்லின மற்றும் இடையின எழுத்துகளில் இடம் சார்ந்த ஒலித்திரிபுகள் ஏற்படுவதில்லை என்றாலும், இரண்டு அல்லது மூன்று மெய் எழுத்துகள் மயங்கும் பொழுது சிற்சில ஒலித்திரிபுகள் ஏற்படுகின்றன.

இந்த ஒலித்திரிபுகளை ஆய்வதற்காக மெய் எழுத்துகளை அசையும் உறுப்புகள் அடிப்படையில் பாகுபாடு செய்து உள்ளேன்.

அந்தப் பாகுபாடு;

க) முதல் மற்றும் இடை நா ஒலிகள் (கஙழ மற்றும் சஞய)

உ) நுனி நா ஒலிகள் (டணள மற்றும் றனல)

ங) முன் நா ஒலிகள் (தநர)

ச) இதழ் ஒலிகள் (பமவ)

குறிப்பிட்ட நான்கு வகை ஒலியன் கூட்டங்களில், ஒலிப்பதற்குக் கடினமானவை நுனி நா ஒலிகளே. இந்த ஒலிகளை ஒலிக்க, நாவின் நுனி மேல் நோக்கிச் சென்று அண்ணத்தைப் பொருந்த வேண்டும். இதற்கு அதிகமான முயற்சி தேவைப்படுகிறது.

அதனால்தான்;

தமிழ் மொழியில் இந்த ஒலியன்கள் மொழி முதலாக வருவதில்லை.

நுனி நா ஒலிகள், ஏனைய மூன்று வகை மெய் எழுத்துகளுக்குப் பின் வந்து மயங்குவதில்லை.

நுனி நா ஒலிகளைத் தொடர்ந்து, முன் நா ஒலிகள் மயங்குவதில்லை.
டணள ஒலியன்கள் றனல ஒலியன்களொடு மயங்குவதில்லை.
தொல்காப்பியத்தில் உள்ள மெய்ம்மயக்க விதிகளை ஆராய்வதற்குக் கீழே உள்ள அட்டவணையைப் பார்ப்போம். அட்டவணையில்;

ஆ - ஆம், மயங்கும்.
தி - திரியும், அஃதாவது தோன்றல், கெடுதல் அல்லது மெய் பிறிது ஆதல்.

இ - இல்லை, மயங்குவதில்லை.

உ - உள்ளது, புழக்கத்தில் உள்ளது.

வரும் மெய் / முதல் மெய்	ழ	ங	க	ய	ஞ	ச	ள	ண	ட	ல	ன	ற	ர	ந	த	வ	ம	ப
ழ	இ	ஆ	ஆ	ஆ	ஆ	ஆ	இ	இ	இ	இ	இ	இ	இ	ஆ	ஆ	ஆ	ஆ	ஆ
ங	இ	ஆ	ஆ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ
க	இ	இ	ஆ	உ	உ	இ	இ	இ	உ	இ	இ	இ	இ	இ	உ	இ	இ	இ
ய	இ	ஆ	ஆ	ஆ	ஆ	ஆ	இ	இ	இ	இ	இ	இ	இ	ஆ	ஆ	ஆ	ஆ	ஆ
ஞ	இ	இ	தி	ஆ	ஆ	ஆ	இ	இ	இ	இ	இ	இ	இ	தி	தி	தி	தி	தி
ச	இ	இ	இ	இ	இ	ஆ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ

ள	இ	இ	ஆ	ஆ	தி	ஆ	ஆ	இ	இ	இ	இ	இ	இ	தி	தி	ஆ	தி	ஆ
ண	இ	இ	ஆ	ஆ	ஆ	ஆ	இ	ஆ	ஆ	இ	இ	இ	இ	தி	தி	ஆ	ஆ	ஆ
ட	இ	இ	ஆ	இ	இ	ஆ	இ	இ	ஆ	இ	இ	இ	உ	இ	இ	இ	இ	ஆ
ல	இ	இ	ஆ	ஆ	தி	ஆ	இ	இ	உ	ஆ	இ	இ	இ	தி	தி	ஆ	தி	ஆ
ன	இ	இ	ஆ	ஆ	ஆ	ஆ	இ	இ	இ	இ	ஆ	ஆ	இ	தி	தி	ஆ	ஆ	ஆ
ற	இ	இ	ஆ	இ	இ	ஆ	இ	இ	இ	இ	இ	ஆ	இ	இ	இ	இ	இ	ஆ
ர	இ	ஆ	ஆ	ஆ	ஆ	ஆ	இ	உ	உ	இ	இ	இ	இ	ஆ	ஆ	ஆ	ஆ	ஆ
ந	இ	இ	தி	ஆ	தி	தி	இ	இ	இ	இ	இ	இ	இ	ஆ	ஆ	தி	தி	தி
த	இ	இ	இ	உ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	ஆ	இ	உ	இ
வ	இ	இ	தி	ஆ	தி	தி	இ	இ	இ	இ	இ	இ	இ	தி	தி	ஆ	தி	தி
ம	இ	இ	தி	ஆ	தி	தி	இ	இ	இ	இ	இ	இ	இ	தி	தி	ஆ	ஆ	ஆ
ப	இ	இ	இ	இ	இ	இ	இ	இ	உ	இ	இ	இ	உ	இ	உ	இ	இ	ஆ

முதல் மெய் எழுத்துகள், மேல் இருந்து கீழ் உள்ள வரிசையில்

பச்சை நிற எழுத்துகள் மொழி ஈறு ஆகும், சிவப்பு நிற எழுத்துகள் மொழி ஈறு ஆகா.

வரும் மெய் எழுத்துகள், இடம் இருந்து வலம் உள்ள வரிசையில் பச்சை நிற எழுத்துகள் மொழி முதல் ஆகும், சிவப்பு நிற எழுத்துகள் மொழி முதல் ஆகா.

மயங்கும் மெய் ஒலிகள்

இயல்பாகவும் எளிமையாகவும் மயங்கும் எழுத்துகள் அனைத்தும் தொல்காப்பியத்தில் பட்டியல் இடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அதிக முயற்சி இன்றி மயங்கும் மெய்கள். அஃதாவது, ஒரு மெய் எழுத்தை ஒலித்த பிறகு, ஒலிப்பில் இடைவெளி இல்லாமல், மற்றொரு மெய் அல்லது உயிர்மெய் எழுத்தை ஒலிக்க முடியும் என்றால், அதுவே மெய்ம்மயக்கம்.

சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்;

க) பாழ்ங்கிணறு, நேர்ந்தது. இவை ஈரொற்று மெய்ம்மயக்கம். முதல் சொல்லில், ழங்க என்று மெய் எழுத்துகள் மயங்குகின்றன. இம்மூன்றும் முதல் அண்ண ஒலிகள். இது போலவே, இரண்டாம் சொல்லில் ரநத என்று மயங்கும் மூன்று எழுத்துகளும் பல் ஒலிகள். ஆதலால், இயல்பாய் இம்மெய் எழுத்துகள் மயங்குகின்றன.

உ) செல்க, முயற்சி, கொள்க, நுட்பம், வில்யாழ், கள்வர், உண்மை, வின்ஞான். இச்சொல்கள் அனைத்திலும் நுனி நா ஒலிகள், முன் நா ஒலிகளைத் தவிர வேறு வகை ஒலிகளோடு (முதல், இடை நா மற்றும இதழ் ஒலிகள்) இயல்பாக மயங்குகின்றன.

ங) தங்கம், இஞ்சி, அண்டம் போன்ற சொல்களில் மெல்லினம், அவற்றின் இன வல்லினத்தொடு மயங்குகின்றன.

இப்படி பல வகை மெய்ம்மயக்கங்கள் தமிழ் மொழியில் உள்ளன. அட்டவணையில் உள்ளவாறு பொருத்திக் கொள்க. அட்டவணையில், இயல்பாக எந்தத் திரிபும் இன்றி மயங்கும் மெய் எழுத்துகள் புதிய ஒலியன்கள் ஆகிவிடும். இவை, 86 ஒலியன்கள் ஆகும். இவற்றுள், 16 உடனிலை

மெய்ம்மயக்க எழுத்துகளில் ஒலித்திரிபுகள் ஏற்படுவதில்லை. வேற்று நிலை மெய்ம்மயகத்தில் மட்டுமே ஒலித்திரிபுகள் ஏற்படுகின்றன. ஆதலால், அவை 86-16 என்று 70 **ஒலியன்கள்** ஆகும்.

ஈரொற்று மயக்கம் அட்டவணையில் இல்லை. யரழ மெய்களொடு கசதப ஙஞநம மெய்கள் ஈரொற்று ஆகும். ஆக, இவற்றுக்கு **24 ஒலியன்கள்** (3×8).

ஆக, மெய்ம்மயக்கத்தால் **94** (70**+24**) **புதிய ஒலியன்கள்** உருவாகின்றன.

திரிந்து மயங்கும் மெய் எழுத்துகள்

இந்த மெய் எழுத்துகள் இயல்பாக ஒரு சொல்லில் மயங்கி வருவதில்லை. இரண்டு சொல்கள் புணரும் பொழுது, மெய் எழுத்துகளில் திரிபுகள் ஏற்படுகின்றன. சில எடுத்துக்காட்டுகளில் பார்ப்போம்.

க) முள் தீது, வெண் நிலா, நல் நீர், மான் தலை என்ற சொல்களில் நுனி நா ஒலிகளைத் தொடர்ந்து முன் நா ஒலிகள் வருகின்றன. வரும் முன் நா ஒலிகள் அனைத்தும் நுனி நா ஒலிகளாகத் திரிந்து மயங்கும். அவை முறையே, மு஁டீது, வெண்ணிலா, நன்னீர், மான்றலை என்று திரிந்து ஒலிக்கும்.

உ) மரம் கிளை, அங்கம் + கள் (பன்மை விகுதி), மரம் சிறிது, மரம் நிழல், அவ் சிறிய, அவ் ஞாண்கள், இவ் நூல் என்ற சொல்களில் நிலை மொழி ஈற்றில் இதழ் ஒலிகள் வருகின்றன. மகர ஈற்று மெய், முதல், இடை மற்றும் முன் நா ஒலிகளொடு புணரும் பொழுது, நிலை மொழி இறுதி மகரம் கெட்டு, வரு மொழி முதலில் மெல்லினம் வந்தால் இயல்பாகவும், வல்லினம் வந்தால் மெல்லின அல்லது வல்லின மெய் தோன்றி புணர்கின்றன. அவை, முறையே மரக்கிளை, அங்கங்கள், மரஞ்சிறிது, மரநிழல் என்று திரிபு அடைந்து மயங்குகின்றன.

இது போலவே, நிலை மொழியின் வகர ஈறு கெட்டு, வரு மொழி முதலில் வல்லினம் வந்தால் ஆய்த எழுத்து தோன்றியும், மெல்லினம் வந்தால் மெல்லின எழுத்து தோன்றியும் புணர்கின்றன. அவை, அ஁சிறிய, அஞ்ஞாண்கள், இந்நூல் என்று ஆகும்.

இன்னும் பல வகையான மெய் எழுத்துத் திரிபுகள் தமிழ் மொழியில் உள்ளன. மேலும், வேற்றுமை மற்றும் அல்வழிப் புணர்ச்சியில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. விளக்கினால் கட்டுரை விரியும் என்பதால், தவிர்க்கிறேன். தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் இந்த இலக்கணங்கள் மிக ஆழமாக விளக்கப் பட்டுள்ளன.

மயங்கா மெய்கள்

இனி, மயங்கா மெய்கள் என்னென்ன, அவை ஏன் மயங்குவதில்லை என்று பார்ப்போம்.

க) *டற நீங்கலாக, மற்ற வல்லின எழுத்துகள் வேறு எந்த எழுத்துகளொடும் மயங்குவதில்லை. வல்லின எழுத்துகள் வெடிப்பொலி ஆதலால், அவற்றை ஒலிக்க அதிக முயற்சி தேவைப்படுகிறது. அதனால், ஓர் ஒலி இடைவெளி ஏற்படுகிறது அல்லது ஓர் உயிர் எழுத்து தொடர்ந்து வருகிறது. இப்படி ஒலிப்பில் இடைவெளி இருக்கக் கூடாது என்பதற்காகத்தான், இந்த மெய்ம்மயக்க இலக்கணம் தமிழ் மொழியில் உள்ளது. இந்த விதி, பல மெல்லின மற்றும் இடையின எழுத்துகளுக்கும் பொருந்தும்.*

டற மெய்கள், நுனி நா வல்லினம் என்பதால், அவற்றை ஒலித்த பிறகு, ஒலிப்பில் இடைவெளி இல்லாமல் கசப உயிர்மெய்களை (முதல், இடை நா மற்றும் இதழ் ஒலிகளை) இயல்பாக ஒலிக்க முடிகிறது. ஆதலால், இவை மயங்கும்.

உ) *எந்த மெய் எழுத்தையும் (ரழ உட்பட) தொடர்ந்து வருடொலிகள் (ரழ) மயங்கா. ஏற்கெனவே குறிப்பிட்டது போல,* ***ளகாரம் வருடொலி அல்ல****. ஆதலால், ளகாரம் ளகாரத்தொடு மயங்கும்.*

ங) *மேலே குறிப்பிட்டது போல, வேறு வகை மெய் எழுத்துகளொடு, பொதுவாக நுனி நா உயிர்மெய் எழுத்துகள் மயங்குவதில்லை.*

புழக்கத்தில் உள்ளன

இனி, புழக்கத்தில் உள்ள சில வேற்று மொழிச் சொல்களில் வரும் மயங்கா மெய்களை எடுத்துக்காட்டுகளொடு பார்ப்போம்.

க) பாக்யம், சமிக்ஞை, சத்யா, ஆத்மா, பெட்ரோல், நைட்ரசன், ஏப்ரல் போன்ற சொல்களில் வல்லின மெய் எழுத்துகளைத் தொடர்ந்து மெல்லின அல்லது இடையின எழுத்துகள் வருகின்றன. குறிப்பிட்ட வல்லின மெய் எழுத்துகளோடு அகரம், இகரம் அல்லது உகரம் சேர்த்து உயிர்மெய் எழுத்தாக ஒலித்தால்தான், அவற்றைத் தொடரும் ஒலிகளை இயல்பாக ஒலிக்க முடியும்.

அவை, முறையே பாக்கியம், சமிக்கிஞை/சமிக்குஞை, சத்தியா, ஆத்துமா, பெட்டுரோல், நைட்டரசன், ஏப்பிரல் என்று ஒலிக்கும். இவற்றுள், இந்த இலக்கணப் பிழைகளைத் தீர்க்க, சமிக்கை/சமிஞ்ஞை, ஆன்மா, பெற்றோல், நைதரசன் என்ற சொல்கள் புழக்கத்தில் உள்ளன.

உ) பக்தி, அக்டோபர், செப்டம்பர், சப்தம் என்ற சொல்களில் இரு வேறு வகை வல்லின மெய்கள் வருவதால், அவை இயல்பாக மயங்குவதில்லை. இடையில் ஓர் ஒலி இடைவெளி ஏற்படுகிறது.

ங) போல்ட்/போல்டு, வார்டு போன்ற சொல்களில், நாம் ஏற்கெனவே பார்த்தது போல, வேறு வகை மெய் எழுத்துகளொடு நுனி நா உயிர்மெய் எழுத்துகள் இயல்பாக மயங்குவதில்லை. இடையில் ஓர் உயிர் எழுத்து இணைகிறது. இவ்வாறு மயங்கா மெய்களைப் பயன்படுத்துவது தவறு.

மயங்கும் மெய்கள் 94 இருக்க, மயங்கா மெய்களை ஏன் பயன்படுத்த வேண்டும்?

உயிர்மெய் எழுத்துகள்

உயிர்மெய் எழுத்துகளுக்குத் தனி ஒலியன்கள் தேவையில்லை என்பது கருத்து. ஓர் எடுத்துக்காட்டு கொண்டு ஆய்வோம்.

தாளம் என்ற சொல்லில் இரண்டு உயிர்மெய் எழுத்துகள் உள்ளன. தனி எழுத்துகளாகப் பிரித்து எழுதினால், தஃகான் ஆகாரம் ளஃகான் அகரம் மஃகான் என்று அமையும். இங்கு, தகாரத்தைத் தொடர்ந்து, எந்த ஒலித்திரிபும் இல்லாமல் ஆகாரத்தை ஒலிக்க முடியும். போலவே, ளகரத்தைத் தொடர்ந்து அகரமும் ஒலிக்கும். ஒலித்திரிபுகள் ஏதும் இல்லை என்பதனால், உயிர்மெய் எழுத்துகளுக்குத் தனி ஒலியன்கள் இல்லை.

சார்பு எழுத்துகள்

கு ற்றியலிகரம், அரை மாத்திரை குறுகி ஒலிக்கும் இகரம். இந்த இகரம், வல்லின மெய் அல்லது மகர மெய் எழுத்துகளுக்குப் பின் வரும். அதைத் தொடர்ந்து யா வரும். நாடியாது (நாடு யாது), கேண்மியா என்ற சொல்களில் வரும் இகரம், குற்றியலிகரம். இந்த இகர ஒலியனைக் குறிக்க /i̽/ என்று எழுதலாம்.

போலவே, **குற்றியலுகரம்**, அரை மாத்திரை குறுகி ஒலிக்கும் உகரம். இந்த உகர ஒலியனைக் குறிக்க /u̽/ என்று எழுதலாம்.

குறில் எழுத்தைத் தொடர்ந்து, **ஆய்த எழுத்து**, வல்லின உயிர்மெய் எழுத்துக்கு முன் வரும். ஆய்த எழுத்துக்கு முறையான IPA குறியீடு இல்லை. வரும் காலத்தில், இதற்கு முறையான குறியீடு உருவாக்கப் படலாம்.

சார்பு எழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் ஓர் ஒலியன் என மொத்தம் **3 ஒலியன்கள்**.

<u>ஒலியன்கள்</u>

உயிர், 14.

மெய், 130 (12 (மெல்லினம் மற்றும் இடையினம்) + 24 (வல்லினம்) + 94 (மெய்ம்மயக்கம்)).

சார்பு, 3.

இவை அனைத்தும் **147 ஒலியன்கள்**.

ஆராய்ச்சியின் முடிபு

தொல்காப்பியம், இக்கால மொழியியல் மற்றும் இந்த ஆய்வின் வழி, தமிழ் மொழி, ஒலி வடிவங்களால் ஆனது என்பதை நாம் உணர்ந்து, புரிந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையை, நம் தமிழ் மக்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

கட்டுரையின் முதல் பகுதியில் குறிப்பிட்டது போல, தமிழ் மொழியில் 573 ஒலியன்கள் இல்லை, 147 **ஒலியன்களே** உள்ளன.

இந்த ஆராய்ச்சியில், வல்லின ஒலித்திரிபுகளை ஆழ்ந்து ஆராய்ந்து, அவை 7 வகையாக உள்ளன என்று புரிந்து கொண்டோம்.

நம் மொழியின் தனித்தன்மையைப் பாதுகாக்க வேண்டும் என்றால், மொழிபெயர்ப்புத் துறையில், குறிப்பாக ஒலிபெயர்க்கும் பொழுது மெய்ம்மயக்க விதிகளை மீறாமல், பின்பற்றி எழுதுவதே சிறந்தது. மெய்ம்மயக்க விதிகளைப் புரிந்து கொள்ள இந்த ஒலியன்களின் ஆராய்ச்சி உறுதியாகத் துணை புரியும்.

ஆராய்ச்சியின் பயன்கள்

தமிழருக்கு, குறிப்பாக மாணவருக்கு, தமிழ் ஒலியன்களைப் புரிந்து கொள்ள இந்த ஆராய்ச்சியின் முடிபுகள் உதவியாய் இருக்கும்.

எழுத்தாளர்கள், ஒலிபெயர்ப்பு செய்யும் பொழுது, இந்த ஆராய்ச்சியின் முடிபுகள் துணை புரியும்.

வருங்காலத்தில், தமிழ் அறிஞர் பலர் கூடிக் கலந்துரையாடி ஆய்ந்து ஒரு செந்தர ஒலிபெயர்ப்பு முறைமையை உருவாக்க இந்த ஆராய்ச்சி உதவும்.

முடிப்புரை

மரபு நிலை திரியின், பிறிது பிறிது ஆகும்.

மரபைப் போற்றிக் காப்பது தமிழரின் கடமையும் மரபும் ஆகும். தமிழ் மொழியை, மரபு நிலை திரியாமல் செழுமைப்படுத்துவது ஒவ்வொரு தமிழ் அறிஞரின் கடமை என்பதை மறுக்க இயலாது. இந்த ஆராய்ச்சியின் முடிபு இதற்குத் துணைப் புரியும் என நம்புகிறேன்.

மேற்கோள்கள்

க) தொல்காப்பியம், எழுத்ததிகாரம் மற்றும் பொருளதிகாரம் (மரபியல்).

உ) திருக்குறள், குறள் 27.

ங) தமிழ் வரலாறு, ஞா. தேவநேயப் பாவாணர், 1967.

ச) ஒலி மாற்ற வரலாறு, தமிழ் இணையக் கல்விக்கழகம் - Tamil Virtual Academy

ஞ) International phonetic alphabets, International Phonetic Association.

ட) Keane, Elinor (2004), “Tamil”, Journal of the International Phonetic Association, 34 (1): 111-116, doi:10.1017/S0025100304001549

ண) https://en.m.wikipedia.org/wiki/Tamil_phonology#

அ) https://en.m.wikipedia.org/wiki/Tamil_script#

தொ.மா.க. 164

புலம்பெயர் தமிழர் கல்விப்புலத்தில் தொல்காப்பியத்தின் செல்வாக்கு

க. லோககீதா
விரிவுரையாளர்
தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.
klgeeth@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

ஈழத்திலிருந்து பல்வேறு காரணிகளால் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்ற ஈழத் தமிழர்கள் தாம் வாழும் தேசங்களில் தமிழர்தம் வாழ்வியல் பண்பாடுகளோடும் இணைந்து வாழ்வது - தமிழ் மொழி, தமிழ்க் கல்வி, பண்பாடுசார் அமைப்புகள் ஐரோப்பிய நாடுகளில் பெற்றுள்ள வளர்ச்சியினூடாகக் கண்டுகொள்ளலாம். புலம்பெயர் தேசத்தில் மேற்குநாடுகளின் மாறுபட்ட கலாசார பண்பாட்டுத் தளங்களில் தமிழர் பாரம்பரிய வாழ்வியல் முறைகளையும் தமிழ்மொழியையும் அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதென்பது பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும் சவால்களையும் கொண்டது. ஐரோப்பிய நாடுகளின் கல்வி, பண்பாட்டு வாழ்வியல் முறையோடு பிறந்து வளர்ந்த இளையவர்கள் தமிழ்மொழிக் கல்வியையும் தொடர்கின்றனர். இவர்களது தமிழ்மொழிக் கற்கையில் தொல்காப்பியம் எத்தகைய செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதே ஆய்வுப் பிரச்சினை. இதனை வரலாற்று முறை, விவரண முறை ஆய்வு எனும் ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி கனடா, ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் முன்னெடுக்கப்படும் தொல்காப்பியம் தொடர்பான கற்கைநெறிகள், பாடத்திட்டங்கள் அவை தொடர்பான எதிர்கால செயற்பாடுகள், தொல்காப்பியத்தின் உலகளாவிய வியாபகம் என்பன பற்றிய வரலாற்றுப் பார்வை தொடர்பாக இக்கட்டுரை ஆய்வுசெய்வதோடு அவற்றை ஆவணப்படுத்தவேண்டிய தேவையும் உள்ளது. எனவே புலம்பெயர் தேசத்தில் தமிழர் கல்விப்புலத்தில் தொல்காப்பியத்தின் செல்வாக்கு தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஆவணப்படுத்தல்கள் மற்றும் விரிவான ஆய்வுகளுக்கும் இவ்வாய்வுக்கட்டுரையானது ஒரு திறவுகோலாக அமையும்.

திறவுச் சொற்கள்: - தொல்காப்பியம், புலம்பெயர் தேசம், இரண்டாம் மொழி தமிழ், கல்விப்புலம்

அறிமுகம்

தமிழ்மொழியின் தொன்மை வாய்ந்த நூலாகிய தொல்காப்பியம் தமிழர்தம் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகின்றமையை எமது நடைமுறை வாழ்வியலூடாகக் கண்டுகொள்ளலாம். தமிழர்கள் எங்கெல்லாம் பரந்து வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தொல்காப்பியத்தின் தாக்கமும் ஆழ வேரூன்றி அகலப் பரந்துள்ளது. அந்தவகையில் புலம்பெயர் தமிழர் கல்விப்புலத்தில் தொல்காப்பியமானது எத்தகைய செல்வாக்கைச் செலுத்துகின்றது என்பது தொடர்பாகவே இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது. ஈழத்தில் நிகழ்ந்த போராட்டத்தினால் வாழ்வியல் தஞ்சம் கோரி, தாய் நிலம் விட்டு ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அங்கு தம் வாழ்வியலை முன்னெடுத்த ஈழத்தமிழர்கள் புலம்பெயர் தமிழர்கள் என்ற வரையறைக்குள் உள்ளடக்கப்படுகின்றனர். வணிக நோக்கிலும் உயர்கல்விக்காகவும் காலங்காலமாக ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்வது சாதாரணமாகக் காணப்பட்டாலும் இலட்சக்கணக்கானவர்கள் அடியோடு புலம்பெயர்ந்த காலப்பகுதி எண்பதுகளில் ஆரம்பித்தது. தம் வாழ்வியலிலிருந்து முற்றிலும் அன்னியப்பட்ட தேசத்தில் வாழ்வியலை ஆரம்பித்த தமிழர்கள் தம் சுதந்திர வாழ்க்கையைத் தொலைத்து புகலிடத் தஞ்சம் கோரிய அகதிகள் என்ற நிலையில் பல்வேறு வாழ்வியல் போராட்டங்களினூடாக மெல்ல மெல்லத் தளைத்து நிமிர்ந்தவர்களின் வாழ்வு வடுக்கள் நிறைந்தவை. இந்த வடுக்களினூடாகத் தமிழர் தம் இருப்பையும் தொன்மையையும் காக்க வேண்டிய தேவைப்பாடும் அவர்களுக்கு இருந்தது. குறிப்பாக, பண்பாடு கலாசாரம், மொழி என யாவற்றிலும் வேறுபட்ட ஒரு சமூகத்தில் உயிர்த் தஞ்சம் கோரி வந்தவர்கள் தமது மொழியின் இருப்பையும் கலாசாரம் பண்பாட்டையும் பேணி அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டியதொரு உணர்வுசார் பாரிய பொறுப்பு ஒவ்வொருவரிடமும் மேற்கிளம்பியதன் விளைவாக, தமிழர் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த கலாசார பண்பாடுசார் விழாக்களும் சடங்குகளும் ஆங்காங்கே எழுச்சியுடன் இடம்பெற்றன. தாய்மொழியின் பயன்படு தன்மையும் இவர்களிடம் குறையின்றி பிரயோகத்திலிருந்தது. எனினும் அடுத்த தலைமுறை வளர்ந்து அவர்களது கல்விப் புலம், தொழிற்தளம், சூழல் கட்டமைப்பு என்பன புலம்பெயர் பெற்றோரிடமிருந்து புதிய தலைமுறையினரை அந்நியப்படவைத்தது. புதிய தலைமுறையினர் தாம் பிறந்த தேசத்தின் வாழ்வியல் கலாசார பண்பாட்டு மொழியுடன் ஒன்றித்து வாழவேண்டிய தேவை விரும்பியோ விரும்பாமலோ ஏற்பட்டு விட தமிழர்தம் சலாசாரமும் பண்பாடும் மொழியும் அழிந்துவிடும் நிலை தோன்றிற்று. இந்நிலையிலிருந்து மீண்டு, தமிழை இரண்டாம் மொழியாகவேனும் இளையோரிடத்தில் கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலிட, தமிழ்ப்பள்ளிகள் நிறுவப்பட்டு தமிழ்மொழியோடு தமிழ்க் கலாசாரம், தமிழ்ப் பண்பாடுசார் நிகழ்வுகள் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு, இன்று ஐரோப்பிய நாடுகளின் பல்கலைக்கழக நுழைவுக்கு தமிழ்மொழிப் பாடத்தில் பெற்ற புள்ளிகள் செல்வாக்குச் செலுத்துகின்ற நிலைக்கு உயர்ந்தமை, புலம்பெயர் தமிழர் தமிழ் மொழி நிலைபெறுகைக்கும் தமிழின் வேர் படர்வதற்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இது நிற்க. புலம்பெயர் தமிழர் தம் வாழ்வியல் ஐரோப்பிய நாடுகளில் வேரூன்றியதன் விளைவாக அவர்கள் ஐரோப்பிய கலாசாரத்துடன் தமிழர் கலாசாரத்தையும் பின்தொடர்ந்து அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டிய தேவைப்பாடும் காணப்படுகின்றமையால் தமிழ்ப் பள்ளிகள் இவற்றை மிக நேர்த்தியாக முன்னெடுத்து வருகின்றன. தமிழ்ப்பள்ளிகள், தமிழ் அமைப்புகள் பாடத்திட்டங்களை வடிவமைத்து இரண்டாம் மொழியாகத் தமிழ்மொழியைக் கற்கும் மாணவர்களுக்குப் போதுமான அறிவுத் திரட்டினை வழங்கி வருகின்றமையை இளந்தலைமுறையினரின் வாழ்வியல் ஊடாகக் காணமுடிகின்றது. வார இறுதிப் பாடசாலைகளாக இயங்கும் தமிழ்ப் பாடசாலைகள் மொழியோடு பல்வேறு கலை கலாசார பண்பாட்டு அம்சங்களையும் முன்னெடுப்பதோடு அவற்றுக்கான சந்தர்ப்பங்களை இளந்தலை முறையினருக்குப் பொறுப்புணர்வுடன் கையளித்து வருகின்றனர்.

தமிழரின் தொன்மையும் புலமைப் பாரம்பரியமும் ஒருங்கே இணைந்ததாக வழங்கப்படும் கல்வி முறையில் தொல்காப்பியமும் முக்கிய இடம்பெறும்போதுதான் தமிழர் வாழ்வியலின் கையளிப்பு முழுமைபெறும் தன்மை காணப்படுகின்றது. இத்தகைய பின்புலத்தில் தமிழர்களின் தொன்மை நூலாக

விளங்கும் தொல்காப்பியம் தமிழர்களின் கல்விப்புலத்தில் எத்தகைய செல்வாக்கினைப் பெற்றுள்ளது என்பது தொடர்பாக நோக்க வேண்டிய தேவை உள்ளது. தமிழர் பண்பாட்டைத் தம் நாளாந்த வாழ்வியலோடு முன்னெடுக்க இயலாத ஒரு தலைமுறைக்குப் பாடமாகப் போதிக்கப்பட்டு அதன்வழி தமிழர் பாரம்பரியம் கையளிக்கப்படுகின்றபோது தமிழர் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த தொல்காப்பியம் எத்தகைய செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது எதிர்காலத்தில் பல்வேறு ஆய்வுகளுக்கும் புலம்பெயர் தமிழர் வாழ்வியலில் தொல்காப்பியத்தை முன்னிறுத்தி மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளுக்கு மேலும் துணை நிற்பதாகவும் அமையும்.

ஆய்வுப் பிரச்சனை

ஐரோப்பிய நாடுகளின் கல்வி, பண்பாட்டு வாழ்வியல் முறையோடு பிறந்து வளர்ந்த இளந்தலைமுறையினர் பெற்றோரின் புகலிட நாடுகளைத் தமது தாய்நாடாகக் கொண்டவர்கள். இவர்களைப் பொறுத்தவரை தமிழ்மொழி இரண்டாம் மொழியாகவே பயிற்றப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் இவர்களது தமிழ்மொழிக் கற்கையில் தொல்காப்பியம் எத்தகைய செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதே ஆய்வுப் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

ஆய்வு நோக்கம்

தமிழர் வாழ்வியலுக்கு முற்றிலும் அந்நியப்பட்ட சூழலில் வளரும் இளம்தலைமுறையினருக்கு தமிழர் வாழ்வியலை முறைப்படி கையளிக்க வேண்டிய தேவை உள்ளமையால் புலம்பெயர் தமிழர் கல்விப் புலத்தில் தொல்காப்பியம் முக்கியத்துவம் பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துதல் ஆய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் பாடத்திட்டங்களில் ஏற்கெனவே உள்ளடக்கப்பட்டுள்ள இலக்கணப் பகுதிகளுக்கும் தொல்காப்பியத்திற்குமான தொடர்பு மற்றும் தொல்காப்பியத்தின் விடயங்களை இலகுபடுத்தி பாடத்திட்டங்களில் உள்ளடக்குதல் அதன் சிறப்புக்களை வெளிப்படுத்துதல், தொல்காப்பியத்தின் வழி தமிழர் வாழ்வியலை முன்னெடுத்தலும் அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதன் தேவையும் ஆய்வின் சிறப்பு நோக்கங்களாகக் காணப்படுகின்றன.

ஆய்வு முறையியல்

புலம்பெயர் தமிழர்களின் கல்விப் புலத்தில் தொல்காப்பியம் பெறும் செல்வாக்கினை வரலாற்று முறை, விவரண முறை ஆய்வு எனும் ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி ஆராய்கின்றது.

புலம்பெயர் தமிழர் கல்விப்புலத்தில் தொல்காப்பியத்தின் செல்வாக்கு

இளந்தலைமுறையினருக்குக் கையளிக்கப்படவேண்டிய அறிவியல், பண்பாடுசார் விடயங்களை அவர்களது பாடத்திட்டங்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ கொண்டு செல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதனடிப்படையில் தொல்காப்பியத்தை புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர்களின் அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் ஒவ்வொரு தமிழ்ப் பெற்றோரிடமும் தமிழ்ச் சமூகத்திடமும் காணப்படுகின்றது. புலம்பெயர் தேசத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் இரண்டாம் மொழியாகத் தமிழ்மொழியைப் பயின்றாலும் இரண்டாம் மொழி என்ற வரையறையற்று, தமிழ்மொழியோடு மிகவும் நெருக்கமானவர்களாகவே காணப்படுகின்றனர். அதாவது தமிழ்ப் பண்பாடு, கலாசாரம், மொழி என்பவற்றோடு பின்னிப்பிணைந்தவர்கள். இவர்களது வாழ்வியல் பின்புலம் தமிழ்ப் பாரம்பரியமாகவே காணப்படுகின்றமையால் தனியே ஒரு மொழி பயில்தல் என்ற அறிவுசார் விருத்திக்கப்பால் தமிழ்ப்பண்பாடு, கலாசாரம் என்பவற்றையும் ஒருங்கே கற்று உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாகவும் அதேவேளை தான் வாழும் தேசத்தின் பல்லின கலாசாரப் பண்பாட்டைப் பின்பற்றுவோராகவும் இவர்களது வாழ்வியல் காணப்படுகின்றமை அறிந்ததே. அந்தவகையில் புலம்பெயர் தமிழர் கல்விப்புலத்தில் தொல்காப்பியம் பெறும் செல்வாக்கினை பின்வருவனவற்றின் அடிப்படையில் நோக்குவது சிறப்பானது.

கல்விப்புலத்தில் தொல்காப்பிய உள்ளடக்கம்

தொல்காப்பியப் பரவலாக்கத்தில் நிறுவனம்சார் பங்களிப்புகள்

இணையவழியில் தொல்காப்பியப் பரவலாக்கம்

கல்விப்புலத்தில் தொல்காப்பிய உள்ளடக்கம்

ஐரோப்பிய நாடுகளில் இயங்கும் தமிழ்ப்பாடசாலைகள்,S உயர் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படும் தமிழ்ப்பாடத்தில் தொல்காப்பியம் செல்வாக்குச் செலுத்துவதனை, ஆய்வின் தேவை கருதி கனடா, சுவிற்சர்லாந்து, வடஅமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளை அடிப்படையாகக் கொண்டுநோக்க முடிகின்றது.

கனடா

புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி மேம்பாட்டில் தனிநபர் முயற்சிகள் இணைந்து வார இறுதிப் பாடசாலைகளாக நிறுவப்பட்டு தமிழ்மொழியும் அது சார்ந்த பண்பாடுகளும் போதிக்கப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட நாடுகளான கனடா, அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இயங்கிவரும் தமிழ்ப் பாடசாலைகளின் இடைநிலைக்கல்வி, உயர்கல்வி பாடத்திட்டங்களில் தொல்காப்பியம் பெற்றுள்ள செல்வாக்கினை நோக்குகையில், தமிழ்நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கிளையாக கனடாவில் இயங்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வழங்கும் தமிழ் முதுகலைமாணிப்பட்டத்தில் உள்ளடக்கியுள்ள பாடத்திட்டத்தில் முதலாம் வருடத்தில் தொல்காப்பியம் ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டு தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரையுடன் முதலாம் வருடத்திலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பின் நான்கு இயல்கள் இளம்பூரணர் உரையுடனும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மூன்று வருடங்களை உள்ளடக்கிய இளங்கலைமாணி தமிழ்ப் பாடத்தில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், இரண்டாம் வருடத்தில் அகத்திணையியல் புறத்திணையியல் மூன்றாம் வருடத்தில் இலக்கண உரையாசிரியர்கள், தமிழ் இலக்கணம் மற்றும் இலக்கணக் கருத்தாளர்கள் என்ற விடயங்களை உள்ளடக்கியதாகப் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளமையானது ஆங்கில இலக்கியத்துடன் மாணவர்கள் தமிழின் தொன்நூல்களை ஒப்பிட்டு புதிய நோக்கில் ஆய்வுகளை வெளிக்கொணர்வதற்கு வழிசமைக்கும்.

சுவிற்சர்லாந்து

சுவிற்சர்லாந்தின் மொழி பண்பாட்டு நிறுவகம் (Institute of Language and Culture) வழங்கும் மூன்று வருடங்களைக் கொண்ட தமிழ் இளங்கலைமாணி பட்டத்தில் முதலாம் வருடத்தில் முதலாம் பருவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தமிழ்மொழிக்கான அறிமுகத்தில் (BAT 111) 12 credits உள்ள பாடமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் தொல்காப்பியம் தொடர்பாக மாணவர்களுக்கு பூரண தெளிவூட்டலும் தொல்காப்பியம் பற்றிய அறிமுகமும் வழங்கப்பட்டு இதன் விரிவாக தொல்காப்பியம் இரண்டாம் வருடத்தின் இரண்டாம் பருவத்தில் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் அகத்திணையியலும் புறத்திணையியலும் 6 creadits உள்ள பாடமாக உள்ளடக்கப்பட்டுள்ளமை பட்டப்படிப்புகளில் தொல்காப்பியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதோடு அவர்களது தொடர்ச்சியான கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் தொல்காப்பியம் பெறும் வகிபங்கினையும் எடுத்துக்காட்டுகின்றது. அவ்வாறே இப்பண்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்படும் தமிழ் கற்பித்தல் பட்டயக்கல்வி கற்கைநெறி ஒருவருடத்தில் இரண்டு பருவங்களை உள்ளடக்கிய கற்கை நெறியாகக் காணப்படுகின்றது. இதில் தொல்காப்பியம் தனியொரு பாடமாக உள்ளடக்கப்படாவிட்டாலும் தமிழ் இலக்கணம், தமிழ்மொழி வரலாறு, தாய்மொழி பாரம்பரிய மொழி கற்பித்தல் என்ற பாடங்கள் ஊடாக தொல்காப்பியம் பற்றிய தெளிவூட்டல் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளில் மாணவர்களது விரிவுரைக் கற்றல் கற்பித்தலோடு கருத்தரங்குகள், ஒப்படைகள் பரீட்சைகள், குழுக்கற்றலில் ஈடுபடல் என்பனவும் உள்ளடங்குவதால்

மாணவர்கள் தமது சுயதேடல் மூலமான கற்றலில் ஈடுபடுவதற்கும் அதிகமான சந்தர்ப்பங்கள் காணப்படுவது தொல்காப்பியம் தொடர்பான தேடல், நவீன கல்வி முறையோடு அதனை நோக்கும் புதிய சிந்தனைத்தளத்திற்கும் வழிவகுத்துள்ளது.

வடஅமெரிக்கா

"தமிழால் இணைவோம்! தலைமுறைக்கும் தொடர்வோம்!" எனும் தொனிப்பொருளோடு அமெரிக்காவில் இயங்கிவரும் அமெரிக்க தமிழ்க் கல்விக்கழகத்தில் பதிவு செய்யப்பட்ட தமிழ்ப்பாடசாலைகளுக்குப் பொதுவான தமிழ்ப் பாடத்திட்டத்தை வடிவமைத்து அவர்களுக்கு மொழி ரீதியான ஆக்கபூர்வமான பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றனர். வினைப்பாகுபாடுகள், வேற்றுமையுருபுகள், வினைத்தொகை, பண்புத்தொகை, உவமை, உருவகம், சொல்லுருபு , தொடர்வினைகள், துணைவினைகள், நேர்க்கூற்று, நேரல்கூற்று, பகுபதம், பகாப்பதம், மரபுத்தொடர் வழக்குத்தொடர், இயல்பு, விகாரப் புணர்ச்சி போன்ற பகுதிகள் ஊடாக இலக்கணப்பகுதிகள் உள்ளடக்கப்பட்டு மாணவர்களுக்கு தொல்காப்பியத்தை மூலமாகக் கொண்டு கற்பிக்கப்படுகின்றது. மேலும் மொழித்திறன்சார் செயற்பாட்டில், வாக்கியங்களைத் தெளிந்த உச்சரிப்போடு பிழையின்றி படித்தல், புரிந்து கொள்ளுதல், எழுதுதல், மொழி மாற்றம் செய்தல், பண்பாடு மற்றும் இலக்கியம் சார்ந்த பாடங்கள் படித்து தெளிவுபட கருத்துக்களை வெளிப்படுத்தல், வாக்கியங்கள், கருத்துக்கள், வார்த்தைகள் மற்றும் இலக்கணத்தை ஆங்கில மொழியோடு ஒப்பிட்டுப் பயிலுதல் போன்ற அடைவுமட்டங்களை மாணவர் அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். ஆத்திசூடி அருந்தமிழ்ப் பள்ளி, ஆஸ்டின் தமிழ்ப் பள்ளி, எக்ஸ்டன் தமிழ்ப்பள்ளி, ஔவையார் பாடசாலை போன்ற பல பாடசாலைகள் வடஅமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்தில் வடஅமெரிக்காவில் அமைந்துள்ள தமிழ்ப் பாடசாலைகளாக விளங்குகின்றன. இத்தமிழ்ப்பாடசாலைகளில் தொல்காப்பியத்தை அடியொற்றிய இலக்கண வழிகாட்டல்கள், தமிழர் வாழ்வியல் கற்றல் - கற்பித்தலில் இடம்பெறுகின்றமையால் புலம்பெயர் தமிழர் கல்விப் புலத்தில் தொல்காப்பியத்தை அடியொற்றிய பண்பாடு வேரூன்றப்படுவதை அவதானிக்கலாம்.

அவுஸ்திரேலியா

Government Of Western Australia Curriculum and ATAR கற்கை நெறியில் 11ஆம் 12ஆம் ஆண்டுக்குரிய பாடத்திட்டம் மொழித்திறன் விருத்தியில் எதிர்பார்க்கப்படுகின்ற செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டதோடு மாணவர்களிடம் இறுதியாக மொழியின் கட்டமைப்பு மற்றும் மொழி தொடர்பான பூரண தெளிவைப் பெற்றுக்கொள்ளப் பல்வேறு நோக்கங்கள், தேவைகளின் போது தமிழ்மொழியில் எழுதவும் எழுத்துத் திறனை மேம்படுத்த செயல்முறைகள் மற்றும் உத்திகளைப் பயன்படுத்தவும் மாணவர்களால் இயலுமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதனடிப்படையில் ஆய்வின் தேவை கருதி இலக்கணப் பகுதிகளை நோக்குகையில், "வினைச்சொற்கள், பெயர்ச்சொற்கள், வினாச் சொற்கள், இடப்பெயர், எண்ணுப்பெயர், அடைகள், காலம், திணை, பால் எண் இடம்" என தொல்காப்பியம் முன்வைக்கும் இலக்கணப்பகுதிகளை ஆதாரமாகக் கொண்டு மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமையை Government Of Western Australia - School Curriculum and Standards Authority இன் Tamil (WACE Version) ATAR) கற்கைநெறி நூலில் காணலாம். மேலும் இக்கற்கை நெறியானது கணிப்பீடு, குழுக் கற்றல், கலந்துரையாடல், சுயதேடல் கற்றல் என்பவற்றோடு பரீட்சை முறைகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பரீட்சை முறையில் எழுத்துப் பரீட்சையோடு வாய்மொழிப் பரீட்சையும் இடம்பெறுகின்றமை மொழிசார்ந்த புலமைத்துவத்திற்கு வழிசமைக்கும். அவ்வாறே இரண்டாம் மொழியாகத் தமிழைத் தெரிவு செய்து கற்கும் 11ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ்ப்பாடத்தில் வெளிப்படையாகத் தொல்காப்பிய இலக்கணப்பகுதிகள் கையாளப்படாவிட்டாலும் தெரிவு செய்யப்பட்டுள்ள

இலக்கணப்பகுதிகள் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றமை சிறப்பானது.

தொல்காப்பியப் பரவலாக்கத்தில் நிறுவனம் சார் பங்களிப்புகள்

கனடாத் தமிழ்ச் சங்கம்

"தமிழியலின் கூறுகளாய் அமையும் தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழர் வரலாறு என்பவற்றைக் குறித்த விழிப்புணர்வையும் செயற்றிட்டங்களையும் உருவாக்கி அதன் வழிநின்று தமிழியல் மேம்பாட்டை உறுதி செய்தல்" என்ற நோக்குடனும் "தமிழியல் மேம்பாட்டை இலக்காகக்கொண்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும்" என்ற சாசனத்தையும் அடிநாதமாகக்கொண்டு இயங்கிவரும் கனடாத் தமிழ்ச்சங்கமானது படிமுறைத் தமிழ் கற்கை நெறியையும் அதனூடாகத் தமிழ்மொழி சார்ந்தும் பண்பாடுசார்ந்தும் பல்வேறு ஆரோக்கியமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதற்குச் சான்றாக படிமுறைத் தமிழ் கற்கை நெறிக்கு தொல்காப்பியத்தை மூலநூலாகக் கொண்டு பயனாக்க மொழியியல் எனும் நூல் எழுதப்பட்டு அதன் மூலம் தமிழ்மொழியை ஆரம்பநிலையிலிருந்து கற்பதற்கு ஏற்றதாக இலகுபடுத்தி வழிகாட்டும் நூலாகவும் விளங்குகின்றது. இதனை இந்நூலின் இருபத்தைந்து இயல்கள் மூலமாக அறியமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, தமிழ்ப்புணர்ச்சி, சொற்றொடர், நிலைமொழி, வருமொழி, இயல்புப்புணர்ச்சி, திரிபுப் புணர்ச்சி, புணர்ச்சிக் கூறுகள், ஒலிசார்ந்த புணர்ச்சிமுறை, பொருள்சார்ந்த புணர்ச்சி, தொல்காப்பியப் புணர்ச்சிமுறை, மெய்ம்மயக்கம் என்பவற்றை உள்ளடக்கியதாக 20ஆவது இயல் காணப்படுகின்றது. இது புலம்பெயர் தமிழர் கல்விப் புலத்தில் தொல்காப்பியம் புதிய நோக்கில் நோக்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. அதாவது கூறியது கூறலாகவோ, சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாகவோ முன்வைக்காது மாணவர்களது பிரச்சினைகள், தேவைகள் இனங்காணப்பட்டு தமிழ்மொழியை தாய்மொழியாக, இரண்டாம் மொழியாக, மூன்றாம் மொழியாகக் கற்போருக்குப் பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்டு கற்றல் - கற்பித்தல் மேற்கொள்கின்றமையானது தொல்காப்பியம் மற்றும் தமிழ்மொழி மீதான விரும்புடனான கற்றலை மேற்கொள்வதற்கு வழிவகுக்கும்.

தமிழர் கல்விப் பண்பாட்டில் உயர் நோக்குடன் செயற்பட்டுவரும் கனடாத் தமிழ்ச் சங்கம் உலகத் தமிராசிரியர் பேரவை, படிமுறைத் தமிழ் ஒன்றியம், உலகத் தமிழர் பேரவை, Department of historical and cultural studies University Of Toronto என்பன இணைந்து 2024 ஜீன் 1,2,3ஆம் திகதிகளில் நடாத்திய 15ஆவது உலகத் தமிழாசிரியர் மாநாடானது தலைமுறை கடந்தும் தமிழர் வாழ்வியல் வழி கற்றல் கற்பித்தல் எனும் கருப்பொருளில் இடம்பெற்றமையானது தமிழை, தமிழ்மொழியை அதன் தொன்மையை தொல்காப்பியத்தின்வழி அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கும் இலக்கும் அதற்குக் கற்றல் கற்பித்தல் வழியில் புதிய அணுகுமுறைகளைக் கையாள வேண்டியதன் தேவைப்பாடும் உணர்த்தப்பட்டதன் பேறாகவே தமிழ் மின் அகராதிச் செயலியின் தேவைப்பாடு தொடர்பாகவும் தமிழ் மாணவர்களுக்கு புதிய அணுகுமுறைகளில் மேற்கொள்ள வேண்டிய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் குறித்தும் இம்மாநாடு ஆக்கபூர்வமான பல செயற்பாடுகளுக்கு வித்திட்டது.

கனடா தொல்காப்பிய மன்றம்

"தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்" என்ற தொனிப்பொருளில் இயங்கும் கனடா தொல்காப்பிய மன்றமானது தமிழரின் தொன்மை குன்றாது தொல்காப்பியத்தின் வழி ஐரோப்பிய தேசத்தில் தொன்மைத் தமிழை நிலைபேறடையச் செய்வதற்கு முன்னெடுக்கும் ஆரோக்கியமான முயற்சிகளில் மாதாந்தக் கருத்தரங்குகள் தொல்காப்பியக் கருத்தரங்குகளாக ஒழுங்கமைக்கப்பட்டு தமிழ் ஆளுமைகள் பலரால் இளையோரும் தமிழார்வலர்களும் பயன்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது, கனடாத் தொல்காப்பிய மன்றமானது புலம்பெயர் தமிழ் இளையோருக்கு தமிழர் பாரம்பரியத்தைக் கையளிக்கும் பாரிய பொறுப்பை சிரத்தையுடன் ஆற்றி

வருகின்மையை அவதானிக்கமுடிகின்றது. அதன்பேறாகவே 2024ஆம் ஆண்டு தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள், மேற்கொள்வதற்கான களமாக முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடானது மேற்குறிப்பிட்ட மன்றத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு உலகத் தமிழர்களுக்கு தொல்காப்பியம், அதன் பேணுகை, தொடர்ச்சியான ஆய்வுகள் என்பன மேலும் வளர்ச்சிபெற வேண்டும் என்ற உந்துதலை அளித்துள்ளது. தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டினை முன்னிட்டு தமிழ்த் திறன் போட்டிகளான பொது அறிவு வினாவிடை, பேச்சுப் போட்டி முதலான பல நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டமை சிறந்த சான்றாகும்.

கனடாத் தொல்காப்பிய மன்றம் ஒழுங்கமைக்கும் மாதாந்தக் கருத்தரங்கானது இளம்தலைமுறையினருக்கு தொல்காப்பியத்தின் மீதான ஈடுபாட்டை ஏற்படுத்தும் வகையிலான மையக் கருத்துக்களை உள்ளடக்கியவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஐரோப்பிய வடஅமெரிக்க பல்கலைக்கழகங்களில் தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகள், தொல்காப்பியர் காலத் தமிழ் மரபுகள், இளந்தலைமுறையினரின் கவிதை முன்வைப்புகள், திருமணம் பற்றிய தொல்காப்பியர் கோட்பாடுகளும் அவற்றிற்கான பின்புலமும், திருமண முறைகள் தொல்காப்பியர் காலந்தொட்டு இன்றுவரை - ஒரு பார்வை, கணினித் தமிழும் தொல்காப்பியமும் போன்ற தலைப்புகள் தொல்காப்பியத்தை இளந்தலைமுறையினரிடத்தில் கொண்டுசேர்த்தல், இளையோரிடத்தில் தொல்காப்பியத்தின் பரவலாக்கம் என்பவற்றை ஒருங்கே எடுத்துக்காட்டுகின்றன.

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

புலம்பெயர் தேசத்தில் இயங்கும் தமிழ்ப்பாடசாலைகள், தனியே மொழிக் கற்கை நிலையங்களாக இயங்காது தமிழர் கலாசார பண்பாட்டு பேணுகைகளின் கையளிப்பு நிறுவனங்களாகப் பொறுப்புடன் செயற்படுவதனை அனைத்துலகத் தமிழர் கல்விப் பேரவையினால் வழங்கப்படும் பாடநூல்களின் மூலம் எடுத்துக்காட்டலாம். சான்றாக 10ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ்ப்பாட நூலில் தொல்காப்பியர் பற்றிய அறிமுகம், தமிழ் இலக்கணத்திற்கு மட்டுமல்ல தமிழர்களின் வாழ்வியலுக்குத் தேவையான இலக்கண அறிவியல் ரீதியில் தொல்காப்பிய விளக்கம் என்பன புலம்பெயர் தமிழ் மாணவர்கள் தொல்காப்பியத்தை அறிவியல் நோக்குடன் மேற்கொண்டு கற்பதற்கான திறவுகோலாக வழிகாட்டுகின்றது. தொல்காப்பியம் பற்றிய அறிமுகக் கட்டுரையின் நிறைவில் தமிழரின் உயிரியல் அறிவு என்ற தகவல் பெட்டகப் பகுதியில், “மரஞ்செடிகளில் தோன்றும் இலைகளை இலை என்றும் ஓலை என்றும் அழைக்கும் வழக்கம் தமிழர்களிடையே உண்டு. தென்னை, பனை, ஈச்சை, கமுகு போன்ற நார் வேர்த் தொகுதி கொண்ட மரங்களில் இருப்பவை ஓலைகள். ஆணிவேர்த்தொகுதி கொண்ட மரங்களில் இருப்பவை இலைகள். இவற்றை இவ்வாறுதான் அழைக்க வேண்டுமெனத் தொல்காப்பியம் கூறுகிறது.” இவ்வாறு வாழ்வியலுக்கு முக்கியமான அறிவியல் விடயங்களைத் தொல்காப்பியத்திலிருந்து புலம்பெயர் தமிழ் மாணவர்களுக்கு வழங்குவது தமிழின் தொன்மைச் சிறப்பை எடுத்துக்காட்டுவதாகவும் அமைகின்றது. இந்நிறுவனத்தின் பாடநூல்கள் ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து இத்தாலி, ஜேர்மன், அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகளில் இளம்தலைமுறையினருக்கு வழங்கப்பட்டு கற்றல் - கற்பித்தல் சிறப்பாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடஅமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை

வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை (1988) மற்றும் சான் அண்டோனியோ தமிழ்ச் சங்கமும் இணைந்து நடாத்தும் 37ஆவது பேரவைத் தமிழ் விழா இவ்வருடம் ஜூலை மாதத்தின் 4,5,6ஆம் திகதிகளில் வட அமெரிக்கா சாண் அண்டோனியோவில் இடம்பெற்றது. இவ் விழாவின் மூலம் தமிழர் பாரம்பரியக் கலைகள், பண்பாட்டு நிகழ்வுகளுடன் தொல்காப்பியம் தொடர்பான இணை அமர்வுகள் மற்றும் கண்காட்சிகள் நடாத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படமையானது தொல்காப்பியம் தனியே தமிழர் தொன்நூல்

என்பதற்கப்பால் அது உலகில் யாவராலும் பின்பற்றத்தக்க நூலாகவும் விளங்க வேண்டும் என்ற நோக்கும் காணப்படுகின்றது.

இணையவழியில் தொல்காப்பியப் பரவலாக்கம்

தமிழ் இணையம் மின்னூலகம் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் பிரிவினரால் இயக்கப்படும் நூலகத்தில் தொல்காப்பியம் ஆங்கில மொழிபெயர்ப்பு, விளக்கங்களுடன் உள்ளடக்கப்பட்டுள்ளமையானது புலம்பெயர் தமிழ் இளையவர்கள் தமிழ், ஆங்கில மொழிகளில் தெளிவாகக் கற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அவர்களது ஆய்வுகளுக்கும் ஏற்றவகையில் பதிவேற்றப் பட்டுள்ளமையால் இத்தகைய நூல்களையும் கற்றுப் பயனடைய முடியும். மேலும் நவீன தொழில்நுட்பப் புரட்சிக்கு ஈடுகொடுத்து தமிழ்மொழியானது நவீன கற்றல் கற்பித்தல் உத்திகளை உள்வாங்கி புதிய செயலிகள், இணைய நூலகங்கள் என்ற பல்பரிமாண வளர்ச்சியினூடாக தொல்காப்பியத்தைப் பயிலும் வசதிகளும் இளந்தலைமுறையினரை ஊக்கமளிப்பவையாகக் காணப்படுகின்றன.

எழுமின் எனும் இணைய அமைப்பு சங்கம் என்ற பெயரில் ஒழுங்கமைக்கும் தமிழ் அறிவுசார்ந்த தொடர் நிகழ்வில் தொல்காப்பியம் சார்ந்து நடைபெற்ற நிகழ்வை பதிவுசெய்து இணையத்தில் காணொளியாகப் பதிவேற்றியுள்ளமை சிறந்த வழிகாட்டல் பதிவு. வளரும் இளம்தலைமுறையினருக்கு எழுமின் - சங்கம் 4, அரங்கு 3இன் நிகழ்விலே தொல்காப்பியம் பற்றிய தெளிவூட்டலை வழங்குகின்றார் பேராசிரியர் க.இராமசாமி அவர்கள். வாழ்க தமிழ் வளர்க தமிழ் இலக்குடன் Literary Tamil எனும் பெயரில் இயங்கும் யூ டியூப் தளமானது சங்க இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் தட்டச்சுடனும் பதிவேற்றியுள்ளது. இதில் தொல்காப்பியம் பற்றிய பூரண தெளிவும் வழிகாட்டலும் வரி வடிவம் மற்றும் ஒலி வடிவில் இடம்பெற்றுள்ளமையானது புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் இளந்தலைமுறையினர் தமிழை ஆர்வத்துடன் கற்பதற்கு வழிகாட்டுவதனை அவதானிக்கலாம்.

கனடா தொல்காப்பிய மன்றமும் நிகழ்நிலை மூலமாக உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்கள் யாவரும் ஒன்றிணையத்தக்க வகையில் தொல்காப்பியம் சார்ந்து நிகழ்வுகளை ஒழுங்கமைப்பது சிறப்பானது. எடுத்துக்காட்டாக, கொரோனா பேரிடர் காலத்தில் நிகழ்நிலை மூலமாக ஒழுங்கமைத்த நிகழ்வுகளில் தொல்காப்பிய நிகழ்வுகளையும் ஒழுங்கமைத்ததோடு 2024ஆம் ஆண்டு ஏற்பாடு செய்துள்ள முதலாவது தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு இணையம் மூலமாகவும் இடம்பெறுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்துள்ளமை உலகம் முழுவதும் தொல்காப்பியப் பரவலாக்கம் மீது கொண்டுள்ள ஆரோக்கியமான செயற்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றது.

முடிவுரை

புலம்பெயர் தமிழ்ப் பாடசாலைகளுக்கான பாடத்திட்ட வடிவமைப்பில் இலக்கண பயில்முறையை பொதுமைப்படுத்தி பாடத்திட்டம் வடிவமைப்பதோடு புதிய அணுகுமுறைகளினூடாகத் தொல்காப்பியப் பயிற்றுகையை முன்னெடுக்கும் போது இலகுவாக தொல்காப்பியத்தை கற்பிக்கக்கூடிய சூழல் உருவாகும். செயன்முறைக் கற்பித்தல் மற்றும் கருத்தரங்குகளில் தொல்காப்பியத்தை மையப்படுத்திய நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல், தொல்காப்பியம் பற்றிய நோக்கினை, அதனைக் கற்றல் கற்பிதலில் பயன்படுத்துவதற்கு கையாள்வதற்கான இலகுபடுத்தலை மேற்கொள்ளமுடியும். மனநிலை மாற்றத்தை ஏற்படுத்தல் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. தொல்காப்பியம் தமிழர் வாழ்வியலில் பெறும் பெறுமானம், அதன் வழி, தமிழைக் கற்கவேண்டியதன் முக்கியத்துவம் அதன் புலமைப் பாரம்பரியம் என்பன தொடர்பாகவும் தொல்காப்பியம் இலகு தமிழில் பதிப்பிக்கப்பட்டு அதில் கூறப்பட்டுள்ள விடயங்களை திரிபுறாது மொழிபெயர்ப்புகளாகவும் வழங்கும்போது தொல்காப்பியப் பேணுகையும் அதன் கையளிப்பும் எதிர்காலத்தில் பல்வேறு மொழிசார்ந்தோருக்கும் ஒரு வழிகாட்டியாக அமையும்.

தொல்காப்பியத்தை புலம்பெயர் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் கொண்டு செல்கையில், பல்கலாசார பண்பாட்டில் வளரும் நம் இளம் தலைமுறையினர் தொல்காப்பியத்தைக் கற்கும்போது அவர்கள் வேறுபட்ட கோணத்தில் தொல்காப்பியத்தை நோக்கும் தன்மையும், அது மேலும் தொல்காப்பியம் பற்றியும் தமிழர் வாழ்வியல் பற்றியும் வேறுபட்ட சிந்தனைத் தளத்தில் நோக்குவதற்கும் வழிகாட்டும். குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் இளந்தலைமுறையினர் வேறுமொழிகளையும் பண்பாடுகளையும் கற்கும் வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் அவற்றோடு தொல்காப்பியத்தையும் கற்கையில், ஏனைய பண்பாடுகளுடனான ஒப்பியல் ஆய்வு, தமிழர் பண்பாட்டின் தொன்மை தொடர்பான தொடர்ச்சியான ஆய்வுகளுக்கும் தமிழை மேலும் ஆழ அகலப்படுத்திச் செல்வதற்கான தளங்கள் பல்வேறு புதிய கோணங்களில் மேலும் விரிவுபடுத்தப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

புலம்பெயர் தமிழர் கல்விப்புலத்தில் தொல்காப்பியத்தின் செல்வாக்கிற்கு இணையம், நவீன தொழில்நுட்ப வசதிகள், எண்ணிம நூலகம் போன்றன பல்வேறுவகையிலும் செல்வாக்குச் செலுத்தினாலும் அவற்றின் நிலைபெறு தன்மை நாளுக்குநாள் தொழில்நுட்பப்புரட்சியினால் விரைந்து மாற்றமடைகின்றது. இதனால் தற்போது இயங்குநிலையிலிருக்கும் நவீன தொழில்நுட்ப வசதிகள் பழைய தொழில்நுட்பவசதிகளாக செயலிழந்துவிடும் அல்லது அவற்றை பதிவிறக்கம் செய்யமுடியாத புதிய தொழில்நுட்பக் கருவிகள் அறிமுகமாகும்போது நாம் மேலே குறிப்பிட்ட அத்தனை வசதிகளும் வலுவிழந்து எதிர்காலத் தலைமுறைக்கு வழங்குவதற்கான அறிவுப் பரப்புகைகளில் ஒரு தொய்வு அல்லது இடைவெளி ஏற்படும். உதாரணமாக நெகிழ்வட்டு((Floppy disk) அறிமுகமாகி சிறிது காலத்தில் புதியதொழில்நுட்ப சாதனங்கள் அறிமுகமாகியதும் நெகிழ்வட்டில் பேணப்பட்ட விடயங்களின் இருப்பு கேள்விக்குள்ளாயிற்று. இதனைக் கருத்தில்கொண்டு தொல்காப்பியத்தின் பேணுகையை ஒரு நிலைபெறு தன்மையூடான ஊடகம் மூலமாகவும் நாம் அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதற்குக் தயாராக இருக்க வேண்டும் இது தனியே தொல்காப்பியத்திற்கு மட்டுமல்ல தமிழ் இலக்கியங்களின் நிலைபேறான பேணுகைக்கான ஒழுங்கமைக்கப்பட்ட முறையான திட்டமிடலாகவும் அமைதல் அவசியம். எடுத்துக்காட்டாக, எந்தவிடயங்களும் உயிர்ப்புடன் இருக்கும் மனித மூளையில் பதிவுசெய்து வைக்கப்படும்போது (Bio Memory) அதன் வலிமை ஏனையவற்றைவிட காப்புறுதி மிகுந்ததாக இருப்பதனையும் அதன் நிலைபெறு தன்மை கனதியானதாக இருப்பதையும் அவதானிக்கலாம். தனியே இணையத்தில் தங்கியிருக்காது நேரடியான கற்றல் - கற்பித்தல் மூலம் பிள்ளைகளுக்கு முறையாகப் பயிற்சியளிக்க வேண்டியதன் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகின்றது.

தொல்காப்பியத்தை இலக்கணப்பகுதியில் மட்டுமன்றி இலக்கியம், வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களையும் முன்னிறுத்தி முன்னெடுத்துச் செல்வது முக்கியமானது. குறிப்பாக, இளையதலைமுறையினரை உள்ளடக்கி ஒழுங்கமைத்து நடாத்துவதால் தனியே தமிழர்கள் மட்டுமல்ல ஐரோப்பியர்கள் தொல்காப்பியம் தொடர்பில் அறிந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதோடு தொல்காப்பிய ஆய்வுகளுக்கும் ஏனைய மொழிகளிலுள்ள தொன்மை நூல்களுடனான ஒப்பியல் ஆய்வுகளுக்கும் இட்டுச் செல்லும். மேலும் பல்கலைக்கழக மட்டத்திலான ஆய்வுகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறிகள் வலுவாக்கப்படும்போது அது மாணவர்களைச் சென்றடையும் தன்மையும் வலிமை மிகுந்ததாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஐரோப்பிய நாடுகளில் தொல்காப்பியக் கற்கையை மேலும் விரிபடுத்த வேண்டிய தேவை, அதன் ஆவணவாக்கல், நவீனதொழில் நுட்பப்புரட்சிகளை உள்வாங்கி அவற்றிற்கு இணையாகத் தமிழின் தொன்மைக்குச் சான்றுபகரும் ஆவணமாகப் பேணிக் கையளித்தல், புதிய பாடத்திட்டத்தில் தொல்காப்பியத்தை இலகுபடுத்தி கற்பித்தல், புதிய ஆய்வுகளுக்குக் களமாக அமைதல், ஐரோப்பிய நாடுகளின் பல்கலைக்கழக மட்டத்தில் தொல்காப்பியக் கற்கை நெறிகளை உருவாக்கி தமிழர் இருப்பை, தமிழ் மொழியை உலகமெல்லாம் பரந்துபடச்செய்தல் என்ற பல்வேறு தளங்களுக்கு இவ்ஆய்வுக்கட்டுரை ஆதாரசுருதியாக அமையும்.

துணைநின்ற நூல்கள் :

1. அமெரிக்கத் தமிழக் கல்விக் கழகம், 2021 நிலை 8, பயிற்சி நூல்,
2. தமிழ் இணையக் கல்விக்கழக மின்னூலகம் (tamildigitallibrary.in)
3. அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை, 2022 தமிழ் ஆண்டு 10 ப - 53-55
4. குணசிங்கம்.மு, 2014, புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு, எம்.வி. வெளியீடு
5. அப்பாத்துரை. சாமி 1995, புலம் பெயர்ந்த தமிழன், ஈழநாடு வெளியீடு, கனடா
6. https://www.FeTNA 37th Tamil Convention - 2024 [Home] (fetna-convention.org)
7. https://www.GR-HS-GK_canada.pdf
8. C;/nie%20research/tholkappiayam/Canada/GR-HS-GK_canada.pdf
9. https://www.youtube.com/live/R9HSyXkzlVI?si=LEz9lCl_S2UrKj5Z
10. https://youtu.be/37wV2T0iyy8?si=CbFuxt_LSL7MzVgx
11. CANADIAN TAMIL SANKAM - Learn Tamil (padimuraitamil.com)பயனாக்க மொழியியல்
12. www.tolkappiyam.ca
13. Languages-Interstate-WACE-version-ATAR-syllabus-Tamil-2022-2024%20.pdf
14. Government of Western Australia School curriculum and Standards Authority, 2023, tamil: second language ATAR course, Year 11 syllabus
15. Government of Western Australia School curriculum and Standards Authority, 2024, tamil: second language ATAR course, Year 12 syllabus
16. Government of Western Australia School curriculum and Standards Authority, 2024, tamil (WACE Version) Language ATAR course, Year 11& 12 syllabus

தொ.மா.க. 176

Diachronic Analysis of Sociative Case in Tamil

Dr. P. CHANDRAMOHAN
Professor of Linguistics
Annamalai University
Annamalai Nagar, Tamil Nadu, India
chandruling@gmail.com

Abstract

Tamil is a classical language has the best geographical extension and therefore the richest and most ancient literature that is paralleled in India solely by that of Sanskrit. Its phonological and grammatical systems correspond in several points to the ancestral parent language referred to as Proto-Dravidian. It has its own literature and grammars dating back to two thousand three hundred years and is the sole protector of the Dravidian tradition of old literature. This present research paper explains the sociative case with two different verb construction in early Tamil, middle Tamil and modern Tamil having wide applications of the linguistic theory of case grammar by *Tolka:ppiyar* as well as the Western Case grammarians like Fillmore, McCoy and others. Sociative constructions the verbs in the matrix and in the subordinate sentences are always identical. The transformations involved to derive surface sociative sentences i.e., by the identical verb deletion transformation and the verb of the subordinate sentence is deleted. Then by the sociative suffix substitution transformation, the sociative suffix replaces the case suffix of the subordinate NP. In Tamil, there are some sociative constructions which are not in the purview of the above transformation. Because these constructions have two different verbs in the matrix and in the subordinate sentences in the deep structure. In early Tamil, the sociative surface case is represented by the suffixes oɽu, o:ɽu and uɽan. There are no deep case relations for the sociative constructions because this type of constructions are conjoined structure. But in the meaning level, the sociative constructions have a deep structure. So the present work explores how the verbs functioned with sociative marker oɽu, o:ɽu and uɽan of three different periods of Tamil. The Tamil traditional grammarians views and modern linguists' approaches are applied in the analyses.

Keyword: Case, Sociatives, Conjunction, Surface case, Deep case relation

1. Introduction

In all the world languages the syntactic relationships between nouns and verbs are identified by the grammatical category - case. Case is not only a syntactic phenomenon but also a semantic phenomenon. It is considered a surface case when it denotes the case form states and it is considered a deep case when it denotes the case relation. The former is a grammatical category while the latter is a semantic function. Consider the following examples:

aravinth a:ryaa-vai konRa:n aravinth aryaa-ACC kill-past-III MAS.SG.
'Aravinth killed Arya.
aravinth kamala-vo:ɽu vanta:n aravinth kamala-SOC came-III- MAS.SG.
"Aravinth came with Kamala"

The sentence (1) and (2) the noun Aravinth occurs in the grammatical relation of nominative. In the example (1) 'Arya' is in accusative sense. This accusative sense signalled by the case marker -ai. In the sentence (2) the noun 'Kamala' occurs with the marker -o:ɽu to express the sociative meaning. In both sentence the noun Aravinth having the agent relationship with the verbs kol 'kill' and va: 'come' respectively. Because of the reason the action kol and va: are done by Aravinth. In the example (1) the action is on the noun Arya. That is why in the deep level Arya is the patient who received the action. In (2) the noun Kamala is also an agent because the action was done by Kamala.

In the modern linguistic field, the American Linguist Charles Fillmore (1929) devised a theory which focusses on the semantic roles are cases played by elements of sentence structure. This theory is also known as case grammar. This grammatical model is a modified version of Noam Chomsky's transformational grammar. Fillmore altered the structure of the base and provides the information about semantic roles on the deep structure. Deep structure of Fillmore does not contain subject or object as proposed by Chomsky. According to him, the surface cases are grammatical cases which are associated with the logic communicative position of the sentence and which are semantically indefinable. There is another view known as localistic view based on the location of the noun and verb of a sentence. Anderson (1977:9) define the term case to refer both to a certain inflectional category and to the set of semantic distinction carried by the forms of that category. The inflectional category can be referred to as case forms and the semantic distinction as case relation or case functions. He differentiates cases on the basis of directional notions.

2. Aim and source of this work

The data for this present work is collected from early Tamil works of literature also known as caŋkam literatures, middle Tamil literatures and modern Tamil. The caŋkam literatures classified into two main groups viz., pattuppa:ṯṯu 'the collection of ten big poems' and eṭṭuttokai 'the collection of poem on the basis of meanings in eight sub-division'. Based on the available data the present work discussed how the verbs functioned with sociative marker oɽu, o:ɽu and uɽan.

3. Early works on Sociative case

There are ten traditional Tamil grammatical treatises available from Tolka:ppiyam to suva:mina:tam which deals with sociative case in Tamil. A few modern scholars and Linguist have also written on sociative case of Tamil. Tolka:ppiyar includes sociative case in the third case.

According to him the third case signalled by -oɽu and -a:n (Tol.581). In the deep level third case have the deep case relations Agentive, Instrumental, Causative, Comitative and Comparative relations.

mu:nra: kuvate:
oɽu-v-ena-p peyariya ve:RRumai-k kiɭavi
vinai-mutar karuvi y-anai mutaR Ratuve: -73
……. atanoɽu mayankal
atano:ʈ-iyainta oru-vinai-k kiɭavi
atano:ʈ-iyainta ve:Ruvinai-k kiɭavi
atano:ʈ-iyainta v-oppa l-oppurai -74

From the above su:tram Tolka:ppiyar says that there are four types of sociative viz., atanoɽu mayaŋkal 'symmetrical sociative' oruvinaik kiɭavi 'single verb and two agents' ve:Ruvinaik kiɭavi 'two different verbs and two agents' and opal oppurai 'comparative'. From 11th century AD to 19th century AD there are some grammatical works dealt the sociative case. Most probably they follow the way of Tolka:ppiyam. But vi:raco:liyam, pirayo:ka vive:kam and ilakkanakottu are included Sanskrit model to explain Tamil grammar.

4. Modern Tamil Linguists

Agesthiyalingom, (1976) classified the third case as instrumental, material, causative and sociative. He differentiates conjunction from comitative. Through the transformational analysis, it is also pointed out by him that the conjunctive phrase does not denote the initiator of the action whereas the comitative phrase denotes. The conjunctive sentences are formed by conjunction transformation, whereas the comitative sentences are formed by a kind of embedding. Annamalai (1976) explains the conjunctions and conjunctive case in Tamil. The differences between phrasal conjunction and sentence conjunction. He also associates the term conjunctive case to denotes sociative case. It is argued by him with the support of syntax. The meanings 'principality', 'asymmetry', 'in addition to' and 'take-along' are identified in conjunctive case constructions. The sociative NPs that could be converted as the head of relative clause construction. For instance,

avan pa:l-o:ɽu ni:r-ai-k kala-nt-a:n
he milk-SOC water-ACC mix-PAST-III MAS.SG
'He mixed water with milk'
avan ni:r-ai-k kala-nta-pa:l he water-ACC mix-PAST-milk
'The milk that which he mixed water'

Vasu (1988) and Natarajan (1989) classify the sociative constructions into two types, viz., adnominal sociative and adverbial sociatives. The adnominal sociative constructions consist of two simple sentences viz., main sentences and subordinate sentences. In the adverbial constructions the sociative NP is not preceded by another NP because these NPs occur in simple sentences, unlike the adnominal sociative constructions. According to them in the adnominal sociative constructions, there are four types based on meanings viz., principal actor, additive, symmetrical and accompanier. There are two meanings in the adverbial sociative constructions viz., limitative and manner. The sociative NPs that could not be converted as the head of relative clause construction.

*selvi murukan-o:ɽu cenRa:*ļ selvi murugan-SOC went-III-F-SG
'Selvi went with Murugan'
selvi cenRa murukan selvi go-INF murugan
(No gloss is possible)
Further, they substantiate this view by pointing out the sentences in which -o:ɽu suffix is substituted by the adverbial marker -a:y as in
*selvi co:rv-o:ɽu va-nt-a:*ļ selvi tired-SOC come-PAST-III-F-SG
'Selvi came with tired'

*selvi co:rva:y vanta:*ļ selvi tired-ADV come-PAST-III-F-SG
'Selvi came tiredly'

5. Sociative Case

As already noted, the surface case is the surface realization of the deep semantic function. This realization is represented by various markers. In Tamil, this is represented by suffixes and postpositions. In early Tamil, the sociative surface case is represented by the suffixes oɽu, o:ɽu and uɽan. There are no deep case relations for the sociative constructions because this type of constructions is conjoined structure. But in the meaning level, the sociative constructions have a deep structure.

5.1. Deep Structure

There are two types of sociative sentence viz., adnominal sociative and adverbial sociatives. The adnominal sociative NP always precedes another NP. The adverbial sociative NP always precedes a verb. The adnominal sociative constructions consist of two simple sentences viz., main sentence and subordinate sentence. This is because of the fact that the sociative noun phrase functions as adnominal and it has a relationship with the verb which is identical with the main sentence.

5.2. Adnominal Sociatives

The adnominal sociative is classified into four types based on meanings viz., principal actor, additive, symmetrical and accompanier. These meanings derived from the nature of participation of particular NP with another NP in carrying out the action.

5.2.1. Principal actor

Tolka:ppiyar (5-575) speaks about the meaning 'principal actor' in chapter *ve:RRumai mayaŋkiyal* the special functions of case. He says that the suffix - o:ɽu is used with the word denoting the superior of the two when both do the same action. *Oruvinai oɽucol uyarpin valitte*. The suffix - oɽu is used with the word denoting the superior of the two when both do the same action. Here the commentator *teyvaccilaiya:r* contradicts with other commentators. According to him "the oɽu will occur after the noun which follows the important noun. For him, *uyarvu* means importance to the action or verb and *vali* means the 'position behind or after'. He exemplifies differently as follows.

……*maɽantai yoɽu*
Girl with

……..*vitalai* *munni (na:n)* …… (Aiṅk 388-4)
Youngman went
"The young man went with a girl"

……*namo: ʈa: ʈiya* us with behave lovely
…… *turaivan* ……. (Aink. 115-2)
Noun

"Thuraivan behave lovely with us"

The verbs in this type of sentences are capable of taking the adverb *ce:rntu* 'together' (having joined) additionally since the action is carried out simultaneously. Thus, the above examples have paraphrase relationship with the corresponding sentences.

maʈantai-yoʈu viʈal - ai ce:rntu munnina:n girl - SOC young man-ACC together went-III-MAS-SG 'The young man went together with a girl'

nam-o:ʈu ce:rntu a:ʈaiya turaivan us -SOC together behave thuraivan

'Thuraivan behave lovely together with us'

From the above examples (9) and (10) the sociative suffix oʈu occurs with the nouns maʈantai 'girl' and nam 'us'. The verbs munu 'go' and a:ʈu 'behave' have concordance with the nouns *viʈalai* 'young man' and *turaivan* 'Thuraivan' respectively. These verbs identified the principal actor.

5.2.2. Additive

This type of sociative constructions have the conjunctive meaning.

ka:lamum *vicumbun* *ka:RR-o:ʈu* *kanalum* (Pari. 13-25)
time space air with fire
……*a:yinai*
to become
'You (God Vishnu) are the time, the space, the air and the fire'

……. *piʈavam-oʈu* …… *lerukki* (Mullai. 25)
Pidavam flower with mader flower *ve:ttuppulai yaruppa* ……
vettuppuzai cut
'He cut pidavam flower and mader flower at vettuppuzai'

The noun phrases have different deep case relations, viz., source, agent and patient. According to Vasu (1988) in the additive constructions, the sociative phrase occurs with the noun with the suffix -um. The suffix -um denotes the unusual event. Even though in early Tamil the sociative constructions take place without this type of -um ending.

5.2.3. Symmetrical

When the sociative phrase occurs with another noun phrase and the symmetrical association verb, it denotes the symmetrical meaning. In this type of construction, both the NPs (Sociative NP and the other NP) participate in the action mutually particularly in this type of constructions the sociative NPs denotes the Non-initiator of the action and the nominative NPs denote the initiator of the action.

ka:l-oɽu mayaṅkiya ….. kaɽal (Pari 8-31) air with mixed sea
'Air mixed with sea'
ka:l-oɽu paṯṯa ma:ri (NaRR. 2-9)
air with mixed rain
'Air mixed with rain'

aRanoɽu puNarnta….. ceṅko:l (Poru. 230)
virtue with joined good and just rule of a king
'The good and just rule of a king joined with virtue'

In the above examples (13), (14) and (15) the verbs mayaṅku 'mix' paɽu 'mix' and puNar 'joined' are symmetrical association verbs. The nouns kaDal 'sea' ma:ri 'rain' and cenko:l 'good rule' are the initiator of the action. The noun ka:l 'air' and aRan 'virtue' are non-initiate of the action.

5.2.4. Accompanier

When a human noun possessed with an inanimate object or another human noun during the activities carried out by the agent. The accompaniment relation between the two nouns is expressed by the suffix - oɽu or -uɽan.

…… *ciRu mi:n*
small quantity of fish
…… *yuran …..noɽu*
u:ran with *koNtanan* …….
Received and went (Aink 10-4,5,6)
'u:ran went with small fish'

a:vo: ɽallatu yakara mutala:tu (Tol. Col. 65) phoneme a: neg. phoneme y not occur initially
'The phoneme /y/ not occur initially without the phoneme /a:/'

(18) *nanaiyuru naRavi na:kuɽan kamalac* (Pati. 51-18) honey fragrant mast with to emit flower

'The mast flower emitted with the honey fragrant flower'

The example (16) the noun u:ran 'u:ran' is a human noun is also a nominative NP. This nominative NP accompanied the accompanier ciRumi:n 'small quantity of fish'. In the remaining example the nouns are inanimate.

5.2.5. Comparative and Contrastive

The sociative suffix - oɽu and - o:ɽu also explicit the meanings comparative and contrastive. In this type of constructions, the verb is most probably comparative verbs.

(19) ……. *ni:lamoɽu neyita nikarkkum*
Folwer ni:lam with flower neytal equal
"The flower neytal is equal to flower ni:lam"

(20) ……. *poyikaiyo: tokkunin kunRin*
Natural spring with equal your mountain
aruvi… waterfalls (Pari. 8-15)
"Natural spring water is equal with your mountain waterfalls"

(21) *vaḷaiyoɽu puraiyum va:li ya:Rkavan* (Pari. 2-20.) conch with resemble noun --
"va:liyo:rpavan (paladevan) resembled as in colour of conch"

(22) ma:a meyiyoɽu muraNiya vuɽukkai black body with contradict cloth

"The cloth's colour contradicts with his black colour body"

The example (19), (21) and (22) the verbs *nikar* 'equal' and *purai* 'resemble' are comparative verbs. In (14) the verb *muraN* 'contradict' expressed the sense the contrastive.

5.3. Adverbial sociatives

The sociative suffix oɽu and o:ɽu also occur in the manner of adverbial function. In the adverbial constructions the sociative NP is not preceded by another NP because these NPs occur in a simple sentence, unlike the adnominal sociative construction. The adverbial sociative phrase does not have any deep case relationship but have the meanings which modify the verb of the sentence. There are two meanings in this function viz., Limitative and Manner.

5.3.1. Limitative

The sociative NPs in the following sentences show the limit of the action denoted by the verb. The limit can be in term of time.

(23) *va:nam polutoɽu curappa* …… (Pati 89-1)

Clouds in the wright time rained

"The clouds rained along with its write time"

(24) …… *poluto:ɽu*
Time limit with
…… *vantaviv vacai va:ɽai* Came this north wind

"The north wind came with in the limit of time"

In the above examples the sociative suffix -oɽu and -o:ɽu occurs with abstract noun poḷutu 'time'

5.3.2. Manner

When the sociative suffixes -oɽu and -o:ɽu occur with abstract nouns no:yi 'sorrow' and uḷḷam 'intention'.

(25) …… *avan*
he
…… *no:yoɽu pukuntu (ta:n)* (Maturai. -557) sorrow with entered
"He entered with sorrow"

(26) ……*avar* ……
he
oɽiya: uḷḷamotu ……. iyaintu (Pari 2-36) contradict -neg. intention with joined
"He joined along with non-contradict intention"

6. Two different verb construction

Normally in the sociative constructions, the verbs in the matrix and in the subordinate sentences are always identical. The transformations involved to derive surface sociative sentences are as follows: By the identical verb deletion transformation, the verb of the subordinate sentence is deleted. Then by the sociative suffix substitution transformation, the sociative suffix replaces the case suffix of the subordinate NP. But in Tamil, there are some sociative constructions which are not in the purview of the above transformation. Because these constructions have two different verbs in the matrix and in the subordinate sentences in the deep structure. Tolka:ppiyar identifies this type of constructions

as atano:ɽu iyainta ve:Ruvinaik kiḷavi. The commentators of Tolka:ppiyar Ilampu:raNar, ce:na:varaiyar, naccina:rkiniyar, and kalla:ɽana:r gave the following example.

malaiyoɽu poruta ma:lya:nai
mountain with fight big elephant
"Elephant fight with mountain"

Further, they argued that there is no verb for the mountain. So it has two verbs in its construction. They didn't identify another verb. The verb poruta is asymmetrical association verb may be for symmetrical meaning. Yet another commentator teyvaccilaiyar gives as example follows.

ka:voɽu aRakkuḷam toṯṯa:n grow - soc. virtue tank excavate "He excavates virtue tank with grow"

Here in the deep structure, there are two different verbs viz., amai 'to construct' and toṯu 'to excavate'. Consider the following examples from pattuppa:ṯṯu and ThirukkuRaL.

…… *munkai* wrist
……. *vaḻaiyoṯu ……. nu:l ya:ttu* bracelet with thread tie
"She tied a thread and bracelet on wrist" (NeTu. 141.42)

…… *toTiyoTu*
bracelet with
tolkavin va:ṯiya to:ḻ (KuraL. 1235) beauty withered shoulder
"Her shoulder beauty withered and her hand loosed bracelet"

From the above example the verb pairs are non-identical but related verbs.

7. Conclusion

Syntactic relationships between nouns and verbs are recognized by the case. It is not only a syntactic phenomenon but also a semantic phenomenon. It is considered a surface case when it denotes the case form and it is considered a deep case when it denotes the case relation. The former is a grammatical category while the latter is a semantic function. The sociative case signalled by the surface case marker -oṯu, -o: ṯu and uṯan which express the deep case relations. The nouns and verbs the deep case relations analysed into three levels, viz., Adnominal sociatives, Comparative and contrastive and Adverbial sociatives. The Adnominal sociatives which include principal actor, additive, symmetrical and accompanier and the Adverbial sociatives discussed with two meanings viz., Limitative and manner. Further, the sociative constructions have two different verbs in the matrix and in the subordinate sentences in the deep structure.

ABBREVIATIONS

1. Aink.=Ainkurunu:ru, Pari.=Paripa:ṯal, Mullai.=Mullaippa:ṯṯu, NaRRi.=NaRRiNai, PoRu.=PoruNara:RRuppaDai, Tol.=Tolka:ppiyam,
2. Pati.=PatiRRuppattu, Maturai.=Maturaikka:nci, NeTu.=NeTunalva:Dai, KuraL.=ThirukkuraL, ACC=Accusative case, SOC=Sociative case,
3. MAS.SG=Masculine singular, F.SG=Feminine singular, INF=Infinitive, ADV=Adverb
4. REFERENCE
5. AGESTHIALINGOM, S.1976. "The so-called Sociative case in Tamil" Dravidian case system (eds.) Agesthialingom, S and K. Kushalappa Gowda, Annamalai University, Annamalai Nagar.
6. ANNAMALAI, E. 1976. "Conjunction and the Conjunctive case" Dravidian case system (eds) Agesthialingom, S and K. Kushalappa Gowda, Annamalai University, Annamalai nagar, Pp. 33-47.
7. ARULRAJ, V.S. 1981. "Case system in Tamil", Ph.D; Dissertation, Annamalai University, Annamalai nagar.

8. CALDWELL,R. 1875. A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages (Reprinted in 1913) Oriental Books Reprint corporation, New Delhi.
9. FILLMORE, CHARLES, J. 1968. "The case for case" Universal in Linguistic theory (eds.) E. Bach and R.T. Harms Holt, Rinehart and Winston, Pp. 1-88.
10. KOTHANDARAMAN, R. 1990. Tamil Syntax: New Perspectives, Pondicherry
11. Institute of Linguistics and Culture, Pondicherry.
12. MCCOY-ANA MARIA, B.C. 1969. "A case grammar classification of Spanish verbs" Ph.D., thesis, University of Michigan, Michigan.
13. NATARAJAN, A.G. 1989. Case system in Middle Tamil, Ph.D., thesis, Annamalai University, Annamalai nagar.
14. VASU, R. 1988. Case system in Modern Tamil, Ph.D., thesis, Annamalai University, Annamalai nagar.

அறிவியல்

தொ.மா.க. 119

தொல்காப்பிய மெய்ம்மயக்கப் பைத்தான் நிரலாக்க மேம்பாடு

(Tholkaapppiyam Melmayakkam Python Programming Development)

சத்தியராஜ் தங்கச்சாமி sathiyarajkkt@gmail.com
தமிழ் உதவிப்பேராசிரியர் & விக்கிமீடியர்,
ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641042.
பரமேஷ்வர் அருணாசலம், மென்பொறியாளர், காஞ்சிபுரம், parameshwar273@gmail.com
த. சீனிவாசன், நிறுவுநர், கணியம் அறக்கட்டளை, கனடா, tshrinivasan@gmail.com
இரா. திலீப், மென்பொறியாளர், சென்னை, dhilidhiva@gmail.com

ஆய்வுச்சுருக்கம்

கி.மு.14இல் எழுதப்பெற்ற தமிழின் இலக்கணம் தொல்காப்பியம் ஆகும். இந்த நூலைத் தொல்காப்பியர் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய மூன்று அதிகாரங்களில் தமிழின் மொழியமைப்பை விளக்கியுள்ளார். அந்த மூன்று அதிகாரங்களிலும் தமிழ் மொழியின் கட்டமைப்புகளை விளக்கக்கூடிய கருத்தியல்கள் மிக விரிவாக இடம்பெற்றுள்ளன. இவர் எழுதிய கருத்தியல்களைப் பைத்தான் மொழியில் விதியாக்கங்களாக முழுமையாக உருவாக்கப்படவில்லை. ஆகவே, மொழித் தொழில்நுட்ப அடிப்படையில் தொல்காப்பியத்திற்குப் பைத்தான் நிரல் உருவாக்குவது காலத்தின் தேவையாகும். இவ்வாறு எழுதுவதால் என்ன நடந்துவிடப் போகின்றது எனக் கேட்கலாம். அதற்குச் சான்றாக, நூன்மரபு, மொழிமரபு ஆகிய இரண்டு இயல்களில் தொல்காப்பியர் விளக்கியுள்ள மெய்ம்மயக்கக் கருத்தியல்களைத் தொகுத்து நோக்கும்பொழுது ஒன்பது வகை மெய்ம்மயக்க விதிகள் கிடைக்கப் பெறுகின்றன. இவ்விதிகளைத் மொழித் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்ந்து பார்க்கும் பொழுதுதான் தமிழ்மொழிச் சொற்களைக் கண்டறியும் விதிமுறைகளில் விடுபட்ட விதிகளை இன்னும் கூடுதல் விளக்கங்களோடு அறியலாம். அதாவது, தமிழ்மொழிச் சொற்களின் அமைப்பில் உள்ள உள்ளடக்கு முறையைக் குறிக்கும் விதிகளாக இவை அமைகின்ற தன்மையை அறியலாம் என்பதாகும். அந்த விதிகளின்படி தமிழ் மொழியின் அமைப்புமுறையை எளிதில் கற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு கற்கும்பொழுது பிழையான சொற்களைத் தவிர்க்க இயலும். அதற்காகவே பைத்தான் மொழியில் தொல்காப்பியர் கூறிய மெய்ம்மயக்கம். மொழிமுதல், மொழியிறுதி ஆகியவற்றிற்கு நிரலாக்கம் எழுதப்பெற்றுள்ளது. அதன் பைத்தான் நிரலாக்கத்தை கித்துப்பில் பார்க்கலாம். இது தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாகுவதற்கும் அடிப்படையாக அமைந்தது.

அதுமட்டுமின்றி மொழித் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கும் வழியை ஏற்படுத்தியுள்ளது. அதனடிப்படையில் பன்னாட்டு அடிப்படையில் ஒருசில ஆய்வுகளும் அந்த நிரலாக்கத்தை அடிப்படையாக வைத்தும் வெளிவந்துள்ளன; வெளிவரவும் இருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக இந்த ஆய்வில் தொல்காப்பிய மெய்ம்மயக்கப் பைத்தான் நிரலாக்கத்தை இன்னும் செம்மைப்படுத்தும் முகமாக ஒரு இலக்கத்திற்கும் மேற்பட்ட சொல்வங்கியில் இந்த நிரலாக்கத்தை ஆய்விற்கு உட்படுத்தும்பொழுது ஏற்படும் நிரலாக்கச் சிக்கல்களைக் கண்டறிவது முதன்மை நோக்கமாக அமைந்தது. அதில் ஏற்படும் துல்லியத் தன்மை இல்லாத நிலையில் ஒரு குழந்தைக்குக் கற்றுக் கொடுக்கும் பாங்கில் விதிகள் மாற்றியமைக்கவும், தரவு தருவதில் சில சுருக்கத் தரவு உருவாக்க ஆய்வுசெய்யும் முறையையும், அதனைக் காட்சிப்படுத்தும் சிக்கலைத் தீர்வு காண்பதாகவும் இவ்வாய்வு அமைத்துக் கொள்கின்றது. ஆகவே, இவற்றின் மூலம் இவ்வாய்வு இந்த நிரலாக்கத்தை மேம்படுத்த இயலுமா, அதனைத் தமிழில் காட்சிப்படுத்த இயலுமா எனக் கருதுகோளாக அமைத்துக் கொள்கின்றது.

திறவுச் சொற்கள்: தொல்காப்பியம், தொல்காப்பியர், நூன்மரபு, மொழிமரபு, பைத்தான், மெய்ம்மயக்கம், மொழிமுதல், மொழியிறுதி.

முன்னுரை

தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணமாகிய தொல்காப்பியம் கி.மு.14இல் தொல்காப்பியரால் எழுதப்பபெற்றது [23] [24]. இவரின் இந்த இலக்கணமும் மொழியியலும் இன்றைய தமிழ்க் கணிமைக்கு அடிப்படை என்பார் ந.தெய்வசுந்தரம் [29]. அதுபோல் தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் மூன்று அதிகாரங்களில் தமிழின் மொழியமைப்பை விளக்கியுள்ளது என்பார் க. பாலசுப்பிரமணியன் [23] [24]. முதலாவது அதிகாரமாகிய எழுத்ததிகாரம் ஒன்பது இயல்களில் தமிழ் மொழியின் எழுத்துக்களின் அறிமுகம், அவ்வெழுத்துக்கள் சொல்லாகும் முறை, சொல்லிற்குள் இருக்கக்கூடிய எழுத்தமைப்பு முறைகள், அந்தச் சொற்கள் புணரும் தன்மைகள் ஆகியவற்றையும், இரண்டாவது அதிகாரமாகிய சொல்லதிகாரம் ஒன்பது இயல்களுள் சொல்வகைகள், தொடரமைப்புகள் ஆகியவற்றையும், மூன்றாவது அதிகாரமாகிய பொருளதிகாரம் ஒன்பது இயல்களில் தமிழ் மொழியின் பொருண்மைகளையும் விளக்கியுள்ளன. அதுமட்டுமின்றி, இந்த மூன்று அதிகாரங்களையும் தொல்காப்பியர் ஒருவரே எழுதினார் என்பதையும் தம் ஆய்வில் விளக்கியுள்ளார் க. பாலசுப்பிரமணியன் [23] [24]. இந்த இலக்கணம் இன்றைய கணினி மொழித் தொழில்நுட்பத்திற்கு எழுதுவதுபோல் அமைந்திருப்பதை உணரமுடிகின்றது. அந்த அளவிற்கு நுட்பமாகத் தொல்காப்பியர் தொகை, வகை, விரி அடிப்படையில் விளக்கியுள்ளார். அதனைத் தொல்காப்பியம் - நூன்பமரபு (பைத்தான்வழி உரை) [30] [31] எனும் கட்டுரையின்வழி விளங்கிக் கொள்ளலாம்.

தொல்காப்பியர் எழுதிய கருத்தியல்கள் இன்றைய பைத்தான் மொழியில் முழுமையாக விதியாக்கங்களாக உருவாக்கப்படவில்லை. ஆகையால் மொழித் தொழில்நுட்ப அடிப்படையில் தொல்காப்பியத்திற்குப் பைத்தான் நிரல் உருவாக்குவது காலத்தின் தேவை என்பதை உணர்ந்து சில முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளன. அந்த முயற்சி தொழில்நுட்பப் பொறியியல் வல்லுநர்களுடன் இணைந்து மெய்ம்மயக்கம், மொழிமுதல், மொழியிறுதி ஆகிய கருத்தியல்களுக்குப் பைத்தான் நிரல் உருவாக்கப்பெற்றுப் பொது உரிமத்தில் வெளியிடவும் பெற்றது [25].

இவ்வாறு பைத்தானில் நிரலாக எழுதுவதால் என்ன நடந்துவிடப் போகின்றது எனத் தோன்றலாம். இங்கு ந.தெய்வசுந்தரத்தின் ''தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களும் இன்றைய மொழியியலாளர் ஆய்வுகளும் மனித மூளைக்காக உருவாக்கப்பட்டவையாகும். அவற்றை அப்படியே கணினிக்குக் கொடுத்தால், கணினியால் புரிந்துகொள்ள முடியாது. கணினியில் அமைந்துள்ள மின்னணுச் சில்லுகளுக்குப் புரியக்கூடிய கணினி நிரல்களாக (program) அவை மாற்றப்பட வேண்டும்'' [1] எனும் கருத்துச் சுட்டிக்காட்டத் தக்கதாய் அமைந்துள்ளது.

இதனை உள்வாங்கியே நூன்மரபு, மொழிமரபு ஆகிய இரண்டு இயல்களில் தொல்காப்பியர் விளக்கியுள்ள மெய்ம்மயக்கக் கருத்தியல்களுக்கு உருவாக்கப்பெற்ற பைத்தான் நிரலாக்கத்தைக் குறிப்பிட்டுக் கூறலாம். இந்த மெய்ம்மயக்கக் கருத்தியலை விளக்குவதற்குத் தொல்காப்பியர் மொத்தம் 82 விதிகளுள் 12 விதிகள் அமைத்துக்கொண்டார். அவை, மெய்ம்மயக்கங்களைக் கூறும் விதிகளாக அமைந்திருந்தன. அந்த விதிகளுள் உள்ள கருத்தியல்களைத் தொகுத்து நோக்கும்பொழுது ஒன்பது வகை மெய்ம்மயக்க விதிகள் கிடைக்கப் பெறுகின்றன. அவை,

"மெய்ம்மயக்கம்1": "ட்ற்ல்ள்+கசப"
"மெய்ம்மயக்கம்2": "ல்ள்+யவ"
"மெய்ம்மயக்கம்3": "ங்ஞ்ண்ந்ம்ன்+இனவொலி(கசடதபற)"
"மெய்ம்மயக்கம்4": "ண்ன்+கசஞபமயவ"
"மெய்ம்மயக்கம்5": "ஞ்ந்ம்வ்+ய"
"மெய்ம்மயக்கம்6": "ம்+வ"
"மெய்ம்மயக்கம்7": "ய்ர்ழ்+க ச த ப ஞ ந ம ய வ ங"

"மெய்ம்மயக்கம்8": "ர்ழ் தவிர -> க்...ன் + க...ன"
"மெய்ம்மயக்கம்9": "ர்ழ் குற்றொற்றாகா"

என்பன. இவை கணினிக்குப் புரியக்கூடிய வகையில் உருவாக்கப்பெற்ற நிரலாக்கச் சருக்கம் ஆகும். இவ்விதிகளை மொழித் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்ந்து பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்மொழிச் சொற்களைக் கண்டறியும் விதிமுறைகளில் விடுபட்ட விதிகளை அறிய முடியும். ஏனென்றால் தமிழண்ணல் [26] இந்த விதிகள் தமிழ் மொழியின் சொற்களை இனங்காட்டக் கூடியவை என்கிறார். ஆனால், தற்சமம், தற்பவம் ஆகிய சொற்களுடனும் இவ்விதி பொருந்திப் போகின்றது. இருப்பினும் தற்போதைய கருதுகோள் தமிழண்ணல் கருத்துப்படியே இருக்கட்டும்.

ஆகையால், தமிழ்மொழிச் சொற்களின் அமைப்பில் உள்ள உள்ளடக்குமுறையைக் குறிக்கும் விதிகளாக இவை அமைகின்றன. அந்த விதிகளின்படி தமிழ்மொழியின் அமைப்புமுறையை எளிதில் கற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு கற்கும்பொழுது பிழையான சொற்களைத் தவிர்க்க இயலும். அதற்காகவே பைத்தான் மொழியில் தொல்காப்பியர் கூறிய மெய்ம்மயக்கம், மொழிமுதல், மொழியிறுதி ஆகியவற்றிற்கு எழுதப்பெற்ற பைத்தான் நிரலாக்கத்தை கித்துப்பில் [25] காணலாம். இது தொல்காப்பியக் குறுஞ்செயலி உருவாகுவதற்கும் [27] அடிப்படையாக அமைந்தது. அதுமட்டுமின்றி மொழித் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கும் வழியை இது ஏற்படுத்தும் எனலாம்.

தூண்டுகோள்கள்

இந்த மாதிரியான எண்ணம் உருவாவதற்கு அடிப்படையாக சேக்சுபியர் படைப்பின்மீதான ஆய்வுகளே காரணமாக அமைந்தன. தொல்காப்பியத்திற்குப் பைத்தான் நிரலாக்க (program based) அடிப்படையிலோ, இயந்திரவழிக் கற்றல் அடிப்படையிலோ (Machine Learning based) ஆய்வுகள் நிகழ்ந்துள்ளனவா எனக் கூகுள் தேடுபொறியில் (Google search engine) தேடிப் பார்த்தால் இல்லை என்ற நிலையே உள்ளது. சேக்சுபியர் சார்ந்த படைப்புமீதான ஆய்வினைத் தேடிப்பார்த்தால் மிகுதியாக உள்ளன. அவற்றை shakespeare-dataset [12], shakespeare-dataset: complete works, plays, sonnets and poems of shakespeare [13], learning-hadoop-and-spark /shakespeare.raw [14], TensorFlow/Week3_Programming [15], machine-learning-experimentstext_ generation_shakespeare_rnn [16], datasets/shakespeare [17], Shakespeare-database [18], shakespeare-PyPI [19], py-shakespeare-PyPI [20], Shakespearelang [21], Python NLTK Shakespeare corpus [22] எனவரும் ஆய்வுகள்வழி அறியலாம். இவை சான்றிற்காக மட்டுமே. ஆனால் இன்னும் பல ஆய்வுகள் உள்ளன. இது தொல்காப்பிய ஆய்வையும் இதுபோல் செய்தல் வேண்டும் எனத் தூண்டிவிடுவதாய் அமைகின்றது.

முன்னாய்வுகள்

கித்துப்பில் (GitHub) பதிவேற்றப்பெற்ற தொல்காப்பியவிதி நிரலாக்கத்தை [27] அடிப்படையாக வைத்துச் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பெற்றன. அவை வருமாறு; Automatic Identification of Meimayakkam in Tamil Words Using Rule Based and Transfer Learning Approaches [5]. A development of the Meimayakkam second Rule Based on Tholkaappiyam and Nannul grammar concepts [6], DATA SCIENCE BASED CORPUS CREATION FOR THOLKAAPPPIYAM [7], App Development for Tholkaappiya Meymayakkam First rule problem solve [8].

இதன் தொடர்ச்சியாக இந்த ஆய்வில் தொல்காப்பிய மெய்ம்மயக்கப் பைத்தான் நிரலாக்கத்தை இன்னும் செம்மைப்படுத்தும் முகமாக ஒரு இலக்கத்திற்கும் மேற்பட்ட சொல்வங்கியிலும் இந்த ஆய்விற்காகச் சிறுசிறு சொல்வங்கித் தரவுகளிலும் பயிற்சிக்காக உருவாக்கப்பெற்ற தரவுகளில் இந்த நிரலாக்கத்தை ஆய்விற்கு உட்படுத்தும்பொழுது ஏற்படும் நிரலாக்கச் சிக்கல்களைக் கண்டறிவது முதன்மை நோக்கமாக இவ்வாய்வு அமைகின்றது. அதனுடன் இந்த நிரலாக்கத்தை மேம்படுத்த இயலுமா எனவும், தமிழ்

மொழியைக் காட்சிப்படுத்தம் செய்வதில் பைத்தான் அகராதிகளைப் பயன்படுத்த இயலுமா எனவும் கருதுகோள்களாக அமைத்துக் கொள்கின்றது இவ்வாய்வு.

பைத்தான் நிரல் (Python Program) உருவாக்கமும் செயல்பாடும்

பைத்தான் மொழியில் மெய்ம்மயக்கத்திற்கு நிரலாக்கம் எழுதப் பின்வரும் நிலையில் விதிகள் முதலில் வகுத்துக்கொள்ளப்பெற்றன.

"மெய்ம்மயக்கம்1": "ட்ற்ல்ள்+கசப"
"மெய்ம்மயக்கம்2": "ல்ள்+யவ"
"மெய்ம்மயக்கம்3": "ங்ஞ்ண்ந்ம்ன்+இனவொலி(கசடதபற)"
"மெய்ம்மயக்கம்4": "ண்ன்+கசஞபமயவ"
"மெய்ம்மயக்கம்5": "ஞ்ந்ம்வ்+ய"
"மெய்ம்மயக்கம்6": "ம்+வ"
"மெய்ம்மயக்கம்7": "ய்ர்ழ்+க ச த ப ஞ ந ம ய வ ங"
"மெய்ம்மயக்கம்8": "ர்ழ் தவிர -> க்...ன் + க...ன"
"மெய்ம்மயக்கம்9": "ர்ழ் குற்றொற்றாகா"

இதன் அடிப்படையிலேயே தொல்காப்பியப் பைத்தான் நிரலாக்கமும் அமைந்துள்ளது. இதனைப் பின்வரும் நிரல்கள் மூலம் புரிந்துகொள்ளலாம்.

```
from meymayakkamfinal import *
```

இது meymayakkamfinal எனும் விதிநிரலை இங்கு அழைத்துச் சோதிப்பதற்குப் பயன்படுகின்றது.

```
import csv
```

இது csv எனும் கோப்பை ஆய்வதற்காகப் பயன்படுகின்றது.

```
ruleset={
"meymayakkam":(meymayakkam1,meymayakkam2,meymayakkam3,meymayakkam4,meymayakkam5,meymayakkam6,meymayakkam7,meymayakkam8,meymayakkam9),

}
```

இது meymayakkamfinal-இல் உள்ள விதிகளை ஒரு அகராதி ruleset எனும் மாறிக்குள் பட்டியலாக உருவாக்கிக் கொள்கின்றது.

```
meymayakkam_names ={
 "meymayakkam1": "ட்ற்ல்ள்+கசப",
 "meymayakkam2": "ல்ள்+யவ",
        "meymayakkam3": "ங்ஞ்ண்ந்ம்ன்+இனவொலி(கசடதபற)",
 "meymayakkam4": "ண்ன்+கசஞபமயவ",
        "meymayakkam5": "ஞ்ந்ம்வ்+ய",
 "meymayakkam6": "ம்+வ",
```

"meymayakkam7": "ய்ர்ழ்+க ச த ப ஞ ந ம ய வ ங",

"meymayakkam8": "ர்ழ் தவிர -> க்...ன் + க...ன",

"meymayakkam9": "ர்ழ் குற்றொற்றாகா"

}

இது meymayakkam_names எனும் அகராதி மாறிக்குள் மெய்ம்மயக்கப் பெயர்களின் மதிப்புகள் பட்டியலாக உருவாக்கிக் கொள்கின்றது.

report={

'total_words':0,

'skipped_words':0,

'meymayakkam_correct':0

}

இந்த நிரலின் அடிப்படையில் ஆய்ந்து பார்க்கும் பொழுது பின்வரும் விளைவு கிடைக்கப் பெறுகின்றது. அதற்காகப் பெயர்ச்சொற்கள் கொண்ட தரவினை இந்த ஆணைத்தொடர் (Algorithm) பைத்தான் நிரலில் தந்து இயக்கும்பொழுது,

Report of nouns.csv

மொத்த சொற்களின் எண்ணிக்கை : 85269

சரி பார்க்காத ஓர் எழுத்துச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்களின் எண்ணிக்கை : 162

மெய்ம்மயக்க விதிப்படி உள்ள சொற்களின் எண்ணிக்கை : 24960

என அதன் விளைவைக் கணக்கிட்டுச் சொல்லிவிடுகின்றது. இது ஒரு தரவில் எவ்வளவு ஆய்வுசெய்யும் விதிப்படி உள்ள சொற்கள் உள்ளன என்பதை அறிய வழிவகை செய்து தருகின்றது. அதுபோல் தாவரச் சொற்தரவில் உள்ள சொற்களை ஆய்ந்து பார்க்கும்பொழுது,

Report of plant.csv

மொத்த சொற்களின் எண்ணிக்கை : 36

சரி பார்க்காத ஓர் எழுத்துச் சொற்கள், ஈரெழுத்துச் சொற்களின் எண்ணிக்கை : 14

மெய்ம்மயக்க விதிப்படி உள்ள சொற்களின் எண்ணிக்கை : 9

எனப் புள்ளிவிவரத்துடன் தருகின்றது. அந்தத் தரவுச் சொற்களைத் தனியாகவும் பிரித்து எடுத்துத் தருமாறு எழுதப்பெற்றுள்ளது. ஆகையால் ஒப்புநோக்கிக் கொள்ளவும் இது பயன்படும். அவ்வாறு ஒப்பநோக்கும்பொழுதுதான் இன்னும் தொழில்நுட்பம் புரிந்துகொள்ளுமாறு அந்த விதியை எப்படித் திருத்தலாம் என எழுத முடியும். அதன் அடிப்படையில் அடுத்தக்கட்ட நிரலாக்க மேம்பாடும் நிகழ்ந்தது. அதன் அடிப்படையில் அமைந்த தரவுகளே பின்வரும் அட்டவணை-1இல் தரப்பெற்றுள்ளது.

அட்டவணை - 1, சரியான சொற்கள் - தவறான சொற்கள் பட்டியல்

S.No.	Correct Words	Correct Words	Incorrect Words

1	அரளிச்செடி	நாணல்	ஆவாரஞ்செடி
2	ஆமணக்கு	மக்காச்சோளம்	எருக்கஞ்செடி
3	எள்ளுச்செடி	வரகு	கம்பு
4	கற்றாழை	ரோஜா	கரும்பு
5	கள்ளி		காசித்தும்பை
6	காட்டாமணக்கு		கேழ்வரகு
7	குப்பைமேனி		சூரியகாந்தி
8	செடிப்பசலை		தும்பை
9	சோளம்		நந்தியாவட்டை

இப்படி ஒப்புநோக்கும் பொழுதுதான் அந்த விதியைத் திருத்தி அமைக்க வேண்டிய தேவையும் உணரப்பெற்றது. ஒரு குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பதுபோல் கணினிக்கு எழுதினால் என்ன என நோக்கும்பொழுது ஒரு மாற்றம் தோன்றியது. அது எழுத்துக்களின் அடிப்படையில் அதாவது ககரவரிசை முறையில் எழுதவேண்டும் என்பதாகும்.

விதியாக்கம் மாற்றம் பெறல்

அந்தக் கருதுகோளுக்கு ஏற்றாற்போல் தொல்காப்பியர் கூறிய மெய்ம்மயக்க விதி மெய்யெழுத்து வரிசைமுறையின்படி எழுதப்பெறுகின்றது. அதில் தொல்காப்பியர் சொன்ன கருத்துக்களைக் ககர வரிசைப்படி மாற்றி அமைத்துக் கொள்ளப்பெற்றது. அவை வருமாறு;

"மெய்ம்மயக்கம்1": "க்+க"
"மெய்ம்மயக்கம்2": "ங்+கங"
"மெய்ம்மயக்கம்3": "ச்+ச"
"மெய்ம்மயக்கம்4": "ஞ்+சஞய
"மெய்ம்மயக்கம்5": "ட்+கசடப"
"மெய்ம்மயக்கம்6": "ண்+கசஞடணபமயவ"
"மெய்ம்மயக்கம்7": "த்+த"
"மெய்ம்மயக்கம்8": "ந்+தநய"
"மெய்ம்மயக்கம்9": "ப்+ப"
"மெய்ம்மயக்கம்10": "ம்+பமயவ"
"மெய்ம்மயக்கம்11": "ய்+கசதபஞநமயவஙங"
"மெய்ம்மயக்கம்12": "ர்+கசதபஞநமயவஙங"
"மெய்ம்மயக்கம்13": "ழ்+கசதபஞநமயவஙங"
"மெய்ம்மயக்கம்14": "வ்+வ"
"மெய்ம்மயக்கம்15": "ல்+கசபலயவ"
"மெய்ம்மயக்கம்16": "ள்+கசபளயவ"
"மெய்ம்மயக்கம்17": "ற்+கசபற"
"மெய்ம்மயக்கம்18": "ன்+கசஞபமயவறன"

இவற்றை இன்னும் விரித்தும் எழுதலாம். அவ்வாறு எழுதும்பொழுது அது கணினிக்குப் புரியும்படி அமையும். அவை வருமாறு;

"மெய்ம்மயக்கம்1": "க்+க"
"மெய்ம்மயக்கம்2": "ங்+கங" -> ங் + க, ங் + ங

"மெய்ம்மயக்கம்3": "ச்+ச"
"மெய்ம்மயக்கம்4": "ஞ்+சஞய -> ஞ் + ச, ஞ் + ஞ, ஞ் + ய
"மெய்ம்மயக்கம்5": "ட்+கசபட" -> ட் + க, ட் + ச, ட் + ட, ட் + ப
"மெய்ம்மயக்கம்6": "ண்+கசஞடணபமயவ"
"ண்+க", "ண்+ச", "ண்+ஞ", "ண்+ட", "ண்+ண", "ண்+ப", "ண்+ம", "ண்+ய", "ண்+வ"
"மெய்ம்மயக்கம்7": "த்+த"
"மெய்ம்மயக்கம்8": "ந்+தநய" -> "ந்+த", "ந்+ந", "ந்+ய"
"மெய்ம்மயக்கம்9": "ப்+ப"
"மெய்ம்மயக்கம்10": "ம்+பமயவ" -> "ம்+ப", "ம்+ம", "ம்+ய", "ம்+வ"
"மெய்ம்மயக்கம்11": "ய்+கசதபஞநமயவங"
"ய்+க", "ய்+ங", "ய்+ச", "ய்+ஞ", "ய்+த", "ய்+ந", "ய்+ப", "ய்+ம", "ய்+ய", "ய்+வ"
"மெய்ம்மயக்கம்12": "ர்+கசதபஞநமயவங"
"ர்+க", "ர்+ங", "ர்+ச", "ர்+ஞ", "ர்+த", "ர்+ந", "ர்+ப", "ர்+ம", "ர்+ய", "ர்+வ"
"மெய்ம்மயக்கம்13": "ழ்+கசதபஞநமயவங"
"ழ்+க", "ழ்+ங", "ழ்+ச", "ழ்+ஞ", "ழ்+த", "ழ்+ந", "ழ்+ப", "ழ்+ம", "ழ்+ய", "ழ்+வ"
"மெய்ம்மயக்கம்14": "வ்+வ"
"மெய்ம்மயக்கம்15": "ல்+கசபலயவ" -> "ல்+க", "ல்+ச", "ல்+ப", "ல்+ல", "ல்+ய", "ல்+வ"
"மெய்ம்மயக்கம்16": "ள்+கசபளயவ" -> ள்+க, ள்+ச, ள்+ப, ள்+ள, ள்+ய, ள்+வ
"மெய்ம்மயக்கம்17": "ற்+கசபற" -> ற்+க, ற்+ச, ற்+ப, ற்+ற
"மெய்ம்மயக்கம்18": "ன்+கசஞபமயவறன"
"ன்+க", "ன்+ச", "ன்+ஞ", "ன்+ப", "ன்+ம", "ன்+ய", "ன்+வ", "ன்+ற", "ன்+ன”

இவ்வாறு எழுதுவது எளிதில் தொழில்நுட்பத்திற்குப் புரியுமாறு அமையும். இவற்றுள் மெய்ம்மயக்கம் முதல் விதிக்கு (க் + க) மட்டும், பைத்தான் நிரலில் (Python Program) ஆணைத்தொடர் (Algorithm) உருவாக்கி இயக்கிப் பார்க்கும்பொழுது, பின்வரும் விளைவு கிடைக்கின்றது.

sathiyaraj@sathiyaraj-Aspire-ES1-521:ஸ்ரீ/ஆவணங்கள்/core_stable_Sathiyaraj/0தொல்காப்பியர்

_விதிகள்/tholkaappiyar_rules/meymayakkam_seperate_rules/Final_Meimayakkam_Update/Tholkaappiyam_Rule_Development-/rule 1/16.5.2024$ python3 one_ruletest.py

சொற்தரவில் உள்ள சொற்களின் எண்ணிக்கை : 85256
ஒரெழுத்து, ஈரெழுத்துச் சொற்களின் எண்ணிக்கை : 3870
விதி1_ற்குட்பட்ட சொற்களின் எண்ணிக்கை : 11022
விதி1-ற்குட்படாத சொற்களின் எண்ணிக்கை : 335
விதி1-ற்குப் பொருந்தாத சொற்களின் எண்ணிக்கை : 70029

இது எந்தளவிற்குத் துல்லியத்தைத் தரும் என்பதற்காகப் பின்வரும் sample_word_mixeddata.csv எனும் தரவு உருவாக்கப்பெற்று ஆய்வுசெய்து பார்க்கப்பெற்றது. அது பின்வரும் அட்டவணை - 2இல் இடம்பெற்றுள்ளது.

அட்டவணை - 2, sample_words

S.No.	sample_words	Correct Words	Incorrect Words
1	ககனாக்கிரகம்	ககனாக்கிரகம்	ககன்க்பிகிரகம்
2	ககன்க்பிகிரகம்	கக்கக்கெனல்	கக்ங்கக்ன்கெனல்

3	கக்கக்கெனல்	கக்கசம்	கக்னகசம்
4	கக்ங்கக்கெனல்	கக்கடி	கக்னுகடி
5	கக்கசம்	கக்கதண்டம்	கக்பிகதண்டம்
6	கக்னகசம்		
7	கக்கடி		
8	கக்னுகடி		
9	கக்கதண்டம்		
10	கக்பிகதண்டம்		

எனவரும் தரவுச் சொற்தரவில் வரும் சிக்கலை அறிந்திட பின்வரும் சொல் பட்டியல் அட்டவணை - 3 உருவாக்கப்பட்டது. மேற்கண்ட அட்டவணை - 2இல் (sample_word_sameword.csv) இடம்பெறும் முதல் சொல்லாகிய 'ககனக்கிரகம்' என்பதன் மாற்றுச் சொல்லாக, அதில் உள்ள 'ன' எனும் எழுத்தை அகரவரிசைப்படி அமையுமாறு எழுதி உருவாக்கிக் கொள்ளப்பெற்றது.

அட்டவணை - 3, சொல் பட்டியல்

S.No.	sample_words
1	ககனாக்கிரகம்
2	ககனாக்கிரகம்
3	ககனிக்கிரகம்
4	ககனீக்கிரகம்
5	ககனுக்கிரகம்
6	ககனூக்கிரகம்
7	ககனெக்கிரகம்
8	ககனேக்கிரகம்
9	ககனைக்கிரகம்
10	ககனொக்கிரகம்
11	ககனோக்கிரகம்
12	ககனௌக்கிரகம்

இந்த அட்டவணை - 3-னைப் பைத்தான் நிரலாக்கத்தில் ஆய்வு உள்ளீடாகத் தரும்போது பின்வரும் விளைவு கிடைக்கப்பெறுகின்றது.

சொற்தரவில் உள்ள சொற்களின் எண்ணிக்கை: 12
ஒரெழுத்து, ஈரெழுத்துச் சொற்களின் எண்ணிக்கை: 0
விதி1_ற்குட்பட்ட சொற்களின் எண்ணிக்கை: 12
விதி1-ற்குட்படாத சொற்களின் எண்ணிக்கை: 0
விதி1-ற்குப் பொருந்தாத சொற்களின் எண்ணிக்கை: 0

இந்த விளைவின்படி அனைத்துச் சொற்களும் விதி1_ற்குட்பட்ட சொற்கள் எனத் தருவது பிழையான விளைவு என்பதை அட்டவணை - 3இல் உள்ள சொல் பட்டியலைப் பார்த்தாலே தெரியும். இன்னும் சில கருத்துக்களையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஒரு தரவகத்தில் ஒருகோடிச் சொற்கள் இருக்கின்றன என வைத்தால் துல்லியமாகச் சரியான சொற்களைக் கண்டறிய முடியுமா என ஐயம் தோன்றுகின்றது. ஆகவே, சில கேள்விகளும் கூடவே எழுகின்றன. அவை,

மேற்கண்ட பட்டியல் போன்று பிழையான சொற்களை உருவாக்க இயலுமா?
அவ்வாறு உருவாக்க வேறு ஏதேனும் நுட்பம் உள்ளதா?
இயந்திரவழிக் கற்றல் மூலம் (Machine Learning Based) சாத்தியமா?
செய்யறிவு நுட்பம்வழிச் (AI Based) சாத்தியமா?
விதிமுறைவழிச் (Rule Based) சாத்தியமா?

என்பன. தற்போது செய்யறிவு மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றுள் கூகுள் செமினி செய்யறிவு (Gemini AI Tool) நுட்பத்தின் விளைவு எப்படி இருக்கின்றது என்பதை அறிவோம். அதற்காக மேலே உள்ள சொல்பட்டியலைத் தந்து, 'இதில் உள்ள பிழையான சொற்களைக் கண்டறிக' எனதக் கட்டளையாகத் தரும்பொழுது அது தரும் பதில் பின்வருமாறு அமைகின்றது.

தவறான சொற்கள்:

கீழ்கண்ட சொற்கள் தவறானவை:

ககனாக்கிரகம்
ககனிக்கிரகம்
ககனீக்கிரகம்
ககனெக்கிரகம்
ககனேக்கிரகம்
ககனைக்கிரகம்

விளக்கம்:

"ககனம்" என்ற வார்த்தையின் சரியான வடிவம் "ஆகாயம்" என்பதாகும்.

"ஆகாயம்" என்ற வார்த்தையுடன் "கிரகம்" என்ற வார்த்தையை சேர்க்கும்போது, "ஆகாயக்கிரகம்" என்ற சரியான சொல் உருவாகிறது.

மேலே குறிப்பிட்ட தவறான சொற்களில், "க" என்ற எழுத்து அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கூகுள் செமினி செய்யறிவு (Google Gemini AI) நுட்பத்தின் பதிலிலும் போதியளவு துல்லியம் இல்லை. ஆகையால், மெய்ம்மயக்கத்திற்கு மட்டும் விதி எழுதினால் போதாது என்பதையும், கூடுதலாகச்

சொல்வளம்

அகராதி வளம்

ஆகியன இருத்தல் வேண்டும் என்பதையும் உணரப் பெற்றது. அதனடிப்படையில் அணுகும்பொழுதுதான் சரியான மெய்ம்மயக்கச் சொற்களைக் கண்டறியும் நுட்பம் கிடைக்கும் எனும் தீர்வும் கிடைக்கபெற்றது. அதனை மெய்ப்பிக்கும் நிரல் மாற்றி [28] எழுதப்பட்டது. அந்த நிரலால் கிடைக்கும் விளைவு வருமாறு;

```
lenovo@lenovo-Lenovo-ideapad-110-
15ACL:ஸ்ரீ/Documents/தொல்காப்பியம்_மெய்ம்மயக்கம்/First_Rule$ python3 one_ruletest.py
சொற்தரவில் உள்ள சொற்களின் எண்ணிக்கை: 12
ஒரெழுத்து, ஈரெழுத்துச் சொற்களின் எண்ணிக்கை: 0
விதி1_ற்குட்பட்ட சொற்களின் எண்ணிக்கை: 1
விதி1-ற்குட்படாத சொற்களின் எண்ணிக்கை: 11
```

விதி1-ற்குப் பொருந்தாத சொற்களின் எண்ணிக்கை: 0

இங்கு விதி ஒன்றை ஆய்விற்கு உட்படுத்தும் சொற்பட்டியல் தரப்பெற்றது. அதில் சரியான சொற்களும் பிழையான சொற்களும் இடம்பெறுமாறு அமைத்துக் கொள்ளப்பெற்றது. அதன்பின்பு, நிரலாக்கத்தில் இயங்குமாறு செய்தபோது மேற்கண்ட விளைவு கிடைக்கப்பெற்றது. அதற்காகச் சரியான சொற்பட்டியலும் வைத்துக் கொள்ளப்பெற்றது. அதில் 'ககனக்கிரகம்' என்ற சொல் மட்டும்தான் சரியான சொல் எனத் தனிக் கோப்பில் தரப்பட்டது என்பதையும் இங்குக் கவனத்தில்கொள்ள வேண்டும். ஆய்வுக்கு உட்படுத்தும் சொற்பட்டியலைச் சரிபார்த்த பின்பு, சரியான சொற்கள் எனக் கண்டறியும் சொற்களைப் பொருள்தரும் சொற்பட்டியலில் சரி என்ற சொற்கள் இருக்கின்றனவா என ஆய்வுசெய் என அதற்குக் கட்டளை இடப்பெற்றது. அது சரிபார்த்த பின்பு சரியான புள்ளிவிவரத்தையே இந்த நிரலாக்கம் வழங்குமாறு எழுதப்பெற்றுள்ளது. அந்த நிரலாக்கத்தை நேயக்கோ (neyakkoot) கித்துப்பில் (Github) [28] பார்க்கலாம்; ஆய்விற்கு உட்படுத்தியும் காணலாம்.

இந்தப் புள்ளி விவரத்தை வரைபடமாகக் காட்சிப்படுத்திப் பார்க்கும் பொழுதுதான் தெளிவாக ஆய்வின் போக்கினை அறியமுடியும். ஆகையால் பிளாட்லி அகராதி பயன்படுத்தப்பெற்றது. அதனைக் காட்சிப்படுத்திக் காட்ட பின்வருமாறு நிரல் எழுதிக் கொள்ளப்பெற்றது. அது வருமாறு;-

```
# பை படம் வரைதல்

labels = ['மொத்தம்', 'செயல்முறைக்குள்ளாக்கு', 'சரியான_சொற்கள்', 'தவறான_சொற்கள்', 'ஆய்விற்குட்படாச்சொற்கள்']

வரைபடமதிப்பீடு = [மொத்தம், செயல்முறைக்குள்ளாக்கு, சரியான_சொற்கள், தவறான_சொற்கள், ஆய்விற்குட்படாச்சொற்கள்]

fig = px.pie(values=வரைபடமதிப்பீடு, names=labels)

fig.show()
```

இந்த நிரல் விளைவின்படி பின்வரும் படம் - 1 தோன்றும். அதன்படம் வருமாறு;-

படம் - 1, பிளாட்லி வரைபடம்



இவ்வாறு காட்சிப்படுத்திப் பார்க்கும் பைத்தான் அகராதிகளாக மேட்பிளாட்லிப், பிளாட்லி, சீபார்ன் போன்றன உண்டு. அவற்றுள் பெரும்பான்மை மேட்பிளாட்லிப் எனும் அகராதியே பயன்படுத்தப்பட்டு

வருகின்றது. அதில் காட்சிப்படுத்திப் பார்க்கும்பொழுது சிக்கல் உருவானது. அதனைப் பின்வருமாறு விளக்கமாக அறிவோம்.

காட்சிப்படுத்தத்தில் சிக்கலும் தீர்வும்

ஆய்வுசெய்தவற்றைக் காட்சிப்படுத்திப் பார்க்கும்பொழுது தரவின் துல்லியத்தை இன்னும் மேம்படுத்துவதற்கான சூழல் உருவாகும். ஆகவே இயந்திரக் கற்றலில் காட்சிப்படுத்துவதற்கே தனி பைத்தான் அகராதிகள் நிரம்ப உள்ளன. அவற்றுள் மேட்பிளாட்லிப் (Matplotlib) பைத்தான் அகராதியைப் பயன்படுத்தி இயக்கிப் பார்க்கும்பொழுது தமிழ்மொழியைக் காட்சிப்படுத்துவதில் சிக்கல் வருகின்றது. அதனைக் காட்டும் படம்-2 வருமாறு;

படம்-2, தமிழ்ச்சொல் காட்சிப்பிழை,

விதி1_ற்குட்பட்ட சொற்களின் எண்ணிக்கை: 525



இவ்வாறு வருவதால் ஆங்கிலத்தில் தகவல் தருமாறு மாற்றி எழுத வேண்டியுள்ளது. அதனைப் பின்வரும் படம்-3இல் பார்க்கலாம்.

படம்-3, ஆங்கிலக் காட்சி நேர்த்தி

விதி1_ற்குட்பட்ட சொற்களின் எண்ணிக்கை: 525



அதன்பிறகு வேறு எந்தப் பைத்தான் அகராதியைப் பயன்படுத்தலாமென ஆய்ந்து பார்க்கும்பொழுது பிளாட்லி (Plotly) அதற்கு ஏற்றத் தன்மையில் அமைந்து இருப்பதை அறியமுடிந்தது. அதனைப் பின்வரும் படம்-4இல் காணலாம்.

படம்-4, தமிழ்ச்சொல் காட்சி நேர்த்தி



இது அந்தச் சிக்கலிற்கான தீர்வாகவும் அமைந்தது.

முடிவுரையும் எதிர்காலச் செயல்பாடும்

இதுவரை விளக்கப்பட்ட கருத்தியல்களின் அடிப்படையில் நோக்கும்பொழுது இனிவரும் காலங்களில் தமிழில் இயந்திரவழிக் கற்றல் சார்ந்த ஆய்வுகள் பெருகி, இலக்கிய இலக்கணத் தரவுகள் மொழித் தொழில்நுட்பத்திற்கு ஏற்றாற்போல் உருமாறும் என்பதில் ஐயமில்லை. அவ்வாறு பெருகும் ஆய்வுகளுக்கு இது முன்னோடியாகவும் தூண்டுகோலாகவும் அமையும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை

தொல்காப்பிய மெய்ம்மயக்க விதிக்கு ஏற்படுத்தியிருக்கும் நிரல் உருவாக்கம் போன்று, ஒவ்வொரு இலக்கியத் தரவு உருவாக்கத்திற்கும் எழுதப்பெறும் பைத்தான் நிரல்கள் பொது உரிமத்தில் வைக்கப்பெற வேண்டும் எனவும், அதனை ஆய்வாளர்கள் ஆய்வறத்தோடு மேற்கோள் காண்பித்து எடுத்தாள வேண்டும் எனவும் இவ்வாய்வின் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

துணைநின்றவை

1. தெய்வசுந்தரம் ந., 2021, மொழியியலும் கணினிமொழியியலும், சென்னை: அமுத நிலையம். ப.184.
2. த.சத்தியராஜ், தகவலுழவன், 17 அக்டோபர் 2022, விக்கிமூலமும் தமிழ் இயற்கை மொழி ஆய்வுகளும், கோயமுத்தூர்: இனம் பதிப்பகம்.
3. முனைவர் த.சத்தியராஜ், முனைவர் ரா.நித்யா, தகவலுழவன், 17 அக்டோபர் 2023, விக்கித்திட்டங்களில் பைத்தான் பயன்பாடு, கோயமுத்தூர் : இனம் பதிப்பகம்.
4. முனைவர் த.சத்தியராஜ், 2022, தமிழ் விக்கிமூலத்தில் குறுந்தொகைத் தரவு மேம்பாடு (E-content development for Kurunthogai resource in ta.Wikisource) Kalviyiyal Maanaaddu Aaivu Kovai 2021, Thoguthi-2.
5. Vinoth, A., Thangasamy, S., Nithya, R., Poovandran, G., Mounash, V., Subalalitha, C. N., ... & Jafer, K. S. (2023, December). Automatic Identification of Meimayakkam in Tamil Words Using Rule Based and Transfer Learning Approaches. In International Conference on Speech and Language Technologies for Low-resource Languages (pp. 443-458). Cham: Springer Nature Switzerland. https://link.springer.com/chapter/10.1007/978-3-031-58495-4_33)

6. Vinoth A, Sathiyaraj Thangasamy, John Paul Boopathi A, Poovandran G, A development of the Meimayakkam second Rule Based on Tholkaappiyam and Nannul grammar concepts, proceeding of ICSIEM 2024.
7. MAHALAKSHMI M., Charles Mahimainathan A., Dr. Vinoth A., Dr. Sathiyaraj Thangasamy, DATA SCIENCE BASED CORPUS CREATION FOR THOLKAAPPPIYAM, JNU, (2024)
8. Dr. Vinoth A., Dr. Sathiyaraj Thangasamy, Poovandran, G., App Development for Tholkaappiya Meymayakkam First rule problem solve, INFITT & Kumaraguru (2024)
9. Nedunchezhiyan, K.: Tholkappiyar period. https://newindian.activeboard.com/t59991225/topic-59991225/. Accessed 14 மே 2024
10. கணியம், https://github.com/KaniyamFoundation/all_tamil_nouns, Accessed 14 மே 2024
11. Tamil Oneindia Homepage. https://tamil.oneindia.com/art-culture/essays/2010/0429-tolkappiyar-tamil-literature.html. Accessed 14 மே 2024
12. shakespeare-dataset, GitHub - https://github.com/topics/shakespeare-dataset, Accessed 14 மே 2024
13. GitHub - cobanov/shakespeare-dataset: complete works, plays, sonnets and poems of shakespeare, https://github.com/cobanov/shakespeare-dataset, Accessed 14 மே 2024
14. learning-hadoop-and-spark/0b-Example-Datasets/shakespeare-davinci/shakespeare.raw - https://github.com/lynnlangit/learning-hadoop-and-spark/blob/master/0b-Example-Datasets/shakespeare-davinci/shakespeare.raw, Accessed 14 மே 2024
15. TensorFlow-2-for-Deep-Learning-Specialization/Customising-your-models-with-TensorFlow-2/Week3_Programming_Assignment.ipynb, https://github.com/doducthao/TensorFlow-2-for-Deep-Learning-Specialization/blob/master/Customising-your-models-with-TensorFlow-2/Week3_Programming_Assignment.ipynb, Accessed 14 மே 2024
16. machine-learning-experiments/experiments/text_generation_shakespeare_rnn/text_generation_shakespeare_rnn.ipynb, https://github.com/trekhleb/machine-learning-experiments/blob/master/experiments/text_generation_shakespeare_rnn/text_generation_shakespeare_rnn.ipynb, Accessed 14 மே 2024
17. fedjax/fedjax/datasets/shakespeare.py, https://github.com/google/fedjax/blob/main/fedjax/datasets/shakespeare.py, Accessed 14 மே 2024
18. Shakespeare-database, https://github.com/topics/shakespeare-database, Accessed 14 மே 2024
19. shakespeare-PyPI, https://pypi.org/project/shakespeare/, Accessed 14 மே 2024
20. py-shakespeare-PyPI, https://pypi.org/project/py-shakespeare/, Accessed 14 மே 2024
21. Shakespearelang, https://shakespearelang.com/1.0/, Accessed 14 மே 2024
22. Python NLTK Shakespeare corpus, https://stackoverflow.com/questions/43721175/python-nltk-shakespeare-corpus, Accessed 14 மே 2024
23. பாலசுப்பிரமணியன் க., 2017, தொல்காப்பிய இலக்கண மரபு, சென்னை - அரிமா நோக்கு.
24. பாலசுப்பிரமணியன் க., 2015, தொல்காப்பியத்தின் ஒருமையும் முழுமையும், சென்னை - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
25. Repository migrated to KanchiLUG's repository https://gitlab.com/kachilug/tamilrulepy, Accessed 16 மே 2024

26. தமிழண்ணல், 2008, தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மதுரை; மீனாட்சி புத்தக நிலையம். ப.12.
27. தொல்காப்பியக் குறுஞ்செயலி, https://github.com/neyakkoot/tholkaappiyam_mobil_app_development, Accessed 16 சூன் 2024
28. தொல்காப்பிய மெய்ம்மயக்கம், https://github.com/neyakkoot/tholkappiyam_meymayakkm_first_rule_developed, Accessed 16 சூன் 2024
29. தெய்வசுந்தரம் ந., 2021, மொழியும் தமிழ் இலக்கணமும், சென்னை: அமுத நிலையம். ப.99.
30. சத்தியராஜ் தங்கச்சாமி, ஏப்பிரல் 2024, தொல்காப்பியம் - நூன்மரபு (பைத்தான்வழி உரை 1), இலக்கணம் காலாண்டுச் சஞ்சிகை 6, பூ 2; இதழ் 2, சித்திரை - ஆனி, ISSN: 2961-5712, பக்.22-28.
31. சத்தியராஜ் தங்கச்சாமி, ஏப்பிரல் 2024, தொல்காப்பியம் - நூன்மரபு (பைத்தான்வழி உரை 2), இலக்கணம் காலாண்டுச் சஞ்சிகை 7, பூ 2; இதழ் 3, ஆடி - புரட்டாதி, ISSN: 2961-5712, பக்.11-14.

தொ.மா.க. 121

இயற்கணிதம், கணக் கணிதம் மற்றும் கோட்டுரு அல்லது பரிமாண - அச்சு - இருப்புநிலை வரைபடக் கணிதம் மூலம், தமிழ் எழுத்துகளின் விளக்கம்

Explanation of Tamil Letters through Mathematical Algebra, Set Theory and Graph Representation

தீனதயாளன் சுப்ரமணியம் (சொல்லாக்கியன்)
போர்ட் மெக்முர்ரே, ஆல்பர்ட்டா, கனடா,
dheena.subramanian@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இன்று, எந்த அறிவியல் உண்மையை மெய்ப்படுத்த வேண்டுமாயினும், கணக்கின் அடிப்படையைக் கொண்டே நிறுவ முடியும்.

இவ்வாய்வின் நோக்கம், தமிழ் எழுத்துகள், எவ்வாறெல்லாம் இயற்கணிதம், கணக்கணிதம் மற்றும் கோட்டுருக் கணித அடிப்படைகளுக்கு இணங்கி இயங்குகிறது என்பதைக் காட்டுவதற்கும், தமிழ்மொழியை அடுத்த சந்ததிகள் எளிமையாக புரிந்துக் கொள்வதற்கும், தமிழ்மொழியில் இத்தகைய அறிவியல் வகையிலான ஆய்வுகள், மேலும் தொடர்வதற்குமாம்.

குறிசொற்கள்: தமிழ் - மொழி - அறிவியல் - கணிதம் - இயற்கணிதம் - கணக்கணிதம் - கோட்டுருக்கணிதம் - அகரமே எல்லா எழுத்துமாதல் - உயிர்கள் உடன்படுமெய்யாதல் - எழுத்துப் பதிலிகள் அல்லது போலிகள் - சேரக்கையும் புணர்ச்சியும் - வெண் படங்கள் - கணங்களாய் எழுத்துகள் - புணர்ச்சி வெட்டுகணமாதல் - அச்சுகள் - எழுத்துகளின் பரிமாணங்கள் - தமிழ் எழுத்துகளின் கணிதத் துல்லியம்.

எல்லா அறிவியல்களுக்கும் அரசியாக விளங்குவது கணிதம் ஆகும். இதனை நுண்ணிதின் உணர்ந்த ஔவை பிராட்டியார், அன்றே கொன்றை வேந்தனில் கூறுவார்,

"*எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.*" *(ஔவை-கொன்றை வேந்தன்-7)*

அவருக்கு முன் வந்த வள்ளுவரும், குறளில் கூறுவார்,

"*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
கண்ணென்ப காணும் உயிர்க்கு." *(திருக்குறள் - 392)*

இன்று, எந்த அறிவியல் உண்மையையும் மெய்ப்படுத்த வேண்டுமாயின், கணக்கின் அடிப்படையைக் கொண்டே நிறுவ முடியும். அப்படி நிறுவப்பட்டதையே அறிவியல் சமூகமும் ஏற்கும். ஏனெனில் கணக்கு, இடம், காலம், இனம், மதம், மொழி ஆகிய அனைத்தையும் கடந்து நிலையானதாய் இருப்பது.

நம்முடைய தமிழ்மொழியின் இலக்கணம் மற்றும் தமிழர் வாழ்வியலின் வரலாற்று இலக்கியமாக விளங்குவது, தொல்காப்பியம். அதன் முதலும் முடிவும், பகுப்பும் தொகுப்பும், அமைப்பும் ஒழுங்கும், கொள்கைகளும் விலக்குகளும், பொதுநடையும் புறநடையும் என, ஒரு அறிவியல் படைப்புக்கான அனைத்து குணங்களையும், அது சீராகப் பெற்றுள்ளது.

இணையாக, நம் தமிழ் மொழியின் எழுத்துகளின் தோற்றமும், மாற்றமும், தேற்றமும், நிரலும், ஒழுங்கும், எளிமையும், இனிமையும் கலை அழகியலுடனும், அறிவியல் உறுதியுடனும், தனிச்சிறப்புற்று விளங்குகிறது.

இக்கட்டுரையின் நோக்கம், தமிழ் எழுத்துகள், எவ்வாறெல்லாம் கணிதவியலின் வெவ்வேறு துறைகளின் அடிப்படைகளுக்கு இணங்கி இயங்குகிறது என்பதைக் காட்டுவதற்கும், அடுத்த சந்ததிகளின் எளிமையான புரிதலுக்கு வழிகோலுவதற்கும், அறிவியல் வகையிலான ஆய்வுகளை, மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கான ஊக்கத்தை அளிப்பதற்குமாம்.

I. இயற்கணிதம் மூலம் தமிழ் எழுத்துகளின் உருவாக்கம்

இயற்கணிதம் என்பதை **இயல் + கணிதம்** எனப் பிரிக்கலாம்; **இயல்பை அறிதல்** அல்லது **இயல்பை அளத்தல்** எனப் பொருள் கொள்ளலாம். இயற்கணிதம் என்பது, கூட்டல், பெருக்கல், கழித்தல், வகுத்தல் எனும் முதன்மையான கணிதச் செயல்பாடுகளை எளிமைப்படுத்திய வழிமுறை எனலாம். மேலும், தெரிந்தனவற்றைக் கொண்டு தெரியாதனவற்றை அறியும் வழிவகையைக் கொண்டுள்ளது, இயற்கணிதம். முழு எண்கள் மட்டுமின்றி, பின்ன எண்களையும் கணக்கிடும் முறைகளைக் கொண்டது, இயற்கணிதம்.

இயற்கணிதத்தில், மாறி (Variable), மாறிலி (Constant) களைக் கொண்டு சமன்பாடுகள் (Equations) தீரக்கப்படுகின்றன; ஒத்த உறுப்புகளையே (Term) கூட்டவோ, கழிக்கவோ, பெருக்கவோ வகுக்கவோ முடியும்; சமன்பாடுகள், கோவை (Expression) எனப்படும்; கோவைகள், ஓர் உறுப்புக் கோவை (Mononomial), ஈர் உறுப்புக் கோவை (Binomial) , மூவுறுப்புக் கோவை (Trinomial) மற்றும் பல்லுறுப்புக் கோவை (Polynomial) என நால்வகைப்படும்; கெழுவை (coefficient) அடுத்து உறுப்பு வரும். நிற்க.

"*அகர முதல எழுத்தெலாம் ஆதி*
பகவன் முதற்றே உலகு." *(திருக்குறள் - 1)*

அகரம் எனும் தமிழ்மொழியின் எழுத்து, முதல் எழுத்தாக இருப்பதோடு மட்டுமின்றி, எல்லா பிற தமிழ் எழுத்துகளுக்கும் மூல எழுத்தாகவும் இருக்கின்றது. அதாவது, "அ" வில் இருந்தே பிற எல்லா எழுத்துகளும் தோன்றுகின்றன. எப்படி?

“அ” வைச் சொல்லிக் கொண்டே, இதழ்களைப் பின்னோக்கி இழுங்கள், “இ” கரம் தோன்றும். அவ்வாறே, “அ” வைச் சொல்லிக் கொண்டே, இதழ்களை முன்னோக்கிக் குவியுங்கள், “உ”கரம் தோன்றும். எனவே,

“அ” வை முதல் வகை எழுத்து எனலாம்.

<அ = இ, அ> = உ என்பதால், “இ”, “உ” ஆகியவற்றை இரண்டாம் வகை எழுத்துகள் எனலாம்.

¾ இ + ¼ அ = எ. ¾ அ + ¼ உ = ஒ. “எ”, “ஒ” ஆகியவற்றை மூன்றாம் வகைச் சமன்பாட்டு எழுத்துகள் எனலாம். முக்கால் மாத்திரை இகரமும், கால் மாத்திரை அகரமும் சேர்ந்து, ஒரு மாத்திரை கொண்ட “எ”கரமாகின்றது. முக்கால் மாத்திரை அகரமும், கால் மாத்திரை உகரமும் சேர்ந்து, ஒருமாத்திரை கொண்ட “ஒ”கரமாகின்றது.

அ + இ = ஐ. ஒரு மாத்திரை “அ”கரமும், ஒரு மாத்திரை “இ”கரமும் சேர்ந்து, இரு மாத்திரை கொண்ட “ஐ”காரமாகின்றது. அவ்வாறே, அ + உ = ஔ. ஒரு மாத்திரை “அ”கரமும், ஒரு மாத்திரை “உ”கரமும் சேர்ந்து, இரு மாத்திரை கொண்ட “ஔ”காரமாகின்றது. எனவே, “ஐ”, “ஔ” ஆகியவற்றை நான்காம் வகைச் சமன்பாட்டு எழுத்துகள் எனலாம்.

அ + அ = ஆ. ஒரு மாத்திரை அகரமும், மற்றொரு மாத்திரை அகரமும் சேர்ந்து, இரு மாத்திரை கொண்ட ஆகாரமாகின்றது. இ + இ = ஈ. ஒரு மாத்திரை இகரமும், மற்றொரு மாத்திரை இகரமும் சேர்ந்து, இரு மாத்திரை கொண்ட ஈகாரமாகின்றது. உ + உ = ஊ. ஒரு மாத்திரை உகரமும், மற்றொரு மாத்திரை உகரமும் சேர்ந்து, இரு மாத்திரை கொண்ட ஊகாரமாகின்றது. எ + எ = ஏ. ஒரு மாத்திரை எகரமும், மற்றொரு மாத்திரை எகரமும் சேர்ந்து, இரு மாத்திரை கொண்ட ஏகாரமாகின்றது. ஒ + ஒ = ஓ. ஒரு மாத்திரை ஒகரமும், மற்றொரு மாத்திரை ஒகரமும் சேர்ந்து, இரு மாத்திரை கொண்ட ஓகாரமாகின்றது. எனவே, ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆகியனவற்றை, ஐந்தாம் வகைச் சமன்பாட்டு எழுத்துகள் எனலாம்.

இ X அ = ய. ஒரு மாத்திரை இகரம், மற்றொரு மாத்திரை அகரமுடன் பெருக்கி வருவது, ஒரு மாத்திரை யகரம். இகரமும் அகரமும் புணர்ந்து, யகரமாகின்றது (1X1 = 1). உ X அ = வ. ஒரு மாத்திரை உகரம், மற்றொரு மாத்திரை அகரமுடன் பெருக்கி வருவது, ஒரு மாத்திரை வகரம் (1X1 = 1). உகரமும் அகரமும் புணர்ந்து, வகரமாகின்றது. எனவே, ய, வ ஆகியன, இரண்டு உயிர்கள் இணைந்து உருவான உயிர்மெய் ஒலிகள் ஆகும். இவை மெய்யுடன் உடன்படுவதால், உடம்படுமெய்கள் எனப்படுகின்றன. இவற்றை, ஆறாம் வகைச் சமன்பாட்டு எழுத்துகள் எனலாம்.

இவ்வாறு, ஒற்றை அகரமே(அ), திரிந்து (அ, இ, உ) என்று மூன்றாகி, ஒன்று முக்கால் மாத்திரையுடனும் (இ / அ) மற்றொன்று கால் மாத்திரையுடனும் (அ / உ) சேர்ந்து, எ, ஒ என குறில் உயிர்களாகவும், ஒன்று மற்றதுடன் சமமாய் (அ + இ, அ + உ) சேர்ந்து, ஐ, ஔ என நெடில் உயிர்களாகவும், தாமே தம்முடன் சேர்ந்து, ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என நெடில் உயிர்களாகவும் உருவாகி, மொத்தம் பன்னிரண்டு உயிர் எழுத்துகளாகின்றது. (அகரம் முதல எழுத்தெலாம்..). மற்றும், அகரமே (இ X அ, உ X அ) ய, வ என இரண்டு குறில் உடன்படுமெய்களுமாகின்றது.

அ x க் = ஃ. அதாவது, “அ”வின் மாத்திரை 1 பெருக்கல் “க்” இன் மாத்திரை ½ = 1 x ½ = ½. ஃ என்பது அரை மாத்திரை அளவுடையது. (எழுத்துகளைப் பெருக்கும் போது, மாத்திரை அளவு குறைகின்றது இ x அ = ய, அதாவது 1 x 1 = 1). எழுத்துகள் சேரும்போது, மாத்திரை அளவு மிகுகின்றது அ + இ = ஐ, அதாவது, 1 + 1 = 2).

அ x க் = ஃ ஆவதைப் போன்றே, க x ஃ = க், ச x ஃ = ச், ட x ஃ = ட், ...பிற மெய்யெழுத்துகளும் அவ்வாறே.

ன் + க் = ங், ன் + ச் = ஞ், ன் + ட் = ண், ன் + த் = ந், ன் + ப் = ம். இங்கு இயங்கும் சமன்பாடு யாது? ½ மாத்திரை மெய்யெழுத்துகளுக்கானது, நிலையானது, எனவே, மாறிலி (Constant) . அதனால், ½ (ன் + க்) = ½ (½ + ½) = ½ x 1 = ½.

சமன்பாடுகளின் தீர்வு 1 :

இ + அ = ய
ய் + அ = ய
எனவே,
இ + அ = ய் + அ.
இரண்டு பக்கத்திலும் பொதுவாய் உள்ள அகரத்தை நீக்கினால் கிட்டுவது:
இ + அ = ய் + அ
இ = ய் அல்லது ய் = இ.
எனவே, தொல். எழுத்து அதிகாரம் மொழிமரபு 58. "**இகர யகரம் இறுதி விரவும்**".
இ க்கு பதிலாக **ய்** யும், **ய்** க்கு பதிலாக **இ** யும் வரலாம்.
நாய் / நாஇ.

சமன்பாடுகளின் தீர்வு 2 :

உ + அ = வ
வ் + அ = வ
எனவே,
உ + அ = வ் + அ.
இரண்டு பக்கத்திலும் பொதுவாய் உள்ள அகரத்தை நீக்கினால் கிட்டுவது:
உ + அ = வ் + அ
உ = வ் அல்லது வ் = உ.
எனவே, **அ + உ** என்பது **அ + வ்** = அவ் ஆகும்.

மேலும்,

அ + உ = ஔ
அ + உ = அவ்

எனவே, ஔ = அவ், ஔவை = அவ்வை.

இவ்வாறு, தமிழ் எழுத்துகளின் உருவாக்கம், இயற்கணித அடிப்படையில் அமைந்துள்ளதைக் கண்ணுறலாம். **தமிழ், ஒரு கணித அறிவியல் மொழி**!

II.**கணக் கணிதம் மூலம் தமிழ் எழுத்துகளின் உருவாக்கம்**:

கணக்கணிதக் குறியீடுகள்: (Venn Diagrams)

அண்ட கணம்:

கணம்:

சேர்ப்பு:

வெட்டு:

தமிழ் எழுத்துகள் :

அ:



ஆ:



இ:



ஈ:



உ:



ஊ:





எ:



ஏ:



ஐ:



ஒ:



ஓ:



ஔ:



ஃ:

தனி கணங்கள்: அ, இ, உ.

சேர்ப்பு கணங்கள்: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.

வெட்டு கணங்கள்: எ, ஒ, ஃ.

இவ்வாறு, கணக்கணித அடிப்படைகளுக்கு பொருந்தி வருகின்றன, தமிழ் எழுத்துகள்.

III. **கோட்டுரு அல்லது பரிமாண - அச்சு - இருப்புநிலை வரைபடக் கணிதம் மூலம் தமிழ் எழுத்துகளின் உருவாக்கம்**:



அ - 8 கட்டங்கள் - 1 மாத்திரை. ஆ - 16 கட்டங்கள் - 2 மாத்திரை





இ - 8 கட்டங்கள் - 1 மாத்திரை. ஈ - 16 கட்டங்கள் - 2 மாத்திரை.





உ - 8 கட்டங்கள் - 1 மாத்திரை. ஊ - 16 கட்டங்கள் - 2 மாத்திரை.



இ - 6 கட்டங்கள்- ¾ மாத்திரை, அ - 2 கட்டங்கள் - ¼ மாத்திரை= எ - 1 மாத்திரை



இ - 12 கட்டங்கள்- 1 ½ மாத்திரை, அ - 4 கட்டங்கள் - ½ மாத்திரை= ஏ - 2 மாத்திரை



இ - 8 கட்டங்கள் - 1 மாத்திரை, அ - 8 கட்டங்கள் - 1 மாத்திரை = ஐ - 2 மாத்திரை



அ - 6 கட்டங்கள் - ¾ மாத்திரை, உ - 2 கட்டங்கள் - ¼ மாத்திரை = ஒ - 1 மாத்திரை.





அ - 12 கட்டங்கள் - 1 ½ மாத்திரை, உ - 4 கட்டங்கள் - ½ மாத்திரை = ஓ - 2 மாத்திரை.



அ - 8 கட்டங்கள் - 1 மாத்திரை, உ - 8 கட்டங்கள் - 1 மாத்திரை = ஔ - 2 மாத்திரை.



அ - 2 கட்டங்கள் - ¼ மாத்திரை, க் - 2 கட்டங்கள் - ¼ மாத்திரை = ஃ - ½ மாத்திரை.

இவ்வாறு, இயற்கணிதம், கணக்கணிதம் மற்றும் கோட்டுரு அல்லது பரிமாண- அச்சு - இருப்புநிலை வரைபடம் ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கைகளின் மூலமாக, தமிழ் எழுத்துகளின் உருவாக்கத்தை அறியலாம். இவ்வாய்வு, தமிழ் எழுத்துகளின் துல்லியத் தன்மையை அறிய உதவலாம்.

குறிப்பு: இக்கட்டுரைக்கு மூல நூலோ, முன் ஆய்வுகளோ ஏதுமில்லை. ஆயினும், எழுத உதவிய நூல்கள்:

1. தொல்காப்பியம் - இளம்பூரணர்.
2. சொல்லாக்கியம் - சொல்லாக்கியன்.

தொ.மா.க. 149

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்

முனைவர் பால. சிவகடாட்சம்

கனடா

sivakad@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

நாள் எனப்படும் நட்சத்திரம், புள் எனப்படும் பறவை உட்படப் பல்வேறு நிமித்தங்கள் எதிர்காலத்தில் நிகழ இருப்பவற்றை முன்கூட்டியே அறியத்தருகின்றன என்னும் பண்டைத்தமிழரின் நம்பிக்கைகள் பற்றித் தொல்காப்பியம் அறியத்தருகின்றது. காலக்கணிப்பில் பயன்படுத்தப்பெறும் இருபத்தேழு நட்சத்திரங்களும் சங்க இலக்கியங்களில் 'நாள்மீன்கள்' என்று குறிப்பிடப்பெறுகின்றன. தமது அரசனாகிய யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இன்னநாளில் இறக்கப்போவதை வானியல் நிகழ்வுகள் மூலம் அறிந்து தாமும் பிறரும் வருந்தியதாக கூடலூர்கிழார் என்னும் புலவர் ஒரு பாடலில் தெரிவிக்கின்றார். கிரேக்க மொழியில் Ornithomancy என்று அறியப்படும் 'பறவை சகுனம்' பற்றிய கிரேக்கரின் நம்பிக்கைகளுக்கும் பண்டைத்தமிழரின் புள்நிமித்ததுக்கும் இடையில் வியக்கத்தக்க ஒற்றுமை காணப்படுகின்றது. குறிப்பிட்ட சில பறவைகள் வலமிருந்து இடமாகப் போவதும் மற்றும் சில இடமிருந்து வலமாகச் செல்வதும் நல்ல மற்றும் தீய நிமித்தங்களாகப் பண்டைத்தமிழர் கருதினர் என்பதை அறியமுடிகின்றது. தமிழர் மத்தியில் காக்கை, கருடன், கரிக்குருவி, செம்போத்து, ஆந்தை என்பவை நிமித்தப் பறவைகளாக அறியப்பட்டுள்ளன. ஒரு காகம் ஒரு வீட்டில் இடைவிடாமல் கரைந்துகொண்டே இருந்தால், அது விருந்தினர் வருவதை முன்னறிவிப்பதாக நம்பப்படுகிறது. போரில் காயப்பட்டுக் கிடக்கும் தலைவன் உயிர் பிழைப்பது கடினம் என்பதை அறிவிக்கும் சகுனங்களுள் ஒன்றாக கோட்டானின் அலறலுடன் கூடனே வேறும் சில தீய நிமித்தங்கள் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளன. நாளும் புள்ளும் தவிர்ந்த பிறநிமித்தங்களுள் விரிச்சிகேட்டல், பல்லி சொல்லுதல் உள்ளிட்ட மற்றும் பல நிமித்தங்கள் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன.

கருச்சொற்கள்: தொல்காப்பியம், நாள்மீன், பறவை சகுனம், நிமித்தப்புள், விரிச்சி கேட்டல், பல்லி சொல்லுதல்

முன்னுரை

சகுனம் பார்த்தல் என்பது தமிழ்மக்களுக்கு அந்நியமான விடயமாக ஒருபோதும் இருந்ததில்லை. குறிப்பாக முக்கியமான கடமைகளை மேற்கொள்ளுமுன் அவற்றைத் தொடங்குவதற்கான சுபநேரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவது வழக்கமாய் இருந்துள்ளது. அரசர்கள் படையெடுத்துச் செல்லுமுன்னரும் வணிகர்கள் வியாபார நோக்கமாக வெளியூர்களுக்குப் பயணம் மேற்கொள்ளும்போதும் எமது முன்னோர் சகுனம் அல்லது நல் நிமித்தம் பார்த்தனர். பறவையின் மூலம் சகுனம் பார்த்தல் என்பது சாதாரணமக்கள் அன்றாடம் பின்பற்றிவந்த ஒரு மரபு. ஆரம்பத்தில் பறவையைக் குறிக்கும் சொல்லான 'புள்' என்பது நிமித்தத்தைக் குறிக்கும் ஒரு சொல்லாகவும் பயன்பட்டு வந்துள்ளது.

வேதினம் வெரிநின் ஓதி முது போத்து
ஆறு செல் மாக்கள் புள் கொளப் பொருந்தும்

ஒரு கிழட்டு ஓணான் ஒலி எழுப்பி நிமித்தம் கூறுவதாகத் தெரிவிக்கும் இப்பாடலில் 'புள்' என்பது பறவையைக் குறிக்காது 'நிமித்தம்' என்பதை மட்டுமே குறிப்பதை அவதானிக்கலாம்.

நாள் எனப்படும் நட்சத்திரம், புள் எனப்படும் பறவை உட்படப் பல்வேறு நிமித்தங்கள் எதிர்காலத்தில் நிகழ இருப்பவற்றை முன்கூட்டியே அறியத்தருகின்றன என்னும் பண்டைத்தமிழரின் நம்பிக்கைகள் பற்றித் தொல்காப்பியம் அறியத்தருகின்றது.

நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே 2

இத்தகைய நம்பிக்கைகள் இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தும் இன்றும் தமிழர் மத்தியில் நிலைத்து நிற்பதை அறியமுடியும்.

அண்டவெளியில் உள்ள நட்சத்திரங்களின் நிலைகளை விண்வெளிப்பாதையில் நாளும் அசைந்து செல்லும் சந்திரனின் நிலையுடன் இணைத்து நாள் எண்ணும் காலக்கணிதமுறை இந்தியாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது. காலக்கணிதத்தின் அடிப்படையில் பருவகால மாற்றங்களையும் எதிர்கால நிகழ்வுகளையும் முன்கூட்டியே அறியத்தருவோரைக் 'கணியன்' என்றும் 'அறிவன்' என்றும் பண்டைத்தமிழ் நூல்கள் அழைக்கின்றன.

தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணை இயலுக்குரிய
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
என்னும் சூத்திரத்தில் வரும்
"மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்" என்பதற்கு
பனியும் வெயிலும் கூதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு நோன்மை எய்திய
தணிவுற்று அறிந்த கணிவன் முல்லை

என்னும் பன்னிருபடலத்துப் பாடலை மேற்கோள் காட்டி விளக்கும் இளம்பூரணனார் "அறிவன் என்பது கணியனை. மூவகைக் காலமும் நெறியின் ஆற்றுதலாவது, பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும்

தூமமும் மின்வீழ்வும் கோள்நிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல்” என்கிறார்.3

சூரியன் செல்லும் பாதையும் அந்தப்பாதையை உள்ளடக்கிய மண்டலமும் காற்று இயங்கும் திசையும் ஆதாரமின்றித் தானே நிற்கும் ஆகாயமும் இவை அனைத்தையும் தாமே சென்று அளந்து அறிந்துகொண்டவர்கள்போல் கூறும் அறிஞர்களும் உள்ளனர் என்று வியந்து கூறுகிறது புறநானூற்றில் வரும் பாடல் ஒன்று.

செஞ்ஞாயிற்றுச்செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
விளிதிரிதரு திசையும்
வறிது நிலை இய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தோர்போல என்றும்
இனைத்து என்போரும் உளரே 4

சங்கப்புலவர்கள் பட்டியலில் கணியன் பூங்குன்றனார், கணிமேதாவியார், பக்குடுக்கைநற்கணியார் என்னும் பெயர்களைக் காணமுடிகிறது. ஆயுள்வேதரும் காலக்கணிதரும் கூடிவாழ்ந்த பட்டினப்பாக்கம் பற்றிய வருணனையைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.5

நாள் நிமித்தம்

பூமியைச் சுற்றிக்காணப்படும் விண்வெளி வட்டத்தை இருபத்தேழு நட்சத்திர மண்டலங்களாகப் பிரித்தனர் பண்டைய இந்திய வானியல் ஆய்வாளர்கள். காலக்கணிப்பில் பயன்படுத்தப்பெறும் இருபத்தேழு நட்சத்திரங்களும் சங்க இலக்கியங்களில் ‘நாள்மீன்கள்’ என்று குறிப்பிடப்பெறுகின்றன. இருபத்தேழு நட்சத்திரத் தொகுதிகளின் வடிவத்தைப் பிரதிபலிப்பனவாக இவற்றின் தூயதமிழ்ப்பெயர்கள் அமைந்துள்ளன. உதாரணமாக அறுமீன் (கார்த்திகை) கைமீன் (அத்தம்) நுகம் (மகம்) எலி (பூரம்) காக்கை (அவிட்டம்) என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மன்னனின் பிறந்த நாளுக்கு உரிய நட்சத்திரம் மற்றும் மாதம், என்பவற்றைக் கருத்தில் கொண்டு அவனது பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மன்னனின் பிறந்தநாளைக் கொண்டாடும் ‘நாண்மங்கலம்’ என்னும் புறத்துறையைப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகின்றது. பாண்டிய மன்னன் ஒருவனின் பிறந்தநாளை உற்சாகமாகக் கொண்டாடும்படி நாட்டுமக்களுக்கு அழைப்பு விடுக்கும் பழந்தமிழ்ப் புலவர் ஒருவரின் பாடல் முத்தொள்ளாயிரத்தில் இடம்பெற்றுள்ளது.

“இன்று உத்தராட நாள். தேரோடும் பாண்டிய மன்னனின் பிறந்த நாள். வீரம் செறிந்த எங்கள் மன்னனுக்கு இன்று எவர்மீதும் விரோதம் கிடையாது. சிறைக்கதவுகளைத் திறந்து விடுங்கள். யானைகளையும் தேர்களையும் இசைக்கு ஏற்ப நடனமாடும் குதிரைகளையும் ஊர்வலத்தில் விடுங்கள்.” என்று போர்வீரர்களையும் பொதுமக்களையும் அழைக்கின்றார் இந்தப் புலவர்.

கண்ணார் கதவம் திறமின் களிறொடு தேர்
பண்ணார் நடைப்புரவி பண்விடுமின் நண்ணார் தம்
தேர் வேந்தன் தென்னன் திரு உத்தராட நாள்
போர் வேந்தன் பூசல் இலன் 6

மன்னர்கள் தமது பிறந்த நாளில் எதிரிகளை மன்னிப்பது சிறையில் இருப்போரை விடுவிப்பது உட்படத் தனது நாட்டுமக்களை மகிழ்விக்கும் பல செயற்திட்டங்களை அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

“உனது நாள்மீன் நின்று நிலைப்பதாக, உனது பகைவர்களின் நாள்மீன் நில்லாது பட்டுப்போகட்டும்” என்று பாண்டியன் தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை வாழ்த்துகின்றார் மாங்குடி மருதனார்.

கொற்ற நீள்குடைக், கொடித்தேர்ச் செழிய!
நின்று நிலைஇயர் நின் நாண்மீன்; நில்லாது
படாஅச் செலீஇயர், நின்பகைவர் மீனே; 7

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள மற்றுமொரு பாடல் ‘ஆடு இயல் அழல்’ (மேடராசிக்குரிய கார்த்திகை நட்சத்திரம்) முடப்பனை (அனுஷம்) கடைக்குளம் (உத்தராடம்) என்னும் நட்சத்திரங்கள் பற்றிய குறிப்புடன் அரசன் ஒருவனின் இறப்பை எதிர்வுகூறும் வானியல் நிகழ்வுகள் பற்றிக் கூறுகின்றது.

ஆடு இயல் அழல் குட்டத்து
ஆர் இருள் அரை இரவில்
முடப் பனையத்து வேர் முதலாக்
கடைக் குளத்துக் கயம் காயப்
பங்குனி உயர் அழுவத்துத்
தலை நாள்மீன் நிலை திரிய
நிலை நாள்மீன் அதன்எதிர் ஏர்தரத்
தொல் நாள்மீன் துறை படியப்
பாசிச் செல்லாது ஊசித் துன்னாது
அளக்கர்த் திணை விளக்காகக்
கனைஎரி பரப்பக் கால்எதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே:
அதுகண்டு யாமும்பிறரும் பல்வேறு இரவலர்
பறைஇசை அருவி நல்நாட்டுப் பொருநன்
நோயிலன் ஆயின் நன்றுமன் தில்லென
அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப
அஞ்சினம் 8

தமது அரசனாகிய யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இன்னநாளில் இறக்கப்போவதை வானியல் நிகழ்வுகள் மூலம் அறிந்து தாமும் பிறரும் வருந்தியதாக கூடலூர்கிழார் என்னும் புலவர் இப்பாடலில் தெரிவிக்கின்றார்.

‘நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லை’ என்பது பழமொழி. நாள் என்பது நட்சத்திரம்; கோள் என்பது கிரகம்;. பண்டைய தமிழர் நாள்மீன்களாகிய நட்சத்திரங்களுக்கும் (stars) கோள்மீன்களாகிய கிரகங்களுக்கும் (planets) இடையிலான வேறுபாடுபற்றி நன்கு அறிந்து வைத்திருந்தனர். சூரியனும் சந்திரனும் தவிர ஐந்து கிரகங்கள் உண்டென்பதைச் சங்கஇலக்கியமான பரிபாடல் தெரிவிக்கின்றது.

தீவலீ விசும்பு நிலம் நீர் ஐந்தும்
ஞாயிறுந் திங்களு மறனும் ஐவரும் 9

விண்வெளி மண்டலத்தைப் பன்னிரண்டு ராசிகளாகப் பிரித்துக் காலக்கணிப்பு செய்யும் முறையை முதன்முதலில் பின்பற்றியவர்கள் கிரேக்கநாட்டவரே என்று நம்பப்படுகிறது. விண்வெளிப்பாதையில் சந்திரன் கடந்து செல்லும் இருபத்தேழு நட்சத்திரக்கூட்டங்களை (நாள்மீன்களை) பன்னிரண்டு இராசிகளாகப் பங்கிட்டுத் தமக்கே உரிய காலக்கணித முறையை உருவாக்கினர் இந்திய வானியலாளர். பண்டைய கிரேக்கரின் காலக்கணிதத்தில் பயன்படுத்தப்பெற்ற இராசிகளின் பெயர்களும் அவற்றின் வடிவங்களும் இந்திய காலக்கணிதர் கூறும் இராசிகளின் பெயர்களும் வடிவங்களும் ஒன்றாகவே உள்ளன என்பது பலரும் அறிந்த உண்மை.

இலங்கையில் 1310 ஆம் ஆண்டில் ஆக்கப்பெற்ற சரசோதிமாலை என்னும் சோதிட நூல் பன்னிரண்டு ராசிகளின் வடிவம் பற்றி மிக அற்புதமாக விளக்குகின்றது.

மீனம் எதிர்மீன் இரண்டு குடம்தரித்தோன்
மேவுகும்ப மகரநவ்விமுகத்துமீனாம்
ஆனநிறை வலக்கரத்திற் பிடிப்பான் கோலாம்
அங்கியொடு நெற்றரித்து வங்கஞ் சேர்ந்த
மானினி நற்கன்னி விழவி யாழ்தண்டேந்து
மகனரிவை புரவியுடற்புருடன்சாபம்
ஈனமிலா வெருது கொறி சீய ஞெண்டு
வெய்திடு தேடத்தம் வடிவுடையவாமே 10

ஒன்றுக்கொன்று எதிராக இருக்கும் இரு மீன்களின் வடிவம் மீனராசிக்குரியது.

நீர்க்குடம் ஒன்றைத் தாங்கிய மனிதனின் வடிவம் கும்பராசிக்குரியது.

பெண்மானின் தலையும் மீனின் உடலும் கொண்ட வடிவம் மகரராசியினுடையது.

வலது கரத்தில் தராசு ஒன்றைத் தூக்கி நிற்கும் மனிதனின் வடிவம் துலா ராசிக்கு உரியது.

கடல்அலையில் மிதக்கும் படகில் நீண்டஆடை யணிந்து நெற்கதிர் கையில் ஏந்தி நிற்கும் ஒரு இளம்பெண்ணே கன்னிராசியின் வடிவம்.

வீணை ஏந்திய ஆடவனுடன் பெண்ணொருத்தி சேர்ந்து நிற்கும் தோற்றம் மிதுனராசியைக்குறிக்கும்.

குதிரையுடல் கொண்ட ஆடவன் ஒருவன் வில்லேந்தி நிற்கும் வடிவம் தனுராசிக்கு உரியது.

இடபம் மேடம் சிங்கம் கர்க்கடகம் விருச்சிகம் என்னும் இராசிகள் முறையே அவற்றின் பெயர்கள் குறிக்கும் எருது ஆடு சிங்கம் நண்டு தேள் என்பவற்றின் வடிவங்களைக் கொண்டவை.

கிரகங்கள் மற்றும் அவற்றுக்கு உரிய இராசிகள் பற்றிய கணிப்புக்கள் கிரேக்கர் மற்றும் உரோமருடனான கடல்வாணிகத்தொடர்பு வழியாகப் பண்டைத்தமிழர் அறிந்திருக்க வாய்ப்புண்டு. குறிப்பாகப் பரிபாடல் இயற்றப்பட்ட காலப்பகுதியில் ஐரோப்பியரின் இராசிகள் பற்றிய விளக்கங்கள் தமிழர் மத்தியில் பெரிதும் அறியப்பட்டிருந்தன எனலாம். கிரகங்கள் தத்தமக்கு உரிய இராசிகளை ஆட்சி செய்யும்போது மலையில் பெய்யும் பெருமழை

காரணமாக வைகை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதாக பரிபாடலில் வரும் நல்லந்துவனாரின் பாடல் விபரிக்கின்றது.11

நாட்டில் மழை இல்லாமல் போவதையும் பஞ்சம் ஏற்படுவதையும் கோள்களின் நிலை தீர்மானிக்கும் என நம்பினார்கள். அரசன் நிலை குலைந்தால் கோள்கள் நிலைகுலையும் கோள்கள் நிலை குலைந்தால் மாரி பொய்க்கும் என்று மணிமேகலையில் கூறப்படுகிறது.

கோல் நிலை திரியின்
கோள்நிலை திரியும்
கோள் நிலைதிரியின் மாரி வறங்கூரும் 12

புள் நிமித்தம்

கிரேக்க மொழியில் Ornithomancy என்று அறியப்படும் 'பறவை சகுனம்' பற்றிய கிரேக்கரின் நம்பிக்கைகளுக்கும் பண்டைத்தமிழரின் புள்நிமித்ததுக்கும் இடையில் வியக்கத்தக்க ஒற்றுமை காணப்படுகின்றது. பண்டைய கிரேக்கர்களைப் பொறுத்தவரை, பறவைகள் எழுப்பும் ஒலியும் அவற்றின் அசைவுகளும் எதிர்கால நிகழ்வுகளை உணர்த்துவனவாகக் கருதப்பட்டன.

புறா அன்பு மற்றும் கருவுறுதலைக் குறிக்கிறது; காகம் துரதிர்ஷ்டத்தைக் குறிக்கிறது. ஹோமரின் ஒடிஸியில், ஒரு கழுகு தலைக்கு மேல் வலதுபுறமாக மூன்று முறை பறப்பதைப் பார்த்ததன் அடிப்படையில் ஒரு பார்வையாளர் ஒடிசியஸின் வருகையை முன்னறிவிக்கிறார். அது சுமந்து வந்த இறந்த புறா, ஒடிசியஸின் மனைவியின் காதலர்கள் தங்கள் முடிவைச் சந்திப்பதற்கான சகுனமாக இருந்தது.

புளூடார்க் போன்ற சில ஆசிரியர்கள், கடவுள்கள் சில சமயங்களில் பறவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நம்மை எச்சரித்து, பறவைகளின் பறத்தல் மூலம் பல்வேறு அர்த்தங்களை நம் வழியில் அனுப்புகிறார்கள் என்று நமக்குச் சொல்கிறார்கள். பறவை வலப் பக்கமாக வருவது நற்சகுனம்; இடப்பக்கமாக வருவது தீயசகுனம் என்பது பண்டைய கிரேக்கரின் நம்பிக்கை.

குறிப்பிட்ட சில பறவைகள் வலமிருந்து இடமாகப் போவதும் மற்றும் சில இடமிருந்து வலமாகச் செல்வதும் நல்ல மற்றும் தீய நிமித்தங்களாகப் பண்டைத்தமிழர் கருதினர் என்பதை அறியமுடிகின்றது. பயணம் மேற்கொள்ளும்போது காகம் இடப்புறமாகச் செல்வதும் கருடன் வலப்புறமாகச் செல்வதும் துர் நிமித்தங்கள் என்று ஈழத்தில் 1310 ஆம் ஆண்டில் ஆக்கப்பெற்ற சரசோதிமாலை என்னும் சோதிடநூல் தெரிவிக்கின்றது.

மயில் வலதுபக்கம் போவதையும் காகம் இடதுபக்கம் போவதையும் நல்ல சகுனமாகவும் கெட்டசகுனமாகவும் எண்ணிக் குழம்பிய தசரத மன்னன் தனது பயணத்தை நிறுத்திக்கொண்டதாகக் கம்பர் பாடியுள்ளார்.

ஏகும் அளவையின் வந்தன வலமும் மயில் இடமும்
காகம் முதலிய முந்திய தடை செய்வன கண்டான்
நாகம் அனன் இடை இங்கு உளது இடையூறு என நடவான்
மாகம் மணி அணி தேரொடு நின்றான் நெறி வந்தான் 13

மாறாகத் தனது மன்னன் யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை புள் நிமித்தங்கள் குறித்து அலட்டிக்கொள்ளாது தனது நிலைப்பாட்டில் நின்றும் தளம்பாது உறுதியுடன்

இருந்ததால் அனைவரும் அவனுக்கு அஞ்சினர் என்று பாடுகிறார் கருங்கோழியூர் கிழார் என்னும் சங்கப்புலவர்.

புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புறல் அறியா ஏமக் காப்பினை
அனைய ஆகல் மாறே
மன்னுயிர் எல்லாம் நின் அஞ்சுமே 14

தமிழர் மத்தியில் காக்கை, கருடன், கரிக்குருவி, செம்போத்து, ஆந்தை என்பவை நிமித்தப் பறவைகளாக அறியப்பட்டுள்ளன.

ஒரு காகம் ஒரு வீட்டில் இடைவிடாமல் கரைந்துகொண்டே இருந்தால், அது விருந்தினர் வருவதை முன்னறிவிப்பதாக நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கை சங்ககாலத்தில் இருந்தே தொடர்ந்து வந்துள்ளது என்பதற்கு ஆதாரமாக சங்கப்பாடல்கள் சிலவற்றைக் கூறலாம்.

திண் தேர் நள்ளி கானத்து அண்டர்
பல் ஆ பயந்த நெய்யின் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
ஏழு கலத்து ஏந்தினும் சிறிது என் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே 15

"நள்ளியின் கானகத்து இடையர்களின் பசுமாட்டு நெய்யை தொண்டியில் விளைந்த நெல்லரிசிச் சோற்றுடன் கலந்து ஏழு பாத்திரங்களில் வைத்துக் கொடுத்தாலும் விருந்தாளி வரப்போவதை முன்கூட்டியே கரைந்து எமக்கு அறிவித்த காக்கைக்குப் போதுமான படையல் ஆகுமா" என்று தலைவி தன் தோழியிடம் கேட்பது போல் அமைந்துள்ளது இக்குறுந்தொகைப் பாடல்.

"கன்னங்கறுத்த இறகுகள்கொண்ட உனக்கும் உன் சுற்றத்தாருக்கும் கொழுப்புடன் கூடிய இறைச்சி தங்கத்தட்டுக்களில் படைப்பேன் எனது மகளும் அவளது காதலனும் இங்கு வரக் கரைவாய்" என்று தாயொருத்தி காக்கையிடம் கூறுவதாக ஐங்குறுநூற்றில் வரும் ஒரு பாடல் தெரிவிக்கின்றது.

மறு இல் தூவிச் சிறு கருங்காக்கை
அன்புடை மரபின் நின் கிளையொடு ஆரப்
பச்சூன் பெய்த பைந்திணை வல்சி
பொலம் புனை கலத்தில் தருகுவன் மாதோ
வெம் சின விரல் வேல் காளையொடு
அம் சில் ஓதியை வரக் கரைந்தீமே 16

வீட்டின் உச்சியில் ஆந்தை அமர்ந்து கொண்டாலோ அல்லது வீட்டின் அருகே உள்ள மரக்கிளையில் அமர்ந்தாலோ துரதிர்ஷ்டம் வரும் என்றும் அதன் அலறல் மரணத்தை முன்னறிவிப்பதாகவும் தமிழ் மக்களுள் ஒரு சாராரிடம் அச்சம் உண்டு. இந்த நம்பிக்கை சங்ககாலத்தில் இருந்து தொடர்ந்து வருவதாகும்.

"உனக்கு நெய்யில் பொரித்த ஆட்டிறைச்சியும் வெள்ளெலியும் வெண்சோற்றுடன் தருவேன். காதலன் வருகையை எதிர்பார்த்து தூங்காது இருக்கும் என்னைப் பயமுறுத்தும் வகையில் நீ உன் வாயைத் திறவாமல் இருப்பாயாக" என்று ஊர் எல்லையில் உள்ள படித்துறையின்

அருகே நிற்கும் முது மரப்பொந்தில் வாழும் ஆந்தையிடம் ஓர் இளம்பெண் கெஞ்சிக் கேட்பதாக அமைந்திருக்கும் பாடல் ஒன்று நற்றிணையில் உள்ளது.

எம் ஊர் வாயில் உண் துறைத் தடைஇய
கடவுள் முது மரத்து உடன் உறை பழகிய
தேயா வளை வாய் தென் கண் கூர் உகிர்
வாய்ப் பறை அசாஅம் வலி முந்து கூகை
மை ஊன் தெரிந்த நெய் வெண் புழுக்கல்
எலி வான் சூட்டொடு மலியப் பேணுதும்
எஞ்சாக் கொள்கை எம்காதலர் வரல் நசைஇத்
துஞ்சாது அலமரு பொழுதின்
அஞ்சு வரக் கடுங் குரல் பயிற்றாதீமே 17

போரில் காயப்பட்டுக் கிடக்கும் தலைவன் உயிர் பிழைப்பது கடினம் என்பதை அறிவிக்கும் சகுனங்களுள் ஒன்றாக கோட்டானின் அலறலுடன் கூடனே வேறும் சில தீய நிமித்தங்கள் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளன.18

பிறவற்றின் நிமித்தம்

நாளும் புள்ளும் தவிர்ந்த பிறநிமித்தங்கள் பலவும் தமிழர் மத்தியில் நெடுங்காலமாகப் பேசப்பட்டு வந்துள்ளன. காகத்தை இடத்திலும் கருடனை வலத்திலும் காணுவது மட்டுமன்றி இருமல், பின் தொடர்ந்து கூப்பிடுதல், கால் இடறுதல், எழுந்து தும்மல், மேகம் மப்பும் மந்தாரமாக இருத்தல், இயற்கை உற்பாதங்கள் என்பவற்றைப் பயணம் மேற்கொள்வோர்க்குச் சாதகமில்லாத துர்நிமித்தங்களாக சரசோதிமாலை பட்டியல் இடுகின்றது.

இருமல்பின் தொடர்ந் தழைத்தல்
இடறுதல் எழுந்து தும்மல்
கருமகள் இடத்தில் எய்தல்
கலுழனே வலத்தில் ஏகல்
பெருமழை மந்தா ரித்தல்
பிறங்கும் உற்பாதம் தோன்றல்
உரைசெய் துன் நிமித்தம் வேறு
உளவெனில் பயணம் தீதே 19

இவை தவிர விரிச்சிகேட்டல், பல்லி சொல்லுதல் உள்ளிட்ட மற்றும் பல நிமித்தங்கள் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன.

விரிச்சி கேட்டல்

நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய் கைதொழுது,
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குகவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் 20

ஏதாவது ஒரு விடயம் குறித்துக் கவலைப்படுவோர்களுக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாத யாரோ ஒருவர் வேறொரு விடயம் குறித்துப் பேசும் நல்வார்த்தைகள் காதில் விழுவதையே

‘விரிச்சி கேட்டல்’ என்பர். தாயைக் காணாது துயருறும் பசுக்கன்றிடம் “இடையர் பின்னே நின்று செலுத்த உனது தாய் இப்பொழுது வந்துவிடுவாள்” என்று கூறித் தேற்றும் இடையர்குலப் பெண்ணொருத்தியின் ஆறுதல் வார்த்தைகள் ஊரின் எல்லையில் விரிச்சி கேட்பதற்காகக் காத்திருக்கும் முதுபெண்கள் காதில் விழுகின்றன. தமது காதில் விழுந்த இடைப்பெண்ணின் வார்த்தைகளை நல்ல நிமித்தமாக எடுத்துக்கொண்ட முதுபெண்கள் “உன் தலைவன் எதிரிகளிடம் தான் வாங்கிய திறைகளுடன் விரைவில் திரும்பவுள்ளான். உன் கவலையை விடு” என்று தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இந்தப்பாடல் அமைந்துள்ளது.

பல்லி சொல்லுதல்

அன்று தொடக்கம் இன்றுவரை தமிழர் மத்தியில் பரவலாகக் கவனிக்கப்படும் ஒரு நிமித்தம் வீட்டுச் சுவரில் வாழும் பல்லி எழுப்பும் ஒலியாகும்.

முன்னெடுத்து வந்த வேலையை முடித்துவிட்டு ஊர் திரும்பும் தலைவன் தனது வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவியின் துயரைப்போக்கும் வண்ணம் நல்நிமித்தம் சொல்லும் சுவர்ப்பல்லியை வாழ்த்துவதாய் அமைந்திருக்கும் பாடல் நற்றிணையில் உள்ளது.

முன்னியது முடித்தனம் ஆயின் நன்னுதல்
வருவம் என்னும் பருவரல் தீர
படும்கொல் வாழி நெடுஞ் சுவர்ப்பல்லி 21

பல்லி சொல்லுவதை மனிதர் மட்டுமா சகுனமாகக் கேட்டார்கள் பன்றியும் தான் கேட்டது என்று கூறும் பாடல்களை நற்றிணையிலும் அகநானூற்றிலும் காணமுடிகிறது.

எய்ம் முள் அன்ன பரூ மயிர் எருத்தின்
செய்யும் மாவல் சிறுகண் பன்றி
ஓங்கு மலை வியன் புனம் படீஇயர் வீங்கு பொறி
நூழை நுழையும் பொழுதில் தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து தன்
கல் அளைப் பள்ளி வதியும் நாடன் 22

முள்ளம்பன்றியின் முட்கள் போன்ற கழுத்து மயிர்களும் சிறிய கண்களும் கொண்ட ஒரு பன்றி மலையில் இருந்த தானியவயலுக்குள் பொறி வைக்கப்பட்டிருப்பதை உணராது வயலுக்குள் நுழைய முற்படும் வேளையில் பக்கத்தில் பல்லிச் சத்தம் கேட்டதும் சகுனம் பிழை என்று எண்ணி மெல்ல மெல்லப் பின்வாங்கி தனது இருப்பிடத்துக்கே திரும்பியதாக இப்பாடல் கூறுகின்றது.

தொல்காப்பியம் கூறும் நிமித்தங்கள் தொடர்பான நம்பிக்கைகள் இன்றும் எவ்வித மாற்றமும் இன்றித் தமிழ் சமூகத்திடம் காணப்படுவது வியப்பைத்தருகின்றது.

அடிக்குறிப்புகள்

1. குறுந்தொகை 140
2. தொல்காப்பியம் 88
3. பொருளதிகாரம் 1: இளம்பூரணம் 1 பக்கம் 127
4. புறம் 30 அடி 1-7, 280

5. .....*பெருங்குடிவாணிகர்*
   மாடமறுகும் மறையோர் இருக்கையும்
   வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
   ஆயுள்வேதரும் காலக்கணிதரும்
   பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்
   சிலப்பதிகாரம்; இந்திரவிழவு ஊர் எடுத்தகாதை 40
6. முத்தொள்ளாயிரம் 93
7. புறநானூறு 24
8. புறநானூறு 229
9. பரிபாடல் - 3 அடி 4-5
10. சரசோதிமாலை: நாழிகைப்படலம் 10
11. பரிபாடல் - 11 அடி 1-15
12. மணிமேகலை: 7. துயிலெழுப்பிய காதை
13. கம்பராமாயணம்:1267
14. புறநானூறு
15. குறுந்தொகை 210
16. ஐங்குறுநூறு 391
17. நற்றிணை 83
18. அஞ்சுவரு குரா அல் குரலும் தூற்றும் (புறநானூறு 280: 6)
19. சரசோதிமாலை: யாத்திரைப்படலம்: 15
20. முல்லைப்பாட்டு 7-23
21. நற்றிணை 169
22. நற்றிணை 98

துணைநின்ற நூல்கள் நூல்கள்

1. *ஐங்குறுநூறு மூலமும் உரையும்*, தி. சதாசிவ ஐயர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1999
2. *கம்பராமாயணம்* (கம்பரின் இராமாவதாரம்), திருவான்மியூர்: உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், 1946-1963
3. *குறுந்தொகை*. உ.வே.சாமிநாதையர் (பதிப்பாசிரியர்): கபிர் அச்சகம், 1947
4. *சரசோதிமாலை* பாகம் 2. பால. சிவகடாட்சம், கோ. விசயராகவன், ஆ. தசரதன் (பதிப்பாசிரியர்கள்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 2015
5. *சிலப்பதிகாரம்* (மூலமும் அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையுடன்). உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை 2008
6. *தொல்காப்பியம் இளம்பூரணம்*. மு.சண்முகம்பிள்ளை, மறுபதிப்பு, முல்லை நிலையம், சென்னை 2010
7. *நற்றிணை*. ஆ.நாரயணசாமி ஐயர் (பதிப்பாசிரியர்), திருநெல்வேலி : தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1954
8. *பரிபாடல்*. உ.வே.சாமிநாதையர் நூலகம், 1980
9. *புறநானூறு*. திருவான்மியூர்: உ.வே.சாமிநாதையர்(பதிப்பாசிரியர்) உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், 1971

10. *மணிமேகலை*. பொ. வே. சோமசுந்தரனார், சென்னை: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1971
11. *முத்தொள்ளாயிரம்*. திருநெல்வேலி : தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1946
12. *முல்லைப்பாட்டு* (நப்பூதனார் இயற்றியது). திருநெல்வேலி : தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1930

தொ.மா.க. 150

தொல்காப்பியரும் உயிரினக் கொள்கைகளும்

முனைவர் இரா. கார்த்திகேயன்
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீசங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்),
ஏனாத்தூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு.
rkarthikeyan096@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியர் அவர் இயற்றிய தொல்காப்பியம் பற்றிய ஆதாரம் கிடைக்கப்பெறவில்லை. தொல்காப்பியர் தம் எழுதிய எழுத்ததிகாரம் நூல் வழியாகச் சொற்கள் பிறப்பும் சொல்லதிகாரம் வழியாக சொற்கள் முறைவைப்பும் உருவானதை எடுத்தியம்பி தன்னை இவ்வுலகிற்கு மொழியியல் அறிஞராக வெளிப்படுத்தியுள்ளமையை அறியமுடிகின்றது. அவர் பொருளதிகாரம் எனும் நூல் வழியாக உயிரினங்களின் வாழும் சூழ்நிலை அமைப்பைக் காட்டுகின்றார். குறிப்பாக அகத்திணை எனும் இயலில் உயிரினம் வாழும் நிலம், காலச்சூழ்நிலையையும் எடுத்துக் காட்டியுள்ளார். தொல்காப்பியர் அகத்திணை இயலை முதல் வைப்பு முறையாக ஏன் காட்ட வேண்டும். அதுப்போன்று மரபியலை இறுதியாகக் கூற வேண்டும் என்பதும் இங்கு ஆராய்த்தக்கதாகும். இறுதியில் காணப்படும் மரபியலின்றும் ஒரு தனி இயலில் உயிரினங்களை வேறுபடுத்தும் வகைப்படுத்தியுள்ளார். இவ்வுலகில் காணப்படும் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், கடல்வாழ் உயிரின்ங்கள் முறையே ஆறறிவுயிர் வரையிலான உறுப்புகள் வழியாகப் பிரித்துள்ளார். உயிரினங்களுக்குரிய இளமைப் பெயர்கள், பெண் இனத்திற்கும் பெயர், ஆண் இனத்திற்குரிய பெயர்களைச் சுட்டிக்காட்டி தன்னை அன்றைக்கே மரபியல் அறிஞராக வெளிப்படுத்தியுள்ளார். தொல்காப்பியருக்கு பின்னர் வாழ்ந்த சங்கப்புலவர்கள் தமதுப் பாடல்களில் பதிவுச்செய்துள்ளமை ஆய்வுக்களமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

முன்னுரை

உலக மொழிகளில் பழமையானது சிறப்பும் பெருமையும் வாய்ந்தது திராவிட மொழியாகும். இத்திராவிட மொழி கருத்தால், சிந்தனையால் கருதப்படுகின்றது. இத்திராவிட மொழியில் தமிழிலக்கியத்தில் முதன்மையானது தொல்காப்பியமாகும். தொல்காப்பியம் அகத்திய இலக்கணத்தின் வழி நூல் எனவும் கருதப்படுகின்றது. இத்தொல்காப்பியத்தை இயற்றியத்தை தொல்காப்பியர், காலம் பற்றிய வரையறை இன்றளவும் அறியப்படவில்லை.

அகத்தியம் முதல் நூலாக கருதப்படுகின்றது. அகத்தியர் மாணவர் தொல்காப்பியர். எனவே அகத்தியர் காலத்தைச் சார்ந்தவர் என்பது ஒரு கருத்தாகும். மற்றொரு கருத்து தொல்காப்பியர் பாணினீயம் காலத்திற்கு பின்னர் வாழ்ந்துள்ளார். அதனைக் கற்றார் அவற்றில் வல்லுநராக விளங்கினர் என்பது பற்றிய செய்திகள் கிடைக்கப்பெறவில்லை. பாணினீயம் இயற்றிய பதஞ்சலி முனிவர் காலம் பற்றி இன்றளவும் கணக்கிட முடியாது எனபர். R.G.பண்டர்க்கர்.[1] எனவே தொல்காப்பியம் எழுந்த காலம் கி.மு. 4ஆம் நூற்றாண்டு அல்லது 5 ஆம் நூற்றாண்டு என ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான் அவருடைய முடிவாகும். மேலும் பதஞ்சலி முனிவர் காலத்திற்கு கி.மு.150 முற்பட்டவர் தொல்காப்பியர். அதற்குப் பிற்பட்டவர் தான் பதஞ்சலி முனிவர். பெரும்பாலான ஆய்வாளர்கள் கூறிவரும் கருத்தும், சிந்தனையும் கூட, இத்தொல்காப்பிய காலம் பற்றி இன்னொரு கருத்து நிலவுகின்றது. அதாவது தொல்காப்பியத்துள் பொருளதிகாரம் நூலில் இறுதியில் முப்பத்திரண்டு உத்திகள் காணப்படுகின்றன. அவைகள் வடமொழியில் கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரம் நூல் சுசுருதம் முதலிய நூல்களில் இடம்பெற்றுள்ளது என்பர். உவிகண்டர் நீட்ஸ் என்பர்.[2] எனவே தொல்காப்பியர் காலம் கி.மு.300 பிற்பட்டது எனும் கருத்தைக் கூறுவர். மற்றொரு சார்ப்பினர் பதஞ்சலி காலத்தைச் சார்ந்தவர் தொல்காப்பியர். எனவே கி.மு.150 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்று கூறுகின்றனர்.

ஆனால் தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் பற்றிய கருத்து வடமொழியிலுள்ள மனுசாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே தொல்காப்பியம் காலம் கி.பி.200 காணே (P.V.Kana) என்பர்.[3] இந்திய மொழிகள் வடமொழிகளைத் தாண்டி கிரேக்க இலக்கியத்தில் தொல்காப்பியம் நூலில் காணப்படும் 'ஓரை' எனும் சொல் காணப்படுகின்றது. இச்சொல் கிரேக்கத்திலிருந்து வடமொழிக்கும் அதன்பிறகு வடமொழியிலிருந்து தொல்காப்பியத்திற்கும் வந்திருக்க வேண்டுமென எனவே தொல்காப்பியர் காலம் கி.மு.4 ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட்டது எனும் ஆய்வினைப் பெர்டேல்கீத் என்பவர் பகருகிறார்.[4] தொல்காப்பியம் கி.மு. மூன்றாவது நூற்றாண்டைச் சார்ந்தது என முனைவர் ச.அகத்தியலிங்கம் கூறுகின்றார். ஆகவே தொல்காப்பியர், அவருடைய தொல்காப்பியம் நூல் எந்த நூற்றாண்டு என்பது தெளிவாகவில்லை என்பது புலனாகின்றது.

இப்படியாகத் தொல்காப்பியர் அவர் இயற்றிய தொல்காப்பியம் பற்றிய ஆதாரம் கிடைக்கப்பெறவில்லை. தொல்காப்பியர் தம் எழுதிய எழுத்ததிகாரம் நூல் வழியாகச் சொற்கள் பிறப்பும் சொல்லதிகாரம் வழியாக சொற்கள் முறைவைப்பும் உருவானதை எடுத்தியம்பி தன்னை இவ்வுலகிற்கு மொழியியல் அறிஞராக வெளிப்படுத்தியுள்ளமையை அறியமுடிகின்றது. அவர் பொருளதிகாரம் எனும் நூல் வழியாக உயிரினங்களின் வாழும் சூழ்நிலை அமைப்பைக் காட்டுகின்றார். குறிப்பாக அகத்திணை எனும் இயலில் உயிரினம் வாழும் நிலம், காலச்சூழ்நிலையையும் எடுத்துக் காட்டியுள்ளார். தொல்காப்பியர் அகத்திணை இயலை முதல் வைப்பு முறையாக ஏன் காட்ட வேண்டும். அதுப்போன்று மரபியலை

இறுதியாகக் கூற வேண்டும் என்பதும் இங்கு ஆராய்த்தக்கதாகும். இறுதியில் காணப்படும் மரபியலின்றும் ஒரு தனி இயலில் உயிரினங்களை வேறுபடுத்தும் வகைப்படுத்தியுள்ளார். இவ்வுலகில் காணப்படும் தாவரங்கள், விலங்குகள், பறவைகள், கடல்வாழ் உயிரின்ங்கள் முறையே ஆறறிவுயிர் வரையிலான உறுப்புகள் வழியாகப் பிரித்துள்ளார். உயிரினங்களுக்குரிய இளமைப் பெயர்கள், பெண் இனத்திற்கும் பெயர், ஆண் இனத்திற்குரிய பெயர்களைச் சுட்டிக்காட்டி தன்னை அன்றைக்கே மரபியல் அறிஞராக வெளிப்படுத்தியுள்ளார். தொல்காப்பியருக்கு பின்னர் வாழ்ந்த சங்கப்புலவர்கள் தமதுப் பாடல்களில் பதிவுச்செய்துள்ளமை ஆய்வுக்களமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

உயிரினம் தோற்றம் பற்றி தொல்காப்பியர் கருத்து

தொல்காப்பியர் தன்னுடைய தொல்காப்பிய பொருளதிகாரம் பகுதியில் உயிரினம் அறிவும், அதன் வகைமைப்பாடும் குறித்து எடுத்துக் கூறியுள்ளார். தவிர அந்த உயிரினங்கள் எப்படித் தோன்றியிருக்க வேண்டும் என்பதுக் குறித்த எடுத்துக் கூறவில்லை. ஆனால் மேனாட்டு அறிஞர்கள் மில்லர் போன்றவர்களால் பலதரப்பட்ட உயிரின ஆய்வாளர்கள் முடிவுகளைத் தருகின்றனர்.[5] அதன்படி பல இலட்சம் மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட சூரியன் வெடிப்பு காரணமாக பூமியானது தோன்றியது. அவற்றில் உயிரினம் வாழும் சூழ்நிலைகளால் முதல் உயிரினம் ஜெல்லி மீன் உருவாயின. அதுவே மனிதன் வரை வளர்ச்சியடைந்தன என்பார்கள். ஆனால் தொல்காப்பியர் முதல் உயிரினம் பற்றிய கருத்துகளைக் காட்டப்பெறவில்லை என்பது புலனாகின்றது. அதற்கு மாறாக உயிர்களை உறுப்புகளால் அவற்றின் உணர்வுகளைக் கொண்டு பிரித்துக் காட்டியுள்ளார். உயிரினங்களையும் அடையாளம் படுத்திக் காட்டியுள்ளார் என்பது புலனாகின்றது. அவற்றின் முறையே எலும்பில்லாத உயிர்களை ஒரறிவுயிர் எனவும், சுவையுடைய நாக்கினைக் கொண்டு உணரும் ஆற்றல் பெற்றதை இண்டறிவு உயிர் எனவும், மூக்கினால் உணரும் ஆற்றல் பெற்றதை மூன்று அறிவுக் கொண்டது எனவும், கண்களால் பார்க்கும் திறன் பெற்றதை நான்கறிவு உடையது என்றும், செவிகளால் கேட்கும் திறம் பெற்றது ஐந்தறிவு உடையது என்றும், மனதால் உணரும் தன்மை வாய்ந்தது ஆறறிவு உயிர்கள் எனவும் பிரித்து வகைப்படுத்தியுள்ளார்.

ஒன்றறி வதுவே உற்றிவதுவே
இரண்டறி வதுவே அதெனொடு நாவே
மூன்றறி வதுவே அதெனொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொரு செவியே
ஆறறி வதுவே அவற்றொரு மனனே
நேர்தின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.[6]

என புல், மரம், ஊர்வன, எறும்பு, ஈசல், நண்டு, வண்டு, தும்பி, பறவை, விலங்கு மனிதன் ஆறாக்கி அவர் வரிசைப்படுத்துகின்றார். தொல்காப்பிய உயிரின வகைப்பாட்டியல் விஞ்ஞானி என இந்நூற்பாவால் தன்னை, அன்றைக்கே வெளிப்படுத்திக் கொண்டார் என்பதை அறியமுடிகின்றது. உயிரினம் பற்றிய செய்திகளை வரிசைப்படுத்தி இவ்வுலகிற்கு காட்டுவதன் வாயிலாக உயிரியல் பகுதியில் ஒரு பகுதியான மரபியல் சார்ந்தக் கருத்தை எடுத்துக் காட்டியுள்ளார். ஆகவே தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் அல்ல. அது உயிரின இலக்கணத்தை ஆராயதக்கதாகும்.

தொல்காப்பியம் ஓர் இலக்கிய நூலாகவும், இலக்கண நூலாகவும் மட்டுமின்றி அதுவொரு அறிவியல் நூலாக எடுத்துக் கொள்ள முடிகிறது. இவற்றுக்கு மற்றொருப்படியாக தொல்காப்பியரைப் பின்பற்றியே நன்னூலை யாத்த பவணந்தி முனிவர் அதேக் கருத்தையே, சிந்தனைகளை சொல்லதிகாரம் இயலின் இறுதியில் தொல்காப்பியர் போன்று குறிப்பிட்டுள்ளார்.

மெய்ந், நாமுக்கு நாட்டம் செவிகள்
ஒன்றுமுத லாகக்கீழ் கொண்டுமேல் உணர்தலின்
ஓரறிவு ஆதியா உயிர் ஐந்து ஆகும் [7]

என்று தனது நூற்பாவின் வழியாக நான்கடியில் சுருக்கமாக உயிரின வகைமைப்பாட்டை முடித்துக் காட்டியுள்ளார். அதே அவருடைய இலக்கணத்தில் எந்தொரு இடத்திலும் விரிவாக காட்டப்பெறவில்லை. அதற்குப் பின்னர், 8 ஆம் நூற்றாண்டின் வாக்கில் வாழ்ந்துள்ள சிவவழிக்கொள்கை விளக்கிய மாணிக்கவாசகர் பெருமான் தன்னுடைய திருவாசக நூலில் சிவனைக் குறிப்பிடும் போது, ஆன்மீக ரீதியான கருத்துகளைக் கூறும் போது, தொல்காப்பியர் வகைமைப்பாட்டை எடுத்துக்காட்ட முயன்று இருக்கலாம் தெரிகின்றது.

புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்லிருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் போயாய் கணங்களாய்

வல்அசுர ராகி முனிவராய் தேவராய்
சொல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள் [8]

என வரும் பாடல் வழியே, ஓரறிவு உயிரான தாவரம் புல், பூண்டு, மரம் இரண்டறிவு புழு, ஐந்தறிவு விலங்கு, பறவைகள் எனத் தோன்றியப் பின்னர் அசுரர் தோன்றினர். அதன் பிறகு முனிவர்கள், தேவர்கள் இவ்வுலகில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் எனும் தன்னுடைய ஆன்மீகக் கருத்து வழியாகத் தொல்காப்பியர் பகர்ந்த உயிரின வகைமைப்பாட்டைத் தமிழ்க் காப்பியங்கள் எவற்றிலும் காட்டப்பெறவில்லை என்பது அறியத்தக்கதாகும். ஆனால் நவீன கால ஆராய்ச்சியாளர் தோன்றலில், மேலை நாட்டறிஞரான இல்மார்க் என்பவர் உருவாக்கிய உயிரினக் கொள்கையான உயிரின பயன்படுத்தும் மற்றும் படுத்தாகக் கொள்கை (Theory of use and disuse) கூற்றின்படி உயிர்கள் தன்னிச்சையாகத் தோன்றியது என்றும், உயிரிகள் அனைத்தும் தம்முடைய வாழ்சூழலில் தோன்றிய நாள் தொடங்கி படிப்படியான மாற்றங்களை உயிர்கள் தம்முடைய பகுதிகள் அல்லது உறுப்புகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதாலே (Use) அல்லது பயன்படுத்தாமல் (disuse) இருப்பதால் இருக்கின்றன என்பதான அவருடைய உயிரின உறுப்புகளால் காட்டுவதும், உயிர்களை உறுப்புகளால் காட்டும் தொல்காப்பிய கொள்கையையும் ஒத்துள்ளதைக் காணமுடிகின்றது. தொல்காப்பியர் உயிரினக் கொள்கைகளை அந்தளவிற்கு மொழிப்பெயர்ப்புகள் குறைவானது காரணமாக அடைவதைக் காணமுடிகின்றது.[9]

உயிரினப் பகுப்பாய்வு

தொல்காப்பியர் உயிரினங்களை ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிராக அதன் உறுப்புகள் அடிப்படையில் பிரித்து ஒரு தனியொரு நூற்பாவில் காட்டியுள்ளார். அந்த நூற்பாவில் காட்டியவற்றைத் தனித்தனியாக வகுத்தும், பகுத்தும் பிரித்தும் பல்வேறு நூற்பாவாகக் காட்டியுள்ளமை அறியமுடிகின்றது. அவற்றின் அறிவுக்குரிய உயிரினங்கள் எவை என்பதையும், பின்னர் வகைமைப்படுவதையும் அறியமுடிகின்றது.

ஒரறிவுயிர் என்பது புல்மரம் எனும் தாவர வகையினைச் சார்ந்தது என்பதையே,

புல்லும் மரனும் ஒரறிவினவே [10]

என்கின்றார். மேலும் ஈரறிவு உயிர் என்பன நத்தை சிப்பி ஆகுமாம்.

நந்தும் முரளும் ஈரறிவினவே [11]

என்கின்றார். மேலும் மூன்றறிவுயிர் என்பது எறும்பும், ஈயல் ஆகுமாம்.

சிதலும் எறும்பு ஆதி அறிவின்மூ வறிவு உயிர் [12]

என்கின்றார். மேலும் நான்கறிவுயிர் என்பது நண்டு, வண்டு, தும்பி மற்றும் பாம்பு ஆகியனவாம்.

வண்டும் தும்பியும் நான்கறி வினவே [13]

என்கின்றார். மேலும் ஐந்தறிவு எனப்படுவது விலங்குகள், பறவைகள், ஊர்வன

மாவும் புள்ளும் ஐயறிவினவே [14]

என்கின்றார். மேலும் ஆறறிவுயிர் என்பது மக்கள்,

மக்கள் தாமே ஆறு அறிவுயிரே [15]

என்கின்றார் தொல்காப்பியர். ஆகவே தொல்காப்பியம் உயிரினங்கள் பற்றிய முதன்முதலாகத் தமிழ் உலகத்திற்கு எடுத்துக்கூறியவர் தொல்காப்பியர் தான் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. அவருடைய கொள்கைகளை இலக்கணம் வகுத்த நன்னூலார் தன்னுடைய சொல்லதிகாரத்தில் உயிரியல் எனும் பகுதியில் விளக்கம் தந்துள்ளார் என்பதை அறியலாம். நன்னூல்லாருக்குப் பின்னர் உயிரினக் கொள்கைகளை எடுத்துரைக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஆனால் தனியொரு உயிரினம் பற்றி குணம், பண்புகள் நலன்கள் பற்றித்தான் சங்கப்புலவர்கள், காப்பியாசிரியர்கள், ஆன்மீகச் சான்றோர்கள் வரை கூறி வந்தனர் என்பதை அறியமுடிகின்றது. ஆனால் தொல்காப்பியர் உயிரினக் கோட்பாடுகள் பின்பற்றப்படவில்லை. காரணம் தொல்காப்பிய உயிரினக் கோட்பாட்டில் குறுக்கிட வாதம் செய்ய எண்ணமில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் மேலைநாட்டில் உயிரினத் தோற்றம், வாழ்வியல், சூழ்நிலைக்கோட்பாடுகளை உருவாக்கம் பெறும் போது, அக்கால கட்டத்தில் வாழ்ந்த அரிஸ்டாடில் உருவாக்கிய வெளியுலகிற்கு கொணர்ந்த செய்திகள் பெரும் புரட்சி ஏற்படுத்தின எனலாம். அரிஸ்டாடில் உயிரினக் கொள்கையில் ஒரு பகுதியான உயிரின கருத்துருவை (Hieararehy Concept) நன்கு ஆய்ந்து நோக்கினால் தொல்காப்பியர் காட்டும் ஒரறிவு, ஈரறிவுயிர், மூன்றறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர்கள், ஆறறிவுயிர் வரையிலான உயிரினங்களாக மனிதர்கள், தாவரங்கள், பூச்சிகள், நத்தைகள், சிப்பிகள், ஊர்வன மற்றும் பாம்புகள், தவளைகள் போன்றவற்றை அவற்றின் பண்பு நலன்களைத் தமதுக் கொள்கையில் எடுத்துக் காட்டியுள்ளார். ஆகவே தொல்காப்பியர் உயிரினக் கொள்கையில் ஒற்றுமையாக்கப்பட்டுள்ளது இங்கு அறியத்தக்கதாகும் என்பதை அறியமுடிகின்றது. உயிரினக் கொள்கையில் சில முரண்பாடுகள் காணப்பட்டாலும் சிலவற்றையே நம் ஒப்புநோக்குவதில் தவறில்லை எண்ண முடிகின்றது.

இளமைப் பெயர்கள்

தொல்காப்பிய உயிரினக் கொள்கையில் இவ்வுலகில் உருவான உயிரினங்களில் இளமைக்குரிய பருவம் முக்கியமானதாகும். அவ்வுயிரினங்களை அடையாளம் காணவே தொல்காப்பியம், பொருளதிகாரத்தில் உயிரினங்களை இளமைப் பெயரிட்டு வழக்கத்தை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்திக் காட்டிய பெருமை தொல்காப்பியத்தைச் சாரும்.

அந்தவகையில் தன்னுடைய தொல்காப்பியம் மரபியல் பகுதியில் இவ்வுலகில் வாழும் உயிரினங்களான உயர்திணை மற்றும் அஃறிணைக்குரிய இளமைப்பெயர் என்னவென்பதை,

மாற்றரும் சிறப்பின் மரபியல் கிளப்பின்

பார்ப்பும், பறழும் குட்டியும், குருளையும்
கன்றும், பிள்ளை மகவும், மறியும் என்று
ஒன்பது குழவியோடு இளமைப் பெயரே [17]

என்றுப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். இவற்றில் நன்கு ஆராய்ந்து நோக்கும் போது எவை அஃறிணைக்குரியது எது உயிர்திணைக்குரியது எனும் மாறுபாடு இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக பெயரிட்டு அழைத்துள்ளார். அவற்றில் பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, மகவு, மறி, கன்று, பிள்ளை ஆகிய எட்டும் அஃறிணைக்குரிய இளமைப்பெயர்களாகவும், மற்ற குழவி என்றும் பெயர் உயர்திணை, அஃறிணை இரண்டுக்கும் பொதுப்பெயராகவும் சூட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் பாட்டி, பிள்ளை என்பனவற்றைப் பறவை ஊர்வனவற்றிற்குப் பெயரிட்டும் அழைப்பதை அறியமுடிகின்றது. இப்பெயர்களையே தொல்காப்பியருக்கு பின்னர் தோன்றிய சங்கப்புலவர்களும் தமதுப் பாடல்களில் பதிவுச் செய்து தொல்காப்பியருக்கு பெருமைச் சேர்த்துள்ளனர் என்பதை உணரமுடிகின்றது. உயிரினங்களில் பறப்பன, நடப்பன, நிற்பன, ஊர்வன ஆகியவற்றையே பார்ப்பு, பிள்ளை எனும் பெயர்களால் அழைக்கப்பட வேண்டுமென்பது தொல்காப்பியர் கூறவருவதாகும். இதுக்காலத்தின் நிர்ணயமாகும்.

பார்ப்பும் பிள்ளையும் பறப்பறவற்று ளிளமை [18]

எனவும்,

தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன

எனத் தொல்காப்பிய நூற்பாவில் சுட்டிக்காட்டியுள்ளார். கருத்தையே பறவைகளின் குஞ்சுகளைப் பிள்ளை, பார்ப்பு என்றும் பெயர்களால் அழைத்தல் வேண்டும் கருத்துகளைக் கூட குறுந்தொகைப் பாடலொன்றில்,

ஞாயிறு பட்ட அகல்வயல் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறைஉற ஒங்கிய நெறிய அயல் மராஅத்த
பிள்ளை உள்வாய் சொரீஇய [19]

எனப்புலவரொருவர் பாடுகின்றார். எனவே தொல்காப்பியர் காட்டிய அஃறிணைக்குரிய பிள்ளை எனும் பெயரினைத் தம் பாடல்களில் பதிவுச் செய்ய மறுக்கவில்லை என்பதை அறியமுடிகின்றது. குரங்கின் குட்டியை மேலும் தொல்காப்பியர், குரங்கினுடைய குட்டியைப் பார்ப்பு என்று பெயரிட வேண்டும் என்பது அவருடைய உயிரினக் கொள்கையில் கூறப்பட்டுள்ளது.

பார்ப்புண்ட மந்திய மனி இறந் தோரே [20]

எனத் தன்னுடைய மரபியல் பகுதியில் கூறியுள்ளமை அறியமுடிகின்றது. தொல்காப்பியர் கருத்தையே சங்கப்புலவர்கள் ஏற்றிக் கொண்டு தன்னுடைய பாடல்களில் பதிவுச் செய்துக் காட்டியுள்ளார்.

நிறைச் சூழல் யாமை மறைத்தின்று புதைந்து
கோட்டு வட்டுருவின் புலவநாறு முட்டைப்
பார்ப்பிட னாகும் அளவைப் படுவாய [21]

அகநானூறுப் பாடலென்றில் சங்கப்புலவர் அறியாமையின் இளமைப்பெயர் பார்ப்பு என்று தொல்காப்பியர் உயிரின ஆய்வை ஏற்றுக்கொண்டு பதிவுச்செய்துள்ளமை அறியமுடிகின்றது. நடக்கும் இயல்பினைக் கொண்ட சிலவகையான உயிரினங்களுக்கு பெயரிடும் முறையைக் கையாண்டுள்ளார் தொல்காப்பியர் என்பதையும் காணமுடிகின்றது. உதாரணமாக விலங்குகளில் கீரி, காட்டுப்பூனை, எலி, அணில் போன்றவர்களும் விளக்கம் அளித்துள்ளார்.

மூங்கா வெருகு எலி மூவரி அணிலொடு
ஆங்கு அவை நான்கும் குட்டிக்குரிய [22]

என்பது அந்நூற்பாவாகும். இதன் வழியாக மூங்கா என்பது தற்காலத்தில் கீரிப்பிள்ளை எனவும், வெருகு என்ற சொல் காட்டுப்பூனையையும், எலி, அணில் என்னும் சொல்லைக் குறிப்பிடுகின்றார். இவற்றிலிருந்து மற்றொரு செய்தியும் புலனாகின்றது. உயிரினங்களுக்குப் புதிய வகையான கலைச்சொற்களையும் உருவாக்குவதில் தொல்காப்பியர் முயற்சி செய்துள்ளார் என்பதையும் அறியமுடிகின்றது. சங்கப்புலவர்களும், தொல்காப்பியருடைய கருத்தை ஏற்றுக் கொண்டு அதனையே தமதுப் பாடல்களில் பதிவுச் செய்துள்ளனர்.

வல்சி இன்மையின் பல்பாடு சுவைத்து
இல்எலி மடிந்த தொல்சுவர் வரைப்பில் [23] *(புறம்.211)*

எனக் குறுந்தொகை இலக்கியத்தில் புலவரொருவர் பாடுகின்றார். காட்டுப்பூனையைக் குறிப்பிடும் போது.

குவிஅடி வெருகின் பைங்கண் ஒற்றை
ஊன்தசைப் பிணவின் உயங்குவசி களைஇயர் [24] *(அகம்.367)*

எனும் அகநானூற்றுப் பாடலில் புலவரொருவர் தொல்காப்பியருடைய கருத்தையே பதிவுச் செய்துள்ளது ஒப்புநோக்கத்தக்கதாகும். காட்டில் வாழும் புலியின் இளமைப் பெயர் என்னவென்பதையும் தொல்காப்பியர் தம்முடைய தொல்காப்பியத்தில் பதிவுச்செய்ய மறக்கவில்லை.

நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங்காலைக் குருளை என்ப [25]

எனும் நூற்பா வழியாக நாய் என்பதே அதற்கு பெயராகின்றது. அதற்கு அகராதியில் பலப்பெயர்களை காட்டப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்திலும் பல்வேறு நாய் என்னும் ஞமலி, எகினம் என்றும் சுட்டப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. ஆனால் தொல்காப்பியர் நாய் எனும் சொல்லை மட்டும் தருகின்றார் என்பது முடிவாகும். ஆனால் இக்கருத்தைச் சில சங்கப்புலவர்கள் மட்டும் சுட்டியுள்ளார்.

பரியல் நாயொடு பல்மலை படரும்
வேட்டுற் பெறலொடு அமைந்தன யாழ்நிள் [26] *(அகம்.28)*

அகநானூறுப் பாடலொன்றில் புலவரொருவர் ஏற்றுக் கொண்டுள்ளமை காணமுடிகின்றது. ஆனால் சங்க இலக்கியங்களில் எகினம் என்றும் சுட்டியும் காட்டுவர். ஆனால் தொல்காப்பியர் சுட்டிக்காட்ட மறுக்கவில்லை என்பது புலனாகின்றது. இன்னொரு நூற்பாவில் தொல்காப்பியர் மறி எனும் இளமைப்பெயர்க்குரிய விலங்குகளில் மாடு (ஆடு), மான், குதிரை போன்றவற்றிற்கு மறியென விளக்கம் கூறியுள்ளார்.

யாரும் குதிரையும் நவ்வியும் உழையும்
ஒருமு புல்வாய் உளப்பட மறியே [27]

எனும் வழியாக இவ்வகையாக விலங்குகளும் நடப்பனவற்றின் வரிசையில் காட்டியுள்ளார். விலங்குப்பெயர்களைச் சங்கப்புலவர்களும் தங்களுடைய இலக்கியங்களில் பதிவுச்செய்ய மறுக்கவில்லை. ஆட்டின் குட்டினைச் சங்கப்புலவரொருவர், மறி எனப்பெயரிட்டு வழங்கியுள்ளார்.

மறிஆடு மங்கின் மடப்பிணை அருந்தித்

தென் அறல் தழீஇய வார்மணல் அடைகரை [28]

அகநானூறுப் பாடலொன்றில் வழியாகத் தொல்காப்பியர் கருத்தையே கூறியுள்ளமை அறியமுடிகின்றது. மேலும் கன்றுகுழவியென்னும் பெயர்களை யானை, குதிரை, கழுதை போன்ற உயிரினங்களுக்கு இளமைக்குரியதாக தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யானையும் குதிரையும் கழுதையும் கடமையும்
மானோடு ஐந்து கன்று எனற்குஉரிய [29]

எனப் பெயரிட்டு தொல்காப்பியர் வகைப்படுத்திக் காட்டியுள்ளார். ஆகவே தொல்காப்பியர் விலங்குகளுக்குப் பெயரிட்டு வகைப்படுத்தும் முறையை இந்தவுலகிற்கு அறிமுகப்படுத்திக் கொண்டவர் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. அறிவியலின் உடற்கூறியல் தத்துவம் படியே தொல்காப்பியம் உயிரியல் நூலாக நம் ஏற்கத்தக்கவற்றை அறியமுடிகின்றது. எனவே தொல்காப்பியர் விலங்குகளுக்குப் பெயரிட்டு வழங்கும் வழக்கத்தைப் பின்பற்றியவர் என்பதே ஆய்வின் வழியாகக் கருதலாம். உயிரியல் அறிஞர்கள் விலங்குகளுக்கு எப்படி பெயர் ஏற்பட்டது என்பதைத் தன்னுடைய ஆய்வில் குறிப்பிட்டுள்ளனர். முன்னொருக் காலத்தில் வடஅமெரிக்காவில் யுயிண்டா நகரில் காண்டாமிருகம் போன்று தோற்றம் கொண்ட உயிரினம் காணப்பட்டன. அதற்கு ஆறுகொம்புகள் இருந்தன என்றும், தாவரங்களை உண்டு வாழ்ந்தன. அன்றைய பாலூட்டி இனத்தில் மிகப்பெரியனவாகும். இதுதான் முதல் தோற்றுவாய் என்பர்.[30] விலங்கியல் வல்லுநர்கள் கூறியுள்ளனர். மேலும் பண்டைக் காலத்திலே மக்கள் விலங்குகள், தாவரங்கள், பறவைகள், நத்தை, சிப்பி, கடல்வாழ் உயிரினங்களின் உருவங்களை மட்டும் பொறித்துள்ளனர். ஆனால் அவற்றின் பெயர்களை மட்டும் குறிப்பிடவில்லை என்பர்.

நாத் (Nath) இவருடைய கூற்றுப்படி அக்காலத்தில் பெயரிடும் முறைக்கு மாற்றாக உருவங்களைக் கொண்டிருக்கும் பெயர் முறை பின்பற்றினர் என்பதும் ஆனால் அதற்கு முன்பாக வாழ்ந்துள்ள தொல்காப்பியர் தம்முடைய தொல்காப்பியத்தில் உயிரினங்களுக்கு பெயரிட்டு அழைக்கும் அறிவியல் முறையைப் பின்பற்றினார் என்பது புலனாகின்றது. எனவே தொல்காப்பியர் தம் இயற்றிய இலக்கண நூல் தமிழ்மொழிக்கு மட்டுமல்லாமல் உயிர் இனத்தின் இலக்கணம் பற்றிய எடுத்துரைப்பதை நாம் உணர வேண்டும் அதனையே உரையாசிரியர்கள், அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளமை இங்கு ஆய்வாக அறியமுடிகின்றது.

நிறைவுரை

இவ்வுலகில் மனிதம் தோன்றிய பரிணாமம் வளர்ச்சியடைந்தும் மட்டும் சிறப்பானதாக கருத முடியாது. அவனுடைய தேவைகளையும், கருத்துகளையும், சிந்தனைகளையும் பரிமாற்றம் கொள்வது மொழியயேயாகும். இம்மொழியானது பலமில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படுகின்றது. அவற்றுள் கிரேக்கம், சீனம், அரபு, ஆங்கிலம், ஜப்பானியம், போர்த்துக்கீசியம், ரஷ்யம், ஹீப்ரு, ஜெர்மன், இத்தாலியன், உருது, ஸ்பானிஷ்

முதலியவற்றில் முதன் மொழியாக கருதப்படுவது திராவிட மொழியாகும். இத்திராவிட மொழிகளில் முதன்மையானதும், பழமையானதும் கருதப்படுவது தொல்காப்பியமாகும். இத்தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியர் எந்தக் காலத்தில் வாழ்ந்தான் எனும் வரலாறுகள் இன்னும் ஆய்வாளர்களால் கணக்கிடப்படவில்லை.

தொல்காப்பியர் பாணினீயம் எழுதிய பதஞ்சலி முனிவர் காலத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என R.G. பண்டர்க்கர் என்பர் எனும் கருத்தும், மற்றொரு கருத்து தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியத்தின் பொருள் இயலில் இறுதி முப்பத்திரண்டு வகை உத்திகள் வடமொழியில் கற்றுத்தேர்ந்த கொடியல்ரது அர்த்த சாஸ்திரம், சுசுருதம் முதலிய நூல்களில் உள்ளது எனவே அவரது காலத்தைச் சார்ந்தவர் என உவிண்டர் நீட்ஸ் எனும் ஆய்வாளர் கருத்தும், இன்னொரு செய்தியில் மனுசாஸ்திரம் நுஸல்களில் தொல்காப்பியம் பற்றிய கருத்துகள் காணப்படுகின்றது. எனவே மனுசாஸ்திரக்காலத்தவர் என்பர் அதாவது கி.மு.200 ஆம் நூற்றாண்டாகக் கருதலாம் என்பர் ஆய்வாளர் கானே (P.V.Kana) என்றக் கருத்தும் பெர்டேல்சீத் எனும் ஆய்வாளர் மொழி ஓரை எனும் சொல் கிரேக்கத்திலிருந்து வடமொழிக்கு வந்து அதுப்பின்னர் தொல்காப்பியம் பயன்படுத்தியுள்ளார் என்றும் கூறுவர். ஆனால் தமிழறிஞர்களில் முனைவர் ச.அகத்தியலிங்கம் என்பவர் கி.மு.3 நூற்றாண்டே சரியாகும் என நிறுவுகின்றார். இப்படியாக தொல்காப்பியர் எக்காலத்தைச் சார்ந்தவர் என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றது. எனவே அவருடைய தொல்காப்பியம் நூலில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது என்பதும் அவற்றில் தமிழர் வாழ்வியல் திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அகத்திணையில் அவற்றில் நிலம், காலச்சூழ்நிலைகளுக்கேற்ப உயிரினங்களைப் பிரித்துக் காட்டியுள்ளார். அதன்பிறகு மரபியல் எனும் பகுதியில் உயிரினங்களை ஒரறிவு முதல் ஆறறிவு உயிர்வரை பற்றியும் காட்டியுள்ளார். தொல்காப்பியர் கருத்தையே நன்னூலார் தன்னுடைய சொல்லதிகாரம் இயலில் உயிரியல் எனும் பகுதியில் சுட்டிக்காட்டுவதையும் அறியமுடிகின்றது. அந்த வகையான உயிரினக் கொள்கை சங்க இலக்கியங்களை ஆய்வு சங்கப்புலவர்கள் காட்டவில்லை. பின்னர் வந்த மாணிக்கவாசகர் தம்முடைய திருவாசகத்தில் ஆறு உயிரினங்களையும் சிவனை வழிபடும் போது எடுத்துக்காட்டுகின்றார். மேனாட்டு அறிஞர்கள், இல்மார்க் என்பவரும் அரிஸ்டாடில் போன்றவர்கள் தொல்காப்பியருடைய உயிரினக் கொள்கையை வெளியிட்டுள்ளனர். ஆகவே தொல்காப்பியர் தாம் இந்த உலகில் உயிரினக் கொள்கைகளை முதன்முதலாக எடுத்துக்காட்டுகின்றார் என்பதை அறியமுடிகின்றது.

தொல்காப்பியர் தன்னுடைய மரபியல் பகுதியில் ஒரறறிவுயிர்கள் முதல் ஆறறிவுயிர்கள் தனித்தனியாக எடுத்துக்காட்டி அவற்றிற்குரிய எவை என்பதையும் காட்டுகின்றார். உயிரினங்களுக்குரிய இளமைப் பெயர்களைப் பகுத்தும், வகுத்தும் அவற்றிற்குரிய உயிரினப் பெயர்களை வரிசைப்படுத்திக் காட்டியுள்ளமை அறியமுடிகின்றது. தொல்காப்பியர் காட்டிய அந்த உயிர்கள் பெயர்கள் பிற்கால அகழாய்வில் கிடைக்கப் பெறுவதையும் ஆனால் அதன் பெயர்கள் இடம்பெறவில்லை என்பதையும் நாத் என்பவர் எடுத்துக் காட்டியுள்ளமை அறியமுடிகின்றது.

இது காறும் தொல்காப்பியர் காலத்தால் முந்தியவர் என்றும் அவருடைய தொல்காப்பியம் உயிரினக்கொள்கைகளை இவ்வுலகிற்கு எடுத்தக் காட்டவதில் முன்னோடியாக விளங்குகின்றது அறியமுடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. ப.இளமாறன், தொல்காப்பியம் பன்முக வாசிப்பு, ப.17
2. மேலது, ப.23
3. மேலது, ப.23
4. மேலது, ப.25
5. கு.வி.கிருஷ்ணமூர்த்தி, அறிவியல் வரலாறு, ப.100
6. முனைவர் தமிழண்ணல், தொல்மரபு, நூற்.1526
7. நன்னூல் உயிரியல், நூற்.444
8. திருவாசகம், காந்தளம் பதிப்பகம், ப.29
9. கு.வி.கிருஷ்ணமூர்த்தி, அறிவியல் வரலாறு, ப.102
10. முனைவர் தமிழண்ணல், தொல்மரபு, நூற்.1527
11. மேலது, நூ.1528
12. மேலது, ப.447
13. மேலது, ப.1530
14. மேலது, ப.1531
15. மேலது, ப.1632
16. கு.வி.கிருஷ்ணமூர்த்தி, அறிவியல் வரலாறு, ப.15
17. முனைவர் தமிழண்ணல், தொல்மரபு, நூற்.150
18. முனைவர் தமிழண்ணல், தொல்மரபு, நூற். 150
19. குறுந்தொகை, பா.92
20. முனைவர் தமிழண்ணல், தொல்மரபு, நூற்.69
21. அகநானூறு, பா.160
22. மேலது, ப.1505
23. புறநானூறு, பா.211
24. அகநானூறு, பா.367
25. முனைவர் தமிழண்ணல், தொல்மரபு, நூற்.1507
26. அகநானூறு, பா.281
27. முனைவர் தமிழண்ணல், தொல்மரபு, நூற்.1511
28. அகநானூறு, பா.34
29. இராமசுந்தரம், பாலூட்டிகள், ப.10
30. கு.வி.கிருஷ்ணமூர்த்தி, அறிவியல் வரலாறு, ப.132

தொ.மா.க. 152

The *Tolkāppiyam* in a Healthcare Perspective

Dr. Kesavan Shemankkary (MBBS), PhD Candidate,
Diabetes Research Unit, Department of Clinical Medicine,
Faculty of Medicine, University of Colombo, Sri Lanka.
ankkary91@gmail.com

Mr. Viveganandarajah Thulanchanan (BSc in Molecular Biology & Biochemistry),
Assistant Divisional Secretary,
Divisional Secretariat, Porativupattu, Vellaveli, Batticaloa, Sri Lanka.
vthula27@gmail.com.

Abstract

Healthcare practices have evolved significantly over millennia, adapting to the cultural, social, and scientific advancements of each era. At its core, health care aims to maintain and improve health through the prevention, diagnosis, treatment, and recovery from illness, injury, and other physical and mental impairments. Being the ancient Tamil Text and one of the oldest grammar texts of a classical language, *Tolkāppiyam* has some earlier signs of Healthcare practices. This paper provides a comprehensive exploration of health care, with a particular focus on its evolution from the ancient healthcare aspects mentioned in *Tolkāppiyam.*

1.0 Introduction to Healthcare

Health care encompasses the prevention, diagnosis, treatment, and management of illness and the preservation of mental and physical well-being through services offered by the medical and allied health professions (World Health Organization, 2018; Shi & Singh, 2020,). According to Medicine, I.O & America C.O.Q.O.H.C.I (2001), the term "healthcare" encompasses a wide range of services provided to individuals or communities to promote, maintain, or restore health.

Healthcare includes a wide range of practices aimed at maintaining and improving health, from traditional and alternative therapies to modern medical treatments. They are classified as primary, secondary, tertiary and quaternary care including public health and mental health care.

Primary care is the first point of contact for individuals within the health care system, providing comprehensive and accessible care, emphasizing preventive measures. Secondary Care is specialized medical services provided by specialists after referral from primary care providers. Tertiary care is highly specialized medical care, typically involving advanced and complex procedures and treatments while Quaternary Care is an extension of tertiary care, involving highly specialized and experimental treatments (Goodie, 2013).

Other main streams of Health Care such as Public Health focuses on the health of populations, aiming to prevent diseases, prolong life, and promote health through organized efforts and informed choices. Mental Health Care addresses the prevention, diagnosis, and treatment of mental disorders, emphasizing the importance of psychological well-being (Marchildon, 2017).

Health care can be broadly categorized into three main schools: Conventional Medicine, Complementary and Alternative Medicine, and Integrative Medicine. Conventional Medicine often referred to as Western or allopathic medicine, involves the use of pharmaceuticals and surgical interventions. Complementary and Alternative Medicine, abbreviated as CAM includes a variety of practices such as acupuncture, homeopathy, and herbal medicine that are not typically part of conventional medical training. Integrative Medicine combines treatments from conventional medicine and CAM for which there is evidence of safety and effectiveness (Wieland, Manheimer, & Berman, 2023).

1.1 History of Healthcare

The term 'health care' refers to a system that provides medical services to individuals. Entities within health care include hospitals, clinics, primary care providers, specialists, and various health care professionals such as doctors, nurses, and therapists. The scope of health care also extends to health insurance, pharmaceutical companies, and public health organizations.

Health care practices date back to prehistoric times when early humans used natural remedies and spiritual healing. Ancient civilizations like India, Egypt, Greece, and China made significant contributions. According to O'Connor (2008), the Egyptians had advanced knowledge of anatomy and surgery, while ancient Egyptian medicine included herbal remedies, and a detailed understanding of anatomy and physiology, as evidenced by their embalming

practices (El Gindi, 2002). Greek medicine, particularly Hippocrates, often called the "Father of Medicine," laid the foundation for modern medical ethics and practices. Greek medicine emphasized the balance of bodily fluids (humors) and the importance of diet and lifestyle (Bos, 2022). Chinese medicine, with its roots in practices like acupuncture and herbal therapy, has also been influential. It developed sophisticated practices such as acupuncture, herbal medicine, and the concept of Yin and Yang in maintaining health (Liu & Yang, 2023).

1.2 Health Care in Ancient India

Ancient India made profound contributions to health care through its extensive Ayurvedic practices. Ayurveda, meaning "the science of life," is a holistic system that integrates physical, mental, and spiritual health. It is a system of medicine that dates back over 3,000 years, is one of the oldest forms of health care. Texts like the Charaka Samhita and Sushruta Samhita detail various aspects of medicine, including surgery, paediatrics, and geriatrics (Patwardhan, 2020; Sharma, Dash, & Mishra, 2019; Sengar & Gupta, 2018). These texts emphasize balance among body, mind, and spirit and the use of herbs and dietary measures to maintain health (Chaudhary & Gupta, 2023).

Ancient Indian texts provide a wealth of knowledge on health care practices. Sharma, Dash and Mishra (2019) have explained how does Charaka Samhita focus on internal medicine, detailing diagnoses and treatments for various ailments. According to Sengar & Gupta (2018), Sushruta Samhita is renowned for its surgical techniques and descriptions of surgical instruments. Srinivasan & Palani (2021) recently demonstrated that these texts also highlight the importance of preventive care, including hygiene, diet, and daily routines, which are still relevant in contemporary healthcare practices.

Tamil people of South India possessed ancient texts and knowledge on herbs and medications that partially overlap with Ayurveda and are known as Siddha medicine. This system is named after its founders and propagators, *Cittarkaḷ,* the *Siddhas*, who are regarded as the "perfect ones", starting from the myths on Lord Shiva, the first and foremost *Siddha* (Mudaliar, 2009) Although the Siddha school of Indian medicine has become less prominent due to the prevalence of allopathy and Ayurveda, traces of it can still be found in remote Tamil villages of Tamil Nadu and Sri Lanka. There is a claim among Tamilological scholars that Siddha medicine is a direct descendant of now-extinct pure Tamil medicine (Mudaliar, 2009:1, Karunamoorthi *et al*, 2012). Consequently, the healthcare aspects mentioned in the *Tolkāppiyam* might represent precursors to contemporary Siddha medicine.

2. Tolkāppiyam

Tolkāppiyam, the ancient Tamil grammatical work, stands as a monumental text in the history of Tamil literature. It is revered not only for its linguistic insights but also for its cultural, ethical, and psychological dimensions (Pothumani & Kamali, 2022).

Tolkāppiyam incorporates various elements of Sangam literature, which is known for its poetic excellence and profound exploration of human emotions and relationships. *Tolkāppiyam,* as described by Pothumani & Kavitha (2022), captures the cultural nuances, providing insights into the lives, beliefs, and practices of the ancient Tamil people and it laid the foundation for subsequent grammatical works, remains a primary reference for Tamil

linguists. The text's detailed analysis of phonetics, morphology, and syntax has ensured the preservation and purity of the Tamil language through centuries.

2.1 Structure of *Tolkāppiyam*

The *Tolkāppiyam* is meticulously organized into three main chapters, known as *atikāram*: *eḻuttu* (script), *col* (word) and *poruḷ* (meaning). Each with nine topics (*iyal*) and a cumulative total of 27 iyals containing 1,610 *cūttiram* verses [95] in nūṛpā meter. First *eḻuttatikāram* deals with orthography, focuses on the phonetics and rules of the Tamil script. It lays down guidelines for the proper pronunciation and writing of Tamil letters, emphasizing the purity and correctness of the language.

The *collatikāram* discusses the syntax and morphology of Tamil language. It elaborates on the formation of words, compound words, and the rules governing their usage. This section is critical for understanding the syntactical construction of Tamil sentences. The third *poruḷatikāram* delves into the semantics and rhetorical aspects of Tamil literature. It explores the meanings of words and sentences, providing a comprehensive analysis of the various literary genres and their characteristics. This section also includes discussions on emotions (*Meyppāṭu*) and external disciplines (*puṟattiṇai*), highlighting the depth of *Tolkāppiyam*'s psychological insights (Kavitha, 2020). Muthusivagami (2022) has shown that the text's discussion on the external *puṟattiṇai* disciplines and internal *Meyppāṭu* emotions reflects a deep understanding of human psychology and societal dynamics of its time.

2.2 Dating of *Tolkāppiyam*

Tolkāppiyam reflects a period when Tamil was flourishing as a literary and spoken language, with an innovative understanding of grammar and linguistics. It is traditionally attributed to *Tolkāppiyar*, a disciple of the sage *Akattiyar* or *Agastya*, though the exact period of its composition is debated among scholars. Some placed it around the 3rd century BCE, while others suggest a later date (Rajamanikkam, 1964).

Since *Tolkāppiyam* itself mentions that consonant scripts and vowels such as *e* and *o* will have dot *(puḷḷi)* on them[96], Mahadevan (1970) suggested that the *Tolkāppiyam* might be dated to the 2nd century CE. This suggestion was based on references to the 2nd century CE *Sātavāhana* bilingual coin of *Vāsitīputa Siri Sātakaṉi* and lead coin of *Cēntaṉ* from Sengam which had Tamil Brahmi scripts of *e* and *o* with *pulli*s. Following the decipherment of Anaimalai Tamil-Brahmi inscription, which features the letter “ma” with a *puḷḷi* as mentioned in the *Tolkāppiyam*[97] , Siromoney (1983) proposed that the text could be assigned to a period

---

[95] However the total number of *cūttiram* verses may vary with the available palm-leaf manuscripts and book editions by different authors.

[96] *“Meyyiṉ iyaṟkai puḷḷiyoṭu nilaiyal ekara okarattu iyaṟkaiyum aṉṟē* The nature of Consonants is having dots while (the scripts of) e and o also have the same.

[97] *“araiyaḷavu kuṟukal makaram uṭaittē....Uṭpeṟu puḷḷi uruvākum'mē”* The sound “*ma*” could have half than its usual consonant prolongation….. it will be produced when there is a dot inside. (Tolkāppiyam eḻuttu atikāram 13-14) The old Tamil Brahmi script "*ma*" featured

not surpassing the 1st Century CE. However, later discoveries of the Tamil-Brahmi inscriptions containing consonants with *puḷḷi,* dating back to prior to the 2nd and 1st century BCE at Tirupparankundram and Muthupatti (Sethupathy, 2024), confirmed that the *Tolkāppiyam* likely dates no later than 2nd century BCE. Despite the discrepancies of its dating, *Tolkāppiyam* is unanimously recognized as the oldest extant Tamil grammar text.

3.0 Healthcare Perspectives in *Tolkāppiyam*

As an ancient text exploring the grammatical basis of the Tamil language, *Tolkāppiyam* does not explicitly address healthcare-related topics. Its antiquity and archaic vocabulary make it difficult to identify contemporary definitions and categories of healthcare. However, early indications of health-related aspects can be found in the text, as it discusses various linguistic and social dimensions of the Tamil people of its era.

3.1 Diseases and Caregiving

Tamil people of *Tolkāppiyam*'s time had knowledge of nōy or piṇi, the illness, that could impact the function and body of the human with symptoms and physiological changes. It prefers emotional causes for the emergence of diseases in the human body rather than external causes. *Tolkāppiyam* states that when the lord moves away from his consort, she becomes sick due to the depression she feels[98]. The text also advises that the female companion of the consort has the responsibility to encourage the lord to re-join his consort soon to "cure" or "caregive" her by providing mental comfort. A lord and his consort should understand each other in certain conditions, such as feeling each other's illness as if it were their own[99]. This statement illustrates that how much the *Tolkāppiyam* prioritize the spousal support in the caregiving.

There were physicians known as *nōymaruṅkaṟinar* (literally "those who know illness") in that society. *Tolkāppiyam* states that villagers, neighbors, slum people, physicians, brothers, and fathers would know when a girl has fallen in love with a boy but are not eligible to discuss it in public preferring instead to gossip[100]. This prose indicates the role of physicians in maintaining the privacy and secrecy of their patients.

---

a dot inside it, which is a distinguishing characteristic compared to other letters where the dot is placed above the letter..

[98] "Nōy mikapperukit taṉ neñcu kaluḷntōḷai", The lady who suffered the most due to the increase in disease (caused by separation unendurable) – *poruḷatikāram akattiṇaiyiyal* 39:06

[99] Avaravar uṟupiṇi tampōṟ cērttiyum – *poruḷatikāram poruḷiyal* 5:8

[100] *"Ūrum ayalum cēriyōrum nōymaruṅkaṟinarum tantaiyum taṉṉaiyum koṇṭeṭuttu moḻiyappaṭutal allatu kūṟṟavaṇ iṉmai yāppuṟat tōṉṟum"* – *poruḷatikāram*, ceyyuliyal 191

Nacciṉārkkiṉiyar, one of the commentators of *Tolkāppiyam* mentions that the order alludes to the first three being female and the last two being male, implying that *nōymaruṅkaṟinar* is a gender-neutral term (Tamotarampillai, 1885). This, in turn, reveals that the physicians during the *Tolkāppiyam*'s time were both males and females. Although a clear classification of secondary and tertiary care is not provided, the *nōymaruṅkaṟinars* might have played a vital role in delivering primary care to patients in the society of that time.

Tolkāppiyam also states that those who rob cattle from their enemy's country should bring the cattle to their own country without giving "nōy" to them[101]. Therefore nōy is not only internal disease felt by humans, it is also caused by physical violence, even on non-human beings. The term *nōy* is elsewhere used as a synonym for sorrow in *Tolkāppiyam* (*poruḷatikāram poruḷiyal* 2:1).

3.2 Human Physiology

eḻuttatikāram explains in one of its stanza how the sounds of Tamil language is articulated in eight different places as follows: "Sounds are produced from air that rises from navel and then the air stays in head, throat and chest, following the order of teeth, lips, tongue, nose and palate. These eight stations govern how words are pronounced, with the place of articulation differing accordingly[102]. Although this stanza deals with articulatory phonetics, which describes how humans produce speech sounds, it suggests that the ancient Tamils of the *Tolkāppiyam* era had a sophisticated understanding of the human physiology involved in phonetics and phonation (Subbiah, 1968)[103].

3.3 Psychological Perspectives

The most intresting aspect of *Tolkāppiyam* is its exploration of human emotions and behavior. The concept of *Meyppāṭu* in *poruḷatikāram* delves into the emotional expressions

---

[101] *….ākōḷ pūcal māṟṟē nōy iṉṟu uyttal…,* - *poruḷatikāram*, purattinaiyiyal 3:5

[102] *Unti mutalā muntu vaḷi tōṉṟi, talaiyiṉum miṭaṟṟiṉum neñciṉum nilai'i, pallum itaḻum nāvum mūkkum aṇṇamum uḻappaṭa eṇmuṟai nilaiyāṉ uṟuppu'uṟṟu amaiya neṟippaṭa nāṭi, ellā eḻuttum colluṅ kālai piṟappiṉ ākkam vēṟuvēṟu iyala – eḻuttatikāram* 83

[103] However, Subbiah, in his article, (1968:252) points out that there is no mention of head, throat, and chest as places of articulation in *Tolkāppiyam* and it might be "a poetic convention, or, as other scholars have stated an interpolation by a scholar who was well-versed in the Sanskrit works" as these eight articulatory organs are "exactly coincides with those mentioned in *Pāṇiṉīya śikṣā*", a Sanskrit phonetic work, the available recensions of which are dated no later than the 8th century CE. (Ghosh, 1938:xiii-xv). There is a possibility regarding the interpolation that the reverse also could be true.

and psychological states of individuals. This early recognition of psychological principles underscores the text's relevance to modern psychological studies (Kavitha, 2020).

Tolkāppiyam classifies romantic relationships into seven catagories starting from *kaikkiḷai* ending at *peruntiṇai*. It also mentions that among seven categories first and last are not admired by the world (*poruḷatikāram akattiṇaiyiyal* 1 - 2) and indicates that *peruntiṇai* is the affairs come through compulsion, aging, lust, and all other categories of love between equal male and female (*poruḷatikāram akattiṇaiyiyal* 54). Therefore *peruntiṇai* is the ancient Tamil term that encompasses all aspects of controversial love affairs of today's world.

Meyppāṭṭiyal lists out the 20 symptoms of expressions regarding *peruntiṇai* that causes psychological discomfort for those affected. Individuals may experience a range of symptoms, including a dislike of happiness, persistent sorrow, hallucinations of loved ones, an interest in inappropriate behaviors, hunger, changes in body color, food rejection, weight loss, insomnia, vivid dreams, confusing truth with falsehood, doubting everything, an obsessive focus on things related to the loved one, excessive emotional outbursts, confusion, seeing the loved one everywhere, comparing themselves to others, seeking ways to be with the loved one, and hearing the loved one's name constantly.

This list reveals how subtly *Tolkāppiyar* examines the psychology of human love and romance. It could assist patients whose affairs fall under *peruntiṇai* -an unwanted or impossible love-in identifying their symptoms and addressing the mental health issues related to this condition.

Meyppāṭṭiyal also lists eight *meyppāṭu* expressions, in contrast to the nine "navarasa" expressions[104] of North Indian fine art. These expressions include laughter, crying, disgust, amazement, fear, pride, anger, and happiness. *Tolkāppiyam* identifies 32 factors that induce these eight emotions. Laughter is caused by comedy, teasing younger individuals, mocking others, and foolishness. Crying is induced by poverty, loss, missing someone, and defeat. Disgust is triggered by aging, illness, suffering, and softness. Wonder is elicited by newness, greatness, insignificance, and innovation. Fear is caused by devils, animals, thieves, and kings. Pride results from education, valor, popularity, and charitable acts. Anger is provoked by amputation, treachery, oppression, and murder. Finally, happiness is generated by wealth, sensation, intimacy, and sports (*Poruḷatikāram, Meyppāṭṭiyal* 5-11). Understanding the root causes of these expressions can contribute to emotional intelligence and personality development, which are key components of self-care for individuals.

4.0 Conclusion

In conclusion, the *Tolkāppiyam* stands as a testament to the profound intellectual and cultural achievements of ancient Tamil society. This timeless work, with its intricate treatment

[104] The nine *navarasa* expressions are joy (*hāsya*), fear (*bhayānaka*), anger (*raudra*), love (*srnkāra*), courage (vira), sadness (*karunā*), amazement (*adbhuta*), disgust (*vībhatsya*) and calmness (*shānti*).

of grammar and deep insights into cultural and psychological dimensions, remains an invaluable resource. Contemporary research continues to affirm the *Tolkāppiyam*'s scholarly importance, as numerous studies highlight its relevance across various fields. The text's impact extends beyond its historical context, offering valuable perspectives for modern academic inquiry and cultural appreciation (Narayanan, 2022).

Moreover, the *Tolkāppiyam* provides early indicators of healthcare practices within ancient Tamil society, suggesting an emerging understanding of health that aligns with contemporary holistic and preventive approaches. We know that the precursors to key aspects of healthcare, such as CAM, primary care and mental health care, existed within the Tamil society described in the *Tolkāppiyam*. While it may not have been explicitly focused on health care, its insights hint at primordial practices that contributed to the evolution of medical knowledge, potentially forming the basis for the later development of Siddha Medicine in Tamil Nadu.

As we further explore this seminal text, we uncover both its historical significance and its prospective contributions to modern understanding. The ongoing research into the *Tolkāppiyam* promises to bridge gaps in our knowledge, revealing more about the precursors of scientific and medicinal advancements. In essence, the *Tolkāppiyam* not only illuminates the past but also guides future generations in appreciating the complexities of language, culture, and health.

Reference

1. Bos, J. (2022). "Humors and the Mind" in Humors Renaissance Philosophy (M.Hebron Ed). Springer. https://doi.org/10.1007/978-3-319-02848-4_930-1
2. Chaudhary, A., & Gupta, S. (2023). Ayurveda: Integrating ancient wisdom with modern science for holistic health. Journal of Alternative and Complementary Medicine, 29(1), 45-60. https://doi.org/10.1089/acm.2023.0001
3. O'Connor, S. (2008). Paleoradiology: imaging mummies and fossils. Rethy K. Chhem & Don R. Brothwell. Springer-Verlag: Berlin and Heidelberg, International Journal of Osteoarchaeology, 18(5), 546-548. https://doi.org/10.1002/oa.1016El
4. Gindi, S. E. (2002). Neurosurgery in Egypt: Past, Present, and Future???From Pyramids to Radiosurgery. Neurosurgery, 51(3), 789-796. https://doi.org/10.1097/00006123-200209000-00032
5. Goodie, J. (2013). Clinical Settings. In Gellman, M.D., & Turner, J.R. (Eds.), Encyclopedia of Behavioral Medicine, 428-430. Springer. doi:10.1007/978-1-4419-1005-9_94.
6. Gosh, M. (1938). Pāṇiṉīya śikṣā Or The śikṣā vedānga Ascribed To Panini. University of Calcutta.
7. Medicine, I. O., & America, C. O. Q. O. H. C. I. (2001). Crossing the Quality Chasm. National Academies Press.
8. Kavitha, J. (2020). Tholkappiyar's Meyppadu (Funtion of Emotions) and Psychology. International Journal of Tamil Language and Literary Studies, 03(01). 12-27. https://doi.org/10.38067/ijtlls.2020.v03i01.002.

9. Karunamoorthi, K., Jegajeevanram, K., Xavier, J., Vijayalakshmi, J., & Melita, L. (2012). Tamil Traditional Medicinal System - Siddha: An Indigenous Health Practice in the International Perspectives. International Journal of Genuine Traditional Medicine (TANG). 2. 1-11. 10.5667/tang.2012.0006.
10. Liu, P., & Yang, Z. (2023). Modern Advancements in Traditional Chinese Medicine: Integrating Acupuncture And Herbal Therapy. Nature Medicine, 29(1), 15-22. doi:10.1038/s41591-022-02001-5
11. Mahadevan, I. (1970). Tamil Brahmi Inscriptions, State Department of Arcaheology.
12. Marchildon, G. (2017). Public health: who, what, and why? Canadian Journal of Public Health, 108(1), e1-e6. doi:10.17269/cjph.108.6048.
13. Mudaliar, K. (2009). Siddha Medicine Part I (M.Thulasimani Trans). Chennai: Department of Indian Medicine & Homeopathy. Retrieved from: https://www.tamildigitallibrary.in
14. Muthusivagami, A. (2022). The Purathinai (External) Disciplines of Tolkappiyam in the Purananuru. International Research Journal of Tamil. 4. 398-407. 10.34256/irjt22s855.
15. Narayanan, K. (2022). Tolkappiyam Biological Discriminations in the Sangam Literature Framework. Shanlax International Journal of Tamil Research. 6. 83-89. 10.34293/tamil.v6i4.4827.
16. Patwardhan, K. (2020). The Quest for Evidence-Based Ayurveda: Lessons Learned and Future Directions. Journal of Ayurveda and Integrative Medicine, 11(4), 345-349. doi:10.1016/j.jaim.2020.08.001
17. Pothumani, V., & Kamali, T. (2022). A Study of Cultural Values in Tolkāppiyam. International Research Journal of Tamil. 4. 242-246. 10.34256/irjt22335.
18. Rajamanikkam, M. (1964). The Date of Tolkāppiyam. Reprinted from the Annals of Oriental Research of the University of Madras, XIX(II). Retrieved from www.tamildigitallibrary.in
19. Sadhanandan, C. (2022). Agathinai Literary Theory in Tolkāppiyam. International Research Journal of Tamil. 4. 25-31. doi:10.34256/irjt224s134.
20. Sengar, P. K., & Gupta, M. (2018). Sushruta Samhita: A Historical Review and its Importance in Modern Surgery. International Journal of Recent Scientific Research, 9(8), 28516-28521. doi:10.24327/ijrsr.2018.0908.2522
21. Sethupathy. V.M., (2024). Introduction to Epigraphy. Department of history, Manonmaniam Sundaranar University. Retrieved from https://www.msuniv.ac.in.
22. Sharma, R. K., Dash, B., & Mishra, P. K. (2019). A Critical Review of Charaka Samhita in the Perspective of Modern Clinical Research. Journal of Research in Ayurveda, 40(2), 98-103. doi:10.4103/jra.jra_98_19
23. Shi, L., & Singh, D. A. (2020). Essentials of the U.S. Health Care System (5th Ed.). Jones & Bartlett Learning.
24. Siromoney, G. (1983). Origin of the Tamil-Brahmi Script. in Origin Evolution and Reform of Tamil Brahmi Script (Seminar Papers), Madras: University of Traditional Cultures.
25. Srinivasan, S., & Palani, G. (2021). The relevance of traditional Ayurvedic practices in contemporary health care: Insights from Charaka Samhita and Sushruta Samhita.

Journal of Traditional and Complementary Medicine, 11(3), 243-250. https://doi.org/10.1016/j.jtcme.2020.12.005
26. Subbiah, R. (1968). Tolkaappiyam and phonetics. Indo-Iranian Journal, 10(4), 251-260. doi:10.1007/bf00211210
27. Tamotarampillai, C.Y (Ed). (1885). Tolkāppiyam Poruḷatikāram (Tamil), Chennai.
28. Wieland, L. S., Manheimer, E., Berman, B. M. (2023). Operational definition of complementary, alternative, and integrative medicine derived from a systematic search. BMC Complementary Medicine and Therapies. https://bmccomplementmedtherapies.biomedcentral.com/articles/10.1186/s12906-023-04035-5
29. World Health Organization. (2018). Health Systems Strengthening Glossary. World Health Organization. https://www.who.int/healthsystems/hss_glossary/en/

தொ.மா.க. 154

தொல்காப்பிய மெய்ப்பாட்டியலும் நவீன உளவியலும்: ஓர் ஒப்பீடு

மருத்துவர் இரகுராமன்
முதுகலைத் தமிழ், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கனடா.
v_raghuraman@hotmail.com

ஆய்வுச் சுருக்கம்

ஏறத்தாழ 2500 வருடங்களுக்கு முன், பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு இவற்றுடன் நாடக வழக்கை இணைத்து, கூத்தும் செய்யுளும் செய்பவர்களுக்காக இலக்கண நூலில் வைக்கப்பட்ட மெய்ப்பாட்டு இயலை, ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக அறிவியலையும், ஆராய்ச்சியையும் மையமாக வைத்துத் தொடங்கிய நவீன உளவியலுடன் ஒப்பிடுவது எப்படி முறையாகும் என்ற ஒரு கேள்வி எழும்.

தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல் மட்டும் அல்ல. அது ஒரு வாழ்வியல் நூல், பண்பாட்டுப் பெட்டகம். அதற்கும் மேலாக அது ஒரு உளவியல் நூலும் ஆகும். ஒரு ஆணும் பெண்ணும் காதல் வயப்படும் போதும், ஊடல் ஏற்படும் போதும், பிரிவுத் துயரில் வாடும் போதும் அவர்களது உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளையும் அவர்களது உடல்களில் ஏற்படும் மாற்றங்களையும் துல்லியமாக எழுத வேண்டும் என்றால் அதற்கு ஆசிரியர் உளவியலை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு, வெகு தொலைவில், மாறுபட்ட கலாச்சாரத்தில் அண்மையில் தொடங்கிய இந்த நவீன உளவியல் நம் தொல்காப்பியர் காலத்து உளவியலிலிருந்து வேறுபடுகிறதா அல்லது, அது தொல்காப்பியர் காலத்து உளவியலின் நீட்சியா என அறிந்து கொள்வது ஒரு கட்டாயமாகிறது

இக்கருத்தை மனதில் கொண்டு, மெய்ப்பாட்டியலுக்கு உரை ஆசிரியர்கள் எழுதிய விளக்கத்தையும், பல நாடுகளைச் சேர்ந்.த நவீன உளவியல் ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களையும் ஒப்பீடு செய்து பார்த்ததின் விளைவே இவ்வாராய்ச்சிக்கட்டுரை.

நவீன உளவியல் என்பது அறிவியல் வளர்ச்சியின் துணையாலும், ஆராய்ச்சியின் உதவியாலும், தொழில் நுட்பத்தின் வளர்ச்சியாலும் பல புதிய கருத்துக்களை ஏற்று ஒரு பரிணாம வளர்ச்சியை ஒரு குறுகிய காலத்தில் எட்டியிருக்கிறது. இருப்பினும் இதன் ஆதாரமாக உள்ள கருத்துக்கள் நம் பண்டைய நூலான தொல்காப்பியத்திற்கு முரணாக இல்லாமல் ஒரு நீட்சியாகத்தான் தெரிகிறது.

குறிசொற்கள்: மெய்ப்பாட்டியல். உளவியல்,

முன்னுரை

ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியம் என்ற இலக்கண நூலில், எழுத்து சொல் என்ற அதிகாரங்களுடன் பொருள் என்ற ஒரு அதிகாரத்தை இணைத்து அதன் மூலம் தமிழரின் பண்பாட்டையும், மரபையும் பதிவு செய்தது மட்டும் அல்லாமல், யாப்பு, அணி என்ற இரு கூறுகளையும் சேர்த்து, செய்யுள் வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் வரையரை செய்திருக்கிறார் தொல்காப்பியர். இது ஒரு புதுமை மட்டும் அன்று ஒரு தொலை நோக்குப்பார்வையும் கூட.

ஆனால் அவர் பொருளதிகாரத்தில் ஆறாவது இயலாக 27 நூற்பாக்களில் விவரிக்கும் மெய்ப்பாட்டியல்ஏன் அங்கு வைக்கப்பட்டிருக்கிறது? ஒரு இலக்கண நூலில் மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளைப் பற்றி ஏன் விவரிக்க வேண்டும் என்ற கேள்வி மாணவர்களுக்கு எழுவது இயற்கை. அதுவும் என்னைப் போன்று உளவியல் துறையில் பல வருடங்கள் ஈடுபட்டு வருபவர்களுக்கு தொல்காப்பியத்தில் கூறப்படும் பல் வகை மெய்ப்பாடுகளுக்கும் நவீன உளவியலில் கூறப்படும் மெய்ப்பாடுகளுக்கும் வேறுபாடுகள் இருப்பதுபோல் தெரிகிறது. இந்த வேறுபாடுகள் ஒரு முரணா அல்லது ஒரு நீட்சியா என ஒரு குழப்பமும் ஏற்படுகிறது. அந்த குழப்பத்திலிருந்து தெளிவுபெற நான் தொல்காப்பிய மெய்பாட்டியலுடன் நவீன உளவியலை ஒப்பிட்டுப் பார்த்ததின் விளைவே, இந்த ஆய்வுக் கட்டுரைக்கு அடிப்படையாகவும் அமைந்ததது அதன் தலைப்பாகவும் அமைந்தது.

உண்மையை ஆராய்ந்து கண்டறிவதே ஆராய்ச்சியின் நோக்கமாகும். இரு பொருள்களை ஒப்பிடுவதன் மூலம் பல உண்மைகளைக் கண்டறிய முடிவதால், ஒப்பீடு என்பதும் ஒரு வகையான ஆய்வே. எனது இந்த ஆய்வு ஒரு தொடக்கம் தான். இதில் ஈடுபட்டபொழுது நான் கண்ட பல செய்திகள் இது தொடர்ந்து பல ஆராய்ச்சிகளுக்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையைக்கொடுத்துள்ளது.

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டபொழுது இதற்கு முன் இவ்வாறான ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா என ஆராய்ந்ததில், இத்தகைய தலைப்பில் வேறு ஆராய்ச்சிகள் ஏதும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆதலால் வழிகாட்டும் கட்டுரைகள் இல்லை. இது ஒரு ஆய்வுச் சிக்கலாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாட்டியலையும் நவீன உளவியல் கூறும் மெய்ப்பாட்டுக் (PSYCHOLOGY OF EMOTIONS) கருத்துக்களையும் ஒப்பிடுவதன் மூலம் அவ்விரு கருத்துக்களையும் தெளிவாக அறிந்துகொள்வதுடன் நவீன உளவியலின் கருத்துக்கள் தொல்காப்பியர் கூறும் கருத்திலிருந்து மாறுபடுகிறதா அல்லது ஒத்துப்போகிறதா அல்லது தொல்காப்பியரது கருத்தின் நீட்சியா என கண்டறிவதும் இவ்வாராய்ச்சியின் கருதுகோளாகும்.

தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, பேராசிரியரின் மெய்ப்பாட்டியல் உரை, Beyond the Pleasure Principal by Sigmund Freud, TEXT BOOK OF PSYCHOLOGY, BOOK ON EMOTIONAL PSYCHOLOGY by George Marcus, William College (OXFORD PUBLICATIONS), articles by Kuklinski 1991, Kinder 1994 and Parkinson 1997 போன்றநூல்களிலிருந்தும், கட்டுரைகளிலிருந்தும் சான்றுகள் திரட்டப்பட்டன.

இந்த ஆய்வின் அமைப்பு

அ. மெய்ப்பாட்டியல் ஆ. நவீன உளவியல் கூறும் மெய்ப்பாடு இ. ஒப்பீடு ஈ.முடிவுரை என்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் என்ன கூறுகிறது என்பதை சிறிது கூர்ந்து நோக்குவோம்.

அ. மெய்ப்பாடு என்ற சொல்லை மெய்+ பாடு எனப்பிரித்து உரை ஆசிரியர்கள் பொருள் கொள்கிறார்கள்.

“உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளின் விளைவால் உடலில் (மெய்) ஏற்படும் மாறுதல்களே மெய்ப்பாடுகள்” என்பது அனைத்து உரையாசிரியர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். இங்கு ”மெய்” என்பது உடலையும் ”பாடு” என்பது படுதலையும் குறிக்கிறது. உள்ளத்தில் ஏற்படும் மாறுதல்களை உடல் மறைக்க முடியாமல் மெய்யாக பிறர் அறியக்காட்டுவதாலும் இதை மெய்ப்பாடு எனலாம்.

”உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந்தோரே”

என்ற நூற்பா இதை தெளிவுபடுத்துகிறது.

மேலும், இளம்பூரணர் இம்மெய்ப்பாட்டியல், கூத்தில் பயன்படும் என்ற காரணத்திற்காகவும் செய்யுள் செய்பவர் சுவைபட அதைச் செய்வதற்காகவும் இம்மெய்ப்பாட்டியலை தொல்காப்பியர் இங்கே வைத்திருக்கிறார் என்றும் தெளிவாகக் கூறுகிறார்.

இந்த இயலில் உள்ள 27 நூற்பாக்களை

1. மெய்ப்பாட்டின் பொதுவகைகள்
2. அகத்திணைக்குரியது
3. தலைமக்கள் சார்பு

என மூன்று தலைப்புகளில் தொல்காப்பியர் விவரிக்கிறார். நாம் முதல் தலைப்பான மெய்பாட்டின் பொதுவகைகளை ஆராய்விற்கு எடுத்துக்கொள்வோம்.

நூற்பா:245

பண்ணை த்தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்கு என்ப

பொருள்: விளையாட்டு ஆயத்தில் தோன்றிய 32 பொருளையும் குறித்து, அதில் புறத்து நிகழும் பொருள்\

பதினாறு என்று மேலோர் கூறுவர் என்கிறார் தொல்காப்பியர்.

இங்கு அவர் கூறும் ”பொருள் ”என்ற சொல் மற்றோர் அறியக்கூடிய மெய்ப்பாட்டைக் கூறுகிறது.

இங்கு அவர் உடலிலே தோன்றும் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதை விவரிக்கிறார்.

எடுத்துக்காட்டாக, காட்டில் சென்று கொண்டிருக்கும் ஒருவன் முன் புலி வந்துவிடுகிறது. அதைக்கண்ட அவன் அச்சமுற்று, அவன் உடல் நடுங்குகின்றது. இதில் நான்கு கூறுகள் உள்ளன.

புலி---------- சுவைப்பொருள் (Sense object)
புலியைக்காணுதல்----------சுவை உணர்வு (Sensory perception)
அஞ்சுதல் ----------குறிப்பு (feelings)
கை, கால் நடுங்குதல் ----------விறல் (outward behaviour)

இந்த நான்கு கூறுகளும் கீழ் காணப்போகும் 8 மெய்ப்பாடுகளுடன் உறழ்ந்து வரும்பொழுது 32 மெய்ப்பாடுகள் தோன்றுகின்றன.

இதில் சுவை உணர்வு, குறிப்பு, விறல் என்பதை மெய்ப்பாடு என்று ஏற்றுக்கொண்டாலும். புலியை எவ்வாறு இதில் சேர்த்துக்கொள்வது என்ற ஒரு குழப்பம் ஏற்படுகிறது. இவ்வாறே அனைத்து சுவைப் பொருள்களையும் மெய்ப்பாடாக எடுத்து கொள்கிறார் தொல்காப்பியர். இது எவ்வாறு நவீன உளவியலிலிருந்து வேறுபடுகிறது என்று பின் பார்க்கலாம்.

பின்னர், "கண்ணிய புறனே நானான்கு என்ப" என்பதை, மெய்ப்பாடு என்பது மற்றவர்கள் அறிய நிகழ்வதால், வெளியே தோன்றும் புலியையும், கை,கால் நடுங்குவதை மட்டுமே எடுத்துக்கொண்டு 16 மெய்ப்பாடுகள் என்று சில உரை ஆசிரியர்கள் உரை எழுதியிருக்கிறார்கள். உரை ஆசிரியர்களான இளம்பூரணுரும், பேராசிரியரும் பல இடங்களில் தங்கள் கருத்துகளில் வேறுபடுகிறார்கள்.

நாலிரண் டாகும் பாலுமார் உண்டே நூற்பா 246:

பொருள்: மேலே கூறப்பெற்றவைகள் 8 ஆக வரும் இடனும் உண்டே.

அவற்றுள் மற்றவர் காணும்படியாக உள்ள உடலில் தோன்றும் மெய்ப்பாடுகளை 8 என்று கொள்கின்றனர். அவைகள்

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பாடு என்ப. நூற்பா:247

மெய்ப்பாட்டை முன்னோர்கள் 32 என்றும். 16 என்றும் பின் 8 என்றும் கூறுவர் என்று தொல்காப்பியர் நமக்கு எடுத்துரைக்கிறார்.

பின்னர் இந்த 8 மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் நன்னான்கு இடங்களில் தோன்றும் என்று கூறி அவை 32ம் மெய்ப்பாடுகளே என்கிறார்.

மெய்ப்பாடு ------- தோன்றும் களம்

நகை --------- எள்ளல், இளமை, பேதமை, மடன்
அழுகை ----------இழிவு,இழவு, தளர்வு, வறுமை
இளிவரல் ---------மூப்பு, பிணி, வருத்தம், மென்மை
மருட்கை----------புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்
அச்சம் ---------- தெய்வம், விலங்கு, கள்வர், அரசன்

பெருமிதம் --------- கல்வி, தறுகண், புகழ்மை, கொடை
வெகுளி ---------- உறுப்பறை, குடிகோள், அலை, கொலை
உவகை ----------செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு

"அல்லல் நீங்கு உவகை" என்று கூறப்பட்டதால், பிறர் துன்பம் அடைவதைப் பார்த்து வருவது உவகை அல்ல என்கிறார். உரையாசிரியர்கள் இம்மெய்பாடுகள் சான்றோர் இருக்குமிடத்து தோன்றாது என்று கூறி, இவைகள் உலக வழக்கிலும், நாடக வழக்கிலும் தோன்றும் என்று கூறுகிறார்கள்.

மேற்கூறிய 32 மெய்ப்பாடுகளைத்தவிர மேலும் 32 மெய்ப்பாடுகளை தொல்காப்பியர் அடுத்து வரும் நூற்பாவின் மூலம் சேர்க்கிறார்.

நூற்பா 256

ஆங்கு அவை ஒரு பால் ஆக, வொருபா லாக
உடைமை, இன்புறல், நடுவுநிலைமை, அருளல்,
தன்மை, அடக்கம், வரைதல், அன்பெனா அக்
கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல்,
நாணல், துஞ்சல், அரற்றுக் கனாவெனாஅ
முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை,
கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு எனாஅக்
கையாறு, இடுக்கண், பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கு எனாஅ
அவியும் உளவே அவையலங் கடையே

ஆக மெய்ப்பாடுகள் 64ஆக விரிவடைகின்றன.

பின் அகத்திணை ஐந்தில் வரும் மெய்ப்பாடுகளையும், கைக்கிளை, பெருந்திணையில் வரும் மெய்ப்பாடுகளையும் சேர்த்தால் மொத்த எண்ணிக்கை விரிந்துகொண்டே போகிறது.

இவைகள் யாவும் தொல்காப்பியர் முதலில் கூறிய மெய்ப்பாடுகளின் வரையரையில் (மெய் + பாடு) பொருந்துகிறதா என்று பார்த்தால், அவைகள் அவ்வாறு பொருந்துவது இல்லை. அவற்றில் சில குணநலன்கள் (அருள், அடக்கம்,அன்பு,) சில செயல்பாடுகள் (நினைதல், அரற்றல், வியர்தல், கருதல், ஆராய்ச்சி). மேலும் நடுக்கம் போன்ற உடலில் ஏற்படும் மாறுபாடுகள் (விறல்) ஒன்றுக்கு மேற்பட்ட மெய்ப்பாடுகளில் ஏற்படக்கூடும் என்பதும் நூற்பாக்களில் தெளிவாகக் காட்டப்படவில்லை.. என்ன காரணங்களுக்காக தொல்காப்பியர் தன் முன்னோர்கள் வகுத்த முறையை அப்படியே ஏற்றுக்கொண்டார் என உரையாசிரியர்கள் விளக்கவில்லை. இது வருங்காலங்களில் ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு நல்ல களமாக அமையும் என்பது என் எண்ணம்.

தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளை நவீன உளவியலின் படி பிரித்துப்பார்க்கும் அட்டவணை:

மெய்ப்பாடு	உணர்ச்சி FEELINGS	தன்மை TRAIT	கொள்கை VALUE	செயல்பாடு EXPRESSION
1.உடைமை	+			
2.இன்புறல்	+			
3.நடுவுனிலை	சாந்தம்			
4.அருளல்		+	+	
5.தன்மை		+குலஇயல்பு		
6.அடக்கம்		+		
7.வரைவு			+	
8.அன்பு		+	+	
9.கைம்மிகல்	ஒழுக்கக்கேடு	+	+	
10.நலிதல்		+	பிறரை நலித்தல்	
11.சூழ்ச்சி		+		+
12.வாழ்த்தல்				+
13.நாணல்		+Guilt		
14.துஞ்சல்				+
15.அரற்றல்	தூக்கத்தில் பேசுவது			+
16.கனவு				+

மெய்ப்பாடு	உணர்ச்சி	தன்மை	கொள்கை	செயல்பாடு
17.முனிதல்	HATE	+		
18நினைதல்				+
19வெருவுதல்			துணுக்குறுதல்	+
20மடிமை	சோம்பல்	+		
21கருதல்	GOAL		+	
22ஆராய்ச்சி		+		+
23விரைவு		+	+	
24உயிர்ப்பு			பெருமூச்சு	+
25கையாறு	+வருத்தம்			
26இடுக்கண்	+	மிகுந்த துன்பம்		
27பொச்சாப்பு				+மறத்தல்
28பொறாமை		+		
29வியர்த்தல்				+
30ஐயப்பாடு	சந்தேகப்படுதல்	+		
31மிகை	மதியாதிருத்தல்			+
32நடுக்கம்				+

இதுவரை தொல்காப்பியத்தில் கூறப்பட்ட மெய்ப்பாடுகளின் வரையரையையும்,அவைகள் ஏற்படும் விதத்தையும், அவைகள் தோன்றுகின்ற

நிலைப்பாடுகளையும் ,தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலை தனது இலக்கண நூலில் வைத்ததற்கான காரணத்தையும் பார்த்தோம். இனி இத்துடன் ஒப்பிட வேண்டிய மேலை நாட்டில் தோன்றிய "நவீன உளவியலை" சிறிது உற்று நோக்குவோம்.

ஆ. நவீன உளவியல் கூறும் மெய்ப்பாடு

மேலை நாட்டுக் கலாச்சாரத்தில் மெய்ப்பாட்டுக்கு நேரான சொல் EMOTION என்று எடுத்துக்கொள்ளலாம். இது கிரேக்க இலக்கியத்திலும் மற்ற இலக்கியங்களிலும் தொல்காப்பியத்தைப் போலவே நாடகவழக்கிலும், செய்யுள் வழக்கிலும் விவரிக்கப்படுகிறது.ஆனால் அது தொல்காப்பியம் போன்ற ஒரு இலக்கண நூலில் கூறப்படவில்லை.பெரும்பாலும் நாடகங்களைப் பற்றிப் பேசும் நூல்களிலேயே விவரிக்கப்படுகிறது.

நவீன உளவியல் துறை, தொல்காப்பியத்தைப் போன்று அல்லாமல் வெகு அண்மையில் ஏறத்தாழ 150 வருடங்களுக்கு முன் தோன்றிய ஒன்றாகும்.இது இலக்கிய நோக்கில் அமையாமல் அறிவியலையும், ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு மனித உணர்வுகளை (HUMAN EMOTIONS)அறிந்து கொள்ள முயல்கிறது.

உளவியலும் உள்ளத்தில் ஏற்படும் எண்ணங்களால் பிறர் அறிய ஏற்படும் உடல் மாற்றங்களையே மெய்ப்பாடு என வரையறுக்கிறது.

Emotion : A complex set of interactions among subjective and objective factors, mediated through neural and/or hormonal systems, which gives rise to feelings and leads to physiological adjustments leading to expressive and adaptive behaviour.

கிரேக்கக் கலாச்சாரத்தில் தோன்றிய அறிவு (INTELLECT) வேறு, உணர்ச்சி (EMOTION) வேறு என்ற கொள்கையையே நவீன உளவியல் பின்பற்றி வந்தது.(1)அறிவு என்பது மூளை தொடர்பானது, உணர்ச்சி என்பது இதயத்துடன் ஈடுபட்டது என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, உணர்ச்சிகளை அறிவின் மூலம் கட்டுப்படுத்துவதையே அடிப்படையாகக் கொண்டு இயங்கிவந்தது. மேல் நாட்டு இலக்கியங்கள் பெரும்பாலும் அறிவுக்கும் உணர்ச்சிக்கும் ஏற்படும் போராட்டத்தையே மனித வாழ்க்கையின் மையக் கருத்தாகக் காண்பிக்கின்றன. (2)

நவீன உளவியல் மெய்ப்பாடுகளை வகைப்படுத்துவதில் ஆர்வம் காட்டாமல், மனிதனுக்கு உணர்ச்சிகளின் தேவை என்ன என்று ஆராய்ந்து அது உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது (BIOLOGICAL NECESSITY) என்றும் உயிரினங்கள் தன்னைக்காப்பாற்றிக்கொள்ளத் தேவையானது (SURVIVAL VALUE) என்றும் தெரிவிக்கிறது. (3)

எடுத்துக்காட்டாக, காட்டில் அமைதியாக மேயும் மான் ஒன்று, ஒரு சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டவுடன், அட்ரினலின் என்ற இராசயனப்பொருள் அதன் உடலில் சுரக்கின்றது. அது மானின் இதயத்துடிப்பை அதிகரித்து,இரத்த அழுத்தத்தை அதிகரித்து, தசைகளை முறுக்கேற்றி,அதிகமான மூச்சுக்காற்றை உள்ளிழுக்க வைக்கிறது. அதன் பயனாக அந்த மான் சிங்கத்திடமிருந்து தப்பி ஓடும் வாய்ப்பு அதிகரிக்கிறது. அச்சம் என்று நாம் கூறும் உணர்ச்சி மான் உயிர் வாழ உதவுகிறது. அதுபோல ஒரு விலங்கு மற்றொரு விலங்குடன் சண்டையிடும் போதும் இதே அட்ரினலின் கோபத்துடன் சண்டையிட்டு

தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவுகிறது. அதனால் கோபம் என்ற உணர்வும் உயிரைகாப்பாற்றிக்கொள்ள உதவுகிறது.

உளவியல் துறை இந்த மெய்ப்பாடுகளை, அனைத்துக் கலாசாரங்களிலும் உள்ள மக்களுக்கு பெரும்பாலும் பொதுவானதாகக் கருகிறது. தொல்காப்பியம் கூறுவது போலவே மனித உணர்ச்சிகள் அவர்கள் இருக்கும் நிலைப்பாட்டினால் தோன்றுகின்றன என்றும் அவ்வாறான நிலைப்பாடுகள் ஏறத்தாழ தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டன போன்றவைகளே என்று கருதுகிறது.

ஆனால் நவீன உளவியல் மெய்ப்பாடுகளைத் தற்காலிகமாக வந்து போகும் ஒரு மாற்றமாகவே பார்க்கிறது.

மேலும் அது எல்லா மனிதர்களும் ஒரு நிலைப்பாட்டில் ஒரே மாதிரி உணர்ச்சிகளையோ, செயல் பாடுகளையோ வெளிப்படுத்துவது இல்லை எனக்கருதுகிறது. எடுத்துக்காட்டாக வெகுளியையோ, அழுகையையோ வெளிக்கொணரும் ஒரு நிலைப்பாட்டில், நாம் அனைவரும் ஒரே மாதிரியான மெய்ப்பாட்டை வெளிக்காட்டுவதில்லை. அப்படியே காட்டினாலும் அனைவரும் ஒரே அளவில் காட்டுவதில்லை. நாம் எவ்வாறான உணர்ச்சிகளை வெளிபடுத்துகிறோம் என்பது நமது "உளத்தன்மையைப் பொறுத்து அமைகிறது"

இதை உளவியல் PERSONALITY TRAIT என குறிப்பிடுகிறது.இந்த தனித்தன்மை என்பது தோன்றி மறையும் உணர்ச்சிகளைப்போல் அல்லாமல் ஒவ்வொரு மனிதனுக்கு உள்ளே இருந்து அவரவருக்குத்தனித்தன்மையைக் கொடுக்கிறது. இந்த தனித்தன்மை, இளம் வயதில் நாம் சந்தித்த சூழ்நிலைகளாலும், மரபணுக்களாலும் வரையறுக்கப்படுகிறது எனக் கருதுகிறது.

இதைத்தவிர, மனிதருக்கு மனிதர் வேறுபடும் VALUES என்று சொல்லப்படும் கொள்கையையும், அவர்கள் உணர்ச்சி வயப்படும் பொழுது வெளிப்படுத்தும் EXPRESSIONS என்ற செயல்பாடுகளையும்,உணர்ச்சி எனப்படும் மெய்ப்பாட்டிலிருந்து வேறுபட்டக் கூறுகளாகக் கொள்கிறது.

உளவியல் துறை உணர்ச்சிகளை வகைப்படுத்துவதில் ஆர்வம் காட்டாமல் அவைகள் எந்த எல்லைவரை இருந்தால் நன்மை பயக்கும் (ADAPTIVE/ NORMAL) என்றும் எந்த அளவிற்குமேல் உணர்ச்சிகள் மிஞ்சினால் அவை நோய்க்கு (MALADAPTIVE/ EMOTIONAL DISORDER) அறிகுறியாகும் என்பதில் ஆர்வம் காட்டுகிறது. அதன் அடிப்படையில் அந்த நோய்களை எவ்வாறு குணப்படுத்தலாம் என்னும் ஆராய்ச்சியில் விழைகிறது. அதன் அடிப்படையிலேயே மனநல சீரமைப்பில் (MENTAL HEALTH COUNSELLING) ஈடுபடுகிறது.

இவ்வாறு, மெய்ப்பாடுகளை வகைப்படுத்துவதைக் கடந்து, இவ்வுணர்ச்சிகளையே மனிதனின் செயல் பாடுகளுக்கு ஆதாரமாகக் கருதுகிறது. நவீன உளவியலில் மனிதனின் உணர்ச்சிகள் இன்பத்தை நோக்கிப் பயணிக்கவும், துன்பத்திலிருந்து விலகிப் போகவும் மனிதனை செயல் படுத்துகிறது என்ற கருத்து பரவலாக உள்ளது. இதற்கான தூண்டுதல் ஆழ் மனத்திலிருந்தும், இளம் வயது அனுபவத்திலிருந்தும் ஏற்படுகிறது என்று நிலை நாட்டியவர் SIGMUND FREUD (BEYOND PLEASURE PRINCIPAL) என்ற அறிஞர் ஆவார். ஒரு தனி மனிதனின் செயல்பாடுகள் அவனது ஆழ்மனத்தில் ஏற்படும் இன்ப நுகர்ச்சிக்கான விழைவும்,

அவனைச் சுற்றியிருக்கும் நிதர்சனமான உண்மைக்கும் (REALITY) ஏற்படும் ஒரு போராட்டத்தின் ஒரு விளைவாக அவர் காண்கிறார். (4)

FREUDஇன் கருத்துக்களில் சிலவற்றை நவீன உளவியல் ஏற்றுக் கொண்டாலும், பெரும்பாலான அவரது கருத்துக்களை அது போதிய ஆதாரம் இல்லை என்ற காரணத்தால் நிராகரித்துவிட்டது. அவருக்குப் பின் வந்த பல அறிஞர்கள் புதிய கருத்துக்களை அறிவியல் அடிப்படையில் சான்றுகளுடன் நிறுவினார்கள். சமூக உளவியலாளர்கள் (SOCIAL PSYCHOLOGIST) தனி மனித உணர்ச்சிகளை முகத்தில் ஏற்படும் வேறுபாடுகளைக்கொண்டு ஓரளவு வகைப்படுத்தலாம் என சான்றுகளுடன் நிறுவினார்கள். ஆனால் உணர்வுகள் என்பது நிறங்களைப்போல் 1000 வகைகளாக இருப்பதால், அவைகளை பகுப்பதில் எந்தப் பயனும் இல்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். (5)

பின் வந்த பாகுபாடு (VALANCE) கொள்கையைச் சார்ந்தவர்கள் மனிதனின் செயல் பாடுகள் அவன் உள்ளத்திலிருந்து வரும் உணர்ச்சிகளினாலேயே நிச்சயிக்கப்படுகிறது என்றும், மனம் என்பது இன்பத்தை அளிக்கும் பொருள்களை நோக்கியும், துன்பத்தைத் தரக்கூடிய சூழ்நிலைகளிலிருந்து விலக்கியும் மனிதனை நடத்திச் செல்கிறது என்று சான்றுகளுடன் நிறுவினார்கள். (6)

பின் வந்த பரிமாண உளவியல் பிரிவைச் (DIMENSION THEORY) சார்ந்தவர்கள் உணர்ச்சி என்பது சுவை உணர்வு (PERCEPTION AND COGNITION) குறிப்பு (EMOTION) விறல் (BODILY REACTION) என்ற முறையிலும் ஏற்படலாம் அல்லது காட்சிப் பொருளில்லாமல் ஆழ் மன உந்துதலாலும் ஏற்படலாம் எனக் காட்டினார்கள்.

அண்மையில் நரம்பு, மூளை ஆராய்ச்சியாளர்கள் (NEURO SCIENTISTS) அளித்த பங்களிப்பு நவீன உளவியலை புதிய பாதையில் திருப்பியுள்ளது. அவர்களின் ஆராய்ச்சிகளின் முடிவின்படி, எல்லா உணர்ச்சிகளும் ஒரு பொது அடிப்படையான தளத்தைக் கொண்டே இயங்குகின்றன,(LIMBIC SYSTEM) ஒரு உணர்ச்சிக்கும், மற்றொரு உணர்ச்சிக்கும் நரம்பு வலைத்தளத்தைப் பொறுத்தவரை மிகுந்த வேறுபாட்டைக் காணமுடியவில்லை என நவீன இயந்திரங்களின் (MRI, eFMRI) உதவியைக் கொண்டு நிறுவியிருக்கிறார்கள். (7)

உணர்ச்சிகளெல்லாம் சுவைப்பொருள், குறிப்பு அடிப்படையில்தான் ஏற்படுகின்றன என்றும் அவைகளுக்கு மனதில் பதிவு செய்யப்பட்ட நினைவாற்றல் இன்றியமையாதது எனவும் ஆராய்ச்சியின் முடிவாகக் கூறியுள்ளார்கள். (HIPPOCAMPUS, AMYGDALA) இந்த நினைவலைகள் இளமையில் கற்றதினாலோ அல்லது கலாசார அடிப்படையிலோ ஏற்படலாம் என்றும் கருதுகிறார்கள்.

உணர்ச்சிகளை அறிவியல் நோக்கத்தில் பார்ப்பது தேவையா? அதனால் ஏற்படும் நன்மை என்ன என்ற ஒரு கேள்வி எழுகிறது. உணர்ச்சிகளை (மெய்ப்பாடுகள்) மனித வாழ்க்கையின் அடிப்படை மட்டுமல்லாமல் அது மனித வாழ்க்கையின் செயல் பாடுகளுக்கும், மற்றவர்களுக்கு தனது உள்ளக்கிடக்கையை தெரியப்படுத்தவும் உதவும் ஒரு கருவியாகவும் (Instrument of communication) எல்லா கலாச்சாரங்களும் அறிந்திருந்தன. ஆனால் அந்த மெய்ப்பாடுகள் அளவுக்கு மீறி பெருக்கெடுக்கும் போது அந்த மனிதனை வாழ்க்கைக்குத் தேவையான செயல்பாடுகளில் ஈடுபட முடியாமல் தடுத்து அவனது உயிருக்கே ஊறு விளைவிக்கும் நிலைக்குத் தள்ளிவிடுகிறது. அவ்வாறான தருணங்களில்

அவனை எவ்வாறு காப்பாற்றுவது என அறிவதற்கு ,அறிவியல் பார்வையுடன் மெய்ப்பாடுகளை அணுகுவது இன்றியமையாத ஒன்றாகிறது.

இதன் அடிப்படையிலேதான் மன நலம், மன நோய் என்ற கோட்பாடுகள் தோன்றத் தொடங்கின. மன அழுத்த நோய் (DEPPRESSION) பதட்ட நோய்(ANXIETY) கட்டுபடுத்த முடியாத கோபம் (POOR ANGER CONTROL) போன்ற பலவிதமான இடையூறுகள் இன்று சமுதாயத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து மனித சமுதாயத்தை மீட்பதற்கு அறிவியல் நோக்கு தேவைபடுகிறது.

ஒரு ரசிகன் ஒரு அழகிய மலரைப் பார்க்கும் போது ஏற்படும் பரவசம் அதே பூவை ஒரு தாவரக்கலை ஆராய்ச்சியாளன் அறிவுப்பாதையில் நோக்கினால், அவனுக்கும் அதே பரவசம் தோன்றுமா? நிச்சயமாக இருக்காது.மெய்ப்பாடுகளை அறிவு பூர்வமாக பார்க்கவேண்டும் என்ற தேவையிருந்தாலும், அவைகளைக் கலைக்கண்ணுடன் பார்ப்பதிலிருந்து முற்றிலும் விலகிவிடுவது எந்த சமூகத்திற்கும் நன்மை பயக்காது. தமிழர்கள் மெய்ப்பாடுகளை இந்த காரணத்திற்காகத்தான் ஆரய்ச்சி நோக்கத்தில் பார்க்கவில்லையா என்ற கேள்விக்கு இலக்கியங்களில் விடை தேடுவது கட்டாயமாகிறது.

இ. ஒப்பீடு

நாம் இதுகாறும் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலின் பொதுத்தன்மையையும், நவீன உளவியல்துறையின் பின்புலத்தையும், நடைமுறைக் கொள்கைகளையும்,தேவையையும் பார்த்தோம். இனி இவைகளை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

மெய்ப்பாட்டியல் நவீன உளவியல்

1. 2500 ஆண்டுகள் பழமையானது 150 ஆண்டுகளாகவே வழங்கிவருகிறது
2. இலக்கண நூலில் வைக்கப்பட்டுள்ளது அறிவியல் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது
3. மெய்ப்பாட்டின் வரையரை தெளிவாக மெய்ப்பாட்டைத் தெளிவாக வரையறுக்கிறது.
1. இருந்தும் அவை 96,64,32 &8 என பலவாறாக உள்ளன.
4. உணர்ச்சிகள், தன்மை, கொள்கை, செயல்பாடு அவைகள் தனித்தனியாகப் பார்க்கப்படுகின்றன
2. எல்லாம் மெய்ப்பாடு என்றே கொள்ளப்படுகிறது
5. பேச்சு வழக்கு,செய்யுள் வழக்கு,இவற்றுடன் உணர்ச்சிகளின் தோற்றம், பயன் பற்றி
3. நாடக வழக்கை இணத்து, கூத்தும் செய்யுளும் ஆராய்ந்து மனநல மருத்துவம், விற்பனை, செய்பவர்களுக்காக இலக்கண நூலில் வைக்கப் அரசியல் போன்ற துறைகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது; படுகிறது.
4. உணர்ச்சியின் வெளிப்பாட்டில் ஒருவருக்கும் எல்லோரும் ஒரே சூழ்நிலையில் ஒரே
5. மற்றொருவருக்கும் வேறுபாட்டை ஒதுக்கி அதை அளவில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது
6. எல்லோருக்கும் சமம் எனக் கருதுகிறது இல்லை என்ற கருத்தில் செயல் படுகிறது
6. அதிகமான உணர்ச்சிப் பெருக்கையும், ஒவ்வாத வாழ்க்கைக்கு ஒவ்வாத (MAL ADAPTIVE)
7. உணர்ச்சிகளைப்பற்றியும் குறிக்கப்படவில்லை. உணர்ச்சிகளையும், அது எப்போது நோய் குறியாகிறது என்பதில் அதிக கவனம் செலுத்துகிறது.

வேற்றுமைகள் இருந்தாலும், இவைகளுக்குள் ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. மெய்ப்பாடு என்பதற்கு தொல்காப்பியர் வகுத்த வரைமுறையையே நவீன உளவியலும் பயன் படுத்துகிறது.

தொல்காப்பியர் மெய்ப்பாடுகளை வகுத்து வரையறுக்க முற்பட்டாலும், அதை எட்டு என்று முதலில் கூறியவர், பின்னர் அதனை விரித்து தொண்ணூற்று ஆறுவரை எடுத்துச் செல்லுகிறார். நவீன உளவியலும் அவைகளை வகுப்பதும் தொகுப்பதும் இயலாத காரியம் என்றே கருதி அதை வகைப்படுத்துவதில் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

இருப்பினும் ஒவ்வொரு உணர்ச்சிக்கும் முகபாவம் வேறு படுகிறது என்பதையும் மேலும் அது உலகம் முழுதும் பொதுவாக உள்ளது என்பதையும் அது ஏற்றுக்கொள்கிறது.

ஈ. முடிவுரை

ஏறத்தாழ 2500 வருடங்களுக்கு முன், பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு இவற்றுடன் நாடக வழக்கை இணைத்து கூத்தும் செய்யுளும் செய்பவர்களுக்காக இலக்கண நூலில் வைக்கப்பட்ட மெய்ப்பாட்டு இயலை, ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக அறிவியலையும், ஆராய்ச்சியையும் மையமாக வைத்துத் தொடங்கிய நவீன உளவியலுடன் ஒப்பிடுவது எப்படி முறையாகும் என்ற ஒரு கேள்வி எழும்.

தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல் மட்டும் அல்ல. அது ஒரு வாழ்வியல் நூல், பண்பாட்டுப் பெட்டகம். அதற்கும் மேலாக அது ஒரு உளவியல் நூலும் ஆகும். ஒரு ஆணும் பெண்ணும் காதல் வயப்படும் போதும், ஊடல் ஏற்படும் போதும், பிரிவுத் துயரில் வாடும் போதும் அவர்களது உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளையும் அவர்களது உடல்களில் ஏற்படும் மாற்றங்களையும் துல்லியமாக எழுத வேண்டும் என்றால் அதற்கு ஆசிரியர் உளவியலை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

தமிழர்கள் உளவியலை 2500 ஆண்டுகளுக்கு முன்னமேயே நன்கு அறிந்திருந்தார்கள் என்றால் அதைப்பற்றிய தொடர்ஆராய்ச்சியும், வளர்ச்சியும் எங்கும் காணப்படாதது ஏன் என்ற கேள்வி எழுகிறது. தமிழகத்தில் மட்டும் இல்லாமல் மற்ற நாடுகளிலும், கலாச்சாரங்களிலும் ஏன் இவ்வாறான ஆராய்ச்சிகள் அண்மைக்காலம் வரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது வியப்பை அளிக்கிறது.

அவ்வாறு ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு, வெகு தொலைவில், மாறுபட்ட கலாச்சாரத்தில் அண்மையில் தொடங்கிய இந்த நவீன உளவியல் நம் தொல்காப்பியர் காலத்து உளவியலிலிருந்து வேறுபடுகிறதா அல்லது, அது தொல்காப்பியர் காலத்து உளவியலின் நீட்சியா என அறிந்து கொள்வது ஒரு கட்டாயமாகிறது. அப்படிப்பார்த்தால் இவ்விரண்டையும் ஒப்பிட்டுப்பார்ப்பது ஒரு முறையான செயலே.

மெய்ப்பாடு என்பதற்கு தொல்காப்பியர் கூறிய வரைமுறை (DEFINITION)தான் இன்றும் செயல்பாட்டில் இருக்கிறது. ஒவ்வொரு மெய்ப்பாடின் போதும் முகத்திலும், உடலிலும் ஏற்படும் மாற்றங்களாகத் தொல்காப்பியர் கூறியிருப்பதை நவீன உளவியல் பலவித ஆராய்ச்சிகளுக்குப் பிறகு, பெரும்பாலும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தொல்காப்பியர் சொல்லியதுபோல,மெய்ப்பாடுகள் சுவைப்பொருள், சுவையுணர்வு,குறிப்பு, விறல் என்ற கூறுகளை உடையது என்பதையும் நவீன உளவியல்

ஏற்றுக்கொள்கிறது. அக்கூறுகள் இல்லாமலும் மெய்ப்பாடுகள் ஆழ் மனத்திலிருந்தும் தோன்றும் என்ற நவீன உளவியலின் கருத்து ஒரு நீட்சியே அல்லாமல் முரண் அல்ல.

மெய்ப்பாடு தோன்றுவதற்கு நிலைக்களங்கள் தேவை என்பதை தற்கால உளவியல் ஏற்றுக்கொள்கிறது ஆனால், ஒரு குறிப்பிட்ட நிலைக்களத்தில் ஒரு குறிப்பிட்ட மெய்ப்பாடுதான் தோன்றும் என்பதை அது ஏற்றுக்கொள்ளாவிடினும் ,அது கலாச்சார அடிப்படையில் உண்மையாக இருக்கலாம் என ஏற்றுக்கொள்கிறது. அவ்வகையில் தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளும், அவைகள் உண்டாகும் நிலைக்களங்களும் அவர் வாழ்ந்த கலாச்சாரத்திற்குப் பொருந்தியது என்பதை நாம் எளிதாக ஏற்றுக்கொள்ளலாம்.

நவீன உளவியல் என்பது அறிவியல் வளர்ச்சியின் துணையாலும், ஆராய்ச்சியின் உதவியாலும், தொழில் நுட்பத்தின் வளர்ச்சியாலும் பல புதிய கருத்துக்களை ஏற்று ஒரு பரிணாம வளர்ச்சியை ஒரு குறுகிய காலத்தில் எட்டியிருக்கிறது. இருப்பினும் இதன் ஆதாரமாக உள்ள கருத்துக்கள் நம் பண்டைய நூலான தொல்காப்பியத்திற்கு முரணாக இல்லாமல் ஒரு நீட்சியாகத்தான் தெரிகிறது.

இந்த ஒரு சிறு ஒப்பீட்டின் மூலம் இவ்வளவு கருத்துக்களை அறிய முடிகிறது என்றால், தொல்காப்பியத்தையும், உளவியல் பற்றிக் கூறும் பல தமிழ் நூல்களையும், ஆழமாகப்படித்தால் தமிழர் பெற்றிருந்த உளவியல் அறிவையும் அதற்கும் இன்று உலகெங்கும் பயன்பாட்டில் இருக்கும் நவீன உளவியலுக்கும் உள்ள தொடர்பை மேலும் நன்கு அறிந்துகொள்ளலாம்.

துணைநூல் பட்டியல்

1. Psychology of emotions--- Paul Ekman and Robert Plutchik 1990
2. The organisation and integration of emotions -- D.Barnett,H.H.Ratner, Journal of DevelopmentalPsychology 1997, 3.
3. Evolutionary approach that highlights brain plasticity --- D.Lord Smail, Berkeley,University of California Press 2008.
4. Beyond pleasure principles ---- Dr.Sigmund Freud
5. Moreland and Zajonc 1980, Zajonc 1982
6. Kurt Lewin 1935, Principles of Valence theory, Nico H Frijda, Cambridge University Press1986, page 207
7. Adolphs, Tranel,& Damasio 1998.

தொ.மா.க. 159

தொல்காப்பியத்தில் விஞ்ஞானம்

சிவ ஞானநாயகன்
பொறியியலாளர்,
கனடிய மத்திய அரசின் பாதுகாப்பு நிர்மாணத்துறை, கனடா
asgnanam@Gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இற்றைக்கு 2,734 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் என்ற நூலுக்கு, இதுவரை உரை எழுதியவர்கள் எல்லோருமே அதை இலக்கண நூலாகவே கருதி உரை எழுதியுள்ளனர். இக்கட்டுரையில், தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் மட்டும் அல்ல, அதில் காலக்கணிதம் சம்பந்தப்பட்ட பல விஞ்ஞானக் கருத்துகள் அடங்கியுள்ளன என ஆராயப்படுகிறது.

நிலம் (இடம்), பொழுது (காலம்) ஆகியவற்றின் இயல்பை உணர்ந்தோரான, காலக்கணிதத்தில் அறிவுடையவரே நிலமும், பொழுதும் முதலில் ஒன்றாக உருவாகியமை பற்றி அறிந்து விளக்கும் ஆற்றல் பெற்றவர் (தமிழ் அறிஞர் அல்ல), என்று தொல்காப்பியர் ஆவணப்படுத்தியிருக்கிறார். இடமும் காலமும், இற்றைக்கு 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு புள்ளியிலிருந்து பெரு வெடிப்புடன் (Big Bang) ஆரம்பமானது என்று தற்கால விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தொல்காப்பியர் பொ.ஆ.மு 711இல், உலகம் நிலம், தீ, நீர், வளி, மற்றும் வெளி ஆகிய ஐம்பூதங்கள் கலந்த மயக்கம் என்கிறார். கிரேக்கர்கள் பொ.ஆ.மு 450இல், உலகம் நிலம், தீ, நீர், வளி ஆகிய நான்கு மூலகங்களால் ஆனது என்றனர். அரிஸ்ரோட்டில் பொ.ஆ.மு 350இல் வெளியைச் அத்துடன் சேர்த்து, உலகம் ஐந்து மூலகங்களால் ஆனது என்றார்.

உலகம் உருவாகி, குளிர்ச்சி அடைந்த பின்னர் தோன்றிய ஐந்துவகை நிலங்களைப் பற்றி தொல்காப்பியர் கூறுகிறார். இதில் அவர் தான் வாழ்ந்த ஊரிலோ, நாட்டிலோ, உள்ள நிலங்கள் என்று கூறாமல், “உலகம்” என்று பூமி முழுவதிலும் உள்ள நிலங்களை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் மற்றும் பாலை என ஐந்தாக வகுக்கிறார்.

தொல்காப்பியர் நிலங்களை ஐந்துவகையாக பிரித்த பின்னரே, அதே வரிசையில் பொழுதுகளைப் பிரிக்கிறார். அவர் கூறிய ஒர் ஆண்டின் ஆறு பெரும் பொழுதுகளையும் அப்போதைய தமிழ் மாதங்களுடன் ஒப்பிட்டால் (உருவம் 1), அவை இளவேனிற் காலம் (சித்திரை, வைகாசி) இல் தொடங்கி, பின்பனிக் காலம் (மாசி, பங்குனி) வரை செல்லும். இங்கு முக்கியமாக, முடிவு நிலையாக பின்பனிக் காலத்தைக் (மாசி, பங்குனி) கூறுகிறார். அதாவது, இந்த ஆறு பெரும் பொழுதுகளிலும், பின்பனிக் காலமே, பங்குனி மாதமே இறுதியானது என்கிறார். இதன் மூலம், இளவேனிற் காலமான சித்திரை மாதமே ஆறு பெரும் பொழுதுகளிலும் முதலாவது என்கிறார். இதுவும், தமிழ் காலக்கணிதத்தில், சூரியன் மேட இராசிக்குச் செல்லும் சித்திரை மாதத்தில் தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதுடன் ஒத்துப்போகிறது.

அக்காலத்தமிழ் காலக்கணிப்பின்படி, சூரியன் வடக்கு நோக்கி செல்லும் போது, அது பூமியைச் சரி பாதியாக ஊடறுத்துச் செல்லும் பூமத்திய ரேகைக்கு (மேட இராசியின்

தொடக்கப்புள்ளிக்கு) வரும் நாளே சித்திரையின் முதலாம் நாள் (உருவம் 2). இவ்வாறு சூரியன் பூமியைச் சரி பாதியாக ஊடறுத்துச் செல்லும் பூமத்தியரேகைக்கு வரும் நாளே சித்திரையின் முதலாம் நாளாகவும், தமிழ்ப் புத்தாண்டாகவும், இளவேனிற்காலத்தின் ஆரம்பமாகவும், பூமியில் சம இரவு பகல் நாளாகவும் அக்காலத்தில் கொண்டாடப்பட்டது.

முன்னுரை

இற்றைக்கு 2,735 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் என்ற நூலுக்கு இதுவரை உரை எழுதியவர்கள் எல்லோருமே அதை ஓர் இலக்கண நூலாகவே கருதி உரை எழுதியுள்ளனர். இக்கட்டுரையில், தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் மட்டும் அல்ல, அதில் காலக்கணிதம் சம்பந்தப்பட்ட பல விஞ்ஞானக் கருத்துகள் அடங்கியுள்ளன என ஆராயப்படுகிறது. இதன் மூலம், தொல்காப்பியர் ஓர் இலக்கண நூலாசிரியர் மட்டுமல்ல, அவர் காலக்கணிதம் மற்றும் வானவியல் போன்ற விஞ்ஞான அறிவையும் கொண்டிருந்தவர் என நிறுவப்படுகிறது. இதற்கு தொல்காப்பிய நூற்பாக்கள் எடுத்து விளக்கப்படுகிறது.

தொல்காப்பியம் தற்காலத்தில் கிடைக்கப்பெற்ற தமிழ் நூல்களில் மிகப்பழமையானதாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியர் வாழ்ந்த காலத்தைப் பற்றி ஆய்வாளர்களால் ஒருமித்த கருத்திற்கு வரமுடியவில்லை. இந்நிலையில், செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் வேறு பல நிறுவனங்களுடன் சேர்ந்து, ஓர் ஆராய்ச்சிக் கருத்தரங்கை 2010ஆம் ஆண்டில் நடத்தி, தொல்காப்பியர் பொ.ஆ.மு. 711ஆம் ஆண்டு சித்திரை முழுமதி நாளில் மறைந்தவர் எனத் தீர்மானித்தனர்.

தொல்காப்பியம் 1,611 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. அவை எழுத்ததிகாரம் (483), சொல்லதிகாரம் (463), மற்றும் பொருளதிகாரம் (664) என மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் நாம் பொருளதிகாரம் பற்றியே ஆய்வு செய்யப்போகிறோம். பொருளதிகாரம் தமிழ் மக்களின் வாழ்வியலைப் பற்றிக் கூறுகிறது.

தொல்காப்பியத்திற்கு ஆறு பண்டைய உரையாசிரியர்கள் இருந்தனர். அவர்கள் இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் மற்றும் கல்லாடனார் ஆவர் எனச் சரித்திர ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் இளம்பூரணர் (பொ.ஆ, 11ஆம் நூற்றாண்டு), பேராசிரியர் (பொ.ஆ, 12ஆம் நூற்றாண்டு), மற்றும் நச்சினார்க்கினியர் (பொ.ஆ, 14ஆம் நூற்றாண்டு), ஆகிய மூவர் மட்டுமே பொருளதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளனர். இளம்பூரணரிற்கு முன்பும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதப்பட்டிருந்தது என ஆய்வுகள் கூறினாலும், அவ்வாறான எவ்வுரையும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. பொ.ஆ.மு. 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியத்திற்கு எமக்குக் கிடைத்துள்ள ஆகப் பண்டைய உரை, இளம்பூரணர் பொ.ஆ, 11ஆம் நூற்றாண்டில் எழுதியதாகும். அதாவது தொல்காப்பியத்திற்கு எமக்குக் கிடைத்துள்ள ஆகப் பண்டைய உரை தொல்காப்பியம் எழுதி அண்ணளவாக 2,000 ஆண்டுகளுக்கு பிறகு எழுதப்பட்ட உரையாகும்.

எமக்குக் கிடைத்துள்ள சரித்திரச் சான்றுகளின்படி, பொருளதிகாரத்திற்கு உரை எழுதியுள்ள மூவருமே தமிழ் இலக்கணத்தில் பாண்டித்தியம் பெற்றவர்கள் மற்றும் பெரும் புலவர்கள் ஆவர். வேறு பல தமிழ் நூல்களுக்கும் அவர்கள் உரை எழுதியுள்ளனர். ஆனால் இவர்கள் காலக்கணிதம், வானவியல் போன்ற விஞ்ஞானத்தில் அறிவுடையவர்கள் எனச்

சரித்திரச் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. இதனாலேயே இவர்கள் தொல்காப்பியத்தை ஓர் இலக்கணநூலாகவே கருதி உரை எழுதியுள்ளனர். இவர்களால் அதில் உள்ள காலக்கணிதம் சம்பந்தப்பட்ட பல விஞ்ஞானக் கருத்துகளை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை.

பொருளதிகாரத்தில் உள்ள பின்வரும் நூற்பாவைப் பார்ப்போம்.

> "*முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்*
> *இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே.*"
> *-தொல். பொருள். அகத்திணையியல் 4.*

முதலில் யார் இந்நூற்பாவைப் பற்றிக் கருத்துச் சொல்லக்கூடியவர் எனப் பார்க்கவேண்டும். 'இயல்பு உணர்ந்தோர்' தான் நிலம், பொழுது இரண்டினதும் இயல்பு 'முதல்' எனச் சிறப்பித்துக் கூறுவர் என்கிறார் தொல்காப்பியர். அவர் ஒரு தமிழறிஞரோ, அல்லது ஒரு தமிழ்ப் புலவரோ இவ்வாறு சொல்லுவர் எனக் கூறவில்லை. நிலம் (இடம்) மற்றும் பொழுது (காலம்) ஆகியவற்றின் இயல்பை உணர்ந்தோரான காலக்கணிதத்தில் அறிவுடையவரோ, அல்லது வானவியலாளரோ தான் நிலமும் பொழுதும் முதலாவதாக உருவாகின என அறிந்து கூறுவர் என்கிறார் தொல்காப்பியர்.

இங்கு நாம் கவனிக்கவேண்டியது, மற்றைய இடங்களில் எல்லாம் 'என்மனார் புலவர்' எனக் கூறுபவர், ஏன் இங்குமட்டும் 'நிலம், பொழுது இரண்டினதும் இயல்பு உணர்ந்தோர்' என்று கூறுகிறார்?

ஏன்எனில் மற்றைய இடங்கள் எல்லாம் இலக்கணம் சம்பந்தப்பட்ட இடங்கள். புலவர்களால் விளக்கப்படக் கூடியவை. ஆனால் இவ்விடம் வானவியல் சம்பந்தப்பட்டது. நிலம், பொழுது இரண்டினதும் இயல்பு உணர்ந்த, காலக்கணிதத்தில் அறிவு உடையவர்களால் மட்டுமே விளக்கமுடியும் என்கிறார் தொல்காப்பியர்.

இடமும் காலமும், இற்றைக்கு 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு புள்ளியிலிருந்து பெரு வெடிப்புடன் (Big Bang) ஆரம்பமானது என்று தற்கால விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்தப் பெரு வெடிப்புக் கொள்கையை George Lemaitre என்ற பெல்ஜிய நாட்டு வானவியலாளர் பொ.ஆ 1931இல் உலகிற்கு முதன் முதலில் தெரியப்படுத்தியவர். இவர் கத்தோலிக்க மதப்பாதிரியாரும் அமெரிக்காவின் Massachusetts Institute of Technologyஇல் பௌதீகவியலில் முனைவர் பட்டம் பெற்றவரும் ஆவார்.

விஞ்ஞானிகளால் இற்றைக்கு 93 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடித்த கொள்கையை, தொல்காப்பியர் இற்றைக்கு 2,735 ஆண்டுகளுக்கு முன்னரே ஆவணப்படுத்தியிருக்கிறார். அத்துடன் நிலமும், பொழுதும் முதலில் ஒன்றாக உருவாகியமை பற்றி அறிந்து விளக்கும் ஆற்றல் பெற்றவர் காலக்கணிதத்தில் அறிவுடையவர், (தமிழ் மொழியில் வல்ல அறிஞர் அல்ல), என்றும் தொல்காப்பியர் ஆவணப்படுத்தியிருக்கிறார்.

நிலம் மற்றும் பொழுது முதல் ஆரம்பமானது எனக் கூறிய பின்னர் தொல்காப்பியர், எமது ஞாயிற்றுத்தொகுதி உருவாகிய 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் வருகிறார். பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்களைப் பார்ப்போம்.

> *நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்*
> *கலந்த மயக்கம் உலகம் ஆதலின் -தொல். பொருள். மரபியல் 91 (635).*

தொல்காப்பியர். பொ.ஆ.மு 711இல் உலகம் நிலம், தீ, நீர், வளி மற்றும் வெளி ஆகிய ஐம்பூதங்கள் கலந்த மயக்கம் என்கிறார். கிரேக்கர்கள் பொ.ஆ.மு 450இல் உலகம் நிலம், தீ, நீர், வளி ஆகிய நான்கு மூலகங்களால் ஆனது என்றனர். அரிஸ்ரோட்டில் (பொ.ஆ.மு 384 - 322) வெளியைச் (ஈதர் - aether) அத்துடன் சேர்த்து உலகம் ஐந்து மூலகங்களால் ஆனது என்றார்.

நிலம்

உலகம் உருவாகி, குளிர்ச்சி அடைந்த பின்னர் தோன்றிய ஐந்துவகை நிலங்களைப் பற்றி தொல்காப்பியர் கூறுகிறார்.

> *"மாயோன் மேய காடுறை உலகமும்*
> *சேயோன் மேய மைவரை உலகமும்*
> *வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
> *வருணன் மேய பெருமணல் உலகமும்*
> *முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்*
> *சொல்லிய முறையான் சொல்லவும் படுமே."*
> *-தொல். பொருள். அகத்திணையியல் 5.*

தொல்காப்பியர் தான் வாழ்ந்த ஊரிலோ, நாட்டிலோ உள்ள நிலங்கள் என்று கூறாமல், 'உலகம்' என்று பூமி முழுவதிலும் உள்ள நிலங்களை வகுக்கிறார். திருமால் (மாயோன்) வதியும் காடும் காடு சார்ந்த இடம் முல்லை நிலம். முருகன் (சேயோன்) வதியும் மலையும் மலை சார்ந்த இடம் குறிஞ்சி நிலம். இந்திரன் (வேந்தன்) வதியும் வயலும் வயல் சார்ந்த நன்நீர் நிலைகள் உள்ள இடம் மருத நிலம். பின்னர், வருணன் வதியும் கடலும் கடல் சார்ந்த இடம் நெய்தல் நிலம் என்று நிலங்களை முதலில் நான்காக வகுத்து, பின்னர் ஐந்தாவது நிலமான பாலை (நடுநிலைத் திணை - அகத்திணையியல் 11) எனப்படும் மணலும் மணல்சார்ந்த இடத்தைச் சேர்க்கிறார் தொல்காப்பியர்.

பொழுது

இவ்வாறு நிலத்தை ஐந்தாக வகுத்தபின்னர், தொல்காப்பியர் பொழுதை ஆறு பெரும் பொழுதுகளாகவும், ஆறு சிறு பொழுதுகளாகவும் வகுக்கிறார். அதாவது, ஓர் ஆண்டை ஆறு பெரும் பொழுதுகளாகவும், ஒரு நாளை ஆறு சிறு பொழுதுகளாகவும் பிரிக்கிறார். பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்களைப் பார்ப்போம்.

> *"காரும் மாலையும் முல்லை" - அகத்திணையியல் 6*
> *"குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்" - அகத்திணையியல் 7*
> *"பனி எதிர் பருவமும் உரித்து என மொழிப" - அகத்திணையியல் 8*
> *"வைகறை விடியல் மருதம்" - அகத்திணையியல் 9*
> *"ஏற்பாடு நெய்தல் ஆதல் மெய் பெறத் தோன்றும்"-அகத்திணையியல் 10*
> *"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு*
> *"முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே"-அகத்திணையியல் 11*
> *"பின்பனிதானும் உரித்து என மொழிப." - அகத்திணையியல் 12*

இங்கு கவனிக்கவேண்டியது அவர் நிலங்களை ஐந்துவகையாக முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், மற்றும் பாலை என அகத்திணையியல் 5இல் பிரித்தபின்னரே, அகத்திணையியல் 6இல் இருந்து 12வரை பொழுதுகளைப் பிரிக்கிறார். இதனால், அவர் இதையும் அதே வரிசையில் தொடருகிறார்.

அகத்திணையியல் 6
முல்லை: பெரும்பொழுது: கார்காலம் சிறுபொழுது: மாலை
அகத்திணையியல் 7
குறிஞ்சி: பெரும்பொழுது: கூதிர்காலம் சிறுபொழுது: யாமம் (நள்ளிரவு)
அகத்திணையியல் 8
குறிஞ்சி: பெரும்பொழுது: முன்பனிக்காலம் சிறுபொழுது: யாமம்
அகத்திணையியல் 9
மருதம்: பெரும்பொழுது: இல்லை சிறுபொழுது: வைகறையும் விடியலும்
அகத்திணையியல் 10
நெய்தல்: பெரும்பொழுது: இல்லை சிறுபொழுது: ஏற்பாடு
அகத்திணையியல் 11
பாலை: பெரும்பொழுது: இளவேனிற்காலம் சிறுபொழுது: நண்பகல்
பாலை: பெரும்பொழுது: முதுவேனிற்காலம் சிறுபொழுது: நண்பகல்

முடிவு நிலையாக

அகத்திணையியல் 12
பாலை: பெரும்பொழுது: பின்பனிக்காலம் சிறுபொழுது: நண்பகல்

தொல்காப்பியர் கூறிய ஓர் ஆண்டின் ஆறு பெரும் பொழுதுகளையும்
அப்போதைய தமிழ் மாதங்களுடன் ஒப்பிட்டால், அவை பின்வருமாறு:
இளவேனிற் காலம் = சித்திரை, வைகாசி
முதுவேனிற் காலம் = ஆனி, ஆடி
கார்காலம் = ஆவணி, புரட்டாசி
கூதிர்காலம் = ஐப்பசி, கார்த்திகை
முன்பனிக்காலம் = மார்கழி, தை
பின்பனிக்காலம் = மாசி, பங்குனி (உருவம் 1)

பெரும் பொழுதுகள்

இங்கு முக்கியமாக தொல்காப்பியர் ஓர் ஆண்டின் ஆறு பெரும் பொழுதுகளைப் பிரிக்க, அக்காலத்தில் வழக்கில் இருந்த மாதங்களின் பெயரைப் பாவிக்காமல், காலநிலையைக் குறிக்கும் காலங்களையே பாவித்துள்ளார். அதற்கு மிகவும் முக்கியமான விஞ்ஞான விளக்கம் இருக்கிறது. அதை பின்னொரு இடத்தில் பார்ப்போம்.

பாலை (நடுநிலைத் திணை) நிலத்திற்கு, இளவேனிற் காலம் மற்றும் முதுவேனிற் காலத்துடன், முடிவு நிலையாக பின்பனிக் காலமும் (மாசி, பங்குனி) உரித்து என்கிறார். அதாவது இந்த ஆறு பெரும் பொழுதுகளிலும் பின்பனிக் காலமே (பங்குனி மாதமே) இறுதியானது என்கிறார் தொல்காப்பியர். இதன்மூலம் இளவேனிற் காலமே (சித்திரை மாதமே) ஆறு பெரும் பொழுதுகளிலும் முதலாவது என்கிறார்.

இது தமிழ் காலக்கணிதத்தில், சூரியன் மேட இராசிக்குச் செல்லும் சித்திரை மாதத்தில் தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதுடன் ஒத்துப்போகிறது. தொல்காப்பியர் நிலங்களை ஐந்துவகையாக அகத்திணையியல் 5இல் பிரித்தபின்னரே, அதே வரிசையில் அகத்திணையியல் 6இல் இருந்து 12வரை பொழுதுகளைப் பிரிக்கிறார் என்பதை விளங்கிக்கொள்ளாத சிலர், தொல்காப்பியர் அகத்திணையியல் 6இல் கார்காலத்தில் (ஆவணி, புரட்டாசி) ஆரம்பித்தபடியால், அக்காலத்தில் ஆவணி மாதமே ஆண்டின் தொடக்கமாக இருந்தது எனத் தவறாகக் கூறுவர். அவர்கள் தொல்காப்பியத்தில், அகத்திணையியல் 11இல் முதுவேனிற்காலத்திற்குப் (ஆனி, ஆடி) பின்னர், அகத்திணையியல் 12இல் பின்பனிக்காலம்

(மாசி, பங்குனி) வருவதற்கு விளக்கம் கூறுவதில்லை. தொல்காப்பியர், அக்காலத்தில் ஆண்டின் தொடக்கமாக இருந்த ஆவணி மாதத்தில் ஆரம்பித்து, வரிசையாகத் தொடருகிறார் என்றால், அகத்திணையியல் 6இல் இருந்து 12வரை வந்த மாதங்களின் வரிசை, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாசி, பங்குனி என்றல்லோ ஓர் ஆண்டின் மாதங்கள் வரவேண்டும்.

அதேபோல், அகத்திணையியல் 10இல் ஏற்பாடு வந்தபின்னர், அகத்திணையியல் 11 அதற்கு முந்திய நேரமான நண்பகல் வருவதற்கு விளக்கம் கூறுவது இல்லை. அதாவது, தொல்காப்பியர் மாதங்களின் (பொழுதுகளின்) வரிசையில் கூறவில்லை, ஐந்துவகை நிலங்களின் வரிசையிலேயே கூறினார் என்பது தெளிவு.

தொல்காப்பியர் ஆவணி மாதத்தில் ஆரம்பித்து, வரிசையாகத் தொடருகிறார் என்று கூறுபவர்கள், இளம்பூரணர் உரையையும் நச்சினார்கினியர் உரையையும் தமக்கு சார்பாக உதாரணம் காட்டுவர். ஆகப் பண்டைய உரையாசிரியர் இளம்பூரணர், அக்காலத்தில் ஆவணி மாதமே ஆண்டின் தொடக்கம் என அவரது உரையில் கூறவில்லை.

இளம்பூரணரிற்கு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வந்த உரையாசிரியர் நச்சினார்க்கினியர், அகத்திணையியல் 6இற்குரிய தனது உரையில் “இக்காலங்கட்கு விதந்து ஓர் பெயர் கூறாது வாளா கூறினார், அப்பெயர் உலகவழக்கமாய் அப்பொருள் உணரநிற்றலின்” என்கிறார். அதாவது, உலகவழக்காக யாவரும் அறிந்த செய்தி என்பதால், தொல்காப்பியர் விரித்துக் கூறாமல் நூற்பாவாகச் சுருக்கமாகக் கூறிவிட்டார் என்று இந்த தொல்காப்பிய நூற்பாவிற்கு விளக்கம் கூறினார். அதாவது நச்சினார்க்கினியரும், அக்காலத்தில் ஆவணி மாதமே ஆண்டின் தொடக்கம் என தொல்காப்பியர் கூறியதாக அவரது உரையில் கூறவில்லை. அவர் தொல்காப்பியர் 2200 ஆண்டுகளுக்கு முன்பிருந்த உலகவழக்கை தனது நூற்பாவில் கூறியிருக்கலாம் என்றுதான் தனதுரையில் விளக்கம் கூறினார், ஆனால் பின்னர், தனது சொந்த விளக்கமாக, “கால வுரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடகவோரையீறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாதலின், அதனை இம்முறையானே அறுவகைப் படுத்து இரண்டு திங்கள் ஒரு காலமாக்கினார்” என்று கூறுகிறார். இங்கு இவரின் சோதிட அறிவு தெரிகிறதே தவிர, காலக்கணிதம் பற்றிய விஞ்ஞானஅறிவு தெரியவில்லை.

சிங்க இராசி (சிங்கவோரை) முதலாக கற்கடக இராசி (கற்கடகவோரை) ஈறாக முடியுந்துணை ஓர் ஆண்டு என்பதில்தான் நச்சினார்க்கினியருக்கு, காலக்கணிதம் பற்றிய போதிய விஞ்ஞானஅறிவு இல்லை என்பது தெரியவருகிறது. ஞாயிற்றின் ஆட்சிவீடு சிங்க இராசி என்பதும், சந்திரனின் ஆட்சிவீடு கற்கடக இராசி என்பதும் சோதிடத்தில் தான் கூறப்படுகிறது.

விஞ்ஞானத்தில், முதலில் மேடராசியை அடையாளம் கண்டு கணித்தபின்னரே, ஏனைய இராசிகளின் ஆரம்பப் புள்ளிகளை பாகையில் கணிக்கலாம். தொல்காப்பியர் முடிவு நிலையாக (அகத்திணையியல் 11, 12) பின்பனிக் காலத்தைக் (மாசி, பங்குனி) கூறுவதன் மூலம், ஓராண்டின் முடிவு மாதம் பங்குனி என்கிறார். இதனால் இளவேனிற் காலமே ஆறு பெரும் பொழுதுகளிலும் முதலாவது என்கிறார். அதாவது, சித்திரை மாதமே ஓராண்டின் முதல் மாதம் என்கிறார். இவ்வாறு தெளிவாகத் தொல்காப்பியர் இற்றைக்கு 2,735

ஆண்டுகளுக்கு முன்னர் கூறியது அக்காலத் தமிழ் காலக்கணிப்புப் பற்றித் தொல்காப்பியர் அறிந்துள்ளார் என்பதைக் காட்டுகிறது.

காலக்கணிதம்

அக்காலத்தமிழ் காலக்கணிப்பின்படி, சூரியன் வடக்கு நோக்கி செல்லும் போது, அது பூமியைச் சரி பாதியாக ஊடறுத்துச் செல்லும் பூமத்திய ரேகைக்கு வரும் நாளே சித்திரையின் முதலாம் நாள். (உருவம் 2 & 3)

அதாவது, சூரியன் சரியாகப் பூமியின் நடுவில் வரும்போது தமிழ்ப்புத்தாண்டு பிறக்கிறது. இந்த வானவியல் நிகழ்வை அடையாளப்படுத்த சூரியன் இவ்வாறு வரும்போது அதன் பின்னால் தெரிந்த நிலையான நட்சத்திரக் கூட்டமாகிய மேட இராசியின் தொடக்கப்புள்ளிக்குச் சூரியன் வருவதைக் கண்டு, அப்போது தமிழ்ப்புத்தாண்டு பிறக்கிறதாகப் பதிவு செய்தனர்.

இவ்வாறு சூரியன் பூமியைச் சரி பாதியாக ஊடறுத்துச் செல்லும் பூமத்தியரேகைக்கு வரும் நாளே சித்திரையின் முதலாம் நாளாகவும், தமிழ்ப்புத்தாண்டாகவும், இளவேனிற்காலத்தின் ஆரம்பமாகவும், பூமியில் சம இரவு பகல் நாளாகவும் தொல்காப்பியர் காலத்தில் கொண்டாடப்பட்டது.

சிங்கம், கற்கடகம், மகரம் முதலான ஏனைய 11 இராசிகளும் மேடராசியின் தொடக்கப் புள்ளியை அடையாளம் கண்ட பின்னர், ஒவ்வொரு இராசிக்கும் 30 பாகை வழங்கப்பட்டு, பூமி சூரியனைச் சுற்றிவரும் 360 பாகையும் 12 இராசிகளாகப் பிரிக்கப்பட்டது. (உருவம் 1) பின்னரே அதன்பின்னால் தெரிந்த நிலையான நட்சத்திரக் கூட்டங்களின் வடிவில் அந்த இராசிகளுக்குப் பெயரிடப்பட்டது. எல்லா இராசிகளினதும் ஆரம்பத்தை, மேட இராசியின் தொடக்கப்புள்ளியைக் கணித்தமதிரி, அதன் பின்னால் தெரியும் நிலையான நட்சத்திரக் கூட்டங்களின் ஆரம்பத்திலிருந்து கணிக்கமுடியாது.

இதனால் சூரியன் சிங்கம் (ஆவணி), மகரம் (தை) ஆகிய இராசிகளுக்கு வரும்போது அடையாளம் கண்டு, முற்காலத்தில் காலக்கணிப்பு (அதாவது ஆண்டுகளை தொடர்ந்து எண்ணுதல்) செய்தனர் என்பது விஞ்ஞானரீதியில் ஏற்கமுடியாத கூற்று.

மனிதர்களால் அடையாளம் காணக்கூடிய மேட இராசியின் தொடக்கப்புள்ளிக்குச் சூரியன் வருவதைக் கொண்டு ஆண்டைக் கணித்து (உருவம் 4), பின்னர் ஒவ்வொரு 30 பாகையை (இராசிகளை) சூரியன் கடக்கும்போது மாதங்களைக் கணித்தனர்.

கால அளவை ஒரு நிலையான இடத்திலிருந்து (புள்ளியிலிருந்து) தான் அளக்க வேண்டும் என்பது பௌதீகவியல் விதி. அசையும் இடத்திலிருந்து காலத்தை அளவிட முடியாது. இதனாலேயே, இன்றும் (பொ.ஆ. 2024 இலும்), தமிழர் அக்காலத்தில் வானவியல் அடையாளமாக வைத்த, நிலையான புள்ளியான, மேட இராசியின் தொடக்கப்புள்ளிக்குச் சூரியன் வருவதையே தமிழ்ப்புத்தாண்டாகக் கணிக்கிறோம். இதுவே பௌதீகவியல் விதிப்படி காலத்தை தொடர்ந்து எண்ணச்சரியான முறை.

தற்காலத்தில் ஆங்கில விஞ்ஞானிகளும், மேட இராசியின் தொடக்கப்புள்ளிக்குச் சூரியன் வருவதையே (First point of Aries) தங்களது அயனவருட காலக்கணிப்பு முறையில் (Sidereal year) வருட ஆரம்பமாகப் பாவிக்கின்றனர். (உருவம் 4)

காலநிலைக்கணிதம்

பூமியின் அச்சுப்பற்றி நடைபெறும் ஓர் அசைவான தள்ளாட்டத்தால், பூமியைச் சரி பாதியாக ஊடறுத்துச் செல்லும் பூமத்திய ரேகைக்கு சூரியன் தற்போது வரும்போது, அதன் பின்னால் தெரிந்த நிலையான நட்சத்திரக் கூட்டமாகிய மேட இராசியின் தொடக்கப்புள்ளி அங்கு இல்லை. ஏன்எனில் இந்த வானவியல் நிகழ்வு நடைபெறுவது நிலையான நட்சத்திரக் கூட்டமாகிய மேட இராசியின் தொடக்கப்புள்ளியில் இருந்து விலகிக்கொண்டு செல்கிறது. (உருவம் 5)

இதனாலேயே, இளவேனிற்காலம் பிறப்பது சித்திரை முதலாம் திகதியிலிருந்து விலகிச் செல்கிறது. இவ்வாறு பூமத்திய ரேகைக்கு சூரியன் வரும் நாள் மேட இராசியின் தொடக்கப்புள்ளியிலிருந்து விலகிக்கொண்டு செல்வது 72.5 வருடத்திற்கு ஒரு பாகை ஆகும். இதனாலேயே, தற்போது இளவேனிற்காலம் பிறப்பது பங்குனி 7ஆம் திகதியாக (Gregorian Calendarஇல் மார்ச் 21ஆம் திகதியாக) இருக்கிறது. ஆனால் காலத்தைகணிப்பது எப்போதும் ஒரேநிலையான புள்ளிக்கு சூரியன் வருவதைக்கொண்டே கணிக்கப்பட வேண்டும் என்பதால், அக்காலத்தில் இருந்து இக்காலம் வரையும், சூரியன் மேட இராசியின் தொடக்கப்புள்ளிக்கு வரும் நாளை சித்திரையின் முதலாம் நாளாகக் கொண்டே தமிழ்ப்புத்தாண்டு கணிக்கப்படுகிறது, ஏன், வருங்காலத்திலும் இவ்வாறே தமிழ்ப்புத்தாண்டு கணிக்கப்படும்.

இளவேனிற்காலம் பிறப்பதும், பூமியில் சம இரவு பகல் நாள் வருவதும், அக்காலத்தில் சித்திரை முதலாம் திகதியிலிருந்தது. தற்போது மார்ச் 21ஆம் திகதியாக (Gregorian Calendar) இருக்கிறது. (உருவம் 6) இது இவ்வாறு மாறிக்கொண்டு பங்குனியில் வந்து, பின்னர் மாசி, தை, மார்கழி என்று செல்லும். இவ்வாறு இளவேனிற்காலம் உட்பட, ஆறு காலங்களும் பிறப்பது பூமியின் அச்சுப்பற்றி நடைபெறும் தள்ளாட்டத்தில் தங்கியிருக்கிறது. அவை மிக மெதுவாக (72.5 வருடத்திற்கு ஒரு பாகை) காலத்துடன் மாறிக் கொண்டு செல்லும்.

இதை நன்கு அறிந்த தொல்காப்பியர், ஓர் ஆண்டை ஆறு பொழுதுகளாகப் பிரிக்கும்போது அக்காலவழக்கத்தில் இருந்த மாதங்களின் பெயரில் கூறாமல், காலநிலை மூலம் பிரித்திருக்கிறார். காலநிலைக் கணிதம் மூலம் கணிக்கப்படும் ஆறுகாலங்களும், காலக்கணிதத்தின் மூலம் கணிக்கப்படும் 12 மாதங்களும் ஓராண்டைக் குறித்தாலும், இவை இரண்டுக்கும் இடையேயான தொடர்பு காலத்துடன் மாறிக் கொண்டு செல்லும்.

அதாவது, அப்போது இளவேனிற் காலமாக சித்திரை மற்றும், வைகாசி மாதங்கள் இருந்தன. இன்னும் சிறிது காலத்தில் (500 வருடங்களில்) இளவேனிற் காலமாக பங்குனி மற்றும் சித்திரை மாதங்கள் இருக்கும்.

தற்கால விஞ்ஞானிகளின் கருத்துப்படி, பூமியின் அச்சு இவ்வாறான தள்ளாட்டத்தால் 26,000 வருடங்களுக்கு ஒரு சுற்றுச் சுற்றுகிறது. இதனால் இளவேனிற்காலம் பிறப்பது, தொல்காப்பியர் காலத்திலிருந்து 26,000 வருடங்களுக்குப் பின் சித்திரை முதலாம் திகதிக்கு வரும். அதாவது சூரியன் மேட இராசியின் தொடக்கப்புள்ளிக்கு வரும்போது, திரும்பவும் இளவேனிற்காலம் பிறக்கும்.

ஆனால் தமிழ்ப்புத்தாண்டோ, எப்போதும் சூரியன் மேட இராசியின் தொடக்கப்புள்ளிக்கு வரும் நாளை சித்திரையின் முதலாம் நாளாகக் கொண்டே

கணிக்கப்படும். அதேபோல், தமிழ் மாதங்களும் சூரியன் மேட இராசியின் தொடக்கப்புள்ளியில் இருந்து ஒவ்வொரு 30 பாகையைத் தாண்டும்போது கணிக்கப்படும்.

சிறு பொழுதுகள்

தமிழ் காலக்கணிதத்தில், ஒரு நாள் எனப்படுவது சூரிய உதயம் முதல், மறுநாள் சூரிய உதயம்வரை உள்ள 60 நாழிகை ஆகும். அதாவது, ஒரு நாள் சூரிய உதயம் முதல் சூரியன் மறையும்வரை 30 நாழிகைகளாகவும், சூரிய மறைந்தது தொடக்கம் மறுநாள் சூரியன் உதிக்கும்வரை 30 நாழிகைகளாகவும் பிரிக்கப்படும். தொல்காப்பியர் கூறிய ஒரு நாளின் ஆறு சிறு பொழுதுகளுடன் தமிழ் காலக்கணிப்பை ஒப்பிட்டால், அவை பின்வருமாறு:

விடியல் (காலை) = சூரிய உதயத்திலிருந்து 10 நாழிகை.
நண்பகல் = அடுத்த 10 நாழிகை பகல் பொழுதின் நடுப்பகுதி.
ஏற்பாடு = அடுத்த 10 நாழிகை சூரியன் மறையும்வரை.
மாலை = அடுத்த 10 நாழிகை.
யாமம் = அடுத்த 10 நாழிகை இரவுப் பொழுதின் நடுப்பகுதி.
வைகறை = அடுத்த 10 நாழிகை சூரியன் உதிக்கும்வரை.

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம்

தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்தவர் என ஆய்வுகள் தெரிவிக்கின்ற பனம்பாரனார் என்னும் புலவர், தொல்காப்பியத்திற்கு வழங்கிய சிறப்புப்பாயிரத்தை முழுமையாகப் பார்ப்போம்.

வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்,
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

முதலில் பனம்பாரனார், வடக்கில் உள்ள வேங்கட மலைத்தொடரிலிருந்து, தெற்கிலுள்ள குமரி ஆறுவரை எல்லையாக தமிழ் கூறும் நல்லுலகம் இருந்ததாகக் கூறுகிறார். பின்னர் அவர் அத்தமிழ் உலகத்திலிருந்த உலகவழக்கத்தையும் செய்யுள் வழக்கத்தையும் ஆராய்ந்து, எழுத்திலக்கணத்தினையும் சொல்லிலக்கணத்தினையும் பொருளிலக்கணத்தினையும் தொல்காப்பியர் எழுதினார் என்கிறார். அத்துடன், செந்தமிழ் மொழியின் இயல்போடு பொருந்திய தமிழ் நிலத்திலிருந்த முந்திய நூல்களை முறைப்பட ஆராய்ந்து, அவ்விலக்கணங்களைத் தொகுத்து தொல்காப்பியர் ஒரு நூலாகச் செய்தார் என்கிறார்.

பின்னர், தொல்காப்பியர் அவ்வாறு செய்த நூலை நிலந்தருதிருவிற் பாண்டிய மன்னனது சபையில் அறமே கூறும் நாவினால் நான்கு மறைகளையும் முற்றப்பயின்ற

அதங்கோட்டாசான் என்னும் ஆசிரியனுக்கு ஐயங்களை களைந்து, முந்திய மரபுமுறையில் இருந்து பிசகாவண்ணம் தனது நூல் உள்ளது என்று எடுத்துக்காட்டி அரங்கேற்றினார் என்கிறார். அதன்பின்னர், பனம்பாரனார் தொல்காப்பியரைப் பற்றிக் கூறும்போது, கடல் சூழ்ந்த நிலத்தில் (மேலே கூறப்பட்ட தமிழ் இலக்கண அறிவுடன்) தமிழ் காலக்கணிப்பிற்கு தேவையான ஐந்து (வாரம், நட்சத்திரம், திதி, கரணம் மற்றும் யோகம்) பிரிவுகளைப் பற்றிய (ஐந்திரம்) திறமை நிறைந்த தொல்காப்பியன் எனத் தனது பெயரைப் பெற்று, பல புகழையும் இவ்வுலகத்தில் நிறுத்திய தவஒழுக்கம் உடையவர் தொல்காப்பியர் என்கிறார்.

ஐந்து + திறம் + நிறைந்த + தொல்காப்பியன்
ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியன்
ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்
தமிழில் சிலசொற்களில் றகரம் ரகரமாகத் திரிபு அடைதல் இயல்பு

தற்காலத்தில், தமிழ் காலக்கணிப்பிற்கு தேவையான வாரம், நட்சத்திரம், திதி, கரணம் மற்றும் யோகம் முதலிய ஐந்து பிரிவுகளையும் கணித்து வெளிவருவதே பஞ்சாங்கம் (ஐந்து அங்கம்) ஆகும்.

தொல்காப்பியர் காலக்கணிப்புப் பற்றிய விஞ்ஞான அறிவையும் கொண்டிருந்தவர் என்பதை விளங்கிக்கொள்ளாத தமிழறிஞர் அல்லது தமிழ்ப் புலவர்களே ஐந்திரம் என்பதை வடமொழி இலக்கண நூல் என்பர். இந்தத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் முழுவதையும் கவனித்துப் பார்த்தால், தமிழ் கூறும் நல்லுலகத்தில் இருந்துகொண்டு தமிழ்மொழிப் பேச்சுவழக்கையும் தமிழ் செய்யுள்வழக்கத்தையும் ஆராய்ந்து தமிழ் நிலத்தில் இருந்த முந்திய நூல்களை முறைப்படி ஆய்வு செய்து தமிழ் இலக்கணநூல் எழுதுவதற்கு வடமொழி இலக்கணநூல் தேவை இல்லை என்பது நன்றாக விளங்கும்.

முடிவுரை

தொல்காப்பியச் செய்யுட்களை ஆய்வு செய்யுமிடத்து தொல்காப்பியரின் காலக்கணித அறிவு மற்றும் வானவியல் நுட்பம் என்பவற்றைக் காணக் கூடியதாக உள்ளது. அவரை நாம் ஓர் இலக்கண ஆசிரியர் என்ற சிறு வட்டத்திற்குள் வரையறுத்து விடக்கூடாது. அவரது பரந்த அறிவைக் கண்டு வியக்க வேண்டும்.

துணைநின்ற நூல்கள்:

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையுடன் - திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் -1969
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்கினியர் உரை பகுதி 1 & 2 - திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் -1955
3. மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்.
4. தொல்காப்பிய விழா மலர் -2023 தொல்காப்பியமன்றம் கனடா
5. உலகத்தொல்காப்பிய மன்றம் https://tholkappiyam.org
6. தொல்காப்பியம் விக்கிமூலம் https://ta.wikisource.org/தொல்காப்பியம்
7. The Royal Astronomical Society of Canada
8. https://www.space.com/
9. https://www.nasa.gov/

பூமி தொடர்ந்து தெரியும்
சூரியனின் பாதை
ஆனி
மிதுனம்
ஆடி
கடகம்
ஆவணி
சிங்கம்
புரட்டாசி
கன்னி
ஐப்பசி
துலாம்
கார்த்திகை
விருச்சிகம்
மார்கழி
தனுசு
தை
மகரம்
மாசி
கும்பம்
பங்குனி
மீனம்
சித்திரை
மேடம்
வைகாசி
இடபம்
முதுவேனிற்காலம்
இளவேனிற்காலம்
கார்காலம்
பின்பனிக்காலம்
கூதிர்காலம்
முன்பனிக்காலம்
சூரியன்
பூமி
சூரியனைச்
சுற்றும் பாதை
மார்கழி
தை
மாசி
பங்குனி
சித்திரை
வைகாசி
ஆனி
ஆடி
ஆவணி
புரட்டாசி
ஐப்பசி
கார்த்திகை

உருவம் 2


ஐப்பசி
கூதிர்காலம் ⬅ | ⬅ கார்காலம்
23.5°
வ
முதுவேனிற்காலம்
(ஆடி)
சூரியன்
தெ
முன்பனிக்காலம்
(தை)
சித்திரை
பின்பனிக்காலம் ➡ | ➡ இளவேனிற்காலம்

உருவம் 3


இளவேனிற்காலம்
சித்திரை
VE
மேடம்
Aries
மீனம்
Pisces
மகரம்
Capricorn
கடகம்
Cancer
கன்னி
Virgo
துலாம்
Libra
AE



உருவம் 5

உருவம் 4

உருவம் 6




2h
22h
Aries
Ecliptic
Pegasus
Pisces
April 14, 2016
Apr
15°
Uranus
Equule
2h
1h
0h
Sun
23h
22h
Mar
Mercury
Celestial Equator
Eris
Cetus
Neptune
Venus
Ceres
Aquarius
Feb
-15°
Capricorn
00:30 am EDT Monday, March 21, 2016
-30°

தொ.மா.க. 168

கணிதவியல் நோக்கில் தொல்காப்பியம்

Miss. S.Vevoka
Mphil (Scholer),Department of Hindu Civilization,
Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vevokav@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்”, “எண்ணெழுத் திகழேல்” எனும் மூதுரையின் ஊடாக கணக்கியல் மற்றும் எழுத்தியல் என்பன மாந்தர்க்கு எந்தளவிற்கு அவசியம் என்பதனை ஔவையார் விளக்குவதனூடாக அறிய முடிகின்றது. உலகத்திலுள்ள கலைகள் பலவற்றிலும் தலைமை பெற்றுச் சிறந்தன என்னும் எழுத்துமே என்பதும் “எண்” அறியாமல் ஏனைய கலைகள் கற்க இயலாதென்பதும், மக்கள் வாழ்வு நன்முறையில் இயங்குவதற்குத் துணைபுரிவது அதுவே (கணகக்கதிகாரம்; பக்-1) எனவும் கண்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்தவகையில் தொல்காப்பியத்தில் கணிதவியல் பற்றி எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது என்பதனையும் கணிதவியல் பற்றி எத்தகைய தகவல்கள் கிடைக்கின்றன என்பதனையும் ஆராய்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

திறவுச் சொற்கள்: தொல்காப்பியம், அறிவியல், சோதிடவியல், கணிதவியல், வானியல், பழந்தமிழர் அறிவியல்.

இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கங்களாக பின்வருவன அமைகின்றன.

- பழந் தமிழர்களது அறிவியல் பற்றி பல இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அவ்வகையில் தொல்காப்பியம் எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பதனை அறிந்துகொள்ளல்.
- தொல்காப்பிய கால மக்களிடம் காணப்பட்ட அறிவியல் நுட்பம் மற்றும் அவர்களது நாளாந்த வாழ்க்கையுடன் பின்னிக் காணப்படும் கணிதவியல் என்பன பற்றி அனைவரும் அறியச் செய்தல்.
- தொல்காப்பியமானது அனைவராலும் இலக்கண நூல் எனக் குறிப்பிடப்படினும் தன்னுள் பல்வேறு அறிவியல் சிந்தனைகளையும் கொண்டுள்ளது என்பதனையும் கணிதவியல் பற்றி எவ்வாறு எடுத்தியம்புகின்றது என்பதனையும் எதிர்கால சந்ததியினரிற்கு எடுத்துரைத்து விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
- தமிழர்களின் அறிவியல் அறிவியல் உலகம் நன்கறியும். எண்ணும் எழுத்தும் கணக்கியலை அடிப்படையாகக் கொண்டவை. தொல்காப்பியம் கணிதத்தின் பன்முக வளர்ச்சிக்கு வித்திட்டது என்பதை உலகறியச் செய்தல்.

பழந்தமிழர்கள் பற்றியும் அவர்களது அறிவியல் பற்றியும் அறிவதற்கு பல இலக்கியங்கள், தொல்பொருட்கள், ஏட்டுச்சுவடிகள் எனப் பல விடயங்கள் காணப்படினும், இவ்வாய்வானது தொல்காப்பியத்தை மட்டுமே மையமாகக் கொண்டு ஆராயப்படுகின்றது. பண்டைக்கால தமிழர்களது வாழ்வில் அறிவியல் மற்றும் மருத்துவம், சோதிடம், வானியல், தொழில்நுட்பவியல் என இன்னோரன்ன விடயங்களை எடுத்துரைக்கின்றன. அத்தகைய சிறப்பு மிக்க பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஒன்றான தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணிதவியல் பற்றி அறிந்துகொள்வதுடன் எதிர்கால சந்ததியினரிற்கும் அறியச் செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

அறிமுகம்

பழந்தமிழர் இலக்கியங்களில் காலத்தால் முந்திய இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியம் இன்றைக்கு ஐயாயிரம் வரும் பழமையானது. தொல்காப்பியம் தமிழின் இலக்கணத்தைச் சொல்வதோடு தமிழரின் வாழ்க்கை முறைகளையும் உலகிற்கு உணர்த்தும் ஒப்பற்ற நூலாகத் திகழ்கிறது. பண்டைத் தமிழர் நாகரிகத்தை, பழக்க வழக்கங்களை, பண்பாட்டு விழுமியங்களைத் தெரிந்துகொள்ள தொல்காப்பியமே முதல் ஆதாரமாகும். தொல்காப்பியம் என்ற சொல், நூலைக் குறிக்கும் போது ஒரே சொல்லாகவும், பொருளை விளக்கும் போது அது தொல் + காப்பு + இயம் என்று முச்சொற்களாகப் பிரிந்து பொருள் தருவதாகவும் கூறுவர். தமிழரின் தொன்மையைக்காத்து இயம்பும் நூல் என்பது பொருள். இந்நூல், எண்ணிலடங்காச் சிறப்புகளைக் கொண்டிருக்கின்றது.

தொல்காப்பியத்தை எழுதியவர் தொல்காப்பியர். இவர் தொன்மையான காப்பியக் குடியில் தோன்றியவர். நூலை எழுதியவர் பெயரையே நூலுக்கு வைக்கும் மரபின் அடிப்படையில் இந்நூல் “தொல்காப்பியம்” என்று பெயர் பெற்றுள்ளது. தொல்காப்பியரை அகத்தியரின் மாணவர்கள் பன்னிருவருள் ஒருவர் என்றும் குறிப்பிடுவர்.

தொல்காப்பியம் தோன்றிய காலம் குறித்து பலரும் பலவித கருத்துகளை முன்வைக்கின்றனர். இன்றுள்ள நான்கு வேதங்களுக்கும் முற்பட்டது தொல்காப்பியம் என்பது தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கருத்து. மூன்று சங்கங்களின் வரலாறு குறித்துக் கூறும் இறையனார் அகப்பொருள் உரையிலே தொல்காப்பியம் இடைச்சங்க காலத்தில் தோன்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் சங்கங்கள் தொடர்ந்து நடைபெற்ற ஆண்டுகளைக் கணக்கிட்டு, தொல்காப்பிய காலம் 7300 ஆண்டுகளுக்கு முந்தியது என்பது அறிஞர் பலரின் கருத்து. எப்படி இருப்பினும் தொல்காப்பியம் குறைந்தது 5000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவு.

தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பிற்கால இலக்கண நூல்கள் யாவும் இம்முறையைப் பின்பற்றியே தோன்றியுள்ளன. ஆனால், தொல்காப்பியர் இலக்கணத்தை மூன்று பிரிவுகளுக்குள்ளேயே அமைத்துள்ளார். அவை, எழுத்து, சொல், பொருள் என்பனவாகும். மொழிக்கு அடிப்படையாக அமைகிற எழுத்துகளைப் பற்றிக் கூறுவது எழுத்திலக்கணம், எழுத்துகளால் உருவாகும் சொற்களைப் பற்றிக் கூறுவது சொல்லிலக்கணம். சொற்களில் அடங்கியுள்ள பொருள்கள் பற்றியும், வாழ்க்கை முறைகளை (வாழ்க்கையின் பொருள்) பற்றியும் கூறுவது பொருளிலக்கணம். பொருளிலக்கணம் என்பதிலேயே செய்யுள் இலக்கணமும், அணியிலக்கணமும் அடங்கியிருக்கின்றன. பிற்காலத்தில் இவை தனித்தனியே விரித்து உரைக்கப்பட்டு தமிழ் ஐந்திலக்கணத்தைக் கொண்டதாக மொழியப்பட்டது.

தொல்காப்பியப் பெரும்பகுப்புகளான எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்றும் சிறு பகுப்புகளாகத் தங்களுக்குள் ஒன்பது ஒன்பது இயல்களைக் ((3X9=27) கொண்டுள்ளன. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள மொத்த நூற்பாக்கள் எண்ணிக்கை 1610. தொல்காப்பியம் தமிழின் இலக்கணத்தைச் சொல்வதோடு தமிழரின் வாழ்க்கை முறைகளையும் உலகிற்கு உணர்த்தும் ஒப்பற்ற நூலாகத் திகழ்கிறது. பண்டைத் தமிழர் நாகரிகத்தை, பழக்க வழக்கங்களை, பண்பாட்டு விழுமியங்களைத் தெரிந்துகொள்ள தொல்காப்பியமே முதல் ஆதாரமாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன்பே தொல்காப்பியம் தோன்றினாலும் இன்றைய கணிதவியல் வளர்ச்சிக்குத் தேவையான கணிதவியல் கூறுகளைத் தொல்காப்பியர் அன்றே சிறப்பாகவும் நுட்பமாகவும் எடுத்துரைத்துள்ளதனைக் காணலாம். கணிதவியல் பற்றித் தொல்காப்பியம் மட்டுமன்றி மற்றும் பல பழந்தமிழ் இலக்கியங்களும் கணிதவியல் பற்றிப் பேசுகின்றன. அந்தவகையில், திருக்குறள், ஆத்திசூடி, கணக்கதிகாரம் என்பன சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இவற்றில் கணக்கதிகாரம் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. கணிதவியல் கூறுகளான கூட்டல், கழித்தல், பெருக்கல். வகுத்தல், அளவைப் பெயர்கள், நேரக்கணிப்பு மற்றும் பிற கணக்கியல் முறைகள் போன்றவைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அன்றாட வாழ்வில் கணிதத்தின் முக்கியத்துவம் நிறைந்து காணப்படுகின்றது. நம்மைச் சுற்றிலும் உள்ள பொருட்கள் யாவும் கணிதவியலை அடிப்படையாகக் கொண்டவை. நீளம், அகலம், பருமன், சதுர அளவு, கொள்ளளவு எனப் பல்வேறு வடிவங்கள் கணிதத் தொடர்புடையன. அத்துடன் நிறுத்தல், எண்ணல், நீட்டல், முகத்தல் போன்ற பல்வகை அளவைகளின் அமைப்பு மற்றும் உணவில் சுவையூட்டும் பொருட்களின் விகித அளவு, இசையின் ஸ்வரங்கள், ஓவியங்களின் அமைப்பு, நடனத்தில் தாளக்கட்டுக்கள், கலையமைப்புக்களின் நுட்பங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், என அனைத்திலும் கணிதவியல் அறிவு நிறைந்துள்ளதனைக் காணலாம். இவை தற்போதய காலத்திற்கமைய பல்வேறு வளர்ச்சிகளையும் கொண்டுள்மை கண்கூடு,

மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கமைய கணிதமும் பல்வேறு வளர்ச்சிளை அடைந்துள்ளதும் கவனிக்கத்தக்கது. “கணிதம் அறிவியலின் அரசி” மற்றும் “எண் கணிதம் கணிதத்தின் அரசி” என காஸ் குறிப்பிடுகின்றார். இதனைத் தொடர்ந்து, ரோஜர் பேகன் என்பவர் “கணிதம் அனைத்து அறிவியலின் வாசல் மற்றும் திறவுகோல்” எனவும் குறிப்பிடுவதனைக் காணலாம். இதனையே பென்சின் அவர்கள் “ தேவையான முடிபுகளை கொணரும் அறிவியல்” எனக் குறிப்பிடுகின்றார். இவையனைத்தும் மேலைத்தேயத்தவர்கள் இற்றைக்கு ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளிற்று முன்பே கணிதவியல் கோட்பாடுகளை முன்வைத்திருக்க, இற்றைக்கு ஐயாயிரம் வருடங்களிற்கு முன்பாகத் தோற்றம் பெற்ற தொல்காப்பியத்தில் கணிதவியல் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையானது இன்றைய கணிதவியலின் வளர்ச்சிக்கு அடிக்கல்லாக அமைந்துள்ளது மனங்கொள்ளத்தக்கதாகும்.

“எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு” (திருக்குறள், பாடல் - 392) எனத் திருக்குறளின் மூலம் “எண்” எனப்படுவது கணிதமும் “எழுத்து” எனப்படுவது மொழி எனவும் எடுத்துரைக்கப்படுவதனைக் காணலாம். கணிதம் எனப்படுவது எண்கள், அளவுகள், இடத்தொடர்புகள் உள்ளடக்கிய ஓர் அறிவியல் பிரிவு என்பதனை, “எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்”(கொன்றைவேற்தன், பாடல் - 7) “எண்ணெழுத் திகழேல்” எனும் மூதுரையின் ஊடாகவும், கணக்கியல் மற்றும் எழுத்தியல் என்பன மாந்தர்க்கு எந்தளவிற்கு அவசியம் என்பதனை ஔவையார் விளக்குவதனூடாக அறிய முடிகின்றது. உலகத்திலுள்ள கலைகள் பலவற்றிலும் தலைமை பெற்றுச் சிறந்தன என்னும் எழுத்துமே என்பதும் “எண்” அறியாமல் ஏனைய கலைகள் கற்க இயலாதென்பதும், மக்கள் வாழ்வு நன்முறையில் இயங்குவதற்குத் துணைபுரிவது அதுவே (கணகக்கதிகாரம்;, பக் - 1) எனவும் கண்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தவகையில் தொல்காப்பியத்தில் கணிதவியல் பற்றி எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது என்பதனையும் கணிதவியல் பற்றி எத்தகைய தகவல்கள் கிடைக்கின்றன என்பதனையும் ஆராய்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியம் கூறும் கணிதவியல்

கண் கொண்டு கணித்தவை எண்கள் வழி வெளிப்படுகின்றன. எண் என்பதே எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது. 'தொன் முது காலத்தில் எண்ணுவதும் கூட்டுவதும் கழிப்பதும் வகுப்பதும் பெருக்குவதுமாகிய செய்கை, நினைவுத்திறனைக் கூட்டி ஆராய்ந்து சிந்திக்கும் ஆற்றலை நல்குவதால் எண்ணிக்கையைக் குறித்த 'எண்' என்னும் பெயர்ச்சொல் எண்ணிப்பார்த்தல் (சிந்தித்தல்) என்னும் ஏவல் வினையுமாயிற்று. கணக்கு கணியநூல் ஆகியவற்றையும் குறித்தது (இரவா, http://thamizmandram.blogspot.com/, 05/12/2010) எனப் பேரகரமுதலி குறிப்பிடுகின்றது. தொல்காப்பியர் கணிதவியல் பற்றிய விடயங்களைத் தொல்காப்பயத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பவற்றில்; தொகுத்து வளங்கியுள்ளார். எண்ணும் எழுத்தும் கணக்கு ஆகும் (தமிழ்ப் பேரகராதி, பிங்கலம், 7: 327 ப. 247). தொல்தமிழர் கணக்கிடுவதிலும் கணிப்பதிலும் வல்லவராயிருந்தனர். நுண்ணிய வேறுபாடுடைய இவ்விரு சொற்களும் தமிழர்தம் அறிவியல் அறிவை வெளிக்காட்டுவனவாகும்.

கள் - கள - கண, கணத்தல் = பொருந்துதல், கூடுதல், ஒத்தல்
கண் - கணி, கணித்தல் = மதித்தல், கணக்கிடுதல், அளவிடுதல்
கணி - கணிதம் - கணிசம் = மதிப்பு

(மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப. 156)

கணியன், கணக்கன் என்னும் சொற்களுக்கு அடிச்சொல்லாக அமைவது கண். கண், எகிப்திய மக்களின் தொல் பழங் கடவுள் ஹோரஸ் கண்ணுடன் (Horus eye) ஒப்பு நோக்க ஹோரஸ் கண் 'ஒன்று' (1) என்ற எண் குறியீடாகும். தமிழில் க = 1, க = முதல், க = முழுமுதற் கடவுள் எனப் பொருள் தருகின்றது. தொல் தமிழ் + (க) பக்கக் கோடுகள் இழந்து 1 (ஒன்று) என்றாகியது. தமிழில் எண்ணும் எழுத்தும் பிறக்கும் முறை கணக்கியல் (அறிவியல்) நோக்குடையது என்பது குறிப்பிடத்தக்கது. (மேலது)

கண் - கணி

கணக்கிடுதலுக்குக் கணித்தல் முதல் நிலையாகும். கணி என்பது கண் கொண்டு அளவிடுதலாகும். அளவையில் கண் முதற்கருவியாகச் செயல்படுகிறது.

ஹோரஸ் கண் ஒன்று என்ற முழு எண்ணைக் குறிக்கிறது. கண்ணின் ஒவ்வொரு பகுதியும் பின்னங்களைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது. ஹோரஸ் கண் வடிவம் ஒன்று அது இவ்வாறு குறிக்கப்பட்டுப் பின்னங்கள் II = ½, III = 1/3 ஆகும். (மேலது) இவ்வாறு படக்குறியுடன் எண்கள் குறிக்கப்படுவது மிகத்தொன்மையான வழக்காக அமைந்துள்ளதனை நாம் அறியமுடிகின்றது.

இவற்றை வைத்து நோக்கும் போது தொல்காப்பியத்தில் கணக்கியல் எந்தளவிற்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பது புலனாகின்றது.

கூட்டல் விருத்திச் செயற்பாடு

கூட்டல் விருத்தி என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்களை ஒன்றுடன் ஒன்று கூட்டி ஒரு தொகையை அல்லது மொத்தத்தைப் பெறுகின்ற ஒரு கணிதச் செயற்பாடு ஆகும். கூட்டல் விருத்தி பற்றித் தொல்காப்பியர் பின்வருமாறு எடுத்துரைப்பதனைக் காணலாம்.

"எழுத்தெனப்படுப
அகர முத
னுகர விறுவாய் முப்ப ஃதென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங்கடையே"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 1)

இப் பாடல் பகுதியில் கூட்டல் பற்றி வெளிப்படையாக எடுத்துரைக்காது, "அக"ர முதலான பன்னிரு உயிர் எழுத்துக்களையும், "னகர" இறுதியான பதினெட்டு மெய் எழுத்துக்கள் என இரண்டையும் கூட்டி முப்பது எனக் குறிப்பிடுவதனைக் காணலாம். அத்துடன்,

"நீட்டம் வேண்டி னவ்வள புடைய
கூட்டி யெழுஉத லென்மனார் புலவர்"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 6)

எனும் பாடல் வரிகளின் ஊடாக ஒலி மிகுதல் தேவைப்பட்டால் அந்தளவிற்கு தேவையான எழுத்து ஒலிகளை எழுப்புதல் வேண்டும் எனக் குறிப்பிடுவதனுடன், கூட்டல் என்னும் சொல் நேரடியாகவே பயன்படுத்தப்பட்டுள்ளமையினையும் காணலாம்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் சில பாடல்களளில் மறைமுகமாகவும் கூட்டல் விருத்திகள் பற்றிக் குறிப்பிட்டிருப்பதனையும் காணலாம். எடுத்துக்காட்டாக,

"ஔகார விறுவாய்ப்
பன்னீர் ரெழுத்து முயிரென மொழிப"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 8)

எனும் பாடல் ஊடாகவும்,

"னகர விறுவாய்ப்
பதினெண் னெழுத்தும் மெய்யென மொழிப"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 9)

எனும் பாடல் ஊடாகவும் எடுத்துரைக்கின்றார்.

முதல் பாடலில் அ - ஔள வரை எனப் பன்னீர் எழுத்தையும் வெளிப்பï;யாகக் கூறாமல் மறைமுகமாகச் எடுத்துரைக்கின்றது. மற்றய க - ன வரையான பதினெட்டு எழுத்துக்களையும் மறைமுகமாக எடுத்துரைத்துள்ளதனையும் காணலாம்.

எழுத்துக்கள் உருவாகும் குறைகளைக் குறிப்பிடும் போது கூட்டல் விருத்தி முறையயினையே தொல்காப்பியர் கையாள்கின்றார் என்பதனை பின்வரும் பாடல் ஊடாக அறியலாம்.

"அவற்றுள்
உயிரும் தம்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 84)

இப் பாடலில் பன்னிரு உயிர் எழுத்தும் கழுத்தில் இருந்து பிறக்கின்றன எனக் குறிப்பிடுகின்றதனைக் காணமுடிகின்றது.

இவற்றை வைத்து நோக்கும் போது தொல்காப்பியத்தில் கூட்டல் விருத்திப் பயன்பாடு பல்வேறு பாடல்களின் ஊடாக வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளமை கண்கூடு.

கழித்தல் விருத்தி செயற்பாடு

கழித்தல் விருத்தி என்பது மொத்தத்தில் இருந்து ஒரு பகுதியைக் கழிக்கும் செயற்பாடாகும். இது கணிதவியலில் ஒரு பகுதியாகும். இது கூட்டலிற்கு எதிர்மறையான செயற்பாடாகும். தொல்காப்பியத்தில் கூட்டல் பற்றிக் கூறப்பட்டது போன்றே கழித்தல் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இதில் ஒழிய, கெட, எஞ்சிய, குறைய முதலான சொற்கள் கணிதவியல் கூறான கழித்தல் விருத்தி பற்றி உணர்த்தப் பயன்படுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம்.

"சகரக் கிளவியு மவற்றோ ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 62)

இப் பாடலில் "ச்" எனும் மெய் எழுத்து அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிர்கள் தவிர ஏனைய ஒன்பது உயிர்களுடன் அதாவது, ச, சை, சௌ என்னும் மூன்றினைத் தவிர்த்து கழிந்து குறைந்து மீதமுள்ளவற்றோடு மொழிக்கு முதலில் வரும் எனப் பொருளுணர்த்தும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதனைக் காணமுடிகிறது.

"மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தும்முன் தாம் வரூஉம் ரழ அலம் கடையே"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 30)

மெய்யெழுத்துக்கள் எல்லாம் தமக்கு முன் தாம் வரும் அதாவது இரட்டித்து வரும் ர,ழ அல்லாதவிடத்து இவை வாரா எனப் பொருளுணர்த்தும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதனைக் காணலாம். எடுத்துக்காட்டாக, வாழ்க்கை, இங்ஙனம், தேர்ச்சி, மஞ்சை, பட்டம், எண்ணம், அத்தை, செந்நெல், அப்பா, அம்மா, கொய்யா, அல்லி, கவ்வி, உள்ளம், கற்று, அன்னா, இவ்விடத்தில் ர, ழ அல்லாத என்பதில் ர, ழ குறைந்துள்ளது. அதாவது கழிந்து என்பது கழித்தல் கூற்றினைப் பற்றி கூறும் போது,

"உயிர்ஒள எஞ்சிய இறுதி ஆகும்"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 69)

உயிரெழுத்துக்களான அகர முதல் ஔகார இறுதியாகப் பன்னிரு எழுத்துக்களில் ஔகாரத்தைக் கழித்து மீதமுள்ள பதினோர் எழுத்துக்களும் மொழிக்கு இறுதியாக வருகின்றது என்பதனைக் கூறப்பட்டுள்ளது.

தமிழில் உயிர்கள் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாக முப்பது எழுத்துக்கள் முதலெழுத்துக்களாக உள்ளன எனவும், அவற்றைச் சார்ந்து வருவதனைச் சார்பெழுத்துக்கள் எனவும் அழைக்கின்றோம். இதில் குறுக்கங்களான ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கம் போன்றன கழித்தலின் கூறுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஐகார குறுக்கத்தினை எடுத்து நோக்கின், ஐ நெட்டெழுத்தைத் தனியாக ஒலிக்கும் போது இரண்டு மாத்திரை அளவிருந்து குறையாமல் ஒலிக்கும். ஆனால் அவ்வெழுத்தை (ஐ) சொல்லிற்கு முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரையாகவும், இடையிலும் இறுதியிலும் வரும்போது

ஒரு மாத்திரையாகவும் ஒலிக்கும். இதனைப் போன்றே மற்ற குறுக்கங்களிலும் கழித்தல் விருத்தியினைக் காணலாம்.

பெருக்கல் விருத்தி

கூட்டலின் சுருக்கமே பெருக்கல் ஆகும். துற்காலத்தில் பயன்படுத்தப்படும் பெருக்கல் வாய்பாட்டு வடிவிலேயே தொல்காப்பியப் பாடல்களிலும் பயன்படுத்தியுள்ளதனைக் காணமுடிகின்றது. தொல்காப்பியர் காலத்திலே தமிழர்கள் கணிதத்தைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதனை இவற்றினூடாக அறிய முடிகின்றது. எடுத்துக்காட்டாக,

"அம் மூவாறும்வழங்குஇயல் மருங்கின்
மேய்ம்மயக்கு உடன்நிலை தெரியும் காலை"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், பாடல் - 22)

என்ற பாடலில் மூவாறும் என்பதில் பதினெட்டு மெய்களைக் குறிக்கும் வண்ணம் பெருக்கல் முறையைக் கூறுகின்றார். பதினெட்டு எழுத்துக்களும் வழக்கத்தில் ஒரு மெய்யுடன் மற்றொரு மெய் நிற்கும் எனக் கூறப்பட்டுள்ளதனைக் காணலாம்.

"மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலாகு இருபஃது
அறுநான்கு ஈற்றொடு நெறிநின்று இயலும்
எல்லாமொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிர் என்று ஆயீர் இயல்"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 103)

இதில் தமிழ் எழுத்துக்கள் முப்பத்து மூன்றில் சொல்லின் முதலில் வரும் எழுத்துக்கள் 22, சொல்லின் இறுதியில் வரும் எழுத்துக்கள் 24 எல்லாச் சொற்களும் இறுதியாகவும் முதலாகவும் வருவன மெய், உயிர் என்னும் இருவகை எழுத்துக்கள் ஆகும். இவை மக்களிடத்தில் வழக்கில் உள்ளதுடன் செய்யுள் வழக்கிலும் பொருந்தியுள்ளதனைக் காணலாம்.

இங்கு அறுநான்கு எனக் குறிப்பிடப்படுவது, 6*4=24 எனப் பெருக்கலைப் பயன்படுத்தியுள்ளதனைக் காணலாம். குற்றியலுகரத்தை வகைப்படுத்துகையில்,

"ஈரெழுத்து ஒருமொழி உயிர்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர் வன்தொடர் மென்தொடர்
ஆயிரு முன்றே உகரம் குறுகிடன்"

(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 406)

என்னும் பாடலில் வன்தொடர், மென்தொடர், இடைத் தொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், நெடில் தொடர் என ஆறுவகையாகக் குற்றியலுகரத்தின் வகைகள் கூறப்பட்டுள்ளன. அதில் ஆயிரு மூன்றே என்பது (2*3=6) என்ற பெருக்கல் கூறு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதனைப் போன்று தொல்காப்பிய சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றிலும் பெருக்கல் விருத்தி முறை பற்றிக் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம்.

இதனை உவமையியலின் பாடலில்,

"அன்ன 1 எப்ப 2 உறழ 3 ஒப்ப 4
என்ன 5 மான 6 என்றவை எனாஅ
ஒன்ற 7 ஒடுங்க 8 ஒட்ட 9 ஆங்க 10

என்ற 11 வியப்ப 12 என்றவை எனாஅ
எள்ள 13 விழைய 14 இறப்ப 15 நிகர்ப்பக் 16
கள்ளக் 17 கடுப்ப 18 ஆங்கவை எனாஅக்
காய்ப்ப 19 மதிப்பத் 20 தகைப 21 மருள 22
மாற்ற 23 மறுப்ப 24 ஆங்கவை எனாஅப்
புல்லப் 25 பொருவப் 26 பொற்பப் 27 போல 28
வெல்ல 29 வீழ 30 ஆங்கவை எனாஅ
நாட 31 நளிய 32 நடுங்க 33 நத்த 34
ஓடப் 35 புரைய 36 என்றவை எனாஅ
ஆறுஆறு உவமையும் அன்னவை பிறவும்
கூறும் காலைப் பல்குறிப் பின்னவே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், பாடல் - 282)

என்பதில் உவடை உருபுகளான, அன்ன முதலாக புரைய இறுதியாக 36 உவமை உருபுகள் கூறப்பட்டுள்ளன. இப்பாடலில் ஆறுஆறு (6*6=36) எனப் பெருக்கல் விருத்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.

தொடை கணக்கு

தொடை என்பது தொடுக்கப்படுவது செய்யுளில் அடிகளும், சீர்களுமு; ஒன்றுடன் ஒன்று பொருத்தமுறத் தொடுப்பது தொடை ஆகும். ஆதன் வகைகளைக் கூறும் போது, அதாவது,

"மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீர் ஆயிரத்து ஆறுஐஞ்சு நூற்றொடு
தொண்டு தலை இட்ட பத்துக்குறை எழுநூற்று
ஒன்பஃது என்ப உணர்ந்திசி னோரே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், பாடல் - 406)

இப் பாடலில்,

ஐயீர் ஆயிரம்	-	5*2*1000	=	10,000
ஆறு ஐந்நூறு	-	6*500	=	3000
எழுநூற்று ஒன்பஃது			=	709
பத்துக்குறை			=	13,709
- 10				
13,699				

என்பதை தொடையின் மூலம் இளம்பூரணர் பகுத்துக் கூறுகிறார்.

முதலில் தனித்தனியாகப் பெருக்கல் கூறுகளைக் எடுத்துரைத்து, பின்னர் கூட்டல் விருத்திச் செயன்முறை மற்றும் கழித்தல் விருத்திச் செயன்முறையினைப் பயன்படுத்துகின்றமையையும் காணமுடிகின்றது. இப்பாடலில் பத்துக்குறை என்பது கழித்தல் விருத்தியினை எடுத்துரைப்பதாகவும் அமைகின்றதுடன், மூன்று கணிதவியல் கூறுகளை விளக்குவதாகவும் அமைகின்றது.

தொல்காப்பியர் தொடைக்கணக்குப் பற்றி எடுத்துரைக்கையில், தொடைகளின் வகைப்பாடு பற்றி எடுத்துரைத்திருப்பதனையும் காணலாம்.

மோனத்தொடை	-	1019
எதுகைத் தொடை	-	2473
முரண் (சொல் + பொருள்)	-	2
இயையுத் தொடை	-	182
அளபெடைத் தொடை	-	159
பொழிப்புத் தொடை	-	654
ஒரூஉத் தொடை	-	654
செந்தொடைத் தொடை	-	8556

13,699

என இளம்பூரணார் தனது உரையில் பகுத்துக் கூறுவதனைக் காணலாம்.

ஓலியளவைக் கணித்தல்

தமிழ் எழுத்துக்களின் தனிச்சிறப்பு என்றும் மாறாத ஒலி வடிவமாகும். இவ்வொலி வடிவங்கள் எளிமையானவையாகவும் இயற்கையானதாகவும் அமைந்துள்ளன. உலகிலுள்ள பல மொழிகளிலும் எழுத்துக்களைச் சொல்லும் போது உடலின் ஒரு சில பாகங்களில் அதிக அழுத்தம் மற்றும் முயற்சிகள் தேவைப்படும் ஆனால் தமிழ் எழுத்துக்கள் அவ்வாறில்லை என்றே குறிப்பிடவேண்டும். இதனாலேயே பல ஆயிரம் ஆண்டுகளாக தமிழ் மொழி வாழ்ந்து வருகின்றது என்பது மிகையாகாது.

தமிழ் எழுத்துக்களின் ஒலி மாறாதது, நிலையானது என்பதைத் தொல்காப்பியரே எழுத்ததிகாரத்தில் உள்ள பாடல் மூலம் காணமுடிகின்றது.

> *"மொழிப்படுத்து இசைப்பினும் தெரிந்து வேறு இசைப்பினும்*
> *எழுத்து இயல் திரியா என்மனார் புலவர்"*
> *(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா - 20)*

அதாவது எழுத்துக்கள் தனித்தோ, சொற்களில் ஒன்றி ஒலித்தாலோ அது திரியாமல் ஒரே முறையாகத்தான் ஒலிக்க வேண்டும் என்பதாகும். மேலே குறிப்பிட்ட பாடலில், உடற்கூறுகளை எவ்வாறு கட்டுப்படுத்தி ஒவ்வொரு தமிழ் எழுத்தின் ஒலிவடிவங்களையும் கையாளவேண்டும் என்பதனைப் பற்றி எடுத்துரைக்கின்றதனைக் காணலாம். இவற்றை வைத்து நோக்கும் போது, ஒவ்வொரு எழுத்துக்களிற்கும் வெவ்வேறு ஒலி வேறுபாடுகளும் அவற்றிற்கான அளவுகளும் இருப்பது கவனிக்கத்தக்கது.

மாத்திரை அளவு கணித்தல்

தமிழ் இலக்கணத்தில் மாத்திரை என்பது ஒருவர் இயல்பாகக் கண்ணிமைக்கும் நேரத்தைக் குறிக்கும் அளவு ஆகும். இது தமிழில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்களும் உச்சரிக்கும் கால அளவிற்கேற்ப குறிப்பிடப்படும் ஒலியளவைக் குறிக்கும். கண் இமைக்க எடுத்துக் கொள்ளும் கால அளவு ஒரு மாத்திரை ஆகும். மெய் எழுத்துக்கள் அரை மாத்திரை, உயிர் எழுத்திற்கு ஒரு மாத்திரை, நெடில் எழுத்துக்களிற்கு இரண்டு மாத்திரை, குறில் எழுத்துக்களிற்கு ஒரு மாத்திரை, உயிரளபெடைக்கு மூன்று மாத்திரை, ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் என்பவற்றிற்கு முறையே ஒரு மாத்திரை என்பதனை அறியமுடிகின்றது. (தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா - 3 - 17)

> *"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை*
> *நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே"*

(தொல்காப்பியம், எழுத்திகாரம், பாடல் - 7)

இது மாத்திரை என்னும் ஒலியின் கால அளவை நுண்மையாக உணர்ந்து கூறிய நுண்ணளவு. இமையென்றது இமைத்தல் தொழிலை, நொடி யென்றது நொடியிற் பிறந்த ஓசையை. தன்குறிப்பின்றி நிகழ்தலின் இமை முன் கூறப்பட்டது. இவ்விலக்கணம் ஒரு மாத்திரைக்குரியதானது.

"முஅளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்றே"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா - 5)
நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர்"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்பா - 6)

மேற்குறிப்பிட்ட பாடல்களில், ஒரெழுத்து நின்று மூன்று மாத்திரையாக இசைத்தலினைப் போல பல எழுத்துக் கூடிய இடத்து மூன்று மாத்திரையும் நான்கு மாத்திரையும் இசைக்கும் என்று குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் குறில், நெடில், அளபெடை என்பவற்றை எடுத்துரைத்து மாத்திரை அளவினை எடுத்துக் காட்டியுள்ளதனைக் காணமுடிகின்றது.

தொல்காப்பியர் எழுத்துக்களின் ஒலி அளவு பற்றி எடுத்துரைக்கையில், மாத்திரை அளவுகள் ஒலி அளவைக் குறிக்கும் ஒரு குறியீடாகக் காணப்படுகின்றன.

மகரக்குறுக்கம்	-	கால் மாத்திரை பெறும்.
மெய்யெழுத்துக்கள்	-	அரை மாத்திரை,
சார்பெழுத்துக்கள்	-	அரை மாத்திரைபெறும்.
குற்றெழுத்து ஐந்தும்	-	ஒரு மாத்திரை பெறும்.
நெட்டெழுத்து ஏழும்	-	இரண்டு மாத்திரை பெறும்

அளபெடை		
தொழாஅர்	-	ஒரு மாத்திரை கூட்ட வேண்டும்
பெறூஉம்	-	இரு மாத்திரை கூட்ட வேண்டும்
விளி	-	பல மாத்திரை அளவுபெறும்

மாத்திரை அளவுகளில் புள்ளி எழுத்துக்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இதனைப் புள்ளிக் கணக்கு என்று குறிப்பிடலாம். புள்ளியென்பது எழுத்தின்மேல் இடப்படுவது. இப்புள்ளியின் வடிவம் இன்று சிறிய புள்ளியே 'பழந்தமிழர் மெய்யெழுத்திற்கு இட்ட புள்ளி (புள் - புள்ளி, புள் - சிறுகட்டை) நீண்ட இலிங்க உருவானதே' என்கிறார் பா.வே.மாணிக்கநாயக்கர். புள்ளி என்பது ஒரு சிறு குறியீடு அது எழுதும் பொருளுக்கேற்ப மாறுபடுதல் இயல்பு. புள்ளி, எழுத்தின் மேலிடுங் பொட்டுக் குறி, குத்துக்குறி அல்லது சுழிக்குறி எனப் பல உள்ளன. தொல்காப்பியர் மெய்யெழுத்துக்களை புள்ளி, மெய், ஒற்று என்ற மூன்று குறியீடுகளில் குறிக்கிறார். புள்ளியின் இன்றியமையாமை கருதியே தொல்காப்பியர் மெய்மயங்கியல் என்னாது புள்ளி மயங்கியல் என்றார். தொல்காப்பியர் காலத்துக்கு முந்தைய கி.மு.1800 அளவில் தோன்றிய 12 உயிரும் 18 மெய்யும் மூன்று சார்பெழுத்துக்களும் கொண்ட எழுத்தமைப்பு கடந்த 3800 ஆண்டுகளாகத் திரிபின்றிக் காக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

உயிர்மெய் - க - ஒரு மாத்திரை

மெய் - க் - அரை மாத்திரை
உயிர் - எ், ஒ் - புள்ளியுடன் ஒரு மாத்திரை (எ, ஒ புள்ளியின்றேல் இரண்டு மாத்திரை)
மகரம் - ம் - அரை மாத்திரை
மகரக்குறுக்கம் - உட்புள்ளி கால் மாத்திரை (பண்டைய பகர வடிவுவை வேறுபடுத்த)

புள்ளி ஒலி அளவைக் குறைக்கவும் ஒலியை வேறுபடுத்தவும் அமைந்த அறிவியல் (கணிதவியல்) நெறியினைத் தொல்காப்பியர் சிறப்பாக எடுத்துரைப்பதனைக் காணலாம்.

"மெய்க்கு ஒலி அளவு
மெய்யி னளபே அரையென மொழிப"
(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பாடல் - 11)

அத்துடன் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் வரும் பாடல்களான 12, 13, 14, 15, 16 என்பவற்றிலும் காணலாம். அத்துடன் மேற்குறித்துள்ள பாடல்களில் புள்ளியின் ஆற்றலைத் தெற்றென விளக்குகின்றன. புள்ளியின்றேல் மொழியானது இயங்கும் ஆற்றல் அற்றதாகிவிடும். தொல்காப்பியம் பதினெட்டுப் புள்ளிகளும் அவைபெறும் ஒலி அளவும் கூறியதோடு மகரம் புள்ளி பெற்றுக் குறுகலும், குற்றெழுத்துக்கள் புள்ளி பெற்றுக் குறுகலும் குறித்து எடுத்தியம்புகிறது. (இரவா, http://thamizmandram.blogspot.com/, 05/12/2010)

நிலப் பகுப்பு

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலங்கள் ஐவகை என்கிறது தொல்காப்பியம். நிலத்தை நிலம் என்று கூறாமல் திணை என்கிறது நூல். திணை என்றால் ஒழுக்கம் என்று பொருள். ஒவ்வொரு நிலத்திற்குமான மக்கள் வாழ்வியலை, ஒழுக்கங்களைப் பற்றியும், அவர்களுக்கான உரிப்பொருள், கருப்பொருள், முதல்பொருளாகிய நிலம், காலம் குறித்தும் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உலகமே முப்பொருளில்தான் உள்ளது எனவும் குறிப்பிடப்படுகின்றது. அம் முப்பொருளும் தொல்காப்பியத்தின் முதல், கரு, உரிப்பொருள்கள் என்பதில் அடங்குவதைக் காணமுடியும்.

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், பாடல் - 9)

இங்கு நிலத்தினையும் காலத்தினையும் பாகுபடுத்தும் போது முதல் எனும் சொல்லினுள் அடக்குகின்றார்.

இதனை,
முதலெனப்படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிய இயல்புணர்ந் தோரே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், பாடல் - 5)

இதில் நிலத்தினுள் நிலம் நிலைத்திருப்பிற்குக் காரணமான பஞ்சபூதங்களில் நிலம் தவிர்ந்த ஏனைய நான்கினையும் (நீர், காற்று, ஆகாயம், தீ) குறிப்பிடுகின்றார். இத்திணைப் பகுப்புமுறை தமிழ் நாட்டிற்கு உரிய நிலப்பகுதிகளை மட்டும் கொள்ளாது, உலக நிலத்தன்மைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு பிரித்துள்ளது தெளிவாகிறது. காரணம், பாலைத் திணைக்கான தன்மைகளைத் தமிழ்நாட்டில் காணமுடியாது. உலகம் முழுமைக்கும்

இந்த ஐந்து நிலங்களின் தன்மைதான் பொதுப்பண்பு என்பதை தொல்காப்பியமும் எடுத்தியம்பியுள்ளது கண்கூடு. இவ்வாறு நிலங்களின் தன்மைக்கேற்ப ஐந்து வகைப்படுத்தி நிலப்பகுப்பிற்கும் கணித அறிவு அவசியமானது என்பதனை விளக்கிக் கணக்கியலையும் தன்னுள் புதைத்துள்ளதனைக் காணலாம்.

காலப்பகுப்பு

இந்தியக் காலக்கணித ஆசிரியர் எல்.டி.சாமிக்கண்ணுபிள்ளை 'இந்தியாவிலுள்ள மற்றைப் பகுதியினர் மாத்திரம் சாந்திமான் கண்டனப்படி நடக்க, தமிழர் மாத்திரம் சௌரமான கணிதத்தை (சூரிய கதியைக் கொண்டு காலம் கணிக்கும் முறை) விடாது பற்றிக் கொண்டிருப்பதால் அவர்கள் வழக்கு வெகு புராதனமானது என்று கொள்வதற்கு இடம் தருகிறது என்கிறார். தொல்காப்பியர் பருவ காலத்தை ஆறாக வகுத்துள்ளார். அதாவது ஒரு ஆண்டினை, கார் காலம் (ஆவணி, புரட்டாசி), கூதிர் காலம் (ஐப்பசி, கார்த்திகை), முன்பனிக் காலம் (மாசி, பங்குனி), பின்பனிக்காலம் (மாசி, பங்குனி), இளவேனிற் காலம் (சித்திரை, வைகாசி), முதுவேனில் காலம் (ஆனி, ஆடி) என்பனவாகும். இவையே அறுவகைப் பெரும் பொருதுகளாகும். இது போன்று ஒரு நாளினை, வைகறை, விடியல், நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம் என ஆறு சிறு பொழுதுகளாகவும் வகுத்துள்ளதனையும் காணலாம்.

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், பாடல் - 9)

இங்கு நிலத்தினையும் காலத்தினையும் பாகுபடுத்தும் போது முதல் எனும் சொல்லினுள் அடக்குகின்றார்.

இதனை,
முதலெனப்படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிய இயல்புணர்ந் தோரே"
(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், பாடல் - 5)

காலம் எனும் போது, மாத்திரை, நாழிகை, யாமம், ஆண்டு, பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயநம், ஆண்டு, யுகம் எனப் பல வகைப்படுத்துகின்றார். இவற்றை வைத்து நோக்கும் போது காலப் பகுப்பிற்கு அடிப்படையாகக் கணக்கியல் விளங்குவதானது அவதானிக்கத்தக்கது.

உறை, ஓரை / நேரக்கணிப்பு

கி.மு.1600க்கு முன்பே பாபிலோனியர் 60 என்ற எண் அமைப்பைக்கொண்டு 60 நிமிடங்கள் ஒரு மணி என்றும் 60×6=360 டிகிரி ஒரு வட்டம் என்றும் குறித்தனர்.13 பாபிலோனியரின் இக்கணக்கை கிரேக்கர்கள் பெற்றுக் கொண்டனர் (இரவா, http://thamizmandram.blogspot.com/, 05/12/2010) பாபிலோனியர் 60 என்றது 6×10= 60 எனக் கொண்டனர். தொல்பழங்கால மக்களிடையே (எகிப்து, சுமேரியா, இந்தியா, சீனா) நாள் பகுப்பு, பகல், இரவு என்றும் சூரியன் எழும் விழும் காலத்தைக் கணக்கிட்டு பகல் 12 மணி, இரவு 12 மணி என்றனர். 12 என்பது திங்கள் சுற்றைக் குறிக்கும். இப்பகுப்பு முறைத் தமிழ் நிலத்திற்கும் உரியதே. தமிழர்கள் ஞாயிற்றின் இயக்கத்தைக் கொண்டு பன்னிரு ஓரைகள் வகுத்தனர். (மேலது)

இக்கணக்கின்படி 1/12 + 1/12 = 1/24, 24 இல் ஒரு பகுதி ஒரு மணி. பாபிலோனியர் இதை ஹோரா என்று குறிப்பிட்டனர். ஹோரா என்பதே தற்காலத்தில் ஹவர் (Hour)

ஓரை என்ற சொல் தமிழில் இருபொருள் பயந்து நிற்கிறது.

ஓரை - இராசி, முகூர்த்தம், (இளம்பூரணர், நச்சினார்க்கினியர்).

ஓரை - மகளிர் வட்டமாக நின்று ஆடும் ஆட்டம் - இது மகளிர் விளையாட்டு.

ஹோரா விளையாட்டு / நடனம் என்று குறிக்கப்படுகிறது. வட்டமாக நின்று ஆடும் இம்மகளிர் விளையாட்டில் பன்னிருவர் அல்லது இருபத்து நால்வர் இருப்பார்களா? என்பதையும் அது எந்த நாளில் ஆடப்படுவது என்பதையும் ஆராய்தல் வேண்டும்.

தொல்காப்பியர் கூறும் நொடி = 1/60 நிமிடம் எனக் கொண்டால்

60 நொடி = 1 நிமிடம்

60 மரக்கால் (நிமிடம்) = 1 உறை (Hour)

ஒரு நொடியின் கால அளவு 1/60 என்பதை அறிவியல் முறையில் ஆராய்ந்து கணக்கிடல் வேண்டும். (மேலது) உறே, ஒறெ, என்னும் சொற்கள், ஒறெ என்றாகின என்பதும் புலனாகின்றது.

மெய்ப்பாடு

மெய்ப்பாடுகள் (மெய் - உடல்; மெய்ப்பாடு - உடலில் தோன்றும் உணர்வுகள்) ஒன்பது என்பர்; அவற்றை "ஒன்பான் சுவை" என்றும் "நவரசம்" என்றும் வழங்குவர். ஆனால் தமிழர்தம் கோட்பாட்டின்படி மெய்ப்பாடுகள் எட்டே என்கிறது தொல்காப்பியம். இதனை,

> *"நகையே அழுகை இளிவரல்*
> *அச்சம் பெருமிதம் வெகுளி*
> *உவகை ருட்கை என்று*
> *அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"*
> *(தொலகாப்பியம்,. பொருளதிகாரம். மெய்ப்பாட்டியல், பாடல் - 03)*

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது. நகை, அழுகை, இளிவரல் (இழிபு), மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற இந்த எட்டு வகை உணர்வுகளும் தமிழருக்கு மட்டும் உரியதன்று, அவை உலக மாந்தர் யாவருக்கும் பொது. முழு மனிதர் யாவரிடத்தும் தோன்றுவது. அத்தோடு இந்த எட்டு வகை மெய்ப்பாடுகள் தோன்றக் காரணமான காரணிகளும் இவ்வண்ணமே அமைகின்றன. எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படும் "பெருமிதம்" என்ற உணர்விற்கான காரணங்களாகக் கற்ற கல்வி, எதற்கும் அஞ்சாத பண்பாகிய தறுகண், எல்லா நிலைகளாலும் வருகின்ற புகழ், கொடுத்தலாகிய கொடைத் தன்மை என்ற நான்கினைச் சுட்டுகிறது தொல்காப்பியம். இத்தன்மை மனித சமூகம் அனைத்திற்கும் பொதுதானே என விளக்கமளித்து எண்வகை குணங்களையும், நவரசங்களையும் கணக்கிட்டுள்ளதனைக் காணலாம்.

முடிவுரை

தொல்காப்பியம் வெளிப்படுத்தும் கணிதவியல் பற்றி ஆராயப்படும் போது, தெல்காப்பியத்தின் ஊடாக பழந்தமிழர்கள் வழக்கில் இருந்த கணக்கியலுடன் தொடர்பான

பழக்கவழக்கங்களை அறிந்துகொள்ளவதாக அமையும், பழந்தமிழர் அறிவியலையும் அதில் கணக்கியலின் வகிபங்கினையும் எடுத்துக்காட்டலாம், மக்களது வாழ்வில் கணக்கியல் எந்தளவிற்கு சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதனை அறிவதனூடாக மக்களது மதிநுட்பத்தினை அறிந்துகொள்ளலாம், கணக்கியலானது மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வுடன் பின்னி;ப்பிணைந்த ஒன்று. இதனை நம் மூதாதையர்கள் நாம் கற்றுக்கொள்ள எவ்வழிகளை அமைத்துத் தந்துள்ளனர் என்பதனை அறிந்துகொள்ளமுடியும், தொல்காப்பியம் தமிழ் இலக்கணம் மட்டுமன்றி அறிவியல் பேசும் நூலாகவும் அமைந்துள்ளது என்பதனை அனைவரும் அறியச் செய்யமுடியும். தொல்காப்பியத்தின் சிறப்பினை எதிர்கால சந்ததியினருக்கும் எடுத்துரைப்பதாக அமையும். பண்டைக்கால தமிழர்களது வாழ்வில் அறிவியல் மற்றும் மருத்துவம், சோதிடம், வானியல், தொழில்நுட்பவியல் என இன்னோரன்ன விடயங்களை எடுத்துரைக்கின்றன. அத்தகைய சிறப்பு மிக்க பண்டைத் தமிழ் இலக்கியங்களில் ஒன்றான தொல்காப்பியத்தில்; குறிப்பிடப்பட்டுள்ள கணிதவியல் பற்றி அறிந்துகொள்வதுடன் எதிர்கால சந்ததியினரிற்கும் அறியச் செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர்களின் கணக்கியல் அறிவியல் முறையில் நிலை பெற்றிருந்தது. தொல்காப்பியரின் மொழியியல் ஆய்வுக் கூடத்தில் எண்ணும் எழுத்தும் சொல்லும் பொருளும் அறிவியல் முறைப்படி ஆராய்ந்து நிலைப்படுத்தப்பட்டது. தொல்காப்பியத்தில் கணிதவியல் கூறுகளான கூட்டல் கழித்தல் பெருக்கல் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்காலத்தில் மிக வளர்ந்த நிலையில் உள்ள கணிதவியல் சிந்தனைகளைத் தொல்காப்பியர் வாழ்ந்த காலத்தில் வழக்கில் இருந்துள்ளதனைத் தொல்காப்பிய பாடல்கள் மூலம் காணமுடிகின்றது. தொல்காப்பிய பாடல்களில் இத்தகைய கணிதவியல் கூறுகள் பயன்பாட்டில் இருந்தமையை அறிவதன் மூலம் அக்காலத்தில் தமிழர்கள் தமிழர்கள் கணித அறிவில் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதற்குச் சான்றுபகர்க்கின்றது. இன்றைய கணித முறைமைகளைத் தமிழர்கள் அன்றே தெரிந்து வைத்துள்ளனர் என்பது இதன் மூலம் புலனாகின்றது. இவற்றினூடாக கணிதவியலை உலகிற்களித்தவர்கள் தமிழர்கள் என்பது கண்கூடு.

துணைநின்ற நூல்கள்

1. தரமணி, (17.06.2019), நச்சினார்க்கினியார் உரை, எழுத்ததிகார மூலமும் உரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. (1978), தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை), கழக வெளியீடு, சென்னை.
3. (1969), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை), கழக வெளியீடு, சென்னை.
4. மூவேந்தன்.ப.சு, தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை), தமிழாய்வுத் துறை, அருள்மிகு சுப்பிரமணிசுவாமி அரசினர் கல்லூரி, திருத்தணி.
5. வேள்ளைவாரணனார்.க, (1978), தொல்காப்பியம் - வரலாறு (மூன்றாம் பதிப்பு), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
6. சிதம்பரம்.வ.உ, (1928), தொல்காப்பியம் - இளம்புரணர் எழுத்ததிகாரம் பதவுரை.
7. தேவநேயப்பாவணர், (1944), தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம் உரை, தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகம், திருநெல்வேலி.

8. பாலசுப்பிரமணியன்.சி, (1995), தொல்காப்பிய கட்டுரைகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
9. சுப்பிரமணியன்.சா.வே, (2008), தொல்காப்பியம் முழுதும் விளக்கவுரை, மெய்யப்பன் பதிப்பகம்.
10. தேவநேயப்பாவாணர்.ஞா, (2017), பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், கௌரா பதிப்பகம், ப. 156
11. மயிலை சீனி. வேங்கடசாமி, (2008), தொல்காப்பியம் பன்முகவாசிப்பு, மாற்று வெளியீடு, ப.42
12. மாணிக்க நாயக்கர்.பா.வே, (1968), தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம், சைவசித்தாந்த நூற்பதிப்புகக்கழகம், ப.5
13. மதிவாணன்.இரா, தமிழர் வரலாற்றில் புதிய பார்வை, கட்டுரைத் தொகுப்பு.
14. திருஞானசம்மந்தம்.க, நன்னூல் எழுத்ததிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு.
15. திருஞானசம்மந்தம்.க, தொல்காப்பிய பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு.
16. சண்முகம்பிள்ளை.மு, தொல்காப்பிய பொருளதிகாரம் (இனம்பூரணர் உரை), முல்லை நிலையம், சென்னை
17. சு.நரேந்திரன், தொல்காப்பியத்தில் உடற்கூறும் அறுவை மருத்துவமும், ஜஸ்டிஸ் பத்திரிகையின் நிர்வாகம், (23 மார்ச் 2018).
18. நிதி.நா.க, தொல்காப்பியத்தில் அறிவியல் நுட்பங்கள், கட்டுரை, (02.06.2021).
19. தமிழ்ப் பேரகராதி, பிங்கலம், 7: 327 ப. 247.
20. மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப. 156.
21. இரவா, http://thamizmandram.blogspot.com/, கட்டுரை, (05.12.2010).
22. https://www.tholkappiyam.org, தொல்காப்பியம் நூற்பாக்கள், (கட்டுரை), உலகத் தொல்காப்பிய மன்றம்.

தொ.மா.க. 173

தொல்காப்பியத்தில் சிறுதானியமும் தொலைந்துபோன அருந்தானியமும் ஆய்வு

மருத்துவர் வரதா கந்தசாமி
Medical Practitioner - Sri Lanka
Bachelor's in nursing- Ontario, Canada
Master's in public health- Ontario, Canada
Nurse Practitioner/Primary Care Practitioner/Family Doctor- Ontario, Canada
varathak@hotmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழரின் பாரம்பரிய பயிர்களாக பயிரிடப்பட்ட சிறுதானியம், பணப்பயிர்களின் வருகையால் பின் தள்ளப்பட்டு விட்டது. சிறுதானியங்களின் பாவனையும் பயனும் தொல்காப்பிய காலத்திலிருந்தே தமிழர் அறிந்திருந்ததை தொல்காப்பிய நூற்பாக்களின் மூலமும் பல சங்க இலக்கிய பாடல்கள் மூலமும் அறியக் கூடியதாகவுள்ளதும் இதனால் அக்கால தமிழரின் அறிவியலும் புலப்படுகின்றது.

நவீன ஆய்வுகளின் படி, “அருந்தவசம்” எனக்கொள்ளப்படும் சிறுதானியங்கள் ஊட்டச்சத்தின் உறைவிடம் எனவும் பல உடல் ஆரோக்கிய கூறுகள் உள்ளதாகவும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

அரிசி, கோதுமை, மக்காச் சோளம் என்பவற்றைவிட சிறுதானியங்களில் பல நூண்ணுயிர் சத்துக்கள் (Micro Nutrients), நார்ச்சத்து, மாப்பொருளைச் சீராக இரத்தத்தில் வெளியிடும் தன்மை (Low Glycemic Index) என்பனவும் இன்னும் பல நன்மைகளும் இருப்பதால் உடல் ஆரோக்கியத்திற்கும், நாள்பட்ட நோயை தடுப்பதற்கும் (Choric Diseases) முக்கிய பங்காற்றுகின்றது.

திறவுச் சொற்கள்; சிறுதானிய வகைகள், சீமைத்தினை, நூண்ணுயிர் சத்துக்கள், ஆண்டிஆக்சிடன்ட், ஏ1சி, நாள்பட்ட நோய்,

முகவுரை

தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல். இதன் காலம் கி.மு. 711ஆண்டு என்பது அறிஞர் கணிப்பாகும். இது தமிழரின் இலக்கணத்தை சொல்வதோடு தமிழரின் வாழ்க்கை முறைகளையும், பல அரிய அறிவியல் கருத்துக்களையும் உணர்த்தும் ஒப்பற்ற நூலாகும். தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல், அகத்திணை இலக்கியக் கோட்பாடுகளை விளக்குகிறது

அகத்திணையியல், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல், மருதம் எனும் ஐந்திணைகளையும் அவற்றுக்கான முதல், கரு, உரிப் பொருட்களையும் விளக்குகின்றது. உலகத்துப் பொருட்கள் எல்லாம் முதல், கரு, உரி என்னும் முப்பொருட்களில் அடங்கும் என்கிறது தொல்காப்பியம். இவற்றுள் நிலமும், பொழுதும், உலகச் செயல்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைவதாகவும் காட்டப்படுகின்றது. நிலமானது நால்வகையாகப் பிரிக்கப்பட்டு காடு, மலை, வயல், கடல் எனவும், அவை சார்ந்த பகுதிகள் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனும் திணைக்குரியனவாக வகுக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றுக்கும் உரிய கருப் பொருட்களும் தனித்தனியாக

> *‘தெய்வம் உணவு மாமரம் புள்பறை*
> *செய்தி யாழின் பகுதியொடு*
> *அவ்வகை பிறவும் கருவென மொழிப’ (அகத்திணையியல்-20) என்று*
> *தெளிவாகவும், கூறப்படாது விடுபட்ட பிறவற்றையும் உள்ளடக்குவதாக*
> *“அவ்வகை பிறவும்” என்றும் கூறப்பட்டிருக்கின்றது. (1)*

ஆய்வுத் தலைப்பு : மேற்குறிப்பிட்ட நூற்பாவில் கூறப்பட்டுள்ள கருப்பொருட்களே இந்த ஆய்வின் கருவாகும். இந்த ஆய்வு, பண்டைய தமிழர் தம் வாழ்வில் பயன்படுத்திய சிறுதானிய வகைகளையும் அவற்றின் சிறப்பையும் அவை மீண்டும் பாவனைக்கு வருவதற்கான முயற்சிகளையும் கூறுவனவாகவும் அமைகின்றது.

ஆய்வுச் சிக்கல் : ஆய்வுத் தலைப்பு தொடர்பாக தொல்காப்பியத்தில் நேரடியான கருத்து இல்லை. இலக்கியத் தேவைக்காக யாக்கப்பட்ட நூற்பாக்களிலிருந்து இந்த ஆய்வுக்குத் தேவையான தகவல்களைப் பிரித்து எடுப்பது சிக்கலானது.

ஆய்வு அணுகுமுறை : சமுதாய அணுகுமுறை, வரலாற்று அணுகுமுறை, ஒப்பாய்வு அணுகுமுறையுடன் அறிவியல் அணுகுமுறையும் பயன்படுத்தப் படுகின்றது.

ஆய்வுச் சான்றுகள் : முதன்மைச் சான்றுகள்; தொல்காப்பியம் பொருளதிகாரமும், உரைகளும். புறநானாறு, மலைபடுகடாம்,

துணைச் சான்றுகள் - இத் தலைப்புத் தொடர்பான முன்னைய ஆய்வுகள்.

கருதுகோள் : ஐவகை நிலங்களில், ஒவ்வொரு நிலத்துக்குமுரிய உணவு வகைகளை, குறிப்பாக சிறுதானிய வகைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது. பண்டைத் தழிழரின் பாரம்பரிய உணவாக சிறுதானியம் இருந்திருக்கிறது என்பதும் நில வழியாகச் சிறுதானியங்களை வகுத்தனர் என்பதும் அவற்றின் பலன்களைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர் என்பதும் இந்த ஆய்வின் கருதுகோளாகும்.

ஆய்வேட்டின் அமைப்பு : இவ்வாய்வானது முன்னுரை, முடிவுரை முறையே அமைய கீழ்க்காணுமாறு ஐந்து இயல்களாக பகுக்கப்பட்டுள்ளது. இளையவர்களின் புரிந்துணர்வுக்காக, சில பகுதிகள் ஆங்கிலத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இயல் 1. தொல்காப்பியம் பொருளதிகாரம் -முதற்பொருள்

இயல் 2. தொல்காப்பியம் கருப்பொருள் - உணவு- சிறுதானியங்கள்

இயல் 3. கால ஓட்டத்தில் சிறுதானியங்கள்

இயல் 4. சிறுதானியம் அறிவியல் நோக்கு

சிறுதானியங்கள்- வரலாறும் வகைகளும்

சிறுதானியங்களும் மறு தானியங்களும் ஒப்பிடு

இயல் 5. சிறுதானியங்கள் -ஆய்வும் பயனும்

இயல் 1 .தொல்காப்பியம் பொருளதிகாரம் - முதற் பொருள்

தொல்காப்பியரின் ஐந்திணைக் கோட்பாடு

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல், அகத்திணை இலக்கியக் கோட்பாடுகளை விளக்குகிறது. அன்பின் திணைக்குமான முதல், கரு, உரி எனும் முப்பொருள் பாகுபாடுகளை விரித்துரைத்துள்ளன. இவற்றுள், நிலமும், பொழுதும், முதற் பொருளாகவும் உலகச் செயல்கள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைவதாகவும் காட்டப்படுகின்றது. எந்த ஒரு நிகழ்வும் நிகழவேண்டுமெனில் அதற்கு முதற்காரணமாக அமையப்பெறுவது நிலமும், பொழுதும் ஆகும். இத்தகைய முக்கியத்துவம் கருதியே நிலத்தையும் பொழுதையும் முதற்பொருள் என தொல்காப்பியத்தில் காட்டப்படுகின்றது (1,5)

"*முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்*
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" *(அகத். நூற்பா- 4)*

அகத்திணை திணைகளுக்குரிய நிலத்தையும் பொழுதையும் எடுத்தியம்பியுள்ளன. ஒரு திணையின் இயக்கத்தையும் திணையில் வாழ்கிற மக்களின் வாழ்வியலையும் தீர்மானிப்பதில் முக்கிப் பங்காற்றுபவை நிலமும் பொழுதும் ஆகும். அகப்பொருள் சார்ந்த எழுதிணைகளுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்தும் அன்பின் ஐந்திணைகளாகும்.

இவற்றை தொல்காப்பியர் காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பருமணல் உலகம் என்று கூறுகிறார்.

'*மாயோன் மேய காடுறை உலகமும்*
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே' (அகத்.-5)

"*நடுவு நிலத்திணையே நண்பகல் வேனிலொடு முடிவு நிலமருங்கின் முன்னிய நெறித்தே (அகத்.-11)*

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், எனக் கூறும் இந்நால்வகை நிலத்துடன்
நிலமற்ற பாலையையும் நிலமாகக் தொல்காப்பியம் சுட்டுகிறது (1,5).
மமுல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர்
உறுத்துப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும்
(சிலப். காடுகாண். 64-66)

இந்நிலப்பாகுபாடு வேறு எந்த மொழியிலும் இருப்பதாகத் தெரியவில்லை என எண்ணப்படுகின்றது (7).

இயல் 2. தொல்காப்பியம் பொருளதிகாரம் - கருப்பொருள்

நிலத்தே காணப்படும் பொருள்கள் கருப்பொருள் எனப்படும். தேவர், மக்கள் முதலானவர்களையும், உணவு, தொழில், பறை யாழ் போன்றவற்றையும் கருப்பொருள் என்பர். இக்கருப்பொருள் நிலத்துக்கு நிலம் வேறுபடும். இதனைத் தொல்காப்பியம்,

'தெய்வம் உணவு மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு
அவ்வகை பிறவும் கருவென மொழிப' (அகத்திணையியல்-20)

'தெய்வ மானிடஞ் செய்தியுணவோ
டெய்திய விசைவிலங் கினையன பிறவும்
பொய்தீர் கருவெனப் புகன்றனர் கொளல''. (தமிழ் நெறி விளக்கம்-6)

என்ற நூற்பாக்களின் வாயிலாகத் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, இசைக் கருவிகள், தொழில், பண் ஆகியனவற்றைக் கருப்பொருட்களாகக் கூறிப் பிறவும் என்று சுட்டியுள்ளது.

இதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உணவுக்கான பகுதியில் எழுதிய உரையின் மூலம் அவ்வவ் நிலங்களுக்குரிய சிறுதானிய வகைகளும் உணர்த்தப் பட்டுள்ளது. திணை அடிப்படையிலேயே உணவுப் பொருட்களைக் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இளம்பூரணர் உரையின் படி, முல்லை: உணவு வரகும் முதிரையும் குறிஞ்சி:
உணவு தினையும், ஐவனமும்வெதிர் நெல்லும் பாலை: உணவு ஆறலைத்தலான்
வரும் பொருள் மருதம்: உணவு நெல்...நெய்தல்: உணவு உப்புவிலையும் மீன்
விலையும் எனவும் (தொல்.பொருள்.அகத்.நூ.17இளம்.உரை)

மற்றோர் உரையாசிரியரான நச்சினார்க்கினியர்,

'முல்லைக்கு உணா, வரகுஞ் சாமையும் முதிரையும், குறிஞ்சிக்கு உணா,
ஐவனநெல்லுந் தினையும் முங்கிலரிசியும் மருதத்திற்கு உணா, செந்நெல்லும்
வெண்ணெல்லும் நெய்தற்கு உணா, மீன் விலையும் உப்பு விலையும் பாலைக்கு
உணா, ஆறலைத்தனவுஞ் சூறைகொண்டனவும்'. (தொல்.பொருள்.
அகத்.நூ.17நச்சர்.உரை)

என்று இளம்பூரணரைப் போன்றே நச்சினார்க்கினியரும் திணை அடிப்படையிலேயே உணவுப் பொருட்களைக் சுட்டிக் காட்டியுள்ளார்.

தினையே தருப்பண முதிரை செந்நெல்
விலைகோ ளினையன மேவிய வுணவே (தமிழ்நெறி-10)

குறிஞ்சி, முல்லை நிலத்தில் சிறுதானியமும், மருத நிலத்தில் நெல்லும், நெய்தலில் உப்பும், பாலைக்கு ஆறலைத்த பொருளும் சூறலைத்த பொருளுமாக தொல்காப்பியம் ஐந்திணைக்குரிய உணவுவகைகளை வகைப்படுத்தியுள்ளது.

மேலும் தொல்காப்பியப் பொருளதிகார மரபியலில் நால்வருணத்தார் பற்றிய பகுதியில் வணிகர்களுக்கு எட்டு வகையான உணவுப்பொருட்களை உருவாக்கும் தொழில் உரியது என்பதைக் குறிக்கும் நூற்பா உள்ளது.

'மெய்தெரி வகையின் எண்வகை உணவின்
செய்தியும் வரையார் அப்பா லான '(தொல்.பொருள்.மர.நூ.79)

இதற்கு இளம்பூரணர் 'எண்வகை உணவான நெல்லு, காணம், வரகு, இறுங்கு, தினை, சாமை, புல்லு, போதும்பை இவற்றை உண்டாக்குகின்ற உழவு தொழிலும் வாணிகர்க்கு வரையா தென்றவாறு என விளக்குகிறார். (தொல்.பொருள்.மர.நூ.79 இளம்.உரை)'

"உணவெனப் படுவது நிலத்தொடு நீரே" (புறம்.- 18)

ஒவ்வொரு உணவினுடையக் கூறும், நிலத்தையும் நீரையும் சார்ந்திருக்கிறது என்ற புரிதல் சங்க இலக்கிய காலத்திலேயே தமிழர்களிடம் இருந்திருக்கிறது. சங்ககால விவசாயத்தின் சிறப்பு நிலத்தை வகைப்படுத்திப் பிரித்தது தான். பண்டைத் தமிழர்களின் வேளாண் அறிவியலால் சிறுதானியங்களை குறிஞ்சி, முல்லை நிலத்திலும், நெல் வகையை மருத நிலத்திலும் பயிரிட்டார்கள் என்பதை அறியமுடிகின்றது.

இயல் 3 1. சங்க காலத்தில் சிறுதானியங்கள்

தொல்காப்பியத்தை தொடர்ந்து வந்த பல சங்க இலக்கியங்களிலும் தழிழரின் பண்பாட்டு உணவான சிறுதானியத்தின் பாவனையும் பயனும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக வரகு என்ற தவசம் சங்க இலக்கியத்தில் 29 இடங்களில் குறிக்கப்படுகிறது.(2)

'கருங்கால் வரகே இருங்கதிர் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான் கல்லது உணாவும் இல்லை' (புறம்.- 335)

என்ற புறநானூற்றுப் பாடலில் கரிய அடியையுடைய வரகு, பெரிய கதிரையுடைய தினை, சிறிய கொடியில் விளையும் கொள், புள்ளிகள் நிறைந்த அவரை இவை நான்கைத் தவிர வேறு உணவுப்பொருட்களும் இல்லை எனக்காட்டப்படுகின்றது.

பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேலையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர் (மலைபடு. 168-169)

தினையரிசிச் சோற்றை நெய்யில் பொரித்த இறைச்சியுடன் சேர்த்து உணவாக உண்டனர் என்பதை, இவ் மலைபடுகடாம் பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

'வரகும், தினையும் உள்ளவை எல்லாம்
இரவலம் மாக்களுக்கு ஈயத் தொலைந்தன (புறம்-333)
'உடை முதல் புறவு சேர்ந்திருந்த
புன்புலச் சீறூர், நெல் விளையாதே' (புறம்-328)

தொண்டை நாட்டில் முல்லை நிலத்தைச் சார்ந்திருக்கும் புன்செய் நிலங்களையுடைய சிறிய ஊர்களில் நெல் விளைவதில்லை. அந்நிலங்களில் விளைந்த வரகும் தினையுமாகிய உணவுப் பொருட்களை பொருள் இல்லாதவர்களுக்கு தானமாக வழங்கினர் என்பதினை இவ்வரிகளின் மூலம் அறியலாம்.

'வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமெரன வேயினித்த மோரும் -திறமுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந்திட்டசோறு
எல்லா உலகும் பெறும்'. (ஔவை-32)

வரகரிசிச் சோறு முதன்மையாக இடம்பெற்றிருந்ததை ஔவையின் இப்பாடல் மூலம் அறியலாம்.

கீழும் மேலும் எஞ்சாமைப் பல காய்த்து
வாலிதின் விளைந்த புது வரகு அரிய
தினை கொய்ய, கல்வை கறுப்ப, அவரைக்
கொழுங்கொடி விளர்க் காய் கோட் பதம் (புறம்.-120)

பாரியின் நாடு கதிர்கள் வளைந்து ஒடியாமல் வரகானது மிகக் காய்ந்து விளைந்தது. அந்த வரகை அறுக்கவும், தினையை அரியவும், கொடி அவரையையும் அறுக்கவும் அந்நாடு ஆரவாரம் உடையதாயிருந்தது என்பதை, பாரிநாட்டின் உணவு வளத்தை புகழ்ந்து கபிலர் சிறப்பித்துள்ளார்.

மேற்கூறப்பட்ட பாடல்களினூடாக, சங்ககாலத்தில் சிறுதானியங்கள் மிகையாக பாவனையிலிருந்ததையும் அக்கால மக்கள் அவற்றை நன்கு பயன்படுத்தி உள்ளனர் என்பதும் வெளிப்படையாகின்றது.

சமகாலத்தில் சிறுதானியங்கள்

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக எமது உணவுப் பழக்கங்களில் பல காரணிகள் தமது ஆதிக்கத்தை உண்டு பண்ணி வருகின்றது. உணவு வழக்கங்களில் ஏற்பட்ட அரசியல் தாக்கங்களினாலும், பொருளாதார பின்னனியாலும், மேற்கத்திய உணவுக் கலாச்சார அழுத்தத்தினாலும் எமது உணவுப் பழக்கம் முற்றிலும் மாறிவிட்டது. ஒரு காலத்தில் பாரம்பரிய பயிர்களாக உலகெங்கிலும் பயிரிடப்பட்ட சிறுதானியம் அரிசி, கோதுமை மற்றும் மக்காச்சோளம் முதலிய பணப்பயிர்களின் வருகையால் பின் தள்ளப்பட்டு விட்டது (7).

உணவு நுகர்வானது சிறுதானியங்களிலிருந்து அரிசி- கோதுமையை மையமாகக் கொண்ட உணவு முறைக்கு மாறி பல காலமாகி விட்டது. எடுத்துக் காட்டாக, சிறுதானியங்கள் 1970 களில் இந்தியாவில் 25% உணவுத் தேவையை பூர்த்திசெய்து வந்துள்ள நிலையில், பசுமைப் புரட்சியின்போது, சிறு தானியங்களே சிறப்பு வாய்ந்த உணவாக இருந்தபோதும் அரிசியையும் கோதுமையையும் மக்கள் விரும்பி உண்ணத் துவங்கியவுடன், தற்போது உணவு தேவையில் சிறு தானியங்களின் பங்கு 6%க்கும் கீழ் குறைந்துள்ளது (7).

இன்றைய இளைய தலைமுறையைக் குறிவைத்துத் தயாரிக்கப்படும் கண்ணைக் கவரும் வண்ண வண்ண உணவுகளும், நாக்கு ருசியைப் பெருக்கும் கொழுப்பும் எண்ணெயும் மிகுந்த பதப்படுத்தப்பட்ட உணவுகளும், சத்தே இல்லாத குளிர்பானங்களும், 'சமைக்கும் நேரம் மிச்சம்' என்று நம்மை ஏமாற்றிச் சாப்பிட வைக்கும் துரித உணவுகளும் எம் இளைய சமூகத்தின் ஆரோக்கியத்திற்கு சவாலாக அமைந்துள்ளது. சிறுதானியங்களின் விழிப்புணர்வே

இல்லாத ஒரு சமூகமாக பல காலம் தள்ளப்பட்ட நிலையில், சமகாலத்தில் ஏற்பட்ட ஆரோக்கிய அழிவு சிறிது விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது எனலாம். .

சிறுதானியங்களை 'எதிர்கால உணவு' என்று வரையறுத்து, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உற்பத்தி, நுகர்வை அதிகப்படுத்தவும் முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுதானிய ஆண்'டாக 2023ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகள் அவை அறிவித்திருப்பது ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தும் என எண்ணத் தோண்றுகின்றது (4).

இயல் 4. சிறுதானியம் அறிவியல் நோக்கு

சிறுதானியங்கள்- வரலாறும் வகைகளும் தானியம் என்பது புல் வகைத் தாவரங்களில் இருந்து விளைவிக்கப்படும் உணவுகளைக் குறிப்பதாகும். சிறுதானியம் என்பது தானியங்களில் சிறிய விதைகளைக் கொண்டவை. சிறுதானியத்தின் வரலாறு புல்லின தொடக்கத்திலிருந்தும் மனிதன் வேட்டையாடி வாழ்ந்த காலத்திற்கும் முற்பட்டதாகும். ஆய்வுகளின் படி முதலில் சிறுதானியம் சீனாவிலும், தொடர்ந்து சிந்து வெளிப் பகுதியிலும் பயிரிடப்பட்டு வந்துள்ளது. இதன் காலம் கி.மு 3,300 லிருந்து கி.மு 1, 3000 வரை என கணிக்கப் பட்டுள்ளது. சீனாவில் முதலில் தினை

பயிரிடப்பட்டு உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது. சிறுதானியம் உலகின் பல பாகங்களின் முதல் உணவு வகையில் இருந்ததாகவும், அறியப்படுகின்றது. அண்மை தொல்லியல் கருத்தின் படி, சிறுதானியங்கள் இந்தியா, சீனாவை தொடர்ந்து ஆபிரிக்கா, ஐரோப்பா, போன்ற நாடுகளில் கி. மு. 2500 ஆண்டளவில் பயிரிடப்பட்டதாக தெரிகின்றது. சிறுதானியம் பல காலமாக தழிழர் பண்பாட்டில் ஒரு நிலையான உணவாகவும் தென் இந்தியாவில் பல இடங்களில் பயிரிடப்பட்டதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சிறுதானியங்கள் பண்டைத் தமிழரின் 'அருந்தவசம்' எனப் போற்றப்பட்டது (7).

தமிழர் பண்பாட்டில் வரகு (Kodo Millert), சாமை (Little Millet), தினை (Foxtail Millet), குதிரைவாலி (barnyard Millet), கம்பு (Pearl Millet), கேழ்வரகு (Ragi), சோளம் (Sorghum), பனிவரகு (Porso Millet) ஆகியவை வழக்கத்தில் உள்ள சிறு தானிய வகைளாகும். சிறு தானியங்களில் பல வகை உண்டு. ஒவ்வொரு வகைக்குள்ளும், பல உள் வகை உண்டு. சாமையில் மட்டும் 6 வகை உண்டு. அதேபோல் வரகில் 5 வகை உண்டு. இதேபோல மற்ற பயிர்களிலும் பல உள் வகை உண்டு (9).

சிறுதானியங்களும்- மறு தானியங்களும் ஒப்பிடு

அரிசியும் கோதுமையும் அதிக சக்தி (energy) உணவாகும். இவற்றில் நார்ச்சத்தும் நூண் ஊட்டச் சத்துக்களும் சிறுதானியத்துடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாகும். இவற்றில் நார் அதிகம் இல்லாததால் உண்டபின் சர்க்கரையை இரத்தத்தில் சீரற்று வெளியிடும் தன்மை உள்ளது (High Glycaemic Index Food).

எடுத்துக் காட்டாக நெல், கோதுமை மற்றும் சிறுதானியங்களின் ஊட்டச்சத்துக்கள் கட்டமைப்பு அட்டவணை (100 கிராம்) (3).

தானியம்	புரதம் (g)	சர்க்கரை (g)	கொழுப்பு (g)	மினரல் (g)	நார்சத்து (g)	கால்சியம் (mg)	பாஸ்பரஸ் (mg)	இரும்பு (mg)	தையமின் (mg)	தையசின் (mg)
ராகி	7.3	7.2	1.3	2.7	3.6	344	283	3.9	0.42	1.1
சோளம்	10.4	70.7	3.1	1.2	2.0	25	222	5.4	0.38	4.3
கம்பு	11.8	67.0	4.8	2.2	2.3	42		11.0	0.38	2.8
தினை	12.3	60.2	4.3	4.0	6.7	31	290	2.8	0.59	3.2
சாமை	7.7	67.0	4.7	1.7	7.6	17	220	9.3	0.3	3.2
வரகு	8.3	65.9	1.4	2.6	5.2	35	188	1.7	0.15	2.0
பனிவரகு	12.5	70.4	1.1	1.9	5.2	8	206	2.9	0.41	4.5
குதிரைவாலி	6.2	65.5	4.8	3.7	13.6	22	280	18.6	0.33	4.2
நெல் அரிசி	6.8	78.2	0.5	0.6	1.0	33	160	1.8	0.41	4.3
கோதுமை	11.8	71.2	1.5	1.5	2.0	30	306	3.5	0.41	5.1

Nutritional content in 100 gms of dry Grain	Protein (in gms)	Carbohydrates (in gms)	Fat (in gms)	Minerals (in gms)	Fiber (in gms)	Calcium (in mgs)	Phosphorous (in mgs)	Iron (in mgs)	Energy (in kCals)	Thaimin (in mgs)	Niacin (in mgs)
Foxtail	12.3	60.2	4.3	4	6.7	31	290	2.8	351	0.59	3.2
Little	7.7	67	4.7	1.7	7.6	17	220	9.3	329	0.3	3.2
Kodo	8.3	65.9	1.4	2.6	5.2	35	188	1.7	353	0.15	2
Proso	12.5	70.4	1.1	1.9	5.2	8	206	2.9	354	0.41	4.5
Barnyard	6.2	65.5	4.8	3.7	13.6	22	280	18.6	300	0.33	4.2
Sorghum	10.4	70.7	3.1	1.2	2	25	222	5.4	329	0.38	4.3
Pearl	11.8	67	4.8	2.2	2.3	42	240	11	363	0.38	2.8
Finger	7.3	72	1.3	2.7	3.6	344	283	3.9	336	0.42	1.1
Paddy Rice	6.8	78.2	0.5	0.6	1	33	160	1.8	362	0.41	4.3
Wheat	11.8	71.2	1.5	1.5	2	30	306	3.5	348	0.41	5.1
Quinoa	14	64	6	*	7	36	457	4.6	368	0.36	*

சீமைத்தினை என அழைக்கப்படும் Quinoa, சிறுதானியமல்ல, ஒரு கீரைவகையின் (Amaranth) விதையாகும். சீமைத்தினை மிகவும் ஆரோக்கிய உணவாக (super food) கருதப்படுகின்றது (17).

இயல் 5. சிறுதானியங்கள் ஆய்வும் பயனும்

நவீன ஆய்வுகளின் படி, அருந்தவசம் எனக்கொள்ளப்படும் சிறுதானியங்கள் ஊட்டச்சத்தின் உறைவிடம் எனவும் பல உடல் ஆரோக்கிய கூறுகள் உள்ளதாகவும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

நீரழிவு நோயை (Type 2 Diabetes) எதிர்த்தும் கட்டுப் படுத்தும் தன்மையும், இரத்தத்தில் கொழுப்புத் தன்மையை கட்டுப் படுத்துவதால் இருதய நோயை குறைக்கவும், இரத்த அழுத்தத்தை கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கவும், தைரொய்ட் சுரப்பியின் அளவை

சமநிலைப் படுத்தி பல உறுப்புக்களின் தொழிற்பாட்டை மேம்படுத்தவும் உதவுகின்றது. சிறுதானியத்தில் உள்ள நார்ச் சத்தானது குடலின் ஆரோக்கியத்திற்கு பெரிதும் காரணமாகின்றது. குளுட்டன் ஒவ்வாமைக்கு சிறுதானியங்கள் அரிய உணவாகும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வரகு (Kodo Millet) சிறுதானிய வகைகளுள் முக்கியமானது வரகு. இதை தொடர்ந்து பாவித்தால் மாதவிடாய் நிறுத்தத்தின் பின் ஏற்படும் இருதய சம்பந்தமான நோய்களை கட்டுப்படுத்தலாம். இதில் அதிக அளவு புரதச்சத்துக்களும், தாது உப்புக்களையும் கொண்டதாக இருக்கிறது. வரகு சர்க்கரை அளவை குறைக்கிறது. மேலும்,மூட்டு வலியைக் குறைக்கிறது. இதில் புரதம், இரும்புச்சத்து மற்றும் சுண்ணாம்புச்சத்து அதிக அளவில் காணப்படுகிறது.

Regular use of Kodo millet is very useful for postmenopausal females with indications of cardiovascular disease such as high blood pressure and high level of cholesterol. It includes higher amount of antioxidants that help against oxidative stress and maintain glucose concentrations in type-2 diabetes. Kodo millet is useful in curing asthma, arthritis, migraine, blood pressure, heart attack and atherosclerosis, and diabetics (14).

சாமை (Little Millet)

சர்க்கரை நோயை கட்டுப்பாட்டில் கொண்டுவர முக்கிய பங்கு வகிப்பது இதன் நார்ச்சத்து. சாமையிலுள்ள இரும்புச்சத்தை அளவிட்டால் மற்ற சிறுதானியங்களைக் காட்டிலும் அதிகம். இவை இரத்தசோகை வருவதை தடுக்கிறது. வயிறு கோளாறுக்கு சாமை நல்ல ஒரு மருந்தாக திகழ்கிறது. மேலும் இவை தாதுப்பொருட்களை உடலில் அதிகரித்து உயிரணுக்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில் சாமை பெரும்பங்கு வகிக்கிறது. நெல்லரிசியைக் காட்டிலும் ஏழு மடங்கு நார்ச்சத்து அதிகம் கொண்டுள்ளது.

Little millets can aid in combating lifestyle diseases due to their low carbohydrate content, slow digestibility, low glycemic index, and water-soluble gum content. The polyphenols in millets inhibit the activity of digestive enzymes such as amylase, glucosidase, pepsin, trypsin, and lipases, leading to the slow release of sugars into the blood and delayed glucose absorption from the intestines (13).

கம்பு (Pearl Millet)

கம்பு தானியத்தில் அதிக அளவில் புரதம், கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, ரைபோபுளோவின், நயாசின் சத்துக்கள், வைட்டமின்கள், தாது உப்புக்கள், மாவுச்சத்து, பி11 வைட்டமின், கரோட்டின், லைசின் போன்ற அமிலங்கள் உள்ளதால் உணவுச் சத்துத் தரத்தில் கம்பு முதலிடம் வகிக்கிறது. அரிசையை விட எட்டு மடங்கு அதிக இரும்பு சத்து கம்பு தானியத்தில் உள்ளது.

A variety of bioactive compounds present in pearl millet possess numerous health benefits such as antimicrobial, antioxidant, antidiabetic, and hypocholesterolemic effects,

as well as hypoglycaemic activity and guarding against diet-related diseases (12).

சோளம் (Sorghum)

சோளத்தில் சக்தி, புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, கால்சியம், இரும்புச்சத்து, பி-கரோட்டின், தயமின், ரிபோப்ளோவின், நயசின் ஆகிய சத்துக்கள் உள்ளன.

Studies have shown that grain sorghum lipids and the co-product, were able to promote cardiovascular health by reducing both plasma low-density lipoprotein (LDL) and liver cholesterol levels at different dosage levels. *In vitro in vivo* tests using sorghum-derived food products did not cause any gastrointestinal or non-gastrointestinal symptoms demonstrating the safety of gluten free sorghum for patients with celiac disease (13).

குதிரை வாலி (Barnyard Mllet)

குதிரைவாலியை சர்க்கரை நோயாளின் நண்பன் என்பர். நார்ச்சத்து, மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ் போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளது. ஆண்டி ஆக்சிடன்ட் (anti-oxidant) ஆக வேலை செய்கிறது. கோதுமையை விட ஆறு மடங்கு நார்ச்சத்து உள்ளது.

Barnyard millet is recommended to patient who suffers from cardiovascular diseases and diabetes. They are also most effective to reduce the blood glucose level and lipid level. The barnyard millet ideal millet for those patients who have gluten intolerance which cause celiac disease (10).

தினை (Foxtail Millet)

பழங்காலத்தில் முதலாவதாக பயிரிடப்பட்டு மனிதனால் உபயோகிக்கப்பட்ட தானியவகை தினை. இதயத்தைப் பலப்படுத்தும். பசியை உண்டாக்கும். இதில் புரதச்சத்துக்கள், கொழுப்புச்சத்து, தாது உப்புக்கள், நார்ச்சத்துக்கள், மாவுச்சத்துக்கள் மற்றும் வைட்டமின் பி, பாஸ்பரஸ், சுண்ணாம்புச் சத்து உள்ளது. A1C ஐ குறைத்து சக்கரை நோயைக் கட்டுப்படுத்தும் தன்மை உண்டு.

Whole grain Foxtail millet diet improved glucose tolerance, liver and kidney injury, and insulin resistance in diabetics. Clinical trials indicated that increased consumptions of foxtail millet reduced mean fasting blood glucose levels and mean 2h-glucose levels. Foxtail millet has anti-ulcer activity and reduced gastric ulcers through a down-regulation of inflammatory cyxtokine expression in gastric tissue and improved oxidative status. Foxtail millet extracts could potentially inhibit the growth of human breast, colorectal and liver cancer cells (10).

கேழ்வரகு (Ragi)

குரக்கன் அல்லது ராகி எனும் கேழ்வரகு அரிசி கோதுமையைக் காட்டிலும் சக்தி நிறைந்ததாகும். கேழ்வரகில் புரதம், கொழுப்பு, இரும்புச்சத்து, நார்ச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், தயமின், கார்போஹைட்ரேட் போன்றவை உள்ளன. இது தவிர பி. கரோட்டின், நயசின், ரிபோப்ளேவின் போன்ற சிறிய ஊட்டச்சத்துக்களும், அமினோ அமிலங்களும் நிறைந்துள்ளன. இது இரத்தத்தைச் சுத்தம் செய்வதுடன் எலும்பு சதையை வலுவாக்கும் தன்மையும் கொண்டது. மலச்சிக்கலை தடுக்கும்.

Various studies have been taken place in recent years. Ragi shows several properties like anti-inflammatory properties, anti-oxidant properties, and antimicrobial properties (13). Ragi among all cereals contains greater calcium levels along with high dietary fibre which is extremely beneficial for controlling blood glucose levels in diabetic patients (13). It is also beneficial for patients with cardiovascular and cognitive disease (13).

பனிவரகு (Porso Millet)

தற்போதைய ஆய்வுகளின் மூலம் பனிவரகு மார்பு, ஈரல் குடல் புற்று நோயை தவிர்க்கவும், கொழுப்பினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கவும் உதவுகின்றது. இந்த அரிசி நரம்பு மண்டலத்தை காக்கிறது. பனிவரகு இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவினை குறைக்கிறது. சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற உணவு ஆகும். பனிவரகில் உள்ள நார்ச்சத்து, செரிமானம் செய்ய உதவுகிறது. உடலில் உள்ள உள் உறுப்புகளின் இளமை காக்கின்றது.

Studies showed antiproliferative properties of Porso Millet (PM) against human breast cancer and liver cancer cells. PM in regular diets can lower cholesterol, and increase HDL and adiponectin. PM can be used as a prebiotic. Non-digestible carbohydrates in PM helps in the growth of desirable microflora in the intestine. It can prevent constipation and is therefore effective as preventive food against colon cancer. Moreover, PM has a low glycemic index (GI) compared to rice, wheat, and barley, which makes it an ideal food for people with type-2-diabetes mellitus and cardiovascular disease (15,16).

சிறு தானியம்- மறு பயன்கள்

சிறு தானியம் உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமில்லாது சூழலுக்கும் ஆற்றலைத் தர வல்லது. புவி வெப்பமடைவதால் விவசாயத்தில் ஏற்படும் தாக்கம் அனைத்து நாடுகளையும் சிந்திக்க வைத்திருக்கும் இவ்வேளையில் சிறுதானியப் பயிர்ச் செய்கை சிறந்த முயற்சியாகும். சிறுதானியம் சூழலுக்கு ஏற்ப தட்ப வெட்பத்தை தாங்கும் பயிராகும். இன்றைய முக்கிய

தானியங்களான நெல் 35 டிகிரி சென்டிகிரேடுவரை மட்டுமே வெப்பத்தைத் தாங்கும், கோதுமை 38 டிகிரி சென்டிகிரேடு வெப்பத்தைத் கடந்தால் தாங்காது. ஆனால் சிறு தானியங்களோ 460 டிகிரி சென்டிகிரேடுவரை தாங்கும் சக்தியுள்ளது. சிறு தானியங்களின் இன்னொரு சிறப்பம்சம் வளி மண்டலத்திலுள்ள கரிய மில வாயுவின் (Carbon dioxide) அளவைக் குறைக்கும். இதனால் பருவநிலை மாற்றத்தால் வரும் பாதகமான விளைவுகளை மட்டுப்படுத்துவதற்கான பங்களிப்பையும் சிறு தானியங்கள் வழங்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றது (6,7).

முடிவுரை

தொல்காப்பிய அகத்திணையியல் ஐந்திணைகளையும் அவற்றுக்கான முதல், கரு, உரிப் பொருட்களையும் விளக்குகின்றது. இவற்றின் அடிப்படையில் பண்டைத் தமிழர்கள் தமது உணவு முறையில் முக்கிய உணவாக சிறுதானியங்களை கொண்டிருந்தனர் என்பதும் அவற்றின் பயனை அறிந்துள்ளதோடு அவற்றை சூழலுக்கு ஏற்ப பயிரிட்டும் வாழ்ந்துள்ளனர் என்பது இவ்வாய்வினூடாக வெளிப்படுகின்றது. இதற்கு சங்ககால இலக்கியப் பாடல்களும் எடுத்துகாட்டாகும். தமிழர் பண்பாட்டில் உள்ள சிறுதானியங்களின் பாவனை அருகி வருவதும் அரிசி, கோதுமை பாவானையால் பெருகி வரும் நோய்களும் சமகால சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நவீன ஆய்வுகளும், ஐக்கிய நாட்டின் ஆதரவும், சமூக விழிப்புணர்வும் சிறுதானியங்களின் உற்பத்திக்கும் பெருக்கத்திற்கும், நுகர்வுக்கும் உறுதுணையாக அமைய வேண்டும். இன்றைய சமூகத்திற்கு சிறுதானியங்களின் பயனும் பாவனையும் இன்றியமையாததாகும்.

‘உணவே மருந்து’ எனும் பழந்தமிழர்களின் வாக்கினூடாக அவர்களின் உணவுசார் மருத்துவ அறிவைப் புரிந்து நாமும் பயன் பெறுவோம்.

முதன்மைச் சான்றுகள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரமும் உரைகளும்
2. சங்க இலக்கியங்கள்; புறநானூறு, மலைபடுகடாம், தமிழ்நெறி விளக்கம், ஔவை பாடல்கள்.

துணைச் சான்றுகள்

3. மா.அவின்குமார், சிறுதானியங்களில் உள்ள சத்துகளும் மருத்துவப் பயன்களும்! - PACHAI BOOMI, https://pachaiboomi.in/4654-2/, 2024.
4. வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023; சிறுதானியங்களை சத்தான தானியங்களாக ஊக்குவித்தல்., 2023.
5. கோ. சுந்தராம்பாள் தொல்காப்பிய அகத்திணையில் முதற்பொருளும் கருப்பொருளும், 2022.
6. Mohan, Raj, Rajasekaran, பெருந்தொற்றுக் காலத்தில் உணவு பாதுகாப்பின்மையை எதிர்த்துப் போராட உதவும் சிறுதானியங்கள், 2021.
7. G.Jayaprabha, Agricultural lands in sangam literature, சங்க இலக்கியத்தில் இடம் பெறும் வேளாண் நிலங்கள் International Refereed Journal of Tamil Studies Research, 2021.
8. கண்ணியம் அ. சதீஷ், தமிழர் உணவுப் பண்பாடு: இலக்கியப் பதிவுகளும் வாசிப்பு அரசியலும், வல்லமை, 2018.

9. உழவரின் வளரும் வேளாண்மை, சிறுதானிய மகத்துவ மையம், 2015.
10. பிரபா சங்கர், சிறுதானியங்கள் ஓர் அறிமுகம், Passions & Practices, 2015.
11. Jacob J, Krishnan V, Antony C, Bhavyasri M, Aruna C, Mishra K, Nepolean T, Satyavathi CT, Visarada KBRS. The nutrition and therapeutic potential of millets: an updated narrative review. Front Nutr. 2024 Apr 30;11:1346869. doi: 10.3389/fnut.2024.1346869. PMID: 38746941; PMCID: PMC11091339.
12. Ashik Somarajan K, Sonia Morya. A review on finger millet properties, processing, health benefits, and applications. Pharma Innovation 2022;11(7):3388-3395. DOI: 10.22271/tpi.2022.v11.i7aq.1453
13. Pei J, Umapathy VR, Vengadassalapathy S, Hussain SFJ, Rajagopal P, Jayaraman S, Veeraraghavan VP, Palanisamy CP, Gopinath K. A Review of the Potential Consequences of Pearl Millet (Pennisetum glaucum) for Diabetes Mellitus and Other Biomedical Applications. Nutrients. 2022 Jul 18;14(14):2932. doi: 10.3390/nu14142932. PMID: 35889889; PMCID: PMC9322144.
14. Anitha S, Botha R, Kane-Potaka J, Givens DI, Rajendran A, Tsusaka TW, Bhandari RK. Can Millet Consumption Help Manage Hyperlipidemia and Obesity?: A Systematic Review and Meta-Analysis. Front Nutr. 2021 Aug 17;8:700778. doi: 10.3389/fnut.2021.700778. PMID: 34485362; PMCID: PMC8416111.
15. Durga Shankar Bunkar, S K Goyal, Kamalesh Kumar Meena and Virendra Kamalvanshi. 2021. Nutritional, Functional Role of Kodo Millet and its Processing: A Review.Int.J.Curr.Microbiol.App.Sci. 10(1): 1972-1985. doi: https://doi.org/10.20546/ijcmas.2021.1001.229
16. Das, S., Khound, R., Santra, M., & Santra, D. K. (2019). Beyond bird feed: Proso millet for human health and environment. Agriculture, 9 (3), 64.
17. Bhathal, S.K. and Kaur, N., Nutritional Analysis of Gluten Free Products from Quinoa (Chenopodium quinoa) Flour, Int. J. Pure App. Biosci. 6(2): 826-836 (2018). doi: http://dx.doi.org/10.18782/2320-7051.2852
18. B. Dayakar Rao K. Bhaskarachary G.D Arlene Christina G. Sudha Devi Vilas, A. Tonapi, Nutritional and Health Benefits of Millets, 2017.

தொ.மா.க. 180

கணினியில் தமிழ்மொழிச் சொற்களின் சிதைவைத் தடுப்பதில் தொல்காப்பியத்தின் பயன்பாடு

வல்லிபுரம் சுகந்தன்
Lead Developer at Epsilon
vsuganthan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

இன்றைய உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டதனால் ஏற்பட்ட எதிர்விளைவுகளில் முதன்மையானது மொழிக்கலப்பு. பிறமொழிச் சொற்கள் மிக அதிகமாகத் தற்காலத்தில் தமிழ்மொழியில் உள்வாங்கப்படுகின்றன. தூய தமிழில் வெளிவரும் ஆக்கங்களைக் காண்பது அரிது. மொழிக்கலப்பால் மொழிச்சிதைவு அடையும் நிலை தமிழ்மொழிக்கும் ஏற்பட்டிருக்கின்றது. அது மட்டுமன்றி இப்போது ChatGPT, Generative AI (GenAI) போன்ற செயற்கை நுண்ணறிவுச் செயலிகளின் பயன்பாடும் பெரும் வேகத்தில் அதிகரித்து வருகின்றது. இச்செயற்கை நுண்ணறிவுச் செயலிகள் இணையத்தில் கிடைக்கும் வளங்களைக் கொண்டே தம் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. இணையத்தில் கிடைக்கும் தமிழ் வளங்களில் பெரும்பாலானவை தூய தமிழில் அமையாமல் இருப்பதுடன் பெருமளவில் எழுத்துப்பிழைகளையும் கொண்டிருக்கின்றன. அதனால் இச்செயற்கை நுண்ணறிவுச் செயலிகளின் தமிழ்மொழிப் பதில்களும்/உருவாக்கக்கங்களும் (Generated contents) சரியான தமிழில் அமையாமலும் சிதைவடைந்த சொற்களைக் கொண்டவையாகவுமே உள்ளன. எனவே கணினி உலகில் தொடர்ந்தும் இவ்வாறு தமிழ்மொழிச் சொற்கள் சிதைவடைந்து போவதைத் தடுப்பதில் தொல்காப்பியத்தனை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றியும், ஏன் தொல்காப்பியத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பது பற்றியும் இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

முன்னுரை

இன்றைய உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டதனால் ஏற்பட்ட எதிர்விளைவுகளில் முதன்மையானது மொழிக்கலப்பு. பிறமொழிச் சொற்கள் மிக அதிகமாகத் தற்காலத்தில் தமிழ்மொழியில் உள்வாங்கப்படுகின்றன. தூய தமிழில் வெளிவரும் ஆக்கங்களைக் காண்பது அரிது. **மொழிக்கலப்பால் மொழிச்சிதைவு அடையும் நிலை தமிழ்மொழிக்கும் ஏற்பட்டிருக்கின்றது**.அது மட்டுமன்றி இப்போது ChatGPT, Generative AI (GenAI) போன்ற செயற்கை நுண்ணறிவுச் செயலிகளின் பயன்பாடும் பெரும் வேகத்தில் அதிகரித்து வருகின்றது. இச்செயற்கை நுண்ணறிவுச் செயலிகள் இணையத்தில் கிடைக்கும் வளங்களைக் கொண்டே தம் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. இணையத்தில் கிடைக்கும் தமிழ் வளங்களில் பெரும்பாலானவை தூய தமிழில் அமையாமல் இருப்பதுடன் பெருமளவில் எழுத்துப்பிழைகளையும் கொண்டிருக்கின்றன. அதனால் இச்செயற்கை நுண்ணறிவுச் செயலிகளின் தமிழ்மொழிப் பதில்களும்/உருவாக்கக்கங்களும் (Generated contents) சரியான தமிழில் அமையாமலும் சிதைவடைந்த சொற்களைக் கொண்டவையாகவுமே உள்ளன. எனவே கணினி உலகில் தொடர்ந்தும் இவ்வாறு தமிழ்மொழிச் சொற்கள் சிதைவடைந்து போவதைத் தடுப்பதில் தொல்காப்பியத்தனை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றியும், ஏன் தொல்காப்பியத்தைப் பயன்படுத்தவேண்டும் என்பது பற்றியும் இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

நோக்கம்

கணினி உலகில் ஒரு மொழியின் வளர்ச்சியையும் அதன் தொடர்ச்சியையும் பேணிப்பாதுகாப்பதற்கு மிகவும் அவசியமான ஒன்றாக விளங்குவது அம்மொழிக்குரிய சொற்பிழை திருத்திகளே.தமிழ்மொழிக்குரிய சில சொற்பிழை திருத்திகள் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்தாலும் அவை போதிய வினைத்திறன் உடையனவாகக் காணப்படவில்லை. எனவே தமிழ்மொழியின் பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியம் கூறும் இலக்கண விதிகளைக் கொண்டு இன்றையகாலத் தமிழ்மொழிக்கு ஏற்ற வகையில் சொற்பிழை திருத்தியினை உருவாக்குவதன் மூலமோ அல்லது ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள சொற்பிழைதிருத்திகளை மேம்படுத்துவதன் மூலமோ கணினியில் தமிழ்ச் சொற்களின் சிதைவைத் தடுக்க முடியுமா என்பதை ஆராய்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வுச் சிக்கல்

உலகமே கணினி மயமாகிவிட்ட சூழலில், தமிழ்மொழியும் அதற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டிருக்கின்றது. பெருந்தொற்றுக் காலத்தையடுத்து கற்றல் நடவடிக்கைகளும் பெருமளவில் கணினி வாயிலாக நடைபெறத் தொடங்கிவிட்டதனால் தமிழ்மொழியின் தொடர்ச்சியைக் கணினியிலும் பேணுதல் அவசியமானதாகின்றது. அத்துடன் ChatGPT போன்ற செயற்கை நுண்ணறிவுச் செயலிகளின் (GenerativeAI) இயற்கைமொழிச் செயலாக்கம் (Natural Nalguage Processing) மூலம் வெகு விரைவிலேயே பெருமளவிலான தமிழ்மொழிக் கட்டுரைகளும் கணினி உலகில் உருவாகிவிடும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறாக உருவாக்கப்படும் தமிழ் வளங்களையும் மொழிச்சிதைவு அடையாது, கணினி உலகில் தொடர்ந்தும் பேண முடியுமா என்பது **ஆய்வுச் சிக்கலாகும்**.

கருதுகோள்

தமிழ்மொழியில், எழுத்துப்பிழைகளைத் திருத்துவதற்காக உருவாக்கப்பட்ட சொற்பிழைதிருத்திகள் **தமிழ்மொழியில் கலந்துவிட்ட பிறமொழிச் சொற்களையும் சரியான**

சொற்களாகவே அடையாளப்படுத்துகின்றன. எனவே தமிழ்மொழியின் **இலக்கண விதிகளுக்கு அமையாத சொற்களும் தமிழ்ச் சொற்களாகவே வருங்காலத்தில் அடையாளப்படுத்தப்படக்கூடிய அபாயம் உள்ளது**. இதனால் தமிழ்மொழிச் சொற்களுக்கு வகுக்கப்பட்டிருக்கும் இலக்கண விதிகள் பயனற்றுப் போய்விடுவதால். தொல்காப்பிய காலந்தொட்டுப் பேணப்பட்டுவரும் தமிழ்மொழியின் கட்டமைப்பு அழிந்து போய்விடும்.

பிறமொழிச் சொற்களை நீக்கி அவற்றிற்குரிய தூய தமிழ்ச் சொற்களைப் பயன்பாட்டில் கொண்டுவருவது எளிதன்று. வேற்றுமொழிச் சொற்களை உள்வாங்குவதைப் பற்றித் தொல்காப்பியமும் "**வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**" என்கிறது. தமிழ்மொழியில் "மொழி முதல்" எழுத்துகள், "மொழி ஈற்று" எழுத்துகள் எவையெவை, எந்தெந்த மெய்யெழுத்துகள் அடுத்தடுத்து வரலாம் போன்ற பல்வேறு விதிகள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

இவ்விதிகளை ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கும் சொற்பிழைதிருத்திகளில் உள்ளடக்கி, **இவ்விதிகளுக்கு அடங்காத ஆனால் ஏனைய தற்கால விதிகளுக்கு உள்ளடங்கும் சொற்களை (எ-டு: யுவதி) வேறு நிறத்தில் காட்டுவதன் மூலம் அச்சொற்கள் தூயதமிழ்ச் சொற்கள் அல்ல** என்பதை அடையாளப்படுத்தலாம். இதன்மூலம் தமிழ்மொழியின் தொடர்ச்சியைப் பேணுவதுடன் சொற்களின் சிதைவையும் ஓரளவாவது தடுக்கலாம் என்பது இவ்வாய்வின் **கருதுகோளாகும்**.

தொல்காப்பியம்

தமிழ்மொழியின் மிகப்பண்டைய இலக்கண நூலான தொல்காப்பிம் தொல்காப்பியரால் பொது நூற்றாண்டிற்கு 710 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டதாகும். தொல்காப்பியமானது எழுத்து, சொல், பொருள் என முப்பெரும் அதிகாரங்களைகளைக் கொண்டதாய் விளங்குகின்றது. எழுத்ததிகாரத்தில் தனி எழுத்துகள் பற்றியும், ஒரு சொல்லில் அவைபெறும் இடம்/நிலை பற்றியும் அடுத்தடுத்துவரும் எழுத்துகள் எவ்வாறு அமையும்/மயங்கும் என்பதும், சொற்கள் புணரும் போது எவ்வாறான மாற்றங்கள் (தேன்றல், திரிதல், கெடுதல்) உருவாகும், எப்படியான உருபுகளை ஏற்கும் போன்றவையெல்லாம் விதிகளாகச் சூத்திரங்களினால் சொல்லப்பட்டிருக்கின்றன.

சொல்லதிகாரத்தில் திணை, பால், எண், இடம் போன்றவையும், வேற்றுமை விளக்கங்களும், பெயர், வினை, இடை, உரி போன்ற சொற்களின் வகைகளும் அன்ன பிறவும் விதிகளாக எடுத்தோதப்பட்டிருக்கின்றன. எழுத்து, சொல் ஆகிய இவ்விரண்டு அதிகாரங்களில் காணப்படும் விதிகளைக் கொண்டு தூயதமிழ்ச் சொற்களுக்கான சொற்பிழைதிருத்தியையும் இலக்கணப்பிழைதிருத்தியையும் உருவாக்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

ஆயினும் இவ் ஆய்வானது, தமிழச் சொற்களின் சிதைவைத் தடுப்பது பற்றியது என்பதால் இலக்கணப்பிழைதிருத்திகள் பற்றியோ அல்லதுஇலக்கணப்பிழைதிருத்திகளில் தொல்காப்பியத்தின் பயன்பாடு பற்றிய விபரங்களோ மேற்கொண்டு இங்கே இடம்பெறுவது தவிர்க்கப்படுகின்றது.

ஏன் தொல்காப்பியம்?

தொல்காப்பியம் எழுதப்பட்டு ஏறத்தாழ 1900 ஆண்டுகளுக்குப் பின்னர், 13ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில், தொல்காப்பியத்தை முதல்நூலாகக் கொண்டு பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட நன்னூல், இன்றைய நடைமுறைத் தமிழிற்கு தொல்காப்பியத்திலும்

விட மிக நெருக்கமானதாக இருக்கின்றது. அது மட்டுமின்றி தொல்காப்பியத்தைப் போலன்றி நன்னூலைப் புரிந்து கொள்வதும் இலகுவானது. பின்னர் எதற்காகத் தொல்காப்பியத்தைப் பின்பற்றிஇந்த ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்கின்ற கேள்வியும் பொருத்தமானதாகவே தோன்றும்.

தமிழ்மொழியின் தொன்மைக்குச் சான்றாக விளங்குவதுடன் இன்றுவரை தமிழ்மொழியினைச் சிதைவடையாமல் பாதுகாத்துவருகின்ற அரியவொரு சொத்தாகவும் விளங்குவது தொல்காப்பியமாகும். மொழிக்கு மட்டுமன்றி மனித வாழ்க்கைக்கும் இலக்கணம் (பொருளதிகாரத்தில்) கூறியிருக்கும் ஒரேயொரு இலக்கணநூல் தொல்காப்பியமே. பண்டைத் தமிழரின் சீரிய வாழ்வியல் நெறிகளும் முறைகளும் தொகுக்கப்பட்ட ஒரு **வரலாற்று ஆதார நூலாக** விளங்குவதும் தொல்காப்பியமாகும்.

எனவே தொல்காப்பியத்தைப் புறந்தள்ளுவோமேயானால் தமிழ்மொழியின் தொன்மையை மட்டுமல்ல அதன் தொடர்ச்சியையும் நாம் இழந்துவிடுவோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இவை மட்டுமே காரணமாயிருப்பின் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வழுவல' என்பதற்கேற்ப சிலவேளை தமிழறிஞர்கள் என்றைக்கோ தொல்காப்பியத்தைக் கைகழுவிவிட்டிருப்பார்கள். ஆயினும் இவ்வாறு எதுவும் நடவாமல் இன்று வரை தொல்காப்பியம் பேணப்பட்டு வந்து கொண்டிருப்பதன் மூலம் இக்காலத் தமிழ்மொழிக்கும்தொல்காப்பிய விதிகள் பொருந்துகின்றன என்பது தொல்காப்பியத்தின் சிறப்பை விதந்துரைக்கின்றது.அது மட்டுமன்றி 2700 ஆண்டுகள் கழிந்த பின்னரும், இன்றைய கணினி உலகிற்கும் பொருந்தும்படியாக, தூயதமிழ்ச் சொற்பிழைதிருத்தி ஒன்றினை வினைத்திறன் மிக்கதாக உருவாக்குவதற்குரிய விதிகள் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டிருப்பது வியப்பாயிருக்கின்றது.

தொல்காப்பியமும் தூயதமிழ்ச் சொற்பிழைதிருத்தியும்:

வினைத்திறன்மிக்க ஒரு சொற்பிழைதிருத்தியானது, சரிபார்க்கும் சொல்லைத் தரவுதளத்தினுள் (Database) உள்ள சொற்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முன்னரேயே, பிழையான சொற்களை அடையாளங்காணக்கூடியதாய் இருக்கவேண்டும். அதன் பின்பே தனது தரவுத்தளத்தினுள் சேமித்துவைக்கப்பட்டிருக்கும் சொற்களுடன் சரிபார்க்கவேண்டும். பிழையான சொற்களை அடையாளம் காண்பதற்குரிய விதிகளைத் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டிருக்கின்ற நூற்பாக்களிலிருந்து இலகுவாக அறிந்து கொள்ளலாம்.

ஒரேயொரு எழுத்தால் ஆன சொற்கள் பின்வருமாறு வரையறைசெய்யப்பட்டிருக்கிறது.

நெட்டெழுத்து ஏழே ஓர் எழுத்து ஒருமொழி (தொல். நூற்பா -43)
குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இலவே. (தொல். நூற்பா -44)

நெட்டெழுத்துக்கள் மட்டுமே ஓரெழுத்தாலான சொற்களாக அமையும். எனவே அவை தவிர்ந்த ஏனைய எழுத்துக்களில் ஓரெழுத்தாலான தனிச் சொற்கள் வரின் அவை பிழையான சொற்களாகும்.

சொற்களில் முதலிலும் இறுதியிலும் வரக்கூடிய எழுத்துகள் எவையென எழுத்ததிகாரத்தின் ஐம்பத்தொன்பதாவதில் இருந்துஅறுபத்தெட்டாவது வரையான நூற்பாக்களில் தரப்பட்டிருக்கின்றன.

பன்னீர்-உயிரும் மொழி முதல் ஆகும் (தொல். நூற்பா -59)

பன்னிரெண்டு உயிரெழுத்துக்களும் ஒரு சொல்லின் முதலாவது எழுத்தாக வரலாம்

உயிர்மெய் அல்லன மொழி முதல் ஆகா. (தொல். நூற்பா -60)

உயிர்மெய்யெழுத்துகள் தவிர்ந்த ஏனைய எழுத்துகள் மொழிக்கு முதலில் வராது. ஆயினும் 59வது நூற்பாவில் உயிரெழுத்துகள் அனைத்தும் மொழிக்கு முதலில் வரும் என்று கூறியிருப்பதால் உயிரெழுத்துக்களும் உயிர்மெய்யெழுத்துக்களும் தவிர்ந்த ஏனைய எழுத்துகளான மெய்யெழுத்துகளும் (சார்பெழுத்துகளும்) தனித்து ஒருசொல்லின் முதலாவது எழுத்தாக வராது.

எனவே கதைகளில் வரும் "க்கும் - எனக் கனைத்தான்" என்று சொல்லும் போது "க்கும்" என்பது தமிழ்ச் சொல் அல்ல என்பதை அடுத்த சந்ததிக்குத் தெரியப்படுத்த வேண்டும். அது வெறும் ஒலிக் குறிப்பே என்பதை உணர்த்த வேண்டும்.

க, த, ந, ப, ம, எனும் ஆவைந்து எழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே.(தொல். நூற்பா -61)

க், த், ந், ப், ம் ஆகிய ஐந்து மெய்யெழுத்துக்களும் அனைத்து உயிரெழுத்துக்களுடனும் இணைந்து உருவாக்கும் 60 (5 x 12) உயிர்மெய்யெழுத்துக்களும் ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையலாம்.

சகரக் கிளவியும் அவற்று ஓரற்றே-
அ, ஐ, ஔ, எனும் மூன்று அலங்கடையே. (தொல். நூற்பா -62)

ச் என்னும் மெய்யெழுத்தானது அ, ஐ, ஔ ஆகிய மூன்று உயிரெழுத்துகளுடன் சேர்ந்து (ச, சை, சௌ) ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையாது. இவை தவிர்ந்த ஏனைய உயிரெழுத்துகளுடன் (9) இணைந்து ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையலாம். எனவே சகடம், சைத்தான், சௌகரியம் போன்ற சொற்களெல்லாம் தூய தமிழ்ச் சொற்கள் அல்ல என்பது தெளிவாகும். ஆனாலும் தமிழில் முச்சங்கங்கள் இருந்தன, தொல்காப்பியம் இரண்டாம் தமிழ்ச்சங்க காலத்தில் உருவாக்கப்பட்டது. மற்றும் சங்க இலக்கியங்கள் என்றெல்லாம் நாம் அறிந்திருப்பதால் சங்கம் என்ற சொல் தமிழ்ச் சொல் என்று பலரும் வாதிடலாம். ஆயினும் பிற்காலத்திலேயே அப்பெயர் சூட்டப்பட்டிருக்கலாம் என்பது இக் ஆய்வாளரின் கருத்தாகும். அதாவது தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னரோ அல்லது அவரது காலத்திலோ சங்கம் என்ற சொல் தமிழில் உருவாகியிருக்கலாம். அல்லது அது திசைச்சொல்லாகவும் இருந்திருக்கலாம். அல்லது அது தமிழ் இலக்கணவிதிகளுக்கு அமையாமல் வழுவமைதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம்.

உ, ஊ, ஒ, ஓ, என்னும் நான்கு உயிர்
'வ' என் எழுத்தொடு வருதல் இல்லை. (தொல். நூற்பா -63)

வ் என்னும் மெய்யெழுத்தானது உ, ஊ, ஒ, ஓ ஆகிய நான்கு உயிரெழுத்துக்களுடன் சேர்ந்து (வு, வூ, வொ, வோ) ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையாது. இவை தவிர்ந்த ஏனைய 8 உயிரெழுத்துகளுடன் இணைந்து வரும் உயிர்மெய்யெழுத்துகள் ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையலாம். எனவே இக்காலத்தில் பரவாலாக பேச்சுவழக்கிலும் சிறுகதை மற்றும் புதினங்களிலும் பயன்படுத்தப்படும் வுடு (விடு), வூடு (வீடு), வோட்டு (வாக்கு) போன்ற சொற்களெல்லாம் சரியான தமிழ்ச்சொற்கள் இல்லை என்பது தெளிவாகும்.

ஆ, எ, ஒ, எனும் மூஉயிர் ஞகாரத்து உரிய (தொல். நூற்பா -64)

ஞ் என்னும் மெய்யெழுத்தானது ஆ, எ, ஒ ஆகிய 3 உயிரெழுத்துக்களுடனும் இணைந்து ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையலாம். எனவே ஞமலி என்பது தூயதமிழ்ச்

சொல் இல்லையா என்கின்ற வினாவிற்கு அது தொல்காப்பியர் காலத்தில் வேற்றுமொழிச் சொல்லாக (திசைச் சொல்லாக) இருந்திருக்கலாம் என்று இளம்பூரணனார் கூறுகின்றார். ஆயினும் இது போன்ற பல சொற்களை இன்று நாம் தமிழ்ச் சொற்களாகவே அடையாளப்படுத்தி வைத்திருக்கின்றோம். எனவேதான் தமிழ்மொழியில் உருவாக்கப்படும் சொற்பிழைதிருத்தியானது தனியே தொல்காப்பிய விதிகளை மட்டும் வைத்துக்கொண்டு இவ்வாறான சொற்களைப் பிழையான சொற்களாக அடையாளப்படுத்தி விடக்கூடாது, அது இச்சொற்களையும் சரியான சொற்களாகவே அடையாளப்படுத்த வேண்டும். ஆயினும் இவை தூயதமிழ்ச் சொற்கள் அல்ல என்பதையும் பயனாளிக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஆவொடு அல்லது யகரம் முதலாது. (தொல். நூற்பா -65)

ய் என்னும் மெய்யெழுத்தானது ஆ என்னும் உயிரெழுத்துடன் மட்டும் இணைந்து ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையும்.

இவ்வாறு ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையும் எழுத்துக்களுக்கு விதிகள் கூறிய தொல்காப்பியர், அவ்வாறே ஒரு சொல்லின் இறுதி எழுத்தாக அமையும் எழுத்துக்கள் எவையெவை என எழுத்ததிகாரத்தின் அறுபத்தொன்பதாவது முதல் எண்பத்தியிரண்டாவது வரையான நூற்பாக்களில் கூறியிருக்கின்றார்.

இரண்டு ஒற்றெழுத்துகள் எப்படியான சந்தர்ப்பங்களில் அடுத்தடுத்து வரலாம் என்பது தொல்காப்பியத்தின் இருபத்திமூன்றாம் நூற்பாவிலிருந்து முப்பதாம் நூற்பா வரையிலான சூத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. எனவே ஒரு சொல்லில் காணப்படும் ஒரு தனித்த மெய்யெழுத்தை அடுத்து வரும் மெய்யெழுத்தையோ உயிர்மெய்யெழுத்தையோ கொண்டு அச்சொல் தெல்காப்பியம் கூறும் விதிகளுக்கு உட்பட்டதா என்பதை அறிந்து கொள்ள முடியும்

மேலும், இரு சொற்கள் புணர்கையில் நிலைமொழியின் ஈற்றுப்பகுதியும் வருமொழியின் முற்பகுதியும் எவ்வாறான மாற்றங்களுக்கு உட்படுமென விரிவாகவும் தெளிவாகவும் விதிகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் புணர்த்தி எழுதப்படும் சொற்களைத் தரவுத்தளத்தினுள் சேமிக்கவேண்டிய தேவை இல்லாமல் போய்விடுகிறது.

அவ்வாறே சொற்கள் ஏற்கும் உருபுகளும் அவை பற்றிய விதிகளும் தொல்காப்பியத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதால், உருபுகளேற்ற சொற்களையும் தரவுத்தளத்தினுள் சேமிக்கவேண்டியதில்லை. அதாவது, அம்மா என்னும் சொல்லை மட்டும் தரவுத்தளத்தினுள் வைத்துக்கொண்டு அது ஏற்கு உருபுகள், சாரியைகள் என்பவற்றைப் புணர்ச்சி விதிகளின்படி சரிபார்க்க முடியுமானால், அம்மாவை, அம்மாவால், அம்மாவோடு, அம்மாவுக்கு, அம்மாவின், அம்மாவில், அம்மாவினது, அம்மாவுடைய போன்ற உருபுகள் பெற்ற சொற்களைத் தரவுத்தளத்தினுள் சேர்க்க வேண்டிய தேவை இல்லாமல் போய்விடுகின்றது. இதனால் ஒரு சொல் ஏற்கும் உருபுக்கேற்ற இலக்கண பிழைகளையும் சொற்பிழைதிருத்தியோடு இணைந்த ஒரு இலக்கணப்பிழை திருத்தியால் இலகுவாக அடையாளங் கண்டுகொள்ள முடியும் என்பது தமிழ்மொழிச் சிதைவைத் தடுப்பதில் மேலதிக பங்களிப்பாகவும் அமைய முடியும் என்பது திண்ணம்.

எனவே பிழையான சொற்களை முதலிலேயே அடையாளம் கண்பதுடன் தரவுதளத்தின் அளவைச் சிறிதாகப் பேணிக்கொள்வதாலும் வினைத்திறன் மிக்கவொரு தூயதமிழ்ச் சொற்பிழைதிருத்தியினை உருவாக்கிக்கொள்ள முடியும்.

நடைமுறைத் தமிழ்ச் சொற்பிழைதிருத்தி

இன்றைய நடைமுறைத் தமிழில் தொல்காப்பிய விதிகளுக்கு உட்படாத ஏராளமான சொற்கள் பாவனையில் உள்ளன. எனவே நடைமுறைத் தமிழிற்கு தூயதமிழ்ச் சொற்பிழைதிருத்தி மட்டும் போதுமானதன்று. ஆகவே, தொல்காப்பிய விதிகளுக்கு அமையாத சரியான தமிழ்ச் சொற்களாக ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட சொற்களையும், நடைமுறைத் தமிழ்ச் சொற்பிழைதிருத்தியானது சரியானதாகவே அடையாளங்காட்ட வேண்டும். எனவே அதற்குரிய விதிகளையும் இணைத்தே ஒரு சொற்பிழைதிருத்தியானது உருவாக்கப்பட வேண்டும்.

தொல்காப்பிய விதிகளையும் இணைத்துக் கொண்டு நடைமுறைத்தமிழ்ச் சொற்பிழைதிருத்திஒன்றினை உருவாக்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. தொல்காப்பிய விதிகளின் மூலம் பிழையான சொல்லாக அடையாளப்படுத்தப்படும் ஒருசொல் நடைமுறைத்தமிழில் சரியான சொல்லாக இருக்கலாம். ஆகவேநடைமுறைத் தமிழ்ச் சொற்பிழைதிருத்தியினால் அச்சொல் சரியான சொல்லாகவே அடையாளப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் அச்சொற்பிழைதிருத்தியானது புறக்கணிக்கப்பட்டுவிடும்.

நடைமுறைத் தமிழ்ச் சொற்பிழைதிருத்தியில் தொல்காப்பியம்

நடைமுறைத் தமிழ்ச் சொற்பிழைதிருத்தி ஒன்றின் பிழையான சொற்களை அடையாளங் காணும் செயன்முறையில் முதலில் தொல்காப்பிய விதிகளை உள்ளிடலாம். அங்கே அச்சொல் பிழையான சொல்லாக அடையாளப்படுத்தப்படின் அதற்கு ஒரு குறியீட்டினை இட்டுவிட்டு தொடர்ந்தும் அச்சொல்லினை நடைமுறைத் தமிழ்ச் சொற்களினை அடையாளங் காண்பதற்குரிய விதிமுறைகளுடன் ஒப்பிடலாம். அதில் அச்சொல் பிழையான சொல்லாக அடையாளப்படுத்தப்படாவிடின் அச்சொல்லினைத் தரவுதளத்தினுள் உள்ள சொற்களுடன் சரி பார்க்கலாம். அச் சொல்லானது;

i) நடைமுறைத் தமிழில் பிழையான சொல்லாக அமைந்தால் சிவப்பு நிறத்தினால் பிழையான சொல்லென அடையாளப்படுத்தலாம்.

ii) நடைமுறைத் தமிழில் சரியான சொல்லாகவும் தொல்காப்பிய விதிகளிற்கேற்ப பிழையான சொல்லாகவும் அமைந்தால் அச்சொல்லினை பிறிதொரு நிறத்தினால் (நீலம்) அடையாளப்படுத்தலாம். இதன் மூலம் பயனாளிக்கு அச்சொல்லானது தூய தமிழ்ச்சொல் அல்ல என்கின்ற செய்தி அறிவிக்கப்படுகின்றது.

iii) சிலவேளைகளில் தொல்காப்பிய விதிகளுக்கு அமைவாகவும், நடைமுறைத் தமிழ்ச் சொற்களின் விதிகளுக்கு அமைவாகவும் உள்ள சொற்கள் தூயதமிழ்ச் சொற்கள் அல்லாதனவாகவும் இருக்கலாம் (எடுத்துக்காட்டு: கமலம், காரணம்). இச்சொற்கள் திசைச்சொற்களாயினும் ஒலிமாறுபாடின்றித் தற்சமமாக இருக்கின்றன. எனவே இவ்வாறான சொற்களைத் தரவுத்தளத்தில் அடையாளப்படுத்தி வைத்து அவற்றை பிறிதொரு நிறத்தில் (பச்சை) அடையாளப்படுத்திக் காட்டுவதன் மூலம் பயனாளிக்கு அவை தூய தமிழ்ச்சொற்கள் அல்ல என்பதைத் தெரியப்படுத்தலாம்.

முடிவு

கணினியில் தமிழ்மொழிச் சொற்களின் சிதைவைத் தடுக்க வேண்டுமானால், பிழையான தமிழ்ச் சொற்களை அடையாளப்படுத்த அல்லது கண்டறிய வேண்டிய தேவை எழுகின்றது. அது மட்டுமன்றிச் சரியான தமிழ்ச் சொற்களையும் வகை பிரித்துக் காட்ட

வேண்டியதும் அவசியமானதாகும். வினைத்திறன்மிக்க ஒரு தூயதமிழ்ச்சொற்பிழைதிருத்தி ஒன்றினை தொல்காப்பியத்தின் உதவியுடன் அமைத்துக் கொள்ளக்கூடியதாக இருப்பினும், இன்றைய நடைமுறைத் தமிழினைக் கருத்தில் கொண்டு அதற்கேற்றவொரு சொற்பிழைதிருத்தியினையே உருவாக்கவேண்டியிருக்கிறது. எனவே இக்காலத்திற்கேற்ற நடைமுறைத் தமிழ்ச் சொற்பிழைதிருத்தியின் செயன்முறையினுள் தொல்காப்பிய விதிகளையும் உள்ளீடு செய்வதனூடாகவும், நடைமுறைத் தமிழிலுள்ள தூயதமிழ்ச்சொற்கள் அல்லாதவற்றை வேறு நிறங்களினால் அடையாளப்படுத்துவதன் மூலமாகவும் புதியதொரு நடைமுறைத் தமிழ்ச் சொற்பிழைதிருத்தி ஒன்றினை உருவாக்கிக்கொள்ளலாம். அல்லது ஏற்கனவே பாவனையில் இருக்கும் தமிழ்ச் சொற்பிழை திருத்திகளை மேம்படுத்திக் கொள்ளலாம்.

இதனால் இச்சொற்பிழைதிருத்தியின் பயனர்கள் சொற்களின் தன்மை பற்றி அதிகம் அறிந்துகொள்வதுடன் இச்சொற்பிழைதிருத்தியினையும் விரும்பி உபயோகப்படுத்துவார்கள். அதுமட்டுமன்றி,**தொல்காப்பியம்இதுவரை காலமும் காத்து வந்த தமிழின் தொன்மையும் தொடர்ச்சியும் தொடர்ந்து பேணப்படுவதுடன் கணினியில் உண்டாகும் தமிழ்மொழிச் சிதைவினையும் தடுக்கலாம்** என்பது இவ் ஆய்வின் முடிவாகும்.

வளங்கள்

1. தொல்காப்பியம். உரையாசிரியர்களின் உரைகளுடன் (http://tamilvu.org/library/libindex.htm)
2. https://www.researchgate.net/publication/280713475_Contextual_spell_checking_for_Tamil_Language
3. https://www.researchgate.net/publication/340427913_tamilarkalitaiye_piramoli_kalappu_munneccarikkai_avaciyam_Language_shifting_among_Tamils
4. http://vaani.neechalkaran.com/
5. https://www.stars21.com/spelling/tamil/

தொ.மா.க. 209

தமிழின் உயிர் மற்றும் ஆய்த எழுத்துக்களிலுள்ள இயற்பியல்

Physics in Tamil Vowels, and Aayutha Alphabets

முனைவர் நாகலிங்கம் சிவயோகன்
ஈலோன் பல்கலைக்கழகம்,
வடகரோலினா, அமெரிக்கா
nsivayogan@gmail.ccom

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இயல்போடு தோன்றிய மொழி என்பது பலவித ஆய்வுகளில் கூறப்பட்டுள்ள உண்மையாகும். மொழி என்பது ஒலியாகும். ஒலியியல் (Sound) பற்றிக் கற்பிப்பது இயற்பியலாகும் (Physics). அந்த வகையில் தமிழ்மொழிக்கு இயற்பியலுடன் தொடர்ப்பு இருக்க வேண்டும் என்பதும் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

அந்த வகையில் மேற்கொண்ட ஆய்வு முடிவுளுள் ஒன்றே இக் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு மொழியின் தொன்மையை ஆய்வு செய்வதாயின் அதன் ஒலி உருவாகும் தன்மையை ஆய்வு செய்வதே சிறந்த வழியாகும். அதனால்தான் இங்கு கூறப்பட்டுள்ள பெரும்பாலான ஆய்வு முடிவுகள் தமிழ்மொழியின் எழுத்துக்களின் உச்சரிப்புகள் சம்பந்தானதாக அமைந்துள்ளது.

உயிர், மெய், ஆய்தம் என்று அழைப்பதற்குரிய காரணங்கள் என்ன? உயிர் எழுத்து மனிதனுக்கு உயிரைக் கொடுத்து வாழ வைக்குமா? மெய் எழுத்துக்கும் உடம்புக்குமுள்ள தொடர்பு என்ன? ஆய்த எழுத்து எம்மை ஆபத்தில் இருந்து காப்பாற்றும் ஆயுதமா? அப்படியாயின் விலங்குகளும் பறவைகளும் எப்படி வாழுகின்றன? எல்லாவற்றிற்கும் பொதுவான தொடர்பு இருக்குமா என்பதெல்லாம் ஆராயப்பட்டுள்ளது.

தமிழ்மொழியின் எழுத்துக்களை உயிர் என்றும் மெய் என்றும் ஆய்தம் என்றும் அழைப்பதற்கும் இயற்பியலிற்கும் அத்துடன் இயற்பியலிலுள்ள வெப்பவியலின் இரண்டாவது விதிக்கும் தொடர்பு உள்ளது என்று நிறுவப்பட்டுள்ளது. இது மிகவும் சிறந்த விளக்கமாக இருப்பதுடன் தமிழின் தொன்மையையும் எடுத்துக்காட்டுகிறது. இது தொல்காப்பியரின் இலக்கணத்திற்கு வலுச் சேர்ப்பதாகவே அமந்துள்ளது மற்றுமொரு சிறப்பாகும்.

கலைச்சொற்கள்: உயிர் எழுத்து, ஆய்த எழுத்து, தமிழ் உச்சரிப்பு, தமிழ், தமிழ்மொழி ஆய்வு.

அறிமுகம்

தமிழ்மொழி பற்றிய உணர்வு உலகெங்கும் தற்போது அதிகரித்து வருகிறது. அதற்கு முக்கிய காரணம் இணையத்தளங்களில் குவிந்து கிடக்கும் தமிழும், சங்கத் தமிழ் இலக்கியங்களும், வெளிநாடுகளில் பரவிவரும் தமிழ்ப்பள்ளிகளின் அதிகரிப்புமாகும். அத்துடன் பெருந்தொற்று முடக்க காலங்களில் (Covid Pandamic) (2019 - 2022), சங்க இலக்கியங்கள், மற்றும் தமிழரின் சரித்திரங்கள் என்பன பற்றி ஏராளமான இணையக் கூட்டங்களில் அலசி ஆராயப்பட்டன. அதற்கு மேலாக வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தமிழ் இருக்கைகளும் ஒரு காரணமாக அமைகிறது. மேலும் கனடாவும், அமெரிக்காவில் பல மாநிலங்களும் தை மாதத்தை தமிழரின் மரபு மாதமாக பிரகடனம் செய்துள்ளன. இது தமிழ் மொழி பற்றிய விழிப்புணர்வை உலகெங்கும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

இந்த நிலையில் தமிழ்மொழி பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு அதன் சிறப்பை வெவ்வேறு வழிகளில் நிறுவ வேண்டும் என்பது தமிழரின் தலையாய கடமையாகும். அப்போதே தமிழ்மொழியின் தொன்மை உறுதியாக நிலைத்து நிற்கும். அந்த வகையில் இவ் ஆய்வில் தமிழ் மொழியில் எழுத்துக்களுக்கு ஏன் குறிப்பிட்ட முறையில் பெயரிடப்பட்டுள்ளது என்பது ஆராயப்பட்டுள்ளது.

தமிழில் "அ" முதல் "ஔ" வரை உள்ள 12 எழுத்துக்களை உயிர் எழுத்துக்கள் என்றும் "க்" முதல் "ன்" வரை உள்ள 18 எழுத்துக்களை மெய் எழுத்துக்கள் என்றும், இவை இரண்டும் சேர்ந்து வருவதை உயிர் மெய் எழுத்துக்கள் என்றும் (12 x 18 = 216 உள்ளது) பொதுவாக அழைப்பர். இவற்றைவிட தனியாக ஆய்த எழுத்து ஒன்றும் உள்ளது.

இதற்கு பொதுவாக உயிர் எழுத்துக்கள் தனித்து இயங்கக் கூடியதாகவும் மெய்யுடன் சேர்ந்து இயங்கக் கூடியதாகவும் இருப்பதால் அவை உயிர் எழுத்து என்று அழைக்கப்படுவதாக விளக்கமளிக்கப்படுகிறது. உயிர் இல்லாமல் உடம்பு தனியாக இருக்க முடியாது. அதுபோன்றே உயிர் எழுத்து இல்லாமல் மெய் எழுத்து தனியாக இயங்காது. இதனால் அவற்றிற்கு மெய் எழுத்து என்று பெயரிடப்பட்டுள்ளது. "மெய்" என்பதற்கு தமிழில் "உடம்பு" என்றும் பொருள் உண்டு. தொல்காப்பியத்தில் ஒவ்வொரு எழுத்தும் எப்படிப் பிறக்கின்றன என்பது எழுத்ததிகாரத்தில் பிறப்பியல் என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளது. "தொல்காப்பியம்" என்பது நமக்குக் கிடைத்த மிகப் பழமையான தமிழ் இலக்கண நூலாகும். இதுவே மிகப் பழமையான தமிழ் நூலெனவும் இனம் காணப்பட்டுள்ளது. இதனை தொன்மை + காப்பியம் எனப் பிரித்து பொருள் கூறியுள்ளனர். இது தவறான கொள்கையாகும். இதனை தொன்மை + காப்பு + இயம் எனப் பிரித்து பொருள் காண்பதே சரியானதாகும். "இயம்" என்பதற்கு "தொகு" என்றும் பொருள் உள்ளது. அதாவது தொன்மையானவற்றை காக்கும் தொகுப்பு என்று பொருள்படும். இவ்வாறு சற்று மாற்றுச் சிந்தனையோடு செய்யப்பட்டதே இந்த ஆய்வு என்பதனையும் மனதில் வைத்திருந்தால் இந்த ஆய்வின் ஆழமும் தேவையும் இலகுவில் புரியும் .

மேற்கூறிய உயிர் மற்றும் மெய் எழுத்துக்களுக்கான விளக்கம் மனதுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. எழுத்துக்கள் தனியாக இயங்குவதாலும் சேர்ந்து இயங்குவதாலும் மட்டும் அவற்றிற்கு அப் பெயர்கள் வந்திருக்குமா எனப் பல நாட்கள் தமிழைக் கற்பிக்கும்போது சிந்தித்தும் பொருத்தமான விடை கிடைக்கவில்லை. உயிர் - மெய் என வைப்பதற்கு பதிலாக அதே பொருளுடன் உள்ள மூச்சு - பேச்சு (மூச்சுக் காற்று

இல்லையேல் ஒருவரால் பேச முடியாது) என்றோ அல்லது சக்தி - சக்கரம் (சக்தி இல்லையேல் சக்கரம் தானாக சுழலாது) என்றோ வைத்திருக்கலாம் அல்லவா? ஏன் அவற்றை மனிதனின் உயிருக்கும் உடலுக்கும் ஒப்பிட்டுக் குறித்திருக்க வேண்டும்? அதற்கு அறிவியல் (Science) விளக்கமொன்று கட்டாயமாக இருக்க வேண்டும் என சிந்தித்து செய்யப்பட்டதே இவ் ஆய்வு ஆகும். ஒவ்வொரு எழுத்தும் எவ்வாறு பிறக்கின்றன என்பதை தொல்காப்பியர் விரிவாகக் கூறியிருந்தாலும் அங்கும் திருப்தியான விடை கிடைக்கவில்லை. இந்த ஆய்வின் மூலம் கண்டுபிடித்த அறிவியலின் அடிப்படையிலான முடிவுகள் தொல்காப்பியரின் கருத்துகளுக்கு மேலும் வலுவூட்டுவதாகவே அமைந்துள்ளது.

ஆய்வு முறை

இந்த ஆய்வில் பெரும்பாலானவை ஆய்வாளரின் மனதில் ஏற்பட்ட ஐயங்களுக்கான விடையைத் தேடி தனிப்படச் சிந்தித்து உருவாக்கியதே. ஆயினும் இந்த ஆய்விற்காக சில தமிழ்ப் பேராசிரியர்களுடன் விவாதிக்கப்பட்டது. அதைவிட தமிழ்ப்பாடப் பயிற்சிகள் நடைபெற்ற போதும் மொழி வல்லுனர்களுடன் இந்த ஐயம் கேட்கப்பட்டதுடன் இங்கு விபரிக்கப்பட்டுள்ள கருத்துக்களும் பரிமாறப்பட்டு அவர்களின் ஒப்புதல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இதனைவிட தமிழ்ப்பள்ளியில் கற்பிக்கும் சிறுவர்களுக்கும், சக ஆசிரியர்களுக்கும் இந்த முடிவுகள் கற்பிற்கப்பட்டு அவர்களின் ஐயமும் தீர்ந்தது ஆய்வின் முடிவை மேலும் உறுதிசெய்தது. இவற்றைவிட இயற்பியலின் ஒலியியல் சம்பந்தமான நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் ஆராய்ந்து மனிதன் எவ்வாறு ஒலிகளை ஏற்படுத்துகிறான் என்பதும் புரிந்து கொள்ளப்பட்டதுடன் தமிழ் உச்சரிப்புகளுக்கான தொடர்புகளும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

ஆய்வு முடிவுகள்

3.1 உயிர் எழுத்துக்கள்

ஒருவர் தனது வாயின் உதடுகளை சில வகைப்படியே அசைக்க முடியும். இதனை அ, இ, உ, எ, ஐ, ஒ, ஔ ஆகியவற்றை ஒருமுறை சொல்லிப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம். வேறு வகையில் அசைக்க முடியுதா என்றும் முயன்று பார்க்கலாம். இவற்றுள் ஐந்து குறில் எழுத்துக்களான அ, இ (E), உ (U), எ (A), ஒ (O) என்பவற்றை வாயை மேலும் கீழும் அசைக்காமல் உதடுகளை அசைப்பதன் மூலம் கூறமுடியும். "ஐ (I)" மற்றும் "ஔ" என்பவற்றைச் சொல்லும் போது வாயை மேல் உயர்த்தி கீழ் நோக்கி அசைக்க வேண்டியிருக்கும் என்பதையும் கவனிக்கவும். ஐந்து குறில்களினதும் நெடில்களைச் சொல்லும் போது வாயை சற்று அதிகமாக அசைக்கவேண்டி வரும் என்பதையும் கவனிக்கவும். தமிழ் எழுத்துக்களுக்கு ஒத்த ஆங்கில உயிர் எழுத்துக்கள் ஐந்தும் குறிக்கப்பட்டுள்ளது. தமிழில் "அ" மற்றும் "ஔ" மேலதிகமாக உள்ளன. ஆயினும் ஆங்கிலத்தில் A என்ற எழுத்தே "அ" என்ற ஒலிக்கும் (Apple) மற்றும் "எ" என்ற ஒலிக்கும் (Aeroplane) பாவிக்கப்படுகிறது. அத்துடன் "ஐ" மற்றும் "ஔ" தவிர்ந்த ஏனைய ஐந்து குறில் எழுத்துக்களின் (அ, இ, உ, எ, ஒ) நெடில்களும் (ஆ, ஈ, ஊ, ஏ, ஓ) உயிர் எழுத்துக்களாக உள்ளன. "ஐ" மற்றும் "ஔ" ஆகியவற்றை உச்சரிக்கும் போது நாம் வாயை மேலுயர்த்தி கீழிறக்குவதால் அதனுள் நெடிலும் அடங்கிவிட்டதால் அவற்றிற்கு தனியான நெடில்கள் உருவாகவில்லை. அவையும் நெடில் எழுத்துக்களாகவே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. "ஐ" மற்றும் "ஔ" என்பவற்றிற்கு ஏன் குறில்கள் உருவாகவில்லை என்றொரு கேள்வி வரும். இது ஒருவரால் வாயை அசைக்கக் கூடிய முறைகளிலேயே தங்கியுள்ளது. ஒருவரால் வாயை மேலும் கீழும் ஆட்டாமல் ஐந்து வகைகளிலேயே (அ, இ, உ, எ, ஒ) ஒலியெழுப்ப முடியும். இது எந்த

மொழிக்கும் பொருந்தும். இந்த அடிப்படை அசைவுகளைத் தவிர வாயை மேலுயர்த்தி கூறுவதன் மூலம் மேலும் வேறு இரு வித்தியாசமான ஒலிகளை உருவாக்கலாம் என தமிழர் கண்டு பிடித்ததே "ஐ" மற்றும் "ஔ" ஒலிகளாகும். இந்த இரண்டு எழுத்துக்களுமே ஐந்து குறில்களுக்கும் நெடில்களை உருவாக்க முடியும் என்ற எண்ணத்தைக் கொடுத்திருக்க வேண்டும். நெடில்களுடனும் சேர்த்து 12 உயிர் எழுத்துக்கள் இருப்பதாலேயே தமிழரால் எழுதுவது போன்று படிக்கவும் முடிகிறது அத்துடன் ஒலிப்பது போன்று எழுதவும் முடிகிறது. இதுவும் தமிழ்மொழிக்கே உரிய சிறப்பு ஆகும்.

மேலும் இப் பன்னிரண்டு எழுத்துக்களைச் சொல்லும் போது வாய் திறந்து இருப்பதுடன் காற்றும் சத்தமும் வெளியேறிச் செல்லும் என்பதனையும் கையை வாய்க்கு முன்னால் பிடித்து உறுதி செய்து கொள்ளலாம். இது பொதுவாக எல்லா மொழிகளிலும் காணப்படும் தன்மையாகும். ஆயினும் வேற்று மொழியினர் அவற்றிற்கு "உயிர்" எனப் பெயரிட்டு அழைக்காதபோது தமிழ் மட்டும் ஏன் அப்படி அழைத்தது என்பதே இங்கு முக்கியமாக ஆராயப்பட்டுள்ளது.

இப்போது ஒருவர் உயிர் வாழத் தேவையானது என்னவென்று பார்ப்போம். ஒருவர் உயிர் வாழச் சக்தி (Energy) வேண்டும். அதற்கு உணவு உண்ண வேண்டும். உணவைச் சமிபாடு (Digest) அடையச் செய்யும் தொகுதி உடலினுள் இருக்க வேண்டும். இது உள் உடல் அல்லது சமிபாட்டுத் தொகுதி என்று பொதுவாக கூறுப்படுகிறது. ஆனால் இவற்றுடன் சக்தி வெளியேறிச் செல்லும் பாதையும் வேண்டும். உண்மையில் அதுவே எமது உயிருக்கு மிகவும் அவசியமானதாகும். சக்தி வெளியேறும் பாதை இல்லாவிடில் ஒருவரால் உயிர் வாழ முடியாது. வெளியேறும் பாதைகளில் அடைப்பு ஏற்பட்டால் இறக்க வேண்டிவரும். ஒருவரால் மூச்சு அல்லது சிறுநீர் அல்லது மலம் அல்லது வியர்வை போன்றவை வெளியேற்ற முடியாவிட்டால் உயிர் வாழ முடியாது. இது இயற்கையின் விதியென்று அறிவியல் கூறுகிறது.

இது மனிதன், விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு மட்டுமல்ல எந்தவொரு இயந்திரத்துக்கும் கூட (Engine) பொருந்தும். இயந்திரமொன்று இயங்க அதற்கு எரிபொருள் (Hot Source) வேண்டும். அதனைப் பயன்படுத்தி வேலை செய்யும் இயந்திரம் (Engine) அல்லது விசைப்பொறியொன்று (Motor) வேண்டும். அத்துடன் சக்தி வெளியேற ஒரு பாதையும் (Exhaust) (Cold Sink) வேண்டும். படம் 1 இனைக் கவனிக்கவும். இதனை வெப்பவியலின் இரண்டாம் விதிப்படி (Second law of Thermodynamics, Entropy) நிறுவலாம். இவ் விதிப்படி சீர்குலைவு அல்லது "சிதறம்" (Disorder or Entropy) எப்போதும் அதிகரித்தே செல்லும். இது எல்லா மூடிய தொகுதிக்கும் செல்லுபடியாகும். இதன்படி இந்த அண்டத்தை மூடிய தொகுதியாக எடுத்தால் இந்த அண்டத்தில் சீர்குலைவு அதிகரித்தே செல்ல வேண்டும். ஒரு எடுத்துக்காட்டு மூலம் இதனை உணரலாம். நீங்கள் புதிதாக வீடு வாங்கும் போது அது மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் இருக்கும். காலம் செல்லச்செல்ல வீட்டின் பகுதிகள் பழுதாகி சீர் குலைந்துவிடும். இதே போன்றே மனிதனின் உடற்தொகுதியை ஒரு மூடிய தொகுதியாக எடுத்தால் நாள் ஆக ஆக மனிதனது உடல் சீர்குலைந்து கொண்டே செல்லும்.



படம் 1:இயந்திரமொன்றின் மாதிரி அமைப்பு

இந்தச் சீர்குலைவை சரிப்படுத்துவதாயின் அதற்காக அதிக சக்தியை செலவு செய்யவேண்டியிருக்கும். அதற்கான இயந்திரங்களும் உண்டு. எடுத்துக்காட்டாக ஒரு அறையில் அமர்ந்து இருந்தால் அதன் வெப்பநிலை அதிகரித்துக்கொண்டே செல்லும். அதனை குறைப்பதற்கு அல்லது அதே வெப்பநிலையில் பேணுவதற்கு குளிரூட்டிகளை ஒருவர் செலவு செய்து பாவிக்க வேண்டி வரும். எனவே தொகுதியொன்று இயங்குவதற்கு அதிலிருந்து சக்தி வெளியேற வேண்டும். வெளியேறும் சக்தி இந்த அண்டத்தில் ஏதோ ஒருவகைச் சீர்குலைவை ஏற்படுத்தும். இது இயற்பியலிலுள்ள வெப்பவியலில் வரும் இரண்டாவது விதியாகும். இது அறிவியல் முறைப்படியும் நிறுவப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக உங்கள் வாகனத்தின் புகை வெளியேறும் பகுதியை அடைத்து விட்டால் அல்லது இயந்திரம் அல்லது விசைப்பொறியில் இருந்து வெளியேறும் வெப்பத்தைத் தடுத்தால் வாகனம் எரிந்து சாம்பலாகிவிடும். எனவே இயந்திரமொன்று இயங்க அதற்கு வழங்கப்படும் சக்தியின் ஒரு பகுதி சக்தி வெளியேறிக் கொண்டிருக்க வேண்டும். இதன் காரணமாகவே நம்மால் நூறு சதவீதம் வினைத்திறன் (Efficiency) உள்ள எந்த இயந்திரத்தையும் கண்டுபிடிக்க முடியாமலுள்ளது. வாகனம் ஒட்டும்போது வெளியேறும் சக்தி வெப்ப சக்தியாக வெளியேறி இந்த அண்டத்தில் சீர்குலைவை ஏற்படுத்தும். ஏன் வீடுகளில் பொதுவாக வைத்திருக்கும் பூச் சாடிக்குக்கூட அடியில் ஓட்டையிட்டு தண்ணீர் வெளியேற பாதையொன்றை ஏற்படுத்தாதுவிடில் பூச்செடி சில நாட்களில் அழுகி இறந்துவிடும். இதுதான் இயற்கையின் நியதி அல்லது இதனை இயற்கையின் விதியென்றும் கூறலாம். இந்த விதியை அண்டத்தில் (Universe) எதுவும் மீற முடியாது என நிறுவப்பட்டுள்ளது. இதற்கு காரணமொன்றும் கூறுகிறார்கள். இந்த அண்டமானது வெருவெடிப்பினால் (Big Bang) உருவாகியதாக அறிவியல் கூறுகிறது. பெரு வெடிப்பு நிகழும்போது சிதறிய துண்டுகள் தொடர்ந்து விரிவடைந்து மேலும் சிதறியபடி செல்லும் அந்த சிதறலே இந்த அண்ட உருவாக்கத்தின் மூலத்திலுள்ள சீர்குலைவை ஏற்படுத்தும் விளைவு ஆகும். இது இந்த அண்டத்தில் நடைபெறும் எல்லாவற்றிலும் உள்ளிணைந்து இருக்கும். அதுவே மொழியிலும் உள்ளது.

எனவே ஒருவரின் உடவில் இருந்தும் சக்தி வெளியேறினால் மட்டுமே அவர் உயிர் வாழலாம். மலம், சலம், வியர்வை, மூச்சு என்பவை சக்தி தொடர்ச்சியாக வெளியேறிக்கொண்டிருப்பதைக் காட்டுகிறது. நாம் அ, இ, உ, எ, ஒ அல்லது இவற்றின் நெடில்களையும் ஏனைய நெடில்களான ஐ, ஔ என்பவற்றையும் உச்சரிக்கும் போது எமது

வாய் திறந்து சக்தியை வெளியேற்றுகிறது. ஒலியுடன் காற்றும் வெளியேறுகிறது என்பதை ஒருவர் தனது வாய்க்கு முன்னால் கையை வைத்து உணர்ந்து கொள்ளலாம். இது உயிர் வாழத் தேவையான செயற்பாடுகளில் ஒன்றென உணர்ந்து கொள்ளலாம். ஒருவருக்கு உயிரைக் கொடுப்பதே இந்த சக்தி வெயியேற்றமே. இதனாலேயே "அ" முதல் "ஔ" வரை உள்ள 12 எழுத்துக்களையும் உயிர் எழுத்துக்கள் என அழைக்கப்பட்டது என்ற முடிவு இங்கு எடுக்கப்பட்டுள்ளது. ஆங்கில மற்றும் பிற மொழிகளிலும், எடுத்துக்காட்டாக, A, E, I, O, U என்பவற்றைக் கூறும்போதும் காற்று வெளியேறும். அதற்கு அவர்கள் யாரும் அதே பொருளில் Life Alphabets என பெயர் வைக்கவில்லை. தமிழர்கள் மனிதன் உயிர் வாழ்வதற்கு காற்றுடன் சக்தியும் வெளியேறுவது அவசியம் என்பதை உணர்ந்து இவ் எழுத்துக்களுக்கு "உயிர்" என பெயரிட்டது மிகவும் பொருத்தமானதாகும்.

3.2 மெய் எழுத்துக்கள்

இதேபோல "க்" முதல் "ன்" வரையுள்ள எழுத்துக்களை சொல்லும் போது சக்தி வெளியேறாது. வாய், தொண்டை அல்லது மூச்சுக் குழல் அடைபடும். நாக்கு விதம் விதமாக அசைந்து காற்று வெளியேறுவதைத் தடுக்கும். காற்று வெளியேறுவதை தடுக்கும் சத்தமே காதுகளுக்குக் கேட்கிறது. அந்த சக்தி உடலுக்குள்ளேயே அடைபட்டு இருப்பதால் அவ் எழுத்துக்கள் மெய் எழுத்துக்கள் எனப்பட்டது. மெய் என்பதற்கு உடல் என்றொரு பொருளும் தமிழில் உண்டு. மெய் எழுத்துக்கள் வல்லினம், இடையினம் மற்றும் மெல்லினம் என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. அது ஏன் அவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான இயற்பியல் விளக்கம் அதன் பருமன் கருதி இங்கு தவிர்க்கப்பட்டுள்ளது. அதனை இன்னொரு சந்தர்ப்பத்தில் பிரசுரிக்க முயற்சி எடுக்கப்படும்.

3.3 உயிர்மெய் எழுத்துக்கள்

உயிர்மெய் எழுத்துக்களை உச்சரிக்கும் போது முதலில் உடலுக்குள் ஒரு கணம் காற்றை நிறுத்தி காற்றை வெளியே விடுவோம். எனவே காற்றை நிறுத்துவதன் மூலம் மெய்யின் பங்கும் வெளியேற்றுவதன் மூலம் உயிரின் பங்கும் உயிர்மெய் எழுத்துக்களில் உள்ளதால் அவை அவ்வாறு அழைக்கப்படுகின்றன. உண்மையில் "மெய்உயிர்" என்ற சொல்லே அறிவியலின் படி மிகவும் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் மெய் எழுத்துக்களை உச்சரிக்கும் போது முதலில் காற்றை நிறுத்தியே வெளியேற்றுகிறோம். எனவே மெய் முதலில் வந்து பின்னரே உயிர் வருகிறது. ஆயினும் பல ஆயிரம் வருடங்களிற்கு முன்னர் எழுதப்பட்ட இலக்கணங்களின் காலத்தில் இங்கு கூறப்பட்டது போன்ற அறிவியல் விளக்கம் தெரிந்திருக்காவிடினும், சரியான திசையில் சிந்தித்தே தமிழர்கள் பெயர்களைக் கொடுத்துள்ளார்கள் என்பது வியப்பே. எனவே உயிர்மெய் என்ற பெயரை மாற்றவேண்டிய தேவை இல்லை. அது சரியாகவே ஆனால் இடம்மாறி குறித்து நிற்கிறது என்பது அறிவியலின் அடிப்படையிலான இந்த முடிவாகும்.

3.4 ஆய்த எழுத்து

ஃ என்பது ஆய்த எழுத்து எனப்படுகிறது. ஆய்த எழுத்து நுட்பமான ஒலியை உடையது. ஆய்தல் என்றால் நுணுக்கம் என்று தொல்காப்பியம் பொருள் கூறுகிறது. இதனை முப்பாற் புள்ளி, அஃகான், அஃகேனம், எனப் பலவகையாக அழைப்பதுண்டு. "ஆய்தம்" என்பது இரும்பால் செய்யப்பட்ட கேடயத்தையும் குறிக்கும். கேடயத்தில் ஃ போன்று மூன்று கூரான குமிழிகள் இருக்கும். அவசியம் ஏற்படின் அதனாலும் எதிரியைத் தாக்கலாம்.

அத்துடன் இந்த எழுத்தின் வடிவம் வேலின் அல்லது சூலத்தின் கூர்மையான பகுதிகளைக் குறிப்பதால் ஆய்த எழுத்து என்று வந்து இருக்கலாம் என்பது பொதுவான கருத்து ஆகும்.

இதனை வேறு இரண்டு வழிகளில் நோக்குவோம். முதலாவது, ஃ என்ற எழுத்து வேல்போல தெரிவதிலும் பார்க்க அடுப்புக் கல்லு போன்றே பொதுவாகக் கண்களுக்கு தெரிகிறது. நச்சினார்க்கினியரும் இதனை அவ்வாறே அடையாளம் காட்டியுள்ளார். அடுப்பு என்பது நாம் உண்ணும் உணவைத் தயாரிக்க உதவுவதாகும். இந்த அடுப்பும், உணவும்கூட ஒரு போர் ஆயுதமாக பண்டைய காலம் முதல் நவீன காலம் வரை பாவிக்கப்படுகிறது. சங்ககால புறநானூறில் அரசனின் கோட்டையை முற்றுகையிடும் எதிரிப் படைகள் உணவையும் எரிபொருளையும் தடைசெய்து அடிபணிய வைத்த சம்பவங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அதேபோன்றே அண்மைய ஈழத்து போரில் அசைக்க முடியாமல் இருந்த ஆனையிறவு இராணுவத்தளத்தை உணவு, தண்ணீர் மற்றும் எரிபொருட்களை செல்லவிடாமல் தடுத்து நிறுத்தி அழித்த வரலாறும் சாட்சியாக உள்ளது. எனவே ஃ என்ற எழுத்து ஒருவகை போர் ஆயுதத்தைக் குறிக்கிறது எனலாம். இது வேல், சூலம் எனக் கூறுவதைவிட சாலப் பொருத்தமானதாகும்.

இதனைவிடச் சிறப்பாக இன்னொரு விதமாகவும் நோக்கலாம். இப்போது எதிரியொருவன் ஒருவரைத் தாக்குகிறான் என எடுத்துக்கொள்வோம். அப்படித் தாக்கும் போது முதலில் வலிமை குறைந்த வயிற்றுப் பகுதி, கழுத்துப் பகுதி அல்லது மார்பையே பொதுவாகத் தாக்குவார்கள். அவ்வாறு ஒருவரின் வயிற்றில், கழுத்தில் அல்லது மார்பில் குத்தும்போது காற்றானது அமுக்கத்தால் வெளியேற முயற்சிக்கும். அப்படி காற்று முழுமையாக வெளியேறினால் அவரது உடல் அவயங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு உயிர் இழக்க வேண்டியும் வரலாம். எனவே அப்படியான சந்தர்ப்பங்களில் ஒருவரின் உடலுறுப்புகளை பாதுகாக்கும் பொறிமுறையொன்று கட்டாயமாக உடலினுள் இருக்க வேண்டும். இதுவே படைப்பின் மகத்துவம். எனவே அவ்வாறு தாக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதனைத் தடுக்கும் ஆயுதமாக நமது உடலே நம்மை அறியாமல் வெளியேறும் காற்றைத் தடுக்கப் பார்க்கும். அதன் மூலம் எம்மால் நிதானித்து எதிரியைத் தடுக்க முடியும் அல்லது தப்பலாம். ஒருவரது உடலில் இருந்து காற்று வெளியேறுவதைத் தடுக்கும் போது ஏற்படும் சத்தமே "அஃ" என வரும். இதனை ஒருவர் சாதாரணமாக தனது வயிற்றுப் பகுதியில் குத்திப் பார்ப்பதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம். ஒருவரின் உடல் தன்னைப் தற்காத்துக்கொள்ளும் ஆயுதமாக இவ் ஒலியினை உபயோகிப்பதால் ஆய்த எழுத்து என்ற பெயர் வந்திருக்க வேண்டும் என்பது இந்த ஆய்வின் முடிவாகும். மேலும் ஃ என்ற எழுத்து நம் உயிரைக் காப்பதால் அதனை உயிர் எழுத்துக்களின் முதலிலும், அத்துடன் வெளியேற முயலும் காற்றை நிறுத்தி உள்ளே வைத்திருப்பதால் வரும் ஒலியாகையால் மெய் எழுத்துக்களின் முதலிலும் சேர்த்துள்ளனர். அதனாலேயே இது உயிர் மற்றும் மெய் எழுத்துக்களுக்கு பொதுவானதாக தனியாக இருக்கும்.

ஆய்வு முடிவுரை

இந்த ஆய்விலே தமிழ் எழுத்துக்களை உயிர் எழுத்து, மெய் எழுத்து என அழைக்கப்படுவதற்கான காரணங்கள் அறிவியலின் படி விளக்கப்பட்டுள்ளது. ஒருவர் உயிர் வாழ உயிர் எழுத்துக்களை உச்சரிக்கையில் வெளியேறும் காற்றும் அவசியமென இயற்பியலின் விதிகளின்படி நிறுவப்பட்டுள்ளது. ஆய்த எழுத்தானது ஒருவரின் உயிரை ஆபத்திலிருந்து காப்பற்றும் எழுத்து என்பதால் அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக்

காட்டப்பட்டுள்ளது. அதற்கான இரண்டு கருத்துக்களை முன் வைக்கப்பட்டுள்ளன. ஆய்த எழுத்தின் வடிவம் அடுப்புப் போன்று இருப்பதையும், உணவு போர்களில் ஆயுதமாக பயன்பட்டதையும், எம்மை தாக்குதல்களில் இருந்து நமது உடல் பாதுகாக்கும் பொறிமுறையே "அஃ" என்ற சத்தமெனவும் காட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த முடிவுகள் மனிதர்களுக்கு மட்டும் அல்ல விலங்குகள், பறவைகள் மற்றும் உயிர் உள்ள அனைத்தும் பொதுவானது. தமிழ் மிகவும் அழமாகச் சிந்தித்து மிகவும் பொருத்தமான முறையில் தனது எழுத்துக்களை அழைக்கிறது என்பது நிறுவப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் மூலம் தமிழ் மொழி ஒரு "உயிர் இயற்பியல்" (Bio Physics) என்பது நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறான அறிவியலின் அடிப்படையிலான விளக்கத்தைக் கொடுக்கும்போதே கற்பவர்களுக்கு மொழியில் ஒரு ஈர்ப்பைக் கொடுக்கும். அத்துடன் வேற்று மொழியினருக்கும் தமிழின் தொன்மையை உணர உதவும். மேலதிகமாக இதன் மூலம் தமிழ்த்தாய்க்கு புதிய அணிகலன் ஒன்றையும் அணிந்து பார்த்து மகிழ்ந்து கொள்ளலாம்.

துணைநின்ற நூல்கள்

1. தொல்காப்பியம், தொல்காப்பியர், திட்டம் மதுரை, (2001).
2. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியன் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், (1944).
3. மஞ்சுகாசினியம் - இயங்குதமிழ், க. சச்சிதானந்தன் (2001).
4. பண்டைத் தமிழ் எழுத்துக்கள், தி. நா. சுப்பிரணியன், (1938).
5. https://www.tamilvu.org/ta/courses-degree-c021-c0212-html-c0212312-15788

தொ.மா.க. 214

தொல்காப்பியத்தில் முதற்பொருள்

முனைவர் சம்பந்தம் ஏகாம்பரம்
கணிதத் துறைத்தலைவர், (பணி நிறைவு)
கொலம்பியா கல்லூரி, வான்குவர்
பிரிட்டிசு கொலம்பியா, கனடா.
ammaa51@outlook.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் தமிழின் அடித்தளமாக விளங்கும் தொன்மையான நூல். தமிழ் அறிஞர்களையும் சுழலும் உலகமொடு ஒளிவீசிச் சுற்றிவர முன்னூட்டமாக அமைந்த ஒரு கலங்கரை விளக்கம் தொல்காப்பியம். எல்லா மொழிகளுக்கும் பொதுவானது எழுத்து, சொல், பொருள் எனலாம். இயல் (உரைநடை), இசை(செய்யுள்) , நாடகம் என்பது முத்தமிழ். முக்கடல் கூடும் குமரி முனையில் வள்ளுவத்தின் அலைகள் மண்ணிலே கடல் அலைகளாகவும் விண்ணிலே சக்தி அலைகளாகவும் வீசுவது முழுமை பெற அங்கே தொல்காப்பியர் சிலையும் இருப்பது என் கற்பனையில் தெரிகிறது!

உயிரும் மெய்யும் உணர்வும் பின்னிய தமிழும் தொல்காப்பியமும் வேறல்ல. உலகமும் வேறல்ல. உலக இலக்கியங்களுக்கு ஒரு வரையறை சொல்லும் தொல்காப்பியம் என்னும் நூலுக்கு இலக்கிய நோபல் பரிசு கொடுக்கப்பட வேண்டும். அடியேன் ஒரு கனிதப் பேராசிரியர் என்பதால் தொல்காப்பியர் சூத்திரங்கள் தமிழுக்கு மட்டுமல்ல, வாழ்வியலுக்கும், உலகத்தின் மூலமான இயற்கை உண்மைகளுக்கும் பொருந்தும். தமிழ் இலக்கணத்தையும் தாண்டிப் பேரண்ட உண்மைகளும், வாழ்வியல் ஒழுகலாற்று நெறிமுறைகளும் மாணிக்கப் பரல்கள்போல் தொல்காப்பியத்தில் ஒளிர்கின்றன.

தொல்காப்பியத்தில் முதற்பொருள் என்ன என்பதை 2500 ஆண்டுகளுக்கு முன்னர் முதன் முதலாகக் கூறியிருக்கிறார். இடம்-காலம் என்ற இரண்டும் என்று இனைத்துக் கூறியிருப்பது வியக்கத்தக்க அறிவியல் உண்மை.

இதே உண்மையைக் கண்டறிந்து நிறுவியிருக்கிறார் தொல்காப்பியருக்குப் பிறகு 2000 ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த மாபெரும் செருமானிய அறிவியலாளர் ஐன்ஸ்டைன் என்பவர்.

தொல்காப்பியரின் நிலம்-பொழுது என்றிணைந்த முதற்பொருள் கருத்தையும் ஐன்ஸ்டைன் அவர்களின் இடம்-காலம் (space-Time) என்றிணைந்த முதற்பொருள் கருத்தையும் விரிவாக ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் .

பொருளியலில் முதற்பொருளை முதல் சூத்திரமாகக் கூறியது அவரது பேரறிவின் நிலையைத் தொட்டவர் என்பதற்காகவே தொல்காப்பியருக்கு முதல் இலக்கிய நோபல் பரிசு கொடுக்கவேண்டும் என்பதில் அறிவியலுக்கும் தமிழுக்கும் கருத்து வேறு பாடு இருக்காது!

குறிசொற்கள்: நிலம்-பொழுது, இடம், காலம், இடம்-காலம், சார்பியல் கோட்பாடு, முடிவிலி.

முன்னுரை

வாழையடிவாழையென வந்துதித்த திருக்கூட்டத்தின் பேரறிவாளர்களின் மரபில் தோன்றிய தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியமே நமக்குக் கிடைத்த முதல் நூல். கடந்த 500 ஆண்டுகளின் அறிவியல் வரலாறு காட்டுவது என்ன? விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் சந்திக்கும் எல்லைக்கோட்டில் வரலாறு நம்மை நிற்கவைத்திருக்கிறது. ஐன்ஸ்டீன் சொன்ன முதற்பொருளும் சித்தர்கள் தொன்று தொட்டு சொல்வதும் ஒன்றே.

என் கட்டுரைப் பொருண்மையின் புதுமை என்ன?

முதற்பொருள்

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்னாலே நிலம்-பொழுது இரண்டும் முதற்பொருள் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

> *"முதல் எனப்படுவது நிலம் பொழுதிரண்டின்*
> *இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" (3)*

நிலம் என்ற இடமும் பொழுது என்ற காலமும் ஐன்ஸ்டைன் அவர்கள் இடம் - காலம் (space-Time) என்று இடையே ஒரு கோடிட்டுப் பிரிக்க முடியாத ஒரு பொருளாக அறிவியல் வழியாக 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிரூபணம் செய்கிறார். இந்த உண்மை சார்பியல் கோட்பாடு (Theory of Relativity) என்பதாகும். இடம் - காலம் என்ற நான்காவது பரிமாணம் மண்ணின் அறிவியலை அளப்பரிய பேரண்டப் பெருவெளியின் அறிவியலாக மாற்றியது. மூலமான பொருளற்ற ஒரு பொருளை முதற்பொருள் என்று முழங்கியவன் இயல்புணர்ந்த தொல்காப்பிய காலத் தமிழன். முதலில் சொன்னவன் தமிழன். 20-ம் நூற்றாண்டில் நோபல் பரிசு பெற்ற இக்கருத்தை தொல்காப்பிய மன்றத்தின் முதல் ஆண்டு மலரில் இடம் பெற வேண்டும் என்பதே தொல்காப்பியருக்கு நாம் செய்யம் சிறப்பு. இக்கருத்தை வேறு யாரும் சொன்னார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. தமிழில் தொல்காப்பியரின் வாழ்வியல் நூலான தொல்காப்பியத்திற்கு நோபல் பரிசு கொடுத்து உலகளவில் தொல்காப்பியரை அடையாளப் படுத்த வேண்டியது நம் கடமை.

17-ம் நூற்றாண்டில் நியூட்டன் அவர்களின் விதிகள் நாம் வாழும் பூமி, சூரியன் ஒன்பது கோள்கள் உள்ளிட்ட இயக்க நிலை, இருப்பு நிலையின் அறிவியல். அண்டம் பேரண்டம், பெருவெளி அனைத்திற்கும் பொருந்தும் ஓர் நுணுக்கமான அறிவியலே குவியக் கோட்பாடு என்பதாகும். இன்றைய நாளிலும் நம்மை நடத்திச் செல்லுவது குவியக் கோட்பாடு. நாம் பரம்பொருள் என்று சொல்வதும் பொருளல்ல. ஐன்ஸ்டைன் அவர்களும் பொருள் என்று சொல்லவில்லை.

பேரண்டப் பெருவெளியில் ஐன்ஸ்டைன் உய்த்துணர்ந்து கணிதம்-இயற்பியல் வழியாக நிரூபிக்கப்பட்ட முதற்பொருள் இடம்-காலம் (space-Time) சார்பியல் கோட்பாடு என்று அறியப்படுகிறது . அறிவியலாளர்கள் ஆய்வு மேலும் பல கேள்விகளை எழுப்பிய வண்ணம் இருந்தனர். இன்று சார்பியல் கோட்பாடு விரிந்து வளர்ந்து அறியப்பட்டது குவியக் கோட்பாடு (Quantum Theory). இக்கோட்பாடு இன்று அறிவியல் புதுமையும் பயன்பாடுகள் நிறைந்ததும் ஆகும்.

நியூட்டன் விதிகள் சூரியக் கும்பத்தின் அறிவியலில் முதற்பொருள் என்ற பேருண்மை இல்லை. விண் சூரியனோடு இயங்குகின்ற கோள்களின் கூட்டம் மட்டுமல்ல . விண்ணில் சூரியனைப் போன்று கோடிக் கணக்கான விண்மீன்கள் உண்டு. அவைகளின் தொகுதி

அண்டம் எனப்படுகின்றது. அண்டங்கள் கோடி கோடி உண்டு. அவைகளும் எல்லையற்ற நிலையில் அறிய இயலாத பொருளாக இருப்பது என்று தமிழில் நாம் சொல்கிறோம். இந்த கருத்தையே ஐன்ஸ்டைன் இடம்-காலம் என்று இடைகோடிட்டு ஒரே பரிமாணமாக உலகத்திற்கு அளித்தார். தொல்காப்பியர் காலத்திலே இடம் - காலம் முதற்பொருள், பேரண்டப் பெருவெளியின் மூலம் என்ற இயல்பை உணர்ந்தோர் சொன்னார்கள் என்று தொல்காப்பியர் வரிகள் அறிவிக்கின்றன.

தொல்காப்பியம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்னாலே "இடம்-பொழுது" இரண்டும் இயல்பாக ஒன்றிய பொருள் என்று பொருளியல் தொடங்கும் வரிகளில் சொல்லுகிறார்.

2. முதற்பொருள் என்பது நிலம்-பொழுது (இடம் - காலம்) ஒன்றை ஒன்று சார்ந்த ஒரே பொருள்.

3. சார்பியல் கோட்பாடு (Theory of Relativity) 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நோபல் பரிசு பெற்ற ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் அவர்கள் இயற்பியல்-கணிதத்தில் உய்த்துணர்ந்த இயறகையின் இயக்க உண்மை. நிலம்-பொழுது (இடம்-காலம்) இரண்டும் ஒன்றிணைந்த முதற்பொருள் சார்பியல் கோட்பாடு என்பதாகும்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்த உண்மையை 'இயல்புணர்ந்த புலவோர்' சொல்லுவது என்று அடக்கமுடன் சுட்டிக்காட்டும் தொல்காப்பியரை நாம் கொண்டாட வேண்டும் .

பேரண்டப் பெரு வெளியாக விரிந்தும் பரந்தும் அறியொணாப் பொருளதாக இருக்கும் இவ்வுலகத்தின் பொருட்கள், முதற்பொருள் கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று வகைமையில் அடங்கி விடும் என்கிறார் தொல்காப்பியர். (இளம் பூரணார் உரை).

"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலோடு பயின்றவை நாடுங்காலை" *(4)*

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னாலே தமிழர்கள் அறிந்த உண்மை நிலமும் பொழுதும் ஒன்றியிருப்பது என்பதாகும். இதை தொல்காப்பியருக்குப் பிறகு குறைந்தது ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் அறிவியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் அவர்கள் உலகிற்கு அறிவித்தார்.

நீளம் அகலம் உயரம் என்ற மூன்று பரிமாணங்களில் நாம் காணும் உலகத்தின் இருப்பு நிலை, இயக்க நிலை இரண்டையும் கணக்கிடலாம். அனைவரும் அறிந்த நியூட்டன் என்ற அறிவியலாளர் 17-ம் நூற்றாண்டில் நாம் வாழும் பூமியில் இயக்க விதிகளை வரையறுத்து விஞ்ஞான வளர்ச்சிக்கு ஒரு புதிய பாதையை வகுத்தார். ஆயினும் விண்ணையும் மண்ணையும் நம் சூரியக் குடும்பத்தையும் விரியும் பேரண்டத்தையும் சேர்த்துப் பார்க்குங்கால் நமக்கு நான்காவது பரிமாணத்தை இயல்பாகக் கணிதம் காட்டுகிறது என்று கண்டவர் ஐன்ஸ்டைன்.

எந்த சோதனைச் சாலையும் இன்றி தொலைநோக்கிக் கருவியும் இன்றி தன்னுடைய உள்ளுணர்வின் ஆற்றலால் பேரண்ட உண்மையைத் தன்னுடைய நுண்மாண் நுழை புல நோக்கில் கண்டறிந்தார் ஐன்ஸ்டைன். ஆர்க்கிமிடிஸ் என்ற அறிவியலாளர் "யுரேகா, யுரேகா"

என்று தெருவிலே மகிழ்ச்சியிலும் வியப்பிலும் கூவிக் கொண்டே ஆடையின்றி ஓடினார் என்பது வரலாறு. இத்தகைய தருணத்தையே பேரறிவின் வெளிப்பாடு என்று தவசிகள் கூறுவர்.

பொழுது அல்லது காலம் எனப்படுவதும் இடம் அல்லது நிலம் எனப்படுவதும் இரண்டும் ஒன்றாகி இயங்குவது என்று அவர் கண்டறிந்த சார்பியல் அறிவியலைப் போற்றி (Relativity Theory) ஐன்ஸ்டைன் அவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப் பட்டது.

இடம் - காலம் என்பது என்ன என்று விளக்கமாக ஆய்வோம்.

இடமும் காலமும் ஒன்றி இருப்பது, இணை பிரியாதது.

இரண்டிற்கும் தோற்றம் இல்லைமுடிவும் இல்லை .

இடம் - காலம் இரண்டும் நேற்றும் இருந்தது, இன்றும் இருப்பது, நாளையும் இருக்கப் போவது!

இடமும் காலமும் ஒன்றி இருப்பது, இணை பிரியாதது:

ஒரு புள்ளியில் இருந்து மற்றொரு புள்ளிக்கு இடையே தூரம் உண்டு. ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் சென்றால் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று தெரிய வேண்டும். உடனே ஊரை அடைவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்றும் சொல்லலாம்.

$$\frac{\text{தூரம்}}{\text{வேகம்}} = \text{கால அளவு}$$

$$\text{தூரம்} = \text{கால அளவு} \times \text{வேகம்}$$

உங்கள் நடை வேகம் நான்கு அடி என்று வைத்துக்கொள்வோம். உங்கள் நண்பர் வீடு 240 அடி தூரத்தில் இருக்கிறது என்றால் 240÷4=60 நொடிப்பொழுது கால அளவு ஆகும். தூரம் (நிலம் என்பதன் அளவு), காலம் என்பதன் அளவு (தூரத்தைக் கடக்கும் கால அளவு) இவ்விரண்டும் தெரிந்தால் தான் வேகம் என்ன என்பதைக் கணக்கிட முடியும். தூரத்தைக் கடக்கும் போது நாம் காலத்தையும் கடப்போம். தூரத்தை மட்டும் வைத்துக் கொண்டு கடந்து செல்லத் தேவையான கால அளவை அறுதியிட்டுச் சொல்ல வேகம் என்ற கால அளவும் வேண்டும் என்பதே இங்கு நாம் தெரிந்து கொள்ளும் செய்தி. இடம் பிறந்த பின் காலம் பிறந்ததா, காலம் பிறந்த பின் இடம் பிறந்ததா என்று பிரித்துப் பேச முடியாது!

மேலும் இந்திய நாட்டில் சென்னையில் என்ன நேரமோ அதே நேரம் இலண்டன் மாநகரில் வேறுபடும். இடத்தைப் பொறுத்து காலம் மாறும். சூரியன் உதிக்கும் நேரமும் ஒவ்வொரு இடத்திற்கும் மாறும். இடம் - காலம் (space-time) என்பதை ஒரு பரிமாணமாக காட்சிப்படுத்துவது ஐன்ஸ்டைன் அறிவியல். ஏனென்றால் சூரிய ஒளியின் வேகமும், சூரியன் இருக்குமிடத்தில் இருந்து நாம் இருக்கும் இடத்திற்கு ஒளி வந்து சேரும் கால அளவும் தெரிந்தால்தான் சூரியன், பூமியில் நாமிருக்கும் இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் (எந்த இடத்தில்) இருக்கிறது என்று சொல்லமுடியும். இடத்தை சரியாகச் சொல்ல முடியும். சூரியன் இருப்பு எந்த இடம் என்று சரியாகச் சொல்ல முடியும். ஒளியின் வேகம் ஒரு மாறிலி, மாறாதது. எப்போதும் ஒரே அளவைக் கொண்டது.

நிலமகள், காலதேவன் இருவரும் இணையர். நிலமகள் என்று ஒரு பெண்ணாக உருவாகப் படுத்துவது தமிழ். பருவம் என்பது பெண்ணுக்கு வளர்மதி போல் அழகை இயற்கையாக இணைப்பது. பெண்ணையும் பருவத்தையும் பிரிக்க முடியுமா? பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்ற பருவங்கள் பெண்ணின் இயல்பான கால மாற்றங்கள்.

கார்காலம் (மழைக் காலம்), கூதிர்காலம் (குளிர்காலம், இலைகள் கூம்பி உதிரும் காலம் அல்லது இலையுதிர் காலம்), முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில்காலம், முதுவேனில்காலம் என ஆறு பருவங்களாக ஓராண்டு காலத்தில் காலதேவன் நம்மை நடத்துகிறான்.

இரண்டிற்கும் (இடம்-காலம்) தோற்றம் இல்லை. முடிவும் இல்லை.

காலச் சக்கரம் என்று சொல்வார்கள். ஒரு வட்டம் என்பது தொடக்கமும் முடிவும் இல்லாதது. வட்டத்தில் காலம் எந்த ஒரு புள்ளியில் தொடங்குகிறது என்று உறுதியாகச் சொல்ல முடியாது. வேறொரு புள்ளியிலும் தொடங்க முடியும். எங்கு உறங்கினோமாமோ அங்கிருந்துதான் எழுந்திருக்க முடியும். தொடக்கம் ஒருபுள்ளி. முடிவும் அதே புள்ளியே. முடிப்பதற்கு வேறு வழியில்லை. அதே புள்ளியில்தான் முடிக்க முடியும். நேர்மறையாகச் சொன்னால் இப்படிச் சொல்லலாம். எந்த புள்ளியிலும் தொடங்கலாம், ஆயினும் அதே புள்ளியில் தான் முடிக்கவேண்டும். தொடக்கம் நமது விருப்பம் . முடிவு நமது கையில் இல்லை. தொடங்கும் இடத்தில் தான் முடிக்க வேண்டும் என்பது தொடங்கும் போதே உறுதியாகிறது. காலச் சக்கரத்தில் இடம் எவ்வளவு இயல்பாக இணைந்திருக்கிறது என்பதை யாவரும் எளிதாகப் புரிந்து கொள்ளலாம் .

காலம் என்பது படைக்கப்பட்டது இல்லை. பிறப்பும் இறப்பும் பிரிக்க முடியாதது. காலம் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. எண்ணிறந்த எல்லையிலாததே காலம்.

1, 2, 3... ... ... எண்கள் சொல்லிக்கொண்டே போனால் இறக்குமா?

-1, -2, -3... ... ...என்று சொல்லிக்கொண்டே போனாலும் இறக்குமா?

அதனால் தான் நமது முன்னோர்கள் காலம் என்பதைக் கணிதம் போலக் காட்சிப் படுத்திச் சக்கரம் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு எளிமை எவ்வளவு ஆழம்!

இடம் - காலம் இரண்டும் நேற்றும் இருந்தது, இன்றும் இருப்பது, நாளையும் இருக்கப் போவது! “நமது ஆய்வுப் பாதையில் நாம் பகுத்தும் தொகுத்தும் ஆய்ந்தறியும் உண்மைகள் இயற்கையின் அரிய உண்மைகள் என்று சொல்ல இயலாது. ஒரு மாபெரும் எல்லையற்ற இடைவெளியைத் தாண்டி உதிக்கும் ஆற்றலின் வெளிப்பாடு (உள்ளுணர்வின் விழிப்பு அல்லது பேரறிவின் மின்னல் என்று சொல்லலாம்.) உதிக்கும் ஞாயிறு போல் நம் ஆழ் மனத்தில் இருந்து எழுகிறது. இத்தகைய கண்டுபிடிப்புகளே இயற்கையின் எளிதான ஆயினும் ஆழமான உண்மைகள்.” என்பது ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் கூற்று.

இன்னும் கூர்ந்து நோக்குவோம். நிலம்-பொழுது இரண்டும் என்றும் இருப்பது. தோற்றம், மறைவு இரண்டுக்கும் இல்லை. காலம் என்றும் இருப்பது. வடிவம் கிடையாது உருவம் இல்லை. ஆயினும் அருவமாய்ப் பொருளோடு இணைந்து இருப்பது நிலம் என்னும் பருப்பொருள். தொல்காப்பியர் காலத்தில் மனிதன் காலம் என்னும் அருவமான பொருளை

நிலம் என்னும் பருப்பொருளோடு இணைத்தான். பேரறிவு நுணுக்கரிய நுண்ணறிவு தொல்காப்பியரிடத்தே இருந்தது என்பதை நாம் உணரலாம்.

கணிதவியலில் ஒரு கடுகளவு சிந்தித்தவன் என்பதால் நான் உங்களுக்கு இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் எண்கள் மட்டும் கணிதமல்ல. ஒரு பொருளின் கட்டமைப்பின் வடிவமும் அளவும் பரிமாணங்களும் இயல்பான இயற்கையின் விதிகளும் கணிதவியலுக்குள் இயங்குகிறது. முடிவிலி என்பது எல்லையில்லாத ஒன்று . காலம்-இடம் எல்லையற்ற பொருளின் (பொருளற்ற பொருள்) இயற்கையான எடுத்துக்காட்டு.

முடிவிலி அல்லது எல்லையிலாதது என்று சொல்லப் படும் நிலையைக் கணிதம் எளிமையாகக் காட்சிப்படுத்தி நமக்குப் புரிய வைக்கிறது. அது மட்டுமல்ல நாம் சிந்தித்து அளவிட முடியாத “முடிவிலி” என்பதை நாம் அளந்து அன்றாட வாழ்வியலின் அறிவியல் மொழியாகவும் இலங்குவது கணிதம் எனும் பொற்கிண்ணம் . சுழியம் என்பது எவ்வளவு எளிமையோ அந்த அளவு எளிமையும் பயன்பாடும் கொண்டதாக இருப்பது முடிவிலி என்பது கணிதம் காட்டும் உண்மை. இவ்வாறு பேரறிவின் தாக்கமே ஐன்ஸ்டீன், ஆர்க்கிமிடிஸ் போன்ற அறிஞர்களுக்கும் அறியற்கரிய இயற்கை உண்மைகளை உணரவைத்தது. ஐன்ஸ்டீன், ஆர்க்கிமிடிஸ் போன்ற அயலக அறிஞர்களுக்கு முன்னரே தொல்காப்பிய நூலின் ஆழமும் அகலமும் அறிந்தவர்கள் தொல்காப்பியரும் வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் ஒருவர் என்று சொல்வார்கள் .

முடிவுரை

தொல்காப்பியம் இலக்கண நூல். முதற்பொருள் என்ன என்று சொல்லும் ஆழம் உள்ளுணர்வு அனைத்தும் தொல்காப்பியரின் சிறப்பு. அவருடைய பேரறிவின் வெளிப்பாடு. பல இலக்கண நூல்கள் தொல்காப்பியத்திற்கு முன்னர் தோன்றியிருக்கின்றன. தொல்காப்பியர் பல இடங்களில் என்மனார் புலவர் என்று சுட்டிக் காட்டுகிறார். காப்பியக் குடியில் பிறந்தவர் தொல்காப்பியர் என்றும் சில ஆய்வறிஞர்கள் கூறுகின்றனர். வாழ்வியலும் இலக்கணமும் வேறு வேறு என்று பிரிக்கமுடியாதது என்பதை நாம் தொல்காப்பியத்திலுருந்து அறியலாம். இலக்கணம் என்பது நெறிமுறையாகவும் இருப்பது. இயற்கையே. வரையறை (DEFINITION) நெறிமுறை ஆவதும் (ALGORITHM) இயல்பான ஒன்றே! இலக்கணமும் விளக்கானால் வாழ்வியலாகிவிடும் என்பதன் தெளிவான எடுத்துக்காட்டே! உலகத்தின் தலைசிறந்த நோபல் பரிசு தொல்காப்பியருக்குக் கொடுப்பது, நோபல் பரிசுக்கே பெருமையளிக்கும்!

துணை நூற்கள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணார் உரை.
2. Swami Jitatmananda, “Modern Physics and Vedanta” Bharatiya Vidya Bhavan, Sixth Edition 2006
3. Swami Vivekananda, Complete Works (1973), Vol 5, Pages 104-105

பொது

தொ.மா.க. 107

திராவிட மொழிகளின் தாய் மொழி தமிழ்

Dr. Pushpa Christy

pushpachristy@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

முன்னுரை

1. திராவிட மொழிகள்
   தமிழ் மொழியின் வரலாறு
   மறு திராவிட மொழிகள்
   திராவிடம் எனும் சொல்

2. தொல்காப்பியம்
   தொல் பழங்காலம்
   வடமொழியும் தென்மொழியும்
   திராவிட இயக்கமும் தமிழும்

3. கால்டுவெல்டின் கண்டுபிடிப்பு
   சென்னை ஒற்றுமைக் கழகம்

4. வடமொழியில் திராவிடச் சொற்கள்
   மக்களினங்கள்
   இலக்கியச் சிறப்பு

5. தமிழ் இலக்கியம் பற்றிப் பேராசிரியர்கள்
   அறிஞர்கள் கருத்து
   நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்
   தேவநேயப் பாவணர் கருத்து
   பேராசிரியர் பா. அருளியின் கருத்து
   முடிவுரை

இயல் 1 தமிழ் மொழி வரலாறு

தமிழ் மொழி மிகவும் பழமையானது. இலக்கிய வளம் கொண்டது. வரலாற்றுக்கு எட்டாத காலம் முதல் இன்று வரை நுட்பமான சொற்பொருள் முறையும் தெளிவான சொற்தொடர் அமைப்பு முறையும் கொண்டு வளர்ச்சி பெற்றது. பல மொழிகளின் வரலாற்றை அறிவதன் மூலம் தமிழ்மொழியின் சிறப்பினை அறிந்து கொள்ளலாம். மக்கள் மொழியைப் படைத்துக் காக்கும் அரிய கலையாகக் கொண்டனர். மக்களின் அறிவு வளர்க்கும் கருவியும் மொழியாகும். ஒரு குழந்தையின் மனவளர்ச்சியுடன் ஒத்து வளர்வது மொழி வளர்ச்சியே. மனம் எனபதும் மொழியால் வளர்ந்தது. மக்கள் மொழியின் ஆசானாக, மாணவனாக தொடர்கின்றனர்.

தமிழ், **மலையாளம்**, **இருளா**, **கொடகு**, **கோடா**, **தோடா**, **கன்னடம்**, **படகா**, **துளு** ஆகிய ஒன்பது மொழிகளும் தென் திராவிட மொழிகள் என்று அழைக்கப்படுகின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட மொழிகளை மேலைநாட்டவர் மலபார் மொழிகள் என்றும், தமுலிக் என்றும் முதலில் குறிப்பிட்டனர். தமிழ் என்பது ஒரு குறிப்பிட்ட மொழியைக் குறிக்கும் சொல். பல்வேறு மொழி கொண்ட குடும்பத்தைக் குறிக்க திராவிடம் என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்ததாக கால்டுவெல் கூறுகின்றார்.

தமிழ் மொழி

திராவிட மொழிகளில் பழமையான மொழி தமிழ் ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே இலக்கிய, இலக்கணங்களைக் கொண்ட மொழி தமிழ்மொழி. **தமிழகம்**, **பர்மா(மியான்மர்)**, **மலேசியா**, **சிங்கப்பூர்**, **பிஜித்தீவு**, **இலங்கை**, **தென் ஆப்பிரிக்கா**, **பிரிட்டிஷ் கயானா**, **மடகாஸ்கர்**, **திரினிடாட்** போன்ற நாடுகளில் பேசப்படுகிறது. *இன்று உலகில்* எட்டுக் கோடி மக்களால் தமிழ்மொழி பேசப்படுகிறது. சிங்கப்பூரில் ஆட்சிமொழிகளில் ஒன்றாக உள்ளது. *வடவேங்கடம் தென்குமரி*

ஆயிடைத்
தமிழ்கூறு நல் உலகத்து *(தொல். சிறப்புப் பாயிரம் 1-3)*

என்று தொல்காப்பிய சிறப்புப் பாயிரத்தில் தமிழ் வழங்கும் பகுதிகள் சொல்லப்பட்டுள்ளன.

வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்
வேங்கடம் குமரி தீம்புனல் பௌவமென்று
அந்நான் கெல்லை

என்று **காக்கை பாடினியார்** என்னும் புலவர் தமிழ் வழங்கிய எல்லையினைக் கூறுகிறார். தென் இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்டுப் பழவேற்காடு முதல் குமரி வரை பரந்து கிடக்கும் நிலப்பகுதி தமிழ்ப்பகுதி என்றும் **கால்டுவெல்** குறிப்பிட்டுள்ளார.

தொல்காப்பியம்

இது பழைய கால நூல்களில் இன்றைய இலக்கண விதிகட்கு அடிப்படையான நூல். தொல்காப்பியப் பாயிரம் எழுதிய பனம்பாரனார், தொல்காப்பியர் காலத்தவர். அவர் தம் பாயிர உரையில் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனக் குறிப்பிடுகிறார். ஐந்திரம் என்பது சமஸ்கிருத இலக்கணநூல். இது பாணினி எழுதிய வடமொழி இலக்கண நூலுக்குக் காலத்தால் முற்பட்டது. தொல்காப்பியர் காலத்தில் பாணினியம் தோன்றவில்லை. எனவே

தொல்காப்பியர், பாணினிக்கு முந்திய ஐந்திரம் நூலையும் அறிந்தவர். தமிழில் இருந்த "முந்துநூல்"(அகத்தியம்) கண்டவர்.

ஐந்திரம் என்பது எழுத்து இலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், யாப்பு இலக்கணம், அணி இலக்கணம் எனும் ஐவகை இலக்கணத்தில் தேறிய காப்பியங்காட்டு தொல்காப்பியம் ஆகும்.

தொல்காப்பியம் தமிழ் அறிவு மரபின் உச்சம் ஆகும். உலகின் தொன்மைமிக்க தமிழ் நூல். இந்நூல் கி. மு.10ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனும் அறிஞரின் கூற்றுப்படி, இப்புத்தகம் எழுதப்படும் முன்னமே தமிழில் பல இலக்கணப் புத்தகங்கள் எழுதப் பட்டிருக்க வேண்டும் என்பதை. "என்மனாற் புலவர், என்ப, என்பர்" போன்ற தொல்காப்பியரின் கூற்றுக்கள் எமக்கு உணர்த்துகின்றது.

திராவிடம் எனும் சொல்

தமிழர் எனும் சொல் தமிழ் மொழி பயில்வோரைக் குறித்தாலும், திராவிடர் எனும் சொல் சுட்டும் கன்னடர், தெலுங்கர், மலையாளிகள், துளுவர், தொடுவர், குடகர், குறூக்கர் என்போரை அடக்கலாம். தமிழர், திராவிடர் ஆனார், என்று ஒரு சாரரும், திராவிடர் எனும் சொல்லே தமிழர் என்றானது என்று ஒரு சாரரும் கூறுவர். பரத கண்டத்துக்கு வெளியே தமிழருக்கு இடப்பட்ட "திரமிலர்" எனும் பெயர், தமிழ்ப் பாராம்பரியம் மிக்கவர்கள், கிரேக்க நாட்டின் பகுதிகளில் இருந்ததாக, கிரேக்க சரித்திர ஆசிரியர்களின் பிதா, எறோடோத்துஸ் நூலில் அறியலாம். இவர், கி. மு ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்து, பழங்கால வரலாறுகளை ஆராய்ந்து எழுதினார். கிரேக்க தேசத்து லிசியா இன மக்கள் பற்றி, இவர் எழுதும் போது, முன்னாளில், தெர்மிலே (தெர்மிலர்) என்ற பெயர் கொண்டவர் என்றும், அவர்களைப் பிறர், தெர்மிலர் என்றே அழைத்ததாகவும் கூறுகின்றார்.

இரவீந்திரநாத தாகூர் எழுதிய தேசிய கீதத்தில் **திராவிடம்** என்ற சொல் பரந்த பொருளில் தென்னிந்திய மொழி இனத்தையும் மக்களையும் சுட்டுவதற்குத் பயன்படுத்தப் பட்டுள்ளது. கால்டுவெல் திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள் என்றும், திருந்தா மொழிகள் என்றும் இரு வகைகளாகக் குறிப்பிட்டார்.

''நாகரீகம் தொடங்கும் முன் மக்களுக்குப் புலன்கள் வளர்ந்திருந்தன. ஆயினும் அவர்கள் அறிவு பெறவில்லை. பேசக் கற்றுக் கொண்டு சொற்களைப் படைத்த பின்னரே அறிவு வளரத் தொடங்கியது. எழுத்துமுறை கற்ற பின்னர் விரைவாக அறிவு வளரத் தொடங்கியது.[1]

"மனிதனின் மூளை கொண்டு பாடுபட்டு அமைத்து போற்றும் சிறந்த கருவி மொழியே![2]

மொழி ஆராய்ச்சியாளனுக்கு ஒவ்வொரு சொற்களின் அமைப்பு, இலக்கண அமைப்பு என்பன புதுமை பயப்பதால் அவன் ஒவ்வொரு சொல்லையும் விருந்தெனப் பார்ப்பான்.

''மொழி பேச்சு மொழியாக இருந்த போது, மனிதன் மற்ற உயிர்களை விட முன்னேறினான். எழுதத் தொடங்கி எழுத்து மொழியைப் படைத்ததும் பல படிகள் முன்னேறிச் சென்றான். அச்சுப் பொறி வந்ததும் அந்த முன்னேற்றம் விரிவுடையதாயிற்று. மனிதனால் கடக்க முடியாத காலத்தையும், கடந்து வாழும் ஆற்றலை மொழி பெற்று விட்டது. மக்களின் வாழ்வை நாகரிகம் உடையதாக உயர்த்திடும் அரிய கலை மொழியே![3]

''மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த சில விலங்குகளின் உடலமைப்பு இன்னதெனும் கல்படிவுகளைக் கொண்டது வழக்கிறந்த மொழிகள். புலன் களால் உணரப்படும் குறியீடுகள் உடையது மொழி. பொருட்களின் ஒலிவடிவு பேச்சு மொழியாகவும், வரிவடிவம் எழுத்து மொழியாகவும் ஆனது. இவை செவிப்புலனும் கட்புலனும் பற்றுக் கோடாகக் கொண்டு C'S வழங்கும் மொழிகள். குருடர் கற்கும் மொழி தொட்டு அறியும் குறியீடுகளால் அமைந்தது.[4]

கற்றவர்கள் தான் மொழியாராய்ச்சி செய்யலாம். ஆனால் அவர்கள் மொழியாராய்ச்சி செய்யத் தலைப்பட்ட போது, பேச்சு மொழியை விட்டு, கற்ற பழம் புலவர்கள் எழுதிய இலக்கியங்களையும், எழுத்து வடிவம் கொண்ட மற்றையவற்றையும், மொழியெனக் கொண்டு ஆராய்ந்தனர். இதனால் அதிக பலன் கிட்டவில்லை. தவறுகளையும் தடுமாற்றத்தையுமே கண்டனர். மொழி, ஒருவர் முன் ஒருவர் நின்று கருத்தை உணர்த்தும் போது பயன்பெறும் கருவியாகும். அவ்வாறு உணர்த்த முடியாத போது, உதவிட வந்த துணைக்கருவிகளே இலக்கியம், கல்வெட்டு, கடிதம் முதலிய எழுத்து வடிவங்கள்.[5]

மக்களின் பேச்சு மொழிச் சிறப்பியல்பு

மொழி என்பது உயிரில் கலந்து மூளையைச் செயலூக்கும் அறிவு என்பது மொழியில் கலந்துள்ளது. இலக்கணம் என்பதனை அறியாமல் அதனை நாம் ஐயந்திரிபுறக் கற்றுக்கொண்டுள்ளோம். பேச்சு மொழியின் இலக்கணக் கூறுகள் வெற்றி பெறுகின்றன. அதாவது, மரம், ஆடு, மாடு என்பது ஒருமை. அது கள் விதிகள் சேர்ந்து ஆடுகள், மாடுகள், மரங்கள் என எழுதுவர். ஆனால் பேச்சு மொழியில் பத்து மரம், எட்டு ஆடு, ஏழு மாடு என பன்மையில் வரும். "பேச்சுமொழி ஓடும் ஆறு போலவும், எழுத்து மொழி, அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என்கிறார் "வெண்டியே" அவர்கள்.[6]

போலச் செய்தல்

உலகில் பிறந்த பறவைகள் விலங்குகள் இயற்கையில் சில வகைத் திறமைகளைக் கொண்டவை. சில பிறந்தவுடன் நடக்கின்றன. கத்துகின்றன. ஓடுகின்றன. சில நாட்களில் தாயை விட்டுத் தனியே வாழும் ஆற்றல் பெறுகின்றன. மனிதன் பெற்றவருடன் நெடுநாள் வாழ்ந்து பலவற்றைக் கற்றுக் கொள்கிறான். பிறவியில் மனிதனின் அறிவு தாயிடம் தாய்ப்பால் உறிஞ்சிக் குடிப்பதை மட்டுமே. சிறிது வளர்ந்த பின், மனிதன், பிற மனிதனைக் கண்டு கற்றுக்கொள்ளத் துடிக்கிறான். தன் பெற்றோரைப் பார்த்து அவன் பழகுகிறான். தன் பெற்றோர் செய்வதைப் பார்த்துப் போலச் செய்கிறான்.[7]

கற்றிட உதவியது

தமிழ் மொழி பேசி வந்த ஒருவன், ஆங்கில மொழி பேசும் மக்களுடன் பழகி ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்கிறான். ஆனால் விலங்குகளிடம் இப்பண்பு இல்லை. பண்டைய காலத்தில் ஆடு, மாடு, காக்கை குரங்கு எப்படிக் கத்தினவோ, அப்படியே இன்றும் கத்துகின்றன. உண்ணுதல், உறங்குதல், தன்னைக் காத்துக்கொள்ளல் போன்று இதுவும் இயற்கையாக அவைக்கு வழங்கப்பட்ட பண்புகளே. ஆனால் ஒரு குழந்தை பல ஒலிகளை எழுப்பும் போது, அதன் பெற்றோர், மற்றோர் குழந்தை வளர்கிறது என உணர்ந்து மகிழ்கின்றனர். ''ஒருவர் ஒலித்தது போல் ஒலித்து பேச்சு மொழியையும், ஒருவர் எழுதியது போல் எழுதி எழுத்து மொழியையும் மனிதன் கற்றுக் கொண்டான்''[8]

ஒப்புமையாக்கம்

எடு என்னும் இறந்தகாலத்தை எடுத்தார் என அறியும் குழந்தை, கொடு- கொடுத்தார், தடு - தடுத்தார் எனத் தானே சொற்களை அமைத்துக் கொள்கிறது. "அவர் பத்து மாடு வாங்கினார்" எனும் வாக்கியத்தைக் காணும் சிறுவன், எழுவாய் முதலிலும், பயனிலை இறுதியிலும், செய்யப்படுபொருள் நடுவிலும், அதற்கான எண்ணுப்பெயர், அதற்கு முன்னும் வருமென அறிந்தவுடன் தானே " அம்மா ஐந்து அப்பம் தந்தாள்" என வேறு வாக்கியங்களை உருவாக்கக் கற்றுகொள்கிறான். தாம் கற்ற சிலவற்றைக் கொண்டு, மற்றவற்றை அமைக்கும் தன்மையே ஒப்புமையாக்கம் எனப்படும்.[9]

பேச்சுமொழி கற்றல்

இலக்கிய நூல்கள் கூறும் பல இலக்கண விளக்கங்களும், படிக்காத பாமர மக்களுக்கு அவசியமின்றி, அவர்கள் தாங்களே இலக்கணத்தை இயற்கையாகப் பேச்சில் இணைக்கின்றனர். பலமுறை கேட்டு, பலமுறை பழகி பேசிப் பேசி "வாய்ப்பாடுகள்" மாதிரி மக்கள் மனதில் நிலைக்கின்றன.[10]

கல்விச் சுமை

முதல் நானகு ஆண்டுகள் குழந்தைப் பருவத்தில் மனித மூளை கற்பதை பிற்காலத்தில் கற்பதில்லை. அல்லது கற்க முடிவதில்லை என்பர் அறிஞர். தாய் மொழி கற்கும் போது கல்வி சுமையாகத் தெரியாது. மூளையில் வேறு சுமை ஏறும் முன்னர் தாய் மொழி கற்பதால் அது நிலைத்து விடுகிறது. உதாரணமாக மரம் என கற்கும்போது, கிளையுடன் கூடிய இலை நிறைந்த மரம் கண்முன் வருகிறது. ஆனால் டிரீ(TREE) எனும்போது, மரம் எனும் சொல்லை மனம் எண்ணுகிறது.[11]

எவ்வித இடருமின்றி தாய் மொழி கற்கையில்

வீடு- வீட்டை, வீட்டுக்கு

நாடு -நாட்டை நாட்டுக்கு என அறிந்ததும் காடு- காட்டை, காட்டுக்கு என உருபு சேர்த்து ஒப்புமை முறையில் அறிந்தும் கொள்ளலாம்.

தமிழில் ஒழுங்கு படாத சொற்கள் உள்ளன. கொடு- கொடுத்தார், எடு - எடுத்தார் என்பது போல் நடு - நட்டார் என மாறி வருவதைக் காணலாம்.

மரபுக்கு மதிப்பு

அவன் - அவனுக்கு என்பது போல் நான்- நானுக்கு என்னும் குழந்தைக்கு நாம் "எனக்கு" என்று சொல்லித் திருத்தும் போதுதான் மரபுவழித் தமிழுக்கு மாண்பு பெருகுவதைக் காணலாம். இது தமிழில் மட்டுமில்லாது ஆங்கிலத்தில் கூட வருகிறது. I என்பதற்கும் me என்பதற்கும் எவ்வித தொடர்பும் இல்லையே. தமிழில் நட்டார் எனும் மரபுச் சொல்லுக்கும், நடுத்தார் எனும் ஒப்புமையாக்கல் சொல்லுக்கும் தொடர்பு தெளிவாக உள்ளது. ஆனால் Go எனும் ஆங்கில நிகழ்கால வினைமுற்றுக்கும் went எனும் இறந்தகால வினைமுற்றுக்கும் தொடர்பே இல்லை.[12]

ஏவல்

"அம்மா" என்ற சொல்லுக்கு "தாய்" என்று பொருள் கூறுகிறோம். ஆனால் குழந்தை தன் வேட்கையை, தேவையை உணர்த்த ஒரு ஒலியாக "அம்மா" என்கிறது. தாய் எனும் அர்த்தம் அதற்குத் தெரியாது. எதிரிலுள்ளவரிடம் தன் ஏவலைச் சொல்லி ஏவுகிறது. பல

காலம் தன் எந்தத் தேவைக்கும் “அம்மா” என்றே குறிக்கிறது. நெடுங்காலத்தின் பின் தன் தாயின் பெயர் “அம்மா” என அறிகிறது. தன் தாய்க்கு வேறு சிறப்புப் பெயர் இருப்பதுவும், அம்மா என்பது எல்லாத் தாய்மாரின் பொதுப்பெயர் என்றும் உண்மையை அறிவதற்கு பல காலம் எடுக்கிறது.[13]

கடன் பெறுதல்

“ஓரினத்திடமிருந்து இன்னொரு இனம் கடன் வாங்குவது இருவகை.. ஒன்று நிறம், உறுப்புக்களின் அமைப்பு, என்பன. அவை இரத்தக் கலப்பால் பெறுபவை. மற்றையது சமயம், நாகரிகம், மொழி. இவை இரத்தக் கலப்பின்றி ஒருவரைப் பார்த்து ஒருவர் கற்றுக்கொள்வதாகும். ஒரு மொழி இன்னொரு மொழியிடம் கடன் வாங்கியதெனில், அவர்களிடையே நெருங்கிய பழக்கம் இருந்திருக்க வேண்டும். மொழி கடன் வாங்குவது என்பது, எதையும் இழக்காமல், போலச்செய்தல் (imitation) என்று யெஸ்பர்சன் கூறுவார்.[14]

இயல் 2 தொல்காப்பியமும் தனிநாயக அடிகளும்.

தொல்காப்பியர் காலத்தே தமிழ்மொழியின் வரிவடிவம் இருந்துள்ளது.. கொ, கோ, கௌ எழ்த்துக்களில் மெய்யை இடையில் வைத்து எழுதுவது பொருந்துவதாக இல்லை. மேற்சொன்ன குறை தமிழிலும் மலையாளத்திலும் உண்டு. தெலுங்கு, கன்னடத்தில் இல்லை. மெய் வடிவு எழுதிய பின்னரே உயிரின் வடிவை இன்றும் எழுதுகின்றனர். இப்படி பிறமொழிச் சொற்கள் புகுந்தாலும், அவை புகும் மொழியில் ஒலியமைப்புக்கு ஏற்ப மாறியமைதல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். அவர் தன் நூற்பாவில்.

"வடமொழிக் கிளவி வடிவழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" [15]

இப்படி மாறி அமைந்த சொற்களில் சில.

ஆணை, விண்ணப்பம், ஞானம், அனுபவம், அமாவாசை

இவ்வாறே ஆங்கிலச் சொற்கள்.

ஐரோப்பா, இங்கிலாந்து, ஆங்கிலேயர், உயில், கிறிஸ்து, யோவான், விவிலியம்.

'செந்தமிழ்' 'செந்தமிழ் இதழ்', தமிழ்ப் பொழில் போன்ற இதல்கள் தமிழியல் ஆய்வுகளை முன்னெடுத்தன. ஆனால், உலகின் மிகத் தொன்மையான மொழிகளுள் ஒன்றான தமிழோடு தொடர்புள்ள செய்திகளும், ஆய்வுக்கட்டுரைகளும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டால் மட்டுமே உலக அரங்கில் தமிழ் இடம்பெற இயலும் என்பதைக் கத்துணிச் செயல்பட்டவர் இலங்கையைச் சேர்ந்த தமிழ்த் தூது முனைவர் தனிநாயக அடிகள் அவர்கள்.

தமிழியல் இதழ்

தமிழ் இலக்கியத்தின் தொன்மை, நுண்மை, பருண்மை, மெய்மை, தனித்தன்மை ஆகியவற்றை தனிநாயகம் அடிகளார், உலகின் பல நாடுகட்குச் சென்று உணர்த்தியதோடு, 'ஜர்னல் அஃப் தமிழ் ஸ்டடீஸ் (Journala of Tamil Studies) என்னும் ஆய்விதழையும் 1952ல் தொடங்கினார். இந்த இதழில் ஆங்கிலக் கட்டுரைகளே பெரும்பாலும் எழுதப்பட்டன. இவ்விதழ் 1966 வரை வெளிவந்தது. அதன் பிறகு 1972ம் ஆண்டிலிருந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'ஜர்னல் ஆஃப் தமிழ் ஸ்டடீஸ்' இதழோடு 'தமிழியல்' என்ற இதழையும் இணைத்து முத்திங்கள் இதழாக வெளியிட்டு வருகிறது. இந்த இதழ்களுள் 1972

முதல் 2000 வரை வெளிவந்த தொல்காப்பியம் தொடர்பான கட்டுரைகளைத் 'தமிழியலில் தொல்காப்பியம்' எனத் தொகுத்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

தொல் பழங்காலம்

கி. மு 3ம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ம் நூற்றாண்டு வரை.

ஆரியர் இந்தியா வரும் முன், ஆரியரல்லாத இந்திய நாகரீகமடைந்த இனம் இந்தியாவில் வாழ்ந்தனர். இவர்கள் திராவிடர் (பழந்தமிழர்) என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவர்கள் தமிழின் சித்திர எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

"இவ்வெழுத்துக்கள் மூலமே பிற்கால ராமி,வட்டெழுத்து, தொடர்ந்த இன்றைய தமிழ் எழுத்துக்கள் தோன்றியுள்ளன. ஆரியர் இந்தியா வந்த போது, அவர்கள் வரிவடிவத்தை அறிந்திருக்கவில்லை. அவர்களின் இலக்கியம் வேதம். இதனை ஒலி (சுருதி) வடிவில் எழுதாமறையாக கொண்டனர் என்றும், திராவிட எழுத்துக்களிலிருந்து வரிவடிவத்தை ஆக்கிக் கொண்டனர் என்றும் அறிஞர்கள் கூறுவர்.[16]

தொல்காப்பியர் முப்பது முதல் எழுத்துக்களையும், மூன்று சார்பு எழுத்துக்களையும் கூறுகின்றார். உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு எனபன முதலெழுத்துக்கள். ஆங்கிலம் போலவே உயிரையும், மெய்யையும் கொண்ட சொற்களை அமைக்கும் முறை இருந்திருக்க வேண்டும். குறில் எ, ஒ, கு குற்றியலுகரம், குற்றியலிகரம் என்பவை புள்ளி பெற்று வழங்கியதாக தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

சங்ககாலம்

சங்கமருவிய காலம் கி. மு 3ம் நூற்றாண்டு முதல் கி.பி 3ம் நூற்றாண்டு வரை சங்க காலம். கி.பி 3ம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ம் நூற்றாண்டு வரையுள்ள காலம் சங்கமருவிய காலமுமாகும்.

சங்கமருவிய காலம்

இக்காலத்தில் மக்களின் வாழ்க்கை முறையில். மனோபாவத்தில் மாற்றம் வந்தது. மொழி வளர்ச்சி பாதிப்படைந்தது. மக்கள் வாழ்வில் ஒழுக்கச் சீர்கேடு வந்து, அதனால் கட்டுப்பாடான் வாழ்க்கையை அவர்கள் அவாவி நின்றனர். இதனால் சமய செல்வாக்கு அதிகரித்தது. சைவம், வைணவம், சமணம், பௌத்தம் போன்ற மதங்கள் மக்கள் வாழ்க்கையில் போற்றப்பட்டன. இதனால் வடமொழிக் கலப்பு ஏற்பட்டது. மொழி நடை, யாப்பமைப்பு என்பன மாற்றம் கண்டன.

பல்லவர் காலம்

கி.பி 6ம் நூற்றாண்டு முதல் கி.பி. 9ம் நூற்றாண்டு வரை பல்லவர் காலமாகும். இக்காலம் தமிழ் மொழி புதிய திசையில் விரிந்தது. செய்யுள் இலக்கியங்கள் பெரு வழக்காகின. சங்கமருவிய கால இயற்றமிழின் பாவகைகளிலிருந்து தாழிசை, துறைவிருத்தம் என்னும் பாவினங்கள் தோன்றின. இப்பாவினங்கள் பல்லவர் கால பக்தி நெறியை வெளிப்படுத்தப் பயன்பட்டன. மக்களின் நாட்டுப் பாடல்கள், நாயன்மார்களினதும், ஆழ்வார்களினதும் பக்திப் பாடல்களில் பிரதிபலித்தன

சோழர் காலம்

இக்காலம் அரசியலிலும், இலக்கியத்திலும் தமிழ்மொழி வளர்ச்சியும் ஆற்றலும் சிறப்புற்று விளங்கிய முக்கியமான காலமாகும். வடமொழி இலக்கிய மரபு தழுவிய காப்பிய

வடிவம் சிறப்பிடம் பெற்றது. வடமொழி இலக்கிய மரபைத் தழுவிய காப்பியங்கள், நூல்கள், கதைகள், கருத்துக்களுடன் காவியங்கள், பிரபந்தங்கள், புராணங்கள் எழுந்தன. (உ+ம்)

சோழர் காலத்து பெருங்காப்பிய நூல்கள் சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பனவும், சிறுகாப்பிய நூல்கள் நீலகேசி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம். சூளாமணி என்பனவாம்.

வடசொற்கள், வடமொழி இலக்கண அமைதிகள் அதிகம் இக்காலத்தில் புகுந்தன. ஒருபுறம் உணர்ச்சியை வெளிப்படுத்தும் மொழி வளர்ச்சி பெற மறுபுறம் தத்துவக் கருத்துக்களை வெளியிடும் பண்பும் வளர்ந்தது.

நாயக்கர் காலம்

தர்க்க முறை தத்துவ சாத்திரக் கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டு, அக் கருத்துக்கள் கதைகளில் அமைத்துக் கூறப்பட்டன. இக்கால ஆக்க்ங்களை அறிய முன்னறிவு தேவை. உரை நடை வளர்ச்சியில் இக்காலம் சிறப்பிடம் வகிக்கின்றது. (உ+ம்) இக்காலப் பொதுமக்கள்சார் இலக்கியங்களாக, முக்கூடற்பள்ளு, குற்றாலக் குறவஞ்சி, நொண்டி நாடகம், சித்தர் பாடல்கள் எனபனவாம். இதில் இசைப்பண்பு, நாடகப் பாங்கு, சமய நம்பிக்கைகள், நாட்டார் பாடல்தன்மை, அதீத காமச்சுமை, நகைச்சுவை சிறுங்காரச்சுவை முதலியன உள்ளடங்கின.

வடமொழியும் தென்மொழியும்

தமிழ் வடமொழியிலிருந்து சொற்களைக் கடன்வாங்கியது போலவே வடமொழியும், பிறமொழிகளிடமும் கடன்வாங்கியுள்ளதென "கால்டுவெல்" விளக்குகிறார். ஒப்பியன் மொழி நூல் (பக். 84)

திசைச்சொற்கள்

தமிழில் இலக்கண முறையில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகையாகப் பகுத்துள்ள போதிலும் சொற்கோவை முறையில் வேறு வகையாகவும் பிரித்துள்ளனர்.

அவை "இயற் சொல், திரிச்சொல், திசைச்சொல், வடசொல்லென்று

அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" என்று தொல்காப்பியர் வழங்குகிறார்.

இயற்சொல் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச்சொற்கள் என்றும், திரிசொல் பேச்சு வழக்கிலிருந்து செய்யுள் அளவில் நின்ற தமிழ்ச் சொற்கள் என்றும், வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்தன வடசொல் என்றும் பிறமொழிச் சொற்கள் எல்லாம் திசைச் சொற்கள் என்றும் வகைப்படுத்தலே இங்கு நோக்கலாம்.

திராவிட இயக்கமும் தமிழும்

தனித்தமிழ் இயக்கம்

தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்களைக் கலக்காது எழுத வேண்டும், அல்லது பேசப்பட வேண்டும். பிறமொழி கலப்பதால் தமிழ் மொழிக்குப் பெரும் தீமை ஏற்படும் எனச் சொல்லும் இயக்கம் தனித் தமிழ் இயக்கம். தனிமொழி தனியாக இயங்க வல்லது எனக்கூறும் இயக்கம் இதுவாகும். சமற்கிருதச் சொற்களும் மணிப்பிரவாள நடையும் தமிழில் மிகுதியாகப்

பயன்பட்ட சூழலில், தமிழ் மொழியை முன்னிறுத்தி முன்னெடுத்த இயக்கமே தனித்தமிழ் இயக்கமாகும்.

தனித் தமிழ் இயக்க வளர்ச்சி

தமிழ் மிகுந்த சொல்வளம் கொண்ட மொழியாகும். எக்கருத்தையும் தன் வளத்தால் சொல்லக் கூடிய ஆற்றல் கொண்டது. காலகாலமாகத் தமிழ், புதுச் சொற்களை உருவாக்கி வருகிறது. வேர்ச் சொல் வளம் மிக்கது. புதிய சொற்களைப் பொதுமக்கள் உருவாக்கும் ஆற்றலும், அக்கறையும், ஆர்வமும் கொண்டிருப்பதால், கடந்த காலங்களில் பிறசொற்கள் துணையின்றி இயங்கி வந்தது. தனித்தமிழ், பொது மக்களின் மரபு அறிஞர்க்குள்ளும் இருப்பதால், அவர்கள் செறிந்த ஆக்கங்களைத் தங்கள் இலக்கியங்களில் பயன்படுத்தி, தமிழ் தனித்து இயங்குவதற்குப் பாதை அமைத்தனர்.

இயல் 3 காலடுவெல்டின் கண்டுபிடிப்பு

மறைமலையடிகளுக்கு முன் தனித்தமிழ்க் கொள்கைக்கு அரண் சேர்க்கும் மொழியியல் ஆராய்ச்சி, இராபர்ட் கால்டுவெல் என்னும் வெளிநாட்டவரால் செய்யப்பட்டது. கால்டுவெல் அவர்கள் அயர்லாந்து நாட்டிலுள்ள "கிளாடி" என்னும் சிற்றூரில் 1814ம் ஆண்டு பிறந்தவர். இளமையில் அறிவார்வம் கொண்டு ஆங்கில இலக்கியங்களைக் கற்றுத்தேர்ந்தவர். சமயப் பணி செய்ய இந்தியா வந்தவர், தமிழ் மீது கொண்ட ஆர்வத்தினால், கி. பி. 1838ல் திருநெல்வேலி வந்த அவர் 50 வருடங்கள், "வடமொழியே பிறமொழிக்குத் தாய், அதிலிருந்து மற்ற மொழிகள் தோன்றின. அது தேவமொழி" எனும் கருத்துக்கும் நம்பிக்கைக்கும் எதிர்மாறான கருத்தை வெளியிட்டார். கால்டுவெல்லின் ஆராய்ச்சி பல உண்மைகளை வெளிப்படுத்தியது. வடமொழிக் குடும்பத்திலிருந்து தமிழ் வேறானது. அது திராவிட மொழிக் குடும்பத்தின் தாய்மொழி. அதிலிருந்து பிறந்தவையே தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்றன என்பவை வெளிவந்தன.

சென்னை ஒற்றுமைக் கழகம்

மனோன்மணியனார் காலத்தில், தமிழ்நாட்டில் தென்னாட்டு உணர்வு தோன்றிக் கொண்டிருந்தது. அது திராவிடம் எனும் பெயரில் அரும்பியது. அதற்கு வடநாட்டுக் காங்கிரசும் காரணமே. அப்போது அக்கட்சி, அய்யர்கள், அய்யங்காரர்கள் கையில் இருந்தது. அவர்கள் தெலுங்கு பார்ப்பனர்கள். அரசுப் பணிகள், பதவிகள் அவர்களுக்கே சேர்ந்தன. பார்ப்பனர் அல்லாதவர்க்கு மிகச் சில இடங்களே கிட்டின. எனவே சென்னை ஒற்றுமைக் கழகம், எனும் அமைப்பை, முனைவர் நடேசன், (முதலியார்) உருவாக்கினார். திராவிடர் சங்கம் என்ற அமைப்பையும் அவர் நிறுவினார். அவர் நோக்கம் திராவிடர் ஒற்றுமையாய் இருக்க வேண்டும் என்பதாகும். 1905ம் ஆண்டுக்கு முன்பிருந்தே தமிழர் - ஆரியர் பற்றிய ஆராய்ச்சிகளில், அவர் ஈடுபட்டு உழைத்தார். அவ்வாண்டு பாண்டித்துரைத் தேவர், தோற்றுவித்த 4ஆம் தமிழ்க்கழக விழாவில் பேசிய அவர், தனது வலிமை மிக்க சொற்களினால், தனித்தமிழ் இயக்கக் கருத்துக்களை வெளிப்படுத்தினார். அது போன்று மறைமலை அடிகளும் உரையாற்றினார். அங்கு வந்திருந்த அப்போதைய அரசவைப் புலவர் இரா. இராகவ அய்யங்காருக்கு மறைமலையடிகள் கருத்துகள் பிடிக்காமல் போயின. வரலாறு, வேதம் பலவற்றைத் தமிழர்களே உருவாக்கினர் எனும் கருத்தையும் மறைமலையடிகள் வெளிப்படுத்தினார்.

மறைமலையடிகளின் தனித்தமிழ் எண்ணம் எப்படித் தோன்றியது?

அவர் சிவனிய சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். அக்கொள்கையைப் பரப்பும் எண்ணம் அவருடையதாக இருந்தது. அவர் பல்லவபுரத்தில் தம் மகளுடன் ஒருநாள் உலவிக்கொண்டிருந்தார். பின்னர் அமர்ந்து பேசிய போது, மகளார் நீலாம்பிகை, இராமலிக அடிகளாரின் திருவருட்பாவில் இருந்து ஒரு பாடலை இனிமையாகப் பாடினார். மனமுருகிப் பாடிய அவர் பாட்டின் இடையே "தேகம்" என்னும் வடசொல் வருவது கண்டு, "இப்பாட்டில் எல்லாச் சொற்களும் தமிழாய் இருக்க தேகம் எனும் வடசொல் மட்டும் இருக்கிறதே அதனை மாற்றினால் நன்றே" என்றார். அவர் பெயர், அவர் பிள்ளைகள் பெயர்கள் வடமொழியில் இருந்தன. அவற்றை மாற்றும் செயலை முதலில்ச் செய்தார். அவரது இயற் பெயர் வேதாசலம். துறவறத்தின் பின் வேதாசல சுவாமிகள் என வழங்கப் பெற்றார். அதை மறைமலை அடிகள் என்று மாற்றினார்.

இனக்கலப்புக் குழப்பம்

தமிழ் நாட்டின் நிலை புதுமையானதாக அமைந்தது. பிற்காலச் சோழர் காலத்து இனக்கலப்பு நிகழந்தது. இனக்கலப்பாளர், பலர் தங்களைத் தூய தமிழராகக் காட்டிக்கொண்டனர். தமிழை ஆர்வத்துடன் கற்றனர். தமிழின் பெயரால், அதன் வாழ்வையும் வளர்ச்சியையும் முடிவு செய்யும் ஆற்றல் நடுவங்களில் அவர்கள் வல்லமை மிகுதியாய் அமைந்து போய்விட்டது. உண்மைத் தமிழர் கல்வியிற் சிறக்காததாலும், தமிழைக் கல்லாததாலும் அதனை மேம்படுத்தும் திறமற்றுப் போனார்கள்.

மறைமலையடிகள் இயக்கம் தொடங்கியபோது, இக்கருத்துக்களில் நயன்மைக் கட்சி சிறுது கவனம் செலுத்தியது. எனினும் இயக்கம் நடத்தவில்லை. பார்ப்பன வல்லாண்மை குருகுலத்தில் வெளிப்பட்ட போதுதான் ஆரியம் எதிர்க்கப் படவேண்டும் எனும் எண்ணத்தைப் பேராய(காக்கிரசு)க் கட்சியில் இருந்தவர்களும் உணர்ந்தனர். சேரன்மாதேவியில் வ. வே. சு அய்யர் நால்வண்ணவெறியுடன் நடந்து கொண்டதும் வரதராசுலு நாயுடு அதை எதிர்த்ததும் 1925ல் நிகழ்ந்தன.

பெரியாரின் விலகல்

இதனைத் தொடர்ந்து ஈ.வே. ரா. பெரியார் அங்கிருந்து வெளியேறினார். அவர் வெளியேறிய பின்னர் திராவிட இயக்கம் முகிழ்க்கத் தொடங்கியது. பார்ப்பனர்களுக்கு அவர், எதிர்ப்புத்தெரிவிக்க மறைமலையடிகளின் ஆராய்ச்சியே பயன்பட்டது. அக்காலத்தில் மேடையில் பேசும்போது 'பண்டைகாலத் தமிழரும் ஆரியரும்' என்னும் மறைமலையடிகளில் நூலைக் கையில் வைத்துக் கொண்டு பேசுவது அவர் வழக்கம். அவருடைய இயக்கத்தாரும் அவருடைய கருத்துக்களையே எடுத்துப் பரப்பி வந்தனர். மறைமலையடிகளைப் பின்பற்றியே தமிழ்த் திருமணம், தமிழர் மதம் ஆகிய கொள்கைகளைப் பெரியார் பரப்பினார்.

தேவநேயப் பாவாணர்

53 மொழிகளின் இலக்கியம் கற்றாவர், 28 மொழிகளை ஆய்ந்தார். பாவாணர், பன்னிரண்டு ராசிகளை மாற்றித் தூய தமிழில் தந்தார். நாள் பெயரை, உள்ள 7 பெயர்கள் தமிழுடையவை. புதனை அறிவன், என்னும் சனியை காரி என்றும் மாற்றினர். மறைமலையடிகள் காலத்தில் அவர் போன்ற ஆற்றலுடன் வேர்ச்சொல் ஆய்ந்த தேவநேயப் பாவாணர், மொழியியல் வளர்ச்சிப் பணியைச் செய்தார். சொற்பிறப்பியல் அகரமுதலி தமிழுக்குப் பலவகையான நன்மைகளும் செய்யும் என்ற எண்ணத்தை அவர் அறிஞர்களிடத்தில் உருவாக்கினார். அவரைப் பலர் பின்பற்றினர். அவரது மாணவரான துரை

மாணிக்கம் என்ற பெருஞ்சித்தனார் தனித்தமிழ்ப் பணிகளில் ஆர்வம் கொண்டு, பலவகைப் பணிகளை ஆற்றினார்.

"இயற்சொல் தாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே"[17]

என்பது தொல்காப்பியனாரின் இயற்சொல்லைப் பற்றிய கருத்தைத் தெளிவாக்குகின்றது. திருவாசக அச்சன், அதெந்து என்பன திசைச் சொற்கள்.

முகம்மதியர் ஆட்சியில் தமிழில் பல சொற்கள் புகுந்தன. சலாம், சபாஷ் முதலிய சொற்கள், திருப்புகழ் இலக்கியத்திலும் குமரகுருபரர் பாட்டிலும் புகுந்தன. சன்னல் சாவி, கிராம்பு, அலமாரி, பாதிரி- போர்த்துகீசியச் சொற்கள்

ஜமீன், சிபாரிசு,சிப்பந்தி, சிப்பாய், சுமார், பக்கிரி, மேஜை - பாரசீகச் சொற்கள்

ஆசாமி, இலாகா, கஜானா, நகல், நாசூக், மாமூல், முன்சீப்-அரேபியச் சொற்கள்

அசல், அந்தஸ்து, அபின், உஷார், கிச்சடி, குமஸ்தா, குல்லா, சமக்காளம், ஜோடு, தபால், தர்பார், பஞசாயத்து, பங்களா, தொப்பி- இந்துஸ்தானிச் சொற்கள் இவ்வகையில் தமிழில் உள்ளடக்கப்பட்டவை.

இயல் 4 வடமொழியில் திராவிடச் சொற்கள்

தழிழ்ச் சொற்களாக உள்ள சில சொற்களையும் வடசொற்கள் எனக் கூறுவதில் இந் நாட்டறிஞர்க்குப் பெரியதோர் ஆர்வம் இருந்து வந்தது. எனினும், அவை தம்ழிச் சொற்கள் என அவ்வப்போது நச்சினார்க்கினியர் போன்றோர் உறுதிப்படுத்தி வந்துள்ளனர். உதாரணமாக உலகம், காலம் என்னும் சொற்களைப் பிறர் வட சொல்லெனக் கூறினும் அவர் தமிழ்ச் சொற்களே என விளக்கினார்.

ஆயினும் அது பேச்சு அன்று. பேச்சு என்பது கருத்தை உணர்த்துவது. பேசப்படும் ஒலிகள் சில பொருள்களை, அவற்றின் தன்மைகளை உணர்த்துவன. ஒலிக்கும் கிளிக்கு அவை பொருளற்ற ஒலிகளே.

பொருளுணர்ச்சி இல்லாமல் கிளி பேசும். அதன் வாயில் பிறக்கும் ஒலிகள் வெற்றொலிகள் ஆகும். அவை பேச்சு ஆகா. மனிதன் வாயில் ஒலி மூளையில் தோன்றும். கிளீயின் வாயில் பிறக்கும் ஒலிக்கு, அதன் மூளையில் ஏற்ற கருத்துப் பிறப்பதில்லை. குகையில் வாழ்ந்த வாழ்வு, கோயில் அரண்மனை முதலியவற்றைக் கட்டும் நாகரிகமாக வளர்ந்தது போலவே, ஆடல் பாடலில் இருந்த ஒலி முயற்சி திருக்குறள் சிலப்பதிகாரம் போன்ற இலக்கியச் செல்வங்களைப் படைக்கும் நாகரிகமாக வளர்ந்தது.

மக்களினங்கள்

இந்திய, மேற்கு ஆசிய, ஐரோப்பிய மக்கள் காக்கேசிய இனத்தவர் என அழைக்கப்படுகின்றனர். மெல்லிய தலைமயிர், நீண்ட தலை, முன் கை இவர்களை வேறுபடுத்தும் என்பர். சீனா, ஜப்பான், ஜாவா முதலிய தீவுகளில் வாழ்வோர் மங்கோலிய இனத்தவர் என்றும், மஞ்சள் நிறம், தட்டை மூக்கு, வட்டத் தலை அவர்கள் சிறப்பியல்பு என்பர். ஆபிரிக்க மக்கள் நிக்ரோ இனத்தவர் என்றும், கமபளி மயிரும், கருநிறமும், நீண்ட தலையும், அவர்களை வேறுபடுத்தும். இன்று காக்கேசிய, மங்கோலிய இனம் கலந்த கலப்பு

நிறைய உள்ளது என்பர். எளிதில் கலவாதது உடல். எளிதில் கலப்பது மொழி. இந்திய மக்களை எழுவகை இனமாகப் பாகுபடுத்தினர்.

அரேபியா, வட ஆப்பிரிக்கா மொழிகளான, பாபிலோனிய மொழி, யூத மொழி, ஹீப்ரு மொழி, பீனிசிய மொழி, அரபி மொழி, எகிப்து மொழி, அபிசீனிய மொழி, எத்தியோப்பிய மொழி என்பன செமிட்டிக் மொழி எனப்படும். பார்னு, பூலா, புஷ்மன் என்பன மத்திய ஆப்பிரிக்காவின், உலாப் இன மொழியாகும். ஜப்பான் மொழி தனி வகையானது. ஐரோப்பிய ஸ்பெயின் வடக்கே வழங்கும் பாஸ்க் மொழியும் தனி வகையாம். எஸ்கிமோப் பேச்சுக்களும் வேறு வகையானவை. அமெரிக்க நாகரீகம் இல்லா மக்கள் மொழி வேறு பெயரால் அழைக்கப்படுகிறது. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மொழி, திராவிட மொழிகளோடு தொடர்பு உடையன என்று கருதி வந்தனர். போதிய சான்று கிட்டவில்லை. மலேசிய, ஜாவா, பாலினேஷிய மொழிகள் வேறு வேறாக உள்ளன.

இலக்கியச் சிறப்பு

இலக்கிய வளம் கொண்ட மொழி சிறந்தது என்றனர். இலக்கியம் இல்லா மொழி இழிவானது என்றனர். பழந்தமிழர் தம்மொழியைத் தென்மொழி என்றும், அதற்கு இணையான வடமொழி, பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளைப் புறக்கணித்ததும் இதன் காரணமே! வேங்கடத்தின் அப்பால், பேச்சு வழக்கிருந்த வடுகர் மொழியான தெலுங்கையும், மேற்கே வழங்கிய கன்னடத்தைப் பற்றியும் கவலை கொள்ளாத காரணமும் இதுவே. உயர்ந்த இலக்கியம். சிறந்த புலவர்கள் இருந்து உயர்ந்த இலக்கியம் எழுதிய மொழி சிறந்தது எனக் கண்டபோது, ஐரோப்பிய மொழிகள் பலவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் நிலை பதினெட்டாம் நூற்றாண்டில் வந்தது. ஆட்சிச் செருக்கால், சிறிய மொழிக்கு பொது மொழி அந்தஸ்து கொடுப்பதும் உண்டு. எனினும் பண்பாடு குறைந்த மொழியில் சிறந்த இலக்கியம் பிறப்பதுண்டு. நாகரிகம் குறைந்த குடும்பத்தில், உலகை உய்விக்கும் பெருமகன் பிறப்பது இயற்கை.

இயல் 5 தமிழ் இலக்கியம் பற்றிப் பேராசிரியர் கைலாசபதி

“பெருமை மிக்க தமிழ் இலக்கியம் புராதனாமானது. இலக்கிய ஆக்கமும் இலக்கிய ரசனையும் பல் நூற்றாண்டுகளாக நம்மவர் மேற்கொண்டுள்ளனர். இவற்றைப் பொதுப்பட நாம் “தமிழ் இலக்கியம்“ என்போம். ஆனால் நீண்ட காலமாகப் பரிணமித்து வந்த இலக்கியங்களைக் கால அடிப்படையில் தனச் சிறப்புப் பண்பு அடிப்படையிலும் வேறுபடுத்திக் காண வேண்டும். இலக்கியம் பொருள், வடிவம், அலங்காரம், மொழி நடை, நம்பகத்தன்மை ஏற்புடமை முதலிய பல்வேறு அம்சங்கள் காலத்திற்க்குக் காலம் வேவ்வேறு வகையிலும், அளவிலும் முதன்மையும், முக்கியத்துவமும் பெறல் வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. பணி, தோற்றம், பண்பு, பயன் என்பன காலத்துக்காலம் மாறுபடுவன”. எனக் கூறுகிறார்

அறிஞர்கள்

அவர்க்கடுத்த மொழியியல் அறிஞர், ஜாகப் கிரிம்(Jacob Girmm) என்பவர், சொற்பிறப்பு (Etymology) ஆராய்ச்சியிலும் ஒலியியல் (Phonetics) ஆராய்ச்சியிலுமே பெரிதும் காலம் கழித்தார். அவரது முடிபுகள், பல இன்று ஏற்றுக் கொள்ளத் தக்கனவாக இல்லை பிரான்ஸ் பாப் (Franz Bop) என்பவர், பாரிஸ் நகர் சென்று, கிழக்கு நாட்டு மொழிகளைக் கற்று ஆராய்ந்தார். விகுதிப் பிறப்பை ஆராய்ந்து, இலக்கணங்களை ஒப்பிட்டுக் காணத் தலைப்பட்டார். ஒப்பிலக்கணம் எனும் ஆராய்ச்சி இவரால் வளர்ந்தது

எனலாம். ஐரோப்பிய, இந்திய வடமொழிகளுக்கும் உள்ள உறவைக் கண்டு, எல்லாவற்றையும் குறிப்பிட்டு, இந்தோ - ஐரோப்பிய மொழியினம் (Indo- European group) என்ற குறியீடு அமைத்தவர் அவரே. தென்னிந்தியாவின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கியம் எழுதினார் அறிஞர் கால்டுவெல். மலையாள மொழியை ஆராய்ந்தார் டாட்டர் குண்டர்க்(Dr. Gundert) .தெலுங்கு, கன்னட மொழிகளை ஆராய்ந்தார் அறிஞர் பிரௌன்(C.P. Brown). அறிஞர் கிட்டல் (F. kittlel) குடகு, துளு, பிராஹூய் முதலிய மொழிகளையும் வேறு அறிஞரும் ஆராய்ந்தனர்.

பெயர்ப்பொருத்தம்.

இந்தோ ஐரோப்பிய மொழிகள் எனக் கூறப்படும் ஆரிய மொழியினம், கிரீக், லத்தீன், ஜெர்மன், பிரெஞ்சு, பாரசீகம் முதலிய தூய ஆரிய மொழிகளுக்கும் வேறுபாடு விளங்காமற் போவதால், இந்தியாவில் வந்து திராவிடக் கலப்புடன் விளங்கும் இம்மொழிகளை ஆரிய திராவிட மொழிகள் அல்லது வட இந்திய மொழிகள் எனக் கூறல் பொருந்தும். மொழிகளின் ஒற்றுமை வேற்றுமை அறிய அடிப்படையானது மொழி இலக்கண அமைப்புப் பற்றிய ஆராய்ச்சியே.

இம் முறைப்படி ஆராய்ந்தால் திராவிட மொழிகள் வடமொழிகளில் இருந்து பெரிதும் வேறுபட்டிருக்கின்றன. எனவே திராவிட மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தவை அல்ல என்று விளக்கிக் கூறுகிறார் கால்டுவெல். ஆகவே திராவிட மொழிகள், இந்நாட்டில், மொழிகளுடன் தொடர்பு படுத்தாமல் இந்நாட்டில் தோன்றி வளர்ந்த தனி இனமாகக் கோள்வதே பொருந்தும்.

திராவிட மொழியினம்

திராவிட மொழிகளை திருத்திய மொழிகள், திருத்தாத மொழிகள் என இருவகையாகப் பாடுபாடு செய்கிறார் கால்டுவெல்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு என்னும் ஆறு இனமும் இலக்கியம் பெற்ற மொழிகள் கோத,(Kota) தோத,(Toda) படக,(Badaga) கோலமி,(Kolami) பார்ஜி,(Barji) நாயகி,(Naiki) கோந்தி,(Gondi) குவி,(Kuvi) கோண்டா,(Konda) மால்டா,(Malta) ஒரொவன்,(Otoan) கட்பா,(Gadba) குருக்(Kurukh) என்பவை எழுத்தும் இலக்கியமும் அற்றனவாய் உள்ள திராவிட மொழிகள்.

தமிழ்

“வடவேங்கடம் தென் குமரி, ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்” என பழங்காலத்திலேயே தமிழ் வழி, நாட்டின் எல்லை கூறப்பட்டுள்ளது. உலகில் பல மொழிகள் தோன்றி மறைந்தன. மிகப் பழங்காலத்தே தோன்றி இன்றும் செல்வாக்குடன் வளர்ந்து, வாழ்ந்து விளங்குவன தமிழ், சீனம் எனும் சில மொழிகளே. இவற்றுள்ளும் பழமைக்கும் பழமையான இலக்கிய வளம் உடையதுடன், புதுமைக்கும் புதுமையாய், கருத்துச் செறிவுடன் செல்வம் நிறைந்ததாய், என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது தமிழ்மொழி.

இலங்கையின் வடக்கு, கிழக்கு, வேறு சில பகுதிகளில் தமிழ் பேசப்படுகிறது. சிங்கப்பூர், மலேசியாவின் பினாங்கு எனும் கிழக்குப் பகுதியிலும் தமிழ் பேசி வருகின்றனர்.

மக்களின் தோற்றம்

இவ்வாறு மக்கள் முதலில் தோன்றிய இடம் லெமூரியா என்றும், அது இந்தியக் கடலில் இருந்தது என்றும், கடற்கோள் வந்து அழிந்தது என்றும், தப்பித்த மக்கள் பல்வேறு

இடங்களுக்குச் சிதறி ஓடினர் என்றும், பின்னர் ஐரோப்பாவில் ஐரோப்பியர் என்றும், ஆபிரிக்காவில், ஆபிரிக்கர் என்றும், இந்தியாவில் இந்தியர் என்றும், ஜாவா, சுமித்திரா வழியே சீனா சென்றவர் சீனர், மங்கோலியர் என்றும் பலவகை மக்களாக வாழநேரிட்டது.

லெமூரியா எனும் நிலப்பரப்பே குமரிக் கண்டம். அங்கே குமரி மலை இருந்தது. பஃறுளி ஆறு ஒன்று ஓடியது எனப் பழந்தமிழ்ப் பாட்டுக்கள் அறிவிக்கின்றன. அந்த மலை, ஆறு இருந்த காலம், இமயமலையும், கங்கை ஆறும் தோன்றவில்லை. வடகோடி கடற்பகுதியாக இருந்த காலம். இங்கு முதலில் தோன்றிய மக்கள் இனம், பழந்தமிழரே. அவர்கள் பேசிய மொழி, தமிழ்மொழி, உலகின் ஆங்கிலேயர், ஐரோப்பியர், மற்ற இனத்தவர் யாவரும் பழந்தமிழரின் வழித்தோன்றல்களே என்றும், மொஹெஞ்சதாரோவில் வளர்ந்த பழந்தமிழர், நாகரிகமே, மத்திய தரைக்கடலை அடுத்த பகுதிகளில் எகிப்து நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், ஸ்போனிய நாகரிகம், கிரேக்க நாகரிகம் என வளரக் காரணமாக இருந்தது என்றும் கருத இடம் உண்டு.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் "பண்டைத் தமிழர்"

சுவாமி ஞானப்பிரகாசரின் பண்டைத் தமிழர் கட்டுரை பின்வருமாறு கூறுகிறது. 'திரமிலர்' எனும் பெயர் தென்னாட்டில், 'தமிழர்' என மருவி வந்ததாக வடமொழி நாடகங்களிலும், சமண நூல்களிலும், அது 'தவிட, தபிள' என மாறுவதாயிற்று. கி. பி. 6ம் நூற்றாண்டிலே தான் 'வராகமிகிரரின்' நூலின் பழங் கையெழுத்துப் பிரதிகளில் 'த்ரமிட' எனும் உருவம் காணப்பட்டது. அதே காலத்தில், 'மங்கலேச அரசன்' சாசனங்களில், 'திரமில' என வருகின்றது. தென்னிந்தியத் தமிழரை அறிந்த கிரேக்க ஆசிரியர், தமது நூல்களில், 'தமிழர்' என்ற பிற்கால உருவத்தை, வெவ்வேறாகத் திரித்து எழுதினர். 'பெரிப்புளூஸ்' எனும் கி. மு. 4ம் நூற்றுண்டு நூல், தமிழரை, 'தமேராய்' (Tamiarai) என்றும், அவர்கள் நாட்டை 'லிமுரிகே' (Limyrike) என்றும் வழங்குகின்றது. 'லிமுரிகே' தமிழகம் போலும். இப்பெயர் தான்,

'தோலேமியின்' கி. பி. 2ம் நூற்றாண்டு நூலில், (Lymirike) என்றும் கி. மு. 3ம் நூற்றாண்டின் 'பெயுத்துங்கெயர்' அட்டவணையில் (Peutingerian Table) ஸ்கூத்திய - திமிரிசே (Scythia Dymirice) என்றும் வருகின்றது. 'திரமிளம்' தான் தமிழ் என மாறிற்று என்பதை திராவிடப் பிரகாசிகை நூலுடையாரான யாழ்ப்பாணத்துச் சபாபதி நாவலர், மறுத்துரைத்து, முதன்மைமிக்க இம்மொழிக்குப் பிறபாஷைச் சொல்லாற் பெயரீடு உண்டாயிருத்தல், பொருந்தாது என முடித்தார். இவரது கொள்கையே தற்காலத்துப் பண்டிதர் பலருடையதுமாம்.[17]

'தமிரலிற்றி' எனும் இந்திய வடகீழ்த்திசைப் பட்டினப் பெயர்தான் 'தமிழ்' என வந்தது என்றார் '1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் நூலாசிரியரான கனகசபைப்பிள்ளை. போப்பையர் எனும் பண்டிதர், வடநாட்டாருடைய பாஷை 'வடமொழி' என்பபட்டது போல் தென்னாட்டார் உடையது 'தென்மொழி' எனப்பட்டுத் 'தெம்மொழி', 'தமிழ்' என மருவியிருக்கலாம் என ஊகித்தார். இவை, சரித்திர, மொழி ஆராய்ச்சிகளுடன் ஒட்டாது, ஊகமாத்திரையாய்ச் சொன்ன உற்பத்திகளே. 'தமி', 'தனி', 'தனக்கிணையில்லாது' எனத் தமிழ்ப்பெயர் வந்ததாயின், அதன் இலக்கண இலக்கியங்களை நன்கு ஆராய்ந்து, பிறமொழியிலக்கண இலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்த பின்பே அப்பெயர் வரலாம். ஆதலால் அது பொருந்தாது..

'திரமிலர்' எனும் சொல்லின் பொருள் யாது? ஆராச்சியாளர் கருத்துப் படி, 'திர' என்பது தற்காலத் 'திரை' என்று தமிழிலும் 'திர' என மலையாளத்திலும் குறிக்கப்படுவது கடல். இல் என்பது குடி. இரு சொற்கள் மத்தியிலுள்ள 'மகரம்' இக்கால வகரத்தை ஒத்த உடம்படு மெய் எனப. 'என்னவோ', என்பது 'என்னமோ' நிற்பதும் காண்க. பிற்காலத் தமிழில், வகர, உடம்படுமெயோடு, நகர, அல்லது ஞகர உடம்படுமெய்யும் காணப்படுகிறது. உழுநன், கிளைஞன் ஆயின் நகர, ஞகரங்கள் வகரமாய் மாறுதல் பெறப்படா. மகரம் வகரமாய்த் திரிதல் இயல்பு. மகரம் நகரமாய்த் திரிதல் எளிது.

எனவே திரமிலர், எனும் சொல்லிலிருந்து தமிழர் எனும் பெயர் வந்ததே பொருந்தும். பொதுவாக இடப்பெயரிலிருந்து மக்கள் பெயரும், மக்கள் பெயரிலிருந்து அவர்கள் மொழிப்பெயரும் வருவதைக் காணலாம். மலைநாடு, மலையாளிகள் ஆகி, மலையாள மொழி பேசுபவர் ஆயினர். கருமணல் நாடு, கன்னடர் தேசமாகி, அவர்கள் கன்னட மொழி பேசுவோராயினர். தெல்லு வயற்பாத்தி. அத்தேசத்தினர், தெலுங்கர் எனவும், அவர் பேசும் மொழி தெலுங்கு எனவும் வந்தது. இதுபோல் திரமிலர், கடலுடன் ஒன்றாகி, அவர் மொழி திரமிலம் ஆகி, அவர் தமிழர் ஆகினர் என உணரலாம்.

தேவநேயப் பாவாணர் கருத்து

தமிழ் உலக மொழிகளில் மூத்ததும் மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது, திராவிடத்திற்குத் தாயாகவும் ஆரியத்திற்கு முலமாக்வும்ம் விளங்கிய மொழி என வாதிட்டவர். 'கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் உள்ளிட்டவைகளுக்குத் தன் சொற்கள் பலவற்றை அளித்தது என்றும் நிறுவியவர் தமிழின் வேற்ச்சொல் வளத்தையும் செழுமையையும் சுட்டிக்காட்டி அதன் வளர்ச்சிக்கான வழியையும் அவரின் நூல்கள் வழி உலகிற்கு எடுத்துக் கூறியவர்.

தமது தமிழர் வரலாறு என்னும் நூலின் முன்னுரையில், தேவநேயப் பாவாணர் அடிகள், 'தமிழ்' எனும் சொல் தோற்றத்தின் முடிபாக இவ்வாறு இறுதியுரைத்துச் சென்றார். 'இதுகாறும் கூறியவற்றில், 'தமிழ்' என்னும் பெயருக்குக் கூறப்பட்ட பொருட் காரணியங்கள் எல்லாவற்றுள்ளும் தனியாக ழகரத்தை உடையது. தந் நாட்டு மொழி (தம்+இல்) எனும் இரண்டே பொருத்தமானவை என்றும், இவற்றினும் சிறந்தது தோன்றும் வரை இவையே கொள்ளத்தக்கன என்றே எண்ணிக் கொள்க!' என்றார்.

பேராசிரியர் பா. அருளியின் கருத்து.

சுவாமி ஞானப்பிர்காசரின் கட்டுரை நிறைந்த பண்டைத் தமிழர் என்னும் நூல். இதற்கு உரை வழங்கிய பேராசிரியர் பா அருளி. இது பற்றி, 'பண்டைத் தமிழர்' எனும் நூலுக்கு அருளியுரை வழங்கி தன் கருத்துச் சொல்லும் பேராசிரியர் பா. அருளி என்பவர் கூறுகிறார்.

'பாவாணர் பெருமகனார் மறைவெய்திய 1981ம் ஆண்டு முதலாக அவர் வரைந்து புறந்தந்த ஆய்வுச் செய்திகள் அனைத்திலும், ஆழ மூழ்கித் தோய்ந்து படித்து, உறைந்து, உரம்பெற்று, மறமேறிய அருளியாகிய நான், அவர்க்குப் பிறகு முப்பானாண்டுகட்கும் மேலாக அவற்றினுக்கும் மேம்பட்ட ஆராய்ச்சிகளில் தொடர்ந்து துருவித் தேடி மிகப் பன்னிலைத் துலக்கங்களை எய்தினேன். (அவற்றுள் இரண்டு அல்லது மூன்று விழுக்காட்டளவு - ஆய்வுப் பகுதிகளே, புறவுலகுக்குப் புலப்பாடு கொண்டுள்ளன!). ஆய்வு நிலைகள் படிநிலைகளிலாக மேம்படுவன என்னும் உண்மையும் எனக்குத் தெளிவாகியது.

தமிழ் என்னும் சொல் தோற்றம் பற்றிய நம் தெளிவான கருத்து

மொழி 'முய்' = (கூடுதற்கருத்து) வேர்ச்சொல்

முய்=அக்கு> முயக்கு=தழுவுவகை. சேர்கை, புணர்ச்சி

முயக்கு >மொயக்கு/மயக்கு. மயக்கு + அம் = மயக்கம்=சேர்க்கை

முய்>முய்ல் >முல், முல்+து>முற்று(முற்றும்=முழுவதும்)

முய்>முய்+உ>முயு>முழு=பருத்த, முற்றிய

முழு>முழு+இ>முழி>மொழி =சொற்களின் திரட்சிக்கூறு

தமிழுக்கு முதன்முதலில் வழங்கிய பெயர் 'மொழி' என்பதுவே!

தம்+ மொழி> தம்மொழி>தமொழி>தமிழ்

தமிழுக்குள்ளேயே மொழி. 'மொழி' என்பதுவும் உட்செறிவார்ந்துள்ளமையை உணரவியாவாறு காலப்பழமை மிகு தொலைவிற் சென்றமையின், நாம் மீண்டும் அதனுடன் மொழியை நட்டித் தமிழ்மொழி என்கின்றோம். (நம் செம்மொழி) தமிழ்+அம்: தமிழம்

தமிழம்>த்ரமிள்>த்ரமிட>த்ரவிட>திரவிட>திராவிட(திராவிடம்)

தமிழே திராவிடமாகியது! பாவாணர் பெருமகனாரின் கருத்தும் இஃதொத்ததே!

அண்ணன் அம்பேத்கர் அவர்களின் தெளிவும் இவ்விடத்திற் கருதிப் பார்க்கத் தக்கது. (மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு. பக். 74 1948)

திராவிடம் என்னும் சொல் ஒரு மூலச் சொல் அன்று. தமிழ் என்பதன் சமஸ்கிருத வடிவமே அது! தமிலா(Damila)>தமிழா(Damilla)> த்ரமிடா (Dramida) திராவிட என்றவாரு படிப்படியாக மருவியுள்ளது.! 'திராவிட ' என்பது ஒரு மொழியின் பெயரைக் குறிப்பது.! ஒரு மக்களினத்தைக் குறிப்பதன்று! 'திராவிடர்' என்ற மொழியானது தென்னிந்தியாவில் மட்டும் பேசப்பட்ட மொழி அன்று! ஆரியர்களின் வருகைக்கு முன் அனைத்திந்திய அளவிலும், காசுமீர் முதல் கன்னியாகுமரி வரை பேசப்பட்ட மொழியாகும்.[19]

முடிவுரை

இந்தப் பரந்த நிலவுலகில், மக்கள் தோன்றி வளர்ந்தனர். அவர்கள் பேசிய மொழியே முதல் மொழியாகும். அம்மொழியை மக்கள் பின்பற்றிப் பல்வேறு இடங்களில் குடியேறினர். அவ்வாறு குடியேறிய மக்கள் அம்மொழியைப் பல்வேறு விதமாகத் திரித்துப் பேசினர். அதனால் தான் மொழிகள் பலவகைகளாகத் திரிந்தன. நாளடைவில் அந்த மொழிகள், பல்வேறு கிளை மொழிகளாகப் பிரிந்து வளர்ந்தன.

தமிழ் மொழி மிகப் பண்பட்டது. வரலாற்றுக்கு எட்டாத காலம் முதல், தமிழ் மொழி ஆட்சி மொழியாகத் திகழ்ந்தது. இவ்வாட்சி மொழியே பல்வேறு இடங்கட்குச் சென்று பேசப்படும் மொழியாகவும், கேட்கப் படும் மொழியாகவும் மிளிர்கின்றன. ஒரு கிளை மொழியைப் பேசுவோர்க்கு, மற்றொரு கிளைமொழி நன்கு விளங்கும். கிளைமொழிகளுக்குள்ளும் வேற்றுமைப் போக்கு ஒருபுறமும், ஒற்றுமைப்போக்கு இன்னொரு புறமும் இருந்து, ஒன்றையொன்று ஈர்த்து வருதல் இயல்பு.

இலக்கிய மொழி கற்றுத் தேர்ந்த சிலருக்கு மட்டும் விளங்குவது, பொதுவாக எழுதத் தெரிந்த எல்லோராலும் பின்பற்றப்படும் மொழி பொது மொழி. புலமை நிரம்பித் தேர்ந்த சிலரால் எழுதப் படும் மொழி இலக்கிய மொழி ஆகும்.

அடிக்குறிப்புகள்

1. மொழி வரலாறு. மு. வரதராசன்., ப.க்.28
2. மொ. வ., மு., வ. பக்.28
3. மொ. வ.,மு. வ பக்.30
4. மொ. வ., மு. வ பக்.. 31
5. மொ. வ., மு. வ பக்.31
6. மொ. வ., மு. வ. பக்.36
7. மொ வ., மு. வ. பக்.36
8. மொ. வ., மு. வ. பக்.51
9. மொ. வ., மு. வ பக்.54
10. மொ.வ., மு. வ. பக்.55
11. மொ. வ., மு. வ. பக்.57
12. மொ. வ., மு. வ. பக்..57
13. மொ, வ., மு.வ. பக்.80
14. மொ. வ., மு.வ. பக்.106
15. மொ.வ., மு. வ. பக்..108
16. மொ.வ., மு.வ. பக்..371
17. மொ.வ., மு. வ பக்..113
18. பண்டைத் தமிழர்., சுவாமி ஞானப்பிரகாசர். எழுநா ஊடக நிறுவனம், பக். 25. ஜீன் 2013
19. பண்டைத் தமிழர். ஆய்வுக் கட்டுரைகள்., சுவாமி ஞானப்பிரகாசர். எழுநா ஊடக நிறுவனம். பக். 25. ஜீன்

துணைநூற்பட்டியல்

1. மொழி வரலாறு., மு. வரதராசனார்.
2. முதற்பதிப்பு. 1954. பாரிநிலையம் 90, ப்ராட்வே , சென்னை 108
3. பண்டைத் தமிழர். ஆய்வுக் கட்டுரைகள்., சுவாமி ஞானப்பிரகாசர்., எழுநா ஊடக நிறுவனம். 2013

தொ.மா.க. 155

தொல்காப்பியத்தில் தொடரியல் கோட்பாடும் இன்று அதன் மாற்றமும் வளர்ச்சியும்

முனைவர் வாசுகி நகுலராஜா

vasuki.nagularajah@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

சொல்லதிகாரத்தில் விரவியுள்ள தொடரியல் செய்திகளை ஆராய்தல், நடைமுறையில் இன்று தொடரியல் சிந்தனைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும், மாற்றங்களும் பற்றிய ஆய்வாக இது அமைகின்றது. இலக்கணநூல் அந்த மொழியில் எழுதப்படும்போது மொழிபற்றிய முழுமையான மொழியியல் ஆய்வினை செய்த அறிவினைக் கொண்ட எழுதப்படுவது. தொல்காப்பியம் காலத்தால் முந்திய நூலாக, தமிழ்மொழியின் இலக்கண செழுமை வாய்ந்த நூலாக உள்ளது.தொல்காப்பியத்தில் கூறப்பட்ட விடயங்கள் எழுத்து, சொல், பொருள் , மூன்று அதிகாரங்களைப் பார்க்கும் போது, தொல்காப்பியத்தின் முக்கிய எடுத்துரைப்பினுடைய இலக்காக அமைவது, தமிழ் மொழியின் நியமங்களை தமிழ் எழுதுமுறையின் நியமங்களை -தமிழிலக்கியத்தின் நியமங்களை கூறிச் செல்கின்ற விதிமுறையான விதிப்புகளாகக் கூறாமல் இயங்குநிலை நியமங்களாகக் கூறுவது என்ற முறைமையிலேயே கூறிச்செல்கிறது என்பதைக் கொண்டே நமது ஆய்விற்கான முக்கிய அம்சமான தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சியினைக் காணலாம்.

தொல்காப்பியத்தில் தொடரியல் சம்ந்தமாக ஓர் அதிகாரம் இல்லை என்றாலும், சொல்லதிகாரத்தில் தலைமை அமைப்பு, சார் அமைப்பு , இணைப்பு அமைப்பு ஆகியவை பற்றி கூறும் நூற்பாக்கள் தொடரியல் கொள்ளகையை வெளிப்படுத்தி நிற்கின்றன. அவை கூறும் தொடரிலக்கணம் பல கூறுகளாக பிரித்து மொழியியலில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்று ஆராயவேண்டிய தேவையே நோக்கமாகும்.

தொல்காப்பியர் கூறும் தொடரிலக்கணம் பல கூறுகளாக பிரித்து நோக்க வேண்டும். தொல்காப்பியனார் சொற்களின் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை தனிமொழி, தொடர்மொழி என் இருவகைப்படுத்தி அவற்றின் இலக்கணங்களை சொல்லதிகாரத்தில் தெளிவாக விளக்கியுள்ள முறையை ஆராய்ந்து, அவை உறுப்புகளால் அமையும் முறையை பிரித்து நவீன மொழியியலில் அவை எவ்வாறு பிரித்து ஆராயப்படுகின்றன என்று ஆய்வு செய்வதே கருதுகோள் ஆகும். தொடரியல் கோட்பாடுகளை சில விதிகளாக வகை செய்து இலக்கண, இலக்கிய உரையாசிரியர்கள் சிலர் தம் உரை நூல்களில் காட்டியுள்ளாரகள்.விளக்க மொழியியலைக் கற்றுத்தேர்ந்த தமிழறிஞர்கள் தொல்காப்பிய தொடரியல் மரபை மொழியியல் நோக்கில் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் மீட்டெடுத்தனர். அதைத் தொடர்ந்து தமிழ் மொழி மற்றும் இலக்கியங்களை மாற்றிலக்கண விதியை விளக்கி, இலக்கிய பதிவை மேற்கொண்டனர். தொல்காப்யத்தில் உரையாசிரியர்கள் விளக்கிய தொல்காப்பிய கோட்பாடுகள், மாற்றிலக்கணக் கோட்பாடுகளுக்கு சற்றும் குறையாதவை என்பதை ஆய்வு செய்யும் அணுகுமுறை.

தொல்காப்பியத்தில் உள்ள கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எனும் இயல்களிலும் எஞ்சிய பிற இயல்களிலும், உள்ள ஏவல், வினைத் தொடர்கள், எச்சத் தொடர்கள், உவமைத்தொடர்கள், எதிர்மறைத்தொடர்கள்,செய்யுளின் சொன்மையும் போன்ற விடயங்களில் ஆய்வாளர்கள் கண்டறிந்த தொடரியல் செய்திகளை ஆய்தறிவதே ஆய்வின் எல்லை.

முன்னுரை

இலக்கணநூல் அந்த மொழியில் எழுதப்படும்போது மொழிபற்றிய முழுமையான மொழியியல் ஆய்வினை செய்த அறிவினைக் கொண்ட எழுதப்படுவது. தொல்காப்பியம் காலத்தால் முந்திய நூலாக, தமிழ்மொழியின் இலக்கண செழுமை வாய்ந்த நூலாக உள்ளது.தொல்காப்பியத்தில் கூறப்பட்ட விடயங்கள் எழுத்து, சொல், பொருள் , மூன்று அதிகாரங்களைப் பார்க்கும் போது, தொல்காப்பியத்தின் முக்கிய எடுத்துரைப்பினுடைய இலக்காக அமைவது, தமிழ் மொழியின் நியமங்களை தமிழ் எழுதுமுறையின் நியமங்களை -தமிழிலக்கியத்தின் நியமங்களை கூறிச் செல்கின்ற விதிமுறையான விதிப்புகளாக்க் கூறாமல் இயங்குநிலை நியமங்களாக்க கூறுவது என்ற முறைமையிலேயே கூறிச்செல்கிறது என்பதைக் கொண்டே நமது ஆய்விற்கான முக்கிய அம்சமான தொடரியல் கோட்பாடுகளின் வளர்ச்சியினைக் காணலாம்.

தொல்காப்பியத்தில் தொடரியல் சம்ந்தமாக ஓர் அதிகாரம் இல்லை என்றாலும் , சொல்லதிகாரத்தில் தலைமை அமைப்பு, சார் அமைப்பு , இணைப்பு அமைப்பு ஆகியவை பற்றி கூறும் நூற்பாக்கள் தொடரியல் கொள்ளகையை வெளிப்படுத்தி நிற்கின்றன. அவை கூறும் தொடரிலக்கணம் பல கூறுகளாக பிரித்து மொழியியலில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டிய தேவையே நமது நோக்கமாகும்.

ஆய்வின் கருதுகோள்

தொல்காப்பியர் கூறும் தொடரிலக்கணம் பல கூறுகளாக பிரித்து நோக்க வேண்டும். தொல்காப்பியனார் சொற்களின் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை தனிமொழி, தொடர்மொழி என் இருவகைப்படுத்தி அவற்றின் இலக்கணங்களை சொல்லதிகாரத்தில் தெளிவாக விளக்கியுள்ள முறையை ஆராய்ந்து, அவை உறுப்புகளால் அமையும் முறையை பிரித்து நவீன மொழியியலில் அவை எவ்வாறு பிரித்து ஆராயப்படுகின்றன என்று ஆய்வு செய்வதே நமது கருதுகோள் ஆகும்.

ஆய்வின் அணுகுமுறை

தொடரியல் கோட்பாடுகளை சில விதிகளாக வகை செய்து இலக்கண, இலக்கிய உரையாசிரியர்கள் சிலர் தம் உரை நூல்களில் காட்டியுள்ளாரகள்.விளக்க மொழியியலைக் கற்றுத்தேர்ந்த தமிழறிஞர்கள் தொல்காப்பிய தொடரியல் மரபை மொழியியல் நோக்கில் இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் மீட்டெடுத்தனர். அதைத் தொடர்ந்து தமிழ் மொழி மற்றும் இலக்கியங்களை மாற்றிலக்கண விதியை விளக்கி, இலக்கிய பதிவை மேற்கொண்டனர். தொல்காப்யத்தில் உரையாசிரியர்கள் விளக்கிய தொல்காப்பிய கோட்பாடுகள், மாற்றிலக்கணக் கோட்பாடுகளுக்கு சற்றும் குறையாதவை என்பதை ஆய்வு செய்யும் அணுகுமுறையை இங்கே பயன்படுத்தியள்ளோம்.

ஆய்வின் எல்லை

தொல்காப்பியத்தில் உள்ள கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், எனும் இயல்களிலும் எஞ்சிய பிற இயல்களிலும், உள்ள ஏவல், வினைத் தொடர்கள், எச்சத் தொடர்கள், உவமைத்தொடர்கள், எதிர்மறைத்தொடர்கள்,செய்யுளின் சொன்மையும் போன்ற விடயங்களில் ஆய்வாளர்கள் கண்டறிந்த தொடரியல் செய்திகளை ஆய்தறிவதே ஆய்வின் எல்லையாக கொண்டுள்ளோம்.

தொல்காப்பியத்தில் ''தொடர்''

சொற்கள் ஒன்றோடு ஒன்று சேர்வதால் சிறிய அல்லது பெரிய தொடர்கள் அமையும். இத்தொடர்களைப் பற்றிப் பேசுவது தொடரியல்(Syntax) ஆகும். கிளவியாக்கம் தமிழ்த் தொடரியல் கூறுகள் சிலவற்றை எடுத்துரைக்கிறது.

சொல்லின் மிகச்சிறிய வடிவம் ஒரெழுத்து என்பது வெளிப்படை. ஒன்று, பல என்பது தமிழ்க் கொள்கை. ஒன்று,பல என்பது தமிழ்க் கொள்கை. ஒன்று, இரண்டு, பல என்பது வடமொழிக் கொள்கை என்று எண்ணுவதும் விவாதிப்பதும் உண்டு. இங்கு மட்டும் அன்றி குற்றியலுகரப் புணரியலிலும் ஈரெழுத்து மொழியை சுட்டுவதால் இது தொல்காப்பியத்தின் எண்ணமே என உறுதிப்படுத்தப்படுகிறது. இப்பாகுபாடு தனிமொழி, தொடர்மொழி என்ற நிலையிலும் சிறப்புப் பெறுகிறது.

தமிழில் திணை, பால், எண், என்ற அடிப்படையிலும், இட அடிப்படையிலும் , வினை அடிப்படையிலும், சொற்கள் வகைப்படுத்தப்பட்டன.

தொல்காப்பியத்தில் தொடர் என்ற சிந்தனையை முன்வைக்கும் போது '' தொடர்'' என்ற சொல் எழுத்துக்கள் தொடர்ந்து வருதல் என்ற பொருளிலேயே பல நூற்பாக்களில் பயன்பட்டு வந்துள்ள முறையை காணமுடிகிறது.

> *'' நெட்டெழுத்தில் இம்பரும் தொடர்மொழி ஈற்றும் குற்றியலுகரம் வல்ஆறு ஊர்ந்தே'' (தொல் எழுத்து 36)*

என்ற நூற்பாவில் ' தொடர்மொழி ' என்பது எழுத்துக்கள் தொடர்ந்து வந்து சொல்லாகின்ற தன்மையே விளக்குகிறது.

> *' ஓரேழுத் தொருமொழி ஈரேழுத தொருமொழி*
> *இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட*
> *முன்றே மொழி நிலை தோன்றிய நெறியே' (தொல் எழு 45)*

என்ற நூற்பாவில் ' தொடர் மொழி ' என்பது இரண்டிற்கும் மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து வருகின்ற தன்மையே குறிக்கின்றது.

மேலும் தொடர் என்ற சொல் புணர்ச்சி இலக்கணம் கூறும் இடங்களிலும் சொற்கள் தொடர்ந்து வரும் இடங்களிலும் இவை எவ்வாறு வருகின்றன என்று விளக்கப்படுகிறது.

தொடரியலில் சொற்பாகுபாடும் அதன் உறுப்புக்களும்

தொல்காப்பியத்தில் சொல்லதிகாரத்தில் முதல் இயல் கிளவியாக்கம் என்பதால் அவரது சொல்லிணக் கோட்பாட்டின் அடிப்படையை அறிந்து கொள்ள பலர் ஆராய்ச்சி செய்துள்ளாரகள். முக்கியமாக உரையாசிரியர்கள் என்ன கூறியியருக்கிறார்கள் என்று பார்க்கும் போது

1. கிளவியாக்கம் பொருள்மேல் எவ்வாறு வருகின்றன
2. வழுகாத்தலும் வழு அமைதியும்
3. தொடரியல் என்பதை வலியுறுத்துதல்

மேற்கூறிய விடங்களை பற்றி, இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்கினியர், கல்லாடர், என்போர் இந்த இயல் சொல்லியல் நோக்கும், வழு நோக்கு ஆகிய இரண்டையும் பற்றிக் கூறியவை என்றார்கள்.

தெய்வச்சிலையார் தொடரியல் நோக்கும் வழு நோக்கும் உடையதாக உள்ளன என்று கூறியுள்ளார். இவர் மேலும் தொடரியல் நோக்கத்திற்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

சொற்களின் பொருள் -கிளவியாக்கப் பொருள் என்றார்

இளம்பூரணர் அவர்கள் '' கிளவியாக்கப் பொருளமேல் ஆமாறு உணர்த்தியது' சொல்லின நோக்கு என்ற சிந்திப்புக்கூட

' கிளவி என்பது சொல் ஆக்கம் என்ற பொருளையே உணர்த்துகிறது என்று கல்லாடர் கூறினார்.

இவ்வியலில் முதல் நூற்பா தமிழ்சொற்களை உயர்திணை,அஃறிணை என இரு திணைப்பாற்படுத்துகிறது. இப்பாகுபாடு பொருளை அடிப்படையாக கொண்டது என்றாலும் மொழியில் இயைபு, மாற்றுவைத்தல் என்ற இரண்டின் அடிப்படையில் அமைவதைக் காணலாம்.

> '' *உயர்திணையும் என்மனார் மக்கள் சுட்டே*
> *அஃறிணை என்மனார் அவரல பிறவே*
> *ஆ இரு திணையின் இசைக்குமன் சொல்லே' (தொல் 484 சொல் 1)*

இதை அடுத்துத் தொடரும் நூற்பாக்கள் தொல்காப்பியர் மொழியின் அமைப்பிற்கு முதலிடம் தந்திருக்கின்றார். ' பாலறிகிளவிகளை ' அவர் நிரல் படுத்திக் காட்டுவது உயர்திணை அஃறிணை சொற்களை உருவ அடிப்படையில் வேறுபிரித்துக் உணர்வதற்குக் கருவியாக அமைகிறது. அவற்றின் தொடரியல் உறவைக் கொண்டு அவற்றுக்கு பால் உணர்த்தப்படும். இந்தமாதிரியான பாகுபாட்டிற்றுப் பொதுவாக அடுக்கியல் உறவும் தொடரியல் உறவும் கணக்கில் கொள்ளப்படும்.

இதன் பின் பெயருக்கும் வினைக்கும் இடையிலமைந்த இயைபு பற்றிக் கூறத் தொடங்குகிறார். இதனை தெளிவு படுத்த வேண்டும், எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையிலமையும் திணை, பால் ஒற்றுமையே ஈண்டு ' இயைபு ' எனச் சுட்டப்படுகிறது.

பெயரிலும் வினையிலும் அல்லது எழுவாயிலும் பயனிலையிலும் தோன்றுகின்ற பாலறிகிளவிகள் தமக்குள் மயங்கமாட்டாது என்றும் ஒத்து இயைந்து செல்ல வேண்டும் என்றும் கூறுகிறார். (தொல் சொல் 494)

496- முதல் 498 முடிய உள்ள மூன்று நூற்பாக்களிலும் இவ் இயைபுச் சட்டம் உள் பொருளாக உள்ளது. செப்பு, வினாவாக்கிய அமைப்புக் குறித்து நூற்பாக்கள். இவற்றை விளக்கிக் கொள்ளத்தக்க தற்கால மொழியியல் மாற்றிலக்கண அறிஞர்கள் கூறும் ஒரு வாக்கியத்தின் புறவடிவம் , புதைவடிவம் பற்றிய அறிவு துணைசெய்கிறது.

நீ உண்டாயா? என்ற வினாவுக்கு ' நான் உண்டேன் ' என்று உடன் பாட்டு விடை கிடைப்பதாக்க் கொள்வோம். இந்த இரண்டு வாக்கியங்களிலும் இயைபு பொருந்தி நிற்பதை நிற்க்க காணலாம். வினாவில் உள்ள '' நீ '' என்ற முன்னிலைச் சொல் விடையில் '' நான்'' என்ற தன்மைச் சொல்லாகவும் உண்டாயா? என்ற முன்னிலை உண்டேன் என்ற தன்மை வினையாகவும் மாற்றம் பெற்று தம்முள் இயைபு பெற்றுக்காணப்படும்.

தொல்காப்பியர் 511-514 வரையிலான நூற்பாக்களில் வினைச் சொற்களுக்கும் இடப்பெயர்களுக்கும் உள்ள ஒருவகை ' இசைவு பற்றியும் கூறுகிறார்.

தா,வா,கொடு, போ

இக்கால மொழிநூல் அறிஞர்களும் கிளவியாக்கம் என்னும் இயலைத் தொடரியல் பற்றிப் பேசும் இயலாகவே கருதுகின்றனர். டாக்டர் பி. எஸ். சுப்பிரமணிய சாத்திரியார் என்பவர் "கிளவியாக்கம் என்னும் இயல் வாக்கியத்தில் அமையும் எழுவாய் பயனிலை ஆகியவற்றின் இயைபைப் பற்றிப் பேசுகிறது" என்று கூறுகிறார். டாக்டர் ச. அகத்தியலிங்கம் "கிளவியாக்கம் என்னும் இவ்வியலின்கண் எழுவாய் - பயனிலை பெயரடை, பெயர் போன்றவற்றில் காணப்படும் இயைபு, வாக்கியங்களில் காணப்படும் பல்வேறு சொற்களின் முறைவைப்பு, இரு வாக்கியங்கள் இணையும் பொழுது ஏற்படும் மாற்றங்கள் போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன" என எடுத்துக் காட்டுகிறார். (திராவிட மொழிகள் 1-ப-163)

ஒரு பெயர்ச்சொல்லோடு வெவ்வேறு வேற்றுமை உருபுகள் சேர்வதால் தொடரின் பொருள் வேறுபடுகின்றது.

(எ.டு)
கண்ணாடியைப் பார்த்தான்
கண்ணாடியால் பார்த்தான்
கண்ணாடியில் பார்த்தான்

இவ்வாக்கியங்களில், ஐ, ஆல், இல் முதலிய வேற்றுமை உருபுகள் தொடர்ப் பொருளை வேறுபடுத்தி என்ற தொடர்களில் ஒடு என்ற மூன்றாம் வேற்றுமை உருபும், இல் என்ற ஏழாம் வேற்றுமை உருபும் ஒரே பொருளைத்தான் தருகின்றன. இவ்வாறு வெவ்வேறு வேற்றுமை உருபுகள் தொடர்ப் பொருளை வெவ்வேறாக மாற்றுகின்ற காரணத்தாலும், தொடரில் தம் பொருள் இழந்து ஒரே பொருளில் வரும் காரணத்தாலும் தொடரியலில் வேற்றுமை முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புலப்படும். ஆகவே, கிளவியாக்கத்தை அடுத்து அமைந்துள்ள வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகியவற்றில் தொல்காப்பியர் வேற்றுமைகளைத் தொடரியல் அடிப்படையில் ஆராய்ந்துள்ளார்.

மேலே கூறியவற்றால், தொல்காப்பியத்தில் உள்ள சொல்லதிகாரம் உருபனியலோடு தொடரியலைப் பற்றியும் கூறுகிறது என்னும் கருத்து தெளிவாகும். இனி, தொல்காப்பியர் எழுவாய் - பயனிலை இயைபு, சொற்களின் வரன்முறை, தொடரில் பொருள் மயக்கம், தொடர் வகைகள் முதலியன பற்றிக் கூறும் தொடரியல் கருத்துகளைக் காண்போம்.

'இதேபோலவே சொற்களுக்கிடையே தொடர் இலக்கண மாற்றம் ஏற்படலாம் பெயர்+பெயர் தொடர்களுக்குகும் வேற்றுமை உறவு மாறுபடலாம். முருகன் நாடு என்பது முருகனுடைய நாடு என்று ஆறாம் வேற்றுமையாகவும் முருகன் பிறந்த நாடு (முருகன் நாட்டில் பிறந்தான்) என்று ஏழாம் வேற்றுமையாகவும் இருக்கலாம் எனவேதான் இரண்டு சொற்கள் சேரும் போது அவர்களுக்கிடையே உள்ள தொடரியல் உறவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.

'வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்நிலையும் '

என்ற 112 அடிகள் மூலம் தொடர்களை வேற்றுமைத் தொடர், அல்வழித்தொடர் என்று செய்த பாகுபாடு தொடரியல் சிறப்பு மிகுந்தது.

வேற்றுமைத்த தொடர் என்பது வேற்றுமைத் தொகையாக வரும் தொடர்களையே குறிக்கின்றது, அப்படிப்பார்த்தால் அவை பெயரத் தொடர் ஆகும். தமிழ் இலக்கணமரபிலே

வேற்றுமைத் உருபுகளை ஏற்ற பெயர் பெரும்பான்மையும் வினை கொண்டு முடிவதாக தொடரியல் நோக்கில் வினைத்தொடராக கருதப்படும்.

முக்கியமாக தொடரியலில் கவனிக்கவேண்டிய விடயம் சொற்கள் தொடராக அமையுமிடத்து அவற்றிடையே ‘ இயைபு என்பது அவசியமாகின்றது.தமிழ் மொழியில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொல்லுக்கும் பயனிலையாக அமையும் வினைச் சொல்லுக்கும் திணை, பால், எண், இடம் எனும் இலக்கணக கூறுகளின் அடிப்படையில் இயைபு காணப்படும்.இது தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்றுவரை தமிழ் மொழியிலே காணப்படுவது இதற்கு நல்ல சான்றாகும்.

சொல்லியலில் தொடரியல் உண்மைகள் பல பரவிப்புதைந்துள்ளன என்பதும் குறிப்பாக புணரியலில் பதவியல் என்ற இயலை அமைத்து சொல்லியல் கோட்பாடுகளை குறிப்பாக சொற்களைப் பகுப்பதை விளக்கியுள்ளார்.ஆனாலும் தொல்காப்பியருடைய புணரியல் விதிகளில் பல நுண்ணிய சொல்லியல் கோட்பாடுகள் புதைந்துள்ளன (சண்முகம் 1978) என்று இன்று கண்டறியப்பட்டுள்ளது

வாக்கியத்தில் சொற்கள் எம்முறையில் தொடர்ந்து நிற்க வேண்டும் என்பது பற்றித் தொல்காப்பியர் பல விதிகள் கூறியுள்ளார். குகைக் கல்வெட்டுகளில் காணப்படும் வாக்கியங்கள் தொல்காப்பிய விதிகளுக்கு ஒப்ப அமைந்துள்ளன.

சிறப்புப் பெயரும் இயற்பெயரும் ஒருவர்க்கு இயற்பெயரோடு சிறப்புப் பெயர் இருக்குமாயின் அவ்விரண்டையும் சேர்த்து வாக்கியத்தில் கூறும்போது சிறப்புப் பெயரை முன்னும் இயற்பெயரைப் பின்னும் கூற வேண்டும்.

ஊர், நகரம், நாடு பற்றிய இடப் பெயர்களும் இயற்பெயருக்கு முன்னர் வர வேண்டும். வெள்ளடை, பாகனூர், எருக்கோட்டூர், எவோமி நாடு, தெங்கு (நாடு), ஈழம், குன்றத்தூர், மதுரை, குமட்டூர் போன்ற இடப் பெயர்கள் பலவும் உள்ளன. இவை இயற்பெயருக்கு முன்னர் அடையாக வரக் காணலாம்.

உலக மொழிகளின் வடிவமைப்பில்

1. தனி மொழி

2. ஒட்டு மொழி

3. விகுதி மொழி

இவற்றில் ஒட்டு மொழிகளாவன அவற்றின் முக்கியமான பண்புகளை நாம் தெரிந்து கொள்வது முக்கியமானவை

முடிவுரை

இவற்றை நாம் மனதில் கொள்வதோடு தொடரியலில் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவென்றால் சொற்கள் தொடராக அமையொமிடத்து அவற்றிடையே இயைபு என்றும் அவசியமாகின்றது.அப்படியே மொழியில் உள்ள வாக்கியங்களும் ஒருவித தொடர்பால் பிண்ணிப்பிணைந்தவை என்றும் வாக்கியத்தின் சொற்களையும் சொற்றொடர்களையும் மட்டும் விளக்குவதென்றால் தொடரமைப்பு விதிகள் போதுமானவை. மொழியின் தொடரியல் பற்றிய ஆய்வுகள் நீண்டு கொண்டே போகும்.

தொ.மா.க. 192

தொல்காப்பியமும் பிராகிருதமும்- ஒரு பார்வை

சிவபாலு தங்கராசா
ஆசிரியர், கனடா.
avan.siva55@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியம் என்பது தமிழ் மொழியின் இலக்கணம் மற்றும் தமிழ் எழுத்து மற்றும் மொழியியல் ஆகியவற்றின் தொடக்கப் புள்ளியாகும். இது நூற்பா அல்லது சுருக்கமான சூத்திர எழுத்துக்களின் கட்டமைப்பில் இயற்றப்பட்டுள்ளது. மற்றும் மூன்று பகுதிகளை உள்ளடக்கியது - எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மற்றும் பொருள் அதிகாரம். இந்தத் தொகுதிகள் அனைத்தும் மேலும் ஒவ்வொன்றும் ஒன்பது அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மிகத் துல்லியமான கணிப்பீட்டு அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தைப் புறந்தள்ள எந்தவொரு நியாயாதிக்கமும் இல்லை. அது செந்தமிழாக வளர்ந்துள்ள என்றும் உள்ள தமிழாகவே இருப்புக்கொண்டுள்ளது.

பாணினிக்கு முன்னரே தொல்காப்பியர் தமிழ் இலக்கணத்தைப் படைத்துள்ளார். அவருக்கு முன்னர் பல நூல்கள் இருந்துள்ளன அவற்றைப் படைத்த இலக்கண விற்பன்னர்கள் இருந்துள்ளனர் என்பதனை தொல்காப்பியர் ‘என்மனார் புலவர்’, ‘மேலோர்’ போன்ற வற்றை 300க்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிட்டிருப்பது கருத்திற்கொள்ளத்தக்கது. பிராகிரத மொழியின் திருந்திய வடிவமே சமஸ்கிருதம் என ஆய்வாளர்கள் கூறுவர். பிராகிரதத்தைப் ‘பாகதம்’ எனவும் இவற்றின் அடிப்படையில் பிராகிருத்தையும் தொல்காப்பியத்தையும் ஒப்புநோக்கி ஆராய்கிறது இக்கட்டுரை.

முன்னுரை

தமிழும் சமஸ்கிருதமும் தொன்மை மிக்க செம்மொழிகள் ஆகும். தமிழுக்கு இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர். பிராகிரதத்தற்கு இலக்கணம் வகுத்தவர் வரருசி. சமஸ்கிருதத்திற்கு இலக்கணம் வகுத்தவர் பாணினி. தொல்காப்பியரின் பெயரால் 'தொல்காப்பியம்' என வழங்குவது போன்று பாணினியின் பெயரால் 'பாணினீயம்' என சமஸ்கிருத இலக்கணம் வழங்கப்படுகின்றது. தமிழ் மொழிக்கான இலக்கணத்தின் முதன்நூல் தொல்காப்பியம் எனப்படுவதுபோன்று பாணீனியமும் சமஸ்கிருதத்தின் முதல் இலக்கணமாகக் கருதப்படுகின்றது. பாணினி எழுதிய இலக்கணமான பாணினீயம் என அழைக்கப்படுவது "அஷ்டாத்தியாயி" என்பதாகும். இது 3959 சூத்திரங்களாலானது. எட்டு அத்தியாயங்களைக் கொண்டதாகவும் ஒவ்வொன்றும் நான்கு பாதங்களைக் கொண்டவையாகவும் உள்ளது. சமகிருத மொழியே உலகின் முதன் மொழி (20000-12000) என நிறுவ முனைபவர்கள் அதனை வேதகாலத்திற்கும் முந்தியது என்கின்றார்கள். ஆனால் பிராகிருத எழுத்து வடிவமே ஆதியில் தோற்றியது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இக்கூற்றுக்கு மாறாக திராவிட மொழிகள் பற்றி அறிந்திராதவர்கள் சமஸ்கிருதத்தை மட்டும் இந்தியாவின் ஆதி மொழி என முடிவு கட்டிவிட்டு அதனைப் பற்றிக் குறிப்பிடுவது இன்று மிகுந்த கண்டனத்திற்கு உள்ளாகி வருகின்றது.

தமிழ் மொழி உலகில் உள்ள மொழிகளுள் நெடுங்கால பாரம்பரியத்தையும் எழுத்து வடிவத்தையும் கொண்டுள்ளது. இந்திய உபகண்டத்தில் தோன்றிய மொழிகளுள் பழமையான மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது தமிழ் மொழி. தமிழ் மொழி 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருதுவதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. வளமாக வளர்ச்சியடைந்த மொழி எனவே அதற்கு இலக்கணம் காணப்பட்டுள்ளது. இற்றைக்கு 2700 ஆண்டுகளுக்கு முன்னரே செம்மை மிக்க இலக்கணத்தைக் கொண்டுள்ளது. எந்த மொழிக்கும் இல்லாத நீண்டகால பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இனத்தின் பண்பாட்டு விழுமியத்தோடு மொழி இரண்டறக் கலந்துள்ளது. இனத்தின் அடையாளமாகப் பேணப்படுவது மொழியேயாகும். ஒர் இனம் என்பது அவ்வினம் பேசும் மொழியை வைத்தே அடையாளம் காணப்படுகின்றது. தமிழில் இன்று கிடைக்கும் மிகத் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியமாகும்.

தொல்காப்பியம் எழுத்துமுறை, சொற்பொருள், உரைநடை, ஒலியியல், உருவவியல் மற்றும் இலக்கியப் படைப்புகளின் பொருள் ஆகியவற்றுடன் தொடர்புடையது. தொல்காப்பியம் தமிழ்ச் சொற்களை செந்தமிழ், கொடுந்தமிழ் என வகைப்படுத்துகிறது. செந்தமிழ் அறிவார்ந்த நடைமுறைகளில் முற்றிலும் பயன்படுத்தப்படும் செம்மொழித் தமிழைக் குறிக்கிறது. கொடுந்தமிழ் வரலாற்றுத் தமிழகத்தின் பல மாகாணங்களில் உள்ள மக்களால் உச்சரிக்கப்படும் பேச்சுத் தமிழைக் குறிக்கிறது.

தொல்காப்பியம் என்பது தமிழ் மொழியின் இலக்கணம் மற்றும் தமிழ் எழுத்து மற்றும் மொழியியல் ஆகியவற்றின் தொடக்கப் புள்ளியாகும். இது நூற்பா அல்லது சுருக்கமான சூத்திர எழுத்துக்களின் கட்டமைப்பில் இயற்றப்பட்டுள்ளது. மற்றும் மூன்று பகுதிகளை உள்ளடக்கியது - எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மற்றும் பொருள் அதிகாரம். இந்தத் தொகுதிகள் அனைத்தும் மேலும் ஒவ்வொன்றும் ஒன்பது அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மிகத் துல்லியமான கணிப்பீட்டு அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தைப் புறந்தள்ள எந்தவொரு நியாயாதிக்கமும் இல்லை. அது செந்தமிழாக வளர்ந்துள்ள என்றும் உள்ள தமிழாகவே இருப்புக்கொண்டுள்ளது.

பாணினிக்கு முன்னரே தொல்காப்பியர் தமிழ் இலக்கணத்தைப் படைத்துள்ளார். அவருக்கு முன்னர் பல நூல்கள் இருந்துள்ளன அவற்றைப் படைத்த இலக்கண விற்பன்னர்கள் இருந்துள்ளனர் என்பதனை தொல்காப்பியர் 'என்மனார் புலவர்', 'மேலோர்' போன்ற வற்றை 300க்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிட்டிருப்பது கருத்திற்கொள்ளத்தக்கது. பிராகிரத மொழியின் திருந்திய வடிவமே சமஸ்கிருதம் என ஆய்வாளர்கள் கூறுவர். பிராகிரதத்தைப் 'பாகதம்' எனவும் இவற்றின் அடிப்படையில் பிராகிருத்தையும் தொல்காப்பியத்தையும் ஒப்புநோக்கி ஆராய்கிறது இக்கட்டுரை.

இந்திய உபகண்டத்தில் உள்ள மொழிவழிக் குடும்பங்கள்

இந்திய உபகண்டத்தில் உள்ள மொழிவழிக்குடும்பங்கள் பற்றிஅறிந்துகொள்வதன் மூலம் மொழியின் ஆரம்பப் புள்ளியாக எழுத்துமுறைகளின் தோற்றமும் அதற்கு வழிசமைத்த மொழிகள் பற்றிய அடிப்படையில் இந்திய மக்கள் பேசும்மொழிகளை நான்கு மொழிக் குடும்பங்களாக ஆய்வாளர்கள் வகுத்துள்ளனர்:

1. திராவிட மொழிக் குடும்பம்
2. இந்தோ-ஆரியமொழிக் குடும்பம்
3. முண்டா மொழிக் குடும்பம்,
4. திபெத்தோ- சீன மொழிக் குடும்பம் என்பனவாகும்.

இந்த மொழிக் குடும்பங்கள் ஆரம்பத்தில் பேசிய மொழிகளும் அவற்றின் திரிபுகளும் எழுத்துருவாக்கமும் பற்றி ஆய்வுகள் குறப்பிடுவது என்ன என்பது பற்றி அறிந்துகொள்ளவது முக்கியமானதாகும். அருகருகே பேசப்படும் மொழிகளின் தாக்கம் ஒரு மொழியில் இருந்து இன்னொரு மொழியில் ஏற்படுத்துவது இயல்பு. இந்திய உப கண்டத்தில் 'ஒருமொழிப்பரப்பு' என்ற கருதுகோள் நீண்டகாலமாக நிலைத்துள்ளது. எனவே இந்த நான்கு மொழிக் குடும்பத்தினையும் நோக்கும்போது ஆரம்பத்தில் இவை பிராகிருத மொழிக் குடும்பமாகவே இருந்து கிளைத்து வந்துள்ளன என்ற கருத்து மொழியியலாளர்களிடையே காணப்படுகின்றது. சமஸ்கிருதம் என்னும் பதம் முதன் முதலாக ரிக்வேதத்தில் தான் காணமுடிகின்றது. அதற்கு முன்னர் 'சமகிருதம்' என்னும் பதம் பயன்பாட்டில் இருந்தமைக்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. மக்களால் பேசப்பட்டுவந்த கொச்சை மொழி (திருந்தாத பேச்சுவழக்கு) யினைப் பிராகிருதம் எனறும் உயர்மட்டத்தினரால் பேசப்பட்டுவந்த மொழியைச் சமஸ்கிருதம் என்றும் கருத்தும் கருத்து முன்வைக்கப்படுகின்றது. தமிழ் மொழி இவற்றிற்கு அப்பாற்பட்டதாக இருப்பதால் அதனைத் தனிமொழிக் குடும்பமாகவே பார்க்கமுடிகின்றது. பிராகிருதத்திலிருந்தே சமசஸ்கிருத மொழி பிறந்ததாகச் சில அறிஞர்கள் நிறுவியுள்ளனர். ராசாராம்சாஸ்திரி எனும் சமக்கிருத அறிஞரின் கூற்றின் படி, "மகாராஸ்ட்டிர மொழி சமஸ்கிருதத்திலும் பழையதும் மிகவும் துடிப்பானதுமான மொழியாகும் [105] எனக்குறிப்பிட்டுள்ளமை ஈண்டு கருத்திற் கொள்ளத்தக்கது.

சமஸ்கிருதம் என்ற சொல் 'செம்மைப்படுத்தப்பட்ட' அல்லது 'பண்படுத்தப்பட்ட' மொழி எனப் பொருள் கொள்ளும். பிராக்கிருதம் என்பது எந்த விதமான தலையீடுமின்றி

---

[105] ராஜாராம் சாஸ்திரிகள் "Submission for Classical Status Of Marathi Language" (PDF). November 2013. p. 81. Archived from the original (PDF) on 11 April 2016. பார்க்கப்பட்ட நாள் 25 June 2017.

இயற்கையாக வளர்ந்த இயன்மொழி எனப் பொருள்படும். எனவே சமஸ்கிருதம் என்ற சொல் சில இலக்கண விதிகளால் செம்மைப்படுத்தப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட, சரியான, செம்மையான மொழி என்று பொருள்படும். இது பற்றி தோமஸ் பரோ என்பார் "*பழைய இந்தோ-ஆரியத்தின் பழைமையான வடிவம் இறுதியில் 'சம்ஸ்கார்த்தா' என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டது, அதாவது பளபளப்பான, திருத்தியமைக்கப்பட்ட, சரியான (இலக்கண விதிகளின்படி) பிரக்ருதத்திற்கு முரணானது, இது படிக்காத மக்களின் பேச்சுவழக்கு. அதே இந்தோ-ஆரிய தோற்றம், ஆனால் நிலையான மாற்றங்கள் மற்றும் மதிப்பீட்டின் செயல்முறைக்கு உட்பட்டது*"[106] எனக் கூறுகின்றார்.

பிராகிருதம்

"சங்கதம் இந்தோ ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது எனவும் அது ஈரானிய - இந்தோ மொழியின் கலப்பால் தோன்றியது எனவும் மத்திய ஆசியாவில் இருந்து இந்தியாவிற்குள் வந்த ஆரியக் குழுவினரால் கடத்தப்பட்ட மொழி என்கின்றனர் ஆய்வாளர்கள். நாவலந்தேய இந்தியாவின் வடபுலத்தில், பிரம்மணர்கள் வரவுக்குப் பிறகு அவர்களால் பேச்சு வழக்காக மட்டும் கொண்டுவரப்பட்ட பாரசீக மொழியும் வடபுல நாவலந்தேய மக்களால் பேசப்பட்டு வந்த கொடுந்தமிழும் இணைந்து உருவான மொழியும் வடநாவலந்தேய மக்களிடம் பெருவழக்காக வளர்ந்த மொழியே பிராகிருதம் என்பது அறிஞர்களின் கருத்தாகும். பிராகிருதம் என்றால் பேரங்கீகாரம் என்று பொருள். அதில் பிரா என்பது தமிழில் பெரு என்று வழங்கப்படுகிற சொல்லின் சமஸ்கிருத திரிபு ஆகும்.



பிராகிருதம் என்கிற அந்தப் பெயர் அந்த மொழிக்கு அமைந்தது சமஸ்கிருத கட்டமைப்பிற்கு

[106]Prof. Thomas Burrow 'Dravidian loanwords in Sanskri' 1968 55:1 1944–76 Christ's College, Cambridge, and the School of Oriental Studies, LondonBurro, Dravidian loanwords in Sanskri 55:1 1968

பின்னரே ஆகும். அதற்கு முன்னர் அந்த மொழிக்கு பெயர் வைக்கவேண்டிய கட்டாயம் எழவில்லை”[107]. - எனக் குமரிநாடன் குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கப்பாலது.

பிராமி என்பது வெறும் எழுத்துக்களை மட்டுமே குறிக்கும். கி.மு. 238ல் அசோகர் எழுதி வைத்துவிட்டுப் போன எழுத்துக்களுக்கு பிற்காலங்களில் பிராமி என்று பெயரிடப்பட்டது. தமிழ் கல்வெட்டுக்கள் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்படும் வரை அசோகர் கல்வெட்டுகளில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துக்கள்தான் இந்தியாவில் பழமையான எழுத்துக்கள் என்று நம்பப்பட்டது. ஆனால் ஆதிச்சநல்லூர், கொடுமணல், கீழடி, பொருந்தல் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் கல்வெட்டுகள் அசோகர் காலத்துக்கும் முந்தியவை என்று நிரூபிக்கப்பட்டன. இதனால் இன்று உலக மொழிகளில் மிகவும் தொன்மையான மொழி என்னும் நிலைக்குத் தமிழ் முதனிலைப் பெற்றுள்ளது மட்டுமன்றி இன்று நடைமுறையில் உள்ள செம்மொழிகளாகத் தமிழும் சீனமும் காணப்படுகின்றன. தமிழ் மொழியின் ஆரம்ப எழுத்துவடிவமே ‘தமிழி’ என அழைக்கப்பட்டுள்ளது. உலகில் தோன்றய மொழிகளில் திருந்திய எழுத்துவடிவம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் திருந்தாத ஆரம்ப வடிவமாக பிராமி எழுத்துக்கள் கொள்ளப்படுகின்றன.

பிராகிருதத்தில் பல்வேறு கிளைமொழிகளும், உட்பிரிவுகளும் உள்ளன. பேச்சு மொழியில் வட்டார வழக்குக்கள் இருப்பது போன்று பிராகிருதத்திலும் பல உட்பிரிவுகள் உள்ளன. இந்திய ஆரிய மொழிகளான பாளி, ஹிந்தி, சௌராஷ்டிரம் (குஜராத்) கௌடம் (வங்காளி), மராட்டி, நேபாளி, பைசாகம், மாகதி, ஆபீரம் என்னும் இடையர்களால் பேசப்பட்ட மொழி போன்றன பிரகாகிருதத்தில் இருந்து கிளைத்துத் தோன்றிய கிளை மொழிகளாகக் காணப்படுகின்றன. பாளி தவிர்ந்த ஏனைய மொழிகள் கி.பி. 1100ம் ஆண்டிற்குப் பின்னரே தோற்றம்பெற்றன எனக் கருதப்படுகின்றது. மத்திய கால இந்திய மொழியாக பிராகிருத்தைக் குறிப்பிடுகின்றார்கள். மத்திய காலத்தை ஆரம்ப-மத்தியகால இந்திய மொழிகள் எனவும் மத்திய-மத்திய கால இந்திய மொழிகள் எனவும் புதிய/நவீன-மத்திய கால இந்திய மொழிகள் எனவும் வகைப்படுத்துகின்றார்கள் சில ஆய்வாளர்கள். மத்திய கால இந்திய மொழிகளுள் பிராகிரதம் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது. இந்தியாவில் காணப்படும் பல்வேறு மொழிகளின் அடிப்படை பிராகிருதமே எனப்படுகின்றது. மத்திய இந்தோ- ஆரிய மொழிகளில் இலக்கியம் மற்றும் பிராகிருத காதைகள் இடம்பெறுகின்றன. இதிகாசங்களின் மொழியாக பிராகிருதம் உள்ளது. ராமாயணம், மகாபாரதம் என்பன பிராகிரதத்திலும், காந்தாரி மற்றும் சிங்களத்திலும் காணப்படுகின்றன.

தமிழி எழுத்துக்கள் தோன்றிய காலம் பற்றி பல கருத்துக்கள் உள்ளன. ஆதிச்சநல்லூரில் கிடைத்த எழுத்துக்கள் கி.மு. 2000 என கணிக்கப்பட்டுள்ளது.

3**குமரிநாடன்: குமரிநாடன் கட்டுரைகள்.** Kindle Store Publication 2022.

சில ஆரம்ப கால எழுத்துமுறைகள் பல பிராமி எழுத்துமுறைகளுள் தமிழ் பிராமி பட்டிப்புரலு எழுத்து முறைக்கு ஒத்ததாக உள்ளது. தமிழ்ப் பிராமி வழமையான பிராமியிலிருந்து வேறுபடுத்திக் கண்டறியப்பட்டுள்ளது. இதன் எழுத்துமுறை தமிழர்களின் ஆரம்ப வரலாற்றுடனும் அவர்களின் சங்க இலக்கியம் போன்ற இலக்கிய உருவாக்கத்திலும் பயன்பட்டது. தமிழ்ப் பிராமி தற்போதைய தமிழ் எழுத்து முறை, மலையாள எழுத்துமுறை என்பனவற்றின் முன்னைய முறையான வட்டெழுத்தின் முன்னோடியாக இருந்திருக்கலாம், என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இவற்றின் அடிப்படையில் தொல்காப்பியம் எழுதப்பட்ட எழுத்துரு முறை தமிழி எனப்படும் தமிழ்பிராமியில் எழுதப்பட்டிருத்தல்வேண்டும். தொலகாப்பியர் காலம் கி.மு. 711 எனக்கொள்ளப்படுவதால் அது அசோகரதுபிராமிஎழுத்துக்களுக்கு முந்தியது என்னும்



பட்டியல் 2

முடிவுக்கு வரமுடிகின்றது. தமிழ் மொயின் இலக்கண இலக்கிய வரலாற்றை ஆயும் போது தமிழ் மொழி தொல்காப்பியர் இலக்கணம் காண்பதற்கு முன்னரே பல அறிஞர்களின் நூல்கள் எழுந்துள்ளன என்பதை தொல்காப்பியம் 'என்மனார் புலவர்' 'என்ப', 'நூலோர்' போன்ற பதங்கள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழ் எழுத்து வரிவடிவத்தின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் நோக்குவது அதன் தொன்மையை

அறிந்துகொள்ள உதவும். தமிழ் பிராமியில் தமிழ் [illegible]பது என எழுதப்பட்டு வந்துள்ளது என்பதனைக் கண்டறிந்துள்ளனர். தமிழின் தொன்மை எழுத்துக்கள் தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டுள்ளன என்பவற்றை ஆதாராமாகக் காட்டமுடிகின்றது. தமிழ் எழுத்து வரிவடிவங்களின் இன்றைய நிலைக்கு எப்படி மாற்றம் பெற்று வந்துள்ளது என்பதனைக் மேலே உள்ள பட்டியல் 2 காட்டுகின்றது.

இந்த எழுத்துக்களின் வளர்ச்சி முறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டமையை தொல்காப்பியமும் குறிப்படுகின்றது. பொ.ஊ.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சமவயங்க சுத்தா, பன்னவயன சுத்தா ஆகிய சமண நூல்கள் 18 வகை எழுத்துகளைக் குறிப்பிடுகின்றன.

அவற்றில் தமிழியும் ஒன்று. கமில் சுவெலபில் *திராவிடலிபி, தமிழி* என்பன தமிழ் எழுத்துமுறைக்கான ஒரே பொருள் எனக் குறிப்பிட்டுள்ளார்.[41] எழுத்துமுறைத் தொடர்பு ஆரம்ப தமிழ் இலக்கியத்தில் உள்ளது. தொல்காப்பிய செய்யுள் எகர ஒகரத்து இயற்கையும் அற்றே.16 என்னும் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாவும்

புள்ளி இல்லா எல்லா மெய்யும்
உருவு உருவு ஆகி அகரமோடு உயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும்
அ ஈர் இயல உயிர்த்தல் ஆறே. (17)

என்னும் நூற்பாவும் மெய்யொலிக்கு புள்ளி சேர்க்கப்பட்டது பற்றிக் குறிப்பிடுகின்றது. தொல்காப்பிய ஆசிரியர் அவருக்குத் தெரிந்த எழுத்துமுறை, படமுறை பற்றித் தெரிந்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளார். இலக்கிய ஆய்வு அடிப்படையில், தமிழர் குறைந்தது பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து எழுத்துமுறை பற்றி அறிந்திருந்தனர் என கமில் சுவெலபில் நம்புகின்றார்.



பட்டியல்-3

“கி.மு. 3ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சமவயங்க சூத்ரா (Samavayanga Sutra), பண்ணவன சூத்ரா (Pannavana Sutra) போன்ற சமண மதம் தொடர்பான நூல்களில், அக்காலத்தில் வழக்கிலிருந்த எழுத்துக்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அவற்றில், தமிழி என்று எழுத்துமுறை வழக்கிலிருந்ததாக அந்நூல்கள் குறிப்பிடுகின்றன. அந்த நூல் தமிழி என்றுதான் குறிப்பிடுகிறது, பிராமி என்ற சொல்லாடல் அந்நூல்களில் காணப்படவில்லை. சமற்கிருதக் கல்வெட்டுகளுள் மிகப் பழமையானதாக அறியப்பட்டது கத்தியவாரில் சுனாகரில் ஒரு பாறை மேலுள்ளது. அஃது உருத்திர தாமன் கல்வெட்டென்னும் பெயர் கொண்டது. அது பொ. ஆ .பி. 2ஆம் நூற்றாண்டில் எழுதுபட்டதாகும். அது தேவநாகரியில் எழுதப்படவில்லை; பழைய கல்வெட்டெழுத்துகளில் உள்ளது. எனவே தேவநாகரி தமிழி எழுத்து முறைக்குப்பிந்தியது என்பதை உறுதியாகக் கூறமுடிகின்றது.

ஏறத்தாழக் கி.பி. 400ஆம் ஆண்டினதான பவர் கையெழுத்துப்படி தேவநாகரி நோக்கிய பெரு முன்னேற்றத்தைக் காட்ட, கி.பி. சுமார் 750ஆம் ஆண்டினதான தந்திதுருக்கன் கல்வெட்டு இற்றை வழக்கிலுள்ள நாகரியை மிகவும் ஒத்த ஒரு நிறைவான குறித்தொகுதியை காட்டுவதாயுள்ளது. எனினும், உண்மையான தற்கால நாகரியில் உள்ள முதற் கையெழுத்துப்படி, கி.பி. 11ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதன்று என்பது கவனிக்கத்தக்கது."[108] என Monier_Monier-Williams என்னும் ஆய்வறியர் குறிப்பிடுகின்றார். "வரருசியின் இலக்கணம் கி.பி நான்காம் நூற்றாண்டில் தோன்றியதாகவும் அந்நூலினுள் தென்னிந்தியாவைப் பற்றிய குறிப்பு இருப்பதாகவும் தெ.பொ.மீ. குறிப்பிடுவார்[109]" என தொல்காப்பியமும் வரருசி இலக்கணமும், ஓர் அறிமுகம் என்னும் நூலில் ஆ.கார்த்திகேயன் குறிப்பிட்டுள்ளார்.

மதமும் மொழியும் பற்றிப் பிராகிருதமும் தொல்காப்பியமும்

ஆரம்ப மத்தியகால இந்தோ-ஆரிய மொழியை பௌத்த மற்றும் ஜைன மதங்களுடன் தொடர்பு படுத்துகின்றனர். மகாவீரரும், புத்தரும் பேசிய மொழியாக பாளிமொழியைக் குறிப்பிட்டு அந்த மொழியிலேயே எழுத்தப்பட்டதாகவும் கூறுகின்றனர். இதற்கு ஆதாரம் மௌரியப் பேரரசன் அசோகன் காலக் கல்வெட்டுக்களையும், தக்கணத்தில் காணப்படும் சாத்வாகன மன்னர்களின் கல்வெட்டுக்களிலிருந்தும் காணமுடிகின்றது.

சமஸ்கிருதம் ஆண்களுக்கான பாடை எனவும் சாதாரணர்களோ பெண்களோ பேசக்கூடாதாத தெய்வீக மொழி என்ற கருத்தும் பின்பற்றப்பட்டதால் பிராகிருதம் சாதாரண மக்களின் பேச்சுமொழியாக இருந்துள்ளது. *"'பிராகிருதம்" என்பதற்கு 'இயற்கை' Natural அல்லது Original என்ற கருத்தையும் சமஸ்கிருதம் "constructed" or "refined" என்ற கருத்தையும் தருகின்றது"* [110] என ஏ.வூல்நர் என்பார் குறிப்பிடுகின்றார். இதன்படி ப்ராகிருதத்திற்கு "இயற்கையானது", என்ற கருத்தும் அதற்கு மாறாக சம்ஸ்கிருதம், "கட்டமைக்கப்பட்ட" அல்லது "திருத்தியமைக்கப்பட்ட" மொழி என்னும் கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. பிராகிருதம் பிராந்திய மக்களின் பேச்சுவழக்கு மொழி. சமஸ்கிருதம் சமயத் தேவைகளுக்காக இந்திய அரசுகளின் ஆதரவைப் பெற்றமொழியாகும். பிராகிருதங்கள் துணைக்கண்டத்தின் இந்திய ராஜ்ஜியங்கள் முழுவதும் மக்கள், உத்தியோகபூர்வ மற்றும் மத நோக்கங்களுக்காக பிராந்தியங்களில் பேசப்படும் (முறைசாரா) மொழிகளாக கருதப்பட்டன. பிராகிருதங்களின் இலக்கியப் பதிவுகளும் சமகாலத்தில் (முக்கியமாக ஷ்ரமண மரபுகளால் உயர் சமூக வகுப்புகளுடன் பயன்படுத்தப்பட்டன. சமகிருதம் கடவுள்களின் மொழி மற்றும் அபப்பிரம்ஷா ஆண்களின் மொழி. இவற்றின் கலவையே பிராகிருதம்"[111] 1976ல் இலக்கண அறிஞர் மிர்சா கான் எழுதிய துஃப்ஹத் உல்-ஹிந்த் (இந்தியாவின் பரிசு) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

---

[108] மானியர் உல்லியம்சு: சமற்கிருத அகர முதலியின் முன்னுரை 28ஆம் பக்க

[109] ஆ.கார்த்திகேயன்: தொல்காப்பியமும்வரருசி இலக்கணமும் -ஓர் அறிமுகம், உங்கள் நூலகம் ஜீலை 2023

[110] www.amazon.com › Introduction-Prakrit-Alfred-1878Introduction to Prakrit: Woolner, Alfred C 1878-1936:

[111]மிர்சா கான், 'துஃப்ஹத் உல்-ஹிந்த்' (இந்தியாவின் பரிசு), 1976



“பிராமி எழுத்தானது திராவிட மொழிகளுக்காக உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவற்றுள் பழைமையானதான தமிழுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது என்றும், பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும், நாளடைவில் இந்தியா முழுவதும் அதுவே வழக்கத்தில் நிலவியது” [112] என்றும் தி.நா.சுப்பிரமணியன் கருத்துத் தெரிவித்துள்ளார். (தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், தொகுதி - 3, பகுதி-2.)



By எஸ். பி. கிருஷ்ணமூர்த்தி - சொந்த முயற்சி,

கிமு இரண்டாம் நூற்றாண்டின் தமிழ் பிராமி எழுத்தில் மாங்குளம் கல்வெட்டுகள்
மாங்குளம், மதுரை மாவட்டம், தமிழ்நாடு

https://commons.wikimedia.org/w/index.php?curid=46194395

பட்டியல் -4

எவ்வாறாயினும், பழங்காலத்தில் இந்தியா முழுவதிலும் உள்ள மொழிகள் பிராமி எழுத்தைப் பயன்படுத்தின என்பதையும் வடநாட்டில் அது பிராமி எனவும் தமிழ்நாட்டில் தமிழ் எனவும் வழங்கியது என்பதையும் நடன. காசிநாதன் தெளிவுறுத்தியுள்ளார். தமிழைப் பிராகிருத மொழியில் தாமிலி என வழங்கியுள்ளனர்.

தமிழ் மொழி மதத்திற்கு முன்னுரிமை கொடுத்தமைக்கான எந்த ஆதாரங்களையும் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை. சங்ககாலத்திற்குப் பிற்பட்ட சங்கமருவிய காலத்தில் தென்கத்தில் வேரூன்றிய சைவம் தமிழோடு கலந்து வளர்ந்துள்ளது. ஆனால் தேவ பாசை

[112] தி.நா.சுப்பிரமணியன். தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், தொகுதி - 3, பகுதி-2.

என்ற உயர் அந்தஸ்தைத் தமிழ் பெறாததற்கு இந்துமதத்தில் வடமொழிச் செல்வாக்கு ஒரு காரணம் எனக்கொள்ளமுடிகின்றது. தமிழ் மொழியில் சமஸ்கிருதப் பாவனையில் காணப்படும் வேறுபாடுகளைத் தமிழ் மொழி ஏற்றுக்கொள்ளாமைக்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உயரிய கோட்பாடும், திருக்குறள்போன்ற அறநூல்களில் சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமையும் காரணிகளாகலாம்.

பிராகிருதமும் வரருசியும்

தொல்காபபியத்திற்கு உரை காணப்படுவது போலவே சமஸ்கிருதத்திற்கும் உரை காணப்படுகின்றது. அவ்விதமே பாணினீயம் எனப்படும் அஷ்டத்தாயிக்கு உரை எழுதிய *வரருசி கி.மு. 150 வரையில் வாழ்ந்திருக்கலாம் எனவும், அவர் பாணினியின் காலத்தவர் என்று கருதுவாரும் உளர். சிலர் கி.பி. 4ம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என வரையறுக்கின்றனர். வரருஜி சிவ மைந்தன் கார்த்திகேயனிடமிருந்து இலக்கணத்தைக் கற்றுக்கொண்டதாக கருட புராணம் குறிப்பிடுகின்றது. இதனாலேயே வரருஜின் பெயரோடு கார்த்தியாயானர் என்னும் பெயரும் ஒட்டிக்கொண்டது எனக் கருதுவாரும் உளர். 'வரருசி கார்த்தியாயானர்' என்பதே அவரது பெயர் என்பாரும் உளர்.*

வரருசி எழுதிய இலக்கணம் அல்லது விளக்க உரைகள் பேசுபொருளாகக் காணப்படுகின்றன. பாணினியின் இலக்கண நூலான அஷ்டாத்தியாயியோடும் அவரால் எழுதப்பட்ட பிராகிருதபிரகாஷம் என்பவற்றால் நன்கு அறியப்படும் இவரது படைப்புக்களை தொல்காப்பியத்தோடு ஒப்பிடும்போது காலத்தால் பிந்தியயுது என்பது புலப்படும்.

பிராகிருத பிரகாசையில் ஒன்பது பரிசேதங்கள் உள்ளன. அவை:

1) அஜ விதிகள், 2) அயுக்த விதிகள், 3) யுக்த விதிகள், 4) சங்கீர்ண விதிகள், 5) லிங்க விபக்தி விதிகள், 6) சர்வநாமம், 7) திங் விதிகள், 8) தாத்வா தேசம், 9) நிபாத சஞ்ஞா விதிகள்

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பெரும் பிரிவுகளில் இலக்கணத்தை ஆக்கியுள்ளது. ஆனால் பிராகிருதமோ அன்றி பாணினியின் 'அஷ்டாத்தியாயினி' என்பன சொல், எழுத்து இரண்டிற்கு மட்டுமே இலக்கணம் படைத்துள்ளது. மக்கள் வாழ்வியல் பற்றியோ சமூகவியல் பற்றியோ எந்தக் குறிப்பையும் காணமுடியவில்லை. தொல்காப்பியம் ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளதாக மொத்தம் 27 இயல்களைக் கொண்டுள்ளது. வரருசியின் பிராகிருத இலக்கணத்தில் 12 பரிசேதங்கள் உள்ளன. இவற்றுள் முதல் ஒன்பது பரிசேதங்கள் வரருசியால் எழுதப்பட்டது என்றும் மீதமுள்ள 4 பரிசேதங்கள் உரையாசிரியர்களால் சேர்க்கப்பட்டன என்றும் அவை பிற்சேர்க்கை எனவும் கருதப்படுகின்றது.

தொல்காப்பியத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ள மூன்று அதிகாரங்களிலும் ஒவ்வொன்றும் 9 பிரிவுகளைக் கொண்டவையாக யாத்துள்ளமையைப் பின்வரும் அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

தொல்காப்பியம் நூலமைப்பு

முதல் பாகம்	இரண்டாம் பாகம்	மூன்றாம்பாகம்
எழுத்ததிகாரம்	சொல்லதிகாரம்	பொருளதிகாரம்

தலைப்பு	சூத்திரங்கள்/ நூற்பாக்கள்	தலைப்பு	சூத்திரங்கள்/ நூற்பாக்கள்	தலைப்பு	சூத்திரங்கள்/ நூற்பாக்கள்
1.நூல் மரபு	33	வேற்றுமையியல்	22	அகத்திணையியல்	58
2.மொழி மரபு	49	வேற்றுமைமயங்கியல்	35	புறத்திணையியல்	30
3.பிறப்பியல்	21	விளிமரபு	37	களவியல்	51
4.புணரியல்	40	பெயரியல்	43	கற்பியல்	53
5.தொகை மரபு	30	வினையியல்	51	பொருளியல்	52
6.உருபியல்	30	இடையியல்	48	மெய்ப்பாட்டியல்	27
7.உயிர்மயங்கியல்	93	உரியியல்	98	உவமயியல்	38
8.புள்ளிமயங்கியல்	110	எச்சவியல்	67	செய்யுளியல்	235
9.குற்றியலுகரப் புணரியல்	77	வேற்றுமையியல்	22	மரபியல்	112

பட்டியல்- 5

தொல்காப்பியப் பனுவல் வைப்புமுறை ஒழுங்கமைவுடன் நிரைப்படுத்தப்பட்டு செவ்வையாக அமைக்கப்பட்டள்ளது என்பது வெளிப்படை. வேறு எந்தமொழியிலும் இல்லாத அதிகார வைப்பாக பொருளதிகாரம் உள்ளது. இது தமிழ்மொழியின் சிறப்பையும் சமுதாயத்தோடு ஒட்டியதாக மொழிவழக்குக் காணப்பட்டமையும் அதனையொட்டியதாக இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளதும் அதன் சிறப்பு ஆகும்.

தொல்காப்பிய இலக்கணத்தில் காணப்படும் செய்யுள் இலக்கணம் போன்று பாடுபொருள் குறித்த பாட்டு, செய்யுள் அன்றி கதைகளை இயற்றுவது பற்றியோ கதைகளின் உறுப்புக்கள் எப்படி அமையவேண்டும் என்பதுபற்றியோ நூலாக்கம் பற்றியோ எந்த வித விளக்கங்களும் அஷ்டாத்தாயியிலோ அன்றி பிராகிருத பிரகாசிகையிலோ தரப்படவில்லை என்பதே தொல்காப்பியத்திற்கும் இடையே உள்ள மிகப்பெரிய வேறுபாடாகக் கொள்ள முடிகின்றது.

“தொல்காப்பியத்தை ஒரு விளக்கமுறை இலக்கணம் (Descriptive Grammar) என்றால் வரருசியின் நூலை ஒரு வரலாற்று இலக்கணம் (Historical Grammar) என்று கூறலாம். மொழி-யியலார் இரண்டு விதமான இலக்கணங்களைப் பற்றிப் பேசுவர். ஒன்று விளக்கமுறை இலக்கணம் மற்றொன்று வரலாற்று இலக்கணம் என்பர்.

பேராசிரியர் அகத்தியலிங்கம் 2006 “எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டு வாழ்க்கைக்கும் பொருள் இலக்கணம் கூறுவதால் இதனை ஒருங்கிணைந்த இலக்கணம் என்று அழைப்பர். மேலும் உலக வழக்கு செய்யுள் வழக்கு என இரு வழக்குகளையும் ஒன்றிணைத்து விளக்குவதாலும் ஒருங்கிணைந்த இலக்கணம் என்று கொள்வர். எழுத்தும் சொல்லும் மொழி சார்ந்த விதிகளையும் பொருளதிகாரம் அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாடு, உவமை, செய்யுள் இயற்றும் விதிகள், மரபியல் ஆகியவற்றுக்கு இலக்கண விதிகளையும் தருகிறது”[113].

"தொல்காப்பியம், இலக்கியம் எவ்வாறு அமையவேண்டும் என்ற பொருளை முக்கியமாகக் கணக்கில் எடுத்துள்ளது என்று கூற இயலும்"[114]. என வ.அய்.சுப்ரமணியம், (2007, பக்:45) குறிப்பிடுகின்றார்.

வரருசியின் இலக்கணத்தை ஒருங்கிணைந்த இலக்கணம் என்று கூறமுடியாது. பொருளுக்கு இலக்கணம் சொல்லும் நோக்கில் விதிகளோ விளக்கங்களோ ஏதும் அமையவில்லை. தொல்காப்பியத்திலிருந்து வேறுபட்ட தன்மையை வரருசியின் பிராகிருத இலக்கணம் கொண்டுள்ளது.

தொல்காப்பியச் சொல் அதிகாரத்தில்

வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே 401
சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் 402

வட சொற்கள் தமிழ்ச் சொற்களோடு புணரும்விதி கூறப்பட்டுள்ளது. இதனை நச்சினார்கினியர் “வடசொல்லாகிய சொல் உரப்பியும் எடுத்தும் கனைத்தும் கூறும் வட எழுத்துக்களின் நீங்கி, இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தான் இயன்ற சொல்லாம்” இனிச் சிதைந்தன வரினும் எனப் பொதுப்படக் கூறியதனால் “ஆணை, வட்டம், நட்டம், கண்ணன்’ எனப் பாகதமாகச் சிதைந்தனவும் கொள்க’ [115] என்று பாகதமாகிய பிராகிருதத்தையும் குறிப்பிடுகின்றார்.

பிராகிருதமா, சமஸ்கிருதமா முந்திய மொழி என்னும் விவாதம் இன்றளவும் தொடர்கின்றது. “இயல்பான மூலமொழி சமஸ்கிருதம். அதினின்றும் உருவானது பிராககிருதம்”[116] என்று ஹேமசந்திர(17நூ.ஆ) என்னும் பிராகிருத இலக்கண நூலாசிரியர் கூறுகின்றார். இக்கருதை வாசுதேவர் தம் ‘கற்பூர மஞ்சரி” உரையாகிய ‘சஞ்வினியில் கூறுகின்றார் என்றும் “பிராகிரத சர்வஸ்தம்” என்னும் நூலில் மார்க்கண்டேயர்’ கூறுகின்றார்

---

[113] அகத்தியலிங்கம்,பேரா. 1998 ‘தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் ‘கருந்தரங்கக் கட்டுரைகள்’ உலகத் தமிழாரர்சி நிறுவனம்

[114] வ.ஐ.சுப்பிரமணியன் –‘தமிழ் இலக்கண நூலகள்’ மெய்யப்பன் பதிப்பகம் 2007, பக்:45

[115] தொல்காப்பிய உரைத்தொகை, நச்சினார்க்கினயம் – சி.வை.தாமோதரம்பிள்ளை, பதிப்பு 1892

[116] ஹேமசந்திர: ‘பாண்டியர் செப்பேடுகள் பத்து’ *Joshi, Dinkar (1 January 2005). Glimpses of Indian Culture. Star Publications*

‘இயல்பாகத்தோன்றிய இயன்மொழிக்கு 16 பண்புகள் இருக்கவேண்டும் என வரையறுத்துள்ளார். அவை தமிழில் இருப்பதாகக் காட்டுகின்றார் பாவாணர். அவரது கூற்று கீழ்க்கண்டவாறு அமைகின்றது.

“தொன்மை இயன்மை தூய்மை தாய்மை
முன்மை வியன்மை வன்மை மறைமை
எண்மை இளமை இனிமை தனிமை
ஒண்மை இறைமை அம்மை செம்மை
எனும்பதினாறும் இன்றமிழ் இயல்பென
பண்ணுவர் மேலவர் பாவாணர் தாமே”[117]

எனத் தேவநேயப் பாவாணனரது கூற்றாக தமிழின் சிறப்பின் உச்சத்தைத் தொடுவதோடு அது இயன்மொழி என்பதையும் உணர்த்துகின்றது இவ்வரிகள்.”[118] (பாவாணர்)

“பிராகிருதம் என்பது ஒரு மொழி அல்ல. வட இந்தியாவில் பல்வேறு வட்டாரங்களில் பற்பல ஆண்டுகளாக, வழக்கு மொழியாக இல்லங்களில் பேசப்பட்டு வந்த 30க்கும் மேற்பட்ட பேச்சு மொழிகளுக்கு வடமொழி இலக்கணத்தை கி.மு 4 வது ஆண்டுக்கும் -கி.பி 1 நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆவணப்படுத்திய அஷ்டாத்யாயி என்ற இலக்கண நூலில் "பிராக்ருதம்" அதாவது "இயற்கை" மொழி என்று பொதுப் பெயர் சூட்டப்பட்டது. இவற்றை அடையாளப் படுத்த அவை பேசப்பட்டு வந்த வட்டாரங்களின் அன்றைய பெயர்கள் அடிப்படையில் அபபிரம்ஸா அதாவது பாணினிக்கு முற்பட்ட வட இந்திய மொழிகளின் "ஸமஸ்கிருத" இலக்கணக் கட்டமைப்பு எடுத்துக்காட்டுகின்றது. அர்தமகதி அல்லது பாலி (கிழக்கு பிஹார்), எலு (இலங்கை), காந்தாரி (ஆப்கானிஸ்தான், பலுசிஸ்தான் வடமேல் மாகாணம்), காமரூபி (அஸ்ஸாம்), மகதி (மேற்கு பிஹார்), மஹாராஷ்ட்ரி, பைசாசி, சௌரசேனி (மத்திய பிரதேசம்) என்றெல்லாம் அவற்றிற்கு தனித்தனி பெயர்களையும் அந்த நூல் சூட்டியது”.[119] இதனை ஒத்த கருத்தினை ‘தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்’ என்ற நூலில் த. கோவேந்தன் கூறியுள்ளமையும் காணலாம். *“பிராகிருதம் மக்களின் பேச்சு மொழியாயிருந்த காரணமாக இதில் மிகப் பழைமையான காலத்தில் அசோகரின் கால்வெட்டு உபதேசங்கள் வரையப்பட்டன. இதன் பாலி என்ற பிரிவில் புத்தரின் உபதேசங்களும் பௌத்த இலக்கியமும் எழுதப்பட்டன. சௌரசேனி என்ற நடுநாட்டுப் பிராகிருதம் சமஸ்கிருத நாடகங்களில் கையாளப்பட்டது. சமஸ்கிருத நாடகங்களில் உயர் மக்கள் சமஸ்கிருதத்தையம், மாதரும் கீழ் மக்களும் பல்வகக்ப பிராகிருதங்களையும் பேசுவர். இவ்வழக்கை ஒட்டி பரத முனிவர் தம் நாட்டிய சாத்திரத்தில் நாட்டின் ஒவ்வொர பிராந்தியத்திலும் வழங்கும் பிராகிருதங்கள் எனப் பல மொழிகளின் பெயர்களைத் தந்திருக்கிறார்”*[120]. என்பது அவரது கருத்தாகக் காணப்படுகின்றது.

“இந்த வழக்கு மொழிகளில் சொல்லாடலிலும் சொற்பிரயோகத் திலுமுள்ள வேறுபாடுகள் மிகச் சொற்பமே. இவற்றை ஒழுங்கு படுத்தி, (சம்யக்+கிருதம்- well structured

---

[117] தேவநேயப் பாவாணர்: ‘பாவாணர் தமிழ்க்களஞ்சியம் 44 மொழிநூற் கட்டுரைகள்’

[118] ibid.

[119] ibid.

[120] கோவேந்தன், ‘தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்’ பக் 246

Or Constructed) பொதுத் தொடர்புக்காக உருவாக்கப் பட்டதே ஸம்ஸ்கிருதம்"[121]. என Hemacandra Acarya, Or Hemacandra Suri, Somachandra குறிப்பிடுகின்றார்.

முடிவுரை

"தொல்காப்பியம் இன்று கிடைக்கின்ற தமிழ் நூல்களுள் முதல்நூல், முதன்மையான நூல், எழுத்து, சொல், பொருள் எனும் முப்பொருள்களை மூன்று அதிகாரங்களால் 27 இயல்களில் கூறும் நூல் பொருள் இலக்கணம் உலகத்தோற்றம், உயிர்ப்பாகுபாடு, உயிர்களின் வாழ்க்கை, தமிழரின் இலக்கியவகை, இலக்கியக் கொள்கைகள், இலக்கியத் திறனாய்வு, இலக்கியக் கோட்பாடுகள், இக்கிய உத்திகள், போன்றவற்றைச் சிறப்பு நிலையிலும் கூறும் பகுதி. பொருள்இலக்கணம் போன்றுவிளக்கமாகத் தரும் இக்கணப் பகுதி எந்த இந்திய மொழிகளிலும் இருப்பதாகத் தெயவில்லை. உலக மொழிகளிலும் பொருள் இலக்கணம் தொல்காப்பியத்தில் உள்ளது போன்று இருப்பதாகத் தோன்றவில்லை" [122] என ச.வே.சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளமை இந்திய மொழியாகிய பிராகிருதத்திற்கும், தேவ மொழி எனப்படும் சமஸ்கிருத்திற்கும் பொருந்தும். ஒப்பு நோக்கும்போது வரருசியின் பிராகிருத இலக்கணத்தை தொல்காப்பியத்துடன் ஒப்பிட முடியாமைக்கு தொல்காப்பியம் ஓர் ஒருங்கிணைந்த இலக்கணமாகக் காணப்படுவதும் காரணமாகும்.

"தொல்காப்பியம் ஒரு மொழிக்கான இலக்கண நூலாக, மட்டுமன்றி, அது தமிழர் வாழ்வியலின் வெளிப்பாடு, தமிழர் போற்றி வளர்த்த அறிவியல் மரபின் காலப் பெட்டகம். வேறு எந்த மொழியில் இருந்தும் கடன் பெறாத தமிழ் அறிவுக் களஞ்சியம். அணுக் கோட்பாட்டையும், தருக்கவியலையும் உள்ளடக்கிய ஓர் அறிவியல் பள்ளி. அதுதான் அதன் சிறப்பு ஆகும். தமிழர் மெய்யியல்கள் வேதநெறிகளுக்கு எதிரானவை. இந்திய மெய்யியல் வரலாற்றில் தனிப் பெரும் இடம் பெற்றவர் பக்குடுக்கை நன்கணியார் ஆவார். சங்கப் புலவரான இவர் பாலி, பாகத மொழிகளில் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்துள்ளார் எனச் சமண இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. புத்தர், மகாவீரர் ஆகியோரின் சமகாலத்தவராகவும், அவர்களைவிட மூத்தவராகவும் இருந்துள்ளார். இந்தியா முழுவதும் அவருக்கு மாணவர்கள் இருந்தனர். நிலம், நீர், வளி, உயிர், இன்பம், துன்பம், தீ ஆகியவை குறித்து பக்குடுக்கையார் விளக்கி உள்ளார். மனத்தைத் தூய்மையாக்குவதிலும், அறிவு வேட்கையிலும்தான் அறிவைப் பெறும் வாயில் அமைந்துள்ளது. மனதை தூய்மையாக்காமல் அறிவு வேட்கையிருந்தாலும் அதனால் எந்தப் பயனும் இல்லை. நற்செயல்களைச் செய்வதின் மூலமே மனதைத் தூய்மைப்படுத்த முடியும். தமிழ் இலக்கியத்தின் வேர்கள் தொல்காப்பியத்தில் இருந்தே தொடங்குகின்றன. வேதங்களில் இருந்து இல்லை என்பதை உறுதியாகக் கூற முடியும். பக்குடுக்கையார் கூறும் அணுக் கோட்பாட்டில் இடம் பெறும் ஏழு பொருள்களில் முதல் நான்கும் அணுவியலை அடிப்படையாகக் கொண்ட 4 பூதங்களாகும், மீதி மூன்றும் மனித வாழ்வோடு தொடர்புடைய உயிர், இன்பம், துன்பம் முதலியனவாகும். உங்கள் அடையாளம் என்பது மனித நேயத்தை வெளிப்படுத்துவதாகும். தமிழ் என்ற சொல்லுக்கு மனிதநேயம்

---

[121] Hemacandra Acarya, Or Hemacandra Suri, Prakrit Grammar of Hemachandra, By Prof. P L Vaidya,1928

[122] முனைவர் ச.வே. சுப்பிரமணியன், 'தொல்காப்பியரன் தொன்மை, தொல் கோட்பாடுகளும் பிற்காலக் காப்பியங்களும்' -தொல்காப்பியஇலக்கியக் கோட்பாடுகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்1998

என்பதே பொருளாகும்”[123] என பேராசிரியர் க. நெடுஞ்செழியன் குறிப்பிட்டுள்ளமை தமிழின் தொன்மையையும் தொல்காபபியத்தின் மேன்மையையும், பிராகிருத்தின் நிலையையம் வரையறுக்கின்றது.

பிராமி எழுத்தானது திராவிட மொழிகளுக்காக உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவற்றுள் பழைமையானதான தமிழுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது என்றும், பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும், நாளடைவில் இந்தியா முழுவதும் அதுவே வழக்கத்தில் நிலவியது என்றும் தி.நா.சுப்பிரமணியன் கருத்துத் தெரிவித்துள்ளார்.[124] எவ்வாறாயினும், பழங்காலத்தில் இந்தியா முழுவதிலும் உள்ள மொழிகள் பிராமி எழுத்தைப் பயன்படுத்தின என்பதையும் வடநாட்டில் அது பிராமி எனவும் தமிழ்நாட்டில் தமிழ் எனவும் வழங்கியது” [125] என்பதையும் நடன. காசிநாதன் தெளிவுறுத்தியுள்ளார். தமிழைப் பிராகிருத மொழியில் தாமிலி, தமிழி என வழங்கியுள்ளனர்.

பெரும்பாலான பிராகிருத "மொழிகள்" இன்றும் "இந்தி" என்ற பெயரில் பேச்சு வழக்கிலுள்ளன. பிற்காலத்தில் "காமரூபி" (அஸ்ஸாமி), "மஹாராஷ்டிரி" (மராட்டி) எலு (சிங்களம்) போன்ற சில பிராக்ருத மொழிகள் தனி மொழிகளாக உரு வெடுத்தன. எனவே அஸ்ஸாமியோ, மராட்டியோ பேசுபவர்களுக்கு இந்தியும் ஸமஸ்கிருதமும் 80% புரியக்கூடியதாக உள்ளது எனின் இவை அனைத்தினதும் அடி ஊற்று ஒன்றாகவே இருக்கவேண்டும் என்பது தெளிவு.

குப்தர்கள் காலத்திற்கு பிறகு ஸமஸ்கிருத இலக்கண சீரமைப்பு நடைபெறவில்லை. வழக்கு மொழிகள் மேல் தற்போதைய இஸ்லாமிய நாடுகளின் மொழிகளான ஃபர்ஸி, அரபி போன்ற மொழிகளின் தாக்கமும் ஏற்பட்டதால் இலக்கண ஸம்ஸ்கிருதம் வழக்கு மொழிகளிலிருந்து விலகி படிப்படியாக இந்தி உருவாக வழி கோலியது என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

இவ்வாய்வுகளின்அடிப்படையில் தமிழ் பிராகிருத மொழிகளிலிருந்து தனித்துவமானதாகவும் மூல மொழியாகவும் தன்னை வடிவமைகத்தமைக்கு அதன் தொன்மையும் தனித்தன்மையுமே காரணமாகும். எனவே தமிழ் காலத்தால் முந்தியது மட்டுமல்ல திராவிட மொழிக்குடும்பத்தின் ஆதிமொழியும் தமிழே. தமிழில் இருந்து பல மொழிகள் கிளைத்துத் தோன்றியுள்ளன என்பது வரலாற்று மற்றும் மொழியியல் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

---

[123] பேரா.க.நெடுஞ்செழியன் ‘நாகசாமி நூலின் நாசவேலை’ “தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்” இதழின் ஆகஸ்ட்டு 1-15 2012 பக் 17-24

[125] நடன. காசிநாதன் தமிழக கல்வெட்டோடு காணப்படும் குறியீடுகள், பத்தாவது கருத்தரங்கு, ஆய்வுக்கோவை.

தொ.மா.க. 206

தொல்காப்பியத்திற்குப் புலியூர்க்கேசிகனாரின் உரைவளம்

கவிஞர் கலைச்செல்வி புலியூர்க்கேசிகன்
தமிழ்நாடு, இந்தியா
puliyurkesikai@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்ப் பெரும் இலக்கண நூலான தொல்காப்பியமாம் நல்காப்பியத்திற்கு எண்ணற்ற உரையாசிரியர்கள் உரை வகுத்துள்ளனர். நூற்பாக்களை படிப்போருக்கு அவை ஐயம் களைந்தன, அறியச் செய்தன. அவ்வகையில் 20ஆம் நுற்றாண்டில் தமிழ்ப் படிக்க விரும்பும் அனைவர் கைகளிலும் இலக்கண இலக்கியங்கள் சென்றுசேர வேண்டும். எளிமையான இனிமையான உரைமூலம் நூற்பாக்களை எளியவர்களும் அறிந்து தமிழின் செழுமையை உய்த்துணர வேண்டும் என்ற உயரிய நோக்கில் புலியூர்க்கேசிகனார் உரையாசிரியராகத் தம் எழுத்துப் பணியைத் தொடங்கினார். உரை வரலாற்றில் தனக்கென தனியிடத்தைப் பெற்றார். தனது தனித்துவமான இனிய எளியவுரையால் உலகமெங்கிலும் ஓங்கு புகழ் பெற்றார் புலியூர்க்கேசிகன். அவர் தமிழிலக்கண நூலான தொல்காப்பியத்திற்கு மிகச் சிறந்த எளியவுரை தந்துள்ளார். அந்த உரைவளத்தின் ஒரு பகுதி இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகிறது.

முன்னுரை

தொல்காப்பியப் பெருநூல் ஏனைய மொழிகளுக்கு முன்னையது. பொதுக் கருத்துகளை புகல்வது. ஐந்திணைகளை அழகுபட எடுத்துச் சொல்வது. எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுப்புகளில் மாந்தர் வரலாற்றை-நெறிகளை-வரையறுத்துச் சொல்வது. ஒவ்வொரு பகுப்பிலும் ஒன்பது இயல்கள் என மூன்று பகுப்புகளிலுமாக (3x9=27) 27 இயல்களில் எல்லா தகவல்களையும் கைகொள்ளாமல் களிப்புடன் எடுத்துச்சொல்கிற இனிமையது தொல்காப்பியம். 'என, என்ப, என்மனார் புலவர்' போன்ற சொற்கள் மூலம் தம் காலத்துக்கு முன்பான புலவர்களின் பாடல்களையும் நினைவுகூரச் செய்கிறார் தொல்காப்பியர்.

உரையாசிரியர்கள்

தொல்காப்பியத்திற்குப் பழங்காலத்தில் எழுவர் உரை எழுதியிருப்பதாக அறிகிறோம். இளம்பூரணர் மட்டுமே முழுமையான உரையை வகுத்துள்ளார் என்பதால் இன்றளவிலும் அவரது உரை பரவலாய்ப் பேசப்படுகிறது. அவருக்கு அடுத்து நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச் சிலையார், கல்லாடர், அடியார்க்கு நல்லார், உரைகளும் தமிழ்ப் பேருலகுக்குக் கிடைத்த சேமநிதியெனக் கொள்ளலாம்.

உரையாசிரியராய் கேசிகனார்

அருணா பப்ளிகேஷனில் நூலாசிரியராக, எழுத்தாளராக அறிமுகம் ஆனார். பல்வேறு தலைப்புகளில் நூல்களை இயற்றினார். தினமணி, T.S. சொக்கலிங்கம் அவர்களின் வேண்டுகோளை ஏற்று முதன்முதலாக உரையாசிரியராகத் தன்னை உலகுக்கு வெளிப்படுத்தினார். பாரிநிலையம் அவரது உரைப்பணிக்கு உறுதுணையாக இருந்தது. சங்க இலக்கியங்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென்கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள் என பல நூல்களுக்கு எளியவுரை எழுதி 50 ஆண்டுகாலம் அயர்வின்றி தமிழுக்கென தன்னை ஈந்தார்.

எளியவுரை தந்த ஏந்தல்

புலவர்களும், வித்துவான்களுகம், மெத்தப் படித்தவர்களும் மட்டுமே கற்றுப் பொருளுணரக் கூடிய வகையில் இருந்த சங்க நூல்களையெல்லாம் தமிழ் படிக்க விரும்புவோரும், சாதாரண மக்களும் கற்றறிந்து தமிழின் பெருமையை உணரவேண்டும். தமிழர்தம் வரலாறுகளை, வீரச் செறிவினை, அகவாழ்வின் அருமையை, இன்னபல யாவையும் உய்த்துணர்ந்து உவந்திட வேண்டும் என்ற எண்ணப்பாட்டினால் எண்ணவியலா நூல்கள் யாவுக்கும் பதம் பிரித்து புரியும் அளவுக்கு எளியவுரையை கொடுத்துள்ளார் கேசிகனார்.

1958ஆம் ஆண்டிலேயே அவரது தொல்காப்பிய உரைநூல் வெளியானது. அதன் பின்னர் அருணா பதிப்பகம் அடுத்த பதிப்புகளை வெளியிட்டது. பின்னர் பாரி நிலையம் திரு.செல்லப்பனார் மூலம் அடுத்தடுத்த பதிப்புகள் வெளியாகி வந்தன. தொல்காப்பியத்திற்கு முழுமையான தெளிவுரையாக இதனை அக்காலகட்டத்தில் ஏத்திப் புகழ்ந்தார் உண்டெனில் மிகையில்லை.

இளையோரும் அறியும் வகையில் தொல்காப்பிய நூற்பாக்களைப் பொருளுணரும் வகையில் பிரித்து எடுத்துரைத்ததால் அவரது உரை நூல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. தமிழ் பயிலும் மாணவர்கள், முனைவர் படிப்புப் பயில்வோர், ஆசிரியர்கள், பேராசிரியர்கள் என அனைவர் கைகளிலும் புலியூர்க்கேசிகன் உரை நூல்கள் மிக விரைவாய் விரும்பி

ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவ்வகையில் தொல்காப்பியப் பதிப்புகளுக்கு எளியவுரை தந்ததன் காரணமாய் அச்சிட்ட யாவும் விற்றுத் தீர்ந்தன.

தொல்காப்பியம் முழுமையாய்க் கற்றறிந்த ஒருவரால்தான் பிழையற கவிதை இயற்றவும் 'பா' புனையவும், பதட்டமின்றி உரையாற்றவும், பக்கம் பக்கமாய் எழுதிக் குவிக்கவும் முடியும். அவை உலகோரால் உயர்த்திப் போற்றப்படும் என்பதும் திண்ணம்.

எல்லா காலகட்டங்களிலும் புகழின் உச்சிக்குச் செல்வோரின் படைப்புகளை புறங்கூறிப் பேசுவோர் உண்டு. அவரது காலத்திலும் எளியவுரை படிக்க வேண்டாம் என அவரது உழைப்பை மதியாதோர் பேசியதுண்டு. இலக்கண இலக்கியங்களை எளியோரின் சொத்தாக்க கேசிகனார் பாடுபட்டார். பேசியவர்கள் கைகளிலும் அவரது உரை நூல்கள் இல்லாமலில்லை என்பதே உண்மை.

நுண்மாண் நுழைபுலம்

தொல்காப்பியம் முழுவதற்கும் எளியவுரையைத் தந்த அவர், தனக்குத் தோன்றிய தானறிந்த கருத்துகள் சிலவற்றை ஆங்காங்கே புகுத்தியுமிருப்பார். நச்சினார்க்கினியர் உரைக்கும் இவரது உரைக்கும் நுண்ணிய மாற்றங்கள் மட்டுமே தெரியும்.

கேசிகனாரின் பார்வை இளந் தலைமுறையினரை நோக்கியதாகவே இருந்தது. மாணவர்களையும் ஆசிரியர்களையும் நாடிப் பிடிக்கும் வகையில் எட்டாதக் கனியாகவிருந்த இலக்கணங்களை எட்டச் செய்து இன்று வரை உலகமெங்கும் தனக்கென தனியிடத்தைப் பெற்றுள்ளார்.

மரபியலின் சிறப்பு

மரபியல் இருவகையான மரபுகளின் இலக்கணத்தை உணர்த்துகிறது. பொது மரபிற்குரியவையாக இளமைப் பெயர்கள்-ஆண்பாற், பெண்பாற் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இளமைப் பெயர்களாக எவ்வெவற்றை எவ்வாறு அழைக்க வேண்டுமென மரபின் தன்மை, இதில் வெளிப்பட்டுள்ளது. உயிர்களின் பகுப்பும், சிறப்பும், மரபும் ஒருங்கே இத்தலைப்பின் கீழ் நிரல்படுத்தப்பட்டுள்ளது. ஓரறிவு உயிர் எவையெவை என்பது தொடங்கி ஆறறிவு உயிர்கள் வரை அற்புதமாய்த் தொல்காப்பியர் இந்நூற்பா வழி உணர்த்துகிறார். ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்களோடு நூலின் மரபுடன் தொல்காப்பிய இறுதி அதிகாரமான பொருளிலக்கணம் நிறைவு பெறுகிறது.

வியந்த தருணங்கள்

தொல்காப்பியத்தில் என்னை மட்டுமல்ல என் போன்ற ஏராளமானோரை வியந்து வியந்து நோக்கச் செய்தவை மரபியலின் நூற்பாக்கள். எனவே, இக்கட்டுரை இதன் கீழ் கேசிகனார் உரை வளத்தை ஆங்காங்கே சில நூற்பாக்களுடன் எடுத்து இயம்பவுள்ளேன். எழுத்து நடை, எளிமை, இனிமை, ஆழ்ந்த இலக்கணப் புலமை மிக்க கேசிகனார் இதில் தேவைக்கேற்ப சொற்சிக்கனைத்தை கடைபிடித்து உரை வழங்கியுள்ளார். தொல்காப்பியம் பொருளிலக்கண மரபியலில் பொது மரபிற்குறியவையான இளமைப் பெயர்கள்:

மாற்றஞ் சிறப்பின் மரபியல் கிளப்பில்
பார்ப்பும் பறழுங் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்று
ஒன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே

என்கிற நூற்பாவிற்கு 'இவ்வோத்தினுள் இத் தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின் இளமைப் பெயராமாறு உணத்துதல் நுதலிற்று' என்கிறார் இளம்பூரணர். (தமிழ்மண் பதிப்பக வெளியீடான தொல்காப்பிய உரைத் தொகைகள் பொருளதிகாரம் இளம்பூரணம்-2இல்)

இதே நூற்பாவிற்கு, தமிழ்மண் பதிப்பக வெளியீடான தொல்காப்பிய உரைத் தொகை 19ன் பொருளதிகாரம் பேராசிரியப் பின்னான்கியலில்-3 சி.கணேசையரின் உரை விளக்கக் குறிப்பு நூலில்,

'விலக்கருஞ் சிறப்பிற்றாகிய மரபிலக்கணங் கூறின் பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும் கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் குழவியொடு இவையென்பதும் இளமைப் பெயர் என்றவாறு' என்கிறார்.

நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே (நற் 172)
மாற்றஞ் சிறப்பின் மரபியலுக்குக் காட்டுகிறார்.

புலியூர்க்கேசிகனார் மிக எளிமையாக இதற்கான எளியவுரையைக் கீழ்க்காணுமாறு தருகிறார்.

'விலக்குதற்கரிய சிறப்பினையுடைய மரபிலக்கணத்தைக் கூறத் தொடங்கினால், பார்ப்பும், பறழும், குட்டியும், குருளையும், கன்றும், பிள்ளையும், மகவும், மறியும் குழவியும்' என்னும் ஒன்பதும் இளமை குறிக்கும் பெயராம் என எவர்க்கும் புரியும் வகையில் இயல்புடன் சொல்லிச் செல்கிறார். (பக்-357 தொ.கா. ஜீவா பதிப்பக வெளியீடு)

'மாற்றஞ் சிறப்பின் மரபியல் கிளப்பில்' என்கிற சொற்றொடருக்கு இத்தனை எளிமையாய் "விளக்குதற்குரிய சிறப்பினையுடைய மரபிலக்கணத்தைக் கூறத் தொடங்கினால்" என பொருள் தருகிறார். இந்த எளிமைதான், சொற்சிக்கனம்தான் அவர் மறைந்து 100 ஆண்டுகள் கடந்தும் உலகெங்கிலும் கேசிகனார் உரை நூல்கள் பேசப்படுகின்றன.

எளிமையின் இலக்கணம்

அடுத்து உயிர்களின் பகுப்பும் சிறப்பும் மரபும் குறித்து வரும் பாடலில்,

ஒன்றறி வதுவே உற்றறிவதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே (தொ.கா. பொ. பா-571)

மிகச் செவ்வனே மனனம் செய்யத் தக்க வகையில் எளிமையாக உரை தருகிறார் கேசிகனார். இந்த எளிமையும் இனிமையுமே அவரை மக்கள் உரையாசிரியராக உயர்த்திப்பிடிக்கிறது.

பயில்வோர் செவிகளில் பாகென இனிக்கும், பார்க்கும் கண்களைப் பனிக்கச் செய்யும் பாந்தமான உரை இதோ.

ஓரறிவு உயிராவது உடம்பினாலே அறிவது; ஈரறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் அறிவது; மூவறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் அறிவது; நாலறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினாலும் அறிவது; ஐந்தறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினாலும்

செவியினாலும் அறிவது; ஆறறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினாலும் செவியினாலும் மனத்தினாலும் அறிவது. இவ்வகையினால் உயிர்கள் ஆறு வகைப்படும் என ஆற்றொழுக்காய் மிகவும் எளியசொற்களைக் கொண்டு இயம்புகிறார். இந்தச் சொற்களைக் கையாளும் திறனும் இவரது வெற்றிக்குக் காரணமாய்க் கூறலாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் இரண்டாம் பகுப்பில் வாழ்வியல் விளக்கம்-புலவர் இரா.இளங்குமரனார் தமிழ்மண் பதிப்பக வெளியீட்டில்,

ஓரறிவுயிராவது உடம்பினானறிவது; ஈரறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் அறிவது; மூவறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் அறிவது; நாலறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் கண்ணினானும் அறிவது; ஐயறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் கண்ணினானும் செவியினானும் அறிவது; ஆறறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் கண்ணினானும் செவியினானும் மனத்தினானும் அறிவது. இவ்வகையினான் உயிர் ஆறு வகையென ஆயின என்கிறார்.

முன்னுரையாய்த் தன்னுரை

எவரும் உரையெழுதத் துணியாத எண்ணற்ற நூல்களுக்கு உரை தந்தவர் புலியூர்க்கேசிகனார். அவரது உரை நூல்கள் யாவற்றிலும் முன்னுரையாக அந்நூல் குறித்த தன்பதிவினை பாடல்களாய் வெளியிட்டுள்ளார். அந்தப் பாடல்களும் முத்தென விளக்குவதாய் அமைந்திருக்கும்.

மரபினைத் தெரிவு செய்தது ஏன்?

தமிழ்மொழி மரபுவழிப்பட்ட மாண்புடைத்தது. தமிழர்கள் மரபுப்படி வாழ்வதில் மகிழ்வெய்தினர். மரபின் ஒழுகலாறுகளை கடைபிடித்தனர். தொல்காப்பியம் என்றவோர் இலக்கண நூலே நம் மொழியைச் சிதைவுறாமல்; சீர் கெடாமல் காக்கும் அரண். முன்னவர்களின் வாய்மொழியை மதித்தும் துதித்தும் ஏற்றதன் கண்ணே இது மரபு எனப்பட்டது. திருக்குறளும் தொல்காப்பியமும் மரபு விளக்க நூலாவே விளங்குகின்றன. எழுத்தும் சொல்லும் மொழி மரபையும் பொருளதிகாரம் பல்வகை மரபுகளையும் பகர்கின்றன. எனவேதான் தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தின் மரபியலில் ஒரு சில நூற்பாக்களை மட்டுமே எடுத்து அதில் புலியூர்க்கேசிகனாரின் உரை வளமைக்கு காட்டாகத் தரப்பட்டுள்ளன.

உரையில் சொற்சிக்கனம்

உயிர்களின் பகுப்பில் ஆறறிவுயிர்கள் குறித்துச் சொல்லும் கேசிகனார் உரையில் காணும் இனிமையை எளிமையை என்னென்பது?

> *"புல்லும் மரனும் ஓரறி வினவே*
> *பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (572)*

இதில் புல், மரம் ஓரறிவை உடையன; கொட்டி, தாமரை என வேறும் உள்ளன என்கிறார்.

> *"நத்தும் முரளும் ஈரறி வினவே*
> *பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (573)*

நத்தும் முரளும் ஈரறிவையுடையன. இவ்வாறு ஈரறிவையுடையன பிறவும் இருக்கின்றன. நத்து என்றதனால் நத்தை, சங்கு அலகு, நொள்ளை என்பதையம் முரள் என்றதனால் சிப்பி,

கிளிஞ்சல்கள், ஏரல் என்பதையும் ஈரறிவு உடையனவாகவே கொள்ளப்படும் என பிற ஈரறிவுயிர்கள் எவைஎவையென எடுத்துச் சொல்கிறார் எளிய பதத்தில்.

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (574)

சிதலும் எறும்பும் மூவறிவினை உடையனவாம். இவ்வாறு மூவறிவுடையன வேறும் இருக்கின்றன. அவை அட்டை முதலியன.

இங்கே உள்ளன என்ற சொல்லைக் கூட தவிர்த்து மக்கள் மொழியாகவே 'இருக்கின்றன' என்கிற சொல்லையே பயன்படுத்துகிறார். இதனாலேயே மக்கள் உரையாசிரியராய் கேசிகனார் மனதில் நிற்கிறார்.

"நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (575)

நண்டும் தும்பியும் நான்கு அறிவினை உடையனவாம். இவ்வாறு நான்கு அறிவினை உடையன வேறும் சில இருக்கின்றன. அவை ஞிமிறு, சுரும்பு போல்வனவாம். இங்கு 'அக்கிளைப் பிறப்பே' என்பது அவற்றின் பிற பிறப்புகளான ஞிமிறு, சுரும்பினத்தை சொல்கிறார். இவையும் வண்டினத்தைச் சேர்ந்தவை.

"மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (576)

நாற்கால் விலங்குகளும் பறவைகளும் ஐவகை அறிவினை உடையன. இவ்வாறு ஐயறிவையுடையன வேறும் இருக்கின்றன. அவை பாம்பு, மீன், முதலை, ஆமை முதலியன.

ஆறறிவுயிர்கள் என்னென்ன வகையென சொன்ன தொல்காப்பியர், அவைகளிலும் சில கூடுதலாய் உள்ளன என்பதை அடுத்த நூற்பாவில் கூறுகிறார்.

"மக்கள் தாமே ஆறறிவு யிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (577)

மக்கள் ஆறறிவு உடையவர் என்று கூறப்பெறுபவர். ஆறறிவு உடையவர் பிறவும் உள. பிறராவபர் தேவர், அசுரர், இயக்கர் முதலானோர்.

இதற்கு ஓர் முடிவு 578ஆவது நூற்பாவில், "ஒரு சார் விலங்கும் உளவென மொழிப" என ஆறறிவுடைய விலங்குகளும் ஒரு சில உள்ளன எனக் கூறி, கிளி, குரங்கு, யானை முதலியனவாம் என்கிறார்.

புலியூர்க்கேசிகனாரின் நூல்கள் நாட்டுடைமை

புலியூர்க்கேசிகன் மக்கள் உரையாசிரியர் என்பதனை உறுதிபடுத்தும் வகையில் அவரது நூல்கள், (நான் தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சித் துறையில் பணியாற்றிய காலத்தில்) நாட்டுடைமையாக்கப்பட்டன. அதனால் இன்று பதிப்பகங்கள் பல அவரது இலக்கண இலக்கிய உரைகளை அச்சிட்டு வெளியிடுகின்றன. அவர் கண்ட கனவு நனவாகியது. காலம் முழுவதும் கண்ணெனக் காத்த தமிழ்ப்பணி இன்று ஞாலம் முழுவதும் படர்ந்து விரிந்து உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் புலியூர்க்கேசிகனின் புகழ்நிலைத்து நிற்பதற்குக் காரணம் அவரது தன்னலம் கருதாத தமிழ்த் தொண்டே!

தொ.மா.க. 220

தொல்காப்பியமும் பாணினியமும்

இலக்குவனார் திருவள்ளுவன்

ஆசிரியர், அகரமுதல மின்னிதழ்

thirunool50@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

மூவாத் தமிழில் கிடைத்துள்ள முதல் நூலாகத் திகழ்வது சாவாப் புகழ் கொண்ட தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியத்தின் உண்மையான சிறப்பை இன்னும் தமிழர்களே அறிந்திலர். அவ்வாறிருக்கப் பிறர் எங்ஙனம் அறிவர்? தொல்காப்பியச் சிறப்பை மறைக்கும் வண்ணம் ஆரிய வெறியர்கள் பாணினியத்தை உயர்த்தியும் அதன் காலத்தை முன்னுக்குக் குறிப்பிட்டும் பிற வகைகளிலும் எழுதி வருகின்றனர். தொல்காப்பிய நூற்பாக்கள் சிறப்பு குறித்தும் பாணினியின் அட்டாத்தியாயி நூற்பாக்கள் குறித்தும் ஒப்பிட்டு எழுத முதலில் எண்ணினேன். இந்நூல் கிடைக்கவில்லை. முனைவர் மீனாட்சி எழுதிய இந்நூலை வெளியிட்ட உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் இருப்பில் இல்லை என்றனர். ஆதலின், எளிய முறையில் இரு நூல்கள், நூலாசிரியர்கள் குறித்து எழுதுவதே ஏற்றது எனக் கருதி இக்கட்டுரை அவ்வாறு அமைகிறது.

நூற்பாக்களின் எண்ணிக்கை

எழுத்து அதிகாரத்துச் சூத்திரங்கள் எல்லாம்
ஒழுக்கிய ஒன்பது ஒத்துள்ளும், வழுக்கு இன்றி
நானூற்று இரு-நாற்பான் முன்று என்று நாவலர்கள்
மேல் நூற்று வைத்தார் விரித்து.
தோடு அவிழ் பூங்கோதாய்! சொல் அதிகாரத்துள்
கூடிய ஒன்பது இயல் கூற்றிற்கும் பாடம் ஆம்
நானூற்று அறுபத்து நான்கே நல் நூற்பாக்கள்
மேல் நூற்று வைத்தனவாமே.

கிளவி ஓர் அறுபான் இரண்டு; வேற்றுமையில்
கிளர் இருபஃது இரண்டு; ஏழ்-ஐந்து
உள மயங்கு இயலாம்; விளியின் முப்பான் ஏழ்;
உயர் பெயர் நாற்பதின் முன்று;
தெளி வினை இயல் ஐம்பானுடன் ஒன்று;
செறி இடை இயலின் நாற்பான் எட்டு;
ஒளிர் உரி இயல் ஒன்பதிற்றுப் பத்துடன் எட்டு;
ஒழிபு அறுபான் ஏழ்.

பூமலர் மென் கூந்தால்! பொருள் இயலின் சூத்திரங்கள்
ஆவ அறு நூற்று அறுபத்து ஐந்து ஆகும்; மூவகையால்
ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் பஃது என்ப,
பாயிரத் தொல்காப்பியம் கற்பார்.

ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை உரையாசிரியர்களின் மாறுபடுகின்றன. ஒவ்வொரு உரையாசிரியரின் குறிப்பிற்கு இணங்க இயல்வாரியாக இவ்வெண்ணிக்கை கீழே சுட்டிக் காட்டப்படுகிறது.

நச்சினார்க்கினியர் 55, 36, 50, 53, 54 248

பேராசிரியர் 27, 37, 243, 110, 665

உரையாசிரியர்	இயல்கள்									மொத்தம்
	1	2	3	4	5	6	7	8	9	
1.எழுத்து அதிகாரம்										
இளம்பூரணர்	33	49	21	40	30	30	93	110	77	483
நச்சினார்க்கினியர்	33	49	20	30	93	39	69	78		483
2. சொல்லதிகாரம்										
இளம்பூரணர்	62	17	35	37	43	49	48	99	66	456
சேனாவரையர்	61	22	34	37	43	51	48	100	67	463
நச்சினார்க்கினியர்	62	22	35	37	43	51	48	98	67	463
தெய்வச்சிலையார்	60	21	33	36	41	54	47	100	61	453
3. பொருளதிகாரம்										
இளம்பூரணர்	58	30	51	53	52	27	38	235	112	656
நச்சினார்க்கினியர்	55	36	50	53	54	-	-	-	-	248

பேராசிரியர்	27	37	243,	110						665

சில நூற்பாக்களை 2 அல்லது 3 ஆகப் பிரித்தமையால் நூற்பாக்களின் எண்ணிக்கையில் வேறுபாடுள்ளன. மொத்த நூற்பாக்கள் இளம்பூரணாரின் கருத்துக்கு இணங்க 1595உம் நச்சினார்க்கினியர் ஆகியோருக்கு இணங்க 1611-ம் ஆகும்.

பாணினியின் அ(சு)ட்டாத்தியாயி பிரிவுகள்

எட்டு அத்தியாயங்களை உடைய நூல் என்னும் பொருளில் பாணினி தன் நூலுக்கு அட்டாத்தியாயி என்று பெயர் வைத்தார். தமிழில் அட்டம் என்றால் எட்டைக் குறிக்கும். எட்டுபோல் காலைக் குறுக்கே மடக்கி அமர்வதை அட்டக்கால் என்று இன்றும் கூறிவருகிறோம். தமிழ் அட்டத்திலிருந்து வந்ததே சமற்கிருத அசுட்டம். எனவே, எட்டு அத்தியாயங்களைக் கொண்டது என்னும் பொருளில் அட்டகம் என்றும் கூறுகின்றனர். (இதனைத் தமிழில் குறிப்பிடுவதானால் எண்(8) இயல்கள் பகுக்கப்பட்டுள்ள நூல் என்ற பொருளில் எண்ணியல் என்றும் சொல்லலாம். இங்கே எண் என்பது எட்டு என்னும் இலக்கத்தைக் குறிப்பிடுவதே.) ஒவ்வோர் அத்தியாயமும் 4 உட்பிரிவுகளை உடையது. மொத்தம் கிட்டத்தட்ட 4000 சூத்திரங்களை உடையது எனச் சொல்லப்பட்டாலும் இதில் 3,959 சூத்திரங்களே உள்ளன.

. ஒவ்வோர் அத்தியாயத்திலும் விளக்கவெடுத்துக் கொண்ட தலைப்பு, அத்தியாயங்கள் அமைக்கப்பட்டிருக்கும் வகைமுறை ஆகியவற்றைப் பொறுத்து ஒவ்வோர் அத்தியாயத்திலும் காணப்படும் சூத்திரங்களின் எண்ணிக்கை வேறுபடும். அவை வருமாறு:

அட்டாத்தியாயி சூத்திர எண்ணிக்கை

இயல் எண்	முதல் பிரிவு	இரண்டாம் பிரிவு	மூன்றாம் பிரிவு	நான்காம் பிரிவு	மொத்தம்
1	75	73	93	110	351
2	72	38	73	85	268
3	150	188	176	117	631
4	178	145	168	144	635
5	176	146	119	160	601
6	223	199	189	175	736
7	103	118	120	97	438
8	74	108	119	68	369
ஆக மொத்தம்					4029

இஃது அதிகமாகக் கூறப்படும் எண்ணிக்கை. 5 ஆம் பிரிவில் 555 சூத்திரங்கள் உள்ளன என்றே பெரும்பான்மையர் கூறுகின்றனர். இதன்படி 3983 நூற்பாக்கள் உள்ளன என்றாகிறது. ஆனால், பழைய கணக்குப்படி 3959 நூற்பாக்கள்தாம் உள்ளன. பிற இடைச்செருகல்களே!

பாணினியத்தின் சூத்திரங்களோடு இணைந்தமையாத ஆனால், அச்சூத்திரங்களைப் புரிந்து கொள்ள இன்றியமையாதவையாகக் கருதப்படும் . தனித்தனியாக அமைந்துள்ள, சில துணை நூல்கள் வருமாறு (1)சிவசூத்திரம் (2) தாதுபாடம் (3) கணபாடம் (4)உணாதிசூத்திரம் (5) பிட் சூத்திரம் (6) (இ)லிங்கானு சாசனம் (7) சிட்சா. இந்நூல்களின் ஆசிரியர் பாணிணியா அல்லது வேறு ஒருவரா என்று முடிவாக எதுவும் கூறமுடியாதபோதிலும் , பாணினியின் இலக்கணத்தோடு இவற்றுக்குள்ள நெருங்கிய தொடர்பு பற்றியோ அவ்விலக்கணத்தை

எளிதில் புரிந்து கொள்ள இந்நூல்களின் அவசியத்தைப் பற்றியோ எந்தவிதக் கருத்து வேறுபாடோ சந்தேகமோ இல்லை. (முனைவர் கு . மீனாட்சி)

நூற்சிறப்பு

தொல்காப்பியம், பழந்தமிழர் வரலாற்றை எழுதுவதற்கு வேண்டிய கருவூலமாகத் திகழ்வது என்றும் தொல்காப்பியமே கிறித்து காலத்திற்கு முற்பட்ட வரலாற்று வாயில் என்றும் பேரா.முனைவர் சி.இலக்குவனார் தொல்காப்பியத்தின் சிறப்பினைப் பாராட்டுகிறார்.

“பொருள்” சிந்தனை தமிழுக்கே உரியது. தொல்காப்பியரும் முன்னோர் வழித் தம் நூலான தொல்காப்பியத்தில் பொருள் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார். இதனைப் பேராசிரியர் க. அன்பழகனார் (கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா: அணிந்துரை: பக்கம். 12-13) பின்வருமாறு கூறுகிறார்:- “மேலும், தொல்காப்பியர் வடமொழியினும் தேர்ச்சியுடையவர் என்று கருதினும், வடமொழி இலக்கண நூல்கள் எனப்படும் ஐந்திரமோ, பாணினியமோ, தொல்காப்பியர் காலத்துக்கு முன் தோன்றியன அல்ல என்பதாலும், ஒரு வேளை இருந்தன எனினும் வேற்றுமொழி எழுத்திலக்கணம், முன்னரே பிறந்த ஒரு மொழி எழுத்துக்கு இலக்கணமாக முடியாமையானும், சொல்லும் அதன் புணர்ச்சிகளும், சொற்றொடர்களும் மக்கள் வழக்கில் மரபாக நிலைத்தவையாதலின் பிறமொழி இலக்கணம் பயன்படாமையானும்; பொருள்" என்னும் அறிவுசால் வாழ்க்கை இலக்கணம், வடமொழியில் என்றும் தோன்றாமையாலும், வடமொழி நூல் எதுவும் முதல்நூல் ஆக வழியில்லை. மேலும், பிறமொழி இலக்கண நூலார் எவரும் எழுத்துக்கும்- சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் காண்பர். பிற்காலத்தில்தான் செய்யுள் யாப்பும் (கட்டும்), கருத்துக்கு அழகு செய்யும் அணியும் குறித்து இலக்கணம் செய்வாராயினர். ஆனால், தொல்காப்பியனார் விவரித்த பொருள்" இலக்கணம் குறித்த சிந்தனையே வடமொழியாளரிடத்தில், என்றும் எழவில்லை. பொருள் என்றது சொல்லின் பொருள் விளக்கம் கருதியது அன்று. அது வாழ்க்கை விளக்கம். அதுவும் இலக்கியத்தில் இடம்பெறும் முறையையும் வகையையும் விளக்குவது. அகமும் புறமுமாய்ப் பகுக்கப் பெற்ற இலக்கிய உலகில் அகத்திணை, புறத்திணை எனவும், களவு-கற்பு எனவும், பிறவாறும் வகை செய்யப்பட்டு உலகியல் வாழ்வியல் இணையும் ஆடவரும் மகளிரும் ஆன இரு சாராரும் எய்தும் உணர்வுகளைப் புலப்படுத்தும் காட்சிகளைச் செய்யுளாக்குவதற்கு உரிய இலக்கணத்தை விவரிக்கும் தனிச் சிறப்புடையதாகும்.)

“தொல்காப்பியத்துள்,

″என்மனார் புலவர்”
″என மொழிப, உணர்ந்திசி னோரே
″பாடலுட் பயின்றவை நாடுங் காலை”
′சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”
′மொழிப, புலன்நன் குணர்ந்த புலமையோரே”
′நல்லிசைப் புலவர், , , , வல்லிதிற் கூறி வகுத்துரை த்தனரே”
′நேரிதி னணர்ந்தோர் நெறிப்படுத் தினரே”
′நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே”

என்றிவ்வாறு காணப்படுகின்ற சொற்றொடர்கள், தொல்காப்பியர் காலத்தில் பல தமிழ் நூல்கள் பெருவழக்கிலிருந்தன என்பதைப் புலப்படுத்துகின்றன, தொல்காப்பியம் இயற்றப்படு முன் அந் நூல்கள் எவ்வளவு ஆண்டுகளாக விளங்கிவந்தன என்பதற்கு விடை காண முடியாதிருக்கிறது, தொல்காப்பியத்துக்குப் பின்னெழுந்த பல இலக்கண நூல்களுள் ஒன்றாகிய

நன்னூலுக்கும் தொல்காப்பியத்திற்கு மிடையிலேயே ஆயிரத்திற்கு மேற்பட்ட வருடங்கள் கழிந்தனவெனில் தொல்காப்பியத்திற்கும் அதற்கு முன்னிருந்த இலக்கண நூல்களுக்குமிடையில் எவ்வளவாயிர வருடங்கள் கழிந்திருக்கும்? தொல்காப்பிய இலக்கணம் தோன்றிய காலத்திருந்த பல நூல்கள்கூட நமக்குக் கிடைக்கவில்லை, தொல்காப்பியம் கூறும் சில இலக்கணங்களுக்குரிய இலக்கியங்கள மறைந்து விட்டன.

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனைமர பினவே"

எனுமித் தொல்காப்பியச் சூத்திரத்தில் வழிநூல்கள் செய்யும் முறை நான்காக வகுக்கப் பட்டிருக்கிறது. தொகுத்தும், விரித்தும், தொகுத்து விரித்தும், மொழி பெயர்த்தும் செய்யப்பட்ட நூல்கள் தொல்காப்பியர் காலத்திலிருந்தன. இந் நூல்களைப் பற்றி நாம் நன்கு அறிந்து கொள்ள முடியாதிருக்கிறது. "

பாணினியம் முதல் நூலல்ல

"ஐந்திரம்" என்னும் நூலே, தொல்காப்பியத்திற்கு முந்தைய தமிழ் இலக்கண நூலாகும். இந்தத் தமிழ் ஐந்திரத்தைத் தழுவியே, வடமொழிகளுக்கு எழுத்துகளும், இலக்கணங்களும் வடிக்கப்பட்டன. வடமொழிகளான, மாகத, பாகத(பிராகிருத) மொழிகளின் இலக்கணங்களைக் கற்கப் புகுவோரெல்லாம் தமிழ் ஐந்திரத்தை முதலில் கற்றேயாக வேண்டும் என்னும் நிலை கி.பி.11 ஆம் நூற்றாண்டு வரையிலும் இருந்தது. இதனைக் கருநாடகத்தின் கொப்பளத்தில் கண்டெடுக்கப்பட்ட அருகச் சமயக் குரவர்களைப் பற்றிய கல்வெட்டொன்று உறுதிப்படுத்துகிறது.(அத்திப்பட்டு முரளிதரன் முகநூல்) எனவே பாணினியத்திற்கும் வழிகாட்டி ஐந்திரமே. அவ்வாறிருக்க அதனைத் தொல்காப்பியத்தின் மூல நூலாகக் கூறுவது தவறல்லவா?

பாணினியத்தின் சிறப்பு?!

தொல்காப்பியம் இயல்பிலேயே தமிழாகிய சிறந்த மொழிக்கான இலக்கணம் என்பதால் சிறப்பானதாக அமைந்துள்ளது. ஆனால் பாணினியின் அட்டாத்தியாயி சிறப்பாகத் திரித்துக் கூறப்படும் சிறப்பற்ற மொழியான சமற்கிருததத்திற்கானது என்பதால் திரிக்கப்பட்ட சிறப்பையும் உண்மையில் சிறப்பின்மையையும் கொண்டுள்ளது.

பாணினியத்துக்கு மிக விரிந்ததொரு உரை செய்த பதஞ்சலி, "இச்சூத்திரங்களின் பெருமையை நோக்குமிடத்து, பொருளில்லாத ஒரு எழுத்தையேனும் அவற்றினுள்ளே யான் காண்கிலேன்" என்று அசுட்டத்தாயி குறித்துக் கூறியுள்ளார். "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்பது போன்றது இது. ஆராய்ச்சி யறிஞர்கள் பொருளற்ற எழுத்துகளைக் குறிப்பிட்டுப் பொருள் உள்ள சொற்களாகத் தவறாக விளக்குகின்றனர் என்றும் அகராதிகளில் அத்தகைய பொருள் உள்ள எழுத்துகள் இல்லை என்றும் ஆராய்ந்து தெரிவித்துள்ளனர்.

பேச்சுவழக்கொழிந்த வடமொழிக்கு இலக்கணம் செய்த பாணினி வேர்ச்சொல்லாய்வு என்ற பெயரில் அறுபது விழுக்காட்டிற்கு மேலான சொற்களுக்கு முற்றும் கற்பனையான, முற்றிலும் முழுப்பொய்யான வேர்களைக் கூறியுள்ளார் என்றும் அவ்வாறான சொற்கள் வடமொழி இலக்கியங்களில் எங்கும் காணப்படவில்லை யென்றும் வடமொழி விற்பன்னர்களே கூறியுள்ளதையும் பேராசிரியர் ப.மருதநாயகம் (வடமொழி ஒரு செம்மொழியா?) எடுத்துரைக்கிறார்.

தொல்காப்பியம் வாழும் தமிழ்மொழிக்கான நூல் என்பதால் வாழ்வியல் நூலாகச் சிறக்கின்றது. மக்கள் நாவில் நடமாடாத சமற்கிருத மொழிக்கான நூல் என்பதாலும் இல்லாத சொற்களைக் கற்பனையாக வருவித்து அதற்கேற்ப இலக்கணம கூறுவதாலும் அட்டாத்தியாயி வாழ்வியல் நூலாக அமையவில்லை.

தொல்காப்பியம் அளவிடற்கரிய சிறப்பு உடையது. இதன் சிறப்பு உலகெங்கும் இன்னும் பரவ வேண்டும். என்றபோதும். இப்போதுதான் அட்டாத்தியாயியின் உண்மை முகம் ஆய்வறிஞர்களால் தெரிய வருகிறது. முற்றிலும் முழு உண்மையும் தெரிந்து பாரெங்கும் பரவ வேண்டும். தொல்காப்பியத்துடன் மட்டுமல்லாமல் வேறு எந்த நூலுடனும் ஒப்பிடுவதற்குத் தகுதி அதற்கு இல்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேணடும்.

பதஞ்சலியின் திட்பத்தைத் தன்னுள் கொண்டும்

பாணினியின் செறிவுதனைத் தன்னுள் கொண்டும்

தொல்காப்பியம் அமைந்ததாகப் பாவலர் கருமலைத் தமிழாளன் கூறுகிறார்.

ஆரியப்புரட்டுகளைத் நடுநிலைத் தமிழ்ப்பற்றர்களே நம்புவதால் அவற்றை ஏற்று எழுதி விடுகின்றனர். இதைக் காணும் பிறர் இவற்றை உண்மை என நம்பித்தமிழ் இலக்கியங்களைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். தொல்காப்பியத்தைக் குறைத்து மதிப்பிடும் வகையில் பாணினியம் குறித்த புரட்டுகள் மிகுதி.

தொல்காப்பியர் குறிப்பிடும் சொற்கள் யாவும் தமிழே

தமிழ் நூல்களைக் காப்பதற்காக இயற்றப் பெற்ற தொல்காப்பியத்தில் தொல்காப்பியர் தமிழ்ச்சொற்களைக் கையாள்வதுதானே முறை. தமிழ் மீதுள்ள வெறுப்பின் காரணமாகவும் சமற்கிருதத்தை உயர்த்தும் நோக்கிலும் வையாபுரி போன்றோர் பல சொற்களையும் சமற்கிருதமாகத் தவறாகக் கூறுகின்றனர். தொல்காப்பியர் காலத்தில் எழுத்தமைப்பு உருவாக்கி அதன்பின் சொல் வளத்தை உருவாக்கிய சமற்கிருதச் சொற்கள் எங்ஙனம் தொல்காப்பியத்தில் இடம் பெற இயலும்? தமிழ் இலக்கம் வகுக்க வந்த தொல்காப்பியர் எதற்கு வளமில்லாத பிற மொழியாகிய சமற்கிருதச் சொற்களைக் கையாள வேண்டும்? இது குறித்துத் தொல்காப்பிய அறிஞர் பேரா.முனைவர் சி.இலக்குவனார் (பழந்தமிழ்) பின் வருமாறு தெரிவிக்கிறார்:

நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து திகழ்ந்த தமிழர்க்கான காப்பியம் என்பதால் தமிழ்ச்சொற்களையே பயன்படுத்தும் சிறப்பு என்பது இதன் தளமாக அமைந்துள்ளது. தமிழ்ச்சொற்களாகிய கவி, இபம், அகில், அரிசி, கருவப்பட்டை, பாண்டியன், கேரலர் (சேரலர்), சோழர், தமிழ், தொண்டி, கடத்தநாடு, சங்காடம் (மலையாளச் சொல் - படகு என்னும் பொருளினது), கோட்டாறு, குமரி, பெருங்கரை, பொதிகை, கொற்கை, கோடி, கள்ளிமேடு, மலை, ஊர் முதலிய சொற்கள் கிரேக்கம் முதலிய மேலை நாட்டு மொழிகளுள் இடம் பெற்றுள்ளமையை அறிஞர் காலுடுவல் அவர்கள் ஆராய்ந்து எடுத்துக் காட்டியுள்ளார். வையாபுரி(ப்பிள்ளையவர்கள்) அரிசி, அகில் முதலிய சொல் பற்றிய அறிஞர் காலுடுவல் ஆராய்ச்சியை, **ஆராய்ச்சி முறைக்கு ஒவ்வாத முறையில் மறுத்துரைக்கின்றார்**. அரிசி எனும் தூய தமிழ்ச்சொல் விரீகி எனும் ஆரிய மொழியிலிருந்து தோன்றியதென அவர் கூறுவதிலிருந்து அவருடைய ஆராய்ச்சியின் போக்கு எத்தகையது எனத் தெள்ளிதில் புலப்படும். **அவர் ஆராய்ச்சியைப் புறத்தே தள்ளுதலே ஆராய்ச்சியாளர் கடனாகும்.** கபி

என்னும் சொல் கவி என்னும் சொல்லின் திரிபாகும். கவி என்பது குரங்கைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லேயாகும். **மனிதனைப் போன்று வடிவம் பெற்றுள்ள குரங்கு கவிழ்ந்து நடக்கின்ற காரணத்தால் கவி என்று தமிழர் அமைத்துள்ளனர்**. கவிதல் என்னும் சொல்லினது முதனிலைத் தொழிற்பெயரே கவி என்பதாகும்.

பழந்தமிழர் நாகரிகத்தைப் பேசும் நூல்

பழந்தமிழர் நாகரிகத்தைப்பற்றிப் பரக்கப் பேசும் நூல் தொல்காப்பியம். மக்கள் வையத்து வாழ வழிவகுத்துக் காட்டும் இலக்கிய நெறியினை எடுத்து இனிதியம்பும் ஒப்பற்ற தனிப் பெரும் நூல் இது. தமிழினத்தின் பரந்துபட்ட பண்பாட்டுப் பெருமையைப் பறைசாற்றும் தொல்பெரு நூலாகத் தொல்காப்பியத்தைச் கருதுவதில் யாதொரு தடையும் இல்லை இந்நூலைத் தம் விழுமிய சொத்தாக எண்ணித் தமிழர்கள் பாதுகாக்க வேண்டும்.(புலவர் தி.வே. விசயலட்சுமி,தொல்காப்பியம் காட்டும் பண்பாட்டு நெறிகள், அகரமுதல 24.07.2016)

தொல்காப்பியரைப் பின்பற்றிய யாசுகர்

தமிழுக்கே உரிய இடைச்சொல் உரிச்சொல்களை ஆராய்கின்ற முறைமை வடமொழி நூலாராம் யாசுகருடைய நிருத்தத்தில் காணப்படுகின்றதாம். ஆகவே யாசுகரைப் பின்பற்றித் தொல்காப்பியர் கூறியிருப்பர் என அறிஞர் சுப்பிரமணிய சாத்திரியார் கருதுகிறார். (History of grammatical theories in Tamil : pages 198, 301) யாசுகருடைய காலம் தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்டமையின், அவ்வாறு கருதுதல் பொருந்தாது. யாசுகர் தொல்காப்பியரைப் பின்பற்றி நூல் செய்திருத்தல் கூடும் என்று கூறினால் மிக மிகப் பொருந்துவதாகும். ஆனால் சாத்திரியார் அவர்கள் வடமொழிப் பற்றின் காரணமாக இவ்வுண்மையை உணர்ந்திலர் போலும், வடமொழியாளர் பிறரால் பின்பற்றப்பட வேண்டியவர்களே யன்றிப் பிறரைப் பின்பற்ற மாட்டார்கள் என்ற துணிபு பல நூல்களையும் கற்றறிந்த சாத்திரியாரையும் விட்டிலை போலும். சாத்திரியார் நினைப்பது போல் ஆசிரியர் தொல்காப்பியர் அவ்வாறு வட மொழிப் பிராதி சாக்கியங்களையும், யாசுகருடைய நிருத்தத்தையும் பாணினியினுடைய இலக்கணத்தையும் பின்பற்றித் தம் நூலை அமைத்திருப்பின் வெளிப்படையாகக் குறிப்பிட்டுக் கூறியிருப்பர். அவ்வாறு கூறாததனால் சாத்திரியார் கருத்து ஆய்வு முறைக்குப் பொருத்தமற்றது என அறிதலே ஏற்புடைத்து, இந்திய மொழிகளின் தாயாம் தமிழ், ஆரியத்திற்கும் தாயாம் என்ற உண்மை அறிபப்படும் காலம் சேய்மையில் இன்று.

" சதுர்மறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழி நீ அனாதியென மொழிவதும் வியப்பாமே "

என்ற பேராசியர் சுந்தரனார் கூற்றை உன்னுக. - ***பேரா.சி.இலக்குவனார் :தொல்காப்பிய ஆராய்ச்சி : பக்கம் :*** *114*

தொல்காப்பியர் காலத்திலோ அதற்கு முன்னோ சமற்கிருதத்தில் இலக்கண நூல் உருவாகவே வாய்ப்பில்லை. "ஆரியர்கள் தமிழர்களோடு உறவாடித்தான் தமிழ் இலக்கிய இலக்கணங்களை அறிந்தார்கள். ஆரியர்களுக்கு முதன்முதலில் இலக்கியம், இலக்கணம் என்றால் என்ன என்றே தெரியாது. (எழுத்துகளை வகைப்படுத்தியவர்கள் தமிழர்களே.)" என்கிறார் மறைமலை அடிகள்(தமிழின் தனிச்சிறப்பு) அத்தகையவர்கள் தமிழர்களுக்கு முன்னோடியாக இலக்கண நூல் படைத்தனர் என்பது நம்பும்படியாகவா உள்ளது? தமிழ் முதலிய பிற மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களை மொழி பெயர்த்து வைத்துக்

கொண்டு தங்கள் நூல்களே முதன்மையானவை என்று பொய் கூறும் ஆரியத்தினர் இதிலும் அவ்வாறே பொய் கூறியுள்ளனர்.

“ஆரியம்தான் தமிழை நோக்கித் தன் எழுத்தமைப்பை ஆக்கிக் கொண்டது” என்கிறார் பேரா.சி.இலக்குவனார். "பிராமணர்கள், தமிழ் நாட்டில் குடியேறுவதற்கு முன்னரே தமிழர்கள் எழுத்துக் கலையினை அறிந்திருந்தனர். பிராமணர்கள் அப்போது அங்கு வழக்கத்திலிருந்த தமிழ் வரி வடிவெழுத்துகளோடு சமசுகிருத ஒலிகளை வெளியிடக் கூடிய சில வடிவெழுத்துகளையும் சேர்த்துத் தமிழ் வரி வடி வெழுத்துகளைத் திருத்தி அமைத்தனர்" என்று திரு. எல்லிசு கூறுவதை எடுத்துக்காட்டாகத் தருகிறார்(தொல்காப்பிய ஆராய்ச்சி: பக்கம்: 39). மேலும், தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர்தான் ஆரியர்கள் எழுத்து வடிவைத் திருத்தி அமைத்துக் கொண்டனர் என்றும் விளக்குகிறார்(தொல்காப்பிய ஆராய்ச்சி: பக்கம்: 44). எனவே, தொல்காப்பியக் காலத்திற்கு முன்னர் ஆரியர்க்கு எழுத்து வடிவே இல்லாத பொழுது ஐந்திரத்தைச் சமற்கிருத நூலாகச் சொல்வது முழுப்பொய்அன்றி வேறில்லை.அதுபோல் பாணினியத்தையோ வேறு நூலையோ தழுவித் தொல்காப்பியம ்எழுதப்பட்டதாகக் கூறுவதும் பொய்யிலும் புரட்டிலும் கை வந்தவர்கள் செயல்களாகும். (**ஐந்திரம் தமிழ் நூலே! - இலக்குவனார் திருவள்ளுவன்**, தொல்காப்பிய விழா மலர், தொல்காப்பிய மன்றம், கனடா, 2023)

வடமொழி இலக்கண நூலாசிரியர் அறுபத்து நால்வர் என்னும் புரட்டு

"இந்திரனுக்குப் பின்னும் பாணினிக்கு முன்னுமாக ஒருவன் பின் ஒருவராய் வந்த வடமொழி இலக்கண நூலாசிரியர் அறுபத்து நால்வர் என்பர். இவர்கள் ஒவ்வொருவர்க்கும் முப்பதாண்டுகளாக வைத்துக் கணக்கிடுங்கால் இந்திரனுக்கும் தொல்காப்பியம் - பாணினிக்கும் இடைப்பட்ட காலம் 1920 ஆண்டுகளாம்." என்பது அடுத்த புரட்டாகும். ஆனால் இதை மெய்யென்று நம்பி, க.வெள்ளைவாரணார், தொல்காப்பியம்(வரலாறு) என்னும் தம் நூலில் எடுத்தாண்டுள்ளார்.

எழுத்தே உருவாக்காதவர்கள் எங்ஙனம் இலக்கண நூலை எழுதியிருக்க முடியும்? அதுவும் 64 சமற்கிருத இலக்கண நூல் உருவாகியிருக்க முடியும்? எனவே, இதுவும் தவறேயாகும். காலங்களை முன்னதாகவே கூறும் வஞ்சகத்தாலும் எதுவும் சமற்கிருதத்தில் இருந்து வந்ததாக நிலைநாட்டும் கயமையாலும் இவ்வாறு தவறாகக் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியர் தமக்கு முந்தைய நூற்றுக்கணக்கான புலவர்கள் கூற்றை மேற்கோளாகக் கூறுவதால், தமிழின் இலக்கண வரலாறும் அதனால் இலக்கிய வரலாறும் மொழி வரலாறும் பல்லாயிரம் ஆண்டுகள் சிறப்புகளை உடையது. இதற்குப் போட்டியாகக் கூற வேண்டுமென்பதற்காக் கட்டப்பட்ட கதையே இது.

கணினி நிரன்மையைத் தொல்காப்பியர் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே பயன்படுத்தியுள்ளார்

தொல்காப்பியம் எழுத்து, சொல் ஆகிய இரு படலங்களும் மிகச் செம்மையாக, ஒன்றன்பின் ஒன்றாகச் செய்திகள் முறைமைப்படுத்தப்பட்டு நூற்பாக்களின் வரிசைமுறையை மாற்றிச் சிந்திக்கவேண்டிய தேவையின்றிக் கோவைப்பட அமைந்துள்ளன. கணினியில் செய்தி நிரல்களை எழுதுவோர் பின்பற்றவேண்டிய முறைமையைத் தொல்காப்பியர் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே பயன்படுத்தியுள்ளமை பெரிதும் போற்றத்தக்கது. BNF என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இம்முறைமையைப் பாணினி

கடைப்பிடித்துள்ளதாகவும், ஆகவே சமற்கிருதம் உலக மொழிகளிலேயே கணினிப் பயன்பாட்டுக்குப் பெரிதும் உகந்தமொழி எனவும் மேலைநாட்டார் பாராட்டுவதைக் காண்கிறோம். [The Backus-Naur Form (Panini-Backus Form) or BNF grammars used to describe modern programming languages have significant similarities to Panini grammar rules] பாணினிக்கு முன்னரேயே தொல்காப்பியர் இத்தகு சீர்மையைத் தமது நூலில் பயன்படுத்தியுள்ளதை நாம் எடுத்துக்கூறத் தவறிவிட்டமையாலும், பாணினியை அவர்கள் உலகுக்கு முறையாக அறிமுகம் செய்தமையாலுமே, மேலைநாட்டார் கவனம் இங்குத் திரும்பவில்லை. தொல்காப்பியர் இலக்கண முறைமைகளைத் தொடுத்துக் கூறும் அல்லது அடுக்கி வைக்கும் பாங்கு தொன்மைமிக்க தமிழின் இலக்கணச்சீர்மையை மட்டுமின்றி, நம் முன்னோரின் சிந்தனைப்போக்கின் முதிர்ச்சியையும் ஏரணவியலின் தொன்மையையும், அறிவியல் முறைமைப்படத் தரவுகளைத் தொகுத்து வழங்கும் ஆய்வுநெறிமுறைப் பயிற்சியையும் தெள்ளத்தெளிவாகக் காட்டுகிறது. தமிழைக் கணினிமொழி என்று பெருமிதத்துடன் கொண்டாடிக் கொள்ளத் தூண்டுவது எழுத்துப் படலம், சொற்படலம் ஆகிய இருபடலங்களின் அமைப்பு முறையேயாகும். இந்தச் சங்கிலித்தொடர்ச் செய்தித்தொகுப்பின் கட்டுக்கோப்பால்தான் இடைச்செருகல் விளையாட்டுகளை இவ்விரு படலங்களிலும் தொல்காப்பியத்தின் பின்வந்தோர் நிகழ்த்த முடியவில்லை. இங்ஙனம் அமைந்துள்ள எழுத்துப்படலத்தில் இரு நூற்பாக்கள் வேற்றுமொழி இலக்கணநூலிலிருந்து இரவல் வாங்கப்படவேண்டிய தேவை என்ன? *(மறைமலை இலக்குவனார் செம்மொழி ஆய்வு வளர்ச்சியில் பேராசிரியர் சி. இலக்குவனாரின் பங்களிப்பு, மதுரைக் காமராசர் பல்கலைக் ழகம் நடத்திய பேராசிரியர் சி.இலக்குவனார் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கு-15/3/2010-மையக் கருத்துரை)*

தொல்காப்பியர் முன்னோரைச் சுட்டும் வகைகள்

தொல்காப்பியச் சூத்திரங்களுள் ஏறத்தாழ இருநூற்று அறுபது இடங்களில் தொல்காப்பியர், தமக்கு முன்பு இருந்தவரும் தம் காலத்தவருமான இலக்கண ஆசிரியர் பலரைப் பலபடியாகக் குறிப்பிட்டுள்ளார்

(1) 'என்ப'- 'மொழிப' என்னும் முறைமை தொல்காப்பியத்தில் ஏறத்தாழ 147 இடங்களில் வந்துள்ளன.

(2) 'என்மனார் புலவர்' என்பது சுமார் 88 இடங்களில் வந்துள்ளது.

(3) 'வரையார்' என்பது 15 இடங்களில் வந்துள்ளது.

(4) பிற சிறப்புடன் வந்துள்ள தொடர்கள் ஏறத்தாழ முப்பதாகும்.

(குறிப்பு அப்படியானால் 250+30=280 ஆகிறது.)

இத்தொடர்கள் தாம் சுவையுடையவை. ஆதலின், அவற்றை அதிகார முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக இங்குக் காண்போம்:

எழுத்ததிகாரத்தில்

1. நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே-நூற்பா 7.
ஒத்த தென்ப உணரு மோரே- நூற்பா 193.
செவ்வி தென்ப சிறந்திசி னோரே - நூற்பா 295.
4. புகரின்று என்மனார் புலமை யோரே - நூற்பா 369

சொல்லதிகாரத்தில்

உளவென மொழிப உணர்ந்திசி னோரே- நூற்பா 116

வழுக்கின் றென்ப வயங்கி யோரே - நூற்பா 119

விளியொடு கொள்ப தெளியு மோரே - நூற்பா 153

ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே - நூற்பா 158.

பொருளதிகாரத்தில்

1. இயல்பென மொழிய இயல்புணர்ந் தோரே - நூற்பா 4

2. புலனன்குணர்ந்த புலமை யோரே - நூற்பா 14

3. கொள்ளும் என்ப குறியறிந் தோரே - நூற்பா 50

4. நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென

வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே - நூற்பா 315

5. இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே- நூற்பா *371*

6. வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர் - நூற்பா *383*

7. யாப்பென மொழிப யாப்பறி புலவர் - நூற்பா *380*

8. வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்

நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்

யாப்பின் வழியது என்மனார் புலவர் - நூற்பா 384

9. பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே - நூற்பா 403

10. ஒன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே - நூற்பா 406

11. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும் - நூற்பா 407

12. நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே - நூற்பா 457

13. ஒத்தென மொழிப உயர்மொழிப் புலவர் - நூற்பா 472

14. தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப - நூற்பா 474

15. ஆங்கென மொழிய அறிந்திசி னோரே - நூற்பா 514

16. தோலென மொழிப தொன்னெறிப் புலவர் - நூற்பா 539

17. புலனென மொழிய புலனுணர்ந் தோரே - நூற்பா 542

18. நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே - நூற்பா 571

19. நூலென மொழிய நுணங்குமொழிப் புலவர் - நூற்பா 644

20. சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர் - நூற்பா 646

சுவை பயக்கும் இத் தொடர்களை, அவையுள்ள இயல்களையும் நூற்பாக்களையும் கொண்டு ஆராய்ந்து முடிபு கூறல் அழகிதாகும். இத் தொடர்கள் பலதுறைப் புலவர்களைச் சுட்டுதல் தெற்றென விளங்குதல் காண்க; இவற்றை நோக்கும் அறிஞர் சிறப்பாகப் பொருளதிகாரத்தில் வரும்

4, 5, 7, 8, 9, 11, 12, 14, 15, 16, 20 ஆம் எண்கள் சுட்டும் தொடர்களைக் காண்கையில், மேற் கூறப்பெற்ற உண்மையை எளிதில் உணர்வர்.(முனைவர் மா. இராசமாணிக்கனார், தமிழ் மொழி-இலக்கிய வரலாறு

பாணினியின் வேர்ச்சொல்லாய்வு

தொல்காப்பியப் பொருளதிகாரம் குறித்த நடுநிலையான பொருளுரையைப் பேரா.ப. மருதநாயகம் அளித்துள்ளார். பாணினியின் வேர்ச்சொல்லாய்வு மிகப்பெரிய மோசடி, ஏமாற்றுவேலை. 'ஆதிபாஃசா' நூலில் சட்டம்பி அடிகளார், தமிழிலிருந்து பிராகிருதமும் பிராகிருதத்திலிருந்து சமற்கிருதமும் தோன்றியது என்னும் வரலாற்று உண்மையை மெய்ப்பிக்கிறார். பேரா.சி. இலக்குவனார் அவர்களும் அவர் வழியில் அறிஞர்கள் பலரும் தொல்காப்பியத்தில் இடம் பெற்ற இடைச்செருகல்களை நீக்கினால் தொல்காப்பியம் முரண்பாடு இன்றிச் செம்மையாக இருக்கும் என நிறுவியுள்ளனர். இவை போன்ற அறிஞர்களின் கருத்துகளை எடுத்துக் கூறித் தொல்காப்பியம் சமற்கிருதத் தழுவலன்று எனத் தெரிவிக்கிறார்.(*இலக்குவனார் திருவள்ளுவன், தமிழ் ஆய்வின் விடிவெள்ளி பேராசிரியர் ப. மருதநாயகம்)*

இடைச்செருகல்கள்

தமிழ் நூல்களிலான இடைச்செருகல்கள் அதன் அழைகயும் மதிப்பையும் குறைக்கவும் ஆரியததைத் திணிக்கவும் உண்டாக்கப்பட்டவை. என்று ஆய்வறிஞர்கள் நிலை நாட்டியுள்ளனர். சமற்கிருத நூல்களில் உள்ள இடைச்செருகல்கள் அவற்றுக்கு இல்லாச் சிறப்புகளை இருப்பதுபோல் காட்டுவதற்காகத் திணிக்கப்பட்டவை. இடைச்செருகல்கள் மூலம் சமற்கிருத நூல்களில் இந்தியர்கள் செய்த மோசடிகள் வெளிப்படையாகக் கண்டுகொள்ளக் கூடியவை என்கிறார் ஏ.சி.பருனல்(The Ainthira school of sanskrit grammarians , பக்.102)0.0.0.030

முனைவர் சி இலக்குவனார் தம் ஆங்கில மொழிபெயர்ப்புத் தொல்காப்பிய நூலில், மரபியல் பகுதியில் 24 நூற்பாக்களை உடுக்குறி(*)யால் இடைச்செருகல் எனப் பாகுபடுத்தியுள்ளார்.

தொல்காப்பியம் - ஒரு கவிதை இலக்கண நூல்

தமிழுக்குக் கிடைத்துள்ள முதல் இலக்கண நூல் எனப் போற்றப்படும் தொல்காப்பியம் காலந்தோறும் போற்றிப் பாதுகாக்கப்பட்டுள்ளது. வாய்மொழி மரபாகவும் சுவடிகள் வழியாகவும் பாதுகாக்கப்பட்டிருக் கின்றது. உரைகள் தோன்றிய பிறகு தொல்காப்பியத்தின் பெருமை மேலும் பரவலாக்கப்பட்டுள்ளது. அச்சுக்கலை வளர்ந்தபிறகு தமிழறிஞர்கள் உரையோடு கூடிய தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியங்களையும் பிற இலக்கிய, இலக்கணங்களையும் ஆர்வத்தோடு பதிப் பித்துள்ளனர். இவ்வகையான ஆன்றோர்களின் அரும் பணியாலேயே தமிழ் இன்று உலகோர் அறிந்து போற்றப்படும் நிலையைப் பெற்றுள்ளது.

தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகள் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆய்வுகள் மேன்மேலும் வளரும். இவ்வகையான ஆய்வு வளர்ச்சி ஏற்படுவதற்கு அடிப்படையான முந்தைய நிலையை ஆய்வாளர் இரா. வெங்கடேசன் அரிதின் முயன்று தொல்காப்பியம் தொடர்பான கருத்துகளைத் தொகுத்துத் 'தமிழ்ப் புலமை மரபில் தொல்காப்பியம்' என்னும் நூலைப் பதிப்பித்துள்ளார். இந்த அரிய நூலை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் (2014) வெளியிட்டுள்ளது.

தொல்காப்பிய உரைகள், பதிப்புகள், ஆய்வாளர் களின் கருத்துக்கள் இந்நூலில் விரிவாகத் தொகுக்கப் பட்டுள்ளன. தொடர்ந்து தொல்காப்பியத்தை ஆய்வு செய்வோருக்கும் இளம் ஆய்வாளர்களுக்கும் இந்நூல் மேலும் உதவும் வகையில் உள்ளது என உறுதியாகக் கூறலாம்.

ஆரியர் வரவு

தொல்காப்பியர் காலத்தில்தான் ஆரியம் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கி இருக்க வேண்டும். தமிழகத்தில் முதன் முதலாகக் குடியேறிய வேற்று நாட்டார் வட ஆரியரே. அவருள்ளும் மொழி நூற் புலமையும் ஒழுக்க மேம்பாடும் பிறர்க்கென வாழும் பெற்றிமையும் கொண்ட ஆரியரே தமிழகச் சான்றோருடனும் அரசர்களுடனும் தொடர்பு கொண்டனர். ஆரிய மொழிப் புலவரும் தமிழ் மொழிப்புலவரும் நட்புடன் அளவளாவி உறவாடினர். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர், அன்றோ?" எவரையும் வரவேற்று இன்ப வாழ்வு நல்கும் பண்டைத் தமிழர் வட ஆரியப் புலவரை வரவேற்று வாழ்வளித்ததில் வியப்பின்று. தமிழரை யடிமையாக்கித் தமிழ் மொழியை ஒழிக்கும் உள்ளத்துடன் அன்று வடவாரியர் இங்கு வந்திலர். ஆதலின் புகலிடம் தேடி வந்த ஆரிய மொழிச் சான்றோரிடம் பொல்லாங்கு காட்டாது முகமன் கூறி வரவேற்று அகமகிழ ஆகும் உதவிகளைச் செய்தனர். அதனால் இருசாராரும் நெருங்கிப் பழகி ஒருவர் மொழியை ஒருவர் பயின்றனர். ஓரினத்தார் மற்றோரினத்தாருடன் கலந்து உறவாடுங்கால் இரு சாராரின் மொழிகளும் பண்பாடுகளும் கலைகளும் ஒன்றினுள் ஒன்று கலப்புறுவது இயற்கையே; தடுக்க முடியாததும் ஆகும். ஆதலின் ஆரியர்கள் தமிழர்களின் மொழி, பண்பாடு, கலை முதலியவற்றைத் தமதாக்கிக் கொண்டது போலவே, தமிழர்களும் ஆரியர்களின் மொழி பண்பாடு கலை முதலியவற்றைத் தமதாக்கிக் கொண்டனர். ஒருவரை ஒருவர் அடிமை கொள்ளல் வேண்டும் என்ற எண்ணம் இல்லாததால் பிற மொழி வெறுப்பும், பகைமை யுணர்ச்சியும் தோன்றவில்லை. ஆரியர்கள் தமிழகத்தில் செல்வாக்குத் தேட வேண்டிய நிலையில் இருந்ததால், தம் ஆரிய நூல்களைத் தமிழர்கள் கற்கலாகாது என்று தடுக்கும் கொள்கையை அஞ்ஞான்று மேற் கொண்டிலர். தமது மொழியில் புலமை பெற்ற தமிழர்களும் வேற்றுப் புது மொழியாம், ஆரியத்தை விரைந்து கற்றனர். புதிய மொழியில் புலமை பெறுதலைப் பெருமையாகக் கருதுதல் என்றும் உள்ள இயல்பு. ஆதலின் தொல்காப்பியரைச் சிறப்பித்துக் கூறப் புகுந்த பனம்பாரனார் தொல்காப்பியரின் வடமொழிப் புலமையை எடுத்துக்காட்டிச் சிறப்பித்துள்ளார். (பேராசிரியர் சி.இலக்குவனார்: தொல்காப்பிய ஆராய்ச்சி : பக்கம்: 26-27)

உரையாசிரியர்கள் நால்வருண விளக்கங்கள் தொல்காப்பியர் கொள்கைக்கு முரண்பட்டன

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" என்றார். ஆனால் உரையாசிரியர்களில் சிலர் உயர்ந்தோர் என்பதற்கு முதல் இரு வருணத்தார் (அந்தணர், அரசர்) என்றும், மூன்று வருணத்தார் (அந்தணர், அரசர், வணிகர்) என்றும் பொருள் கூறியுள்ளனர். "உயர்ந்தோ ரெனக் கூறலின் வேளாளரை ஒழிந்தோர் என்றுணர்க' என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். முற்றிலும் பொருந்தா உரை கூறித் தொல்காப்பியத்தை இழி நிலைக்குக் கொண்டு வந்து விட்டனர் உரையாசிரியர்கள். உரையாசிரியர் காலத்தில் ஆரிய முறையாம் நால்வகை வருண நெறி நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்திருக்கலாம். தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் இடம் பெற்றிலது. அன்றியும் தொல்காப்பியர் தமிழக மக்கள் வாழ்வினைக் கூற வந்தனரேயன்றி தமிழர்க்குத் தொடர்பிலாப் பிற நாட்டினர் வாழ்க்கை கூற நூல் செய்திலர். தொல்காப்பியர்க்குப் பிற்பட்டுத் தோன்றிய திருவள்ளுவர் உழவரை உயர்ந்தோரெனச் சிறப்பித்திருக்கவும், அவர்க்கு முன்பு வாழ்ந்த தொல்காப்பியர், உழவரை வேளாளரை உயர்ந்தோரல்லர் என ஒதுக்கியிருத்தல் எங்ஙனம் சாலும்? ஆதலின் உரையாசிரியர்கள் நால்வகை வருணம் பற்றிக் கூறுவன வெல்லாம் தொல்காப்பியர் கொள்கைக்கும் காலத்துக்கும் முரண்பட்டன; பொருந்தாதன என்று அறிதல் வேண்டும். (பேராசிரியர் சி. இலக்குவனார்,தொல்காப்பிய ஆராய்ச்சி: பக்கம்: 144-145)

துணை நின்ற நூல்கள்

1. தொல்காப்பிய ஆராய்ச்சி,பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனார்
2. தொல்காப்பியர் வரலாறு, பேராசிரியர் க.வெள்ளைவாரணனார்
3. Tholkappiyar: Tholkappiyam, MS. NISHA KUTTY
4. இலக்கண வரலாறு, சோம.இளவரசு
5. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியக் கட்டுரைகள், ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப்புலவர் கழக வெளியீடு, நவம்ப் 2004
6. பழந்தமிழ், பேராசிரியர் முனைவர் சி. இலக்குவனார்
7. INDIAN LITERARY CRITICISM AND THEORY, 7. Panini, Math Wiki
8. உலகத்தொல்காப்பிய மன்றம். இணையத் தளம்
9. வலைத்தளம் தளம்
10. உரையாசிரியர்கள், மு. வை. அரவிந்தன்
11. Tholkappiyam in English with critical studies, Dr.S.Ilakkuvanar
12. வடமொழி ஒரு செம்மொழியா?, முனைவர் ப.மருதநாயகம்
13. ஆய்வுலக வழிகாட்டி பேராசிரியர் ப.மருதநாயகம், இலக்குவனார் திருவள்ளுவன்
14. தமிழ்ச்சிமிழ், தொல்காப்பியம், இலக்குவனார் திருவள்ளுவன்
15. தொல்காப்பியம் ஓர் அறிமுகம், உரை, பேராசிரியர் தெ. முருகசாமி
16. தொல்காப்பிய விழா மலர், தொல்காப்பிய மன்றம், கனடா, 2023
17. தொல்காப்பியப் பொருளதிகாரமும் சங்க இலக்கியங்களும் காட்டும் பெண்களின சமூக நிலை, முனைவர ்செல்வநாயகி சிரீதாசு
18. முனைவர் இராசமாணிக்கனார்
19. https://tamilandvedas.com/
20. சான்லாக்குசு பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் (https://www.shanlaxjournals.in/)
21. Aindra School of Grammar
22. ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்

"LET THE EXPERT PREPARE YOUR TAX RETURN"

3K SHAMI

Accounting & Tax Services Inc.

Accounting and Payroll Services
Business Registration
Personal Tax Returns
Corporate Tax Returns

Thaas Kathiramalai BBA
President

2225 Markham Rd, Suite 201, Scarborough, ON MiB 2W4
Tel: **416.277.3535 / 416.412.1951**
Email: **taxshami@rogers.com / 3ktaxinfo@gmail.com**
Cell: **647.205.2041**

CONSULTING | PLANNING | EXECUTION

seven diamond
GROUP OF COMPANIES

SECURITY · MEDICAL RESPONSE · AUDIO-VISUAL · EVENT SERVICES · TACTICAL SUPPLIES · GUEST SERVICES · PROPERTY MANAGEMENT

info@7dgoc.com | **437-987-7337** | www.7dgoc.com

BLOOMS
BY VN

அழகு மலர் கொத்துக்கள் செய்வதற்க்கு நாடுங்கள்

Fresh Flower Arrangements & Decor Rental

instagram: bloomsbyvn
email: bloomsbyvn@gmail.com

ANBAE
PHOTOGRAPHY

Wedding - E Shoots -
Receptions - Proposals

instagram: anbaephotos
email: anbaephotos@gmail.com

MARKHAM
NS DENTAL
Care, Comfort, Convenience, Confidence...

EXPERIENCE
EXCEPTIONAL
DENTAL CARE

We pride ourselves on providing exceptional dental care with the assistance of our dedicated team, committed to your oral health and comfort. We prioritize your well-being, offering personalized treatments for a confident, radiant smile.

9293 Markham Rd #4,
Markham, ON L6E 1A3
(905) 472-4111

1801 Harwood Ave. N. #18,
Ajax, ON L1T 0K8
(905) 426-2222

AjaxNSDental.com

STEPS TOWARD SUCCESS!
Perfect Guide to Become an Expert

CLASSES FOR
GRADES K-12
Math Online
English In-Person

- Classes Offered IN-PERSON and ONLINE
- HOMEWORK WORKSHEETS (8 Pages Long) Provided/Emailed After Each Session
- Math and English Covered During Each Class for GRADES K-8
- Each Class is 1.5 HOUR LONG
- ONLINE CLASSES Conducted Through Zoom

ENROLL TODAY

Grades	1 Class Per Week	2 Classes Per Week	Subject(s)
K-8	$60 per month	$120 per month	Math & English
9-10	$65 per month	$130 per month	Math Only/ Math & English
11-12	$65 per month	$130 per month	Math Only

THE FEES MENTIONED ABOVE ARE FOR BOTH SUBJECTS TOGETHER.

EXPERTS EDUCATIONAL CENTER

ROOBAN KUGATHASAN
Director

647-709-1298
roobanthasan@gmail.com
850 Tapscott Road, Unit 48
Scarborough, ON, M1X 1N4

Himalaya
BANQUET SERVICE
416.276.6867
647.201.7573

- INDOOR/OUTDOOR EVENT PLANNING
- BOOKING VENUES
- EVENT COORDINATION
- CATERING
- SERVING THE GTA

PLEASE VISIT OUR GOOGLE, INSTAGRAM AND/OR FACEBOOK PAGE FOR MORE DETAILS.

ஹேமா தையலகம்



சாறி பிளவுஸ், பெண்கள்
சிறுவர் உடைகள் அனைத்தும்
தைத்துத் தரப்படும்.

தையல், கை பூ தையல் கற்பிக்கப்படும்.
தமிழ், ஆங்கில மொழிகளில்.

ஹேமாவதி

647 545 3939

hemavathypaul7@gmail.com

Morningside & Ellesmere

Mahen Muthukumaru B.Com (Hons)
Sales Representative
Dir: 416-400-9632
Bus: 416-391-3232
Fax: 416-391-0319
mahenran@hotmail.com

895 Don Mills Rd., Suite 202
Toronto, ON M3C 1W3
*Independenlty Owned and Operated

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
REAL ESTATE BROKERAGE*

Paul Healthy Life Clinic
HOMEOPATHY & ACUPUNCTURE

1193 Brimley Road,
Scarborough, Ontario M1P 3G5
416 438 3939
Cell: 416 986 4903
e-mail:drjp63@yahoo.com

Prof. Paul Joseph, B.H.M.S.(India), R.Ac., R.Hom(Canada)*(Bachelor of Homeopathic Medicine and Surgery)*

வீடு, வியாபார நிலையங்கள்
வாங்க.. விற்க...

சகலவிதமான Real Estate
தேவைகட்கும் மற்றும்
வருமானவரி, RRSP, RESP, ஆயுட்காப்புறுதி
போன்ற பலதரப்பட்ட சிறந்த
சேவைகட்கும் என்னை அழையுங்கள்.

Jeyakumar Somasundram
Sales Representative
Dir:416-831-4824
Bus: 416-287-2222
Fax: 416-282-4488

Re/Max
Community Realty Inc., Brokerage
Independently Owned and Operated
1265 Morningside Ave, Suite 203, Toronto, ON, M1B 3V9 I Office: 416-287-2222 I Fax: 416-282-4488

HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS

24h EMERGENCY SERVICES

ALL MAKES & MODEL

WHY UPGRADE TO TANKLESS?

Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos

KD NAVIEN®
The Leader in Condensing Tankless Technology

FREE ESTIMATE
Sales, Service & Repair

S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com

FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000

தமிழ் மரபுத் திங்கள் செயலவை
TAMIL HERITAGE MONTH COUNCIL

MALAR Catering & Take Out
Srilankan & Indian Food
Breakfast, Lunch and Dinner
416-836-5846
Unit 54, 850 TAPSCOTT RD
SCARBOROUGH ON M1X 1N4
Malarcatercatering.ca
fb: malar-catering

6055 Steeles Ave. E. Unit 106
(Markham & Steeles)
Toronto, ON. M1X 0A7

416.332.0606
647.822.4972

www.pooranivilaas.ca

POORANI VILAAS
Take Out & Catering

Kulanthai Ratnavel B.Com
Manager
kratnavel@gmail.com

RouterSale.com
Your Trusted Source for Quality Tech!

Featured Products:
- Epson & Star Thermal Receipt Printers
  (New & Refurbished)
- Docking Stations
  Designed for Efficiency
- Cisco & Networking Products
  Reliable Solutions for Your Network
- Laptops & Computers
  Performance You Can Count On

Contact Us Today!
2200 Markham Rd, Unit 7,
Scarborough, ON M1B 2W4
647-891-7253
info@routersale.com
www.routersale.com

SPECIAL OFFER!
Call or visit us today for Exclusive Deals on all your tech needs!

Monday to Friday
10:00 AM - 6:00 PM


never
ever
ever
give
up
When an opportunity presents itself, will you be able to seize it? To see how I can help you develop key strategies for making smart real estate investment decisions, call me.
CONQUER 202
Sajeev Yohanathan
Sales Representative
ROYAL LEPAGE
ignite
416.666.6746

CHAPEL RIDGE
Funeral Home & Cremation Centre
We provide a full range of services to families who have experienced a loss of a loved one.
OUR SERVICE
Visitation
Funeral and Memorial Service
Reception
Burial
Cremation
Chapel & Visitation Entrance
Chapel Ridge
FUNERAL HOME INC.
ST. JOHN'S DIXIE CEMETERY & CREMATORIUM
Vilosanan Sivatharman B. Eng
Licensed Funeral Director
(416) 993-0826
(647) 778-4217

SIV The Realtor
BUY | SELL | INVEST
Sivaseelan
SENATHIRAJAH B.Eng.
SALES REPRESENTATIVE
416.318.7875
siva902@gmail.com
RE/MAX
Thinking of
BUY | SELL | INVEST
Call me for a FREE Home Evaluation
SOCKA ABRAHAMLINGAM
Sales Representative
Direct: 416.418.0037
abrahamhomelife@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc., Brokerage

தமிழ் மொழி கற்போம் வாரீர்!

இளம் மழலையர் முதல்
உயர்நிலை வரையான
மாணவர்களுக்கு
தமிழ் மொழிக் கல்வி

CONTACT INFO:

SUVANTHI SHANGAR - M.A TAMIL, DIP IN ED

416) 609 - 2149

SSUVANTHI@YAHOO.CA

Dr. Santhakumar & Associates

Centre City Medical Clinic குடும்ப வைத்திய நிலையம்

KEY TO ALL YOUR MEDICAL NEEDS

In Mississauga & Brampton

Dr. V. Santhakumar (MBBS, CCFP) - Family Physician
Dr. V. சாந்தகுமார் (MBBS, CCFP) - குடும்ப வைத்தியர்

Dr. C. Mahendira (MBBS, CCFP) - Family Physician
Dr. C. மகேந்திரா (MBBS, CCFP) - குடும்ப வைத்தியர்

OPEN
Monday to Saturday
-by appointment only-
Tel: 905 273 6895

Centre City Physiotherapy & Rehabilitation Clinic

Sumathy Santhakumar, B.Sc. (PT) - Physiotherapistt
சுமதி சாந்தகுமார்

Tel: 905 273 7946
(Physio)

5560 McAdam Road, Mississauga, ON. L4Z 1P1

Vinayagar Vilas

SINCE 2013

SRI LANKAN & SOUTH INDIAN CUISINE

CATERING SERVICES

- Weddings
- Birthday Parties
- Business Lunches
- Corporate Parties
- School Functions

100% சைவம்

WE DO LIVE COOKING

Uber Eats DOORDASH

Tel: **(905) 796-2411 / (416) 648-9898**

85 Kennedy Rd S #31, Brampton, ON L6W 3E7

www.vinayagarvilas.webstarts.com

YA Smiles
Dental Clinic
QUALITY | CARE | TRUST

DR. YALINI ARAVINTHAN
BDS, DDS
DENTIST



New Patients Welcome

CLINICAL SERVICES
- Routine Cleanings
- Braces/Invisalign
- Kids dentistry
- Oral surgery
- Full & partial dentures
- Bridges Crowns Veneers
- Root canal treatment
- Composite Fillings
- Teeth whitenings
- Implants

YOUR DENTAL HEALTH IS OUR FIRST PRIORITY!

WHY CHOOSE US?
We provide quality and comprehensive dental care, We are committed to patients convenience providing dedicated service in a family friendly environment

Call Us: (905) 554-5524

7475 McCowan RD, Markham, Ontario, L3S 3J6, Canada www.yasmiles.ca

info@yasmiles.ca | fb.me/yasmilesdental

Master Yoga
Mastering Your Own Mind

யோகா வகுப்புக்கள்
Yoga Classes

Take a break from the stress and hustle of daily life and join us for a rejuvenating yoga class.

Master Yoga

Bring a mat and comfortable clothing. Limited spots available, so reserve your place today

evenings
Weekdays & Weekends
850 Tapscott Rd, Unit 4, Scarborough

உடலுக்கும் உள்ளத்திற்கும்
புத்துணர்ச்சிதந்து
வாழ்வளிக்கும்
உன்னதக்கலை

Contact us for more information:
905-781-9796
www.masteryoga.ca

SRI LANKAN,
INDIAN & CANADIAN
GROCERIES,
FRESH VEGETABLES,
FISH AND MEAT

Yal Market
Fresh Quality at Your Door

தமிழர் பல்பொருள் அங்காடி

416-267-5551
2499 Eglinton Avenue East, Scarborough, ON

26 Years உங்களோடு

டாக்டர் ரீ பினான்ஸ்

68 கடன் அட்டைகளுடன்
1008 தலைவலிகளையும் தவிர்க்க
ஒரே தீர்வு

REFINANCE

Siva Ratnasingam
M.08002133

Dr. ReFinance
Division of Ceylingo Financial Group
New Mortgages & 2nd Mortgages
416 520 1214, 416 430 0111
85 Dynamic Drive, Unit 4 Scarborough, ON, M1V 4C9

TRANQUILO WELLNESS
5200 Finch Ave. E., Unit 349, Scarborough, ON, M1S 4Z4
www.tranquilowellness.com info@tranquilowellness.com

Acupuncturist,
Mrs. K. Vasanthakumar,
R.Ac.

Psychotherapist,
Nirupa Thanabalasingam,
RSW, MSW

Kinesiologist,
Sankavi Selvanathan,
R. Kin

647-490-6168

For all your printing needs...

brightsun

Printing - sign - Photos - Graphics

Tel: 416-845-6565

brightsun2000@gmail.com

120 Dynamic Drive, Unit 23
(Markham & McNicoll)
Scarborough, ON. M1V 5C8

விளம்பரதாரர்

7d – Seven Diamond Group of Companies
Anbae Photography and Blooms
ChapelRidge
Experts Educational Center
Jeyakumar Somasundram, *Sales Representative* | *RE/MAX Community Realty Inc.*
S. Kumar, *HVAC Technician*
Master Yoga
Mahen Muthukumaru, *Sales Representative* | *Right at Home Realty Inc.*
Paul Healthy Life Clinic
Sajeev Yohanathan, *Sales Representative* | *Royal LePAGE*
Dr. ReFinance, *Division of Ceylingo Financial Group*
Suvanthi Shangar | Tamil Classes
TRANQUILO Wellness
YalMarket
Dr. Santhakumar & Associates
ஹேமா தையலகம்
NS Dental
Poorani Vilaas
Routersale.com
Sivaseelan Senathirajah, *RE/MAX Community Realty Inc.*
Socka Abrahamlingam, *Sales Representative* | *HomeLife/Future Realty Inc.*
Vinayagar Vilas
YASmiles Dental Clinic
Nathan Veerasingam, *Sales Representative - HomeLife/Future Realty Inc.*
தமிழ் மரபுத் திங்கள் செயலவை - Tamil Heritage Month Council
Thaas Kathiramalai, *3K_Shami – Accounting and Tax Services Inc.*
Himalaya Banquet Services

நன்கொடையாளர்

முனைவர் செல்வநாயகி ஸ்ரீதாஸ்	$1,000
திரு. & திருமதி அரியராசா	$1,000
மருத்துவர் இரகுராமன் வரதராஜன்	$1,000
1000351554 Ontario Inc. (நந்தா)	$1,000
திருமதி லீலாவதி சிவனந்தன்	$800
முனைவர் இல. சுந்தரம்	$555
திருமதி புவனா கருணாகரன்	$500
திரு. நீதன் சண்முகராஜா	$500
திரு. சிவன் இளங்கோ	$500
திரு. விக்னேஸ்வரன் கணபதிப்பிள்ளை	$300
திருமதி கோகிலவதனி சிறிதரன்	$300
திருமதி தில்லைராணி செல்வராஜா	$300
திருமதி இராஜினி சுபாகரன்	$250
திருமதி சாதனா பாலேந்திரா	$200
திருமதி லாவண்யா தினேஸ்குமார்	$200
திருமதி உமா சூரியகுமார்	$200
திருமதி சுவந்தி சங்கர்	$350
திரு. இராச்குமார் குணரட்ணம்	$200
திருமதி கேமமாலினி சுஜனந்தன்	$150
திருமதி யசோதாதேவி கமலேஸ்வரன்	$150
திருமதி பவானி குமாரகுலசிங்கம்	$150
திருமதி சுபா நகுலானந்தன்	$100
திருமதி வாஞ்சிதா சுஜந்தன்	$100
முனைவர் பால. சிவகடாட்சம்	$100
திரு. சுகீவன் கைலாயபதி	$100

உங்கள் எதிர்காலத்தை முன்னெடுக்கும்
நம்பிக்கையான வீடு விற்பனை முகவர்
நாதன் வீரசிங்கம்

HomeLife/Future Realty Inc.
Brokerage
*Independently owned and operated
Office: 905-201-9977 | Fax: 905-201-9229